கூட்டுறவு

(CO-OPERATION)



அ. குழந்தை

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண் :-632

கூட்டுறவு

(மேற்பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்

அ. குழந்தை, பி.ஏ. (ஆனர்ஸ்),
பொருளாதாரப் பேராசிரியர்,
அரசினர் கலைக் கல்லூரி, உடுமலை,
கோயம்புத்தூர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition — June, 1975

T.N.T.B.S. (C.P.) No. 632

Co-operation

A. KULANDAI

Price Rs. 14-25.

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed by

M/s. A. S. Printers,
43, Mowbrays Road,
MADRAS-600018.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினைந் தாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள் ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும், சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங் கியல், தாவரவியல், பொறியியல், சட்டம் ஆகிய எல்லாத் துறை களிலும் மூல நூல்கள் மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'கூட்டுறவு' என்ற இந் நூல் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 632-வது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 667 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயிலவேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ், எங்கும் தமிழ்' என்ற குறிக்கோளை நிறைவேற்றவேண்டிய கடப்பாடு, தமி ழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

பக்கம்

முதல் பிரிவு

கூட்டுறவின் தத்துவங்களும் பிரச்சினைகளும்

1. கூட்டுறவும் அதன் தத்துவங்களும் 1

கூட்டுறவின் வித்து—இலக்கணம்—கூட்டுறவுத் தத்துவங்கள்—தன்னியல்பான, கட்டுப்பாடற்ற, உழைக்கும் உறுப்பினர்—மக்களாட்சி முறையில் நிர்வாகம்—குறைந்த அளவு வட்டியும் பங்கு ஆதாயமும்—கூட்டுறவுக் கல்வியைப் பரப்புதல்—சங்கங்களிடையே கூட்டுறவு—இரகசியம் ஏதுமில்லை—கூட்டுறவுச் சங்கங்களின் பாகுபாடு—சில நடைமுறை விதிகள்: எல்லோரும் சமம்; சரி நிகர்—கூட்டுறவில் ஓரளவு வலுவந்தம்—கூட்டுறவும் சுரண்டலும்.

௨. சில கூட்டுறவுப் பிரச்சினைகள் 18

(அ) உறுப்பினர்களின் கடன் பொறுப்பு: பொறுப்பின் வகைகள்—வரையறையற்ற பொறுப்பு—நன்மைகள்—தீமைகள்—வரையறையற்ற பொறுப்பிலிருந்து பாதுகாப்பு—வரையறைபெற்ற பொறுப்பு—கருத்து முரண்பாடு.

(ஆ) உற்பத்தியாளர் சங்கங்களுக்கும் நுகர்வோர் சங்கங்களுக்குமிடையே தோன்றும் முரண்பாடு: நுகர்வோர் சங்கங்களும் உற்பத்திப் பணியும்—கூட்டுறவும் உற்பத்தியும்—உற்பத்திச் சங்கங்களுக்கும் நுகர்வோர் சங்கங்களுக்குமிடையேயுள்ள வேறுபாடுகள்—கருத்து முரண்பாடு—இந்தியாவிலுள்ள நிலைமை.

பக்கம்

(இ) கூட்டுறவில் முதலாளி—தொழிலாளி உறவு: கூட்டுறவின் தோற்றம்—கூட்டுறவில் முதலாளி தொழிலாளி உறவு—கூட்டுறவுத் தத்துவங்களும் தொழிலாளிகளும்—இந்தியக் கூட்டுறவில் முதலாளி தொழிலாளர் உறவு—கூட்டுறவுச் சங்கமும் தொழிற்சங்கமும்.

(ஈ) கூட்டுறவும் அரசாங்க உதவியும்: கூட்டுறவில் 'தன் கையே தனக்குதவி' என்ற தத்துவம்—அரசாங்க உதவி அவசியம்தானா?—நடுநிலைக் கருத்து—இந்தியாவில் அரசாங்க உதவிகள்: சட்ட ரீதியான உதவி—நிர்வாக உதவி-நிதி-உதவி-அரசாங்கப் பங்கு—ஏனைய உதவிகள்—அரசாங்கத் தலையீடு.

(உ) தனியார் விற்பனையோடும் அரசு விற்பனையோடும் கூட்டுறவு விற்பனையின் மோதல்: கூட்டுறவு வாணிகமும் அரசு வாணிகமும்—கூட்டுறவு விற்பனையும் தனியார் வியாபாரமும்.

இரண்டாம் பிரிவு

பிறநாடுகளில் கூட்டுறவு இயக்கம்

3. இங்கிலாந்தில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம்... 55

இராபர்ட் ஓவன்—அவரது ஆலைச்சீர்திருத்தங்கள்—தொழிலாளர் குடியிருப்புகள்—உழைப்புப் பத்திரத் திட்டம்—ராக்டேல் முன்னோடிகள்—பண்டகசாலையின் நோக்கங்கள்—முன்னேற்றம்—வெற்றியின் இரகசியம்—கிறித்துவச் சமதர்ம வாதிகள்—சில்லறை விற்பனைச் சங்கங்கள்—சில்லறை விற்பனைச் சங்க நிர்வாகம்—நுகர்வோர் கூட்டமைப்பு விற்பனைச் சங்கங்கள்—கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம்—ஸ்காட்லாந்து மொத்த விற்பனைச் சங்கம்—பண்டகசாலைகள் வெற்றி பெற்றது எப்படி—குறைகளும் தீர்வுகளும்—கூட்டுறவு ஒன்றிப்பும் கல்விப் பணியும்—விவசாயக் கூட்டுறவு—அரசின் பங்கு.

4. ஜெர்மனியில் கூட்டுறவுக் கடன் இயக்கம் 74

இயக்கத்தின் முன்னோடிகள்—சூல்ஸ் டெலிச் வங்கிகளின் இயல்புகள்—ரைஃபீசன் வங்கிகள்—

சங்கங்களின் தத்துவங்களும் செயல்முறைகளும்—1945-ல் ஏற்பட்ட நாசமும் அதன் பின்னரும் : கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள்—நகரப்புறச் சங்கங்கள்—வீட்டு வசதிச் சங்கங்கள்—நுகர்வோர் சங்கங்கள்—கூட்டமைப்புகள்—பொது அம் சங்கள்—தற்போதைய நிலை.

5. டென்மார்க்கில் கூட்டுறவு இயக்கம் 86

குடியானவர்களும் அவர்களின் கடன் தேவைகளும்—கூட்டுறவுக் கடன் சங்கங்கள்—நுகர்வோர் சங்கங்கள்—கூட்டுறவுச் சில்லறை விற்பனைச் சங்கங்கள்—கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம்—பால் பண்ணைக் கூட்டுறவு—பால் பண்ணைகளின் கூட்டமைப்பு—கூட்டுறவுப் பன்றி இறைச்சித் தொழில்கள்—கூட்டுறவு முட்டை ஏற்றுமதிச் சங்கம்—விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேற்றம்—கூட்டிணைப்புகள்—நகர்ப்புறக் கூட்டுறவுச் சங்கங்கள்—கூட்டுறவு ரொட்டிக் கிடங்குகள்—கூட்டுறவுக் கட்டடச் சங்கங்கள்—உற்பத்திச் சங்கங்கள்—கூட்டுறவுக் கல்வி—அரசாங்கமும் கூட்டுறவும்—டென்மார்க் கூட்டுறவின் சிறப்பியல்புகள்.

6. அயர்லாந்தில் கூட்டுறவு இயக்கம் ... 106

சர் ஹொரேஸ் பிளங்கட்—விவசாயக் கூட்டுறவு—அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கம்—நாட்டுப் பிரிவினை-கூட்டுறவுப்பால்பண்ணைகளின் வளர்ச்சி—அரசாங்கத்தின் பணி—உலகப் போரின் விளைவுகள்—இன்றைய நிலை – பால், வெண்ணெய்ச் சங்கங்கள்—அளிப்புச் சங்கங்கள்—கால்நடைச் சங்கங்கள்.

7. இத்தாலியில் கூட்டுறவு இயக்கம் 118

இயக்கத்தின் ஆரம்பம்—மக்கள் வங்கிகள்—கிராமக் கடன்இயக்கம்—வல்லாண்மைக்கட்சி ஆட்சியின் போது கூட்டுறவு இயக்கம்—வல்லாண்மைக் கட்சி ஆட்சிக்குப் பின்னர்—தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்—கூட்டிணைப்புகள்.

8. சுவீடனில் கூட்டுறவு இயக்கம் ... 135

நுகர்வோர் இயக்கம்—நுகர்வோர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் அம்சங்கள்— கூட்டுறவு

பக்கம்

ஃபார்பன்டெட் : மொத்த விற்பனைப் பணிகள்—உற்பத்திப் பணிகள்—காப்புறுதித் தொண்டு—கல்விப் பணிகள்—சோதனை ஆய்வுக் கூடங்கள்—வேலை வாய்ப்பு—டில்லியில் மத்தியக் கல்விக் கூடம்-விவசாயக் கூட்டுறவு: பால் பண்ணைகள்—கூட்டுறவு இறைச்சி விற்பனைச் சங்கம்—கூட்டுறவுக் கொள் முதல், விற்பனைச் சங்கம்—முட்டை விற்பனைச் சங்கங்கள்—வன உரிமையாளர் சங்கங்கள்—கடன் சங்கங்கள்—கூட்டிணைப்புகள்.

9. **ஜப்பானில் கூட்டுறவு இயக்கம்** 154

கூட்டுறவு இயக்க வரலாறு-தற்போதைய நிலை-விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள்—கடன் அளித்தல்—வைப்புத் தொகை—இதர நிதி வசதிகள்— விற்பனைப் பணி—கொள்முதல்பணி—மீன் பிடிப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்—வனக் கூட்டுறவுச் சங்கங்கள்—கூட்டிணைப்புகள்—வன, விவசாய மத்தியக் கூட்டுறவு வங்கி—பிற நாட்டு வாணிகச் சங்கம்—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்—பொது ஆய்வு—விவசாயச் சங்கங்கள்.

10. **சோவியத் நாட்டில் கூட்டுறவு இயக்கம்** 176

தொழிலாளர் அமைப்புகள்—விவசாயச் சங்கங்கள்—கூட்டுறவுக் கடன் சங்கங்கள்—நுகர்வோர் சங்கங்கள் தலைமைச் சங்கத்தின் பணிகள்—நிர்வாகம்—சில சிறப்பு அம்சங்கள்—நிதியும் இலாபமும்—கூட்டுப் பண்ணைகள்—பண்ணைகளின் நிர்வாகம்.

11. **அமெரிக்க ஐக்கிய நாட்டில் கூட்டுறவு இயக்கம்** 191

கூட்டுறவின் வரலாறு—கிராமக் கூட்டுறவு இயக்கம்— விநியோகச் சங்கங்கள்—கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்—தானிய விற்பனைச் சங்கங்கள்—பால் பண்ணைகள்—கூட்டுறவு எண்ணெய்—பருத்திச் சங்கங்கள்—கூட்டுறவுக் கம்பளிச் சங்கங்கள்—காய் கறி, பழ விற்பனைச் சங்கங்கள்—கோழி, முட்டை விற்பனைச் சங்கங்கள்—அரசாங்க உதவி—கிராம சேவைச் சங்கங்கள்—கூட்டுறவு விவசாயக் கடன்-உற்பத்திக் கடன் கார்ப்பரேஷன்

பக்கம்

—இடைநிலைக் கடன் வங்கி—கூட்டுறவுச் சங்க வங்கி—நகர்ப்புறக் கூட்டுறவு இயக்கம்— நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்—சில்லறை விற்பனைப் பண்டக சாலைகள்—மொத்த விற்பனைப் பண்டக சாலைகள்—சேவைச் சங்கங்கள்—கூட்டுறவுக் சடன் சங்கங்கள்—அமெரிக்க நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய அம்சங்கள்—முடிவுரை.

12. கனடாவில் கூட்டுறவு 208

கூட்டுறவின் ஆரம்பம்—கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்—கோதுமைத் திரட்டுகள்— அமைப்பு—நிர்வாகம் — வளர்ச்சி — கூட்டுறவு விற்பனை, கொள்முதல் சங்கங்கள்—மொத்த விற்பனைச் சங்கங்கள்—கூட்டுறவு சேவைச் சங்கங்கள்—கூட்டுறவுக் கூட்டிணைப்புச் சங்கம்—உரத் தொழிற்சாலை—கால்நடைத் தீவனத் தொழிற்சாலை—எண்ணெய்க் கூட்டுறவுகள்—வன உற்பத்திப் பணிகள்—பண்டகங்கள் — நிதி நிலைமை — மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்—வளர்ச்சியின் போக்கு—கடன் சங்கங்கள்—கூட்டிணைப்புகள் — ஆண்டிகானிஷ் இயக்கம்.

13. இஸ்ரேல் நாட்டில் கூட்டுப் பண்ணைகள் 225

தொழிலாளர் கூட்டமைப்பு—ஹேவ்ரத் ஓவ்டிம் —கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி—கூட்டுக் கிராமம் —தொழிலாளர் குடியிருப்புகள் – சிறு விவசாயிகளின் கூட்டுக் குடியிருப்புகள்—புதிய குடியேற்றக் குடியிருப்புகள்—வெற்றியின் அடிப்படை.

14. சீனாவில் கூட்டுறவு இயக்கம் ... 236

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்—சங்கங்களின் வட்டார அமைப்பு—அரசாங்க உதவி—சங்கங்களின் அமைப்பு—கூட்டமைப்புகள்—புதிய சீனாவில் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்—விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள்—பரஸ்பர உதவிக் குழுக்கள்—விவசாய உற்பத்தியாளர் சங்கங்கள் —சமதர்மப் பணிகள்—வெற்றியின் காரணங்கள்.

பக்கம்

மூன்றும் பிரிவு

இந்தியாவில் கூட்டுறவின் வளர்ச்சியும் நடைமுறையும்

15. இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் தோற்ற முய் வளர்ச்சியும் 253

16. ஐந்தாண்டுத்திட்டமும் கூட்டுறவின் வளர்ச்சியும் 264

கிராமக் கடன் மதிப்பீடு—அரசின் பங்கு—அரசு வங்கியின் தோற்றம்—பல்வகை நிதிகளை உருவாக்கல்—கூட்டுறவு இயக்கத்தின் புன ரமைப்பு—கூட்டுறவுப் பயிற்சி—இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்— கூட்டுறவுச் சட்டம்—1958-ன் கூட்டுறவுக் கொள்கைத் தீர்மானம்—கூட்டுறவுக் கடன் ஆய்வுக் குழு—கூட்டுறவுப் பண்ணைப் பரிசீலனைக் குழு—மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம்—கூட்டுறவுப் பயிற்சி பற்றிய குழு—நுகர் வோர் கூட்டுறவு பற்றிய குழு—பஞ்சாயத்து, கூட்டுறவு பற்றிய ஆய்வுக்குழு—தக்காவிக் கடன் பற்றிய குழு—இரயில்வே தொழிலாளர் கூட்டுறவு பற்றிய ஆய்வுக்குழு—தொழில் கூட்டுறவு ஆய்வுக் குழு—கூட்டுறவு நிர்வாக ஆய்வுக்குழு—நகர்ப்புறக் கூட்டுறவுக் கடன் ஆய்வுக் குழு—கூட்டுறவு மனைச் சங்க ஆய்வுக் குழு–கூட்டுறவுப் போக்குவரத்து ஆய்வுக் குழு—கூட்டுறவு பற்றிய மிர்தா குழு—கூட்டுறவு விற்பனை பற்றிய குழு—மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் நிலை—விவசாயக் கடன் சங்கங்கள்–இதரக் கடன் சங்கங்கள்—நிலவள வங்கிகள்—சந்தையிடுகைச் சங்கங்கள்—கூட்டுறவு ஆலைகள்—கூட்டுறவுத் தொழில் சங்கங் கள்—மற்றவை—நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் —மாநிலக் கூட்டுறவு அமைச்சர்களின் மாநாடு—திட்டகாலக் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்புகள்.

17. கூட்டுறவுக் கடன் அமைப்பு முறை 297

கடன் வகைகள்—கூட்டுறவுக் கடன் நிறுவன அமைப்பு—தனித்தும் இணைந்தும் இயங்கும் கூட்டுறவு நிறுவனங்கள்—தொடக்கச் சங்கங்கள்—உயர்மட்டச் சங்கங்கள்—கூட்டுறவு மத்திய வங்கி கள்—மாநிலக் கூட்டுறவுத் தலைமை வங்கிகள்—

பக்கம்

விவசாயக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்—சிறிய சங்கங்கள்—பல நோக்குச் சங்கங்கள்—கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பெரிய அளவில் அமைக்கப் படவேண்டுமா?—இச் சங்கங்கள் பணிபுரிய வேண்டிய பகுதியின் பரப்பு எவ்வளவு இருக்க வேண்டும்?

18. கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள் ... 314

சேவைச் சங்கம் என்றுலென்ன?—பணிகள்—சங்க அமைப்பு முறை—பங்கு மூலதனம்—வைப்புத் தொகை விளைச்சல் கடன்—மத்திய காலக் கடன்—வட்டி விதம்—கடனைத் திருப்பிப் பெறுதல்—ஏழைக் குடியானவர்களுக்கும் கடனுதவி—விவசாயச் சாதனங்களை வழங்கல்—வீட்டுச் சாமன்கள் விநியோகம்—பண்டகங்கள்—திறமையான நிர்வாகம்—நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் வளர்ச்சி.

19. கூட்டுறவு மத்திய வங்கிகள் 335

குறிக்கோள்கள்—அமைப்பு முறை—வங்கிகளின் செயல் பகுதி—மத்திய வங்கிகளின் நிதி—பங்கு மூலதனம்—வைப்புத் தொகை—பெறும் கடன்—காப்பு நிதியும் இதர நிதிகளும்—உறுப்பினர் சங்கங்களுக்குக் கடன் தரும் விதமும் நிலையும்—மத்திய வங்கிகளின் குறைகளும் நிவாரணமும்.

20. கூட்டுறவு மாநில மத்திய வங்கிகள் அல்லது உச்சி வங்கிகள் ... 347

அமைப்பு—பணிகள்—நடப்பு மூலதனம்—காப்பு நிதிவைப்புகள்—பெறும் கடன்கள்—தரும் கடன்—கண்காணிப்பும் தணிக்கையும்—காப்பு நிதி முதலீடு—இன்றைய நிலை—சில ஆலோசனைகள்—தேசியக் கூட்டமைப்பு நிறுவனம்.

21. நீண்ட காலக் கடன்—நிலவள வங்கிகள் ... 358

அமைப்பு முறை—நிதி உருவாக்கும் முறை—கடன் பத்திரங்கள்—கடன் பத்திரங்கள் பெறுவோர்—கிராமக் கடன் பத்திரங்கள்—நிலவள

பக்கம்

வங்கிகளுக்கு அரசாங்க உதவி—நிலவள வங்கிகள் தரும் கடன்—அடைமானச் சொத்தின் மதிப்பு நிர்ணயம்—கடன் பெறுவோர் திருப்பிச் செலுத்த முடியுமா?—வட்டி வீதம்—கடன் வழங்குவதற்குப் பின்பற்றும் வழி முறைகள்—அதிகபட்சக் கடன்—விவசாய மறு நிதிக் கார்ப்பரேஷன்.

22. நகரக் கூட்டுறவு வங்கிகளும் கடன் சங்கங்களும் 375

சங்கங்களின் வகைகள்—கூட்டுறவு நகரவங்கிகளின் பணிகள்—பணிசெய்யும் பகுதி—உறுப்பினர் நிலை— நிர்வாகம்—நகர வங்கி அமைப்பு முறை—நிதிநிலை—வைப்புகள் — தவணை முறை வைப்புகள்—வீட்டுப் பாதுகாப்புச் சேமிப்பு—சீட்டு நிதி வைப்புகள்—வருங்காலச் சேமிப்பு நிதிக் கணக்கு—வருங்காலச் சேமிப்புக்கணக்கு—அன்றாட வைப்புக் கணக்கு—நகர வங்கிகள் முதலீடு செய்யும் விதம்—கடனளித்தல்—ஏனைய முதலீடுகளும் பணிகளும்—இலாபப் பங்கீடு—கண்காணிப்பும் தணிக்கையும்—இன்றைய நிலை—பிரச்சினைகளும் கஷ்டங்களும்.

ஊதியம் பெறுவோர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்: குறிக்கோள்களும் பணிகளும்—உறுப்பினர்கள்—நிர்வாகம்—நிதி வசதிகள்—கடன் வழங்கும் முறை—இதரப் பணிகள்—சங்கங்களுக்குத் தவைப்படும் உதவி—வெற்றி நடை.

23. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் ... 398

நுகர்வோர் சங்கத் தோற்றம்—நகர மக்களுக்கான திட்டம்—ஆலைத் தொழிலாளர்களுக்கான திட்டம்—அரசாங்கப் பணியாளர்களுக்கான திட்டம்—கிராம மக்களுக்கான திட்டம்—நான்காம் ஐந்தாண்டுத் திட்டமும் கூட்டுறவுப் பண்டகசாலைகளும்— நடைமுறைத் தத்துவங்கள்—அமைப்பு முறை—பண்டகசாலை அளவு—உறுப்பினர்களின் ஆதரவு-சில்லறை விற்பனைத்திறன்-ரொக்கத்திற்கு மட்டுமே விற்பனை-போதுமான அளவு சொந்த நிதி —பல்வகைப் பொருள் விற்பனை—கொள்முதல் கொள்கை-விலைக்கொள்கை-உற்பத்தி நிலையங்கள்.

பக்கம்

24. கூட்டுறவுப் பண்ணை ... 416

கூட்டுறவுப் பண்ணையின் அவசியம்—முக்கிய அம்சங்கள்—கூட்டுறவுப் பண்ணை வகைகள்—கூட்டுறவு இணைப்புப் பண்ணைச் சங்கங்கள்—பணிகள்—கூட்டுப் பண்ணைச் சங்கங்கள்—மாதிரிக் கூட்டுறவுப் பண்ணைகள்—பயிர்சித் திட்டம்—கூட்டுறவுப் பண்ணையின் மதிப்பீடு—அரசாங்க உதவி—ஏன் மக்களின் ஆதரவு இல்லை?—நான்காம் திட்டத்தில் கூட்டுறவுப் பண்ணை—ஆய்வுரை.

25. கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் 430

கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கத்தின் அவசியம்—குறிக்கோள்களும் பணிகளும்—உறுப்பினர்கள்—தேவையான நிதி—விற்பனை நடவடிக்கைகள்—விவசாயச் சாதன விநியோகம்—உரக்கடன்—கூட்டுறவுக் கடனை விற்பனையோடு இணைத்தல்—பண்டக வசதிகள்—விற்பனைக் கூட்டமைப்புகள்—தேசிய விவசாயக் கூட்டுறவு விற்பனை நிறுவனம்—கூட்டுறவு விற்பனையின் வளர்ச்சி—தமிழ் நாட்டில் விவசாயக் கூட்டுறவு— விற்பனை—நான்காம் திட்டத்தில் சந்தையிடுகைச் சங்க வளர்ச்சி.

26. கூட்டுறவுப் பக்குவப்படுத்தும் ஆலைகள் 448

கூட்டுறவுச் சர்க்கரை ஆலை—கூட்டமைப்புகள்—கூட்டுறவுப் பஞ்சாலைகள்—ஏனைய கூட்டுறவு ஆலைகள்—இத்தொழில்களுக்குத் தேவையான திட்டம்—நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் வளர்ச்சி.

27. பண்டகங்கள் அல்லது கிடங்குகள் ... 461

கிடங்குச் சட்டங்கள்—கிடங்குகள் தரும் ரசீது—அரசாங்கக் கிடங்குகள்—தேசியக் கூட்டுறவு வளர்ச்சி, பண்டக வாரியம்—மத்தியக் கிடங்குக் கழகம்—மாநிலக் கிடங்குக் கழகம்—ஐந்தாண்டுத் திட்டங்களும் பண்டக வளர்ச்சியும்.

28. கூட்டுறவு மனைச் சங்கங்கள் 468

குறைந்த வருமானம் பெறுவோரின் வீட்டுத் திட்டம்—நடுத்தர வருமானம் உள்ளோருக்கு வீட்டுவசதித் திட்டம்—அரசாங்க உதவித் தொகை

பக்கம்

பெறும் வீட்டுத் திட்டம்—குடிசை மாற்று வாரியத் திட்டம்—கிராம வீட்டு வசதித் திட்டம்—அரசாங்க ஊழியர் வீட்டு வசதித் திட்டம் – ஆயுள் காப்பீட்டுக் கழகத் திட்டம்—கூட்டுறவு மனைச் சங்கங்கள்—சங்க வகைகள்—கூட்டுறவு மனைச் சங்கங்களின் வளர்ச்சி—கூட்டுறவு மனைச் சங்க ஆய்வுக் குழுவின் பரிந்துரைகள்—கூட்டுறவு மனை அடைமான வங்கிகள்.

29. கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் ... 479

கைத்தறித் தொழிலிலுள்ள பிரச்சினைகள்—கூட்டுறவு நெசவுச்சங்கத்தின் அவசியம்—நோக்கங்களும் பணிகளும்—கூட்டுறவு நெசவுச் சங்க வகைகள்—மேல் மட்டச் சங்கங்கள்—நிதி—அரசாங்க உதவி—விசைத்தறி வாங்க உதவி—கூட்டுறவு நெசவாளர் சங்க வளர்ச்சி.

30. ஏனைய வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் 488

மண் வளப் பாதுகாப்புச் சங்கங்கள்—பணிகள்—தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் —அரசாங்கச் சலுகைகள்—முன்னேற்றம்—கூட்டமைப்புச் சங்கங்கள்—அரசாங்க உதவி—சங்க இடர்ப்பாடுகள்—கூட்டுறவுப் பால் பண்ணைகள்—சிக்கல்கள்—தீர்வு—கூட்டுறவு மீன் பண்ணைகள்—கூட்டுறவு மோட்டார்ப் போக்குவரத்துச் சங்கங்கள்—கூட்டுறவுத் தொழிலகங்கள்—மாதர் கூட்டுறவுச் சங்கங்கள்—சலவைத்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

31. ரிசர்வ் வங்கியும் கூட்டுறவும் 505

மத்தியகாலக் கடன்—பாங்கு வட்டி வீதம்—கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான வசதிகள்—நிலைபெறுக்க நிதி நலிவுற்ற வங்கிகளை வலுப்படுத்தல்—வங்கிகளை ஒழுங்குபடுத்தும் சட்டம்—முதலீட்டுக்கொள்கை.

32. கூட்டுறவு இயக்கத்திற்கு உதவி புரியும் நிறுவனங்கள் ... 515

அரசு வங்கி —தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் விவசாயக் கூட்டுறவுக் கடன்—கூட்டுறவு விவசாய விற்பனை—பக்குவப்படுத்தும் ஆலைகள்—கூட்டுறவுக்

பக்கம்

இடங்குகள்—குளிர் சாதனப் பண்டகங்கள்—கூட்டுறவு நிர்வாகம்—வணிக வங்கிகள்—கிராம மின்னமைப்புக் கழகம்—சிறு குடியானவர் முன்னேற்ற அமைப்பு.

33. கூட்டுறவுத் தணிக்கையும் கண்காணிப்பும் 529

கூட்டுறவுத் தணிக்கையின் நோக்கங்கள்—தணிக்கையாளரின் பணி—தணிக்கை வகைகள்—கூட்டுறவுப் பதிவாளர் பொறுப்பு—தணிக்கையை நிர்வாகத்திலிருந்து பிரிக்கவேண்டுமா? தணிக்கையில் காணப்படும் சிக்கல்கள்—நிவாரணம் கூட்டுறவுக் கண்காணிப்பு — பணிகள்—அமைப்பு—நடைமுறை—கண்காணிப்புச் செலவு—கண்காணிப்பு முறையிலுள்ள குறைகள்.

34. கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும் ... 545

பணியாளர் பயிற்சி—ரிசர்வ் பாங்கு அளிக்கும் பயிற்சி - உறுப்பினருக்குப் பயிற்சி.

35. கூட்டுறவு இயக்கத்தைச் சீர்படுத்த வேண்டிய அவசியம் ... 552

போதிய கல்வி அறிவின்மை—அக்கறையின்மை—கடனுக்கே முக்கியத்துவம்—மக்கள் முயற்சியின்மை - கௌரவப் பணியாளர்—அரசாங்கத் துறையினர் அக்கறையின்மை—பொது மக்களின் பற்றின்மை—குறைகளை நீக்கும் வழிகள்—கூட்டுறவுக் கல்வி முறையை மாற்றி அமைத்தல்—கூட்டுறவுப் பயிற்சி—கூட்டுறவு இயக்கத்தை வழி நடத்துவோர்—பல வகைப் பணிச் சங்கங்கள்—அரசாங்கத்தின் பங்கு—கூட்டுறவுத் தத்துவங்களை முறையாகப் பின்பற்றல்—கண்காணிப்பு.

மேற்கோள் நூற்பட்டியல் 562

கலைச்சொற்கள் 563

முதல் பிரிவு

கூட்டுறவின் தத்துவங்களும் பிரச்சினைகளும்

1. கூட்டுறவும் அதன் தத்துவங்களும்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் நடைபெற்று வந்த தொழில் புரட்சியின்போது தோன்றிய இயக்கம்தான் கூட்டுறவு இயக்கமாகும். உற்பத்தியாளரிடையே இருந்துவரும் போட்டியையும் அதனால் விளையும் 'வியாபாரச் சுழலையும்' (Trade cycle) தொழிலாளர் சுரண்டப்படும் நிலையையும் ஒழித்துக் கட்டுவதே இவ்வியக்கத்தின் குறிக்கோளாகும். உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தி, அதன் வாயிலாகப் புதியதோர் சமுதாயத்தையும் பொருளாதார அமைப்பையும் தோற்றுவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இவ்வியக்கம் இன்று உலகமெங்கும் பரவி நல்ல பயனை அளித்து வருகிறது.

கூட்டுறவின் வித்து

19ஆம் நூற்றாண்டில் தோன்றிய பேராலை உற்பத்தி முறையினால் சமுதாயம் பல இன்னல்களுக்கு ஆளானது. பெண்டிரும் சிறுவரும் வேலைக்கமர்த்தப்பட்டு, தம் வயிற்றைக் கழுவுவதற்குக் கூடப் போதிய ஊதியம் பெறாமல் வாடி வதங்கினர். கொள்ளை இலாபம் திரட்டவேண்டுமென்ற மோகத்தினால் ஆலை அதிபர்கள் பாட்டாளி மக்களைச் சுரண்டிவாழ முற்பட்டனர்; எங்கெல்லாம் ஆலைகள் அமைக்கப்பட்டதோ அங்கெல்லாம் மக்கள் நெருக்கடியும், அதனால் நோய் நொடிகளும் மலிந்தன. பாட்டாளி மக்களின் வியர்வையையும் இரத்தத்தையும் உறிஞ்சிய முதலாளிகள் சிலர் மட்டுமே செல்வச் செழிப்புடனும் செருக்குடனும் வாழ்ந்து வந்தனர். முதலாளித்துவ அமைப்பில் காணப்பட்ட இக் குறைபாடுகளையெல்லாம் கண்டுப் பல சீர்திருத்தவாதிகள் மனம் நொந்தனர். 19ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த புரட்சிச் சிந்தனையாளரான கார்ல் மார்க்ஸ் முதலாளித்துவ அமைப்பையே குழி தோண்டிப் புதைக்கக் கங்கணம் கட்டினார். சமதர்ம அமைப்பையும் அதன்வழியாகப் பொதுவுடைமையையும் ஏற்படுத்தப் புரட்சி

கரமான வழியையும் வகுத்தார். ஆனால், பொதுவுடைமை அமைப்பில் மனிதனின் சுதந்திர வேட்கையும் தொழில் சுதந்திரமும் ஒடுக்கப்பட்டு விடுகிறது. இவ்வாறாக, முதலாளித்துவ அமைப்பினால் தோன்றிய சமூகக்கேடுகள் ஒரு புறமும், அக் கேடுகளை அகற்றுவதற்கென்று தோன்றிய புரட்சிமிக்க பொதுவுடைமைத் தத்துவம் மறுபுறமும் இருக்க, இவ் விரு அமைப்புகளுக்குமே நடு நிலையில் தோன்றிய இயக்கம்தான் இக் கூட்டுறவு இயக்கம். மக்களிடையே ஏற்றத் தாழ்வின்றி, எல்லோருக்கும் பயனளிக்கும் வகையில் ஏற்பட்ட இவ் வியக்கம் இன்று முதலாளித்துவ நாடுகளிலும் பொதுவுடைமை நாடுகளிலும் பொதுவான இயக்கமாகப் பொலிவுடன் வளர்ந்து வருகிறது.

இக் கூட்டுறவு இயக்கத்திற்கு வழி வகுத்துத் தந்தவர் திரு. இராபர்ட் ஓவன் அவர்களே. கூட்டுறவு இயக்கத்திற்கு மட்டுமின்றி, இங்கிலாந்தின் சமதர்ம இயக்கத்திற்கும் தந்தையாகப் போற்றப்படும் இவர் 1771ஆம் ஆண்டில் தோன்றினார். சாதாரணக் குடும்பத்தில் பிறந்து, தம் உழைப்பினாலும் திருமணத்தின் வாயிலாகவும் செல்வந்தராகி ஆலை அதிபராக விளங்கினார். தொழில் புரட்சியின் விளைவாகத் தோன்றிய கேடுகளையெல்லாம் அகற்றி, புதியதொரு சமுதாயத்தை உருவாக்குவதற்கென்று தம்மையும் தம் செல்வாக்கையும் அர்ப்பணித்தார். தன்னலமற்ற இவரது தியாக உணர்வினால் புதிய பல திட்டங்களை உருவாக்கினார். ஆலைகளில் கூட்டுறவு முறையில் தொழிலாளர் வேலை செய்யும் திட்டத்தை வகுத்தார். அத் திட்டம் வெற்றியடையாதபோதிலும், தளரா மனமும் வைர நெஞ்சமும் கொண்ட இவர் கூட்டுறவுப் பண்ணைகளை உருவாக்கும் திட்டத்தைப் போட்டு அதிலும் தன் செல்வத்தைச் செலவிட்டார். இவ்வாறாகப் பல சமுதாயத் திட்டங்களை வகுத்து, அவற்றின் வழியாகப் புதிய உலகை உருவாக்க எண்ணிய இவர் தொழிலாளரிடையே செல்வாக்குப் பெற்றார். பேராலை உற்பத்தி முறையின்கீழ் ஒவ்வோர் ஆலை அதிபரும் தத்தம் ஆலைகளில் பண்டகசாலைகளை வைத்து, அவற்றின் வழியாகத் தொழிலாளருக்குத் தேவையான பண்டங்களையெல்லாம் கடனுக்கு விற்று வந்தனர். இப் பண்டகசாலைகளில் தரமற்ற பொருள்கள் அதிக விலைக்கு விற்கப்பட்டு வந்தன. இதனால் தொழிலாளர்களின் ஊதியத்தில் பெரும்பகுதி மறுபடியும் இப் பண்டகசாலைகளின் வாயிலாக முதலாளிகளுக்கே சென்றுகொண்டிருந்தது. எனவே, இராபர்ட் ஓவனின் சீடர்களில் ஒருவரான டாக்டர் கிங் என்பவர் தொழிலாளர்களைக் கொண்டே கூட்டுறவு முறையில் பண்டகசாலை ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிட்டார். ராக்டேலைச் சேர்ந்த 28 நெசவுத் தொழிலாளர் ஒன்றுசேர்ந்து தலா 1 பவுன் செலுத்தி,

1844ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் நாள் கூட்டுறவுப் பண்டகசாலையொன்றைத் தொடங்கினர். வரலாற்றுச் சிறப்பு மிக்க இப் பண்டகசாலைதான் கூட்டுறவு இயக்கத்தின் வித்தாகி, முளைத்து, தளைத்து வளரத் தொடங்கியது. இக் கூட்டுறவு என்னும் மரத்தின் கனியைத் தாமும் பெறவேண்டுமென்ற ஆசையினால் ஏனைய நாட்டவரும் இவ் வியக்கத்தில் ஈடுபடலாயினர். இவ்வாறாக, கூட்டுறவு இயக்கத்திற்கு வித்திட்ட அந்த நெசவாளிகள் தாம் 'ராக்டேல் முன்னோடிகள்' (Rochdale pioneers) எனப் பெருமையுடன் அழைக்கப்படுகின்றனர். விற்பனைத் துறையில் இம் முன்னோடிகளால் தொடங்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் இன்று எல்லா நாடுகளிலும் பல்வேறு துறைகளில் வளர்ந்து வருகிறது. இனி, இக் கூட்டுறவு இயக்கத்திற்குரிய இலக்கணங்களை ஆராய்வோம்.

இலக்கணம்

கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றை நோக்கினால், அது துன்பத்திலிருந்து விடுபடுவதற்காக அமைக்கப்பட்ட இயக்கம் என்பது புலனாகும். எனவே, எல்லா நாடுகளிலும் ஒரே விதமான துன்பமோ அத் துன்பத்திற்கு அடிப்படையான காரணமோ இல்லாததால், நாட்டிற்கு நாடு இக் கூட்டுறவு இயக்கம் வெவ்வேறு முறையில் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இதிலிருந்து புலனாகும் உண்மை யாதெனில், கூட்டுறவு இயக்கத்திற்கு முறையான இலக்கணத்தைக் காண்பது கடினம். கூட்டுறவு என்னும் இச் சிறிய சொல்லிற்குப் பல கூட்டுறவாளர்கள் இலக்கணம் வகுத்துள்ளனர் என்பது உண்மைதான். எனினும், அவ் விலக்கணங்கள் யாவும் அந்தந்த ஆசிரியர்கள் வாழ்ந்த நாடுகளில் இயங்கி வந்த கூட்டுறவின் பிரதிபலிப்பாகத்தான் உள்ளன; அவை எல்லா நாடுகளுக்கும் பொருத்த முடையதாயிருப்பதில்லை. எனினும், இவ் விலக்கணங்களுள் பொதுவானதொரு கருத்தை நாம் காணமுடியும்.

திரு. கால்வெர்ட் என்னும் ஆசிரியர், 'மக்கள் தங்களின் பொருளாதார உயர்வுக்காகத் தாமாகவே முன்வந்து, சமத்துவ அடிப்படையில் உருவாக்கும் அமைப்புதான் கூட்டுறவு இயக்கம்' என்று சித்திரிக்கிறார். அயர்லாந்து நாட்டின் கூட்டுறவு இயக்கத்திற்கு மூல காரணமாக விளங்கிய சர் ஹோரேஸ் பிளங்கட் என்பவர் 'சீரிய பண்ணை முறை, சிறந்த வணிகம், வளமான வாழ்வு' ஆகிய மூன்றையும் குறிக்கோளாகக் கொண்டதுதான் கூட்டுறவு இயக்கம் என்கிறார். திரு. ஹெரிக் அவர்கள், 'ஒவ்வொருவரும் தமக்காகவும் பிறருக்காகவும் தமது திறமையையும் சாதனங்களையும் தம்முடைய நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வந்து

இலாபமோ நட்டமோ எதுவானாலும் பொதுவாகவே ஏற்றுக் கொள்ளும் அமைப்புதான் கூட்டுறவு' என்கிறார். மேலும், 1946-ல் இந்தியாவில் நியமிக்கப்பட்ட கூட்டுறவுத் திட்டக் குழு கால்வெர்ட் அவர்களின் இலக்கணத்தை ஒட்டியே கூட்டுறவு இயக்கத்திற்கு வரையறை கொடுத்துள்ளது. 'மக்கள் எவ்விதக் கட்டாயமுமின்றி, தாமாகவே ஒன்றுகூடிச் சமத்துவ அடிப்படையில் தம் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக உருவாக்கும் அமைப்புதான் கூட்டுறவு' என்று வரையறுத்துள்ளது.

கூட்டுறவு என்பது மத நம்பிக்கையைப் போன்றதெனச் சர் டார்லிங் கருதுகிறார். அவருடைய விளக்கப்படி 'கூட்டுறவு ஓர் அமைப்பு மட்டுமன்று; மக்களின் இதயத்திலும் உள்ளத்திலும் எழுகின்ற ஓர் ஊக்க உணர்வுமாகும். எனவே, தொழில்துறையில் அமலாக்கப்படும் மதம்தான் கூட்டுறவு. சுயநிறைவும் சேவையும் தான் அதன் வேதவாக்கு'. இந்தியாவின் தலைசிறந்த கூட்டுறவாளராகப் புகழ்பெற்ற திரு. மேத்தா அவர்கள் கூட்டுறவைத் தன்னிச்சையான மக்களின் இயக்கம் என்று கூறியுள்ளார். அவரது விளக்கப்படி, 'பொதுவான பொருளாதார நோக்கினை நிறைவேற்றுவதற்காக மக்கள் தாமாகவே முன்வந்து அமைக்கும் மாபெரும் இயக்கத்தின் ஒரு பகுதிதான் கூட்டுறவு' என்று அறிய வருகிறோம்.

மேற்கூறிய இலக்கணங்களையெல்லாம் ஆராய்ந்து பார்க்குமிடத்துத் திரு. கால்வெர்ட் அவர்களின் இலக்கணமே சிறந்ததாகவும் பலராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது என்பது புலனாகும். மக்கள் அனைவரும் ஏற்றத்தாழ்வின்றி ஒற்றுமையுடன் வேலைசெய்யும் முறைதான் கூட்டுறவு. இக் கூட்டுறவு இயக்கம் ஏழைமக்களின் இயக்கம்தான் என்றும் செல்வந்தர்களுக்கு ஒவ்வாத இயக்கம் என்றும் சிலர் வாதாடுவர். ஆரம்பத்தில் தொழிலாளர்களின் இயக்கமாக இருந்தபோதிலும், தற்போது நடுத்தர வகுப்பினரும் இவ் வியக்கத்தில் பெரும்பங்கு வகித்து வருகின்றனர். எனவே, கூட்டுறவு என்பது எல்லா வகுப்பினர்களுக்கும் பொதுவானதோர் இயக்கமாகும். மக்களிடையே ஏற்படும் வருமான ஏற்றத்தாழ்வுகளை நீக்கவும், இலாப நோக்கை அகற்றவும், மனிதனை மனிதன் சுரண்டி வாழும் நிலையைப் போக்கவும் உற்பத்தியாளரும் நுகர்வோரும் சேர்ந்து நல்லுறவுடன் வாழ வகைசெய்யும் இயக்கம்தான் இக் கூட்டுறவு. இக் கூட்டுறவு இயக்கத்தின் கருவியாகப் பயன்படுவது மக்களின் சுயமான உணர்வேயன்றி, அரசாங்கத்தின் தலையீடோ புரட்சிகரமான செயலோ அன்று. மக்கள் தம் சுதந்திரத்தையும்,

உரிமையையும், உடைமைகளையும் கட்டிக்காத்து அவர்களின் பொது மேம்பாட்டை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வரும் இக் கூட்டுறவு இயக்கம் சமதர்ம அமைப்பையோ பொதுவுடைமை அமைப்பையோ தழுவுவது கிடையாது.

இக் கூட்டுறவு இயக்கத்தில் பங்கு கொள்ளும் ஒவ்வொருவரும் நேர்மையுடன் உழைக்க முன் வரவேண்டும். 'நாம் பிறருக்காகவும் மற்றவர்கள் நமக்காகவும் பாடுபடவேண்டும்' என்ற அடிப்படைத் தத்துவத்தில் எழுந்ததுதான் இக் கூட்டுறவு இயக்கம். எல்லோரும் ஒன்றுபட்டுத் தம் உழைப்பையும் செல்வத்தையும் பயன்படுத்தி, தங்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக அமைத்துக் கொள்வதற்கான தத்துவத்தைத்தான் 'கூட்டுறவு' என்ற சிறிய சொல் விளக்குகிறது. 'ஒற்றுமையாய் வாழ்வதாலே உயரும் நன்மையே; வேற்றுமையை வளர்ப்பதனாலே விளையும் தீமையே.'

கூட்டுறவுத் தத்துவங்கள்
(Principles of Co-operation)

பல்வேறு நாடுகளிலுமுள்ள கூட்டுறவாளர்கள் கூட்டுறவு இயக்கம் செயல்படும் முறையை அடிப்படையாகக் கொண்டு அதன் தத்துவங்களை உருவாக்கியுள்ளனர். எனினும், கூட்டுறவுக் கொள்கைகளை முதன்முதலில் உருவாக்கியவர்கள் 'ராக்டேல் முன்னோடிகளே'. 1937ஆம் ஆண்டில் சர்வதேசக் கூட்டுறவு அமைப்பினால் நியமிக்கப்பட்ட குழு ராக்டேல் பண்டகசாலையின் கொள்கைகளைக் கீழ்வருமாறு வரிசைப்படுத்தியுள்ளது:

1. எவரும் உறுப்பினராகலாம்,
2. மக்களாட்சி முறையில் நிர்வாகம்,
3. மூலதனத்திற்குக் குறைந்த அளவு வட்டி,
4. உறுப்பினர்களின் கொள்முதலுக்கேற்ப இலாபம் பகிரப்படுதல்,
5. அரசியலிலும் மதத்திலும் நடுநிலைமை வகித்தல்,
6. ரொக்கத்திற்கு மட்டும் விற்பனை செய்தல்,
7. கல்வியைப் பரப்புதல்.

மேற்கூறிய தத்துவங்கள் அனைத்தும் கூட்டுறவுப் பண்டகசாலைக்கென வகுக்கப்பட்டவையாகும். ஆனால், இங்கிலாந்து நாட்டில் கூட்டுறவுப் பண்டகசாலையைத் தொடங்கி ஏறக்குறைய 125 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த 125 ஆண்டுகாலத்திற்குள் எவ்வளவோ சமுதாய மாற்றங்களும் பொருளாதார மாறுதல்களும்

உலகில் ஏற்பட்டுவிட்டன. இம் மாறுதல்களையொட்டிப் பல்வேறு நாடுகளில் இயங்கிவரும் கூட்டுறவு இயக்கமும் வெவ்வெறுகவே உள்ளது. எனவே, கூட்டுறவின் அடிப்படைத் தத்துவங்களை ஆராய்ந்து ஒழுங்குபடுத்துவதற்காக 1963-ல் 'சர்வதேசக் கூட்டுறவுப் பேரவை' (International Co-operative Congress) சர்வ தேசக் கூட்டுறவு அமைப்பைக் கேட்டுக்கொண்டது. அவ் வேண்டு கோளுக்கேற்ப அமைக்கப்பட்ட ஆணைக்குழு எல்லா நாடுகளுக்கும் பொதுவானதாக இருக்கும் வகையில் கூட்டுறவுத் தத்துவங்களைப் புனைந்துள்ளது. இத் தத்துவங்களைப் பற்றிச் சற்று விரிவாக ஆராய்தல் நன்று.

தன்னியல்பான, கட்டுப்பாடற்ற, உழைக்கும் உறுப் பினர்: கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ந்து பயனடைய விரும்பும் அனைவரும் சாதி, மத வேறுபாடின்றியும், எவ்விதக் கட்டுப் பாடின்றியும் சேருவதற்கு வாய்ப்பு இருக்கவேண்டும். எவரையும் வலுவந்தமாக உறுப்பினராக்கக் கூடாது. உறுப்பினரானபின் சங்கத்தை விட்டு விலகுவதற்கும் எவ்விதத் தடங்கலும் இருக்கலாகாது. சுதந்திர மனப்பான்மை இருந்தால்தான் கூட்டுறவு இயக்கம் செம்மையாக நடைபெற முடியும். உறுப்பினர் களைக் கட்டுப்படுத்துவது அவர்களின் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கட்டுப்படுத்திவிடும். உறுப்பினர்கள் நல்லெண்ண முடையோராயிருக்க வேண்டுமாயின் அவர்களை எவ்வகையிலும் கட்டுப்படுத்தவோ ஆணையிடவோ கூடாது.

சமுதாய உயர்விற்காகவே கூட்டுறவுச் சங்கம் அமைக்கப் படுகிறது. எனவே, குறிப்பிட்ட சமுதாயத்திலுள்ள எவரையும் அச் சங்கம் விலக்கக்கூடாது. அரசியல், சமயம் போன்ற காரணங்களுக்காக உறுப்பினராக விரும்பும் எவரையும் தடை செய்யலாகாது. சங்கத்தில் உறுப்பினராக ஆன பின்னர், அச் சங்கத்திற்கு நம்பிக்கையுள்ளவர்களாக மக்கள் பணியாற்ற வேண்டும். சங்கத்தின் மதிப்பையோ பெயரையோ கெடுக்கும் வகையில் எவரும் நடந்து கொள்ளக்கூடாது. மக்களாட்சி முறையில் எடுக்கப்படும் தீர்மானங்களை உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். தத்தம் அரசியல், மதச் செல்வாக்கினைச் சங்கத்தின் நடவடிக்கைகளில் புகுத்தக்கூடாது. உறுப்பினர்களின் பொதுக் கூட்டத்தின்போது, சங்கத்தின் முன்னேற்றத்தையும், உறுப்பினர் களின் பொதுநலனையுமே மனத்தில் கொண்டு, எவ்விதப் பார பட்சமுமின்றித் தீர்மானம் எடுக்கவேண்டும்.

சங்கத்தில் சேருவதற்கு எவ்விதத் தடையுமிருக்கக்கூடா தெனினும், உறுப்பினர்களாவதற்கு வேண்டிய தகுதியை அச்

சங்கம் வலியுறுத்தலாம். உதாரணமாக, நொடித்துப்போனவர்களோ பைத்தியக்காரர்களோ சங்கத்தில் உறுப்பினர்களாக முடியாது. இத்தகைய விதியைச் சங்கம் அமலாக்கும்போது, அதற்கு எதிர்ப்போ மறுப்போ இருக்கக்கூடாது. அதேபோல் கூட்டுறவுச் சங்கத்திற்குப் போட்டியாகத் தொழில் நடத்தும் எவரும் உறுப்பினராக அனுமதிக்கப் படக்கூடாது. கைவினைஞர்களின் சங்கம் கைத்தொழிலே தெரியாதவரை உறுப்பினராக ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். அதேபோல், விவசாய விற்பனைச் சங்கம் தான் விற்பனை செய்யும் பொருளைச் சாகுபடி செய்யாத விவசாயியை உறுப்பினராக ஏற்றுக்கொள்ள முடியாது. உழைப்பாளிகளின் சங்கத்தில் தொழிலாளிகள்தாம் உறுப்பினர்களாக இருக்கமுடியும். போக்குவரத்தில் பணிபுரிவோர்தாம் போக்குவரத்துச் சங்கத்தில் சேரமுடியும். எனவே, உறுப்பினராக எவரும் அனுமதிக்கப்படலாம் என்று கூறும்போது, அச்சங்கத்தோடு தொடர்பில்லாதவர்கள்கூட அனுமதிக்கப் படவேண்டும் என்று நினைக்கக்கூடாது.

மேலும், உறுப்பினர் பதவியிலிருந்து விலக விரும்பும் எவரையும் தடுக்கக் கூடாது என்று கூறும்போது, அவர் சங்கத்திற்குத் தரவேண்டிய பாக்கியைக் கொடுக்காமல் விலக அனுமதிக்கப் படமாட்டார். சங்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் நட்டத்தில் அவருக்கும் பொறுப்பு இருக்குமாயின், சங்கத்திலிருந்து விலகுவதற்கு அவர் அனுமதிக்கப்படாமலிருக்கலாம். இறுதியாக, கூட்டுறவுச் சங்கம் புரியும் பணிகளை உறுப்பினர்கள் மனமுவந்து ஏற்றுக்கொள்ளவேண்டும். சங்கத்தின் பணிகளை ஏற்றுக்கொள்ள விரும்பாத எவரும் அதன் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதியற்றவராவர். சான்றாக, விவசாய விற்பனைச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கும் விவசாயி, தம் விளைச்சலைச் சங்கத்தின் வாயிலாக விற்காமல் தம்மிச்சைப்படி விற்பனை செய்தால், அவர் உறுப்பினராக இருப்பதில் அர்த்தமே கிடையாது.

மக்களாட்சி முறையில் நிர்வாகம்: கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் மக்களாட்சி முறையைக் கொண்டவை. எனவே, உறுப்பினர்களால் முறையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டோரை அல்லது நியமனம் பெற்றோரைக் கொண்டுதான் அவற்றின் நிர்வாகம் நடைபெற வேண்டும். நிர்வாகிகள் உறுப்பினர்களின் இசைவுக்கேற்பத் தம் பணிகளைப் புரிய வேண்டும். தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும் வாக்களிப்பு உரிமை இருக்கவேண்டும். அவர்களால் தேர்ந்தெடுக்கப் படுவோரால்தாம் அச் சங்கங்களும் நிர்வகிக்கப்படவேண்டும். ஒருவருக்கு ஒரு வாக்குக்குமேல் இருக்கக்கூடாது.

எந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் அதன் உறுப்பினர்களைக் கொண்ட பொதுக் குழுதான் அதிகாரம் மிக்கதாக இருந்து வருகிறது. கூட்டுறவுக் கொள்கைகளுக்கும் விதிகளுக்கு மேற்ப இப் பொதுக்குழு எடுக்கும் தீர்மானம்தான் முடிவானது. உறுப்பினர் எத்தனை பங்கு மூலதனத்தைக் கொண்டிருந்தாலும் அவருக்கு ஒரு வாக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. பொதுக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகக் குழுக்கள்தாம் அன்றாட நிர்வாகப் பணியை ஏற்கின்றன. கூட்டுறவு இயக்கம் தொடங்கப் பட்ட காலத்திலிருந்தே கூட்டுறவுச் சங்கங்கள் இவ்வாறுதான் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்திற்கும் 'கூட்டுப் பங்குக் கம்பெனியின்' (Joint Stock Company) நிர்வாகத்திற்கும் அடிப் படை வேறுபாடு உண்டு. கூட்டுப் பங்குக் கம்பெனிகளில் பங்கு தாரர்கள் கொண்டிருக்கும் பங்குகளின் அடிப்படையில் வாக்குரிமை அளிக்கப்படுகிறது; கூட்டுறவுச் சங்கத்திலோ உறுப்பினர் எத்தனை பங்குகளை வாங்கியிருந்தாலும், அவருக்கு ஒரே வாக்குதான் கொடுக்கப்படுகிறது. மேலும், கூட்டுப் பங்குக் கம்பெனிகள் பெரும்பாலான பங்குகளைக் கொண்ட ஒரு சிலரால் மட்டுமே நிர்வகிக்கப்படுகின்றன; கூட்டுறவுச் சங்கங்களோ எல்லா உறுப்பினர்களையும் கொண்ட பொதுக்குழுவால் நிர்வகிக்கப் படுகின்றன.

மேல்மட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் 'ஓர் உறுப்பினருக்கு ஒரு வாக்கு' என்ற விதி பின்பற்றப்படவேண்டிய அவசியமில்லை. பெரும்பாலும், இவ் விதி பல நாடுகளில் கடைப் பிடிக்கப் படுவதில்லை. சான்றாக, டென்மார்க்கிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்புச் சங்கத்தில் உறுப்பினர்களாக விளங்கும் சங்கங்கள் கொள்முதல் செய்திருக்கும் அடிப்படையில் தான் வாக்குரிமை கொடுக்கப்படுகிறது. அதேபோல், இங்கிலாந்தின் மொத்த விற்பனைச் சங்கத்திலும் ஒவ்வோர் உறுப்பினர் சங்கத்திற்கும் ஒரு வாக்கு அளிக்கப்படுகிறது; அதோடு, உறுப்பினர் சங்கமும் 12,000 பவுன் அளவு கொள்முதல் செய்தால் அக் கொள்முதல் அளவு ஒவ்வொன்றுக்கும் மேலும் ஒரு வாக்குரிமை கொடுக்கப்படுகிறது.

குறைந்த அளவு வட்டியும், பங்கு ஆதாயமும்: கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்திற்குக் குறைந்த அளவு வட்டிதான் கொடுக்கப்படவேண்டும் என்பது இக் குழுவின் முடிவு. மேலும், சங்கத்திற்கு ஏற்படும் இலாபம் உறுப்பினர்களிடையே பாரபட்சமின்றிப் பகிரப்படவேண்டும். அவ்வாறாயின், உறுப்

பினர்களின் கொள்முதலுக்கேற்ப இலாப ஈவு கொடுக்கப்பட வேண்டும். இலாபத்தில் ஒரு பகுதியைச் சங்கத்தின் முன்னேற்றத்திற்காகவும் உறுப்பினர்களின் பொது நன்மைக்காகவும் செலவிடவேண்டும்.

இந்தத் தத்துவத்திலும் கூட்டுறவுச் சங்கத்திற்கும் கூட்டுப் பங்குக் கம்பெனிக்கும் வேறுபாடு உண்டு. கூட்டுப் பங்குக் கம்பெனி பங்குதாரர்களுக்கு அதிக இலாப ஈவு தருவதற்கென்றே பாடுபடுகிறது. ஆனால், கூட்டுறவுச் சங்கமோ இலாப நோக்கம் ஏதுமின்றி, உறுப்பினர்கள் தம் தொழிலைச் செவ்வையாக நடத்தி, தம் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு உதவும் வகையில்தான் இயங்கி வருகிறது. சான்றாக, கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இலாபம் சம்பாதிப்பதற்காக உறுப்பினர்களுக்குக் கடன் கொடுப்பதில்லை; மாறாக, உறுப்பினர்கள் தங்களுக்கு வேண்டிய தொழில் வசதிகளைப் பெற்று, அதன்மூலம் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதற்காகத்தான் கடன் கொடுக்கிறது. அதேபோல், கூட்டுறவுப் பண்டகசாலையும் உறுப்பினர்களுக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் நியாயமான விலைக்கு விற்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனவேயன்றி, இலாபம் சம்பாதிப்பதையன்று.

கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்குவதில்லையென்று கூறும்போது, அவை இலாபம் சம்பாதிக்கக்கூடாது என்று அர்த்தமன்று. நல்ல நிர்வாகத் திறமையினால் கூட்டுறவுச் சங்கத்திற்கு இலாபம் ஏற்படுவது இயல்பு. இந்த இலாபத் தொகை பின்னால் எதிர்பாராமல் ஏற்படக்கூடிய நட்டத்தைச் சரிசெய்வதற்குத்தான் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. அதோடு, சங்கத்தின் நிதிநிலையைப் பலப்படுத்தி, அதன்வழியாக உறுப்பினர்களும் மேலும் பல பணிகளை மலிவாகச் செய்வதற்கும் அது பயன்படுத்தப்படுகிறது. எஞ்சிய இலாபத் தொகை மட்டுமே உறுப்பினர்களுக்கு இலாப ஈவாகப் பகிரப்படுகிறது.

எனவே, உறுப்பினர்களின் பங்கு மூலதனத்திற்குக் குறிப்பிட்டதொரு வட்டி விகிதத்தையே அளிப்பது என்பது கூட்டுறவுத் தத்துவங்களில் ஒன்றாகப் பின்பற்றப்படுகிறது. அதேபோல், இலாபத் தொகையிலும் குறிப்பிட்ட அளவுதான் உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. எஞ்சியதெல்லாம் உறுப்பினர்களின் நலனுக்காகவே செலவிடப்படுகிறது.

கூட்டுறவுக் கல்வியைப் பரப்புதல்: கூட்டுறவு இயக்கத்தின் மற்றொரு தத்துவம் கூட்டுறவுக் கல்வியைப் பரப்புவது.

உறுப்பினர்களுக்கு மட்டுமின்றி, கூட்டுறவுச் சங்கங்களில் பணி புரிவோருக்கும் பொதுமக்களுக்கும் இவ்வியக்கத்தின் தத்துவங்களை யெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் கற்பிப்பதற்கு வழிமுறை செய்யப்படவேண்டும். கூட்டுறவு இயக்கம் தொடங்கிய நாள் முதல் அவ்வியக்கம் பற்றிய விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. கூட்டுறவு இயக்கம் மக்களின் இயக்கமாதலால், அவர்களுக்குக் கூட்டுறவுத் தத்துவங்களைப் போதிப்பதற்கென்று இலாபத்தில் கணிசமான பகுதி செலவிடப்படுகிறது. தன்னியல்பான இவ் வியக்கத்தில் உறுப்பினர்கள் சேரவேண்டுமாயின் அவர்களுக்குக் கல்வி இன்றியமையாததாகும். மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வாறு இயங்கி வருகின்றன என்பதை அவ்வப்போது உறுப்பினர் களுக்கு அறிவிக்க வேண்டியதும் அவசியமாகிறது. உறுப்பினர்களை ஊக்குவிப்பதற்கும், ஊழியர்களை முறையான நிர்வாகத்தில் ஈடுபடுத்துவதற்கும், பொதுமக்களை உறுப்பினர்களாக ஆக்குவதற்கும் கல்வியும் விளம்பரமும் இன்றியமையாதவை. கூட்டுறவுக் கல்வியைப் பரப்புவதன் வாயிலாகத்தான் இவ் வியக்கம் வலுப்பெற்று வளர முடியும்.

சங்கங்களிடையே கூட்டுறவு (Mutuality): இத் தத்துவத்தையும் அக்குழு வலியுறுத்தியுள்ளது. சங்கங்களின் உறுப்பினர்கள், அவர்கள் அமைத்துள்ள குழுக்கள் ஆகியவற்றின் நலனைக் கருதி உள்ளூர்ச் சங்கங்கள் மட்டுமன்றி, தேசியச் சங்கங்களும் சர்வதேசச் சங்கங்களும்கூட ஒன்றுக்கொன்று உதவி புரியும் வகையில் தொடர்பு கொள்ளவேண்டும். மக்களுக்குப் பணி புரிவதற்காகவே அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று உதவிபுரிந்தால்தான் கூட்டுறவு இயக்கம் வெற்றிபெற முடியும். நிதிவசதி குறைந்தவர்களால் அமைக்கப்படுபவைதாம் கூட்டுறவுச் சங்கங்கள். எனவே, நிதி வசதிமிக்க சங்கங்களுக்கும் வசதி குறைந்த சங்கங்களுக்குமிடையே போட்டி ஏற்படாமல் எல்லாச் சங்கங்களுமே வளரவேண்டு மாயின் ஒன்றுக்கொன்று உதவுதல் அவசியம். பல சங்கங்கள் ஒன்று பட்டுக் கூட்டாகவே செயல்பட்டால் அது பாராட்டத்தக்கது. கூட்டுறவுச் சங்கம் எவ்வாறு 'எல்லோரும் ஒவ்வொருவருக்காக, ஒவ்வொருவரும் எல்லோருக்காக' என்ற அடிப்படைத் தத்து வத்தில் இயங்கி வருகிறதோ அதேபோல் கூட்டுறவுச் சங்கங்களும் 'எல்லாம் ஒவ்வொன்றுக்காகவும், ஒவ்வொன்றும் எல்லாவற்றிற் காகவும்' என்ற தத்துவத்தை மையமாகக் கொண்டு செயல் புரிதல் நன்று.

இரகசியம் ஏதுமில்லை: கூட்டுறவில் இயங்கும் எந்த நிறு வனமும் தன் நிலைமையையும் முன்னேற்றத்தையும் இரகசியமாக

வைத்திருக்க விரும்புவது கிடையாது. தம் நிலவரங்களைப் பொது மக்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்றுதான் விரும்புகிறது. இதை வலியுறுத்தும் வகையில் திரு. நிக்கல்சன் கூறுவதாவது: 'பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் விதத்தில் அனைத்தையும் வெளிப்படையாக்க வேண்டும்; ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் விளம்பரம்தான் கூட்டுறவின் முதல் நிபந்தனையாக உள்ளது'. கூட்டுறவுச் சங்கத்தின் வலிமையையும் நொடிப்பையும் பொது மக்கள் அறியவேண்டுமாயின் இரகசியமாகத் தம் நிலவரங்களை மறைத்து வைப்பதில் பொருள் இல்லை.

கூட்டுறவுச் சங்கங்களின் பாகுபாடு

கூட்டுறவு இயக்கம் பல்வேறு துறைகளிலும் தொழில்களிலும் புகுந்துவிட்டது. எனவே, கூட்டுறவுச் சங்கங்களைப் பாகுபடுத்தும் முயற்சி தொடக்கத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. அவற்றில் முக்கியமான பாகுபாடாகப் பலரும் ஏற்றுக்கொள்வது பின்வருமாறு:

1. கூட்டுறவுச் சங்கங்கள் புரியும் பணிகளைக்கொண்டு அவற்றை உற்பத்திச் சங்கங்கள் என்றும், ஏனைய சங்கங்கள் என்றும் பாகுபடுத்தலாம். பொருள் விநியோகம் செய்தல், கடனளித்தல், மனை அளித்தல் போன்ற சேவை செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் சங்கங்கள் அனைத்தும் இப் பிரிவில் இடம் பெறும்.

2. சட்ட ரீதியில் கூட்டுறவுச் சங்கங்களைப் பாகுபடுத்தும் போது ஒரு நோக்குச் சங்கங்கள், பல நோக்குச் சங்கங்கள் என்று பாகுபடுத்துவர்.

3. சங்கங்கள் பணிபுரியும் இடத்தைக்கொண்டு அவற்றை நகர்ப்புறச் சங்கங்கள், கிராமச் சங்கங்கள் என வேறுபடுத்தலாம்.

4. எந்த மட்டத்தில் சங்கங்கள் பாணியாற்றுகின்றன என்ற அடிப்படையில் அவற்றை உள்ளூர்ச் சங்கங்கள், பிராந்தியச் சங்கங்கள், தேசியச் சங்கங்கள், சர்வதேசச் சங்கங்கள் என்று பிரிக்கலாம்.

5. பொருளாதார அமைப்பில் சங்கங்கள் ஈடுபட்டிருக்கும் பல்வேறு துறைகளைக் கொண்டும் அவற்றைப் பாகுபடுத்தலாம். இப் பாகுபாட்டின்படி விவசாயச் சங்கங்கள், சிறு தொழில் சங்கங்கள், விற்பனைச் சங்கங்கள், சேவைச் சங்கங்கள் என அவை அழைக்கப்படும்.

6. சங்க அங்கத்தினர்களின் தொழிலைக் கொண்டு அவற்றை உற்பத்தியாளர் சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள் எனப் பிரிக்கலாம்.

மேற்கூறிய பாகுபாடன்றி வேறு சில பாகுபாடுகளும் உள்ளன. பேராசிரியர் சி. ஆர். ஃபே (Prof. C. R. Fay) அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களை முறையே கூட்டுறவு வங்கிகள் அல்லது கடன் சங்கங்கள், கூட்டுறவு விவசாயச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுப் பண்டகசாலைகள் என்று பாகு படுத்தியுள்ளார்.

நம்நாட்டு ரிசர்வ் வங்கியின் பாகுபாடு மிகத் தெளிவான ஒன்ருகும். இப் பாகுபாட்டின்படி கூட்டுறவுச் சங்கங்கள் நான்கு வகைப்படும். அவை முறையே:

1. கூட்டுறவு வங்கி அமைப்பு: இதில் விவசாயக் கடன் சங்கங்கள், கிராமப்புற வங்கிகள், மையக் கூட்டுறவு வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மைய நிலவள வங்கிகள், தொடக்க நிலவள வங்கிகள், நகர்ப்புறக் கடன் சங்கங்கள் முதலியன அடங்கும்.

2. உற்பத்திக்கு உதவும் கூட்டுறவுச் சங்கங்கள்: இதில் விவசாய உற்பத்திச் சங்கங்களும் ஏனைய பொருள் உற்பத்திச் சங்கங்களும் இடம் பெறும்.

3. கூட்டுறவு விற்பனையேற்பாட்டுச் சங்கங்கள்: இப் பிரிவில் தொடக்க நிலை விற்பனைச் சங்கங்கள், மைய விற்பனைச் சங்கங்கள், மாநில அடைமானச் சங்கங்கள், தேசியக் கூட்டுறவு விவசாய விற்பனைக் கூட்டமைப்பு, கரும்பு விநியோகச் சங்கங்கள், பண்டங்களைப் பக்குவப்படுத்தும் சங்கங்கள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் முதலியன அடங்கும்.

4. இதரக் கூட்டுறவு அமைப்புகள்: அதாவது, நுகர்வோர் பண்டகசாலைகள், மனைச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுகள், மகளிர் கூட்டுறவுகள், ஊனமுற்ருேர் கூட்டுறவுச் சங்கங்கள், சேவைச் சங்கங்கள், காப்பீட்டுச் சங்கங்கள் ஆகியவை இப் பிரிவில் அடங்கும்.

சில நடைமுறை விதிகள்

கூட்டுறவுச் சங்கங்கள் கடைப்பிடிக்கும் விதிகள் பல. அவற்றில் முக்கியமானவற்றையும் விவாதத்திற்குரியனவற்றையும் இங்குக் காண்போம்.

எல்லோரும் சமம்—சரிநிகர்: கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சமமானவர்கள்.

சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கலாம்; ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு இருக்கலாம்; ஆனால், கூட்டுறவுச் சங்கத்தில் எல்லா உறுப்பினர்களுமே சமமானவர்கள்தாம். சங்கத்தின் நடவடிக்கைகளில் அனைவருக்கும் சம உரிமையுண்டு சங்கத்திற்குப் போட்டியாக எந்த உறுப்பினருமே தொழில் செய்யக்கூடாது. இவ்வாறாக, உறுப்பினர்கள் அனைவருக்கும் பாரபட்சமின்றிச் சம உரிமைகள் உள்ளன; அதேபோல் சங்கத்தின் கட்டுப்பாடுகளும் எல்லா உறுப்பினர்களுக்கும் உள்ளன.

சங்கத்திற்குக் கிடைக்கும் உபரி வருமானம் எவ்வாறு உற்பத்திக் காரணிகளுக்குப் பகிரப்படுகிறது என்று வரையறுக்கும் விதியும் சரிநிகரானது. உற்பத்திக்குப் பயன்படும் நிலம், உழைப்பு, மூலதனம், தொழிலமைப்பு ஆகிய நான்கு காரணிகளுக்கும் முறையே குத்தகை, கூலி, வட்டி, நிர்வாகச் சம்பளம் என்று வழங்கப்பட வேண்டியது நியதி. ஆனால், முதலாளித்துவ அமைப்பில் முதலீடு செய்யும் முதலாளிகள் உபரி வருமானத்தின் பெரும் பகுதியை எடுத்துக் கொள்கின்றனர். உழைப்போருக்குரிய கூலி முறையாகக் கொடுக்கப்படுவதில்லை. தொழிலாளிகளைச் சுரண்டியே முதலாளிகள் வாழ விரும்புகின்றனர். சோஷியலிச சமுதாயத்திலோ உபரி வருமானம் முழுவதும் தொழிலாளருக்கும் அரசாங்கத்திற்குமே சென்றுவிடுகிறது. ஆனால், கூட்டுறவு அமைப்பில் மட்டும் நான்கு உற்பத்திக்காரணிகளுக்கும் உரிய பங்கு செலுத்தப்படுகிறது. கூட்டுறவுச் சங்கத்திற்கு உறுப்பினர்கள் தரும் ஆதரவின் மூலமாகத்தான் இலாபம் கிடைக்கிறது. எனவே, காப்புநிதிக்கும் இதர நிதிகளுக்கும் ஒதுக்கப்பட்டபின் எஞ்சிய இலாபத்தொகை உறுப்பினர்களுக்கே கொடுக்கப்பட்டு விடுகிறது. அவர்கள் தரும் ஆதரவை அடிப்படையாகக் கொண்டு இலாப ஈவு பகிரப்படுவதால் அனைவரும் சரிநிகராகவே கருதப்படுகின்றனர். சுரண்டல் என்ற சொல்லுக்கோ பாரபட்சம் என்ற வார்த்தைக்கோ இடம் கிடையாது. மூலதனம் கூடப் புறக்கணிக்கப்படுவதில்லை; அதற்கும் இலாப ஈவு வழங்கப்படுகிறது. ஆனால், அதிகமாக வழங்கப்படுவதில்லை. ஏனெனில், கூட்டுறவுச் சங்கங்கள் இலாப நோக்கத்திற்காக இயங்குவது கிடையாது. மேலும், இதர உற்பத்திக் காரணிகளுக்கும் அவற்றிற்குரிய பங்கு கொடுக்கப்படுகிறது. உழைப்பாளிகள் ஊதியத்தோடு ஊக்கத் தொகையையும் பெறுகின்றனர். இவ்வாறாக, கூட்டுறவுச் சங்கத்தின் நடவடிக்கைகளில் நீதியும் நியதியும் கண்காணிக்கப்படுகின்றன. அநீதி என்ற சொல்லுக்கே இடம் கிடையாது. சங்கத்தின் வெற்றிக்குத் துணைபுரியும் எல்லா உற்பத்திக்காரணிகளுமே உபரி வருமானத்திலிருந்து உரிய பங்கைப் பெறுகின்றன.

கூட்டுறவில் ஓரளவு வலுவந்தம் : கூட்டுறவு இயக்கத்தில் வலுவந்தம் என்ற சொல்லுக்கே இடம் கிடையாது. மக்கள் எவ்விதக் கட்டாயமுமின்றித் தாமாகவே முன்வந்து அமைக்கும் சங்கம்தான் கூட்டுறவுச் சங்கம். இவ்வாறு கட்டாயமின்றிக் கூட்டுறவு ஏற்பட்டால்தான் உறுப்பினர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும். அவர்களின் சுதந்திரமும் பேணப்படும். எனவே, கூட்டுறவுச் சங்கத்தில் சேருவதற்கு எவருமே கட்டாயப்படுத்தப்படக் கூடாது. அதேபோல் சங்கத்திலிருந்து விலகுவதற்கும் எவ்விதக் கட்டுப்பாடோ தடங்கலோ இருக்கக்கூடாது. கூட்டுறவு இயக்கம் வளர வேண்டுமாயின் மக்கள் தாமாகவே அதற்கு ஆதரவு தரவேண்டும்.

ஐரோப்பாவிலுள்ள குடியரசு நாடுகளிலெல்லாம் கூட்டுறவு இயக்கம் இயல்பாகவே தோன்றி வளர்ந்து வந்துள்ளது. மக்களின் விருப்பத்திற்கேற்ப அது இயங்கி வருகிறது. அரசாங்கத்தின் ஆதரவோ சட்ட திட்டங்களோ இன்றி மக்கள் தாமாகவே முன்வந்து இவ்வியக்கத்திற்கு ஆதரவு அளித்து வருகின்றனர். சான்றாக, டென்மார்க்கில் பிரபல்யமாக இயங்கிவரும் கூட்டுறவுப் பால் பண்ணைகளை ஒழுங்குபடுத்துவதற்கென்று இதுவரை எச் சட்டமும் அமலாக்கப்பட்டது கிடையாது. அந் நாட்டிலுள்ள கூட்டுறவுக் கல்வி முறையால் அந்நாட்டவர் தாமாகவே முன்வந்து கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகிப் பயனடைந்து வருகின்றனர், 'தன் கையே தனக்குதவி' என்ற பொன்மொழிக்கேற்பத், தத்தம் நிலைமையையும் கடமைகளையும் உணர்ந்து கூட்டுறவுச் சங்கங்களை வளர்த்து வருகின்றனர். ஜெர்மனி, இத்தாலி, இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாகவே நடைபெற்று வருகிறது. இந் நாடுகளிலெல்லாம் மக்களை வற்புறுத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக்கும் சூழ்நிலையே கிடையாது.

எனினும், இவ் விதியை அப்படியே கடைப்பிடித்தால் அது மக்களுக்கும் நல்லதன்று ; கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கும் உகந்ததன்று என்ற எண்ணம் தற்போது வலுவடைந்து வருகிறது. கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமென்றாலும், அது பொதுநல இயக்கமாகவே கருதப்படுகிறது. ஏழை எளியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பாடுபடும் இயக்கமாகவும் அமைக்கப்படுகிறது. நாட்டிலுள்ள பொருளாதார, சமூகக் கேடுகளையெல்லாம் ஒழித்துக் கட்டும் இயக்கமாக வளர்ந்து வருகிறது. இந்தியா போன்ற நாடுகளிலெல்லாம் இவ் வியக்கம் ஆமைபோல்தான் நடைபோட்டு வருகிறதேயன்றி, ஏனைய சில நாடுகளில் உள்ளதைப்

போல் வேகமாக வளர முடியவில்லை. அது வேகமாக வளர வேண்டுமாயின் அதற்கு ஊக்கமும் உரமும் தேவை. மேலும் அறியாமை, வறுமை ஆகிய இரண்டும் ஒருங்கே காணப்படும் நாடுகளிலெல்லாம் அரசாங்கத்தின் ஆதரவும் உதவியுமின்றிக் கூட்டுறவு இயக்கம் வெற்றியடைய முடியாதென ஒரு சில கூட்டுறவாளர்கள் கருதுவர்.

மேலும், தற்போது தொழில் சுதந்திரம், அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கை என்பதெல்லாம் மறைந்து, திட்டமிட்டுப் பொருளாதார வளர்ச்சியை எய்தும் எண்ணம் செல்வாக்குப் பெற்று வருகிறது. திட்டமென்முலே பல்வேறு துறைகளில் சாதிக்க வேண்டிய சாதனையை அடிப்படையாகக் கொண்டு அதற்கேற்பச் சாதனங்களை ஒதுக்கீடு செய்வதுதான். எனவே, திட்டமிடப்படும் இக் காலத்திற்கு மக்கள் தாமாகவே முன்வந்து கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துவது என்பது பொருத்தமற்றதாகி விடுகிறது. கூட்டுறவு இயக்கம் கடந்த காலத்தில் மக்கள் இயக்கமாக இருந்து வந்திருக்கலாம்; ஆனுல், தற்போது இத் தத்துவம் பொருத்தமற்றதாக மாறிவருகிறது. கூட்டுறவு இயக்கம் தன்னிச்சையான இயக்கமாகவே இருக்குமானுல் அது பொருளாதாரத் திட்டங்களுக்கே முட்டுக்கட்டையாக ஆகிவிடும். எனவே, கூட்டுறவு இயக்கத்திலும் ஓரளவு கட்டுப்பாடும் வலுவந்தமும் இருக்க வேண்டுமென ஒரு சிலர் வாதிடுவர்.

அடுத்து, கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சில சலுகைகள் வழங்குவதன் வாயிலாகவும் கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க முடியும். இச் சலுகைகள் மக்களுக்குத் தூண்டுகோலாக இருக்க வேண்டும். சான்முக, கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியத் தொகை வழங்கப்படலாம்; இன்னும் இதர சௌகரியங்களையும் அரசாங்கம் செய்யலாம். கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிர்வாக உதவியையும் தொழில் நுட்ப உதவியையும் இலவசமாக அரசாங்கம் செய்வதன் மூலம் மக்கள் கவரப்படலாம். நடைமுறையில் அரசாங்கம் இவ்வித ஊக்கத்தைக் கொடுத்து வருகிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கென்று சில சலுகைகளையும், மானியம், கடன் போன்ற உதவிகளையும் அரசாங்கம் செய்து வருகிறது. அதனேடு கூட்டுறவுக் கல்வியைப் பரப்புவதற்கென்று பல நிறுவனங்களை அமைத்து, விளம்பர ஏற்பாடுகளையும் செய்துவருகிறது.

கூட்டுறவும் சுரண்டலும்

கூட்டுறவு என்முலே சுரண்டலை ஒழிக்கும் இயக்கம் என்றும் மக்களைச் சுரண்டும் நிறுவனங்களுக்கு எதிரி என்றும்தாம் பெரும்

பாலான கூட்டுறவாளர்கள் கருதுவர். அவர்களது கருத்துப்படி மக்களைச் சுரண்டலிலிருந்து விடுவிக்கும் ஓர் உன்னத இயக்க மாகவே கூட்டுறவு காட்சியளிக்கின்றது.

முற்காலத்தில் மக்கள் அனைவரும் ஒரேவிதமான பொருளாதார நிலையில்தான் வாழ்ந்துவந்தனர். நாளடைவில் ஒருசிலர் பொருளாதார வலிமை பெற்றனர்; மற்றவர்களோ வலிமை யின்றி நலிவுற வாழ்ந்தனர். இவ்வாறு தோன்றிய பொருளாதார ஏற்றத்தாழ்வு மேலும் மேலும் அதிகரித்து, செல்வந்தர்கள் ஏழை மக்கள் என்ற பாகுபாடு தோன்றியது. செல்வந்தர்கள் ஏழை எளியோரைச் சுரண்டி மேலும் செல்வந்தர்களாயினர்; ஏழை எளியாரோ மென்மேலும் வறுமையுற்றனர்.

இந் நிலையில் கூட்டுறவு இயக்கம் சுரண்டலை ஒழித்துக்கட்டி நியாயமான முறையில் மக்கள் தொழில்புரிய உதவுகிறது என்பது உண்மைதான். இங்கிலாந்திலிருந்த 'ராக்டேல் முன்னோடிகள்' மட்டுமின்றி, ஜெர்மனி, டென்மார்க் ஆகிய நாட்டுக் குடியானவர் களும் இத்தாலி நாட்டுத் தொழிலாளர்களும் கூட இவ்விதச் சூழ்நிலையிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கென்றுதான் கூட்டுறவைப்பற்றிச் சிந்திக்கலாயினர். எனவே, மற்றவர்களின் சுரண்டல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவு இயக்கம் அதே சுரண்டல் பேயின் வலையில் சிக்கிவிடக் கூடாது. எனவேதான் கூட்டுறவு இயக்கத்தில் தரகர்களோ கமிஷன் ஏஜென்டுகளோ இருப்பதில்லை. தொழி லாளியே முதலாளியாகவும், முதலாளியே தொழிலாளியாகவும் இருப்பதைக் கூட்டுறவுச் சங்கத்தில் காண்கிறோம். அதேபோல் விநியோகம் செய்வோரே நுகர்வோராயும், நுகர்வோரே விநியோகம் செய்வோராகவும் இருக்கின்றனர். அதுமட்டுமின்றி, கடன் வாங்குவோரே கடன் கொடுப்போராயும், உற்பத்தி செய்வோரே நுகர்வோராயும் இருக்கின்ற விநோத நிலையைக் கூட்டுறவில் காண்கின்றோம். இவ்வாறாக, முரண்பட்ட குறிக்கோள் இல்லாத காரணத்தால் கூட்டுறவில் சுரண்டல் என்ற சொல்லுக்கே இடமில்லாமல் போய்விடுகிறது.

மேலும், கூட்டுறவு இயக்கத்தில் தரகர்களுக்கோ இடைநிலை யர்களுக்கோ இடமில்லை. கூட்டுறவுக் கடன் சங்கம் இருப்பதால் வட்டிக்கடை வைத்துச் சுரண்டி வாழ்வோர் ஒழிகின்றனர்; கூட்டுறவு விற்பனைச் சங்கம் கமிஷன் ஏஜென்டுகளுக்கு வேலை யில்லாமல் செய்துவிடுகிறது; கூட்டுறவுப் பண்டகசாலைகள் இருப்பதால், தனி வியாபாரிகள் வசூலிக்கும் கட்டணங்கள் ஒழிக்கப்

படுகின்றன; தொழிலாளர் சங்கங்கள் இருக்கும்போது ஒப்பந்தக் காரர்களுக்கு வேலையில்லை. கூட்டுறவு ஆலைகள் இருப்பதால் தனியார் நடத்தும் ஆலைகள் கண்டபடி விலையை நிர்ணயிக்க முடிவதில்லை இங்கிலாந்தில் தோன்றிய நுகர்வோர் சங்கங்கள் தனியார் துறையில் இருந்து வந்த தொழில் கூட்டுகளைத் தகர்த்தெறிந்து விட்டன. அதேபோல் டென்மார்க்கின் கூட்டுறவுப் பால்பண்ணைகள் முற்றுரிமை பெற்றுப் பால் விநியோகம் செய்து வந்த கம்பெனிகளைத் தரைமட்டமாக்கி விட்டன. இவ்வாறாக, பொதுமக்களின் பாதுகாப்பையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வருகிறது கூட்டுறவு.

செல்வந்தர்களுக்கு அதிக வலிமையும் உரிமையும் இருக்கும் போதுதான் சுரண்டல் தோன்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆனால், கூட்டுறவு இயக்கத்தில் செல்வந்தர் வறியோர் என்ற பாகுபாடே கிடையாது. எல்லோருக்கும் சம உரிமையும் சமமான நன்மையும்தான் உண்டு. எனவே, வறியோரைத் துன்புறுத்தி, செல்வந்தர்கள் ஆடம்பர வாழ்வு வாழ இயலாது போய்விடுகிறது.

கூட்டுறவு என்றாலே ஒழுக்கம் நிறைந்த இயக்கம் என்றுதான் பொருள். மற்றவர்கள் செல்வத்தை அபகரித்து எந்தக் கூட்டுறவுச் சங்கமும் செல்வாக்குப் பெற விரும்புவதில்லை. ஒழுக்கக்கேடான வழிமுறைகளைக் கூட்டுறவு நாடுவதில்லை. சமுதாயத்தில் எவ்விதக் கிளர்ச்சியையும் ஏற்படுத்துவதில்லை. எனவே, கூட்டுறவு இயக்கத்தில் சுரண்டல் என்பதே கிடையாது. கூட்டுறவுச் சங்கங்கள் கொள்ளை இலாபம் பெற விரும்புவதில்லை. அதனால்தான் அரசாங்கம் சில வரிச் சலுகைகளை இவற்றிற்கு அளித்துள்ளது.

இவ்வாறாக, கூட்டுறவு இயக்கம் புதியதொரு சமுதாயத்தை அமைக்கும் கருவியாக இயங்கி வருகிறது. அப் புதிய சமுதாயத்தில் மக்கள் மக்களைச் சுரண்டவோ, தாறுமாறான வழிகளில் பணம் சம்பாதிக்கவோ இயலாது. எனவேதான், இவ் வியக்கம் முரண்பாடான பல்வேறு சமுதாயங்களிலும் வெற்றி நடை போட்டு வருகிறது. முதலாளித்துவ நாடுகளில் மட்டுமின்றி, பலதரப்பட்ட பொதுவுடைமை நாடுகளிலும் இவ் விரண்டிற்கும் இடைப்பட்ட அமைப்பையுடைய நாடுகளிலும்கூடக் கூட்டுறவு இயக்கம் தழைத்து வர முடிகிறது.

2. சில கூட்டுறவுப் பிரச்சினைகள்

கூட்டுறவு அமைப்பினை உருவாக்கும் போது எத்தனையோ பிரச்சினைகள் எழுவதைக் கூட்டுறவாளர்கள் உணர்ந்துள்ளனர். நாட்டிற்கும் சூழ்நிலைக்கு மேற்பத்தோன்றும் ஒரு சில முக்கியமான பிரச்சினைகளைப் பற்றியும் அவற்றைச் சூழ்ந்துள்ள சச்சரவுகளைப் பற்றியும் இவ்வதிகாரத்தில் சற்று விரிவாகக் காண்போம்.

(அ) உறுப்பினர்களின் கடன் பொறுப்பு.
(Liability of Members)

எந்தக் கூட்டு நிறுவனமும் உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுக்க வேண்டியுள்ளது. அதாவது, அந்நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படும்போது உறுப்பினர்கள் எந்த அளவுக்கு அந் நட்டத்தில் பொறுப்பு ஏற்க வேண்டுமென்பதை நிர்ணயிக்க வேண்டும். அவ்வாறு வர்த்தக நிறுவனத்திற்கு ஏற்படும் நட்டத்திலோ கடனிலோ உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளும் பங்கே அவர்களின் பொறுப்பு என அழைக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கத்திலும் உறுப்பினர்களுக்குப் பொறுப்பு உண்டு. அச்சங்கம் திவாலாகி விட்டால் அதன் சொத்தில் ஏற்படும் நட்டத்தில் உறுப்பினர்கள் பொறுப்பு ஏற்க வேண்டுமென்பது கூட்டுறவுச் சட்டமாகும்.

பொறுப்பின் வகைகள்

பெரும்பாலும் 'பொறுப்பு என்பது வரையறை பெற்ற பொறுப்பு, வரையறையற்ற பொறுப்பு என இரு வகைப்படும். இதில் வரையறை பெற்ற பொறுப்பு மூன்று வகைப்படும். அவை முறையே (1) பங்குகளின் அளவுக்கு மட்டும் வரையறுக்கப் பட்டது; (2) பங்கின் மதிப்பைப்போல் பன் மடங்கு வரை யறுக்கப்பட்டது; (3) உத்திரவாத அளவிற்கு வரையறுக்கப்பட்டது ஆகும்.

வரையறையற்ற பொறுப்பு

ஆரம்பத்தில் தொடங்கப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களி லெல்லாம் பெரும்பாலும் வரையறையற்ற பொறுப்பே நிலவியது. அந்த நிறுவனங்களும் அவற்றின் உறுப்பினர் களும் ஒன்றுகவே கருதப்பட்டது. அதாவது, அக் கூட்டுறவு நிறுவனம்தான் உறுப்பினர்கள்; உறுப்பினர்கள் தாம் நிறுவனம் என்ற நிலை இருந்து வந்தது. கூட்டாகத் தொழில்புரிய முனைந்த அனைவரும் தத்தம் சொந்தச் சொத்திலிருந்து அத் தொழிலுக்கு ஏற்படக்கூடிய நட்டத்தைக் கூட்டாகவே நிவர்த்தி செய்வதெனத் தீர்மானித்தனர். எனவே, நிறுவனம் நொடித்த போதெல்லாம், கடன் கொடுத்தவர்கள் அந் நிறுவனத்தின் சொத்துகளிலிருந்து தம் கடனைத் திருப்பிப் பெற்றனர்; அச் சொத்து போதவில்லையென்றுல் உறுப்பினர்களின் சொந்தச் சொத்திலிருத்து தம் கடனைத் திருப்பிப் பெற்றனர். இவ்வாருக, நிறுவனத்தின் நட்டத்தை உறுப்பினர்கள் தம் சொந்தச் சொத்துக் களிலிருந்து ஈடு செய்யும் முறைதான் வரையறையற்ற பொறுப்பு எனப்படுகிறது. உறுப்பினர்களுக்கு எவ்வளவு சொத்து இருந்தா லும் அச் சொத்தே நட்டத்தை ஈடு செய்யப் பயன்பட்டு வந்தது.

கூட்டுறவுச் சங்கத்தில் வரையறையற்ற பொறுப்பு என்று லென்ன? என்பதற்கு மைய பாங்கின் விசாரணைக் குழு பின்வரு மாறு விளக்கம் தந்துள்ளது; சட்டப்படி வரையறையற்ற பொறுப்பு என்பது எதைக் குறித்த போதிலும், பதிவு செய்யப் பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் அது குறிப்பது இதுதான்: அதாவது, சங்கம் நொடிக்கும்போது நொடிப்பை அறிவிக்கும் அதிகாரி விதிக்கின்ற தொகைதான் வரையறையற்ற பொறுப்பாகும். எனவே, சங்கத்திற்குக் கடன் கொடுத்தோர் எவரும் எந்த உறுப் பினரிடமும் தம் தொகையைக் கேட்டு வழக்காட முடியாது. கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கும் வரையறையற்ற பொறுப்பின் அம்சங்கள் பின்வருமாறு :

1. சங்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது வரை-யறையற்ற பொறுப்பை அமுலாக்க முடியாது. சங்கம் மூடப் பட்டால்தான் இப் பொறுப்பு அமுலுக்கு வரும்.

2. சங்கத்திற்குக் கடன் கொடுத்தவர்கள் எந்த உறுப்பினர் மீதும் வழக்குப் போட முடியாது. எந்த அளவுக்கு உறுப்பினர் கள் இக்கடனுக்கு பொறுப்புள்ளவர்கள் என்பதை நொடிப்பு ஏற்பட்டு விட்டதெனப் பிரகடனம் செய்யும் அதிகாரிதான் நிர்ணயிப்பார்.

3. முதலில் சங்கத்திற்குக் கடன் பட்டவர்களிடமிருந்து அத்தொகை வசூலிக்கப்பட்டு சங்கத்தின் நட்டம் சரிக்கட்டப்படும் அவ்வாறு வசூலிக்க முடியாத நிலையில் சங்கத்தின் காப்பு நிதியும் பிற நிதிகளும் பயன்படுத்தப்படும். அது போதவில்லை யென்றால் தான் பங்கு மூலதனமும் உறுப்பினர்களின் வரையறையற்ற பொறுப்பும் பயன்படுத்தப்படும்.

நன்மைகள்

1. வரையறையற்ற பொறுப்புடைய கூட்டுறவுச் சங்கம் உறுப்பினரல்லாதோரிடமிருந்து வேண்டிய அளவு கடனையும் வைப்புத் தொகையையும் பெற முடியும். ஏனெனில் இப் பொறுப்பு இருப்பதால் கடன் கொடுப்போருக்கு நம்பிக்கை ஏற்படும்.

2. உறுப்பினர்களும் பொறுப்புடன் சங்க நடவடிக்கைகளை நன்கு கவனிப்பர். சங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுவிட்டால் அதற்குத் தாமும் பொறுப்பேற்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சங்கத்தின் அலுவல்களில் கண்ணும் கருத்துமாயிருப்பர்.

3. அதேபோல் நிர்வாகமும் செம்மையானதாக இருக்கும். உற்பத்திப் பணிகளுக்கு மட்டுமே சங்க உறுப்பினர்களுக்குக் கடன் கொடுக்கப்படும். அக்கடனைக் குறித்த காலத்தில் திரும்பிப்பெற வேண்டுமென்ற அக்கறையும் சங்கத்திற்கு இருக்கும்.

தீமைகள்

1. வரையறையற்ற பொறுப்புடைய சங்கத்தில் செல்வந்தர்கள் உறுப்பினர்களாக மாட்டார்கள். சங்கம் நொடித்துவிட்டதென்றால் தம் சொத்துக்கள் போய்விடுமே என்ற பயம் அவர்களுக்கு இருந்துகொண்டே இருக்கும். எனவே, சொத்தை இழக்க எந்தச் செல்வந்தரும் விரும்பமாட்டார்.

2. உறுப்பினர்களின் சொத்து, பறிமுதலாவதற்குத் தடை ஏதுமில்லாத வரையறையற்ற பொறுப்பினால் யாதொரு பயனுமில்லை. அது வெறும் கண்கட்டு வித்தைதான்.

3. வரையறையற்ற பொறுப்பில் பெரிய தொழில் எதையும் நடத்த இயலாது. ஏனெனில், அத் தொழிலைக் கண்காணிப்பது என்பது உறுப்பினர்களால் இயலாது. பெரிய தொழிலை நடத்த அதிக உறுப்பினர்கள் தேவைப்படுவர். எல்லா உறுப்பினர்களும் அத் தொழிலைக் கண்காணிப்பது என்பது இயலாத காரியம்.

வரையறையற்ற பொறுப்பிலிருந்து பாதுகாப்பு

சட்ட ரீதியாகப் பார்க்கும்போது வரையறையற்ற பொறுப்புடைய சங்கத்தின் உறுப்பினர்கள் மற்ற உறுப்பினர்களுக்கும் சேர்த்து நட்டப்பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் உண்மையில் அவ்வித நிலை ஏற்படுவதில்லை. அந்நிலையிலிருந்து உறுப்பினர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குப் பல உபாயங்கள் இருக்கின்றன. அவற்றைப்பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

1. சங்கத்தில் உறுப்பினர்களைச் சேர்க்கும்போதே அவர்களது நாணயம், பண்பு, குணம், நடத்தை எல்லாம் நன்கு பரிசீலிக்கப்படுகிறது. நாணயமோ நல்ல பழக்க வழக்கமோ இல்லாதவர்களை உறுப்பினர்களாக அனுமதிப்பது கிடையாது.

2. வரையறையற்ற பொறுப்புடைய சங்கம் உறுப்பினரல்லாதோரிடமிருந்து இஷ்டப்படி கடன் வாங்க முடியாது. அதிகப்பட்சம் எவ்வளவு கடன் வாங்கலாம் என்பதைக் கூட்டுறவுப் பதிவாளர் (Registrar) நிர்ணயம் செய்துவிடுகிறார். அவ்வாறு நிர்ணயம் செய்யும்போது அக்கடனைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய சக்தி அச் சங்கத்திற்கு இருக்கிறதா என்று பரிசீலனை செய்யப்படுகிறது.

3. கூட்டுறவுக் கடன் சங்கத்தின் முக்கியப்பணி உறுப்பினர்களுக்குக் கடன் கொடுப்பதுதான். கொடுத்த கடன் திரும்பி நிச்சயமாக வந்துவிடுமென்ற சூழ்நிலை இருக்கும்போது சங்கத்திற்கு நட்டம் ஏற்பட வழியில்லை. மேலும், உறுப்பினர்களுக்கு எந்த அளவிற்குக் கடன் கொடுக்கலாம் என்பதும் நன்கு பரிசீலிக்கப்படுகிறது. எந்த உறுப்பினருக்கும் அவரது நிலையான சொத்தின் மதிப்பைக் காட்டிலும் அதிகக் கடனைக் கொடுப்பதில்லை.

4. பெரும்பாலும் இக் கடன் சங்கங்கள் ஆக்க வேலைக்குத்தான் கடன் கொடுக்கின்றன. எனவே, உற்பத்தியானபின் கடனைச் சுலபமாகத் திரும்பிப்பெற முடிகிறது.

5. நாணயம் தவறிவிட்ட எந்த உறுப்பினருக்கும் கடன் கொடுக்கும்போது பல முன்னேற்பாடுகளும் செய்யப்படுகின்றன.

6. உறுப்பினர்கள் கடன் கேட்டு அனுப்பும் மனுக்கள் அனைத்தும் நன்கு பரிசீலிக்கப்படுகின்றன. அவர் முறைகேடான வழியில் கடன் பெற்றிருந்தால், அல்லது குறித்த வேலைக்காக

அக் கடன் தொகையைப் பயன்படுத்தாமல் இருந்தால் தவணை காலத்திற்கு முன்பே அக் கடன் திரும்பிப் பெறப்படுகிறது.

7. மேலும், எல்லாச் சங்கங்களுக்கும் காப்புநிதி, வராக் கடன் நிதி போன்ற பல நிதிகள் உள்ளன. எனவே உறுப்பினர்கள் வரையறையற்ற கடன் பொறுப்பை ஏற்கக்கூடிய சூழ்நிலை மிகக் குறைவு.

8. சங்கத்தின் கணக்கு வழக்குகள் நல்ல முறையில் பேணப் படுகின்றன. அவ்வப்போது அக்கணக்கு விவரம் பரிசோதிக்கப் பட்டு, தணிக்கை செய்யப்படுகிறது. அதனோடு, சங்கத்தின் கணக்கு விவரங்கள் பொதுக் குழுவில் நன்கு விவாதிக்கப்படு கின்றன.

மேற்கூறிய காரணங்களால் உறுப்பினர்கள் மீது வரையறை யற்ற கடன் பொறுப்புச் சுமத்தப்படுவதில்லை. சங்கத்தின் உறுப் பினர்கள் விழிப்புணர்வுடன் சங்க நடவடிக்கைகளைக் கண்காணித்து வரும்போது எவ்விதப் பயமோ சந்தேகமோ ஏற்பட வழியில்லை.

வரையறைபெற்ற பொறுப்பு

ஒரு சிலரை மட்டும் பங்குதாரர்களாகக் கொண்டு இயங்கும் நிறுவனங்களுக்கு மட்டும்தான் வரையறையற்ற பொறுப்புப் பொருத்தமானதாகும்; ஏனெனில் அப்போதுதான் பங்கு தாரர்கள் ஒருவர் மற்றொருவரை அறிந்திருக்க முடியும். யார் யார் என்னென்ன செய்கிறார்கள் என்பதையும் உணர முடியும். ஆனால், பொருளாதார நடவடிக்கைகள் வளர வளர நிறுவனங்களின் அளவும் நடவடிக்கைகளும் வளர்ந்து விடுகின்றன; அப்போது எங்கெங்கோ வாழும் மக்களெல்லாம் அவற்றின் பங்குதாரர்களாகின்றனர். அவர்களில் பெரும்பாலோர் ஒருவர் மற்றொருவரை அறிந்திருப்பதில்லை; பார்த்திருக்கக்கூட வாய்ப்பில்லை; ஏன் கேள்விப்பட்டிருக்கக்கூட மாட்டார்கள். இவ் வகைப் பங்குதாரர்களைக் கொண்ட பெரிய நிறுவனங்களுக்கு வரையறையற்ற பொறுப்புப் பொருத்தமற்றதாகி விடுகிறது. எனவே, வரையறைபெற்ற பொறுப்புத்தான் புகுத்தப்படுகிறது. இப் பொறுப்பின்படி, நிறுவனத்தின் நட்டத்தில் பங்குதாரர்களின் பொறுப்புத் திட்டவட்டமாக நிர்ணயிக்கப்படுகிறது. நிர்ணயிக்கப் பட்ட அளவுக்கு மேல் எந்த உறுப்பினரும் நட்டப்பொறுப்பை ஏற்க வேண்டியதில்லை. இவ்வாறு வரையறைபெற்ற நிறுவனத்தில் பயமின்றிப் பங்குதாரர்கள் சேர வாய்ப்புண்டு; தம் சொத்துக்கு எவ்வித ஆபத்துமில்லை என்ற நிலை பங்குதாரர்களுக்கு ஏற்படு கிறது. எனவே எவ்வித நட்டப்பயமுமின்றி மக்கள் பங்குதாரர்களா

கின்றனர். எங்கெங்கோ வாழும் மக்கள்கூட அந்நிறுவனத்தின் பங்கை வாங்க முன் வருகின்றனர். இம் முறைப்படி நிறுவனத்திற்குக் கடன் கொடுத்தவர் எவரும் அதன் உறுப்பினர் எவரிடமும் அதைக் கேட்டு வழக்காட முடியாது. அவ்வாறு கேட்பதற்கு உரிமையும் கிடையாது. எனவே, இவ்வகை நிறுவனம் நொடித்து விட்டதென்றால் அதன் சொத்துகளிலிருந்துதான் கடனாளிகளுக்குச் செலுத்த வேண்டிய தொகை செலுத்தப்படுகிறது. ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கும் அளவுக்குத்தான் உறுப்பினர்கள் கடன் பொறுப்பை ஏற்றுக்கொள்வர்.

கருத்து முரண்பாடு

எந்தக் கடன் பொறுப்பு முறையிலும் நன்மை தீமைகள் இருக்கின்றன; இதனால் அப் பொறுப்பைப் பற்றிய முரண்பாடான வாதங்களும் எழுகின்றன; எனவே, தொடக்க நிலையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வகைக் கடன் பொறுப்புள்ளவையாயிருக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருப்பதில் ஆச்சரியமில்லை.

இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தைத் தொடங்க வேண்டுமென்று பரிந்துரைத்த நிக்கல்சன் குழுவினர் ஃரைஃபீசன் சங்கங்களைப்போல் வரையறையற்ற பொறுப்புடைய சங்கங்கள் தாம் இந்தியாவிற்கு உகந்தது என வற்புறுத்தினர். இவ்வகைப் பொறுப்பு இருந்தால்தான் உறுப்பினர் அனைவரும் கூட்டுணர்வுப் பொறுப்புடன் பணியாற்றுவர் என அக் குழுவினர் கருதினர். அப்போதுதான் உறுப்பினர் ஒருவர் ஒருவரின் நடவடிக்கைகளைக் கண்காணித்து நல்ல முறையில் கூட்டுறவுச் சங்கத்தை வளர்க்க முடியும் என்றும் அக் குழுவினர் நம்பினர். இப் பொறுப்பு இருந்தால்தான் 'ஒவ்வொருவரும் மற்றவர்களுக்காகப்' பணி புரியும் தத்துவம் நடைமுறையில் கடைப்பிடிக்கப்படும். மேலும், ஏழை மக்கள் கூடக் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ந்து பயனடைவதற்கும் வரையறையற்ற பொறுப்புதான் துணையாயிருக்கும் என்றும் அக் குழுவினர் விவாதித்தனர்.

கூட்டுறவுக் குழுவும்கூட (மாக்மிலன்குழு) வரையறையற்ற பொறுப்பையே வலியுறுத்தியது. இப் பொறுப்பு இருப்பதால் செல்வந்தர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் சேரமாட்டார் என்பது தவறு; மேலும், இவ்வகைப் பொறுப்பையே மக்கள் அனைவரும் ஆதரிக்கின்றனர் எனக் கூட்டுறவுக் குழு கண்டறிந்தது. மைய பாங்கின் விசாரணைக் குழுக்கூட வரையறையற்ற பொறுப்பிற்கே ஆதரவு தெரிவித்துள்ளது. உறுப்பினர்களின் நாணயத்தை மட்டும்

நன்கு பரிசீலித்துக் கடன் கொடுத்தால், கிராமக் கடன் சங்கங்கள் நல்ல முறையில் வளரும் என்றும், அதனுல் எவ்வித ஆபத்தும் இல்லை என்றும் இக் குழு முடிவு செய்தது.

வரையறையற்ற பொறுப்பு இருப்பதனுல் கூட்டுறவுச் சங்கங்கள் கஷ்டப்படுவதில்லை என்பதை அனுபவ வாயிலாகவும் அறிந்து கொள்கிருேம். கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றி பெறுவதும் தோல்வி அடைவதும் வரையறையற்ற பொறுப்பினுலல்ல; மாருக, அவை நிர்வகிக்கப்படும் முறையினுல்தான். நிர்வாகம் செம்மையாக நடைபெருவிட்டால்தான் கூட்டுறவுச் சங்கங்கள் நட்டமடைகின்றன. எனினும், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் தனது சூழ்நிலைக்கேற்பக் கடன் பொறுப்பை நிர்ணயம் செய்து கொள்வது நன்று. குறிப்பாக, விவசாயச் சங்கங்கள் வரையறை பெற்ற பொறுப்பைத்தான் கடைப்பிடிக்க வேண்டுமென்ற நியதி கிடையாது. வரையறையுள்ள பொறுப்பையும் கடைப்பிடிக்கலாம் என்பது திட்டக்குழுவின் முடிவு. பெருநிலக் கிழார்களெல்லாம் சேர்ந்து வரையறைபெற்ற பொறுப்புடைய சங்கங்கள் தாம் தேவை என்ருல் அதற்குத் தடையேதும் இருக்கக் கூடாது; ஆனுல் அதே சமயத்தில் ஏழைக் குடியானவர்கள் அச் சங்கத்தில் சேர்ந்து பயனடைய வாய்ப்பு இருக்க வேண்டும்.

தற்சமயம், வரையறையுள்ள பொறுப்பையே மக்கள் அதிகமாக விரும்புகின்றனர். குறிப்பாக, கூட்டுறவுச் சங்கங்கள் பெரிய அளவில் அமைக்கப்பட்டு, பரந்த பகுதியில் பணியாற்ற வேண்டியுள்ளபோது, உறுப்பினர்கள் ஒருவரையொருவர் கண்காணிப்பதோ அறிந்திருப்பதோ இயலாத காரியம். எனவே, பெரிய சங்கங்கள் அனைத்தும் பெரும்பாலும் வரையறையுள்ள பொறுப்பின் அடிப்படையில்தான் அமைக்கப்படுகின்றன. மேலும் பல வகைச் சேவைச் சங்கங்களும் தற்போது வரையறைபெற்ற பொறுப்பில்தான் இயங்கத் தொடங்கியுள்ளன. குறிப்பாக, அரசாங்கப் பங்கு மூலதனத்தைப் பெற்று இயங்கும் சங்கங்கள் அனைத்தும் இவ்வகைக் கடன்பொறுப்பில்தான் நடைபெற்று வருகின்றன.

(ஆ) உற்பத்தியாளர் சங்கங்களுக்கும் நுகர்வோர் சங்கங்களுக்குமிடையே தோன்றும் முரண்பாடு

நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் நன்கு வளர்ச்சி பெற்றுள்ள சில ஐரோப்பிய நாடுகளில் உற்பத்தியாளர் சங்கங்கள் மட்டும்

பொருள்களை உற்பத்தி செய்வது கிடையாது; நுகர்வோர் சங்கங்களும் உற்பத்தித் துறையில் இறங்கியுள்ளன. இவ்வாறாக, பொருள் உற்பத்தியில் இவ்விருவகைச் சங்கங்களுமே ஈடுபட்டிருப்பது கூட்டுறவாளர்களிடையே கருத்து வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது. உற்பத்திச் சங்கங்கள் மட்டுமே பொருள்களை உற்பத்திசெய்ய வேண்டுமென்கின்றனர் ஒருசிலர், வேறு சிலரோ நுகர்வோர் சங்கங்களும் உற்பத்தியில் ஈடுபடலாம் என வாதாடுகின்றனர். எனவே, இம் முரண்பாட்டைப் பற்றிச் சற்று விரிவாக ஆராய்வது நன்று.

நுகர்வோர் சங்கங்களும் உற்பத்திப் பணியும்

நுகர்வோர் தமக்குத் தேவைப்படும் பொருள்களைத் தரமான நிலையில் நியாயமான விலைக்கு வாங்கவே விரும்புகின்றனர். ஆனால், அங்காடியிலுள்ள கடைக்காரர்களோ நியாயமான வழியில் பொருள்களை விற்பதில்லை. பொருள்களை விற்கும்போது பலவிதத் தவறான வழிகளை நாடுகின்றனர். எடையைக் குறைத்து விடுகின்றனர்; கொள்ளை இலாபம் திரட்ட வேண்டுமென்ற மோகத்தால் அநியாய விலையை நிர்ணயிக்கின்றனர்; சரக்குகளைப் பதுக்கி வைத்துக் கிராக்கி உண்டு பண்ணுகின்றனர். கலப்படம் செய்கின்றனர். ஒரே பொருளை ஆளின் தரத்திற்கேற்பப் பல்வேறு விலைகளுக்கு விற்கின்றனர். வியாபாரிகளின் மோசமான இந் நடவடிக்கைகளால் பொதுமக்கள் தாம் அதிகமாகப் பாதிக்கப் படுகின்றனர். மேலும், பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டுக் கடைகளுக்கு வருவதற்குள் எத்தனையோ தரகர்களும் இருக்கின்றனர். அவர்கள் தமக்கென்று தரகையும் வசூல் செய்கின்றனர். இத் தரகுத் தொகையெல்லாம் பொருள்களின் விலையில் சேர்க்கப் படுவதால் நுகர்வோர் மேலும் பாதிக்கப்படுகின்றனர். இதனால் நுகர்வோர் தமக்கு வேண்டிய பொருள்களை நியாயமான விலைக்கு வாங்கமுடிவதில்லை. எனவே, அங்காடியில் நடக்கும் தில்லுமுல்லுகளிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் கொள்ளை இலாபமடிக்கும் வியாபாரிகளின் கையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்குமென்றுதான் நுகர்வோர் ஒன்றுசேர்ந்து தமக்கெனக் கூட்டுறவுப் பண்டகசாலைகளை ஏற்படுத்துகின்றனர். தமக்கு வேண்டிய பண்டங்களையெல்லாம் மொத்தமாகக் கொள்முதல் செய்து மலிவாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

இவ்வகைக் கூட்டுறவுப் பண்டகசாலை முதன்முதலில் இங்கிலாந்து நாட்டில் தான் தோன்றியது. 1844ஆம் ஆண்டில் ராக்டேலைச் சேர்ந்த 28 நெசவாளர்கள் தாம் தமக்கென்று சிறியதொரு பண்டகசாலையை அமைத்து, கூட்டுறவு இயக்கத்திற்கே

வித்திட்டனர். அப் பண்டகசாலையின் வெற்றியைக் கண்ட ஏனையோரும் தமக்கெனக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைக்கலாயினர். இவ்வாருக, இங்கிலாந்து நாட்டில் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் எண்ணிக்கை வளரலாயிற்று. ஒவ்வொரு கூட்டுறவுப் பண்டகசாலையும் தத்தமக்கு வேண்டிய பொருள்களைக் கொள்முதல் செய்வதற்குப் பதிலாக, எல்லாப் பண்டகசாலைகளும் ஒன்றுசேர்ந்து ஒரு மொத்தக் கூட்டுறவுப் பண்டகசாலையை ஏற்படுத்தி விட்டால் இன்னும் மலிவாகவும் எளிதாகவும் பொருள்களைப் பெறமுடியுமென இப்பண்டகசாலைகள் நினைத்தன. அதன் விளைவாக முளையிட்டதுதான் இங்கிலாந்து நாட்டின் மொத்தக் கூட்டுறவுப் பண்டகசாலை (C. W. S.) இம் மொத்தப் பண்டகசாலை உற்பத்தியாளர்களிடமிருந்தோ அவர்களது பதிலாட்களிடமிருந்தோ மொத்தமாகப் பொருள்களைக் கொள்முதல் செய்து எல்லாக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும் விநியோகம் செய்யத் தொடங்கியது. நாளடைவில், மற்றவர்களிடமிருந்து பொருள்களை வாங்கி, கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு விநியோகிப்பதற்குப் பதிலாக, தானே அப்பொருள்களை உற்பத்தி செய்தால் இன்னும் மலிவாக இருக்குமே என்று எண்ணியது இம் மொத்தக் கூட்டுறவுப் பண்டகசாலை. அதன் விளைவாக, 1873ஆம் ஆண்டில் பிஸ்கட் தொழிற்சாலையொன்றைத் தொடங்கியது. பின்னர், படிப்படியாகப் பல்வேறு தொழிற்சாலைகளைத் தொடங்கி, பலவகைப் பொருள்களைத் தானே உற்பத்தி செய்யவும் முனைந்துவிட்டது. இவ்வாருக, இங்கிலாந்தில் தொடங்கப்பட்ட கூட்டுறவுப் பண்டகசாலைகள் தாம் முதன் முதலில் உற்பத்தித் துறையிலும் ஈடுபட்டன.

சுவீடனில் உற்பத்தி நிறுவனங்கள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து தொழில் கூட்டுகளை அமைத்து முற்றுரிமை பெற்றிருந்தன. எனவே, அங்கும் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் உற்பத்தித் துறையிலும் ஈடுபட்டு, தொழில் கூட்டுகளையெல்லாம் முறியடித்து விட்டன.

இவ்வாருக, நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் மக்களுக்கு வேண்டிய பொருள்களை மலிவான விலைக்கு விற்பதற்கென்று முதலில் பண்டகசாலைகளை அமைத்து, படிப்படியாக உற்பத்தித் துறையிலும் ஈடுபட்டுவிட்டன. பொருள்களை உற்பத்தி செய்யும் பணிமுதல் அவற்றைச் சில்லறையாக விற்பனை செய்யும் பணிவரை எல்லா வேலைகளையும் நுகர்வோர் சங்கங்களே இன்று செய்து வருகின்றன.

கூட்டுறவும் உற்பத்தியும்

வெகுநாட்களாகவே கைவினைஞர்களும் குடிசைத் தொழிலாளரும்தாம் மக்களுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்து வந்தனர். இவர்கள் பெரும்பாலும் தம் குடும்பத்திலுள்ளவர்களைக் கொண்டு வீட்டிலேயே பல்வேறு பண்டங்களைச் செய்து வந்தனர். நாளடைவில் தமக்கு வேண்டிய மூலப் பொருள்களை மொத்தமாகக் கொள்முதல் செய்வதற்கென்றும், தமது பண்டங்களை நல்லவிலைக்கு விற்பதற்கென்றும் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தனர். இவ்வாறாக, தம் உழைப்பினையும் சாதனங்களையும் சிறந்த முறையில் பயன்படுத்தலாயினர்.

உற்பத்திச் சங்கங்களுக்கும் நுகர்வோர் சங்கங்களுக்குமிடையேயுள்ள வேறுபாடுகள்

உற்பத்திச் சங்கங்கள் மட்டுமின்றி நுகர்வோர் சங்சங்களும் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பது நல்லதுதான். ஆனால், இவ்விரு வகைக் கூட்டுறவுச் சங்கங்களின் குறிக்கோள்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்பதை எவரும் மறுக்க முடியாது. நுகர்வோர் சங்கங்களின் அடிப்படை நோக்கம் கூட்டுறவுப்பண்டகசாலைகளை அபிவிருத்தி செய்து, அதன் வழியாக நுகர்வோருக்குப் பயனளிக்கும் வகையில் தரமான பொருள்களை நியாயமான விலைக்கு விற்பதாகும். ஆனால், உற்பத்திச் சங்கங்களோ தம் உறுப்பினர்களாகிய தொழிலாளிகளின் நிலையை உயர்த்துவதற்காகப் பாடுபடுகின்றன. இவ்விருவகைச் சங்கங்களுக்கு மிடையே பல்வேறு வேறுபாடுகள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை மட்டும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வேறுபாடுகள்

	நுகர்வோர் சங்கங்கள்	உற்பத்தியாளர் சங்கங்கள்
1.	மாதச் சம்பளம் பெறும் ஊழியர்களும் பணியாளர்களுமே உறுப்பினர்கள். பெரும்பாலும், இவர்கள் நகரங்களில் பணிபுரிபவர்கள்.	உழைப்பாளிகளே உறுப்பினர்கள்; ஆலைகளிலும் குடிசைத் தொழில்களிலும் விவசாயத்திலும் கைத்தொழிலிலும் வேலை செய்வோரே உறுப்பினர்கள்.
2.	எல்லாத் தொழில்களிலும் பணிபுரிவோர் உறுப்பினர்களாகலாம்.	குறிப்பிட்ட தொழிலில் வேலை செய்வோரே உறுப்பினர்களாக முடியும்.

வேறுபாடுகள் - தொடர்ச்சி

	நுகர்வோர் சங்கங்கள்	உற்பத்தியாளர் சங்கங்கள்
3.	உறுப்பினர்களுக்கு மலிவான விலையில் பொருள்களை விநியோகம் செய்வதே இவற்றின் முக்கியக் குறிக்கோள்.	சங்கங்கள் வளர்ச்சியடைந்து விட்டால் விலைகள் உயர்ந்து விடக் கூடும்.
4.	நுகர்வோரின் நலன்களையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு இயங்குகின்றன.	உற்பத்தியாளரின் நிலையை உயர்த்துவதற்காகவே பாடுபடுகின்றன; இதனால் நுகர்வோர் பாதிக்கப் பட்டாலும் பரவாயில்லை.
5.	பெரிய தொழிற்சாலைகளை நிறுவி பேராலை உற்பத்தி முறையால் ஏற்படும் சிக்கனங்களைப் பெறமுடியும்.	பெரும்பாலும் சிறு சிறு குடிசைத்தொழில்களே கூட்டுறவு முறையில் அமைக்கப் படுகின்றன.
6.	நுகர்வோருக்குப் பயனளிக்கும் வகையில்தான் உற்பத்திச் செய்யப்படுகிறது; இலாபம் பெறுவதற்காக அன்று.	தொழிலாளர்கள் அமைக்கும் கூட்டுறவு உற்பத்திச் சங்கங்கள் பெரும்பாலும் இலாபத்திற்காகவே அமைக்கப்படுகின்றன.

கருத்து முரண்பாடு

மேற்கூறிய வேறுபாடுகள் இருக்கின்ற காரணத்தால், உற்பத்தி செய்யும் பணியை எச் சங்கங்கள் மேற்கொள்வது என்பதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

நுகர்வோர் சங்கங்கள் இலாபம் பெறவேண்டுமென்ற நோக்கமின்றி நுகர்வோரின் பயனையே குறிக்கோளாகக் கொண்டவை; எனவே, தம் சங்கங்களின் நலனுக்கென்று உற்பத்தித் துறையிலும் ஈடுபடுவதால் தவறொன்றுமில்லை எனக்கருதுகின்றன. மேலும், இச்சங்கங்கள் சின்னஞ்சிறு குடிசைத் தொழில்களை அமைக்காமல் பெரிய ஆலைகளை நிறுவி உற்பத்தி செய்வதால் சிக்கனமாகச் செயல்படமுடியும் என்றும் கருதுகின்றன.

உற்பத்தியாளர் சங்கங்களோ மாறுபட்ட கருத்தைக் கொண்டுள்ளன. பொருளாதார அடிப்படையிலின்றி, சமூக, ஒழுக்க

ரீதியிலும் பண்பாட்டு அடிப்படையிலும் இப்பிரச்சினையை ஆராய வேண்டுமென்கின்றன. எனவே, உற்பத்தி செய்யவேண்டியவர்கள் ஆலைத் தொழிலாளிகளும் விவசாயக் குடியானவர்களுமேயன்றி நுகர்வோர் அல்லர் என்று வாதாடுகின்றன. உற்பத்தியாளர்களின் பணியை நுகர்வோரே மேற்கொள்வது என்பது சமூக அநீதியென்றும் கருதுகின்றன. நுகர்வோரே குடியானவர்களின் நிலங்களையும் வாங்கிப் பெரிய பண்ணைகளாக ஆக்கி, சாகுபடி செய்தால் மலிவாகவே உற்பத்தி செய்ய முடியும்தான்; ஆனால் இதனால் குடியானவர்களின் நிலை என்ன ஆவது? அவர்கள் வெறும் கூலியாள்களாக மாறிவிடுவார்கள் அல்லவா என்றும் வாதாடுகின்றன.

இக்கருத்து முரண்பாடுகள் சாதாரண முரண்பாடுகளல்ல; ஏதோ படிப்பதற்கு மட்டும் ஏற்றவையுமல்ல. இம்முரண்பாடுகளால் எத்தனையோ இடங்களில் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்குமிடையே பூசல்களும் சண்டைகளும் கூட ஏற்பட்டுள்ளன. அதனோடு, பலகேடுகளும் நாசவேலைகளும் கூடத் தோன்றியிருக்கின்றன. அயர்லாந்து நாட்டில் பால்பண்டங்களை உற்பத்தி செய்வதில் இங்கிலாந்தின் மொத்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் (C. W. S.) அயர்லாந்தின் விவசாய அமைப்புச் சங்கத்திற்குமிடையே (I. A. O. S.) ஏற்பட்ட தகராறே இதற்குச் சிறந்த சான்றாகும். இங்கிலாந்திலுள்ள நுகர்வோரால் அமைக்கப்பட்டுள்ள மொத்தக் கூட்டுறவுச் சங்கம் தன் உறுப்பினர் சங்கங்களுக்கு மலிவான வெண்ணெயை விநியோகம் செய்வதற்கென்று அயர்லாந்து நாட்டின் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பெருமளவில் பாலைக் கொள்முதல் செய்து ஒரு பெரிய வெண்ணெய்த் தொழிற்சாலையை அங்கு நிறுவ எண்ணியது. எனவே, 1891-ல் அயர்லாந்து நாட்டில் இயங்கி வந்த பெரியதொரு கூட்டுறவு வெண்ணெய் உற்பத்தி ஆலையை விலைக்கு வாங்கியது. இதற்கு அயர்லாந்தின் விவசாய அமைப்புச் சங்கம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. பால் உற்பத்தியாளர்களால் அமைக்கப்பட்ட இச் சங்கம் நுகர்வோர் மொத்தச் சங்கம் இத்துறையில் ஈடுபடுவது அக்கிரமம் என்று வாதாடியது. இந்த எதிர்ப்பைச் சட்டை பண்ணாத இங்கிலாந்தின் மொத்தக் கூட்டுறவுச் சங்கம் படிப்படியாகப் பல வெண்ணெய்த் தொழிற்சாலைகளை அமைத்து வந்தது. ஒரு சில ஆண்டுகளுக்குள் சுமார் 90 வெண்ணெய்த் தொழிற்சாலைகளைத் தொடங்கி நடத்தி வந்தது. அயர்லாந்தின் விவசாய அமைப்புச் சங்கம் தன் எதிர்ப்பை நிறுத்தவில்லை. மொத்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்யத் தொடங்கியது. அக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பால் விற்கும் பண்ணை

யாளர்கள் அனைவரும் தமக்கே துரோகம் செய்கிறார்கள் என்று பிரகடனப்படுத்தி வந்தது. நாளடைவில் இங்கிலாந்தின் மொத்தக் கூட்டுறவுச் சங்கம் குறைந்த விலையில் பாலைக் கொள்முதல் செய்யத் தொடங்கியது. அதன் பின்னர்த்தான் அயர்லாந்தின் குடியானவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. தம் சொந்த நாட்டுச் சங்கத்திற்கு விரோதமாக இதுவரை இங்கிலாந்தின் மொத்த விற்பனைச் சங்கத்திற்கு ஆதரவு அளித்தது பெருந்தவறு என்பதை உணர்ந்தனர். அயர்லாந்தின் விவசாய அமைப்புக் சங்கத்தின் தூண்டுதலின்பேரில் பால் உற்பத்தியாளர்கள் அனை வரும் மொத்தக் கூட்டுறவுச் சங்கத்தைப் பகிஷ்கரித்துவிட்டனர். இதனால் இங்கிலாந்தின் மொத்தக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பெரு நட்டம் ஏற்பட்டது. எனவே, அச்சங்கம் தனது வெண்ணெய் தொழிற்சாலைகள் அனைத்தையும் அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கத்திற்கே விற்றுவிட்டது. இந்த சம்பவத்திலிருந்து கூட்டுறவு உற்பத்திச் சங்கங்களுக்கும் நுகர்வோர் சங்கங்களுக்குமிடையே யுள்ள பிணக்குகள் நன்கு வெளியாகின்றன. அதனோடு இவ் விரு சங்கங்களின் வாதப் பொருத்தமும் தெளிவாகிறது.

அயர்லாந்தில் மட்டுமின்றி, சுவீடன், டென்மார்க் போன்ற பிற நாடுகளிலும் கூட விவசாயச் சங்கங்களுக்கும் நுகர்வோர் சங்கங்களுக்குமிடையே பிணக்குகள் இருந்து வருகின்றன. இச் சங்கங்கள் ஒன்றொடொன்று எவ்விதத் தொடர்புமின்றித் தனித் தனியாகவே இயங்கி வருகின்றன. சில சமயங்களில் வெளிப்படை யாகவே ஒன்றையொன்று தாக்கிக் கொள்கின்றன. தத்தம் தொழில்களில் ஒன்றுக்கொன்று உதவி புரியாமல் நடந்து வருகின்றன. டென்மார்கிலுள்ள விவசாயச் சங்கங்களுக்கும் விவசாய நுகர்வோர் சங்கங்களுக்கும் பொதுவான நிர்வாகிகளே இருந்து வருகின்றனர். அப்படியிருந்தும் இவ்விருவகைச் சங்கங் களுக்குமிடையே எவ்விதப் பரஸ்பர உறவும் கிடையாது. இவ் விருவகைச் சங்கங்களுமே பொருளாதார அடிப்படையில்தான் இயங்கி வருகின்றன; சமூக அடிப்படையிலோ ஒழுக்க ரீதியிலோ இவை நடைபெறுவது கிடையாது. பொருளாதார நன்மைக்காகச் சங்கங்கள் எந்தப் பணியிலும் ஈடுபடலாமென இவை நம்புகின்றன. நுகர்வோர் சங்கங்கள் உறுப்பினர்களுக்குப் பயனளிக்கும் வகையில் பண்டகசாலைகளை மட்டும்தான் வைத்து நடத்த வேண்டும் என்ற நியதி கிடையாது.

இந்தியாவில் உள்ள நிலைமை

இந்தியாவைப் பொறுத்தவரை இப் பிணக்கம் இன்னும் அவ் வளவு பெரிதாக வளரவில்லை. குடியானவர் சங்கங்களும் குடிசைத்

தொழிலாளர் சங்கங்களும் இன்னும் எவ்வளவோ வளரவேண்டியுள்ளன. நுகர்வோர் சங்கங்கள்கூட இன்னும் முன்னேற வேண்டியிருக்கின்றன. நுகர்வோர் சங்கங்கள் பொருள்களைப் பதப்படுத்தும் துறையில் இன்னும் வளர்ச்சி பெறவில்லை. அதேபோல்தான் விற்பனைச் சங்கங்களும். விற்பனைச் சங்கங்கள் இப்போதுதான் இத்துறையில் ஓரளவு ஈடுபட்டுள்ளன. பொருள்களைப் பதப் படுத்தும் தொழிற்சாலைகள் இப்போது தொடங்கப்பட்டு வருகின்றன. குடிசைத் தொழிலாளர்கள்கூட இப்போதுதான் சிறிய தொழிற்சாலைகளையும் குடிசைத் தொழில்களையும் ஓரளவிற்குத் தீவிரமாக நடத்த முன் வந்துள்ளனர். நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தாம் வியாபாரம் செய்யும் பொருள்களைத் தாமே உற்பத்தி செய்வதற்கென்று இந்திய அரசாங்கம் தூண்டுதல் அளித்து வருகின்றது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தமக்கு வேண்டிய பொருள்களை ஆலைகளிலிருந்து கொள்முதல் செய்வதால் ஆலை அதிபர்கள் விரும்பும் விலைக்கே அவற்றை வாங்க வேண்டியுள்ளது. மாறாக, தமக்கு வேண்டிய நுகர்வுப் பொருள்களைத் தாமே உற்பத்தி செய்தால் பொருள்கள் தரமானதாக இருக்கும்; விலையும் மலிவாக இருக்கும். தொழிலதிபர்களும் மலிவாகத் தம் பொருள்களை விற்க முன்வருவர். எனினும், நுகர்வோர் சங்கங்கள் மாவு அரைத்தல், காபித்தூள் செய்தல், எண்ணெய் தயாரித்தல் போன்ற நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களை மட்டுமே ஏற்படுத்துவது நன்று. ஏற்கெனவே இவ்வகைத் தொழிலைக் கூட்டுறவு விற்பனைச் சங்கமோ உற்பத்தியாளர் சங்கமோ நடத்தி வருமானால், நுகர்வோர் சங்கங்கள் அதைத் தொடங்காமலிருப்பது நல்லது. இல்லையேல் இருவகைச் சங்கங்களுக்கும் போட்டி ஏற்பட்டு விடும்.

தற்போது கூட்டுறவு இயக்கத்திலுள்ள பலவகைச் சங்கங்கள் எந்தத் தொழிலை வேண்டுமானாலும் செய்வதற்குரிய வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. அதனால் எந்தச் சங்கமும் எந்தத் தொழிலையும் நடத்துவதற்கு விட்டுவிடக் கூடாது. ஏனெனில், அவ்வாறு விட்டுவிட்டால் சிறிது காலம் கழித்துச் சங்கங்களுக்கிடையே பூசல்களும் பிணக்கங்களும் ஏற்பட்டுவிடும். எனவே, கூட்டுறவு இயக்கத்திலுள்ள பலவகைச் சங்கங்கள் தமக்குள் போட்டியின்றி நல்லுறவுடன் இயங்கினால்தான் மக்களுக்கும் நல்லது; சங்கங்களுக்கும் நல்லது. இந்தியக் கூட்டுறவு இயக்க ஐந்தாவது மாநாடுகூட இதையேதான் சிபாரிசு செய்துள்ளது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள், உற்பத்திச் சங்கங்கள் ஆகியவற்றிற்கிடையே கூட்டுறவு மனப்பான்மை நிலவ வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளது. அவ்வாறு கூட்டுறவு மனப்

பான்மை நிலவவேண்டுமாயின் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது நல்லது.

1. கூட்டுறவு இயக்கத்திலுள்ள பலவகைச் சங்கங்களிடையே ஏற்படக்கூடிய பிரச்சினைகளை ஆராய்வதற்கும் அவற்றிற்குரிய முடிவுகளை எடுப்பதற்கும் சங்கங்களின் ஐக்கியக் குழுக்களை ஏற்படுத்த வேண்டும். இந்திய தேசியக் கூட்டுறவுச் சங்கம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால் நல்லது.

2. ஒவ்வொருவகைக் கூட்டுறவுச் சங்கங்களும் தங்களின் வளர்ச்சியிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தாமல், இதர வகைச் சங்கங்களிடமிருந்தும் தமக்கு வேண்டிய பணிகளைப் பெறுதல் வேண்டும்.

3. ஒவ்வொரு வகைக் கூட்டுறவுச் சங்கங்களும் திறமையாகச் செயல்பட வேண்டும்; அப்போதுதான் ஏனைய சங்கங்கள் இவற்றோடு தொடர்பு கொண்டு தமக்கு வேண்டிய பணிகளைப் பெற முடியும். அவ்வாறாயின், ஒவ்வொரு வகைச் சங்கங்களும் மலிவான விலையில் தரமான பொருள்களை உற்பத்தி செய்து உரிய நேரத்தில் விநியோகிக்க வேண்டும். அப்போதுதான் எல்லா வகைச் சங்கங்களுக்குமிடையே நல்லுறவு ஏற்படும்.

(இ) கூட்டுறவில் முதலாளி-தொழிலாளி உறவு

தொழில் புரட்சியின் போதுதான் முதலாளி, தொழிலாளி என்ற பாகுபாடு தோன்றியது; தொழிலாளிகள் சுரண்டலுக்கு ஆளாகினர். எனவே, சுரண்டலிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள எண்ணினர். அன்றையிலிருந்தே தொழிலாளர்கள் மத்தியில் அமைதியின்மை தோன்றி, வேலை நிறுத்தங்களும் மலிந்து விட்டன. நல்ல வேலை நிபந்தனைகளுக்காகவும் கூலி உயர்வுக்காகவும் தொழிலாளர்கள் போராடத் தொடங்கினர். இவ்வாறாக, முதலாளிகளின் போக்குகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் விரோதமாகத் தொழிலாளர் போராட்டம் நடத்துவது இன்று மலிந்து விட்டது. குறிப்பாக, குடியரசு நாடுகளில்தாம் தொழிலாளர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இப்போராட்டங்களை நடத்தித் தம் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கென்று தொழிற்சங்கங்கள் போன்ற அமைப்புகளையும் ஏற்படுத்தியுள்ளனர்.

இவ்வாறாக, தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்குமிடையே நடைபெறும் தகராறுகளைத் தவிர்ப்பதற்கென்றும் தொழிலாளர்

களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கென்றும் ஒவ்வொரு நாட்டிலும் சட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. தொழிலாளர்களின் வேலை நேரம் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது; குறைந்த பட்சக் கூலியும் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது; தொழிலாளர்கள் தம் வேலையிலிருந்து நீக்கப்படாமலிருப்பதற்கும் ஒரு சில நிபந்தனைகளின் பேரில் வழி செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளை அவ்வப்போது பார்வையிட்டு ஆலைச்சட்டங்கள் சரியாகப் பின்பற்றப் படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்; அதனோடு வேலை செய்யும் போது ஊனம் அடையும் தொழிலாளர்களுக்கும், ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கும் ஓய்வுச் சம்பளம் கொடுக்க வழி செய்யப் பட்டுள்ளது. தொழிலாளர்களின் நலனுக்கென்று பலவகை நிதியை ஒதுக்குமாறு முதலாளிகள் வலியுறுத்தப் படுகின்றனர். மேலும், அவர்களின் நலனுக்கென்று கட்டாயக் காப்பீட்டுத் திட்டமும் அமுலில் இருந்து வருகிறது. இவ்வகை அரசாங்கச் சட்டங்கள் இருந்தும் கூடத் தொழிலாளருக்கும் முதலாளிகளுக்குமிடையே நல்ல, திருப்திகரமான உறவைக் காணோம்.

கூட்டுறவின் தோற்றம்: சமுதாயத்திலுள்ள தவறுகளும் நேர்மையற்ற பொருளாதார நடவடிக்கைகளும் தாம் கூட்டுறவின் தோற்றத்திற்குக் காரணமாகும். அத் தவறுகளையும் நேர்மையற்ற, தாறுமாறான நடவடிக்கைகளை ஒழித்துக் கட்டும் நோக்கத்துடன்தான் கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இக் குறிக்கோளை அடைவதற்குப் புதியதொரு வழியை இவ் வியக்கம் மேற்கொண்டுள்ளது தொழிற்சங்கங்களைப் போல் யாருடனும் இது போராடுவதில்லை. போராட்டம், வேலை நிறுத்தம் ஆகியவை தோல்வியடைந்தபோதுதான் கூட்டுறவு இயக்கமே தொடங்கப் பட்டது தொழிலாளர்கள் போராட்டங்களைக் கைவிட்டு விட்டு, தாமே ஒன்றுசேர்ந்து, உற்பத்தித் துறையிலும் விநியோகத் துறையிலும் ஈடுபட்டுத் தம் நிலைமையை உயர்த்துவதே சிறந்ததென இவ் வியக்கம் போதித்து வருகிறது.

இந் நோக்கத்தோடு தான் இங்கிலாந்து நாட்டின் தொழிலாளர்கள் மட்டுமின்றி, இத்தாலியின் தொழிலாளர்களும் கனடாவின் குடியானவர்களும் தத்தம் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கினர். தமக்குத் தாமே உதவி புரியும் கொள்கையின் அடிப்படையில் இச்சங்கங்கள் இயங்கி வருகின்றன.

கூட்டுறவில் முதலாளி — தொழிலாளி உறவு: பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைந்துள்ள நாடு-

களிலெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் பெரிய ஆலைகளை நிறுவி உற்பத்தி செய்து வருகின்றன; விநியோகம் செய்வதற்கென்றும் பெரிய நிறுவனங்களை அமைத்துள்ளன. இவ் வாலைகளிலும் நிறுவனங்களிலும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். சான்ருக, இங்கிலாந்தின் மொத்தக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் மட்டும் 65,000 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்; ஆண்டுதோறும் சுமார் 38 மில்லியன் பவுன் இவர்களுக்குச் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. எனவே, இவ்வளவு வேலையாள்களை வைத்து நிர்வாகம் செய்யும் பொறுப்பை இச்சங்கம் மேற்கொண்டுள்ளது. இவ்வளவு பேர் அங்கு வேலை செய்து வருகின்றனர்; எனினும், இத் தொழிலாளர்களுக்கும் சங்க நிர்வாகத்திற்குமிடையே பூசல்களோ பிணக்கங்களோ ஏற்படுவதில்லை. தொழிலாளர்களின் வேலை நிலைமை சிறந்ததாக உள்ளது; நல்ல ஊதியம் அவர்களுக்குக் கொடுக்கப் படுகிறது. இரவு நேரங்களில் எவரும் வேலை செய்வதில்லை. வேலை நேரம் குறைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு நிரந்தரமான வேலை உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்கள் வேலை செய்யும் ஆலைகளும் நிறுவனங்களும் சுகாதார வசதிகள் அனைத்தும் கொண்டிருக்கின்றன. இவ்வகையில் பார்க்கும் போது, இந் நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிவோர் ஏனைய தொழிலாளர்களை விட நல்ல நிலைமையில் தான் உள்ளனர். கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிவோர் அனைவரும் அச் சங்கங்கள் வைத்து நடத்தும் தொழிற்சங்கங்களில் உறுப்பினர்களாக வேண்டும் என்பது நிபந்தனை. தொழிற்சங்கங்களில் உறுப்பினர்களானல்தான் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிய முடியும். மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் அவ்வப்போது தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தித்தான் ஊழியர்களின் ஊதியத்தையும் பிற சௌகரியங்களையும் நிர்ணயம் செய்கின்றன. எனவே, தொழிற்சங்கங்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அடிக்கடி தகராறு ஏற்படுவதில்லை; அப்படியே ஏற்பட்டாலும், பேச்சு வார்த்தைகள் மூலமாகச் சுலபமாகத் தீர்வு காண்கின்றன. இதற்கென்றே பலவகை அமைப்புகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் கொண்டுள்ளன அதனோடு, தேசியக்கூட்டுறவுக்கழகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தில் சுதந்திரமானதொரு தலைவர் இருக்கிறார்; மேலும், கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளாக ஆறுபேரும், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளாக ஆறுபேரும் உறுப்பினர்களாக உள்ளனர். தொழிற் சங்கங்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்குமிடையே ஏற்படும் தகராறுகளைப் பெரும்பாலும் கீழ்மட்டத்திலேயே தீர்த்துக் கொள்கின்றனர்; அப்படித் தீர்க்கப்படாத தகராறுகள் மட்டுமே இக் கழகத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. இக்

கழகம் கூறும் தீர்ப்பே முடிவானது; எனவே ஒருவரும் இதை மறுக்க இயலாது.

இங்கிலாந்தில் மட்டுமின்றி, வேறுசில நாடுகளிலும் கூட கூட்டுறவுச் சங்கங்களில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணி புரிந்து வருகின்றனர். சுவீடனிலுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களிலும் கூட்டமைப்புச் சங்கத்திலும் ஏறத்தாற 60,000 பேர் பணிபுரிகின்றனர். இந் நாட்டில் அரசாங்கப் பணியாளர்களை யடுத்து, கூட்டுறவுப் பணியாளர்கள்தாம் அதிகம். இச் சங்கங்களில் பணிபுரியும் தொழிலாளர்களும்கூட நல்ல நிலைமையில்தான் வேலை செய்கின்றனர். தகராறுகளின்றிச் சுமூகமாகவே பணி புரிந்து வருகின்றனர். இந்நாட்டிலுள்ள பிறதொழிலாளர்கள் நாளொன்றுக்கு 8 மணி நேரம்தான் வேலை செய்ய வேண்டுமென்பதற்காக 1919-ல் சட்டம் இயற்றப்பட்டது. ஆனல், கூட்டுறவுச் சங்கங்களோ 8 மணி நேர வேலையை 1905ஆம் ஆண்டிலேயே புகுத்தி விட்டன. அதேபோல் வாரத்திற்கு இரண்டு நாள்கள் விடுமுறை கொடுக்கும் பழக்கத்தை இச் சங்கங்கள் 1907-லேயே புகுத்தி விட்டன; ஆனல் தனியார் துறையிலோ இதற்கான சட்டம் 1938-ல் தான் கொண்டுவரப்பட்டது. மேலும், கூட்டுறவுச் சங்க உழைப்பாளிகளின் ஊதியம் மற்ற உழைப்பாளிகளின் ஊதியத்தைவிட எவ்விதத்திலும் குறைந்ததாயிருக்கக் கூடாதென்ற தீர்மானத்தை 1946ஆம் ஆண்டிலேயே கூட்டுறவு யூனியன் கொண்டு வந்து விட்டது. அதேபோல் வேலை நிலைமையும்கூட கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர்களுக்கு உயர்ந்ததாகவே இருந்து வருகிறது. இந் நாட்டிலும்கூட, கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே தகராறுகள் ஏற்படுவதில்லை; அப்படியே ஏற்பட்டாலும் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கென்று பல அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாருக, கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே தகராறுகள் ஏற்படாமலிருப்பதற்கு வேறொன்றும் காரணமன்று. கூட்டுறவு இயக்கத்தின் குறிக்கோளையும் அதன் வரலாற்றையும் நாம் எண்ணிப்பார்த்தால் போதும்; அப்போது புரியும் காரணங்கள். அதாவது,

1. கூட்டுறவு இயக்கமே மற்றவர்களால் சுரண்டப்பட்ட சாதாரண மக்களுக்காகத் தொடங்கப் பட்டதாகும்; எனவே, கூட்டுறவுச் சங்கங்கள் தொழிலாளர்களின்பால் இரக்கம் கொள்வதிலும், அவர்களை நல்ல முறையில் நடத்துவதிலும் வியப்பொன்றுமில்லை.

2. தொழிலாளர்கள் அனாவசியமான கோரிக்கைகளை விடுப்பதில்லை; அவ்வாறு செய்தால் அது தங்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஆபத்து என்பதை அவர்கள் நன்கறிந்துள்ளனர். மேலும், அவ்வாறு எண்ணமுடையோரே வேலைக்கமர்த்தப்படுகின்றனர்.

3. அடுத்து, ஒரு சில சங்கங்களில் தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் நிர்வாகத்தில் பங்குண்டு. அப்படி நிர்வாகக் குழுவில் அவர்கள் பங்கு கொள்வதால் தொழிலாளர்களின் கோரிக்கைகளும் சங்கங்களின் நிலைமையும் நன்கு பரிசீலிக்கப் படுவதற்கு வாய்ப்பு உண்டு. இவ்வாறாக, தொழிலாளர்களும் சங்க நிர்வாகிகளும் சமரசமான முறையில் தத்தம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடிவதால், இருவருக்குமிடையே எவ்வித மனக்கசப்போ, பிணக்கமோ ஏற்பட வழியில்லை.

4. கூட்டுப்பங்குக் கம்பெனிகளின் முதலாளிகளும் நிர்வாகிகளும் உழைப்பாளிகளோடு சமரசமாய்ப் பழகுவதில்லை; அப்படிப் பழகுவது கேவலமென நினைக்கின்றனர். எனவே, தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்குமிடையே வேறுபாடுகள் ஏற்பட்டு, அதன் காரணத்தால் பிணக்குகளும் தோன்றுகின்றன. கூட்டுறவுச் சங்கங்களிலோ தொழிலாளர்கள் நிர்வாகிகளுடன் ஒன்றாகப் பழகுகின்றனர்; எனவே இருபாலருக்குமிடையே நல்லெண்ணமும் நல்லுறவும் ஏற்படுகிறது.

5. கூட்டுறவுச்சங்க நிர்வாகிகளுக்கும் தொழிலாளருக்குமிடையே எப்போதாகிலும் பிணக்கம் ஏற்பட்டால், சமரசப் பேச்சு வார்த்தைகளின் மூலமாக அவை தீர்க்கப்பட்டு விடுகின்றன'

கூட்டுறவுத் தத்துவங்களும் தொழிலாளிகளும்: எந்தத் தொழிலும் நல்ல முறையில் நிர்வகிக்கப்பட்டால் அதற்கு இலாபம் கிடைக்கும்; அதேபோல் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஓரளவு இலாபம் கிடைக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களில் விநியோகம் செய்யும் சங்கங்கள் மட்டும் உறுப்பினர்களின் நலனை மட்டுமின்றி, ஓரளவு இலாபம் பெற வேண்டுமென்பதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. முதலாளித்துவ 'அமைப்பில் தொழிலில் ஏற்படும் இலாபமனைத்தும் முதலாளிகளுக்கும் நிர்வாகிகளுக்கும் சென்று விடுகிறது. சமதர்ம சமுதாயத்திலோ இலாபம் அனைத்தையும் அரசே எடுத்துக் கொள்கிறது. ஆனால், கூட்டுறவுச் சங்கங்களில் மட்டும் எல்லா உற்பத்திக் காரணிகளுக்கும் முறையாகச் சேர வேண்டிய இலாபம் கொடுக்கப்படுகிறது. இதனால் உற்பத்திக் காரணிகளில் எதுவும் தம் பங்குக்கு அதிகமாகவோ

குறைவாகவோ இலாபத்தைப் பெறுவதில்லை. எனவே, இலாபம் பகிரப்படும் முறையில் எவ்விதச் சர்ச்சைக்கும் வாய்ப்பே கிடையாது.

கூட்டுறவுச் சங்கங்களில் முதலாளி தொழிலாளி என்ற பாகு பாட்டிற்கே இடமில்லை. ஒவ்வோர் உறுப்பினனும் முதலாளியா வான்; அதேபோல் ஒவ்வொரு உறுப்பினனும் அதன் தொழிலாளி யாகவும் பணியாற்றுகிறான். இவ்வாறு, கூட்டுறவுச் சங்க நிறு வனத்தின் தொழிலாளிகளே அதன் முதலாளிகளாகவும் இருக்கின் றனர். சங்கத்திற்கு வேண்டிய மூலதனத்தைச் செலுத்தி, அதை நிர்வகிக்கும் பொறுப்பை அவர்களே ஏற்றுக் கொள்கின்றனர்; சங்கத்தின் இலாபமோ நட்டமோ அவர்களையே சேருகிறது. எனவே, சங்கத்தை நிர்வகிக்கும் போது சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். நிர்வாகச் செலவு அதிகமாகி விட்டால், அது சங்கத்தையே பாதிக்கும் என்பதை அவர்கள் நன்குணர்வர். அதே போல் சங்கத்தின் சம்பாத்தியம் அனைத்தும் அவர்களையே சேருகிறது; வேறொருவருக்கும் அதைக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. இவ்வாறாக, தொழிலாளி முதலாளி என்ற பாகு பாடு கூட்டுறவுச் சங்கத்தில் இல்லாததால் எவ்விதச் சச்சரவும் ஏற் படுவதில்லை. சான்றாக, பொருள் உற்பத்திச் சங்கங்களில் தொழி லாளர்கள் அனைவரும் சேர்ந்துதான் பொதுக்குழுவை அமைக் கின்றனர். அதே போல், விவசாயச் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள், கட்டிடச் சங்கங்கள் ஆகிய அனைத்திலும் அதனதன் முதலாளிகளே தொழிலாளிகளாகவும் இருக்கின்றனர். இதனால் சங்கத்தில் ஏற்படும் பிரச்சினைகளையெல்லாம் சுமூகமாகவே தீர்த்துக் கொள்ள முடிகிறது; தொழிலாளி - முதலாளிகளிடையே ஏற்படும் பிரச்சினைக்கு வாய்ப்பே இல்லாமல் போய்விடுகிறது.

மேற்கூறியதனைத்தும் எல்லாச் சங்கங்களுக்கும் பொது வானவையல்ல. முதலாளி-தொழிலாளி என்ற பாகுபாடு ஒரு சில சங்கங்களில் இருக்கத்தான் செய்கின்றன. சான்றாக, கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் தொழிலாளிகள் அனைவரும் சாதாரணத் தொழிலாளிகள்தாம். அவர்கள் சங்கத்தின் உறுப்பினர்களல்ல. அதேபோல்தான் கூட்டுறவு ஆலைகள் அனைத்திலும். கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கரும்பு உற்பத்தி செய்வோரும் ஆலையை வைத்து நடத்துவோரும் வெவ்வேறாக இருக்கலாம். அப்போது அவர்களுக்கிடையே சச்சரவும் பூசலும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உதாரணமாக, கரும்பு உற்பத்தியாளர்கள் தம் கரும்பை அதிக விலைக்கு விற்று இலாபமடைய எண்ணுகின்றனர்; ஆனால், கூட்டுறவுக் கரும்பாலையோ அவற்றை மலிவாகக் கொள்முதல்

செய்ய நினைக்கின்றன. இதனால் இவ்விருவருக்குமிடையே சச்சரவு ஏற்படுகிறது. எனவே, ஒரே தொழிலைச் செய்யும் சங்கத்தில் மட்டும்தான் சச்சரவு ஏற்பட வாய்ப்பில்லையே தவிர, ஏனைய வற்றிலெல்லாம் பூசல்களும் சண்டைகளும் ஏற்படுவதற்கு நிறைய வாய்ப்புண்டு. மேலும், கூட்டுறவுச் சர்க்கரை ஆலை உறுப்பினர் களுக்கும் அவ் வாலையின் தொழிலாளர்களுக்குமிடையே சச்சரவு ஏற்படவும் வாய்ப்புண்டு. எனினும், இவ்வகைச் சச்சரவுகளை யெல்லாம் முதலாளித்துவ அமைப்பில் தான் அதிகமாகக் காண லாம். கூட்டுறவுச் சங்கங்களில் அவை மிகக் குறைவுதான். அப்படியே ஏற்பட்டாலும், அவை சுமூகமாகத் தீர்க்கப்பட வாய்ப்பு உண்டு.

இந்தியக் கூட்டுறவில் முதலாளி–தொழிலாளர் உறவு

இந்தியாவிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் பெரும் பாலும் சிறியவைதாம். எனவே, பல சங்கங்களில் தொழிலாளர் என்று எவரும் கிடையாது. எனினும், மொத்தமாகக் கணக் கெடுத்துப் பார்க்கும் போது, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நம் நாட்டின் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றி வருகின்றனர் என்பது தெரியும். இத்தொழிலாளர்கள் தமக்கென்று தொழிற் சங்கங்களை இன்னும் அமைக்கவில்லை. காரணம் இவர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மோதல் ஏற்படுவது கிடையாது. எனி னும், கூட்டுறவுச் சங்கங்களில் வேலை செய்யும் பணியாளர்களுக்கும் எவ்விதக் குறையும் இல்லையென்று சொல்ல முடியாது. சங்கத் தொழிலாளர்கள் ஏனைய தொழிலாளர்களைவிடக் குறைவான சம்பளத்தையே பெறுகின்றனர். அவர்களுக்குப் பெரும்பாலும் ஓய்வுச் சம்பளம் என்பதே கிடையாது. மேலும், அவர்களுக்கு வேலைப் பாதுகாப்பும் கிடையாது. அப்படியிருந்தும் கூட்டுறவுப் பணியாளர்களுக்கென்று எவ்விதச் சங்கமும் கிடையாது. கடந்த சில ஆண்டுகளில் கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகள், சர்க்கரை ஆலைகள் என்று எத்தனையோ பெரிய நிறுவனங்கள் தோன்றி யுள்ளன. இவற்றிலெல்லாம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். அவர்களுடைய நிலைமைகூடத் திருப்திகரமானதாக இல்லை. நாளடைவில் இத்தொழிலாளர் களெல்லாம் ஒன்றுசேர்ந்து தமக்கெனத் தொழிற்சங்கங்களை அமைத்துப் பல்வேறு கோரிக்கைகளுக்காகப் போராடலாம்; அப் போது, கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தொழிலாளர்களுக்கு மிடையே சச்சரவுகள் ஏற்படக்கூடும். எனவே, வெள்ளம் வருவ தற்கு முன் அணைகட்டுவதைப் போல் இப்போதே அவற்றைத் தவிர்ப்பது நல்லது. கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தொழிலாளர்

சஙளுக்கும் ஏற்படக் கூடிய தகராறுகளைத் தவிர்த்து, நல்லுறவை நிலைநாட்ட வேண்டுமெனின் கீழ்காணும் நடவடிக்கைகளை இப்போதே எடுப்பது நன்று :

1. கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களும் சங்க உறுப்பினர்களாக ஆவதற்கு வகை செய்யலாம். தற்சமயம் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் தத்தம் தொழிலாளர்களை உறுப்பினர்களாக்கத் தயங்குகின்றன. கூட்டுறவு நிறுவனங்கள் சிறியதாயிருந்தாலும் சரி, பெரியதாயிருந்தாலும் சரி, தொழிலாளர்கள் உறுப்பினர்களாக அனுமதிக்கப்படுவது கிடையாது. இதனால் ஒருசில சங்கங்களில் சண்டை சச்சரவுகள் கூடத் தோன்றி, கூட்டுறவுச் சங்கத்தின் பெயருக்கே இழிவு ஏற்பட்டுள்ளது. எனவே, தொழிலாளர்களையும் உறுப்பினர்களாக்குவதற்கு வகை செய்தால் சங்கங்களுக்கும் தொழிலாளருக்குமிடையே நல்லுறவு ஏற்பட வாய்ப்புண்டு.

2. ஒவ்வொரு கூட்டுறவுத் துறையிலும் ஒரேவிதமான பணியைச் செய்துவரும் பணியாளர்கள் ஒன்றுசேர்ந்து தமக்கெனச் சங்கங்களை அமைத்துக் கொள்வது நன்று. அச் சங்கங்களை அமைத்துக் கொண்டால்தான், வேலைக்கு ஆள்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய முறை, ஒவ்வொரு வேலைக்கும் வேண்டிய தொழிலாளர்களின் தகுதி, வேலை நிபந்தனைகள், ஒரே விதமான சம்பளம், வேலைத் திறனுக்கு வேண்டிய பயிற்சி, ஓய்வுச் சம்பளம் போன்ற பல காரியங்களைப் பற்றி முடிவெடுப்பதற்கு ஏதுவாயிருக்கும். அவ்வாறு சங்கங்களைப் பணியாளர்கள் அமைத்துக் கொண்டால் கூட்டுறவுச் சங்கங்களோடு நல்லுறவு ஏற்படுவதற்கும் சங்கங்கள் நல்ல முறையில் நிர்வகிக்கப்படுவதற்கும் வசதியாயிருக்கும்.

3. ஆலைத் தொழிலாளிகளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கென்று ஊதியச் சட்டம், தொழிலாளர் - முதலாளியின் சச்சரவுச் சட்டம், தொழிற்சாலைச் சட்டம் போன்ற எத்தனையோ சட்டங்கள் நம் நாட்டில் அமுலில் உள்ளன. கூட்டுறவுச் சங்கங்களும் இச் சட்டங்களைக் கடைப்பிடிக்குமாறு செய்ய வேண்டும்.

ஆனால், தொழிலாளர்களின் நலனுக்காகவும் பாதுகாப்புக்காகவும் ஏற்படுத்தப்பட்டவைதாம் கூட்டுறவுச் சங்கங்கள்; எனவே, தொழிலாளர் சட்டங்களை அவை கடைப்பிடிக்க

வேண்டிய அவசியமில்லையென்று ஒரு சில கூட்டுறவுச் சங்கங்கள் வாதாடி வருகின்றன. இவ் வாதத்தில் அர்த்தமே கிடையாது. தொழிலாளரின் நன்மைக்காகவும் மேன்மைக்காகவும் ஏற்படுத்தப் பட்ட சங்கங்களாக இருக்குமாயின், அவர்களின் பாதுகாப்புக்காக அமுலாக்கப்பட்டுள்ள சட்டங்களை ஏற்றுக்கொள்வதில் எந்தத் தயக்கமோ பயமோ இருக்க வேண்டியதில்லை. மேலும், தொழி லாளி - முதலாளி என்ற பாகுபாடு அதிகம் இல்லாத சிறிய கூட்டுறவுச் சங்கங்கள் இச் சட்டங்களையெல்லாம் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் ஒருசில தொழிலாளரை மட்டும் கொண்ட கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு நல்ல பாதுகாப்புக் கிடைக்கும். நம் நாட்டு அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எத்தனையோ விதமான சலுகைகளைத் தந்துள்ளது. அதைப் பயன்படுத்திக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் தொழி லாளர் சட்டங்களிலிருந்தும் விதிவிலக்கு வேண்டுமென்ற சலுகை யையும் பெற்று வருகின்றன. எனவே, சலுகை வேண்டுமென்பதற் காகத்தான் இவ் விதிவிலக்கை நாடுகின்றனவே தவிர தொழி லாளரின் நன்மைக்காக அன்று. இந்த அடிப்படையில் பார்க்கும் போது, கூட்டுறவுச் சங்கங்களும் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்களை ஏற்றுக்கொள்வது நல்லது. ஒருசில சங்கங்களுக்கு வேண்டுமானால் இச் சட்டங்கள் பொருத்தமற்றதாயிருக்கலாம். அச் சங்கங்கள் மட்டும் கீழ்க்காணும் நிபந்தனைகளின் பேரில் விலக்கப்படலாம்.

1. கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களே பணியாளர்களாகவும் இருக்கும்போது முதலாளி - தொழிலாளி என்ற பாகுபாடே இருக்காது. அப்படிப்பட்ட சங்கங்களில் முரண்பாடு ஏதுமில்லா திருந்தால் இச் சட்டங்களிலிருந்து விலக்கப்படலாம்.

2. உறுப்பினரல்லாத எவருமே சங்கத்தில் பணி செய்யா மலிருந்தாலும் இவ் விதிவிலக்கு அளிக்கப்படலாம்.

3. அரசாங்கம் கொடுக்கும் சலுகைகளையெல்லாம் சங்கங்கள் தவருகப் பயன்படுத்தக்கூடாது. இதனைக் கண்டறியத் தொழி லாளர் நல அதிகாரிகள் அவ்வப்போது கூட்டுறவுச் சங்கங்களைப் பார்வையிட வேண்டும். அவ்வாறு செய்வதற்குச் சங்கங்கள் எவ் வித எதிர்ப்பும் தெரிவிக்கக் கூடாது.

அப்போது கூடத்தொழிலாளர் சட்டங்களிலிருந்து இச் சங்கங் களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுவது அவ்வளவு உகந்ததன்று.

எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுமே இச் சட்டங்களை ஏற்றுக் கொள்வதே சிறந்தது.

கூட்டுறவுச் சங்கமும் தொழிற் சங்கமும்: கூட்டுறவு இயக்கமும் தொழிற்சங்க இயக்கமும் ஒரே குறிக்கோளை யுடையவை; எனினும் அக் குறிக்கோளையடைய இவை இரண்டும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் எவ்வளவோ மாறுதல் உண்டு. முதலாளிகளின் சுரண்டலிலிருந்து சாதாரணத் தொழிலாளிகளைக் காப்பாற்றுவதுதான் இரண்டின் குறிக்கோளும். ஆனால், இக் குறிக்கோளை அடைவதற்குத் தொழிற்சங்கம் செய்யும் முயற்சி வேறானது. தொழிலாளிகளின் ஊதியத்தை உயர்த்தவும் வேலை நிலைமையை மேம்படுத்தவும் விரும்பும் தொழிற்சங்கம் பேச்சுவார்த்தைகளின் வாயிலாகத் தன் கோரிக்கைகளை அடைய முடியாத காரணத்தால், அடிக்கடி வேலை நிறுத்தம் செய்கிறது. தொழிலாளர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தில் அதற்காக வாதாடுகிறது. குறிப்பாக, முதலாளிகளுக்கு முரணான நடவடிக்கைகளிலெல்லாம் ஈடுபடுகிறது.

கூட்டுறவுச் சங்கமோ முதலாளிகளோடு போராடுவதில்லை அவர்களின் பிடியிலிருந்து விலகிக் கொள்கிறது. சமுதாயத்தில் பணக்காரன் - ஏழை, முதலாளி - தொழிலாளி என்ற பாகுபாடே இல்லாத வகையில் தனக்கென்று ஒரு விசித்திரமான உலகை உருவாக்குகிறது. தனது கொள்கைகளையும் விதிமுறைகளையும் பின்பற்ற விரும்பும் அனைவரையும் உறுப்பினர்களாக்கி, அவர்களிடையே எவ்விதப் பாகுபாடும் காட்டாமல் இயங்கி வருகிறது. தார்மீகமும் சமத்துவமுமே இதன் வழிகாட்டிகளாகும்.

(ஈ) கூட்டுறவும் அரசாங்க உதவியும் கூட்டுறவில் 'தன் கையே தனக்குதவி' என்ற தத்துவம்

கூட்டுறவு இயக்கம் பிறந்த சூழ்நிலையை நோக்கும்போது இரண்டு முக்கியமான நிலைமைகள் நம் கண்முன் வருகின்றன. ஒன்று, ஏழை - பணக்காரன் என்ற பாகுபாடு அதிகமாகி, ஏழைகளைச் சுரண்டிப் பணக்காரர்கள் ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டது. இரண்டாவது, அரசாங்கம் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்துச் செல்வந்தர்களின் தன்னிச்சையான போக்கிற்கு ஊக்கம் அளித்தது. இவ்விரு காரணங்களினால் தோன்

றிய சமுதாயப் பொருளாதார விளைவுகளை ஆராய்வதற்கு இது உகந்த இடமன்று. எனினும் இச் சூழ்நிலையில்தான் சுரண்டப் பட்ட தொழிலாளிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற் கென்று கூட்டுறவு இயக்கத்திற்கே வித்திட்டனர்.

தொழிலாளர்களின் இயக்கமாகத் தொடங்கப்பட்ட காரணத் தால் கூட்டுறவு இயக்கம் பல மேடு பள்ளங்களைத் தாண்டி, பல்வேறு இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் மத்தியில் தழைக்க வேண்டியிருந்தது. அரசாங்கத்தின் ஆதரவு மட்டுமின்றி, வேறெந்த உதவியுமில்லாமல் சுயமாகவே வளர்ந்து முன்னேற வேண்டிய சூழ்நிலை இருந்தது. இச் சூழ்நிலையில் உருவாகியதுதான் தன் கையே தனக்குதவி' என்ற தத்துவம். இத் தத்துவம்தான், இன்றும் கூட்டுறவு இயக்கத்திற்கு ஆணிவேர் போல் அமைந் துள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் தம் கையைத்தான் நம்பி இயங்க வேண்டும்; அரசாங்கத்தின் உதவியை நாடக்கூடாது என்று வலி யுறுத்தப்படுகிறது. கூட்டுறவுத் தத்துவங்களில் அதிகமாக வற்புறுத்தப்படுவது இத் தத்துவம்தான். பிறரிடமிருந்து உதவியைப் பெறும்போது அவரையே நம்பி வாழவேண்டிய நிர்ப் பந்தம் ஏற்படலாம். அவர் சொல்கிறபடி நடக்கவேண்டிய சூழ் நிலையும் இருக்கும். அப்போது, சொந்த முயற்சி என்பதே செத்து விடும். குறிப்பாக, கூட்டுறவுச் சங்கங்கள் மற்றவர்களையோ அரசாங்கத்தையோ நம்பி வாழவேண்டியிருந்தால், அப்போது 'தன் கையே தனக்குதவி' என்ற தத்துவம் போலியானதாகிவிடும். கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படைக் குறிக்கோளே நாசமாகி விடும். மேலும், அரசாங்கத்தின் உதவியை நம்பி இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எதிர்பாராத ஆபத்தும் நேரிடக்கூடும். அரசாங்கம் தன் உதவியைத் திடீரென நிறுத்திக் கொள்ளலாம். அவசியமான வேளையில் அரசாங்க உதவி நிறுத்தப்பட்டுவிட்டால் கூட்டுறவுச் சங்கங்கள் திக்கற்ற நிலையை அடைந்துவிடும். எனவே, அரசாங்க உதவியை நாடாமல் தன் கையையே நம்பி இருக்க வேண்டும் என்பது கூட்டுறவு இயக்கத்தின் மந்திரமாக அமைந்து விட்டது. அரசாங்கத்தை நாடாமல் இருப்பதுதான் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும்.

அரசாங்க உதவி அவசியம்தானா ?

ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் 'தன் கையே தனக்குதவி' என்ற தத்துவத்தை எல்லாக் கூட்டுறவாளர்களுமே ஏற்றுக்

கொண்டுள்ளனர். பிறரை நம்பி வாழ்ந்ததால்தான் சுரண்டலுக்கும் வறுமைக்கும் ஆளாக நேரிட்டது என்பதை ஐரோப்பிய மக்கள் நன்குணர்ந்துள்ளனர். அதனால்தான் பல இன்னல்களுக்கும் எதிர்ப்புகளுக்குமிடையே கூட்டுறவு இயக்கத்தை நன்கு வளர்த்துள்ளனர்.

இந்தியாவிலுள்ள நிலைமையோ வேறு. மக்கள் தாம் சுரண்டப்படுவதை உணராதவர்களாயிருந்து வந்திருக்கின்றனர். தம்மைச் சுரண்டி வாழ்பவர்கள் யார் என்பது கூடத் தெரியாமல் இருந்திருக்கின்றனர். எனவே, சுரண்டலிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதெப்படி என்று அறிந்து கொள்ளும் வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. அதனால்தான் அரசாங்கமே முயற்சி செய்து கூட்டுறவு இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது இன்னும்கூட கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்தின் ஆதரவுடன் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. கிராமக் கடன் ஆய்வுக் குழுவினர் கூடத் தம் அறிக்கையில் அரசாங்க உதவியை ஆதரித்துள்ளனர். மற்றவர்களால் சுரண்டப்பட்டு நசுக்கப்படும் மக்களால், தம்மைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியவில்லை. எனவே, அவர்களைப் பாதுகாப்பதற்காக எழும் சக்திகள் வலுவானவையாய் இருக்க வேண்டும். வலுவான சக்தியைப் பெறுவதற்குக் கூட்டுறவுச் சங்கங்களால் மட்டும் முடியாது; அரசாங்கத்தின் சக்தியும் அவசியம் என்று கூறியுள்ளது.

இந்தியாவிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றை வசதி படைத்தவர்கள் தான் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர். எனவே, ஏழை எளிய மக்களுக்குக் கடன் கொடுக்க முன்வருவதில்லை; அவர்களையெல்லாம் நாணயமற்றவர்களென ஒதுக்கி விடுகின்றனர். ஆனால், உண்மையில் அந்த ஏழை எளியோர்களுக்குத்தான் அதிகக் கடனுதவி தேவைப்படுகிறது. இந் நிலையில் ஏழை எளிய மக்களுக்கும் உதவி செய்ய வேண்டுமாயின், அவர்களுக்கு வழிகாட்ட வேண்டியது அரசாங்கம்தான். பழமைப் பித்துடைய கூட்டுறவு நிர்வாகிகளின் போக்கைக் கண்டிக்கும் வலிமை அரசாங்கத்துக்குத்தான் உண்டு. எனவே, அரசாங்கத்தின் ஆதரவும் கண்காணிப்பும் இல்லாமல் இருந்தால் ஏழை எளிய மக்களுக்கு எவ்விதப் பயனும் இருக்காது; அவர்களெல்லாம் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாகவும் இருக்க முடியாது.

அரசாங்கக் கொள்கை அடிப்படையில் ஆராய்ந்து பார்த்தாலும் அரசாங்க உதவி அவசியம் என்பது புலனாகும். சாதாரண மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகத்தான்

கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றியுள்ளன. அரசாங்கத்தின் கொள்கைகளும் கூட நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்குத்தான் வகுக்கப்படுகின்றன. எனவே, கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகவும் அரசாங்கம் தன் கொள்கையை அமுலாக்க முடியும். எனவேதான் குடியரசு அமைப்பில் தீட்டப்படும் திட்டங்களை நிறைவேற்றுவதற்குச் சிறந்த கருவிகளாகக் கூட்டுறவுச் சங்கங்கள் கருதப்படுகின்றன. குறிப்பாக, கிராமப் புறங்களில் அரசாங்கத்தின் கொள்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் அதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள்தாம் சிறந்த சாதனங்களாகும். அவ்வாறு அரசாங்கத்தின் கருவிகளாக இருந்து கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுவதற்கு அரசாங்கத்தின் ஆதரவும் உதவியும் அவசியமாகின்றன. மேலும், அரசாங்கம் மக்களுக்கு உதவி செய்யும்போது, கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகச் செய்தால் அது பயனுள்ளதாக இருக்கும். அப்போதுதான் அரசாங்கத்தின் உதவி குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும்; அதனால் கிடைக்கும் நற்பயன் நீடித்திருக்கும்.

நடைமுறையில் பார்க்கும்போது அரசாங்க உதவிபெற்ற கூட்டுறவுச் சங்கங்கள்தான் நல்ல முறையில் இயங்கி வருகின்றன என்பது புலனாகும். மற்றவற்றை விட இச் சங்கங்கள்தான் மக்களுக்கு நல்ல முறையில் சேவை செய்து வருகின்றன. கிராமக் கடன் ஆய்வுக் குழுவின் அறிக்கையிலும் இவ் வுண்மை வலியுறுத்தப்பட்டுள்ளது. அக் குழுவின் ஆய்வின்படி, தமிழ்நாட்டிலுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகள் திறமைமிக்கதாயிருப்பினும், உற்பத்தியாளர்களுக்கு அவை வழங்கியிருக்கும் கடன் குறைவுதான். ஆனால், அரசாங்க ஆதரவுடன் பம்பாயில் இயங்கி வந்த கூட்டுறவு வங்கிகளோ பெருமளவில் கடனுதவி செய்திருக்கின்றன. எனவே, அரசாங்க ஆதரவின்றிக் கூட்டுறவுச் சங்கங்கள் வலிமையுடன் இயங்க முடியாது என்பதை இக் குழுவின் அறிக்கையிலிருந்து அறிய வருகிறோம்.

நடுநிலைக் கருத்து : மேற்கூறிய விளக்கத்திலிருந்து முரண்பாடான இரண்டு கருத்துகள் தெளிவாகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்தின் ஆதரவின்றி இயங்க வேண்டுமென்பது ஒன்று; மாறாக, அரசாங்கத்தின் உதவியோ வேறெந்த உதவியோ இல்லாமல் கூட்டுறவுச் சங்கங்கள் தம் சொந்த வலிமையினால்தான் இயங்க வேண்டுமென்பது பிறிதொன்று. இவ்விரு கருத்துகளிலுமே ஓரளவு உண்மை

இருக்கிறது. வெளியார் உதவியின்றித் தம் பலத்தை மட்டும் நம்பித்தான் கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்ற வேண்டுமென்பதை எவரும் மறுக்க முடியாது. அதுதான் சிறந்த கொள்கையுமாகும். ஆனால், அதே சமயத்தில் இந்தியா போன்ற நாடுகளிலெல்லாம் அரசாங்கத்தின் உதவி இன்றியமையாததாகிறது. அவ்வுதவியின்றி, கூட்டுறவுச் சங்கங்கள் நிலைத்திருக்க முடியாது.

பின்தங்கியுள்ள நாடுகளில் மட்டுமின்றி, வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளில்கூட அரசாங்கத்தின் உதவி இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. சான்றாக, கூட்டுறவு இயக்கத்தில் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ள கனடா நாட்டில் சமீப காலம் வரை அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எவ்விதச் சலுகையும் காட்டவில்லை. ஆனால், அண்மையில் அரசாங்கத்தின் ஆதரவு கிடைத்த பின்னர்த்தான் அவை வியக்கத்தக்க வகையில் துரிதமாக முன்னேறியுள்ளன. இதை வலியுறுத்தும் வகையில் டாக்டர் ஏ. கே. ஈடன் (Dr. A. K. Eaton) என்பவர் கூறுகிறார்: 'கூட்டுறவு இயக்கத்தின் பொருளாதார நிலையை உயர்த்துவது தமது கடமைதான் என்பதை அரசாங்கங்கள் உணர்ந்துள்ளன. கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்புவரை இவ்வித உணர்வு எந்த அரசாங்கத்திற்கும் இருக்கவில்லை. இப்போது அரசாங்கம் கூட்டுறவு இயக்கத்திற்கு உதவ முன் வந்திருப்பது புரட்சிகரமானதொரு செயலாகும்.' இக் கூற்றை நாம் நோக்கும்போது, அரசாங்கத்தின் உதவியின்றிக் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது முன்னேற முடியாதென்று எண்ணத் தோன்றுகிறது. இவரது கூற்றினை விமரிசித்துக் கூறிய கனடாப் பத்திரிகை யொன்றும் இக்கருத்தையே ஆதரித்துள்ளது. கனடாவில் சமீபகாலம் வரை கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றி அரசாங்கம் கவலைப்பட்டதே கிடையாது. ஏதோ அவை சட்டப்படி தோன்றி, இயங்கி வருகின்றன என்றுதான் அரசாங்கம் நினைத்து வந்தது. ஆனால், இன்றோ மாநில அரசாங்கங்கள் அனைத்தும் கூட்டுறவு இயக்க வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்கு எத்தனையோ வகையில் உதவி செய்யத் தொடங்கியுள்ளன; இதனால் இந் நாட்டிலுள்ள சங்கங்கள் விரைவாக முன்னேறுவது உறுதி என்று அப் பத்திரிகை விமரிசித்துள்ளது. இவ்வாறாக, வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளில் கூடக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்ற கருத்துப் பிரபலயமாகி வருகிறது.

எனினும், கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்க உதவியை எப்போதுமே நம்பி இருக்கக்கூடாது. கட்டடம் கட்டுவதற்குத்

தேவைப்படும் சாரத்தைப் போல்தான் அரசாங்க உதவியை நாட வேண்டும். கட்டடம் கட்டி முடிந்தவுடன் சாரம் பிரிக்கப்பட்டு விடுகிறது. அதேபோல் ஓரளவு வளர்ச்சி பெற்று, கூட்டுறவுச் சங்கங்கள் சுயமாக இயங்க ஆரம்பித்தவுடன் அரசாங்க உதவியை நிறுத்திக் கொள்ள வேண்டும். அதாவது, கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குத் தாமே உதவி செய்து கொள்வதற்கு ஏற்றவகையில்தான் அரசாங்க உதவி இருக்க வேண்டும். இக் கருத்தை டாக்டர் ஏ. கே. ஈடன் அவர்கள் பின்வருமாறு அழகுற எடுத்துக்கூறுகிறார்: 'கூட்டுறவுச் சங்கம் என்பது ஒரு சிறிய செடி போன்றது. அச் செடி நன்றாக வளர்ந்து பெரிய மரமாகி, பலன்தர வேண்டுமாயின், அதன் வித்து நல்லதாயிருக்க வேண்டும்; அது முளைக்க வேண்டிய இடமும் வளம் நிறைந்ததாயிருக்க வேண்டும்; முளைவிட்டபின் அதை நன்கு பாதுகாக்க வேண்டும். நன்றாக வளர்ந்தபின் அதைக் கண்காணிக்க வேண்டிய அவசியமில்லை. அதேபோல். ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் சிறிது காலத்திற்குப் பின், தன் சொந்தப் பலத்தையே நம்பி இயங்க வேண்டும்' இவ்வாறாக, கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்ப காலத்தில்தான் அரசாங்க உதவியை நாடவேண்டும். சிறிது காலம் கழித்து, சுயமாகவே இயங்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும், அரசாங்க உதவி அளவுக்கு மிஞ்சியும் இருக்கக் கூடாது. கூட்டுறவுச் சங்கங்கள் சுயமாகவே இயங்கக் கூடிய அளவுக்கு மட்டுமே அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். ஒருசில சங்கங்களுக்கு அரசாங்க உதவி தேவைப்படாமலும் இருக்கலாம். அவ்வகைச் சங்கங்களுக்கு அரசாங்கம் இன்றியமையாத சந்தர்ப்பங்களில் மட்டுமே உதவி செய்ய வேண்டும். திரு. ஸ்ரீமன் நாராயன் அவர்கள் பூனாவில் பேசியபோது இதைத்தான் வலியுறுத்தினார்கள். அவர் கூறுவது வெறும் போதனையாக மட்டும் இல்லாமல் அரசாங்க உதவி எப்போது தேவைப்படும் என்பதைச் சித்திரிக்கும் உண்மையாகவும் அமைகிறது. 'கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கும் மக்கள் அரசாங்கத்திடமிருந்தும் ரிசர்வ் பாங்கிடமிருந்தும் உதவி கேட்டுக் கொண்டே இருக்கின்றனர். அரசாங்கத்திடமோ ரிசர்வ் பாங்கிடமோ போதிய நிதி வசதி இருக்கிறதா என்பதைப் பற்றி அவர்கள் சிந்திப்பதே கிடையாது. அரசாங்கத்தையே நம்பி இயங்கும் இயக்கமாகக் கூட்டுறவு இருக்கக் கூடாது. மக்களிடையே சுயநம்பிக்கையை உருவாக்குவதுதான் கூட்டுறவு இயக்கம்; அதற்குப் பக்கபலமாகத்தான் அரசாங்கம் இருக்கிறது.' இக் கூற்றில் பொதிந்துள்ள உண்மைகளை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளல் நன்று. அப்போதுதான் நம் நாட்டிலுள்ள கூட்டுறவுச்

சங்கங்கள் எவ்வளவு தூரம் அரசாங்கத்தையே நம்பி நடைபெறு கின்றன என்பதை நாம் அறிய முடியும்.

இந்தியாவில் அரசாங்க உதவிகள்

அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி செய்வது என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள அம்சமாகி விட்டது. எனவே, இந்திய அரசாங்கம் கீழ்க்காணும் வகையில் கூட்டுறவு நிறுவனங்களுக்கு உதவி புரிந்து வருகிறது.

1. **சட்ட ரீதியான உதவி :** இந்தியக் கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் கீழ் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும்பதிவு செய்யப் பட்டு ஒப்புக்கொள்ளப்படுகின்றன. 1919-ல் அமுலாக்கப்பட்ட இந்தியச் சீர்திருத்தச் சட்டப்படி கூட்டுறவுத் துறை மாநில அரசின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு விட்டது. எனவே, கூட்டுறவு இயக்கம் வளர்ச்சிபெறும் வகையில் ஒவ்வொரு மாநில அரசாங்கமும் அதற்காக சட்டங்களை நிறைவேற்றியுள்ளன. நில அடைமான வங்கிகளுக்கென்று தனிச் சட்டத்தையும் அமுலாக்கி யுள்ளன. கூட்டுறவுச் சங்கங்கள் ஊக்கம் பெற்று வளரும் வகையில் பல்வேறு சலுகைகளை இச் சட்டங்கள் வழங்கியுள்ளன.

2. **நிர்வாக உதவி :** ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும் அவருக்குத் துணையாகப் பல்வேறு அலுவலர்களும் உள்ளனர். கூட்டுறவுச் சங்கங்களின் உற்ற நண்பராக மட்டுமின்றி, வழிகாட்டியாகவும் பதிவாளர் பணி யாற்றி வருகிறார். கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்குவதற்குப் பதிவாளரே முயற்சி எடுக்கிறார்; மேலும் சங்கங்களின் நட வடிக்கைகள் செம்மையானதாயிருக்கும் வகையில் அவைகளுக்கு வழிகாட்டுகிறார். அவ்வப்போது சங்கங்களைப் பார்வையிடுவதற்கும் அவற்றின் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்வதற்கும் ஏற்பாடு செய்கிறார். சங்கங்களிடையே ஏற்படும் சச்சரவுகளைத் தீர்ப்ப தற்கும் ஆவன செய்கிறார் இவ்வாறாக, கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தில் அரசாங்கமே பெரும் பங்கு கொள்கிறது

3. **நிதி உதவி :** (அ) பெரும்பாலும் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும் அவற்றின் தொழில் சம்மந்தப்பட்ட பத்திரங்கள், சங்கங் களுக்கும் உறுப்பினர்களுக்குமிடையே செய்யப்படும் ஒப்பந்தப் பத்திரங்கள் ஆகியவை பதிவு செய்யப்படும்போது அவற்றிற்குப் பதிவுக் கட்டணமோ முத்திரைக் கட்டணமோ கிடையாது.

(ஆ) புதிதாய்த் தொடங்கப்படும் கடன் சங்கங்களுக்கு மட்டுமின்றி, இதரச் சங்கங்களுக்கும் வேண்டிய நிர்வாக உதவியையும் அரசாங்கமே செய்து தருகிறது. நாளடைவில் இவ்வுதவி குறைக்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களே நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வழி செய்கிறது.

(இ) கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், அவற்றின் இணைப்புச் சங்கங்கள், இன்னும் பிற சங்கங்கள் தமக்குத் தேவைப்படும் பண்டங்களைக் கட்டுவதற்கு கடனும் மானியமும் அரசாங்கத்தால் அளிக்கப்படுகின்றன.

(ஈ) நில அடைமான வங்கிகளுக்கு அரசாங்கம் செய்யும் உதவி சிறப்பானதாகும். அவ் வங்கிகளின் கடன் பத்திரங்களுக்கு அரசாங்கம் உத்திரவாதம் அளிக்கிறது. இதனால் முதல் மட்டுமின்றி, வட்டியும்கூட உத்திரவாதம் பெறுகின்றது. கூட்டுறவு அடைமான மைய வங்கிகள் கடன் கொடுப்பதற்குத் தேவையான பணத்தையும் அவ்வப்போது அளிக்கிறது. அவற்றின் பத்திரங்களுக்கும் பதிவுக் கட்டணம் கிடையாது. பின் தங்கிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள அடைமான வங்கிகள் நட்டமின்றி இயங்குவதற்கென்று அரசாங்கம் தனிச் சிறப்பு வாய்ந்த உதவிகளையும் செய்து வருகிறது.

(உ) கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவுவதற்சென்று மத்திய அரசு, மாநில அரசுகள் மட்டுமின்றி, ரிசர்வ் பாங்கும் பல்வேறு நிதிகளை உருவாக்கியுள்ளன.

(ஊ) கூட்டுறவு இயக்கத்தில் உயர்ந்த பணிகளையும் நடுத்தரப் பணிகளையும் செய்யும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான செலவை மத்திய அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதேபோல் மாநில அரசுகளும் கீழ்மட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குப் பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்தி, நடத்தி வருகின்றன.

(எ) விவசாயத்திற்குத் தேவையான கடனுதவிகளைக் கூட்டுறவுச் சங்கங்களே செய்ய வேண்டுமென அரசாங்கம் விரும்புகிறது. எனவே, குடியானவர்களுக்கு இதுவரை கொடுக்கப்பட்டு வந்த அரசாங்கக் கடன்களையெல்லாம் குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4. **அரசாங்கப் பங்கு:** கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய நிதி உதவியையும் ஏனைய உதவிகளையும் மட்டும் அரசாங்கம் செய்வதில்லை. அரசாங்கமே கூட்டுறவு நிறுவனங்களில் பங்குதாரராகவும் இருந்து உதவி செய்கிறது. கூட்டுறவுச் சங்கங்களில் நலிவுற்றுள்ள சங்கங்கள் எத்தனையோ எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டியுள்ளன. எனவே, அரசாங்கமே அச் சங்கங்களில் பங்கு கொண்டு அச் சங்கங்களை வலுப்படுத்தி வருகிறது. இவ்வாறு கூட்டுறவுச் சங்கங்களில் அரசாங்கமே பங்குகொள்ளும்போது உறுப்பினர்களுக்கு மட்டுமின்றி, மற்றவர்களுக்கும் அச் சங்கங்களின்மீது நம்பிக்கை ஏற்படுகிறது. மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான நிதி வசதியை அளிப்பதற்கும் இது ஏதுவாயிருக்கிறது.

5. **ஏனைய உதவிகள்:** கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கான திட்டத்தையும் அரசாங்கமே போடுகிறது. அத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கான வழிமுறைகளையும் அரசாங்கமே மேற்கொள்கிறது. இவ்வாறு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் பக்கபலமாக இருப்பதால், அவை தீவிரமான பல்வேறு பணிகளைச் செய்யத் துணிந்துவிடுகின்றன. தற்போது, குடியரசு நாடுகளின் திட்டங்களை நிறைவேற்றும் கருவியாகத்தான் கூட்டுறவு கருதப்படுகிறது. அரசாங்கம் மக்களோடு சேர்ந்து வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமாயின், அதற்குக் கூட்டுறவு இயக்கம் ஒத்துழைப்பது அவசியம்.

அரசாங்கத் தலையீடு

கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் உதவி செய்யும்போது, அவற்றின் அன்றாட அலுவல்களில் அது தலையிடுவதாக யாரும் எண்ணக்கூடாது. அரசாங்கம் மேற்கூறிய விதத்தில் உதவி செய்வதால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது. ஆனால், அவற்றின் நிர்வாகத்தில் அரசாங்கம் தலையிட்டால்தான் அது ஆபத்தானதாகிவிடும்.

(உ) தனியார் விற்பனையோடும் அரசு விற்பனையோடும் கூட்டுறவு விற்பனையின் மோதல்

சமீப காலமாகப் பல்வேறு நாடுகளில் அரசே வாணிகத் துறையில் ஈடுபட்டு வருவதைக் காண்கிறோம். குறிப்பாக, பிற நாட்டு வாணிகத்தில் அரசின் கைதான் ஓங்கி நிற்கிறது. தனிப்பட்ட வணிகர்கள் தம் இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு

செயல்படுவதால் பொதுமக்களுக்கும் நாட்டிற்கும் தீங்கு ஏற்படு வதை எவரும் மறுக்க முடியாது. கலப்படம் போன்ற பல்வேறு அநியாயச் செய்கைகளின் மூலம் அவர்கள் கொள்ளை இலாபம் காண விழைகின்றனர். எனவே, குறைந்த அளவில் உற்பத்தி யாகும் பொருள்களை நியாயமான விலையில் அனைவருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டுமானால் அரசே அப் பணியை மேற் கொள்வதுதான் சிறந்ததெனத் தோன்றுகிறது. அவ்வாறு அரசே வாணிகத்தில் ஈடுபடும்போது மக்களுக்குச் சேவை செய்வதைத் தான் குறிக்கோளாகக் கொள்கிறதேயன்றி, இலாபத்தை அன்று. மேலும் அரசாங்கமே நேரடியாகவும் பெருவாரியாகவும் கொள் முதல் செய்யும்போது கொள்முதல் செய்யும் செலவு குறைகிறது; தரகர்களுக்குச் செல்லும் கமிஷன் பணமும் மிச்சப்படுகிறது. பெரும்பாலும் அரசு செய்யும் வாணிகம் அனைத்தும் அதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள 'வாணிகக் கழகத்தின்' (Trading Corporation) வாயிலாகத்தான் நடைபெறுகிறது. எனவே, அக்கழகத்தின் வியாபார நடவடிக்கைகளையும் கூட்டுறவு வியாபார நடவடிக்கை களையும் அரசு ஒழுங்குபடுத்தி, ஒன்றுபடுத்தலாம். உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களும் அரசின் வாணிகக் கழகத்திற்கு ஒத்துழைப்புத்தர வாய்ப்பு உண்டு என்பதை ஒருசிலர் வலியுறுத்துகின்றனர்.

எனினும், உள் நாட்டு வியாபாரத்தையும் பிறநாட்டு வாணி கத்தையும் அரசு மேற்கொள்ளும்போது சில சிக்கல்கள் தோன்று கின்றன. அச்சிக்கல்கள் அரசு செய்யும் வாணிகத்திற்கும் கூட்டுறவு வாணிகத்திற்குமிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன.

கூட்டுறவு வாணிகமும் அரசு வாணிகமும் :

1. கூட்டுறவுத் துறையில் பொருள்களைக் கொள்முதல் செய்து விற்கின்ற பணியை நுகர்வோர் சங்கங்கள்தாம் பொதுவாக மேற்கொள்கின்றன. அப் பணியைச் செய்யும்போது வாடிக்கை யாளர்களின் விருப்பு வெறுப்புக் கேற்றபடி பொருள்களைக் கொள் முதல் செய்து விற்கின்றன. வாடிக்கையாளரின் திருப்திதான் முக்கியக் குறிக்கோளாக அமைகிறது. ஆனால், அரசு வாணிகம் செய்யும்போதோ வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கமில்லாமல் எதேச்சையாகச் செயல்படுகிறது. இப்படித் தான் கொள்முதல் செய்யவேண்டும், இப்படித்தான் விற்கவேண்டு மென்ற நியதியை அரசு கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. இதனால் வாடிக்கையாளரின் விருப்பங்கள் புறக்கணிக்கப்பட ஏதுவாகிறது.

2. கூட்டுறவு முறையில் நடைபெறும் வியாபாரத்தை நுகர்வோரே கட்டுப்படுத்துகின்றனர், நிருவகிக்கின்றனர், பணி

யாள்கள் ஏதாவது தவறு செய்தால் அதைக் கண்டுபிடிக்கவும் தண்டிக்கவும் முடிகிறது. ஆனால், அரசு புரியும் வியாபாரத்தில் பணியாள்கள் தவறு செய்தால் அதை உடனடியாகக் கண்டு பிடிக்கவோ தண்டிக்கவோ முடிவதில்லை. காரணம், அரசு அதிகாரி களுக்கு ஏனைய முக்கியமான வேலைகள் பல இருக்கலாம்.

3. கூட்டுறவு வியாபாரத்தில் உறுப்பினர்கள் பெறும் நன்மைகள் திட்டவட்டமானது, நேரடியானது, எளிதில் உணரக்கூடியதும்கூட. ஆனால் அரசு செய்யும் வியாபாரத்தினால் பயனடைவோர் எண் ணிக்கையற்றோர். சமுதாயம் முழுவதுமே பயனடையலாம். எனவே, அப்பயனை உடனடியாகவோ நேரடியாகவோ உணர முடிவதில்லை.

4. கூட்டுறவு அடிப்படையில் வியாபாரம் நடக்கும்போது மூலதனத்தைப் பெருக்கி வியாபாரத்தை விருத்திசெய்ய வாய்ப்பு உண்டு. உறுப்பினர்களிடமட்டுமின்றி, கூட்டுறவுக்கு உதவி செய்யும் வங்கிகளிடமிருந்தும் போதுமான நிதி வசதியைப் பெற்றுத் தொழிலை அபிவிருத்தி செய்ய முடியும். மாறாக, அரசு நடத்தும் வியாபாரத்தை அபிவிருத்தி செய்வது கடினம். அதற்கு வேண்டிய மூலதனத்தை அரசே கொடுக்க வேண்டியுள்ளது. ஆனால், நிதிப் பற்றாக்குறையால் அரசு தவிக்கும் இக் காலத்தில் வியாபா ரத்தை அபிவிருத்தி செய்வது கடினம்.

5. கூட்டுறவு வியாபாரத்தில் நுகர்வோருக்குத் தேவைப் படும் எல்லாப் பொருள்களையுமே கொள்முதல் செய்து விற்க முடியும் சில சமயம் கூட்டுறவு ஆலைகளிலேயே பொருள்களை உற்பத்தி செய்து மலிவாக விற்பனை செய்யலாம். ஆனால், அரசு அவ்வாறு செய்ய இயலாது. நாட்டிற்கே நன்மை பயக்கும் சமயங் களில்தான் அரசு தன் வியாபாரத்தை விஸ்தரிக்கக் கூடும்.

6. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பல மட்டங்களில் அமைக் கப்படுவதால் சிக்கனமாகச் செயல்பட முடிகிறது. மேலும், குறைந்த வட்டிக்குக் கடன்பெற்று, இலாபத்தில் ஒரு பகுதியை மட்டும் இலாப ஈவாகக் கொடுத்து, விளம்பரச் செலவு, விற்பனைச் செலவு ஆகியவற்றையும் குறைத்துக் கூட்டுறவு விற்பனைப் பண்டகசாலைகள் செயல்படும்போது பொருள்கள் மலிவாகிவிடு கின்றன. நுகர்வோரும் நன்மையடைகின்றனர். ஆனால், அரசு வர்த்தகத்திலோ இவ்வித நன்மைகளை நுகர்வோர் எதிர்பார்க்க முடிவதில்லை.

7. இறுதியாக உற்பத்தியாளரின் இலாப நோக்கையும் மலிவாகப் பொருள்களை வாங்க விரும்பும் நுகர்வோரின்

வேட்கையையும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஓரளவிற்கா கிலும் நிறைவேற்ற முடியும். அரசு வர்த்தகத்திலோ இது சாத்திய மன்று; அப்படியே சாத்தியமானாலும் அரசின் கட்டாயத்தினால் தான் சாத்தியமாக முடியும்.

கூட்டுறவு விற்பனையும் தனியார் வியாபாரமும்

கூட்டுறவு வர்த்தகத்திற்கும் அரசு வர்த்தகத்திற்குமே பிணக்கம் இருக்கும்போது தனியார் வியாபாரத்திற்கும் கூட்டுறவு வியாபாரத்திற்கும் முரண்பாடு இருப்பதில் ஆச்சரியம் ஒன்று மில்லை. இம் முரண்பாடு எவ்வாறு தோன்றுகிறது என்பதைச் சிறிது பார்ப்போம்.

1. நுகர்வோரின் நன்மைக்காகத்தான் கூட்டுறவு வியாபாரம் நடைபெறுகிறது. எனவே, கலப்படம் போன்ற அநியாயச் செயல் களைச் செய்து நுகர்வோரை ஏமாற்றுவதில்லை. மாறாக, தனிப்பட்ட வியாபாரிகளோ தங்களின் சுயநலத்தையே நோக்கமாகக் கொண்டு வியாபாரம் செய்கின்றனர். தில்லுமுல்லுகளும் மலிந்து விடுகின்றன.

2. நுகர்வோருக்குச் சேவை செய்வதுதான் கூட்டுறவு வியாபாரத்தின் அடிப்படை நோக்கம். இலாபம்கூட, பங்குதாரர் களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஆனால், இலாபத்தையே குறிக் கோளாகக் கொண்டுள்ள தனி வியாபாரிகள் பொருள்களைப் பதுக்கி வைத்து, பற்றாக்குறை நிலையை வேண்டுமென்றே உருவாக்கி அதிக விலைக்கு விற்பது சகஜமாகிவிட்டது.

3. கூட்டுறவு வியாபாரத்தைப் பெருக்குவதும் அபிவிருத்தி செய்வதும் எளிது என்பதை சற்றுமுன்னர்த்தான் கண்டோம். ஆனால், தனிப்பட்ட வியாபாரிகள் தம் வியாபாரத்தைப் பெருக்க வேண்டுமானால் அதற்கு வேண்டிய மூலதனம் முட்டுக்கட்டையாகி விடுகிறது.

4. கூட்டுறவு வியாபாரத்தில் போட்டி என்ற சொல்லிற்கே இடமில்லை. ஆனால், தனியார் வியாபாரத்திலோ வியாபாரிகள் ஈடும் போட்டியிடுவதும், அல்லது போட்டியைத் தவிர்ப்பதற்காகச் சர்வாதீன ஒப்பந்தத்தை மேற்கொள்வதும் கண்கூடு.

5. பொருள்களுக்கேற்படும் தேவை நிலைக்கேற்ப, அவற்றை உற்பத்தி செய்வது அல்லது கொள்முதல் செய்வது என்பது கூட்டுறவு வியாபாரத்தில் எளிது. ஏனெனில், நுகர்வோரைத் திருப்திபடுத்துவதுதான் அதன் குறிக்கோள். ஆனால், தம் இலாபத்தைப் பெருக்க வேண்டுமென்ற வேட்கையைக் கொண்ட தனியார் வியாபாரத்தில் இது சாத்தியமன்று.

6. இறுதியாக கூட்டுறவு வியாபாரத்தில் தரகர்களுக்கே இடம் கிடையாது. ஆனால், தனியார் வியாபாரத்திலோ தரகர்கள் மலிந்து காணப்படுகின்றனர். இதனால் தரகுப் பணமும் பண்டங் களின் விலையில் சேர்க்கப்பட்டுவிடுகிறது.

இரண்டாம் பிரிவு

பிற நாடுகளில் கூட்டுறவு இயக்கம்

3. இங்கிலாந்தில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம்

(Consumers' Movement in England)

இங்கிலாந்து நாட்டின் கூட்டுறவு வரலாற்றை நோக்கினால், அது நுகர்வோர் கூட்டுறவுச் சங்க வரலாறுதான் என்பது புலனாகும். இங்கிலாந்து நாடு தொழில் புரட்சிக்கு மட்டுமின்றி கூட்டுறவு இயக்கத்திற்கும் சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றது. காரணம், தொழில் புரட்சிதான் கூட்டுறவு இயக்கத்திற்கும் வித்திட்டது. தொழில் புரட்சிக்கு முன் இங்கிலாந்து நாடு ஏனைய நாடுகளைப்போல் பின்தங்கிய நிலையில்தான் இருந்தது. புரட்சிக்கு முன்னர்ப் பயிர்த் தொழிலும் ஏனைய தொழில்களும் பழைய பாணியில்தான் இயங்கி வந்தன.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய தொழில் புரட்சி இங்கிலாந்து நாட்டின் சமூக, பொருளாதார அமைப்பையே மாற்றிவிட்டது. சாதாரண விவசாய நாடாக இருந்த இங்கிலாந்து உலகத் தொழிற்கூடமாக மாறிவிட்டது. மனித உழைப்பையே நம்பியிருந்த நிலக்கிழார்களும் ஆலை அதிபர்களும் இயந்திரங்களையும் தளவாடங்களையும் பெருமளவில் பயன்படுத்தத் தொடங்கினர். தொழில்கள் வளர வளர நகரங்கள் விரிவடைந்தன ; ஆலைகள் பெரிதாகின ; கிராமப் புறங்களில் வாழ்ந்து வந்த பெருவாரியான மக்கள் ஆலைகள் குவிந்த நகர்ப் புறங்களை நாடிச் சென்றனர். ஆலை அதிபர்களை நம்பி வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்குற்பட்ட தொழிலாளிகளை ஆட்டிப் படைக்க முற்பட்டனர் முதலாளிகள். உழைப்பிற்கேற்ற ஊதியம் தராததோடு நீண்ட நேரம் வேலைவாங்கினர். குறைந்த கூலிக் கென்று பெண்டிரும் சிறுவர்களும் வேலைக்கமர்த்தப்பட்டனர். அரசாங்கமோ 'தலையிடாக் கொள்கை' (Laissez Faire Policy) என்னும் போர்வையில் தன்னை மறைத்துக்கொண்ட அதேசமயம் நிலக்கிழார்களின் நிலையை உயர்த்துவதற்கென்று விநோதமான 'தானியச் சட்டங்களை' (Corn Laws) அமுலாக்கியது. இதனால்

விலைவாசிகள் உயர்ந்ததோடு தரமற்ற பொருள்கள் தவறான வழிகளில் தாறுமாறான விலைக்கு விற்பனையாயின. குறைந்த கூலி பெற்ற தொழிலாளர் அனைவரும் அவதிப்பட்ட அதே நேரத்தில் கொள்ளை இலாபம் பெற்ற முதலாளிகள் ஆடம்பர வாழ்க்கை நடத்தி உல்லாசமாயிருந்தனர். இதனால் சமுதாயத்தில் முதலாளி-தொழிலாளி என்ற இன உணர்வு தோன்றி, அது பகைமை உணர்வாய் மாறியது.

இராபர்ட் ஓவன்

தொழில் புரட்சியினால் தோன்றிய கேடுகளை எண்ணிப் பார்க்க முயன்றனர் பல மேதைகள். அவர்களில் இராபர்ட் ஓவன் என்பவரும் ஒருவர். ஆடம் ஸ்மித், மால்தஸ், டேவிட் ரிக்கார்டோ போன்ற மேதைகள் அனைவரும் பொருளாதார உலகில் போட்டி நிலவினால் சமூகச் சீர்கேடுகள் சிதறிப் போகுமென்ற வேதாந்தத்தை வலியுறுத்த, இராபர்ட் ஓவனோ போட்டியைத் தவிர்ப்பதுதான் சிறந்த வழியெனக் கண்டார். சமத்துவ அடிப் படையில் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குவதுதான் நல்வழி யென எண்ணினார். 'நாம் மற்றவர்களுக்காகவும், மற்றவர்கள் நமக்காகவும் வாழ்வது' என்ற தத்துவத்தை உருவாக்கினார். இத் தத்துவம்தான் கூட்டுறவு இயக்கத்தின் நாடித் துடிப்பாக இன்றும் இருந்துவருகிறது. எனவேதான் இராபர்ட் ஓவனைக் கூட்டுறவு இயக்கத்தின் தந்தையென்றும் கருதுகின்றனர். இக் கருத்து சர்ச்சைக்குரியதெனினும் இராபர்ட் ஓவன் அவர்கள் கூட்டுறவு இயக்கத்திற்காற்றிய பணி போற்றற்குரியது.

இராபர்ட் ஓவன் 1771ஆம் ஆண்டு மே திங்கள் பதினான்கில் நியூட்டன் (Newton) என்னும் ஊரில் பிறந்தார். தொழிற்சாலை களிலும் கடைகளிலும் பணியாற்றி வந்த அவர் படிப்படியாக தம் உழைப்பாலும் உயர்ந்த குணத்தாலும் முன்னேறினார். தம் திருமணத்தின் வழியாக கிளாஸ்கோ நகரில் இயங்கிவந்த 'நியூ லெனார்க் ஆலைக்கு' (New Lenark Mills) அதிபரானார். அதன் பின்னர்த்தான் அவரது வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டது. தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கு மிடையே இருந்து வந்த பகைமையை மாற்றி, நல்லுறவை ஏற்படுத்தவும் தொழிலாளர்களின் துயர்துடைத்து அவர்கள் வாழ்க்கையில் முன்னேறவும் மேடைகளில் முழங்காமல் பல அரிய திட்டங்களைத் தீட்டி அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

அவரது ஆலைச் சீர்திருத்தங்கள்

இயற்கையிலேயே இளகிய மனம் படைத்த ஓவன் தொழி லாளரின் துயர்துடைக்க முற்பட்டு, தம் சொந்த ஆலையிலேயே பல

புரட்சிகரமான சீர்திருத்தங்களைப் புகுத்தினர். தொழிலாளர் செய்து வந்த வேலை நேரத்தைக் குறைத்து, அவர்களுக்கு உயர்ந்த ஊதியமும் தந்து, சிறுவர்களை வேலையிலிருந்து நீக்கி அவர்களுக்குக் கல்வி வசதியைக் கொடுத்து, தொழிலாளர்கள் தவறு செய்தால் விதிக்கப்பட்ட தண்டனையையும் அபராதத் தொகையையும் நீக்கி, தம் ஆலையில் புத்தம் புதிய இயந்திரங்களாக நிறுவி ஆலை சுத்த மாகவும் கண்ணுக்கு இனிமையாகவும் காட்சியளிக்கும் வகையில் அதை மாற்றி அமைத்து, இதர முதலாளிகள் பொறாமைப் படவும் வியக்கவும், அவர்களுக்கு ஒரு முன்னோடியாக மட்டுமின்றி, முன் மாதிரியாகவும் காட்சியளித்தார்.

தொழிலாளர் குடியிருப்புகள் (Labour Colonies)

'மனிதன் நல்லவனாகவோ தீயவனாகவோ வாழ்வதற்கு அவனது வாழ்க்கைச் சூழ்நிலைதான் காரணம்' என்ற தத்துவத்தில் நம்பிக்கை கொண்ட ஓவன் தொழிலாளிகளின் சூழ்நிலையை மாற்ற முயன்றதில் வியப்பொன்றுமில்லை. தொழிலாளர் வேலை செய்யும் ஆலைச் சூழ்நிலையை மாற்றியமைத்ததோடு, அவர்களின் வீட்டுச் சூழ்நிலையையும் மாற்ற எண்ணி அவர்களுக்கென்று தனிக் குடியிருப்புகளை அமைக்கத் திட்டம் கொண்டார். இக் குடியிருப்புக் களில் தொழிலாளர்கள் தாங்களாகவே ஒன்று கூடி, சமத்துவ அடிப்படையில் தங்களுக்கெனப் பொதுச் சங்கம் ஒன்றை அமைத்துக் கொண்டு அதன் வாயிலாகப் பொதுப் பிரச்சினை களுக்குத் தீர்வு காண முடியும். இக் குடியிருப்புக்களில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இல்லாததால் போட்டி மனப் பான்மைக்கும் இலாபம் திரட்டும் வேட்கைக்கும் சந்தர்ப்பம் கிடையாது. தொழிலாளர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்கப்படும். இக் குடியிருப்புகளுக்கு அரசாங்கத்தின் ஆதரவும் கண்காணிப்பும் இருந்தால் அவை நிச்சயம் வெற்றி பெறும் என்று நம்பினர் ஓவன். எனவே, பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு வேண்டு கோள் விடுத்தார். அரசாங்கம் அதற்குச் செவி சாய்க்கவில்லை. அரசாங்கத்தின் ஆதரவையோ மக்களின் ஒப்புதலையோ பெற முடியாத ஓவன் தம் திட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை. மதவாதிகளையும் இவர் குறைகூறி வந்ததால் அவர்களின் ஆதரவும் கிடைக்கவில்லை. செல்வந்தர்களும் செல்வாக்குப் பெற்றோரும் இவரது புரட்சிகரமான திட்டத்தை ஏளனம் செய்தனர். தம் திட்டத்தை ஏற்கத் தாய்நாடே மறுத்து விட்டதால் மனம் தளராத இராபர்ட் ஓவன் அமெரிக்க நாட்டிற்குச் சென்று, அந் நாட்டுத் தலைவரைச் சந்தித்து இண்டியானாவிலுள்ள (Indiana) நியூ ஹார்மனி (New Harmony) என்ற பகுதியை வாங்கித் தொழி

லாளருக்கான முதல் குடியிருப்பை அமைத்தார். 30,000 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட இக் குடியிருப்பில் ஏராளமான பண்ணைகளும், பல்வேறு சிறுதொழிற்சாலைகளும், மாதா கோவில் ஒன்றும் இடம் பெற்றன. கூட்டுப் பெறுப்பும் கூட்டு உழைப்பும் இக் குடியிருப்பின் மந்திரங்களாக விளங்கின. எனினும், உறுப்பினர்கள் கல்வி அறிவற்றவர்களாயும், சுயநலம் படைத்தோராயும், திறமையற்றவர்களாயும் இருந்த காரணத்தால் இக் குடியிருப்புத் திட்டம் வெற்றி பெறவில்லை. எனவே, ஓவன் அவர்கள் தம் சொந்த நாட்டிற்கே திரும்ப நேரிட்டது.

உழைப்புப் பத்திரத் திட்டம் (Scheme of Labour Notes)

பொதுவுடைமைத் தத்துவத்தின் அடிப்படையில் தனிக் குடியிருப்புகளை அமைத்து வெற்றி காண முடியாத நிலையில் இராபர்ட் ஓவன் புதிய திட்டமொன்றை உருவாக்கலானார். மக்களின் சூழ்நிலையை மாற்றவும், சமுதாயத்தின் அநீதியைப் போக்கவும் வேண்டுமாயின், அதற்கு அடிப்படையான இலாபம் ஈட்டும் பழக்கத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமென விரும்பினார். இலாபம் திரட்டும் பழக்கத்திற்குக் காரணம் பணப் புழக்கம்தான் என நம்பிய ஓவன் பணப் புழக்கத்தையே சமுதாயம் கைவிட வேண்டுமென எண்ணினார். பண்டங்களின் மதிப்பை அளவிடுவதற்குப் பணத்தைப் பயன்படுத்தாமல் அப்பண்டங்களைப் படைப்பதற்குத் தேவைப்பட்ட உழைப்பு நேரத்தைப் பயன்படுத்த விரும்பி உழைப்புப் பத்திரத்தைப் (Labour Notes) பயன்படுத்தத் திட்டமிட்டார். உழைப்புப் பத்திரம் என்பது அவர் கண்டுபிடித்த மகத்தான, புதுமையான சாதனமாகும்.

உழைப்புப் பத்திரங்களைப் புகுத்துவதன் வாயிலாகப் பணப் புழக்கத்தை ஒழித்துவிட முடியுமா? இதனைக் கண்டறிய ஓவன் ஒரு பரிசோதனை நடத்தியது குறிப்பிடத்தக்கது. இலண்டனில் தேசியச் சம உழைப்புப் பரிவர்த்தனை (National Equitable Labour Exchange) என்ற நிறுவனத்தை அமைத்தார். இது ஒரு கூட்டுறவு அமைப்பை ஒத்தது. ஆனால், நடைமுறையில் மக்களின் தவறான போக்கினால் இந்நிறுவனம் செம்மையாகப் பணிபுரிய முடியவில்லை. தரமில்லாத பொருள்களையும் விலை போகாத பண்டங்களையும் கொண்டு வந்து குவித்தனர் தொழிலாளர்கள். இதனால் உழைப்புப் பத்திரங்களுக்குக் கிராக்கி தோன்றியது. அவற்றை வாங்கவும் விற்கவும் கள்ளச் சந்தை தோன்றியது. இதனால் ஓவனின் திட்டம் முறியடிக்கப்பட்டது. அவரது திட்டம் முறியடிக்கப் பட்ட போதிலும் அவரது குறிக்கோள் மறைந்துவிடவில்லை. இலாபத்தையும் தரகர்களையும் (Middle men) அகற்றிடத்

தோன்றியுள்ள பல்வேறு கூட்டுறவுப் பண்டகசாலைகளே இதற்குச் சான்று. இராபர்ட் ஓவனின் கொள்கைகளில் பல அறிஞர்கள் பற்றுக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவரான டாக்டர் கிங் (Dr. King) இங்கிலாந்து நாட்டில் கூட்டுறவு இயக்கம் தோன்றுவதற்குப் பெரு முயற்சி செய்தார். 'கூட்டுறவு' என்னும் பத்திரிகையின் மூலம் கூட்டுறவுக் கொள்கைகளை மக்களிடையே பரப்பி வந்தார்.

ராக்டேல் முன்னோடிகள் (Rochdale Pioneers)

இங்கிலாந்தில் இங்கும் அங்குமாகப் பல கூட்டுறவு அமைப்புகள் தொடங்கப்பட்ட போதிலும் தொழிலாளரின் வாழ்க்கையில் மலர்ச்சி ஏதுமேற்படவில்லை. தொழில் புரட்சியால் பாதிக்கப்பட்ட பாட்டாளி மக்கள் வன்முறையிலும் வேலை நிறுத்தத்திலும் இறங்கினர். இந்நிலையில் 1843ஆம் ஆண்டு ராக்டேலைச் சேர்ந்த 28 நெசவாளர்கள் சார்டிஸ்ட் மன்றத்தில் (Chartist Hall) கூடி தொழிலாளரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முனைந்தனர். அவர்களுள் ஒருவரான திரு. சார்லஸ் ஹவ்ரத் (Mr. Charles Howrath) என்பவர் தொழிலாளர் தம் ஊதியத்தை உயர்த்துவதற்காகப் போராடுவதைவிடத் தம் வாழ்க்கைச் செலவுகளைக் குறைக்கும் வகையில் கூட்டுறவுப் பண்டகசாலையொன்றைத் தொடங்கலாமென நயம்பட எடுத்துரைத்தார். மேலும், அதற்கு முன் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புகள் தோல்வியுற்றதன் காரணங்களையும் நன்கு ஆராய்ந்தனர். அத் தோல்விக்கான காரணங்களில் கீழ்க்காணும் மூன்றே முக்கியமானதெனக் கண்டனர்: (1) ரொக்கத்திற்காகப் பொருள்கள் விற்கப்படாமல் கடனுக்காக விற்கப்பட்டதால் கடன் அதிகரித்துக் கொண்டே சென்றது; பணம் புரள வழியில்லை; (2) தொழிலாளர் குடியிருப்பில் நிர்ணயிக்கப்பட்ட விலைகள் அங்காடி விலையைவிடக் குறைவாக இருந்ததால் தனிப்பட்ட வணிகர்களுடன் கடும் போட்டி ஏற்பட்டது; (3) உறுப்பினர்களில் பெரும்பாலானோர் உண்மையுடன் உழைக்காமல் சுயநல வாதிகளாகவே இருந்தனர். எனவே, இக் குறைகளையெல்லாம் அகற்றி, கூட்டுறவு பண்டகசாலை (Co-operative Store) ஒன்றை அமைக்க இந் நெசவாளர்கள் முடிவெடுத்தனர். அதன்படி ஒவ்வொருவரும் தலா 1 பவுனைத் தம் பங்குத் தொகையாகப் போட்டு 28 பவுன் மூலதனத்தைக் கொண்டு ராக்டேல் என்னுமிடத்தில் 1844ஆம் ஆண்டு கூட்டுறவுப் பண்டகசாலை யொன்றைத் தொடங்கினர். இப்பண்டகசாலை இங்கிலாந்து நாட்டில் அமுலிலிருந்த நட்பினர் சங்கச் சட்டத்தின் கீழ்ப் (Friendly Societies Act) பதிவு செய்யப்பட்டது. இவ்வாறு

தொடங்கிய இந்த நெசவாளர்கள் தாம் 'ராக்டேல் முன்னோடிகள்' என அழைக்கப்படுகின்றனர்.

பண்டகசாலையின் நோக்கங்கள்

உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் அவசியப் பொருள்கள் விற்பனை செய்வதை மட்டும் தம் குறிக்கோளாகக் கொள்ளாமல் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கென்று பல்வேறு நோக்கங்களைக் கொண்டு இயங்கி வருகிறது இப் பண்டகசாலை. அவை: (1) தன்னிறைவு கொண்ட குடியிருப்புகளை அமைத்தல்; (2) உறுப்பினர்களின் வாழ்க்கையை மலரச் செய்ய அவர்களுக்குத் தகுந்த இல்லங்களை வழங்குதல்; (3) உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்புகளைப் பெருக்குதல்; (4) வேலையற்ற உறுப்பினர்களுக்குச் சாகுபடி நிலம் வழங்குதல்; (5) உறுப்பினர்களின் நலனுக்கென உண்டிச்சாலைகளை அமைத்தல்.

ராக்டேல் பண்டகசாலை நீண்ட காலத்திட்டம், குறுகிய காலத் திட்டமென இரு பெரும் திட்டங்களைக் கொண்டது. குறுகிய காலத் திட்டத்தில் கீழ்க்காணும் சிறப்பு அம்சங்கள் உள்ளன: (1) உறுப்பினராவதற்கு எவ்விதத் தடங்கலுமில்லாத வகையில் எவரும் உறுப்பினராகலாம்; (2) நிர்வாகம் மக்களாட்சி முறையில் நடைபெறும்; (3) உறுப்பினர்கள் பண்டங்களை வாங்கும் அளவைக் கொண்டு அவர்களுக்கு இலாப ஈவு (Dividend) வழங்கப் படும்; (4) பங்கு மூலதனத்திற்குக் குறிப்பிட்ட சதவீத வட்டி தான் வழங்கப்படும்; (5) சந்தையில் விற்கப்படும் விலைக்கே பண்டங்கள் விற்கப்படும்; (6) ரொக்கத்திற்கு மட்டுமே விற்பனை செய்யப்படும்; (7) கலப்படமற்ற தரமான பொருள்களை மட்டும் விற்பனை செய்ய வேண்டும்; (8) இலாபத்தில் ஒரு பகுதியைக் கல்விக்கென ஒதுக்க வேண்டும்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள கொள்கைகளைக் கொண்ட சுற்றறிக்கைகளை இப் பண்டகசாலை உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்கிறது. எனவே, ஒவ்வோர் உறுப்பினரும் தத்தம் கடமையை உணர்ந்து அதன்படி நடந்து கொள்கின்றனர். இதனால் இப் பண்டகசாலை தோல்வியின்றி வெற்றி நடை போட்டு வந்தது. கூட்டுறவுக் கொள்கைகளுக்குத் திட்டமானதொரு உருவைக் கொடுத்ததே இப்பண்டகசாலைதான். பலர் கண்ட கனவை நனவாக்கியதும் இப்பண்டகசாலைதான். தோல்வியுற்று நலிவுற்றிருந்த கூட்டுறவு அமைப்புகளுக்குத் தெம்பை ஊட்டியதும் இப்பண்டகசாலைதான். உறுப்பினர்களுக்கு வேண்டிய பொருள்களை விநியோகம் செய்வதை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல்,

வேறு பல உயர்ந்த நோக்கங்களைக் கொண்டு பணிபுரிந்ததும் இப்பண்டகசாலைதான். இப்பண்டகசாலையை யொட்டிச் சிறந்த தொரு மொத்த விற்பனைச் சங்கமும் தொடங்கப்பட்டது. இத் தகைய காரணங்களால்தான் இப்பண்டகசாலை இங்கிலாந்திற்கு மட்டுமின்றி, ஏனைய எல்லா நாடுகளுக்குமே முன்னேடியாகத் திகழ்ந்து வருகிறது.

முன்னேற்றம்

உறுப்பினர்களின் திறமையாலும் சலியா உழைப்பினாலும் இப்பண்டகசாலை விரைவாக வளரத் தொடங்கியது. தொடங்கப் பட்ட முதல் ஆண்டிலேயே உறுப்பினர்களின் எண்ணிக்கை 28 இலிருந்து 74 ஆக உயர்ந்தது. 110 பவுன்களுக்குப் பொருள்களை விற்பனை செய்தது. 1851ஆம் ஆண்டின் இறுதியில் இப்பண்டக சாலையை நிர்வாகம் செய்வதற்கென்று 'நிர்வாகி' ஒருவர் நியமிக்கப் பட்டார். சிறந்த வியாபார முறையினால் அதன் நிதி நிலையும் வலுப்பெற்றது. 1852ல் இப்பண்டகசாலை காலணி தயாரிப்பதற் கென்றும் ஆடைகள் தயாரிப்பதற்கென்றும் இரு பிரிவுகளைத் தொடங்கியது.

தனது 44ஆம் ஆண்டு முடிவுறும் சமயத்தில் இப்பண்டகசாலைச் சங்கத்தில் 11,223 உறுப்பினர்கள் இருந்தனர்; 3,39,937 பவுன் பங்கு மூலதனம் கொண்டிருந்தது. உறுப்பினர்களுக்குக் கூட்டுறவு முறையில் தகுந்த பயற்சி அளிப்பதற்கென்று ஒரு பள்ளியையும் இப்பண்டகசாலை தொடங்கியது. அதில் 469 பேர் பயிற்சி பெற்று வந்தனர். 14,600 நூல்களைக் கொண்ட ஒரு நூலகத்தையும் இப்பண்டகசாலை நடத்தி வந்தது. 1966ல் இப்பண்டகசாலை 93 கிளைகளைக் கொண்டிருந்தது. உறுப்பினர் களின் எண்ணிக்கை 40,000-க்கு அதிகரித்தது. ஒவ்வோர் ஆண்டும் சுமார் 2½ லட்சம் பவுன்களை இலாப ஈவாகக் கொடுத்து வந்தது.

இப்பண்டகசாலையின் உறுப்பினர்கள் தம் பணிகளை விரிவு படுத்தினர். பண்டகசாலைக்குத் தேவைப்படும் பொருள்களைத் தம் பதிலாள்களின் (Agents) மூலமாக ஒவ்வொரு நாட்டிலிருந்தும் நேரடியாகப் பெற்றுக் கொண்டனர்; இதனால் பொருள்களை மலிவாகவும் தரமானதாகவும் பெறமுடிந்தது. தரகர்களுக்குத் தர வேண்டிய தரகு தொகையும் மிச்சமானது. மேலும், பல்வேறு நாடுகளில் பண்ணைகளை விலைக்கு வாங்கி, அவற்றில் தானியப் பொருள்களையும் இதர விவசாயப் பொருள்களையும் மலிவாக உற்பத்தி செய்து வந்தது. மேலும், பல ஆலைகளையும் தொடங்கி, உற்பத்தி, விநியோகம், விற்பனை ஆகிய மூன்று பணிகளையும் தானே செய்து வந்தது.

வெற்றியின் இரகசியம்

ராக்டேல் பண்டகசாலை வெற்றியுடன் விளங்குவதற்கு அதன் நடைமுறைக் கொள்கைகளே காரணமாகும். எனவே, அவற்றைச் சுருக்கமாகவாவது காண்பது நன்று: (1) இப்பண்டகசாலையில் உறுப்பினராக விரும்பும் எவரும் 'பண்டகசாலையின் 'பங்கினை'ப் (Share) பெற்று எளிதாக உறுப்பினராகலாம். இதில் சாதி, மத பேதங்களுக்கு இடமே கிடையாது. உயர்ந்தவன், தாழ்ந்தவன், செல்வந்தன், ஏழை என்ற வேறுபாடும் கிடையாது. (2) இப் பண்டகசாலையில் பொருள்கள் ரொக்கத்திற்கு மட்டுமே விற்பனை செய்யப்பட்டன. கடன் அடிப்படையில் பொருள்களை விற்பனை செய்வதால் எழும் பிரச்சினைகளை இப்பண்டகசாலையின் முன்னோடிகள் நன்கு அறிந்திருந்தனர். எனவே, ரொக்கத்திற்கு மட்டும் விற்பனை செய்து, பண்டகசாலையின் நிதி நிலையை உயர்த்திய தோடு, செலவுத் தொகையையும் குறைக்க முடிந்தது. (3) மக்க ளாட்சி முறையைப் பின்பற்றிய இப்பண்டகசாலையின் அங்கத்தினர் களுக்குப் பணக்காரன் ஏழை என்ற பாகுபாடின்றி, எத்தனை 'பங்கு' வாங்கியிருந்தாலும் தலைக்கு ஒரு 'வாக்கு' (Vote) மட்டுமே வழங்கப்பட்டது. இதனால் செல்வந்தர்களின் செல்வாக்குக்கும் எதேச்சையான போக்குக்கும் இப்பண்டகசாலை அடிமையாக வில்லை. (4) இலாபத்தை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல் 'நேர்மை', உறுப்பினர்களின் 'நல்லெண்ணம்' ஆகியவற்றின் அடிப்படையில் தரமான பொருள்களை விற்பனை செய்து வந்ததால் அதன் விற்பனை பன்மடங்கு பெருகலாயிற்று. (5) இதரப் பண்டகசாலைகள் முன்னரே தொடங்கப்பட்ட போதிலும் அவை சந்தை விலைக்குக் குறைவாகவே தம் பொருள்களை விற்பனை செய்ததால் தனிப்பட்ட வணிகர்களின் கடும் போட்டிக்கு இலக்காகி நலிவுற்றன. இதையறிந்த ராக்டேல் முன்னோடிகள் அங்காடி விலைக்கே தம் பண்டகசாலையின் பொருள்களை விற்று வந்தனர். (6) உறுப்பினர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அவர்களுக்கு இலாப ஈவோடு அவர்களின் மூலதனத்திற்குக் குறிப் பிட்ட வட்டியும் செலுத்தி வந்தது. (7) உறுப்பினர்கள் வாங்கும் பொருள்களின் அடிப்படையில் இலாப ஈவு வழங்கப்பட்டது. இதனால் தம் பண்டகசாலையிலேயே பொருள்களை வாங்கத் தூண்டப்பட்டனர் உறுப்பினர்கள். (8) பண்டகசாலை விரைவாக வளர வேண்டுமாயின் அதன் உறுப்பினர்கள் கல்வி அறிவு பெற்றிருக்க வேண்டுமென்பதை உணர்ந்த முன்னோடிகள் கல்விக் கென்று இலாபத்தில் ஒரு பகுதியை ஒதுக்கினர். எனவே, கூட்டுறவு வளர்ச்சியைத் தூண்டுகின்ற வகையில் கூட்டுறவுக் கல்வியும், பொதுக்கல்வி, தொழில் கல்வியும் கொடுத்து உறுப்பினர்களின்

அறியாமையை அகற்றி அவர்களுக்கு ஒளி தந்தது. (9) ராக்டேல் முன்னோடிகள் அரசியல், மதம் போன்ற காரியங்களில் நடுநிலைமை வகித்து எல்லா மக்களின் ஆதரவையும் பெற்றிருந்தனர். பண்டக சாலையைப் பொறுத்தமட்டில் எல்லோரும் சமம் என்ற கொள்கை எந்நிலையிலும் கடைப்பிடிக்கப்பட்டது. இப்பண்டகசாலை மதச் சார்புள்ள நிறுவனங்களுடனோ அரசியல் அமைப்புகளுடனோ எவ்விதத் தொடர்பும் இல்லாதிருந்ததால் வெற்றி எளிதாகக் கிட்டியது இப்பண்டகசாலையின் முன்னேற்றம் உலக நாடுகளின் கண்களைத் திறந்தது. இன்றும் பெரும்பாலான நாடுகளில் 'ராக்டேல் பண்டகசாலையை' ஒட்டியே நுகர்வோர் பண்டகசாலைகள் இயங்கி வருவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்

கிறித்துவச் சமதர்ம வாதிகள் (Christian Socialists)

1852ஆம் ஆண்டு வரை கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தால் அங்கீகாரம் பெறவில்லை. ஏனைய வணிக அமைப்பைப் போன்றே கூட்டுறவு சங்கங்களும் அன்றைய நட்பினர் சங்கச் சட்டத்தின் கீழ்த் தான் இயங்கி வந்தன. கூட்டுறவுச் சங்கங்களுக்கெனத் தனிச்சட்டம் வேண்டுமென வலியுறுத்தியவர்களில் கிறித்துவச் சம தர்ம வாதிகள் முக்கியமாவர். இயேசு கிறித்துவின் போதனைப்படி வாழ்ந்த இவர்கள் மக்கள் தொண்டின் வழியாக இறைவனுக்குத் தொண்டு புரிய எண்ணினர். செல்வம் ஒரு சிலர் கையில் மட்டும் குவிந்து விடுவதால்தான் வறுமை நிலை நாட்டில் பெருகத் தொடங்குகிற தென்று பிரசாரம் செய்தனர். இச்சமதர்ம வாதிகளில் மௌரிஸ், நீலர், சார்லஸ் கிங்ஸ்லே ஆகியோர் முக்கியமானவர்கள். சுயநல மின்றியும், பிறரைச் சுரண்டாமலும் வாழ்ந்தால்தான் வறுமை நிலை நீங்குமென நம்பி, தொழிலாளிகளை முதலாளிகள் சுரண்டி வாழ்வதை வன்மையாகக் கண்டித்தனர். இங்கிலாந்து நாட்டு மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய இவர்கள் கலப்பட மற்ற பொருள்களை மட்டும் விற்குமாறு வணிகர்களுக்கு வேண்டு கோள் விடுத்தனர்.

வணிகர்களின் இலாப நோக்கையும் அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கையையும் இவர்கள் வன்மையாகக் கண்டித் தனர். தொழிலாளர்களின் நலனுக்கெனப் பல சிறிய தொழில் களைத் தொடங்கியதோடு பல்வேறு தொழிலாளரின் மேம்பாட்டிற் கென்று கூட்டுறவுக் கழகங்களையும் ஆரம்பித்தனர். இக் கூட்டுறவுக் கழகங்களுக்குத் தேவையான கடனுதவியும் செய்தனர். இக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கிடைத்த இலாபத்தில் பெரும்பகுதி சங்க உறுப்பினர்களின் நலனுக்காகவே செலவிடப்பட்டது. சிறு பகுதிதான் இலாப ஈவாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது, 1854ஆம்

ஆண்டில் தொழிலாளரின் கல்விக்கெனக் கல்லூரியொன்றைத் தொடங்கினர். இக் கல்லூரி தொழிலாளருக்குச் செய்த பணி போற்றற்குரியது.

எனினும், இத்தொழிலாளர் சங்கங்கள் நிரந்தரமான வெற்றியைப் பெறவில்லை. உறுப்பினர்களிடையே ஒற்றுமையில்லாததாலும், கட்டுப்பாடில்லாததாலும் இச் சங்கங்கள் நாளடைவில் நலிவுற்றுத் தோல்வியடைந்தன. இவற்றின் தோல்வி பின்னால் தோன்றிய பல கூட்டுறவுச் சங்கங்களுக்கு நல்ல படிப்பினையாக அமைந்தது. இச் சமதர்ம வாதிகளின் விடாமுயற்சியால்தான் 1852ல் கூட்டுறவுச் சங்கங்களுக்கெனத் தனிச் சட்டம் நிறைவேறிற்று. இதுவே அவர்கள் பெற்ற மாபெரும் வெற்றியாகும். இச்சட்டத்தைத் தொடர்ந்து 1862ல் காப்பீட்டுத் தொழிற்சங்கச் சட்டம் நிறைவாயிற்று. கூட்டுறவுச் சங்கங்கள் 'வரையறுக்கப்பட்ட பொறுப்பின்' (Limited Liability) அடிப்படையில் இயங்குவதற்கு இச்சட்டங்கள் அனுமதியளித்தன. இவ்வாறாக, இங்கிலாந்து நாட்டின் கூட்டுறவு இயக்க வளர்ச்சியில் கிறித்துவச் சமதர்ம வாதிகளும் பங்கு பெற்றனர்.

சில்லறை விற்பனைச் சங்கங்கள் (Retail Societies)

இங்கிலாந்தின் கூட்டுறவு இயக்கம் நுகர்வோர் கூட்டுறவுச் சில்லறை விற்பனைக் கழகங்களையே முக்கியமாகக் கொண்டது. இச்சங்கங்கள் மக்களின் ஆதரவுடன் வலிமையாக வளர்ந்துள்ளன. இச்சங்கங்கள் ஒவ்வொன்றிலும் ஆயிரக்கணக்கான மக்கள் உறுப்பினர்களாக உள்ளனர். 1966ல் இச் சங்கங்களின் மொத்த விற்பனை 1,100 மில்லியன் பவுன்களுக்கும் அதிகமாயிருந்தது. நாட்டின் மொத்த உணவுப் பொருள் விற்பனையில் பெரும்பகுதி இச் சங்கங்களால்தான் விநியோகிக்கப்படுகிறது. ரொட்டி, காய் கறிகள், பழங்கள், மீன், இறைச்சி, பால் போன்ற உணவுப் பொருள்கள் மட்டும் ஆண்டொன்றுக்கு 768 மில்லியன் பவுன்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றுள் பெரிய விற்பனைச் சங்கங்கள் காலணிகள், ஆடைகள், தட்டுமுட்டுப் பொருள்கள், மருந்து வகைகள் முதலியவற்றை விற்பனை செய்கின்றன. முடிதிருத்தம், சலவைத் தொழில் முதலிய பணிகளைக்கூடச் சில கூட்டுறவுச் சங்கங்கள் செய்து வருகின்றன.

1961ல் நாட்டின் மொத்த விற்பனையில் இச்சங்கங்களின் பங்கு 11 சதவீதமாயிருந்தது. இச் சங்கங்கள் சுமார் 30,000 கடைகளை நடத்தி வருகின்றன. சுமார் 35,000 மோட்டார் வாகனங்களைக் கொண்டு இச் சங்கங்கள் தம் விற்பனைப் பணியைச் செய்து

வருகின்றன. இச் சங்கங்களின் பங்கு மூலதனம் மட்டும் 247 மில்லியன் பவுன்களாகும். 1963ஆம் ஆண்டு 54 மில்லியன் பவுன்கள் இச் சங்கங்களுக்கு இலாபமாகக் கிடைத்தது. இந்த இலாபத்தில் 4 சதவீதம் உறுப்பினர்களின் கொள்முதலுக் கேற்பப் பங்கு ஆதாயமாக வழங்கப்பட்டது. இச்சங்கங்கள் தாமாகவே இலாபத்தின் ஒரு பகுதியைக் காப்பு நிதியில் (Reserve Fund) சேர்த்து வைக்கின்றன. 1965ல் இச்சங்கங்களின் மேற்பார்வையில் 325 கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகளும் 200 பல பிரிவுப் பண்டக சாலைகளும் இயங்கி வந்தன.

1964ஆம் ஆண்டின் கணக்குப்படி 2,50,000 பேர் இச் சில்லறை விற்பனைச் சங்கங்களில் பணியாற்றி வந்தனர். இவர்களில் சுமார் 2,18,000 பேர் பொருள்களை விநியோகிக்கும் போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். இச் சில்லறை விற்பனைச் சங்கங்களில் பணியாற்றுவோருக்கு ஆண்டுதோறும் 140 மில்லியன் பவுன்கள் ஊதியமாகத் தரப்படுகிறது. இவ்வாறாக, இங்கிலாந்தில் கூட்டுறவு இயக்கமே கூட்டுறவு விற்பனை இயக்கமாகப் பரிமளிக்கிறது.

சில்லறை விற்பனைச் சங்க நிர்வாகம்

இச் சில்லறை விற்பனைச் சங்கங்களின் அமோக வெற்றிக்கு முக்கிய காரணம் இவற்றின் நிர்வாக முறைதான். எல்லா உறுப்பினர்களையும் கொண்ட பொதுக்குழு (General Body) இச் சங்கங்களின் தலைமை மன்றமாகத் திகழ்கிறது. இப் பொதுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களே அன்றாட நிர்வாகப் பணியைச் செய்து வருகின்றன. பொதுவாக நிர்வாகக் குழுவில் 12 உறுப்பினர் இருப்பர். இந்த நிர்வாகக் குழுக்கள்தாம் விற்பனைச் சங்கங்களின் திட்டங்களைத் தீட்டுகின்றன. நிர்வாகக் காரியங்களைக் கவனிப்பதற்கும், அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் ஊதியம் பெறும் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள் ளனர். இவர்களது அலுவல்களில் குழுக்கள் தலையிடுவது கிடை யாது; வரவு செலவுக் கணக்குகளைச் செயலாளர்கள் கண்காணிக் கின்றனர். ஒரு சில விற்பனைச் சங்கங்கள் குறிப்பிட்ட சில பொருள் களைத் தாமே உற்பத்திசெய்து விற்பனை செய்கின்றன. இடுகாடு வசதியைக்கூட ஒரு சில சங்கங்கள் செய்து தருகின்றன.

நுகர்வோர் கூட்டமைப்பு விற்பனைச் சங்கங்கள் (Federal Consumer Societies)

இங்கிலாந்திலுள்ள சில்லறை விற்பனைச் சங்கங்கள் ஒன்று— சேர்ந்து ஒருசில கூட்டமைப்புச் சங்கங்களை உருவாக்கியுள்ளன. இவ்வாறு உருவாக்கப்பட்ட கூட்டுச் சங்கங்களில் 'கூட்டுறவு

மொத்த விற்பனைச் சங்கமும்' (Co-operative Wholesale Societies) "ஸ்காட்லாந்து மொத்த விற்பனைச் சங்கமும்" (Scottish Co-operative Wholesale Society) முக்கியமானவையாகும். இக் கூட்டுச் சங்கங்களிடமிருந்தே சில்லறை விற்பனைச் சங்கங்கள் தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்முதல் செய்கின்றன. இக் கூட்டமைப்புச் சங்கங்களைத் தவிர வேறு சில 'சிறப்புத் தேசியச் சங்கங்களையும்' சில்லறை விற்பனைச் சங்கங்கள் உருவாக்கியுள்ளன. 'கூட்டுறவு அச்சகம்' (Co-operative Press), 'கூட்டுறவு அச்சுத் தொழில் சங்கம்' (Co-operative Printing Society) போன்றவை இவ்வாறு உருவாக்கப்பட்டவையாகும். இவற்றில் கூட்டுறவு அச்சுத் தொழில் சங்கம் கூட்டுறவு இயக்கத்திற்கு மட்டுமின்றித் தொழிற்சங்க இயக்கத்திற்கும் பணியாற்றி வருகிறது.

கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம்
(Co-operative Wholesale Society Ltd.)

தனித்து இயங்கிவந்த நுகர்வோர் கூட்டுறவு சில்லறை விற்பனைச் சங்கங்கள் தங்களுக்குள் ஒரு கூட்டுறவை உருவாக்கவும் பொதுப் பிரச்சினைகளைக் கூட்டாகக் கவனிக்கவும் விரும்பின. எனவே 1863-ல் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களைச் சேர்ந்த 200 பிரதிநிதிகள் மான்செஸ்டர் என்ற நகரில் ஒன்றுகூடி கூட்டமைப்புச் சங்கத்தை உருவாக்குவதுபற்றி விவாதித்தனர். சில்லறை விற்பனைச் சங்கங்களுக்குத் தேவைப்படும் பொருள்களை மொத்தமாகக் கொள்முதல் செய்வதற்கென்றே இக் கூட்டமைப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. முதல் கூட்டமைப்பாக 'வட இங்கிலாந்துக் கூட்டுறவு மொத்த விற்பனை முகாமை,கிடங்கு சங்கம்' (The North of England Co-operative Wholesale Agency and Depot Society Ltd.) என்ற பெயரில் 1863 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1864-லிருந்து இது தம் வியாபாரப் பணியைத் தொடங்கியது. தொடங்கிய சில காலத்திற்குள் இதன் பெயர் 'கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம்' (C. W. S.) என மாற்றப்பட்டது. இச் சங்கம் மான்செஸ்டரில் தலைமை அலுவலகத்தைக்கொண்டு இங்கிலாந்திலும் வேல்ஸிலும் பணிபுரிந்து வருகின்றது. சில்லறை விற்பனைச் சங்கங்களுக்கு உதவுவதற்கென்று தொடங்கப்பட்ட இச்சங்கம் தற்போது வாணிகம், உற்பத்தி, காப்பீடு, வங்கியியல் போன்ற பல துறைகளில் வெற்றிகரமாக ஈடுபட்டு வருகிறது.

இந்த மொத்த விற்பனைச் சங்கத்தில் பதிவுபெற்ற எல்லாக் கூட்டுறவு சங்கங்களும் உறுப்பினர்களாகலாம். அவ்வாறு உறுப்பினராக விரும்பும் சங்கம் குறைந்தது ஒரு பங்கையாவது இச் சங்கத்தி

லிருந்து வாங்க வேண்டும். இவ்வாறு செலுத்தப்படும் பங்குத் தொகை மூலமாக இச் சங்கத்திற்கு ஏராளமான பங்கு மூலதனம் கிட்டுகிறது. 1966ஆம் ஆண்டில் இச்சங்கத்தின் பங்கு மூலதனம் மட்டும் 31.5 மில்லியன் பவுன்களாகும். இதில் உறுப்பினராக இருக்கும் சங்கங்கள் தங்கள் பங்குகளைப் பிற சங்கங்களுக்கு மாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த மொத்த விற்பனைச் சங்கம் மக்களாட்சி முறையில்தான் நிருவகிக்கப்படுகிறது. பொதுக்குழு உறுப்பினர்கள் இயக்குநர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். தற்போது இயக்குநர் குழுவில் 30 பேர் இருக்கின்றனர். இவர்களது பதவிக் காலம் 3 ஆண்டுகளாகும். இவ் வியக்குநர் குழு ஒரு 'தலைமைச் செயற் பாட்டு அலுவலரை' (Chief Executive Officer) நியமித்து, நிர்வாகப் பொறுப்புக்களை அவரிடமே ஒப்படைக்கிறது.

சில்லறை விற்பனைச் சங்கங்களுக்குத் தேவையான பொருள்களைத் தாமே உற்பத்திசெய்தோ கொள்முதல் செய்தோ அளிப்பது தான் இந்த மொத்த விற்பனைச் சங்கத்தின் முக்கியப் பணி. முதன் முதலில் ரொட்டித் தொழிற்சாலையைத் தொடங்கிய இச் சங்கம் தற்போது பல்வேறு தொழில்களை நடத்தி வருகிறது. மாவு, சோப்பு, செயற்கை வெண்ணெய் தயாரித்தல் போன்ற தொழில்களை இச்சங்கமே நடத்தி வருகிறது. அதோடு கனடாவில் 10,000 ஏக்கர் பரப்புக்கொண்ட பண்ணையொன்றையும் வாங்கியுள்ளது. பல சரக்குக் கப்பல்களையும் ஆயிரக்கணக்கான மோட்டார் வாகனங்களையும் கொண்டு பணிபுரியும் இச் சங்கத்தின் மொத்த விற்பனை 1966-லேயே 49 கோடிப் பவுன்களாகும். இவ் வணிகத் தொழிலோடு வங்கித் தொழிலையும் இச்சங்கம் நடத்தி வருகிறது. இங்கிலாந்தில் இயங்கிவரும் பெரிய வங்கிகளுடன் போட்டியிடக் கூடிய அளவுக்கு இச் சங்கத்தின் வங்கி விரிவுபெற்றுள்ளது.

ஸ்காட்லாந்து மொத்த விற்பனைச் சங்கம்
(Scottish Co-operative Wholesale Society)

மேற்கூறிய மொத்த விற்பனைச் சங்கத்தைப்போன்றே ஸ்காட்லாந்து மொத்த விற்பனைச் சங்கமும் இயங்கி வருகிறது. ஸ்காட்லாந்திலுள்ள சில்லறை விற்பனைச் சங்கங்களுக்குத் தேவைப்படும் பொருள்களை உற்பத்திசெய்தோ கொள்முதல் செய்தோ விநியோகிப்பதுதான் இதன் முக்கியப் பணி. இதற்கென்று நாடெங்கிலும் சரக்குக் கிடங்குகளை அமைத்துள்ளது. இங்கிலாந்தின் மொத்த விற்பனைச் சங்கத்தைப்போன்றே இதுவும் பல தொழிற்சாலைகளை இயக்கி வருவதோடு ஒரு வங்கிப் பிரிவையும் தொடங்கியுள்ளது. கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கமும் ஸ்காட்லாந்து மொத்த

விற்பனைச் சங்கமும் 'கூட்டுறவு காப்பீட்டுச் சங்கத்தில் (Co-operative Insurance Society) உறுப்பினர்களாக விளங்குகின்றன. 1923-ல் இவ்விரு மொத்த விற்பனைச் சங்கங்களும் சேர்ந்து தேயிலை, காப்பி, சாக்லெட் முதலிய பொருள்களின் வியாபாரத்திலும் ஈடுபடத் தொடங்கின. மேலும், தென்னிந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் சொந்தமாகத் தேயிலைத் தோட்டங்களையும் பெற்றுள்ளன.

பண்டகசாலைகள் வெற்றிபெற்றது எப்படி ?

இங்கிலாந்தில் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளன. எனவேதான் இவ்வியக்கத்தை மாதிரியாகக் கொண்டே பல்வேறு நாடுகளில் கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைந்துள்ளன. உலகிற்கே வழிகாட்டியாக விளங்கும் இக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் வெற்றிபெற்றதன் இரகசியம் தான் என்ன? முதலாவதாக இப்பண்டகசாலைகள் அனைத்தும் கூட்டுறவுக் கொள்கைகளை மிகச் சிறந்த முறையில் பின்பற்றி வந்துள்ளன. அடுத்து, இவற்றில் பணிபுரிந்தோர் அனைவரும் நேர்மையுடனும் பணிவுடனும் உழைத்தனர். பணிபுரிவோருக்கும் சங்கங்களுக்குமிடையே நல்லுறவு பேணப்பட்டு வந்தது. மூன்றாவதாக, மொத்த விற்பனைச் சங்கங்களும், பிற விற்பனைச் சங்கங்களும் விற்பனைப் பணியுடன் வங்கியையும் நடத்தி வருவதால் அவற்றின் நிதி நிலை திடமாக உள்ளது. அடுத்து, இவ்வியக்கத்தின் வெற்றிக்குப் பெண்மணிகளும் காரணமாவர். கூட்டுறவுப் பண்டகசாலைகளில் பொருள்களை வாங்குவதில் தீவிர அக்கறை காட்டினர் மேலும், இங்கிலாந்து நாட்டில் கூட்டுறவு இயக்கம் மக்களால் தொடங்கப்பட்டு மக்களின் இயக்கமாகவே இருந்து வருகிறது. அது இயல்பானதாகவும் முறையோடும் செயல்பட்டு வருகிறது. ஆறாவதாக, இச்சங்கங்கள் தமக்கு ஏற்பட்ட பிரச்சினைகளையெல்லாம் தாமாகவே தீர்த்துக்கொண்டன. மற்றவர்களின் தலையீடு ஏதுமில்லை. அதனோடு, இலாபம் அனைத்தையும் அங்கத்தினர்களுக்குப் பகிர்ந்தளிக்காமல் அதில் ஒரு பகுதியைக் காப்பு நிதியில் சேர்த்து வருவதால் நிதிப் பற்றாக்குறை ஏற்படும்போது இச்சங்கங்கள் பாதிக்கப்படுவதில்லை. கடைசியாக, இப்பண்டகசாலைகளும் விற்பனைச் சங்கங்களும் சிறந்த முறையில் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் ஆதரவும் அவ்வப்போது கிடைக்கிறது.

குறைகளும் தீர்வுகளும்

மேற்கூறிய சிறப்புகளுடன் இயங்கிவரும் இக் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் குறைகளே இல்லையென்று சொல்வதற்கில்லை.

1955ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஆணைக் குழுவின் அறிக்கையை நோக்கினால் அக் குறைகள் விளங்கும். இவ்வறிக்கையின் மூலம் தான் பல உண்மை நிலைகள் புலனாகின்றன. சான்றாக, தனியார் துறையில் இயங்கிவரும் பண்டகசாலைகள் பெருமளவில் தம் வியாபாரத்தைப் பெருக்கியுள்ளன. ஆனால், கூட்டுறவுப் பண்டகசாலைகளோ அந்த அளவிற்குத் தம் வணிகத்தை விரிவுபடுத்தவில்லை. உணவுப் பொருள்கள், காலணிகள் ஆகியவற்றின் விற்பனை 13·6 சதவீதத்திலிருந்து 7·8 சதவீதமாகக் குறைந்துள்ளது. மேலும், பல பண்டகசாலைகள் மிகச் சிறியனவாக இருப்பதையும் இவ் வறிக்கை சுட்டிக் காட்டுகின்றது. சங்கங்களுக்கிடையே கெடுதலான போட்டியும் நிலவிவருகிறது. இக் குறைகளையெல்லாம் நீக்குவதற்கு இவ் வறிக்கையில் பல உபாயங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதலாவதாக, விற்பனைச் சங்க நிர்வாகிகள் முழு நேர நிர்வாகிகளாக இருக்க வேண்டும். அவர்களது பணியில் இயக்குநர்களின் தலையீடு இருக்கக் கூடாது. இரண்டாவதாக, போட்டியைத் தவிர்க்கும்விதத்தில் சில சங்கங்கள் ஒன்றுபட்டுத் தங்களுக்குள் தொழில் இணைப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். மூன்றாவதாக, விற்பனைச் சங்கங்களுக்கு வழிகாட்டவும் அவைகளுக்கு ஆலோசனை கூறவும் தகுதி பெற்ற ஒரு 'கூட்டுறவுச் சில்லறை விற்பனை அபிவிருத்திச் சங்கம்' (Co-operative Retail Development Society) ஏற்படுத்தப்பட வேண்டும். இறுதியாக, அங்காடி விலைகளைச் சீர்தூக்கிப் பார்த்து அதற்கிணங்கத் தம் பொருள்களின் விலையை நியாயமான முறையில் நிர்ணயம் செய்ய வேண்டும்.

மேலும், வேறு பல கூட்டுறவாளர்களும் இவ் வியக்கத்தின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியுள்ளனர். 1958-ல் நடைபெற்ற மாநாட்டின்போது கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கத்தின் இயக்குநர் ஒருவர் பேசும்போது சங்கங்களுக்கிடையே ஒற்றுமை இல்லாததையும், உற்பத்தி குறைவாயிருப்பதையும் மட்டுமின்றி தவறான விலை நிர்ணயத்தாலும், தரமற்ற பொருள்களை விற்பனை செய்வதாலும் இவ் வியக்கம் சற்று சரிந்துள்ளது என்று கூறியுள்ளார். இக் குறைகளை நீக்கும் வகையில் அவர் குறிப்பிட்டுள்ள வழிமுறைகள் குறிப்பிடத்தக்கவை. சங்கங்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் சிறப்புத் தேர்ச்சியின் (Specialisation) அடிப்படையில் உற்பத்தியானால்தான் ஏராளமான பொருள்கள் தரமானதாயும் மலிவானதாயும் உற்பத்தியாகும். அடுத்து, உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கும் மொத்த விற்பனைச் சங்கங்களுக்குமிடையே நெருங்கிய நல்லுறவு நிலவ வேண்டும். மேலும், நவீன வியாபாரக் கொள்கைகள் சிறந்த முறையில் கையாளப்பட்டால்தான் விற்பனை விரிவடையும். இறுதியாக, மாறிவரும் அங்காடி நிலைமைகளை அவ்

வப்போது ஆராய்ந்து அதற்கேற்பத் தம் திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும். இவ்வுபாயங்களையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்த்தால் இவை இங்கிலாந்து நாட்டிற்கு மட்டுமின்றி உலக நாடுகள் அனைத்திற்குமே பொருத்தமானவை என்பது புலனாகும்.

கூட்டுறவு ஒன்றிப்பும் கல்விப் பணியும்
(Co-operative Union and Educational Work)

கிரேட்பிரிட்டனிலும் அயர்லாந்திலும் இயங்கி வந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் 1869-ல் கூட்டுறவு இணைப்பு ஸ்தாபனம் நிறுவப்பட்டது. மான்செஸ்டரில் நிறுவப்பட்ட இந்த ஸ்தாபனம் 800 விற்பனைச் சங்கங்களையும், 68 கூட்டுறவு அமைப்புகளையும், 36 உற்பத்திச் சங்கங்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு பணியாற்றி வருகிறது. இங்கிலாந்தின் மொத்த விற்பனைச் சங்கமும் ஸ்காட்லாந்தின் மொத்த விற்பனைச் சங்கமும் இதன் உறுப்பினர்களாக விளங்குகின்றன. கூட்டுறவுக் கொள்கைகளைப் பரப்புவதும் உறுப்பினர்களாக உள்ள சங்கங்களின் நலனைப் பேணுதலுமே இவ் விணைப்புச் சங்கத்தின் முக்கியப் பணியாகும். அதனோடு, கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் பணியையும் மேற்கொள்கிறது. மற்றபடி, வாணிகத்தில் ஈடுபடுவதோ, உறுப்பினர்களின் செயல்களில் தலையிடுவதோ அவர்களின் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்வதோ கிடையாது. இருப்பினும், எல்லா உறுப்பினர்களுமே இச்சங்கத்தின் தீர்மானங்களுக்கு ஒருமனதாகக் கட்டுப்படுகின்றனர்.

இச் சங்கம் கூட்டுறவு பற்றிய கல்வியைப் பரப்பும் பணியையும் செய்து வருகிறது. 1963ஆம் ஆண்டில் 506 உறுப்பினர் சங்கங்கள் இச் சங்கத்தின் கல்வித் திட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டதோடு மட்டுமின்றி, கல்வி வளர்ச்சிக்கென்று 5 மில்லியன் பவுன்களை வழங்கின. மேலும், இச் சங்கம் கூட்டுறவுக் கல்வியை வளர்ப்பதற்கென்று லோபரவ் (Loughborough) என்னுமிடத்தில் ஒரு கல்லூரியையும் நிறுவியுள்ளது. இதில் 120 மாணவர்கள் உயர் கல்வி பெறுகின்றனர். இவ் விணைப்புச் சங்கத்திற்குத் தேவையான நிதியை உறுப்பினர்களாக உள்ள சங்கங்களே வழங்குகின்றன.

விவசாயக் கூட்டுறவு
(Agricultural Co-operation)

பிரிட்டனில் அண்மையில்தான் விவசாயக் கூட்டுறவு தொடங்கிற்று. பெரும்பாலான நாடுகளில் விவசாயிகள் கடன் தொல்லையால் அவதியுறுகின்றனர்; ஆனால், பிரிட்டிஷ் விவசாயிகளுக்கோ

அத் தொல்லை கிடையாது. தாம் உற்பத்திசெய்யும் விவசாயப் பண்டங்களை விற்பனை செய்வதிலும் இவர்களுக்குத் தொல்லை ஏதுமில்லை. ஆனால், சாகுபடிக்குத் தேவையான விதைவித்துகள், கருவிகள், உரங்கள், கால்நடைத் தீவனங்கள் ஆகியவை தேவையான அளவு இவர்களுக்குக் கிடைப்பது அரிது. எனவே, இந்நாட்டு விவசாயிகள் ஒன்றுசேர்ந்து கூட்டுறவுத் தேவைச் சங்கங்களை (Requirement Societies) அமைக்க எண்ணி 1867-ல் முதல் சங்கத்தைத் தொடங்கினர். விவசாயிகளுக்குத் தேவைப்படும் பொருள்களைக் கொள்முதல் செய்து நியாய விலையில் உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்வதையே இச் சங்கம் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. நாளடைவில் இச் சங்கங்கள் வளர்ந்து கால்நடைத் தீவனங்களைத் தாமே தயாரிக்கத் தொடங்கின. வேறு சில சங்கங்கள், தானியங்கள், உருளைக்கிழங்கு, முட்டை, கம்பளி போன்ற விவசாயப் பொருள்களை விற்பனை செய்யும் பணியை மேற்கொண்டன. இவ்வாறாக, விவசாயச் சங்கங்கள் மூன்று வகையாக வளர்ந்தன: 1. உறுப்பினர்களுக்குத் தேவைப்பட்ட விவசாயப் பொருள்களை நியாய விலைக்கு விநியோகம் செய்யும் சங்கங்கள். இவற்றைத் தேவைச் சங்கங்கள் எனலாம். 2. உறுப்பினர் உற்பத்தி செய்யும் விவசாயப் பொருள்களுக்கு விற்பனை ஏற்பாட்டைச் செய்துதரும் சங்கங்கள். இவற்றை விற்பனை ஏற்பாட்டுச் சங்கங்கள் எனலாம். இச் சங்கங்கள் முட்டை, பன்றி இறைச்சி, பால் பண்ணைப் பொருள்கள், கம்பளி ஆகிய பொருள்களுக்கு விற்பனை ஏற்பாட்டைச் செய்து தருகின்றன. 3 விவசாயிகளுக்குப் பல வகைப் பணிபுரியும் சங்கங்களைச் சேவைச் சங்கங்கள் எனலாம். கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பொறுக்குவிதை சேகரித்தல் போன்ற காரியங்களில் இச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு உறுதுணையாயுள்ளன.

மேற்கூறிய மூன்றுவகைச் சங்கங்களைத் தவிர, பொதுநோக்குச் சங்கங்களும் (General Purpose Society) தற்போது பிரபலமடைந்து வருகின்றன. பெரும்பாலும் நகரங்களில் அமைக்கப்படும் இச் சங்கங்களுக்கு அருகில் பண்டகங்கள், ஆய்வுக் கூடங்கள், இயந்திரங்களைப் பழுதுபார்க்கும் நிலையங்கள் ஆகியவை அமைக்கப்படுகின்றன. 1962ஆம் ஆண்டின் கணக்கின்படி விவசாயச் சங்கங்களின் மொத்த விற்பனை 223 மில்லியன் பவுன்களாகும். இங்கிலாந்திலுள்ள விவசாயச் சங்கங்கள் அனைத்தும் சேர்ந்து 1956ஆம் ஆண்டு 'விவசாய மத்தியக் கூட்டுறவுச் சங்கம்' என்ற கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் புள்ளி விவரங்களைச் சேகரிக்கவும் பிற நாட்டு ஒப்பந்தங்களைப் பரிசீலிக்கவுமே இக் கூட்

டமைப்புச் சங்கம் உருவாக்கப்பட்டது. சந்தை நிலவரங்களையும் இது வெளியிடுகிறது. வரிவிதிப்பு சம்மந்தப்பட்ட விதிமுறைகள், வணிகப் பழக்க வழக்கங்கள், அரசாங்க மானியம் (Govt. Grant) போன்ற பல முக்கியப் பிரச்சினைகளுக்கும் இது தீர்வு காண விழைகிறது. 1964ஆம் ஆண்டு அமுலாக்கப்பட்ட விவசாயச் சட்டத்தை உருவாக்கியதில் இதற்குப் பெரும் பங்கு உண்டு. இக் கூட்டமைப்பு கூட்டுறவுக் கொள்கைகளை நாடெங்கும் பரப்புவதற்கென்று 'பண்ணைத் தொழில்' (Farming Business) என்ற பத்திரிகையை நடத்தி வருகிறது. இங்கிலாந்தில் மட்டும் இயங்கிவரும் இக் கூட்டமைப்பைப் போன்று ஸ்காட்லாந்திலுள்ள விவசாயச் சங்கங்களும் 1905-ல் 'ஸ்காட்லாந்து விவசாய அமைப்புச் சங்கம்' (Scottish Agricultural Organisation Society) என்ற கூட்டமைப்பொன்றைத் தொடங்கின. அதுபோல் வேல்ஸ் விவசாயச் சங்கங்களும் 1922ஆம் ஆண்டு ஒரு கூட்டமைப்பை அமைத்தன. இம் மூன்று கூட்டமைப்புகளுமே ஏறக்குறைய ஒரேவிதமான பணிகளே புரிந்து வருகின்றன.

இங்கிலாந்து நாட்டிலுள்ள விவசாயச் சங்கங்கள் பொதுவாக அரசிடமிருந்து எவ்வித நிதி உதவியையும் எதிர்பார்ப்பதே கிடையாது. மேலும், நிதி வசதியைப் பெறுவதற்கென்று இவை கூட்டமைப்புகளை நிறுவுவதுமில்லை. உறுப்பினர்களின் பங்கு மூலதனத்தையே இச் சங்கங்கள் நம்பியுள்ளன. உறுப்பினர்கள் தம் பங்கு மூலதனத்தை அதிகரிக்கும் வகையில் ஊக்குவிக்கப்படுகின்றனர். தற்போது இங்கிலாதிந்லுள்ள விவசாயச் சங்கங்கள் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கத்தின் துணையுடன் 'விவசாய நிதி ஐக்கியம்' (Agricultural Finance Federation) ஒன்றை உருவாக்கியுள்ளன. விவசாயக் கருவிகள், சாதனங்கள் போன்றவற்றை வாங்குவதற்கு இந்த ஐக்கியம் விவசாயிகளுக்குக் கடனுதவி அளிக்கிறது. அண்மையில் விவசாயக் கூட்டமைப்புச் சங்கங்கள் இங்கிலாந்தின் மொத்த விற்பனைச் சங்கத்துடன் இணைக்கப்பட்டு விட்டதால், இம் மொத்த விற்பனைச் சங்கமே விவசாய வளர்ச்சிக்கென்று தனித் துறையொன்றை நிர்வகித்து வருகிறது.

அரசின் பங்கு

இங்கிலாந்து நாட்டில் கூட்டுறவுக்கென்று தனி அரசாங்கத் துறை ஏதுமில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்படுவதற்கென்று 'தலைமைப் பதிவாளர்' (Chief Registrar) நியமிக்கப்பட்டுள்ளார். 1898ஆம் ஆண்டு அமுலாக்கப்பட்ட சட்டத்தின்படியும் சங்கங்கள் பதிவு செய்துகொள்ள முடிகிறது. இச் சட்டத்தின்

விதிப்படி கூட்டுறவுச் சங்க உறுப்பினர் எவரும் 1000 பவுன் மதிப்புள்ள பங்கிற்குமேல் வைத்திருக்கக்கூடாது. கூட்டுறவுச் சங்கங்கள் தம் வருமான மிகுதியின் (Surplus Income) அடிப்படையில் அரசிற்கு வரி செலுத்தி வருகின்றன. இவ்வாறாக, இங்கிலாந்து நாட்டின் கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்க உதவி ஏதுமின்றித் தாமாகவே இயங்கும் மக்கள் இயக்கமாகப் பணியாற்றி வெற்றி நடை போட்டு வருவது பிற நாடுகளுக்கு எல்லாம் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

4. ஜெர்மனியில் கூட்டுறவுக் கடன் இயக்கம்

(Co-operative Credit Movement in Germany)

உலகிலேயே முதன்முதலில் கூட்டுறவுக் கடன் இயக்கம் தோன்றியது ஜெர்மனியில்தான். 19ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் ஜெர்மனி நாட்டு மக்கள் பசி, பஞ்சம், நோய் முதலிய கொடுமைகளுக்கு இரையாகி, வாழ வழியின்றித் தவித்தனர். கிராமப்புறங்களில் வாழ்ந்துவந்த விவசாயிகளும் நகர்ப்புறங்களி லிருந்த கைத்தொழிலாளர்களும் வாழ்க்கை வசதிகளின்றி வறுமை யில் வாடினர். தங்களுக்குப் பணம் தேவைப்பட்டபோதெல்லாம் அங்கிருந்த யூத மக்களிடம் கடும் வட்டிக்குக் கடன் வாங்கினர். கடனுதவியளிக்க வேறெந்த நிறுவனங்களும் இல்லாததால் யூதர் களின் பிடியில் சிக்கித் தவித்தனர் பெரும்பாலோர். யூதர்களின் வட்டிக் கடையில் கடன்பெற்று ஆயிரமாயிரம் குடும்பங்கள் சீரழிந்தன. இந் நிலையில் கூட்டுறவுக் கடன் இயக்கம் அங்கு தோன்றியதில் வியப்பொன்றுமில்லை.

இயக்கத்தின் முன்னோடிகள்

ஜெர்மனியில் கூட்டுறவு இயக்கம் தோன்ற வழிவகுத்தவர்கள் 'சூல்ஸ்' (Herr Schulze) என்பவரும் 'ரைஃபீசன்' (Herr F. W. Raiffeisen) என்பவரும் ஆவர். கூட்டுறவு இயக்கத்தை முறையாக வளர்த்தவர்களும் இவர்கள்தாம். இவர்களில் சூல்ஸ் என்பவர் 'டெலிச்' (Delitzsch) என்ற நகரின் தந்தையாகப் (Mayor) பணிபுரிந்து வந்தார். டெலிச் வட்டார முழுவதும் வாழ்ந்த மக்கள் யூதர்களின் பிடியில் சிக்கித் தவித்ததைக்கண்டு மனம் நெகிழ்ந்தார். தங்களுடைய உடைமைகளையும், ஆடுமாடுகளையும், விளைச்சலையும் கூட யூதர்களிடம் அடைமானம் வைத்து உண்ண உணவின்றி அவதிப்பட்ட மக்களை நல்ல முறையில் வாழவைக்க வேண்டுமென்று விரும்பினர். பஞ்சக் குழுவின் தலைவராகவும் பணியாற்றிய கார ணத்தால் வறுமையின் கொடுமையை நேரில் உணர்ந்தார். நீதிபதி

யாகவும் பணியாற்றிவந்த இவர் தமது பதவியைத் துறந்து பொது வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டு, நண்பர்களின் உதவியால் ஒரு ரொட்டிக் கிடங்கை ஆரம்பித்து ஏழை மக்களுக்கு இலவசமாக ரொட்டி வழங்க ஏற்பாடு செய்தார். தன் கையே தனக்குதவி (Self help) ஒருவருக்கொருவர் உதவி (Mutual help) என்னும் இரு தத்துவங்களின் அடிப்படையில் வறுமைப் பிணியிலிருந்து ஜெர் மானிய மக்களை விடுவிக்கத் திட்டமிட்டார். 1849 ஆம் ஆண்டு காலணித் தொழிலாளர்களின் நலன் கருதி முதற் கூட்டுறவு அமைப் பைத் தொடங்கினர். உறுப்பினர்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை வேண்டியபோது விநியோகம் செய்வதற்காகவே இவ் வமைப்பை உருவாக்கினர். பின்னர் 1850-ல் தமது சொந்த நகரில் ஒரு கூட்டுறவுக் கடன் சங்கத்தைத் தொடங்கினர் இச்சங்கத்தின் மூலம் அங்கத்தினர்களுக்கு மலிவான கடன் உதவியைச் செய்து வந்தார். விரைவில் இச்சங்கம் நகர மக்களிடையே மிகுந்த செல் வாக்குப் பெற்றுவிட்டது. மிகக் குறுகிய காலத்தில் இக்கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விரிவடைந்தன. பின்னர் 1859 ஆம் ஆண்டு இவர் வங்கிகளின் பிரதிநிதிகளைக்கொண்ட கருத்தரங் கொன்றைச் சிறப்பாக நடத்திப் பேரும் புகழும் பெற்றார். அக் கருத்தரங்குக் கூட்டத்தின் இறுதியில் ஜெர்மனியிலிருந்த தொழிற் சங்கங்களின் நலனுக்காக ஒரு 'பொதுவான ஒன்றிப்புச் சங்கத்தை' (General Union) அமைக்கவேண்டுமென முடிவெடுக்கப்பட்டதால் அவ் வமைப்பை உடனடியாகத் தோற்றுவித்து அதன் தலைவராக இவரே தேர்ந்தெடுக்கப்பட்டார். தமது கடைசிக் காலம்வரை இப் பதவியி லேயே இருந்து சிறந்த பணியாற்றி வந்தார். இவர் மறையும் தருணத்தில் ஜெர்மனியில் 1926 கூட்டுறவு வங்கிகள் வலிமை யுடன் பணியாற்றி வந்தன. பொதுநலத்தையே தம் வாழ்க்கை யின் குறிக்கோளாகக்கொண்டு இவர் வளர்த்த வங்கிகள்தாம் உலகிற்கே எடுத்துக்காட்டாக விளங்கி வருகின்றன.

சூல்ஸ்-டெலிச் வங்கிகளின் இயல்புகள்

நகரங்களில் வாழ்ந்துவந்த சிறிய வியாபாரிகள், கைவினை ஞர்கள், நடு வகுப்பினர் ஆகியோருக்கு மலிவான கடனுதவி செய்வ தற்கென்றே இவ் வங்கிகள் தொடங்கப்பட்டன. எனவே இவ் வங்கிகள் நகர வங்கிகள் (Town Banks) என்றும் அழைக்கப்படு கின்றன இவை உறுப்பினர்களுக்கு மட்டுமே கடனுதவி செய்த தால் நகரில் வாழ்ந்த பெரும்பாலானோர் உறுப்பினர்களாக விளங்கினர்.

இவ் வங்கிகள் பணியாற்றிய பகுதி விரிவானதாயிருந்ததால் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதிகமாயிருந்தது. பல்வேறு

பகுதிகளில் வாழ்ந்து வந்தவர்கள் உறுப்பினர்களாக இருந்தமையால் அவர்களுக்கிடையே நெருங்கிய தொடர்பு இல்லாமலிருந்தது.

நிர்வாகம் : இவ் வங்கிகளின் நிர்வாகம் மக்களாட்சி அடிப்படையில் நடைபெற்றது. எல்லா உறுப்பினர்களும் கொண்ட பொதுக் குழு நிர்வாகக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைக்கொண்டு நிர்வாகம் செய்து வந்தது. இந்த நிர்வாகக் குழுவில் நல்ல பயிற்சி பெற்றவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டதால் வங்கிகள் சிறந்த முறையில் செயல்பட முடிந்தது. இவ் வங்கிகள் ஒவ்வொன்றும் 1. பணத்துறை, 2. கணக்குத்துறை, 3. பொதுத் துறை என்ற மூன்று பிரிவுகளைக்கொண்டு, ஒவ்வொரு பிரிவும் சிறந்த அலுவலர் வழியாகக் கண்காணிப்புடன் நடைபெற்று வந்தது.

பொறுப்பு : தொடக்கத்தில் 'வரையறையற்ற பொறுப்பின்' (Unlimited Liability) அடிப்படையில் இயங்கிவந்த இவ் வங்கிகள் 1889ஆம் ஆண்டின் சட்டத்தின் வழியாக "வரையறுக்கப்பட்ட பொறுப்பின்" அடிப்படையில் இயங்கத் தொடங்கின. அவ்வாறு வரையறுக்கப்பட்ட பொறுப்பினையுடையதாக மாற்றப்பட்ட பின்னர்த்தான் மக்கள் பெருமளவில் இவ் வங்கிகளின்பால் ஈடுபாடு கொண்டனர்.

நிதி, மூலதனம் : பெரும்பாலும் பங்கு மூலதனத்தைக் கொண்டே இவ் வங்கிகளின் நிதி உருவாயிற்று. உறுப்பினர் அனைவரும் பங்கு மூலதனத்தைச் செலுத்தவேண்டும். இப் பங்கு மூலதனம் ஒரே அளவாக இல்லாமல் வங்கிக்கு வங்கி வேறுபட்டிருந்தது. எனினும், பொதுவாக பங்கின் விலை 15 பவுன்கள் முதல் 20 பவுன்கள் வரை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஒருசில வங்கிகளில் 50 பவுன்களாகவும் நிர்ணயம் பெற்றிருந்தது. பங்கு மூலதனம் அதிகமாயிருந்த காரணத்தால் உறுப்பினர்கள் தவணை முறையில் செலுத்துவதற்கான வாய்ப்பும் கொடுக்கப்பட்டது. பங்குத் தொகையை முழுவதும் செலுத்திய உறுப்பினர்களுக்குத் தாம் ஆண்டின் இறுதியில் இலாப ஈவு தரப்பட்டது. எனவே, பெரும்பாலான உறுப்பினர்கள் பங்குத் தொகையை ஒரே தவணையில் செலுத்தி வந்தனர். இப் பங்குத் தொகையன்றி, உறுப்பினர்களிடமிருந்து நுழைவுக் கட்டணமும் வசூலிக்கப்பட்டது.

வங்கிகளின் இலாபத்திலிருந்து காப்பு நிதி (Reserve Fund) உருவாக்கப்பட்டு, அது நடைமுறை முதலாகவும் பயன்படுத்தப்

பட்டது. நிதிப் பற்றுக்குறை ஏற்படும்போதும் இக் காப்பு நிதி பயனுயிற்று. நடைமுறையில் உறுப்பினர்களின் நுழைவுக் கட்டணமும் காப்பு நிதியோடு சேர்க்கப்பட்டது. மேலும், இன்றைய வங்கிகளைப்போல் இவ் வங்கிகளும் உறுப்பினர், உறுப்பினரல்லாதோரிடமிருந்து வைப்புத் தொகையையும் (Deposit) பெற்று வந்தது. அதனோடு, மாற்று உண்டியல்களைத் தள்ளுபடி செய்ததன் (Discounting bills of exchange) வாயிலாகவும் இவ் வங்கிகளுக்குக் கணிசமான நிதி வசதி ஏற்பட்டது.

சிறந்த கூட்டுறவாளராக மதிக்கப்படும் சூல்ஸ் என்பவர் காலமறிந்து தொடங்கிய இக்கூட்டுறவு வங்கிகள் மாபெரும் சாதனையை நிகழ்த்தியுள்ளன. யூத இனத்தவரின் பிடியிலிருந்து ஜெர்மனிய மக்களை விடுவிக்க விரும்பிய இவர் யூத இனத்தவரைத் தண்டிப்பதற்குப் பதிலாக அவர்களது தொழிலையே சிறந்த முறையில் அமைத்து அவர்களை முறியடித்தது அவர் செய்த மாபெரும் தொண்டாகும். இன்றும் அவரது வங்கிகளின் அடிப்படையில் தான் நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் செயல்படுகின்றன.

ரைஃபீசன் வங்கிகள்

ஜெர்மனியில் கூட்டுறவு இயக்கம் வேரூன்றித் தழைக்கக் காரணமாயிருந்தவர் ரைஃபீசன் அவர்கள்தாம். 'வெயர்பச்' (Weyerbusch) நகரின் மேயராகப் பணியாற்றியபோது வறுமையில் வாடிய விவசாயிகளையும் கொள்ளை வட்டி வாங்கும் வட்டிக் கடைக்காரர்களையும் ஒருசேரக் கண்டார். வறுமையால் வாட்டம் கொண்ட அப்பகுதி விவசாய மக்களை வாழ்விக்க எண்ணி அரசாங்கத்திடம் தானிய வகைகளைக் கடனாகப்பெற்று அவர்களுக்கு வழங்கினர். அதனோடு, ஏழைகளுக்கென ஒரு குழுவை அமைத்து அதன் வழியாக வறுமையுற்றோருக்கு இலவசமாக உணவுப் பொருள்களை வழங்கினர். இத் தற்காலிக உதவியால் மட்டும் வறுமையை விரட்டிவிட முடியாதென்பதை உணர்ந்து நிரந்தரமான வேறு பல திட்டங்களையும் தீட்டத் தொடங்கினர். ஆனல், அவர் வேறொரு நகருக்கு மாற்றலாகிவிட்டார். எனினும், தம் கொள்கைகளையும் குறிக்கோளையும் மாற்றாமல் 1849 ஆம் ஆண்டு ஏழை விவசாயிகளுக்கென்று ஒரு கழகத்தை உருவாக்கினர். நிதி வசதியைப் பெற விரும்பிய விவசாயிகள் ஆர்வத்துடன் இக்கழகத்தில் சேர்ந்தனர். பல செல்வந்தர்களின் உதவியுடன் இக் கழகம் தொடங்கப்பட்டதால் ஆயிரக்கணக்கான ஏழை விவசாயிகள் யூதர்களின் கோரப் பிடியிலிருந்து விடுபட்டனர். இதன் பின்னர் 'ஹெடட்டஸ்டார்ப்' (Heddesdorf) என்னும் நகரில் ஏழைகளுக்கென ஒரு கூட்டுறவுச்

சங்கத்தைத் தொடங்கினர். அப் பகுதியில் வாழ்ந்த செல்வந் தர்கள் பலர் தம் சேமிப்புத் தொகையை இச் சங்கத்திடம் வட்டிக்கு விட்டனர். அப் பணத்தை ஏழை விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுத்தார். இந்த வங்கியின் நிர்வாகிகள் நேர்மையுடன் பணி யாற்றியதோடு, கடன் வாங்கிய விவசாயிகளும் உரிய காலத்தில் அதைத் திருப்பிக் கொடுத்து வந்தனர். எனவே, வெற்றிநடை போட்டுவந்த இந்த சங்கத்தையே 'ஹெட்டஸ்டார்ப் கடன் ஒன்றிப்புச் சங்கம்' என்ற பெயரில் மாற்றி, 'ஒவ்வொருவரும் அனைவருக்காகவும், அனைவரும் ஒவ்வொருவருக்காகவும்' என்ற தத்துவத்தின் அடிப்படையில் இதை இயக்கி வந்தார். பின்னர், 1877-ல் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றிப்பு அமைக்கப் பட்டது. நாளடைவில் இது ரைஃபீசன் சங்கம் எனப் பெயர் பெற்றது. கிராமப்புறக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழிகாட்டியாக விளங்கும் ரைஃபீசன் சங்கம் கூட்டுப் பொறுப்பு, கூட்டு உழைப்பு, நேர்மை ஆகிய மூன்றையும் வலியுறுத்தி வந்ததால் இச் சங்கம் மிக விரைவில் வளரலாயிற்று. இவ்வாறாக, ரைஃபீசனின் தளரா உழைப்பால் உயர்ந்த கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வாறு செயல் பட்டன என்பதைக் காண்போம்.

வட்டிக் கடைக்காரர்களின் பிடியிலிருந்து ஏழை விவசாயி களைக் காப்பதற்காக உருவாக்கப்பட்ட இவரது சங்கங்கள் உறுப் பினர்களுக்கு மலிவான கடனுதவிகள் செய்ததோடு, அவர்க ளிடையே சிக்கனத்தையும் தோற்றுவிக்கப் பாடுபட்டன. இதனால் சிறு சேமிப்புகள் ஊக்குவிக்கப்பட்டன. கிராமப்புறங்களில் ஏழ்மை நிலையில் வாழ்ந்துவந்த விவசாயிகளின் முன்னேற்றத்திற்காகத் தொடங்கப்பட்டதால் ஒரு கிராமத்திற்கு ஒரு சங்கம் என இயங் கியது. எனவே, உறுப்பினர்களிடையே நல்லுறவு நிலவியது. ஏனைய சங்கங்களைப்போன்று இச் சங்கங்களும் எல்லா உறுப்பினர் களையும் கொண்ட பொதுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவினரால் நிர்வகிக்கப்பட்டன. பொதுக் குழு ஆண்டிற்கொருமுறை கூடி அவ் வாண்டின் நிலவரத்தையும், அடுத்த ஆண்டிற்கான திட்டங்களையும் பரிசீலித்து வந்தது.

இச் சங்கங்கள் பெருப்பாலும் வரையறையற்ற பொறுப்பினைக் கொண்டதால் உறுப்பினர்கள் இப் பொறுப்பின் தன்மையறிந்து நடந்து கொண்டனர். ஏனைய சங்கங்களைப்போல் இவற்றிற்குப் பங்கு மூலதனம் இல்லை. பெரும்பாலும் ஏழை விவசாயிகளே இச் சங்கங்களின் உறுப்பினர்களாக இருந்ததால் செல்வந்தர்களின் வைப்புத் தொகையைக்கொண்டே இவை இயங்கின. ஆனால், 1889ஆம் ஆண்டின் சட்டப்படி பங்கு மூலதனம் இன்றியமையாத

தாயிற்று. எனவே 5 முதல் 10 ஜெர்மன் மார்க் என்று மிகக் குறைந்த பங்குத் தொகை நிர்ணயிக்கப்பட்டது. இதனால் விவசாயிகள் யாரும் பாதிக்கப்படவில்லை.

இச் சங்கங்களின் இலாபத்தில் மூன்றில் இரண்டு பங்கு காப்பு நிதிக்கென ஒதுக்கப்பட்டது. அதோடு, உறுப்பினர்களிடமிருந்து வைப்புத் தொகையையும் பெற்று வரலாயிற்று. உறுப்பினர்களின் தேவைகளையும் நாணயத்தையும் நன்கு பரிசீலித்து இயங்கி வந்ததால் இச்சங்கங்கள் வெற்றி பெற்றதோடு நன்கு வளரவும் தொடங்கின. வெறும் கடன் உதவிகளை மட்டுமின்றி, வேறு சில பணிகளையும் இச் சங்கங்கள் செய்துவந்தன. பெரும்பாலான உறுப்பினர்கள் விவசாயிகளானதால் அவர்களுக்குத் தேவைப் பட்ட விவசாயக் கருவிகள், விதை, உரம் ஆகியவற்றை உரிய காலத்தில் விநியோகம் செய்து வந்தது. இப்பணிகள் தாம் இச் சங்கங்களின் தனிச் சிறப்பாகும்.

ரைஃபீசனின் முயற்சியால் உருவாக்கப்பட்ட இக் கூட்டுறவுச் சங்கங்கள் மகத்தான சாதனைகளைப் புரிந்துள்ளன. வட்டிக் கடைக் காரர்களிடமிருந்து ஏழை, எளிய மக்களைக் காப்பாற்றியதுதான் பெரும் சாதனை. ஜெர்மனியின் தென்மேற்குப் பகுதியில்தான் இச் சங்கங்கள் ஏராளமாக உள்ளன. விவசாயிகளில் சுமார் 50% பேர் இச் சங்கங்களின் உறுப்பினர்களாக இருந்து வருகின்றனர். இச் சங்கங்களின் வளர்ச்சியும், அதனால் ஏற்பட்ட மக்களின் பொருளாதார ஏற்றமும் பிற நாடுகளுக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கியதில் வியப்பொன்றுமில்லை.

சங்கங்களின் தத்துவங்களும் செயல் முறைகளும்

இதுவரை ஜெர்மனியில் தோன்றி வளர்ந்துள்ள இருவகை யான சங்கங்களைப்பற்றி ஆராய்ந்தோம். சூல்ஸ் சங்கங்களும் ரைஃபீசன் சங்கங்களும் எந்த அடிப்படையில் இயங்கி வருகின்றன, இவ்விருவகைச் சங்கங்களுக்கு மிடையேயுள்ள வேற்றுமைகள் யாவை என்பதை இப்போது பார்க்கலாம். அடிப்படை நோக்கம் ஒன்றெனினும் இவை இயங்கும் விதமும் ஆற்றும் பணிகளும் வெவ்வேறு, சூல்ஸ் சங்கங்கள் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலும் ரைஃபீசன் சங்கங்கள் கிராமப்புறங்களிலும் இயங்கி வருகின்றன. எனவே, சூழ்நிலைக்கேற்ப இவை வெவ்வேறு தத்துவங்களின் அடிப் படையில் இயங்குவது இயல்பு.

வேறுபாடுகள்

ரைஃபீசன் சங்கம்	சூல்ஸ் சங்கம்
1. வரையறையற்ற பொறுப்புடையது.	1. வரையறுக்கப் பட்ட பொறுப்புடையது.
2. பணிபுரியும் பகுதி சிறியது; கிராம அளவில் இயங்குவது.	2. பணிபுரியும் பகுதி பெரியது. பல கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இயங்குவது.
3. விவசாயிகளுக்கென ஆரம்பிக்கப் பட்டது; எனவே பெரும் பாலான உறுப்பினர்கள் விவசாயிகள் தாம்.	3. பெரும்பாலும் நகரங்களில் வாழ்ந்த கைத்தொழிலாளரும், தொழிலாளர்களுமே உறுப்பினர்களாக உள்ளனர்.
4. பங்குகளின் விலை மிகச் சாதாரணமானது.	4. பங்குகளின் விலை கணிசமானது.
5. உறுப்பினர்களின் சொத்துகள், அவர்களது நாணயம், நேர்மை, வரலாறு ஆகியவற்றின் அடிப்படையில் கடன் கொடுக்கப்பட்டது.	5. உறுப்பினர்கள் கொண்டுள்ள பங்கு மூலதனத்தின் அடிப்படையில் கடன் அளிக்கப்பட்டது. அவர்களின் குணங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படவில்லை.
6. பெரும்பாலும் நீண்ட காலக் கடனே தரப்பட்டது. எனவே தவணை முறையில் கடனைத் திருப்பிக் கொடுக்க வகை செய்யப்பட்டது.	6. குறுகிய காலக் கடன் தான் வழங்கப்பட்டது. பெற்ற கடனை ஒரே தவணையில் திருப்பித் தருவதற்கான விதி இருந்தது.
7. பொருள் உற்பத்திக்கென்று தான் கடன் தரப் பட்டது எனவே, அத்தொகை உற்பத்திக்காகப் பயன்படுத்தப் பட்டதா என்று கண்காணிக்கப் பட்டது.	7. உற்பத்தி காலங்களுக்கு மட்டும் கடன் கொடுக்கப் பட்டது. அக்கடன் தொகை உரிய நோக்கத்திற்காகப் பயன் பட்டதா என்று பரிசீலிக்கப்படவில்லை.
8. இலாப நோக்கமில்லாததால் உறுப்பினர்களுக்கு இலாப ஈவுத்தொகை வழங்கப்படவில்லை.	8. இலாபத் தொகையிலிருந்து உறுப்பினர்களுக்கு இலாப ஈவு அளிக்கப்பட்டது.

ரைஃபீசன் சங்கம்	சூல்ஸ் சங்கம்
9 உறுப்பினர்களுக்குக் கடன் உதவி மட்டுமின்றி, பிற உதவிகளும் செய்யப்பட்டன.	9. கடனுதவி மட்டுமே அளிக்கப்பட்டது; அதாவது வங்கித் தொழில் மட்டுமே மேற்கொள்ளப் பட்டது.
10, நிர்வாகப் பணியாளர்களுக்கு ஊதியம் கிடையாது.	10. நிர்வாகப் பணியாளர்கள் ஊதியம் பெற்றனர்.
11. உறுப்பினர்களின் ஒழுக்கம், நேர்மை, கண்ணியம் போன்ற குணங்கள் ஊக்குவிக்கப்பட்டன.	11. உறுப்பினர்களின் குணங்கள் கருதப்படாமல் அவர்களின் பொருளாதார முன்னேற்றமே முக்கியக் குறிக்கோளாக இருந்தது.

இவ்வாறாக, ஜெர்மனி நாட்டின் கூட்டுறவாளர்கள் இருவருமே வசதிகுறைந்த ஏழைகளுக்கென்றே செயல்பட்டனர். எனினும், 'சூல்ஸ்' சங்கங்கள் இலாப நோக்கை அடிப்படையாகக் கொண்டு பணியாற்றின. ரைஃபீசன் சங்கங்களோ மனிதாபிமான அடிப் படையில் தொண்டாற்றின. இவ்விரு வகைக் கூட்டுறவுச் சங்கங் களுமே எல்லா நாடுகளுக்கும் கலங்கரை விளக்கம் போல் திகழ் கின்றன.

ஜெர்மனியில் இயங்கி வந்த கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அனைத்தும் முதல் உலகப் போரைத் தொடர்ந்து ஏற்பட்ட பண வீக்கத்தால் (Inflation) பெரிதும் பாதிக்கப்பட்டன. இவற்றி லிருந்து வைப்புத் தொகை கணிசமாகக் குறைய ஆரம்பித்தது; அதே சமயம் கடன் பெற விரும்பியோர் அதிகரித்தனர். எனவே, இந்த இக்கட்டான நிலையைச் சரிபடுத்துவதற்காக பிரசியாவில் இயங்கி வந்த மத்தியக் கூட்டுறவு வங்கி தலைமை வங்கியாகச் செயல்படத் தொடங்கியது. இவ்வங்கியின் சிறப்பான நடவடிக்கைகளால் கூட்டுறவு வங்கிகள் மீண்டும் பலம் பெற்றுத் திறமையுடன் பணியாற்றத் தொடங்கின. இந் நாட்டின் சர்வாதிகாரியாக விளங்கிய ஹிட்லர் காலத்தில் கூட்டுறவு வங்கிகள் நல்ல வளர்ச்சியடைந்தன. விவசாயிகளுக்குக் கடன் உதவி அளிக்க வணிக வங்கிகள் (Commercial Banks) முன் வாரத தால், கூட்டுறவு வங்கிகள் விவசாயத் துறையில் அக்கறை காட்டி வளர்ச்சி பெற்றன. 1915-ல் 28,458ஆக இருந்த கூட்டுறவு வங்கிகள் 1935-ல் 40,713 ஆக அதிகரித்து 1940-ல் 38,843 ஆகக் குறைந்துள்ளதாக அறிய வருகிறோம்.

1945-ல் ஏற்பட்ட நாசமும் அதன் பின்னரும்

ஹிட்லரின் போர் வெறியாலும் முறையற்ற செயல்களாலும் ஐக்கியமாக இருந்து வந்த ஜெர்மனி நாடு 1945-ல் 'ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு,' 'ஐக்கியக் குடியரசு' என்று பிளவுபட்டு உடைந்தது. ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு சோவியத் நாட்டின் ஆதிக்கத்திற்குட்பட்டதால் இங்கு, சோவியத் நாட்டிலுள்ள கூட்டுப் பண்ணை முறை (Collective Farming) புகுத்தப்பட்டது. இதையொட்டியே விவசாயச் சங்கங்களும் அமைக்கப்பட்டன. ஐக்கியக் குடியரசாக விளங்கும் ஜெர்மனியில் கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் வளர்ச்சி பெற்று நான்கு வகையான கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்புமிக்க பணிகளால் ஊக்கம் பெற்றது.

1. **கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள்** (Rural Societies) ஜெர்மனியின் ஐக்கியக் குடியரசின் கூட்டுறவு இயக்கத்தில் கிராமப் பல நோக்குச் சங்கங்கள்தாம் (Rural Multi Purpose Societies) பிரபலமானவை. இச் சங்கங்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான கடனுதவி அளிப்பதோடு மட்டுமின்றி, விவசாயத்திற்குத் தேவையான இயந்திரங்கள், கருவிகள், விதை, உரம் ஆகிய பல்வேறு பொருள்களை நியாய விலைக்கு விநியோகம் செய்கின்றன. இச் சங்கங்கள் ரைஃபீசன் அமைத்த சங்கங்களை முன்னோடியாகக் கொண்டு இயங்கி வருகின்றன. விவசாயப் பொருள்களை விற்கின்ற பணியையும் இச்சங்கங்களே மேற்கொண்டுள்ளதால் விவசாயிகளின் பிரச்சினைகள் குறைந்துவிட்டன. 1966ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இவ்வகைச் சங்கங்கள் 22,000 இருப்பதாகவும் இவற்றில் 4.4 மில்லியன் பேர் அங்கத்தினர்களாக இருப்பதாகவும் அறிய வருகிறோம். இச்சங்கங்கள் பெரும்பாலும் கிராமப் புறங்களில்தாம் இயங்கி வருகின்றன. மேலும், ஒவ்வொரு கிராமத்திலும் இச்சங்கம் பணியாற்றி வருவதாகவும் தெரிகிறது.

2. **நகர்ப்புறச் சங்கங்கள்** (Urban Societies) சூல்ஸ் சங்கங்களை மாதிரியாகக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் நகர்ப் புறங்களில் இயங்கிவருகின்றன. இவற்றில் மருத்துவர்கள் மருந்து தயாரிப்பாளர், சில்லறை விற்பனையாளர், உண்டிச்சாலை நடத்துவோர் போன்ற நகர்ப்புறவாசிகளே பெரும்பாலும் அங்கத்தினர்களாக உள்ளனர். சில்லறை விற்பனையாளர் ஒன்று சேர்ந்து கூட்டுறவு மொத்த விற்பனையில் ஈடுபட்டிருப்பதுமேற்கு ஜெர்மனிக் கூட்டுறவு இயக்கத்தின் தனிச் சிறப்பாகும். இச் சங்கங்களுக்கென்று ஒரு மத்திய அமைப்பு உள்ளது. உறுப்பினராகவுள்ள சில்லறை விற்பனைச் சங்கங்கள் தமக்கு வேண்டிய சரக்குகளை இவ்வமைப்பிடமிருந்தே கொள்முதல் செய்கின்றன. கைத்தொழில்

செய்யும் தொழிலாளருக்கும், அவர்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கும் தனித் தனியாகச் சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. 1965-66 ஆம் ஆண்டின் கணக்குப்படி இச்கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த விற்பனை 20 மில்லியன் ரூபாயாகும். 1965ஆம் ஆண்டு இறுதியில் 13,41,000 உறுப்பினர்களைக் கொண்ட 706 'மக்கள் வங்கிகளும்' (Peoples' Banks) 15,300 உறுப்பினர்களைக் கொண்ட 33 கடன் வங்கிகளும் 5,90,000 உறுப்பினர்கள் கொண்ட 16 'சாலேரயில் போக்கு வரத்துத் தொழிலாளரின் சேமிப்பு — கடன் சங்கங்களும்,' 3,18,000 உறுப்பினர்களைக் கொண்ட 'தபால் ஊழியர்சேமிப்பு - கடன் சங்கங்களும்' இயங்கி வந்தன.

சாதாரணமாக வணிக வங்கிகள் அளித்துவரும் எல்லா வசதிகளையும் சேவைகளையும் ஜெர்மனியின் கூட்டுறவு வங்கிகள் செய்து வருகின்றன. உறுப்பினர்கள் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஊக்கம் அளிக்கப்படுகிறது. வாடிக்கையாளர் இவ்வங்கிகளில் வைத்திருக்கும் வைப்புத் தொகைக்குக் கணிசமான வட்டி கொடுக்கப்படுகிறது. மேலும், உறுப்பினர்களின் வீடுகளுக்கும் பண்ணைகளுக்கும் சென்று வங்கி ஊழியர்கள் அவர்களின் சேமிப்புப் பணத்தைப் பெறுகின்றனர். உறுப்பினரின் வங்கிக் கணக்கு எண் குறிப்பிடப்பட்டுள்ள உண்டியல் குறிப்பிட்டதொரு இடத்தில் வைக்கப்பட்டிருப்பதால் சிக்கனமும் சேமிக்கும் பழக்கமும் தூண்டப்படுகின்றன. குறிப்பிட்டதொரு வங்கியில் கணக்கு வைத்திருக்கும் எவரும் தன்னிடமுள்ள 'செல்லும் புத்தகத்தைக்' (Pass Book) கொண்டு மேற்கு ஜெர்மனியிலுள்ள எந்த வங்கியிடமும் பணத்தைப் பெறக்கூடிய வாய்ப்பும் அளிக்கப் படுகிறது. இது இந்நாட்டின் மற்றொரு சிறப்பு அம்சமாகும்.

3. வீட்டு வசதிச் சங்கங்கள் (Housing Societies) மேற்கு ஜெர்மனியில் இயங்கிவரும் மூன்றாவது வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் வீட்டு வசதிச் சங்கங்களாகும். இச்சங்கங்கள் உறுப்பினர்களின் வசதிக் கேற்ப வீடுகள் கட்டித்தருகின்றன. அதற்குரிய செலவுக்கென உறுப்பினர்களிடமிருந்தும் அரசாங்கத்திடமிருந்தும் பணத்தைப் பெறுகின்றன. இச் சங்கங்கள் மேற்கு ஜெர்மனியின் தலைநகரான பெர்லினில் பிரபலமடைந்துள்ளன. மேற்கு ஜெர்மனியிலேயே மிக உயரமாகவுள்ள அடுக்குமாடிக் கட்டடம் ஒரு வீட்டு வசதிச் சங்கத்திற்குரியது என்பது குறிப்பிடத்தக்கது.

4. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் (Consumers' Co-operative Societies) மக்களுக்குத் தேவைப்படும் நுகர்வுப் பொருள்களை விநியோகம் செய்வதற்காகத் தோன்றியுள்ள இச் சங்கங்கள் தரமான பொருள்களை மலிவாகப் பெறுவதற்கு

மக்களுக்குத் துணைபுரிகிறது. மேற்கு ஜெர்மனியிலுள்ள இச் சங்கங்களில் சுமார் 2·5 மில்லியன் உறுப்பினர்கள் இருக்கின்றனர். இவ்வகைச் சங்கங்கள் சுமார் 212 உள்ளன; இவை 8000-க்கும் அதிக மான விற்பனைக் கடைகளை வைத்து நடத்துகின்றன. இச்சங்கங் களில் மிகப்பெரியது ஹாம்பர்க் என்னும் நகரில் இயங்கி வருகிறது.

கூட்டமைப்புகள்
(Federations)

மேலே குறிப்பிட்டுள்ள நான்குவகைக் கூட்டுறவுச் சங்கங் களும் தங்களின் நலன் பேணப்படுவதற்கென்று கூட்டமைப்புகளை அமைத்துள்ளன. அடிமட்டத்திலுள்ள 'தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள்' ஒன்றுபட்டுத் தம் நிதித் தேவையைப் பூர்த்திசெய்வதற் கென்று 13 பிராந்திய மத்திய வங்கிகளை (Regional Central Banks) அமைத்துள்ளன. இப் பிராந்திய மத்திய வங்கிகள் கூட்டுச் சேர்ந்து தேசிய அளவில் ஒரு கூட்டுறவு வங்கியை உருவாக்கி யுள்ளன. இவ்வங்கி பிராங்போர்ட் என்னும் நகரில் தம் தலைமை அலுவலகத்தை நிறுவி இயங்கி வருகிறது. இந்த வங்கியின் மூல தனத்திற்கென்று அரசும் கணிசமான தொகையை வழங்கி யுள்ளது. மொத்த மூலதனத்தில் மத்திய அரசு 15 சதவீதம் கொண்டிருக்க, மாநில அரசுகளும் 42 சதவீதப் பங்கை வாங்கு வதற்குச் சட்டம் அனுமதித்துள்ளது. சாதாரணக் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்கு வழக்கை இணைப்புச் சங்கங்கள் தணிக்கை செய்து வருகின்றன.

பொது அம்சங்கள்

இந் நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் பொதுவான சில அம்சங்கள் உள்ளன. 1. எல்லாச் சங்கங்களுமே 'தன் கையே தனக்குதவி' ஒருவருக்கொருவர் உதவி' என்ற கூட் டுறவுத் தத்துவத்தின் அடிப்படையில் மட்டுமின்றி, சுய பொறுப்பு சுய நிர்வாகம் போன்ற கொள்கைகளையும் கொண்டுள்ளன. இக் கொள்கைகளைக் கைவிடாமல் செயல்படுவதால்தான் இவை வெற்றிநடை போடுகின்றன. 2. மத்தியக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் பொதுவான கூட்டுறவு விதிகள் உள்ளன. இவ் விதி முறைகளின்படி இவை எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களையும் ஒழுங்கு படுத்தும் அதிகாரம் பெற்றுள்ளன. 3. எல்லாக் கூட்டுறவுச் சங்கங் களும் ஒரே அமைச்சரவையின் கீழ்த்தான் இயங்கி வருகின்றன. 4. கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் ஜெர்மன் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டிருப்பதால் தமக்குத் தேவையான நிதி வசதிகளை இவ்வங்கியிடமிருந்து பெற முடிகிறது. 5. கூட்டுறவுப் பயிற்சி

நிலையங்கள் எல்லாக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கும் முறையான பயிற்சியை அளித்து வருகின்றன.

தற்போதைய நிலை

வறுமையில் வாடிக்கிடந்த விவசாயிகளையும் சிறு தொழிலதிபர்களையும் வட்டிக் கடைக்காரர்களின் கெடுபிடியிலிருந்து காப்பாற்றுவதற்கே ஜெர்மனியில் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தோன்றின வென்று கண்டோம். ஆனால், வெறும் கடன் இயக்கமாகத் தோன்றிய இவ் வியக்கம் மக்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதற்கென்று எல்லாத் துறைகளுக்கும் விரிவடைந்து விட்டது. குறிப்பாக, கிராமப்புறங்களில் வாழும் மக்களின் வாழ்வை மலரச் செய்ய முனைந்துள்ளது. மக்களுக்குத் தேவைப்படும் கடன் உதவிகளை அளிப்பதோடு உற்பத்திச் செலவைக் கணிசமான அளவு குறைப்பதற்கும் இவை முனைந்துள்ளன. உற்பத்தியான பொருள்களைச் சிறந்த முறையில் விற்பனை செய்யும் பணியையும் மேற்கொண்டுள்ளன. தற்போது நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தும் எண்ணத்துடன் கூட்டு உற்பத்தியிலும் அக்கறை காட்டி வருகின்றன. நவீன முறையில் கூட்டுறவுச் சங்கங்களை மாற்றி அமைத்து அதன்மூலம் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. சிறுசிறு சங்கங்களுக்கிடையே ஏற்படக்கூடிய போட்டியைத் தவிர்ப்பதற்கென்று நிறுவன இணைப்பு முறையைப் (Amalgamation) பின்பற்றி வருகின்றன.

ஜெர்மனி நாடு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் அனுபவித்த சிக்கல்களையும் இடர்ப்பாடுகளையும் இன்று இந்தியாவில் நாம் காண்கிறோம். எனவே, ஜெர்மனி நாட்டின் கூட்டுறவு வரலாற்றை எண்ணிப் பார்த்து மனவலிமையுடன் நமது கூட்டுறவு இயக்கத்தை நடத்தினால் நாமும் வெற்றிபெறுவது திண்ணம். இதை உணர்ந்து தான் நம் கூட்டுறவு அமைப்புகள் ரைஃபீசன் அமைப்பையொட்டி உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், நமது நாட்டில் கூட்டுறவு இயக்கத்தை உருவாக்கும் எண்ணத்துடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, திரு. பிரடெரிக் நிக்கல்சன் (Mr. Frederick Nicholson) அவர்களைத் தலைமையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் இந்தியக் கூட்டுறவுச் சங்கங்கள் ரைஃபீசன் சங்கங்களைப் போல்தான் அமைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. தற்போது நமது நாட்டில் உருவாகி வரும் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பெரும்பாலும் ரைஃபீசன் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. ரைஃபீசன் அடைந்த வெற்றியை நாமும் பெறவேண்டுமாயின் அதற்கு மக்களின் ஆதரவுதான் முக்கியம்.

5. டென்மார்க்கில் கூட்டுறவு இயக்கம்

(Co-operative Movement in Denmark)

டென்மார்க் மிகச் சிறிய நாடு. இதன் பரப்பளவு 17,000 சதுர மைல்கள்தாம்; மக்கள்தொகையோ 46 இலட்சம். இயற்கைவளங் களைத் தேடிப் பார்த்தால் இந் நாடு வறுமை நிறைந்ததென்றே தோன்றும். இரும்பு, நிலக்கரி, உலோகம், எண்ணெய், பருத்தி போன்ற மூலப் பொருள்கள் இங்கு அரிது. எனினும், இந் நாடு மண்வளம் செறிந்தது. இந் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 75 சதவீதம் சாகுபடிக்குப் பயன்படுகிறது. மழைக்கும் பஞ்ச மில்லை. ஆண்டுதோறும் சுமார் 30 அங்குல மழை எங்கும் கிடைக் கிறது. நிலமனைத்தும் மேடு பள்ளங்களேதுமின்றி சமவெளிப் பகுதியாகவே உள்ளது. எனவே, இந் நாட்டின் பொருளாதாரம் விவசாயத்தையே மையமாகக் கொண்டுள்ளது. விவசாயம்தான் உயிர்நாடி. பேராலைத் தொழில்களில் உற்பத்தியாகும் பொருள் களுக்கெல்லாம் அயல் நாடுகளைத்தாம் சார்ந்திருக்கவேண்டும்; என்றாலும் அப் பொருள்களுக்கு ஈடாக விவசாயப் பொருள்களை ஏற்றுமதி செய்துவிடுகிறது. இதன் ஏற்றுமதியில் 50 சதவீதம் விவசாயப் பொருள்கள்தாம். விவசாயம்தான் முக்கியத் தொழில் என்றாலும் 25 சதவீத மக்கள்தாம் விவசாயத்தை நம்பி வாழ்கின் றனர். மற்றவர்களெல்லாம் தொழில், கைத்தொழில், வியா பாரம், போக்குவரத்துத் துறைகளைச் சார்ந்திருக்கின்றனர். கப்பல் கட்டுவதில் திறமைபெற்ற இந் நாட்டுக் கப்பல்களை அயல் நாட்டவர் வாடகைக்கு அமர்த்துவதால் இந் நாட்டிற்கு அந்நியச் செலாவணி (Foreign Exchange) கிடைக்கிறது.

இந்நாட்டவர் எல்லாத் துறைகளிலுமே கூட்டுறவுப் பாதையில் வெற்றிநடை போட்டு உலகிற்கு வழிகாட்டுகின்றனர். எனவே தான் எத்தனையோ பெரிய நாடுகளிலும் கூட்டுறவு இயக்கம் நடை பெற்றுவர இந் நாட்டின் கூட்டுறவைத்தான் உலகம் போற்று கிறது. 'கூட்டுறவு டென்மார்க்' என்ற பட்டப் பெயரும் இந் நாட்

டிற்குத்தான் உண்டு. டென்மார்க்கின் பொருளாதார வாழ்க்கையே கூட்டுறவை அடிப்படையாகக் கொண்டது. விவசாயத்தில் மட்டுமின்றி, பிற நாடுகளோடு செய்யும் வியாபாரத்தில்கூடக் கூட்டுறவுதான் முதலிடம் பெறுகிறது. கூட்டுறவு முறைகளினால் சாகுபடி முறையையே மாற்றியமைத்த பெருமையும் இந் நாட்டிற்கு உண்டு. எனவே, டென்மார்க்கின் விவசாயம் ஒரு தனி ரகத்தைச் சார்ந்ததாகிறது.

குடியானவர்களும் அவர்களின் கடன் தேவைகளும்

டென்மார்க்கின் சமுதாய அமைப்பும் பொருளாதார அமைப்பும் குடியானவர்களுக்குப் பல தொல்லைகளை ஏற்படுத்தி வந்தன என்பதை எவரும் மறுக்க முடியாது; இன்றும் அவை முழுமையாக மறைந்துவிடவில்லை. இத் தொல்லைகளையெல்லாம் கஷ்டப்பட்டு முறியடித்த பின்னர்த்தான் செழிப்பான வாழ்க்கைப் பாதையில் அவர்களால் காலடி எடுத்து வைக்கமுடிந்தது.

கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் குடியானவர்கள் சாகுபடி செய்த நிலமனைத்தும் பெரும்பாலும் பெரு நிலக்கிழார்களுக்கே சொந்தமாயிருந்தது. ஆகவே, விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்குக் குடியானவர்களுக்கு மனமில்லை. 1769 முதல் 1850 வரை இந் நாட்டை ஆண்டவர்களின் தயாள குணத்தினால் இயற்றப்பட்ட பல்வேறு நிலச் சீர்திருத்தங்களினால் குடியானவர்களுக்கே நிலம் சொந்தமானது. அவர்கள் தீவிர விளைச்சலில் அக்கறை காட்ட முடிந்தது. இருப்பினும் நிலங்களெல்லாம் சிறுசிறு துண்டுகளாகச் சிதறிக் கிடந்தமையால் அவர்களின் முயற்சி வெற்றிபெறவில்லை; பெரும்பாலானோர் வறுமையில் வாடினர். நிலத்தைப் பண்படுத்தி, உரிய முறையில் திருத்தங்கள் செய்து வேளாண்மையை முன்னேற்றுவதற்கான பண வசதியின்றித் தவித்தனர். அவர்களின் துயரை நீக்க அரசாங்கம் முன்வந்தது. 1. கடன் நிதி எனப்பட்ட நிதியை உருவாக்கி, ஆண்டுதோறும் 2 மில்லியன் குரோனரை அதற்கென ஒதுக்கியது. குடியானவர்கள் நிலம் வாங்குவதற்கும், நிலத்தைச் சீர்படுத்துவதற்கும் இந் நிதியிலிருந்து குறைந்த வட்டிக்கு அவர்களுக்கு நீண்ட காலக் கடன் கொடுக்கப்பட்டது. 2. பெரு நிலக்கிழார்களிடமிருந்து நிலங்களைப் பெற்று அவற்றை நிலமில்லாதோருக்கும் பெயருக்கு நிலம் கொண்டிருந்தோருக்கும் அரசாங்கம் மலிவான விலைக்குப் பகிர்ந்து விற்றது. 3. அமோக விளைச்சலைக் கண்ட சிறந்த விவசாயிகளுக்குப் பரிசுகள் வழங்கியது. 4. விவசாயிகள் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வதற்கென்று இலவசச் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தது. 5. சிறு விவசாயிகள் 'ஜட்லேண்ட் கூட்டுறவுக்

கடன் சங்கத்திடமிருந்து' கடன் வசதிகளைப் பெறும்பொருட்டு அக் கடன் தொகைக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளித்தது. அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளின் பயனால் விவசாயிகளின் நிலை மாறியது.

கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

விவசாயிகளின் நிதித் தேவைகளை நிறைவு செய்வதற்காக 1850ஆம் ஆண்டிலேயே கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தோற்று விக்கப்பட்டன. 1850-ல் டென்மார்க் அரசாங்கம் ஒரு தனிச் சட்டத்தை இயற்றியதன் வாயிலாக விவசாயிகள் தங்களுக்குத் தேவையான கடன் வசதிகளைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வாயி லாகப் பெறுவதற்கு வழி ஏற்பட்டது. அதன்படி, நீண்ட காலக் கடன் வசதியை அளிப்பதற்கென்று பல கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இச் சங்கங்கள் மூலம் குறைந்த அளவு நிலம் வைத்திருந்த விவசாயிகளும் பெருநிலக்கிழார்களும் ஒருசேரப் பயனடைந்தனர். சிறு விவசாயிகள் தங்கள் நிலத்தை விஸ்தரிக்க முடிந்தது; பெருநிலக்கிழார்கள் தங்கள் நிலத்தைத் திருத்தி அமைக்க முடிந்தது. இக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 'புருசியா' நாட்டின் சங்கங்களைப்போல் அமைக்கப்பட்டன. பெரும்பாலும் இச்சங்கங்கள் டென்மார்க் அரசாங்கத்தின் கண் காணிப்பில் இயங்கி வந்தன. இச் சங்கங்கள் பங்கு மூலதனம் பெறாமலும், பொதுமக்களின் வைப்புத் தொகையை அடையா மலும் இயங்கி வந்தன. தங்களுக்குத் தேவையான நிதி வசதிகளை 'கடனீட்டுப் பத்திரங்களை' (Debentures) விற்றதன்மூலம் பெற்றன. உறுப்பினர்களின் நில மதிப்பில் 60 சதவீதம் வரை அவர்களுக்குக் கடன் கொடுக்கப்பட்டது. இக் கடனை அவர்கள் 40 முதல் 60 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தவேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது. கடன்பெறும் உறுப்பினர்களுக்கு ரொக்கமாகப் பணம் கொடுக்காமல் கடன் பத்திரங்களை அளிக்கப்பட்டன. இன்றும் அப்படியே, இப் பத்திரங்களை மத்திய நிலவள வங்கியிடம் விற்று உறுப்பினர்கள் பணம் பெற்றனர். அப்படி விற்பதற்கும் இக் கூட் டுறவுச் சங்கங்கள் உதவி வருகின்றன. இக் கடன் தொகையைக் கொண்டு உறுப்பினர்கள் விவசாயத்திற்குத் தேவையான நிலத்தை யும் கட்டடங்களையும் சிறந்த முறையில் மேம்படுத்துகின்றனர். இச்சங்கங்கள் பெறும் இலாபத்தில் பெரும்பகுதி காப்பு நிதியில் சேர்க்கப்படுகிறது. விவசாயிகள் பெறும் மொத்தக் கடன் தொகையில் 70 சதவீதம் இச் சங்கங்களால் அளிக்கப்படுகின்றன.

கூட்டுறவுக் கடன் சங்கங்களைத் தவிர, 'சேமிப்பு வங்கி' களும் டென்மார்க்கில் முக்கியமானவையாகும். இவ் வங்கிகள்

உறுப்பினர்களின் வைப்புத் தொகையைக்கொண்டு விவசாய வளர்ச்சிக்கெனக் கடன் கொடுக்கின்றன. பெரும்பாலும் சொத்துகளின் ஈட்டின்பேரில்தான் கடன் வழங்கப்படுகிறது. வட்டி விகிதம் மிகக் குறைவாக இருப்பதால் விவசாயிகள் இவ் வங்கிகளைப் பெரிதும் நாடுகின்றனர். இலாபத் தொகை முழுவதும் காப்பு நிதியில் சேர்க்கப்படுகிறது. தற்போது இவ் வங்கிகள் வலிமைமிக்க நிறுவனங்களாக விளங்குகின்றன.

கூட்டுறவுக் கடன் வழங்குவதற்கென்று 1925ஆம் ஆண்டு கூட்டுறவு வங்கியொன்று (Andelsbanken) அமைக்கப்பட்டது. பிற கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள்தாம் பெரும்பாலும் இதன் உறுப்பினர்களாகவும் உள்ளனர். 'ஒருவருக்கு ஒரு வாக்கு' என்ற கூட்டுறவுக் கொள்கைப்படி உறுப்பினர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது. இதன் நிர்வாகத்தை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு நடத்துகிறது. ஒரு குறிப்பிட்ட தொகைதான் உறுப்பினர்களுக்கு இலாப ஈவாகக் கொடுக்கப்படுகிறது. தனிப்பட்ட வணிகர்களுக்கும் கம்பெனிகளுக்கும்கூட இவ்வங்கி கடன் கொடுக்கிறது. இவ்வங்கி தரும் கடனில் 43 சதவீதம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. பெரும்பாலும் குறுங்காலக் கடன்தான் கொடுக்கப்படுகிறது. பெரும்பாலும் கடன் கொடுக்கப்படும் காலம் 2 ஆண்டுகளாகவும் வட்டி வீதம் 8 முதல் 10 சதவீதமாகவும் உள்ளன. இவ்வங்கி கடன் மனுக்களைத் தீவிரமாகப் பரிசீலனை செய்வதில்லை; எனினும் கடன் பெறுவோர் குறித்த தவணைக்குள் திருப்பிச் செலுத்தி விடுகின்றனர். உறுப்பினர்களின் நலனுக்காகவே பாடுபடும் இவ்வங்கியும் தற்போது வலிமை மிக்கதாகத் திகழ்கின்றது.

நுகர்வோர் சங்கங்கள்

இங்கிலாந்தில் 'ராக்டேல் முன்னோடிகள்' அமைத்த கூட்டுறவுப் பண்டக சாலையைக் கண்ட டென்மார்க் சமூக ஊழியரான H. C. சோன் (H. C. Sonne) என்பவர் டென்மார்க்கிலும் அவ்வகைச் சங்கத்தை அமைக்கத் திட்டமிட்டார். 'திஸ்டெட்' என்னுமிடத்தில் வாழ்ந்து வந்த நண்பர்களுடன் கலந்து பேசி, அவர்களின் ஆதரவுடன் 1886ஆம் ஆண்டு 'திஸ்டெட் தொழிலாளர் சங்கம்' என்ற சங்கத்தைத் தொடங்கினர். இச் சங்கத்தின் விற்பனை கணிசமாக உயரத் தொடங்கியது. எனவே, நூல் நிலையம் ஒன்றும் படிக்கும் அறைகளும் கட்டப்பட்டன. உறுப்பினர்களுக்கு இலவச மருத்துவ வசதியும் கொடுக்கப்பட்டது. இச்சங்கத்தின் வெற்றியைக் கண்ட ஏனையப்பகுதி மக்களும் தங்களுக்கெனப் பல

கூட்டுறவுப் பண்டகசாலைகளைத் தொடங்கினர். இவ்வாறு வளர்ந்த இக் கூட்டுறவுப் பண்டக சாலைகள் 1871-ல் 86 ஆகவும் 1874-ல் 119 ஆகவும் அதிகரித்தது. இந்நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடக்கத்தில் தனியார் துறையுடன் கடும் போட்டியிட்டு, முடிவில் வெற்றி கண்டன.

கூட்டுறவுச் சில்லறை விற்பனைச் சங்கங்கள்

1971ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி டென்மார்க்கில் 1620 சில்லறை விற்பனைச் சங்கங்கள் உள்ளன; இவற்றில் 8·7 இலட்சம் பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். விற்பனை அமைப்பில் இச்சங்கங்கள்தாம் பிரபலமாக உள்ளன. சுமார் 50 சதவீதக் குடும்பங்கள் இச்சங்கங்களில் வாடிக்கையாளராயுள்ளனர். 1956ஆம் ஆண்டில் இச் சில்லறை விற்பனைச் சங்கங்கள் யாவும் ஒன்றுசேர்ந்து 'டென்மார்க் நுகர்வோர் சங்கம்' என்ற பெயரில் ஓர் ஐக்கிய அமைப்பை உருவாக்கின. பெரும்பாலும் சில்லறை விற்பனைச் சங்கங்கள் சிறியதாயும் ஒரே ஒரு பண்டகசாலையை மட்டும் நடத்துவதாயுமே உள்ளன. ஆனால், 'கோப்பன் ஹேகனிலுள்ள' சங்கம் மிகப் பெரிய அளவில் 4 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. அந்நகரில் மட்டும் இச்சங்கத்திற்கு 400 கடைகளும் பல சிறப்பு அங்காடிகளும் உள்ளன. டென்மார்க்கிலுள்ள சில்லறை விற்பனைச் சங்கங்கள் 1971-ல் மட்டும் 3400 மில்லியன் குரோனர் மதிப்புள்ள விற்பனையைச் செய்திருக்கின்றன. நாட்டின் மொத்தச் சில்லறை வியாபாரத்தில் 14 சதவீதம் இச் சங்கங்களால் செய்யப்படுகிறது.

கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம்: 1896ஆம் ஆண்டிலேயே சில்லறை விற்பனைச் சங்கங்கள் அனைத்தும் சேர்ந்து ஒரு மொத்த விற்பனைச் சங்கத்தை (F. D. B.) அமைத்துவிட்டன. எல்லாக் கூட்டுறவுத் தொடக்கச் சங்கங்களும் இம் மொத்த விற்பனைச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. உறுப்பினர்களாக விளங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்தோ கொள்முதல் செய்தோ விநியோகிப்பதுதான் இம் மொத்த விற்பனைச் சங்கத்தின் முக்கியப்பணி. உறுப்பினர்களாக விளங்கும் சங்கங்களுக்கு 'வாக்குரிமை' இருப்பதால் மொத்த விற்பனைச் சங்கத்தின் திட்டங்கள் அனைத்தும் முறையாக வகுக்கப்படுகின்றன. முந்திய ஆண்டில் 1,00,000 குரோனர் மதிப்புள்ள பொருள்களைக் கொள்முதல் செய்த எல்லாச் சங்கங்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்படுகிறது. இப்படியாக 2,000 உறுப்பினர்களைக் கொண்ட பொதுக்குழு அமைக்கப்படுகிறது. இயக்குநர்

குழுவைத் தேர்ந்தெடுப்பதற்கென்று எல்லாப் பகுதியும் 31 பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிராந்தியப் பிரதிநிதிகளும் ஒன்றுசேர்ந்து தேர்ந்தெடுக்கும் சபைதான் இயக்குநர் குழு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கிறது. வியாபார சம்பந்தமான எல்லாக் காரியங்களையும் இந்த இயக்குநர் குழுதான் கவனித்துக்கொள்கிறது.

இந்த மொத்த விற்பனைச் சங்கம் பல பண்டகங்களைக் கொண்டுள்ளது. தற்சமயம் 7 பிராந்தியப் பண்டகங்களுக்கு உரிமையாளராய் உள்ளது. அந்தந்தப் பகுதியிலுள்ள கூட்டுறவுச் சில்லறை விற்பனைச் சங்கங்களுக்குத் தேவையான பொருள்களைத் தாமதமின்றி விநியோகம் செய்வதற்கு இத்திட்டம் பேருதவியாக இருக்கிறது. 1968 ஆம் ஆண்டு இம் மொத்த விற்பனைச் சங்கத்தின் வழியாக 2,000 மில்லியன் குரோனர் மதிப்புள்ள பொருள்கள் விற்பனையாகியிருக்கின்றன. இந்த விற்பனையில் 82 சதவீதம் உணவுப் பொருள்கள். இவ்வுணவுப் பொருள்களின் தரம் நிச்சயிக்கப்பட்ட பின்னர்த்தான் அவை கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றின் தரத்தைச் சோதனையிட்டு ஆய்வதற்கென்று பல ஆட்வுக் கூடங்களும் சமையலறையும் கொண்டுள்ளது. வாரத்திற்கொருமுறை கூட்டுறவுச் சங்கங்களின் தேவை நிலைக்கேற்பப் பொருள்கள் அனுப்பப்படுகின்றன. இம் மொத்தக் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனை ஏற்பட்டாலும் நிர்வாகத் திறமையாலும் அதன் செலவு கணிசமாகக் குறைந்துள்ளது. இச் சங்கத்தின் மேம்பட்ட செயல் திறமையினால் 1964-ல் 24 சதவீதமாக இருந்த நடப்புச் செலவு 1968-ல் 13 சதவீதமாகக் குறைக்கப் பட்டிருக்கிறது.

மொத்த விற்பனைச் சங்கம் விற்பனை செய்யும் பொருள்களில் 25 சதவீதம் இச் சங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களாலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நிறுவனங்களில் காப்பிக் கொட்டை பக்குவப்படுத்தும் நிறுவனம்தான் மிகப்பெரியது. இதர நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களில் இனிப்புப் பண்டங்கள், சோப்பு, புகையிலை, ஆடைகள், மதுவகைகள், ரொட்டி வகைகள், தட்டுமுட்டுச் சாமான்கள், எண்ணெய் வகைகள் ஆகியவை முக்கியமானவை.

இம் மொத்த விற்பனைச் சங்கம் உறுப்பினர்களாக விளங்கும் சங்கங்களுக்கு அவ்வப்போது தேவையான ஆலோசனைகளும் தருகின்றது. சான்றாக, உறுப்பினர் சங்கங்கள் புதிய கட்டடங்களை அமைப்பதற்கு இச் சங்கத்தின் 'கட்டடக்கலைப் பிரிவு' சிறந்த

ஆலோசனைகளைத் தருகிறது. மேலும், எந்த இடத்தில் புதிய பண்டகசாலையை அமைப்பது என்று தீர்மானிப்பதற்கென்று இச் சங்கம் 'தேசிய அளவீடும்' (National Survey) செய்யப்படுகிறது. புதிய கடைகளுக்குப் பொருளுதவியும் செய்து வருகிறது. 1969ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை 102 மில்லியன் குரோனர் புதிய கடைகளுக்காக வழங்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கும் இச் சங்கம் உதவி செய்கிறது. இவ்வகையில் இம் மொத்த விற்பனைச் சங்கம் உறுப்பினர் சங்கங்களுக்கு உற்ற நண்பனாய்ப் பணியாற்றி வருகிறது.

பால் பண்ணைக் கூட்டுறவு :

டென்மார்க்கின் பொருளாதாரத்தில் பால், வெண்ணெய், பாலாடைக் கட்டி ஆகியவற்றின் உற்பத்திதான் பல நூற்றுண்டு களாக முக்கியத்துவம் கொண்டிருந்தன. எனினும், பத்தொன்ப தாம் நூற்றுண்டின் இறுதியில் தான் பால் பண்ணைகள் முறையாக வளர்ச்சியடையத் தொடங்கின. அதுவரை டென் மார்க்கில் தானியங்கள்தாம் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதியாயின. 1864ஆம் ஆண்டு ஏற்பட்ட போரின் காரணமாக டென்மார்க்கின் விவசாயத்துறை அடியோடு மாறிவிட்டது. டென்மார்க்கின் வளமான மாநிலங்கள் 'புருசியா' வால் கைப்பற்ற பட்டதால் அதன் பொருளாதாரமே இருண்டுவிட்டது. ஜெர்மனி யுடன் கொண்டிருந்த வியாபாரமும் நின்றுவிட்டது. இந்நிலையில் வெளிநாடுகளிலிருந்து மலிவான தானியங்களை இறக்குமதி செய்வதே உகந்தது என்பதை உணர்ந்த டென்மார்க் தன் நிலங்களை மேய்ச்சல் நிலங்களாக மாற்றி, கால்நடைகளை வளர்க்கத் தொடங்கியது. டென்மார்க்கின் வெண்ணெய் உற்பத்திக்கு இங்கிலாந்தில் கிராக்கி அதிகமாயிருந்ததால் பால்பண்ணைத் தொழில் ஊக்கம் பெற்றது. பால்பண்ணைத் தொழிலில் பல நவீனக்கருவிகள் கையாளப்பட்டன. டென்மார்க்கைச் சேர்ந்த பொறியமைப்பாளர் ஒருவர் (L. C. Nielsen) பாலிருந்து பாலேட்டைப் பிரித்தெடுக்கும் நவீனக்கருவியொன்றை 1878-ல் கண்டுபிடித்தார். இதன் பின்னர்த்தான் பால் பண்ணைத் தொழி லில் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

கூட்டுறவுப் பால் பண்ணை 1882-ல் தான் முதன் முதலில் தோன்றியது. எனினும், மிக விரைவில் அது எவ்வளவு தூரம் வளர்ந்துவிட்டது என்பதைக் கீழ்க்காணும் பட்டியலிலிருந்து அறியலாம் :

பட்டியல்

		1881	1898	1914	1935	1964
கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை	...	0	1029	1168	1404	858
தனியார் பால் பண்ணைகள்	...	—	266	319	328	193
பால் பண்ணைகளிலுள்ள பசுக்கள் (10,000 வீதம்)	...	899	1067	1310	1675	1370
ஒரு பசுவிலிருந்து சராசரி கிடைக்கும் பால் அளவு (கிலோ)	...	—	1991	2658	3078	3804
வெண்ணெய் சதவீதம்	...	—	3·30	3·50	3·64	4·23
மொத்த பால் உற்பத்தி (1000 மெட்ரிக் டன்னில்)	...	1390	2156	3500	5156	5210
மொத்த வெண்ணெய் உற்பத்தி (,,)	...	49	84	117	175	155
மொத்த வெண்ணெய் ஏற்றுமதி (,,)	...	12	73	104	138	103
மொத்தப் பாலேட்டுக் கட்டி உற்பத்தி (,,)	...	—	—	16	29	123
மொத்த பாலேட்டுக் கட்டி ஏற்றுமதி (,,)	...	—	1	0·5	1	81

மேலேயுள்ள பட்டியலைப் பார்த்தால் பால் பண்ணைகளின் எண்ணிக்கை குறைந்து வருவது தெரியும். டென்மார்க் பால் பண்ணைச் சங்கத்தினர் பண்ணைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க விரும்பாமல் உற்பத்தியாகும் பாலின் தரத்தை உயர்த்துவதிலும் பெருக்குவதிலுமே அக்கறை காட்டுகின்றனர். இதனால்தான் 1967-ல் பால் பண்ணைகளின் எண்ணிக்கை 630 ஆகக் குறைந்துள்ளது. 1967-ல் பால் பண்ணைகளில் 1.3 இலட்சம் பேர் உறுப்பினர்களாக விளங்கினர். இப்பால் பண்ணைகளின் விற்பனை 1955-ல் 1966 மில்லியன் குரோனராக இருந்தது; ஆனால் 1967-ல் இது 2420 மில்லியன் குரோனராக அதிகரித்துள்ளது.

டென்மார்க்கிலுள்ள பால் பண்ணைகளின் சிறப்பியல்புகள் வருமாறு :

1. கால்நடைகள் வைத்திருக்கும் எவருமே அவர் தம் பகுதியிலுள்ள பண்ணையில் உறுப்பினராகலாம்.

2. உறுப்பினர்கள் பங்கு மூலதனம் செலுத்த வேண்டியதில்லை; நுழைவுக் கட்டணம் கூடக் கிடையாது.

3. கொள்கையளவில் இச் சங்கங்கள் வரையறையற்ற பொறுப்புடையவை; எனினும் நடைமுறையில் அங்கத்தினர்கள் விநியோகிக்கும் பாலின் அளவுக் கேற்பப் பொறுப்பு நிர்ணயிக்கப்படுகிறது. இப்பண்ணைகள் நட்டம் அடைந்து விடுமோ என்ற பயம் கிடையாது; எனவே, இப்பண்ணைகளுக்குக் கடன் கொடுத்த எந்த நிறுவனத்திற்கும் இதனால் நட்டம் ஏற்பட்டதில்லை.

4. அங்கத்தினர்கள் அளிக்கும் பாலின் விலை மதிப்புக்கேற்ப இலாபம் பகிரப்படுகிறது.

5. உறுப்பினர்கள் தம் தேவைக்குப் போக எஞ்சியிருக்கும் பாலைப் பால் பண்ணையில் தான் விற்க வேண்டுமென்ற கட்டாயம் உள்ளது.

6. பாலின் தரத்திற்கும் அளவுக்கும் ஏற்ப விலை நிர்ணயிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

பால் பண்ணைகளின் கூட்டமைப்பு

பால் பண்ணைத் தொடக்கச் சங்கங்கள் 24 பிராந்திய பால் பண்ணைச் சங்கங்களாகவும் இப்பிராந்தியச் சங்கங்கள் டென்மார்க் பால் பண்ணைச் சங்கமாகவும் கூட்டமைக்கப் பட்டுள்ளன. தனியார் நடத்தும் பால் பண்ணைகளும் இக் கூட்டமைப்பில் இடம்

பெறுவது சிறப்பானதோர் அம்சமாகும். டென்மார்க்கிலுள்ள கூட்டுறவுப் பால் பண்ணை இயக்கம் தனியார் நடத்தும் பண்ணைகளுக்கும் சங்கங்களின் பண்ணைகளுக்குமிடையே நல்ல போட்டி நிலவ வேண்டுமென்று விரும்புகிறது.

தேசியப் பால் பண்ணைக் கூட்டமைப்புப் பால் பண்ணைகள் தரமான பாலை உற்பத்தி செய்து விநியோகிக்கும் வண்ணம் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. டென்மார்க்கில் உற்பத்தியாகும் வெண்ணெய், பால்பவுடர், பாலேட்டுக் கட்டி, பாலேடு ஆகிய பால்பண்டங்களில் 70 சதவீதம் வெளிநாடுகளுக்கு, முக்கியமாய் இங்கிலாந்து நாட்டிற்கே ஏற்றுமதி செய்யப் படுகிறது. எஞ்சியுள்ள 30 சதவீதம் மட்டுமே உள்நாட்டில் விற்பனை செய்யப் படுகிறது. கூட்டுறவுத் தொடக்கப் பால் பண்ணைச் சங்கங்கள் தங்களின் ஏற்றுமதிக்கென்று ஏற்றுமதிச் சங்கங்களையும் அமைத்துள்ளன. தேசிய மட்டத்திலுள்ள வெண்ணெய் ஏற்றுமதிக் கழகமும், பாலேடு ஏற்றுமதிக் கழகமும் தத்தம் ஏற்றுமதிப் பொருளை ஒழுங்கு படுத்துகின்றன. ஏற்றுமதி செய்யப்படும் நாடுகளில் நிலவும் விலைக்கேற்ப இக் கழகங்கள் தத்தம் ஏற்றுமதி விலையை நிர்ணயிக்கின்றன.

இக் கழகங்களும் கூட்டிணைப்பும் தத்தம் பிரதிநிதிகளை அயல் நாடுகளில் நியமித்துள்ளன. ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கென்று அங்காடி ஆராய்ச்சித் துறையும் ஏற்றுமதி அபிவிருத்துத் துறையும் அமைக்கப்பட்டுள்ளன. இத்துறைகள் உணவுப் பொருள் கண்காட்சிகள், விளம்பரம் ஆகியவற்றின் வாயிலாக வெளிநாடுகளின் விற்பனையை அதிகரித்து வருகின்றன.

உள்நாட்டில் விற்பனையாகும் பால்பண்ணைப் பொருள்களின் விலையை நிர்ணயிப்பதற்கென்று 'டென்மார்க் நாட்டு முற்றுரிமைக்குழு' (Danish Monopoly Commission அமைக்கப் பட்டுள்ளது. பால் உற்பத்திச் சங்கங்கள் அனைத்திற்கும் பொதுவான சில விதிமுறைகளையும் இக்குழு வகுத்துள்ளது. பொதுவாக உள்நாட்டு விலை ஏற்றுமதி விலையைக் காட்டிலும் அதிகமாக இருப்பதால் இக்குழு உள்நாட்டு விற்பனை பொருள்களின் மீது ஒரு தீர்வையை விதித்து, அதிலிருந்து கிடைக்கும் வருவாயை சங்கங்களின் பால் உற்பத்தி அளவுக்கேற்பப் பகிர்ந்தளிக்கிறது.

1903ஆம் ஆண்டில் பால் விற்பனைத் துறையில் புதியதொரு வர்த்தகக் குறி (Trade Mark) புகுத்தப்பட்டது. வெண்ணெய்யின் தரம் அறியப் பல பரிசோதனைகள் அரசாங்கத்தின் விதி முறைகளுக்

கேற்ப நடத்தப்படுகின்றன. பாலேட்டின் தரமும் இது போலவே பரிசோதிக்கப்படுகிறது. இவ்வாறு பால் பண்டங்களின் தரத்தை உயர்த்தப் பாடுபடுவதால் ஏற்றுமதி அளவும் உயர்ந்து கொண்டே போகிறது.

1964-ல் 'டென்மார்க் பால் பண்ணைச் சங்கம்' என்றொரு கூட்டிணைப்புச் சங்கம் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது. ஏற்று மதிச் சங்கங்கள், இதரப் பால் பண்ணைகள் முதலியன இக் கூட்டிணைப்புச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவுப் பால் பண்ணை வியாபாரத்தில் உற்பத்தித் துறையையும் விற்பனைத் துறையையும் ஒருங்கிணைப்பதற்கு இக்கூட்டிணைப்புச் சங்கம் உறுதுணையாயுள்ளது.

கூட்டுறவுப் பன்றி இறைச்சித் தொழில்கள் (Co-operative Bacon Factories)

டென்மார்க்கிலுள்ள பன்றி இறைச்சித் தொழிலும் முட்டை ஏற்றுமதித் தொழிலும் பால் பண்ணைத் தொழிலை ஒட்டியே வளர்ந்தவையாகும். இவ்விரு தொழில்களையும் பால் பண்ணைத் தொழிலின் 'துணைத்தொழில்கள்' (Suhsidiary Industries) என்று கூறலாம். பால்பண்ணைகள் வளர்ச்சியடைய அடைய பன்றி இறைச்சித் தொழிலும் தானாகவே வளர்ந்தது. ஏனெனில், வெண்ணெய் எடுக்கப்பட்ட பால் பன்றிகளுக்குச் சத்துணவாகும். சில வகைத் தானியங்களும் பன்றிகளுக்கு உணவாக அளிக்கப் படுகின்றன. எனவே, தானியங்களை முக்கிய உணவாகக் கொண்ட கோழிப் பண்ணைகளும் ஒரு சேர ஊக்குவிக்கப்பட்டன. இதன் விளைவாக, பால்பண்ணைகள், பன்றி இறைச்சித் தொழிற்சாலைகள், கோழிப் பண்ணைகள் ஆகிய மூன்றும் டென்மார்க்கில் முக்கியத் தொழில்களாக விளங்கி வருகின்றன.

மேற்கூறிய விளக்கத்தின் அடிப்படையில் டென்மார்க் குடியானவர்கள் பால்பண்ணைகளுடன் பன்றிகளையும் வளர்க்கத் தொடங்கினர். வெண்ணெய் எடுக்கப்பட்ட பாலை இப்பன்றி களுக்குச் சத்து உணவாகக் கொடுத்து வந்ததால் பன்றிகள் கொழுத்துப் பெருக ஆரம்பித்தன. பால் பண்ணைகள் வளர வளரப் பன்றிகளின் எண்ணிக்கையும் விரைவில் பெருகின. 1885ஆம் ஆண்டு வரை இப்பன்றிகள் பெரும்பாலும் ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்யப் பட்டன. ஓரளவிற்குத்தான் இங்கிலாந்திற்குப் பன்றி இறைச்சி ஏற்றுமதி செய்யப்பட்டது. பன்றி இறைச்சி தயாரிப்பதும் அதை ஏற்றுமதி செய்வதும் தனிப்பட்ட வணிகர்களின் தொழிலாக இருந்து வந்தது. இதனால், விற்பனையில் கிடைத்த இலாபத்தில்

பெரும்பகுதியைத் தரகர்கள் தட்டிச் சென்றனர். இச்சூழ்நிலையில் தான் 'இறைச்சிக் கொட்டில்' (Slaughter House) அமைக்கும் எண்ணம் தோன்றியது. 1887-ல் 'ஹார் சென்ஸ்' என்ற இடத்தில் முதல் பன்றி இறைச்சித் தொழிற்சாலை கூட்டுறவினுல் தொடங்கப் பட்டது. தொடக்கத்தில் தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்து கடும் எதிர்ப்புத் தோன்றியது. இந்த எதிர்ப்பைச் சமாளிப் பதற்கென்று கூட்டிணைப்புகள் உருவாயின. 1888 முதல் டென்மார்க்கிலிருந்து இறக்குமதியான பன்றிகளை ஜெர்மனி நிறுத்திவிட்டது. இதனுல் மேலும் பல கூட்டுறவுப் பன்றி இறைச்சித் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. இச்சங்கங்களின் உறுப்பினர் களின் எண்ணிக்கையும் பெருகியது. இவ்வுறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும்.

உலகப் போரின்போது இத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரித்தது. போரின் காரணமாக இவ்விறைச்சிக்கு அதிகக் கிராக்கி இருந்ததே இதற்குக் காரணம். மொத்தப் பன்றி இறைச்சியில் 85 சதவீதம் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப் படுகிறது. இதில் பெரும் பகுதி ஏற்றுமதி சங்கங்களால்தாம் செய்யப்படுகிறது.

1967ஆம் ஆண்டில் 61 பன்றி இறைச்சித் தொழிற்சாலைகள் இருந்தன. இறைச்சிக்கென விற்கப்படும் பன்றிகளில் 89 சதவீதம் இக்கூட்டுறவுத் தொழிற்சாலைகளைத்தாம் அடைகின்றன. இத் தொழிற்சாலைகளின் மொத்த விற்பனை 1967-ல் 5000 மில்லியன் குரோனர்களாகும். இங்குள்ள சங்கங்களில் சில 'எலும்புத்தூள் உரம்' தயாரிக்கும் தொழிற்சாலைகளையும், உணவுப் பொருள்களைத் தகரடப்பாக்களில் வைத்தடைக்கும் தொழிற்சாலைகளையும், கால் நடைகளின் கொழுப்பு நெய் சுத்திகரிக்கும் தொழிற்சாலைகளையும் நடத்தி வருகின்றன.

கூட்டுறவு முட்டை ஏற்றுமதிச் சங்கம்

டென்மார்க்கில் முட்டை ஏற்றுமதி வியாபாரம் கடந்த நூற் ருண்டின் இறுதியில்தான் தொடங்கியது. பெரும்பாலும் தனி வணிகர்களால்தாம் இத்தொழில் செய்யப்பட்டது. எனவே, முட்டையின் தரத்தை ஒழுங்குபடுத்த முடியாத நிலையில் அவர்கள் அவதிப்பட்டனர். 1895ஆம் ஆண்டில் முதல் 'கூட்டுறவு முட்டை ஏற்றுமதிச் சங்கம்' தொடங்கப்பட்டது. இச்சங்கம் முட்டைகளைத் தரவாரியாகப் பிரித்து, அவைகளின் மீது 'வியாபாரக் குறி' முத்திரையிட்டு நல்ல முறையில் ஏற்றுமதி செய்யத் தொடங்கியது. முட்டைகளின் தரத்திற்கேற்பக் கோழிப் பண்ணையாளர்களுக்கு விலை கொடுக்கப்பட்டது தரமான முட்டைகளை ஏற்றுமதி செய்வ

தால் இங்கிலாந்தில் டென்மார்க் முட்டைகளுக்கு நல்ல கிராக்கி உள்ளது. ஏற்றுமதியில் 90 சதவீத முட்டைகள் இங்கிலாந்திற்குத் தான் அனுப்பப்படுகின்றன.

1937-ல் 33 மில்லியன் கோழிகளும் வாத்துக்களும் டென்மார்க்கில் இருந்தன. 1960-ல் மட்டும் சுமார் 7 ஏற்றுமதிச் சங்கங்கள் இயங்கி வந்தன. இவையனைத்தும் 'டென்மார்க் கூட்டுறவு முட்டை ஏற்றுமதிச் சங்கம்' என்ற கூட்டிணைப்பில் இணைந்துள்ளன. 1960-ல் சுமார் 176 மில்லியன் குரோனர் மதிப்புக்கு முட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. அதன் பின்னர், 1962-ல் ஏற்றுமதியின் மதிப்பு 156 மில்லியன் குரோனராகவும் 1967-ல் 100 மில்லியன் குரோனராகவும் குறைந்து விட்டது. எனினும், முட்டை ஏற்றுமதித் தொழிலும் டென்மார்க்கின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு உறுதுணையாக உள்ளது.

இதர விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள்

டென்மார்க்கில் விவசாயத் துறை அனைத்திற்கும் கூட்டுறவு இயக்கம் பரவியுள்ளது. இதனால் பெருங்குடி மக்கள் தங்கள் தேவைகளை எளிதாகப் பெற முடிகிறது. இந் நாட்டில் வளர்ச்சியுற்று இயங்கிவரும் சங்கங்களில் குறிப்பிடத்தக்கவை :

1. கூட்டுறவு இறைச்சிக் கொட்டில் நிலையங்கள் (Co-operative Slaughter houses)
2. கூட்டுறவுக் கால்நடை விற்பனைச் சங்கங்கள் (Co-operative Cattle Sale Societies.)
3. கூட்டுறவு விதை விநியோகச் சங்கங்கள் (Co-operative Seed Supply Societies.)
4. கூட்டுறவுப் பழ உற்பத்தியாளர் சங்கங்கள் (Co-operative Fruit Growers' Association.)
5. கூட்டுறவுக் கால்நடைத் தீவனச் சங்கங்கள் (Co-operative Feeding Stuff Societies)
6. கூட்டுறவு உரக் கொள்முதல் சங்கங்கள் (Co-operative Fertilizer Purchase Societies.)

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேற்றம்

கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக டென்மார்க் விவசாயத் துறையில் முன்னேற்றம் அடைந்திருப்பதுபோல் விவசாயத்தின் அடிப்படையிலும் கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. விவசாயத்தில் உற்பத்தித்துறை, கொள்முதல் துறை,

விற்பனைத்துறை ஆகிய எல்லாத் துறைகளிலுமே டென்மார்க் வழிகாட்டியாக உள்ளது. அங்குள்ள விவசாயச் சங்கங்களின் முன்னேற்றத்தை 1966ஆம் ஆண்டின் கணக்குப்படி அறிந்துகொள் வதற்குக் கீழ்க்காணும் பட்டியல் துணைசெய்கிறது.

சங்கத்தின் இனம்	சங்கங் களின் எண் ணிக்கை	உறுப் பினர் எண் ணிக்கை	மொத்த விற்பனை (மில்லியன் குரோனர்)
கூட்டுறவுப் பால் பண்ணைகள்	910	140,000	2,155
வெண்ணெய் ஏற்றுமதிச் சங்கங்கள் ...	9	668	604
பாலேட்டுக் கட்டி ஏற்றுமதிச் சங்கங்கள் ...	1	98	67
கூட்டுறவுப் பன்றி இறைச்சித் தொழிற்சாலைகள் ...	62	165,000	2995
முட்டை ஏற்றுமதிச் சங்கங்கள் ...	1480	45,000	176
கால்நடை ஏற்றுமதிச் சங்கங்கள் ...	21	38,000	180
கால்நடை விற்பனைச் சங்கங்கள் ...	58	115,000	307
கோழி இறைச்சி நிலையங்கள் ...	4	80,000	120
கால்நடைத் தீவனக் கொள் முதல் சங்கங்கள் ...	1,753	102,000	808
உரக் கொள்முதல் சங்கங்கள்	1,550	60,000	183
பழ விற்பனைச் சங்கங்கள் ...	6	1,557	12
மீன் விற்பனைச் சங்கங்கள்	37	1,418	80

நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வளவு பங்கு வகிக்கின்றனவென்பதும் முக்கியம்.

1. டென்மார்க்கின் மொத்தப் பால் உற்பத்தியில் 91 சத வீதம் கூட்டுறவுப் பால் பண்ணைகளால் உற்பத்தியாகின்றது.

2. வெண்ணெய் ஏற்றுமதியில் 65 சதவீதம் கூட்டுறவு வெண்ணெய் ஏற்றுமதிச் சங்கங்களால் செய்யப்படுகிறது.

3. முட்டை ஏற்றுமதியில் 36 சதவீதம் கூட்டுறவுச் சங்கங்களினால் ஏற்றுமதியாகிறது.

4. நாட்டிற்குத் தேவைப்படும் கால்நடைத் தீவனங்களில் 53 சதவீதம் கூட்டுறவுச் சங்கங்களால் விநியோகிக்கப்படுகிறது.

5. இறைச்சிக்கென்று கொல்லப்படும் கால்நடைகளில் 90 சதவீதம் கூட்டுறவுச் சங்கங்களால் செய்யப்படுகிறது.

6. மொத்த இறைச்சி ஏற்றுமதியிலும் கால்நடை ஏற்றுமதியிலும் 42 சதவீதம் கூட்டுறவுச் சங்கங்களால் செய்யப்படுகிறது:

அந்நாட்டில் நடைபெறும் கூட்டுறவு வணிகத்தையும் அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தையும் மக்கள்தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது கூட்டுறவுத் தலா வருமானம் 216 டாலர் எனத் தெரிகிறது. உலகிலேயே அதிகக் கூட்டுறவுத் தலா வருமானத்தைப் பெறும் நாடு டென்மார்க்தான். (அமெரிக்கா—129 டாலர்; கனடா-142 டாலர்).

கூட்டிணைப்புகள்

டென்மார்க்கிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் கூட்டிணைப்புகள் உள்ளன. சான்றாக, பால்பண்ணைச் சங்கங்கள் 1912ஆம் ஆண்டில் தங்களுக்கென 'டென்மார்க் தேசியப் பால் பண்ணைச் சங்கங்களின் கூட்டிணைப்பை' உருவாக்கின. தொடக்கச் சங்கங்களின் சார்பாக இக் கூட்டமைப்புதான் அரசாங்கத்துடனும் தனியார் நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு, கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்காகப் பாடுபடுகிறது. பொருள்களின் விலையை நிர்ணயிப்பதோடு மட்டுமின்றி, ஆலோசகர்கள், தணிக்கையாளர்களையும் நியமித்து, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய புள்ளிவிவரங்களையும் சேகரித்துப் பணியாற்றி வருகிறது.

அதேபோல், டென்மார்க்கிலுள்ள 9 வெண்ணெய் ஏற்றுமதிச் சங்கங்களும் ஒன்றுசேர்ந்து, தங்களுக்கென ஒரு கூட்டமைப்பை 1918 - ல் உருவாக்கின. இக்கூட்டமைப்பு ஏற்றுமதிச் சங்கங்களின் சார்பாக அயல் நாட்டு வணிகர்களுடன் தொடர்பு கொண்டு ஏற்றுமதிக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.

பாலேட்டுக்கட்டி ஏற்றுமதிச் சங்கங்களும் தம் விற்பனையை மேம்படுத்தும் நோக்கத்தோடு 1948- ல் ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

கூட்டுறவுப் பன்றி இறைச்சித் தொழிற்சாலைகள் இறைச்சியின் தரத்தை அதிகரிக்கவும் விற்பனையைப் பெருக்கவும் 1897 - ல் ஒரு கூட்டமைப்பை உருவாக்கின. இக்கூட்டமைப்பு இறைச்சியின் விற்பனை எந்தெந்த இடங்களில் அதிகமாயிருக்குமென்பதை அறிந்து அதற்கேற்பப் போக்குவரத்து வசதியை விருத்தி செய்து வருகிறது.

முட்டை ஏற்றுமதிச் சங்கங்களின் கூட்டிணைப்பு 1895 - ல் அமைக்கப்பட்டது. இது பிறநாடுகளில் டென்மார்க்கின் முட்டைகளை அதிக அளவில் விற்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.

இவ்வாறாக, தற்போது டென்மார்க்கில் 36 கூட்டிணைப்புகள் தத்தம் உறுப்பினர் சங்கங்களின் மேம்பாட்டிற்கெனப் பாடுபட்டு வருகின்றன. இக்கூட்டமைப்புகளுக்குமேல் 1. 'மத்தியக் கூட்டுறவுக்குழு' ,(The Central Co-operative Committee), 2. 'நகர்ப்புறக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்' (The Union of Urban Co-operative Societies) என்ற இரு அமைப்புக்கள் உள்ளன.

டென்மார்க்கிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் இவ்விரு அமைப்புகளுடனும் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் இணைக்கப்படாத சங்கங்களும் சில உள்ளன. மேலும், இவ்விரு அமைப்புகளும் 'பன்னாட்டுக் கூட்டுறவு ஒன்றிப்புடன்' (International Co-operative Alliance) இணைக்கப்பட்டிருக்கின்றன.

மேற்கூறிய இரண்டு அமைப்புகளில் ' மத்திய கூட்டுறவுக் குழு' 1899 -ல் தொடங்கப்பட்டது. நுகர்வோர் சங்கங்களின் கூட்டிணைப்புகளும் உற்பத்தியாளர் சங்கங்களின் கூட்டிணைப்புகளுமாக மொத்தம் 23 கூட்டிணைப்புகள் இக்குழுவுடன் இணைக்கப்பட்டன. ' நகர்புறக் கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம்' 1922ஆம் ஆண்டுதான் தொடங்கப்பட்டது. நகர்ப்புறங்களில் தொழிலாளர்களால் அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இதனுடன் இணைக்கப் பட்டன.

நகர்ப்புறக் கூட்டுறவுச் சங்கங்கள் :

டென்மார்க்கிலுள்ள நகரங்களில் பலவகையான கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவற்றைப்பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

கூட்டுறவு ரொட்டிக் கிடங்குகள் : தற்போது 40 கூட்டுறவு ரொட்டிக் கிடங்குகள் டென்மார்க்கிலுள்ள பெரிய நகரங்களில் இயங்கி வருகின்றன. தனியார் துறையிலிருந்த ரொட்டிக் கிடங்குகள் தரமற்ற ரொட்டிகளைத் தயாரித்துக் கொள்ளை இலாபத்திற்கு விற்று வந்தன. இத்தகைய இலாப மோகத்தை ஒழித்துக் கட்டுவதற்குத்தான் கூட்டுறவுக் கிடங்குகள் தொடங்கப்பட்டன. இக்கூட்டுறவு ரொட்டிக் கிடங்குகள் தரமான ரொட்டிகளை உற்பத்தி செய்து கூட்டுறவுப் பண்டகசாலைகளின் வழியாகவும் தனி வியாபாரிகளின் மூலமாகவும் நியாயமான விலைக்கு விற்பனை செய்கின்றன. மக்களின் இல்லங்களிலும் நேரடியாகவே சென்று விற்பனை செய்கின்றன. இதற்கென மோட்டார் வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

கூட்டுறவுக் கட்டடச் சங்கங்கள் : இச் சங்கங்களைக் கட்டட வேலை செய்வோரும் தச்சர்களும் சேர்ந்து தொடங்கியுள்ளனர். பொதுமக்களுக்குத் தேவையான கட்டடங்களை ஒப்பந்தம் மூலமாகக் கட்டி இச் சங்கங்கள் வழங்குகின்றன. இச் சங்கங்களுக்கு அரசாங்க நிதி உதவி இல்லாததால் தனியார் துறையுடன் கடும் போட்டியிட்டு இயங்கி வருகின்றன. தற்போது, டென்மார்க்கில் சுமார் 80 கட்டடச் சங்கங்கள் உள்ளன. இவையனைத்தும் சேர்ந்து ஒரு கூட்டமைப்பையும் உருவாக்கியுள்ளன.

உற்பத்திச் சங்கங்கள் : டென்மார்க்கிலுள்ள மக்கள் பல உற்பத்திச் சங்கங்களையும் பெரிய அளவில் தொடங்கியுள்ளனர். அச்சங்கங்களி குறிப்பிடத் தக்கவை: ஆடைகள் தயாரிப்பதற்கென்று தையல்காரர்கள் சேர்ந்து அமைத்த சங்கம், கூட்டுறவுக் காலணி உற்பத்திச் சங்கம், நட்சத்திரக் கூட்டுறவுச் சாராயத் தொழில் ஆகும். இவற்றில் சாராயம் காய்ச்சும் கூட்டுறவுத் தொழில் மிகப்பெரிய அளவில் இயங்கி வருகிறது.

இவை மட்டுமின்றி, நாம் நினைத்துப் பார்க்கக் கூடிய எல்லாத் தொழில்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. உண்டிச் சாலைகள், எரிபொருள் விற்பனை போன்ற துறைகளில் கூடக் கூட்டுறவு அமைப்புகள்தாம் உள்ளன. டென்மார்க் மக்களின் வாழ்க்கையே கூட்டுறவு அமைப்போடு ஒன்றித்து விட்டது. எனவே இந்நாட்டை 'கூட்டுறவு டென்மார்க்' என்றழைப்பதில் விந்தையேதுமில்லை. டென்மார்க் என்றால் கூட்டுறவு இயக்கம்தான் கற்றவர்களின் நினைவிற்கு வரும்.

கூட்டுறவுக் கல்வி

மக்களின் வாழ்க்கையோடு இணைந்து விட்ட கூட்டுறவு இயக்கம் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பதற்காகக்

கூட்டுறவுக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். தொடக்கத்திலிருந்தே கூட்டுறவுக் கல்விக்கு முக்கியத்துவம் தந்தது டென்மார்க். கிராமங்களில் கூட்டுறவு உயர்நிலைப் பள்ளிகள் அமைக்கப் பட்டுள்ளன. இப்பள்ளிகளில் கூட்டுறவு மாநாடுகளும் கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன. தற்போது இப்பள்ளி மாணவர்களுக்கு நேரடியாகவே கூட்டுறவுக் கல்வி போதிக்கப் படுகிறது. 1932ஆம் ஆண்டில் 'மிடல் போர்ட்' (Middel Fort) என்னுமிடத்தில் 'டென்மார்க் கூட்டுறவுக் கல்லூரி' தொடங்கப் பட்டிருக்கிறது. கூட்டுறவுத் தத்துவத்தை மட்டுமின்றிக் கூட்டுறவு இயக்கத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கேற்ற திறமையையும் இக் கல்லூரி வலியுறுத்தி வருகிறது. கூட்டுறவு மத்திய அமைப்பு களில் பணிபுரியும் அலுவலகர்களுக்கும் ஊழியர்களுக்கும் கூட இக் கல்லூரி குறுங்காலப் பாடத் திட்டத்தை உருவாக்கியுள்ளது. இக் கல்லூரியில் பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் பயின்று வருகின்றனர். தபால் மூலமாகவும் கூட்டுறவுக் கல்வி போதிக்கப் படுகிறது.

அரசாங்கமும் கூட்டுறவும்

டென்மார்க் அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிப்பது மில்லை; அதே சமயம் அவற்றின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதும் கிடையாது. இதுதான் டென்மார்க்கில் இயங்கி வரும் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பு. அவ்வப்போது தேவையான உதவிகளை மட்டும் அரசு தவறாமல் செய்து வருகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்திடம் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கட்டாயப் படுத்தப் படுவதும் கிடையாது. கூட்டுறவுச் சங்கங் களைக் கட்டுப் படுத்துவதற்கான சட்டங்களையும் அதிகமாக இயற்றுவதில்லை. எனினும் கடன் சங்கங்கள், காப்புறுதிச் சங்கங்கள் போன்றவை மட்டும் அரசாங்கச் சட்டங்களினால் கட்டுப் படுத்தப் படுகின்றன. இவை பொது மக்களிடமிருந்து வைப்புத் தொகை யைப் பெறுவதால் அவற்றின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது தம் பொறுப்பென அரசாங்கம் கருதுவதே இதற்குக் காரணம்.

டென்மார்க் கூட்டுறவின் சிறப்பியல்புகள்

1. டென்மார்க்கின் கூட்டுறவு இயல்பாகவே தோன்றிய மக்கள் இயக்கமாகும். எவ்விதத் தூண்டுதலுமின்றி இயல்பாகத் தோன்றிய இவ் வியக்கம் மக்களின் ஒத்துழைப்பாலும் திறமை யாலும் நன்கு வளர்ச்சி பெற்றுவிட்டது.

2. கூட்டுறவு இயக்கத்தின் வலுமைக்கும் வெற்றிக்கும் டென் மார்க் நாட்டு மக்களின் பண்புகளும் இயல்புமே காரணங்களாகும்.

இயற்கையிலேயே இந் நாட்டவர் நல்லெண்ணம் கொண்டவர்கள்; பிறரோடும் ஒருவரோடொருவரும் இனிமையாகப் பழகும் தன்மை கொண்டவர்கள்; எதிலும் தீவிரமாகவும் அவசரமாகவும் இறங்காமல் நிதானமாகச் செயல்படும் பழக்கமுடையவர்கள். சுருங்கக் கூறின் ஒருவரோடொருவர் ஒன்றித்துக், கூட்டுறவு முறையில் வாழ்வதற்கு வேண்டிய எல்லாப் பண்புகளையும்பெற்றவர்கள். மேலும், பெரும்பாலோர் கற்றவர்கள். 1814ஆம் ஆண்டிலேயே இந் நாட்டில் கட்டாயக் கல்விமுறை புகுத்தப்பட்டு விட்டதால் இது வரை அறியாமை என்ற பிரச்சினையே இங்குக் கிடையாது. 1850ஆம் ஆண்டிலிருந்து கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப் பள்ளிகளில் பெரும்பாலும் கூட்டுறவுப் பாடம் நேரடியாகப் போதிக்கப்படவில்லை; எனினும் இப்பள்ளியில் பயிலும் இள உள்ளங்களில் கூட்டுறவு உணர்வையும் ஒருவருக்கொருவர் உதவிசெய்ய வேண்டிய சமுதாயக் கடமையையும் ஆழமாக இப் பள்ளிகள் பதிய வைத்துவிடுகின்றன.

3. இந்நாட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் பொதுவாக அரசாங்கத்திடமிருந்து நிதி உதவியை எதிர்பார்ப்பதே கிடையாது. தமக்கு வேண்டிய நிதி வசதிகளைக் கீழ்க்காணும் நிறுவனங்களிடமிருந்தே பெறுகின்றன :

(i) புருசியாவிலுள்ள வங்கிகளைப்போல் அமைக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகள்.

(ii) தேசியக் கூட்டுறவு வங்கி. இது நாடெங்கிலும் கிளை வங்கிகளைக் கொண்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் குறுங்காலக் கடனுதவியைச் செய்து வருகிறது.

(iii) தனியார் துறையிலுள்ள வணிக வங்கிகள்.

(iv) மத்தியக் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்களும் தத்தம் உறுப்பினர் சங்கங்களுக்கு அவ்வப்போது தேவைப்படும் கடனுதவியை அளிக்கின்றன.

(v) தற்சமயம் பெரும்பாலும் இக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்குச் செலுத்தவேண்டிய இலாப ஈவை அளிக்காமல் அவரவர்களின் மூலதனக் கணக்கில் சேர்த்து வருகின்றன. இதன் மூலம் பெரிய அளவில் நிதி சேர்ந்துவிடுகிறது.

4. டென்மார்க் நாட்டின் கூட்டுறவு இயக்கத்தில் மற்றொரு சிறப்பியல்பு யாதெனில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்

பாலும் கிராமப்புறங்களில்தாம் உள்ளன. இவை விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களோடு நெருங்கிய தொடர்புடையனவாயும் உள்ளன. எனவே, மொத்த விற்பனைச் சங்கத்தில் கிராமப்புறக் கூட்டுறவுக் கடைகள்தாம் பெரும்பாலான உறுப்பினர்களாக உள்ளன.

5. டென்மார்க் கூட்டுறவுச் சங்கங்கள் பல நோக்குகளுக்காக அமைக்கப்படாமல் ஒரு குறிப்பிட்ட நோக்குடையவைகளாகவே உள்ளன. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் குறிப்பிட்டதொரு நோக்கத்திற்காக இருந்தால்தான் அப் பணியைச் சிறப்பாகச் செய்ய முடியுமென இந் நாட்டவர் நம்புகின்றனர். மேலும், ஒவ்வொருவகைச் சங்கத்திற்கும் பிராந்திய, தேசியக் கூட்டமைப்புச் சங்கம் உள்ளது.

6. ஒவ்வொரு சங்கத்திலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் பொதுக் குழுவை அமைத்து, அதன்மூலம் நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுக்கின்றனர். இத் தேர்தலில் 'ஒருவருக்கு ஒரு வாக்கு' என்ற தத்துவம் கடைப்பிடிக்கப்படுகிறது. ஊதியத்திற்கென நிர்வாகியும் இதர அலுவலர்களும் அமர்த்தப்பட்டபோதிலும் சங்கத்தின் நிதி விவகாரங்களை நிர்வாகக் குழுதான் கவனித்துக் கொள்கிறது.

6. அயர்லாந்தில் கூட்டுறவு இயக்கம்
(Co-operative Movement in Ireland)

அயர்லாந்து நாட்டில் முக்கியமாய் விவசாயிகளிடையேதாம் கூட்டுறவு இயக்கம் முன்னேறியுள்ளது. இங்கிலாந்தைப் போல் அயர்லாந்திலும் நிலப் பிரபுக்கள் முறை இருந்து வந்தது. பெரும் பாலான நிலங்கள் பிரபுக்களுக்கே சொந்தமாயிருந்தது; எனவே, விவசாயப் பெருமக்கள் அனைவரும் இந்நிலங்களில் குத்தகையாளர் களாகத்தாம் உழுது வந்தனர். இப் பெருங்குடி மக்களின் உழைப்பால் கொழுத்து வாழ்ந்த பிரபுக்கள் இவர்களைச் சுரண்டி வாழ்ந்து வந்தனர். கேட்ட குத்தகையைக் கொடுக்கும்படி மிரட்டி வந்தனர். இம்முறைக் கேற்ப 'கொம்பீன்மன்' (Combeen man) என்றழைக்கப்பட்ட வகுப்பினர் குடியானவர்களுக்கு வேண்டிய கடன் வசதிகளை அளித்துக் கடுமையான வட்டி வாங்கி வந்தனர். இந்த வகுப்பினர் வட்டிக் கடைத் தொழில், வியாபாரம் ஆகிய தொழில்களை நடத்தி வந்தனர். நிலக்கிழார் களின் பேராசையால் விளைச்சலையெல்லாம் குத்தகையாக அளந்து விட்டு வறுமையில் வாடிய குடியானவர்கள் தங்களின் இன்றியமை யாத தேவைகளைக்கூட நிறைவு செய்ய முடியாத நிலையில் இவ் வட்டிக் கடைக்காரர்களிடம் கடன்பெற்று அவர்களையே நம்பி வாழவேண்டிய சூழ்நிலையும் உருவானது. இவ்வாறாக, ஒருபுறம் நிலச் சுவான்தார்களின் பிடியிலும், மறுபுறம் வட்டிக் கடைக்காரர் களின் உடும்புப் பிடியிலும் சிக்கித் தவித்தனர் குடியானவர்கள். இவ்விரு வகுப்பினருமே குடியானவர்களின் உழைப்பையும் உடைமைகளையும் சுரண்டி வாழ்ந்து வந்தனர்.

குடியானவர்களின் பரிதாபமான நிலையைக் கண்டு அரசாங்கமே நடவடிக்கை எடுக்க வேண்டியதாயிற்று. 1881ஆம் ஆண்டில் 'அயர்லாந்து நிலச்சட்டம்' (Irish Land Act) நிறைவேற் றப்பட்டது. இச் சட்டத்தின் வாயிலாகக் குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பளிக்கப்பட்டதோடு குத்தகைக்கு ஒரு உச்ச வரம்பும்

நிர்ணயிக்கப்பட்டது. 1903ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டம் குத்தகையாளர்களையே நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக ஆக்கியது.

இவ்வாறு பெருநிலக்கிழார்களின் கொடும்பிடியிலிருந்து விடுதலை பெற்ற அயர்லாந்து நாட்டுக் குடியானவர்கள் சொந்தமாகவே விவசாயம் செய்யத் தொடங்கினர். பால் உற்பத்திக்கென்று கால்நடைகளை, முக்கியமாய்ப் பசுக்களை வளர்ப்பதே அவர்களின் முக்கியத் தொழிலானது. உற்பத்தியான பாலனைத்தையும் அங்காடியில் விற்றுச் சம்பாதித்தனர். அவர்களின் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட வெண்ணெய்க்கு இங்கிலாந்தில் கிராக்கி அதிகமாயிருந்தது. நாளடைவில் இத்தொழிலுக்கும் அவர்களுக்கு போட்டி கிளம்பியது. சுவீடனிலிருந்தும் டென்மார்க்கிலிருந்தும் தரமான வெண்ணெய் இங்கிலாந்து நாட்டிற்கு வந்து இறங்கியது. 1880-ல் டென்மார்க்கைச் சேர்ந்த பொறியாளர் ஒருவர் பாலிலிருந்து வெண்ணெயைப் பிரித்தெடுக்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்; இதன் விளைவாக டென்மார்க்கிலிருந்த பால் பண்ணைகள் கூட்டுறவு முறையில் தரமான பாலையும் வெண்ணெயையும் ஏராளமாக உற்பத்தி செய்து மலிவாக பிரிட்டனில் விற்கத் தொடங்கினர். பிரிட்டிஷ் மக்கள் அனைவரும் டென்மார்க்கிலிருந்து இறக்குமதியான பாலையும் வெண்ணெயையுமே விரும்பியதால் அயர்லாந்து மக்களுக்குச் சிக்கல் ஏற்பட்டது. பழைய முறையிலேயே பண்ணைகளை நடத்திவந்த அயர்லாந்து நாட்டினர் உற்பத்தியான பண்டங்களை விற்பனை செய்ய வழியின்றித் தவித்தனர். வியாபாரம் மங்கி விட்டதால் அவர்களின் நிலைமை பரிதாபத்திற்குரியதாகி விட்டது.

சர். ஹொரேஸ் பிளங்கட்

(Sir. Horace Plunkett)

இக்கட்டான இச் சூழ்நிலையில்தான் சர் ஹொரேஸ் பிளங்கட் என்னும் அறிஞர் அயர்லாந்தில் தோன்றினார். இவர் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் 1854-ல் பிறந்தார். இளமைத் துடுக்கும் கல்வியறிவும் ஒருங்கே பெற்ற இவர் வறுமையில் வாடிய தம் தாய்நாட்டை மேம்படுத்த உறுதி பூண்டார். கற்கும் போதே கூட்டுறவின் தன்மைகளையும் நன்மைகளையும் நன்குணர்ந்தார். வறுமையில் வாடிய தம் தாய்நாட்டு மக்களின் ஏற்றத்திற்கெனப் பாடுபடலானார். சிறந்த சமூக சேவையில் ஈடுபட்டு மக்களின் பேராதரவைப் பெற்றார்; மக்களை வழி நடத்தும் தலைவரானார். 1892-ல் பெரும்பான்மையான ஓட்டு வித்தியாசத்துடன் பாராளு

மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இங்கிலாந்தில் இயங்கி வந்த நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில் தீவிரப் பற்றுடைய இவர் தம் தாய்நாட்டு மக்களின் வறுமையைப் போக்குவதற்குக் கூட்டுறவு இயக்கம் தான் சிறந்த சாதனமென்பதை நன்குணர்ந் தார். தமது எண்ணத்தை நடைமுறைக்குக் கொண்டுவர அல்லும் பகலும் பாடுபட்டார். இவர் வகுத்த வழியைத்தான் அயர்லாந்து நாடு பின்பற்றியது. எனவேதான், இவர் 'அயர்லாந்து நாட்டுக் கூட்டுறவின் தந்தை' என்று மதிக்கப்படுகிருர். முதன்முதலில் இவர் தம் தந்தையின் பண்ணையிலேயே கூட்டுறவுப் பண்டகசாலை ஒன்றைத் தொடங்கினுர். ஆனுல், அப்பண்டகசாலை எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி பெறவில்லை. போட்டியினுலும் பல்வேறு எதிர்ப்புகளினுலும் அது தோல்வியடைந்தது. தோல்வியினுல் மனம் தளராமல் கூட்டுறவு டென்மார்க்கின் போட்டியிலிருந்து தம் நாட்டுக் குடியானவர்களை விடுவிக்க விரும்பினுர். நாடெங்கிலும் கூட்டுறவுத் தத்துவத்தையும் நன்மையையும் பற்றிப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினுர். 'நல்ல விவசாயம், நல்ல விற்பனை, நல்ல வாழ்வு' என்று அவர் வகுத்த வழியைச் சிறந்த தத்துவமென்று அயர்லாந்து மட்டுமின்றி உலகமே போற்றத் தொடங்கியது. அவர் தொடங்கிய கூட்டுறவுப் பண்டகசாலைகள் ஒருவாறு வெற்றியுடன் இயங்கி வந்த போதிலும் அவரது எண்ணமெல்லாம் வேளாண்மைத் துறையைப் பற்றியே வட்டமிட்டது. எனவே, 1894-ல் 'அயர்லாந்து விவசாயக் கூட்டுறவு சங்கம்' என்ற இயக்கத்தை உருவாக்கி அதற்கு அவரே தலைவராகவும் பணியாற்றினுர். அதனேடு, அவரது சிபாரிசின் பேரில் அயர்லாந்து நாட்டு அரசாங்கம் விவசாயத்துறை என்று புதியதொரு துறையை 1896-ல் உருவாக் கியது. இப் புதிய விவசாயத் துறைக்கு அவரே சிறிது காலம் தலைவராகவும் விளங்கினுர். தமது கூட்டுறவுத் தத்துவங்களையெல் லாம் நூல்களின் வழியாகவும் வெளியிட்டார். விவசாயத் துறைக்கு இவர் செய்த சேவையைப் பாராட்டி அயர்லாந்து விவசாயக் கூட்டுறவுச் சங்கம் 1908-ல் ஒரு கட்டடத்தைக் கட்டி அதற்கு ''பிளங்கட் இல்லம்'' எனப் பெயரிட்டு அவருக்கே அதை இனமாகத் தந்தது. மக்களின் நன்கொடை மூலம் உயர்ந்த இக் கட்டடம் அவரது மங்காப் புகழுக்கு மட்டுமின்றி என்றும் நிலைத் திருக்கக் கூடிய நினைவுச் சின்னமாகவும் விளங்குகிறது.

விவசாயக் கூட்டுறவு

திரு ஹொரேஸ் பிளங்கட் தமது நண்பர்களின் உதவியினுல் அயர்லாந்து நாட்டு விவசாய மக்களின் வாழ்வை உயர்த்துவதற் கென்று 1889ஆம் ஆண்டில் முதல் 'கூட்டுறவு வெண்ணெய்த்

தொழிற்சாலையை'த் தொடங்கினர். இரண்டு ஆண்டுகளிலேயே இதன் எண்ணிக்கை 16ஆக அதிகரித்தது. டென்மார்க்கைப் போலவே அயர்லாந்தும் தரமான பால் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கென்று நவீனக் கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கியது. 'பிளங்கட்'டின் சலியா முயற்சியின் விளைவாக இந்தக் கூட்டுறவு வெண்ணெய்த் தொழிற்சாலைகள் 1894-ல் 60ஆக உயர்ந்தன. அதே சமயத்தில் வேறு பல கூட்டுறவு விவசாயச் சங்கங்களும் அயர்லாந்தில் தோன்றின. குறிப்பாக, தரமான விதைகள், உரங்கள் போன்றனவற்றை மொத்தமாகக் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கும் சங்கங்களும், விவசாய அளிப்புச் சங்கங்களும், கூட்டுறவுப் பண்டகசாலைகளும், கடன் சங்கங்களும் தொடங்கப்பட்டன.

அயர்லாந்தில் உற்பத்தியான வெண்ணெயைப் பெரும்பாலும் இங்கிலாந்தில் இயங்கிவந்த கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம் தான் வாங்கி விநியோகித்து வந்தது. எனவே, 1891-ல் இங்கிலாந்தின் மொத்த விற்பனைச் சங்கம் அயர்லாந்தில் இயங்கி வந்த வெண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலையை விலைக்கு வாங்கி விடலாமெனத் தீர்மானித்தது. தம் உரிமைகளில் இங்கிலாந்து நாடு தலையிடுவதாக உணர்ந்த அயர்லாந்து பால் பண்ணையாளர்கள் இத் தீர்மானத்திற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தனர். எனவே, இங்கிலாந்தின் மொத்த விற்பனைச் சங்கம் அயர்லாந்தின் தென் பகுதியில் தானே 12 வெண்ணெய்த் தொழிற்சாலைகளைத் தொடங்கிவிட்டது. இதைத் தொடர்ந்து மேலும் 80 தொழிற்சாலைகள் இங்கிலாந்தின் மொத்த விற்பனைச் சங்கத்தால் தொடங்கப்பட்டு விட்டன. இதனால் அயர்லாந்து நாட்டுத் தொழிற்சாலைகளுக்கும் இங்கிலாந்தின் மொத்த விற்பனைச் சங்கத்திற்குமிடையே மனக் கசப்பு ஏற்பட்டு, இறுதியில் இங்கிலாந்தின் மொத்த விற்பனைச் சங்கத்துடன் அயர்லாந்து கொண்டிருந்த நல்லுறவு அறவே அறுந்து போய்விட்டது

அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கம் (Irish Agricultural Organisation Society.)

இங்கிலாந்தின் மொத்த விற்பனைச் சங்கத்தோடு ஏற்பட்ட பூசலின் விளைவாக அயர்லாந்தின் வெண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலைகள் இங்கிலாந்தின் கூட்டுறவு அமைப்புடன் கொண்டிருந்த தொடர்பை அறுத்துக் கொண்டனர். இதன் விளைவாகத் தமக்கும் ஏதாவதொரு கூட்டுறவு யூனியன் வேண்டுமென்பதை அயர்லாந்து மக்கள் நன்குணர்ந்தனர். எனவே, ஹொரேஸ்

பிளங்கட்டின் முயற்சியால் 1894ஆம் ஆண்டில் அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கம் (I. A. O. S.) தொடங்கப்பட்டது. இச் சங்கத்தின் குறிக்கோள்கள் மூன்று. அவை : 1. கூட்டுறவு இயக்கத்தை விளம்பரம் செய்வதோடு, கூட்டுறவுக் கல்வியையும் மக்களிடையே பரப்புவது; 2. கூட்டுறவு விவசாயச் சங்கங்களுக்கு உறுதுணையாக இருந்து அயல்நாட்டவரின் போட்டியிலிருந்து அவற்றைப் பாதுகாப்பது; 3. கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்துவது ஆகும். அதோடு நில்லாமல் அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கம் பல புதிய கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி அவற்றை முறையாக வழிநடத்தியும் வந்தது. அவைகளுக்கு வேண்டிய தொழில் வழிமுறைகளையும் கொடுத்தது.

இங்கிலாந்தின் மொத்த விற்பனைச் சங்கம் அயர்லாந்தில் தொடங்கிய வெண்ணெய்த் தொழிற்சாலைகளை எதிர்த்து இச்சங்கம் (I. A. O. S.) மக்களிடையே பிரச்சாரம் செய்து வந்தது. அயர்லாந்து நாட்டினர் இங்கிலாந்தின் மொத்த விற்பனைச் சங்கத்துடன் எவ்வித உறவும் கொள்ள வேண்டாமென வேண்டுகோளும் விடுத்தது. இந்த ஒத்துழையாமைப் பிரச்சாரத்தினுல் இங்கிலாந்தின் மொத்த விற்பனைச் சங்கத்திற்குப் பெரு நட்டம் ஏற்பட்டது. அதன் வெண்ணெய்த் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்த பண்டங்களையெல்லாம் அயர்லாந்தின் விவசாயச் சங்கங்களுக்கே விற்பனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதால் அயர்லாந்தின் தொழிற்சாலைகளோடு இருந்து வந்த போட்டி அறவே நீங்கியது.

அயர்லாந்தின் விவசாய அமைப்புச் சங்கம் (I. A. O. S.) கூட்டுறவுப் பால் பண்ணைகள் உற்பத்திசெய்யும் பண்டங்களின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்தது; இந்த நடவடிக்கைகளின் விளைவாகப் பால் பண்டங்களுக்கு வர்த்தக அறிகுறியையும் பெற்றுத் தந்தது. இக் குறிகளைக் கொண்டே அப் பண்டங்களின் தரத்திற்கு உத்தரவாதம் கொடுத்தது. இந் நடவடிக்கைகளையெல்லாம் மேற்கொள்வதற்கு முன்பு டென்மார்க், சுவீடன் போன்ற நாடுகளில் கூட்டுறவுப் பண்ணைகள் எவ்வாறு இயங்கி வந்தன என்பதை நன்கு ஆராய்ந்து அதற்கேற்ப அயர்லாந்திலும் நல்ல செயலாக்க முறையை மேற்கொண்டது. வெண்ணெய் அங்காடியில் அயர்லாந்து நாட்டின் வெண்ணெய் வகைகளுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டாவதற்கான வழிவகைகளை மேற்கொண்டது. பால், வெண்ணெய், பாலேடு ஆகிய அனைத்தும் நன்ருகப் பரிசோதிக்கப்பட்ட பின்பே அங்காடிக்கு அனுப்பப்பட்டன; வியாபார சம்மந்தப்பட்ட பத்திரிகைகளிலெல்லாம் விளம்பரம் செய்யப்பட்டது. இந் நடவடிக்கைகளின் விளைவாக அயர்லாந்து நாடு அருமையான வெண்ணெயை உற்பத்தி செய்ய முடிந்தது.

இந்த இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் அயர்லாந்து நாட்டின் கூட்டுறவு இயக்கம் சீர்கேடு அடையத் தொடங்கியது. புதிதாகத் தோன்றிய பல கூட்டுறவுச் சங்கங்கள் தனித்து இயங்க முடியாமல் கலைக்கப்பட்டன. இந் நிலையில் முதல் உலகப் போரின் விளைவாக எஞ்சியிருந்த சங்கங்களும் பாதிக்கப்பட்டன. குறிப்பாக, கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. இருந்த போதிலும் கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் மட்டும் எவ்விதப் பாதிப்புமின்றிச் செழித்தோங்கி வளர ஆரம்பித்தன. சான்றுக, அயர்லாந்து அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள், பொருளாதார நெருக்கடி, போக்குவரத்து இடர்ப்பாடுகள் ஆகிய பல தொல்லைகள் இருந்த போதிலும் பால் பண்டங்களுக்கு அதிகக் கிராக்கியிருந்த தால் கூட்டுறவுப் பால்பண்ணைகள் பாதிக்கப்படாமல் வழக்கம் போலவே வளர்ந்துகொண்டு வந்தன.

இத் தருணத்தில்தான் அயர்லாந்தில் முதன் முறையாக 'பொது நோக்குச் சங்கங்கள்' (General purpose Societies) தொடங்கப்பட்டன. முதல் உலகப் போருக்குப் பின்னர், மேலும் பல சோதனைகள் இந் நாட்டுக் கூட்டுறவு இயக்கத்திற்கு ஏற் பட்டன. வியாபார மந்தம், விலைவாசி இறக்கம் போன்ற பல இன்னல்களால் பல்வகையான சங்கங்கள் பாதிக்கப்பட்ட போதிலும் பால் பண்ணைகள் மட்டும் தமது நிர்வாகத் திறமை யினுல் தப்பிப் பிழைத்தன.

நாட்டுப் பிரிவினை : இங்கிலாந்து நாட்டின் பிடியிலேயே நீண்ட நாள் சிக்கித் தவித்த அயர்லாந்து 1921ஆம் ஆண்டு சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனுல், அடிமைத் தளத்தில் இருந்தபோது ஒரே நாடாக இருந்த அயர்லாந்து, விடுதலை பெற்றவுடன் 'வட அயர்லாந்து', 'சுதந்திர அயர்லாந்து' என இரண்டாகப் பிரிந்தது. இப்பிரிவினையின் விளைவாக அரசாங் கத்தின், பொருளாதார உதவிகளைப் பெற்றுவந்த 'அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கம்' அவ்வுதவிகளையெல்லாம் இழக்க நேரிட்டது. இதன் விளைவாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக் கிடையே இச்சங்கம் தள்ளாடித் தள்ளாடி நடைபோட்டு வந்தது. எனினும், கொஞ்சம் கொஞ்சமாக சுதந்திர அயர்லாந்தின் பொருளுதவியைப் பெற்ற இச்சங்கம் மெதுவாகத் தன்னை வலுப் படுத்திக் கொண்டது. வட அயர்லாந்தில் 'வட அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கம்' என்ற புதியதொரு சங்கம் தொடங்கப் பட்டது.

கூட்டுறவுப் பால் பண்ணைகளின் வளர்ச்சி

அயர்லாந்தில் விவசாயச் சங்கங்கள், கோழிப் பண்ணைகள், பால் பண்ணைகள் போன்ற பல்வேறு விவசாயக் கூட்டுறவுச்

சங்கங்கள் இருந்தபோதிலும், பால் பண்ணைகள்தாம் அயர் லாந்தின் உயிர்நாடியாக இயங்கி வந்துள்ளன. அயர்லாந்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு இப்பால்பண்ணைகள் தாம் முக்கியமான காரணமாகும். இப்பால் பண்ணைகள் தென் அயர் லாந்தில்தான் அதிக அளவிலும் பிரபலமாகவும் இருந்து வருகின்றன. புல்வெளிகள் இங்கு அதிகமாக இருப்பதே இதற்குக் காரணம். 1929ஆம் ஆண்டில் தென் அயர்லாந்தில் மட்டும் 231 பால் பண்ணைகள் இருந்தன; வட அயர்லாந்திலோ 54 பண்ணைகளே இருந்தன. ஒவ்வொரு பால் பண்ணையிலும் சராசரி 200 உறுப்பினர்கள் இருக்கின்றனர். இப்பண்ணைகள் பெரும் பாலும் உறுப்பினர்களின் பங்கு மூலதனத்தையே நம்பி நடைபெறு கின்றன. ஆரம்பத்தில் ஒரு பங்கின் மதிப்பு 1 பவுனாக இருந்தது. உறுப்பினர்கள் தாங்கள் வளர்த்து வந்த பசுக்களின் எண்ணிக்கைக் கேற்ப எத்தனை பங்கு வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம் என்று ஒழுங்கு இருந்தது. ஒரு பசுவுக்கு ஒரு பங்கு என்று இருந்ததால் ஒரு சில பசுக்களை மட்டும் வளர்த்து வந்த உறுப்பினர்கள் நிறையப் பங்கை வாங்க முடியாத நிலை இருந்தது. ஆனால், நாளடைவில் பங்கு மூலதனம் போதாது என்ற நிலை தோன்றவே இவ்விதியும் மாற்றப்பட்டு விட்டது. இப் பால் பண்ணைகள் உறுப்பினர்கள் அனைவரின் உத்தரவாதத்தின் பேரில் கூட்டுப்பங்குக் கம்பெனிகளிடமிருந்தும் கடன் வாங்க வசதி ஏற்பட்டது. மேலும், 1927-ல் 'அயர்லாந்து விவசாயக் கடன் கார்ப்பரேஷன்' (Irish Agricultural Credit Corporation) நிறுவப் பட்டது. எனவே, இக் கார்ப்பரேஷனிடமிருந்தும் பால் பண்ணைகள் கடன் பெற்று வருகின்றன.

அரசாங்கத்தின் பணி :

1896ஆம் ஆண்டில் அயர்லாந்து அரசாங்கம் விவசாயத் துறை யென்று புதியதொரு துறையை ஏற்படுத்தி அதன் வாயிலாகக் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்து வருகிறது. அயர் லாந்து விவசாய அமைப்புச் சங்கத்திற்கு மானியத் தொகை கொடுக்கிறது. நாட்டின் விடுதலைக்குப்பின் சுதந்திர அயர்லாந்தில் பல கூட்டுறவுச் சங்கங்கள் சீரழிந்து வந்ததைக் கண்ட அரசாங்கம் அவற்றைச் சீர்படுத்தப் பல முயற்சிகளை மேற்கொண்டது. வெண் ணெயின் தரம் தான் அதன் வியாபாரத்திற்கு ஆதாரம் என்பதை நன்குணர்ந்த அரசாங்கம் 1924ஆம் ஆண்டில் சட்டத்தின் வழியாக அதன் தரத்தை உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டது என்பதை முன்னரே கண்டோம்.

அரசாங்கம் தனது விவசாயத்துறை வாயிலாக ஹேகன் வெண்ணெய்த் தொழிற்சாலைச் சட்டத்தை 1928ஆம் ஆண்டு

அமுலாக்கியதுதான் மாபெரும் உதவியாகும். இச்சட்டம் அமுலாவதற்கு முன்னர்க் கூட்டுறவுப் பால் பண்ணைகள் மட்டுமின்றி தனியார் பால் பண்ணைகளும் ஏராளமாக இருந்தன. மேலும், திறமையற்ற பல பால் பண்ணைகள் செலவுமிக்க வகையில் இயங்கி வந்ததால் பாலின் விலை இறங்கலாயிற்று. தனியார் பால்பண்ணைகளில் பெரும்பாலானவற்றை ஒரு சில சம்பெனிகள் நடத்தி வந்தன. இக் கம்பெனிகளுக்குச் சொந்தமான பால் பண்ணைகளையெல்லாம் அரசாங்கமே வாங்கிக் கொள்வதற்கு இச் சட்டம் வழி செய்தது. அவ்வாறு வாங்கிய பால்பண்ணைகளையெல்லாம் படிப்படியாக அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கத்திற்கே கொடுத்து அவற்றையும் கூட்டுறவு முறையில் நடத்த வழி செய்தது. இவ்வாறாக, கூட்டுறவு இயக்கத்தை முறையாக வளர்ப்பதற்கு அரசாங்கமே பல திட்டங்களை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தது குறிப்பிடத்தக்கது மட்டுமின்றிப் பாராட்டத்தக்கதுமாகும். மேலும், அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியான பால் பண்டங்களின் மீது இறக்குமதி வரியையும் விதித்து உள்நாட்டுப் பால் பண்ணைகளைப் பேணிக் காத்து வருவதோடு, அவற்றிற்கு ஊக்கமும் அளித்து வருகிறது.

உலகப் போரின் விளைவுகள்

இரண்டு உலகப் போர்களின் போதும் அயர்லாந்து நாடு கலந்து கொள்ளவில்லை; எனினும், போரின் விளைவுகளால் அயர்லாந்து நாடும் பாதிக்கப்பட்டது. முதல் உலகப் போரின்போது விலைவாசிகளெல்லாம் அளவுக்கு மீறி ஏறியதால் விவசாயிகளுக்குக் கொழுத்த வருமானம் கிடைத்தது. விவசாயப் பொருள்களின் விலைகள் பெருமளவில் உயர்ந்தன. எனவே விவசாயிகள் அளவுக்கு மீறிய வருவாய் பெற்றனர், 'நமக்கு வறுமை என்பதே என்றும் கிடையாது' என்று அகமகிழ்ந்தனர். ஆனால் உலகப் போர் முடிந்து 1921-ல் ஏற்பட்ட மந்தத்தின் விளைவாக விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். கூட்டுறவுச் சங்கங்களும் நலியத் தொடங்கின. கூட்டுறவுச் சங்கங்கள் தாம் கொடுத்த கடனையெல்லாம் திரும்பப் பெற முடியவில்லை; அவற்றின் இருப்புகளின் மதிப்பும் சரியத்

தொடங்கியது. போரின்போது தொடங்கப்பட்ட பல புதிய சங்கங்கள் வாழ்வதற்குக்கூட முடியாமல் மூடப்பட்டன. எவ்வாறிருப்பினும், கூட்டுறவுப் பால் பண்ணைகள் மட்டும் இந்த ஆபத்திற்குள்ளாகாமல் தப்பித்துக் கொண்டன.

இரண்டாம் உலகப் போரின் போதும் அயர்லாந்தின் கூட்டுறவுத் தொழில்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. பிற நாடுகளிலிருந்து இறக்குமதியான கோதுமை குறைந்து விட்ட காரணத்தால் அயர்லாந்து நாட்டு மக்கள் தம் பண்ணைகளையெல்லாம் உழுது கோதுமைச் சாகுபடி செய்யலாயினர். தம் கால்நடைகளை வளர்த்துப் பராமரிப்பதில் அக்கறைகாட்டவில்லை. இதனால் பால் உற்பத்தி மிகவும் குறைந்துவிட்டது; இதையொட்டி வெண்ணெய்த் தொழிற்சாலைகளுக்குப் பெரு நட்டம் ஏற்பட்டது. போருக்குப் பின்னர் இத்தொழிலைச் சீர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது கால்நடைகளை உற்பத்தி செய்வதிலும் பராமரிப்பதிலும் என்றுமில்லாத அக்கறை எடுக்கப்படுகிறது; செயற்கை முறையில் கால்நடைகளை அபிவிருத்தி செய்யும் முறை பழக்கத்திற்கு வந்து விட்டது. அதனோடு, நிறையப் பால்தரும் கால்நடைகளை எப்படிப் பராமரிக்கவேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்படுகிறது; இதற்கென்று ஆராய்ச்சிகளும் பரிசோதனைகளும் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விவசாயக் கொள்கையை உருவாக்குவதற்கென்று 1956-ல் அரசாங்கம் ஒரு குழுவை அமைத்தது. இக்குழு செய்த சிபாரிசின் பேரில் அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்தது. இத்திட்டத்தின் வழியாகப் பால் பண்ணைத் தொழில் தீவிரமாக முன்னேறி வருகிறது.

இன்றைய நிலை

1968-ஆம் ஆண்டின் கணக்குப்படி அயர்லாந்து நாட்டின் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி பற்றிய புள்ளி விவரங்கள் கிடைத்துள்ளன. இப்புள்ளி விவரங்கள் வட அயர்லாந்தையும் சேர்த்து எடுக்கப்பட்டவை. அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவுச் சங்கத்தின் வகை	எண்ணிக்கை	உறுப்பினர் எண்ணிக்கை	பங்கு மூலதனம் (பவுன்கள்)	மொத்த விற்பனை (பவுன்கள்)	மொத்தத்தில் ஒவ்வொன்றும் கொண்டுள்ள சதவீதம்
1. பலநோக்குப் பால் பண்ணைகள் ...	168	55,352	1,736,66	99,500,000	53.6
2. கால்நடைகள் சந்தை ...	30	18,265	365,478	46,073,587	24.8
3. இறைச்சி பக்குவப்படுத்தும் நிலையம்	3	14,215	1,598,581	16,726,280	9.0
4. மொத்த விற்பனைச் சங்கங்கள் ...	3	480	253,407	12,773,082	6.9
5. விவசாயப் பண்டகசாலைகள் ...	59	17,060	104,555	6,213,600	3.3
6. தோட்ட வேளாண்மைச் சங்கங்கள்	15	9,776	260,752	1,589,567	0.85
7. மீன் பிடிப்புச் சங்கங்கள் ...	18	678	9,350	709,044	0.38
8. பன்றி வளர்ப்புச் சங்கங்கள் ...	14	3,852	108,326	704.232	0.38
9. கால்நடை அபிவிருத்திச் சங்கங்கள்	4	81	36,485	513,743	0.27
10. கைத்தொழில் சங்கங்கள் ..	9	6,238	6,375	86,188	0.05
11. பண்ணைப்பணிச் சங்கங்கள் ..	6	347	2,515	6,961	—
12. பிற சங்கங்கள் ...	17	1,218	22,862	548,477	0.29
மொத்தம் ..	346	127,563	4,505,349	185,456,284	100

பால், வெண்ணெய்ச் சங்கங்கள்

இன்றும் இச்சங்கங்கள் தாம் அயர்லாந்து நாட்டிலேயே முதலிடம் பெற்றுள்ளன. 1966-ஆம் ஆண்டில் மட்டும் இச்சங்கங்கள் சுமார் 239 மில்லியன் காலன் பாலைக் கையாண்டுள்ளன. 21 மில்லியன் பவுன் மதிப்புள்ள பண்ணைப் பொருள்களை உறுப்பினர்களுக்கு விநியோகித்துள்ளன. இவற்றின் மொத்த விற்பனை 1963-ல் 49 மில்லியன் பவுன்களிலிருந்து 1968-ல் 99 மில்லியன் பவுன்களாக அதிகரித்திருக்கிறது. 1966-ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 22 மில்லியன் பவுன்கள் இச்சங்கங்களுக்கு மிச்ச வருமானமாகக் கிடைத்துள்ளது. 'நேப் அறிக்கை'யின் (Knaap Report) சிபாரிசின் பேரில் தற்போது கூட்டுறவுப் பண்ணைகளை ஒருங்கிணைக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. இத்தகைய ஒருங்கிணைப்பினை ஊக்குவிப்பதற்கென்று அரசாங்கம் 'அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கத்திற்கு' வேண்டிய அதிகாரங்களைக் கொடுத்துள்ளது. இதன் விளைவாக இக்கூட்டுறவுச் சங்கங்கள் 158-லிருந்து 19-ஆகக் குறைந்துள்ளன.

அளிப்புச் சங்கங்கள்: 1967-ஆம் ஆண்டின் கணக்குப்படி அயர்லாந்தில் 62 அளிப்புச் சங்கங்கள் இயங்கி வந்திருக்கின்றன இவை 4. 3 மில்லியன் பவுன் மதிப்புள்ள பொருள்களை வழங்கியிருக்கின்றன. 1966-ல் இவை பெற்ற இலாபம் 5 மில்லியன் பவுன்களெனத் தெரிகிறது; இச்சங்கங்கள் கால் நடைகளுக்குத் (கோழி பசு, பன்றி முதலியன) தேவையான தீவனங்களை விநியோகித்து வருகின்றன. இச் சங்கங்களுக்கென்று 'அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கம்' பல ஆய்வுக் கூடங்களைக் கட்டித் தந்துள்ளது.

கால்நடைச் சங்கங்கள்: 1968-ல் அயர்லாந்தில் மொத்தம் 30 கால்நடைச் சங்கங்கள் இருந்தன. இச்சங்கங்கள் பன்றிகளை வளர்த்து, இறைச்சி தயார் செய்து அவற்றை டப்பாக்களில் வைத்து விற்பனை செய்கின்றன. தேசிய உற்பத்தியில் இச்சங்கங்களின் உற்பத்தி மட்டும் 24 சதவீதமெனக் கணிக்கப்பட்டுள்ளது. இச்சங்கங்களின் நடவடிக்கைகளையெல்லாம் ஒரே சீராக அமைப்பதற்கென்று 1967-ல் மையக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழு 'அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கத்தோடு' சேர்ந்து கால்நடைச் சங்கங்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

இன்றும் 'அயர்லாந்து விவசாய அமைப்புச் சங்கம்' தான் தலைமைச் சங்கமாக இருந்து எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களையும்

ஒருங்கே வழி நடத்தி வருகிறது. பால் பண்ணைச் சங்கங்களின் வேலைகளையெல்லாம் நவீனமுறையில் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. அரசாங்கத்திற்குச் சொந்தமான பால் பண்ணைகள் விரிவடைவதால் கூட்டுறவுப் பால் பண்ணைகள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக அதற்கு எதிர்ப்பும் தெரிவித்து வருகிறது. அதோடு மட்டுமின்றி, அரசாங்கப் பால் பண்ணைகளையும் தம்வசம் ஒப்படைக்கும்படி வற்புறுத்தி வருகிறது. இத்தலைமைச் சங்கத்தில் பொறியியல் துறையும் இணைக்கப் பட்டுள்ளது. எனவே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய கட்டடங்களைத் திட்டமிட்டுக் கட்டி, அவற்றிற்கு வேண்டிய தளவாடங்களையும் பொருத்த இத்துறை உதவி செய்து வருகிறது. மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்திடமிருந்து கடன் பெற விரும்பும்போது அக்கடன் மனுக்களைப் பரிசீலனை செய்து சிபாரிசு செய்யும் அலுவலும் இத்தலைமைச் சங்கத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது, கூட்டுறவுச் சங்கங்கள் புதிய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அச்சங்கங்களின் நிலையான சொத்து மதிப்பில் 50 முதல் 60 சதவீதம் வரை அரசாங்கமே கடன் கொடுக்கிறது. இத்தலைமைச் சங்கத்தின் பொருளாதாரத் துறை புதிய திட்டங்களுக்கு வேண்டிய புள்ளி விவரங்கள், தொழில் வரி தொடர்பான செய்திகள் அனைத்தையும் வழங்கி வருகின்றன இறுதியாக, இத்தலைமைச் சங்கம் கூட்டுறவாளர்களுக்கு வேண்டிய பயிற்சியையும் அளித்து வருகிறது.

7. இத்தாலியில் கூட்டுறவு இயக்கம்
(Co-operative Movement In Italy)

இயக்கத்தின் ஆரம்பம்

இத்தாலி நாடு ஒரு காலத்தில் உலகின் வழி காட்டியாகத் திகழ்ந்தது. அரசியல் முறை, அரசியல் அமைப்பு ஆகியவற்றைப் பிறநாடுகளுக்கு அளித்த பெருமை இத்தாலிக்கு உண்டு. சிறந்த பேரரசை உருவாக்கி ஆட்சி செய்ததன் வழியாகச் சட்டத்தையும் ஒழுங்கையும் ஏற்படுத்திய பெருமை ரோமாபுரியைச் சேரும். அக்காலத்திய நகரங்கள், சாலைகள், கப்பல்கள், கோட்டைகள் மட்டுமின்றி விளையாட்டு அரங்கங்களையும் நினைவுச்சின்னங்களையும் கட்டிப் பெருமை பெற்றனர் இத்தாலியர். சிற்பங்களையும் சிலைகளையும் வடித்து அறியாப் புகழையும் அடைந்து பெருமிதம் கொண்டவர்களும் அவர்கள்தாம். இந்நாட்டு மக்களின் வேலைத் திறனை உலகே போற்றி வியந்தது. ஆனால் நாள்தோறும் மாற்றம் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும் இவ்வுலகில் இத்தாலி நாட்டின் சிறப்பு மங்கி வரத் தொடங்கியது. தொழில் நுணுக்கம், விஞ்ஞான வளர்ச்சியின் வாயிலாக ஏனைய நாடுகள் பல மாபெரும் சாதனைகளை ஏற்படுத்த முயன்ற போது, இத்தாலி நாடு விவசாயம், தொழில், வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலுமே பழைய வழிமுறைகளையே பின்பற்றி வந்ததால் அதன் சீரும் சிறப்பும் மங்கி, பொருளாதார நிலை நலிந்து பலவீனமடைந்தது. இதனால் உலகப் புகழ் பெற்றிருந்த ரோமானியர் வறுமைக்குள்ளாகித் தவித்தனர். நிதிவசதியற்ற பெரும்பாலான விவசாயிகள், தொழிலாளர் முதலானோர் உணவு, உடைக்குக் கூட வழியின்றி வட்டிக் கடை வைத்திருந்த யூதர்களிடம் கடன் பெற்றுத் தொல்லைப் பட்டனர். கடன் வாங்க வந்த மக்களின் எண்ணிக்கைப் பெருகப் பெருக வட்டிக் கடைக்காரர்கள் தம் வட்டியையும் 50, 100, 150, 200 சதவீதமாக உயர்த்தினர். பாமர மக்கள் அனைவரும் தம் உடைமைகளையெல்லாம் வட்டிக் கடையில் விட்டு விட்டுக் கடன்

வாங்கிச் சென்றனர். விஷம் போல் ஏறிய வட்டி வீதத்தைக் கண்டு மனம் கலங்கினர் மக்கள்.

வட்டிக்கடைக்காரர்கள் துன்புறுத்துவது போதாதென்பது போல் பெருநிலக்கிழாரும் இந்நாட்டுப் பெருங்குடி மக்களை வதைக்கத் தொடங்கினர். சாகுபடிக்குத் தேவையான விதை, உரம் போன்றனவற்றை நிலக்கிழார்களே ,அளித்தமையால் விளைச்சலில் பெரும் பகுதியைக் குத்தகையாகப் பிடுங்கினர். விளைச்சலை யெல்லாம் குத்தகையாகப் போட்டுவிட்டுப், பட்டினி கிடந்தனர் பல்லாயிரப் பெருங்குடி மக்கள். மேலும்,1880-ல் ஏற்பட்ட வியாபார மந்தத்திஞல் விலை வாசிகள் சரிவுற்றதைத் தொடர்ந்து வேலையில்லாப் பிரச்சினையும் இந்நாட்டவரை வாட்டியது. பெற்ற கடனைத் திரும்பிக் கொடுக்க முடியாத மக்களின் உடைமைப் பொருள்கள் அனைத்தும் வட்டிக்கடைக்காரர்களின் இல்லங்களில் தஞ்சமடைந்தன.

இக்கட்டான இச் சூழ்நிலையில் தான் லுசாட்டி (Luigi Luzzati) உல்லம்பர்க் (wollemberg) ஆகிய இரு கூட்டுறவாளர்கள் விடி வெள்ளியெனத் தோன்றித் தாழ்ந்துவிட்ட மக்களை உயர்த்து வதற்கென அல்லும் பகலும் பாடுபடத் தொடங்கினர். மிலானில் இருந்த கல்வி நிறுவனமொன்றில் பொருளாதாரப் பேராசிரிய ராகப் பணியாற்றி வந்த லுசாட்டி மக்களின் பொருளாதார நிலை நலிவுற்றதைக் கண்டு அவர்களின் துயர் துடைக்க எண்ணி, கூட்டுறவுத் துறைபற்றிய நூல்களையெல்லாம் படிக்கத் தொடங் கிஞர். ஏட்டளவில் பெற்ற அறிவு போதாதென்று, ஜெர்மனிக்குச் சென்று அங்கு இயங்கி வந்த கூட்டுறவு இயக்கத்தின் நுட்பங்களை யெல்லாம் கண்டறிந்தார். ஜெர்மனியில் சூல்ஸ்வங்கி முறைத்தான் இவரைப் பெரிதும் கவர்ந்தது. தாய் நாடு திரும்பியதும் கூட்டுறவு முறைகளை நாடெங்கும் பரப்ப வேண்டிய முயற்சிகளை மேற்கொண் டார். வறுமையில் வாடும் மக்களுக்குக் கூட்டுறவு ஒன்றே சிறந்த மருந்தென்பதை நன்கு புரிந்த இவர் தம் எண்ணங்களுக்கு உருக் கொடுக்க முனைந்தார். முதலில் தொழிற்சாலைகளில் பணி புரிந்து வந்த தொழிலாளர்களிடையே கூட்டுறவு அமைப்புகளை உரு வாக்கத் திட்டம் தீட்டிஞர். தொழிலாளர்கள் நகர்ப்புறங்களில் இருந்த காரணத்தால் அச் சூழ்நிலைக் கேற்பக் கொள்கைகளை வகுத்தார். இவரது பெரு முயற்சியாலும் சலியா உழைப்பாலும் இத்தாலியில் கூட்டுறவு இயக்கம் வேரூன்றித் தழைத்து விரி வடையத் தொடங்கியது.

அடுத்து,லுசாட்டியைப் போன்றே உல்லம்பர்க் என்பவரும் இந் நாட்டின் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட மேதை

யாவர். செல்வந்தர் குடும்பத்தில் தோன்றிய இவர் முறையான கல்வி கற்று, தம் நாட்டு மக்களின் துயரைத் துடைக்க வலுவான அடித்தளத்தை அமைத்த பின்னர்த்தான் கூட்டுறவு இயக்கத்தில் செயலாற்றத் தொடங்கினுர். கூட்டுறவு பற்றிய இலக்கியங்களைக் கற்றறிந்த இவர், ரைஃபீசன் வங்கி முறையால் கவரப்பட்டுத் தம் நாட்டிலும் கிராமப்புறங்களில் அவ் வகை வங்கிகளை நிறுவத் திட்டமிட்டார். விவசாயிகள் தாம் நாட்டிற்கே முதுகெழும்பு போன்றவர்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் நாட்டுப்புறவங்கிகளைத் தொடங்கி விவசாயிகளோடு ஒன்றுசக் கலந்து உறவாடி வாழ்ந்து அவர்களின் நன்மதிப்பைப் பெற்றுர். பொது நலத்தையேக் குறிக்கோளாகக் கொண்டிருந்தமையால் நிதி அமைச்சர் பதவியில் அமர்த்தப்பட்டு, விவசாயிகள் மட்டுமின்றி, சாதாரணத் தொழிலாளர்களும் முன்னேறப் பாடுபட்டார்

மக்கள் வங்கிகள்
(Peoples' Banks)

ஜெர்மனி நாட்டிலிருந்து திரும்பிய லுசாட்டி அவர்கள் தம் கூட்டுறவு எண்ணங்களைச் செயல்படுத்த எண்ணி நட்புரிமைக் கூட்டுறவுச் சங்கத்தைத் (Friendly Society) தொடங்கினுர். நாளடைவில் இச்சங்கம் கூட்டுறவு வங்கியாக மாறியது. இன்றும் கூட இச்சங்கம் நல்லமுறையில் இயங்கி வருகிறது. 1866ஆம் ஆண்டு 700 'லையர்' (Lire) மூலதனத்தைக்கொண்டு இவர் மிலான் என்ற நகரில் முதல் கூட்டுறவு வங்கியைத் தொடங்கினுர். இவ் வங்கி சிறந்த முறையில் இயங்கி உறுப்பினர்களுக்கு வேண்டிய கடனுதவியை அளித்து வந்தது. எல்லோரும் வியக்கத் தகுந்த முறையில் இவ்வங்கி வெற்றி கண்டதைத் தொடர்ந்து பல கூட்டுறவு வங்கிகள் தோன்றலாயின. உறுப்பினர்களுக்கு வேண்டிய தருணத்தில் இவ்வங்கிகள் கடன் உதவி செய்தமையால் பெரும்பாலான மக்களுக்கு இவற்றின்மீது ஈடுபாடு ஏற்பட்டது. எனினும், இவையனைத்தும் நகர வங்கிகளாயிருந்தமையால் நகரப்பகுதியைச் சேர்ந்த தொழிலாளர்களுக்குத் தாம் அதிக நன்மை ஏற்பட்டதேயன்றிக் கிராமப்புறங்களில் வாழ்ந்த விவசாயிகளுக்குக் கணிசமான பலன் கிட்டவில்லை. தற்போது இவ்வங்கிகள் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்து விட்டனவென்ருல் இத்தாலிய நாட்டிலுள்ள எல்லா வங்கிகளும் செய்யும் தொழிலில் மூன்றில் ஒரு பகுதி இவற்ருல் செய்யப்படுகின்றன.

இவ்வங்கிகளின் சிறப்பியல்புகளும் அம்சங்களும் குறிப்பிடத் தக்கன. 1. இவ்வங்கிகள் நகர்ப்புறங்களில் இருந்தமையால் நகரவாசிகளும் பெரு நிலக்கிழாருமே பயனடைந்தனர். பெரும்பாலான

உறுப்பினர்கள் நடுத்தர வகுப்பினராகையால் கடை நிலையிலிருந்த ஏழை மக்கள் இவற்றை அணுகுவதே கிடையாது. 2. இவ்வங்கிகளில் நடுத்தர வகுப்பினரும் செல்வந்தர்களும் உறுப்பினர்களாக இருந்தமையால் 'வரையறுக்கப்பட்ட பொறுப்பே' இவற்றின் தன்மையாயிற்று. வரையறையற்ற பொறுப்புடையனவாக இருந்தால் செல்வந்தர்கள் உறுப்பினராக மாட்டார் என்பதை லுசாட்டி நன்குணர்ந்திருந்தார். இந்நிலையில் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கச் சட்டங்களும் அமுலாயின. வரையறுக்கப்பட்ட பொறுப்பையே அரசாங்கம் விரும்பியதால் வரையறையற்ற பொறுப்புநிலை நீங்கியது. இச்சட்டத்திற்குப் பின் எல்லா வகுப்பினருமே இக் கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்களானர். எல்லா உறுப்பினர்களுக்குமே அவர்களது தேவையின் அடிப்படையில் அவர்களது நாணயத்தை நன்கறிந்த இவ்வங்கிகள் கடனுதவி அளித்தன. 3. பங்குகளின் மதிப்பு ஒரே மாதிரியாக இல்லாமல் சூழ்நிலைக்கேற்ப பங்குகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. உறுப்பினர்கள் பல பங்குகளை வாங்க விரும்பியதால் 5000 லையர் மதிப்புள்ள பங்குகளுக்குமேல் எவரும் வாங்கமுடியாதபடி விதி கொண்டுவரப்பட்டது. அதே சமயம் குறிப்பிட்ட தொகைக்குமேல் எந்த வங்கியும் பங்குகளை வெளியிடக் கூடாதென்ற சட்டமும் அமுலானது. எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்குமே போதுமான பங்கு மூலதனம் கிட்டியது. 4. பெரும்பாலான உறுப்பினர்கள் நேர்மையும் நாணயமும் கொண்டு விளங்கியதால் 'வராக்கடன்' என்ற பிரச்சினைக்கே இடமில்லை. உறுப்பினர்களின் இச்சிறந்த பண்பினைக் கண்ட பொதுமக்கள் தங்களின் சேமிப்புத் தொகையை இவ் வங்கிகளில் வைப்பாக வைத்தனர். ஒரு கூட்டுறவு வங்கியின் வெற்றி அதன் உறுப்பினர்களையே சார்ந்ததென்பதை லுசாட்டி நன்குணர்ந்திருந்தார். லுசாட்டி அவர்கள் தாம் தொடங்கிய சங்கத்தில் கடைப்பிடித்த முறைகள் வருமாறு:

1. ஆரம்பத்திலேயே உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்போது அவர்களின் தகுதி, திறமை, நாணயம், நன்னடத்தை முதலியன நன்கு பரிசீலிக்கப்பட்டன. 2. கடன் வாங்கிய உறுப்பினர்கள் தவறாமல், தாமதமின்றி, உரிய காலத்தில் கடனைத் திருப்பித் தர வற்புறுத்தப்பட்டனர். 3. சங்கத்தின் பொதுக் கூட்டங்களுக்கு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் வருமாறு வற்புறுத்தப் பட்டதால் சங்க நடவடிக்கைகளில் உறுப்பினர்களுக்கு ஈடுபாடு ஏற்பட்டது. 4. மிகச் சிறந்த முறையில் கணக்கு வழக்கு முறை கண்காணிக்கப்பட்டுச் செம்மையாகச் சங்கம் இயங்க வகை செய்யப் பட்டது. 5. கடன் விரும்பும் உறுப்பினரின் குண நலன்களையும் உடைமை விவரங்களையும் நன்கு பரிசீலித்த பின்னரே கடன்

வழங்கப்பட்டது; மேலும், கொடுக்கப்பட்ட கடன் உரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்தப் படுகிறதா என்றும் இச்சங்கம் கண்காணித்தது. இவ்வாருக, ஒவ்வொரு கட்டத்திலும் உறுப்பினர்களின் மேம்பாட்டில் சங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்தது.
6. லுசாட்டியின் சங்கங்கள் தமக்குத் தேவையான நிதி வசதியைப் பெரும்பாலும் உறுப்பினர்களின் வைப்புத் தொகையிலிருந்தே பெறுகின்றன. நிதி விவகாரத்தில் தன்னிறைவு பெறத் துடித்த லுசாட்டி தம் உறுப்பினர்களுக்குச் சிக்கனத்தின் அவசியத்தை வலியுறுத்தி வந்தார். இதனுல் உறுப்பினர்கள் தம் செலவைக் குறைத்துச் சேமிப்பை வைப்புத் தொகையாக வைத்தனர்.

இக் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் மக்களாட்சி அடிப்படையில் இயங்கி வந்தன. உறுப்பினர்கள் அனைவரையும் கொண்ட பொதுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு அன்ருட நிர்வாக வேலையைக் கவனித்தது சங்க வளர்ச்சிக்கான திட்டங்களை நிர்வாகக் குழுவே தீட்டியது. சிறப்பான காரியங்கள் ஏதும் நடைபெறுவதாயின், அதற்கென்று துணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட கடன்கள் பெரும்பாலும் சிறிய கடன்களாக மட்டுமின்றி, குறுகிய காலத்திற்கே அளிக்கப்பட்டன. வட்டியும் குறைவாகவே இருந்தது. பெரும்பாலும் கடன்கள் யாவும் 'ஆட்பிணை' (Personal Security) அடிப்படையில் அளிக்கப் பட்டதோடு குறிப்பிட்ட காலத்தில் கடனைத் திருப்பித்தர இயலாத உறுப்பினர்களுக்குக் காலத் தவணை அதிகரிக்கப் பட்டது. பெரும்பாலான கடன்கள் மாற்று உண்டியல் அடிப்படையில் வழங்கப் பட்டதோடு, சங்கத்திற்கு நிதி தேவைப்பட்ட போதெல்லாம் பிற வங்கிகளிடம் மாற்று உண்டியலைக் கழிவு செய்ததன் வாயிலாக நிலைமை சரிக்கட்டப்பட்டது. இவ்வாருக, சாதாரண வங்கிகளின் பணிகள் அனைத்துமே இச்சங்கங்களால் செய்யப்பட்டன.

மேலும், போதிய நிதி வசதிகளைப் பெற்றுத் தம் சங்கங்கள் விளங்க வேண்டுமென விரும்பிய லுசாட்டி அவர்கள் அதற்கென மத்திய அமைப்பை விரும்பவில்லை. நாளடைவில் அவ்வகை அமைப்பு அவசியம் என்பதை உணர்ந்து தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டார். எனினும், அன்றைய சூழ்நிலையில் மத்திய அமைப்பு ஆரம்பிக்கப் படாதது இத்தாலிய கூட்டுறவுக் கடன் இயக்கத்தின் பெருங்குறையாக இருந்தது. நிற்க, தொடக்கத்தில் இலாப ஈவு தாராளமாக வழங்கப்பட்டு வந்தது; ஆனுல், நாளடைவில் இலாபம் அனைத்தையும் உறுப்பினர்களுக்கு ஈவாகக் கொடுக்காமல் அதில் கணிசமான பகுதி காப்பு நிதியில் சேர்க்கப்படலாயிற்று.

லுசாட்டியின் கூட்டுறவு வங்கிகள் ஜெர்மனியில் இயங்கி வந்த சூல்ஸ் வங்கியின் அடிப்படையில் தொடங்கப்பட்டவை. ஜெர்மனிக்குச் சென்று நேரடியாக அங்கிருந்த கூட்டுறவு வங்கிகளின் செயல் முறைகளைக் கண்டறிந்த லுசாட்டி தமது நாட்டின் சூழ்நிலைக்கேற்பக் கூட்டுறவு வங்கிகளை நகர்ப்புறங்களில் தாம் தொடங்கினார். சூல்ஸ் கூட்டுறவு வங்கிகளைப் போல் அமைந்திருப்பினும் இவ்விருவகை வங்கிகளுக்குமிடையே வேறுபாடுகளும் உள்ளன. இவ்வேறுபாடுகளுக்குக் காரணம் அந்தந்த நாட்டுச் சூழ்நிலைகளே.

கிராமக் கடன் இயக்கம்

லுசாட்டி அவர்கள் நகரப்பகுதி மக்களுக்குக் கடனுதவியளிக்கக் கூட்டுறவு வங்கிகளை அமைத்துக்கொண்டிருக்கையில் உல்லம்பர்க் கிராமப்புற மக்களுக்கென கூட்டுறவு அமைப்பை உருவாக்கத் திட்டம் கொண்டு 1883ஆம் ஆண்டு தம் சொந்த ஊரான லொரிக்காவில் முதல் கூட்டுறவு வங்கியைத் தொடங்கினார். தொடக்கத்தில் பங்கு மூலதனம் ஏதுமின்றி 32 உறுப்பினர்களை மட்டும் கொண்டு தொடங்கப்பட்டது. சிறிது காலம் கழித்துப் பங்குகளை வெளியிட்டதன் வாயிலாகக் கணிசமான அளவு நிதி நிலை உயர்ந்த பின்னரே இவ்வங்கி வளர்ச்சிப் பாதையை நோக்கிப் பீடு நடை போட்டது. நிதி வசதியைப் பெருக்கியதோடு செலவினத்தையும் குறைக்கப் பல திட்டங்களைத் தீட்டி, மிகக் குறைந்த வட்டிக்கே கடன் கொடுக்கப்பட்டது. இதன் காரணமாக இவ்வியக்கம் மக்களிடையே செல்வாக்குப் பெற்றதோடு, இவ்வகைக் கூட்டுறவு வங்கிகள் பல தோன்றலாயின.

கிராமப்புறங்களில் இயங்கி வந்த இவ்வங்கிகளின் அம்சங்களையும் கொள்கைகளையும் ஆராய்வது நன்று.

வாக்குரிமை வயது பெற்ற அனைவரும் உறுப்பினராக அனுமதிக்கப்பட்டனரெனினும், உறுப்பினராகுமுன் அவர்களது குண நலன்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டன. உறுப்பினர்களின் நாணயம், நேர்மை, நன்னடத்தை ஆகியவற்றிற்கே முக்கியத்துவம் தந்த உல்லம்பர்க் அவர்கள், குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களை உறுப்பினர்களாக அனுமதிக்கவில்லை. உறுப்பினர்களான பிறகும் அவர்களது நடத்தை கண்காணிக்கப்பட்டது; கல்வியறிவு பெற்றவர்களை வங்கி ஊக்குவித்தது. கூட்டுறவுக் கல்வியின் அவசியத்தை நன்குணர்ந்திருந்த இவ்வங்கி, உறுப்பினர்களுக்கும் அதை அளிக்கத் தவறவில்லை. கடன் வசதி அளிக்கப்பட்ட

உறுப்பினர்கள் அதை முறையாகச் செலவிடுகின்றனராவென்றும் மேற்பார்வையிட்டது.

உறுப்பினர்களின் சிக்கன வாழ்வைப் பெரிதும் நாடிய இவ்வங்கி அவர்களிடமிருந்து வைப்புத் தொகையையும் பெற்று வந்தது. வைப்புத் தொகை சிறியதாயினும் அதை ஏற்றுக் கொண்டது. மேலும், உறுப்பினர்களின் பிணையம் (Security) கடன் பெறும் நோக்கம், அவர்களின் பழைய நடவடிக்கைகள் ஆகிய வற்றை நன்கு தெரிந்த பின்னரே கடன் கொடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் இக்கடன் மூன்று மாதக் கடனுகவே இருந்தது; குறிப்பிட்ட தவணைக்குள் கடனைத் திருப்பித்தர இயலாதவர் களுக்கு மட்டும் காலம் நீடிக்கப்பட்டது. இலாபத் தொகை முழுவதும் காப்பு நிதியாகப் பாதுகாக்கப்பட்டதால் உறுப் பினர்களுக்கு இலாப ஈவு வழங்கப்படவில்லை.

அரசாங்க உதவியின்றியும் குறுக்கீடின்றியும் நடைபெற்று வந்த இவ்வங்கிகள் அரசியல், மதம் போன்ற செய்திகளில் நடு நிலைக் கொள்கையைக் கடைப் பிடித்தன.

லுசாட்டி, உல்லம்பர்க் ஆகியவர்களின் வங்கிகள் மதம், அரசியல் தொடர்பின்றி இயங்கி வந்த போதிலும், நாளடைவில் அரசியலிலும் பொருளாதாரத்திலும் செல்வாக்குப் பெற்றிருந்த வேறு சில அமைப்புகள் இவ்வங்கிகளோடு தொடர்பு கொள்ள லாயின.

மேற்கூறிய இருவகை வங்கிகளைத் தவிர, 1890-ல் கத்தோ லிக்கக் கிறித்துவர்கள் தங்களின் நலனுக்கென்று ஒரு கூட்டுறவு வங்கியைத் தொடங்கினர். இவ்வங்கியின் வெற்றியைத் தொடர்ந்து பல வங்கிகள் தோன்றின. இவ்வங்கிகளின் பங்கு மதிப்புக் குறைவாக இருந்ததோடுமட்டுமின்றி, நிர்வாகிகள் ஊதியமின்றியும் பணியாற்றி வந்தனர். உறுப்பினர்கள் அதிகப் பட்சம் 20 பவுன்தான் கடன் பெறலாமென்றிருந்தது. நாளடைவில் 40 பவுனுக உயர்த்தப்பட்டது. குறிப்பிட்ட காலத்திற்குள் பெற்ற கடனைத் திரும்பச் செலுத்தியவர்களுக்கு வட்டிச் சலுகை அளிக்கப் பட்டது. இந்த நடவடிக்கை கடன் பெற்றோரின் நாணயத்தை ஊக்குவிப்பதாக இருந்தது. உறுப்பினர்களுக்கு இலாப ஈவு அளிக்கப்படாமல் இலாபம் அனைத்தும் காப்பு நிதியில் சேர்க்கப் பட்டது. சில சமயங்களில் இலாபத்தின் ஒரு பகுதி உறுப்பினர் களின் நலனுக்காகச் செலவிடப்பட்டது.

இவற்றில் சில சங்கங்கள் மட்டும் உறுப்பினர்களுக்குத் தேவையான பொருள்களைக் கொள்முதல் செய்து விநியோகித்த தோடு, அவர்களின் விளை பொருள்களுக்கு விற்பனை ஏற்பாட்டையும் செய்து தந்தன. இத்தாலி நாட்டிலிருந்த சம தர்ம வாதிகள் (Socialists) குடியரசுக் கட்சியினர் (Republicans) வல்லாண்மைக் கட்சியினர் போன்ற எல்லாக் கட்சியினருமே கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டதோடு மட்டுமின்றி, தத்தமக்கெனக் கூட்டுறவுக் கழகங்களையும் அமைக்கலாயினர். சில சமயங்களில் ஒரே இடத்தில் பல கழகங்கள் தோன்றி, கடும் போட்டியை உண்டு பண்ணின. அதனால், பல கூட்டுறவு அமைப்புகளுக்குப் பெரு நட்டம் ஏற்பட்டது.

வல்லாண்மைக் கட்சி ஆட்சியின் போது (1922-45) கூட்டுறவு இயக்கம்

(Movement Under Fascists)

வல்லாண்மைக் கட்சி ஆட்சி பீடத்தில் அமர்ந்தவுடன் பல புரட்சிகரமான சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. அதற்கு முந்திய அரசாங்கங்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்து வந்த சலுகைகள் நிறுத்தப்பட்டன. மேலும், அரசாங்கம் அவைகளுக்கு அளித்திருந்த கடன்களும் திரும்பப் பெறப்பட்டன. கூட்டுறவு வளர்ச்சியில் அரசியல் கட்சியின் செல்வாக்குக் கூடாதென்பதற்காகவே இக்கட்சி இந்தவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டதே தவிர, அவற்றைப் பலவீனப்படுத்துவதற்காக அன்று. தேசிய அளவில் அமைக்கப்பட்டிருந்த கூட்டுறவு அமைப்புகளும் கலைக்கப்பட்டன. மேலும், கீழ்க்காணும் நோக்கத்திற்காகக் கூட்டுறவு அமைப்புகள் அடியோடு மாற்றி அமைக்கப்பட்டன.

(1) ஒன்றோடொன்று போட்டியிட்டு வந்த சங்கங்களையெல்லாம் ஒருங்கிணைத்து அவற்றை வல்லாண்மைச் சங்கங்களாக (Fascist Society) அமைத்தல்; (2) சங்கங்களின் நடவடிக்கைகளைத் தகுந்த முறையில் அரசு கட்டுப்படுத்தல் அல்லது கண்காணித்தல்.

மேற்கூறிய நோக்கத்தை அடைவதற்கென்று அரசாங்கம் ஒரு தேசிய வல்லாண்மை அமைப்பை உருவாக்கிற்று. அரசாங்க அமைப்பான இதன் பணிகள் வருமாறு: (1) மத்தியக் கூட்டுறவு அமைப்புகளின் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்தல்; (2) புதிய சங்கங்களை ஊக்குவித்தல்; (3) கூட்டுறவுச் சங்கங்களிடையே ஏற்படும் பூசல்களைத் தீர்த்து வைத்தல்; (4) கூட்டுறவுக் கல்வி

யையும் பயிற்சியையும் பரப்புதல்; (5) ஒருங்கிணைக்கப்பட்ட சங்கங்களின் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்தல்; (6) கூட்டுறவு இயக்கத்தின் புள்ளி விவரங்களைச் சேகரித்தல்; (7) சங்கங்களின் அன்றாட நடவடிக்கைகளில் தவறு ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ளல்.

மேற்கூறிய நடவடிக்கைகளினால் கூட்டுறவு இயக்கம் அரசாங்கத்தின் கருவியாக மாறியது. அரசாங்கத்தின் விருப்பத்திற் கேற்பக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கத் தொடங்கியதால் கூட்டுறவுக் கொள்கைகள் புறக்கணிக்கப்பட்டன. எனினும், இக்கட்சியின் ஆட்சி 1944-ல் முடிவுற்ற பின்னர், கூட்டுறவு இயக்கம் அரசாங்கத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்றது. கலைக்கப் பட்டிருந்த தேசிய அமைப்புகள் 1945 முதல் புத்துயிர் பெற்றன. என்றாலும் 30 ஆண்டுகளாக வல்லாண்மைக் கட்சியின் பிடியில் சிக்கியிருந்த காரணத்தால் கூட்டுறவு இயக்கம் உடனடியாகத் தன் பழைய பொலிவைப் பெறமுடியவில்லை. நேர்மையும் திறமையும் இல்லாத பலர் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டிருந் ததும் பயிற்சி பெற்ற கூட்டுறவாளர்கள் இல்லாததுமே இதற்குக் காரணமாகும்.

வல்லாண்மைக் கட்சி ஆட்சிக்குப் பின்னர்

மேற்கூறிய குறைபாடுகளையெல்லாம் களைவதற்கென்று 1946ஆம் ஆண்டில் ஒரு கூட்டுறவுப் பொது இயக்குநர் அலுவலகம் உருவாக்கப்பட்டது. கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் பணி யாற்ற இவ்வலுவலகம் மேற்கொண்ட நடவடிக்கைகளால் சங்கங் களின் நிலைமை உயரலாயிற்று. 1947ஆம் ஆண்டுக் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கென ஒரு சட்டம் நிறைவேறியது. அதனோடு, கூட்டுறவு இயக்கமே தொழிலாளர் நல இலாகாவின்கீழ்க் கொண்டு வரப்பட்டு, 20 உறுப்பினர்களைக் கொண்ட 'மத்தியக் கூட்டுறவுச் செயற்குழு' (Central Co-operative Commission) ஒன்று உருவாக்கப்பட்டது. இக் குழுவிலிருந் தவர்களில் பெரும்பாலோர் அரசாங்க அதிகாரிகளாக இருந்தமை யால் மலிந்திருந்த கூட்டுறவுச் சங்கங்களின் குறைகளெல்லாம் நீக்கப்பட்டன. மேலும், ஆண்டுதோறும் சங்கங்களின் கணக்கு வழக்குகள் தணிக்கை செய்யப்பட்டமையால் தணிக்கை அலுவ லகத்துடன் இணைந்தே கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படத் தொடங்கின. மேலும், ஒவ்வொரு சங்கத்திலும் குறைந்த பட்சம் 30 உறுப்பினர்களும் தொழிலாளர் ஒப்பந்தச் சங்கங்களில் 25 உறுப் பினர்களும், நுகர்வோர் சங்கங்களில் 50 உறுப்பினர்களும் இருக்க

வேண்டுமென்றும், சங்கத்தின் பங்கு மதிப்பு 500 லேயருக்குக் குறையாமலிருக்க வேண்டுமென்றும், எவரும் 2,50,000 லேயர் மதிப்புள்ள பங்குக்குமேல் வைத்திருக்கலாகாதென்றும் வரையறை செய்யப்பட்டது. இதன் விளைவாக வல்லாண்மைக் கட்சியின் ஆட்சியில் சீரழிந்துகிடந்த கூட்டுறவு இயக்கம் புதிய ஆட்சியில் மீண்டும் புத்துயிர்பெற்றுத் தழைக்கத் தொடங்கியது.

எனினும், இத்தாலியின் கூட்டுறவு இயக்கம் இன்றும்கூடச் சில இடர்ப்பாடுகளுடன் இயங்கி வருகிறது. அந்த இடர்ப்பாடுகளில் குறிப்பிடத்தக்கவை மூன்று:

1. இந் நாட்டுக் கூட்டுறவு இயக்கம் 1947-ல் அமைக்கப்பட்ட 'தேசியக் கூட்டுறவுக் கழகம்' (National League of Co-operation) ஒரு மாபெரும் கழகமாகும். இதில் 10,641 சங்கங்களும் 3 மில்லியன் உறுப்பினர்களும் உள்ளனர் இதற்கு இணையாக 'இத்தாலியக் கூட்டுறவுப் பேரிணைப்பு' (Italian Co-operative Confederation) என்ற அமைப்பும் உள்ளது. இதில் 8,635 சங்கங்களும் 1·8 மில்லியன் உறுப்பினர்களும் உளர். இவ்விரு அமைப்புகளுக்குமிடையே நல்லுறவு இல்லாததால் கூட்டுறவு இயக்கமே பலவீனம் அடைந்துள்ளது.

2. கூட்டுறவு இயக்கத்தை வெற்றிப்பாதை நோக்கி வழிநடத்திச் செல்லும் தகுதிவாய்ந்த கூட்டுறவாளர்கள் வேண்டிய அளவிற்கு இல்லாததால் இயக்கத்தின் வளர்ச்சி தடைப்பட்டுள்ளது. இக் குறையைப் போக்க அரசாங்கமும் தனியார் நிறுவனங்களும் முயற்சி எடுத்து வருகின்றன

3. இயக்க வளர்ச்சிக்குப் போதுமான அளவு நிதி இல்லாதது மற்றொரு குறையாகும். இக் குறையை நீக்கவும், கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போதுமான நிதி வசதியை அளிக்கவும் தேசியத் தொழிலாளர் வங்கி (National Labour Bank) 2·5 மில்லியன் லேயரைக்கொண்ட தனி நிறுவனத்தை அமைத்துள்ளது. இவ்வமைப்பின்மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் கணிசமான நிதி உதவியைப் பெற்றுள்ளன. இதையன்றி, முன்னாள் தேசியப் படை வீரர் சங்கமும் கடனுதவி அளித்து வருகிறது. இருப்பினும், இப் பிரச்சினை இன்னும் ஓய்ந்தபாடில்லை.

இத்தாலியின் கூட்டுறவு இயக்க வளர்ச்சியைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

சங்க வகை	சங்க எண்ணிக்கை	சங்க எண்ணிக்கை
	1953	1956
1. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்	3,410	4,170
2. தொழிலாளர், உற்பத்தியாளர் சங்கங்கள்	4,619	5,762
3. விவசாயச் சங்கங்கள்	2,318	3,301
4. கட்டடச் சங்கங்கள்	4,350	8,465

1962ஆம் ஆண்டில் மொத்தம் 18,791 சங்கங்களும் 4.4 மில்லியன் உறுப்பினர்களும் இருந்தனர்.

இந்நாட்டில் ஒரு நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் தாம் பொதுவாகக் காணப்படுகின்றன. இவை வியாபாரத்திலும் உற்பத்தித் துறையிலும்தான் தீவிரக் கவனம் செலுத்துகின்றன. சான்றாக, பால், மதுவகை போன்ற பொருள்களை விற்பதற்கென்று ஆயிரக்கணக்கான சங்கங்கள் உள்ளன. மேலும், அண்மையில் ஆலிவ் பொருள்கள், முட்டை, இறைச்சி போன்ற பொருள்களை உற்பத்தி செய்வதற்கென்றும், விற்பனை செய்வதற்கென்றும், பக்குவப்படுத்துவதற்கென்றும் தனித்தனிச் சங்கங்கள் ஏராளமாகத் தோன்றியுள்ளன இவையன்றி, காய்கறிகள், உணவுப் பொருள்களுக்கென்றும் தனிச் சங்கங்கள் உருவாகியுள்ளன. கால்நடை வளர்ப்புச் சங்கங்கள் கூடக் கணிசமாக ஏற்பட்டுள்ளன

இந்நாட்டின் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்கென்று கூட்டமைப்புகளையும் ஏற்படுத்தியுள்ளன உதாரணமாக, ஒயின் உற்பத்திச் சங்கங்கள் ஒயின் உற்பத்தியாளர் கூட்டிணைப்புச் சங்கத்தையும் பால்பண்ணைச் சங்கங்கள் பால்பண்ணைக் கூட்டிணைப்புச் சங்கத்தையும் உருவாக்கியுள்ளன. இதுபோல் காய்கறி, பழ வகைச் சங்கங்கள்கூட ஒன்றுசேர்ந்து கூட்டிணைப்புச் சங்கங்களை அமைத்துள்ளன. இவையனைத்தும் 'இத்தாலியக் கூட்டுறவுப் பெருங் கழகத்தின்' (Italian Co-operative Confederation) அங்கத்தினர்களாக விளங்குகின்றன.

தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
(Labour Societies)

தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இத்தாலியின் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பாகும். உலகில் காணப்படும் கூட்டுறவு இயக்

கத்தில் இச்சங்கங்கள்தாம் இந்நாட்டிற்குப் பெருமை தேடித் தந்துள்ளன; உலகிற்கும் ஒளிவிளக்காய்த் திகழ்கின்றன.

19ஆம் நூற்றுண்டின் மத்தியில் ஏற்பட்ட வியாபார மந்தத்திஞல் இந்நாட்டுப் பொருளாதாரம் நலிந்து, உற்பத்தி குறைந்து வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகியதால் தொழிலாளிகளின் நிலை மோசமானது. தங்களுக்கு வேலை தேடித்தந்த ஒப்பந்தக்காரர்களால் சுரண்டப்பட்ட தொழிலாளர்கள் செய்வதென்ன வென்று தெரியாமல் திண்டாடினர்.

இந்நிலையில் ஒப்பந்தக்காரர்களின் உடும்புப் பிடியிலிருந்து விடுபடவும், தங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் திட்டமிட்ட தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்க எண்ணினர். தங்களிடமிருந்த சின்னஞ்சிறு தொகையையெல்லாம் ஒன்று சேர்த்துக் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துத் தாங்களே ஒப்பந்தக்காரர்களாகவும் பணியாற்றத் திட்டமிட்டனர். இவ்வகைக் கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்க 'மஜினி' என்பவர் அரும்பாடு பட்டார். வேலைதேடித் தந்து தொழிலாளர்களைச் சுரண்டி வாழ்ந்த சோம்பேறிக் கூட்டத்தை ஒழிப்பதற்கு 1883ஆம் ஆண்டில் 'பேரசியன்டி' என்பவரால் 'தொழிலாளர் பொதுச் சங்கம்' (General Association of Workers) தொடங்கப்பட்டது. தொடக்கத்தில் உறுப்பினர்கள் குறைவாயிருந்தபோதிலும், நாளடைவில் இச்சங்கத்தில் பெரும் எண்ணிக்கையில் தொழிலாளர் சேர்ந்தனர். பலவகைத் தொழிலாளர்கள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்ததால் கட்டட ஒப்பந்தங்களையும் பிற ஒப்பந்தங்களையும் இச்சங்கம் நேரடியாகப் பெற்று உறுப்பினர்களுக்கு வேலை தேடித்தரும் பணியை மேற்கொண்டது. தொடக்கத்தில் பெருமளவில் நிதி வசதி இல்லாததால் சிறுசிறு ஒப்பந்தங்களையே இச் சங்கம் பெற முடிந்தது; நாளடைவில் இச் சங்கத்தின் பணி விரிவடைந்தது. இத்தாலியில் கட்டடங்களே கட்ட இயலாதென ஒதுக்கப்பட்ட பகுதிகளில்கூட மிக வலிமையான கட்டடங்களை எழுப்பிச் சிறப்புப் பெற்றது இத் தொழிலாளர் சங்கம். 'ஒஸ்டியா' (Ostia) என்னும் பகுதியில் பல பிரமாண்டமான கட்டடங்களைக் கட்டி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது இச்சங்கம். 'ரோமன் விடோ' என்று இன்றழைக்கப்படும் மிகச் சிறந்த பகுதி 1883-ல் தொடங்கப்பட்ட தொழிலாளர் சங்கத்தின் சாதனையே. கூட்டுறவுத் தொழிலாளர் சங்கம் நாளடைவில் தேசியக் கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்துவிட்டது.

1886-ல் கட்டடத் தொழிலாளர்களுக்கென்று மேலும் பல கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இச்சங்கங்களுக்

செல்லாம் கடும் எதிர்ப்பு எழுந்தது. தனியார் துறையில் இயங்கி வந்த ஒப்பந்தக்காரர் அலுவலகங்கள் இவைகளுக்குக் கடும் போட்டியை உருவாக்கின. நிதிப் பற்றுக்குறை, உறுப்பினர்களின் நாணயமற்ற நடவடிக்கைகள், நேர்மையின்மை போன்ற பல பிரச்சினைகளையும் இச் சங்கங்கள் சமாளிக்க வேண்டியிருந்தது. எவ்வளவுதான் எதிர்ப்புகளும் தொல்லைகளும் தோன்றியபோதி லும் இச்சங்கங்கள் மறைந்துவிடாமல், அரசாங்கத்தின் உதவியை அவ்வப்போது நாடி பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு வெற்றிநடை போட்டன. லுசாட்டி, உல்லம்பர்க் ஆகிய இருவரும் அமைச்ச ரவையில் இருந்தபோது இச்சங்கங்கள் பல சலுகைகளைப் பெற்றன. அரசாங்கக் கட்டட ஒப்பந்தங்கள் 'அளிப்பு முனைவு' (Tender) இல்லாமலேயே இச்சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டன. இதற் கென அரசாங்கச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது.

1900ஆம் ஆண்டில் சுமார் 600 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இத்தாலியில் இயங்கி வந்தன. நாளடைவில் இச் சங்கங்கள் ஒன்றுசேர்ந்து 1903-ல் தமக்கென ஒரு ஒருங்கிணைப்பை மிலான் நகரில் உருவாக்கின. 1904-ல் இயற்றப்பட்ட லுசாட்டிச் சட்டம் இச்சங்கங்களின் வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்தது. முதல் உலகப் போரின் போது இச்சங்கங்களின் வளர்ச்சி தடைப் பட்டதெனினும், நாளடைவில் மீண்டும் புத்துயிர்ப் பெற்று 1921-ல் 8,830 சங்கங்களாக வளர்ச்சியுற்றன.

வல்லாண்மைக் கட்சி ஆட்சிக்கு வந்த பின் இச்சங்கங்கள், நலுவுற்றன. பல சங்கங்கள் கலைக்கப்பட்டதோடு, அதுவரை அரசாங்கம் அளித்து வந்த சலுகைகளும் ஆதரவும் கைவிடப் பட்டன. இருந்த போதிலும் இச்சங்கங்கள் அழிந்து விடாமல், புதிய ஆட்சி ஏற்பட்டவுடன் புத்துயிர்ப் பெற்று மலர்ந்தன. இரண்டாம் உலகப் போரின் போது இவைகளுக்கேற்பட்ட இன்னல்கள் சொல்லிலடங்கா. போதிய நிதி வசதி இல்லாததோடு, திறமை வாய்ந்த இயக்குநர்கள் இல்லாததாலும் இவற்றின் நிர்வாகம் சீர்கெட்டது. எனினும், அரசாங்க அரவணைப்பினால் இவை இயங்கி வந்தன. 1954ஆம் ஆண்டு சுமார் 60 மில்லியன் லையர் வரை உள்ள ஒப்பந்தங்கள் இச்சங்கங்களுக்கு வழங்கப் பட்டன. இச்சங்கங்களின் கூட்டிணைப்புகளுக்கு 300 மில்லியன் லையர் வரையான ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட்டன. 1956ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இச்சங்கங்களின் எண்ணிக்கை 15,000 ஆகும்; இவற்றின் உறுப்பினர்கள் 60,000 பேர்; ஏறக்குறைய 30,000 மில்லியன் லையர் வரையான ஒப்பந்தங்களை இவை வெற்றி யுடன் நிறைவேற்றின; இவை கொண்டிருந்த கருவிகள்

தளவாடங்கள் மட்டும் 4,000 மில்லியன் லேயர் மதிப்புடையன. இன்றோ அதைக் காட்டிலும் பன் மடங்கு மதிப்புள்ள கருவிகளும் தளவாடங்களும் இவற்றிற்குச் சொந்தமாயுள்ளன.

பணிகள் : கட்டடத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதுதான் இச்சங்கங்களின் நோக்கமாகும். எனவே, சாலைகள் அமைத்தல், கட்டடங்கள் கட்டல், கழிவு நீர்ப்பாதை கட்டல் போன்ற ஒப்பந்தங்களைப் பெற்று அவற்றைச் சிறப்புடன் நிறைவேற்றி வருகின்றனர். சிறு சிறு பாலங்கள் கூட இச்சங்கங்களால் கட்டப்படுகின்றன. சிறந்த முறையில் ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்கென்று தகுதி வாய்ந்த பல வல்லுநர்களை இச் சங்கங்கள் நியமித்துள்ளன. நமது நாட்டில் இவ்வகை அரசாங்க ஒப் பந்தங்களைத் தனியார் நிறைவேற்றும்போது, அவற்றைப் பொதுப் பணித்துறைதான் இன்றும் மேற்பார்வையிட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இத்தாலியிலுள்ள இச்சங்கங்களோ அதற்கெனத் தனியாக வல்லுநர்களை நியமித்து வருகிறது. கட்டடங்களைத் தொடங்குவதற்கு முன் சரியான அளவு முறைகளை இவ்வல்லுநர்கள் ஆராய்கின்றனர். ஒப்பந்தத்தை நிறைவேற்ற உறுதுணையாயிருக்கும் வேலையாள்களுக்கு அதாவது உறுப்பினர் களுக்கு ஊதியம் முதலிலேயே நிர்ணயிக்கப்பட்டு, பின்னர்த்தான் பணி தொடங்கப்படுகிறது. சராசரி 15 உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு தலைவர் நியமிக்கப்படுகிறார்; அவருக்குக் கூலியோடு சேர்த்துச் சிறிது தொகை தரப்படுகிறது. எல்லாக் காரியங்களையும் ஒரு பொது இயக்குநர் கவனித்துக் கொள்கிறார். எவ்வித ஏற்றத் தாழ்வுமின்றி எல்லா உறுப்பினர்களுக்கும் அவர்களின் திறமைக்கேற்ப வேலை கொடுக்கப்படுகிறது. பெரிய ஒப்பந்தமாக இருப்பின் உறுப்பின ரல்லாதோருக்கும் வேலை கொடுக்கப்படுகிறது. இவ்வாறாக, 'வேலைப் பகுப்பு' (Division of labour) முறை சிறப்பாகக் கையாளப் படுகிறது.

ஏனைய கூட்டுறவுச் சங்கங்களைப் போன்றே தொழிலாளர் சங்கமும் மக்களாட்சி முறையில் நிர்வகிக்கப்படுகிறது. எல்லா உறுப்பினர்களையும் கொண்ட பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப் பட்ட நிர்வாகக் குழு அன்றாட நிர்வாக அலுவலை மேற்கொள்கிறது.

உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை மற்ற சங் கங்களைப்போன்றே தொழிலாளர் சங்கங்களும் உள்ளன. 1947 ஆம் ஆண்டின் சட்டப்படி ஒவ்வொரு சங்கமும் குறைந்தபட்சம் 52 உறுப்பினர்களையாவது கொண்டிருத்தல் வேண்டும். தவிர்க்க

முடியாத சில சூழ்நிலைகளில் மட்டும் இவ்விதிக்கு விளக்களிக்கப் படுகிறது. இதற்கு அரசாங்கத்தின் அனுமதி தேவை. எக்காரணத்தைக் கொண்டும் 9 உறுப்பினர்களுக்குத் குறைவாக எச் சங்கமும் இயங்க முடியாது. பொதுவாக உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய பங்கின் மதிப்பு 50 லையர் ஆகும்; ஆனால் எந்த உறுப்பினருமே 2,50,000 லையருக்குமேல் பங்கினைக் கொண்டிருக்கலாகாது. உறுப்பினர்களின் பங்கு மூலதனமும் வைப்புத்தொகையும் நடைமுறை மூலதனமாகப் பயன்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் கிடைக்கும் இலாபத்தில் ஒரு சிறு தொகையே உறுப்பினர்களுக்கு இலாப ஈவாக வழங்கப்படுகிறது. பெரும்பகுதி உறுப்பினர்களின் நலனுக்கெனச் செலவிடப்படுகிறது. ஆக்கவேலையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளருக்கு விபத்து ஏற்பட்டு அவர் பாதிக்கப்பட்டால் நட்ட ஈடு (Compensation) அளிக்கப்படுகிறது. உறுப்பினர்கள் வயது முதிர்ந்து வேலை செய்வதற்குத் தகுதியில்லாதவர்களாகும் போது. அவர்களுக்கு இலாபத்தில் ஒரு பகுதி உதவிப் பணமாக வழங்கப்படுகிறது.

கூட்டிணைப்புகள்

தங்களின் நலன்களைப் பாதுகாக்கவும், எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொதுவான கொள்கைகளை வகுக்கவும், தேவைப்படும்போது ஒன்றுக்கொன்று உதவி செய்வதற்கும் ஏற்ற வழியில் சங்கங்கள் தமக்கெனக் கூட்டிணைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் தமக்கு வேண்டிய நிதி வசதிகளையும் இக் கூட்டமைப்பிலிருந்து பெற முடிகிறது. ஒவ்வொரு சங்கமும் தனது பங்கு மூலதனத்தில் 20 சதவீதத்தைக் கூட்டிணைப்புப் பங்கில் முதலீடு செய்கிறது. இதனால் சங்கங்கள் பெரியனவாக வளர்வதற்கு ஊக்கம் கிடைக்கிறது. இணைப்புச் சங்கத்தின் பங்கு மதிப்புப் பொதுவாக 100 லையராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களினால் உருவாக்கப்பட்ட கூட்டிணைப்புகள் யாவும் ஒன்றுசேர்ந்து ஒரு தேசிய அமைப்பை உருவாக்குகின்றன. தொழிலாளர் சங்கங்கள் அனைத்திற்கும் இத் தேசியச் சங்கம் தான் தலைமைச் சங்கமாக விளங்குகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் பொதுவான திட்டங்களை இத் தேசிய அமைப்பின் வழியாகவே போடுகின்றனர். திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் இது ஏனையச் சங்கங்களுக்கு ஆலோசனை கொடுக்கிறது. சங்கங்களின் சார்பில் இது அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையும் நடத்துகிறது. அதனோடு, சங்கங்களின் பிரச்சினைகளையும் இதுதான் தீர்த்து வைக்கிறது.

இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவு இத்தாலி நாட்டுத் தொழிலாளர் இயக்கத்தின் தனிச்சிறப்பாகும். எனவே, இவ்வியக்கம் உலக நாடுகள் அனைத்திற்கும் ஒரு வழிகாட்டியாக விளங்குகிறது. கூட்டமைப்பின் காரணமாக போதிய நிதி வசதி, தொழில் நுட்பம், விலையுர்ந்த இயந்திரங்கள் ஆகியவற்றைச் சங்கங்கள் எளிதாகப் பெற முடிகிறது. ஒப்பந்தப்படி குறித்த காலத்தில் வேலை முடிவடைவதற்கும் இக் கூட்டமைப்புகள் தாம் காரணமாகும்.

ஒவ்வொரு கூட்டமைப்பும் 250-க்கு மேற்பட்ட உறுப்பினர்களைக்கொண்ட 5 கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகப் பெற்றிருக்க வேண்டும். இவ்வகைக் கூட்டமைப்பை அமைக்க விரும்பும் சங்கங்கள் தொழிலாளர் நல இலாகாவிடமிருந்து முன் அனுமதி பெறவேண்டும். கூட்டமைப்பில் உறுப்பினராகச் சேர விரும்பும் ஒவ்வொரு சங்கமும் அதன் பங்குகளில் குறைந்த பட்சம் 25,000 லையர் மதிப்புள்ள பங்கினைப் பெறவேண்டும். எந்தக் கூட்டமைப்பாக இருந்தாலும் அதன் மூலதனம் 2,50,000 லையருக்குமேல் இருக்கவேண்டும். இக்கூட்டமைப்பு பொதுத்துறை, தனியார் துறைகளிடமிருந்து ஒப்பந்தங்களைப் பெற்று உறுப்பினர் சங்கங்களிடையே பாரபட்சமின்றிப் பகிர்ந்தளிக்கின்றது. விலையுயர்ந்த பல கட்டடத் தளவாடங்களையும் கருவிகளையும் இது கொண்டிருப்பதால் வேலை எளிதாகச் செய்யப்படுகிறது. ஒப்படைக்கப்பட்ட வேலை நல்ல முறையில் எளிதாக முடிக்கப் படுவதற்கென்று சம்பந்தப்பட்ட சங்கத்திற்கு இது ஆலோசனை தருகிறது. மேலும், சங்கங்களிடையே நல்லுறவும் தொடர்பும் ஏற்படுவதற்கு இது உதவியாயுள்ளது.

பொதுவாக, தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் இயங்கி வந்த போதிலும் இவை மூன்று முக்கியப் பிரச்சினைகளைக் கொண்டுள்ளன.

1. எடுத்துக் கொண்ட ஒப்பந்தங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்துக் கொடுப்பதற்கு வேண்டிய நிதி வசதி இச்சங்கங்களிடம் இருப்பதில்லை. இவற்றின் செல்வத்தில் பெரும்பகுதி பிற ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதில் முடங்கிக் கிடப்பதால் புதிய ஒப்பந்த வேலையை உடனடியாக இவை தொடங்க முடிவதில்லை. குறுகியக் காலக் கடன் வசதிகளும் இவற்றிற்குக் கிடையா. நாட்டிலுள்ள வங்கிகளோ இச்சங்கங்களுக்கு வேண்டிய போதெல்லாம் கடன் கொடுப்பதுமில்லை. எனினும், இக்கஷ்டத்தைப் போக்கத் தற்போது தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2. பெரும்பாலும் இச்சங்கங்கள் அரசாங்க ஒப்பந்தங்களையே நம்பி இருக்கின்றன அரசாங்க ஒப்பந்தங்கள் இல்லாத சமயங்களில் இச்சங்கங்கள் பாதிக்கப்படுவதோடு, உறுப்பினர்களுக்கும் வேலை இல்லாமல் போய் விடுகிறது. அப்போது உறுப்பினர்களுக்குக் காப்பு நிதியிலிருந்து உதவிப் பணத்தை அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

3. சில சமயங்களில் உறுப்பினர்கள் நேர்மையற்றவர்களாய் நடந்து கொள்கின்றனர். இதனால், தங்களை வாழவைப்பதற்கென்று உருவாக்கப்பட்ட சங்கங்களை வீழ்ச்சியடையச் செய்கின்றனர். வேலையில்லாத சூழ்நிலையில் சில உறுப்பினர்கள் தனியார் துறை ஒப்பந்தக்காரர்களுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து பணிபுரிகின்றனர். பொறுப்பற்ற இவ்வகை உறுப்பினர்களால் சங்கமே சஞ்சலப் படவேண்டியுள்ளது. சங்க ஒப்பந்த வேலையைச் செய்வதற்குக்கூட இந்த உறுப்பினர்கள் வராமல் தனியார் துறை ஒப்பந்தக்காரர்களுடன் ஒட்டிக் கொள்கின்றனர்.

மேற்கூறிய குறைகளையெல்லாம் நீக்கத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றன.

8. சுவீடனில் கூட்டுறவு இயக்கம்

(Co-operative Movement in Sweden)

சுவீடன் ஏனைய மேற்கு ஐரோப்பிய நாடுகளைப்போல் சிறிய நாடு. இதன் மக்கள்தொகை 7.9 மில்லியன்தான். ஐரோப்பாவி லுள்ள சிறிய நாடுகளெல்லாம் கூட்டுறவு இயக்கத்தில் தலைசிறந்து விளங்குவதைப்போல் சுவீடனும் இவ்வியக்கத்தில் வழிகாட்டி யாகத் திகழ்கிறது.

நுகர்வோர் இயக்கம்

19ஆம் நூற்றுண்டின் முற்பகுதி வரை சுவீடன் ஒரு விவசாய நாடாகவே இருந்துவந்தது. மக்களில் 75 சதவீதம் பேர் பெரும் பாலும் விவசாயத்தையே நம்பி வாழ்ந்தனர். இங்கிலாந்து நாட் டைச் செல்வமிக்க நாடாக உயர்த்திய தொழில்புரட்சி நாளடை வில் எங்கும் பரவியதால் 'பேரளவுத் தொழில்கள்' (Large-scale Industries) சுவீடனிலும் தோன்றின. இத் தொழில்கள் வளர்ந்த வேகத்தினுல் விவசாய நாடாக இருந்துவந்த சுவீடன் தொழில் வளம் கொழிக்கும் நாடாக மாறியது. விவசாயத்தையே நம்பி வாழ்ந்துவந்த மக்கள் தொழில்கள் வளர்ந்த நகரங்களையும் அவற் றின் சுற்றுப்புறங்களையும் நோக்கிப் பெருமளவில் குடிபெயர்ந்ததன் விளைவாகப் பாட்டாளிகள் என்ற இனம் தோன்றியது. அத னுடன் புதிய பிரச்சினைகளும் தொடர்ந்தன. தங்களுக்குவேண்டிய நுகர்வுப் பண்டங்களைப் (Consumers' Goods) பெற முடியாமல் மக்கள் தவித்தனர். அதிக இலாபமடைய வேண்டுமென்பதற்காக வியாபாரிகளும் தொழிலதிபர்களும் ஒன்றுசேர்ந்து 'தொழில திரட்டுகளை' (Pools) அமைத்து, அவர்களே பொருள்களின் விலையை உயர்ந்த மட்டத்தில் நிர்ணயம் செய்து வந்தனர். இதனுல் வியாபாரிகளுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் கொள்ளை இலாபம் கிடைக்க, நுகர்வோர் அவதிப்பட்டனர்.

இக்கட்டான இந்நிலையில் அவதிப்பட்ட தொழிலாளிகள் தங்களின் துயர்களைப் போக்கவும் சுரண்டலை ஒழித்துக் கட்டவும் முடிவு செய்தனர். இங்கிலாந்து நாட்டில் 'ராக்டேல் முன்னோடிகளின்' கூட்டுறவு நடவடிக்கைகளைக் கேள்விப்பட்டு அவர்களையே தங்களின் வழிகாட்டிகளாகவும் கொண்டு அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்ற முடிவு செய்தனர்.

1850-ல்தான் முதல் கூட்டுறவு அமைப்பு உருவானது. இக்கூட்டுறவு நிறுவனம் மாவட்ட அளவில் அமைக்கப்பட்டு, தொழிலாளர்களுக்குத் தேவையான நுகர்வுப் பண்டங்களை நியாய விலையில் விற்க முனைந்தது. இதைத் தொடர்ந்து 1867-ல் 'டிரால் ஹட்டன்' என்னுமிடத்தில் மற்றொரு கூட்டுறவுப் பண்டகசாலை ஏற்பட்டது. இப்பண்டகசாலை இன்றும்கூட இயங்கி வருகிறது. இதன் பின்னர்த்தான் சுவீடனில் கூட்டுறவு இயக்கம் விழிப்புணர்ச்சி பெற்று மலர்ச்சியடையத் தொடங்கியது. இந்நாட்டில் தோன்றிய நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வளவு விரைவில் வளர்ச்சி பெற்றுள்ளனவென்பதைக் கீழே காணும் புள்ளி விவரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

	1957	1961	1964	1971
சங்கங்களின் எண்ணிக்கை	678	522	365	216
உறுப்பினர்களின் எண்ணிக்கை (மில்லியனில்)	1·10	1·20	1·29	1·66
விற்பனைப் பிரிவுகளின் எண்ணிக்கை	7,633	6,330	4,479	2,685
மொத்த விற்பனை (மில்லியன் குரோனரில்)	2,733	3,643	4,700	8,700
பணிபுரிந்தோர் எண்ணிக்கை	—	41,600	40,000	39,000

இங்கிலாந்தைப் போன்று சுவீடனும் சங்கங்களின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் இருந்த சங்கங்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் விதத்தில் ஐக்கிய அமைப்புகளை உருவாக்குவதிலேயே கவனம் செலுத்தியது. ஐக்கியச் சங்கங்களை ஏற்படுத்தியதால் வல்லுநர்களை அமர்த்திச் சீரிய முறையில் நிர்வாகத்தை நடத்த முடிந்தது.

தற்போது இந்நாட்டிலுள்ள 2·8 மில்லியன் குடும்பங்களில் 1·53 மில்லியன் குடும்பங்கள் 'நுகர்வோர் கூட்டுறவுப் பண்டக

சாலைகளில்' உறுப்பினர்களாக உள்ளனர். நாட்டின் மக்கள் தொகையில் பெரும்பாலோர் மாத வருமானம் பெறும் தொழிலாளர்களும் அலுவலகர்களுமாதலால் அவர்கள்தாம் இச் சங்கங்களில் பெரும்பாலும் உறுப்பினர்களாக உள்ளனர். எனவே, இச் சங்கங்கள் பெரும்பாலும் நகர்ப்புறங்களில்தாம் காணப்படுகின்றன.

இக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரியதும் சிறியதுமாய் உள்ளன. குறைந்த உறுப்பினர்களைக்கொண்டு இயங்கும் சங்கங்களுக்கிடையே 'ஸ்டாக்ஹோம்' என்ற நகரில் பிரமாண்டமான சங்கமும் இயங்கி வருகிறது. இப்பெரிய சங்கத்தில் மட்டும் சுமார் 23 இலட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். 1971ஆம் ஆண்டில் இச் சங்கம் 460 விற்பனைப் பிரிவுகளை அந் நகரில் கொண்டிருந்தது. இந்தப் பிரிவுகளின் மொத்த விற்பனை 1,000 மில்லியன் குரோனருக்கும் (Kroner) அதிகமாக இருந்தது. மேலும், ஸ்டாக்ஹோமிலுள்ள இச் சங்கம் 'பல பிரிவுப் பண்டகசாலை' (Departmental Stores) ஒன்றையும் மிகப் பெரிய அளவில் நடத்தி வருகிறது. அதனோடு, 15 உண்டிச்சாலைகளையும் 2 பெரிய ரொட்டிக் கிடங்குகளையும், இறைச்சியைப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றையும் நடத்தி வருகிறது. நிற்க, மதுவகைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளையும் இது நடத்தி வருகின்றது. இச் சங்கத்தில் மட்டும் சுமார் 10,000 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தற்போது சுவீடனில் 2,900 விற்பனைப் பிரிவுகள் கூட்டுறவு இயக்கத்தில் உள்ளன. இவற்றில் நுகர்வோரே பொருள்களைத் தேர்ந்தெடுக்கும் கடைகள் மட்டும் 2,180 உள்ளன. 156 பல பிரிவுப் பண்டகசாலைகளும் 168 சிறப்பு அங்காடிகளும் (Super Markets) இயங்குகின்றன. இந் நாட்டில் இயங்கிவரும் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் நாமே பொருள்களைத் தேர்ந்தெடுக்கும் கடைகள் தனிச் சிறப்பு வாய்ந்தவை. சுவீடனில் உள்ள கடைகளில் 50 சதவீதம் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமானவை.

இக் கூட்டுறவு விற்பனைப் பிரிவுகளின் விற்பனை ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. குறிப்பிட்டதொரு விற்பனைப் பிரிவில் 1964-ல் 1·3 மில்லியன் குரோனராக இருந்த மொத்த விற்பனை 1971-ல் 32·5 மில்லியன் குரோனராக அதிகரித்துள்ளது. உறுப்பினர்களின் சராசரிக் கொள்முதல் மட்டும் ஆண்டொன்றுக்கு 4717 குரோனராகும். 1971-ல் எடுத்த கணக்கின்படி நாட்டின் மொத்தச் சில்லறை விற்பனையில் 20 சதவீதமும் உணவுப் பொருள் விற்பனையில் 28 சதவீதமும் கூட்டுறவுச் சங்கங்களால் செய்யப்

பட்டதென அறிய வருகிறோம். கணிசமான அளவு விற்பனை நடை பெறுவதால் இச் சங்கங்களில் நிதி நிலையும் திருப்திகரமாகவே இருந்து வருகிறது. சங்கங்கள் பெரும் பகுதியில் பணியாற்றி வருவதால், இந் நாட்டுப் பெருங்குடி மக்கள் தமக்குத் தேவையான பண்டங்களையெல்லாம் இக் கூட்டுறவுப் பண்டகசாலைகளிலேயே மலிவாகப் பெற்று மகிழ்வுடன் வாழ்கின்றனர்.

நுகர்வோர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் அம்சங்கள்

குடும்பஸ்தர்கள் தமக்குத் தேவையான பொருள்களை மலிவாகப் பெறுவதற்கென்று அமைக்கப்பட்டுள்ள இச் சங்கங்களின் சிறப்பு அம்சங்கள் வருமாறு:

1. சங்கத்தின் பங்கொன்றைப் பெறுவதன் வாயிலாக எவரும் உறுப்பினராகலாம். பங்கின் மதிப்பு 150 குரோனர்தான். உறுப்பினராவதற்குக் கடுமையான விதிமுறைகளோ, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடோ கிடையாது.

2. பொதுவாக, உறுப்பினர்கள் தங்கள் பங்கு மூலதனத்தை ரொக்கமாகச் செலுத்துவதில்லை. அவர்கள் தங்களுக்குத் தேவையான பண்டங்களை வாங்கிக்கொண்டு செல்கின்றனர். ஆண்டு இறுதியில் அவர்கள் எவ்வளவிற்கு வாங்கியிருக்கின்றனரோ அவ்வளவிற்கு இலாப ஈவு கணிக்கப்பட்டு இந்த இலாப ஈவு இவர்களுக்கு ரொக்கமாகக் கொடுக்கப்படாமல் பங்குகளாக அளிக்கப்படுகிறது.

3. இச் சங்கங்கள் உறுப்பினர்களின் பங்கு மூலதனத்திற்கு இலாப ஈவு அளிக்காமல் வட்டி மட்டுமே (5 சதவீதம்) கொடுக்கின்றன. வட்டி செலுத்தியபின் எஞ்சியிருக்கும் இலாபத் தொகையில் 15 சதவீதத்தைக் காப்பு நிதியில் சேர்த்துவிட்டு மீதியை உறுப்பினர்கள் வாங்கியுள்ள பொருள்களின் அடிப்படையில் பகிர்ந்து கொடுக்கின்றன.

4. இச் சங்கங்களில் சில 'குடும்பச் சேமிப்புக் கணக்கு முறையை' (Family savings account) ஆரம்பித்துள்ளன. இலாப ஈவுத் தொகையின் ஒரு பகுதி உறுப்பினர்கள் கொண்டிருக்கும் இக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இவ்வாறு சேர்க்கப்படும் தொகை உறுப்பினர்கள் அறுபது வயதை அடையும்போது மொத்தமாக வட்டியுடன் கொடுக்கப்படுகிறது. உறுப்பினர்கள் கஷ்டப்படும்போது அல்லது இடம் மாறிச் செல்லும்போதும்கூட இத் தொகை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு விடுகிறது.

5. சிறிய கூட்டுறவுப் பண்டகசாலைகளில் பொதுக்குழுதான் தலைமை அதிகாரியாகத் திகழ்கிறது. இக் குழு பண்டகசாலையைத் திறம்பட நடத்துவதற்கு நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுக்கிறது. இந்த நிர்வாகக்குழு திறமைமிக்க நிர்வாகியை வேலைக்கமர்த்தி, அவரது பணிகளை மேற்பார்வையிடுகிறது.

6. கூட்டுறவுச் சங்கம் பெரியதாயிருந்தால் அச்சங்கம் பிரதேச வாரியாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்படுகிறது. பிரதேச ரீதியில் உறுப்பினர்கள் ஒன்றுகூடி நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுக்கின்றனர். மேலும், பொதுக்குழுவில் அங்கம் வகிக்கும் வண்ணம் பிரதேச உறுப்பினர்கள் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கின்றனர். அவ்வாறு அமைக்கப்பட்ட பொதுக்குழு நிர்வாக ஆலோசனைக் குழுவை அமைக்கின்றது. 15-லிருந்து 20 உறுப்பினர்களைக் கொண்ட இந்த ஆலோசனைக் குழுதான் சங்கங்களின் வெற்றிக்காகப் பாடுபடுகின்றது. இந்த ஆலோசனைக் குழுவின் பணிகளில் ஒன்று 'இயக்குநர் அவையை' (Board of Directors) உண்டுபண்ணுவதும், அதன் அலுவல்களைக் கண்காணிப்பதுமாகும். இயக்குநர் அவையின் உறுப்பினர்கள் சம்பளம் பெறும் அலுவலகர்கள். எனவே, இவர்கள் ஆலோசனைக்குழுவின் உத்தரவுப்படி பணியாற்றக் கடமைப்பட்டவர்கள்.

7. இப்பண்டகசாலைகள், உறுப்பினர்களுக்குக் கடன் விற்பனை செய்யாமல், ரொக்கத்திற்கே விற்கின்றன. பொருள்களை வாங்கக் கையில் பணமில்லாத உறுப்பினர்கள் அங்குள்ள சேமிப்பு வங்கியிடமிருந்து கடனைப் பெறுகின்றனர்.

8. இப் பண்டகசாலைகள் கொள்ளை இலாபமின்றி நியாய விலையில்தான் பொருள்களை விற்கின்றன. எனினும், உறுப்பினர்களுக்கு 3 சதவீதம் இலாப ஈவுதர வேண்டுமென்ற அடிப்படையிலும் காப்பு நிதிக்கும் கணிசமான தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையிலும் பொருள்களின் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

சுவீடனில் இயங்கிவரும் இக்கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஆரம்பத்தில் தனிப்பட்ட வணிகர்கள், ஆலை அதிபர்களின் கடுமையான போட்டிக்கு உள்ளாயின. எனினும், இலாப நோக்கையே கொண்டுள்ள அவர்களின் போட்டியை இச்சங்கங்கள் முறியடிப்பதற்கென்று 'கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம்' ஒன்றை உருவாக்கின. எனவே, மொத்த விற்பனைச் சங்கத்தின் அமைப்பையும் பணிகளையும் பற்றிச் சற்று ஆராய்வோம்.

கூட்டுறவு ஃபார்பன்டெட்
(Co-operative Farbunden) (K. F.)

சுவீடன் கூட்டுறவு யூனியனும் மொத்த விற்பனைச் சங்கமும் கொண்டதுதான் கூட்டுறவு ஃபார்பன்டெட் என அழைக்கப் படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆலோசனை அளிப்பதற்கும் கூட்டுறவு இயக்கத்திற்கு விளம்பரம் செய்வதற்கும்தான் இது 1899-ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் 1904-லிருந்து கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு வேண்டிய பொருள்களை விநியோகம் செய்யும் பணியை மேற்கொண்டது. படிப்படியாக இது வளர்ந்து ஒரு மொத்த விற்பனைச் சங்கமாக உருப்பெற்றது. இவ்வாறு இவ்வமைப்பு வளர்ந்த வரலாறு ஒரு நீண்ட விசித்திரமான கதையாகும்.

மொத்த விற்பனைப் பணிகள் :

சுவீடனின் மொத்த விற்பனைச் சங்கம் (K. F.) ஆரம்பத்தில் குறைந்த அளவு விற்பனையையே செய்யத் தொடங்கியது எனினும், நாளடைவில் இது விரிவடைந்து சுமார் 40 விற்பனைப் பிரிவுகளின் வாயிலாகப் பணிபுரிந்து வருகிறது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு தலைமை அதிகாரி நியமனம்பெற்று அவரது நேரடிப் பார்வையில் நிர்வாகம் நடைபெறுகிறது. ஒவ்வொரு விற்பனைப் பிரிவும் ஒருசில குறிப்பிட்ட பண்டங்களையே சிறப்பாக விற்பனை செய்கிறது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு இயக்குநர் இருப்பதால், அவர் விற்பனைப் பிரிவுக்கும் மத்திய நிர்வாகக் குழுவுக்குமிடையே ஓர் இணைப்புப் பாலம்போல் பணியாற்றுகிறார். மத்திய நிர்வாகக்குழு வாரம் ஒருமுறை கூடி விற்பனைப் பிரிவுகளின் வளர்ச்சி, அவைகளின் நிதிநிலை, பிரச்சினைகள் ஆகியவற்றை ஆலோசித்து உகந்த வழிமுறைகளைத் தீர்மானிக்கிறது. ஒவ்வொரு விற்பனைப் பிரிவின் வளர்ச்சி பற்றிய அறிக்கை ஏனையப் பிரிவு களுக்கு அனுப்பப்படுகிறது இதனால் பிரிவுகளுக்கிடையே சுமூக மான போட்டி மனப்பான்மை ஏற்பட்டு வளர்ச்சி பெறுவதற்குரிய வாய்ப்புத் தோன்றுகிறது.

இக் கூட்டுறவுச் சங்கத்தின் (K. F.) தலைமை அலுவலகம் ஸ்டாக்ஹோம் நகரில் செயல்பட்டு வருகிறது. எனினும், கொள் முதல் செய்யப்பட்ட சரக்குகளைப் பிராந்தியப் பண்டகங்களில் (Regional warehouses) பத்திரப்படுத்துகிறது. இவ்வகைப் பண்ட கங்கள் நாடு முழுவதும் அமைக்கப்பட்டு நல்ல முறையில் நிர்வகிக் கப்படுகின்றன. தற்போது நாடு முழுவதும் 22 பண்டகங்கள்

உள்ளன. சரக்குகளை இறக்குவதற்கும் ஏற்றுவதற்கும் ஏற்ற இடங்களில் இப்பண்டகங்கள் அமைக்கப்படுகின்றன. இப் பண்டகங்களில் பல்வேறு பொருள்களுக்குத் தனித்தனி இடம் ஒதுக்கப்படுவதோடு பல நவீன வசதிகளும் உள்ளன. விரைவில் அழிந்து போகக்கூடிய நுகர்வுப் பொருள்களைப் பாதுகாக்கக் குளிர்சாதன வசதிகள்கொண்ட தனி அறையும் உள்ளன. தாமாகவே இயங்கும் இயந்திரங்களைக்கொண்டு சரக்குகளைக் கட்டிப் பாதுகாக்க தனிப் பிரிவுகளும் (Packing section) இப் பண்டகங்களில் உள்ளன.

தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் (Primary Co-operative Societies) தங்கள் விற்பனைக்குத் தேவையான எல்லாப் பண்டங்களையும் நேரடியாகவே இப் பண்டகசாலைகளிலிருந்து கொள்முதல் செய்து கொள்கின்றன. கூட்டுறவு விற்பனைச் சங்கத்திடமிருந்து கொள்முதலுக்கான ஆணையைப் பெற்றவுடன், இப் பண்டகம் அப்பொருள்களின் இருப்பு நிலையைக் 'கணக்கிடும் கருவி' (Computer) மூலம் அறிந்து உடனே தாமதமின்றி அவற்றை அனுப்புகின்றன. அவ்வாறு அனுப்பப்படும் சரக்குகளுக்குப் பட்டியலும் (Invoice) கணக்கிடும் கருவிமூலம் தயாரிக்கப்பட்டுச் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுப்பப்படுகிறது.

இம்மொத்த விற்பனைச் சங்கம் (K. F.) கொள்ளை இலாபம் இன்றி ஓரளவு இலாபத்தைப்பெறும் நோக்கோடு சரக்குகளுக்கு விலை நிர்ணயம் செய்கிறது. விலையை நிர்ணயிக்கும்போது அடக்க விலையுடன் (Cost price) பண்டகச் செலவு, போக்குவரத்துச் செலவு, சரக்குகள் பண்டகசாலையிலிருந்த காலத்திற்கேற்ப அவற்றிற்கு வட்டி முதலியனவும் கணக்கெடுக்கப்படுகின்றன. இதன் இலாபத்தில் கூட்டுறவுச் சங்கங்களும் தத்தம் கொள்முதலுக்கேற்ப ஒரு சதவீத இலாப ஈவைப் பெறுகின்றன.

1956ஆம் ஆண்டுக் கணக்கின்படி இம்மொத்த விற்பனைச் சங்கம் (K. F.) கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனைசெய்த சரக்குகளின் மதிப்பு 935 மில்லியன் குரோனர்களாகும். 1971-ல் இதன் மொத்த விற்பனை 4,300 மில்லியன் குரோனராக அதிகரித்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் இம் மொத்த விற்பனைச் சங்கத்திடம்தான் கொள்முதல் செய்ய வேண்டுமென்று கட்டாயமில்லையெனினும் இதன் மொத்த விற்பனை இவ்வளவு தூரம் அதிகரித்திருப்பது இதன் வளர்ச்சிக்கும் செல்வாக்குக்கும் எடுத்துக்காட்டாகும். வெளிநாடுகளுக்குக் கூட இச்சங்கம் சரக்குகளை ஏற்றுமதி செய்கின்றது. 1971-ல் ஏற்றுமதி செய்த சரக்கின் மதிப்பு 661 மில்லியன் குரோனர் என்று அறியும்போது இதன் சிறப்பும் பெருமையும்

வெளிப்படுகிறது. இனி, இச் சங்கத்தின் உற்பத்திப் பணிகளைச் சிறிது ஆராய்வோம்.

உற்பத்திப்பணிகள்

தனிப்பட்டவர்களின் விற்பனை முற்றுரிமையை முறியடித்துக் குறைந்த விலையில் பொருள்களை விற்பனை செய்வதற்காகத் தோன்றிய இச்சங்கம் தற்போது சுமார் 40 தொழிற்சாலைகளை நிறுவிப் பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்கிறது. தனிப்பட்ட வணிகர்களின் தொழில் திரட்டுகளை ஒழித்துக்கட்டுவதே இதன் முக்கியக் குறிக்கோளாக இருந்தது. காரணம் இவையனைத்தும் அவசியப் பண்டங்களைக்கூட அநியாய விலைக்கு விற்றுவந்தன. சான்றாக, செயற்கை வெண்ணெய் தயாரிக்கும் உற்பத்தியாளர்கள் ஒன்றுசேர்ந்து அநியாய விலைக்குத் தம் பண்டத்தை விற்று வந்தனர். இவர்களுக்குப் போட்டியாக இந்தக் கூட்டுறவு சங்கம் (K. F.) 1909-ல் ஒரு சிறிய தொழிற்சாலையை அமைக்கவே தனிப் பட்டவர்களின் தொழில் திரட்டு 1911-லேயே மறைந்து விட்டது. 1914-ல் இத் தொழிற்சாலையும் கைவிடப்பட்டது. பின்னர் 1921வரை இச் சங்கம் வேறெந்தத் தொழிலையும் ஏற்றுக்கொள்ள வும் இல்லை; புதிதாய்த் தொடங்கவுமில்லை. 1921-க்குப் பின்னர்த் தான் செயற்கை வெண்ணெய் தயாரிக்கும் நவீனத் தொழிற்சாலை யொன்றைத் தொடங்கியது. இன்று இத் தொழிற்சாலைதான் சுவீடன் நாட்டிலேயே மிகப் பெரியதாக விளங்குகிறது; தரமான வெண்ணெய் தயாரிப்பதிலும் முதலிடம் பெறுகிறது. செயற்கை வெண்ணெய் தயாரிக்கத் தேவைப்படும் தாவர எண்ணெய் வகைகளைத் தயாரிப்பதற்காக 1931-ல் தனியொரு தொழிற் சாலையைத் தொடங்கியது. மேலும், மாவுமில் அதிபர்கள் ஒன்று சேர்ந்து மாவுப் பொருள்களின் விலையை உயர்த்தியிருந்தனர்; எனவே, இச் சங்கம் 'குரோனர்' என்றழைக்கப்பட்ட தொழிற் சாலையை வாங்கி, மாவுப் பொருள்களை மலிவாக உற்பத்தி செய்து கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு விநியோகம் செய்யத் தொடங் கியது. இவ்வாலைகள் நாளடைவில் விரிவடைந்து மாவுப் பொருள் கள் தயாரித்தல், ரொட்டி தயாரித்தல் போன்ற பணியைச் செய்து வருகின்றன. 1943-ல் இச் சங்கம் உணவுப் பொருள்களைத் தகர டப்பாக்களில் வைத்தனுப்பும் தொழிற்சாலையையும் 1948-ல் சாக்லெட் தொழிற்சாலையையும் ஆரம்பித்தது. இன்று, இறைச்சி தயாரித்தல், காலணி தயாரித்தல், ரப்பர் டயர் தயாரித்தல், ஆடை, தையற் பொறிகள், சலவைத்தூள் தயாரித்தல் போன்ற பல உற்பத்தித் துறைகளில் இறங்கியுள்ளது.

சுவீடனில் மின்சார விளக்குகளின் விலை மிக அதிகமாக இருந்ததால் 1934-ல் இச் சங்கம், 'லுமா மின் விளக்குத் தொழிற்

சாலையை'த் (Luma Lamp Factory) தொடங்க ஏற்பாடு செய்தது. இதைத் தொடர்ந்து ஒஸ்லோ என்ற நகரில் மற்றொரு தொழிற்சாலையையும் ஆரம்பித்தது. லூமா தொழிற்சாலைதான் உலகிலேயே முதன் முதலாகச் சர்வதேச நாடுகளின் கூட்டுறவு அடிப்படையில் அமைக்கப்பட்டதாகும். இத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் மின் விளக்குகளுக்கு சுவீடனில் மட்டுமின்றி, அண்டை நாடுகளிலும் கிராக்கி இருந்தது. நிற்க, இக்கூட்டுறவுச் சங்கம் 3 காகித ஆலைகளையும், ஒரு பீங்சான் தொழிற்சாலையையும் திறம்பட நடத்தி வந்தது. இவ்வாறாக, தனியார் துறையில் காணப்பட்ட கொள்ளை இலாபக் குறிக்கோளை முறியடிப்பதற்கென்று இச் சங்கம் விநியோகத் துறையில்மட்டுமின்றி, உற்பத்தித் துறையிலும் செயலாற்ற முன்வந்ததால் நாடு நலம்பெறத் தொடங்கியது. 1971ஆம் ஆண்டில் மட்டும் இக் கூட்டுறவுச் சங்கம் 3,270 மில்லியன் குரோனர் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்திருக்கிறது.

காப்புறுதித் தொண்டு (Insurance Work)

உற்பத்தி, விநியோகம் ஆகிய இரு பணிகளைத் தவிர, இச் சங்கம் (K. F.) காப்புறுதித்தொண்டையும் பெரிய அளவில் செய்து வருகிறது. தானாகவே இப் பணியை நேரடியாகச் செய்யாமல் துணைச் சங்கங்களின் வாயிலாகத்தான் இவ்வலுவலைச் செய்து வருகிறது. 1908ஆம் ஆண்டு 'சாமர்பெட்' என்னுமிடத்தில் தொழிலாளரின் நலனுக்கென்று ஒரு பொதுக் காப்புறுதிச் சங்கத்தை நிறுவியது. இதைத் தொடர்ந்து 1914ஆம் ஆண்டில் 'போல்கெட்' என்னுமிடத்தில் பிறிதொரு காப்புறுதிச் சங்கத்தைத் தொடங்கியது. இச் சங்கம் ஓர் ஆயுள் காப்புறுதிச் சங்கமாக இயங்கி வருகிறது. பின்னர் 1949-ல் மேலும் ஓர் ஆயுள் காப்புறுதிச் சங்கத்தைத் தொடங்கியது. இக் காப்புறுதிச் சங்கங்கள் வெவ்வேறு துறையில் செயல்பட்டு வந்தாலும், ஒரே நிர்வாகத்தின் கீழ்த்தான் உள்ளன. ஆண்டுதோறும் இவற்றின் காப்புறுதித் தொகை பெருகிக்கொண்டே போவது இதன் வளர்ச்சியைக் குறிப்பிடுகிறது.

கல்விப் பணிகள்

கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்குக் கூட்டுறவு பற்றிய கல்வி அத்தியாவசியமானது என்பதை உணர்ந்து இச் சங்கம் (K.F.) கூட்டுறவுக் கல்வியை உற்சாகத்துடன் பரப்பி வருகின்றது. துண்டு அறிக்கைகள் வழியாக மட்டுமின்றி, 'நாம்' (We) என்ற வார இதழின் வழியாகவும் கூட்டுறவுக் கல்வியை நாட்டு

மக்களிடையே பரப்பி வருகின்றது. நாட்டிலுள்ள கூட்டுறவுத் துறையில் ஏற்படும் மாறுதல்களும் செயல் முறைகளும் இவ் வார இதழில் வெளியிடப்படுவதால் கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றிவரும் பணியை நாட்டு மக்கள் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. பொருளாதார முன்னேற்றத்தையே குறிக்கோளாகக்கொண்டு வெளிவரும் இவ்வார இதழ் 43 இலட்சம் பிரதிகளாக வாரந்தோறும் வெளியாகின்றது. இதனோடு, 'கூட்டுறவாளர்' என்ற இதழையும் மாதம் இருமுறை வெளியிடுகிறது. இவ்விதழ் கூட்டுறவுச் சங்கங் களில் பணியாற்றிவரும் அதிகாரிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக விளங்குகின்றது.

இச்சங்கம் பல நூலகங்களையும் நடத்தி வருகிறது. ஆண்டு தோறும் சுமார் 300 நூல்கள் இச்சங்கத்தால் வெளியிடப்படு கின்றன. இச் சங்கத்தின் மத்திய நூலகத்தில் மட்டும் ஒரு லட்சத் திற்குமதிகமான பொருளாதார நூல்கள் உள்ளன. மேலும், கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பை எடுத்துக்காட்டும் வகையில் திரைப்படங்களையும் இச்சங்கம் தயாரிக்கின்றது. இத்திரைப் படங்களையும் கருவிகளையும் துணைச் சங்கங்களுக்கு வாடகைக்கு விடுகின்றது. பெண்களின் முன்னேற்றத்திற்கென்று இச் சங்கம் 'பெண்களுக்கான சிறப்புத்துறை' (Special Department for House-wives) ஒன்றையும் தொடங்கியுள்ளது. கூட்டுறவுக் கல்வியை வளர்ப்பதற்கென்று இச்சங்கம் பெரியதொரு கல்லூரியையும் நடத்தி வருகின்றது. ஆண்டொன்றிற்குச் சுமார் 3,000 மாண வர்கள் இக் கல்லூரியில் பயிற்சிபெறுகின்றனர். கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தகுதிவாய்ந்த அதிகாரிகளை உருவாக்குவதே இக் கல்லூரியின் நோக்கமாகும். அறிவும் அனுபவமும் மிக்க ஆசிரி யர்கள் இக் கல்லூரியில் பணியாற்றி வருவதால் சிறந்த கூட்டுற வாளர்களை இக் கல்லூரி உருவாக்க முடிகிறது.

சோதனை ஆய்வுக்கூடங்கள் (Test Laboratories)

தரமான பொருள்களை உற்பத்திசெய்து விநியோகிக்க வேண்டு மென்பதற்காக இச்சங்கம் (K.F.) ஒவ்வொரு பொருளின் தரத்தை யும் சோதனையிடுவதற்கு ஆய்வுக்கூடங்களை அமைத்துள்ளது. உணவுச் சோதனை ஆய்வுக்கூடம், துணி நெசவு ஆய்வுக்கூடம், பரிசோதனைச் சமையல் கட்டு என்று பல ஆய்வுக்கூடங்களைக் கொண்டுள்ளது. விற்பனைச் சங்கங்களுக்குப் பொருள்கள் அனுப் பப்படுவதற்குமுன்பு அவை நன்முகப் பரிசோதனை செய்யப்படு கின்றன.

வேலை வாய்ப்பு: பெருமைமிக்க இக் கூட்டுறவுச் சங்கம் (K.F.) வேலை வாய்ப்பினையும் கணிசமாக உயர்த்தியுள்ளது. இச்

சங்கத்தில் பணியாற்றிவரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் உயர்ந்துகொண்டே வந்துள்ளது. 1971ஆம் ஆண்டில் இச் சங்கத்தின்கீழ்ச் சுமார் 27,000 பேர் பணிபுரிந்ததாக அறிய வருகிறோம். தொழிலாளர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் இச் சங்கம் செய்து தருவதால், சங்கத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு நிலவிவருகிறது; சங்கத்தின் பணிகளும் தடையின்றித் தொடர்ந்து நடைபெறுகிறது. 1919ஆம் ஆண்டில்தான் சுவீடன் நாட்டில் ஒரு நாளுக்கு 8-மணி நேரத்திற்குமேல் தொழிலாளர் வேலை செய்யக்கூடாது என்ற சட்டம் உருவானது. ஆனால், இச் சங்கமோ 1906-லேயே இம் முறையைப் புகுத்தி விட்டது. 1907 முதல் வேறு பல புரட்சித் திட்டங்களையும் இச் சங்கம் மேற்கொண்டு வந்துள்ளது. வாரத்திற்கு இரண்டு நாள் விடுமுறையை அனுசரிக்கின்றது. இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கும்போது சுவீடன் அரசாங்கத்திற்கே இச் சங்கம் வழிகாட்டியாக விளங்குகிறதுபோலும் என்று எண்ணத் தோன்றுகிறது. எப்போதாவது தொழிலாளர் பிரச்சினை தோன்றினால் உடனடியாக இச் சங்கம் அதற்குத் தீர்வு காண்பதால் தொழிலாளர் உயர்ந்த வாழ்க்கைத்தரத்துடன் மகிழ்ச்சியாக வாழ முடிகிறது.

நிதி நிலை: இச் சங்கத்தின் (K.F.) வெற்றிக்கு அடிப்படைக் காரணம் அதன் வலிமையான நிதி நிலைதான். 1971ஆம் ஆண்டின் கணக்குப்படி இது பெற்றிருந்த நிதி 2,000 மில்லியன் குரோனர்கள்; கடன் மூலதனம் 3,600 மில்லியன் குரோனர்கள்; இதன் சொத்துகள் மதிப்பு 7,000 மில்லியன் குரோனர் மதிப்புடையவை. இத்தகைய வலிமையான நிதிநிலை இருப்பதால்தான் இச்சங்கம் எந்தத் துறையிலும் தயக்கமோ அச்சமோ இன்றி ஈடுபட்டு வெற்றி காண முடிகிறது.

டில்லியில் மத்தியக் கல்விக்கூடம்

பின்தங்கிய நிலையிலுள்ள தென்கிழக்கு ஆசிய நாடுகளும் கூட்டுறவு முறையில் முன்னேறுவதற்கென்று இச்சங்கம் (K.F.) பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 1960-ல் இந்தியாவின் தலைநகரான டில்லியில் ஒரு மத்தியக் கல்விக்கூடத்தை இச் சங்கம் நிறுவியது. அதே ஆண்டில்தான் 'சர்வதேசக் கூட்டுறவுச் சங்கமும்' (International Co-operative Alliance) தனது பிராந்திய அலுவலகத்தை டில்லியில் அமைத்தது. இவ்விரு அமைப்புகளும் 1963-ல் ஒருங்கிணைந்தன. இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட கல்விக்கூடத்தின் மொத்தச் செலவில் மூன்றில் இரண்டு பாகத்தை இச் சங்கம் (K.F.) ஏற்றுக்கொள்கிறது. இக் கல்விக்கூடம் நிபுணர்களின்

மாநாடு, பிராந்தியக் கருத்தரங்கு (Regional Seminar), தேசியக் கருத்தரங்கு (National Seminar), மாதர் நிகழ்ச்சிகள் (Women's Programme) போன்ற நிகழ்ச்சிகளைத் தவறுமல் ஏற்பாடு செய்கிறது. ஆண்டுதோறும் மூன்று பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் ஆராய்ச்சித்துறையில் ஈடுபடுவதற்கும் வழிசெய்யப்படுகிறது.

பல்வேறு நாடுகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சுவீடனிலுள்ள இச் சங்கத்திடமிருந்து (K.F.) தார்மீக அடிப்படையில் பொருளாதார உதவிகளையும் தொழில்நுட்ப அறிவுரைகளையும் பெற்றுவருகின்றன. இவ்வாறுக, உலக நாடுகளிடையே நல்லுறவு வளர்வதற்கு இச் சங்கம் உரமாகப் பயன்படுகிறது. இச்சங்கத்தின் தூண்டுதல்களால் பல நாடுகளுக்கிடையே வியாபார ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டு அந் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியும் ஊக்குவிக்கப்படுகிறது. இப் பணியை நாம் எண்ணிப் பார்க்கும் போது சுவீடன் நாட்டுக்கு மட்டுமின்றி, பின்தங்கிய எல்லா நாடுகளுக்குமே இச் சங்கம் பாடுபடுவதாகத் தெரிகிறது. இவ் வழியை எல்லா நாடுகளுமே கடைப்பிடித்தால் இவ்வுலகம் பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு வசதியும் வாய்ப்பும் நிறைந்த சொர்க்கமாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.

விவசாயக் கூட்டுறவு
(Agricultural Co-operation)

சுவீடனில் விவசாயத் தொழிலை நம்பி வாழ்வோர் மிகக் குறைவு. மொத்த மக்கள்தொகையில் 10 சதவீதம் பேர்தாம் நிலத்தில் பாடுபடுகின்றனர். எனினும், விவசாய உற்பத்தி உயர்வாயுள்ளது. நவீன விவசாயக் கருவிகள், தரமான விதைகள், உரங்கள் ஆகியவை பயன்படுத்தப்படுவதோடு மண்வளத்திற்கேற்ற பயிர்கள் சாகுபடி செய்யப்படுவதால் தேவைக்குமேல் உற்பத்தி கிடைக்கிறது. சுவீடனின் மொத்த நிலப்பரப்பில் 10 சதவீதம்தான் சாகுபடிக்குப் பயன்படுத்தப்படுகிறது; 50 சதவீதம் காடுகளாகும்; எஞ்சியுள்ள பகுதி மேய்ச்சல் நிலமாகவும் தரிசாகவும் கிடக்கின்றன. சாகுபடி நிலத்தில் நிலச் சொந்தக்காரர்கள் தாம் பெரும்பாலும் பாடுபடுகின்றனர்; எனவே பண்ணைகள் சிறியனவாகவேயுள்ளன. நிலத்தில் பாடுபடுவோரில் 15 சதவீதம் பேர்தாம் நிலமில்லாத கூலியாள்கள். மொத்த விவசாய வருமானத்தில் 40 சதவீதம் பாலிலிருந்தும் பால் பண்டங்களிலிருந்தும் கிடைக்கிறது. இறைச்சி விற்பனை வாயிலாகவும் 40 சதவீத வருமானம் கிட்டுகிறது. எனவே, கால்நடைகளுக்கு வேண்டிய தீவனம்தான் அதிகமாகப் பயிராகிறது.

பேரளவு உற்பத்தி முறையினுல் கிடைக்கும் நன்மைகளை அடைவதற்கென்றுதான் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றின. கூட்டுறவுப் பால் பண்ணைதான் முதலில் தோன்றிய விவசாயச் சங்கமாகும். இச்சங்கம் 1870-ல் தொடங்கப்பட்டது. விரைவில் விவசாயிகளுக்குத் தேவைப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதற்கென்று பல சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. முதல் உலகப் போர் முடிந்தவுடன் விவசாயத் தொழில் சம்பந்தப்பட்ட எல்லாத் துறைகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றின.

தற்சமயம் 13 வகை விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவை :

1. சுவீடன் பால் பண்ணைச் சங்கம் (Swedish Dairies Association).
2. சுவீடன் விவசாயிகளின் இறைச்சி விற்பனைச் சங்கம் (Swedish Farmers' Meat Marketing Association).
3. சுவீடன் விவசாயிகளின் கொள்முதல், விற்பனைச் சங்கம் (Swedish Farmers' Selling and Purchasing Association).
4. சுவீடன் கோழி, முட்டை விற்பனைச் சங்கம் (Swedish Eggs and Poultry Marketing Association).
5. சுவீடன் வன உரிமையாளர் சங்கம் (Swedish Forest Owners' Association).
6. கிராமக் கடன் சங்கங்களின் ஐக்கியம் (Association of Rural Credit Societies).
7. சுவீடன் பொது அடைமான வங்கி (General Mortgage Bank of Sweden).
8. சுவீடன் வடிகட்டும் ஆலை உரிமையாளர் சங்கம் (Swedish Distillers Association).
9. சுவீடன் உரோம உற்பத்தியாளர் சங்கம் (Swedish Fur Breeder's Association).
10. சுவீடன் மாவு உற்பத்தியாளர் சங்கம் (Swedish Starch Producer's Association).
11. சுவீடன் சணல் உற்பத்தியாளர் சங்கம் (Swedish Flax and Hemp Growers' Association).

12. சுவீடன் எண்ணெய் விதை பயிரிடுவோர் சங்கம் (Swedish Oil Seeds Growers' Association).

13. சுவீடன் கால்நடை அபிவிருத்தியாளர் சங்கம் (Association for Swedish Live-Stock Breeding and Production).

இப்பதின்மூன்று விவசாயச் சங்கங்களும் 'சுவீடன் குடியானவர் சங்கங்களின் கூட்டிணைப்'பின் கீழ் (Federation of Swedish Farmers' Associations) இயங்கி வருகின்றன. இவற்றில் பிரபலமான ஒரு சில சங்கங்களைப் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

1. பால் பண்ணைகள் : சுவீடனிலுள்ள 2,35,000 பால் உற்பத்தியாளர்கள் 233 பால் பண்ணைச் சங்கங்களை ஏற்படுத்தியுள்ளனர். இந்த 233 சங்கங்களும் 396 பால் பண்ணைகளை நடத்துகின்றன. இச்சங்கங்கள் அனைத்தும் சேர்ந்து 16 பிராந்தியக் கூட்டிணைப்புகளை உருவாக்கியுள்ளன. இந்நாட்டிலுள்ள தொழில்களில் மிகப் பெரியது இப் பால் பண்ணைத் தொழில்தான். இவை இந்நாட்டுக் குடிமக்களுக்குத் தேவைப்படும் பாலில் 98 சதவீதத்தை விநியோகிக்கின்றன. இச் சங்கங்கள் நாட்டிலுள்ள எல்லாக் குடியானவர்களிடமிருந்தும் நேரடியாகப் பாலைச் சேகரித்துப் பக்குவப்படுத்துகின்றன. பாலைப் பல இடங்களிலிருந்து சேகரிப்பதற்காகச் சுமார் 4,090 மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்துகின்றன. இவ்வாறு சேகரிக்கப்படும் பாலில் 25 சதவீதம் மக்கள் நுகர்விற்காகவும், 25 சதவீதம் வெண்ணெய் தயாரிப்பதற்காகவும், 10 சதவீதம் பாலேடு (Cream) தயாரிக்கவும், எஞ்சியுள்ளது பாலாடைக்கட்டி (Cheese), பால்பவுடர் தயாரிப்பதற்கும் பயன்படுகிறது. நாட்டில் உற்பத்தியாகும் பாலில் 98 சதவீதம் இப் பால் பண்ணைச் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது.

2. கூட்டுறவு இறைச்சி விற்பனைச் சங்கம் : இந்நாட்டுக் குடியானவர்களில் 2·23 லட்சம் பேர் 21 இறைச்சி விற்பனைச் சங்கங்களை வைத்து நடத்துகின்றனர். இச் சங்கங்களனைத்தும் ஒன்றுசேர்ந்து 'சுவீடன் விவசாயிகள் இறைச்சி விற்பனைச் சங்கம்' என்ற அமைப்பை உருவாக்கியுள்ளன. இச்சங்கங்களின் முக்கியப் பணி கால்நடைகளைக் கொன்று இறைச்சியை மொத்த விற்பனை செய்வதாகும். இக்கூட்டுறவுச் சங்கங்கள் மொத்த இறைச்சியில் 80 சதவீதம் விற்பனை செய்கின்றன; இவற்றின் மதிப்பு சுமார் 1,031 மில்லியன் குரோனர்களெனக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இவற்றின் கூட்டிணைப்புச் சங்கம் எங்கெல்லாம் அதிகத் தேவை இருக்கின்றதோ அங்கெல்லாம் பெரிய

அளவில் மொத்தமாக இறைச்சி விற்பனை செய்கிறது. இறைச்சிக்கு ஏற்படும் தேவைக்கேற்ப விநியோகம் செய்வதால் விலைகள் சீராகப் பேணப்படுகின்றன. மேலும், இறைச்சி ஏற்றுமதி, இறக்குமதித் தொழிலிலும், இறைச்சியைப் பக்குவப்படுத்தும் வேலையிலும் இக் கூட்டிணைப்பு முனைந்துள்ளது. இறைச்சியைத் தரவாரியாகப் பிரிப்பதற்கும் விலை நிர்ணயம் செய்வதற்கும் விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. மேலும், தனியார் அமைப்புகளுடன் ஒப்பந்தங்கள் செய்வதிலும் ஆராய்ச்சி நடத்துவதிலும் ஈடுபட்டுள்ளது.

3. **கூட்டுறவுக் கொள்முதல், விற்பனைச் சங்கம்:** இந்நாட்டிலுள்ள குடியானவர்களில் 1.45 லட்சம் பேர் சேர்ந்து 21 கொள்முதல் விற்பனைச் சங்கங்களை அமைத்துள்ளனர். இச்சங்கங்கள் அனைத்தும் சேர்ந்து அமைக்கப்பட்டதுதான் 'சுவீடன் விவசாயிகளின் கொள்முதல், விற்பனைச் சங்கம்'. இக் கூட்டமைப்புச் சங்சம் விவசாயிகளுக்குத் தேவையான பொருள்களைக் கொள்முதல் செய்து, விநியோகம் செய்கிறது. பல்வேறு தானியங்சள், தரமான விதைகள், உருளைக்கிழங்கு, கால்நடைத் தீவனம் போன்ற பொருள்களை இச் சங்கம் கொள்முதல் செய்து விநியோகிக்கின்றது. வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறது. பிற நாடுகளுக்கு சுவீடனிலிருந்து ஏற்றுமதியாகும் தானியங்களில் 90 சதவீதம் இச்சங்கத்தால் செய்யப்படுகிறது. இக்கூட்டிணைப்புச் சங்கத்திற்கு ஒரு மில்லியன் டன் உணவுப் பொருள்களைப் பாதுகாக்கக்கூடிய பல பண்டகங்கள் உள்ளன. உணவுப் பொருள்களை உலர வைக்கவும் தூற்றியெடுக்கவும் பல நவீனச் சாதனங்களும் இருக்கின்றன. சிறந்த உரங்கள், எரிபொருள், எண்ணெய் வகைகள், இரசாயனப் பொருள்கள், கட்டட வேலைக்குத் தேவைப்படும் சாமான்கள் முதலியவற்றையும் இக் கூட்டிணைப்புச் சங்கம் விற்பனை செய்துவருகிறது. நாட்டிற்குத் தேவைப்படும் கோதுமை மாவில் 35 சதவீதம் இக் கூட்டமைப்பால் விநியோகிக்சப்படுகிறது. ஆடுமாடுகள், கோழிகள், குதிரைகள், பன்றிகள் போன்ற கால்நடைகளுக்குத் தேவையான தீவன வகைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளையும் இச்சங்கம் நடத்திவருகிறது. அதனோடு, விவசாயிகளுக்குத் தேவைப்படும் கருவிகளை உற்பத்திசெய்யும் தொழிற்சாலையையும் இயக்கி வருகிறது. இக் கூட்டிணைப்புச் சங்கம் ஆண்டொன்றுக்குச் சுமார் 1,655 மில்லியன் குரோனர் மதிப்புள்ள விற்பனையை மேற்கொண்டுள்ளது.

4. **முட்டை விற்பனைச் சங்கங்கள்:** சுவீடனில் இன்று 18 முட்டை விற்பனைச் சங்கங்கள் உள்ளன. இவற்றின் உறுப்பினர்கள் 58,000 பேர். இந் நாட்டுத் தேவையில் 65 சதவீத

முட்டைகள் இச்சங்கங்களால் விற்பனை செய்யப்படுகின்றன. இச் சங்கங்கள் 1932-ல் தமக்கெனச் 'சுவீடன் முட்டை உற்பத்தியாளர் சங்கம்' என்னும் தலைமைச் சங்கத்தை ஏற்படுத்தின. இத் தலைமைச் சங்கத்தின்கீழ் 'முட்டை சேகரிக்கும் சங்கங்கள்', முட்டைகளைத் தரவாரியாகப் பிரிக்கும் சங்கங்கள் இயங்கி வருகின்றன. தரம் பிரிக்கப்பட்ட முட்டைகளின்மேல் சங்கத்தின் முத்திரை இடப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. இத்தலைமைச் சங்கம் முட்டை உலர்த்தும் தொழிற்சாலையொன்றை நடத்தி வருகிறது. தொடர்ந்து முட்டைகளைச் சேகரித்து விற்பதற்கென்று இச் சங்கங்கள் கோழிப்பண்ணைகளையும் கொண்டுள்ளன. தேவைக்குமேல் கிடைக்கும் முட்டைகள் அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

5. **வன உரிமையாளர் சங்கங்கள்:** சுவீடனின் மொத்த நிலப் பரப்பில் 56 சதவீதம் வனங்களாகும். கட்டடங்களுக்குத் தேவைப்படும் மரக்கட்டைகளை அளவாக வெட்டி வன உரிமையாளர்கள் விற்று வந்தனர். ஆனால், தங்களுடைய வனங்களை முறையாக நிர்வாகம் செய்ய முடியாமலும் மரங்களை விற்பனை செய்ய முடியாமலும் பெரும்பாலோர் அவதிப்பட்டனர். மரக் கட்டைகள் தேவைப்படும் இடங்களுக்கு அவற்றை அனுப்பி வைக்கப் போதுமான போக்குவரத்து இல்லாமல் அவதிப்பட்டனர். எனவே, 1,30,000 குடியானவர்கள் ஒன்றுசேர்ந்து 23 வன உரிமையாளர் சங்கங்களை அமைத்தனர். அவரவர்கள் கொண்டுள்ள வனங்களின் பரப்பளவை அடிப்படையாகக் கொண்டு சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய மூலதனத்தைத் செலுத்துகின்றனர். பெரும்பாலும் தங்களின் மரக்கட்டைகளை விற்பதன் வழியாகத்தான் இம் மூலதனம் செலுத்தப்படுகிறது. இச் சங்கங்களின் முக்கியப் பணிகள் வருமாறு: 1. உறுப்பினர்களின் மரக் கட்டைகளை விற்பனை செய்கின்றன; 2. வனங்களில் உற்பத்தியாகும் இரப்பர், தேன் போன்ற பொருள்களை விற்பனை செய்கின்றன; 3. மர அங்காடி நிலவரங்களை ஆராய்ந்து அதற்கேற்ப உறுப்பினர்களுக்கு ஆலோசனை கூறுகின்றன. இச்சங்கங்கள் பெரிய மர அறுவைத் தொழிற்சாலைகளையும் தொடங்கியுள்ளன. வீடுகளுக்குத் தேவைப்படும் நிலை, கதவு, சன்னல்கள் போன்ற பொருள்களைத் தயாரிக்கும் ஆலைகளையும் அமைத்துள்ளன. மேலும், 7 மரக் கூழ்த் தொழிற்சாலைகளும் இச்சங்கங்களுக்கு இருக்கின்றன.

இக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றுசேர்ந்து தங்களுக்கென ஒரு தலைமைச் சங்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இத்தலைமைச்சங்கம்

விற்பனைத்துறையிலும் ஏற்றுமதிப்பணியிலும் உறுப்பினர் சங்கங்களுக்கு உறுதுணையாய்ச் செயலாற்றுகிறது. மேலும், கூட்டுறவுக் கொள்கையைப் பரப்புவதற்கும் ஏனைய சங்கங்களுக்குத் துணை புரிவதற்கும் உகந்த வகையில் 'கூட்டுறவுப் பண்ணை இதழ்' (Co-operative Farm Journal) என்னும் வார இதழை வெளியிடுகிறது. இவ்விதழின் பிரதிகள் வாரந்தோறும் 2,50,000 வெளிவருகின்றன. நிற்க, உறுப்பினர்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ளும் வகையில் 'வன உரிமையாளர்' (Forest Owners) என்ற மாதப் பத்திரிகையையும் நடத்துகிறது.

6. **கடன் சங்கங்கள்:** தமக்கு வேண்டிய குறுங்கால, நீண்ட காலக் கடன் உதவியைப் பெறுவதற்கென்று சுவீடன் நாட்டு விவசாயிகளில் 1,73,000 பேர் 572 கிராமக்கூட்டுறவுக் கடன் சங்கங்களைத் தொடங்கியிருக்கின்றனர். இக்கிராமச் சங்கங்கள் அனைத்தும் 12 மத்தியக் கடன் சங்கங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. தேசிய மட்டத்தில் 'சுவீடன் கிராமக் கடன் சங்கங்களின் கூட்டுச் சங்கத்தையும்' நிறுவியுள்ளனர். இக்கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு 2 பில்லியன் குரோனர் கடன் கொடுத்துள்ளன.

நீண்ட காலக் கடன் வசதிக்கென்று 10 நில அடைமான வங்கிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வங்கிகள் அனைத்தும் 'சுவீடன் பொது அடைமான வங்கி'யின் கீழ்ப் பணியாற்றி வருகின்றன. இவ்வங்கி அரசாங்க உத்தரவாதம் கொண்ட கடன் பத்திரங்களை (Bonds) வெளியிட்டு, அதன் வாயிலாகக் கிடைக்கும் பணத்தை நில அடைமானத்தின்மீது விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறது. இவ்வங்கிகளிடமிருந்து சுமார் 30,000 விவசாயிகள் கடன் பெற்றுள்ளனர். 1964-ல் மட்டும் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த கடன் 1,500 மில்லியன் குரோனர்களாகும்.

பொதுவானது

குடியானவர்கள் தங்களுக்கென்று அமைத்துள்ள கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நோக்கம், பெருமளவில் செயல்படுவதால் தோன்றும் சிக்கனங்களையும் நன்மைகளையும் பெறுவதுதான். சங்கங்களின் அளவு பெரும்பாலும் பெரியதாகவே உள்ளதால் விவசாயிகளுக்குக் குறைந்த செலவில் பணியாற்ற முடிகிறது.

தரமான சாகுபடிப் பொருள்களை உற்பத்தி செய்வதில் இச்சங்கங்கள் தீவிரக் கவனம் செலுத்தி வருகின்றன. ஆராய்ச்சிப் பணிகளையும் மேற்கொண்டு விவசாயிகளுக்கு உகந்த அறிவுரைகளையும் கொடுத்து வருகின்றன. பொருள்களின் தரத்திற்கேற்ப விலை நிர்ணயம் செய்யப்படுவதால் இந்நாட்டு விவசாயிகள் தரமான பொருள்களை உற்பத்தி செய்வதில் முனைந்துள்ளனர்.

கூட்டிணைப்புகள்

சுவீடன் நாட்டில் அமைக்கப்பட்டுள்ள கூட்டிணைப்புகள் தனிச் சிறப்பு வாய்ந்தவை. விவசாய நலனுக்கென அமைக்கப் பட்டுள்ள எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் சேர்ந்து 'சுவீடன் விவசாயிகளின் கூட்டிணைப்பு' (Swedish Farmers' Associations) என்னும் ஓர் ஐக்கிய அமைப்பை உருவாக்கியுள்ளன. இதன் அடிப் படைக் குறிக்கோள்கள்:

(1) விவசாயிகளின் நலனைப் பராமரித்தல்; (2) விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தல்; (3) விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே நிரந்தரமான கூட்டுறவைக் காத்தல்; (4) உறுப்பினர்களின் நலனை அடிப் படையாகக் கொண்டு இலாபகரமானதும் நியாயமானதுமான வாணிகத்தை மேற்கொள்ளல் ஆகும். இக் கூட்டிணைப்பு சட்ட நுணுக்கங்கள் தெரிந்த நிபுணர்களைக் கொண்டு ஒரு சட்டப் பிரிவையும் நடத்தி வருகிறது. உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் அவர்களின் வழக்குகளை வெற்றிகரமாக நடத்து வதற்கும் இச் சட்டப் பிரிவு உறுதுணையாய்ப் பணியாற்றி வருகிறது. இதன் 'அங்காடிப் பிரிவு' (Market Department) விலை வாசிகளின் பட்டியலைத் தயாரித்து, அங்காடி நிலவரங்களைத் தினவிதழ் அச்சகங்களுக்கும் வர்த்தக அச்சகத்திற்கும் அனுப்பி வைக்கிறது. இதன் வரித்துறை வரி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உறுப்பினர்களுக்கும் ஆலோசனைகளும் உதவிகளும் புரிந்து வருகிறது. இதன் கொள்முதல் பிரிவு (Purchasing Department) கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப் படும் இயந்திரங்கள், அச்சிட்ட தகவல்கள், மனுக்கள், அலுவலக மேஜை, நாற்காலிகள் போன்ற பொருள்களைக் கொள்முதல் செய்து விநியோகிக்கின்றது. இதன் 'கணக்கு வைப்பு நிறுவனம்' (Accounts Bureau) விவசாயிகளுக்கு வேண்டிய வரி விவரங்களை மட்டுமின்றி, இக் கூட்டிணைப்புக் கணக்குப் புத்தகங்களையும் வைத்துப் பராமரிக்கிறது. இந்நிறுவனத்திற்கு மட்டும் 41 அலுவ லகங்கள் இருக்கின்றன.

சுவீடனின் இக் கூட்டிணைப்புக் கூட்டுறவுக் கல்வியையும் பயிற்சியையும் மக்களிடையே பரப்புவதிலும் தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது. விவசாயிகளுக்கென்று கூட்டுறவுப் பள்ளி களும் நடத்தப்படுகின்றன. இப்பள்ளிகளில் பொருளாதாரம், வனங்களின் முன்னேற்றம், விவசாய அபிவிருத்தி சம்பந்தப்பட்ட பல பாடப் பிரிவுகள் உள்ளன. தபால் மூலமாகவும் கூட்டுறவுக்

கல்வி பரப்பப்படுகிறது. விவசாயிகளுக்கென்று பல கருத்தரங்கு களும் நடத்தப்படுகின்றன. இப்பள்ளிகளுக்கும் கல்வி அறிவுக்கும் வேண்டிய நூல்களைத் தயாரித்து வெளியிடுவதற்கென்று நூல் வெளியீட்டுப் பிரிவு ஒன்றையும் நடத்தி வருகிறது. நிற்க, விவசாயக் கூட்டுறவுகளுக்கும் வனக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வேண்டிய தனி இதழ்களையும் வெளியிட்டு வருகிறது. மேலும், இக்கூட்டிணைப்புக் கணக்கு வைப்பிற்கும் தணிக்கை செய்வதற்கு மென்று தனியோர் அலுவலகத்தை 1946-ல் ஏற்படுத்தியுள்ளது. தனிப்பட்ட விவசாயிகளும், விவசாயச் சங்கங்களும் கட்டடம் கட்ட விரும்பும்போது அவர்களுக்கு ஆலோசனை கூறவும், கட்டட அமைப்புப் படத்தை வரைந்து கொடுக்கவும் பொறியியல் வல்லு நர்கள் கொண்ட நிறுவனம் ஒன்றையும் 1941-ல் தொடங்கி யுள்ளது.

இக்கூட்டிணைப்பு 'விவசாயப் பொருளாதார ஆராய்ச்சி மன்றம்' ஒன்றையும் தொடங்கியுள்ளது. இம்மன்றம் விவசாயப் பிரச்சினைகளையும் வன வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் பிரச் சினைகளையும் ஆராய்ந்து அவற்றை அகற்றுவதற்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழிவகைகளையும் கொடுத்து வருகிறது.

9. ஜப்பானில் கூட்டுறவு இயக்கம்

ஜப்பான் நாட்டின் கூட்டுறவு இயக்கம் இந்தியாவிற்கு ஒரு வழிகாட்டி எனலாம். பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் ஜப்பான் நாட்டில் இந்தியாவைப் போலவே பொருளாதார நிலை இருந்தது. கிராமங்களில் வாழ்ந்து வந்த மக்களில் பெரும்பாலோர் விவசாயத்தையே நம்பி இருந்தனர். ஒவ்வொரு குடும்பமும் சாகுபடி செய்த நிலமும் சிறியதாகவே இருந்தது. இந்நாட்டின் தட்ப வெப்ப நிலை காரணமாக விவசாயம் நிலையற்ற இயற்கையினுல் நிர்ணயிக்கப்பட்டது. இந்நாட்டில் அடிக்கடி ஏற்பட்ட வெள்ளம், கடும்புயல் ஆகியவற்ருல் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஜப்பானிய மக்களின் கடும் உழைப்பு வீணுகியது. வறுமையில் வாடிய மக்களை வட்டித் தொழிலாளரும் விட்டபாடில்லை. கடும் வட்டிக்குக் கடன் கொடுத்து விவசாயிகளின் நிலையைப் பாழ்படுத்தினர். ஒரு புறம் விளைச்சலின்றியும் மறுபுறம் வட்டித் தொழிலாளரின் கொடுமையினுலும் மக்கள் அவதிப்பட்டனர். இந்நிலையில்தான் கூட்டுறவுக் கொள்கைகள் ஜப்பானில் குடி புகுந்தன. இந்தியாவைப் போலவே, ஜப்பானும் ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் பின்பற்றிக் கூட்டுறவு இயக்கத்தைத் தொடங்கியது. 1900 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இவையனைத்தும் ஜெர்மனியில் இயங்கிவந்த 'ரைஃபீசன் சங்கங்'களை மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்கப்பட்டன. இவையனைத்தும் 'ராக்டேல்' கொள்கைகளின் அடிப்படையில் தொடங்கப்பட்டன. இன்றும்கூட ஜப்பானிலுள்ள சங்கங்களின் அமைப்பும் கொள்கைகளும் இந்தியாவிலுள்ளதைப் போலவே உள்ளன. ஜப்பானிலுள்ள சங்கங்களில் பெரும்பாலானவை பல நோக்குச் சங்கங்களாகும். இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டிய நிதி வசதியை அளிப்பதோடு, அவர்களுக்குத் தேவையான பொருள்களையும் கொள்முதல் செய்து விநியோகிக்கின்றன. இந்தியா

வைப் போலவே ஜப்பானிலும் உயர் மட்டத்திலுள்ள கூட்டுறவு அமைப்புகளின் பங்கு மூலதனத்தை அரசாங்கமும் வாங்குகிறது. அதனோடு, அச்சங்கங்களுக்கு வேண்டிய நிதி வசதிகளையும் ஏனைய உதவியையும் அரசாங்கம் செய்து தருகிறது. உள்ளூர்ப் பிரச்சினைகளையெல்லாம் ஜப்பான் மக்கள் கூட்டுறவின் வழியாகவே தீர்த்துக்கொள்வது நமது நாட்டிற்கே ஒரு படிப்பினையாக விளங்குகிறது.

கூட்டுறவு இயக்க வரலாறு

ஜப்பானில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்தாம் முதலில் தொடங்கப்பட்டன. நுகர்வுப் பொருள்களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கென்று 1879-ல் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ஒரு சில ஆண்டுகளிலேயே இச்சங்கங்கள் பெரும் எண்ணிக்கையில் அதிகரித்து விட்டன. பெரும்பாலும் கிராமங்களில் வாழ்ந்த மக்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் இச்சங்கங்கள் நியாய விலைக்கு விற்பனை செய்து வந்தன. எனினும், இச்சங்கங்களின் பணி நீண்டகாலம் வளரவில்லை. ஜப்பானுக்கும் சீனுவிற்கும் ஏற்பட்ட போரின் விளைவாக விலைவாசிகள் மறுபடியும் ஏறி விட்டன. இதனைக் கண்ட தொழிற் சங்க உறுப்பினர்கள் தங்களுக்கென்று ஏராளமான நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தனர். இதையொட்டி அன்றைய உள்துறை அமைச்சர் ஜெர்மனிக்குச் சென்று அங்கு இயங்கி வந்த 'ரைஃபீசன் சங்கங்'களை நேரடியாகவே பார்வையிட்டுத் திரும்பி, ஜப்பானிலும் அது போன்ற கடன் வழங்கும் சங்கங்களைத் தொடங்கினர்.

இவ்வாறு தோன்றிய கூட்டுறவுச் சங்கங்கள் நாளடைவில் வளர்ந்து 1898-ல் மொத்தம் 346 சங்கங்களாகப் பெருகின. இவற்றில் கடன் சங்கங்களும் நுகர்வோர் சங்கங்களுமே அதிகமாக இருந்தன. 1900ஆம் ஆண்டில் ஜெர்மனி நாட்டுச் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டு ஜப்பான் நாட்டிலும் தொழில் கூட்டுறவுச் சட்டம் இயற்றப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்துகொள்வதற்கு இச்சட்டம் வகைசெய்தது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்பும் கூட்டுறவுச் சங்கங்கள் வேகமாக வளரவில்லை. 1905-ல் மொத்தம் 872 சங்கங்களே இருந்தன. எனவே, கூட்டுறவுக் கொள்கைகளை விளம்பரம் செய்து நாடெங்கும் பரப்புவதற்கென்று அவ்வாண்டிலேயே 'கூட்டுறவு இணைப்புச் சங்கம்' ஒன்று அரசாங்க அங்கீகாரமின்றியே உருவாக்கப்பட்டது. இச்சங்கத்தின் சலியா உழைப்பின் விளைவாக 1909ஆம்

ஆண்டிற்குள் கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ந்து 5,690 ஆகப் பெருகின. உறுப்பினர்களும் 3.8 இலட்சத்திற்கு அதிகரித்தனர். கிராமக் கூட்டுறவுச் சங்கங்களை முறையாகப் பேணி வளர்ப்பதற்கென்று 1923-ல் ஒரு 'தேசியக் கொள்முதல் கூட்டுறவுக் கூட்டமைப்பும்' (National Purchase Co-operative Federation) 'மத்தியக் கூட்டுறவு வங்கி' (Central Co-operative Bank) ஒன்றும் தொடங்கப்பட்டன. விவசாயப் பொருள்களின் விலைகள் சரிந்த போதெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து உதவி வந்தன. அரசாங்கமும் கூட்டுறவுச் சங்கங்களின் வழியாக அவர்களுக்குக் கடன் கொடுத்து உதவியது.

இரண்டாம் உலகப் போரின் விளைவாக ஜப்பானிய விவசாயி களின் நிலை படுமோசமாயிற்று. அப்போதுதான் கூட்டுறவுச் சங்கங்களின் அவசியத்தை மக்கள் நன்குணர்ந்தனர். எனவே, கூட்டுறவு இயக்கம் நாடெங்குமட்டுமின்றி, எல்லாத் துறை களுக்கும் பரவியது. இவ்வாறாக ஜப்பானின் கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றை நாம் காணும்போது 'இடுக்கண் ஏற்படும்போது தோன்றும் ஒற்றுமைதான் கூட்டுறவு' என்ற உண்மை புலனாகிறது. இன்னல்கள் பெருகப் பெருகத்தான் ஒற்றுமையாய்ப் பாடுபட்டு கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கவும் அவற்றை வலிமைப் படுத்தவும் அவசியமாகப்படுகிறது.

தற்போதைய நிலை

தற்போது, பலவகையான கூட்டுறவுச் சங்கங்கள் ஜப்பானில் இயங்கி வருகின்றன. அவற்றுள் நன்றாக முதிர்ச்சியடைந்துள்ள சங்கங்கள் வருமாறு :

1. விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள்
2. கூட்டுறவு மீன்பிடிப்புச் சங்கங்கள்
3. வனக் கூட்டுறவுச் சங்கங்கள்
4. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்
5. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

இக் கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றிச் சுருக்கமாகவாவது காண்பது நன்று.

1. விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள்

ஜப்பான் நாட்டின் பொருளாதாரத்தில் ஏனைய தொழில் களைப்போல் விவசாயம் பெரும் பங்கு வகிப்பதில்லை. மொத்தத் தேசிய வருமானத்தில் 12 சதவீதம்தான் விவசாயத்திலிருந்தும் மீன்

பிடிக்கும் தொழிலிலிருந்தும் கிடைக்கிறது. இயற்கைவளம் கொழிக்கும் இந் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 80 சதவீதம் மலைகளும் ஆறுகளும்தான் காணப்படுகின்றன. 17 சதவீத நிலம் மட்டுமே சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு குடும்பத்திற்குச் சராசரி 2·5 ஏக்கர் நிலம்தான் உள்ளது. அப்படியிருந்தும், 33 சதவீத மக்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால் வேளாண்மையும் முக்கியத் தொழிலாகக் கருதப்படுகிறது. அதோடு, வீட்டுக்குத் தேவைப்படும் உணவுப் பொருள்களில் 80 சதவீதம் வரை ஜப்பானிலேயே விளைவிக்கப்படுகிறது.

ஜப்பான் நாட்டிலுள்ள விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களின் வழியாகத் தம் நாட்டு விவசாயத் தொழிலை முன்னேற்ற வெகு நாட்களாகப் பாடுபட்டு வந்தனர். இவ் விவசாயச் சங்கங்களில் பெரும்பாலானவை 'பல நோக்குச் சங்கங்கள்'தாம். 1968ஆம் ஆண்டில் ஒரு கிராமம்கூட விட்டுவிடாமல் மொத்தம் 6,470 பல நோக்குச் சங்கங்கள் இருந்தன. பொதுவாக, ஒவ்வொரு சங்கமும் அதனதன் கிராமத்திற்கே பணிசெய்து வருகிறது. இச் சங்கங்களில் 5·9 மில்லியன் பேர் நிரந்தர உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்கின்றனர். 1·1 மில்லியன் பேர் துணை உறுப்பினர்களாவர். கிராமப்புறங்களில் மொத்தம் 7 மில்லியன் குடும்பங்கள்தாம் இருக்கின்றன. எனவே, விவசாயிகள் அனைவருமே கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

'பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்' மட்டுமின்றி, 'ஒரு நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும்' இந் நாட்டில் உள்ளன. அவ்வாறு சிறப்பானதொரு நோக்கத்திற்கு மட்டும் அமைக்கப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை 1968ஆம் ஆண்டின் கணக்குப்படி பின்வருமாறு :

சங்கங்களின் வகை	எண்ணிக்கை
பட்டுப்பூச்சி வளர்ப்புச் சங்கங்கள்	3,685
கால்நடை வளர்ப்புச் சங்கங்கள்	1,800
நில அபிவிருத்திச் சங்கங்கள்	4,000
தோட்டப் பயிர்ச் சங்கங்கள்	553
கிராமத் தொழில் சங்கங்கள்	447
இதரச் சங்கங்கள்	2,100
மொத்தம்	12,585

இவ்வகைச் சங்கங்கள் ஒவ்வொன்றும் குறிப்பிட்டதொரு துறையில்தான் ஈடுபட்டுள்ளன; இவை உறுப்பினர்களுக்குக் கடன் கொடுப்பதில்லை. உறுப்பினர்களும் அதிகமாகக் கிடையாது. உதாரணமாகப் பட்டுப்பூச்சி வளர்க்கும் சங்கங்களில் சராசரி 30 உறுப்பினர்கள்தாம் இருக்கின்றனர். இச்சங்கம் ஒவ்வொன்றும் தத்தம் கிராமத்தில் மட்டுமே பணிபுரிகின்றது.

இவற்றிற்கு மாறாக, 'பல நோக்குச் சங்கங்கள்' பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளன. அதாவது, விவசாயிகளுக்குக் கடன் அளித்தல், அவர்களிடமிருந்து வைப்புத் தொகையைப் பெறுதல், விளைபொருள்களை விற்பனை செய்தல், பண்ணைகளுக்கும் குடும்பங்களுக்கும் தேவைப்படும் பொருள்களைக் கொள்முதல் செய்து விநியோகித்தல் போன்ற பல பணிகளைச் செய்து வருகின்றன. இப் பணிகளைச் செய்யும் முறையைப்பற்றிக் கீழே காண்போம் :

(அ) கடன் அளித்தல்: பல நோக்குச் சங்கங்களின் முக்கியப் பணிகளில் ஒன்று விவசாயிகளுக்குத் தேவையான கடன் உதவி செய்வதாகும். இச்சங்கங்கள் தம் சிறந்த கடன்தரும் விதிமுறைகளைக்கொண்டு விவசாயிகளின் பொருளாதார நிலையை மட்டுமின்றி விவசாய விளைச்சலையும் உயர்த்தியுள்ளன. இச் சங்கங்களுக்கு வேண்டிய நிதி வசதிகளைப் பெரும்பாலும் விவசாயிகளே தம் சேமிப்பின்மூலம் கொடுக்கின்றனர். ஆனால், அச் சேமிப்பு நிதி போதுமானதாக இல்லை. புதிதாக நிலங்களை வாங்குவதற்கும் சாகுபடி வேலைக்கும் இன்னும் நிறையக் கடன் தேவைப்படுகிறது. 1968ஆம் ஆண்டின் கணக்குப்படி ஜப்பான் விவசாயிகள் 453 பில்லியன் 'யென்' (ரூ. 900 கோடி) அளவுக்குக் கடன் பெற்றிருந்தனர். இதில் 51 சதவீதம் கூட்டுறவுச் சங்கங்களாலும், 33·4 சதவீதம் தனி நபர்களாலும், 5 சதவீதம் அரசாங்கத்தாலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து விவசாயிகள் பெரும்பாலும் கூட்டுறவுச் சங்கங்களின் வழியாகத்தான் அதிகக் கடனைப் பெறுகின்றனர் என்பது தெளிவாகிறது.

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கென்று ஜப்பானிய விவசாயிகள் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுள்ளனர். இதனால் கடந்த பத்தாண்டுகளாக இக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியுள்ள கடன் தொகையும் அதிகரித்துள்ளது. 1950ஆம் ஆண்டு வழங்கிய கடன் தொகை 31 பில்லியன் யென்கள்தாம்; இது 1967-ல் 1,120 பில்லியன் யென்களாக (ஏறக்குறைய 2,240 கோடி ரூபாய்) உயர்ந்துள்ளது. இதில் 67 சதவீதம் குறுகிய காலக் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்க உறுப்பினர்

எவரும் குறிப்பிட்ட அளவுக்குமேல் கடன் வாங்க முடியாதபடி வரையறுக்கப்பட்டுள்ளது. உறுப்பினரின் தகுதிக்கும் நாணயத் திற்குமேற்பக் கடன்தொகை நிர்ணயிக்கப்படுகிறது. உறுப் பினரின் 'நாணயத் தகுதி'யை (Credit Worthiness) எவ்வாறு தீர்மானிப்பது என்பதை 'தேசிய விவசாயச் சங்கங்களின் யூனியன்' (National Union of Agricultural Co-operatives) தயாரித்து வெளியிட்டிருக்கும் அட்டவணையிலிருந்து எளிதாக அறிந்து கொள்ளலாம் :

	உறுப்பினர்பற்றிய விவரங்கள் (முழு மதிப்பெண் 100%)		உறுப்பினரின் சொத்து பற்றிய விவரங்கள் (முழு மதிப்பெண் 100%)	
1.	உள்ளம் சார்ந்த பழக்கங்கள் (Mental Habits)	20%	சொத்து (Property)	20%
2.	ஊக்கம் (Diligence)	20%	நிகரச் சொத்து (Net Property)	20%
3.	திறமை (Skill)	20%	வருமானம்	20%
4.	சிக்கனம் (Thrift)	20%	வீடு	20%
5.	குடும்ப இசைவும் உடல் நலமும் (Family Accord and Health)	20%	கூட்டுறவுச் சங்கங்களில் கொண்டுள்ள பங்குகள்	20%

ஜப்பானிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கூறிய விவரங்களை யெல்லாம் நன்கு ஆராய்ந்த பின்னர்தான் உறுப்பினர்களுக்குக் கடன் கொடுக்கின்றன. உறுப்பினர்கள் அதிகப் பட்சம் எவ்வளவு கடன்பெறத் தகுதியோ அவ்வளவுதான் கொடுக்கிறது. அதுகூட உற்பத்திப் பணிகளுக்கென்றே பெரும்பாலும் கொடுக்கப்படுகிறது. கூடுமானவரை கடனைப் பணமாகத் தராமல் பொருள்களாகவே தருகின்றன. வீட்டுச் செலவிற்கென்று கொடுக்கப்படும் கடன் மிகக் குறைவு.

நீண்ட காலக் கடன் 1 ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் வரை (பொதுவாக 5 ஆண்டுகளுக்கு) கொடுக்கப்படுகிறது. பெரும் பாலும் இக் கடன் 'ஈடுடைக் கடனாகத்'தான் (Secured Loan)

அளிக்கப்படுகிறது. இக்கடன்கள் பெரும்பாலும் நில அபிவிருத்தித் திட்டம், நீர்ப்பாசன வசதி, விலையுயர்ந்த விவசாயக் கருவிகளை வாங்கல், செலுத்தாத கடனைச் செலுத்தல் போன்ற காரியங்களுக்குத்தாம் கொடுக்கப்படுகின்றன. நம் நாட்டிலுள்ளதைப்போல் 'நிலவள வங்கிகள்' (Land Mortgage Banks) ஜப்பானில் கிடையாது. எனவே, இவ் வங்கிகளின் பணிகளையும் அங்குள்ள கூட்டுறவுச் சங்கங்களே செய்து வருகின்றன. நீண்ட காலக் கடன்களுக்கு 10 முதல் 11 சதவீதம் வரை வட்டி வசூலிக்கப்படுகிறது.

(ஆ) **வைப்புத் தொகை:** ஜப்பானிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குத் தேவைப்படும் 'நடைமுறை மூலதனத்தை' (Working Capital) உறுப்பினர்களின் சேமிப்பை வைப்புத் தொகையாகப் பெற்றுத் தம் நிர்வாகத்தை நடத்துகின்றன. இது ஜப்பானின் கூட்டுறவுச் சங்கத்தின் தனிச் சிறப்பாகும். கடந்த சில ஆண்டுகளில் இச் சங்கங்கள் பெற்றுள்ள வைப்புத் தொகையின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு	மொத்த வைப்புத் தொகை	
1949	96	பில்லியன் யென்
1950	114	,,
1952	170	,,
1957	413	,,
1960	668	,,
1963	1,210	,,
1966	2,333	,,
1968	4,315	,,
1971	6,187	,,

இப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமின்றி கூட்டுறவுக் கடன் கூட்டமைப்புகள் 1,500 பில்லியன் யென்களையும் மத்தியக் கூட்டுறவு வங்கி 1,200 பில்லியன் யென்களையும் வைப்புத் தொகையாகப் பெற்றிருக்கின்றன.

ஜப்பானிய விவசாயிகள் பல்வேறு நிறுவனங்களில் தம் சேமிப்பை வைப்புத் தொகையாக வைத்திருந்த போதிலும், மொத்த வைப்புத் தொகையில் 70 சதவீதத்தைக் கூட்டுறவுச் சங்கங்களில்தாம் வைத்துள்ளனர். இதிலிருந்து ஜப்பானிய

நாம் உணரமுடிகிறது. ஜப்பான் நாட்டில் நெல்தான் முக்கியப் பயிராகச் சாகுபடி செய்யப்படுகிறது. மொத்த விவசாயப் பொருள்களில் 70 சதவீதம் நெல்தான். அரசாங்கத்தின் ஆணைப்படி விவசாயிகள் அனைவரும் அறுவடைக்குப் பின்னர்த் தங்களிடம் உபரியாக உள்ள தானியத்தையெல்லாம் அரசாங்கத்திற்கே விற்க வேண்டும். எனவே, உபரியாக உள்ள தானியங்களைக் கொள்முதல் செய்யும் பணியையும் அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களிடமே ஒப்படைத்துள்ளது விவசாயிகள் தங்களிடமுள்ள உபரி நெல்லைத் தத்தம் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைத்தவுடன் அது எவ்வளவு விலையோ அத்தொகையை அவரவர்களின் வைப்புக் கணக்கில் வரவு வைக்கின்றன அச்சங்கங்கள். இக்கணக்கிலிருந்து தமக்குத் தேவையான பணத்தை விவசாயிகள் பெற்றுக்கொள்வதற்கும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக, விவசாயிகள் தங்கள் வைப்புத் தொகையிலிருந்து கணிசமான தொகையை எடுத்துக்கொண்ட பின்னரும் கூட, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய அளவு பணம் நிரந்தரமான வைப்பாக இருந்து வருகிறது. ஜப்பானில் இந்த முறை கடைப் பிடிக்கப்படுவதால் அங்குள்ள விவசாயிகள்கூட வங்கித் துறையில் அனுபவம் பெறுகின்றனர். மேலும், இப்பழக்கத்தினால் மக்களிடையே சேமிக்கும் மனப்பான்மை மட்டுமின்றி, சிக்கன மனப்பான்மையும் வளர்ந்து வருகிறது. இம்முறை இல்லாதிருந்தால் ஒரு வேளை விவசாயிகள் தம் வருமானத்தையெல்லாம் செலவிட்டிருக்கலாம்.

இதர நிதி வசதிகள்: விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்கு மூலதனம் தான் முக்கியமான நிதியாகத் திகழ்கிறது. ஒவ்வோர் உறுப்பினரும் சராசரி 4,300 யென்களைப் பங்கு மூலதனமாகச் செலுத்துகின்றனர். இவ்வாறு செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 1966-ல் 102 பில்லியன் யென்களாகும் இக்கூட்டுறவுச் சங்கங்கள் தாம் பெறும் இலாபத்திலிருந்து காப்பு நிதியையும் வேறு பல நிதிகளையும் உருவாக்கியுள்ளன. இவ்வாறாக, ஜப்பானிலுள்ள எல்லாச் சங்கங்களுக்குமே உபரி நிதி உள்ளது. இருந்த போதிலும் சில இடங்களிலுள்ள ஒரு சில சங்கங்களுக்குப் போதுமான நிதி கிடையாது; எனவே இவை கடன் வாங்க வேண்டியுள்ளது. பெரும்பாலும் நிதி பற்றாத நிலையிலுள்ள சங்கங்கள் மத்தியக் கூட்டுறவு வங்கியிடமே கடன் பெறுகின்றன. இவ்வாறு கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கிய மொத்தக் கடன் 1959-ல் 131 பில்லியன் யென்களெனத் தெரிய வருகிறது. இக்கடன் 1966-ல் 325 பில்லியன் யென்களாக அதிகரித்துள்ளது.

(இ) விற்பனைப் பணி : விவசாயச் சங்கங்களின் மற்றொரு பணி, விவசாயிகளின் விளைபொருள்களை விற்றுத் தருவதாகும்.

இக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் நெல், பார்லி, இதரத் தானியங்கள், உருளைக் கிழங்கு, பால், பழ வகைகள், காய் கறிகள், விதைகள், புழுக்கூடுகள் (Cocoon) ஆகிய விவசாயப் பொருள்களை விற்பனை செய்து அவர்களுக்கு உதவி வருகின்றன. 1958ஆம் ஆண்டில் மொத்த விவசாய விளை பொருள் களில் 49 சதவீதம் இக்கூட்டுறவுச் சங்கங்களால் விற்பனை செய்யப் பட்டன. அவ்வாறு விற்பனை செய்யப்பட்ட பொருள்களின் மதிப்புச் சுமார் 494 பில்லியன் யென்களாகும். இது 1962-ல் 716 பில்லியன் யென்களாகவும், 1968-ல் 1850 பில்லியன் யென் களாகவும் அதிகரித்துள்ளது. அதாவது, மொத்த விளைச்சலில் 50 சதவீதம் இக் கூட்டுறவுச் சங்கங்களால் விற்பனை செய்யப்பட் டிருக்கின்றன. இந்த விற்பனை பொருள்களையெல்லாம் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களே பெற்று, அவற்றைப் பிராந்திய விற்பனைச் சங்கம் அல்லது தேசிய விற்பனைச் சங்கத்தின் வழியாக விற்பனை செய்கின்றன.

இச்சங்கங்கள் விற்பனை செய்யும் பொருள்களில் நெல்தான் மிக முக்கியம். இந்த விற்பனைக்குரிய நெல்லையெல்லாம் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக அரசாங்கம்தான் கொள்முதல் செய்கிறது என்பதை முன்னரே கண்டோம். இச்சங்கள் செய்யும் விற்பனையில் 58 சதவீதம் நெல்தான். அடுத்து, தித்திப்பான உருளைக்கிழங்கையும் இவை விற்பனை செய்கின்றன. இக்கிழங்குகள் பொதுவாக உருளைக்கிழங்கு மாவு தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு விற்கப் படுகின்றன. ஒரு சில சங்கங்கள் இவ்வகைத் தொழிற்சாலைகளைத் தாமே வைத்தும் நடத்துகின்றன. பழங்கள், காய்கறிகள் ஆகிய வற்றை இக்கூட்டுறவுச் சங்கங்கள் 'ஏலம்' (Auction) விட்டு விற்பனை செய்கின்றன.

சில கூட்டுறவுச் சங்கங்கள் சொந்தமாகவே பண்டகசாலைகளை வைத்துள்ளன. 1962-ல் மொத்தம் 30,700 பண்டகசாலைகள் இக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமாயிருந்தன. இப்பண்டக சாலைகளின் மொத்தப் பரப்பளவு சுமார் 50 மில்லியன் சதுர அடிகளாகும். இப்பண்டக சாலைகள் ஆண்டொன்றுக்கு சுமார் 7·7 பில்லியன் யென்கள் வருமானமாகப் பெறுகின்றன. அரசாங்கம் கொள்முதல் செய்கின்ற நெல், பார்லி ஆகியவை இப்பண்டக சாலை களில்தான் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன.

(ஈ) **கொள்முதல் பணி:** விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டிய பண்ணைப் பொருள்களைக் கொள் முதல் செய்து அவற்றை விநியோகித்தும் வருகின்றன. அவ்வாறு

விநியோகிக்கப்படும் பொருள்களில் உரம்தான் மிக முக்கியமானது. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் உறுப்பினர்களுக்குத் தேவையான உரத்தை 'தேசியக் கொள்முதல் கூட்டமைப்பிடமிருந்து' (National Purchase Federation'), பெறுகின்றன. இக்கூட்டமைப்புச் சங்கங்களுக்குத் தேவையான உரத்தை உரத்தொழிற்சாலைகளிடமிருந்து மொத்தமாகக் கொள்முதல் செய்கின்றன; உரத்தொழிற்சாலைகள் ரொக்கத்திற்கு மட்டுமின்றி, பற்று வழியிலும் விற்பனை செய்கின்றன. ஆனால் இப்பற்று வழி விற்பனைக்கு மத்தியக் கூட்டுறவு வங்கி உத்தர வாதம் அளிக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களும் உறுப்பினர்களுக்கு வேண்டிய உரத்தைப் பற்று வழிக் கணக்கில் விற்பனை செய்து, அறுவடைக் காலத்தில் அவர்களிடமிருந்து நெல் கொள்முதல் செய்யும்போது அதைச் சரிக்கட்டுகின்றன. இவ்வாறு உறுப்பினர்களுக்குக் கடனாக உரத்தை விற்கும்போது அவர்களின் நாணயத் தகுதி நன்கு பரிசீலிக்கப்படுகிறது. அதுபோல் உரத்தொழிற்சாலைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்யும் போதும் அவற்றின் நிதி நிலையும் நிர்வாகத்திறனும் நன்றாகப் பரிசீலிக்கப்படுகின்றன. விவசாயிகளுக்கு வேண்டிய உரங்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமின்றி, தனி வியாபாரிகளும் விற்பனை செய்கின்றனர். எனினும், இந்நாட்டு விவசாயிகள் தங்கள் பண்ணைகளுக்குத் தேவைப்படும் உரத்தில் 70 சதவீதத்தைக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்துதான் பெறுகின்றன. 1966ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் 98 பில்லியன் மதிப்புள்ள உரத்தை விவசாயிகளுக்கு விற்பனை செய்திருக்கின்றன. ஆனால், தற்போது ஜப்பானிய விவசாயிகள் உரத்திற்கென்று அதிகமாகச் செலவிடுவது கிடையாது. பண்ணைச் செலவில் 19 சதவீதம்தான் உரத்திற்காகச் செலவிடப்படுகிறது.

இக்கூட்டுறவுச் சங்கங்கள் உரத்தை மட்டுமின்றி, பூச்சி மருந்துகள், கால்நடைத் தீவினம் ஆகியவற்றையும் உறுப்பினர்களுக்கு விற்பனை செய்கின்றன. 1966-ல் 165 பில்லியன் யென் மதிப்புள்ள கால் நடைத் தீவனத்தையும், 25 பில்லியன் யென் மதிப்புள்ள பூச்சி மருந்துகளையும் இச்சங்கங்கள் விற்பனை செய்திருப்பதாகத் தெரிகிறது. இதைத் தவிர 33 பில்லியன் யென் மதிப்பிற்கு விவசாயக் கருவிகளையும் விற்பனை செய்திருக்கின்றன. சில கூட்டுறவுச் சங்கங்கள் குடும்பத்திற்குத் தேவையான நுகர்வுப் பொருள்களையும் விற்பனை செய்து வருகின்றன. அவ்வாறு விற்பனைப் செய்யப்பட்ட நுகர்வுப் பொருள்களின் மதிப்பு 1970-ல் 650 கோடி ரூபாயாகும். இந்நாட்டு விவசாயிகள் சாகுபடிக்குத் தேவையான இயந்திரங்களையும் கருவிகளையும் அதிக அளவில் வாங்கி வருகின்றனர். 1955-ல் மட்டும்

சுமார் 59 பில்லியன் மதிப்புள்ள இயந்திரங்களையும் கருவிகளையும் வாங்கியிருக்கின்றனர். 1966-ல் 200 பில்லியன் மதிப்புள்ள இயந்திரங்களையும் கருவிகளையும் வாங்கியிருப்பதாக அறிய வருகிறோம். எனவே, ஜப்பானிய விவசாயிகள் உரம் வாங்குவதைக் குறைத்துக் கொண்டு, விவசாயத்திற்குத் தேவையான இயந்திரங்களையும் கருவிகளையும் வாங்குவதில்தான் அதிகச் செலவு செய்வதாகத் தெரிகிறது.

இக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டிய மருத்துவ உதவியையும் செய்கின்றன. இதற்கென்று 18,000 படுக்கை வசதிகள்கொண்ட 173 மருத்துவ மனைகள் கட்டப்பட்டுள்ளன. சாகுபடி செய்யும் முறையைப்பற்றிய ஆலோசனைகளையும் இச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வழங்குகின்றன. எந்தெந்தப் பகுதியில் என்னென்ன பயிர்கள் சாகுபடிச் செய்யலாம் என்பதைப் பரிசோதனைகள் மூலம், உறுப்பினர்களுக்கு அறிவிக்கின்றனர். மண்களைப் பரிசோதித்து, அவற்றிற்கேற்பத் திட்டமிட்டுச் சாகுபடி செய்யும் முறையை உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொடுக்கின்றன.

உரங்களைப் பயன்படுத்துவது எப்படி, விவசாயக் கருவிகளை எவ்வாறு இயக்குவது, பூச்சி மருந்துகளை எப்போது, எப்படிப் பயன்படுத்துவது என்றும் விவசாயிகளுக்குக் கற்றுக் கொடுக்கின்றன. புது ரக விதைகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றைப் பற்றியும் உறுப்பினர்களுக்கு அறிவிக்கின்றன.

இவ்வாருக, ஜப்பானிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்குக் கடன் அளிப்பதோடு, அவர்களின் சேமிப்புத் தொகையையும் வைப்புகளாகப் பெற்று, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விற்பனை ஏற்பாடும் செய்து, அவர்களுக்குத் தேவையான விவசாயப் பொருள்களையும், இன்னும் இதர நுகர்வுப் பொருள்களையும், கொள்முதல் செய்து விநியோகித்து அவர்களுக்குச் சீரிய முறையில் பணிசெய்து வருகின்றன.

2. மீன் பிடிப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்:

ஜப்பான் நாட்டின் கடற்கரையோரப் பகுதிகளில் சுமார் 8 இலட்சம் மக்கள் மீன் பிடிக்கும் தொழிலை நம்பியே வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்களும் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துள்ளனர். ஆனல், மீன் பிடிப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களைப்போல் நல்ல முறையில் முதிர்ச்சியடையவில்லை; எனினும் ஜப்பானியப் பொருளாதாரத்தில் இவையும்

முக்கியப் பங்கு வகிக்கின்றன. 1966-ல் சுமார் 4009 மீன்பிடிப்புச் சங்கங்கள் இருந்ததாகவும், அவற்றில் 12 இலட்சம் பேர் உறுப்பினர்களாக இருந்ததாகவும் அறிய வருகிறோம். இவைமட்டுமின்றி 832 மீன் உற்பத்திச் சங்கங்களும் 236 மீன் பதப்படுத்தும் சங்கங்களும் இயங்கி வந்திருக்கின்றன. இச்சங்கங்களின் எண்ணிக்கை மட்டுமின்றி, உறுப்பினர்களும் குறைவு தாம். இச் சங்கங்களின் பணிகள் வருமாறு:

ஜப்பானிய அரசாங்கம் இக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மீன் பிடிக்கும் உரிமை அனைத்தும் சட்டப் பூர்வமாக அளித்துள்ளது. இவ்வுரிமையை இச் சங்கங்களின் உறுப்பினர்கள் தங்குதடையின்றிப் பயன்படுத்தி வருகின்றனர். சில கூட்டுறவுச் சங்கங்கள் மீன்பிடிக்கத் தேவையான வலைகளை உறுப்பினர்களுக்குக் கொடுத்து உதவுகின்றன. ஒரு சில சங்கங்களுக்கு விசைப் படகுகள்கூடச் சொந்தமாயிருக்கின்றன. இப் படகுகளை உறுப்பினர்கள் வாடகைக்கு எடுத்துப் பயன்படுத்துகின்றனர். இச் சங்கங்கள் ஒவ்வொன்றிலும் சராசரி 25 உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

அடுத்து, எந்தெந்தச் சந்தையில் என்னென்ன விலை நிலவுகிறது என்ற விவரங்களையும் இச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு அறிவிக்கின்றன. மேலும், நவீன முறையில் மீன் பிடிப்பதெப்படி என்பதையும், விசைப்படகுகளை எவ்வாறு இயக்குவது என்பதையும் உறுப்பினர்களுக்குப் போதிக்கின்றன. இச் சங்கங்கள் சிலவற்றிற்குப் பரிசோதனைச் சாலைகள் உள்ளன; எனவே, ஆராய்ச்சியின் முடிவுகளையும் பலன்களையும் உறுப்பினர்கள் அறிந்துகொள்ள முடிகிறது.

இச் சங்கங்கள் செய்துவரும் பணிகளிளெல்லாம் மிக முக்கியமானது யாதெனில், உறுப்பினர்கள் பிடித்துவரும் மீன்களுக்குச் சிறந்த முறையில் விற்பனை ஏற்பாட்டைச் செய்வதுதான். எங்கு மீன்களுக்கு அதிகக் கிராக்கி இருக்கின்றதோ அங்கு விற்பனைசெய்து உறுப்பினர்களின் பொருளாதார நிலையை உயர்த்த அரும் பாடுபடுகின்றன. மீன்களைப் பக்குவப்படுத்தி, தகர டப்பாக்களில் அடைத்து விற்பனை செய்கின்றன. மீன்களுக்கு கிராக்கியே இல்லாத சமயங்களில் அவற்றைக் குளிர்சாதன வசதியுள்ள அறைகளில் பத்திரப்படுத்தி வைக்கின்றன. 1951-ல் இச் சங்கங்கள் 47 பில்லியன் 'யென்' மதிப்புள்ள மீன்களை விற்பனை செய்தன. 1966ஆம் ஆண்டில் இவற்றின் விற்பனை 300 பில்லியன் யென்களாக உயர்ந்துள்ளது. எனவே இக்கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றும் ஆண்டொன்றுக்குச் சராசரி 77 பில்லியன் யென் மதிப்புள்ள மீன்

களை விற்பனை செய்கின்றன. மீன்களின் பெரும்பகுதி கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் அங்காடிகளில் உடனடியாக விற்கப்பட்டு விடுகின்றன. தனியார் துறையிலுள்ள மொத்த வியாபாரிகளுக்கு ஏலம் விட்டும் விற்கப்படுகின்றன. பெரும்பாலும் இக் கூட்டுறவுச் சங்கங்கள் கமிஷன் ஏஜண்டுகள்போலவே பணிசெய்கின்றன. அவ்வாறு பணிசெய்யும் சங்கங்கள் 3 முதல் 6 சதவீதம் வரைதான் கமிஷன் தொகையைப் பெறுகின்றன. சாதாரண அங்காடியில் கமிஷன் தொகை 7 முதல் 10 சதவீதம் வரை உள்ளது. சில சங்கங்கள் குளிர்சாதன வசதியுள்ள பண்டகங்கள் கட்டியுள்ளன; எனவே, உடனடியாக விற்பனைசெய்ய முடியாத மீன்களை இங்குப் பத்திரப்படுத்தி வைக்கின்றன.

இக் கூட்டுறவுச் சங்கங்களில் 6 சதவீதச் சங்கங்கள் மீன்பிடிக்கத் தேவைப்படும் சாதனங்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்கின்றன. அவ்வாறு விநியோகம் செய்யப்பட்ட சாதனங்களின் மதிப்பு 1951-ல் 2 பில்லியன் யென்களாகும். 1966-ல் அவற்றின் மதிப்பு 40 பில்லியன் யென்களாக உயர்ந்துள்ளது. பெரும்பாலும் மீன்பிடிக்கும் வலைகள், படகுகளை இயக்கத் தேவையான எரிபொருள் போன்றவற்றைத் தாம் இச்சங்கங்கள் விற்பனை செய்கின்றன.

இச் சங்கங்களில் 50 சதவீதம் உறுப்பினர்களுக்குக் கடனும் கொடுத்து வருகின்றன. உறுப்பினர்கள் இச் சங்கங்களில் வைத்திருக்கும் வைப்புத் தொகைதான் இவற்றின் நிதியாகும். உறுப்பினர்கள் இச் சங்கங்களிடம் விற்கும் மீன்களின் மதிப்பைக் கொண்டு இவ் வைப்புத்தொகை அவர்கள் கணக்கில் சேர்க்கப்படுகிறது. இவ் வைப்புத் தொகைகளுக்கு இச் சங்கங்கள் கொடுக்கும் வட்டி விவசாயச் சங்கங்களின் வட்டியைக் காட்டிலும் குறைவு தான். மேலும், உறுப்பினர்கள் வைத்திருக்கும் வைப்புத் தொகையைவிட அவர்கள் பெறும் கடன்தான் அதிகரித்து வருகிறது. சான்றாக, 1966-ல் இச் சங்கங்கள் பெற்ற வைப்புத்தொகை 86 பில்லியன் யென்களே; ஆனால் இவை கொடுத்த கடனோ 92 பில்லியன் யென்களாகும். இதனால் ஏற்படும் பற்றாக்குறை நிதியைச் சரிக்கட்டுவதற்கென்று இச் சங்கங்கள் கடன் வாங்க வேண்டியுள்ளது. பெரும்பாலும் இக் கடனை 'கூட்டுறவுக் கடன் கூட்டிணைப்புச் சங்கத்திட'மிருந்தே பெறுகின்றன. சில சமயங்களில் அரசாங்கத்தின் உத்தரவாதத்தின்பேரில் தனிப்பட்ட நிறுவனங்களிடமிருந்தும் கடனைப் பெறுகின்றன. இச் சங்கங்கள் உறுப்பினர்களுக்குக் கடன் அளிக்கும்போது அவர்கள் விசைப் படகுகள், வலைகள், மீன்பிடிக்கும் நவீனத் தூண்டில்கள் போன்ற

வற்றை வாங்குவதற்கே அளிக்கப்படுகின்றன. உறுப்பினர்கள் இச் சங்கங்களிடம் வைத்திருக்கும் வைப்புத் தொகைக்கு 3 முதல் 5 சத வீதம் வரை வட்டி வழங்கப்படுகிறது. அவர்கள் கடன் வாங்கும் போது, குறுகிய காலக் கடனுக 9 அல்லது 10 சதவீத வட்டி வசூலிக்கப்படுகிறது; நீண்ட காலக் கடனுக்கு 11 சதவீத வட்டி வசூலிக்கப்படுகிறது.

௫. வனக் கூட்டுறவுச் சங்கங்கள்

ஜப்பானில் அடர்ந்த காடுகள் அதிகமுள்ளதால் வனக் கூட்டுறவுச் சங்கங்களும் அங்குத் தோன்றியுள்ளன. இவை வனக் கூட்டு வசதிச் சங்கங்கள் (Farestry Joint Facility Associations) என்றும், வன உற்பத்திச் சங்கங்கள் (Forestry Production Associations) என்றும் இரு வகைப்படும். 1966-ல் 3158 வனக் கூட்டு வசதிச் சங்கங்கள் இருந்தன. ஒவ்வொரு சங்கத்திலும் சராசரி 434 பேராக, மொத்தம் 1·7 மில்லியன் உறுப்பினர்கள் இருந்தனர். இச் சங்கங்கள் உற்பத்தி, கொள்முதல் செய் தல், விற்பனை செய்தல் ஆகிய மூன்று முக்கியப் பணிகளை மேற்கொண்டுள்ளன. இச் சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து வைப்புத் தொகை பெறுவதில்லை; எனினும், அவர்களுக்குத் தேவைப்படும் கடன் வசதியைச் செய்து தருகின்றன. 1966-ல் 28 பில்லியன் யென் தொகையை இவை கடனுக வழங்கியிருக்கின்றன. இச் சங்கங்கள் மரக்கரி, விறகுக்கட்டை போன்ற பொருள்களை விற்பனைசெய்துவருகின்றன. 1962-ல் மட்டும் சுமார் 739 யென்களுக்கு இப் பொருள்களை விற்பனை செய்திருக்கின்றன. உறுப்பினர்களுக்குத் தேவையான நாற்று வகைகளையும் ஒருசில சங்கங்கள் அளித்து வருகின்றன; ஆனுல், இப் பணி அவ்வளவு அதிகமாக மேற்கொள்ளப்படுவதில்லை.

வன உற்பத்திச் சங்கங்கள் மேற்கொள்ளும் பணிகள் காடுகளின் கூட்டு நிர்வாகத்தின் அடிப்படையில் வரையறுக்கப்படுகின்றன. இச் சங்கங்கள் மரக்கரி, விறகு, சாமான்கள் செய்யப் பயன்படுத்தப்படும் கட்டைகள் ஆகியவற்றைத் தயாரித்து விற்பனை செய்கின்றன. 1962-ல் இவற்றின் விற்பனை 5·5 பில்லியன் யென்களாகும். கருங்காடுகளை இவை பக்குவப்படுத்தி வனங்களாக மாற்றி வருகின்றன. இதற்கென்று ஜப்பானிய அரசாங்கம் பண உதவி அளிக்கிறது.

கூட்டிணைப்புகள்

ஜப்பானிய விவசாயத் துறையில் ‘பல நோக்குச் சங்கங்களும்’ ‘தனி நோக்குச் சங்கங்களும்’ இயங்கி வருவதாகக் கண்டோம். இவ்விரு வகைச் சங்கங்களுமே தமக்கென்று கூட்டிணைப்புகளை

உருவாக்கியுள்ளன. கடன் கொடுப்பதற்கென்று 46 பிராந்தியக் கூட்டிணைப்புகளை அமைத்துள்ளன. தங்களுக்குவேண்டிய பொருள்களைக் கொள்முதல் செய்வதற்கென்றும், தம் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கென்றும் பிராந்திய மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் கூட்டிணைப்புகளை ஏற்படுத்தியுள்ளன. இக் கூட்டிணைப்புச் சங்கங்களும், கடன் கூட்டிணைப்புச் சங்கங்களும் மத்தியக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன.

ஜப்பானியக் கூட்டுறவு இயக்கத்தின் அமைப்பிற்கும் வளர்ச்சிக்கும் இக் கூட்டிணைப்புகள் மகத்தான முறையில் சேவைபுரிந்து வருகின்றன. கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்யும் பொருள்களில் 13 சதவீதம் இக் கூட்டிணைப்புகளின் வழியாக விற்கப்படுகின்றன நெல் விற்பனையில் 10 சதவீதம்தான் உள்ளூர்ச் சங்கங்களால் நேரடியாக விற்கப்படுகின்றன; எஞ்சிய தனைத்தும் இக்கூட்டிணைப்புகளின் வழியாகவே விற்பனை செய்யப் படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் பொருள்களைக் கணக்கிட்டு, அவற்றைத் தொழிற்சாலைகளிலிருந்து மொத்தமாகக் கொள்முதல் செய்து விநியோகம் செய்வதும் இக்கூட்டிணைப்புகள்தாம். கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்த பொருள்களில் 65 சதவீதம் இக் கூட்டிணைப்புகளிடமிருந்து வாங்கியவையாகும்.

மீன் பிடிப்புச் சங்கங்களும்கூடப் பிராந்திய மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் கூட்டிணைப்புகளை உருவாக்கியுள்ளன. இக்கூட்டிணைப்புகள் சுமார் 55 சதவீத மீன் வகைகளையும், 28 சதவீத கடல்பாசி, கடல்பூண்டு போன்ற தாவர வகைகளையும், 17 சதவீதம் ஏனையக் கடற்பொருள்களையும் கையாளுகின்றன. 1966 ஆம் ஆண்டில் 12 பில்லியன் யென் மதிப்புள்ள பொருள்களை உறுப்பினர் சங்கங்களுக்கு விற்பனை செய்திருக்கின்றன. மேலும், மீன் பிடிப்புச் சங்கங்களுக்கு அவ்வப்போது அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றன. மேலும், நிர்வாகத் துறையிலும், திட்டங்கள் வகுப்பதிலும் சங்கங்களுக்கு உதவி செய்கின்றன.

வனக் கூட்டுறவுச் சங்கங்கள் 46 மாவட்டக் கூட்டிணைப்புகளையும் ஒரு தேசியக் கூட்டிணைப்பையும் அமைத்திருக்கின்றன. 1962-ல் இக் கூட்டிணைப்புகள் 10 பில்லியன் யென் மதிப்புள்ள பொருள்களை விற்பனை செய்தன. வனஞ்சம்பந்தப்பட்ட கல்வியைப் பரப்புவதற்கென்றும், விளம்பரம் செய்வதற்கென்றும் இச்சங்கங்கள் ‘தேசிய விவசாயக் கூட்டுறவு யூனியன்’ (National

union of Agricultural co-operatives) என்ற அமைப்பையும் தோற்றுவித்துள்ளன.

வன, விவசாய மத்தியக் கூட்டுறவு வங்கி
(Central Co operative Bank of Agriculture and Forestry)

விவசாயம், வனவளர்ச்சி, மீன்பிடிப்பு ஆகிய துறைகளில் இயங்கிவரும் கூட்டுறவுச் சங்கங்கள் சேர்ந்து அமைத்துள்ளதுதான் இம் மத்தியக் கூட்டுறவு வங்கி. 1971ஆம் ஆண்டின் கணக்குப்படி 14,064 கூட்டுறவுச் சங்கங்களும், அவற்றால் அமைக்கப்பட்ட கூட்டிணைப்புகளும் இவ்வங்கியின் உறுப்புகளாக இருந்தன. இம் மத்தியக் கூட்டுறவு வங்கியின் பங்கு மூலதனத்தில் ஒரு பகுதியை ஜப்பானிய அரசாங்கம் வாங்கியுள்ளது. எனினும், அரசாங் கத்தின் பங்கு மூலதனம் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பித் தரப்பட்டு வருகிறது. இவ்வங்கி நாடெங்கிலும் பணியாற்றுவதற் சென்று 40 கிளை அலுவலகங்களை அமைத்துள்ளது.

இவ்வங்கியின் முக்கியமான பணி இதனுடன் இணைக்கப் பட்டுள்ள சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதுதான். விவசாயச் சங்கங்கள் அனைத்திற்கும் போதுமான நிதி உள்ளது; எனினும், ஜப்பானின் வட பகுதியிலுள்ள சங்கங்களுக்குப் போதுமான நிதி கிடையாது. அதனோடு, வனக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மீன் பிடிப்புச் சங்கங்களுக்கும் கடன் தேவைப்படுகிறது. எனவே, இச் சங்கங்களெல்லாம் தமக்குத் தேவையான நிதியை இம் மத்திய வங்கியிடமிருந்துதான் கடனாகப் பெறுகின்றன. விவசாய நிதிக் கார்ப்பரேஷன் அளிக்கும் கடன்களும் இம் மத்திய வங்கியின் வழியாகவே அளிக்கப்படுகின்றன. அரசாங்கம் கொள்முதல் செய்யும் நெல்லிற்கும் இவ்வங்கிதான் பணம் கொடுக்கிறது.

இம் மத்திய வங்கியின் நிதி, வைப்புத் தொகையின் மூலமாக உருவாகிறது. இவ்வைப்புத் தொகையில் •80 முதல் 90 சதவீதம் வரை இவ்வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களிட மிருந்து பெறப்படுகிறது. இவ்வைப்புத் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்வது குறிப்பிடத்தக்கது. 1952-ல் 75 கோடி ரூபாயிலிருந்து 1971-ல் 3,400 பில்லியன் யென்னாக அதிகரித்திருக்கிறது.

இக் கூட்டுறவு மத்திய வங்கி ஜப்பானின் தலைமை வங்கியிட மிருந்தும் (Bank of Japan) கடன் வாங்குகிறது. என்றாலும், தற்போது ஜப்பானின் தலைமை வங்கியிடமிருந்து வாங்கும் கடனைக் குறைத்து, உறுப்பினர் சங்கங்களிடமிருந்து பெறும்

வைப்புத் தொகையை அதிகரிக்க முயற்சி செய்து வருகிறது. 1952-ல் இம் மத்தியக் கூட்டுறவு வங்கி ஜப்பான் தலைமை வங்கியிடமிருந்து பெற்ற கடன் 21,058 பில்லியன் யென்கள்; இது 1956-ல் 33 பில்லியன் யென்களாகவும் 1969-ல் 2·7 பில்லியன் யென்களாகவும் குறைந்துள்ளது. இக் கூட்டுறவு மத்திய வங்கிக்கு நீண்டகாலக் கடன் தேவைப்பட்டால், அப்போது 'கடன் பத்திரங்களை' (Debentures) வெளியிடுகின்றது. அவ்வாறு வெளியிடப்பட்டுப் புழக்கத்திலிருந்த கடன் பத்திரங்களின் மதிப்பு 1971-ல் 590 பில்லியன் யென்களாகும். இம் மத்திய வங்கி உறுப்பினர் சங்கங்களிடமிருந்து பெறும் வைப்புத் தொகையைவிட அச் சங்கங்களுக்குக் கொடுக்கும் கடன் மிகக் குறைவு. எனவே, இவ் வங்கியிடம் எப்போதும் நிதி உபரியாகவே உள்ளது. இந்த உபரி நிதியை உறுப்பினரல்லாத நிறுவனங்களுக்குக் கடன் கொடுக்கிறது. பெரும்பாலும் இக் கடன் விவசாயத்தோடு தொடர்புடைய தொழிற்சாலைகளுக்கே கொடுக்கப்படுகின்றன. அதாவது, உரத் தொழிற்சாலைகள், மது வகைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், மீன் பிடிப்பு, வன அபிவிருத்தி ஆகியவற்றுடன் தொடர்பு கொண்ட தொழிற்சாலைகள் ஆகியவற்றிற்கே இக் கடன் கொடுக்கப்படுகிறது. 1971-ல் இது கொடுத்த மொத்தக் கடன் 1837 பில்லியன் யென்களாகும்.

பிறநாட்டு வாணிகச் சங்கம் (Unicoop Japan)

ஜப்பானிலுள்ள விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள், மீன் பிடிப்புச் சங்கங்கள், வன வளர்ச்சிச் சங்கங்கள் ஆகிய அனைத்தும் சேர்ந்து அயல் நாடுகளுடன் வியாபாரம் செய்வதற்கென்று 1961-ல் ஒரு கூட்டுறவு அமைப்பை (Unicoop Japan) உருவாக்கின. 1961-ல் 28,000 டாலர்களாக (அமெரிக்க டாலர்) இருந்த இதன் மூலதனம் 1965-ல் 2,80,000 டாலராக அதிகரித்துள்ளது. இக் கூட்டுறவு அமைப்பு அமெரிக்கா, சைனா, இங்கிலாந்து, ஜெர்மனி, சோவியத் நாடு, இந்தியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் வியாபாரம் செய்கிறது. 1964-ல் தம் வியாபாரத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் தாய்லாந்தில் ஓர் அலுவலகத்தைத் தொடங்கியது. அதே போல் நியூயார்க்கிலும் 1966-ல் அலுவலகம் ஒன்றை நிறுவியது. இவ்வாறு பிற நாடுகளுடன் வியாபாரம் செய்யும் இந்த நிறுவனம் 1964-ல் 3.8 மில்லியன் டாலருக்கு வியாபாரம் செய்திருக்கிறது. ஜப்பான் மக்களுக்குத் தேவைப்படும் உணவுப் பொருள்கள், கால் நடைத் தீவனம், தாதுப் பொருள்கள், மரம், சிறு இயந்திரங்கள், இரசாயனப் பொருள்கள் போன்றவற்றைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. ஜப்பானில் உற்பத்தியாகும் பழவகைகள்,

காய்கறிகள், துணிமணிகள், வானொலிப் பெட்டிகள், சிமெண்ட், எஃகுப் பொருள்கள், உரங்கள், மருத்துவக் கருவிகள், டெலிவிஷன் ஆகியவற்றைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. இந்த நிறுவனத்தின் பணிகளால் ஜப்பான் நாடு கணிசமான அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கின்றது.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

1948-ல்தான் நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்திற்கென ஜப்பானிய அரசாங்கம் சட்டம் ஒன்றை அமுலாக்கியது. 1969-க்குள் 1,172 நுகர்வோர் சங்கங்கள் இச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டன. நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தில் சில்லறை விற்பனைச் சங்கங்கள், காப்பீட்டுச் சங்கங்கள், சேவைச் சங்கங்கள், சில்லறை வியாபாரமும் காப்பீட்டுப் பணியும் சேர்ந்து செய்யும் சங்கங்கள் ஆகியவை இயங்கி வருகின்றன. இச் சங்கங்களைப் பற்றிய புள்ளி விவரங்களைக் கீழேக் காணலாம்.

சங்கத்தின் வகை	எண்ணிக்கை	உறுப்பினர்கள்	
சில்லறை விற்பனைச் சங்கங்கள்	563	1·92 மில்லியன்	
சேவைச் சங்கங்கள்	121	0·25	,,
காப்பீட்டுச் சங்கங்கள்	71	5·25	,,
சில்லறை விற்பனை, சேவைச் சங்கங்கள்	371	1·51	,,
சில்லறை விற்பனை, காப்பீட்டுச் சங்கங்கள்	7	0·25	,,
காப்பீடு, சேவைச் சங்கங்கள்	5	0·43	,,
மற்றவகைச் சங்கங்கள்	34	0·45	,,
மொத்தம்	1,172	10·06	,,

1969ஆம் ஆண்டின் கணக்குப்படி ஜப்பானில் 4,000 சில்லறை கூட்டுறவு விற்பனைக் கடைகள் இருந்தன; இவற்றின் மொத்த வியாபாரம் 300 கோடி ரூபாய். சராசரி ஒவ்வோர் உறுப்பினரும் ரூ. 550 மதிப்புள்ள பொருள்களை வாங்கியிருக்கின்றனர். பெரும்பாலும் இச் சங்கங்கள் தொழிற்சாலைகளிலும் இதர நிறுவனங்களிலுமே உள்ளன. தொழிலாளர்களின் நன்மையைக் கருதி முதலாளிகளே இவற்றை ஏற்படுத்த உதவுகின்றனர்.

சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் (Service Co-operatives) மருத்துவச் சங்கங்கள், சலவை நிலையங்கள், முடிதிருத்து நிலையங்கள், உண்டிச்சாலைகள், பொதுக் குளியலறைகள் போன்றவை நிர்வகிக்கப்படுகின்றன. 1966ஆம் ஆண்டில் இச் சங்கங்கள் 205 மில்லியன் யென் மதிப்புள்ள சேவையைப் புரிந்திருக்கின்றன. ஜப்பானியக் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பு அம்சமாக விளங்குபவை அங்குள்ள 'பொதுநலச் சங்கங்கள்'தாம். உறுப்பினர்களின் உடல் நலத்திற்கென்று 30 முதல் 50 படுக்கைகள் கொண்ட 29 மருத்துவமனைகளை இச்சங்கங்கள் நடத்தி வருகின்றன. இச் சங்கங்கள் ஆண்டுதோறும் 35 மில்லியன் ரூபாய் மதிப்பிற்குப் பணிகள் செய்து வருகின்றன. ஜப்பான் நாட்டில் கல்லூரி மாணவர்களும் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்திருப்பது மற்றொரு சிறப்பான அம்சமாகும். இம் மாணவர் கூட்டுறவுச் சங்கங்களில் 35,000 பேராசிரியர்கள் உட்பட மொத்தம் 5·2 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இச் சங்கங்கள் மாணவர்களுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் விற்பதோடு வீட்டிற்கு வேண்டிய பண்டங்களையும் விற்பனை செய்கின்றன. 1967ஆம் ஆண்டில் மட்டும் இச் சங்கங்களின் மொத்த விற்பனை 200 மில்லியன் ரூபாயாகும்.

ஜப்பானின் பொருளாதாரத்தைக் கணிசமாக உயர்த்தும் அளவிற்கு நுகர்வோர் சங்கங்கள் இன்னும் வலுப்பெறவில்லை. இச் சங்கங்களில் 15 சதவீதக் குடும்பங்கள்தாம் உறுப்பினர்களாக உள்ளன. நாட்டின் மொத்த விற்பனையில் இச் சங்கங்களின் விற்பனை 10 சதவீதம்தான். இச் சங்கங்கள் வலுவின்றி இருப்பதற்கு ஒருசில காரணங்களும் உள்ளன. முதலாவதாக, பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிலதிபர்கள் இரகசிய ஒப்பந்தங்களின் வழியாக அவற்றின் விலைகளை ஏற்றி விடுகின்றனர். இரண்டாவதாக, இச் சங்கங்களுக்குப் போதுமான நிதி வசதியும் கிடையாது. நடைமுறை மூலதனம்கூட அதிகமாக இல்லை. இச் சங்கங்கள் சராசரி 20 குடும்பங்களுக்கு ஒரு பண்டகசாலையை நடத்தி வருகின்றன இதனால் இக் கூட்டுறவுப் பண்டகசாலைகளிடையே கடும் போட்டி நிலவுகிறது; இலாபமும் பாதிக்கப்படுகிறது. மேற்கூறிய காரணங்களால் உறுப்பினர்களுக்குக்கூட இச் சங்கங்களின்மீது நம்பிக்கை இல்லாமல் போய் விடுகிறது. மேலும், இச் சங்கங்கள் உறுப்பினர்களின் பங்கு மூலதனத்தையே பெரிதும் நம்பியிருக்கின்றன. ஒவ்வோர் உறுப்பினரும் சராசரி ரூ. 25 மதிப்புள்ள பங்கைப் பெறுகின்றனர். 1966-ல் இச் சங்கங்கள் சுமார் 14·5 மில்லியன் ரூபாய் பங்கு மூலதனத்தைக்கொண்டிருந்தன. இச் சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து வைப்புத் தொகை பெறமுடியாதபடி கூட்டுறவுச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அரசாங்கமும் எவ்வித நிதி உதவியையும்

செய்வதில்லை. மருந்துக் கடைகள் போன்ற சேவைச் சங்கங்களுக்குத்தான் அரசாங்கம் நிதி உதவி அளிக்கிறது. தற்போது, இச் சங்கங்கள் 'தொழிலாளர் கூட்டுறவுக் கடன் வங்கி'யிடமிருந்து (Labour Credit Co-operative Bank) கடன்பெறத் தொடங்கியுள்ளன. அவ்வாறு பெற்ற கடன் மட்டும் 1969-ல் 55 கோடி ரூபாயாகும்.

ஜப்பானிலுள்ள இந்த நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தம் சில்லறை வியாபாரத்தில் புதிய பல உத்திகளைக் கையாளத் தொடங்கியுள்ளன. இச் சங்கங்கள் மக்களின் இல்லங்களுக்குச் சென்று பொருள்களை விற்று வருகின்றன. தனியார் கடைகளில் கூட இச் சங்கங்களின் பண்டங்கள் விற்கப்படுகின்றன. உறுப்பினர்களின் நலனைக் கருதி 'கூட்டுக் கொள்முதலும்' (Joint Purchase) செய்யப்படுகிறது. அஞ்சல் நிலையம் வழியாகவும் மக்களுக்குப் பொருள்கள் அனுப்பப்படுகின்றன. இதனால் இப் பண்டகசாலைகளுக்கு வந்து பொருள்களை வாங்கும் சிரமம் மக்களுக்குக் கிடையாது. சந்தையில் அவ்வப்போது ஏற்படும் மாறுதல்களை அனுசரித்து இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள் இயங்குகின்றன. மேலும், பல சிறப்பு அங்காடிகளையும், நுகர்வோர் தம் விருப்பம் போல் பொருள்களைத் தேர்ந்தெடுத்து அதற்குரிய விலையைச் செலுத்தும் கடைகளையும் (Self-Service Shops) இச் சங்கங்கள் அமைத்துள்ளன. இவ் வகைக் கடைகள் சுமார் 200 உள்ளன. மேலும் தொழிலாளர்களுக்குப் பற்றுவழி முறையில் பொருள்கள் விற்கப்படுகின்றன. அப்படி விற்றபின் அத் தொழிலாளரின் மாதச் சம்பளத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கழித்து அத் தொகையை முதலாளிகளே அனுப்பிவிடுகின்றனர். சில சங்கங்கள் ரொட்டிக் கிடங்குகளையும் அரிசி அரைக்கும் ஆலைகளையும் நடத்தி வருகின்றன. ஆனால் இவையனைத்தும் பேரளவில் உற்பத்தி செய்வதில்லை.

ஜப்பானிலுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்கென இணைப்புச் சங்கங்களையும் 28 மாவட்டங்களில் தொடங்கியுள்ளன. தேசிய மட்டத்தில் மூன்று கூட்டமைப்புகளும் உள்ளன; இம் மூன்றில் ஒன்று சுரங்கத் தொழிலாளர் சங்கங்களுக்கும், பிறிதொன்று காப்பீட்டுச் சங்கங்களுக்கும், மூன்றாவது கல்லூரி மாணவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பணியாற்றி வருகின்றது. இவையனைத்திற்கும் மேலாக 'ஜப்பானிய நுகர்வோர் கூட்டுறவு யூனியன்' உள்ளது. இந்த யூனியன் உறுப்பினர்களிடமிருந்து பெறும் சந்தாத் தொகையையும், தனது மொத்த விற்பனையில் கிடைக்கும் இலாபத்தையும் நிதியாகக்கொண்டு இயங்கி வருகிறது.

அரசாங்கம் இதற்கு எவ்வித உதவியும் செய்வதில்லை. இந்த யூனியன் மாவட்ட அளவில் 5 கிளை அலுவலகங்களைக் கொண் டுள்ளது; அதனோடு, கூட்டுறவுக் கல்வியைப் பரப்புவதற்கென்று தனியாக ஒரு பிரிவையும் கொண்டுள்ளது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கென்று பொருள்களை மொத்தமாகக் கொள்முதல் செய்வதால் இந்த யூனியனைக் 'கூட்டுக் கொள்முதல் அமைப்பு' என்றழைப்பர். கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குத் தேவையான பொருள்களின் விவரத்தை அறிந்து அவற்றை மொத்தமாகக் கொள் முதல் செய்து நேரடியாகவே இந்த யூனியன் அனுப்பிவிடுகிறது. அவ்வாறு அனுப்பும்போது அப்பொருள்களின்மீது தன் 'குறியை' (Mark) முத்திரையிடுகிறது. 1966-ல் இந்த யூனியனின் மொத்த விற்பனை 70 மில்லியன் ரூபாயாகும். இதற்குச் சராசரி 3·4 சதவீத இலாபம் கிடைக்கிறது. இந்த யூனியன் வேறு சில பணிகளையும் செய்து வருகிறது. அவற்றில் பொதுமக்களோடு தொடர்புகொள் வதும், உறுப்பினர்களுக்குக் கூட்டுறவுக் கல்வியைப் போதிப்பதும், விளம்பரம் செய்வதும் முக்கியப் பணிகளாகும். கூட்டுறவுப் பண்டக சாலைகளின் நிர்வாகம், கணக்கு வைத்திருக்க வேண்டிய முறை, பண்டகசாலைகளை அமைக்கும்விதம் ஆகிய காரியங்களில் இந்த யூனியன் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கிவருகின்றது. பொருள்களின் விலைவாசிகள் உயராமல் தடுப்பதற்கென்று தொழிற் சங்கங்களுடனும், பெண்கள் சங்கங்களுடனும் சேர்ந்து ஆர்ப் பாட்டம் செய்கிறது. துண்டுப் பிரசுரங்கள் வழியாகவும் விலை யேற்றத்தைக் கண்டிக்கிறது. சில சமயங்களில் பிரதம மந்திரி யையும் மேயரையும்கூடச் சந்தித்து விலையேற்றத்தைக் குறைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி வற்புறுத்துகிறது.

பொது ஆய்வு :

ஜப்பானியக் கூட்டுறவு இயக்கம் நல்ல முதிர்ச்சி பெற்று, வலுவுடன் இயங்கிவருகிறது. ஜப்பானில் 'பலநோக்குச் சங்கங்கள் தாம்' பெரும்பாலும் விரும்பப்படுகின்றன; இச் சங்கங்கள் நம் நாட்டில் இயங்கிவரும் 'சேவைச் சங்கங்களை' ஒத்ததாகும். இச் சங்கங்கள் உறுப்பினர்கள் சிக்கனமாக வாழ்ந்து, சேமிக்கும் பழக் கத்தை ஊக்குவிப்பதற்கென்று, அவர்களிடமிருந்து வைப்புத் தொகை பெறும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளன. மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் சுய நிறைவு கொண்டவையாயிருக்க வேண்டும் என்பதும் வலியுறுத்தப்படுகிறது. 'கடன் வழங்கும்' முறை உற்பத்தியோடு மட்டுமின்றி விற்பனையோடும் இணைக்கப்பட் டிருப்பது சிறந்ததோர் அம்சமாகும். நம் நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பின்பற்ற வேண்டிய முறையுமாகும். இவ்வளவு தூரக்

ஜப்பான் கூட்டுறவுத் துறையில் சிறப்புடன் விளங்கப் பல காரணங்கள் உள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் வழியாகத்தாம் அரசாங்கம் உணவுப் பொருள்களைக் கொள்முதல் செய்கிறது. ஆனால், இதனால் மட்டும் கூட்டுறவு இயக்கம் வலுப்பெற்றுவிட்டது என்று கூறமுடியாது. இதைக் காட்டிலும் முக்கியமான காரணம் உண்டு. அதாவது, இந்நாட்டு மக்கள் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி நன்கறிந்து, அதற்கேற்ப உறுப்பினர்களாகிப் பொறுப்புடன் நடந்துகொள்கின்றனர்; அதனோடு, கூட்டுறவுச் சங்கங்களும் உறுப்பினர்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றன.

ஜப்பான் நாட்டில் கூட்டுறவு இயக்கம் எவ்வளவு திடமாக வளர்ந்து வருகிறது என்பதைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

விவசாயச் சங்கங்கள் :

விவரம்	நிலைமை 1950	1960	1963
வைப்புத் தொகை	ரூ. 126 கோடி	880 கோடி	1,654 கோடி
வைப்புத் தொகையிலிருந்து பணம் எடுத்தல்	ரூ. —	172 கோடி	120 கோடி
உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட கடன்	ரூ. 40 கோடி	300 கோடி	769 கோடி

இந்த விவசாயச் சங்கங்களின் பணிகளிலிருந்தும் இவற்றின் வளர்ச்சியை நாம் புரிந்துகொள்ளலாம்.

விவரம்	நிலைமை 1958	1962
விளைபொருள் விற்பனை	ரூ. 650 கோடி	ரூ. 1,000 கோடி
பண்ணைப்பொருள் விநியோகம்	ரூ. 300 கோடி	ரூ. 500 கோடி

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமின்றி, மீன்பிடிப்புச் சங்கங்கள்கூட ஜப்பானில் நல்ல முறையில் வளர்ந்து வந்திருக்கின்றன. இச்சங்கங்களின் வைப்புத்தொகை 1960-ல் 17 பில்லியன் யென்களிலிருந்து 1963-ல் 36 பில்லியன் யென்களாக அதிகரித்திருக்கிறது. உறுப்பினர்களுக்குக் கொடுத்த கடனும் 24·6 பில்லியனிலிருந்து 58 பில்லியனாக உயர்ந்துள்ளது. 1958-ல் விற்பனை செய்யப்பட்ட பொருள்கள் 133 பில்லியன் யென் மதிப்புத்தான்; இது 1961-ல் 153 பில்லியனாக அதிகரித்துள்ளது. உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்த பொருள்கள் 12 பில்லியன் யென்னிலிருந்து 14 பில்லியன் யென்னாக உயர்ந்திருக்கிறது.

10. சோவியத் நாட்டில் கூட்டுறவு இயக்கம்
(Co-operative Movement in U.S.S.R.)

ரஷ்யாதான் உலகிலேயே பெரிய நாடு; இதன் நிலப் பரப்பு மட்டும் உலக நிலப் பரப்பில் ஆறில் ஒரு பங்கு. ஆசியா, ஐரோப்பா ஆகிய இரு கண்டங்களிலும் பரவியுள்ள நாடு. நிலப் பரப்பில் பெரிய நாடென்றாலும் அளவான மக்கள் தொகையே கொண்டுள்ளது. சோவியத்து நாடு பதினைந்து மாநிலங்களைக் கொண்டுள்ளது. ஏனைய ஐரோப்பிய நாடுகளைப்போல் சோவியத்தும் பழமைமிக்கது. ஆனால் 1917ஆம் ஆண்டு ஏற்பட்ட புரட்சிக்குப்பின் இந் நாடு கம்யூனிஸ நாடாக விளங்கி வருகிறது.

கார்ல் மார்க்ஸ் என்னும் மேதைதான் கம்யூனிஸச் சித்தாந்தத்தை உருவாக்கினாரென்றாலும், அதை நடைமுறைக்குக்கொண்டு வரப் புதிய வழியை மேற்கொண்டு வெற்றிபெற்றவர் லெனின் தாம். எனவே, இன்றும்கூட அவரைச் சோவியத்து நாட்டின் தந்தையாகவே அந் நாட்டவர் கருதுகின்றனர். புரட்சிக்குப்பின் புதிய ஆட்சி ஏற்பட்ட பின்னர்த்தான் ரஷ்யா விவசாயம், தொழில் போன்ற எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைந்தது. விவசாயமும் ஏனையத் தொழில்களும் ஒரு சேர வளரத் திட்டத்தின் வழியாக வெற்றிகண்ட பெருமை ரஷ்யாவிற்கு உண்டு.

ஏனைய ஐரோப்பிய நாடுகளைப்போலவே ரஷ்யாவும் கூட்டுறவுத் துறையில் விரைவாக முன்னேற்றம் கண்டுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் இந் நாட்டில் கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டது. 1864ஆம் ஆண்டில்தான் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப் பட்டன. கூட்டுறவுப் பண்டகசாலைகளும் கடன் வழங்கும் சங்கங் களும்தாம் முதலில் தொடங்கப்பட்டன. எனினும், அப்போதிருந்த ஏகாதிபத்திய அரசாங்கம் (Imperial Government) ஜனநாயக முறையில் நம்பிக்கையற்றிருந்ததால் கூட்டுறவு இயக்கம்

ஊக்குவிக்கப்படவில்லை; மாறாக 1905ஆம் ஆண்டுவரை இவ்வியக்கம் ஒடுக்கப்பட்டு வந்தது. 1914-ல்தான் கூட்டுறவு இயக்கம் புத்துயிர் பெற்று எல்லாத் துறைகளுக்கும் விரிந்தது; குறிப்பாக நுகர்வோர் பண்டகசாலைகள் ஏராளமாக வளர்ந்து ரஷ்யாவின் மொத்த விற்பனையில் 50 சதவீதத்தைப் பெற்றது.

1917ஆம் ஆண்டுவரை கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து வளர்ச்சிபெற்று வந்தது. 1917-ல் ஏற்பட்ட ரஷ்யப் புரட்சியின் போது தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து தனிப் பட்டோரின் இடங்களையெல்லாம் கைப்பற்றியதைப்போல் கூட்டுறவுக் கட்டடங்களையும் கைப்பற்றினர். ஆனால், தொழி லாளர்களின் தலைவராக விளங்கிய லெனின் 1918-ல் தொழிலாளர் கூட்டுறவுக் கட்டடங்களைக் கைப்பற்றக்கூடாதென்று தடை போட்டார். "முதலாளித்துவ முறையில் கூட்டுறவு இயக்கம் ஒன்றுதான் நல்ல அமைப்பு; அதை எப்பாடுபட்டாவது அப்படியே கட்டிக் காக்கவேண்டும்" என லெனின் கூறினார். கூட்டுறவுச் சங்கங்களின் பெருமையை உணர்ந்த லெனின் அவற்றை மேலும் ஊக்குவிக்க முற்பட்டார். அதன் பின்னர்த்தான் கூட்டுறவு அமைப்புகள் எல்லாத் துறைகளிலும் ஊக்குவிக்கப்பட்டு அரசாங் கத்தின் நேரடிக் கண்காணிப்பில் முறையாக வளர ஆரம்பித்தன. ரஷ்யாவில் மாறுபட்ட ஆட்சி நிலவினாலும்கூடக் கூட்டுறவு இயக் கத்தின் வளர்ச்சியைப் பொறுத்தவரை இதர ஜனநாயக நாடுகளைப் போலவே சிறந்து விளங்குகிறது. இனி, இந் நாட்டிலுள்ள முக்கிய மான கூட்டுறவு அமைப்புகளைப்பற்றிப் பார்ப்போம்.

1. தொழிலாளர் அமைப்புகள் (Labour Artels): ரஷ்யாவில் முதன்முதலில் தோன்றிய கூட்டுறவு அமைப்புகள் இத் தொழிலாளர் அமைப்புகள்தாம். 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே தொழிலாளிகள் முதலாளிகளின் தொல்லை களால் அதிருப்தி அடைந்திருந்தனர். தங்களுடைய ஊதியத்தை அதிகரிக்க வேண்டுமென்பதற்காகத் தங்களுக்குள் ஓர் அமைப்பு வேண்டுமென விரும்பினர். அதற்காகவே இத் தொழிலாளர் அமைப்புகள் உருவாக்கப்பட்டன. "உறுப்பினர்கள் ஒன்றுபட்டு, கூட்டாகக் கணக்கு வைத்துத் தொழில்களை நடத்துவதற்கோ தனி நபர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கோ அமைக்கப்படும் கூட்டமைப்புத்தான் ஆர்ட்டல்" என்று சோவியத் சட்டம் இதனை வரையறுத்துள்ளது. எனவே, தொடக்கத்தில் பல்வேறு தொழில் களில் வேலை செய்துவந்த தொழிலாளர்கள் தங்கள் உழைப்பிற் கேற்ற ஊதியத்தைப் பெறுவதற்கென்று இவ்வமைப்பை உருவாக்கி னார்கள். இவற்றின் மூலமாக முதலாளிகளின் சுரண்டல்களி

விருந்து தங்களைப் பாதுகாத்துக்கொண்டார்கள். தச்சுவேலை செய்வோர், கட்டடத் தொழிலாளர், கைத்தொழிலாளிகள் ஆகியோர்தாம் இவ்வமைப்புகளை முதலில் தொடங்கினார்கள். இத் தொழிலாளிகளை வேலைக்கமர்த்த விரும்பினோர் முதலில் இக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரைச் சந்தித்து ஊதியத்தை நிச்சயம் செய்துகொள்ள வேண்டும். அதன் பின்னர்த்தான் இத் தொழி லாளிகள் சங்கத்தின் சார்பில் வேலையைத் தொடங்குவர். இக் கூட்டுறவு அமைப்புகள் உறுப்பினர்களிடமிருந்தும் மற்றவர்களிட மிருந்தும் கடன் பெற்று வேறுசில தொழில்களையும் நடத்திவந்தன. இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறிதுகாலம் மட்டுமே நல்ல முறையில் நடைபெற்று வந்தன. ரஷ்யாவில் பேரளவுத் தொழில் களும் (Large-Scale Industries) கனரகத் தொழில்களும் (Heavy Industries) வளரத் தொடங்கியவுடன் இவற்றின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது. எனினும், கைத்தொழில் கூட்டுறவு அமைப்புகள் இன்றும் பிரபலமாக இயங்கி வருகின்றன.

2. விவசாயச் சங்கங்கள்: பத்தொன்பதாம் நூற்றாண் டின் இறுதியில் விவசாயிகள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள் வதற்காக இச் சங்கங்களைத் தொடங்கினர். இச் சங்கங்கள் கூட்டுப் பண்ணைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டவையாகும். விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய பொருள்களை மலிவாகக் கொள்முதல் செய்வ தற்கும் உற்பத்திப் பொருள்களை இலாபகரமாக விற்பனை செய்வ தற்குமே இச்சங்கங்கள் தொடங்கப்பட்டன. எனவே, இச்சங்கங்கள் மூன்றுவிதமான பணிகளை மேற்கொண்டன.

1. விவசாயத்திற்குத் தேவையான தரமான விதைகள், உரங்கள், கருவிகள் ஆகியவற்றை மொத்தமாகக் கொள்முதல் செய்து, வேண்டியபோது உறுப்பினர்களுக்கு விநியோகித்தல்.

2. உறுப்பினர்களுக்குத் தேவையான நுகர்வுப் பண்டங்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து விநியோகிப்பது.

3. உறுப்பினர்களின் விளைபொருள்களை நல்ல விலைக்கு விற்க ஏற்பாடு செய்வது.

இச் சங்கங்கள் அமைக்கப்பட்டபோது நிலம் தனிப்பட்டவர் களுக்கே சொந்தமாக இருந்தது; எனவே, உறுப்பினர்கள் தம் விளைபொருள்களை இச் சங்கங்களின் வாயிலாகவே விற்பனை செய்து வந்தனர். ஏனைய நாடுகளிலுள்ள விவசாய விற்பனைச் சங்கங்களைப் போல் இவையும் பணிபுரிந்து வந்தன. முதன்முதலில் சைபீரி யாவில்தான் இச்சங்கங்கள் தோன்றின. அதாவது 1895ஆம்

ஆண்டில் வெண்ணெய் உற்பத்தியாளர்களால் இவ் வகைச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. 'ட்ரான்ஸ்-சைபீரிய ரயில் பாதை' அமைக்கப்பட்டபின் வெண்ணெய் வியாபாரத்தில் கடுமையான போட்டி தொடங்கியது. இக் கடும்போட்டியிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத்தான் சைபீரியாவைச் சேர்ந்த வெண்ணெய் உற்பத்தியாளர்கள் இச் சங்கங்களைத் தொடங்கினர். இவ்வாறு தொடங்கப்பட்ட இச் சங்கங்கள் நாளடைவில் வளர்ந்து, வலுப்பெற்றன. 1908-ல் இச்சங்கங்கள் ஒன்றுசேர்ந்து 'சைபீரிய வெண்ணெய் உற்பத்திச் சங்கங்களின் கூட்டமைப்பு' என்ற தலைமைச் சங்கத்தை உருவாக்கின. இத்தலைமைச் சங்கத்தின் வழியாகவே உறுப்பினர் சங்கங்கள் தாம் உற்பத்தி செய்த வெண்ணெயை விற்பனை செய்துவந்தன. இன்றும்கூட இத் தலைமைச் சங்கம் வலிமையுடன் இயங்கி வருகிறது. 1917ஆம் ஆண்டுப் புரட்சியின்போது இவ்வகைச் சங்கங்கள் சுமார் 6,000 இருந்தன.

3. கூட்டுறவுக் கடன் சங்கங்கள்: வட்டிக் கடைக் காரர்களின் தொல்லைகளிலிருந்து விவசாய மக்களைக் காப் பாற்றவே கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ரஷ்யாவில் தோன்றின. உறுப்பினர்களிடையே சிக்கன மனப்பான்மையை உருவாக்கவும் விவசாயத்திற்கு வேண்டிய கடனுதவியைச் செய்யவும் இச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. முதன்முதலில் 'கடன், சேமிப்புச் சங்கங்கள்' (Loan and Savings Societies) தாம் தொடங் கப்பட்டன. இவை தங்களுக்கு வேண்டிய மூலதனத்தை உறுப்பினர் களின் பங்கு மூலதனத்தின் வழியாகப் பெற்றன. ஆனால், இச் சிறிய பங்குத் தொகையைக்கூடக் கொடுப்பதற்கு மக்கள் முன்வரவில்லை; எனவே இச் சங்கங்கள் முன்னேற முடியாமல் போய்விட்டன. எனவே, வேறொரு வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப் பட்டன. இந்த இரண்டாவது வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் சங்கங்கள் என அழைக்கப்பட்டன. இச் சங்கங்கள் பங்கு மூலதனம் ஏதுமின்றி அரசாங்க வங்கியிலிருந்து பெற்ற கடன் தொகையைக் கொண்டு தொடங்கப்பட்டன. சிறிது காலம் கழித்து மக்களிடமிருந்து வைப்புத் தொகையையும் பெறத் தொடங்கின. இவ்வாறு நல்ல நிதிநிலையைக் கொண்டு தொடங் கப்பட்ட இச் சங்கங்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான கடன் உதவியைச் செய்து வந்தன. சில சமயங்களில் உறுப்பினர்களின் சார்பாகச் சாகுபடிக்கு வேண்டிய விதைகள், உரங்கள், கருவிகள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்தும் வந்தன. பங்கு மூலதனமின்றித் தொடங்கப்பட்டதால் இச் சங்கங்கள் பெருகி வந்தன. 1905ஆம் ஆண்டு சுமார் 1,400 சங்கங்கள்

இருந்தன. ரஷ்யப் புரட்சியின்போது இச் சங்கங்களின் எண்ணிக்கை 15,000 ஆக உயர்ந்தது. அரசாங்கத்தின் ஆதரவினால் தான் இச் சங்கங்கள் இவ்வளவு விரைவாக வளர்ந்தன. குறிப்பாக 1905ஆம் ஆண்டிற்குப்பின் இச் சங்கங்களுக்கு அரசாங்கம் முழு ஆதரவு தந்து ஊக்குவித்து வந்தது. உறுப்பினர்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு இச் சங்கங்கள் பெருமளவில் கடன் உதவி செய்து வந்ததால் விவசாயத் தொழில் முன்னேற முடிந்தது.

நுகர்வோர் சங்கங்கள்

இங்கிலாந்தில் 'ராக்டேல் முன்னோடிகள்' அமைத்த கூட்டுறவுப் பண்டகசாலையைப் பற்றிய செய்தி உலகெங்கும் பரவியது. எனவே, ரஷ்யாவிலும் அவ்வகைச் சங்கங்களை அமைப்பதற்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், 1891ஆம் ஆண்டுவரை ரஷ்ய அரசாங்கம் ஆதரவு தராததால் கூட்டுறவுப் பண்டகசாலைகள் வலிமைபெற இயலவில்லை. 1891ஆம் ஆண்டில் ஏற்பட்ட பஞ்சத்தைத் தொடர்ந்துதான் கூட்டுறவுப் பண்டகசாலைகள் ஊக்கம் பெற்று வளரத் தொடங்கின. பஞ்சத்தின் விளைவாக அவசியப் பண்டங்களின் விலைகூட உயர்ந்து கள்ளச் சந்தையில் விற்கப்படலாயின. எனவே, நுகர்வோருக்கு இன்றியமையாத பொருள்களை நியாய விலைக்கு விற்பனை செய்யவும், அப்பொருள்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தவும் நுகர்வோர் சங்கங்கள் ஏராளமாகத் தொடங்கப்பட்டன. இவை அரசாங்கத்தின் ஆதரவையும் இப்போது பெறலாயின. 1906-லிருந்து 1911 வரை ஜப்பானுடன்ஏற்பட்ட போரின் விளைவாக நுகர்வுப் பண்டங்களுக்குக் கிராக்கிஅதிகரித்தது; நாடெங்கிலும் பற்றாக்குறை நிலவியதால் இச்சங்கங்கள் ஊக்கம் பெற்று வளர ஏதுவானது. இக்கூட்டுறவுப் பண்டகசாலைகள் பெரும்பாலும் கிராமப்புறங்களில்தாம் அமைக்கப்பட்டன; இச் சங்கங்கள் பெருமளவில் வளர்ந்துவிட்டதால் விலைவாசிகள் கணிசமாகக் குறைந்து நிலைபெற்றன. 1917-ல் ஏற்பட்ட ரஷ்யப் புரட்சியின்போது சுமார் 25,000 கூட்டுறவு நுகர்வோர் சங்கங்கள் இருந்தன. இக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்கென கூட்டிணைப்புச் சங்கத்தையும் உருவாக்கின. இப்படி உருவாக்கப்பட்ட நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டிணைப்புத்தான் 'சென்ட்ரோ சோயஸ்' (Centrosoyus) எனப்பெயர் பெற்றது.

புரட்சிக்குப் பின்னர்த் தோன்றிய பொதுவுடைமை அரசாங்கம் கூட்டுறவுப் பண்டகசாலைகளையெல்லாம் அப்படியே கட்டிக்காக்கும்படி ஆணையிட்டது. எனினும், ரஷ்ய அரசாங்கம்

தனது கொள்கைகளை நிறைவேற்றக்கூடிய அமைப்புகளாகவே இவற்றைப் பயன்படுத்தத் தொடங்கியது. இதனுல், இச் சங்கங்களின் தன்னிச்சையான கொள்கையும் சுதந்திரமான நடவடிக்கைகளும் பறிபோயின. தன் நேரடியான கண்காணிப்பிலும் கட்டுப்பாட்டிலும் அரசாங்கம் இவற்றைக் கொண்டு வந்தது. நாளடைவில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தால் இச் சங்கங்கள் முறையாக வளர முடியாது என்பதை அரசாங்கமே உணர்ந்தது. எனவே, 1928ஆம் ஆண்டில் தன் கட்டுப்பாடுகளையெல்லாம் அரசாங்கம் தளர்த்திக்கொண்டது. ஆனுல் 1932-ல் தனியார்துறை வியாபாரம் அனைத்தும் ஒழிக்கப்பட்ட பின்னர், மறுபடியும் தன் கொள்கைகளை நிறைவேற்றக்கூடிய பதிலாள்களைப்போல் அரசாங்கம் இவற்றைக் கட்டுப்படுத்தத் தொடங்கிவிட்டது. அதே சமயம், அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பொருள்களையெல்லாம் இச் சங்கங்களின் வழியாகவே விற்கவேண்டுமென அரசாங்கம் முடிவு செய்தது; இதன் விளைவாக இச் சங்கங்கள் புத்துயிர்பெற்று மறுபடியும் வளரலாயின. 1935ஆம் ஆண்டு முதல் இப்பெரும் பணியைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் முறையாகச் செய்து வந்தன. 1946ஆம் ஆண்டில் இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தில் நல்ல திருப்பம் ஏற்பட்டது. அரசின் வேண்டுகோளின்படி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் நகர்ப்புறங்களிலும் தொழிலாளர் குடியிருப்புகளிலும் (Workers' Settlements) பல பண்டகசாலைகளை நிறுவி மக்களுக்குப் பணிபுரியத் தொடங்கியது. கிராமங்களிலும் நகரங்களிலும் இச் சங்கங்கள் வலிமை பெற்று வளரலாயின. இச் சங்கங்களின் விரைவான வளர்ச்சியைக் கீழ்க்காணும் புள்ளிவிவரங்கள் சுட்டிக் காட்டுகின்றன :

ஆண்டு	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர் எண்ணிக்கை
1917	25,000	7.0 மில்லியன்
1926	40,000	12.4 ,,
1929	72,000	22.6 ,,
1957	70,000	33.4 ,,
1966	16,200	53.0 ,,
1970	16,000	59.0 ,,

இந் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1970 ஆம் ஆண்டில் சுமார் 3,70,000 கடைகளை நடத்தி வந்தன. 1969 ஆம் ஆண்டில் இவற்றின் விற்பனை 43,000 மில்லியன் ரூபிள்களாகும். ரஷ்ய நாட்டிலுள்ள மொத்தச் சில்லறை விற்பனையில் இச் சங்கங்களின் பங்கு 30 சதவீதமாகும். இக் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுப்

பண்ணைகளிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் உள்ள மக்களுக்கென்று உண்டிச்சாலைகளையும் சிற்றுண்டிச்சாலைகளையும் பெருமளவில் தொடங்கியுள்ளன. தற்போது பொது மக்களுக்கென்று சுமார் 70,000 உணவு விடுதிகளை நடத்துகின்றன. இதனால் வீட்டில் சமையல் செய்யும் பெண்மணிகளின் வேலை குறைந்து அவர்கள் ஏனைய வேலைகளுக்குச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், இப் பண்டகசாலைகள் உணவுப் பொருள்களைப் பதப்படுத்துவதற்கென்று சுமார் 42,000 தொழிற்சாலைகளைக் கொண்டிருக்கின்றன. இவற்றின் மூலம் பக்குவப்படுத்தப்பட்ட இறைச்சி, மதுவகைகள் உலர்த்தப்பட்ட காய்கறிகள், பழங்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டுத் தகர டப்பாக்களில் அடைத்து விற்பனை செய்யப்படுகின்றன. இத் தொழிற்சாலைகள் 1965ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 2,300 மில்லியன் ரூபிள் மதிப்பிற்குப் பொருள்களை உற்பத்தி செய்திருக்கின்றன. இவை மட்டுமின்றி, சுமார் 14,000 ரொட்டிக் கிடங்குகளின் மூலம் மக்களுக்கு வேண்டிய ரொட்டி வகைகளையும் உற்பத்தி செய்து விநியோகித்து வருகின்றன. மேலும், அரசாங்கத்தின் சார்பில் கூட்டுப் பண்ணைகளிடமிருந்து முக்கியமான விவசாயப் பண்டங்களையும் இப் பண்டகசாலைகள் கொள்முதல் செய்கின்றன. அதனோடு, கூட்டுப்பண்ணை உறுப்பினர்களிடம் எச்சமாக உள்ள பொருள்களையும் இவை வாங்கிவிடுவதால் அவர்கள் அங்காடிக்கு அலைந்து சென்று தம் பொருள்களை விற்க வேண்டிய சிரமம் இல்லாமல் போய்விடுகிறது. உலகிலேயே சோவியத் நாட்டு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்தாம் எண்ணிக்கையில் மட்டுமின்றி, விற்பனையிலும் முன்னணியில் இருக்கின்றன.

சோவியத் நாட்டிலுள்ள நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் கீழ்க்காணுமாறு அமைந்துள்ளது:

சென்ட்ரோ சோயஸ்
(Centrosoyus)

|
V

15 குடியரசு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

|
V

114 பிரதேச நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

|
V

2,500 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

|
V

16,000 நுகர்வோர் கூட்டுறவுச் சில்லறைச் சங்கங்கள்,

அடிமட்டத்தில் சில்லறை விற்பனைக் கடைகள் உள்ளன. பெரும்பாலும், ஒரு கிராமத்திற்கு ஒரு கடை என்றுதான் இருக்கிறது ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள கூட்டுறவுக் கடைகள் அனைத்தும் மாவட்டச் சங்கத்தோடு இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள பிராந்தியச் சங்கங்கள் அனைத்தும் அந்தந்தக் குடியரசுச் சங்கத்தோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. எல்லாக் குடியரசு சங்கங்களும் பிராந்தியச் சங்கங்களும் தத்தம் பிரதிநிதிகளின் வழியாகச் சென்ட்ரோ சோயஸ் என்றழைக்கப்படும் அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. சோவியத் நாட்டிலுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் சென்ரோ சோயஸ்தான் தலைமைச் சங்கமாக விளங்குகிறது. எனவே, இத் தலைமைச் சங்கத்தின் பணிகளை ஆராய்தல் நன்று.

தலைமைச் சங்கத்தின் பணிகள் (Functions of Centrosoyus)

1. இத் தலைமைச் சங்கம் முக்கியமான சில பொருள்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து அவற்றை இதன்கீழ் இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்கிறது. இதற்கென்று இத்தலைமைச் சங்கம் ஆறு துறைகளைக் கொண்டுள்ளது.

2. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வாறு கொள்முதல் செய்யவேண்டும், அவற்றை எப்படி விநியோகிக்க வேண்டும் என்ற வழிவகைகளை இத்தலைமைச் சங்கமே வகுத்துக் கொடுக்கிறது. மேலும், நாடெங்கிலும் விற்பனை செய்யப்படும் பொருள்கள் ஒரே விலையில் விற்கப்படவேண்டுமென்பதற்காக எல்லாப் பொருள்களுக்கும் விலையை நிர்ணயிக்கிறது.

3. நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு யூனியன் சங்கங்கள் ஆகிய எல்லாவற்றின் கணக்கு வழக்குகளையும் சரி பார்த்து, தணிக்கை செய்யும் பணியும் இதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனோடு, இச் சங்கங்களுக்குத் தேவைப்படும் பணியாளர்களை நியமனம் செய்வதற்கும் உதவி செய்கிறது. கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குத் தேவைப்படும் பணியாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கென்று பல பயிற்சிப் பள்ளிகளையும் நடத்தி வருகிறது. தற்போது 4 உயர்நிலைக் கூட்டுறவுப் பள்ளிகளையும், 111 தொழில் நுட்பப் பள்ளிகளையும், 103 தொழில் பயிற்சிப் பள்ளிகளையும் நிர்வகித்து வருகிறது.

4. அரசாங்கத்திற்கும் கூட்டுறவு இயக்கத்திற்குமிடையே நல்ல பாலமாகப் பணிபுரிவதும் இத் தலைமைச் சங்கம்தான்.

மேலும், நான்காண்டுகளுக்கு ஒரு முறை நுகர்வோர் சங்கங்களின் மாநாட்டையும் கூட்டி நடத்துகிறது. "சோவியத் நுகர்வோர் கூட்டுறவு" (The Soviet Consumer Co-operative) என்ற மாத இதழையும் வெளியிட்டு வருகிறது.

'சென்ரோ சோயஸ்' என்றழைக்கப்படும் இத்தலைமைச் சங்கம் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு நிதி உதவி அளிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இப்பண்டகசாலைகளுக்கு வேண்டிய நிதியை அரசாங்க வங்கியும் கூட்டுறவு வங்கிகளுமே கடனாகக் கொடுக்கின்றன.

நிர்வாகம்

கிராமக் கூட்டுறவுப் பண்டகசாலைகளைப் பொறுத்தவரை உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து பொதுக்குழுவாக அமைகின்றனர். பண்டகசாலையின் உறுப்பினர்கள் அதிகமாயிருந்தால் அவர்களின் பிரதிநிதிகளைமட்டும் கொண்டுதான் பொதுக்குழு அமைக்கப்படுகிறது. மாவட்டச் சங்கங்களில் பொதுக்குழுதான் பொறுப்பும் அதிகாரமும் நிறைந்தது. குடியரசு சங்கங்களையும் தலைமைச் சங்கத்தையும் பொறுத்தவரை உறுப்பினர் சங்கங்களின் பிரதிநிதிகளைக்கொண்ட சபைதான் பொறுப்பும் அதிகாரமும் கொண்டது. இச்சபை நான்காண்டுகளுக்கு ஒருமுறை கூடுகிறது.

கிராமக் கூட்டுறவுப் பண்டகசாலை முதல் தலைமைச் சங்கம் வரை எல்லாச் சங்கங்களுக்குமே அதனதன் உறுப்பினர்களடங்கிய பொதுக்குழு நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுக்கிறது. குடியரசு சங்கங்களும் தலைமைச் சங்கமும் மட்டும் நிர்வாகக் குழுவை மட்டுமின்றி, ஆலோசனைக்குழுக்களையும் தேர்ந்தெடுக்கின்றன. ரஷ்யாவிலுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இத் தலைவர் தேர்தல் மிக விசித்திரமானதாகும். நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தை முறையாக நடத்திச்செல்லத் தகுதியும் திறமையும் வாய்ந்தவர்களே தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இத் தேர்தலின் போது உயர்மட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கம் தகுதிவாய்ந்த ஒரு சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களது பெயர்களைக்கொண்ட பட்டியலைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுப்புகிறது. இப்பெயர் பட்டியலிலுள்ள ஒருவரை ஒவ்வொரு சங்கமும் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தத்தம் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். எனவே, உயர் மட்டத்திலுள்ள சங்கம் விரும்பாத எவரையுமே கீழ்மட்டத்திலுள்ள சங்கம் தலைவராகத் தேர்ந்தெடுக்க முடியாது. தேர்தலில் ஏதேனும் தவறு நடந்துவிட்டால் மறு தேர்தல் நடத்துவதற்கும் வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது.

சில சிறப்பு அம்சங்கள் : நுகர்வோர் கூட்டுறவுப் பண்டக சாலைகள் ஒரு சில சிறப்பு அம்சங்களுடன் ரஷ்யாவில் விளங்குகின்றன. அதாவது,

1. இப்பண்டகசாலைகள் வீட்டுக்குத் தேவையான பொருள்களை மட்டும் விற்பனை செய்வதில்லை. அவற்றோடு, கூட்டுப் பண்ணைகளுக்குத் தேவைப்படும் பொறுக்கு விதைகள், உரங்கள், விவசாயக் கருவிகள் போன்றனவற்றையும் விற்பனை செய்கின்றன மேலும் இயந்திரங்களைப் பழுதுபார்க்கும் பட்டறைகள், முடியலங்கார நிலையங்கள், சலவைச் சாலைகள் ஆகியவற்றையும்கூட நடத்தி வருகின்றன. போக்குவரத்துப் பணிகளையும், தொழில் பயிற்சிப் பள்ளிகளையும் நிர்வாகம் செய்கின்றன. இது மட்டுமின்றி, உறுப்பினர்களுக்குப் பொழுதுபோக்கிற்கான வசதிகளையும் செய்து தருகின்றன.

2. உறுப்பினர்களுக்குப் பொதுவாக ரொக்கத்திற்கு மட்டுமே பொருள்களை விற்பனைசெய்வது வழக்கம்; ஆனால், ரஷ்யாவிலுள்ள கூட்டுறவுப் பண்டகசாலைகள் குறிப்பிட்ட அளவுவரை கடன் முறையிலும் விற்பனை செய்கின்றன. பண்டகசாலைகளின் பங்குதாரர்களுக்குக் 'கொள்முதல் வெகுமதி' (Purchase Bonus) எதுவும் அளிக்கப்படுவதில்லை. பொருள்களின் அடக்க விலையோடு சிறிது இலாபத்தையும் சேர்த்து விற்கின்றனர். உறுப்பினர்களுக்கு இலாப ஈவுத் தொகை வழங்கப்படுகிறது.

நிதியும் இலாபமும் : பண்டகசாலைகளின் உறுப்பினர் ஒவ்வொருவரும் குறிப்பிட்டதொரு தொகையைப் பங்கு மூலதனமாக அளிக்கவேண்டும். இக் கூட்டுறவுப் பண்டகசாலையிலிருந்து விலக விரும்பும் உறுப்பினர்களுக்கு அவர்களின் பங்குப் பணம் முழுவதும் திருப்பிக் கொடுக்கப்படுகிறது. பங்குதாரர் தம் இருப்பிடத்தை மாற்றும்போது, அவர் விருப்பத்திற்கிணங்க அவரது பங்குத் தொகை புதிதாகக் குடியேறும் இடத்திலுள்ள பண்டகசாலைக்கு மாற்றப்படுகிறது. 1970ஆம் ஆண்டின் கணக்குப்படி உறுப்பினர்களின் பங்கு மூலதனம் மட்டும் 650 மில்லியன் ரூபிள்களாகும்.

இப்பண்டகசாலைகளின் இலாபத் தொகை முழுவதும் முறையாகச் செலவு செய்யப்படுகிறது. இலாபத்தில் ஒரு பகுதி 'அடிப்படை நிதிக் கணக்கில்' (Basic Fund) வரவு வைக்கப்படுகிறது. உறுப்பினர்களின் நுழைவுக் கட்டணத் தொகையும் இக் கணக்கில் தான் சேர்க்கப்படுகிறது. பிற பண்டகசாலைகளுக்குத் தாற்காலிகக்

கடன் தேவைப்படும்போது இக் கணக்கிலிருந்துதான் கொடுக்கப் படுகிறது. இலாபத்தில் மற்றொரு பகுதி உறுப்பினர்களுக்கு இலாப ஈவாகக் கொடுக்கப்படுகிறது. எஞ்சியுள்ள இலாபத் தொகை 'மூலதன முதலீட்டு நிதி' (Capital Investment Fund), 'பொதுநல நிதி' (Welfare Fund), 'கல்வி, பயிற்சி நிதி' (Education and Training Fund), 'பரிசு நிதி' (Prize Fund), 'சீர்படுத்தும் நிதி' (Regulating Fund) ஆகிய கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது. இவ் வகை நிதிகளில் 1970ஆம் ஆண்டு மொத்தம் 10,000 மில்லியன் ரூபிள்கள் இருந்தன. நாட்டிலுள்ள மொத்தக் கூட்டுறவு நிதிகளில் இது 92 சதவீதமாகும்.

பயிற்சி: சோவியத் நாட்டிலுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 114 கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளிகளை நிர்வாகம் செய்து வருகின்றன. இப் பள்ளிகள்மூலம் ஆடை தயாரிப்போர், ரொட்டி செய்வோர், இறைச்சித் தொழிலில் ஈடுபட்டுள்ளோர், சமையல் செய்வோர், பண்டகசாலை விற்பனையாளர் ஆகியோருக்குத் தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப் பள்ளிகளைப் பிரதேசக் கூட்டுறவுச் சங்கங்கள்தாம் நடத்தி வருகின்றன. இவற்றிற்குத் தேவையான நிதியையும் அச்சங்கங்களே தருகின்றன. 1958 முதல் 1965 வரை சுமார் 1,16,000 தொழிலாளர்கள் இப்பள்ளிகளின்மூலம் பயிற்சி பெற்றனர்.

கூட்டுப் பண்ணைகள்

சோவியத் நாட்டில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமின்றி, கடன் சங்கங்கள், உற்பத்தியாளர் சங்கங்கள், மீனவர் சங்கங்கள்போன்று எத்தனையோ வகையான கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. எனினும், கூட்டுப் பண்ணைகள்தாம் அந்நாட்டில் பிரபலமடைந்துள்ளன. இக்கூட்டுப் பண்ணைகள் வளர்ந்ததே அரசியல், பொருளாதாரச் சூழ்நிலைகளால்தான். இவை தோன்றிய வரலாறு நீண்டதெனினும், அதைச் சுருக்கமாகவாவது இங்குக் குறிப்பிடல் நன்று.

அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் இந் நாடு பெருமளவில் தொழில்வளம் பெற்றபோதிலும் 66 சதவீத மக்கள் விவசாயத்தையே தான் நம்பி வாழ்ந்து வந்தனர். ஜார் மன்னர்களின் ஆட்சிக் காலத்திலிருந்தே விவசாயம் மிகவும் பின்தங்கிய நிலையில் தான் இருந்து வந்தது. இந் நாட்டின் மொத்த விளைநிலத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஒருசில நிலச்சுவான்தார்களிடமே இருந்தது. அவற்றில் பாடுபட்டுவந்த விவசாயிகளும் தொழிலாளர்களும் விவசாயக் கருவிகளும் போதுமான கால்நடைகளுமின்றி

நிலச்சுவான்தார்களின் நிலையை உயர்த்துவதற்கே வேலை செய்தனர். குடியானவர்களின் வாழ்க்கைத்தரமும் விவசாயமும் மிகப் பின்தங்கிய பழைய பாணியிலேயே இருந்தன.

ஆனல், அக்டோபர் புரட்சிக்குப்பின் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் விவசாயத்தில் பல புரட்சிகரமான மாறுதல்களைச் செய்யத் தொடங்கியது. அரசாங்கத் 'தீர்ப்பாணை' (Decree) வழியாக நிலச்சுவான்தார்கள் அனைவரும் தத்தம் நில உடைமையை இழந்தனர்; அவர்களுக்கு எவ்வித நட்ட ஈடும் வழங்கப்படவில்லை. அவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட நிலமனைத்தையும் வசதிநிறைந்த விவசாயிகளே எடுத்துக்கொண்டனர். எனவே, ஏழை விவசாயிகள் அந் நிலத்தையெல்லாம் சமமாகப் பங்கிட வேண்டுமெனக் கோரினர். இதன் விளைவாக நாட்டில் உள்நாட்டுக் கலகம் தோன்றியது. இக்கலகத்தின்போது ஏழை விவசாயிகளுக்கு ஆதரவளித்த போல்ஷ்விக் கட்சி (Bolshevik Party) வெற்றி பெற்றது. அதைத் தொடர்ந்து நாட்டிலிருந்த எல்லா நிலமும் தேசியமயமாக்கப்பட்டு, அரசாங்கப் பண்ணைகள், மக்கள் மன்றம், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிற்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. எனவே, தனிப்பட்டவர்கள் விவசாயம் செய்யும் முறை ஒழிக்கப்பட்டு, கிராமத்தில் இருக்கும் மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து கூட்டுப் பண்ணைகளை அமைத்துச் சாகுபடி செய்யும் முறை புகுத்தப்பட்டது.

இவ்வாறு விளைநிலங்கள் யாவும் நாட்டுடைமை ஆக்கப்பட்டுப் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னரும் பிரச்சினைகள் தோன்றின. அரசாங்கப் பண்ணைகளைத் தவிர ஏனைய பண்ணைகள் அனைத்திலும் பழைய முறையிலேயேதான் விவசாயம் நடந்து வந்தது. எனவே, விளைச்சலைப் பெருக்க முடியவில்லை. நவீன முறையில் விவசாயம் செய்வதற்கு வேண்டிய இயந்திரங்களை வாங்குவதற்கு மூலதனமின்றிப் பண்ணைகள் கஷ்டப்பட்டன. இந்நிலையை மாற்றியமைப்பதற்காக அரசாங்கம் கூட்டுப் பண்ணைகளுக்குத் தேவையான நிதி உதவியைச் செய்யத் தொடங்கியது. இதையொட்டி 1000 மில்லியன் ரூபிள் கொண்ட 'சிறப்பு நிதி' (Special Fund) ஒன்று அமைக்கப்பட்டது. இதன்மூலம் பண்ணைகளுக்குத் தேவையான நிதி உதவிகள் மானியமாகவும் (Grant) கடனாகவும் வழங்கப்பட்டன. சாகுபடிக்குத் தேவையான விவசாய இயந்திரங்களும் அளிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து சோவியத் நாடெங்கிலும் கூட்டுப் பண்ணைகள் தொடங்கப்பட்டன. இப் பண்ணைகள் துரிதமாக வளர்ச்சியும் பெற்றன. 1918ஆம் ஆண்டில் 350 ஆக இருந்த கூட்டுப் பண்ணைகள் 1919-ல் 6,200 ஆகவும், 1920-ல் 10,500 ஆகவும்

அதிகரித்துள்ளன. 1920ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 2·8 மில்லியன் ஏக்கர் நிலம் கூட்டுப்பண்ணை முறையில் சாகுபடி செய்யப்பட்டது. அரசாங்கத்தின் ஆதரவு இருப்பதால் இப்பண்ணைகள் அதிகரித்துக் கொண்டே வந்துள்ளன. 1950-ல் சுமார் 2,54,000 கூட்டுப் பண்ணைகள் இந் நாட்டில் செயல்பட்டு வந்தன. 1950-க்குப் பின்னர், விளைச்சலைப் பெருக்குவதற்கென்று சின்னஞ்சிறு கூட்டுப் பண்ணைகள் ஒன்றுசேர்ந்து பெரிய கூட்டுப்பண்ணைகளை உருவாக்கத் தொடங்கின. இத்தகைய இணைப்பை அரசாங்கக் கட்டாயமின்றி மக்களே செய்துகொண்டனர். இக்கூட்டுப் பண்ணைகளில் அங்கம் வகிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வந்துள்ளது. 1952-ல் ஒவ்வொரு கூட்டுப் பண்ணையிலும் சராசரி 208 குடும்பங்களே அங்கம் வகித்தன; ஆனால், 1967-ல் சராசரி 418 குடும்பங்கள் அங்கம் வகித்துள்ளன. இக்கூட்டுப் பண்ணையின் சராசரிப் பரப்பளவு 1,300 ஹெக்டேரிலிருந்து 2,800 ஆக உயர்ந்துள்ளது. 1952-ல் ஒவ்வொரு பண்ணையிலும் சராசரி 313 கால் நடைகள் இருந்தன; இவை 1967-ல் 1,092 ஆக அதிகரித்துள்ளன.

கூட்டுப் பண்ணை விவசாயத்திற்குத் தேவைப்படும் இயந்திரக் கருவிகளை 'உழும் இயந்திர நிலையங்கள்' (Machine Tractor Stations—M.T.S.) வழியாகச் சோவியத் அரசாங்கம் விநியோகித்து வருகின்றது. அரசாங்கத்தின் நேரடிக் கண்காணிப்பிலுள்ள அரசாங்கப் பண்ணைகளும் இங்கிருந்துதான் இயந்திரத் தளவாடங்களைப் பெறுகின்றன. பண்ணைகளின் தேவைக்கேற்ப இயந்திரங்களை விநியோகிக்கும் நிலையங்கள் சோவியத் நாடெங்கும் அமைக்கப்பட்டுள்ளன. பண்ணைகளுக்கு இந் நிலையங்கள் புரியும் பணிகளுக்கு ஈடாக விளைச்சலில் ஒரு பகுதி அளிக்கப்படுகிறது. 1958ஆம் ஆண்டின் கணக்குப்படி இந்நிலையங்கள் சுமார் 8,400 இருந்தன. இவற்றில் பணிபுரிந்தோரின் எண்ணிக்கை 1·25 மில்லியனாகும். 1958-ல் இந்நிலையங்கள் விற்ற இயந்திரங்களில் கூட்டுப் பண்ணைகள்தாம் பெரும்பாலானவற்றை வாங்கியிருக்கின்றன. இயந்திரங்களை விற்பது மட்டுமின்றிக் கூட்டுப் பண்ணைகளுக்குச் சொந்தமான இயந்திரங்களைப் பழுதுபார்க்கும் பணியையும் இவை மேற்கொண்டுள்ளன. இயந்திரங்களுக்குத் தேவையான பாகங்களையும் இவை விற்கின்றன. உலகப் போருக்கு முன்னர்ச் சுமார் 6,647 நிலையங்கள் இருந்தன. தற்போது இந் நிலையங்களின் அபிவிருத்திக்கென்று பல திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இந் நிலையங்கள் அரசாங்கத்திற்கும் கூட்டுப்பண்ணைகளுக்குமிடையே நல்ல பாலம்போல் பணியாற்றி வருகின்றன. ஒவ்வொரு நிலையமும் சராசரி 30 முதல் 40 பண்ணைகளுக்குத் தொண்டாற்றி வருகிறது. கூட்டுப் பண்ணைகளில் 80 சதவீத வேலை இயந்திரங்

களைக்கொண்டே செய்யப்படுகின்றன. 1968ஆம் ஆண்டில் இந் நாட்டுக் கூட்டுப் பண்ணைகளிடம் 1·7 மில்லியன் உழும் இயந்திரங் களும், 0·55 மில்லியன் அறுவடை இயந்திரங்களும், ஒரு இலட்சத் திற்கும் அதிகமான மோட்டார் வாகனங்களும், இதர இயந்திரக் கருவிகளும் இருந்தன. போருக்குப் பின்னர் இப் பண்ணைகள் கொண்டுள்ள உழும் இயந்திரங்கள் 220 சதவீதம் அதிகரித்துள்ளது. விவசாய உற்பத்தியும் பிரமிக்கத்தக்க வகையில் உயர்ந்துள்ளது. 1913ஆம் ஆண்டை ஆதார ஆண்டாகக் கொண்டு பார்த்தால் இப் பண்ணைகளின் உற்பத்தியின் குறியீட்டெண் (Index Number) 1940-ல் 140 ஆக உயர்ந்து, பின்னர் 1945-ல் 86 ஆகக் குறைந்து, மறுபடியும் 1950-ல் 140 ஆகவும், 1960-ல் 224 ஆகவும், 1965-ல் 252 ஆகவும், 1967-ல் 276 ஆகவும் அதிகரித்துள்ளது.

இக் கூட்டுப் பண்ணைகளின் நிலத்தில் ஒரு பகுதி மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்தப்படுகிறது. கால் நடைகளுக்குத் தேவை யான தீவனமும் பயிர் செய்யப்படுகிறது. காய்கறி உற்பத்தியை யும் பால் பண்ணைகளையும்கூட இக் கூட்டுப் பண்ணைகளில் காணலாம். குளிர்காலத்தில் காய்கறிகள் பயிரிடுவதற்கென்று கண்ணாடி அரங்குகள் அமைக்கப்படுகின்றன. வெள்ளைப்பன்றி, கரும்பன்றி, கோழிகள் முதலிய கால்நடைகளும் இப் பண்ணை களில் வளர்க்கப்படுகின்றன. இனி, இக்கூட்டுறவுப் பண்ணைகள் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றன என்பதைக் காண்போம்.

பண்ணைகளின் நிர்வாகம்

இக் கூட்டுப் பண்ணைகள் ஜனநாயக அடிப்படையில் நிர்வகிக் கப்படுகின்றன. உறுப்பினர்கள் அனைவரையும் கொண்ட பொதுக் குழுதான் நிர்வாகத் திட்டங்களை வகுக்கிறது இப் பொதுக்குழு இயக்குநர் குழுவையும் அக் குழுவின் தலைவரையும் தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கிறது. கூட்டுப் பண்ணையின் நிர்வாகத்தை இக் குழு தான் நேரடியாக மேற்கொள்கிறது. மேலும், உறுப்பினர்கள் ஒரு சில பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் குறிப்பிட்ட தொரு வேலையைச் செய்கிறது. இப்பிரிவின் தலைவர்களை இயக்குநர் குழுவே நியமிக்கின்றது. உறுப்பினர்கள் அனைவருக்கும் உழைப் பிற்கேற்ற ஊதியம் வழங்கப்படுகிறது. பொதுவாக, தொழிலாளர் பிரிவுகள் நிலத் தொழிலாளர் படை (Field Brigade), உழும் இயந் திரத் தொழிலாளர் படை (Tractor Brigade), பால்பண்ணைத் தொழிலாளர் படை (Dairy Brigade) என்று மூன்று வகைப்படும். ஒவ்வொரு படையும் செய்ய வேண்டிய பணியும் காலமும் இயக்குநர் குழுவால் நன்கு ஆராயப்பட்டு நிர்ணயிக்கப்படுகிறது.

உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒருநாளில் செய்யும் சராசரி வேலையைக்கொண்டு ஊதியம் அளிக்கப்படுகிறது. வேலைத் திறனும் எடை போடப்படுகிறது. ஒருவேலை நாளை அடிப்படையாகக்கொண்டு 'திறமையுள்ள வேலைக்கு' (Skilled Labour) 1·5 அல்லது 2 வேலை நாள்களாகவும், 'திறமை குறைந்த வேலைக்கு' (Unskilled Labour) 0·5 அல்லது 0·75 வேலை நாளாகவும் நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக உற்பத்திசெய்யும் உறுப்பினர்களுக்கு அதற்கேற்ற அதிகப்படி ஊதியமும் வழங்கப்படுகிறது. தற்போது இம் முறை ஒழிக்கப்பட்டு, அதற்குப் பதிலாக அரசாங்கப் பண்ணைகளில் உள்ளதைப் போல் 'உத்தரவாதத் தொகை' (Guaranteed Amount) மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டுப் பண்ணைகளின் மொத்த வருமானம் ஆண்டுதோறும் சிறப்பாகப் பகிரப்படுகிறது. விளைச்சலில் ஒரு பகுதி விதைக்காகவும் கால்நடைகளுக்காகவும் ஒதுக்கப்படுகிறது. பண்ணைகளின் மொத்த விளைச்சலையும் வருமானத்தையும் அடிப்படையாகக்கொண்டு அரசு வரிவிதிக்கிறது; எனவே, வருமானத்தில் குறிப்பிட்டதொரு சதவீதம் வரியாகச் செலுத்தப்படுகிறது. வருமானத்தில் பிறிதொரு பகுதி குழந்தைகள் விளையாடும் பூங்காக்கள், உடல்நல நிலையங்கள், ஓய்வு விடுதிகள், நூல் நிலையங்கள், நாடக, திரைப்பட அரங்குகள் போன்ற வசதிகளுக்காக ஒதுக்கப்படுகிறது. மற்றுமொரு பகுதி சேமிப்பு நிதிக்காகவும், கடன் தீர்ப்பு நிதிக்காகவும் ஒதுக்கப்படுகிறது. மேலும், பண்ணைகளிலுள்ள கால் நடைகள், இயந்திரங்கள், விளைபொருள்கள் ஆகியவற்றிற்குக் 'காப்புறுதி' வசதியும் செய்யப்படுகிறது. கூட்டுறவுப் பள்ளிகளை நடத்துவதற்கும் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்வதற்கும் ஒரு கணிசமான தொகை ஒதுக்கப்படுகிறது. எஞ்சியுள்ள வருமானத்தில் உழும் இயந்திர நிலையங்களுக்குச் சேர வேண்டிய தொகை அளிக்கப்படுகிறது. இவையெல்லாம் செலுத்தப்பட்ட பின் எஞ்சியிருக்கும் வருமானம் உறுப்பினர்களின் வேலைக்கேற்பப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

11. அமெரிக்க ஐக்கிய நாட்டில் கூட்டுறவு இயக்கம்

(Co-operative Movement in the U.S.A)

உலக நாடுகளில் செல்வமும் சீரும் பெற்று முன்னணியில் இருக்கும் நாடு அமெரிக்கா. முதலாளித்துவ அமைப்பில் முன்னேறிக்கொண்டிருக்கும் இந்நாட்டின் கூட்டுறவு இயக்கம் பழமையானதாகும். 1620ஆம் ஆண்டில் இந்நாட்டிற்குக் குடியேறச் சென்ற நூறு பயணிகள் "ஒருவருக்கொருவர் உதவி செய்யவேண்டும்" என்ற ஒப்பந்தத்தை மேற்கொண்டு இப்புதிய பூமியில் குடியமர்ந்தனர். எல்லோரும் ஒன்றுபட்டுத் தமக்குத் தேவையான குடியிருப்புகளை உருவாக்கினர். பயிர்த்தொழில், சாலைகள் அமைத்தல் போன்ற பல காரியங்களில் கூட்டுறவு மனப்பான்மையுடன் ஈடுபட்டனர். எனவே, இந்நாட்டின் வரலாறே கூட்டுறவுத் தத்துவத்தில்தான் தொடங்கிற்று.

தொடக்கத்திலேயே விவசாயிகள்தாம் கூட்டுறவுக் கொள்கைகளைத் தாமாகவே மேற்கொண்டு கட்டடங்கள், பாலங்கள் போன்றவற்றைக் கட்டி, காடுகளைத் திருத்தி அமைத்து வாழ முற்பட்டனர். பெரும்பாலும், கிராமப்புறங்களில்தாம் கூட்டுறவு இயக்கம் தோன்றியது. பல ஆண்டுகளுக்குப் பின்னர்த்தான் நகர்ப்புறங்களுக்கும் பரவியது.

புதிதாக இந்நாட்டில் குடியேறிய மக்கள் ஏராளமாகக் கிடைத்த மரங்களைக் கொண்டே தம் வீடுகளையும் இதரக் கட்டடங்களையும் அமைத்துக் கொண்டனர். இரவில் வெளிச்சத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட நெருப்பு அவர்களுக்குப் பெரும் பிரச்சினையாகத் தோன்றியது. வீடுகள், கடைகள், விவசாயப் பண்ணைகள் முதலியன அடிக்கடி தீ விபத்திற்குள்ளாயின. இதனால் பலர்

வீடிழந்து தவித்தனர். இத் தருணத்தில்தான் அமெரிக்கத் தலைவர்களில் ஒருவரான பெஞ்ஜமின் ப்ராங்ளின் (Benjamin Franklin) வீடிழந்து தவிக்கும் மக்களின் துயரைப் போக்கும் வழி முறைகளை ஆராய்ந்தார். பிலடெல்பியாவில் வாழ்ந்துவந்த தம் நண்பர்களுடன் கலந்தாலோசித்து ஒரு தீர்வு கண்டார். வீடிழந்தோர் புதிய வீட்டைத் தாமே கட்டுவது என்பது இயலாது; எனவே, பல மக்கள் ஒன்றுபட்டு ஒரு "காப்புறுதி அமைப்பை" (Co-operative Insurance) அமைத்துக்கொள்ள அடிகோலினர். அவரது திட்டப்படி, இக்காப்புறுதி அமைப்பின் உறுப்பினர்கள் தத்தமக்குரிய பங்குத் தொகையைத் தீ விபத்தால் பாதிக்கப்படுவோரின் நிவாரணத்திற்காக அளிக்கவேண்டும். தாமே தமக்குள் ஒருவரை செயலாளராகத் தேர்ந்தெடுத்து இவ்வமைப்பை நிருவகிக்கவேண்டும். அவரது கருத்தை மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயங்கினர்; எனினும், நாளடைவில் அவரது எண்ணம் செயலாக்கப்பட்டது; மக்களிடையே செல்வாக்கும் பெற்றது.

கூட்டுறவின் வரலாறு

அமெரிக்காவில் கூட்டுறவு இயக்கம் மக்களாலேயே தொடங்கப்பட்டதால் 1865ஆம்ஆண்டுவரை இவ்வியக்கத்திற்கு ஆதரவான சட்டம் ஏதும் நிறைவேற்றப்படவில்லை. 1865ல்தான் முதன் முதலாகக் கூட்டுறவுச் சட்டம் அரசால் கொண்டுவரப்பட்டது. இதன் பயனாக அமெரிக்காவில் நடைபெற்றுவந்த கூட்டுறவுப் பால் பண்ணைகள், காப்புறுதி அமைப்புகள், கால்நடைச் சங்கங்கள், விவசாயக் கொள்முதல் சங்கங்கள் அரசாங்கத்தால் அங்கீகாரம் பெற்றன. கூட்டுறவு இயக்கமும் வேரூன்றித் தழைக்கத் தொடங்கியது. 1867-ல் சுமார் 400 பால் பண்ணைகள் நல்ல முறையில் இயங்கி வந்ததாகத் தெரிகிறது. கூட்டுறவுச் சட்டம் இயற்றப்படுவதற்குமுன் இயங்கிவந்த சங்கங்கள் வெறும் கூட்டுச் சங்கங்களாகவேதாம் கருதப்பட்டன. ஆனால், சட்டம் நிறைவேறிய பின் கூட்டுறவு இயக்கமே புதிய பாணியில் நல்ல மெருகுடன் தழைக்கத் தொடங்கியது. முறையான வளர்ச்சி 'கிரேன்ஜ் இயக்கம்' (Grange Movement) என்ற பெயரில்தான் தொடங்கியது. இவ்வியக்கம் தோன்றக் காரணமாயிருந்தவர் 'மினிசோட்டா' நகரைச் சேர்ந்த திரு. ஹட்சன் கெல்லி (Hudson Kelly) ஆவர். இவர் ஒரு சாதாரண விவசாயி. அமெரிக்காவின் தெற்கு மாநிலங்களின் வேளாண்மை நிலையை ஆராயும் பொருட்டு அரசாங்கம் இவரை நியமித்தது. தம் ஆராய்ச்சியின் அறிக்கையை இவர் அரசாங்கத்திடம் சமர்ப்பித்ததோடு, விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க 'கிரேன்ஜ்' என்னும் பெயரில் கூட்டுறவுச் சங்கங்

களையும் தொடங்கினூர். இச் சங்கங்கள் உள்ளூர்ச் சங்கங்கள், மாநிலச் சங்கங்கள், தேசியச்சங்கம் என்ற மட்டங்களில்தொடங்கப் பட்டன. உள்ளூர் விவசாயிகளால் தொடங்கப்பட்ட சங்கங்கள் உள்ளூர்ச் சங்கங்கள் என்று பெயரிடப்பட்டன; ஒவ்வொரு மாநிலத்திலுமிருந்த உள்ளூர்ச் சங்கங்கள் ஒன்றுசேர்ந்து மாநிலச் சங்கங்களை உருவாக்கின. மாநிலச் சங்கங்கள் அனைத்தும் ஒன்று பட்டு 1867-ல் தேசியச் சங்கத்தைத் தொடங்கின. இவ்வாறு திரு. கெல்லி அவர்களால் தொடங்கப்பட்ட உள்ளூர்ச் சங்கங்கள் விரைவாக விரிவடைந்து 1874-ல் 11,927 ஆக வளர்ச்சி பெற்றன. தொடக்கத்தில் இச்சங்கங்கள் அனைத்தும் விவசாயத்திற்கு வேண்டிய பொருள்களைக் கொள்முதல் செய்வது அல்லது விளைச்சல் பொருள்களை விற்பனை செய்வது அல்லது இரண்டு பணிகளையுமே சேர்த்துச் செய்வது என்ற பாணியில் இயங்கி வந்தன. நாளடை வில் வெறு பல தொழில்களையும் இச்சங்கங்கள் மேற்கொள்ள லாயின. 'கிரேன்ஜ்' என்ற இச் சங்கங்கள் வளர்ச்சி பெற்றுவந்த சமயத்தில் 'விவசாயக் கூட்டணி' (Farmers' Alliance), 'விவசாய சக்கரம்' (Agricultural Wheel), அமெரிக்க விவசாயக் கூட்டுறவு, கல்விச் சங்கம் போன்ற இதரக் கூட்டுறவுச் சங்கங்களும் வளர்ச்சி பெற்றன. இவையனைத்தும் அமெரிக்காவில் கூட்டுறவு இயக்கம் வலுப்பெற உறுதுணையாயின. இந்நாட்டின் கூட்டுறவு இயக்கத்தை முறையாகத் தெரிந்துகொள்ளக் கிராமக் கூட்டுறவு, நகரக் கூட்டுறவு என்ற இரு பிரிவில் ஆராய்தல் நன்று.

கிராமக் கூட்டுறவு இயக்கம்
(Rural Co-operative Movement)

அமெரிக்காவில் ஏராளமான நிலப்பகுதி இருப்பதோடு, அவையனைத்தும் புதிய, செழுமையான நிலமாயிருப்பதாலும் அதிக மாக உற்பத்தி செய்ய முடிந்தது. ஆனுல், நாளடைவில் இந்நிலை மாறித் தமக்குத் தேவையான தரமான விதைகள், உரங்கள், கால் நடைத் தீவனம், விவசாயக் கருவிகள் ஆகியவற்றைப் பெறுவதில் விவசாயிகள் சிரமப்பட்டனர். பெரிய வியாபாரிகளையே நம்பி, அதிக விலைக்கு வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, இத்தொல்லையை நீக்க நினைத்த அமெரிக்க விவசாயிகள் தாமே தமக்குத் தேவைப்படும் விவசாயப் பொருள்களைக் கொள்முதல் செய்து விநியோகிக்கலாமென்ற நோக்கத்தில் விவசாயக் கூட்டுறவு விநியோகச் சங்கங்களைத் தொடங்கலாயினர்.

விநியோகச் சங்கங்கள் : பயிர்த் தொழிலுக்குத் தேவையான பொருள்களைப் பெற்று, மலிவாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்கென்று முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட சங்கம் நியூயார்க் மாநிலத்தில்தான். இதைத் தொடர்ந்து பிற மாநிலங்களிலும் இவ்வகைக் கூட்டுறவு விநியோகச் சங்கங்கள் வளரலாயின. இச் சங்கங்கள் அனைத்தும் உறுப்பினர்களுக்குத் தேவையான விவசாயச் சாதனங்களைப் பிற நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்து, பின்னர் அவற்றை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யலாயின. நாளடைவில் பிற நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செ வதற்குப் பதிலாகத் தாங்களே அவற்றை உற்பத்தி செய் து விநியோகிக்க முற்பட்டன. விவசாயத்திற்குத் தேவையான பொருள்களை மட்டுமின்றி, தட்டுமுட்டுச் சாமான்கள் போன்ற நுகர்வுப் பொருள்களையும் தற்போது விநியோகம் செ து வருகின்றன. தொடக்கத்தில் இச் சங்கங்கள் அனைத்தும் தனித்தனியாகவே செயல்பட்டு வந்தன. ஆனால், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இவை தமக்கெனத் தலைமைச் சங்கங்களை ஏற்படுத்தி இயங்கலாயின. இதனால் தனிப்பட்ட நிறுவனங்களுடனும் வணிகர்களுடனும் போட்டியிட்டு இச்சங்கங்கள் வலுவடைந்து வருகின்றன. இயந்திரங்களைக் கொண்டே பண்ணை வேலைகளைச் செய்யத் தொடங்கியபின் இயந்திரங்களுக்குத் தேவைப்படும் பெட்ரோல், டீசல் போன்ற எரி பொருள்களை விநியோகம் செய்வதற்கென்றும் பல சங்கங்கள் தோன்றியுள்ளன. இவ்வாறாக, அமெரிக்காவில் விவசாயிகளுக்குத் தேவைப்படும் உரம், விதை போன்ற பொருள்களை விநியோகம் செய்வதற்கென்றும், பண்ணை இயந்திரங்களுக்குத் தேவைப்படும் பெட்ரோல், டீசல் போன்ற எரி பொருள்களை விநியோகம் செய் வதற்கென்றும் இருவகையான சங்கங்கள் செயலாற்றி வருகின்றன. முதல்வகைச் சங்கங்களில் கிழக்கு மாநில விவசாயப் பரிவர்த்தனை (Eastern States Farmers' Exchange), விவசாயக் கிரேன்ஜ் லீக் பரிவர்த்தனை (The Grange League Farmers Exchange), தெற்கு மாநிலக் கூட்டுறவுச் சங்கம் (Southern States' Co-operatives), விவசாயக் கூட்டுறவுப் பரிவர்த்தனை (The Farmers' Co-operative Exchange) ஆகிய நான்கும் பிரபலமடைந்துள்ளன. இரண்டாவது வகைச் சங்கங்கள் பண்ணைக் கழகத்தினால் (Farm Bureau) நடத்தப்படுகின்றன. இவ்வகைச் சங்கங்கள் ஒன்றுசேர்ந்து தமக்கென மாநில மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் தலைமைச் சங்கங்களை உருவாக்கியுள்ளன. இவற்றில் திறமையும் வலிமையுமிக்க சங்கங்கள் சொந்தமாகவே எண்ணெய்க் கிணறுகள், எண்ணெய் சுத்தி செய்யும் நிறுவனங்கள் ஆகியவற்றை நடத்தி வருகின்றன.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

நியாயமான விலையில் விவசாயத்திற்குத் தேவையான சாதனங்களைப் பெற்றால் மட்டும் போதாது; பண்ணையில் விளையும் பொருள்களை நல்ல விலைக்கு விற்றால்தான் விவசாயிகள் பயனடையமுடியும் என்ற உண்மையை உணர்ந்த அமெரிக்க விவசாயிகள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களையும் ஏற்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு விவசாயப் பொருளுக்கும் தனித்தனி விற்பனைச் சங்கங்கள் தோன்றிச் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவுத் தானிய விற்பனைச் சங்கம், கூட்டுறவுப் பால்பண்ணை, கூட்டுறவு எண்ணெய்ச் சங்கம், கம்பளிக் கூட்டுறவுச் சங்கம், காய்கறி விற்பனைச் சங்கம் போன்ற பலவகை விற்பனைச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் முக்கியமான சிலவற்றைப்பற்றி இங்குச் சுருக்கமாகக் காண்போம்.

தானிய விற்பனைச் சங்கங்கள் : உள்ளூர் விவசாயிகள் சேர்ந்து தமக்கென இவ்வகைச் சங்கங்களை ஏற்படுத்தியுள்ளனர். ஒவ்வோர் உறுப்பினரும் அறுவடைக்குப் பின்னர் விற்கக்கூடிய தானியத்தை இச் சங்கங்களின் மூலம் விற்கின்றனர். விலைவாசிகள் சாதகமாக இல்லாவிட்டால் தானியத்தை இச் சங்கங்களிடம் இருப்பு வைக்கின்றனர். அவ்வாறு இருப்பு வைப்பதற்கென்று ஒவ்வொரு சங்கமும் தானியக் கிடங்குகளைக் கட்டி வைத்திருக்கின்றன. விலை ஏறியவுடன் இருப்பிலுள்ள தானியங்களை விற்று விவசாயிகள் நல்ல பலனடைய உதவுகின்றன. உள்ளூர்ச் சங்கங்கள் பல சேர்ந்து தமக்கென உயர்ந்த மட்டத்தில் மாநிலச் சங்கங்களைத் தோற்றுவித்துள்ளன. இதனால் தம்மிடமுள்ள தானியங்களை மேல் மட்டத்திலுள்ள சங்கங்களின் வாயிலாகவும் விற்கமுடிகிறது. மேலும், மாநில மட்டத்திலுள்ள சங்கங்கள் இணைந்து தேசிய மட்டத்தில் ஒரு தலைமைச் சங்கத்தை உருவாக்கியுள்ளன. இத் தலைமைச் சங்கத்தின் செயலகம் சிகாகோ நகரில் சிறப்பாக இயங்கி வருகிறது. தானியங்களை ஏற்றுமதி செய்யும் பணியையும் இத்தலைமைச் செயலகம் செய்து வருகிறது. இவ்வகைத் திட்டத்தின் வாயிலாக அமெரிக்க விவசாயிகள் நல்ல பயனடைந்து வருகின்றனர்.

பால் பண்ணைகள் : அமெரிக்காவில் இயங்கிவரும் விவசாய விற்பனைச் சங்கங்களில் பழமையானவை இப் பால்பண்ணைகள்தாம். இப் பண்ணைகள் உள்ளூர்ப் பாலேட்டுத் திரட்டுகள், உள்ளூர் பால் வெண்ணெய்-பாலேட்டுச் சங்கங்கள், மத்திய பால்-வெண்ணெய் பாலேட்டுச் சங்கங்கள், வெண்ணெய் விற்பனையேற்பாட்டுச்

சங்கங்கள் என்று நான்கு வகை உள்ளன. குறைந்த அளவு பாலேடு கிடைக்கும் இடங்களிளெல்லாம் அவற்றை ஒன்று சேர்ப்பதற்கென்று உள்ளூர்ப் பாலேட்டுத் திரட்டுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஒன்று திரட்டிய பாலேட்டினை இச் சங்கங்கள் மத்தியக் கூட்டுறவுப் பால் பண்ணைக்கு விற்கின்றன. பாலேட்டின் தரத்திற்கேற்ப உறுப்பினர்களுக்குப் பணம் அளிக்கப்படுகிறது. உள்ளூர்க் கூட்டுறவு பால்-வெண்ணெய்-பாலேட்டுச் சங்கங்கள் தத்தம் உறுப்பினர்களிடமிருந்து அன்றாடம் பால் பண்டங்களைச் சேகரித்து விற்பனை செய்கின்றன. ஆனால், இவ்வகைப் பண்ணைகள் அவ்வளவு அதிகம் கிடையாது. கூட்டுறவு வெண்ணெய் விற்பனையேற் பாட்டுச் சங்கங்கள் உள்ளூர்ப் பண்ணைகளிடமிருந்து பெறும் வெண்ணெய் போன்ற பண்டங்களை விற்பனை செய்யும் பொறுப்பை மேற்கொண்டுள்ளன. இந்த நான்கு வகைச் சங்கங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குத் தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மினிசோட்டா (Minnesota), விஸ்கான்சின் (Wisconsin) ஆகிய இரு மாநிலங்களில்தாம் பெரும் பாலான பால் பண்ணைகள் இயங்கி வருகின்றன. அமெரிக்காவில் பால் பண்டங்களை விற்பனை செய்வதற்கென்று ஐந்து கூட்டமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இந்நாட்டில் விற்பனையாகும் பாலில் 25 சதவீதம் கூட்டுறவுப் பால் பண்ணைகளால் விற்பனை செய்யப்படுகின்றன. அதேபோல் 25 சதவீத வெண்ணெய், 16 சதவீதப் பாலடைக்கட்டி, 70 சதவீதப் பால் பவுடர் இப் பண்ணைகளால் விற்பனை செய்யப்படுகின்றன.

கூட்டுறவு எண்ணெய்-பருத்திச் சங்கங்கள்: பருத்தி எண்ணெய் போன்ற பொருள்களை விற்பனை செய்வதற்சென்றும் பல கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பருத்தி, எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றை ஏராளமாக விற்பனை செய்வதற்கும், அவற்றைப் பக்குவப்படுத்தி விற்பனை செய்வதற்கும் இச் சங்கங்கள் முயன்று வருகின்றன. பருத்தி விதையிலிருந்தும், எண்ணெய் வித்துக்களிலிருந்தும் எண்ணெய் எடுப்பதற்கென்று பல தொழிற்சாலைகளை இச்சங்கங்கள் இயக்கி வருகின்றன. ஒருசில பெரிய சங்கங்கள் தமக்கெனச் சொந்தமாக உரத் தொழிற்சாலைகளையும் பண்டகங்களையும் கொண்டுள்ளன. இச் சங்கங்கள் ஒன்றுசேர்ந்து தேசிய மட்டத்தில் ஒரு கூட்டமைப்பையும் ஏற்படுத்தியுள்ளன. இக் கூட்டமைப்பு தம் உறுப்பினர் சங்கங்களுக்கு வேண்டிய தகவல்களைக் கொடுத்து அவற்றின் முன்னேற்றத்திற்கு உறுதுணை செய்து வருகிறது. உறுப்பினர்களிடமிருந்து வரும் பருத்தியை இச் சங்கங்கள் தரம் வாரியாகப் பிரித்துப் பண்டகங்களில் பாதுகாத்து, உரிய நேரத்தில் விற்பனைசெய்து பணிபுரிகின்றன. உறுப்பினர்கள் கொண்டுவரும்

பருத்தியின்பேரில் கடன் வசதிகளும் செய்து தரப்படுகின்றன. மேலும், அவரவர்களின் பருத்தி அளவுக்கேற்ப இலாப ஈவும் அளிக்கப்படுகிறது.

கூட்டுறவுக் கம்பளிச் சங்கங்கள்

கூட்டுறவுக் கம்பளிச் சங்கங்கள் உள்ளூர்ச் சங்கங்கள், பிராந்தியச் சங்கங்கள், மாநிலச் சங்கங்கள் என்று மூன்று மட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் தலைமைக் கூட்டமைப்பாகத் தேசிய மட்டத்தில் 'தேசிய கம்பளி விற்பனைச் சங்கம்' உள்ளது. பிராந்தியச் சங்கங்களும் மாநிலச் சங்கங்களும் இத் தேசியச் சங்கத்தின் வாயிலாகத்தான் கம்பளியை விற்பனை செய்கின்றன. உள்ளூர்க் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களிடமிருந்து பெரும் கம்பளியைப் பிராந்தியச் சங்கங்களுக்கு அனுப்புகின்றன. இவ்வாறுக், கீழ்மட்டத்திலுள்ள சங்கங்களிடமிருந்து வருகின்ற கம்பளியைத் தேசியச் சங்கம் தரவாரியாகப் பிரித்து விற்பனை செய்கிறது. அவ்வப்போது நிலவும் அங்காடி நிலவரங்களை இத்தேசியச் சங்கம் கீழ்மட்டத்திலுள்ள சங்கங்களுக்குத் தெரிவிக்கின்றது. கம்பளியின் தரத்தைப் பரிசோதனை செய்வதற்சென்று ஆய்வுக்கூடத்தையும் வைத்துள்ளது. நாட்டில் உற்பத்தியாகும் மொத்தக் கம்பளியில் நான்கில் ஒரு பங்கு இத்தேசியச் சங்கத்தால் விற்பனை செய்யப்படுகிறது. உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் படும் கடன் வசதியைச் செய்து கொடுப்பதற்கென்று 'தேசியக் கம்பளிக் கடன் கார்ப்பரேஷன்' ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. பொதுவாகப் பிராந்தியச் சங்கங்களின் வாயிலாகத்தான் சங்க உறுப்பினர்கள் கடன் பெறுகின்றனர். தேசியக் கூட்டமைப்புச் சங்கம் பாஸ்டன் (Boston) நகரில் அமைக்கப்பட்டு சிறப்பாகப் பணிபுரிந்து வருகிறது.

காய்கறி, பழ விற்பனைச் சங்கங்கள்: அமெரிக்காவிலுள்ள மாநிலங்கள் அனைத்திலும் காய்கறி, பழ விற்பனைச் சங்கங்கள் பிரபலமாக இயங்கி வருகின்றன. இச் சங்கங்கள் உலகப் புகழ் வாய்ந்தவையாகும். இவற்றின் அமைப்புப் பல மட்டங்களைக் கொண்டது. அடித்தளத்தில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட ரீதியில் மாவட்ட சங்கங்களும், மேல்மட்டத்தில் பழ விற்பனைக் கூட்டமைப்புகளும் உள்ளன. மேல்மட்டத்திலுள்ள கூட்டமைப்பு முக்கியமான நகரங்கள் தோறும் தம் பதிலாள்களை நியமித்து, அவர்களின் வழியாக மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்கிறது. இக் கூட்டமைப்புகள் விளம்பரத்திற்கென்று ஏராளமான பணத்தைச் செலவிடுவதோடு, நவீன உபாயங்களையும் கையாள்கிறது. பழ ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றையும் நடத்தி

வருகிறது. அதனோடு, தமக்குச் சொந்தமான போக்குவரத்து வாகனங்களையும் கொண்டுள்ளது. உள்ளூர்ச் சங்கங்கள் தத்தம் பழங்களைத் தரம் பிரித்து, கூடைகளில் பக்குவமாக அடைத்து மாவட்டச் சங்கங்களுக்கும் கூட்டமைப்பிற்கும் அனுப்புகின்றன. இவ்விருவகைச் சங்கங்களும் விற்பனை ஏற்பாட்டைச் செய்கின்றன. நாட்டில் விற்பனையாகும் பழ வகைகளில் 75 முதல் 90 சதவீதம் வரை மத்தியக் கூட்டமைப்பினால்தான் விற்பனையாவதாக அறிய வருகிறோம். கூட்டுறவுப் பழ விற்பனை நிலையங்களில் கலிபோர்னியாப் பழ உற்பத்தியாளர் நிலையம்தான் மிகப் பிரபலமானதாகும்.

கோழி, முட்டை விற்பனைச் சங்கங்கள் : இவ்வகைச் சங்கங்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டன. இச் சங்கங்கள் மட்டுமின்றி, ஏனையச் சங்கங்களும்கூடக் கோழி, முட்டை விற்பனையையும் செய்து வருகின்றன. 1956-57 கணக்கெடுப்பின்படி அமெரிக்காவில் மொத்தம் 47 பிராந்திய முட்டைச் சங்கங்கள் இருந்ததாகவும் அவற்றின் விற்பனை 200 மில்லியன் டாலருக்குமதிகமாக இருந்ததெனவும் தெரியவருகிறது. அமெரிக்காவில் விற்பனையான முட்டையில் 12 முதல் 14 சதவீதம்வரை இச் சங்கங்களால் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. அதேபோல் மொத்தக் கோழி விற்பனையில் 40 முதல் 45 சதவீதம் வரையும், வான்கோழி விற்பனையில் 14 முதல் 17 சதவீதம் வரையும் இச் சங்கங்களால் செய்யப்பட்டதாகவும் அறிய வருகிறோம்.

மேற்கூறிய விவசாய விற்பனைச் சங்கங்கள் மட்டுமின்றிப் புகையிலை, அரிசி, சர்க்கரை ஆகிய இதர பண்டங்களுக்கும் அமெரிக்காவில் விற்பனைச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. சுருங்கக் கூறின், எல்லா விவசாயப் பண்டங்களுக்குமே தனித்தனி விற்பனைச் சங்கங்கள் ஒரே மாதிரியாக அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. விவசாயப் பொருள்களின் விற்பனையில்தான் கூட்டுறவு இயக்கம் இந்நாட்டில் வளர்ச்சி பெற்றுப் பிரபலமடைந்துள்ளது எனலாம்.

அரசாங்க உதவி : அமெரிக்க அரசாங்கம் தனது விவசாயத் துறை வழியாக இச் சங்கங்களுக்குச் செய்துவரும் உதவி பாராட்டிற்குரியதாகும். மத்திய அரசு மட்டுமின்றி, மாநில அரசுகளும், விவசாயக் கல்லூரிகளும் இச் சங்கங்களுக்கு உறுதுணையாக உள்ளன. 1929ஆம் ஆண்டில் விவசாய விற்பனைச் சட்டத்தை மத்திய அரசு அமுலாக்கி, அச் சட்டத்தைச் செயல்படுத்த விவசாய கூட்டுக் கழகம் ஒன்றையும் தோற்றுவித்தது. இக் கழகம் பல்வேறு

விற்பனைச் சங்கங்களுக்கு நிதி உதவி செய்வதற்காக அரசு 500 மில்லியன் டாலர் கொண்ட நிதி ஒன்றையும் உருவாக்கியது. குறைந்த வட்டிக்கு 20 ஆண்டுகள்வரை இக்கழகம் கடன்கொடுத்து வருகிறது. எனவே, விவசாய விற்பனைச் சங்கங்கள் திருப்திகரமாக முன்னேறியுள்ளதில் வியப்பொன்றுமில்லை இச் சங்கங்களின் பணிகளை ஒருங்கிணைப்பதற்கென்று 1930ஆம் ஆண்டு இக் கழகம் ஆறு தேசிய விற்பனை அமைப்புகளை உருவாக்கியது. ஆனால், 1933ஆம் ஆண்டில் இக் கழகத்தின் பணிகள் அனைத்தும் 'பண்ணைக் கடன் நிருவாகம்' (Farm Credit Administration) என்னும் புதிய நிருவாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அரசு காட்டிவந்த அக் கறையின் விளைவாக விற்பனைச் சங்கங்கள் விரைவாக முன்னேறிப் பெருகியுள்ளன. 1960-61-ன் கணக்கெடுப்பின்படி 2,660 தானியச் சங்கங்களும் 1,609 பால் விற்பனைச் சங்கங்களும் அமெரிக்காவில் இருந்ததாக அறிய வருகிறோம்.

கிராமச் சேவைச் சங்கங்கள்
(Rural Service Co-operatives)

கிராமப்புறங்களில் வாழ்ந்துவரும் விவசாயிகளின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கென்று இவ்வகைச் சங்கங்கள் அமெரிக்காவில் செயல்படுகின்றன. குறிப்பாக காப்பீட்டுச் சங்கங்கள், தொலைபேசிச் சங்கங்கள், மின்சாரச் சங்கங்கள், நீர்ப்பாசனச் சங்கங்கள் போன்ற சேவைச் சங்கங்கள் விவசாயிகளுக்கு உதவி செய்து வருகின்றன. காப்பீட்டுச் சங்கங்களில் தீ விபத்திலிருந்து விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சங்கங்கள்தாம் பிரபலமானவை. எனினும், கால்நடைக் காப்பீட்டுச் சங்கங்கள், விபத்துப் பாதுகாப்புச் சங்கங்கள், பயிர்ப் பாதுகாப்புச் சங்கங்கள் என்றும் பலவகைச் சங்கங்கள் இருந்து வருகின்றன. மின்சாரச் சங்கங்கள் விவசாயப் பண்ணைகளுக்குத் தேவையான மின் இணைப்புப் பணிகளைச் செய்து தருகின்றன. அமெரிக்காவில் பண்ணைகளும் பண்ணை வீடுகளும் சிதறிப் பரவலாக இருப்பதால் தனியார் துறையிலுள்ள மின்சாரக் கம்பெனிகள் கிராமப்புற மின் இணைப்புத்தர முன்வராததால்தான் மின்சாரச் சங்கங்கள் தோன்றியுள்ளன. கிராமப்புற மின் இணைப்பிற்கென்று தேசியக் கிராம மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மின்சாரச் சங்கங்களுக்கு நிதி உதவி செய்யும் பணியைக் கிராம மின்சார நிர்வாகத்துறை மேற்கொண்டுள்ளது. இதேபோல் விவசாயிகளுக்கு வேண்டிய தொலைபேசி வசதி, போக்குவரத்து வசதி, உடல்நலப் பணி ஆகியவற்றைச் செய்து தருவதற்கும் தனித் தனிச் சேவைச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

கூட்டுறவு விவசாயக் கடன்

விவசாயிகளுக்கும் விவசாயச் சங்கங்களுக்கும் கடன் உதவி செய்வதற்கென்று அமெரிக்க அரசாங்கம் 1933-ல் "பண்ணைக் கடன் நிருவாக அமைப்பை உருவாக்கியது. இது விவசாயத் துறையின் நிர்வாகத்தின்கீழ்ச் செயல்பட்டு வருகிறது. இக் கடன் நிருவாக அமைப்பின்கீழ் நிலவங்கி, இடைநிலைக் கடன் வங்கி, உற்பத்திக் கடன் கார்ப்பரேஷன், கூட்டுறவுச் சங்க வங்கி எனும் நான்கு வங்கிகள் தனித்தனியாக ஏற்படுத்தப்பட்டுள்ளன இக் கடன் நிருவாக அமைப்பு விவசாயப் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றிற் கான தீர்வுகாண முயன்று வருகிறது. விவசாயிகளுக்குக் கடன் உதவி செய்வதற்காகத் தோன்றியுள்ள நான்கு வகை வங்கிகளும் கீழ்க்காணும் வழியில் இயங்கி வருகின்றன.

நிலவங்கி: விவசாயிகளுக்குத் தேவையான நீண்ட காலக் கடனுதவியை இவ்வங்கி செய்து வருகிறது. 12 பிராந்திய வங்கி களும் 1,200 கிராமத் துணைச் சங்கங்களும் இவ்வங்கியின் உறுப்பினர் களாக உள்ளன கடன்பெற விரும்பும் விவசாயிகள் முதன்முதலில் இச் சங்கங்களில் உறுப்பினர்களாக வேண்டும். கிராமக்கூட்டுறவுச் சங்கங்கள் தத்தமக்கு வேண்டிய கடனைத் தத்தம் பிராந்தியச் சங்கங் களின் வாயிலாகப் பெறுகின்றன. பிராந்தியச் சங்கங்கள் பிராந்திய வங்கிகளின் பங்குகளை வாங்கி உறுப்பினர்களாக வேண்டும். உறுப் பினர்களின் கடன் மனுக்களும் நடத்தையும் நன்கு பரிசீலிக்கப் பட்ட பின்னர்த்தான் கடன் வழங்கப்படுகிறது பிராந்திய வங்கி யின் அனுமதியின்றி உறுப்பினர் எவருக்கும் கடன் வழங்கப்படுவ தில்லை. இவ்வங்கியின் மூலதனம் அரசாங்கத்தால் அளிக்கப்பட்டது. சில சமயங்களில் கடன் பத்திரங்களை விற்பனை செய்தும் இவ் வங்கி தன் மூலதனத்தை அதிகரிப்பதுண்டு.

உற்பத்திக் கடன் கார்ப்பரேஷன்: இக் கார்ப்பரேஷன் 12 பிராந்திய வங்கிகளையும் பல உள்ளூர்க் கூட்டுறவுச் சங்கங் களையும் உறுப்பினர்களாகக்கொண்டு, விவசாயிகளுக்குத் தேவைப் படும் குறுகிய காலக் கடன் உதவியைச் செய்து வருகிறது.

இடைநிலைக் கடன் வங்கி: 12 பிராந்திய வங்கிகளை மட்டும் உறுப்பினர்களாகக்கொண்டு இவ்வங்கி பணிபுரிகிறது. பொதுவாக, இவ்வங்கி தனி நபர்களுக்குக் கடன் கொடுப்பதில்லை. பெரும்பாலும் கூட்டுறவுச் சங்கங்களின் உண்டியல்களை மறுகழிவு செய்வதன் வழியாகத்தான் கடனுதவி செய்கிறது.

கூட்டுறவுச் சங்க வங்கி: இவ்வங்கி விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வசதி செய்து தருவதையே முக்கியப் பணி

யாகக்கொண்டது. கடன்பெற விரும்பும் விவசாயச் சங்கங்கள் இவ்வங்கியின் பங்குகளைப் பெற்றிருக்கவேண்டும். விவசாயப் பொருள்களின்மீதும் நிலச் சொத்தின்பேரிலும் குறுகிய காலக் கடனை இவ்வங்கி அளிக்கின்றது. முதல்வகைக் கடனுக்கு $1\frac{1}{2}$ முதல் 2 சதவீத வட்டியும், இரண்டாவது வகைக் கடனுக்கு $2\frac{1}{2}$ முதல் 3 சதவீத வட்டியும் வசூலிக்கிறது. நிலையான சொத்துகளாகிய நிலம், கட்டடங்கள், விவசாய இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு விவசாயிகளுக்கு நீண்ட காலக் (20 ஆண்டுகள்) கடனும் இவ்வங்கியால் வழங்கப்படுகிறது. இவ்வகைக் கடனைப் பெறுவோர் கடன் தொகைக்கு வாங்கும் நிலையான சொத்தைக் கடன் தீர்க்கும் வரை அடைமானமாகப் பொருளாகத்தான் கருதவேண்டும்.

இதுவரை கிராமப்புற கூட்டுறவு இயக்கத்தினை ஆராய்ந்தோம். இனி, நகர்ப்புறக் கூட்டுறவு அமெரிக்காவில் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளது என்பதைப் பார்ப்போம்.

நகர்ப்புறக் கூட்டுறவு இயக்கம்
(Urban Co-operative Movement)

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

அமெரிக்காவில் நகர்ப்புறக் கூட்டுறவு இயக்கம் அவ்வளவாக வளர்ச்சியடையவில்லை. எனினும் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் மட்டும் ஓரளவு தோன்றி வளர்ந்துள்ளது. அதுவும் பிற நாடுகளில் உள்ளதைப்போல் அவ்வளவு பிரபலமாக முன்னேறவில்லை. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. 1. இந் நாட்டில் வாழும் மக்கள் பல்வேறு இனத்தவர்; பழக்க வழக்கங்களும் வாழ்க்கை முறையும் பலவகைப்படும்; அதனோடு, நிரந்தரமாக ஒரே இடத்தில் குடியிருப்பவர்களுமல்லர். இந் நிலையில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் விரைவாக வளரமுடியாமல் போய்விட்டன. 2. வணிகத் துறையில் கடும் போட்டி நிலவுவதால் விலைவாசிகளெல்லாம் அவ்வளவாக உயராமல் மட்டமாகவே உள்ளன. இதனால் நுகர்வோர் சங்கங்களை உருவாக்க வேண்டுமென்ற அவசியம் இல்லாமல் போய்விட்டது. 3. உடனடியாக ஏற்படும் இலாபம் அல்லது விளைவுகளைக் கணக்கிடுவதுதான் அமெரிக்கர்களின் இயல்பு; பல வருடங்கள் கழித்து விளையும் நன்மைகளைப்பற்றியோ பலன்களைப் பற்றியோ அவர்கள் அதிகமாகக் கவலைப்படுவதில்லை. இம்மாதிரி மனப்பான்மை கொண்ட மக்களிடையே கூட்டுறவுச் சங்கத்தை வளர்ப்பது கடினம். இருப்பினும், அமெரிக்காவில் சில சில்லறை விற்பனைப் பண்டகசாலைகளும் மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

சில்லறை விற்பனைப் பண்டகசாலைகள் : அமெரிக்காவிலுள்ள நுகர்வோர் பண்டகசாலைகள் ஒன்றுக்கொன்று நேரடியாகத் தொடர்புகொள்ளும் வகையில் சங்கிலித் தொடர்போல் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் கண்காணிக்க ஒரு மைய நிறுவனமும் உள்ளது. சில விற்பனைப் பண்டகசாலைகள் நுகர்வுப் பொருள்கள் அனைத்தையும் கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகின்றன; வேறு சில குறிப்பிட்ட பொருள்களை மட்டும் வாங்கி விற்பனை செய்கின்றன. மிகப் பெரிய பண்டகசாலைகளும் கூட்டுறவின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன. இப் பண்டகசாலைகளில் நுகர்வுப் பொருள் விற்பனைக்கென்று பல பிரிவுகள் உள்ளன; அதனோடு, தமக்கென்று சொந்தமான வர்சனங்களும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களும்கூட இருக்கின்றன. பொதுவாக அமெரிக்காவிலுள்ள சில்லறை விற்பனைப் பண்டகசாலைகள் அனைத்தும் தனி வணிகர்களுடன் ஒப்பந்தம் செய்துதான் தமக்கு வேண்டிய பொருள்களைக் கொள்முதல் செய்கின்றன. இது விசித்திரமாகத் தோன்றினும், இதனால் உறுப்பினர்கள் தமக்கு வேண்டிய தரமான பொருள்களை மலிவாகப் பெற முடிகிறது. அதனோடு, வணிகர்களும் கூட்டுறவுப் பண்டகசாலைகளும்கூட இவ் வேற்பாட்டால் பலனடைகின்றனர். அதாவது கூட்டுறவுப் பண்டகசாலைகள் தாமே உற்பத்திசெய்ய இயலாத பொருள்களையும் உறுப்பினர்களுக்கு விற்பனைசெய்ய முடிவதோடு, வணிகர்களின் விற்பனையும் அதிகமாகி விடுகின்றது.

தற்போது தொழிற்சங்கங்களும்கூடத் தமக்கென்று கூட்டுறவுப் பண்டகசாலைகளை அமைப்பதில் அக்கறை காட்டி வருகின்றன. கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதற்காக அமெரிக்காவில் கூட்டுறவு முன்னேற்றக் கழகம் (Council for Co-operative Development) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக உள்ளனர். இக் கழகம் தொழிலாளர் நிறைந்த பகுதிகளிளெல்லாம் உணவுப் பண்டங்களை மலிவாக விற்பனைசெய்ய ஏற்பாடு செய்கிறது. இதன் பயனாக, தொழிலாளர்களே தமக்கென்று கூட்டுறவுப் பண்டகசாலைகளை ஏற்படுத்தத் தூண்டப்படுகின்றனர்.

மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் : சில்லறை விற்பனைச் சங்கங்கள் தமக்கென்று மொத்த விற்பனைப் பண்டகசாலைகளை ஏற்படுத்தியுள்ளன. இம் மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் பல சரக்குப் பொருள்களை மட்டுமின்றி, டயர், பெட்ரோல், மின்கலன்கள் (Batteries) போன்ற பொருள்களையும் கொள்முதல் செய்து விற்பனை செய்கின்றன. இப் பண்டகசாலைகள் தமக்கு

வேண்டிய பொருள்களைத் தாமே உற்பத்தி செய்யாமல் தனிப்பட்ட நிறுவனங்களிடமிருந்து மொத்தமாகக் கொள்முதல் செய்து அவற்றில் தம் கூட்டுறவுச் சின்னத்தை ஒட்டி விற்பனைசெய்கின்றன. பெரிய இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றைக்கூடத் தனிப்பட்ட நிறுவனங்களிடமிருந்துதான் கொள்முதல் செய்கின்றன. மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் 'மத்தியக் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம்' (Central Co-operative Wholesale Superior) என்ற பெயரில் விஸ்கான்சின் மாநிலத்தில் இயங்கும் பண்டகசாலை தான் மிகப் பெரியது. இப் பண்டகசாலையில் மட்டும் சுமார் 120 சில்லறை விற்பனைப் பண்டகசாலைகள் உறுப்பினர்களாக உள்ளன. உறுப்பினராக இருக்கும் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வாக்குரிமையுண்டு; அதனோடு, உறுப்பினர் சங்கங்களில் அங்கம் வகிக்கும் நபர்களில் 50 பேருக்கு ஒரு வாக்குரிமை என்ற விதியும் கடைப்பிடிக்கப்படுகிறது. உறுப்பினர்களாக உள்ள சில்லறை விற்பனைச் சங்கங்களுக்கு அவற்றின் கொள்முதல் மதிப்பிற்கேற்ப ஆண்டுதோறும் பங்கு ஆதாயம் தரப்படுகிறது. மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் தம் உறுப்பினரல்லாத கூட்டுறவுச் சங்கங்களுக்கும்கூட விற்பனை செய்யலாம்; ஆனால், அவற்றிற்கு இலாப ஈவுத் தொகை வழங்கப்படுவதில்லை.

சேவைச் சங்கங்கள்: அமெரிக்காவிலுள்ள பெரிய நகரங்கள் தோறும் பல்வேறு சேவைச் சங்கங்கள் கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. அவற்றில் கூட்டுறவு மனைச் சங்கங்கள், காப்பீட்டுச் சங்கங்கள், கூட்டுறவு விடுதிகள், கூட்டுறவு உண்டிச்சாலைகள் முதலியன குறிப்பிடத்தக்கவை. கூட்டுறவு மனைச் சங்கங்கள்தாம் இந்நாட்டில் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளன. இவை உறுப்பினர் குடும்பங்களுக்கு வேண்டிய வீட்டு வசதியைத் தேடித் தருவதோடு, சொந்தமாகவே நிலம் வாங்கி வீடுகளும் கட்டித் தருகின்றன. 1950ஆம் ஆண்டின் கணக்குப்படி 24,353 உறுப்பினர்களைக்கொண்ட 160 கூட்டுறவு மனைச் சங்கங்கள் இந் நாட்டில் இயங்கி வந்ததாகத் தெரிகிறது. இச் சங்கங்களில் மிகப் பிரபலமானவை நியூயார்க் நகரில்தான் அதிகம் உள்ளன. இக் கூட்டுறவு மனைச் சங்கங்கள் பல சரக்குக் கடைகளையும் வைத்து நடத்துகின்றன. அதனோடு, பால் கடைகள், சலவை நிலையங்கள், மின்சார உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றையும்கூட நடத்தி வருகின்றன.

கல்லூரி மாணவர்களும்கூடத் தங்கள் நலனுக்கென்று பலவகையான கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கியுள்ளனர். மாணவர்கள் தங்களுக்கென்று கூட்டுறவு உண்டிச்சாலைகள், கூட்டுறவு இல்லங்கள் போன்றனவற்றை நடத்தி வருகின்றனர்.

கூட்டுறவுக் கடன் சங்கங்கள் : அமெரிக்காவில் 1934ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட கூட்டுறவுக் கடன் சங்கச் சட்டத்தின் அடிப்படையில் பல்வேறு கடன் சங்கங்கள் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றன. அமெரிக்க நகரங்களில் கடன் சங்கங்கள் தோன்றக் காரணமாயிருந்தவர் திரு. ஃபிலின் (Mr. Filine) என்பவர்தாம். இவரது முயற்சியால்தான் முதன்முதலில் 1909ஆம் ஆண்டில் மசாசுசெட்ஸ் (Massachusetts) மாநில அரசு கடன் சங்கச் சட்டத்தை நிறைவேற்றியது. அடுத்த ஆண்டிலேயே கடன் சங்கம் ஒன்று முதல்முறையாகத் தொடங்கப்பட்டது. பின்னர் ஒருசில ஆண்டுகளுக்குள் மசாசுசெட்ஸ் நியூயார்க், வட கலிபோர்னியா ஆகிய நகரங்களில் 100-க்கும் அதிகமான கடன் சங்கங்கள் தோன்றின. 1921-ல் கடன் சங்கங்களின் வளர்ச்சிக்கென்று தேசிய விஸ்தரிப்பு அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது. திரு. ஃபிலின் அவர்களின் விடா முயற்சியால் 44 மாநிலங்களில் கூட்டுறவுக் கடன் சங்கச் சட்டங்கள் நிறைவேறின. இக்கடன் சங்கங்கள் அதிகமாகத் தோன்றியதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அதாவது, 1929 முதல் அமெரிக்கப் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்த மந்தம் தான் அக்காரணமாகும். இம்மந்தம் தோன்றுவதற்குமுன் அவ்வளவு அக்கறை காட்டாத அமெரிக்கர்கள் இப்போது பெரும் ஆதரவுகாட்டி இச்சங்கங்களை வளர்க்க முன் வந்தனர். 1934ஆம் ஆண்டில் தேசிய விஸ்தரிப்பு அலுவலகம் அகற்றப்பட்டு, அதற்குப் பதிலாக 'கடன் சங்கத் தேசிய அமைப்பு' (Credit Union National Association) தொடங்கப்பட்டது. மாநிலங்களில் இயங்கி வந்த கடன் சங்கங்கள் அனைத்தும் இத் தேசிய அமைப்பில் உறுப்பினர்களாகச் சேர்ந்தன. அப்போது ஏறத்தாழ 3,000 கடன் சங்கங்கள் அமெரிக்காவில் இயங்கி வந்ததாகத் தெரிகிறது; இத் தேசிய அமைப்பின் தலைமை அலுவலகம் 'மடிசன்' (Madison) என்ற நகரில் இயங்கி வருகிறது. கடன் சங்கங்கள் அளிக்கும் தொகைதான் இத் தலைமைக் காரியாலயத்தின் மூலதனமாகும். அமெரிக்காவிலுள்ள கடன் சங்கங்கள் தத்தம் உறுப்பினர்களுக்குக் குறுங்காலக் கடன் தான் அளித்துவருகின்றன அதோடு, சிக்கனத்தின் அவசியத்தையும் அவர்களுக்கு வலியுறுத்துகின்றன. இக் கடன் சங்கங்கள் பள்ளி ஆசிரியர்கள், தபால் ஊழியர்கள், தொழிற் சங்கங்கள் ஆகியவற்றாலும்கூட நடத்தப்படுகின்றன. மத ஸ்தாபனங்கள்கூடத் தமக்கென்று கடன் சங்கங்களை உருவாக்கியுள்ளன. கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தோரும் புராட்டஸ்டாண்ட் மதத்தைத் தழுவியவர்களும் தத்தமக்கென்று இவ்வகைக் கடன் சங்கங்களை நடத்திவருகின்றனர். அமெரிக்காவிலுள்ள நகராட்சிக்கார்ப்பரேஷன் ஊழியர்கள் நடத்திவரும் கடன் சங்கம்தான் இந் நாட்டிலேயே மிகப் பெரிய சங்கமாகும். இக்கடன் சங்கத்தில் 5 டாலர் மதிப்புள்ள பங்கை

வாங்கி எவரும் உறுப்பினராகலாம். இப் பங்குத் தொகையைக் கொண்டுதான் கடன் சங்கங்கள் இயங்குகின்றனவேயன்றி, பிற எவரிடமிருந்தோ கடன் பெறுவதில்லை. இச் சங்கங்கள் அனைத்தும் உறுப்பினர்களின் ஆதரவையே நம்பிச் செயல்படுகின்றன. இச் சங்க உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டுதான் நிருவாகம் நடைபெறுகிறது. மேலும், கடன் குழு, தணிக்கைக்குழு என்று இரண்டு குழுக்களையும் உறுப்பினர்களே உருவாக்குகின்றனர். அரசாங்கத் தணிக்கையாளர்களும் இச் சங்கங்களின் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்கின்றனர். உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கடனுக்கு 6 சதவீத வட்டிதான் வசூலிக்கப்படுகிறது. கடன்பெற்ற உறுப்பினர்கள் தம் கடனை எளிய தவணை முறையில் செலுத்த வகைசெய்யப்பட்டுள்ளது. இச் சங்கங்கள் பெறும் இலாபத்தில் கணிசமான பகுதி காப்பு நிதியில் சேர்க்கப்படுகிறது. மற்றொரு பகுதி உறுப்பினர்களுக்கு இலாப ஈவாக வழங்கப்படுகிறது. 1965ஆம் ஆண்டின் கணக்குப்படி 22,182 கடன் சங்கங்கள் அமெரிக்காவில் இருந்ததாகவும், 16,655,609 பேர் இவற்றின் உறுப்பினர்களாக இருந்ததாகவும் தெரிகிறது.

அமெரிக்க நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய அம்சங்கள்

இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கம் பின்வரும் அம்சங்களைக் கொண்டது:—

1. இந் நாட்டுக் கூட்டுறவு இயக்கம் விவசாயிகளின் இயக்கமாகவே உள்ளது. நகரங்களைக் காட்டிலும் கிராமப்புறங்களில்தாம் கூட்டுறவு இயக்கம் அதிகமாக வளர்ச்சி பெற்றுள்ளது. கிராமப்புறங்களில் நடைபெற்றுவரும் விவசாய விற்பனைச் சங்கங்கள்தாம் இந்நாட்டிலேயே வலுவானவை. ஒவ்வொரு விவசாயப் பொருளுக்கும் தனித்தனி விற்பனைச் சங்கங்கள் இருப்பது குறிப்பிடத் தக்கது.

2. விவசாய விற்பனைச் சங்கங்களுக்கு அடுத்தபடியாகக் கொள் முதல் சங்கங்கள்தாம் வலிமைபெற்று விளங்குகின்றன. இச்சங்கங்கள் தத்தமக்கென்று மையச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தி, அதன் வாயிலாக விவசாயிகளுக்கு வேண்டிய பண்ணைச் சாதனங்களைமட்டுமின்றி, அன்றாட நுகர்வுப் பொருள்களைக்கூடக் கொள்முதல் செய்து விநியோகிக்கின்றன. விற்பனைச் சங்கங்களும் கொள்முதல் சங்கங்களும் தனித்தனியாகச் செய்யும் பணிகள் ஒன்றையொன்று

ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் இச் சங்கங்கள் பெரியனவாக இருப்பதால் சிக்கனமாகவும் இலாபகரமாகவும் செயல்பட முடிகிறது.

3. நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் அமெரிக்காவில் அவ்வளவு பிரபலமாக இன்னும் வளரவில்லை. சில்லறை விற்பனைப் பண்டக சாலைகள்கூடக் கமிஷன் அடிப்படையில்தான் கொள்முதல் செய்து விற்பனை செய்கின்றன.

4. கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும்கூடத் தத்தமக்கென்று கூட்டுறவுப் பண்டகசாலைகளையும் கடன் சங்கங்களையும் வைத்து நடத்துகின்றன. கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் கூடக் கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க முடியும் என்பதற்கு அமெரிக்கா ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

5. அமெரிக்கக் கூட்டரசும் மாநில அரசுகளும் கூட்டுறவு இயக்கத்தை வளர்க்கப் பெருமுயற்சி செய்து வருகின்றன

6. இந்நாட்டில் கூட்டுறவு வங்கிகள் இன்னமும் தோன்றவில்லை. எனவே, கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்கு வேண்டிய கடனைப் பெரும்பாலும் வணிக வங்கிகளிடமிருந்தேதாம் பெற வேண்டியுள்ளது.

7. கூட்டுறவுச் சட்டம் என்று பொதுவான சட்டம் ஏதும் இந்நாட்டில் கிடையாது. எனவே, ஒவ்வொரு மாநிலமும் தத்தம் சூழ்நிலைக்கேற்ப வெவ்வேறு சட்டங்களை இயற்றி, கூட்டுறவு இயக்கத்திற்குத் துணை நிற்கின்றன.

8. கூட்டுறவுக் கல்வியை நாடெங்கும் பரப்புவதற்கும் விளம்பரம் செய்வதற்கும் இந்நாட்டில் பல கூட்டுறவு அமைப்புகள் தேசிய மட்டத்தில் உருவாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

முடிவுரை :

அமெரிக்காவில் கூட்டுறவு இயக்கம் பிற நாடுகளைப்போல் வளர்ச்சிபெறவில்லை என்பது உண்மைதான். இதில் வியப்பொன்றுமில்லை. காரணம், இந் நாடு ஒரு முதலாளித்துவ நாடு; அதனோடு, செல்வம் கொழித்து வறுமையே கண்டிராத மக்களையே பெரும்பாலும் கொண்டுள்ளது. இருப்பினும், ஒருசில துறைகளில் இந்நாட்டுக் கூட்டுறவு இயக்கம் சிறப்புற விளங்குவது குறிப்பிடத் தக்கது. 1929-க்குப்பின் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தினால்

பாதிக்கப்பட்ட அமெரிக்கர்கள் தம் நல்வாழ்விற்கெனக் கூட்டுறவு முறையை நாடினர். மந்தம் மறைந்து செழிப்பம் ஆரம்பித்தவுடன் கூட்டுறவு இயக்கம் மந்தமாகிவிட்டது. தொழில்வளம் நிறைந்த இந் நாட்டில் நுசர்வோர் கூட்டுறவு இயக்கம் வலுப்பெற்று வளர வாய்ப்பில்லாமல் போய்விட்டது. தனியார் துறையிலுள்ள தொழிலதிபர்களும் வணிகர்களும் போட்டியிட்டுப் பொருள்களை ஏராளமாக உற்பத்திசெய்து விற்க முயல்கின்றனர். இதனால் விலைவாசிகள் அவ்வளவாக உயர்வதில்லை; கொள்ளை இலாபம் பெற வேண்டுமென்ற துடிப்பு வணிகர்களிடம் கிடையாது. இதனால் கூட்டுறவுப் பண்டகசாலைகளை ஏற்படுத்த அவசியமில்லாமல் போய் விடுகிறது. மேலும், அமெரிக்கப் பாட்டாளிகள் கைநிறைய ஊதியம் பெறுகின்றனர்; எனவே பிற நாட்டுப் பாட்டாளிகளுக் கேற்படும் தொல்லை இவர்களுக்குக் கிடையாது.

கிராமப்புற, விவசாயக் கூட்டுறவு இயக்கம் மட்டும் செம்மையாக வளர்ச்சி பெற்றுவருகிறது. மேலும், வலுவாக வளர வாய்ப்பும் உள்ளது. தற்போது விவசாய மக்கள் ஒப்பந்த அடிப்படையில் பண்ணை நிர்வாகத்தை மேற்கொண்டு வருகின்றனர். பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து தம் பண்ணை நிர்வாகத்தை இலாபமிக்கதாகச் செயல்படுத்த முனைந்துள்ளனர். இச் சூழ்நிலையில் விவசாயக் கூட்டுறவு இயக்கம் திறமைமிக்கதாகவும், வலுவானதாகவும் வளர்ச்சிபெற்றுத் திகழ அரிய வாய்ப்பு உண்டு. இந்த வாய்ப்பை அமெரிக்க நாட்டு விவசாயக் கூட்டுறவு இயக்கம் இழக்க விடாது என்பது உறுதி.

12. கனடாவில் கூட்டுறவு

கனடா வட அமெரிக்காவிற்கு இடப்புறத்தில் பரந்து காணப் படும் பெரிய நாடாகும். இதன் மொத்தப் பரப்பளவு சுமார் 4 மில்லியன் சதுர மைல்கள்; உலகிலேயே இரண்டாவது பெரிய நாடு கனடாதான்; இந்தியாவைவிட மூன்று மடங்கு பெரியது. பெரிய நாடாக விளங்கினுலும் இதன் மக்கள்தொகை அளவானது தான். 1961-ல் இந் நாட்டின் மக்கள்தொகை 18 மில்லியன்; இம் மக்கள் தொகையில் 45 சதவீதம் பேர் பிரிட்டனிலிருந்தும், 25 சத வீதம் பேர் பிரான்சிலிருந்தும், எஞ்சியோர் இதர ஐரோப்பிய நாடு களிலிருந்தும் வந்து குடியமர்ந்தவர்கள்.

கனடா ஒரு விவசாய நாடாகும். மொத்த நிலப் பரப்பில் ஆறில் ஒரு பங்கு விளைச்சல் நிலமாக உள்ளது. கோதுமை, பழ வகைகளை உற்பத்திசெய்யும் கனடா ஆடுமாடு வளர்த்தல், மீன் பிடித்தல் போன்ற எல்லாத் துறைகளிலும் முன்னேறி வருகிறது. இம்முன்னேற்றத்திற்கு ஏற்ற வகையில் இந் நாட்டின் தட்பவெப்ப நிலையும் அமைந்துள்ளது. உலகிலேயே அதிகமாகக் கோதுமை உற்பத்திசெய்யும் நாடு கனடாதான். தனது தேவைக்குமேல் உற்பத்தியாகும் கோதுமையை ஆசிய, ஐரோப்பிய நாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்கிறது. தற்போது, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, பழங்கள், முட்டை ஆகியவற்றையும் ஏராளமாக ஏற்றுமதிசெய்யத் தொடங்கியுள்ளது. சிறந்த வேளாண்மை முறையும், வியத்தகு அறிவியல் முன்னேற்றமும், நிலையான அரசிய லமைப்பும், உறுதியான பொருளாதார நிலையும் கொண்ட கனடா செல்வமிக்க ஒருசில நாடுகளில் ஒன்ருகத் திகழ்கிறது.

கனடாவின் விவசாயத் துறையில் கூட்டுறவு இயக்கம் பெரும் பங்கு வகிக்கிறது. குறிப்பாக, கோதுமை விற்பனையில் பெரும் பங்கு கொண்டு இந் நாட்டு விவசாயிகளுக்கு அரும் தொண்டாற்றி

வருகிறது. கிராமப்புற மக்களில் 40 சதவீதம் பேர் கூட்டுறவு இயக்கத்தால் பலனடைகின்றனர். 1964ஆம் ஆண்டில் இந் நாட்டின் எல்லாத் துறைகளிலும் 2,500 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வந்தன; 1·8 மில்லியன் பேர் இவற்றில் உறுப்பினர்களாகச் சேர்ந்திருந்தனர். இந் நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனைச் சங்கங்களும், கொள்முதல் சங்கங்களும்தாம் பிரபல மானவை. இச் சங்கங்கள் மட்டும் 1964-ல் 1,500 இருந்தன. இவற்றையடுத்து 659 கூட்டுறவுச் சேவைச் சங்கங்களும் நன்கு வளர்ச்சிபெற்று இருந்தன. கூட்டுறவு மீன்பிடிப்புச் சங்கங்களும் பெரிய அளவில் இயங்கி வந்திருக்கின்றன. மேலும், கடன் யூனியன் களும் இங்கு நன்கு பணியாற்றி வருகின்றன. இந்த யூனியன்கள் கிராமப்புற விவசாயிகளுக்கும் நகர்ப்புறத் தொழிலாளர்களுக்கும் கடன் கொடுத்து வருகின்றன: எனவே, இவற்றைக் கூட்டுறவுச் சங்கங்கள் என்று கூறமுடியாது. 1966-ல் மொத்தம் 4,900 கடன் யூனியன்கள் கனடாவில் இயங்கி வந்தன. இவற்றில் 3·8 மில்லியன் உறுப்பினர்கள் பங்குகொண்டனர். பொருளாதாரச் சிறப்புமிக்க இக் கனடா நாட்டில் கூட்டுறவு இயக்கம் எவ்வாறு தோன்றி வளர்ந் துள்ளது என்பதைச் சுருக்கமாகக் காண்போம்.

கூட்டுறவின் ஆரம்பம்

பல்வேறு நாடுகளிலிருந்து வந்து கனடாவில் குடியேறிய மக்கள் வெகு நாள்களுக்குமுன்பே கூட்டுறவாக வாழ்வதற்கு இசைந்தனர் என்பதை இந் நாட்டு வரலாறு புலப்படுத்தும்; எனினும், 1870ஆம் ஆண்டிற்குப் பின்னர்த்தான் இங்கு முறையான கூட்டுறவு இயக்கம் ஏற்பட்டது. விவசாயமே இந் நாட்டின் முக்கியத் தொழிலாக இருந்து வந்தது; எனவே, விவசாயிகளிடையேதாம் கூட்டுறவு அமைப்புகள் முதலில் தோன்றின. முதல் கூட்டுறவு அமைப்பு 1877-ல் 'டொமினியன் நாட்டுப்புற நிறுவனம்' (Dominion Grange) என்ற பெயரில் தொடங்கப்பட்டது. இந்த அமைப்பு 'ஒன்டாரியோ' (Ontario), 'மனிடோபா' (Manitoba), ஆகிய இடங்களில் பல கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கியது. ஆனால், இச் சங்கங்கள் நீண்ட நாள் இயங்கமுடியாமல் போயின. நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களும் தமக்கென்று கூட்டுறவுப் பண்டகசாலை யொன்றை 1861-ல் தொடங்கினர். இதைத் தொடர்ந்து வேறு சில கூட்டுறவுப் பண்டகசாலைகளும் ஏற்பட்டன. ஆனால், 1900ஆம் ஆண்டிற்குள் இவையனைத்தும் மூடப்பட்டு விட்டன.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

விற்பனைத் துறையில்தான் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறை யில் வளர்ந்துவந்தன. 1900ஆம் ஆண்டுக்குமுன், விவசாயப்

பொருள்கள் அனைத்தையும் தனிப்பட்ட வியாபாரிகளே வாங்கி விற்பனை செய்துவந்தனர். விவசாயிகளிடமிருந்து இப் பொருள்களை விலைக்கு வாங்கி, அவற்றைத் தத்தம் பண்டகங்களுக்குக் கொண்டு வந்து, பின்னர் வெளிநாடுகளுக்கு அவற்றை ஏற்றுமதிசெய்து வந்தனர். இந்தக் கோதுமை வியாபாரம் முழுவதும் இவர்கள் கையில்தாம் இருந்தது. அதனோடு, கோதுமையைப் பிற நாடு களுக்கு அனுப்புவதற்குப் பயன்படுத்தப்பட்ட ரயில்களும் கப்பல் தளங்களும் இவர்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டன. ஆனால், 1900ஆம் ஆண்டில் கப்பல்தளங்களைப் பயன்படுத்தும் உரிமை விவசாயிகளுக்கும் தரப்பட்டது. எனினும், தனிப்பட்ட முறையில் எந்த விவசாயியாலும் இவ் வுரிமையைப் பயன்படுத்த இயலவில்லை. காரணம், கப்பல் நிறையும் அளவுக்கு எவராலும் கோதுமையை உற்பத்திசெய்து விற்பனைக்கு அனுப்ப இயலாததுதான். எனவே, பல விவசாயிகள் ஒன்றுசேர்ந்து தத்தம் கோதுமையை ஒன்று திரட்டிக் கப்பல் கொள்திறனுக்கு வேண்டிய அளவில் கொண்டு வந்து அனுப்பத் தொடங்கினர். இவ்வாறு ஒன்றுபட்ட விவசாயி களின் அமைப்பு நாளடைவில் கூட்டுறவு அமைப்பாக உருவெடுத் தது. 1906-ல்தான் 'தானியப் பயிரிடுவோர் சங்கம்' என்ற பெயரில் முதல் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டது. இதை யடுத்து 1911-ல் அரசாங்கத்தின் ஆதரவுடன் மேலும் ஒரு கம்பெனி (Saskatchewan Elevator Company) தொடங்கப்பட்டது. இவ்விரு அமைப்புகளுமே நாளடைவில் மக்களின் ஆதரவைப் பெற்றன. ஆயிரக்கணக்கான பேர் இவற்றின் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். இவ்விரு அமைப்புகளின் வழியாகத்தான் கனடாவில் கூட்டுறவு இயக்கம் மலர்ந்தது.

1919ஆம் ஆண்டில் கனடா அரசாங்கம் கோதுமை ஏற்றுமதிக் கென்று 'கோதுமைக் கழகம்' (Wheat Board) ஒன்றை ஏற்படுத் தியது. கோதுமை ஏற்றுமதி வியாபாரம் முழுவதும் இக் கழகத் திடமே ஒப்படைக்கப்பட்டது. இக்கழகம் கனடாவின் கோது மையை இறக்குமதி செய்துவந்த நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்துகொண்டு, இலாபகரமான முறையில் வியாபாரம் செய்தது. எனவே, குடியானவர்கள் அனைவரும் இக்கழகத்தை ஆதரித்து வந்தனர். ஆனால், ஒரு வருடத்திற்குப் பின்னர் இக்கழகம் கலைக்கப் பட்டுவிட்டதால் விவசாயிகள் மீண்டும் கவலைப்படலாயினர். மீண்டும் இக்கழகத்தை ஏற்படுத்தப் போராடினர்; ஆனால், கனடா அரசாங்கம் இக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, விவசாயிகள் ஒன்றுசேர்ந்து அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட கோதுமைக் கழகத்தின் அடிப்படையில் பல 'கோதுமைத் திரட்டு களை' (Wheat Pools) அமைத்தனர். இத் திரட்டுகள் மாநில

அரசாங்கங்களின் ஆதரவுடன் நன்கு செயல்படத் தொடங்கின. எனவே, இவற்றைப்பற்றிச் சற்று விரிவாகக் கூறுதல் நன்று.

கோதுமைத் திரட்டுகள்

முதல் கோதுமைத் திரட்டு 1923-ல் ஆல்பர்ட்டா என்னும் மாநிலத்தில் தொடங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து வேறு சில மாநிலங்களிலும் இவ்வகைத் திரட்டுகள் அமைக்கப்பட்டன. இக் கோதுமைத் திரட்டுகள் விவசாய உறுப்பினர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, அறுவடைக்குப்பின் அவர்களின் கோதுமையைப் பெறுகின்றன. பின்னர், அதைச் சுத்தப்படுத்தி, தரம் பிரித்து, தத்தம் கிடங்குகளில் பாதுகாப்பாக வைக்கின்றன. சந்தை நிலைமைக்கேற்ப இக் கோதுமையை நல்ல விலைக்கு விற்கின்றன. இக் கோதுமைத் தொழில் திரட்டுகளின் பணிகளால் கோதுமை விலை அதிக ஏற்றத் தாழ்வின்றி, ஆண்டு முழுவதும் ஒரே சீராக இருந்துவருகிறது. உறுப்பினர்களிடமிருந்து பெற்ற கோதுமையை வங்கிகளில் அடகு வைத்துத் தேவையான பணத்தைப் பெற்று உறுப்பினர்களுக்கு முன் பணமாகக் கொடுக்கின்றன. வருடக் கடைசியில் உறுப்பினர்களின் கோதுமை விற்ற விலையைக்கொண்டு கணக்கிட்டு, அவரவர்கள் பெற்ற முன் பணத்தைக் கழித்துவிட்டு, கணக்குத் தீர்க்கப்படுகிறது. இவ்வாறு வெற்றிகரமாகச் செயல்பட்டு வந்த கோதுமைத் திரட்டுகளில் மூன்று ஒன்றுசேர்ந்து, 'கூட்டுறவுக் கோதுமை உற்பத்தியாளர் சங்கம்' என்ற பெயரில் ஒரு மத்திய விற்பனைக் கழகத்தை உருவாக்கின. இதன் தலைமைச் செயலகம் வின்னிபெக் (Winnipeg) என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

தொடங்கிய சில ஆண்டுகளாக நல்ல முறையில் செயலாற்றி வந்த இத்திரட்டுகள் 1929-ல் ஏற்பட்ட பெரும் பொருளாதார மந்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டன. விலை வாசிகளெல்லாம் சரிந்துவிட்டதனால் இத்திரட்டுகள் இலாபகரமாகப் பணிபுரிய முடியவில்லை. கிடங்குகளில் ஏராளமான கோதுமை இருப்பாகவே இருந்தது. உறுப்பினர்களுக்கு முன்பணமாகக் கொடுக்கப்பட்ட விலையைக் காட்டிலும் சந்தை விலை சரிந்துவிட்டது. இந் நிலையில் வங்கிகளிடமிருந்து இத்திரட்டுகள் பெற்ற கடனைத் திருப்பித்தர இயலவில்லை. இந்த நெருக்கடியான நிலையில்கூட மத்திய விற்பனைக் கழகம் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க வேண்டியிருந்தது. 1935-ஆம் ஆண்டில் கனடா அரசாங்கம் கோதுமை விற்பனைக்கென்று தேசியக் கோதுமை வாரியம் (National Wheat Board) என்ற பெயரில் சக்திவாய்ந்த ஓர் அமைப்பை ஏற்படுத்தியது.

ஆரம்பத்தில் இந்த வாரியம் கோதுமைக்குக் குறைந்த பட்ச விலையை நிர்ணயித்து, அதற்கு உத்தரவாதமும் தந்தது. ஆனால், இவ்விலையைக் காட்டிலும் சந்தை விலை இறங்கியவுடன் நேரடியாகவே கோதுமையைக் கொள்முதல் செய்தது. கோதுமைத் திரட்டுகளைப்போல் இந்த வாரியமும் விவசாயிகளுக்கு முன்பணம் கொடுத்தது. பல கூட்டுறவுக் கிடங்குகளும் இந்த வாரியத்திற்கு உறுதுணையாகச் செயல்பட்டன. கனடாவில் கோதுமை அளவுக்கு மிஞ்சி உற்பத்தி செய்யப்படுவதால் விவசாயிகள் தத்தம் கோதுமையை இருப்பாக வைக்கின்றனர். பின்னர், இந்த வாரியம் அவற்றையெல்லாம் கொள்முதல் செய்து, கோதுமைக் கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கின்றது. அக்கிடங்குகள் தம்மிடமுள்ள கோதுமையைக் கோதுமை மாவு ஆலைகளுக்கு விற்கின்றன. மேலும், இந்த கோதுமை வாரியம் பிற நாடுகளோடு ஒப்பந்தம் செய்து, குறிப்பிட்ட காலத்திற்குள் அந் நாடுகளுக்கு வேண்டிய கோதுமையை ஏற்றுமதி செய்கிறது. இந்த வாரியம் கொள்முதல் செ யும் விலை சந்தை விலையைக் காட்டிலும் அதிகமாக இருப்பதும் உண்டு; இதைச் சரிக்கட்டுவதற்குக் கனடா அரசாங்கம் தற்போது இசைந்துள்ளது.

அமைப்பு: இக்கூட்டுறவு அமைப்பின் அடித்தளத்தில் உள்ளூர்ச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் தனிப்பட்ட விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். ஒருவர் பல சங்கங்களில் உறுப்பினராக இருக்க முடியும்; எனினும், ஒரு சங்கத்தில் மட்டுமே அவர் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தலாம். இச் சங்கங்களுக்கு மேல் பிரதேசச் சங்கங்கள் உள்ளன. இவை உள்ளூர்ச் சங்கங்களால் அமைக்கப்பட்டுள்ளன. விற்பனை யேற்பாட்டின் உச்சியில் மாநிலச் சங்கங்கள் இருக்கின்றன. இவையன்றி, 'கூட்டுறவுக் கோதுமை உற்பத்தியாளர் சங்கம்', கோழி, வாத்து ஆகியவற்றின் தொழில் திரட்டுகள், கம்பளி உற்பத்தியாளர் சங்கம் என்று பல்வேறு கூட்டுறவு அமைப்புகள் இயங்கி வருகின்றன.

நிதி: இக் கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குத் தேவையான நிதியைப் பலவகைகளில் பெறுகின்றன; (அ) உறுப்பினர்களின் பங்கு மூலதனம்; (ஆ) கடன் சங்கங்கள், வங்கிகள், அரசாங்கம் ஆகியவற்றிலிருந்து பெறும் கடன்; (இ) அரசாங்க உத்தரவாதத்தின்பேரில் வங்கிகளிடமிருந்து பெறும் கடன்; (ஈ) சுழல் கடன் அமைப்பிலிருந்து (Revolving Credit System) பெறும் தொகை. இவற்றில் சுழல் கடன் அமைப்பு முறையினால் உறுப்பினர்களுக்கு இலாப ஈவுத் தொகை கொடுக்கப்படுகிறது; ஆனால் இத் தொகை பணமாகக் கொடுக்கப்படாமல் அவரவர் வைப்புக் கணக்கில் வரவு

வைக்கப்படுகிறது. உறுப்பினர்களின் வைப்புத்தொகை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வட்டியுடன் திருப்பித் தரப்படுவதால் இச் சங்கங்களுக்குப் போதிய நிதி வசதி கிடைத்துவிடுகிறது.

நிர்வாகம் : இக் கோதுமைத் திரட்டுகள் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகின்றன. அன்றாட அலுவல்களைக் கவனிப்பதற்கென்று முழு அதிகாரம் பெற்றுள்ள 'நிர்வாகி' ஒருவர் நியமிக்கப்படுகிறார். இவை செயலாற்றும் பகுதி மிகப் பெரியதாக இருந்தால் அவை பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனி நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்படுகிறது. இச் சங்கங்களில் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் இருப்பதால் உறுப்பினர்களின் தொடர்பினைக் கண்காணிப்பதற்கென்று ஆலோசனைத் தலைவர்களும் நியமிக்கப்படுகின்றனர்.

வளர்ச்சி : கோதுமை விற்பனைக்கென்று அமைக்கப்பட்டுள்ள எல்லாச் சங்கங்களிலும் 'கோதுமைத் திரட்டுகள்தாம் மிக முக்கியமானவை. காரணம், கனடாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருளே கோதுமைதான். ஆல்பர்ட்டா (Alberta), சாஸ்கட்சுவான், மணிடோபா ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கோதுமைத் திரட்டுகள்தாம் பெருமளவில் வியாபாரம் செய்து வருகின்றன. கனடாவின் கோதுமை வியாபாரத்தில் 55 சதவீதம் இம் மூன்று மாநிலங்களிலுள்ள கோதுமை திரட்டுகளால் செய்யப்படுகின்றன. கோதுமை வியாபாரம் மட்டுமின்றி, ஓட்ஸ், பார்லி, ரை, சணல் ஆகிய பொருள்களையும் விற்பனைசெய்து வருகின்றன.

மேலும், இத் திரட்டுகள் உறுப்பினர்களின் கால்நடைகளை விற்பதற்கும் உதவிசெய்கின்றன. அப்போது இலாபமோ நஷ்டமோ இன்றி உறுப்பினர்களுக்கு உதவும் நோக்கத்தோடு மட்டுமே இப் பணியைச் செய்கின்றன. இதற்கென்று கால்நடைக் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துள்ளன. அதனோடு, உறுப்பினர்களுக்கு விலைவாசிகளைப்பற்றிய அறிவுரைகளையும் அவ்வப்போது வழங்குகின்றன. 1961ஆம் ஆண்டில் மேற்கூறிய மூன்று மாநிலங்களிலுமுள்ள 'கோதுமை திரட்டுகளும்' ஏனைய மாநிலங்களிலுள்ள விற்பனைச் சங்கங்களும் சேர்ந்து 70·4 மில்லியன் டாலர் மதிப்பிற்குக் கால்நடைகளை விற்று உதவியுள்ளன.

கோதுமைத் திரட்டுகளின் மற்றொரு பணி, உறுப்பினர்களுக்கு வேண்டிய உரங்களையும் கால்நடைத் தீவனங்களையும் வழங்குவதாகும். 1961-ல் 122 மில்லியன் டாலருக்கு உரங்களையும் கால்

நடைத் தீவனங்களையும் விற்றிருக்கின்றன. இத்திரட்டுகள் நூற்றுக் கணக்கான கோதுமை மாவுத் தொழிற்சாலைகளையும் எண்ணெய்த் தொழிற்சாலைகளையும்கூட நிர்வகித்து வருகின்றன. அதனோடு, தம் அலுவலகர்களைக்கொண்டே பலவகையான காப்பீட்டுத் தொழில் களையும் நடத்தி வருகின்றன. இவற்றிற்குச் சொந்தமாகவே பல கிடங்குகளும் உள்ளன. மேலும், உறுப்பினர்களுக்குத் திரைப்பட மூலமாகவும், போதனை மூலமாகவும் கூட்டுறவுத் தத்துவங்களை எடுத்துக் காட்டி வருகின்றன. சுமார் 4000 பேர் இத் திரட்டுகளில் பணிபுரிகின்றனர். இவர்களுக்கு மட்டும் ஆண்டொன்றுக்கு 7 மில்லியன் டாலர் ஊதியமாக வழங்கப்படுகிறது.

கூட்டுறவு விற்பனை, கொள்முதல் சங்கங்கள்

கனடாவிலுள்ள மாநிலங்கள் அனைத்திலும் வாழும் விவசாயிகள் பண்ணைகளுக்குவேண்டிய பொருள்களைக் கொள்முதல் செய்வதற் கென்றும் தம் விளைபொருள்களை விற்பனை செய்வதற்கென்றும் ‘கூட்டுறவு விற்பனை, கொள்முதல் சங்கங்க’ளைத் தொடங்கி யுள்ளனர். இச்சங்கங்கள் அனைத்தும் இந்த நூற்றாண்டின் தொடக் கத்தில்தான் அமைக்கப்பட்டன. எனினும், இவை எவ்வளவுதூரம் வளர்ந்துள்ளன என்பதைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். இச்சங்கங்கள் விவசாயத்திற்குத் தேவைப்படும் உரங்கள், விதைவித்துகள், இயந்திரங்கள் ஆகிய வற்றை மட்டுமின்றி உறுப்பினர்களுக்கு வேண்டிய நுகர்வுப் பொருள்களையும் கொள்முதல் செய்து விநியோகித்து வருகின்றன. விளைபொருள்கள் அனைத்தையும் நல்ல விலைக்கு விற்பதற்கும் விவசாயிகளுக்கு உதவி செய்கின்றன. இச்சங்கங்களின் வளர்ச்சி துரிதமானது மட்டுமின்றி, திடமானதும்கூட.

வருடம்	சங்கங்களின் எண்ணிக்கை	மொத்த வியாபார மதிப்பு (1000 டாலர்கள்)
1932	795	145,303
1942	1,722	267,090
1952	2,194	1,112,469
1957	2,221	1,126,209
1964	1,546	1,780,600
1967	1,357	2,100,000

இச் சங்கங்களில் மொத்தம் 1·4 மில்லியன் பேர் உறுப்பினர் களாக இருக்கின்றனர். கனடாவில் விற்கப்படும் விளைபொருள் களில் 66 சதவீதம் இச்சங்கங்களால் விற்கப்பட்டதாக 1967ஆம்

ஆண்டின் கணக்கிலிருந்து அறிய வருகிறோம். 1946-ல் இவை 22 சத வீத விளைபொருள்களையே விற்றன. விற்கப்படும் விளைபொருள் களில் புகையிலையும் ஆட்டு உரோமமும்தாம் அதிகம். இந்நாட்டில் விநியோகிக்கப்படும் நுகர்வுப் பொருள்கள், சாகுபடிப் பொருள் களில் இச் சங்கங்கள் மட்டும் 1966-ல் 32 சதவீதத்தை விநியோகித் திருக்கின்றன.

மொத்த விற்பனைச் சங்கங்கள்

மேற்குறிப்பிட்ட ஆரம்பக் கூட்டுறவு விற்பனை, கொள்முதல் சங்கங்கள் ஒன்றுசேர்ந்து மொத்த விற்பனைச் சங்கங்களை உருவாக்கி யுள்ளன. 1966-ல் 8 மொத்த விற்பனைச் சங்கங்கள் இயங்கிவந்தன. ஒவ்வொரு மொத்த விற்பனைச் சங்கமும் தத்தம் மாநிலத்திலுள்ள அனைவருக்கும் பணிசெய்து வருகிறது. அதாவது, விவசாயத்திற்கு வேண்டிய பொருள்களையும் நுகர்வுப் பொருள்களையும் மொத்த மாகக் கொள்முதல் செய்து, ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்கிறது. ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் தத்தம் உறுப்பினர்கள் விளைவிக்கும் விவசாயப் பொருள்களையெல்லாம் சேர்த்து இந்த மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களின் வழியாக விற்பனை செய்கின்றன. மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களின் சொத்து மதிப்பு 1962-ல் 107 மில்லியன் டாலரிலிருந்து 1967-ல் 193 மில்லியன் டாலராக அதிகரித்துள்ளது. இம் மொத்த விற்பனைச் சங்கங்களின் விற்பனை 1967-ல் 542 மில்லியன் டாலர் களாகும். அதாவது, 1965-ல் விற்பனை செய்ததைக் காட்டிலும் 130 மில்லியன் டாலர் அதிகமாக விற்பனை செய்திருக்கின்றன. கடந்த பத்து ஆண்டுகளில் இதன் விற்பனை ஆண்டொன்றுக்குச் சராசரி 15 மில்லியன் டாலராக அதிகரித்து வந்திருக்கிறது.

மொத்த விற்பனைச் சங்கங்களுக்குமேல் தேசிய மட்டத்தில் 'அனைத்து மாகாணக் கூட்டுறவு அமைப்பு' (Inter-Provincial Co-operatives Ltd) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்புத்தான் மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குவேண்டிய எல்லாப் பொருள் களையும் கொள்முதல் செய்து விநியோகித்து வருகிறது. இதன் பணிகளில் முக்கியமானவை கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனைசெய்யும் பொருள்களில் பயன்படுத்தப்படும் கூட்டுறவு அடையாளக் குறியை ஒழுங்குபடுத்துவதும் கட்டுப்படுத்துவதுமாகும். மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் நடத்திவரும் மாவுத் தொழிற்சாலைகள்போன்ற பக்குவப் படுத்தும் தொழிற்சாலைகளின் பொருள்களை விற்கும் பணியிலும் இது ஈடுபட்டுள்ளது. அதனோடு, உணவுப் பொருள்களைப் பக்குவப் படுத்தும் தொழிற்சாலைகளையும் செய்பொருள் தொழிற்சாலை களையும் இது நடத்தி வருகிறது. கனடாவின் மேற்குப் பகுதியில்

விவசாய மருந்துவகைப் பொருள்களைத் தயாரிப்பதற்சென்று ஒரு மாபெரும் தொழிற்சாலையையும் நிர்வகிக்கிறது.

கூட்டுறவு சேவைச் சங்கங்கள் (Service Co-operatives)

கனடாவிலுள்ள கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள் நம் நாட்டிலுள்ள சங்கங்களிலிருந்து மாறுபட்டவையாகும். அங்குள்ள சங்கங்கள் மின்சார உற்பத்திசெய்து, அதை விநியோகம் செய்கின்றன; உறுப்பினர்களுக்கு வேண்டிய மருத்துவ உதவியையும் புரிகின்றன; மேலும், உறுப்பினர்களுக்குவேண்டிய வீட்டு வசதிகள், போக்குவரத்து வசதிகள், தொலைபேசி நிலையம், குளிர்சாதனமுள்ள அறைகள், நீர் வசதிகள் ஆகியவற்றையும் செய்து தருகின்றன. 1957-ல் கனடா நாட்டில் மொத்தம் 770 கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள் இருந்தன; இவற்றின் உறுப்பினர்களாக 2·5 மில்லியன் பேர் இருந்தனர். இச்சங்கங்களின் சொத்து மதிப்பு மட்டும் 72 மில்லியன் டாலராயிருந்தது. இதில் இயந்திரங்களின் மதிப்பு மட்டும் 64 மில்லியன் டாலராகும். 1961-ல் இச் சங்கங்களின் எண்ணிக்கை 882 ஆக அதிகரித்துள்ளது. அதன் பின்னர்ச் சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்டதன் (Amalgamation) விளைவாக இவற்றின் எண்ணிக்கை 1967-ல் 695 ஆகக் குறைந்திருக்கிறது. 1967ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இவற்றின் உறுப்பினர்கள் 2,35,000 பேர்; இவை 37 மில்லியன் டாலர் மதிப்புள்ள பணிகளைச் செய்திருக்கின்றன, இவற்றின் சொத்து மதிப்பு 107 மில்லியன் டாலர். இவற்றில் முக்கியமான சேவைச் சங்கங்களின் விவரம் வருமாறு :

சங்கங்களின் வகை	சங்கங்களின் எண்ணிக்கை
மின்சாரச் சங்கங்கள்	388
மருத்துவச் சங்கங்கள்	46
வீட்டு வசதிச் சங்கங்கள்	30
விதைவித்துச் சுத்தப்படுத்தும் சங்கங்கள்	59
போக்குவரத்துச் சங்கங்கள்	33
நீர் வசதிச் சங்கங்கள்	20

கூட்டுறவுக் கூட்டிணைப்புச் சங்கம்

1955ஆம் ஆண்டில் மணிடோபா, சஸ்கத்சிவான் ஆகிய இரு மாநில மொத்த விற்பனைச் சங்கங்களும் இணைந்து 'கூட்டுறவுக்

கூட்டிணைப்புச் சங்கம்' என்ற பெயரில் பெரியதொரு நிறுவன மாகின. இதில் 700 சங்கங்கள் உறுப்பினர்களாக உள்ளன. இக் கூட்டிணைப்புச் சங்கம் பண்ணைகளுக்கு வேண்டிய பல்வேறு பொருள்களை உற்பத்திசெய்யும் ஆலைகளை இயக்கி வருகிறது. ஒரு பெரிய உரத் தொழிற்சாலையையும் நடத்துகிறது. அதனோடு, மாபெரும் எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகளையும் இயக்கி வருகிறது. கால்நடைத் தீவனத் தொழிற்சாலையையும் இயக்கி வருகிறது.

1. உரத் தொழிற்சாலை: இக் கூட்டிணைப்புச் சங்கம் ஆல்பெர்ட்டாவில் 'மேற்கித்தியக் கூட்டுறவு உரத் தொழிற்சாலை' ஒன்றை மிகப் பெரிய அளவில் தொடங்கியுள்ளது. இத் தொழிற் சாலை 1965ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் உர உற்பத்தியைத் தொடங்கியது. ஆண்டுதோறும் 2·25 லட்சம் டன் உரங்களை உற்பத்திசெய்து வருகிறது. இக்கூட்டிணைப்புச் சங்கத்தின் உறுப் பினர்களாக உள்ள சங்கங்களின் வழியாக உரங்களை விநியோ கித்து வருகிறது. ஆரம்பித்த ஓர் ஆண்டிலேயே 13 மில்லியன் டாலருக்கு உர உற்பத்திசெய்து விற்று, 3·5 மில்லியன் டாலர் இலாபம் சம்பாதித்தது.

2, கால்நடைத் தீவனத் தொழிற்சாலை: இக் கூட் டிணைப்புச் சங்கம் மூன்று கால்நடைத் தீவனத் தொழிற்சாலைகளை இயக்கிவருகிறது. மூன்றாவது தொழிற்சாலை 1966-ல்தான் நிறைவு பெற்றது. இம்மூன்று தொழிற்சாலைகளும் முறையே மணிடோபா, சஸ்கத்சிவான், ஆல்பெர்ட்டா ஆகிய மூன்று இடங்களில் நடை பெற்று வருகின்றன.

3. எண்ணெய்க் கூட்டுறவுகள்: எண்ணெய்க் கூட்டுறவுச் சங்கங்களும் கனடாவில் பிரபலமாகி வருகின்றன. இக் கூட் டுறவுகள் அடிமட்டத்தில் எண்ணெய் விநியோகச் சங்கங்களையும் உயர்மட்டத்தில் நுகர்வோர் எண்ணெய்ச் சுத்திகரிப்புச் சங்கங் களையும் கொண்டுள்ளன. இவை தோன்றிய வரலாறு சுவையான தாகும். கனடாவில் விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் சராசரி 500 ஏக்கர் நிலம் உள்ளது. எனவே, விவசாயம் அனைத்தும் இயந்தி ரங்களால்தாம் செய்யப்படுகிறது. சராசரி 200 ஏக்கர் நிலத்திற்கு ஒரு டிராக்டர் உபயோகப்படுத்தப்படுகிறது. அதனோடு, விளை பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு வாகனங்களும் பயன்படுத்தப் படுகின்றன. எனவே, விவசாயத்திற்குப் பயன்படும் இச் சாதனங்களுக்குப் பெட்ரோல் இன்றியமையாததாகிறது. உலகப் பெரும் பொருளாதார மந்தத்தின்போது தானிய விலை

வாசிகள் சரிந்துவிட்டன; சாகுபடிச் செலவோ அதிகமாயிருந்தது. எனவே, இந்நாட்டு விவசாயிகள் பெட்ரோலின் விலையைக் குறைக்குமாறு மன்றாடினர். தனிப்பட்ட முறையில் அவர்கள் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. எனவே, பெட்ரோல் பயன்படுத்துவோர் அனைவரும் சேர்ந்து தாமே பெட்ரோல் சுத்தி கரிப்புத் தொழிலை நடத்தலாமென முடிவு கட்டினர். இவ்வாறாக, 1934ஆம் ஆண்டில் நுகர்வோர் கூட்டுறவு எண்ணெய்ச் சங்கம் ஒன்றை உருவாக்கினர். உலக வரலாற்றில் இக் கூட்டுறவுச் சங்கம் தான் முன்னோடியாக விளங்கியது. இதன் சொத்து மதிப்பு 14·7 இலட்சம் டாலர். இச் சங்கமும் 1942-க்குப்பின் கூட்டுறவுக் கூட்டிணைப்புச் சங்கத்தோடு இணைந்துவிட்டது. இந்த எண்ணெய்த் தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 12,000 பீப்பாய் எண்ணெய் உற்பத்தி செய்து வருகிறது. மண்டி எண்ணெயிலிருந்து பெட்ரோல் பிண்ணாக்குகளையும் இத் தொழிற்சாலை தயாரிக்கிறது. இந்த எண்ணெய்த் தொழிற்சாலையின் மதிப்பு இப்போது 300 மில்லியன் டாலராகும்; ஆண்டொன்றுக்கு சராசரி 112 மில்லியன் பீப்பாய் எண்ணெயை இது விற்பனைசெய்து வருகிறது. பல எண்ணெய்க் கிணறுகள் இச் சங்கத்திற்குச் சொந்தமாக உள்ளன. எண்ணெய் தோண்டி எடுப்பதற்கென்று பல நவீன முறைகளை இது கையாண்டு வருகிறது.

4. வன உற்பத்திப் பணிகள்: இக் கூட்டுறவுக் கூட்டிணைப்புச் சங்கம் பெரியதொரு மர அறுவைத் தொழிற்சாலை யையும் நடத்தி வருகிறது. இத் தொழிற்சாலைக்கு அருகிலேயே ஒட்டுப் பலகைத் தொழிற்சாலையொன்றை 1965-ல் தொடங்கி யுள்ளது. இத் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 40 மில்லியன் சதுர அடி ஒட்டுப் பலகையை உற்பத்தி செய்கிறது. மரக் கட்டைகளும் ஒட்டுப் பலகைகளும் உறுப்பினர் சங்கங்களின் வழியாக விநியோகிக்கப்படுகின்றன. பெரும்பாலும் இவையனைத்தும் கட்டட வேலைகளுக்குத்தாம் பயன்படுத்தப்படுகின்றன.

5. பண்டகங்கள்: இக் கூட்டுறவுக் கூட்டிணைப்புச் சங்கம் முக்கியமான இடங்களிலெல்லாம் பண்டகங்களை வைத்திருக் கின்றன. மரக்கட்டைகள், இரும்புச் சாமான்கள், உணவுப் பொருள்கள், பெட்ரோல் ஆகிய பொருள்களின் தேவைக்கேற்ப அவற்றைப் பண்டகங்களில் சேர்த்து வைத்து விநியோகித்து வருகிறது.

நிதி நிலைமை: இக் கூட்டிணைப்புச் சங்கத்தின் நிதி நிலைமை யையும் வளர்ச்சியையும் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்:

	1956	1960	1965
		(1000 டாலர்களில்)	
உறுப்பினர்களின் பங்கு மூலதனம்	12,739	19,059	27,776
வாங்கிய நீண்ட காலக் கடன்	9,711	11,028	23,993
மொத்த விற்பனை	53,817	76,456	121,691

1966-ல் இதன் மொத்த விற்பனை 174 மில்லியன் டாலராகும். இந்த அளவு விற்பனையை எந்த நிறுவனமும் இதுவரை எட்டவில்லை. இதனுடைய நிகர இலாபம் (Net Profit) மட்டும் 5 மில்லியன் டாலராகும். 1965ஆம் ஆண்டின் கணக்குப்படி இதன் சொத்து மதிப்பு 64·5 மில்லியன் டாலர் என்று தெரிகிறது. 64·5 மில்லியன் டாலர் முதலீட்டைக்கொண்டு 174 மில்லியன் டாலருக்கு இச் சங்கம் விற்பனை செய்திருப்பது மகத்தானதொரு சாதனையாகும்.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்

கனடாவில் மீன்பிடிப்புத் தொழில் விவசாயத்தைப்போல் அவ்வளவு முக்கியமானதன்று. கடற்கரையோரப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு மீன்பிடிப்புத் தொழில்தான் முக்கியம். தொடக்கத்தில் இந்த மீனவர்கள் பழங்கால முறையிலேயே மீன்களைப் பிடித்து, அவற்றை வியாபாரிகளுக்கும் தனிப்பட்ட நிறுவனங்களுக்கும் விற்று வந்தனர். இந்த வியாபாரிகளும் நிறுவனங்களும் மீனவர்களிடமிருந்து மலிவாக வாங்கி வந்தனர். மீன்களின் தரத்திற்கேற்ற விலையைக்கூடக் கொடுக்கவில்லை. இதனால் மீனவர்களின் வாழ்க்கையே இத்தனியார் நிறுவனங்களைச் சுற்றியே அமைந்தது. இந் நிறுவனங்களின் தொல்லைகளிலிருந்து விடுதலைபெற விரும்பிய மீனவர்கள் தங்களுக்கெனக் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க விரும்பியதில் வியப்பொன்றுமில்லை. 1948-ல் 100 மீனவர் சங்கங்கள் இயங்கி வந்தன. இவற்றில் 16,306 பேர் உறுப்பினர்களாக இருந்தனர். அவ்வாண்டில் இச் சங்கங்கள் 16·7 மில்லியன் டாலருக்கு மீன்களை விற்பனை செய்திருக்கின்றன. 1967-ல் இச் சங்கங்களின் மொத்த விற்பனை 29 மில்லியன் டாலராக அதிகரித்துள்ளது. இச்சங்கங்களின் சொத்து மதிப்பு 19 மில்லியன் டாலராகும்.

வளர்ச்சியின் போக்கு

கனடாவிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன. சான்றாக, பிரேய்ரி என்னும் பிராந்தியத்திலுள்ள கோதுமைத் திரட்டுகளும் மொத்த விற்பனைச் சங்கங்களும் ஒன்றாக

இணைக்கப்பட்டு ஒரு மாபெரும் சங்கமாக அமைக்கப்படுவதற்கு வேண்டிய பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன. அதேபோல் பிரிட்டிஷ் கொலம்பியா மொத்த விற்பனைச் சங்கமும் கூட்டுறவுக் கூட்டிணைப்புச் சங்கமும் ஒருங்கிணைக்கப்படுவதற்குரிய முயற்சியும் நடந்து வருகிறது. 1966-ல் 40 உள்ளூர்ச் சங்கங்கள் மத்தியச் சங்கத்தோடு ஒன்றித்துவிட்டன. இந்த ஒன்றிப்பினால் வியாபாரம் 18 சதவீதம் அதிகரித்திருக்கிறது.

கனடாவின் கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி திரு. ஸ்னோடென் (Snowden) அவர்கள் தயாரித்துள்ள அறிக்கையை இங்குக் குறிப்பிடல் நல்லது. நியூஃபவுண்ட்லேண்டில் கூட்டுறவு இயக்கம் எவ்வாறு நடைபெற்று வருகிறது. அதன் குறைகள் யாவை, அவற்றை நீக்கும் வழிமுறைகள் என்னென்ன என்பதை ஆராய்வதற்காக திரு. ஸ்னோடென் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது; கூட்டுறவு இயக்கம் நலிந்து காணப்படுவதற்கு கல்வியின்மை, போதிய பயிற்சியின்மை, வேண்டிய கடன் வசதியின்மை, கடனைத் தாறுமாறாகச் செலவழிக்கும் பழக்கம் ஆகியவைதாம் முக்கியக் காரணங்களாகும். இக்குறைகளை நீக்க வேண்டுமானால் கூட்டுறவாளர்களிடையே நல்லுறவும், நல்லெண்ணமும், உற்சாகமும் வளரவேண்டும். ஆனால், இது மட்டும் போதாது. கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கும் திடத்திற்கும் திட்டமிடும் பழக்கமும், திறமையான நிர்வாகமும் அவசியம். இவ்வாறாக, கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியுமட்டுமின்றி, திறமையான நிர்வாகமும் கனடாவில் காணப்பட்டபோதிலும் அவற்றைத் தீவிரமாக்கும் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

கடன் சங்கங்கள்

அமெரிக்காவின் பிற பகுதிகளில் மட்டுமின்றிக் கனடாவிலும் தொழிலதிபர்கள் கூட்டுறவு இயக்கத்தை ஏளனம் செய்துவந்தனர். இத் தொழிலதிபர்கள் ஆயிரக்கணக்கான தொழிலாளிகளைத் தம் ஆலைகளில் வேலைக்கமர்த்தியிருந்தனர். அப் பாட்டாளி இனத்தின் நன்மைக்கெனக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் சாதாரணக் கூட்டுறவுச் சங்கத்தைப் போன்றவையல்ல; எனினும், கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகளையும் தத்துவங்களையும் இவை கடைப்பிடித்து வருகின்றன.

கனடாவில் இயங்கிவரும் இக் கடன் சங்கங்களை முதன்முதலில் குவெபெக்கைச் சேர்ந்த அல்போன்ஸ் டெஜார்டின்ஸ் அவர்கள் தாம் தொடங்கினார்கள். இவர் ஐரோப்பாவில் இயங்கிவந்த கடன்

சங்கங்களை நேரடியாகவே பார்வையிட்டிருந்தார். அவற்றைப் பின்பற்றி 1900ஆம் ஆண்டில் லெவிஸ் என்னுமிடத்தில் முதல் சங்கம் தொடங்கப்பட்டது. இந்த குவெபெக் மாநில அரசாங்கம் தான் கனடாவிலேயே முதன்முதலாகக் கடன் சங்கச் சட்டம் என்று 1907-ல் நிறைவேற்றி அமுல் செய்தது. இம் மாநிலத்தைப் பின் பற்றி இதர மாநில அரசாங்கங்களும் இதுபோன்ற சட்டங்களை அமுலாக்கின. 1936ஆம் ஆண்டில் எல்லா மாநிலங்களிலுமே இவ் வகைச் சட்டங்கள் அமுலாக்கப்பட்டு விட்டன.

இனி, இக்கடன் சங்கங்களின் சிறப்பியல்புகள் சிலவற்றைக் காண்போம்.

1. ஒன்டாரியோ, குவெபெக் ஆகிய இரு மாநிலங்களில்தாம் இச் சங்கங்கள் அதிகமாக உள்ளன. இவை பெரும்பாலும் தொழில் வளமிக்க பெரிய நகரங்களில்தாம் இயங்கி வருகின்றன. இவற்றின் உறுப்பினர்கள் பெரும்பாலோர் ஊதியத்திற்காக உழைக்கும் உழைப்பாளிகள்தாம். மேற்கித்தியக் கனடாவில் விவசாயிகளே இச் சங்கங்களை அமைத்துள்ளனர். கிறிஸ்துவக் கழகங்கள்கூட இவ்வகைக் கடன் சங்கங்களை அமைத்து, உறுப்பினர் களுக்கு உதவி வருகின்றன.

2. இச் சங்கங்கள் ஒரே அளவினதாயில்லாமல் வெவ்வேறு அளவில் உள்ளன. சான்றாக. இவற்றில் 50 சதவீதச் சங்கங்களுக்கு மேல் ஒரு இலட்சம் டாலர் சொத்துகள்கூட கிடையா. ஒரு இலட் சத்திலிருந்து 5 இலட்சம் டாலர் வரை சொத்துள்ள சங்கங்கள் 30 சதவீதம்தான். 12 சதவீதச் சங்கங்கள்தாம் 5 இலட்சம் டால ருக்குமேல் சொத்து வைத்திருக்கின்றன.

3. உறுப்பினர்களுக்கு மட்டும்தான் இச் சங்கங்கள் கடன் கொடுக்கின்றன; அதேபோல் உறுப்பினர்கள் மட்டுமே இவற்றில் வைப்புத் தொகை வைக்க முடியும்.

இச் சங்கத்தில் உறுப்பினராக விரும்பும் எவரும் 1 டாலர் செலுத்திச் சேரலாம். இச் சங்கங்களுக்கு பங்கு மூலதனம் கிடை யாது. உறுப்பினர்கள் செலுத்தும் தொகை முழுவதும் அவரவர் சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இவ்வாறு உறுப்பி னர்கள் சேமிக்கும் தொகைக்கு வட்டி கிடையாது. அதற்குப் பதிலாக ஆண்டுதோறும் ஓரளவு இலாப ஈவுதான் கொடுக்கப்படு கிறது. உறுப்பினர்கள் ஏற்கெனவே வாங்கியிருக்கும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும் இச் சங்கங்கள் கடன் கொடுக்கின்றன. உறுப்பினர்கள் செலுத்தும் தொகையில் 2000 டாலர் வரை காப் பீட்டுக் கம்பெனிகளில் காப்பீடு செய்யப்படுகிறது. இக் கம்பெனி களுக்குச் செலுத்தவேண்டிய தவணைத் தொகையை இச் சங்கங்

களை செலுத்தி வருகின்றன. இக் காப்பீடு உறுப்பினர்களின் நன்மைக்காகவே செய்யப்படுகிறது. 2,000 டாலருக்கும் குறைவாகச் செலுத்தியுள்ள உறுப்பினர் எவரும் இறக்க நேர்ந்தால் அவர் செலுத்தியுள்ள தொகையைப்போல் இரு மடங்கு அவரது வாரிசுக்குக் கொடுக்கப்படுகிறது.

4. பள்ளி மாணவர்களும் இச் சங்கங்களில் சேமிப்புக் கணக்கைத் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். 1967-ல் சுமார் 4·25 இலட்சம் பள்ளி மாணவர்கள் இச் சங்கங்களில் சேமிப்புக் கணக்கு வைத்திருந்தனர். அவர்கள் கணக்கில் மட்டும் 11 மில்லியன் டாலர் சேமிப்புத் தொகையாக இருந்தது.

5. இச் சங்கங்கள் உறுப்பினர்களுக்குக் கடன் கொடுக்கும் போது உற்பத்திப் பணிக்கு மட்டுமே கொடுக்கின்றன. கடன் கொடுக்குமுன் உறுப்பினர்கள் அதைத் திருப்பிக் கொடுக்க முடியுமா என்பதை நன்கு பரிசீலிக்கின்றன. இக்கடனுக்கு 8 முதல் 12 சதவீத வட்டி வசூலிக்கின்றன.

6. இச் சங்கங்களின் உறுப்பினர்களடங்கிய பொதுக்குழு இயக்குநர் குழுவைத் தேர்ந்தெடுக்கிறது. சங்கங்களின் நடவடிக்கை பற்றிய பொறுப்பும் அதிகாரமும் இக் குழுவிடமே ஒப்படைக்கப்படுகிறது. இக் குழு 'கடன் குழு' (Credit Committee) என்ற குழுவை ஏற்படுத்துகிறது. இக்கடன் குழுவில் நிர்வாகக் குழுவைச் சாராத உறுப்பினர்களும் இடம் பெறுகின்றனர். உறுப்பினர்களுக்குக் கடன் கொடுக்கும் பணியை இக் குழுதான் செய்து வருகிறது. இக் குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்களில் சிலரைக்கொண்டு இதன் நடவடிக்கைகள் பரிசீலிக்கப்படுகின்றன.

கூட்டிணைப்புகள்: ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள இக்கடன் சங்கங்கள் மாநில மட்டத்தில் 'கூட்டுக் கடன் சங்கம்' ஒன்றை அமைத்துள்ளன. இச் சங்கங்கள் இந்தியாவிலுள்ள மாநிலத் தலைமை வங்கி(Apex Bank யைப்போல் பணியாற்றுகின்றன. கடன் சங்கங்களில் உபரியாக உள்ள தொகையைப்பெற்று இவை தேவைப்படும் கடன் சங்கங்களுக்கு வழங்குகின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டுறவுக் கல்வியைப் பரப்புவதற்கென்று 'கடன் சங்கங்கள் கழகம்' (Credit Union League) அமைக்கப்பட்டுள்ளது. அண்மையில், கனடாவிலுள்ள கடன் சங்கங்களையெல்லாம் கண்காணிப்பதற்கென்று தேசிய மட்டத்தில் 'கனடா கூட்டுறவுக் கடன் சங்கம்' அமைக்கப்பட்டுள்ளது.

இக் கடன் சங்கங்களின் வளர்ச்சியைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்:

ஆண்டு	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர் எண்ணிக்கை	சேமிப்பு	கொடுத்த கடன்	நடப்பு மூலதனம்
			(மில்லியன்	டாலர்களில்)	
1931	174	43,600	—	—	11·5
1941	1,314	2,38,400	—	—	21·2
1951	3,120	11,37,900	334	125	359·0
1961	4,582	27,51,000	1,387	579	1,510·0
1963	4,650	30,80,000	1,000	771	1,885·0
1965	4,671	34,00,000	1,900	1,078	2,250·0
1966	4,871	39,50,000	—	1,132	2,900·0

ஆண்டிகானிஷ் இயக்கம் (Antigonish Movement)

கனடாவின் கூட்டுறவு இயக்கம் வேரூன்றித் தழைத்ததற்கு அரசாங்கம் மட்டும் காரணமன்று. 'ஆண்டிகானிஷ் இயக்கமும்' காரணமாகும். இவ்வியக்கம் 1930-ல் ஆண்டிகானிஷிலுள்ள புனித சேவியர் பல்கலைக் கழகத்தில் தொடங்கப்பட்டது. உள்ளூரிலிருந்த பொருளாதாரப் பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றிற்குத் தீர்வு காணும்பொருட்டு M. M. காடி (M. M. Coady) என்னும் பாதிரியாரின் தலைமையில் சிறுசிறு குழுக்கள் அமைக்கப்பட்டன. நாளடைவில் இதுவே ஆண்டிகானிஷ் இயக்கம் எனப் பெயர் பெற்றது. இவ்வியக்கம் மக்களின் பொருளாதார வாழ்வையும், சமுதாய நிலையையும் உயர்த்தும் வகையில் பல்வேறு குழுக்களை அமைத்துக் கூட்டுறவுக் கல்வியைப் பரப்பும் இயக்கமாக மலர்ச்சி பெற்றுள்ளது. கிராம மக்களும் கூட்டுறவின் பயனைப் பெறும் வகையில் இது சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்து வருகிறது. கூட்டுறவுக் கொள்கைகளைப் பரப்புவதற்கென்று எண்ணிலடங்காத் துண்டுப் பிரசுரங்களையும் அறிக்கைகளையும் வெளியிட்டு வருகிறது. அதனோடு, குறுகிய காலத்திற்கென்று கூட்டுறவுப் பாட வகுப்புகளையும் பல நூல் நிலையங்களையும் இவ்வியக்கம் நடத்திவருகிறது. இவ்வியக்கத்தின்கீழ் அமைக்கப்பட்ட குழுக்களின் விவாதத்திலிருந்தும் கருத்தரங்குகளிலிருந்தும் பல கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றியிருக்கின்றன. மக்களின் பொது வாழ்வைப் பாதிக்கும் பிரச்சினைகள் இக் குழுக்களால் நன்கு பரிசீலிக்கப்பட்டதால் மீனவர்களும் குடியானவர்களும் இவ் வியக்கத்திற்கு ஆதரவு தந்தனர். எனவே, முதன்முதலில் மீனவர்களின் பிரச்சினைகளும் குடியானவர் பிரச்சினைகளுமே நன்கு ஆராயப்பட்டு, கூட்டுறவு முறையில் அவற்றிற்குத் தீர்வு காணப்பட்டது. இதைத் தொடர்ந்து கூட்டுறவுப் பண்டகசாலைகளும் கடன் சங்கங்களும் இவ்வியக்கத்தின் வழிமுறைகளைப் பின்பற்றலாயின. கனடாவின் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு இந்த இயக்கம் ஆற்றியுள்ள பணிகள் பாராட்டுக்குரியனவாகும்.

13. இஸ்ரேல் நாட்டில் கூட்டுப் பண்ணைகள்

(Collective Farms in Israel)

உலகெங்கும் சிதறிக் கிடக்கும் யூத மக்களுக்கு இஸ்ரேல் நாடு தான் புனிதத் தலமாகும். இந் நாடு 10,000 சதுர மைல் பரப்பளவு கொண்ட சிறிய நாடு. ஏனைய நாடுகளில் துரத்தப்பட்ட யூத மக்களுக்குத் தஞ்சமாகத் துலங்கும் நாடு. 1948ஆம் ஆண்டு மேத் திங்கள் 15ஆம் நாளன்றுதான் இது தனி நாடாக அறிவிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றது. அதன் பின்னர்த்தான் ஐரோப்பிய நாடுகளிலும் ரஷ்யாவிலும் வாழ்ந்துவந்த யூத மக்கள் இங்கு பெருமளவில் குடியேறினர். எனவே, இந் நாட்டின் மக்கள்தொகை அதிகரித்து வருகிறது. 1948-ல் 6 இலட்சம் பேர் மட்டும் வாழ்ந்த இந் நாட்டில் இன்று சுமார் 2·5 மில்லியன் பேர் இருக்கின்றனர்.

இந் நாட்டின் கூட்டுறவு இயக்கத்தை ஆராயுமுன், மக்கள் இங்கு எவ்வாறு குடியேறினர் என்று தெரிந்துகொள்ளல் அவசியம். இந் நாட்டில் வாழ்ந்த யூத மக்கள் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பே கூட்டு முயற்சியில் நாட்டை மேம்படுத்த முயன்றனர்; எனினும், 1882ஆம் ஆண்டிற்குப் பின்னர்த்தான் இந் நாட்டில் முறையான கூட்டுறவு இயக்கம் முளையிட்டது. ரோத்சைல்டு (Rothchild) என்பவர் 'பாலஸ்தீன யூதக் குடியேற்றச் சங்கம்' ஒன்றை ஆரம்பித்த பின்னரே இங்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வேரூன்றத் தொடங்கின. எனவே, இவர்தாம் இந்த இயக்கத்தின் தந்தையாகப் போற்றப்படுகிறார்.

இக் குடியேற்றச் சங்கம் புதிதாய் வந்து குடியேறிய யூத மக்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து தந்தது. எனவே, 1882 லிருந்து 1914 வரை யூதர்கள் திரளாக இந் நாட்டிற்கு வந்து குடியமர்ந்தனர். இதே காலத்தில்தான் சுமார் 3 மில்லியனுக்கு அதிகமான யூத மக்கள் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து வெளியேறி இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, தென் அமெரிக்கா, பாலஸ்தீனம்

போன்ற நாடுகளில் குடியமர்ந்தனர். அவ்வாறு குடியேறிய யூத மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக 1887ஆம் ஆண்டில் 'உலக யூதர் குடியேற்ற அமைப்பு' உருவாக்கப் பட்டது. மேலும், பாலஸ்தீனத்தில் குடியேறிய மக்களுக்கு நிலம் கொடுப்பதற்காக 1901ஆம் ஆண்டில் "யூதத் தேசிய நிதி" (Jewish National Fund) என்ற நிதியை அந்த அமைப்பு ஏற்படுத்தியது. அதற்கு வேண்டிய பணத்தைப் பெறுவதற்காக உலகெங்கும் வாழ்ந்துவந்த யூத மக்களுக்கு வேண்டுகோள் விடுவிக்கப்பட்டது. இதன் விளைவாகப் போதுமான நிதி வசதியை இச் சங்கம் பெற்றது. அப்பணத்தைக்கொண்டு புதிதாய் அகதிகளாக வந்த யூத மக்களைக் குடியமர்த்த நிலம் வாங்கியது. இவ்வாறாக, இஸ்ரேல் நாட்டி லுள்ள நிலப் பகுதியில் 94·6 சதவீதம் இச் சங்கத்திற்கும் அரசாங் கத்திற்கும் சொந்தமாக இருந்து வருகிறது. தனக்குச் சொந்த மான நிலத்தில் யூதர்களைக்கொண்டு சாகுபடி செய்வதற்காக 1920-ல் "யூத மக்கள் அடிப்படை நிதி" (Jewish Foundation Fund) என்ற பெயரில் மற்றொரு நிதியையும் இச் சங்கம் உருவாக்கியது. இதன் விளைவாகப் புதிதாய்க் குடியேறிய யூத மக்கள் குறையேது மின்றி வாழத் தொடங்கினர். 1929-ல் யூத மக்கள் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் 'யூதர்கள் முகமை' என்ற பொதுக் சபை யொன்று நிறுவப்பட்டது. இச் சபை 1930ஆம் ஆண்டில் பாலஸ்தீன அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றது. புதிதாய்க் குடியேறிய யூத மக்களுக்கு உதவிபுரிவதுதான் இச் சபையின் நோக்கம். இச் சபையின் தலைமைச் செயலகம் ஜெருசலேம் நகரில் இயங்கி வந்தது. மேலும், இலண்டன், பாரிஸ், வாஷிங்டன், ஜெனீவா போன்ற நகரங்களிலும் இச்சபை தன் அலுவலகங்களைத் தொடங்கியது. இச் சபை பல்வேறு பிரிவுகளைக் கொண்டிருந்தது. அவற்றில் 'விவசாயக் குடியேற்றப் பிரிவுதான்' மிக முக்கியமானது. இப் பிரிவு பல்வேறு பணிகளுக்கிடையே பல முன்னேற்றத் திட்டங்களை வகுத்துவந்தது. வீடுகள் கட்டிக்கொடுத்தல், சாலைகள் அமைத்தல், நீர்ப்பாசன வசதியைப் பெருக்குதல் போன்ற பணிகளையும் செய்து வந்தது. விளை நிலங்களில் குடியேறிய மக்க ளுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தது.

இவ்வாறாக, இஸ்ரேல் நாட்டில் மக்கள் குடியேறியபோது கூட்டுறவுக் கொள்கைகளும் குடிபுகுந்து விட்டன. தொடக் கத்தில், குடியேறிய மக்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் எழுந்தன. நிலவளம் இருந்தாலும் அது சரியாகப் பண்படுத்தப்படாததால் சாகுபடி செய்வது கடினமாகவே இருந்தது. மேலும், வேண்டிய நீர்ப்பாசன வசதியும் போக்குவரத்து வசதியும் இல்லாமலிருந்தது. பல்வேறு நாடுகளிலிருந்துவந்து குடியேறிய யூத மக்களுக்கு

வேளாண்மைத் துறையில் போதிய அனுபவமும் கிடையாது. இந்நிலையில்தான் கூட்டுறவுக் கொள்கைகள் அடியெடுத்து வைத்தன. மத அடிப்படையில் ஒன்றுபட்ட யூதமக்கள் தங்களுக்குள் கூட்டுறவு ஒப்பந்தங்களையும் செய்துகொண்டனர். பல இடங்களில் இவர்கள் இருப்பிடங்களை அமைத்துக்கொண்டு ஒன்றாக வாழத் தொடங்கினர். இவ் வாழ்க்கை முறைதான் நாளடைவில் கூட்டுப் பண்ணை முறையாக உருவெடுத்தது. இதன் பின்னர்த்தான் இந்நாட்டுப் பொருளாதார நிலை உயர்ந்து ஏனைய நாடுகளையும் கவர்ந்தது.

தொழிலாளர் கூட்டமைப்பு (Histadrut)

1920ஆம் ஆண்டில் ஒரு தொழிலாளர் கூட்டமைப்பு இந்நாட்டில் ஏற்படுத்தப்பட்டது. இது, தேசிய அளவில் அமைக்கப்பட்ட தொழிலாளர் சங்கமாகும். இதில் விவசாயிகள், தொழிலாளிகள் போன்ற அனைவருமே உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டனர். தற்போது இக்கூட்டமைப்பில் சுமார் 1 மில்லியனுக்கும் அதிகமான பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர்; அதாவது, இஸ்ரேல் நாட்டிலுள்ள வாலிபர்களில் பாதிப் பேருக்குமேல் இதில் சேர்ந்திருக்கின்றனர். இதன் தலைமைச் செயலகம் 'டெல் அவிவ்' (Tel Aviv) நகரில் இயங்கி வருகிறது. இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற பிற நாடுகளிலும் இதன் கிளை அலுவலகங்கள் இருக்கின்றன. விளைநிலத்தில் குடியேறும் மக்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் இது செய்து தருகிறது. மேலும், விளைநிலத்தில் குடியேறுவோரின் நடவடிக்கைகளைக் கண்காணித்தும், அவர்களுக்கு வேண்டிய நிதி உதவி, தொழில் நுட்ப அறிவு போன்றனவற்றை வழங்கியும் வருகிறது.

ஹேவ்ரத் ஓவ்டிம் (Hevrat Ovdim)

1923ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் ஒரு சங்கம் தொடங்கப்பட்டது. இதன் பெயர்தான் ஹேவ்ரத் ஓவ்டிம் என்பது. தொழிலாளர் கூட்டமைப்புச் சங்கத்தின் உறுப்பினர்கள்தாம் இதிலும் உறுப்பினர்களாக உள்ளனர். கூட்டுறவு இயக்கத்திற்கும் தொழிலாளர் சங்கத்திற்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தும் சங்கமாக இது பணியாற்றி வருகிறது. இந் நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் 80 சதவீதம் இந்த ஹேவ்ரத் ஓவ்டிம் என்ற அமைப்பின்கீழ் இயங்கி வருவதால் இவ் வமைப்புத்தான் உயர்மட்ட அமைப்பாகப் பாவிக்கப்படுகிறது. இச் சங்கத்தில் உறுப்பினராக ஆன பின்னர்த்தான் வேறெந்தக் கூட்டுறவுச் சங்கத்திலும் ஒருவர் உறுப்பினராகலாம். எனவே. இது கூட்டுறவுச்

சங்கங்களின் கூட்டமைப்பு அன்று. மாறாக, இதுவும் ஓர் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கத்தைப்போல் தனி நபர்களையே உறுப்பினராகக் கொண்டுள்ளது. எனினும், இவ்வமைப்பின் கொள்கைகளையும் விதிகளையும்தாம் ஏனையச் சங்கங்கள் அனைத்தும் பின்பற்றி வருகின்றன. எந்தக் கூட்டுறவுச் சங்க உறுப்பினரையும் இது வெளியேற்ற முடியும்; அதே சமயம், ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் தத்தம் நிர்வாகக் குழுவினரைத் தேர்ந்தெடுப்பதற்கு இச் சங்கமே பெயர் பட்டியலைத் தருகிறது. மேலும், எந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் தீர்மானத்தையும் இது நிராகரிக்கவும் முடியும். இச் சங்கத்தின் பணிகள் பல. உறுப்பினர்கள் விளைநிலத்தில் குடியமர உதவுகிறது; மீன்பிடிப்பு, போக்குவரத்து, ஆலைத்தொழில் போன்ற தொழில்களையெல்லாம் விருத்திசெய்து வருகிறது; கடன் சங்கங்களையும் வங்கிகளையும் ஏற்படுத்துகிறது; மேலும், உறுப்பினர்களின் நலனுக்கென்று வியாபாரம், ஆலைத்தொழில் போன்ற தொழில்களிலும் ஈடுபடுகிறது.

கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி

1963ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இஸ்ரேல் நாட்டில் மொத்தம் 1963 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இவற்றில் 1,009 சங்கங்கள் விவசாயச் சங்கங்களாகும். இவை தவிர 328 வீட்டு வசதிச் சங்கங்களும், 191 சிக்கன நிதிச் சங்கங்களும் (Provident Fund Societies), 51 நுகர்வோர் சங்கங்களும், 237 தொழில், போக்குவரத்துச் சங்கங்களும் இயங்கி வந்திருக்கின்றன. இந் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் 23 சதவீதம் கூட்டுறவுச் சங்கங்களால் செய்யப்படுகின்றன. விவசாய உற்பத்தியில் 75 சதவீதம் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தியாகின்றன. எனவே, இங்கு விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள்தாம் பிரபலமானவை. அச் சங்கங்களில் முக்கியமான மூன்றைப்பற்றிச் சற்று விரிவாக ஆராய்தல் நன்று.

1. கூட்டுக் கிராமம் (Kibbutz-Collective Village): யூதர்களின் குடியேற்ற அமைப்பின் வழியாகக் கூட்டுப் பண்ணைகள் தோன்றி, மக்களின் வாழ்க்கைத்தரம் மட்டுமின்றி நாட்டின் பொருளாதாரமும் உயர்ந்தது. 'கிப்புட்ஸ்' எனப்படும் கூட்டுப் பண்ணைதான் உலகிற்கே வழிகாட்டியாக அமைந்தது. இக்கூட்டுப் பண்ணை முறை இஸ்ரேல் நாட்டில் வளர்ந்ததைப்போல் வேறெந்த நாட்டிலும் வளர்ச்சி பெறவில்லை. மத நம்பிக்கையில் ஒன்றுபட்ட யூத மக்கள் கூட்டம் கூட்டமாகப் பல்வேறு இடங்களில் குடியமர்ந்தனர். இவ்வாறு குடியேறிய மக்கள் தம் சுய உழைப்பையே நம்பிக் கூட்டாகவே தமக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தையும்

உற்பத்திசெய்து வருகின்றனர். அதனோடு, இச் சமூக அமைப்பின் கண்காணிப்பிலேயே கல்வி, விற்பனை, மக்கள் நலன் பேணல் போன்ற எல்லாக் காரியங்களும் நடைபெற்று வருகின்றன. கூட்டுறவு இயக்க வரலாற்றில் இக் கூட்டுக் கிராம அமைப்பு முறை ஒரு திருப்பமாக உள்ளது. மண்வளமிக்க இந் நாட்டில் மன உறுதி நிறைந்த மக்களின் சலியாத உழைப்பினால் பொருளாதாரம் புது மெருகுடன் திகழ்ந்து வருகிறது. இம் மக்களிடையே காணப்படும் நேச மனப்பான்மையின் காரணத்தால் பிணக்குகள் எதற்கும் வாய்ப்பின்றி, இந்நாட்டவரின் வாழ்க்கைத்தரம், கல்வி, கலாசாரம் ஆகிய அனைத்தும் ஒருசேர உயர்ந்துள்ளன. இதற்கெல்லாம் இக் கூட்டுக் கிராம அமைப்பே காரணமாகும். இந்நாட்டில் கூட்டுறவுக் கொள்கைகள் வேரூன்றித் தழைப்பதற்கும் இவ்வமைப்புத்தான் உறுதுணையாக இருந்து வருகிறது.

இக் கூட்டுக் கிராமக் குடியிருப்புகளில் எவருக்குமே சொந்த மூலதனம், நிலம், சொத்து என்று ஒன்றும் கிடையாது. இதன் உறுப்பினர்கள் தங்களுக்குத் தேவையான நிலத்தைக் குடியேற்ற அமைப்புச் சங்கத்திடமிருந்து நீண்ட காலத்திற்குக் குத்தகை முறையில் பெறுகின்றனர். தேசிய நிதி நிறுவனம் இவர்களுக்குத் தேவையான நிதி உதவியைச் செய்கிறது. ஆண்டுதோறும் கிடைக்கும் உபரித் தொகையைக்கொண்டு தம் நிதி நிலையைச் சரிப்படுத்திக் கொள்கின்றனர். விவசாயம், வியாபாரம், கல்வி, சுகாதாரம் போன்ற எல்லாத் துறைகளிலுமே உறுப்பினர்கள் கூட்டாக உழைக்கின்றனர். பிறநாட்டு வியாபாரத்திற்கு மட்டுமே இவை பணத்தைப் பயன்படுத்துகின்றன. சொந்த நாட்டில் பணத்திற்கு வேலையே கிடையாது. உறுப்பினர்கள் அனைவரும் பொது இடங்களில் உணவுபெற்று அருந்துவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. தங்களுக்குத் தேவையான துணிமணிகளையெல்லாம் பொதுப் பண்டகசாலையிலிருந்து பெற்றுக்கொள்கின்றனர்; இவர்களின் துணிமணிகளைச் சலவை செய்வதற்கும் கிழிந்துபோனவற்றைச் சரிப்படுத்துவதற்கும் பொதுச் சலவைச்சாலை இருக்கிறது. உறுப்பினர்கள் தத்தம் தேவைப் பொருள்களான சோப்பு, எண்ணெய், சிகரெட் போன்றவற்றைக்கூடப் பொதுப் பண்டகசாலைகளிலிருந்தே பெறுகின்றனர். இக்கூட்டுக் கிராமக் குடியிருப்பு நன்றாக வளர்ந்து முதிர்ச்சி பெற்றபின்னர் ஒவ்வோர் உறுப்பினருக்கும் தம்பதிகளுக்கும் தனி அறைகள் கொடுக்கப்படுகின்றன. இதற்கென்று தனித்தனி அறைகள் கொண்ட சிறு கட்டடங்களும் அடுக்குமாடி வீடுகளும் கட்டப்படுகின்றன. இவ் வறைகளில் உறுப்பினர்கள் பயன்படுத்தும் படங்கள், புத்தகங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள், புகைப்படங்கள், வானொலிப் பெட்டிகள், வாத்தியக்

கருவிகள் போன்ற பொருள்கள் மட்டுமே உறுப்பினர்களுக்குச் சொந்தமானவை. இப் பொருள்களைக் கூட்டுக் கிராம அமைப்பே வழங்குகிறது; அல்லது உறுப்பினர்களே தமது படிப்பணத்திலிருந்து வாங்கிக்கொள்கின்றனர்; அல்லது நண்பர்களிடமிருந்து இனமாகப் பெறுகின்றனர். இப் பொருள்களைத் தவிர மற்றவை அனைத்தும் கூட்டுக் கிராம அமைப்பிற்கே சொந்தமாகும். ஒவ்வோர் ஆண்டும் உறுப்பினர்களுக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது. அவ் விடுமுறையின்போது ஒவ்வோர் உறுப்பினருக்கும் 20 பவுன்கள் படியாகக் கொடுக்கப்படுகிறது. இதர வேலை நாள்களில் இவர்களுக்குக் கூலியாக எதுவும் கொடுக்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக ஆண்டின் இறுதியில் கிடைக்கும் இலாப உபரித்தொகைதான் பகிர்ந்தளிக்கப் படுகிறது. எஞ்சிய தொகையனைத்தும் உறுப்பினர்களின் நல்வாழ்விற்கே செலவிடப்படுகிறது. இக் கூட்டுக் கிராமக் குடியிருப்பிலிருந்து வெளியேறும் எவருக்கும் பொதுச் சொத்திலிருந்து பங்கு ஏதும் கொடுக்கப்படுவதில்லை. உறுப்பினர்கள் அனைவரும் தமக்கு வேண்டியதனைத்தையும் இவ் வமைப்பிலிருந்தே பெறுவதால் தம் கூலியைப்பற்றியோ வேறெதைப்பற்றியோ அவர்கள் கவலைப் படாமல் மன நிறைவுடன் உழைத்து நிறைவான வாழ்வைப் பெறுகின்றனர்.

இக் கூட்டுக் கிராமக் குடியிருப்புகளில் பெரும்பாலானவற்றில் குழந்தைகள் பெற்றோர்களுடன் வாழ அனுமதிக்கப்படுவதில்லை. குழந்தைப் பருவத்திலிருந்தே அவர்கள் 'சிறுவர் இல்லங்களில்' (Nurseries) வளர்க்கப்படுகின்றனர். அங்கு அவர்களின் வயதிற் கேற்ப முறையான கல்வி அளிக்கப்படுகிறது. அவர்கள் படித்து முடித்து உழைக்கக்கூடிய பக்குவத்தை அடையும்வரை அங்கேயே வளர்கின்றனர்; தம் வயதையொத்தவர்களுடனே வாழ்கின்றனர். பக்குவமடைந்த பின்னர்த்தான் இக்கூட்டுக் கிராம அமைப்பின் உறுப்பினர்களாக அனுமதிக்கப்படுகின்றனர். எல்லாக் கூட்டுக் கிராமக் குடியிருப்புகளிலும் பள்ளிகள் இருக்கின்றன. இஸ்ரேல் நாட்டில் 14 வயது வரையுள்ள அனைவரும் கட்டாயம் பள்ளிக்குச் செல்லவேண்டுமென்ற சட்டம் உள்ளது. ஒருசில குடியிருப்புகள் உயர்நிலைப் பள்ளிகளையும் நடத்தி வருகின்றன. பள்ளிப் படிப்பு முடிந்தபின்னர் யார் யாரைக் கல்லூரிக்கு அனுப்புவது என்ற முடிவை இக் குடியிருப்புகளே தீர்மானிக்கின்றன. அவர்களின் படிப்புச் செலவையும் இவை ஏற்றுக்கொள்கின்றன. இக் குடியிருப்புகளுக்குத் தேவைப்படும் நிபுணர்களையும் இவை படிக்கவைத்துப் பெறுகின்றன. இக் குடியிருப்புகள் உறுப்பினர்களின் உடல் நலத்தைப் பேணுவதற்கென்று மருத்துவமனைகளையும், வயதுவந்த முதியோரைக் காப்பாற்ற முதியோர் மனைகளையும் நடத்தி வருகின்றன.

இக் குடியிருப்பின் நிர்வாகத்தை உறுப்பினர் அனைவரும் கொண்ட பொதுச் சபையே மேற்கொள்கிறது. இதற்கென்று செயலக உறுப்பினர்களையும் பல்வேறு குழுக்களின் உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கிறது. இக் குழுக்களில் ஒன்றுதான் வேலைத் திட்டத்தை வகுத்து, யார் யாருக்கு எந்தெந்த வேலை தருவது என்பதைத் தீர்மானிக்கிறது. பள்ளிகளில் பணியாற்ற வேண்டியவர்கள் யார் யார், சமையல் வேலை செய்வது யார், சலவைத் தொழில் செய்வது யார், யார் யார் சாகுபடி செய்வது என்பதையெல்லாம் இக்குழுவே தீர்மானிக்கிறது. விவசாய வேலைகளனைத்தையும் செய்வதற்குப் பெரும்பாலும் நிரந்தரமாகவே உறுப்பினர்கள் அனுப்பப்படுகின்றனர். நிலத்தின் வளத்திற்கேற்ப நவதானியங்கள், கால்நடைத் தீவனம், பழவகைகள், காய்கறிகள் முதலியன பயிர் செய்யப்படுகின்றன. எனவே, குடியிருப்புகளின் விவசாய முறையும் சாகுபடிப் பயிர்களும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. பெரிய நிலங்களிலெல்லாம் இயந்திரங்களைக்கொண்டு தானியங்களையும், சிறிய நிலங்களில் கால்நடைத் தீவனங்களையும் சாகுபடி செய்கின்றனர். எல்லாக் குடியிருப்புகளிலும் ஆடுமாடுகள் வளர்க்கப்படுவதால் பாலுக்குப் பஞ்சமே கிடையாது. அதோடு, கோழிப் பண்ணைகளும் அமைக்கப்பட்டுள்ளன. மத நம்பிக்கையின் காரணத்தால் இக் குடியிருப்புகள் பன்றிகளை வளர்ப்பதில்லை. ஆட்டுப் பண்ணைகளெல்லாம் பெரும்பாலும் சிறியனவாகவே இருக்கின்றன. விவசாயத்திற்குப் போதுமான நீர்ப்பாசன வசதிகள் இல்லாததால், குழாய்க் கிணறுகள்தாம் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதனுல் சாகுபடிச் செலவு கொஞ்சம் அதிகமாகிவிடுகிறது. மண்வளத்திற்கும் நீர்ப்பாசன வசதிக்குமேற்பச் சாகுபடி செய்யப்படுவதால் எல்லாக் குடியிருப்புகளிலும் ஒரே விதமான சாகுபடியைக் காண முடியாது.

இக்கூட்டுக் கிராமக் குடியிருப்புகள் அனைத்தும் அரசியல் கட்சிகளுடன் தொடர்பு கொண்டுள்ளன. சில குடியிருப்புகள் மதச் சார்புள்ள கட்சிகளுடனும் தொடர்பு வைத்திருக்கின்றன.

இக் குடியிருப்புகளில் சில தொழிற்சாலைகளைக்கூட வைத்து நடத்துகின்றன. பெரும்பாலும், இத் தொழிற்சாலைகள் ஒட்டுப் பலகை, மர அட்டைகள், பக்குவப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள், உலோகப் பொருள்கள், செருப்பு வகைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றன. துணி நெசவிற்கும், அச்சிடும் வேலைக்கும்கூடப் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன.

1967ஆம் ஆண்டில் மொத்தம் 225 கூட்டுக் கிராமக் குடியிருப்புகள் இருந்தன. இவற்றில் சுமார் 1 இலட்சம் பேர் உறுப்

பினர்களாக இருந்தனர். இக் குடியிருப்புகளுக்கு சுமார் 4 இலட்சம் ஏக்கர் நிலம் சொந்தமாக இருந்தது. நாட்டில் விளையும் விவசாயப் பொருள்களில் இக் குடியிருப்புகள் மட்டும் சுமார் 28 சதவீதம் உற்பத்திசெய்கின்றன. இக்கூட்டுப் பண்ணை முறை சோவியத்தில் உள்ளதைக் காட்டிலும் தீவிரமானதாகும். இக் குடியிருப்புகளின் அமைப்பையும் நடவடிக்கைகளையும் பார்க்கும்போது பண்டைக் கால கிரேக்க நாட்டு மேதை பிளாடோ கண்ட கனவு நனவாகி விட்டதுபோல் எண்ணத் தோன்றுகிறது.

2. தொழிலாளர் குடியிருப்புகள் (Moshav Ovdim-Workers Settlement): கிராமக் குடியிருப்புகளில் கடைப்பிடிக்கப் படும் சமதர்மக் கொள்கையை விரும்பாது, தமக்கென ஓரளவு சுதந்திரமாவது வேண்டும் என்று எண்ணிய மக்களால் தொடங்கப் பட்டதுதான் தொழிலாளர் குடியிருப்புகள். தம் இஷ்டப்படி வேலை செய்யவும் வாழவும் விரும்பிய மக்கள் 1921ஆம் ஆண்டில் இக் குடியிருப்பை உருவாக்கினர்கள். தற்போது, இவ் வகைக் குடியிருப்புகள் 200-க்குமேல் இயங்கி வருகின்றன. அரசாங்கத் திடமோ தேசிய யூத நிதிச் சங்கத்திடமிருந்தோ நிலங்களைக் குத்த கைக்குப்பெற்று தம் உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கின்றன இக் குடியிருப்புகள். இதனால் உறுப்பினர்கள் சின்னஞ்சிறிய நிலங்களில் சொந்தமாகவே சாகுபடி செய்யும் வாய்ப்புக் கிடைக்கிறது. ஆனால், இந்நிலத்திற்கு அவர்கள் உரிமை கொண்டாட முடியாது. உறுப்பினர்கள் இந்நிலத்தில் கூலியாள்களை அமர்த்தாமல் சொந்த மாகவே சாகுபடி செய்யவேண்டும். கூலியாள்களை அமர்த்த வேண்டுமாயின், இக் குடியிருப்புச் சங்கத்தின் அனுமதியைப் பெற வேண்டும். சாகுபடி செய்வதற்குத் தேவையான உரம், விதை, கருவிகள் ஆகியவற்றையும் இச் சங்கம் உறுப்பினர்களுக்கு வழங்கு கிறது. அதோடு, வீட்டிற்குத் தேவைப்படும் பொருள்களையும் விநியோகம் செய்கிறது. இப் பொருள்களையெல்லாம் சில சமயங் களில் கடனாகவும் தருகிறது. சில சங்கங்கள் உழும் இயந்திரங்கள் போன்றனவற்றைச் சொந்தமாகவே வைத்திருக்கின்றன; எனவே, இவற்றை உறுப்பினர்களுக்கு வாடகைக்குக் கொடுத்துதவ முடி கிறது. அறுவடைக்குப் பின்னர், உறுப்பினர்கள் தங்களிடம் உபரியாக உள்ள விளைச்சலை இக்கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக் கின்றனர். இச்சங்கம் அதனைத் தரவாரியாகப் பிரித்து மத்தியக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு அனுப்புகிறது. மேலும், இத் தொழிலாளர் குடியிருப்புச் சங்கங்கள் நகராட்சியின் பணிகளையும் உறுப்பினர்களுக்குச் செய்து வருகிறது. அதாவது, சுகாதார வசதி, கல்வி வசதி, உடல்நல வசதி ஆகியவற்றைச் செய்து தருகிறது. இப் பணிகளைச் செய்வதற்கென்று உறுப்பினர்களிடமிருந்து இச்

சங்கம் வரி வசூலிக்கிறது. இவ்வரி உறுப்பினர்களின் சக்திக்கேற்ப விதிக்கப்படுகிறது. உறுப்பினர்கள் தம் சேமிப்புத் தொகையை இச்சங்கத்திடமே சேமித்து வைக்கின்றனர்; இதனால் இச்சங்கம் ஒரு வங்கியைப்போலவும் செயலாற்றுகிறது. இக் குடியிருப்புச் சங்கம் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகக் குழுவால் சிறந்த முறையில் நிர்வகிக்கப்படுகிறது. நிர்வாகத்தை எளிதாக்கும் வகையில் பல்வேறு துணைக்குழுக்களும் அமைக்கப்படுகின்றன. இச் சங்கங்களின் தீர்மானமனைத்தும் வாக்கெடுப்பினால் நிருணயிக்கப் படுகின்றன. வாக்கெடுப்பில் கைதூக்கும் முறையே பின்பற்றப் படுகிறது. ஆனால், உறுப்பினர்களில் 10 சதவீதம் பேருக்குமேல் இம்முறையை விரும்பாவிட்டால் இரகசிய ஓட்டெடுப்பு முறை கையாளப்படுகிறது. இக்குடியிருப்புச் சங்கங்கள் இலாப நோக்கத் திற்காக அமைக்கப்பட்டவை அல்ல; எனவே, இவை இலாபமோ நஷ்டமோ இன்றி உறுப்பினர்களின் நன்மைக்காகவே இயங்கி வருகின்றன. அப்படியே இலாபம் கிடைத்தாலும், அது உறுப்பி னர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டு விடுகிறது. இலாபத்தில் சிறு தொகைகூடக் காப்பு நிதியாக வைக்கப்படுவதில்லை. இச் சங்கங் களுக்கு நிதி தேவைப்பட்டால் உறுப்பினர்களிடமிருந்து பங்கு மூலதன வழியாகவே திரட்டப்படுகிறது. சில சமயங்களில் வணிக வங்கிகளிடமிருந்து கடனாகவும் நிதியைப் பெறுகின்றன. 1970ஆம் ஆண்டில் இவ் வகைக் குடியிருப்புச் சங்கங்கள் மட்டும் 311 ஆக இருந்தன.

3. சிறு விவசாயிகளின் கூட்டுக் குடியிருப்புகள் (Moshav Shitufi-Collective Small holders Settlement): மேற் கூறிய இருவகைக் குடியிருப்புச் சங்கங்களுக்கும் இடைப்பட்ட நிலையில் இயங்குவதுதான் சிறுநில விவசாயிகளின் கூட்டுக் குடியிருப்புகளாகும். சிறுசிறு துண்டு நிலங்களைப்பெற்ற அனைவரும் சேர்ந்து தத்தம் நிலங்களையெல்லாம் ஒன்றுசேர்த்து, கூட்டு விவசாயம் நடத்துவதற்கென்று இக் குடியிருப்புகள் அமைக்கப் பட்டன. இக்குடியிருப்புச் சங்கத்தின் உறுப்பினர்கள் சொந்த வீட்டில் சுயமாகவே வாழ்கின்றனர். சிறுசிறு துண்டு நிலங்களாக இருப்பதால் இக்குடியிருப்புச் சங்கத்தின் வழியாகத் தம் நிலத்தை யெல்லாம் ஒன்றாக்கி, பெரிய பண்ணைகளாக அமைத்துச் சாகுபடி செய்கின்றனர். இவர்கள் கொண்டுள்ள நிலமும் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டதுதான். இக் குடியிருப்பின் உறுப்பினர்கள் இக் கூட்டுப் பண்ணைகளில் உழைத்து, விளைச்சலைச் சரிசமமாகப் பகிர்ந்து கொள்கின்றனர். இக் குடியிருப்புச் சங்கம் ஒவ்வோர் உறுப்பின ருக்கும் வீடு, வாசல், இன்னும் பிற சௌகரியங்களையெல்லாம் செய்து தருகிறது. ஏனைய குடியிருப்புகளைப்போலவே இவையும்

நிர்வகிக்கப்படுகின்றன. தற்போது இவ் வகைக் குடியிருப்புச் சங்கங்கள் 17 இருக்கின்றன.

புதிய குடியேற்றக் குடியிருப்புகள் (Moshav Olim-New immigrants Settlement)

இவ்வகைக் குடியிருப்புகள் முதன்முதலில் 1948ஆம் ஆண்டில்தான் தொடங்கப்பட்டன. இவை ஏறக்குறைய தொழிலாளர் குடியிருப்புகளைப்போலவேதான் அமைந்துள்ளன. இந்நாட்டிற்குப் புதிதாகக் குடியேறும் பலருக்குக் கூட்டுறவின் கொள்கைகளோ நடைமுறையோ தெரிவதில்லை; விவசாயம்கூட அவர்களுக்குப் புதிதாகவே இருக்கிறது. எனவே, இவர்களையெல்லாம் இக் குடியிருப்புச் சங்கம் பண்ணைகளில் குடியமர்த்துகின்றது; விவசாய நிபுணர்களைக்கொண்டும் கூட்டுறவாளர்களைக்கொண்டும் இவர்களுக்குக் கூட்டு விவசாயம் கற்றுத் தரப்படுகின்றது. இந் நிலையில் இவர்கள் அனைவரும் விவசாயக் கூலியாள்களைப்போலவே நடத்தப்படுகின்றனர். கூட்டு முறையில் விவசாயம் செய்யும் முறையை இவர்கள் கற்றறிந்த பின்னர், இவர்களுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப்படுகிறது. தொழிலாளர் குடியிருப்புகளின் சாகுபடி முறையைத்தான் இவையும் பின்பற்றுகின்றன. இவர்கள் அனைவருக்கும் வேண்டிய பண வசதியை 'யூதப் பதிலாண்மைச் சங்கம்' நீண்ட காலக் கடனுகத் தந்து உதவியது. இவர்கள் வாழும் பண்ணை வீடுகளுக்கு மானியத் தொகையும் வழங்கப்பட்டது. மேலும், கோழிகள், பசுக்கள், குதிரைகள் போன்ற கால்நடைகளை வாங்குவதற்கும் விவசாயக் கருவிகளை வாங்குவதற்கும் இவர்களுக்கு மானியத் தொகை வழங்கப்பட்டது.

இஸ்ரேல் நாட்டு விவசாயத் துறையில் வேறு சில வகைக் கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கி வருகின்றன. அவை முறையே,

(அ) விவசாய உற்பத்தி, விற்பனைச் சங்கங்கள்

(ஆ) நீர்ப்பாசன வசதிச் சங்கங்கள்

(இ) பொது விவசாயச் சங்கங்கள்

(ஈ) சமரச விவசாயக் காப்பீட்டுச் சங்கங்கள் ஆகும்.

வெற்றியின் அடிப்படை

இஸ்ரேல் நாட்டில் அமைக்கப்பட்ட இக்கூட்டுக் குடியிருப்புகள் மாபெரும் வெற்றியைப்பெற்று, உலக நாடுகளைக் கவர்ந்தவண்ணம் இருக்கின்றன. இக்கூட்டுக் குடியிருப்புகளின் வெற்றி எவ்வாறு

ஏற்பட்டது என்பதை அறியுமுன்னர், இக்குடியிருப்புகள் எதற்காக அமைக்கப்பட்டன என்பதைத் தெரிந்துகொள்வது நல்லது. 1. யூத மக்கள் அனைவரும் நாட்டுப்பற்றினால் உந்தப்பட்டு, ஒருவருக்கொருவர் உதவவேண்டுமென்ற தீவிர வேட்கை கொண்டிருந்தனர்; 2. இந் நாட்டில் புதிதாய்க் குடியேறிய மக்கள் அனைவரும் தம் தாய் நாடு உன்னத நிலைக்கு வரவேண்டுமென்ற உற்சாகத்தால் பல புதிய யுக்திகளைக் கையாள ஆயத்தமாயிருந்தனர்; 3. புதிதாய்க் குடியேறிய யூத மக்களுக்கு விவசாயம் செய்யும் பழக்கமோ நுட்பமோ இல்லாதிருந்ததால் கூட்டுப் பண்ணைகளை நாடினர்; 4. பண்படுத்தப்படாத பரந்த நிலத்தைச் சாகுபடி செய்வதற்கு வேண்டிய வசதியோ அனுபவமோ அவர்களிடம் இல்லாமலிருந்தது; 5. தம் விரோதிகளான அரேபியர்களிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்கு ஒருவருக்கொருவர் உதவிசெய்ய வேண்டியிருந்தது. எனவே, கூட்டுப் பண்ணை முறைதான் சிறந்த வழி என்று அவர்கள் கண்டுகொண்டதில் வியப்பொன்றுமில்லை.

இக் கூட்டுப் பண்ணைமுறை இந் நாட்டில் வெற்றிபெற்றதற்குப் பல காரணங்கள் இருப்பினும், அவற்றுள் அடிப்படையானவை வருமாறு: தொடக்கத்தில் இந் நாட்டில் 'நில மானிய முறை' (Land tenure system) ஏதுமில்லாததால் இங்குக் குடியேறிய மக்கள் அனைவரும் யாதொரு தடங்கலுமின்றி விவசாயத் தொழிலை மேற்கொள்ள முடிந்தது. இவர்களில் பெரும்பாலோர் அறிவாற்றல் நிறைந்தவர்கள். அதனோடு, சோவியத் நாட்டிலிருந்து வந்த யூத மக்கள் அங்கிருந்து கூட்டுப் பண்ணை முறையைப்பற்றிய எண்ணங்களையும் அனுபவத்தையும் தம்முடன் கொண்டு வந்தனர்.

இஸ்ரேல் நாட்டு மக்கள் பல்வேறு கூட்டுறவு இயக்கங்களைத் தொடங்கிப் பார்த்து அனுபவம் பெறவேண்டுமென்ற ஆசையற்று, ஒரே துறையில் தம் முழுக்கவனத்தையும் செலுத்தி வெற்றிபெற்றுவிட்டனர். யூத மக்கள் கூட்டு வாழ்க்கை வழியாகத் தான் தம் தாய்த் திருநாட்டிற்குப் புத்துயிர் கொடுக்கமுடியும் என்று திட்டவட்டமாக நம்பினர். 'கூட்டு வாழ்வுதான் வாழ்வு' என்ற அடிப்படையில் இஸ்ரேல் நாடு ஒன்றுதான் நம்பிக்கை கொண்டுள்ளது.

விவசாய விளைச்சலிலும் இக் கூட்டுக் குடியிருப்பு முறை பெரும் வெற்றியைத் தந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்குள் இந் நாட்டின் விவசாய உற்பத்தி மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. எனவே, விளைச்சலைப் பெருக்கும் வித்தையான இக்கூட்டுக் குடியிருப்புகளில் யூத மக்கள் நம்பிக்கைகொண்டதில் வியப்பொன்றுமில்லை. உறுதியும் நம்பிக்கையும்தாம் வெற்றியின் அடிப்படை.

14. சீனவில் கூட்டுறவு இயக்கம்

(Co-operative Movement In China)

சீனவில் கூட்டுறவு இயக்கம் தோன்றியது ஒரு சுவையான வரலாருகும். அங்குத் தொடர்ந்து ஏற்பட்டுவந்த பஞ்சம், பட்டினி, வெள்ளம், உள்நாட்டுக் குழப்பம், ஜப்பானுடன் நடந்த போர் ஆகியவற்றின் விளைவே கூட்டுறவு இயக்கமாக மலர்ந்தது. இயற்கையின் சீற்றமும் செயற்கையின் கொடுமையும் சேர்ந்து தோற்றுவித்ததுதான் கூட்டுறவு இயக்கம். பல நூற்றுண்டுகளுக்கு முன்பே கடன் சங்கங்களும், பரஸ்பரக் கழகங்களும் தோன்றி விட்டன; எனினும், எண்ணிலடங்கா மக்களின் இன்னல்களை அவற்றுல் நீக்க முடியவில்லை.

அண்மையில்தான் கூட்டுறவு இயக்கம் சீனவில் வேரூன்றத் தொடங்கியது. சீனக் குடியரசை ஏற்படுத்திய 'சன்யாட்சென்' என்பவர்தாம் 1912ஆம் ஆண்டில் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு முறையான ஊக்கம் கொடுக்கத் தொடங்கினர். இவர் அரசாங்கப் பொறுப்பை ஏற்றவுடன் நாட்டில் மலிந்துகிடந்த வறுமையை விரட்டியடிக்கக் கூட்டுறவு வழியை நாடினர். அவர் எடுத்த முயற்சியின் விளைவாக 'ஷாங்கைத் தேசியக் கூட்டுறவுச் சேமிப்பு வங்கி' 1919-ல் தோன்றியது. இவ்வங்கியைப் பேராசிரியர் 'ஹிஸி' (Hsieh) என்பவர் தோற்றுவித்தார். ஏனைய நாடுகளில் இயங்கி வந்த கூட்டுறவு இயக்கத்தை நன்கு புரிந்துகொண்ட இவர் தம் தாய் நாட்டிலும் அது வளர அரும்பாடுபட்டார். கூட்டுறவுக் கொள்கைகளை மக்களிடையே பரப்புவதற்கென்று ஒரு வார இதழையும் நடத்தி வந்தார். ஷாங்கை வங்கி தொடங்கப்பட்ட மூன்றுண்டுகளுக்குள் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் பல தொடங் கப்பட்டுவிட்டன. 1922ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொடும் பஞ்சத் திஞல் நாடு முழுவதும் பாதிக்கப்பட்டது. உண்ண உணவின்றி மக்கள் தவிக்கலாயினர். சீன நாட்டில் வாழ்ந்துவந்த பிற நாட்

டவர்கள் பசியால் வாடிய சீன மக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்கி உதவினர். அவ்வாண்டு ஏற்பட்ட வறட்சி நிலையையும், அதைத் தொடர்ந்து தோன்றிய பஞ்சத்தையும் கண்ட அரசாங்கம் செய்வதென்னவென்று தெரியாமல் தவித்தது. எனினும் 1922-ல் 'பன்னாட்டுப் பஞ்ச நிவாரணக் குழு' சீனுவில் உருவாக்கப்பட்டது. இக்குழு 1924-ல் சமர்ப்பித்த தம் அறிக்கையில் மக்களின் வறுமையை நீக்கக் கூட்டுறவு இயக்கத்தை விரைவாக வளர்க்கு மாறு சிபாரிசு செய்தது. அதன் பின்னர்த்தான் மாநில அரசாங்கங் களும் விழிப்புணர்ச்சி பெற்றன. கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி அவற்றைச் செம்மையாக நடத்துவதற்குத் தகுந்த அதிகாரிகளை நியமித்தன. இவ்வாறு தோன்றிய கூட்டுறவுச் சங்கங்கள் வணிக வங்கிகளிடமிருந்து தமக்குத் தேவையான கடன் வசதிகளைப் பெற்று வந்தன. இச் சங்கங்களின் வளர்ச்சிக்கென்று 1928-ல் ஒரு கூட்டுறவு இணைப்புச் சங்கம் அமைக்கப்பட்டது.

இவ்வாறு தொடங்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் 1931-ல் 'யாங்ட்ஸி' என்னும் ஆற்றில் ஏற்பட்ட பெரு வெள்ளத்திற்குப்பின் துரிதமாக வளரலாயிற்று. இவ் வெள்ளப் பெருக்கினுல் பாதிக்கப் பட்ட மக்களுக்குக் கடனுதவிகள் வழியாக நிவாரணம் அளிப்பதற் கென்று சுமார் 20,000 சங்கங்கள் அவசரமாகத் தொடங்கப்பட்டன, அச் சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டால் காலதாமதமாகுமென்று; பதிவு பெருமலேயே அமைக்கப்பட்டன. 1931ஆம் ஆண்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசின் முழு ஆதரவு கிடைக்கும் வகையில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அரசாங்கத்தின் ஆதரவுடன் கூட்டுறவு இயக்கம் நன்கு வேரூன்றித் தழைக்கத் தொடங்கியது. இவ்வாறு ஊக்குவிக்கப்பட்டதன் விளைவாக 1937-ல் சுமார் 55,000 கூட்டுறவுச் சங்கங்கள் சீனுவில் இருந்தன. இவற்றில் சில பெயரளவில்தாம் இருந்தன. எனவே, 1935ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் வழியாகச் சீனுவின் கூட்டுறவு இயக்கம் சீர்படுத்தப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களின் திறமைக்கேற்ப அவை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. இவற்றில் நான்காம்தரக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் கலைக்கப் பட்டன. மூன்ரும்தரச் சங்கங்கள் ஊக்குவிக்கப்பட்டன. இதன் பின்னர்ச் சங்கங்கள் முறையாக வளர்ந்து வந்தன. 1944ஆம் ஆண்டின் இறுதியில் சீனுவில் மொத்தம் 1,60,000 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இவற்றின் உறுப்பினர்களாக 15·3 மில்லியன் பேர் இருந்தனர். 1949-ல் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 1,85,000-க்கு உயர்ந்தது. இவற்றில் கடன் சங்கங்கள் 75,850; விவசாய உற்பத்திச் சங்கங்கள் 31,430; நுகர்வோர் சங்கங்கள் 23,050; விற்பனைச் சங்கங்கள் 18,500; தொழில் கூட்டுறவுச்

சங்கங்கள் (Indus-Cos) 9,250. இப் புள்ளி விவரங்களிலிருந்து சீனுவில் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மட்டுமின்றி, ஏனைய வகைச் சங்கங்களும் வளர்ந்திருந்தன என்று அறிய வருகிரேும்.

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்
(Indus-Cos.)

1937ஆம் ஆண்டு ஜப்பானுடன் போர் தொடங்கியதன் விளைவாக நுகர்வோர் சங்கங்களும் உற்பத்தியாளர் சங்கங்களும் பெருமளவில் அமைக்கப்பட்டன. போரின்போது சீனுவின் கடற்கரைப் பகுதிகள் ஜப்பான் கைவசமாயின. எனவே, கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்துவந்த சீன மக்கள் தம் வீடு வாசல்களையெல்லாம் விட்டுவிட்டு, சீனுவின் மத்தியப் பகுதிகளில் குடியேறினர். அவ்வாறு குடியேறியவர்களில் பெரும்பாலோர் திறமைமிக்க கைத்தொழிலாளர் ஆவர். கடற்கரைப் பகுதிகளையெல்லாம் ஆக்கிரமித்துக்கொண்ட ஜப்பான் அங்கிருந்த தொழிற்சாலைகளையெல்லாம் நாசமாக்கிவிட்டது. இச் சூழ்நிலையில் சீன அரசாங்கத்திற்கு மூன்று முக்கியமான பிரச்சினைகள் எழுந்தன.

1. கடற்கரைப் பகுதிகளிலிருந்து தப்பி ஓடிவந்த அகதிகளுக்கு வேலை தரவேண்டும்.

2. சீனுவின் போர்ப் படைக்குத் தேவையான பொருள்களையெல்லாம் உற்பத்திசெய்து விநியோகிக்க வேண்டும்;

3. பொதுமக்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருள்களையும் அளிக்கவேண்டும்.

இம்மூன்று பிரச்சினைகளையும் ஒன்றேடொன்று தொடர்புடையதாக்குவதன் வாயிலாக இவற்றிற்குத் தீர்வு காண விழைந்தது சீன அரசாங்கம். கைத்திறமை கொண்ட அகதிகளுக்கு வேண்டிய உற்பத்திக் கருவிகளையும் சாதனங்களையும் கொடுத்து, அவர்கள் வழியாகவே போர்ப்படைக்கு வேண்டிய பொருள்களையும் பொதுமக்களுக்கு வேண்டிய நுகர்வுப் பண்டங்களையும் உற்பத்திசெய்து மூன்று பிரச்சினைகளையுமே தீர்த்துவிட முடிவு செய்தது. ஆனுல், அரசாங்கமே ஒவ்வோர் அகதிக்கும் வேண்டிய சாதனங்களை அறிந்து விநியோகிப்பது என்பது கடினம். எனவே, இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கென்று திரு வூ (Mr. C. F. Wu என்ற அறிவு மேதை ஒரு திட்டத்தை வகுத்தார். அதன்படி தொழிலாளிகளையெல்லாம் கூட்டுறவுக் குழுக்களாக அமைத்து அவர்களுக்

கெனச் சிறிய பட்டறைகளையும் ஏற்படுத்திச் சீன நாட்டிற்குத் தேவைப்பட்ட பொருள்களை உற்பத்திசெய்யத் திட்டமிடப்பட்டது. திரு. ஊ அவர்களும் பிரிட்டன் நாட்டுத் தூதுவரும் சேர்ந்து சீன நாட்டுத் தலைவரான ஷியாங்கே ஷேக் அவர்களிடம் இத் திட்டத்தைப்பற்றி விரிவாகக் கூறினார்கள். அவர்களின் ஆலோசனைப்படி 1938ஆம் ஆண்டு ஷாங்கை என்னுமிடத்தில் கூட்டுறவுத் தொழிற் சங்கங்களின் வளர்ச்சிக்காகக் கூட்டுறவுக் கழகம் ஒன்று அமைக்கப் பட்டது.

திரு. 'ஊ' அவர்கள் கொல்லர்களின் நல்வாழ்விற்கென்று ஒரு தொழிற்சாலையைக் கூட்டுறவு அடிப்படையில் தொடங்கினார். அக் கொல்லர்களுடனே தாமும் வாழ்ந்து அச்சங்கத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். இச் சங்கம் 9 அகதிகளை உறுப்பினர்களாகக் கொண்டு தொடங்கப்பட்டது. 20 பவுன்கள் கடனாகப் பெற்றுத் தொடங்கப்பட்ட இச்சங்கம் 14 மாதங்களில் நன்கு வளர்ச்சிபெற்று, வட்டியுடன் கடனைத் திருப்பிக் கொடுத்துவிட்டது. இச் சங்கத்தின் வெற்றியைத் தொடர்ந்து வலை பின்னும் 30 தொழிலாளர்களைக் கொண்டு மற்றொரு சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இத் தொழிலாளர்கள் அனைவரும் தாம் வாழ்ந்துவந்த கடற்கரைப் பகுதிகளை விட்டு வெளியேறியபோது தம் தொழில் கருவிகளையும் கொண்டு வந்திருந்தனர். எனவே, அக் கருவிகளைப் பொருத்தி ஒரு தொழிற் சாலையைத் தொடங்கியது இச்சங்கம்.

இவ்விரு சங்கங்களையும் தொடர்ந்து, சோப்பு, மெழுகுவர்த்தி, அச்சுக்கலை போன்ற தொழில் செய்வோரின் நலனுக்கென்று பல்வேறு சங்கங்கள் அமைக்கப்பட்டன. இச் சங்கங்களைக்கொண்டு படை வீரர்களுக்குத் தேவையான போர்வை போன்ற பொருள்கள் ஏராளமாக உற்பத்திசெய்யப்பட்டன. இத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மரச் சாதனங்கள் அனைத்தையும் தச்சர்களைக் கொண்டு இயங்கிவந்த கூட்டுறவுச் சங்கங்கள் அளித்து வந்தன.

இத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் துரிதமான வளர்ச்சி பெற்று 1932-ல் 350 க்கும் அதிகமாகிவிட்டன. இச் சங்கங்களில் பல பொதுமக்களுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்திசெய்து வந்தன. இச் சங்கங்களில் 50 சதவீதம் நெசவாளர்களைக்கொண்டு இயங்கி வந்தன. ஏனைய சங்கங்கள் தோல் பொருள்கள், உலோகப் பாத்திரங்கள், சுரங்கத் தொழில், இரசாயனப் பொருள்கள், உணவுப் பொருள்கள், காகிதம் போன்ற பொருள்களை உற்பத்தி செய்துவந்தன. 1932-ல் இச் சங்கங்களின் உறுப்பினர்களாக 4,300 பேர் இருந்தனர். இச் சங்கங்களின் பங்கு மூலதனம் 1·2 லட்சம் சீனா டாலராக இருந்தது.

சங்கங்களின் வட்டார அமைப்பு) Zones of Societies): ஜப்பானியப் படைகள் முன்னேறியபோது தொழிற்சாலைகளை யெல்லாம் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றவேண்டியிருந்தது. இக் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வகைச் சங்கங்களும் குறிப்பிட்ட வட்டாரத்தில் அமையும்படி திட்டமிடப்பட்டது. நாட்டின் மையப் பகுதிதான் அதிகப் பாதுகாப்புள்ளதென்று அவ்வட்டாரப் பகுதியில் கனரக இயந்திரத் தொழிற்சாலைகள் மாற்றப்பட்டன. அப் பகுதியைச் சுற்றிச் சாதாரண இயந்திரங்களைக்கொண்டு இயங்கிவந்த தொழிற் சாலைகள் கொண்டு வரப்பட்டன. இப்பகுதியிலேயே போக்கு வரத்துச் சங்கங்களும் இடம்பெற்றன. தொழிற்சாலைகளை இடம் விட்டு இடம் மாற்ற இப்போக்குவரத்துச் சங்கங்கள் உதவியா யிருந்தன. மூன்றாவது பகுதியான எல்லையோரப் பகுதியில் சீனப் படைகளுக்கு அருகில் கொரில்லாத் தொழிற்சாலைகள் அமைக்கப் பட்டன. சீனப் படைகளுக்கு இத் தொழிற்சாலைகள்தாம் இரகசிய மாகப் பணிபுரிந்து வந்தன. மேலும், கொரில்லாப் படை வீரர் களுக்குத் தேவையான ஆயுதங்களையும் அளித்து வந்தன.

1942ஆம் ஆண்டில் இத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் 1,950 ஆகும். இவற்றில் உறுப்பினர்கள் 22,680 பேர். இச்சங்கங்களின் பங்கு மூலதனம் 45·5 இலட்சம் சீன டாலர்கள். மாதந்தோறும் இச் சங்கங்கள் உற்பத்திசெய்த பொருள்களின் மதிப்பு 240 இலட்சம் சீன டாலர்கள்.

அரசாங்க உதவி : 1942ஆம் ஆண்டிற்குப் பின் விலை வாசிகள் ஏறின. இத்தொழில் சங்கங்கள் தமக்குத் தேவைப்பட்ட மூலப் பொருள்களை அதிக விலைகொடுத்து வாங்க வேண்டிருந்தது. ஆனால் இச் சங்கங்களிடம் போதுமான நிதி வசதி கிடையாது. அதனோடு, நாட்டில் விளைந்த பருத்தி முழுவதையும் சீன அரசாங்கமே கொள்முதல் செய்து வந்ததால் இச்சங்கங்கள் செய்வ தென்னவென்று தெரியாமல் விழித்தன. இச் சங்கங்களின் ஆடை உற்பத்தியும் கணிசமாகக் குறைந்துவிட்டது. இச் சூழ்நிலையில் சீன அரசாங்கம் இக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவுவதற்கெனத் திட்டம் வகுத்தது. அதன்படி 'சுங்கிங்' என்னுமிடத்தில் ஒரு மத்தியத் தலைமைக் காரியாலயத்தைத் தொடங்கியது. இக் காரியாலயம் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றத் தொடங்கியது. இம் மத்திய அமைப்பிற்குக் கீழ் 7 பிராந்திய அலுவலகங்கள் அமைக்கப் பட்டன. இவற்றிற்குக் கீழ் மாநிலங்களில் பல கிடங்குகள் (Depot)

தொடங்கப்பட்டன. இவ்வமைப்பின் முக்கியப் பணிகள் நான்கு. அவை:

1. புதிய கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதோடு எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேவையான நிதி வசதிகள், இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றைப் பெற்றுத் தருவது.

2. தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் பயிற்சி பெற்றோரே உறுப்பினராக அனுமதிக்கப்பட்டதால், பல்வேறு இடங்களில் பயிற்சி நிலையங்களைத் தொடங்கி, ஆண், பெண் இருபாலாருக்கும் முறையான தொழில் பயிற்சி அளிப்பது.

3. அரசாங்கம் அளித்துள்ள 5 மில்லியன் டாலரைக் கூட்டுறவுச் சங்கங்களின் நிலைமைக்கேற்பப் பகிர்ந்தளிப்பது.

4. சங்கங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை அரசாங்கமே கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்வது.

சங்கங்களின் அமைப்பு

1. ஒவ்வொரு சங்கமும் குறைந்தது 7 உறுப்பினர்களையாவது பெற்றிருக்க வேண்டும். சங்கம் நடத்தும் தொழிலில் பயிற்சி பெற்றுள்ள எவரும் உறுப்பினராகலாம். எனினும், உறுப்பினராக விரும்பும் அனைவரும்,

(i) வயது வந்தோராய் இருத்தல் வேண்டும்.

(ii) நன்னடத்தையுள்ளோராயும் நேர்மையுள்ளோராயும் இருக்க வேண்டும்.

(iii) நொடித்தவர்களாய் இருக்கக் கூடாது.

(iv) சங்கம் பணிபுரியும் பகுதியில் வாழ்பவராய் இருக்க வேண்டும்.

(v) ஏதாவது ஒரு சங்கத்தில்தான் உறுப்பினராக இருக்க வேண்டும்.

2. உறுப்பினர் ஒவ்வொருவரும் குறைந்தது ஒரு பங்கு மூலதனத்தையாவது (2 சீன டாலர்கள்) பெற வேண்டும். சங்கத்தின் 'ஒப்பிய பங்குகளில் (Subcribed Shares) 1/15 பாகத்திற்கு மேல் எவருமே வாங்கக் கூடாது.

3. உறுப்பினர்களது பொறுப்பு வரையறுக்கப்பட்டது. அதாவது, சங்கத்திற்கு இழப்பு நேரிடும் போது உறுப்பினர் ஒவ்வொருவரும் அவரவர் பங்கு மதிப்பைப் போல் 20 மடங்குத் தொகை அளவுக்கு அவ்விழப்பில் பொறுப்பு ஏற்க வேண்டும்.

4. உறுப்பினர் அனைவரும் பொதுக் குழுவில் இடம் பெறுவர். 'ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் இப்பொதுக் குழு இயக்குநர் குழுவைத் தேர்ந்தெடுக்கும். அன்றாட நிர்வாகத்தை இக் குழுவே கவனித்துக் கொள்ள வேண்டும். பொதுக் குழு வருடத்திற்கு ஒரு முறையாவது கூட வேண்டும்.

5. உறுப்பினர்கள் அனைவரும் தொழிலாளிகள். எனவே, அவர்களின் அன்றாட வேலைக்கு ஊதியம் கொடுக்கப்பட்டது. ஒரு சில சங்கங்களின் உறுப்பினர்கள் தத்தம் சங்கங்களிடமிருந்து மூலப் பொருள்களைப் பெற்று, வீட்டிலேயே உற்பத்தி செய்து வருகின்றனர். அப்படிப் பட்ட உறுப்பினர்கள் தாம் உற்பத்தி செய்த பொருள்களைச் சங்கத்திடமே ஒப்படைக்க வேண்டும்.

6. ஆண்டு இறுதியில் இலாபத் தொகை உறுப்பினர்களிடையே சமமாகப் பிரிக்கப்படுகிறது. பங்குதாரர்களுக்கு இலாப ஈவு அதிகமாகக் கொடுப்பது கிடையாது. அதற்குப் பதிலாகப் பங்கு மூலதனத்திற்குக் குறைந்த வட்டித் தொகைதான் அளிக்கப்படுகிறது. எஞ்சியுள்ள இலாபத் தொகை பின்வருமாறு பிரிக்கப்படுகிறது.

பொதுக் காப்பு நிதிக்கு	20	சதவீதம்
பொது நல நிதிக்கு	10	,,
உறுப்பினர்களுக்கு மேலூதியமாக (Bonus)	10	,,
தொழில் வளர்ச்சி நிதிக்கு	10	,,

எஞ்சியுள்ள இலாபத்தொகை உறுப்பினர்கள் பெற்றுள்ள ஊதிய அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

கூட்டமைப்புகள்

ஆரம்பத்தில் தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்கள் தமக்கு வேண்டிய மூலப் பொருள்களைத் தாமே வாங்கி வந்ததோடு, உற்பத்தி செய்த பொருள்களையும் தாமே விற்றும் வந்தன. ஆனால், 1930ஆம் ஆண்டில் 30 சங்கங்கள் ஒன்றுசேர்ந்து தம் கொள்முதல்,

விற்பனைப் பணிகளைச் செய்வதற்கென்று ஒரு கூட்டமைப்பைத் தொடங்கின. இதைத் தொடர்ந்து பிரதேச அடிப்படையிலும் தொழில் அடிப்படையிலும் பல்வேறு கூட்டமைப்புகள் தோன்றின. தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் முதலில் மாவட்டக் கூட்டமைப்புகளை ஏற்படுத்துகின்றன; பின்னர், இம்மாவட்டக் கூட்டமைப்புகள் மாநிலக் கூட்டமைப்புகளை உருவாக்குகின்றன. இவற்றிற்கெல்லாம் மேலாக 'அகில சீனக் கூட்டுறவுச் சங்கக் கூட்டிணைப்பு' (All China Federation of Co-operatives) ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது. இத் தேசியக் கூட்டிணைப்பு 1950-ல் தான் உருவானது.

புதிய சீனுவில் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

பழைய ஆட்சியின்போது அமைக்கப்பட்ட தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இன்றும் இருக்கின்றன; எனினும், சீன மக்கள் குடியரசாக மாறியபின் அவை பெரும் மாறுதல்களுக்கு உட்பட்டுள்ளன. வலிமை குறைந்த பல கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டுவிட்டன. பொதுவுடைமைக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர், அரசாங்கத்தின் ஆணைப்படி இச் சங்கங்கள் புதிய முறையில் உருவெடுத்து வளரவேண்டியதாயிற்று.

புதிய ஆட்சி ஏற்பட்டவுடன் குடிசைத் தொழில்களுக்கு (Cottage industries) சிறு தொழில்களும் (Small scale industries) ஊக்குவிக்கப்பட்டு அவை கூட்டுறவு முறையில் வளர்வதற்கு வழி வகுக்கப்பட்டன. துரிதமாகச் செயல்பட்டு வந்த அரசாங்கத்துடன் இச் சங்கங்களும் இணைந்து முன்னேறின. 1950-ல் 311 ஆக இருந்த சங்கங்களின் எண்ணிக்கை 1951-ல் 1,321 ஆக உயர்ந்தது; உறுப்பினர்கள் 2,64,000 பேர் இருந்தனர்: சுமார் 400 மில்லியன் 'உவான்' (Yuan) மதிப்புள்ள பொருள்களை இச் சங்கங்கள், உற்பத்தி செய்தன. இச் சங்கங்களின் எண்ணிக்கை 1953-ல் 4,813 ஆக உயர்ந்தது; உறுப்பினர்களும் 3 இலட்சத்திற்கு அதிகரித்தனர். 1957-ல் உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 இலட்சத்தை அடைந்துவிட்டது.

இச் சங்கங்கள் காலணி தயாரித்தல், தச்சுவேலை செய்தல், ஆடை நெய்தல், தையல்வேலை செய்தல் போன்ற பல துறைகளில் இயங்கி வந்தன. இத் தொழில்களில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகள் தமக்கு வேண்டிய மூலப் பொருள்களையும் உற்பத்தி சாதனங்களையும் கூட்டாக வாங்குவதற்கென்றும், தமக்கு வேண்டிய தொழில்நுட்ப அறிவுரையைப் பெறுவதற்கென்றும், தமது

உற்பத்திப் பொருள்களைக் கூட்டாக விற்பதற்கென்றுமே இச் சங்கங்களை அமைத்தனர். இச் சங்கங்களின் குறிக்கோள்கள் உற்பத்திச் செலவைக் குறைப்பதும் உற்பத்தி முறைகளை மேம் படுத்தி விற்பனையை அதிகரிப்பதுமேயாகும். இச் சங்கங்களை அமைத்த தொழிலாளர்கள் சமதர்ம அடிப்படையைப் பின்பற் றினர். சங்கத்தின் வருமானம் அனைத்தும் உறுப்பினர்களின் உழைப்பிற்கேற்றவாறு பகிர்ந்தளிக்கப்பட்டது. உறுப்பினரல்லா தோர் வேலைக்குத் தேவைப்படும்போது முதலில் அவர்கள் உறுப் பினர்களாக்கப் படுகின்றனர். உறுப்பினர் அனைவரும் கூட்டுறவுத் தொழிற்சாலையில்தான் வேலை செய்கின்றனர்.

அரசாங்கம் இச் சங்கங்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்து வருகிறது. சங்கங்களுககுத் தேவைப்படும் இயந்திரங்கள், கருவிகள், சாதனங்கள் முதலியன அரசாங்கத் தொழிற்சாலைகளின் மூலம் மலிவாக விற்பனை செய்யப்படுகின்றன. உற்பத்தியைப் பெறுக்குவதற்கென்று தொழில்நுட்ப ஆலோசனைகளையும் நிர்வாக உதவியையும் அரசாங்கம் இலவசமாகக் கொடுக்கிறது. இச் சங்கங் களுக்கு நிதி தேவைப்படும்போது அரசாங்க வங்கிகள் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கின்றன. வரிச் சலுகைகளும் இவற்றிற்கு அளிக்கப்படுகின்றன.

அரசாங்கம் இத்துணை வழிகளில் உதவுவதால் இச் சங்கங் களின் திட்டங்கள் எளிதில் நிறைவேறுகின்றன.

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள்

பொதுவுடைமைக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர்த்தான் வேளாண்மைத்துறையில் பல புரட்சிகரமான முன்னேற்றங்கள் ஏற்பட்டன. விவசாய வளர்ச்சிக்கென்று பல கூட்டுறவுச் சங் கங்களை ஏற்படுத்தியதன் வாயிலாக அம் மாற்றங்கள் தோன்றின. இம் மாற்றங்கள் எவ்வளவு தூரம் அண்டையில் இருந்த பிற் போக்கு நாடுகளையெல்லாம் கவர்ந்தனவென்பது விவசாயத்தில் தாமும் சீன முறையைத்தான் கையாள வேண்டுமெனத் தூண்டப் பட்டதால் விளங்கும்.

விவசாய வளர்ச்சிக்கென்று பொதுவுடைமை அரசாங்கம் பல நிலச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தது. 1952ஆம் ஆண்டில் நிலக்கிழார்களுக்குச் சொந்தமாயிருந்த நிலங்களெல்லாம் சாகுபடி செய்தோருக்கே பகிர்ந்தளிக்கப்பட்டது. இந் நிலச் சீர்திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டுதான் விவசாயக் கூட்டுறவுச் சங்கங் களும் வளர்ந்தன. சீன நாட்டு மொத்த மக்கள் தொகையுடன்

நிலப்பரப்பை ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஒவ்வொரு குடும்பத்திற்கும் சின்னஞ்சிறு துண்டு நிலம்தான் கிடைத்தது. துண்டு நிலங்களில் நவீன முறையைப் புகுத்தி விவசாயம்செய்ய முடியவில்லை. விளைச்சலையும் பெருக்க இயலவில்லை. இதைக்கண்ட பொதுவுடைமை அரசாங்கம் விவசாயிகளின் துண்டு நிலங்களைக்கொண்டு பல 'மக்கள் மன்றங்களை' (Peoples' communes) அமைத்தது. இவ்வமைப்பின் நன்மைகள் பல, அவை :

1. துண்டு நிலங்கள் ஒன்றுசேர்க்கப்பட்டுப் பல மக்கள் மன்றங்களானதால் சாகுபடி செய்யும் நிலத்தின் அளவு அதிகரித்தது.

2. உறுப்பினர்களின் சாதனங்கள் அனைத்தும் ஒன்றுசேர்க்கப்பட்டதால் எளிதாகவும் விரைவாகவும் நிலத்தை மேம்படுத்த முடிந்தது.

3. சாகுபடி செய்வதற்கு இயந்திரங்களையும் சருவிகளையும் பயன்படுத்த முடிந்ததால் விளைச்சல் பன்மடங்காகியது.

4. பொதுவுடைமை ஆட்சியின் கொள்கைகளுக்கேற்ப நிலமும் பொதுவுடைமையானது.

5. சீனநாடு துரிதமாகத் தொழில்மயமாகி வந்ததால் நகரங்களில் வாழ்ந்துவந்த ஏராளமான மக்களுக்கு உணவுப்பொருள்கள் அதிகமாகத் தேவைப்பட்டன. இத் தேவையைப் பொதுமன்றப் பண்ணைகள் நிறைவேற்ற முடிந்தது. சிறு சிறு குடியானவர்களிடம் நிலம் இருந்திருந்தால் இது சாத்தியமாகியிருக்காது.

6. விவசாயம் தனிப்பட்டவர்களின் தொழிலாக இருந்தால் சாகுபடித் திட்டத்தை நிறைவேற்றுவது கடினம். ஆனால், இப்போது அத்திட்டங்களெல்லாம் சுலபமாக நிறைவேறின.

7. இத்தகைய கூட்டுப் பண்ணைகள் மூலமாக, பொதுவுடைமைக் கட்சி வலிமைபெற முடிந்தது.

8. நகராட்சி நிர்வாகத்தை ஒழித்துக் கட்டிவிட்டு, நாடு முழுவதுமிருந்த இம் மக்கள் மன்றங்களின்மூலம் நிர்வாகத்தை நடத்தமுடிந்தது. இம்மக்கள் மன்றங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு மக்கள் மன்றக் கவுன்சில்களுக்கும் மாநில நிர்வாகத்திற்கும் நெருங்கிய தொடர்பை அரசாங்கம் ஏற்படுத்திவிடுமானால் ஒரே தலைமையின்கீழ் நிர்வாகம் நடைபெற ஏதுவாயிருக்கும்.

9. கூட்டுப் பண்ணைகளையெல்லாம் நாட்டுப் பண்ணையாக்கு வதற்கு இதுதான் சிறந்த வழி எனக்கருதியே இம் மன்றங்கள் அமைக்கப்பெற்றன.

கூட்டுப் பண்ணை விவசாயத் திட்டத்திற்கு மக்கள் எதிர்ப்பு கிளம்பிவிடக் கூடாதென்று நினைத்த சீன அரசாங்கம் இத் திட்டத்தை உடனடியாகப் புகுத்தாமல் படிப்படியாகவே நிறை வேற்றியது. எப்படித் தன் திட்டத்தை நிறைவேற்றியது என் பதைக் கீழ்க்காணும் விளக்கம் எடுத்துக்காட்டுகிறது.

(அ) பரஸ்பர உதவிக் குழுக்கள் (Mutual - aid teams). முதலில் மிக எளிய அமைப்பு உருவாக்கப்பட்டது. குறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்துவந்த விவசாயிகளைக்கொண்டு இக் குழுக்கள் அமைக்கப்பட்டன. தத்தம் நிலங்களைத் தாமே சாகுபடிசெய்து விளைச்சலைப் பெற்று வந்தனர். ஏதோ கூட்டுறவு என்ற பெயரில் சில வேலைகளில்மட்டும் ஒருவருக்கொருவர் உதவி புரிந்தனர். சான்றாக, நிலத்தை உழுதல், விதைத்தல், களை எடுத்தல், அறுவடை செய்தல்போன்ற சமயங்களில் மட்டும் கூட்டாக வேலை செய்தனர். இவ்வாறாக, இக் குழுக்களின் உறுப்பினர்கள் தம் உழைப்பு, சாதனங்கள், கால் நடைகள் முதலியவற்றைத் தாம் கூட்டாகப் பயன்படுத்தினர்; தத்தம் நிலத்தை அவர்களே வைத் திருந்தனர். இவ் வகையான சாகுபடிமுறையால் விளைச்சல் பெருகியது; எனவே, நாடெங்கிலும் இவ்வமைப்புப் பரவியது: இதுவே அடுத்தகட்ட அமைப்பிற்கு ஏதுவாயுமிருந்தது.

(ஆ) விவசாய உற்பத்தியாளர் சங்கங்கள் (Agricultural Producers' Co-operatives): இரண்டாவது கட்டத்தில் உறுப்பினர்கள் தம் உழைப்பு, சாதனங்கள், கால்நடைகளை மட்டு மின்றி, நிலத்தையும் ஒன்றாக இணைத்து சாகுபடி செய்தனர். சாகு படிக்குத் தேவையான நிதியையும் திரட்டினர். இச் சங்கங்கள் கூட்டுச் சாகுபடிக்கு வேண்டிய இயந்திரக் கருவிகளையும் பெற் றிருந்தன. விளைச்சலை விற்பனைசெய்யும் ஏற்பாட்டையும் இச் சங்கங்களே மேற்கொண்டன. நிலம் ஒன்றாக இணைக்கப்பட்ட போதிலும், உரிமை உறுப்பினர்கள் தாம் நிலச் சொந்தக்காரர் களாய் இருந்தனர். எனவே, அவரவர் நிலத்தின் அளவுக்கேற்ப வருமானம் பகிரப்பட்டது. இச் சங்கங்களின் அமைப்பும் பணியும் இந்தியாவிலுள்ள கூட்டுப் பண்ணைமுறையை ஒத்திருந்தன. 1955ஆம் ஆண்டின் இறுதியில் இவ்வகைச் சங்கங்கள் சுமார் 2 மில்லியன் இருந்தன; 70 மில்லியன் பேர் உறுப்பினர்களாக விளங்கினர்.

(இ) சமதர்மப் பண்ணைகள் (Socialist Farms): மூன்றாவது கட்டத்தில் விவசாய உற்பத்தியாளர் சங்கங்கள் சமதர்மப் பண்ணைகளாக மாற்றப்பட்டு விட்டன. இச் சமதர்மச் சங்கங்களிடம் உறுப்பினர்கள் தம் நிலங்களின் உரிமையையும் கொடுத்து விட்டனர். இவ்வாறாக, இயற்கை அன்னையின் கொடையாகக் கருதப்படும் நிலம் அனைத்தும் எல்லோருக்கும் உடைமையானது. தனியார் சொத்துரிமை என்ற சொல்லுக்கே இடமில்லை. 1958ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்மூலம் முதல் சமதர்மச் சங்கம் தொடங்கப்பட்டது. இச் சட்டத்தின்படி எல்லா விவசாய உற்பத்தியாளர் சங்கங்களும் சமதர்மச் சங்கங்களாக மாறின. நிலமனைத்தும் சங்கத்திற்கு உடைமையானது. வீட்டில் இருந்த தோட்டங்கள்கூட இவ்வகைச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இச் சங்கங்கள் ஒவ்வொன்றும் பெரிய அளவில் தொடங்கப்பட்டன. சான்றாக, 'ஹிசியாங்' என்ற பகுதியிலிருந்த எல்லாக் கிராமங்களுமே ஒரேமக்கள் மன்றத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டன. ஒவ்வொரு சங்கத்திலும் சராசரி 4,791 குடும்பங்களும் 3,00,000 அங்கத்தினர்களும் உள்ளனர். இச் சங்கங்கள் தத்தம் பகுதிகளிலுள்ள நிலங்களைச் சாகுபடி செய்வதோடு, வேறுபல தொழில்களையும் நடத்துகின்றன. உறுப்பினர்களின் குழந்தைகளுக்கென்று பள்ளிகளையும் நடத்தி வருகின்றன. இச் சங்கங்களின் அலுவல்களைப் பற்றி 'பீகிங் மக்கள் தினசரி' (Peking Peoples' Daily) என்னும் இதழில் தெளிவாக விவரிக்கப்படுகின்றன. இச் சங்கங்களின் முக்கிய நோக்கம் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதேயாகும்; எனினும், வேறுபல தொழில்கள், வியாபாரம், கல்வி, நாட்டுப் பாதுகாப்புப் போன்ற பல்வேறு துறைகளில் இச் சங்கங்கள் அருந்தொண்டாற்றி வருகின்றன. உணவு உற்பத்தியில் தம் நாடு சுயநிறைவைப் பெறவேண்டுமென்பதற்காக, பல திட்டங்களை வகுத்து அவற்றைச் செயல்படுத்தியும் வருகின்றன. விவசாயத்தின் ஆணிவேராக் கருதப்படும் இச் சங்கங்கள் அவ்வப்போது விவசாயத் தொழிலில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும் முயன்று வருகின்றன.

சீனாவில் இயங்கிவரும் இச் சங்கங்கள் சோவியத் நாட்டிலுள்ள 'கோல்கோஸ்' (Kolkhoz) அமைப்புகளைவிடப் பெரியனவாய்ப் பல்வேறு பணிகளைச் செய்து வருகின்றன. இச் சங்கங்களின் உறுப்பினர்கள் ஊதியம் மட்டும் பெறும் தொழிலாளர்களாகக் கருதப்படுவதில்லை. அவர்களுக்குவேண்டிய உணவும் ஏற்றத் தாழ்வின்றிப் பகிரப்படுகிறது. உழைப்பின் திறமையை உயர்த்துவதற்குத் தூண்டுகோலாகத் திறமைமிக்கவர்களுக்கு மேலூதியமும் அளிக்கப்படுகிறது. உற்பத்தித் துறையில் மூலப் பொருள்கள்

சேதமின்றிப் பயன்படுத்தப்படுவதால் உற்பத்திச் செலவு குறைந்து வருகிறது. உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மிகக் குறைந்த வேலை கொடுக்கப்பட்டு, நிர்வாகம் செம்மையாக நடைபெறுவதால் விவசாயத்தில் நிறைய இலாபம் கிடைக்கிறது. சாகுபடி செய்வ தற்கு பொறுக்கு விதைகள், தரமான உரங்கள், விவசாயக் கருவிகள் முதலியன பயன்படுத்தப்படுகின்றன. பயிர்கள் நோய் நொடி யின்றிச் சிறந்த முறையில் பாதுகாக்கப்படுகின்றன பண்ணைகள் அனைத்திற்கும் வேண்டிய அளவு நீர்ப்பாசன வசதி அளிக்கப்பட் டுள்ளது. பண்ணைகளின் நிர்வாகத்தைச் சங்கங்களே மேற்கொண் டுள்ளன; அந்தந்தப் பகுதிகளிலுள்ள அரசாங்க ஊழியர்களும் இவற்றின் பணியாளர்களாகி நிர்வாகக் குழுவின் ஆணைப்படி பணி செய்து வருகின்றனர்.

1958-ல் தொடங்கப்பட்ட முதல் சங்கம் 'ஸ்புட்னிக்' (Sputnik) என்றழைக்கப்படுகிறது. இச் சங்கத்தில் 27 விவசாய உற்பத்தி யாளர் சங்கங்கள் இணைக்கப்பட்டன. சுமார் 9,000 குடும்பங்கள் உறுப்பினர்களாயுள்ளனர். அதே ஆண்டு செப்டம்பர் மாதம் சங்கங்களின் எண்ணிக்கை 23,397 ஆக உயர்ந்தது. 112 மில்லியன் பேருக்குமேல் உறுப்பினர்களாயிருந்தனர்.

இச் சங்கங்களின் தீவிரமான வளர்ச்சியைக் காணும்போது ஒருசில உண்மைகளும் தெளிவாகின்றன. அதாவது, இவை யனைத்தும் அரசாங்கத்தின் ஆணைகளால் உருவாக்கப்பட்டு, அதன் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே இயங்கி வருகின்றன. அதனோடு, அரசாங்க ஆணைகளுக்கும் விதிமுறைகளுக்கும் இந் நாட்டவர் தலைவணங்கி வருகின்றனர். இதனால்தான் இச்சங்கங்கள் விரைவாக வளர முடிந்தது.

இச் சங்கங்களின் செயல்முறைகளைக் காணும்போது ஒன்று நமக்குத் தெளிவாகப் புலனாகிறது. அதாவது, கூட்டுறவுக் கொள்கைகள் இந்நாட்டு மக்களின்மீது வலுவந்தமாகத் திணிக்கப் பட்டுள்ளன. 1958ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் தேதி வெளி யிடப்பட்ட பீக்கிங் மக்கள் தினசரியில் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்கள் எவ்வாறு சமதர்மச் சங்கங்களாக மாற்றப்பட்டன என்பது வெளியாகியுள்ளது. அதன்படி, பீக்கிங் மாவட்டத்தி லிருந்த கூட்டுறவுச் சங்கங்களையெல்லாம் ஐந்தே நாள்களில் அரசாங்கம் ஒழித்துக் கட்டிவிட்டது என்று அறிய வருகிறோம். உண்மையில் கூட்டுறவுச் சங்கங்களையெல்லாம் வலுவந்தமாகச் சமதர்மச் சங்கங்களாக மாற்றிய சீன நாட்டில் கூட்டுறவு என்ற சொல்லிற்கே இடம் கிடையாது.

வெற்றியின் காரணங்கள்

சீன நாட்டில் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களும் மக்கள் மன்றங்களும் மிக விரைவில் வளர்ச்சிபெற்று வெற்றியடைந்த தற்குப் பல காரணங்கள் உள்ளன. அவை :

1. நிலச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்ட பின்னர்த்தான் இங்கு விவசாயக் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சிபெற்றது. எனவே, இந் நாட்டின் நிலச் சீர்திருத்தங்களே கூட்டுறவு இயக்கத்தின் வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தன. பல நூற்றாண்டுகளாகப் பாடுபட்டுவந்த விவசாயத் தொழிலாளிகளும் குடியானவர்களும் நில உரிமையாளர்களாக ஆக்கப்பட்டனர். எனவே, பெருநிலக் கிழார்களின் நிலமனைத்தும் உழுபவர்களுக்கே சென்றது. இதனால் நில உரிமைபெற்ற பெருங்குடிமக்கள் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்யத் தயாராயிருந்தனர். இந்தியாவில் பல நூற்றாண்டு களாகச் சொந்தப் பண்ணையிலேயே சாகுபடி செய்துவரும் விவசாயிகள்தாம் அதிகம். ஆகவேதான், அவர்கள் மத்தியில் கூட்டுறவுப் பண்ணை முறையைப் புகுத்துவது கடினமாக உள்ளது.

2. புரட்சியின் வாயிலாகச் சமதர்மச் சமுதாயச் சூழ்நிலை சீன நாட்டில் தோன்றியதுதான் முக்கியமான காரணம் என்றும் கூறலாம். கலகமும் சண்டையும் ஏற்படும்போதுதான் மக்கள் எதற்கும் தயாராயிருப்பார்கள் என்பதை அனுபவமே எடுத்துக் காட்டுகிறது. புரட்சியின்போது பொதுவுடைமைக் கட்சிக்கு ஆதரவு இருந்தது; எனவே பொதுவுடைமைக் கொள்கையை அக் கட்சி மிகச் சுலபமாகப் புகுத்த முடிந்தது. புரட்சியில் வெற்றி பெற்று பொதுவுடைமைக் கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் அக் கட்சித் தலைவர்களும் அரசாங்கமும் என்னென்ன சொன்னார்களோ அதை யெல்லாம் மக்கள் ஏற்றுக்கொள்ளச் சம்மதித்ததில் வியப்பொன்று மில்லை.

3. பொதுவுடைமைக் கட்சியின் தொண்டர்கள் நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் பொதுவுடைமைக் கொள்கையைப் பரப்பி வந்தனர்; எனவே சீனாவில் பொதுவுடைமைக் கொள்கை வெற்றிபெற்றதற்கு இத்தொண்டர்களும் காரணமாவர்.

4. இக்கூட்டுப் பண்ணை வளர்ச்சிக்கு அரசாங்க ஆதரவு கிடைத்தது. இப் பண்ணைகளின் விளைச்சல் பொருள்களுக்குக் குறிப்பிட்ட விலை தருவதாக அரசாங்கம் உத்திரவாதம் அளித்த தோடு மட்டுமின்றி, இக்கூட்டுப் பண்ணைகளை அரசாங்கமே கட்டிக்

காத்தும் வந்தது. இவ்வகை அரசாங்க ஆதரவு இப் பண்ணை முறைக்குப் புதிய தெம்பை ஊட்டியது.

5. கூட்டுப் பண்ணை முறையை அரசாங்கம் திடீரெனக் கொண்டு வராமல், படிப்படியாக அமுலாக்கியது. முதன்முதலில் பரஸ்பரச் சங்கம் என்றும், அதன் பின்னர் விவசாய உற்பத்தியாளர் சங்கம் என்றும் கொண்டுவந்து மக்களின் உழைப்பு, சாதனங்கள், நிலம் அனைத்தையும் ஒன்று திரட்டியது. இறுதியில் மக்களின் உரிமையையும் கவர்ந்துவிட்டது. இவ்வாறு படிப்படியாகக் கொண்டுவந்து, கடைசியில் கூட்டுப் பண்ணைகளைப் புகுத்திய போது மக்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளப் பக்குவப்பட்டு விட்டனர்.

6. கூட்டுப் பண்ணைகளின் நலன்களைக் கல்வியின் வாயிலாக அரசாங்கம் பரப்பிவிட்டது. எனவே, மக்கள் அவற்றை எதிர்க்க இயலாதவர்களாயினர்.

மூன்றும் பிரிவு

இந்தியாவில் கூட்டுறவின் வளர்ச்சியும் நடைமுறையும்

15. இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் தோன்றியதற்கு மூல காரணம் விவசாயிகளின் வறுமைதான். வறுமையில் வாடிய விவசாயிகள் கடன் வாங்கி, வாங்கிய கடனைக் கொடுக்க வழியின்றி மேலும் வறுமையுற்றனர். 'பயிர்த் தொழிலும் அவர்களது வறுமையைப் பிரதிபலிக்கக் கூடியதாகவே இருந்து வந்தது. பெரும் பாலான விவசாயிகள் கடனிலேயே பிறந்து, கடனிலேயே வாழ்ந்து, கடனையே தம் பிள்ளைகளுக்கு வாரிசுச் சொத்தாக விட்டுச் சென்றனர். ஆங்கிலேயரின் வருகையும் ஆட்சியும் விவசாயிகளின் நிலையை மேலும் மோசமாக்கியது. அவ்வப்போது நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்க எத்தனையோ நடவடிக்கைகள் அரசால் எடுக்கப்பட்டன. 1883-ல்; நில அபிவிருத்திச் சட்டம் அமலாக்கப்பட்டது; 1884-ல் விவசாயிகள் கடன் சட்டம் நிறை வேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து எத்தனையோ சட்டங்கள் நிறைவேற்றப்பட்டும் ஏழைக் குடியானவர்களின் வாழ்க்கை மலரவில்லை.

இந் நிலையில்தான் சென்னை அரசு விவசாய வங்கிகளை ஏற்படுத்தி, குடியானவர்களுக்குக் கடனுதவி செய்ய எண்ணியது. அவ் வங்கிகளை எப்படி ஏற்படுத்துவது என்பதை அறிந்திட 1892ஆம் ஆண்டில் சர் பிரடெரிக் நிக்கல்சன் என்பவரை ஐரோப்பிய நாடு களுக்கு அனுப்பியது.

இந்தியாவின் கூட்டுறவு இயக்கத்திற்கு சர் பிரடெரிக் நிக்கல்சன் தான் தந்தையாவார் என்று சி. ஆர். ஃபே (C. R. Fay) அவர்கள் கூறுகிறார். பல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று விவசாய வங்கிகளையும் இதரக் கூட்டுறவுச் சங்கங்களையும் முறையாகப் படித்துவிட்டுத் திரும்பிய நிக்கல்சன் தம் அறிக்கையை 1897-ல்

அளித்தார். இவ்வறிக்கைதான் இந்தியக் கூட்டுறவு இயக்கத்தின் வேத நூல் போல் மதிக்கப்படுகிறது. தம் அறிக்கையின் முடிவில் ''ரைஃபீசனைத் தெரிந்து கொள்க'' என்று அவர் குறிப்பிட்டிருப்பது ஜெர்மனி நாட்டுக் கூட்டுறவு வங்கி முறைதான் இந்தியாவிற்குகந்தது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இவ்வறிக்கையில் குறிப்பிட்டிருந்தபடி இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தைத் தொடங்க கர்ஜான் பிரபு அவர்கள் முயற்சி எடுத்தார்கள். சர் எட்வர்டு லா என்பவரின் தலைமையில் குழு ஒன்றை ஏற்படுத்தியது அரசாங்கம். இக் குழுத் தயாரித்த மசோதாதான் 1904-ம் ஆண்டில் சட்டமானது. "1904-ம் ஆண்டின் கூட்டுறவுக் கடன் சங்கச் சட்டம்'' என்ற தலைப்பில் அமலாக்கப்பட்ட இச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

1. கிராமத்திலுள்ள மக்களில் 10 பேருக்கும் அதிகமான பேர் ஒன்றுசேர்ந்து கூட்டுறவுக் கடன் சங்கத்தை ஆரம்பிக்கலாம்.

2. கூட்டுறவுச் சங்கங்கள் கிராமப் புறச் சங்கங்கள், நகர்புறச் சங்கங்கள் என இருவகைப்படும். உறுப்பினர்களில் ஐந்தில் நான்கு பகுதியினர் விவசாயிகளாக இருந்தால் அவை கிராமப்புறச் சங்கங்கள் என்றும், விவசாயிகளல்லாத மற்றவர்கள் இருந்தால் அவை நகர்ப்புறச் சங்கங்கள் என்றும் பாகுபடுத்தப்படும்.

3. கிராமப்புறச் சங்கங்கள் அனைத்தும் வரையறையற்ற கடன் பொறுப்பில் இயங்கும்.

4. கிராமப்புறச் சங்கங்கள் பெறும் இலாபம் அனைத்தும் காப்பு நிதியில் சேர்க்கப்படும்; நகர்ப்புறச் சங்கங்கள் தம் இலாபத்தில் 1/5 பகுதியை உறுப்பினர்களுக்கு இலாப ஈவாகப் பகிர்ந்தளிக்கலாம்.

5. ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டுறவு இயக்கத்தைத் தொடங்கி, அதை வழி நடத்தவும் கட்டுப்படுத்தவும் கூட்டுறவுப் பதிவாளர் ஒருவர் நியமிக்கப்படுகிறார்.

1904ஆம் ஆண்டுச் சட்டப்படி தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மட்டுமே ஏற்படுத்த வாய்ப்பு இருந்தது; அதுவும் விவசாயக் கடன் சங்கங்கள்தாம் ஊக்குவிக்கப்பட்டன. இச் சட்டம் அமலானதைத் தொடர்ந்து பல கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அமைக்கப்பட்டன. 1912-ல் சுமார் 8,177 சங்கங்கள் இயங்கி வந்தன. இவற்றில் 4 இலட்சம் பேர் உறுப்பினர்களாக

இருந்தனர். இச் சங்கங்கள் அனைத்தும் அரசாங்கத்தின் முயற்சியினுல்தான் தொடங்கப்பட்டன. ஐரோப்பிய நாடுகளைப் போலன்றி இந்தியக் கூட்டுறவு இயக்கம் அரசாங்கத்தின் கொள்கையினுல் ஆரம்பிக்கப்பட்டதாகும். அரசாங்க முயற்சியினுல் 'ஆரம்பிக்கப்பட்ட இவ் வியக்கம் அரசாங்கக் கடன் உதவியினுல் பேணப்பட்டு வந்தது. 1909-ல் கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறை மூலதனத்தில் 22 சதவீதம் அரசாங்கத்தின் கடனுக வழங்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் கூட்டுறவுச் சங்கங்கள் திருப்திகரமாக நடைபெறவில்லை. கூட்டுறவுத் தத்துவங்களையும் செயல் முறைகளையும் பற்றிய பயிற்சியின்றி இச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. எனவே. உறுப்பினர்களுக்கு வேண்டிய கடனுதவியை உரிய சமயத்தில் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. கொடுத்த கடனை உரிய தவணையில் திருப்பிப் பெற முடியாமலும் இச் சங்கங்கள் அவதிப்பட்டன. கடன்கள் பெரும்பாலும் மொத்தமாக ஒரே தவணையில் கொடுக்கப்பட்டு, திரும்பவும் ஒரே தவணையில் பெறப்பட்டன. இதனுல் அவ்வப்போது வேண்டியகடனைப் பெற முடியாமல் உறுப்பினர்கள் தவித்தனர். வேண்டியபோது வேண்டிய அளவுக் கடனைத் தாமதமின்றி உடனடியாகக் கொடுக்கக் கூடிய வட்டிக் கடைக்காரர்களை அவர்கள் நாட வேண்டியிருந்தது.

ஒருசில சங்கங்களுக்குக் கூட்டுறவுக் கொள்கையும் நோக்கமும் கூடச் சரியாகத் தெரியவில்லை; அவற்றை அமைத்து நடத்தி வந்த அதிகாரிகள் கூடக் கூட்டுறவின் நோக்கத்தைத் தவருகப் புரிந்து கொண்டு செயலாற்றி வந்தனர். ஒருசில மாநிலங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள் மிகவும் சீர்கேடான நிலையிலிருந்தன. அவற்றைப் பற்றிப் பத்திரிகைகள் விமரிசனம் செய்யத் தொடங்கிவிட்டன. அந்த விமரிசனத்தின் சாரம் வருமாறு: கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கி நடத்தி வந்த தாசில்தார்கள் துணைக் கமிஷனரிடமிருந்து எவ்வளவு பிரமாதமான முறையில் பயிற்சி பெற்றிருந்தனரென்ருல், கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கமே இவர்களுக்குச் சரியாகப் புரியவில்லை. அரசாங்கத்தின் ஆணைப்படி எல்லா இடங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்க வேண்டுமென்று ஆரம்பித்து விட்டார்கள்; ஆனுல், அவற்றை எப்படி முறையாக நடத்துவது என்று தெரியாமல் விழித்தார்கள். இந்த விமரிசனம் எல்லா மாநிலங்களிலுமிருந்த கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருத்தமானதாக விளங்கியது. சுருக்கமாகக் கூற வேண்டுமாயின், கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் கூட்டுறவு மனப்பான்மை மக்களிடம் இல்லாமலிருக்க, அரசாங்க அதிகாரிகளே அவற்றைத் தொடங்கி நடத்தத் துணிந்து விட்டனர்.

கூட்டுறவு இயக்கம் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஒருசில செல்வந்தர்களும்கூட இவ் வியக்கத்தில் அக்கறை காட்டினர். சான்ருக, பம்பாயில் இருந்த மாண்புமிகு திரு. லாலுபாய் சமால்தாஸ், திரு. ஜீ. கே. கோகலே போன்ருேர் இவ் வியக்கத்தை வளர்க்க அரும்பாடுபட்டனர். 1911-ல் பம்பாயில் மத்திய கூட்டுறவு வங்கி நிறுவப்பட்டதற்கு இவர்கள்தாம் காரணமாவர். அப்போது மத்திய கூட்டுறவு வங்கிகள் பதிவு செய்யப்படுவதற்குக் கூட்டுறவுச் சட்டம் இடம் தரவில்லை; எனவே, இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ் இவ் வங்கி பதிவு செய்யப்பட்டது. அதற்கான ஒப்பந்தத்தை இவர்கள் இந்திய அரசாங்கத்துடன் செய்து கொண்டனர்.

இந்தியாவிலும் கூட்டுறவு இயக்கம் வெற்றிபெறும் என்ற நம்பிக்கையில்தான் அரசாங்கம் அதற்கான முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டது: ஆனல் அந்த நம்பிக்கை பெருமளவிற்கு ஏமாற்றமாகி விட்டது. காரணம், 1904ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சட்டம் இவ் வியக்கம் வளர்வதற்கேற்ற முறையில் அமையவில்லை சான்ருக கடன் சங்கங்களை மட்டுமே ஆரம்பிப்பதற்கு இச் சட்டம் இடம் கொடுத்தது. ஏனைய வகைச் சங்கங்கள் புறக்கணிக்கப் பட்டு விட்டன. மத்திய வங்கிகள் தோன்றுவதற்கும் வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இக் குறைகளையெல்லாம் நீக்குவதற்கென்றும் கூட்டுறவு இயக்கம் எல்லாத் துறைகளிலும் வளர்வதற்கென்றும் 1912-ல் புதிய சட்டமொன்று அமலாக்கப்பட்டது. 1912ஆம் ஆண்டின் ‘கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம்’ பழைய சட்டத்திலிருந்து பல வகையில் வேறுபட்டதாகும்.

1. 1904ஆம் ஆண்டின் சட்டப்படி தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மட்டும்தான் ஆரம்பிக்க முடியும். ஆனல் இப் புதிய சட்டப்படி விற்பனைச் சங்கம், நுகர்வோர் சங்கம் போன்ற எவ்வகைச் சங்கங்களையும் அமைக்கலாம். கூட்டுறவு இணைப்புச் சங்கங்களும் மைய வங்கிகளும் தோன்றுவதற்கு இச் சட்டம் வகை செய்தது. எல்லாத் துறைகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றும் வகையில் இச் சட்டம் அமலாக்கப்பட்டது.

2 பழைய சட்டப்படி கூட்டுறவுச் சங்கங்கள் கிராமப்புறச் சங்கங்கள், நகர்ப்புறச் சங்கங்கள் என்று பாகுபடுத்தப்பட்டிருந்தன. ஆனல், புதிய சட்டப்படி அவை வரையறை பெற்றவை, வரையறையற்றவை என்ற அடிப்படையில் பாகுபடுத்தப்படலாயின.

3. பழைய சட்டப்படி சங்கங்களின் இலாபம் உறுப்பினர்களிடையே பகிரப்படுவதில்லை. ஆனல் சங்கங்களில் முதலீடு செய்

வோருக்கு இலாபம் கிடைத்தால்தான் மக்களின் ஆதரவு பெருகி, கூட்டுறவு இயக்கம் தழைக்க முடியும். எனவே, புதிய சட்டப்படி உறுப்பினர்களுக்கு இலாப ஈவு கொடுக்கப்படலாம் என்ற நிலை ஏற்பட்டது.

4. ஒவ்வோர் ஆண்டும் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்படவும், அவ்வாறு தணிக்கை செய்யப்பட்ட அறிக்கை உறுப்பினர்களடங்கிய பொதுக்குழுவிடம் சமர்ப்பிக்கப் படவும் இச் சட்டம் வழிசெய்தது.

5. இச் சட்டப்படி 'கூட்டுறவு' என்ற சொல்லை வேறெந்தத் தொழில் நிறுவனமும் பயன்படுத்தக்கூடாது.

இப் புதிய சட்டம் பழைய சட்டத்தைக் காட்டிலும் பல வகையில் சிறப்பானதாகும். இச் சட்டம் அமலுக்கு வந்தபின், கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் வளர்ச்சிபெறலாயிற்று. முதல் உலகப் போர் தொடங்குவதற்குமுன்பு இவ் வியக்கம் முன்பைவிடச் செழிப்புற்று செல்வாக்குடன் விளங்கியது. எனவே, மேலும் இவ் வியக்கத்தை ஊக்குவிக்க எண்ணிய அரசாங்கம், அது எவ்வாறு செயலாற்றி வந்துள்ளது என்பதை மதிப்பிடுவதற்கென்று மாக்லகன் என்பவரின் தலைமையில் குழு ஒன்றை நியமித்தது. இக் குழு 1915ஆம் ஆண்டில் சமர்ப்பித்த அறிக்கை ஈடு இணையற்றதொன்றாகப் போற்றப்படுகிறது. கூட்டுறவு இயக்கம் வேரூன்றி, செழிப்புற்றுத் தழைத்து நல்ல பலன் தருவதற்கான பல உபாயங்களை இவ் வறிக்கையில் காணலாம். அவசரப்பட்டு, எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்குவதை இக்குழுக் கண்டித்தது. மேலும், மக்களின் உள்ளத்தைக் கவரும் பண்புள்ள இயக்கமாகக் கூட்டுறவு இயக்கம் அமைய வேண்டுமென்றும் வலியுறுத்தியது. கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வையிட்டு, அவற்றின் கணக்குகளைச் சரிபார்த்து தணிக்கை செய்யவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தியது. அதோடு அரசாங்கத் துறைகளிலிருந்த கூட்டுறவுத்துறை வலிமைபெற்றால் தான் கூட்டுறவு இயக்கமும் வலுப்பெற்று வளர முடியுமென்று திட்டவட்டமாகக் கூறியது. இக் குழுவின் பணிந்துரைகளையெல்லாம் அரசாங்கம் அப்படியே ஏற்றுக்கொண்டு, அவற்றைச் செயல்படுத்தவும் முன்வந்தது பாராட்டத்தக்கது.

கூட்டுறவு மைய வங்கிகள் தொடங்கப்பட்டபின், கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்தின் கடனை நம்பி இயங்கவேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது. மைய வங்கிகளே அவற்றிற்குக் கடன்

கொடுக்கலாயின. அதோடு, ஒருசில பகுதிகளில் பலநோக்குச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவை வெற்றி பெற்றதன் விளைவாக நாடெங்கிலும் அவ்வகைச் சங்கங்கள் தோன்றிவிட்டன. தொழிலாளர் சங்கங்களும் கூட்டுறவு மனைச் சங்கங்களும் பல்வேறு மாநிலங்களில் ஆரம்பிக்கப்பட்டன. அதோடு, கூட்டுறவுக் கல்வியைப் பரப்புவதற்கும் கூட்டுறவு இயக்கத்தின் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும் அரசாங்கம் முன்வந்தது. இவ் வகை நடவடிக்கைகளினால் கூட்டுறவுச் சங்கங்கள் துரிதமாக வளர்ச்சி பெற்றன. 1919ஆம் ஆண்டில் 11 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட 28,000 சங்கங்கள் இயங்கி வந்தன. எண்ணிக்கையில் தான் கூட்டுறவுச் சங்கங்கள் துரிதமான வளர்ச்சியைப் பெற்றனவே யன்றி, அவை செயல்பட்ட விதமும் மக்கள் அவற்றின்பால் கொண்ட ஈடுபாடும் அவ்வளவு திருப்திகரமாயில்லை.

1919ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டப்படி கூட்டுறவு இயக்கம் மாநில அரசுகளுக்கு மாற்றப்பட்டது. ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டுறவுத் துறை ஏற்படுத்தப்பட்டு, அதன் மேற்பார்வையில் இவ்வியக்கம் நடைபெற்று வருகிறது. மாநில அரசுகளுக்கு மாற்றப் பட்டதைத் தொடர்ந்து, ஒருசில மாநில அரசுகள் இவ் வியக்கத்தைத் துரிதமாக வளர்க்கத் தொடங்கின. பம்பாய் மாநிலம்தான் முதன்முதலில் தனிச் சட்டம் ஒன்றை அமலாக்கிக் கூட்டுறவு இயக்கத்தைக் சட்டிக்காக்க முன்வந்தது. சென்னை மாநிலத்திலும் கூட்டுறவு இயக்கம் விரைவாக முன்னேறி வந்தது. எனவே டவுன்சென்ட் என்பவரின் தலைமையில் குழு ஒன்றை ஏற்படுத்திய சென்னை அரசு அக் குழுவின் பரிந்துரைப்படி 1932-ல் "சென்னைக் கூட்டுறவுச் சங்கச் சட்டத்தை" அமலாக்கியது. அடுத்து, விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடனுதவியைச் செய்வதற்கென்று 1934-ல் 'சென்னைக் கூட்டுறவு நில அடைமான வங்கிச் சட்டம்' என்ற தனிச் சட்டத்தை அமலாக்கியது. அதேபோல் ஏனைய மாநில அரசுகளும் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கென்று தனிச் சட்டங்களை நிறைவேற்றின. இந் நிலையில் நம் நாட்டு விவசாய நிலையைப் பரிசீலனை செய்வதற்காக மத்திய அரசு கால்வெர்ட் என்பவரின் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. இக் குழு விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளையும் அவற்றின் முன்னேற்றத்தையும் நன்கு ஆராய்ந்து அச்சங்கங்கள் செய்துவந்த நல்ல காரியங்களைப்பற்றியும் அவற்றின் குறைகளைப்பற்றியும் விவரமான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது. கிராமப்புறங்களில் இயங்கிவந்த கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்த இடத்திலிருந்த சிக்கல்களையெல்லாம் கூட்டுறவு முறையில் தீர்த்துவைத்ததை இக்குழுப் பாராட்டியது. அதே சமயம், கூட்டுறவுச் சங்கங்களின் குறைபாடுகளையும் இக் குழுச்

சுட்டிக் காட்டியது; விவசாய வளர்ச்சிக்குக் கூட்டுறவு இயக்கம் இன்றியமையாதது என்பதையும் வலியுறுத்தியது. "கூட்டுறவு தோல்வியடைந்துவிட்டால், விவசாயத்தையே நம்பி வாழும் இந்தியாவின் நம்பிக்கையே சிதறுண்டுபோகும்" என்ற எச்சரிக்கையையும் அக் குழு விடுத்தது. எனவே, இந்தியாவின் முன்னேற்றம் அதன் விவசாய முன்னேற்றத்தைப் பொறுத்தது என்பதை எவரும் மறுக்க முடியாது; விவசாய முன்னேற்றம் கூட்டுறவின் முன்னேற்றத்தைப் பொறுத்தது என்பதையும் புறக்கணிக்க முடியாது. எனவேதான், இந்தியாவிலுள்ள மத்திய அரசும் மாநில அரசுகளும் இத்துறையில் அதிக அக்கறை காட்டி வந்துள்ளது. அந்த அக்கறையின் விளைவாக 1929 வரை கூட்டுறவு இயக்கம் திருப்திகரமாக முன்னேறி வந்திருக்கிறது. 1920-ல் 28,400 ஆக இருந்த சங்கங்கள் 1929-ல் 94,000 ஆக அதிகரித்தன; அதேபோல் உறுப்பினர்களும் 11·3 இலட்சத்திலிருந்து 37 இலட்சம் பேராக அதிகரித்தனர் இவ்வாறு 1929 வரை கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் முன்னேறி வந்தது.

1929-ல் ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்தத்தினால் இந்தியக் கூட்டுறவு இயக்கம் அதிர்ச்சியுற்றது. கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலானவை கடன் சங்கங்களாகவே இருந்தன. இவையனைத்தும் விவசாயிகளுக்கு ஏராளமான கடனை அளித்திருந்தன. விலைவாசிகளெல்லாம் சரிவுற்றதன் விளைவாக விவசாயிகள் தாம் பெற்ற கடனைத் திருப்பித்தர முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் பெரும்பாலான சங்கங்களுக்கு நட்டம் ஏற்பட்டது. நட்டத்தைத் தாங்க முடியாத சங்கங்கள் நொடிப்படைந்து மூடப்பட்டன. பஞ்சாப் மாநிலத்தில் ஹரியானாப் பகுதிதான் அதிகம் பாதிக்கப் பட்டது. இப்பகுதியிலிருந்த சங்கங்கள்தாம் கொடுத்த கடனைச் சட்டப்படி வசூல்செய்ய ஆரம்பித்தன. இதனால் கூட்டுறவுச் சங்கங்களுக்கே கெட்ட பெயர் ஏற்பட்டது. இதேபோல் பல மாநிலங்களிலுள்ள சங்கங்களும் மக்களின் பேராதரவை இழந்தன. இந்நிலையில் பெரும்பாலான விவசாயிகள் தங்கள் நிலங்களையெல்லாம் அடைமானம் வைக்கத் தொடங்கினர். இதைக்கண்ட சென்னை மாநில அரசாங்கம் முதல்முறையாக 1929-ல் மத்திய நில அடைமான வங்கியைத் தொடங்கியது. சென்னையைப் பின்பற்றி இதர மாநிலங்களும் நில அடைமான வங்கிகளை ஏற்படுத்தின. இந்த அடைமான வங்கிகளைத் தொடங்கியதன் விளைவாக ஆயிரக் கணக்கான விவசாயிகள் வட்டிக் கடைக்காரர்களின் பேராசைப் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டனர்; அவர்களிடம் ஏற்கெனவே அடைமானமாக வைத்திருந்த நிலத்தையெல்லாம் மீட்டுக் கொண்டனர்.

ரிசர்வ் பாங்கு: நாடு சுதந்திரம் பெறுவதற்குமுன்பு 1935-ல் ரிசர்வ் பாங்கு ஏற்படுத்தப்பட்டது. இந்திய வரலாற்றில் இந் நிகழ்ச்சி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்திய விவசாயிகளின் கடன் தேவைகளை அறிந்து அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக உதவிபுரிவதற்கென்று விவசாயக் கடன் துறையும் ரிசர்வ் பாங்கின் ஒரு பகுதியாகத் தொடங்கப்பட்டது. இத் துறை, கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி நன்கு ஆராய்ந்து 1937-லேயே அவ் வியக்கம் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை வகுத்தது. அதோடு, கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் நடைபெறுவதற்கு அதை மறுபடியும் திருத்தி அமைக்க வேண்டுமெனப் பரிந் துரைத்தது.

இரண்டாம் உலகப் போர் தொடங்கும் தறுவாயில் விலைவாசிக ளெல்லாம் ஏறத் தொடங்கின. இதனால் கூட்டுறவு இயக்கம் புத்துயிர்பெற்றுத் தழைக்கலாயிற்று. அப்போதிருந்து நாடு சுதந் திரம் பெறும்வரை இவ் வியக்கம் எவ்வளவு விரைவாக வளர்ச்சி பெற்றதென்பதைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம் :

ஆண்டு	சங்கங்களின் எண்ணிக்கை (1000-ல்)	உறுப்பினர்கள் (இலட்சம்)	நடைமுறை மூலதனம் (கோடி ரூ.)
1940	116·9	60	104·6
1946	172	91·6	164
1947	139	91	156

(குறிப்பு : 1947ஆம் ஆண்டிற்கான புள்ளி விவரங்கள் பாகிஸ் தான் பிரிவினைக்குப்பின் எடுக்கப்பட்டவை.)

பொருளாதார மந்த காலத்தின்போது கூட்டுறவுச் சங்கங் களுக்கு வரவேண்டிய கடன்களெல்லாம் இப்போது விலைவாசி ஏற்றத்தின் விளைவாக வந்து சேர்ந்துவிட்டன. அதோடு, கூட்டுறவுச் சங்கங்களிடம் கடன் வாங்கவேண்டிய நிலையும் விவசாயி களுக்குக் குறைந்துவிட்டது. இதனால் கூட்டுறவு வங்கிகளிடமும் நில அடைமான வங்கிகளிடமும் பணம் தேங்கிவிட்டது. கடன் கேட்க எவருமில்லை. மேலும், தொடக்கக் கூட்டுறவுச் சங்கங் களின் வைப்புத் தொகையும் 1940-ல் 25 கோடி ரூபாயிலிருந்து 1946-ல் 54 கோடி ரூபாயாக அதிகரித்துவிட்டது.

இரண்டாம் உலகப்போரின் விளைவாகப் பண்டங்களுக்குத் தட்டுப்பாட்டு ஏற்பட்டது; எனவே, அவற்றை விநியோகிப்பதற் கென்று கட்டுப்பாட்டு முறையை அரசாங்கம் புகுத்தியது. இதனால் விநியோகத் துறையில் கூட்டுறவுச் சங்கங்கள் நாடெங்கிலும் தொடங்கப்பட்டன. இதுவரை கூட்டுறவுக் கடன் சங்கங்களே அதிகமாக இருந்துவந்தன; ஆனால், இப்போது எல்லாத் துறை யிலும் சங்கங்கள் பெருமளவில் அமைக்கப்படலாயின.

மேலும், பல்வேறு துறைகளில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சி பெறுவதற்கான திட்டத்தை வகுக்கக் கூட்டுறவுத் திட்டக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. இத்திட்டக் குழு 10 ஆண்டுகளில் 50 சதவீதக் கிராமங்களும் 30 சதவீத மக்களும் கூட்டுறவு இயக்கத் தினால் பலனடைய வேண்டுமென்று இலக்கை நிர்ணயித்தது. அதோடு, அங்காடியில் விற்கப்படும் விவசாயப் பண்டங்களில் 25 சதவீதம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் வாயிலாக விற்கப் படவேண்டுமென்றும் திட்டமிட்டுச் செயலாற்றத் தொடங்கியது.

சுதந்திரத்திற்கு முந்திய நிலை :

1947-ல் ஜூன் இறுதியில் நம் நாட்டில் மொத்தம் 1.39 இலட்சம் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. உறுப்பினர்களின் எண்ணிக்கையோ 91 இலட்சம்தான். அப்போது நாட்டிலிருந்த கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த நடப்பு மூலதனம் ரூ. 156 கோடியே. கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலானவை தொடக் கக்கடன் சங்கங்கள்தாம். சந்தையிடுகைச் சங்கங்கள் 7,600 மட்டுமே இருந்தன. இவையனைத்தும் சேர்ந்து மொத்தம் ரூ. 3 கோடி மதிப்புள்ள பொருள்களுக்குத்தான் விற்பனை ஏற்பாடு செய்திருந்தன.

விவசாயக் கடன் சங்கங்களுக்கு அடுத்தபடியாக நுகர்வோர் சங்கங்கள்தாம் ஓரளவிற்கு வளர்ச்சி பெற்றிருந்தன. இரண்டாவது உலக யுத்தத்தின்போது நுகர்வுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படவே, இச் சங்கங்களும் தழைத்தன. யுத்தம் முடிந்து அமைதி ஏற்பட்டபின் இவை நலிவுற்றன. அரசாங்கம் கட்டுப்பாட்டை நீக்கியதும் இச் சங்கங்களும் தனி வியாபாரிகளோடு போட்டி யிட முடியாமல் நசுங்கிவிட்டன. ஆங்கிலேயர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் கூட்டுறவு நகர வங்கிகளும் பல இயங்கி வந்தன. பெரும் பாலும் இவ் வங்கிகள் அரசாங்கத்தையோ அரசாங்க ஸ்தாபனங் களையோ சார்ந்திராமல் சொந்த நிதியைக்கொண்டே இயங்கி வந்தன.

நாட்டின் ஒருசில பகுதிகளில் கூட்டுறவுப் போக்குவரத்துச் சங்கங்களும் இருந்தன. வாகனங்களின் சொந்தக்காரர்கள்தாம் இச் சங்கங்களை அமைத்திருந்தனரே தவிர, போக்குவரத்துப் பணியாள்கள் அல்லர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுதந்திரத்திற்கு முன்னர் நம் நாட்டில் இயங்கி வந்த கூட்டுறவுச் சங்கங்களின் தன்மையை எண்ணிப்பார்த்தால் ஓர் உண்மை புலனாகும். அதாவது, தொழிலாளர்களுக்கென்று கூட்டுறவுச் சங்கமோ வீடில்லாதவருக்கென்று மனைச் சங்கமோ ஏற்படுத்தப்படவில்லை. தொழில் துறையிலோ ஒரு சில நெசவாளர் சங்கங்கள்தாம் இருந்தன. அவையும்கூட வசதியுள்ள நெசவாளரின் கட்டுப்பாட்டிற்குள்தான் இயங்கி வந்தன. ஏழை, எளிய நெசவாளர்கள் இவற்றால் பயனடைய முடியவில்லை.

இவ்வாறாக, நாடு சுதந்திரம் அடைவதற்கு முன் கூட்டுறவு இயக்கம் ஏதோ பெயரளவில்தான் இயங்கி வந்ததேயன்றி, பயனுள்ள வகையிலோ பிரபலயமாகவோ வளரவில்லை. இவ்வளவு மோசமான நிலையிலும்கூட ஆங்காங்கே தியாக மனப்பான்மை கொண்ட ஒரு சிலரின் விடா முயற்சியினால் ஒருசில சங்கங்கள் தழைத்தோங்கின. அவ்வாறு வளர்ந்த சங்கங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். எனினும், அவர்கள் செய்த முயற்சிதான் நம் நாட்டுக் கூட்டுறவு இயக்கத்திற்கு வலுவையும் ஊட்டத்தையும் தரக் கூடியதாயிருந்தது.

மேலும், சுதந்திரத்திற்கு முன்னர், கூட்டுறவு இயக்கத்தில் மக்கள் அவ்வளவு ஆதரவு காட்டவில்லை. அரசாங்கத்தின் கொள்கை என்று சொல்லுமளவிற்கு அரசாங்கம்தான் அதிக அக்கறை காட்டிவந்தது. குறிப்பாக, மத்திய அரசாங்கத்தின் தீர்மானங்களை ஆதாரமாகக் கொண்டுதான் இவ் வியக்கம் நடக்கலாயிற்று. எனினும், கூட்டுறவு இயக்கத்திற்கு அரசாங்கம் நிதி உதவி அவ்வளவாகச் செய்யவில்லை. ஏதோ பெயரளவுக்கு உதவிக் கொடையும் மானியமும் அளித்துவந்தது. 1947-48-ன் கணக்கெடுப்பின்படி அரசாங்கத்தின் கடனுதவி 1.87 சதவீதம்தான்.

கூட்டுறவுச் சங்கங்கள் நாடெங்கிலும் காணப்பட்டனவா வென்றால், அதுவும் கிடையாது. பெரும்பாலும் பம்பாய், பஞ்சாப், சென்னை ஆகிய மூன்று மாநிலங்களில்தாம் சங்கங்கள் அதிகமாய் இருந்தன. இம் மாநிலங்களில்கூட எல்லா இடங்களிலும் சங்கங்கள் அமைக்கப்படவில்லை, இவ்வாறாக 1947-க்கு முன்னர் இருந்த கூட்டுறவுச் சங்கங்கள் முறையான திட்டம் ஏதுமின்றி, அங்கும் இங்குமாய் இயங்கிவந்தன.

இதற்கு அடிப்படைக் காரணம் பிரிட்டிஷ் அரசாங்கம் கடைப் பிடித்துவந்த தலையிடாக் கொள்கைதான். அதோடு, மக்களின் அறியாமை, பயம், சந்தேகம் ஆகியவையும் இவ் வியக்கத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்தன. நாடு சுதந்திரமடைந்த பின்னர் தான் தேசிய அரசாங்கம் அதிக அக்கறை காட்டி, திட்டமிட்டு இவ் வியக்கத்தை வளர்க்க முற்பட்டது.

16. ஐந்தாண்டுத் திட்டமும் கூட்டுறவின் வளர்ச்சியும்

1947ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் அடைந்து, தேசிய அரசாங்கத்தை அமைத்ததனுல் கூட்டுறவு இயக்கம் புத்துயிர் பெற்றுச் செழித்து வளர வாய்ப்பு ஏற்பட்டது. குடியாட்சியின் அடிப்படையில் திட்டங்களைத்தீட்டி, துரிதமான பொருளாதார வளர்ச்சியையும் சமூக நீதி, சமத்துவம் கொண்ட புதிய சமுதாயத்தையும் பெறுவதற்கு இந்திய அரசு முயற்சித்து வருகிறது. 'கலப்புப் பொருளாதாரத்தை'க் (Mixed Economy) குறிக்கோளாகக் கொண்டு, அதை அடைவதற்கான பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இத் திட்டங்களின்படி தனியார் துறையும் பொதுத்துறையும் இணைந்து வளர்ந்துவருகின்றன. இவ்விரு துறைகளின் குறைபாடுகளை அகற்றி, இவ்விரண்டும் உரிய முறையில் வளர்வதற்கென்று கூட்டுறவுத் துறைக்கும் முக்கியத் துவம் அளிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு இயக்கத்தில் சாதாரண மக்களும் ஒன்றுபட்டுப் பெரிய நிறுவனங்களை அமைத்துப் பயன் பெற முடியும்; எனவே, நமது நாட்டு விவசாயம், சிறு தொழில்கள், வாணிகம் போன்ற பல்வேறு துறைகளில் முன்னேற்றமடையக் கூட்டுறவு முறையே சிறந்ததாக மதிக்கப்படுகிறது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவின் வழியாகவும் பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதற்கு வகை செய்யப் பட்டது. எனவே, கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கான இலக்கு களும் நிர்ணயிக்கப்பட்டன; அவ் விலக்குகளை அடைய முயற்சி களும் மேற்கொள்ளப்பட்டன. அம் முயற்சியின் பலனை எளிதாகப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் கூட்டுறவு இயக்கம் எய்திய நிலையை ஒப்பிடல் அவசியம். இந்த ஒப்பீட்டிற்கான புள்ளி விவரங்கள் வருமாறு :

விவரம்		ஆண்டு 1950-51	1955-56
1. தொடக்க விவசாயக் கடன் சங்கங்களின் எண்ணிக்கை	...	1,15,462	1,59,939
2. உறுப்பினர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்)	...	51.54	77.91
3. சராசரி ஒவ்வொரு சங்கத்தின் உறுப்பினர்கள்	...	45	49
4. கிராம மக்களில் கூட்டுறவுச் சங்கங்களால் பயனடைந் தோரின் சதவீதம்	...	10.30	15.60
5. கொடுத்த கடன் (கோடி ரூபாயில்)	...	22.90	50.16
6. சராசரி ஒவ்வொருவரும் பெற்ற கடன் (ரூபாயில்)	...	46	64
7. ஒவ்வொரு சங்கமும் பெற்ற சராசரிப் பங்கு மூலதனம் (ரூ.)	...	727	1,051
8. சங்கத்தின் சராசரி நடப்பு மூலதனம் (ரூ.)	...	3,547	4,946

மேற்காணும் புள்ளி விவரங்களிலிருந்து ஓரிரு உண்மைகளை நாம் அறிந்துகொள்ள முடியும். திட்டத்திற்கு முன் ஆண்டு தோறும் சராசரி 1 இலட்சம் பேர் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து வந்தனர்; ஆனால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது சராசரி 5 இலட்சம் பேர் ஆண்டுதோறும் உறுப்பினர்களாயினர். அதேபோல் இந்தத் திட்டத்தின்போது கூட்டுறவுச் சங்கங்கள் கொடுத்த கடன் தொகை முன்பைவிட ஐந்து மடங்கு அதிகரித் திருக்கிறது. இதிலிருந்து கூட்டுறவு இயக்கம் எவ்வளவு தூரம் மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளது என்பது புலனாகும்.

கிராமக் கடன் மதிப்பீடு

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது ரிசர்வ் பாங்கு நம் நாட்டின் கிராமக் கடனை மதிப்பிட முயற்சித்தது குறிப்பிடத் தக்கது. அம் மதிப்பீட்டுக் குழு, கூட்டுறவு இயக்கத்தின் சாதனை களைமட்டுமன்றி, அது விரைவாக முன்னேறுததற்குரிய காரணங்

களையும் நன்கு ஆராய்ந்து, வருங்காலத்தில் அது எவ்வாறு இயங்க வேண்டுமென்ற பரிந்துரையையும் கொடுத்துள்ளது. அக் குழுவின் அறிக்கை 1954-ல் வெளியானது. அதில் "கூட்டுறவு தோல்வியடைந்துவிட்டது; ஆனல் அது வெற்றிபெற வேண்டும்" என்ற நன்கறியப்படும் கூற்று உள்ளது. அவ்வாறு வெற்றியடைவதற்குகந்த உபாயங்களையும் இக்குழுத் திட்டக்குழுவிடம் அறிவித்தது. இவ் வறிக்கை கிராமக் கடனைப்பற்றியே அதிக விவரங்களைக் கொண்டுள்ளது. நம் நாட்டுக் கிராமங்களுக்கு மொத்தம் ரூ. 750 கோடிக் கடன் தேவைப்படுவதாக இவ் வறிக்கை கூறியுள்ளது.

இவ்வளவு கடன் உதவியைக் கூட்டுறவுச் சங்கங்கள் செய்யத் தவறிவிட்டன. 7 சதவீதக் குடும்பங்கள்தாம் கூட்டுறவுச் சங்கங்களினுல் பயனடைந்திருக்கின்றனர். கிராம மக்களுக்குத் தேவையான கடனில் 3.1 சதவீதம்தான் கூட்டுறவு இயக்கம் கொடுத்துதவியுள்ளது. இக் கடனில் பெரும்பாலானவை குறுகிய காலக் கடனுகத்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நீண்ட காலக் கடன் தேவையைக் கூட்டுறவு இயக்கம் புறக்கணித்துவிட்டது. கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெற்ற கடனைப் பெரும்பாலான விவசாயிகள் வீணுகச் செலவு செய்திருக்கின்றனர்; சங்கங்கள் முறையாகக் கண்காணிக்கத் தவறியதால் குறிப்பிட்ட நோக்கத்திற்காகக் கடன்தொகை பயன்படுத்தப்படவில்லை. பெரும்பாலும் கூட்டுறவுச் சங்கங்கள் பெருநிலக் கிழார்களுக்குத்தான் கடன் கொடுத்திருக்கின்றன; ஏழை விவசாயிகளெல்லாம் புறக்கணிக்கப் பட்டிருக்கின்றனர்; என்ற குறைபாடுகளையெல்லாம் இவ் வறிக்கையிலிருந்து அறிகிறேம்.

மேலும், இவ் வறிக்கையின் பரிந்துரைப்படி, கிராம மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்தாம் கடன் கொடுத்து உதவுவது நல்லது; எனவே, கூட்டுறவுச் சங்கங்கள் இவ்வுதவியைச் செய்வதற்கேற்ற சூழ்நிலை உருவாக வேண்டும்; அதற்காகக் கீழ்க் காணும் நடவடிக்கைகளை மேற் கொள்வது நன்று என இவ் வறிக்கையிலிருந்து அறிகிறேம்.

அரசின் பங்கு : கூட்டுறவு இயக்கத்தில் அரசும் பங்கு கொள்ள வேண்டும். அப்போதுதான் நகர்ப்புறங்களில் நல்ல முறையில் இயங்கிவரும் கூட்டுறவுச் சங்கங்களைப் போல் கிராமப் புறங்களில் நலிவுற்றுள்ள சங்கங்களும் வெற்றி பெற முடியும் அத்தோடு, ஒருசில சுயநல வாதிகளின் பிடியிலிருந்து சங்கங்களை விடுவிக்கவும் முடியும். மேலும், அரசாங்கமும் கூட்டுறவு இயக்கத்

தில் பங்கு கொண்டால் மக்களுக்கு அவற்றின் மீது நம்பிக்கை தோன்றும். கூட்டுறவுச் சங்கங்களும் பொருளாதார வலிமை பெறும். ஆனல், அரசாங்கம் கூட்டுறவு இயக்கத்தில் பங்கு கொள்ளும்போது அவ்வியக்கத்தையே தன் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்துவிடக் கூடாதென்று எச்சரிக்கையும் விடுத்துள்ளது. தற்போது அரசாங்கம் கூட்டுறவு இயக்கத்தில் பெரும் பங்கு கொள்கிறது. 1968ஆம் ஆண்டின் கணக்குப்படி அரசாங்கம் 57.51 கோடி ரூபாயைக் கூட்டுறவுச் சங்கங்களில் பங்கு மூலதனமாகக் கொண்டுள்ளது.

அரசு வங்கியின் தோற்றம்: இம்பீரியல் பாங்கிற்குக் கொடுக்கப்பட்டிருந்த சில சலுகைகளின் காரணமாக அப்பாங்கு தான் மிக முக்கியமானதாகக் கருதப்பட்டு வந்தது. ஆனல் இப்பாங்கு தொழிலதிபர்களுக்கும் வியாபாரிகளுக்குமே கடன் கொடுத்து உதவியது; விவசாயிகள் புறக்கணிக்கப்பட்டனர். அதோடு, இப்பாங்கு நகர்ப் புறங்களிலேயே இயங்கி வந்ததால் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எவ்விதப் பலனுமில்லாமல் போயிற்று. எனவே, இப் பாங்கை அரசே ஏற்று அதை அரசு வாங்கியாக மாற்றும்படி ஆலோசனை கூறப்பட்டது. அதன்படி அமைக்கப்பட்ட அரசு வங்கி கிராமப் புறங்களுக்கும் பணி செய்து வருவதால், கூட்டுறவுச் சங்கங்கள் இதனுல் பயனடைந்து வருகின்றன.

பல்வகை நிதிகளை உருவாக்கல்: மாநில அரசுகள் ரிசர்வ் பாங்கு, கூட்டுறவு நிறுவனங்கள் ஆகிய அனைத்தும் பல்வேறு நிதிகளை உருவாக்க வேண்டுமெனச் சிபாரிசு செய்யப்பட்டது. அதன்படி ரிசர்வ் பாங்கு "தேசிய விவசாயக் கடன் நிதியை உருவாக்கியது. ஆரம்பத்தில் 10 கோடி ரூபாயுடன் தொடங்கப் பட்ட இந்நிதி வளர்ச்சியடைந்து 1969-ல் ரூ. 155 கோடியாக உயர்ந்தது. மாநில அரசுகளுக்கு இந்நிதியிலிருந்து கடன் கொடுக் கப்படுகிறது. மாநில அரசுகள் இக் கடன் தொகையைக் கொண்டு கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பங்கு பெறுகின்றன; நில அடை மான வங்கிகளுக்கு நீண்ட காலக் கடனுதவி செய்கின்றன; அப் பாங்குகளின் கடன் பத்திரங்களையும் வாங்குகின்றன. அதோடு, மாநிலக் கூட்டுறவு மைய வங்கிகளுக்கும் கடன் கொடுக்கின்றன.

இந்திய அரசாங்கமும் 'தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிதி'' தேசியக் கூட்டுறவுப் பண்டகங்கள் நிதி' ஆகிய இருவகை நிதிகளை உருவாக்கியுள்ளது.

கூட்டுறவு இயக்கத்தின் புனரமைப்பு : கிராமக் கடன் ஆய்வுக் குழுவினர் கூட்டுறவு இயக்கத்தையே மாற்றியமைக்கும்படி கோரினர். அதன்படி தொடக்கச் சங்கங்களெல்லாம் பெரியனவாயும் நீண்ட காலக் கடனையும் இடைக்காலக் கடனையும் வழங்கக் கூடியதனவாயும் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், மாநிலக் கூட்டுறவு மைய வங்கியும் மாவட்ட மைய வங்கிகளும் சிறந்த நிர்வாகத்தைப் பெறவேண்டுமென்றும் பரிந்துரைக்கப் பட்டுள்ளது. மேலும், கூட்டுறவுச் சங்கங்களோடு தொடர்புடைய விற்பனைச் சங்கங்களையும் நில அடைமான வங்கிகளையும் அதிகமாக நிறுவ வேண்டுமென்றும் சிபாரிசு செய்துள்ளது.

கூட்டுறவுப் பயிற்சி : கூட்டுறவுச் சங்கங்களின் வெற்றியும் தோல்வியும் அவற்றை நடத்தி வரும் அரசாங்கப் பணியாளர்களையும் பொறுத்தது என்பதை உணர்ந்த இக் குழு அவர்களுக்கு நல்ல முறையில் பயிற்சி தரவேண்டுமென்றும் பரிந்துரை செய்துள்ளது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் வருமாறு: சமதர்மப்பாணிச் சமுதாயத்தை உருவாக்கும் வகையில் சமூகப் பொருளாதார உறவைத் திட்டமிட்டு அதன் வாயிலாகத் தேசிய வருமானத்தையும் வேலை வாய்ப்பையும் அதிகரிப்பதோடு, வருமான ஏற்றத் தாழ்வையும் குறைப்பது; பொருளாதார வளர்ச்சியின் பலன்களைச் சாதாரண மக்களும் அடையுமாறு செய்வது. இக் குறிக்கோள்களை அடைவதற்குக் கூட்டுறவுத் தத்துவத்தையும் ஒரு சாதனமாகப் பயன்படுத்த வேண்டுமெனத் திட்டக் குழு முடிவு செய்தது. எனவே, கூட்டுறவுத் துறையும் முக்கியத்துவம் பெற்றது. எனவே, கூட்டுறவுக் கடன் சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கையை 50 இலட்சத்திலிருந்து 150 இலட்சத்திற்கும், கூட்டுறவுக் கடனை ரூ. 43 கோடியிலிருந்து ரூ. 225 கோடிக்கும் அதிகரிப்பதென முடிவு செய்யப்பட்டது. கூட்டுறவு இயக்கத்தை, குறிப்பாக விவசாயச் சங்கங்களை அபிவிருத்தி செய்வதற்கென்று 47 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதோடு, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கென ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டது. கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் அனைவருக்கும் பயிற்சி கொடுப்பதற்கும் வகை செய்யப்பட்டது; எனவே, பல்வேறு பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்குகளும் சாதனைகளும் வருமாறு:

	திட்டத்தின் இலக்குகள்	திட்ட முடிவில் நிலை
1. விவசாயக் கடன்		
1. தொடக்கச் சங்கங்களின் எண்ணிக்கை	—	212,129
2. உறுப்பினர்கள்	15 மில்லியன்	17·4 மில்லியன்
3. குறுங்காலக் கடன்	ரூ. 1500 மில்லியன்	ரூ. 1828 ,,
4. இடைக் காலக் கடன்	ரூ. 500 ,,	ரூ. 199 ,,
5. நெடுங்காலக் கடன்	ரூ. 250 ,,	ரூ. 366 ,,
2. விவசாய விற்பனை		
1. தொடக்க நிலை விற்பனைச் சங்கங்கள்	ரூ. 1800 (அதிகரிப்பு)	3108
2. விற்பனைச் சங்கங்களின் பண்டகங்கள்	1500 ,,	1745
3. விவசாயப் பண்டகங்கள்	4000 ,,	3574
3. விவசாயப் பொருள்களின் பக்குவம்		
1. சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை	35 (அதிகரித்தல்)	69
2. பருத்தி விதை பிரிக்கும் ஆலைகள்	48 (அதிகரித்தல்)	128
3. எண்ணெய் ஆலைகள்	—	1469
4. அரிசி ஆலைகள்	—	826

கூட்டுறவுச் சட்டம்

கூட்டுறவுச் சட்டங்களை இயற்றுவதும் அவற்றை அமல்படுத்துவதும் மாநில அரசுகளின் பொறுப்பாகும். எனினும், கூட்டுறவுச் சட்டங்களையும், அவற்றின் செயல் முறைகளையும் எளிமையாக்குவதற்காக மத்திய அரசாங்கம் திரு. எஸ். டி. ராஜா அவர்களின் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இக் குழுத் தன்

அறிக்கையை 1957-ல் அளித்தது. அதோடு, மசோதா ஒன்றையும் தயாரித்து அதை மாநில அரசுகளுக்கும் அனுப்பியது. இம் மசோதாவின் அடிப்படையில் எல்லா மாநில அரசுகளும் தத்தம் கூட்டுறவுச் சட்டங்களை இயற்றி அமலாக்கி வருகின்றன.

1958-ன் கூட்டுறவுக் கொள்கைத் தீர்மானம்

1958-ல் கூட்டுறவு இயக்கத்தின் கொள்கையைப் பற்றித் தேசிய வளர்ச்சிக் குழு விரிவாக ஆராய்ந்து முடிவு செய்தது. அம் முடிவின்படி கூட்டுறவுச் சங்கங்கள் மாற்றி அமைக்கப்படலாயின. கிராமப் புறங்களில் பெரிய சங்கங்களை நிறுவுவதற்குப் பதிலாக சேவைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கும் விற்பனைச் சங்கங்களுக்கும் தொடர்பு இருக்க வேண்டுமென்றும் வலியுறுத்தப் பட்டுள்ளது. இத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்ட குறிக்கோள்களை அடையும் வகையில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியடைய வேண்டும் என்று மத்திய அரசாங்கம் எல்லா மாநில அரசுகளுக்கும் சுற்றறிக்கை விடுத்துள்ளது.

கூட்டுறவுக் கடன் ஆய்வுக் குழு

கூட்டுறவுக் கடன் இயக்கத்தை வலுப்படுத்தி, விவசாயிகளுக்குத் தேவையான கடனைப் பரிசீலனை செய்வதற்கென்று 1960ஆம் ஆண்டில் திரு. மேத்தா அவர்களின் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக் குழுக் கீழ்க்காணும் பரிந்துரைகளைத் தந்தது:

1. கிராம அடிப்படையில் சேவைச் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும். சிறிய கிராமங்களாக இருந்தால் 3 அல்லது 4 மைல் சுற்றளவிலுள்ள கிராமங்கள் அனைத்திற்கும் ஒரு சேவைச் சங்கம் இருக்கவேண்டும். அப்படிப் பல கிராமங்களுக்கு ஒரு சங்கம் அமைக்கும்போது 3,000 மக்களுக்குமேல் இருக்கக்கூடாது. அப்போதுதான் கிராம மக்களுக்கு வேண்டிய எல்லாப் பணிகளையும் சிறப்பாகச் செய்யமுடியும்.

2. கடன்பெற விரும்பும் விவசாயிகளுக்கு அவர்களின் பங்கு மூலதனத்தைப்போல் 8 முதல் 10 மடங்குவரைதான் கடன் கொடுக்கவேண்டும். அப்போதுதான் கிராம மக்கள் அதிகமான அளவு பங்கு மூலதனத்தைக் கொடுக்க முன்வருவர். ரூ. 200 வரை கடன்பெற விரும்பும் ஏழை மக்களிடமிருந்து அவர்களின் பங்கு மூலதனத்தைத் தவணைமுறையில் பெறுதல் நன்று.

3. சேவைச் சங்கங்களின் பங்கினையும் பெற்று அரசாங்கம் அவற்றில் பங்குகொள்ள வேண்டும். இவ் வாலோசனையை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டு எல்லா மாநில அரசுகளுக்கும் சுற்றறிக்கை விடுத்துள்ளது. அவ் வறிக்கையின்படி கிராமக் கடன் சங்கங்களின் உறுப்பினர்களில் 60 சதவீதம் பேர் அரசாங்கப் பங்கை விரும்பினால் அந்தந்த மாநில அரசுகள் மையக் கூட்டுறவு வங்கியின் ஒப்புதலுடன் பங்கை வாங்கவேண்டும். அப்படி வாங்கும்போது அதன் பங்கு மூலதனம் எந்தச் சங்கத்திலும் ரூ. 10,000-க்குமேல் இருக்கக்கூடாது. மேலும், அரசாங்கம் எந்த அளவுக்குப் பங்கை வாங்கியுள்ளதோ அந்த அளவுக்கு மட்டுமே அதன் கடன் பொறுப்பு வரையறுக்கப்பட வேண்டும்.

4. கூடுமானவரை எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் தம் சொந்த மூலதனத்தையே நம்பி இயங்குதல் நன்று. மேலும், பங்கு மூலதனம் செலுத்தி உறுப்பினர்களாக விரும்பும் மக்களுக்கு நல்ல நம்பிக்கை ஏற்படும் வகையில் சங்கங்கள் நல்ல நிர்வாகிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

5. விவசாயிகள் தம் தொழிலுக்காகக் கடன் கேட்கும்போது, அவர்கள் கடனைத் திருப்பித் தரக்கூடிய வசதி பெற்றவர்களா என்பதை நன்கு பரிசீலனை செய்யவேண்டும். அதாவது, அவர்கள் நன்னடத்தை, நேர்மை, சொல்லும் வாக்கைக் காப்பாற்றக்கூடிய நாணயம் முதலிய நற்பண்புகளைப் பெற்றவர்களா என்பதுதான் முக்கியம்.

6. கூட்டுறவு மைய வங்கிகளுக்கு ரிசர்வ் பாங்கு தாராளமாகக் கடன்தர வேண்டும்.

7. கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வசதிபடைத்த நிலக்கிழார்களுக்கு மட்டுமன்றி, சின்னஞ்சிறு விவசாயிகளுக்கும் குத்தகைதாரருக்கும்கூடக் கடன்தரத் தயங்கக்கூடாது. அப்படித் தரும்போது அவர்களின் நாணயம், நடத்தை முதலிய பண்புகளின் அடிப்படையில் தரவேண்டும். ஒருவேளை அக் கடனை அவர்கள் திருப்பித்தர முடியவில்லையென்றால் சங்கங்களுக்கு நட்டம் ஏற்படும். அந் நட்டத்தை ஈடுசெய்ய 'வராக் கடன் நிதியொன்று சங்கங்களும் கூட்டுறவு மைய வங்கியும் ஏற்படுத்த வேண்டும். இந்நிதிக்குத் தேவையான பணத்தை மாநில அரசுகள் மானியமாகக் கொடுக்க வேண்டும்.

கூட்டுறவுப் பண்ணைப் பரிசீலனைக் குழு

கூட்டுறவுப் பண்ணைகள் நம் நாட்டிற்குப் பொருத்தமான வையா என்பதை ஆராய 1960-ல் திரு. நிஜலிங்கப்பா அவர்களின் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அக் குழுவின் சிபாரிசுப்படி சாகுபடி நிலத்தை நல்ல முறையில் நிர்வகிப்பதற்குக் கூட்டுறவுப் பண்ணைகள்தாம் உகந்தவை என்று அறிகிறோம். கூட்டுறவுப் பண்ணைகள் பொருத்தமானவையா என்பதை நடைமுறையில் தெரிந்துகொள்வதற்காக 3,200 கூட்டுறவு மாதிரிப் பண்ணைகளை ஏற்படுத்தவேண்டுமென இக் கமிட்டி சிபாரிசு செய்தது. இத் திட்டத்தைப்பற்றி விரிவாகத் தனி அதிகாரத்தில் ஆராய்வோம்.

மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம்

மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்திலும் கூட்டுறவுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இத்திட்டத்தில் விவசாயம், சிறு தொழில்கள், வியாபாரம், விநியோகம் ஆகிய எல்லாத் துறை களிலும் கூட்டுறவு இயக்கம் வளர வகை செய்யப்பட்டது. நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களும் சேவைக் கூட்டுறவுச் சங்கங்களால் பயனடைய வேண்டுமென்பதற்காக மேலும் 33,000 சங்கங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. கடன் சங்கங்களின் உறுப்பினர்கள் 17 மில்லியனிலிருந்து 37 மில்லியனாக அதிகரித்தால்தான் விவசாய மக்களில் 62 சதவீதம் பேர் பயனடைவர் என்று எதிர்பார்க்கப்பட்டது. இத்திட்டம் முடிவடைவதற்குள் 530 கோடி ரூபாய் விவசாயிகளுக்குக் குறுங் காலக் கடனாகக் கொடுக்கப்படவேண்டும் என்றும் திட்டக்குழு தீர்மானித்தது. 60,000 சேவைச் சங்கங்கள் ஊக்குவிக்கப்படுவதற்கென்று ஒவ்வொரு சங்கத்திலும் மாநில அரசு ரூ. 5,000 மதிப்புள்ள பங்கைப் பெறவேண்டுமென முடிவு செய்யப்பட்டது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை ஊக்குவிப்பதற்கும் திட்டம் போடப்பட்டது. மேலும், 2,200 தொடக்கநிலைக் கூட்டுறவுப் பண்டகசாலைகளையும் 50 மொத்த விற்பனைச் சங்கங்களையும், 3,200 கூட்டுறவுப் பண்ணைகளையும் 320 மாதிரிப் பண்ணைகளையும் அமைப்பதென்றும் திட்டம் போடப்பட்டது. கிராமவாழ்க்கையே கூட்டுறவின் அடிப்படையில் அமையவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்குகள் வருமாறு :

1.	**விவசாயக் கடன்**	**இலக்கு**
1.	தொடக்கநிலைச் சங்கங்களின் எண்ணிக்கை	2,30,000
2.	உறுப்பினர் எண்ணிக்கை	37 மில்லியன்
3.	விவசாய மக்களில் பலனடைவோர்	60 சதவீதம்
4.	குறுங்காலக் கடன்	ரூ. 4,200 மில்லியன்
5.	இடைக்காலக் கடன்	ரூ. 1,100 ,,
6.	கெடுங்காலக் கடன்	ரூ. 1,505 ,,
2.	**விவசாய விற்பனை**	
1.	தொடக்கநிலை விற்பனைச் சங்கங்களின் எண்ணிக்கை	600 (அதிகம்)
2.	விற்பனைச் சங்கங்களின் பண்டகங்கள்	930 (,,)
3.	கிராமப் பண்டகங்கள்	9,300 (,,)
3.	**விவசாயப் பொருள் பதப்படுத்தல்**	
1.	கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை	25 (,,)
2.	பருத்திப் பஞ்சாலை	48 (,,)
3.	எண்ணெய் ஆலை	33 (,,)
4.	அரிசி ஆலை	477 (,,)
5.	மற்றவை	255 (,,)

மேற்கூறிய இலக்குகளை அடைவதெப்படி என்பதை ஆராய்ந்து, பரிந்துரை செய்வதற்கென்று இந்திய அரசாங்கம் பல்வேறு குழுக்களை நியமித்தது. அக் குழுக்களின் அறிக்கையின் சாரம் வருமாறு :

1. கூட்டுறவுப் பயிற்சி பற்றிய குழு

நாட்டிலுள்ள கூட்டுறவுப் பயிற்சியைப்பற்றி ஆராயவும் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவுக் கல்வியைப் பரப்பும் வழிவகைகளை ஆராயவும் இந்திய அரசாங்கம் திரு. எஸ். டி. மிஸ்ரா அவர்களின் தலைமையில் குழு ஒன்றை நியமித்தது. இக் குழு கூட்டுறவுக் கல்வியையும் பயிற்சியையும் ஒழுங்குபடுத்துவதற்கென்று பின்வரும் பரிந்துரைகளைச் செய் துள்ளது.

(அ) கூட்டுறவுக் கல்வியைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் போதிப்பதற்கான பாடத் திட்டத்தைப் புகுத்த வேண்டும்.

(ஆ) கூட்டுறவுப் பயிற்சி பற்றிய கொள்கையை வகுப்பதற் கென்று தேசியக் கூட்டுறவுக் கழகம் ஒன்றை நிறுவ வேண்டும்.

(இ) கூட்டுறவைப்பற்றி ஆழ்ந்த அறிவைப் பெறவும் ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்ளவும் வசதியான கூட்டுறவுக் கல்வி நிலையம் ஒன்றைத் தொடங்க வேண்டும்.

(ஈ) கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் அனைத்தையும் அதிகரிக்க வேண்டும்.

இப் பரிந்துரைகள் அனைத்தையும் சம்பந்தப்பட்ட மாநில அமைச்சர்களின் மாநாட்டில் விரிவாகப் பரிசீலனை செய்தனர். கூட்டுறவுக் கல்வியையும் பயிற்சியையும் இந்திய தேசியக் கூட்டுறவு யூனியன்கீழ்க் கொண்டுவந்தனர். மாநில மட்டத்தில் மாநில யூனியன்களே இதைக் கண்காணிக்க வழிசெய்துள்ளனர்.

2. நுகர்வோர் கூட்டுறவுப் பற்றிய குழு

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை எப்படி அமைப்பது, எவ்வாறு அவற்றை ஊக்குவிப்பது என்பதை ஆராய்வதற்காகத் தேசியக் கூட்டுறவுத் துறையும் பண்டகப் போர்டும் சேர்ந்து ஒரு குழுவை நியமித்தன. இக் குழு 1961 மே மாதம் தன் அறிக் கையை அளித்தது. அவ் வறிக்கையில் காணப்படும் யுக்திகள் வருமாறு:

(அ) கூட்டுறவுப் பண்டகசாலைகளைத் தொடங்கும்போது அவை இலாபகரமாக நடைபெறுமா? எந்த அளவில் அவற்றை அமைத்தால் நட்டமின்றி நடைபெறும் என்பதையெல்லாம் நன்கு பரிசீலனை செய்வது நன்று.

(ஆ) கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு உதவும் வகையில் அவற்றின் பங்கு மூலதனத்தை அரசாங்கம் பெறவேண்டும்; அதோடு, பண்டகங்களைக் கட்டுவதற்கும் உதவிசெய்ய வேண்டும். தண்டகசாலைகளுக்குத் தேவையான இடங்களையும் பெற்றுத் தரலாம்; வருமான வரியில் சலுகைகள் கொடுக்க வேண்டும்.

பொருள்களை இறக்குமதிசெய்ய அனுமதியும் தந்து அரசாங்கம் உதவ முடியும்.

(இ) கூட்டுறவுப் பண்டகசாலைகளின் நிதியைப்போல் இரண்டு மடங்குத் தொகையைக் கூட்டுறவு மைய வங்கிகள் கடனாகத் தர வேண்டும்.

(ஈ) கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குள்ள கட்ட நட்டங்களை ஆராய்ந்து, அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதற்குக் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் கூட்டமைப்புச் சங்கத்தைத் தேசிய மட்டத்தில் அமைக்க வேண்டும்.

5. பஞ்சாயத்து, கூட்டுறவு பற்றிய ஆய்வுக் குழு

பஞ்சாயத்துகளும் கூட்டுறவுச் சங்கங்களும் ஏறக்குறைய ஒரே குறிக்கோளையுடையவை; இரண்டுமே குடியாட்சி அடிப்படையில் அமைந்துள்ளன. எனவே, இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று எந்த அளவுக்கு உதவிசெய்ய முடியும் என்பதை ஆராய்வதற்கென்று மத்திய அரசாங்கம் ஒரு குழுவை நியமித்தது. இக்குழு தன் அறிக்கையில் பின்வரும் குறிப்புகளைத் தந்துள்ளது. பஞ்சாயத்தும் கூட்டுறவுச் சங்கமும் ஒரே அடிப்படையில் அமைக்கப்பட்டிருப்பினும், இவ் விரண்டும் தனித்தனியாகச் சுதந்திரத்துடன்தான் நடைபெற வேண்டும். கூட்டுறவுப் பதிவாளரின் அதிகாரத்தைப் பஞ்சாயத்துகளுக்கு மாற்றக்கூடாது. கூட்டுறவுச் சங்கங்களைக் கண்காணிக்கும் அதிகாரத்தைக்கூடப் பஞ்சாயத்துகளுக்கு மாற்றக் கூடாது. எனினும், கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியில் பஞ்சாயத்துகளும் பங்குகொள்ளலாம். குறிப்பாகக் கூட்டுறவுத் துறையிலுள்ள சேவைச் சங்கங்கள், மீன்பிடிப்புச் சங்கங்கள், மனை கட்டும் சங்கங்கள், பால்பண்ணைகள் போன்ற சங்கங்கள் வளர்வதற்குப் பஞ்சாயத்துகள் ஒத்துழைக்கலாம். அதோடு தம்மிடமுள்ள உபரிப் பணத்தைப் பஞ்சாயத்துகள் சேவைச் சங்கங்களுக்குக் கொடுத்து உதவலாம். மேலும், கூட்டுறவுக் கல்வியைப் பரப்புவதற்கு இட வசதிகள் தந்தும் உதவலாம். கூட்டுறவுச் சங்கங்களுடன் சேர்ந்து ஒவ்வொரு கிராமத்திலும் உற்பத்தி செய்யப்பட வேண்டிய பொருள்களைப்பற்றித் திட்டமிடலாம். கிராமப் பிரச்சினைகளைப்பற்றி ஆராய்ந்து முடிவெடுக்கக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளும் பஞ்சாயத்து அதிகாரிகளும் மூன்று மாதத்திற்கொரு முறையாவது கூடிப் பேசலாம். பஞ்சாயத்திற்குச் சொந்தமான தரிசு நிலங்களை கூட்டுறவுப் பண்டகசாலைகளை அமைக்கக் கொடுக்கலாம். கிராம மக்களின் நல்வாழ்வுக்காக இவ்விரு அமைப்புகளுமே ஒத்துழைத்து இயங்கவேண்டுமென இக் குழு வலியுறுத்தியுள்ளது.

4. தக்காவிக் கடன் பற்றிய குழு (Committee on Taccavi Loan)

அரசாங்கம் விவசாயிகளுக்குத் தரும் தக்காவிக் கடன் முறை பற்றிப் பரிசீலனை செய்யவும் அக் கடனைக் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகக் கொடுப்பதெப்படி என்பதை ஆலோசனை செய்யவும் 1962-ல் திரு. பி. பி. படேல் என்பவரின் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக் கமிட்டியின் அறிக்கையில் காணப்படும் முக்கிய அம்சங்களும் பரிந்துரைகளும் வருமாறு : விவசாயிகளுக்குப் பயிர் சாகுபடி செய்வதற்கு மட்டும் ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ. 1,600 கோடி தேவைப்படுகிறது. ஆனால் 1960-61-ல் கூட்டுறவுச் சங்கங்கள் கொடுத்த கடன் தொகையோ ரூ. 202 கோடிதான்; அரசாங்கம் கொடுத்த தக்காவிக் கடனோ ரூ. 41 கோடியே. இந் நிலையில் தக்காவிக் கடனை அதிகரிப்பது என்பது இயலாது; எனவே கூட்டுறவுக் கடனைத் தான் அதிகரிக்க முடியும். மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் கூட்டுறவுச் சங்கங்கள் தரும் கடன் ரூ. 530 கோடிக்கு அதிகரிக்கும். மேலும், கிராம வாசிகள் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகக் கடனைப் பெறுவதே வசதி யானதெனக் கருதுகின்றனர். எனவே, தக்காவிக் கடனைக்கூட அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகக் கொடுத்தால் அச் சங்கங்கள் நல்ல முறையில் வளர்ந்து பலமடையும். மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் 7½ முதல் 8 சதவீத வட்டிக்குமேல் வாங்கக் கூடாது. சங்கங்களில் உறுப்பினரல்லாத விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கக்கூடாது. இப் பரிந்துரைகள் பலவற்றை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. தற்போது அரசாங்கம் தரும் தக்காவிக் கடன் கூட்டுறவுச் சங்கங்களின் வழியாகவே கொடுக்கப் பட்டு வருகிறது. கூட்டுறவுச் சங்கங்களினால் கொடுக்கப்பட முடியா விட்டால் மட்டும் இக் கடன் தொகையை அரசாங்கமே நேரடி யாகக் கொடுக்கிறது.

5. இரயில்வே தொழிலாளர் கூட்டுறவு பற்றிய ஆய்வுக் குழு

இரயில்வே, தபால், தந்தித் துறைகளில் பணிபுரியும் கூட்டுறவுச் சங்கங்களின் நிலையை ஆராயவும் மூன்றாவது ஐந் தாண்டுத் திட்டக் காலத்தில் அவற்றை எவ்வாறு மேம்படுத்தலாம் என்று ஆலோசனை கூறவும் இக் குழு நியமிக்கப்பட்டது. இக் குழு 1963 ஏப்ரல் மாதம் தன் அறிக்கையை அளித்தது. அதில் குறிப் பிடப்பட்டுள்ள பரிந்துரைகளில் முக்கியமானவை வருமாறு : கூட்டுறவு வங்கிகள் இச் சங்கங்களுக்கு வேண்டிய கடனைத் தாராள மாகத் தரவேண்டும். இதற்காக இக் கூட்டுறவுச் சங்கங்கள்

கூட்டுறவு வங்கிகளிடமே கணக்கு வைத்து, அவற்றோடு இணைந்து செயல்பட்டால் நன்று. கூட்டுறவுக் கடன் சங்கங்கள் சிற்றுண்டிகளை வைத்து நடத்தவோ, வீடு கட்டித்தரும் பணிபோன்ற அலுவல்களில் ஈடுபடவோ கூடாது. அப்போதுதான் ஏனைய சங்கங்களுக்குத் தாராளமாகக் கடன் கொடுக்க முடியும். கடன் சங்கங்களின் உறுப்பினர்கள் கட்டாயமாக அச் சங்கங்களில் வைப்புத் தொகை வைக்கவேண்டும். இக் குழுவின் அறிக்கையிலிருந்து இரயில்வே பணியாளர்களில் 54 சதவீதம் பேர் சேர்ந்து மொத்தம் 116 கடன் சங்கங்களை நடத்தி வந்ததாகவும், மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் 75 சதவீதம் பேர் உறுப்பினர்களாக முடியும் என்றும் அறிய வருகிறோம்.

இரயில்வே ஊழியர்கள் கூட்டுறவுப் பண்டகசாலைகளை வைத்து நடத்த வேண்டும். இச் சங்கங்களில் இரயில்வே ஊழியர்களின் குடும்பத்தினரும் உறுப்பினர்களாவதற்கு ஏற்பாடு செய்தால் இப் பண்டகசாலைகள் அதிக விரைவில் முன்னேற்றமடையும். இப் பண்டகசாலைகளுக்கு இரயில்வே நிர்வாகத் துறையினர் உதவி செய்ய வேண்டும். சான்றாக, ஒவ்வொரு பண்டகசாலையிலும் ரூ. 2,000 அளவுக்குப் பங்கு வாங்கலாம்; அதேபோல் ஒவ்வொரு சங்கமும் முறையாக நடைபெறுவதற்கு ரூ. 10,000 வரை கடன் கொடுத்து உதவலாம். மேலும், இரயில்வே தொழிலாளிகளுக்கென்று 150 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும், இரயில்வேயில் சில்லறைச் சாமான்கள் விற்போருக்கென்று 300 சங்கங்களும் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அமைக்கப்படலாமென இக் குழு சிபாரிசு செய்துள்ளது.

6. தொழில் கூட்டுறவு ஆய்வுக் குழு

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவரும் முறையை ஆராயவும், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அவற்றை எவ்வாறு ஊக்குவித்து விருத்திசெய்வது என்பதைப் பரிசீலனை செய்து ஆலோசனை கூறவும் 1962-ல் தொழில் கூட்டுறவு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டது. 1963 மே மாதம் இக் குழு தன் அறிக்கையைத் தயார் செய்துவிட்டது. அவ் வறிக்கையில் இக்குழுக் கண்ட முடிவுகளும் செய்துள்ள சிபாரிசுகளும் வருமாறு: 3ஆம் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைவதற்குள் நுகர்வுப் பொருள்களை உற்பத்திசெய்யும் தொழிலாளர்களில் 30 சதவீதம் பேராகிலும் கூட்டுறவு இயக்கத்தில் பங்குகொள்ளச் செய்யவேண்டும். இதற்காக ஏற்கெனவே இவர்களுக்காக ஏற்பட்டுள்ள சங்கங்களுக்குப் புத்துயிரும் தெம்பும் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும். முக்கியமாக கைத்தொழிலாளர், நெசவாளர் போன்றவர்களின் சங்கங்கள்

ஊக்குவிக்கப்பட வேண்டும். மேலும், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இணைக்கப்படுவதற்குரிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். இச் சங்கங்களுக்குக் கூட்டுறவு வங்கிகள் தாராளமாகக் கடன் கொடுக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும்.

தொழில் கூட்டுறவுச் சங்கங்களை இக் குழு நான்கு இனங்களாகப் பிரித்தது. அவை முறையே: (1) கூட்டுறவு முறையில் உற்பத்திசெய்யும் சங்கங்கள், (2) உறுப்பினர்களுக்கு வேண்டிய பொதுப் பட்டறைகளை அமைத்து அவர்களுக்குப் பணிபுரியும் சங்கங்கள், (3) உறுப்பினர்கள் தத்தம் இல்லங்களிலேயே தொழிலைச் செய்ய அனுமதித்து, அத்தொழிலில் ஏற்படும் இலாப நட்டங்களை ஏற்றுக்கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ள சங்கங்கள், (4) உறுப்பினர்களுக்குவேண்டிய கடன், கச்சாப்பொருள்கள், கருவிகள், சாதனங்கள் முதலியவற்றை விநியோகித்து, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விற்பனை ஏற்பாட்டையும் வேறு பல பணிகளையும் மேற்கொள்ளும் சங்கங்கள்.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 15 இலட்சம் உறுப்பினர்களைக்கொண்ட 15,000 சங்கங்களைப் புதிதாக அமைக்கமுடியுமென இக் குழுக் கருதியது. மேலும், இச் சங்கங்களின் நடப்பு மூலதனம் ரூ. 120 கோடிக்கு அதிகரிக்கக் கூடுமென்றும் மதிப்பிட்டது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறு தொழில் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் இலக்கில் 25 சதவீதத்தைக் கூட்டுறவுத் தொழில்களுக்காக ஒதுக்கலாமென்றும் சிபாரிசு செய்தது. இத் தொழில் சங்கங்களுக்குக் கூட்டுறவு வங்கிகள் $4\frac{1}{2}$ சதவீத வட்டிக்குக் கடன் கொடுக்கவேண்டும். இதனுல் ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்ய அரசாங்கம் அவ்வங்கிகளுக்கு மானியத் தொகை வழங்கவேண்டுமென்றும் பரிந்துரை செய்துள்ளது. மேலும், முக்கியமான வியாபாரத் தலங்களில் இச் சங்கங்கள் ஒன்றுசேர்ந்து கூட்டமைப்புச் சங்கங்களை உருவாக்கினுல் நல்லது. இறுதியாக, இச்சங்கங்களைக் கண்காணித்துவரும் பணியாளர்கள் தொழில்நுட்பம், நிதி வசதி, இன்னும் பிற வசதிகளை எவ்வாறு அடைவது என்பதுபற்றி அறிந்துகொள்வதற்கு அவர்களுக்கு மூன்று அல்லது நான்கு வார காலப் பயிற்சி அளிப்பது நன்று என்றும் சிபாரிசு செய்திருக்கிறது.

7. கூட்டுறவு நிர்வாக ஆய்வுக் குழு

ஒவ்வோர் மாநிலக் கூட்டுறவுத் துறையும் எவ்வாறு இயங்கி வருகிறதென்பதை ஆராயவும், அத்துறைகளில் பணியாற்றுவோர் திறமையுடன் தம் பணிகளைப் புரிந்து வலிமைபெற எந்தெந்த உபாயங்களைக் கடைப்பிடிக்கலாம் என்று ஆலோசனை கூறவும்

திரு. வி. எல் மேத்தா அவர்களின் தலைமையில் 1963 ஜூலை மாதம் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைகள் வருமாறு; கூட்டுறவுச் சங்கப் பதிவாளராக நியமனம் பெறுவோர் ஐ. ஏ. எஸ். பட்டம் பெற்றவராயிருக்கவேண்டும். கூட்டுறவுச் சங்கப் பதிவாளராக நியமனம் பெறுமுன், அவருக்கு இரண்டு ஆண்டு கால நிர்வாகப் பயிற்சி அளிக்க வேண்டும். அவருடைய பதவி காலம் 3 ஆண்டு முதல் 5 ஆண்டுவரை இருக்கவேண்டும். அவருக்குத் துணைபுரிய இணைப் பதிவாளர்கள் (Joint Registrars) நியமிக்கப்பட வேண்டும். சங்கங்களின் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்தல், கூட்டுறவு, வங்கி—கூட்டுறவுக் கடன் சங்கங்கள், விற்பனைச் சங்கங்கள் தொழில் சங்கங்கள், கூட்டுறவுப் பண்ணைகள், பண்டக சாலைகள் ஆகிய ஒவ்வொரு வகைக்கும் தனித்தனி இணைப் பதிவாளர்கள் இருக்கவேண்டும். சங்கங்களின் நொடிப்பு சம்பந்தமான அலுவல்களுக்கென்று தனி அலுவலகர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஒவ்வோர் பிராந்தியத்திலும் 5,000 சங்கங்களைக் கண்காணிப்பதற்கென்று ஒரு துணைப் பதிவாளரும், ஒவ்வோர் மாவட்டத்திலுமுள்ள சங்கங்களுக்கென்று ஓர் உதவிப் பதிவாளரும் இருக்கவேண்டும். தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வையிடும் பொறுப்பை அந்தந்த மாவட்ட மத்திய வங்கியிடமே ஒப்படைக்க வேண்டும். கூட்டுறவு நிறுவனங்கள் வேறுபல துறைகளிலிருந்து பணியாளர்களைத் தாற்காலிகமாகப் பெறுவது நல்லதல்ல. கூட்டுறவுப் பணியாளர்களுக்குத் தொடக்கத்தில் நல்ல பயிற்சி மட்டும் கொடுத்தால் போதாது; 5 அல்லது 7 ஆண்டுகளுக்கொருமுறை அவர்களுக்கு மறுபடியும் பயிற்சி அளித்துக்கொண்டே வரவேண்டும்.

8. நகர்ப்புறக் கூட்டுறவுக் கடன் ஆய்வுக் குழு

நகர்ப்புறக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்களைப்பற்றி ஆய்வு செய்வதற்காக 1963-ல் குழு ஒன்று நியமனம் பெற்றது. இக் குழுவின் பரிந்துரைகளில் முக்கியமானவை வருமாறு :

(அ) நகர்ப்புற வங்கிகள் பெரிய நகரங்களில் மட்டுமன்றி, சிறிய நகரங்களிலும் அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கூட்டுறவு வங்கியின் பங்கு மூலதனத்தில் 25,000 ரூபாயாவது செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாக இருக்கவேண்டும். இம் மூலதனம் எவ்வளவோ அவ்வளவு தொகையை அரசாங்கம் தன் பங்காகக் கொடுக்கவேண்டும். கூட்டுறவு வங்கியின் உறுப்பினர்கள் ஆயிரக்கணக்காக இருக்கும்போது அவர்கள் அனைவரும் பொதுக் குழுவில் இருக்கவேண்டிய அவசியமில்லை. அவர்களின் பிரதிநிதிகளைக்கொண்டே பொதுக்குழு அமைக்கலாம். உறுப்பினர்களுக்குக்

கூட்டுறவுக் கல்வியைப் போதிப்பதற்கென்று சிறுசிறு நூல்களையோ பத்திரிகைகளையோ வெளியிட வேண்டும். நகர்ப்புற வங்கிகள் அனைத்தும் தமக்குக் கடன் தரும் நிறுவனங்களோடு இணைக்கப்பட வேண்டும். விவசாயக் கடன் சங்கங்களைத் தவிர, ஏனைய கடன் சங்கங்களைக் கட்டிக் காப்பதற்கென்று மாவட்ட மத்திய வங்கிகள் தனிப் பிரிவு ஒன்றைப் பெறவேண்டும். நகர்ப்புற வங்கிகள் 5 ஆண்டு காலத்திற்குமேல் எவருக்கும் கடன் கொடுக்கக்கூடாது. இக் கடன் ஆக்கப் பணிகளுக்கே வழங்கப்படவேண்டும். வீட்டு அடைமானத்தின்பேரில் வேண்டுமானால் நீண்ட காலக் கடன் தரலாம். நீண்ட காலக் கடன் கொடுப்பதற்கென்று ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து (L.I.C.) கடன் பெறலாம்; வைப்புத் தொகையும் பெறலாம்.

(ஆ) 30-6-62-ன் கணக்குப்படி ஊதியம் பெறுவோருக்குமட்டும் 4,000 சங்கங்கள் இருந்தன; இவற்றில் 12·4 இலட்சம் பேர் உறுப்பினராக இருந்தனர். 4ஆம் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைவதற்குள் 50-க்கு மேற்பட்ட பணியாளர்களைக்கொண்ட அலுவலகங்கள் அனைத்தும் தமக்கென்று கூட்டுறவுக் கடன் சங்கங்களை அமைத்துக்கொள்ள வேண்டுமென இக் குழு சிபாரிசு செய்துள்ளது. மேலும், உறுப்பினர்கள் தமது வைப்புத் தொகையை இச் சங்கங்களிடம் வைத்துக்கொள்வது அவசியம். இதற்காக மாதந்தோறும் குறிப்பிட்ட தொகையை அவர்களது சம்பளத்திலிருந்து பிடித்து அதை அவர்களது வைப்புக் கணக்கில் வரவு வைத்துக்கொள்ளலாம். இச் சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்களின் பிரதிநிதிகளை மட்டும் கொண்டதாக இருக்கவேண்டும்; அரசாங்க அதிகாரி யாரும் இக் குழுவில் இருக்கக்கூடாது. பணியாளர் கடன் சங்கங்கள் உறுப்பினர்களுக்குக் கடன் கொடுக்கும் பணியையும் அவர்கள் சிக்கனமாக வாழ்வதற்குரிய நடவடிக்கைகளையும் மட்டுமே செய்யவேண்டும். கூட்டுறவுப் பண்டசாலைகளை இவை அமைக்கக்கூடாது. அவ்வாறு அமைக்க விரும்பினால், அதற்கென்று தனிச் சங்கங்களை அமைத்துக்கொள்ளலாம்.

9. கூட்டுறவு மனைச் சங்க ஆய்வுக் குழு

கூட்டுறவு மனைச் சங்கங்களை நல்ல முறையில் அமைத்து, அவற்றை முன்னேற்றுவதற்கான வழிவகைகளை ஆராய 1963-ல் இக் குழு நியமிக்கப்பட்டது. 1964 ஜனவரியில் இக் குழு அளித்த அறிக்கையில் பின்வரும் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன: மத்திய அரசாங்கம் வீட்டு வசதித் திட்டத்திற்கென்று ஒவ்வோர் மாநிலத்துக்கும் கொடுக்கும் நிதியில் 20 சதவீதமாகிலும் கூட்டுறவு மனைச் சங்கங்களுக்கு வழங்கப்படவேண்டும். குறைந்த வருமான

முடையோரின் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அதிக பட்சக் கடன் ரூ. 10,000-க்கு உயர்த்தப்படவேண்டும். நிலம் வழங்கப்படும்போது கூட்டுறவு மனைச் சங்கங்களுக்குச் சலுகை காட்டவேண்டும். மேலும், இச் சங்கங்களின் நிர்வாகச் செலவுக்கென்று தொடக்கத்தில் 3 அல்லது 4 ஆண்டுகள் வரை அரசாங்கம் மானியத் தொகை வழங்கவேண்டும்.

நடுத்தர வகுப்பினரின் வீட்டு வசதித் திட்டத்திற்காக வழங்கப்படும் கடன் 80 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாகக் குறைக்கப்படவேண்டும் மேலும், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 100 கூட்டுறவு மனைச் சங்கங்களுக்குமேலுள்ள மாநிலங்களிளெல்லாம் மாநிலக் கூட்டுறவு மனைச் சங்கங்களை அமைக்க வேண்டும். தேசிய மட்டத்திலும் தேசியச் சங்கம் ஒன்று நிறுவப்படுவது நல்லது. இக் கூட்டுறவு மனைச் சங்கங்களுக்குக் கடன்தரும் நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் முதலியவை தாராளமாகக் கடன் தர முன்வர வேண்டும். நிற்க, இச் சங்கங்களுக்கு வேண்டிய கடனுதவியைச் செய்வதற்கென்று கூட்டுறவு மனை அடைமான வங்கிகளை ஏற்படுத்தல் நன்று இறுதியாக இச் சங்கங்களுக்கு வேண்டிய ஆலோசனைகளைத் தர அரசாங்கம் ஏற்பாடு செய்வதோடு இவை கட்டும் மனைகளுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் முதலில் இச் சங்கங்களுக்கே கொடுக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.

10. கூட்டுறவுப் போக்குவரத்து ஆய்வுக் குழு

கூட்டுறவுப் போக்குவரத்துச் சங்கங்கள் வளர்ச்சி பெறுவதற்கும், அவை எவ்வாறு அமைக்கப்படவேண்டும், அவற்றிற்கு எவ்வளவு நிதி உதவி தேவை, அவ் வுதவியை எப்படிச் செய்வது என்பதையெல்லாம் பரிசீலனை செய்வதற்கென்று 1962-ல் மத்திய அரசாங்கம் இக் குழுவை நியமித்தது. இக் குழுவின் அறிக்கை 1964 மே மாதம் அளிக்கப்பட்டது. இவ் வறிக்கையின் சாரம் வருமாறு: 1963ஆம் ஆண்டிலேயே நம் நாட்டில் மொத்தம் 826 போக்குவரத்துச் சங்கங்கள் இயங்கி வந்தன; இவற்றில் 612 சங்கங்கள் பயணிகள் செல்லும் போக்குவரத்துப் பணியாளர்களால் அமைக்கப்பட்டவை; 172 சரக்குப் போக்குவரத்து ஊழியர்களின் சங்கங்கள். வாடகைக் கார் சங்கங்கள் மட்டும் 18 இருந்தன. இச் சங்கங்கள் அனைத்திலும் சுமார் 33,000 பேர் உறுப்பினர்களாக இருந்தனர். போக்குவரத்துப் பணியாளர்களின் சங்கங்கள் தமிழ் நாட்டில்தான் அதிகம். எனினும், போக்குவரத்துத் துறையைத் தேசிய மயமாக்கும் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் பயணிகள் போக்குவரத்துத் துறையில் கூட்டுறவுச் சங்கங்கள் வளர வாய்ப்பில்லை;

எனவே, சரக்குப் போக்குவரத்துத் துறையில்தான் கூட்டுறவுச் சங்கங்களை அதிகரிக்க இயலும். இச் சங்கங்களை அந்தந்தத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்கள்தாம் அமைக்க வேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஆண்டொன்றுக்கு 10 புதிய சங்கங்களை ஏற்படுத்தி, மொத்தம் 1,000 சங்கங்களைத் திட்ட முடிவிற்குள் ஏற்படுத்த வேண்டும். இச் சங்க உறுப்பினர் ஒவ்வொருவரும் தவணை முறையில் ரூ. 1,000 வரை பங்கு மூலதனம் செலுத்தவேண்டும். அதோடு, மொத்தப் பங்கு மூலதனத்தில் 35 சதவீதத்தை அரசாங்கமே வாங்க வேண்டும். மேலும், வாகன உரிமையாளர்கள் 15 பேர் சேர்ந்து சேவைச் சங்கங்களை அமைத்தல் நன்று. அப்போதுதான் வாகனங்களைச் சரிபார்த்தல், அவற்றிற்குவேண்டிய பாகங்களைப் பெறுதல், வரி சம்பந்தப்பட்ட விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளல், வாகனக் காப்பீடு செய்தல், ஓட்டுநருக்குப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகளையெல்லாம் இச் சங்கங்களைக்கொண்டே எளிதாகச் செய்ய முடியும். பம்பாயிலும் கல்கத்தாவிலும் வாடகைக்கார் ஓட்டுநரின் சங்கங்கள் நல்ல முறையில் செயலாற்றி வருகின்றன. இவ் வகைச் சங்கங்களை ஏனைய மாநிலங்களிலும் அமைக்கவேண்டும். அப்போதுதான் ஓட்டுநரே காருக்குச் சொந்தக்காரர்களாக வர வாய்ப்பு ஏற்படும். பெரிய நகரங்களிலாவது இவ் வகைச் சங்கங்கள் ஏற்படுவது நன்று. சைக்கிள் ரிக்ஷாக்காரர்களின் சங்கங்களுக்கு இக் குழு ஆதரவு தெரிவிக்கவில்லை. மாறாக, இச் சங்கங்களையெல்லாம் கூடிய விரைவில் கலைத்துவிட வேண்டுமென்று சிபாரிசு செய்துள்ளது. மாநில அரசுகளும், ஸ்டேட் பாங்கும் இச் சங்கங்களுக்கு வேண்டிய நிதியை அளிக்கவேண்டும். மாநில அரசின் உத்தரவாதத்தின்பேரில் கூட்டுறவு வங்கிகளும் நிதி உதவ முன் வர வேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் 1,000 போக்குவரத்துச் சங்கங்களாவது அமைக்கப்படவேண்டும்; அதற்காக மாநில நிதிக் கழகங்கள் ரூ. 40 கோடி ஒதுக்கவேண்டும்; ஒவ்வொரு சங்கத்திற்கும் இக் கழகம் நிர்வாக உதவிக்கென்று ரூ. 4,000 கொடுக்கவேண்டுமென இக் குழுக் கூறியுள்ளது. இச் சங்கங்களின் பணிகளை மேற்பார்வையிடுவதற்கென்று மத்திய அரசாங்கம் ஏதாவதோர் அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்றும் பரிந்துரை செய்துள்ளது.

11. கூட்டுறவு பற்றிய மிர்தா குழு

கூட்டுறவு இயக்கம் முறையாக வளர்வதற்கென்றும், நல்ல முறையில் செயல்படாத சங்கங்களும், சுய நலத்திற்காக அமைக்கப் பட்டுள்ள சங்கங்களும் ஒழிக்கப்படுவதற்கென்றும் ஆலோசனை கூறுவதற்காக இந்திய அரசாங்கம் திரு. மிர்தா அவர்களின்

தலைமையில் குழு ஒன்றை நியமித்தது. இக் குழுத் தன் அறிக்கையை 1965 ஆகஸ்டு மாதம் அளித்தது. கூட்டுறவு இயக்கம் பொதுவாக நல்ல முறையில்தான் நடைபெற்று வருகிறதென்றும், ஒருசில சங்கங்கள்தாம் சுய நலத்திற்காகவும் வேறுபல நோக்கங்களுக்காகவும் இயங்கி வருகின்றனவென்றும், அவ் வகைச் சங்கங்களையெல்லாம் ஒழித்துக் கட்டிவிட்டால் கூட்டுறவு இயக்கமே செம்மையாக முன்னேறுமென்றும் இக் குழு முடிவு செய்துள்ளது. ஆங்காங்கே ஒருசில சங்கங்களால் மோசடித்தனம் நடைபெறுவது உண்மைதான்; ஆனால் அதைப் பெரிதுபடுத்திப் பேசுவது வழக்கமாகி விட்டது. பெரும்பாலான சங்கங்கள் நல்ல முறையில்தான் பணியாற்றி வருகின்றனவென்று இக் குழுத் தீர்க்கமாகக் கூறியுள்ளது. எனினும், கூட்டுறவு இயக்கத்தின் குறைபாடுகளைக் களைந்தெறியச் சில ஆலோசனைகளையும் தந்துள்ளது. அவற்றுள் முக்கியமானவை வருமாறு :

கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிலும் பண்டகசாலைகளிலும் வியாபாரிகளை உறுப்பினர்களாக அனுமதிக்கக்கூடாது; மற்றப்படி கூட்டுறவுச் சங்கம் எதிலும் எவர் வேண்டுமானாலும் முறைப்படி உறுப்பினர்களாவதற்குரிய தத்துவம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். எவராகிலும் உறுப்பினராக அனுமதிக்கப்படவில்லையென்றால் அவர் தம் குறையைப் புகார் செய்ய வாய்ப்பு இருக்க வேண்டும்; கூட்டுறவுப் பதிவாளரும் இணைப்புச் சங்கங்களின் பிரதிநிதிகளும் சேர்ந்து அவரது குறையைப் பரிசீலனை செய்து முடிவெடுக்க வேண்டும்.

கூட்டுறவுச் சங்க உறுப்பினர் ஒருவர் இத்தனை முறைதான் நிர்வாகக் குழு உறுப்பினராக இருக்கலாம், அல்லது ஒரே சமயத்தில் பல்வேறு சங்கங்களில் பதவி வகிக்கக்கூடாது என்ற ஒழுங்கு முறைகள் அகற்றப்படவேண்டும். பழக்கத்தில் அவ்விதி முறைகள் இருப்பது நல்லதுதான்; ஆனால், அவற்றைச் சட்டம்போல் அமலாக்கக்கூடாது. நிர்வாகக் குழு 2 அல்லது மூன்றாண்டுகளுக்கொரு முறைதான் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். இத் தேர்தல் விவகாரங்களையெல்லாம் உறுப்பினர்கள்தாம் கண்காணித்துக் கொள்ள வேண்டுமே தவிர, பதிவாளர் எவரும் அவற்றில் தலையிடக் கூடாது. நிர்வாகக் குழுவில் பங்குகொள்வதற்கென்று அரசாங்கமே ஆள்களை நியமிப்பதைக் குறைத்துக்கொள்ள வேண்டும்; அப்படி நியமிக்கும்போது அரசாங்க அதிகாரிகளைத்தான் நியமிக்க வேண்டுமேயன்றி, கட்சியாளர்களையோ வேண்டியவர்களையோ நியமிக்கக்கூடாது. அவ்வாறு நியமனம் பெறும் நிர்வாகிகள் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகிகளோடு ஒத்துழைக்க

வேண்டும்; நிர்வாகக் குழுவின் கூட்டத்திற்குத் தவறுமல் வர வேண்டும்; தம்முடைய தவறுதலினுலோ, அசட்டைத்தனத்தாலோ கூட்டுறவுச் சங்கத்தை நட்டமடைய விடக்கூடாது; அப்படி நட்டம் ஏற்பட்டால் அதற்குத் தாமும் பொறுப்பேற்க வேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதற்கு இன்னும் அதிகமான உதவிகளை அரசாங்கம் செய்ய முன்வர வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் அரசாங்கம் பங்குகொண்டால் மட்டும் போதாது; ஆங்காங்கேயுள்ள கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் இணைப்புக் கழகங்களும் கூட்டுறவு வங்கிகளைத் தம் வங்கிகளாகப் பயன் படுத்திக்கொள்ள அனுமதிக்கவேண்டும். கூட்டுறவு வங்கிகளில் மக்கள் நம்பிக்கைகொள்ள வேண்டுமாயின், அவர்களின் வைப்புத் தொகைகளுக்குக் காப்பீடு அளிக்கும் முறையை அமலாக்க வேண்டும். தேசியக் கூட்டுறவு வங்கியொன்றைத் தொடங்குவதும் நல்லது.

கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் ஒழுங்காகவும் தவறுமலும் தணிக்கை செய்யப்படவேண்டும்; தவறு ஏற்பட்டால் சம்பந்தப் பட்டவர்களுக்கு உரிய தண்டனை கொடுக்கப்பட வேண்டும் எனவே, தணிக்கை சம்பந்தப்பட்ட துறைக்கு அதிக அதிகாரம் தேவை. கணக்கு வழக்குகள் எவ்விதப் பாரபட்சமுமின்றித் தணிக்கை செய்யப்பட வேண்டுமாயின், அப் பணியை அரசாங்க அதிகாரிகளே மேற்கொள்ளுதல் வேண்டும்; அப்போதுதான் அவர்கள் கூட்டுறவுப் பதிவாளரைப்பற்றிக் கவலைப்படாமல் தணிக்கை செய்யமுடியும். நாளடைவில் தணிக்கை செய்யும் பொறுப்பைக் கூட்டுறவுத் தணிக்கை யூனியன்களே மேற் கொள்ளலாம்.

கூட்டுறவு இயக்கம் மக்களின் இயக்கமாகவே இருக்கவேண்டு மாளுல், கூட்டுறவு சம்பந்தப்பட்ட கல்வியையும் பயிற்சியையும் தீவிரமாக்குதல் அவசியம். இதற்காக மாவட்ட அடிப்படையில் கூட்டுறவு யூனியன்களை ஏற்படுத்தி, அவற்றிற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் அதிகாரங்களையும் கொடுப்பது அவசியம். நம் நாட்டில் கல்வியைப் பரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களும் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் கல்வியைப் போதிக்கும் அமைப்புகளும் இணைந்து செயல்பட்டால் நன்று.

12. கூட்டுறவு விற்பனை பற்றிய குழு

கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கங்களின் அமைப்பைப் பற்றியும், அவை நல்ல முறையில் துரிதமாக வளர்வதற்குரிய வழி

வகைகளைப்பற்றியும் ஆராய்ந்து ஆலோசனை கூறுவதற்கென்று 1964-ல் இக் குழு அமைக்கப்பட்டது. இக் குழு 1966-ல் தன் அறிக்கையைத் தாற்காலிகமாக அளித்துள்ளது. இக் குழுவின் பரிந்துரைகளில் முக்கியமானவை வருமாறு :

(i) இனிமேல் அமைக்கப்படும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்க ளெல்லாம் மாநில மட்டத்தில் மாநிலச் சங்கங்களைக்கொண்ட தாகவும் கீழ்மட்டத்தில் தொடக்கச் சங்கங்களைக் கொண்டதாகவும் தான் இருக்கவேண்டும். மாநில விற்பனைச் சங்கம் மாவட்டங்களி லெல்லாம் கிளைச் சங்கங்களை ஆரம்பிக்கலாம்.

(ii) விற்பனை செய்யக்கூடிய அளவுக்கு உபரியாக விளைச்சலைப் பெறும் விவசாயிகள்தாம் சங்கங்களின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

(iii) கிராம அடிப்படையிலுள்ள ஒவ்வொரு தொடக்கநிலைச் சங்கத்திற்கும் ரூ. 2 இலட்சம் மூலதனமாவது தேவைப்படும்; எனவே, ஒவ்வொரு சங்கத்தின் பங்கு மூலதனத்திற்கும் அரசாங்கம் ரூ. 1 இலட்சம் அளிக்கவேண்டும்.

(v) ஸ்டேட் பாங்கு கடன் கொடுக்கும்போது கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு முதலில் கடன் கொடுத்துவிட்டு, பிற்பாடு தான் மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

(v) அரசாங்கம் கொள்முதல் செய்யும் விவசாயப் பொருள் களைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிடமிருந்தே கொள்முதல் செய்யவேண்டும். ஏற்றுமதி செய்வதற்காக விவசாயப் பொருள் களைக் கொள்முதல் செய்யும் அரசாங்க வர்த்தகக் கழகம் (State Trading Corporation) இச் சங்கங்களிடமிருந்துதான் அவற்றை வாங்கவேண்டும். இந்திய உணவுக் கழகம் (Food Corporation of India) தானிய வகைகளையும் இதர விவசாயப் பண்டங்களையும் மாநில அடிப்படையில் அமைக்கப்படும் விற்பனைச் சங்கங்களிட மிருந்தே கொள்முதல் செய்ய வேண்டும்.

(vi) விவசாயிகளுக்கு வேண்டிய இரசாயன உரங்களை யெல்லாம் நல்ல முறையில் இயங்கிவரும் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகவே விநியோகிக்க வேண்டுமென்று இரசாயனக் குழு (சிவராமன் குழு) சிபாரிசு செய்திருப்பதை இக் குழுவும் ஏற்றுக் கொண்டு, அதை வலியுறுத்தியுள்ளது.

(vii) புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட தரமான விதைவித்து களைக் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகத்தான் விவசாயி

களுக்கு விநியோகிக்கவேண்டும். அதேபோல், அதிக ஆபத்தில்லாத பூச்சிகொல்லி மருந்துகளையும் அவற்றைப் பயன்படுத்த உபயோகிக்கும் கருவிகளையும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவே விநியோகம் செய்யவேண்டும்.

(viii) அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குட்பட்டுள்ள இரும்பு, எஃகு, சிமெண்ட் ஆகிய பொருள்கள் விவசாயிகளுக்குத் தேவைப் படும்போது, அவற்றை விற்பனை செய்யும் பொறுப்பை மாநில மட்டத்திலுள்ள விற்பனைச் சங்கங்களிடமே ஒப்படைக்க வேண்டும். அப்போதுதான் கிராம மட்டத்திலுள்ள விற்பனைச் சங்கங்கள், சேவைச் சங்கங்களின் வாயிலாக அவற்றை விவசாயிகளுக்கு விற்பது எளிதாக இருக்கும்.

மூன்றும் ஐந்தாண்டுத்திட்ட முடிவில் இருந்த நிலை

1966ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மொத்தம் 3,46,185 கூட்டுறவுச் சங்கங்கள் நம் நாட்டில் இருந்தன. இவற்றில் கடன் சங்கங்கள் மட்டும் 2,14,012; மற்றச் சங்கங்கள் 1,32,173. இச் சங்கங்களிலெல்லாம் மொத்தம் 51,888,845 பேர் உறுப்பினர்களாக இருந்தனர். கடன் சங்கங்களில் 35,595,000 பேரும், ஏனையவற்றில், 16,293,845 பேரும் உறுப்பினர்களாக இருந்தனர். நாட்டிலிருந்த எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களின் நடப்பு மூலதனம் ரூ. 2,800 கோடி. இதில் கடன் சங்கங்களின் மூலதனம் மட்டும் ரூ. 2,152 கோடி; ஏனையவற்றின் மூலதனம் ரூ. 648 கோடி.

விவசாயக் கடன் சங்கங்கள்

நம் நாட்டில் கடன் சங்கங்கள்தாம் அதிகம் 1960-61-ல் மொத்தம் 2·12 இலட்சம் தொடக்கக் கடன் சங்கங்கள் இருந்தன; ஆனால் 1965-66-ல் இவற்றின் எண்ணிக்கை 1,91,904 ஆகக் குறைந்துவிட்டது. மிகச் சிறிய கூட்டுறவுச் சங்கங்களையெல்லாம் நல்லமுறையில் இயங்கி வந்த சங்கங்களோடு இணைத்து விட்டதால் தான் இவற்றின் எண்ணிக்கை குறைந்தது. இக் கடன் சங்கங்கள் முறையே உத்தரப்பிரதேசத்திலும், மகாராட்டிரம், பஞ்சாப் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில்தாம் அதிகமாக உள்ளன விவசாயக் கடன் சங்கங்களின் எண்ணிக்கை குறைந்துவிட்ட போதிலும் அவற்றின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரித் துள்ளது குறிப்பிடத்தக்கது. 1960-61-ல் 17 மில்லியன் பேர் தான் உறுப்பினர்களாக இருந்தனர்; ஆனால் 1965-66-ல் இது 26 மில்லியனாக உயர்ந்துள்ளது. 1966-67-ல் உறுப்பினர்களின் எண் ணிக்கை 27·2 மில்லியனாக அதிகரித்துள்ளது. மேலும், 1965-66-ல்

11 மில்லியன் உறுப்பினர்கள்தாம் இச் சங்கங்களிடமிருந்து கடன் பெற்றிருப்பதாக அறிய வருகிறோம். 1966 ஜூன் மாதக் கணக்குப் படி தொடக்க நிலை விவசாயக் கடன் சங்கங்களின் நடப்பு மூல தனம் ரூ. 546 கோடி; பங்கு மூலதனம் ரூ. 115 கோடி. இவற்றின் மொத்த வைப்புத் தொகை 1955-56-ல் ரூ. 3 கோடி தான்; இது 1960-61-ல் ரூ. 14·6 கோடியாகவும், 1965-66-ல் ரூ. 35·3 கோடியாகவும் அதிகரித்துள்ளது. 1967 ஜூன் 30ஆம் நாள் இவற்றின் வைப்புத் தொகை மேலும் அதிகரித்து, ரூ. 46 கோடியை அடைந்துவிட்டது. 1960-61-ல் இச் சங்கங்கள் வழங்கிய கடன் ரூ. 200 கோடிதான்; ஆனால் 1965-66-ல் இது ரூ. 427 கோடியாக அதிகரித்துவிட்டது.

1966 ஜூன் 30ஆம் நாள் நம் நாட்டில் மொத்தம் 346 மத்திய கூட்டுறவு வங்கிகள் இருந்தன; இவற்றில் 2,58,166 சங்கங்களும் 1,03,900 தனிப்பட்டவர்களும் உறுப்பினர்களாக இருந்தனர். இவ் வங்கிகளின் நடப்பு மூலதனம் ரூ. 584 கோடியாக இருந்தது. மகாராட்டிர மாநிலத்திலிருந்த மைய வங்கிகள்தாம் அதிக அளவு நடப்பு மூலதனம் (ரூ. 133 கோடி) கொண்டிருந்தன; அதையடுத்து குஜராத் (ரூ. 71 கோடி), உத்தரப்பிரதேசம் (ரூ. 65 கோடி), மத்தியப்பிரதேசம் (ரூ. 59 கோடி), தமிழ்நாடு (ரூ. 55 கோடி) ஆகிய மாநில வங்கிகள் அதிக அளவு நடப்பு மூலதனம் கொண் டிருந்தன. 1966-ல் இவ் வங்கிகளிடமிருந்த வைப்புத் தொகை ரூ. 236 கோடிக்கு அதிகரித்துள்ளது. அடுத்து, 1965-66-ல் மொத்தம் 22 மாநில மைய வங்கிகள் நம் நாட்டில் இருந்தன. இவற்றில் 12,918 கூட்டுறவு வங்கிகளும் தனிப்பட்டவர்கள் 8,000 பேரும் உறுப்பினர்களாக இருந்தனர். இவற்றின் நடப்பு மூலதனம் ரூ. 390 கோடியாகவும், வைப்புத் தொகை ரூ. 147 கோடியாகவும் இருந்தது.

இதரக் கடன் சங்கங்கள்

1966 ஜூன் 30ஆம் நாள் நகர்ப்புற வங்கிகள், தொழிலாளர் கடன் சங்கங்கள் போன்ற இதரக் கடன் சங்கங்கள் மொத்தம் 13,449 இருந்தன. இவற்றின் உறுப்பினர்களாக 6·5 மில்லியன் பேர் இருந்தனர்; நடப்பு மூலதனம் ரூ. 275 கோடியாகவும், வைப்புத் தொகை ரூ. 177 கோடியாகவும் இருந்தது. இவ் வைப்புத் தொகையில் சுமார் 75 சதவீதம் மகாராட்டிரச் சங்கங்களில் இருந்தது. அடுத்து, வங்காளத்தில் ரூ. 45 கோடியும், தமிழ் நாட்டில் ரூ. 25 கோடியாகவும் இருந்தன.

நிலவள வங்கிகள் (Land Development Banks)

1966 ஜூன் 30ஆம் நாள் முடிய நம் நாட்டில் மொத்தம் 673 தொடக்க நிலை அடைமான வங்கிகள் இருந்தன. இவற்றில் மொத்தம் 1.8 மில்லியன் பேர் உறுப்பினர்களாக இருந்தனர். இவை கொண்டிருந்த நடப்பு மூலதனம் ரூ. 137 கோடியாகும். உறுப்பினர்களுக்கு இவ் வங்கிகள் கொடுத்திருந்த கடன் ரூ. 46 கோடி. குறித்த தவணைப்படி வராக் கடன் ரூ. 4·4 கோடிதான்.

சந்தையிடுகைச் சங்கங்கள்

விவசாயக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் நல்ல முறையில் வளர்ச்சி பெற்றுள்ளன. மூன்றும் ஐந்தாண்டுத்திட்ட இறுதியில் சுமார் 3,198 தொடக்க விற்பனைச் சங்கங்களும், 155 மத்திய விற்பனைச் சங்கங்களும், 21 மாநிலச் சங்கங்களும் 1 தேசியக் கூட்டிணைப்பும் இயங்கி வந்தன. தொடக்க நிலைச் சங்கங்களில் மட்டும் சுமார் 20,41,346 விவசாயிகள் உறுப்பினர்களாக இருந்தனர். இச் சங்கங்களின் பங்கு மூலதனம் ரூ. 18·7 கோடியாகவும் காப்பு நிதியும் இதர நிதிகளும் ரூ. 9 கோடியாகவும் இருந்தது. இவை வைத்திருந்த வைப்புத் தொகை ரூ. 5·7 கோடியாகும்; பெற்ற கடனோ ரூ. 30 கோடி. 1966-ல் மட்டும் இச் சங்கங்கள், சுமார் ரூ. 309 கோடி மதிப்புள்ள விவசாயப் பொருள்களை விற்பனை செய்திருக்கின்றன. அவற்றில் நெல்தான் அதிகமாக விற்கப்பட்டிருக்கிறது. அதாவது, ரூ. 34 கோடிக்கு நெல், ரூ. 44 கோடிக்கு இதர உணவுப் பொருள்கள், ரூ. 6 கோடிக்கு எண்ணெய் வித்துகள், ரூ. 18 கோடிக்குப் பருத்தி விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன.

கூட்டுறவு ஆலைகள்

1965-66-ல் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் 78 இருந்தன. இவற்றில் 51 ஆலைகள் சர்க்கரை உற்பத்தியைத் தொடங்கி விட்டன. நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மொத்த சர்க்கரையில் மூன்றில் ஒரு பகுதி கூட்டுறவு ஆலைகளால் உற்பத்தி செய்யப்படுகிறது. சர்க்கரை ஆலைகளைத் தவிர, 155 பஞ்சாலைகளும், 142 அரிசி ஆலைகளும், 298 எண்ணெய் ஆலைகளும், காய்கறி, பழங்களைப் பக்குவப்படுத்த 22 ஆலைகளும் கூட்டுறவு முறையில் இயங்கி வந்திருக்கின்றன.

கூட்டுறவுத் தொழில் சங்கங்கள்

1966-ல் 12,947 தொடக்க நிலைக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் இருந்தன. இவை மாவட்ட நிலையில் 109 கூட்டமைப்புச்

சங்கங்களையும் 20 மாநிலக் கூட்டமைப்புகளையும் கொண்டிருந்தன. 13 இலட்சம் நெசவாளர்கள் இவற்றில் உறுப்பினர்களாக இருந்தனர். இவற்றின் நடப்பு மூலதனம் ரூ. 34 கோடியாகும். இதில் ரூ. 13 கோடி சொந்த மூலதனம்; எஞ்சியது கடனாக வாங்கப்பட்டிருந்தது. 1966-ல் இச் சங்கங்கள் ரூ. 53 கோடி மதிப்புள்ள துணிமணிகளை உற்பத்தி செய்தன. நெசவாளர் சங்கங்களைத் தவிர ஏனைய தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் மொத்தம் 34,950 இருந்தன. இவற்றில் 45 சதவீதம் வெறும் பெயரளவில் மட்டுமே இருந்தன. நல்ல முறையில் இயங்கிவந்த சங்கங்களில் சுமார் 12 இலட்சம் உறுப்பினர்கள் இருந்தனர்.

இவையன்றி, 63 கூட்டுறவு நூற்பாலைகளும் இயங்கி வந்தன. இவ் வாலைகளில் சுமார் 8·4 இலட்சம் கதிர்கள் இருந்தன. சுமார் ரூ. 7·5 கோடி மதிப்புள்ள நூல் உற்பத்தியை இவ்வாலைகள் செய்திருக்கின்றன.

மற்றவை

மேலும், மூன்றாவது ஐந்தாண்டுத்திட்ட இறுதியில் 5,077 கூட்டுறவுப் பண்ணைகளும், 1,558 நீர்ப்பாசனச் சங்கங்களும், 3,358 கூட்டுறவு மீன்பிடிப்புச் சங்கங்களும், 13,077 கூட்டுறவுப் பண்டகசாலைகளும், 11,758 மனைச் சங்கங்களும் இயங்கி வந்தன.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டம்

திட்டக் குழுவினர் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் கூட்டுறவு இயக்கத்திற்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர். கூட்டுறவு நிறுவனங்களும் சங்கங்களும் வளர்வதற்கும் விரிவடைவதற்கும் வேண்டிய வாய்ப்பினைத் திட்டக் குழுவினர் அதிகரித்துள்ளனர். அரசாங்கமும் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தாராளமாக நிதி உதவிசெய்து வருகிறது. அதோடு, கூட்டுறவு அமைப்பைச் செம்மைப்படுத்தவும் கூட்டுறவின் பணியாளர்களுக்குரிய பயிற்சியை அளிக்கவும் உதவிசெய்து வருகிறது. பொருளாதார வளர்ச்சியைத் துரிதமாய் அடைவதும், அதே சமயத்தில் பொருளாதார நிலையை உறுதிப்படுத்துவதும்தான் நான்காம் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இக் குறிக்கோளை அடையும் விதத்தில் கூட்டுறவு இயக்கமும் வழி நடத்தப்படும். அதாவது விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதற்கு விவசாயக் கூட்டுறவுகளை மட்டுமன்றி, ஏனைய கூட்டுறவு உற்பத்திமுறைகளையும் ஊக்குவித்து, அதன் வழியாக நாட்டின் மொத்த உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதோடு,

விலைவாசிகளை நிலையாக வைத்திருப்பதற்கு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களையும் விரிவாக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக விவசாயிகளுக்கு வேண்டிய நிதி வசதியைத் தாராளமாக்குவதற்கு வழி செய்யப் பட்டு வருகிறது. விவசாயக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதைவிட, பெரும்பாலான விவசாயிகள் இச் சங்கங்களில் பங்குகொள்ளும்படி செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. நான்காம் திட்டம் முடிவடைவதற்குள் நாட்டிலுள்ள விவசாயிகளில் 60 சதவீதம் பேராகிலும் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்து பயனடைய வேண்டுமெனத் திட்டக்குழு முயற்சித்து வருகிறது. 1973-74ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் ரூ. 750 கோடியாவது விவசாயிகளுக்குக் சடனாகக் கொடுக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது நடைபெறும் வகையில் தொடக்கநிலைச் சங்கங்கள் தத்தம் வைப்புகளை அதிகரிப் பதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், 1966-67-ல் மொத்தம் ரூ. 46 கோடியாக இருந்த இவ் வைப்புத் தொகை 1973-74-ல் ரூ. 70 கோடியாகப் பெருக வேண்டுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், கூட்டுறவு மத்திய வங்கிகளும் உச்சிவங்கிகளும்கூடத் தம் வைப்புத் தொகையை ரூ. 410 கோடியி லிருந்து (1966-67) ரூ. 870 கோடியாகப் (1973-74) பெருக்க ஏற்பாடு செய்ய வேண்டுமெனத் திட்டக்குழு நிர்ணயித்துள்ளது. இதே போன்று கூட்டுறவு நிலவள வங்கிகள் கொடுத்துவரும் நீண்ட காலக் கடனும் ரூ. 700 கோடிக்கு அதிகரிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிற்க, கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களின் வாயிலாக விற்பனையாகும் விவசாயப் பொருள்களை அதிகரிப்பதற்கும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. 1973-74-ல் ரூ. 900 கோடி மதிப்புள்ள விவசாயப் பொருள்கள் கூட்டுறவுச் சந்தை வாயிலாக விற்பனை செய்யப்பட வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதோடு, மாநிலம்விட்டு மாநிலம் விற்பனையாகும் விவசாயப் பொருள்கள் குறைந்தபட்சம் ரூ. 25 கோடியாவது கூட்டுறவின் வாயிலாகச் செய்யப்பட வேண்டுமென்றும், ஏற்றுமதியாகும் விவசாயப் பொருள்களை ரூ. 10 கோடிக்கு அதிகரிக்க வேண்டுமென்றும் திட்டக் குழுவினர் எதிர்பார்க்கின்றனர்.

ஐந்தாண்டுத் திட்டங்களினால் கூட்டுறவு இயக்கம் எவ்வளவு துரிதமாக வளர்ந்துள்ளது என்பதை பின்வரும் பட்டியல்களி லிருந்து அறிந்துகொள்ளலாம்.

1. எல்லாவகைக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிப் பட்டியல்

	1950–51	1955–56	1960–61	1965–66	1968–69
1	2	3	4	5	6
1. சங்கங்களின் எண்ணிக்கை (இலட்சம்)	1·81	2.40	3·32	3·46	3·3
2. தொடக்க நிலைச் சங்க உறுப்பினர் எண்ணிக்கை (கோடி)	1·37	1·76	3·42	5·18	5·70
3. பங்கு மூலதனம் (கோடி ரூபாய்)	45·46	77·16	221·57	441	633
4. நடப்பு மூலதனம் (கோடி ரூபாய்)	275·35	468·82	1312·99	2,800	4·089

2. விவசாயக் கடன் சங்கங்களின் வளர்ச்சி

1	1950-51 2	1955-56 3	1960-61 4	1965-66 5	1970-71 6
I. தொடக்க விவசாயக் கடன் சங்கங்கள்					
1. எண்ணிகை (இலட்சம்)	1·05	1·60	2·12	1·94	1·62
2. பயன்பெறும் கிராமங்கள் (சதவீதம்)	—	—	75	90	94
3. உறுப்பினர்கள் (இலட்சம்)	44·8	77·91	170·41	266·23	325·52
4. பயன்பெறும் கிராம மக்கள் (சதவீதம்)	7	12	24	33	36
5. ஒவ்வொரு சங்கத்திலுமிருந்த சராசரி உறுப்பினர்கள்	45	49	80	137	201
6. பங்கு மூலதனம் (கோடி ரூபாய்)	7·61	16·80	57·75	116·24	200
7. வைப்புத் தொகை (கோடி ரூபாய்)	4·28	7·04	14·59	35·32	69·11
8. கொடுத்த கடன் (கோடி ரூபாய்)	22·90	49·62	202·75	345·50	564·38
9. சங்கத்தின் சராசரி பங்கு மூலதனம் (ரூபாய்)	727	1,051	2,722	5,996	12,324
10. சங்கத்தின் சராசரி வைப்புத்தொகை (ரூபாய்)	408	441	688	1,822	4,251
11. சங்கங்கள் சராசரி கொடுத்த கடன் (ரூபாய்)	1,983	3,102	9,558	17,770	34,762

12. உறுப்பினரின் சராசரிப் பங்கு மூலதனம் (ரூபாய்)	17	22	34	44	61
13. உறுப்பினரின் சராசரி வைப்புத் தொகை (ரூபாய்)	9·7	9·0	8·6	13·3	21
14. உறுப்பினருக்குக் கொடுத்த சராசரிக் கடன் (ரூபாய்)	44	64	119	129	173
15. தவணை தாண்டிவிட்ட கடன் (சதவீதம்)	22	25	20	29	39
II. நில அடைமான வங்கிகள்					
1. வங்கிகளின் எண்ணிக்கை					
(அ) மைய வங்கிகள்	—	5	9	18	19
(ஆ) தொடக்க வங்கிகள்		286	302	673	865
2. தனிப்பட்டோருக்கு ஏற்கெனவே கொடுத்துள்ள கடன் (கோடி ரூபாய்)	—	—	—	—	—
(அ) மைய வங்கிகள்	—	—	—	—	—
(ஆ) தொடக்க வங்கிகள்	6·59	13·47	37·74	166.86	627·80
3. வாரக் கடன் (சதவீதம்)	0·1	8·8	3·3	1·9	1·2
4. அந்தந்த ஆண்டு கொடுக்கப்பட்ட கடன் (கோடி ரூபாய்)	1·29	2·86	11·62	56·41	166·77
5. வரவேண்டிய கடன் பத்திரங்களின் தொகை (கோடி ரூபாய்)	6·75	14·94	36·53	178·37	279·42

நான்காம் ஐந்தாண்டுத் திட்டம்

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவின் வளர்ச்சி எவ்வாறு திட்டமிடப்பட்டுள்ளது என்பதைப் பின்வரும் அதிகாரங்களில் ஆங்காங்கே காணலாம். இத் திட்டத்தில் கூட்டுறவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியும் அடையவேண்டிய சாதனை இலக்குகளும்வருமாறு:

மாநிலங்கள்		குறுங் கால, இடைக் காலக் கடன்	நீண்ட காலக் கடன்	கூட்டுறவு விவசாயச் சங்கங்களின் விற்பனை	விநியோகிக் கப்படவேண் டிய உரம்	நகர்ப்புறங் களில் கூட் டுறவுச் சில் லறை விற் பனை	நிதி ஒதுக்கீடு
		(கோடி ரூபாய்)					
ஆந்திரா	...	40	80	40	50	35	7·00
அசாம்	....	3	4	25	3	4·5	4·64
பீகார்	...	45	40	17	45	13	7·20
குஜராத்	....	75	90	80	50	18	5·00
ஹரியாணு	....	20	15	20	40	2·5	4·40
ஜம்மு, காஷ்மீர்	....	7	3	5	13	1·8	2·90
கேரளா	....	35	10	18	15	25	2·50
மத்திய பிரதேசம்	...	70	45	40	40	14	14·00
மகாராட்டிரம்	...	165	100	200	65	56	16·00
ஒரிஸ்ஸா	...	22	18	10	15	5	4·00
பஞ்சாப்	...	85	45	100	85	6	6·00
ராஜஸ்தான்	...	30	17	10	15	7·5	8·20
தமிழ்நாடு	...	75	60	35	45	50	12·80
உத்தரப் பிரதேசம்	...	85	100	200	65	12	11·00
மேற்கு வங்காளம்	..	18	13	20	10	30	6·71
நாகாலாந்து	...	—	—	—	—	1·7	0·57
மத்திய அரசு பகுதிகள்	....	5	3	10	4	20	1.00
ஒமசூர்	....	45	60	55	40	70	10.00
மொத்தம்	...	750	703	900	800	400	118·92

மாநிலக் கூட்டுறவு அமைச்சர்களின் மாநாடு (1969)

1969ஆம் ஆண்டில் பெங்களூரில் நடந்த மாநிலக் கூட்டுறவு அமைச்சர்களின் மாநாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் குறைபாடுகள் விவாதிக்கப்பட்டன; அதோடு அவற்றை நீக்கி, இவ்வியக்கத்தைச் சீரோடும் சிறப்போடும் வளர்ப்பதற்கு வழிமுறைகளும் ஆராயப்பட்டன. இம் மாநாட்டின் பரிந்துரைகளும் முடிவுகளும் பின்வருமாறு: (1) கூட்டுறவுச் சங்கங்கள் கடனளிக்கும்போது, உற்பத்தியைப் பெருக்கும் குறிக்கோளுடனும், பாரபட்சமின்றியும் அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும்; அதோடு, ஏழை, எளிய விவசாயிகள் அதிகமாகக் கடன்பெறும் வகையில் கடனுக்குரிய ஆவணங்கள், தனிப்பட்ட ஒருவருக்கு எவ்வளவு கடன் தரலாம் என்பதைத் தீர்மானிக்கும்போது கால தாமதம் செய்யலாகாது. (2) தொடக்கக் கடன் சங்கங்களில் நலிவுற்றிருப்பனவற்றை ஊக்குவிப்பதோடு, வலுவற்ற நிலையிலுள்ள மத்திய வங்கிகளுக்கும் புத்துயிர் அளிக்கவேண்டும். (3) வராக் கடனை விரைவில் பெறுவதற்கு அவசர நிலைமையின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். (4) சிறு விவசாயிகளும் நிலவள வங்கிகளிடமிருந்து கடன்பெற ஏற்பாடு செய்யவேண்டும். (5) கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களுக்கும் பக்குவப்படுத்தும் சங்கங்களுக்கும் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள நிதி போதாது; இக் குறையை நிவர்த்திசெய்ய மத்திய அரசு முன்வர வேண்டுமென மாநாடு பரிந்துரைத்தது; அதோடு, இவ்வகைச் சங்கங்களுக்குத் தேவைப்படும் பணியாளர்களுக்கு அந்தந்தத் துறைக்குத் தேவையான பயிற்சியைக் குறுகிய காலத்தில் அளிக்கவேண்டும். (6) விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை விரிவாக்கும் திட்டத்திற்கு முக்கியத்துவம் தந்து, அவற்றிற்குத் தாராளமான நிதியை ஒதுக்கவேண்டும். (7) விவசாய விளைச்சலை அதிகரிக்கும் வகையில் கூட்டுறவுப் பண்ணைத் திட்டங்களை ஒருங்கிணைக்க முயற்சி செய்வது அவசியம். (8) கூட்டுறவுத்துறைப் பணியாளர்கள் திறமையுடன் பணிசெய்யும் வகையில் அவர்களுக்குகந்த பயிற்சி அளிப்பதோடு, அப்பயிற்சிக்கென்று போதுமான நிதியை ஒதுக்கவேண்டும்; அதோடு, கூட்டுறவுத் துறையில் கடன் சங்கம், சந்தையிடுகை, பக்குவப்படுத்தல் போன்ற பல்வேறு பிரிவுகளில் பணியாற்றும் பணியாளர்களுக்குப் பொதுவான அந்தஸ்தை அளிக்கும் வகையில் கூட்டுறவுச் சட்டங்களும் விதிமுறைகளும் விரைவில் திருத்தப்பட வேண்டும்.

திட்டகாலக் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்புகள்

நாடு சுதந்திரமடைந்த பின்னர், திட்டமிட்டுப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த விரும்புகின்றோம். ஜனநாயத்

திட்டத்தில் வெற்றிபெறுவதற்குக் கூட்டுறவு இயக்கம்தான் சிறந்த வழியாக ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார நிலையை மட்டுமன்றிச், சமூக வாழ்வையும் சீர்படுத்தி, புதியதொரு சகாப்தத்தை ஏற்படுத்துவதற்கும் கூட்டுறவு இயக்சம்தான் நல்வழி. எனவேதான், ஐந்தாண்டுத் திட்டங்களிலெல்லாம் கூட்டுறவு அமைப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஜனநாயக சோஷியலிசத்தை கூட்டுறவின் வாயிலாக அடையவும் முற்படுகிறோம்.

திட்டகாலத்தில் கூட்டுறவு இயக்கம் அடைந்துள்ள சிறப்பு களில் அரசாங்கப் பங்கு குறிப்பிடத்தக்கது. கூட்டுறவு ஸ்தாபனங் களிலெல்லாம் அரசு பங்கு கொள்கிறது. குறிப்பாக, கூட்டுறவுக் கடன் சங்க அமைப்புகளில் அரசாங்கத்தின் பங்கு அதிகரித்து வருகிறது. எனினும், கூட்டுறவு அலுவல்களில் அரசாங்கம் அதிகம் தலையிடாமல் கூட்டுறவுத் தத்துவங்களைப் பேணிக்காக்கிறது. அடுத்து, கூட்டுறவுமுறை நம் நாட்டிலுள்ள எல்லாத் துறை களிலும் புகுந்துவிட்டது. தனியார் நடத்தும் தொழில்களுக்கு இணையாகக் கூட்டுறவுத் தொழில்களும் வளரத் தொடங்கியுள்ளன. பல்லாண்டு செய்த முயற்சியின் விளைவாக, கூட்டுறவு இயக்கம் ஒழுங்கான முறையில் செம்மையாக அமைக்கப்பட்டுள்ளது. கடன் துறைக்கென்று உச்சி வங்கிகள் நாடெங்கிலும் அமைக்கப்பட் டுள்ளன. ஏனைய துறைகளுக்கும் மாநில மட்டத்தில் மட்டுமன்றி, தேசிய மட்டத்திலும் பல்வேறு அமைப்புகள் உருவாகியுள்ளன.

சுதந்திரத்திற்கு முன்னர், அரசாங்க அதிகாரிகள்தாம் கூட் டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தில் பெரும்பங்கு கொண்டிருந்தனர். ஆனல், இன்று நிர்வாகப் பொறுப்பை மக்களே ஏற்றுள்ள நிலைமை ஏற்பட்டுவிட்டது. குடியாட்சி அடிப்படையில் உறுப்பினர்களே கூட்டுறவு நிர்வாகத்தை மேற்கொண்டுள்ளனர். ஏனைய நாடுகளைப் போல் இந்தியாவும் கூட்டுறவு இயக்கத்தைச் செம்மையான வழியில் கொண்டுசெல்லும் காலம் வெகுதொலைவில் இல்லை.

17. கூட்டுறவுக் கடன் அமைப்பு முறை

கடன் வகைகள்

கூட்டுறவு இயக்கத்தில் உறுப்பினர்களுக்குக் கடனுதவி செய்யும் சங்கங்களும் நிறுவனங்களும் பல உள்ளன. அவை கடன் வழங்கும்போது, அதற்குரிய காரணங்களையும் காலத்தையும் அடிப்படையாகக் கொண்டே வழங்குகின்றன. எனவே, காலத்திற்கும் காரணத்திற்குமேற்ப இக்கடனைப் பல வகைகளாகப் பிரிக்கலாம். காலத்தின் அடிப்படையில் குறுங்காலக் கடன், நீண்டகாலக் கடன், மத்திய காலக்கடன் என்று மூன்று இனங்களாகப் பாகுபடுத்துவதே வழக்கமாகிவிட்டது.

பயிர்த்தொழிலில் உழுதல், விதைவிதைத்தல், களையெடுத்தல், அறுவடைபோன்ற பல பருவங்கள் உள்ளன. இப் பருவத்திற்கேற்பக் கொடுக்கப்படும் கடன் பொதுவாகக் குறுங்காலக் கடனாகும். இதைச் சாகுபடிக்கடன் அல்லது விளைச்சல் கடன் (Crop loan) என்பர். குறுங்காலத்திற்கு மட்டும் வழங்கப்படும் இக் கடன் பலவகைப்படும். அவை முறையே :

(அ) சாகுபடி செய்யும் பயிருக்கேற்ப ஒவ்வோர் ஏக்கர் நிலத்திற்கும் தேவைப்படும் தொகை எவ்வளவு என்று நிர்ணயிக்கப்படுகிறது. விளைச்சலின் மதிப்பிற்கேற்ப இக் கடன் தொகை மாறுபடும். மழையை நம்பி சாகுபடி செய்யப்பட்டால், விளைச்சலின் மதிப்பில் $\frac{1}{4}$ பாகம்தான் கடனாகக் கொடுக்கப்படும். நீர் பாய்ச்சி சாகுபடியாகும் நிலத்தில் விளைச்சலின் மதிப்பில் $\frac{1}{3}$ பாகம் வரை கடன் தரப்படும்.

(ஆ) ஓர் ஏக்கர் நிலத்திற்கு எவ்வளவு உரம், மருந்து, விதைவித்து தேவைப்படுகிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு அதற்கென்றும் கடன் வழங்கப்படுகிறது.

(இ) விதைவிதைத்தல், மருந்து தெளித்தல், உரம் வைத்தல் போன்ற பணிகளைச் செய்யக் கூலியாள்களை அமர்த்த நேரிட்டால், அவர்களுக்குச் செலுத்தவேண்டிய கூலியும் ரொக்கப் பணமாகக் கடன் தரப்படுகிறது. இக் கடன் பொதுவாக இரண்டாவது இனத்திற்காகக் கொடுக்கப்படுவதில் பாதிக்குமேல் வழங்கப்படுவதில்லை.

(ஈ) குடும்பச் செலவுக்கென்றும் கடன் ரொக்கமாக வழங்கப்படுகிறது. இது, அதிகபட்சம் ரூ. 50 மட்டுமே தரப்படுகிறது.

(உ) முந்திய ஆண்டில் கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கங்களின் வாயிலாகத் தம் விளைபொருள்களை விற்றிருந்தால், அவ் விற்பனைத் தொகையில் 5 முதல் 20 சதவீதம்வரை பிறிதொரு கடனும் ரொக்கமாக வழங்கப்படுகிறது.

குறுங்காலக் கடன் என்பது பொதுவாக 1 ஆண்டிற்கு மட்டுமே தரப்படுகிறது. தென்னைபோன்ற பயிர்கள் பலன்தர 1 ஆண்டிற்குமேல் ஆகும். எனவே, அவ்வகையான சாகுபடிக்கு மட்டும் இக்கடன் 15 மாதங்கள்வரை நீடிக்கப்படுகிறது. விளைச்சல் திட்டவட்டமாக எவ்வளவு இருக்கும் என்பதை மதிப்பீட்டு அதற்கேற்பத்தான் இக்கடனை வழங்க வேண்டுமென மேத்தா குழு சிபாரிசு செய்துள்ளது. ஒரிஸ்ஸா, மத்திய பிரதேசம், கேரளா போன்ற மாநிலங்களில் இவ்வகைக் கடன்கூட நில அடைமானத்தின் பேரில்தான் கொடுக்கப்படுகிறது. பீகாரிலும் மேற்கு வங்காளத்திலும் ரூ 200 வரைதான் இக்கடன் வழங்கப்படுகிறது; அதற்குமேல் தேவைப்படும் விவசாயிகள் தம் நிலத்தை அடைமானம் வைத்துத்தான் பெறமுடியும். அறுவடை செய்து, விளைபொருள்களை விற்றவுடன் இக்கடனை விவசாயிகள் திருப்பித் தந்துவிடவேண்டும்.

மத்திய காலக்கடன் என்பது பல்வேறு காரணங்களுக்காக அளிக்கப்படுகிறது. ஏற்கெனவே நிலத்தை யாரிடமாவது அடைமானம் வைத்திருந்தால், அதை அவரிடமிருந்து மீட்பதற்கும், நிலத்திற்குப் பாதை அமைத்தல்போன்ற அபிவிருத்தி வேலைக்கும், நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்துவதற்குக் கிணறு வெட்டல், பம்புசெட் அமைத்தல் போன்ற காரியங்களுக்கும், விவசாயத்திற்குத் தேவையான கால்நடைகள் வாங்குதல், இயந்திரங்கள், கருவிகள், போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கும், மாட்டுத்தொழுவம், பண்ணை வீடு முதலியன கட்டுவதற்கும், வேலி அமைத்தல், காய்கறித் தோட்டம் அல்லது பழத்தோட்டம் போடுவதற்கும் இக்கடன் தரப்படுகிறது. பால் பண்ணைகளை

அமைப்பதற்கும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் பங்கு பெறுவதற்கும்கூட மத்திய காலக்கடன் தரப்படுகிறது. இக் காரணங்களுக்காக மத்திய காலக்கடன் தரலாமென்று ரிசர்வ் பாங்கு அனுமதித்துள்ளது. எனினும், இடத்திற்கும் சூழ்நிலைக்கு மேற்ப மாநில அரசின் ஒப்புதலின் பேரில் வேறு சில காரணங்களுக்காகவும் கூட்டுறவு நிறுவனங்கள் இக்கடனை வழங்கலாம். மத்திய காலக் கடன் எந்தக் காரியத்திற்காக அளிக்கப்படுகிறதோ அந்தக் காரியம் நீடித்துப் பயன்தரும் வரை காலவரம்பு கொடுக்கப் படுகிறது; எனினும், 5 ஆண்டுகளுக்குள் இக்கடனைப் பெறுவோர் திருப்பித் தந்துவிட வேண்டுமென்பது வழக்கமாகி விட்டது. கூட்டுறவுக் கடனைப்பற்றி ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட மேத்தா குழுவினரின் பரிந்துரையின்படி, மத்தியகாலக் கடன் திரும்ப வந்துவிடும் என்ற உறுதியின்பேரில் ரூ. 500 வரைதான் எவருக்கும் கடன் கொடுக்கவேண்டும்; ரூ. 1,000க்குமேல் இக் கடன் தேவைப்படுவோர் தம் நிலத்தை அடைமானம் வைத்துத்தான் பெறவேண்டும். இப் பரிந்துரை 1963 முதல் மாற்றப்பட்டு விட்டது. அதாவது, உறுதியின்பேரில் ரூ. 1,000 வரை கடன் தரப் பட்டு வருகிறது. டிராக்டர், பம்புசெட் போன்ற கருவிகளை வாங்குவதற்கு விவசாயிகளின் நாணயத்தின் பேரில் ரூ. 3,500 வரை கடன் தரப்படுகிறது. இம் முறைப்படி சிறு விவசாயிகள் இக் கடனைப் பெறுவது கடினம். எனவே, சிறு விவசாயிகளின் நாண யத்தின் பேரில் ரூ. 2,000 வரை இடைக்காலக் கடன் வழங்கலா மென்று 1971-ல் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலக் கடன் தற்போது 10 முதல் 20 ஆண்டுகள் வரை தரப்பட்டு வருகிறது. நிலத்தின் அடைமானத்தின் பேரில்தான் இக்கடன் வழங்கப்படுகிறது. கிணறு வெட்டுதல், கிணற்றைச் சீர்படுத்தல், தண்ணீர் பாய்வதற்கேற்றாற்போல் நிலத்தைச் செம்மைப்படுத்தல், அடைமானத்திலிருந்த நிலத்தை மீட்டல், நில அபிவிருத்தி செய்தல், மாட்டுத்தொழுவம், பண்ணைமனை கட்டுதல், எண்ணெயில் இயங்கும் பம்புசெட் வாங்கல், டிராக்டர் போன்ற விலையுயர்ந்த இயந்திரங்களை வாங்குதல், கரும்பு வெட்டிச் சர்க்கரை, வெல்லம் போன்ற பண்டங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் கருவிகளை வாங்கல், நில ஒழுங்கிணைப்பிற்கென்று (Consolidation of holdings) அருகிலுள்ள நிலத்தைப் பெறுதல், பண்ணையாள்கள் நில உரிமைப் பத்திரங்களைப் பெற்று நில உடைமையாளர்களாக ஆவது, பிறரிடம் பட்ட கடனைத் தீர்த்து விடுவது போன்ற காரியங்களுக்காக இக்கடன் வழங்கப்படுகிறது

கூட்டுறவுக் கடன் நிறுவன அமைப்பு

கூட்டுறவு முறையில் கடன் வழங்குவதற்காக ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள நிறுவனங்களின் அமைப்பைக் கீழ்க் காணும் பட்டியலின் வாயிலாக எளிதாகப் புரிந்து கொள்ளலாம் †.

கூட்டுறவுக் கடன் இயக்கம்

- குறுங்கால, மத்திய காலக் கடன்
  - ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள மாநிலக் கூட்டுறவு வங்கிகள்.
    - மாவட்ட அடிப்படையில் மாவட்டக் கூட்டுறவு மைய வங்கிகள்.
      - கிராமங்களிலுள்ள தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்.
- நீண்டகாலக் கடன்
  - நில அடைமான மைய வங்கிகள்
    - தொடக்க நில அடைமான வங்கிகள்.

தனித்தும் இணைந்தும் இயங்கும் கூட்டுறவு நிறுவனங்கள்

கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் கீழ் மட்டத்திலுள்ள தொடக்கநிலைச் சங்கங்களில் தொடங்கி, உச்சி மட்டத்திலுள்ள மாநிலக் கூட்டுறவு மைய வங்கியில் முடிவடைகிறதென்பதை மேற்காணும் பட்டியல் எடுத்துக்காட்டுகிறது. கீழ் மட்டத்திலுள்ள கூட்டுறவுக் கடன் சங்கங்களும் வங்கிகளும் தனித்து, சுதந்திரமாக இயங்கலாம். அப்போது, இவை உச்சி மட்டத்திலுள்ள மாநில வங்கியால் கட்டுப்படுத்தப்படுவதில்லை. மாறாக, கீழ் மட்டத்திலுள்ளவை மேல் மட்டத்திலுள்ள வங்கிகளால் கட்டுப்படுத்தப்படுவதுண்டு. அப்போது தமக்குரிய அதிகாரங்களைத் தாமே வைத்துக்கொண்டு, ஏனையவற்றையெல்லாம் கூட்டாக அமைக்கப்பட்டுள்ள மேல் மட்ட நிறுவனங்களிடம் ஒப்படைத்து விடுகின்றன.

தனித்து இயங்கும் அமைப்பில் உச்சி நிலையிலுள்ள மாநில வங்கிகள்தாம் முதலில் தோன்றுகின்றன. பின்னர் மாவட்ட

ரீதியில் இவை தம் கிளைகளைத் தொடங்குகின்றன. அதிகாரங்கள் அனைத்தும் மாநில மைய வங்கியிடமே இருக்கும். மாவட்ட ரீதியிலுள்ள வங்கிகளின் கொள்கைகளையும் செயல்களையும் மாநில வங்கியே நிர்ணயிக்கிறது. தனித்து இயங்கும் இவ்வகை அமைப்பை உருவாக்குவது எளிது. குறிப்பாக, கூட்டுறவுக் கடன் இயக்கம் செயல்படும் பகுதி சிறிதாக இருந்தால் இம்முறையை எளிதாக அமைத்து விடலாம். அதிகாரங்கள் அனைத்தும் ஒரே இடத்திலிருப்பதால் கிளை வங்கிகள் அனைத்தும் ஒரே விதமான கொள்கைப்படி இயங்குமாறு செய்வது எளிது. அதிகாரம் அனைத்தும் ஒரே வங்கியிடம் இருப்பதுதான் நல்லது என நினைக்கும் மாநிலங்களிலும், சிறிய மாநிலங்களிலும் இவ்வமைப்பு முறைதான் சிறந்தது. இம் முறைப்படி அமைக்கப்படும் கூட்டுறவு இயக்கத்தை நிர்வாகம் செய்வதும் எளிது. ஆகையால்தான் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளிலெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கலெல்லாம் ஒருங்கிணைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. ஒருசில நாடுகளில் மேல்மட்ட அமைப்புகளுடன் இணைக்கப்பட்டுள்ள சங்கங்களையெல்லாம் அவற்றின் கிளைகளாக மாற்றி, கூட்டுறவு இயக்க அமைப்பையே ஒருங்கிணைத்து உறுதியானதோர் அமைப்பாக மாற்றியமைக்கும் முயற்சிகளும் நடைபெறத் தொடங்கிவிட்டன.

கூட்டிணைப்பு முறையில் ஒவ்வொரு சங்கமும் சுயமாக நடைபெறமுடியும். ஒவ்வொரு சங்கமும் தன்னிச்சைப்படி நிர்வகிக்கப்படுவதால் இடத்திற்கும் சூழ்நிலைக்கும் தகுந்தாற்போல் நிர்வாகம் நடைபெற வாய்ப்பு உண்டு. அதோடு ஒவ்வொரு சங்கமும் மற்றவையுடன் நல்ல முறையில் போட்டியிட்டு முன்னேறும் வாய்ப்பும் உள்ளது. மேலும், உறுப்பினர்களுக்கும் சங்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதோடு, சங்கத்திற்குத் தேவையான உதவிகளையெல்லாம் அந்தந்த ஊரிலுள்ள செல்வந்தர்களிடமிருந்து பெறவும் முடியும். இச்சங்கங்களெல்லாம் நல்ல முறையில் பணியாற்றி வந்துள்ளன. இக்கூட்டிணைப்பு முறைப் பற்றிக் கூட்டுறவுக் கடன் ஆய்வுக் குழுவும் பெருமையாகப் பேசியுள்ளது. ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்களும் மேல் மட்டத்திலுள்ளவற்றோடு இணைக்கப்பட்டிருப்பினும், ஒவ்வொன்றும் தனித்தனி நோக்கத்திற்காக அமைக்கப்பட்டிருப்பதால் அவை தனித்தனிச் சங்கங்கள் போலவேதான் இயங்கி வருகின்றன. கூட்டுறவின் நிர்வாக அதிகாரம் பரவலாக்கப்படுவதற்கும் அதன் குறிக்கோள்கள் நல்ல முறையில் நிறைவேற்றப்படுவதற்கும் இவ்வமைப்பு முறைதான் சிறந்ததென இக்குழு கூறியுள்ளது.

தொடக்கச் சங்கங்கள்

கிராம அடிப்படையில் கூட்டுறவுத் தொடக்கக் கடன் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் அந்தந்த கிராம மக்கள் தாம் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்களுக்குத் தேவையான பணத்தைப் பெற்று அவர்களுக்குக் கடனாக வழங்குவதுதான் இச் சங்கங்களின் முக்கியப் பணியாகும். கூட்டுறவு இயக்கத்திற்கு இச் சங்கங்கள்தாம் அடித்தளமாக விளங்குகின்றன. பொதுமக்களோடு நேரடியாகத் தொடர்புடையவையும் இச் சங்கங்கள்தாம்.

உயர்மட்டச் சங்கங்கள்

தொடக்கச் சங்கங்கள் தனித்தனியாக இயங்குவதை விட, ஒன்றுபட்டு கூட்டாக இயங்கினால் பல நன்மைகள் ஏற்படும். எனவே, இவையனைத்தும் ஒன்றுசேர்ந்து தத்தம் நிதி, திறமை, இதரச் சாதனங்களையெல்லாம் திரட்டி யூனியன்களையும், மைய வங்கிகளையும், உச்சி மட்ட வங்கிகளையும் அமைத்துக் கொண்டன. இந்த உயர்மட்ட அமைப்புகளனைத்தும் தம்மோடு இணைந்துள்ள யூனியன்களின் பணிகளுக்கு ஒத்தாசை புரிகின்றன. இந்நிறுவனங்கள் பொருளாதாரத் துறையிலும் கூட்டுறவுக் கல்வித்துறையிலும் சிறப்புமிக்க பல பணிகளை ஆற்றி வருகின்றன. கூட்டுறவுக் கல்வியைப் பரப்பிவருவதோடு, பொது அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பல காரியங்களைச் சாதித்து வருகின்றன. அதோடு தொடக்கச் சங்கங்களை மேற்பார்வையிட்டு, அவற்றின் கணக்கு வழக்குகளையெல்லாம் தணிக்கை செய்கின்றன.

பொருளாதாரத் துறையில் இந்த யூனியன்கள் செய்துவரும் பணிகளும் குறிப்பிடத்தக்கவை. தொடக்கச் சங்கங்களில் ஒரு சிலவற்றிற்கு உபரி நிதி இருக்கலாம்; மற்றவைகளுக்கு நிதி தேவைப்படலாம். எனவே, இந்த யூனியன்கள், சங்கங்களிடமுள்ள உபரி நிதியைச் சேர்த்து வேறு பல வழிகளிலும் நிதி திரட்டி, தேவைப்படும் சங்கங்களுக்குக் கொடுத்துதவுகின்றன.

கூட்டுறவு மத்திய வங்கிகள்

தொடக்கநிலைச் சங்கங்கள் ஒன்றுசேர்ந்து வங்கிகளை அமைக்கின்றன. அவற்றை யூனியன் வங்கி என வழங்குகிறோம். பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே இவ்வங்கியின் உறுப்பினர்களாகக் விளங்கும். அவ்வாறு கூட்டுறவு சங்கங்களை மட்டும் உறுப்பினர்களாக கொண்டு வங்கி அமைக்கப்பட்டால் அது ஒரு நிலையானதாகக் கருதப்படுகிறது. மாறாக, கூட்டுறவுச் சங்கங்களும் தனிப்பட்ட நபர்களும் உறுப்பினர்களாக இருந்து

அமைக்கும் மைய வங்கிகளும் உள. அப்படி சங்கங்களும் தனிப் பட்டவர்களும் சேர்ந்து அமைக்கும் வங்கி கலப்பு முறை வங்கி என வழங்கப்படுகிறது. எந்த முறையில் அமைக்கப்பட்டாலும் இவ்விரு வகை வங்கிகளின் பணிகளும் ஒன்றுதான்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பல யூனியன்களும் மைய வங்கி களும் இதுவரை அமைக்கப்பட்டு வந்தன. ஆனால், ஒரு மாவட்டத் திற்கு ஒரு யூனியனும் ஒரு மைய வங்கியும்தான் இருப்பது நல்லது என்பது தெளிவாகிய பின் மாவட்டத்திலுள்ள எல்லா மைய வங்கி களையும் இணைத்து ஒரே மைய வங்கியாக ஆக்கும் பணி நடை பெற்று வருகிறது. மாவட்டத்திலுள்ள மைய வங்கிதான் அந்த மாவட்டச் சங்கங்களுக்கெல்லாம் கடனுதவி செய்யும் நிறுவன மாகும். எனவே, கூட்டுறவு என்னும் கட்டடத்திற்கு இம் மைய வங்கிதான் மூலைக் கல்லாகும்.

மாநிலக் கூட்டுறவுத் தலைமை வங்கிகள்

மாவட்ட அடிப்படையில் அமைந்துள்ள மைய வங்கிகள் ஒன்றுசேர்ந்து தமக்கென ஒரு மாநில வங்கியை அமைக்கின்றன. இவ்வங்கிதான் உச்சநிலை வங்கி (Apex Bank) அல்லது உயர்மட்ட வங்கியாகும். மாநிலமனைத்திலும் இவ்வங்கிதான் பணிபுரிந்து வருகிறது. மாவட்ட மைய வங்கியில் பணிகளுக்கும் மாநில வங்கியின் பணிகளுக்கும் அடிப்படை வேறுபாடு ஏதுமில்லை. இவ்விரு வங்கிகளுமே தம்முடன் இணைந்துள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும்தாம் பணிபுரிந்து வருகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை, இம்மாநில மைய வங்கிகள்தாம் மாநிலத்தின் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ரிசர்வ் பாங்குக்கும் பாலம்போல் இயங்கி வருகின்றன. கூட்டுறவு பற்றிய பிரச்சினைகளையெல்லாம் இம்மாநில வங்கிதான் ஆராய்ந்து அவற்றிற்குத் தீர்வு காண்கிறது. மேலும், மாநிலத்தின் கூட்டுறவு இயக்கத்திற்கே இவ் வங்கிதான் இதயம் போல் இயங்கி வருகிறது.

கூட்டுறவு இயக்கத்தில் கடன் வழங்கும் துறைதான் முக்கியம். டென்மார்க்கில் இத்துறைதான் ராணியாக மதிக்கப்படுகிறது. நம் நாட்டிலும் இத்துறைதான் வேகமாக வளர்ச்சி பெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

விவசாயக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

நம் நாட்டுக் கிராம மக்களில் பெரும்பாலானோர் கடன்பட்டே வாழ்ந்து வந்திருக்கின்றனர். இன்றும்கூட அந்நிலை மாறவில்லை. கிராமங்களில் வாழும் குடியானவர்கள் மட்டுமன்றி, கைத்தொழி லாளர்களும் ஏனைய மக்களும்கூடக் கடன் வாங்கிப் பிழைக்க

வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. கிராம மக்களில் பெரும்பாலானோர் அறியாமையாலும் வறுமையாலும் வாடுகின்றனர். நகர்ப்புற சுக வாழ்க்கையை அறியாதோர் பலர் உள்ளனர். நாட்டின் முதுகெலும்பாக இருக்க வேண்டிய விவசாயிகள் பல வழிகளில் பின் தங்கியவர்களாகவேதாம் இன்றும் வாழ்கின்றனர். பெரும்பாலான விவசாயிகளுக்குப் பெயரளவில் மட்டுமே நிலம் உள்ளது. சின்னஞ்சிறு துண்டு நிலங்களாக இருக்கின்ற காரணத்தால் விஞ்ஞான முறையில் நவீனக் கருவிகளைப் பயன்படுத்திச் சாகுபடி செய்ய முடிவதில்லை. விளைச்சலும் அதிகமாக இல்லை. எனவே, ஏதோ வேறு வழியின்றி, வயிற்றுப் பிழைப்புக்காகத்தான் அவர்கள் பயிர்த் தொழிலைச் செய்து வருகின்றனர். அதிக மகசூலைப் பெற்று, சந்தையில் விற்று இலாபம் சம்பாதிக்கும் விவசாயிகள் மிகச் சொற்பம்தான். மேலும், கிடைக்கும் வருமானத்தில் சிறிதளவாயினும் சேமித்து வைக்கும் எண்ணமோ பழக்கமோ பெரும்பாலானோருக்குக் கிடையாது.

விவசாயம் இயற்கையின் சூதாட்டமாகவே இன்றும் சில இடங்களில் நடைபெறுகிறது. வானம் பார்த்த பூமிகள் இன்னும் ஏராளமாக உள்ளன. வானம் பொய்ப்பின் விவசாயிகளின் நிலை பரிதாபமாகிவிடுகிறது. விளைச்சலும் பல கொடுமைகளுக்கு ஆளாகி விடுவதுண்டு. நோய் நொடிகளால் பாதிக்கப்படுவது, வெள்ளத்தால் அழிந்து போவது, மண் அரிப்பால் நாசமாவது போன்ற நிகழ்ச்சிகள் விவசாயிக்கு இன்னல்களை ஏற்படுத்துகின்றன. மேலும், விவசாயியின் சொத்தாகப் பாவிக்கப்படும் எருதுகள் நோய்வாய்ப்பட்டு இறந்து விடலாம்; வீடும் வாசலும் புயலாலும் பேய் மழையாலும் இடிந்து வீழ்ந்து விடலாம். குழந்தை பிறந்தாலும் சரி, திருமணம் நடத்த வேண்டியிருந்தாலும் சரி, ஏன் வீட்டில் யாராவது இறந்துவிட்டால்கூட வழக்கப்படி அனுவசியச் செலவு செய்ய வேண்டியுள்ளது. இதனால் வரவு போதவில்லை. அதைச் சரிக்கட்டுவதற்குக் கடன் ஒன்றுதானே வழி. அவ்வழியில் விவசாயிகள் நடப்பதில் விந்தை ஏதுமில்லை. வட்டிக் கடைக்காரர்களிடம் கடன் வாங்கத் தொடங்கும் விவசாயி அவர்களிடம் அடிக்கடி போய் கடன் பெற வேண்டிய நிலை ஏற்படுகிறது. அவர்களின் பிடியிலிருந்து தப்பமுடியாமல் தம் பிள்ளைகளையும் கடனிலேயே விட்டு விட்டு மறைவதுதான் இந்திய விவசாயிகளின் பரம்பரைப் பழக்கம். தம் தந்தையைப் போலவே பிள்ளைகளும் கடன் தொல்லையைத் தாங்காமல் மேலும்மேலும் கடன் வாங்கியே வாழ்க்கை நடத்துகின்றனர். இதுதான் இந்திய விவசாயியின் சோகக் கதையாக இருந்து வந்தது; இன்றும் அக்கதை முடிய

வில்லை. ஏழை விவசாயிகள் எவ்வளவு கடன்பட்டு வாழ்கின்றனர் என்பதைப் பல முறை அரசாங்கம் கணக்கெடுத்துள்ளது. 1924ஆம் ஆண்டில் திரு. எம். எல். டார்லிங் அவர்களின் கணக்குப்படி சுமார் ரூ. 600 கோடிக்குக் கிராம மக்கள் கடன் பட்டிருந்தனர். 1930-ல் மைய வங்கி ஆய்வுக் குழுவின் கணக்குப்படி இக் கடன் ரூ. 900 கோடியாக மதிக்கப்பட்டது. 1935-ல் திரு. பி. ஜே. தாமஸ் அவர்கள் நமது நாட்டுக் கிராம மக்களின் கடன் ரூ. 1,200 கோடியென்று காட்டினர். 1937-ல் ரிசர்வ் பாங்கின் கணக்குப்படி இக் கடன் ரூ. 1,800 என அறியவருகிறோம். கிராமக் கடன் ஆய்வுக் குழுவின் அறிக்கைப்படி நம் நாட்டு விவசாயிகளுக்கு ஆண்டு தோறும் ரூ. 700 கோடி கடன் தேவைப்படுகிறது. இதையே ரூ. 1,050 கோடியாகப் பிறிதொரு குழுவினர் கணக்கிட்டுள்ளனர். இப் புள்ளிவிவரங்களெல்லாம் சரியானவைதாம் என்று ஒப்புக் கொள்ளமுடியாவிட்டாலும், ஒன்றை நாம் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். அதாவது நம் நாட்டுக் குடியானவர்களும் ஏனைய கிராம வாசிகளும் கடன்தொல்லையால் பெரும் அவதிப்பட்டு வந்திருக்கின்றனர்.

கிராம மக்களின் பொருளாதாரப் பெரும் சிக்கலான இக்கடன் தொல்லையைப் போக்குவதற்கு எத்தனையோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நம் நாட்டில் கூட்டுறவு இயக்கமே இதற்காகத்தான் புகுத்தப்பட்டது. கிராமக் கடன் சங்கங்கள்தாம் முதன் முதலில் அமைக்கப்பட்டன. இன்றும் நம் நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தில் இச் சங்கங்கள்தாம் பெரும் பங்கு வகிக்கின்றன.

சிறிய சங்கங்கள்

1904ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட கூட்டுறவுக் கடன் சங்கச் சட்டப்படி நம் நாட்டில் விவசாயக் கடன் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டன. அவை யனைத்தும் சிறிய அளவில் ஜெர்மனியில் இயங்கி வந்த ரைஃபீசன் சங்கங்களைப் போலவே அமைக்கப் பட்டன. கிராமத்திற்கு ஒரு சங்கமாகவும் வரையறையற்ற பொறுப்புடையதாயும் அவை உருவாக்கப்பட்டன. உறுப்பினர் களுக்கு வேண்டிய கடன் தொகையை வழங்கவும் அவர்களுக்குச் சிக்கனப் பழக்கத்தை ஏற்படுத்தி, தமக்குத் தாமே உதவி செய்து கொள்ளும் தத்துவத்தை வளர்க்கவும்தான் இச் சங்கங்கள் தோற்று விக்கப்பட்டன. விவசாயத் தொழிலுக்கு வேண்டிய பண்ணைப் பொருள்களை வழங்குவதற்கும் கூட்டுறவுச் சட்டங்கள் வழி வகுத்தன; எனினும் இத்துறையில் சங்கங்கள் அதிக அக்கறை காட்டவில்லை. நம் நாட்டுச் சூழ்நிலைக்குச் சிறிய சங்கங்கள்தாம்

உகந்தவை என்று தொடக்கத்தில் கருதப்பட்டது. 1928-ல் அமைக்கப்பட்ட விவசாயக் குழுவினர் கூட அவ்வாறுதான் நினைத்தனர். "விவசாயக் கடன் சங்கம் எளிமையாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது; அதன் தத்துவத்தை உறுப்பினர்கள் நன்றாக அறிந்துள்ளனர்; சங்கத்திற்குத் தேவையான நிதியையும் பிற வசதிகளையும் கிராம மக்களே எளிதாகச் செய்து தருகின்றனர். உறுப்பினர்கள் 'தமக்குத் தாமே உதவ வேண்டும்' என்ற கொள்கையின் மகிமையை நன்கு உணரத் தொடங்கிவிட்டனர்" என்று அக்குழு தன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. ஆனால், கடந்த பல ஆண்டுகளாக இச் சங்கங்கள் பல இன்னல்களுக்கு ஆளாகி, துரிதமாக முன்னேற முடியவில்லையென்பதை அனுபவ வாயிலாக அறிய வருகிறோம். சங்கங்கள் சிறிய அளவில் இருந்ததால் அதிக அளவு சேவை செய்து இலாபமடையவோ நல்ல பலன் தரவோ இயலவில்லை. அனுபவமும் பயிற்சியும் பெற்ற பணியாளர்களை நிர்வாகப் பணிக்காக அமர்த்த முடியவில்லை. இச் சங்கங்களுக்கென்று தனி இடம் கூடப் பல கிராமங்களில் கிடையாது. சங்கத்தின் செயலாளருக்கு முழு நேர வேலையும் இல்லை. உறுப்பினர்களிடமிருந்து போதிய நிதி வசதியையும் பெறமுடியவில்லை; கூட்டுறவு மைய வங்கிகளிடமிருந்து வேண்டிய அளவுக் கடனைக்கூடப் பெறமுடியாமல் இருந்தன. இதனால் உறுப்பினர்களுக்கு வேண்டிய கடனைக் கொடுக்க முடியாமல் அவர்களின் நம்பிக்கையை இழந்து வந்தன. கூட்டுறவுக் கடன் சங்கங்கள் சிறியனவாயிருந்தால்தான் உறுப்பினர்கள் ஒருவரையொருவர் நன்குணர்ந்தவர்களாய் பொறுப்புடன் நடந்து கொள்வர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நடைமுறையில் இந்த நம்பிக்கைகூட அர்த்தமற்றதாகிவிட்டது. மேலும், கிராம மக்களில் பெரும்பாலானோர் இச் சங்கங்களில் பங்குகொள்ளவில்லை; பங்கு கொண்ட உறுப்பினர்களுக்குக் கூட வேண்டிய அளவுக் கடனை இச் சங்கங்கள் தரமுடியவில்லை. உறுப்பினர்கள் எல்லாக் காரியங்களுக்குமே இச் சங்கங்களிடமிருந்து கடனுதவியை எதிர்பார்த்தனர். கொடுக்கப்பட்ட கடன் ஆக்கப் பணிக்காக முறையாகச் செலவிடப்படுகிறதா என்பதை இச் சங்கங்கள் கண்காணிக்க முடியவில்லை. சுருங்கக் கூறின், இச் சங்கங்களால் கிராம மக்களின் வாழ்க்கை எவ்விதத்திலும் உயரவில்லை.

பலநோக்குச் சங்கங்கள்

இந் நிலையில் பரோடா மாநிலத்தின் ஒரு பகுதியில் பல நோக்குச் சங்கங்களை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 'பண்ணைகளை மேம்படுத்தல், விளை பொருள்களை நல்ல விலைக்கு விற்றல், உறுப்பினர்களின் வாழ்க்கையை மேம்படுத்தல்'

ஆகிய குறிக்கோள்களை அடைய இச் சங்கங்கள் முயன்றன. உறுப்பினர்களுக்கு வேண்டிய கடனுதவியை மட்டுமன்றி, பயிர்த் தொழிலுக்கு வேண்டிய எல்லாச் சாதனங்களையும் இச் சங்கங்கள் வழங்கி வந்தன; அதோடு அவர்களின் விளைபொருள்களையெல்லாம் ஒன்றுதிரட்டி, அவற்றைப் பக்குவப்படுத்தி நல்ல விலைக்கு விற்கும் பணியையும் இச் சங்கங்கள் மேற்கொண்டன. இம் முயற்சியில் இச் சங்கங்கள் அடைந்த வெற்றியைக் கண்ட ரிசர்வ் பாங்கின் விவசாயக் கடன் துறை நாடெங்கிலும் இச் சங்கங்களை ஏற்படுத்த விரும்பியது. அதற்காக 1947-ல் எல்லா மாநிலங்களுக்கும் சுற்றறிக்கையொன்றை விடுத்தது. இதைத் தொடர்ந்து சிறிய அளவில் கடன் கொடுப்பதற்காகமட்டும் அமைக்கப்பட்டிருந்த விவசாயச் சங்கங்கள் பலநோக்குச் சங்கங்களாக மாற்றியமைக்கப்பட்டன. இவ்வாறாக, பலநோக்குச் சங்கங்கள் எண்ணிக்கையில் மட்டுமன்றி செல்வாக்கிலும் உயர்ந்தன. சான்றாக, 1946-47-ல் மொத்தம் 9,650 சங்கங்கள்தாம் பலநோக்குடையவையாய் இயங்கி வந்தன; இவற்றில் 3·5 இலட்சம் பேர்தாம் உறுப்பினர்களாக இருந்தனர். இவையனைத்தும் ரூ. 1·78 கோடி நடப்பு மூலதனத்தை மட்டும் கொண்டிருந்தன. ஆனால், 1951-52-ல் இவற்றின் எண்ணிக்கை 40,000 ஆகப் பெருகியது; உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 21 இலட்சத்திற்கு உயர்ந்தது: நடப்பு மூலதனம் ரூ. 13 கோடியாக அதிகரித்தது.

கிராம மக்கள் எடுத்ததற்கெல்லாம் வட்டிக் கடைக்காரர்களையே நம்பி நலிந்து விடாமல், அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்துதர முடியுமென்ற காரணத்திற்காகப் பலநோக்குச் சங்கங்கள்தாம் நம் நாட்டிற்கு உகந்ததாகப் பலர் எண்ணினர். மேலும், இச் சங்கங்கள் பல்வேறு பணிகளைச் செய்யும் போது நிர்வாகச் செலவு கணிசமான அளவு குறையலாமென்றும் நிர்வாகமும் செம்மையாக நடைபெற முடியுமென்றும் அவர்கள் நம்பினர்.

நாளடைவில், நம் நாட்டிற்கு உகந்தது பலநோக்குச் சங்கங்களா சிறிய சங்கங்களா என்ற பிரச்சினை எழுந்தது. இப் பிரச்சினையை ஆராய்வதற்கென்று கிராமக் கடன் ஆய்வுப் பிரிவைச் சேர்ந்த ஆலோசனைக் குழு முயன்றது. 1954-ல் அக்குழு கண்ட முடிவுகளின் சாரம் வருமாறு: பலநோக்குச் சங்கங்களை அமைத்து, நடைமுறையில் அவற்றால் நல்ல பலன் ஏற்படக்கூடிய வகையில் நிர்வாகம் செய்ய முடிந்தால் அச் சங்கங்கள்தாம் சிறந்தவை என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால், பலநோக்குச் சங்கங்களாக மாற்றிய பின்னரும் அவை பழைய

முறையிலேயே எவ்வித மாற்றமும் முன்னேற்றமுமின்றி நடைபெற்றால் அதனால் பயனேதுமில்லை. சிறிய சங்கங்களைப் பல நோக்குச் சங்கங்களாகப் பெயரளவில் மாற்றினால் மட்டும் போதாது. எனவே, கிராமப் புறங்களில் சிறிய, ஒரு நோக்குச் சங்கங்களை அமைப்பதா, பெரிய பலநோக்குச் சங்கங்களை ஏற்படுத்துவதா என்ற கேள்விக்குத் திடமான விடைதர இயலாது. ஒவ்வொரு கிராமத்தின் இயல்புக்கும் சூழ்நிலைக்குமேற்ப ஒரு நோக்குச் சங்கத்தையோ பலநோக்குச் சங்கத்தையோ அமைக்கலாம். ஆனால், அவ்வாறு அமைத்தவுடன் தானாகவே அக்கூட்டுறவுச் சங்கம் முன்னேறிவிடுமென யாரும் எதிர்பார்க்கக்கூடாதென்று அக் குழு முடிவுரை தந்துள்ளது. அனுபவத்தைக் கொண்டு பார்க்கும்போது பலநோக்குச் சங்கங்கள் வெற்றியடைந்து விட்டதாகத் தெரியவில்லை. அவ்வாறு வெற்றி பெற்று முன்னேற வேண்டுமாயின் தகுதியும் திறமையும் வாய்ந்த நிர்வாகிகள் தேவை. அவ்வாறு தகுதியும் திறமையும் வாய்ந்த நிர்வாகிகளை கிராமப் புறங்களில் காண்பதரிது. ஒரு வேளை இன்னும் பல ஆண்டுகளுக்குப்பின் திறமை மிக்க நிர்வாகிகள் கிடைக்கலாம். மேலும், கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களைப் பலநோக்குச் சங்கங்களாக மாற்றினால் பல்வேறு பணிகளையும் திறமையாகச் செய்யக் கூடிய அளவுக்கு ஆள்கள் தேவை; அப்போதுதான் பல்வேறு யுக்திகளைக் கொண்டு கூட்டுறவுச் சங்கத்தை வெற்றிப் பாதையில் கொண்டு செல்லமுடியும். எனவே, கடன் சங்கங்களைப் பலநோக்குச் சங்கங்களாக மாற்றியவுடன் அவை வெற்றி பெற்று விடுமென எவரும் நம்பக்கூடாது.

கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பெரிய அளவில் அமைக்கப்பட வேண்டுமா?

கிராம அடிப்படையில் இயங்கி வரும் கடன் சங்கங்களைப் பல நோக்குச் சங்கங்களாக மாற்றுவது பற்றிய விவரத்தை மேலே கண்டோம். அதற்கெனக் கிராமக் கடன் ஆய்வு ஆலோசனைக் குழுவினர் கூறியவற்றையும் பார்த்தோம். இனி ஒரு கிராமத்திற்குச் சிறிய அளவில் ஒரு சங்கம் இருப்பது நல்லதா, பல கிராமங்களுக்கென்று ஒரு சங்கம் பெரிய அளவில் அமைக்கப்படுவது உகந்ததா என்ற கேள்விக்கும் விளக்கம் தர வேண்டியுள்ளது. கடன் சங்கங்கள் பெரிய அளவில் இருப்பதுதான் நம் நாட்டிற்கு உகந்ததென அக் குழுவினர் பரிந்துரை செய்துள்ளனர். அப் பரிந்துரையில் பெரிய அளவில் அமைக்கப்படும் கடன் சங்கங்கள் பின்வரும் அம்சங்களைக் கொண்டுள்ளதாயிருக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளனர்:

1. பெரிய சங்கங்களாக இருந்தால் பல உறுப்பினர்கள் சேரமுடியும்; அக்கம்பக்கத்திலுள்ள கிராம வாசிகளும் உறுப்பினர்களாவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

2. இச் சங்கங்கள் அரசாங்கத்தின் பங்கு கொண்டு, வரையறை பெற்ற பொறுப்புடன் இருக்கவேண்டும்.

3. ஆக்கப் பணிகளுக்கென்று உறுப்பினர்களுக்குக் குறுங்காலச் ‘ சாகுபடிக் கடனை ’ மட்டுமன்றி மத்திய காலக் கடனையும் வழங்குவதாயிருக்க வேண்டும்.

4. குலுக்கல் சீட்டு முறையின் வாயிலாக உறுப்பினர்களின் குடும்பச் செலவிற்கும் வழி செய்ய வேண்டும்.

5. கூட்டுறவு முறையில் கடன் கொடுக்கும் வழக்கத்தைக் கூட்டுறவு முறையில் விற்பனை செய்யும் பழக்கத்தோடு இணைக்க வேண்டும்.

6. உறுப்பினர்கள் இச் சங்கத்திடம் வைத்திருக்க வேண்டிய வைப்புத் தொகை அதிகமாக இருக்க வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் ஓரளவிற்காகிலும் இலாபகரமாக இயங்கவேண்டுமென இக்குழுவினர் கருதினர். அவ்வாறாயின் கூட்டுறவுச் சங்கத்தில் அதிக உறுப்பினர்கள் இருக்கவேண்டும், அதோடு, சங்கம் தரும் கடன் தொகையும் அதிகமாக இருக்க வேண்டும். அப்போதுதான் கூட்டுறவுச் சங்கத்திற்கு உபரி வருமானம் கிடைக்கும். அதைக்கொண்டு நிரந்தரமான அலுவலகத்தையும் திறமைமிக்க அலுவலர்களையும் பெற முடியும். பெரிய அளவில் ஏற்படுத்தப்படும் சங்கம் 300 முதல் 500 பேரை உறுப்பினர்களாகப் பெற்றிருக்க வேண்டுமென்றும், ஆண்டொன்றுக்குக் குறைந்தது ரூ. $1\frac{1}{2}$ இலட்சமாவது கடன் தந்து பெறவேண்டுமென்றும் இக் குழு சிபாரிசு செய்துள்ளது.

பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ள கடன் சங்கங்கள் விவசாயிகளுக்குச் சாகுபடி அல்லது விளைச்சல் கடனை வழங்கத் தொடங்கியுள்ளன. இக் கடன் பின் வரும் நான்கு அடிப்படையில் வழங்கப்படுகிறது:

1. இக் கடன் விவசாய உற்பத்திக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

2. நிலத்திற்குச் சொந்தக்காரர்களாயிருந்தாலும், இல்லாவிட்டாலும் விளைச்சலின் பேரில் இக் கடனைப் பெறலாம்.

3. விளைச்சல் எவ்வளவு என்பதைக் கணக்கிட்டு அதன் அடிப்படையில் இது வழங்கப்படுகிறது.

4. விளைச்சலை அறுவடை செய்து விவசாயிகள் விற்கும்போது அப்பணத்திலிருந்து இக் கடன் தொகை திரும்ப வசூலிக்கப்படுகிறது.

விளைச்சலின் அடிப்படையில் கடன் கொடுப்பதற்காகப் பெரிய கடன் சங்கங்கள் அனைத்தும் தத்தம் பகுதியில் பயிர் செய்யப்படும் விளை பொருள்களுக்கு என்ன செலவாகும் என்ற பட்டியலை ஏக்கர் அடிப்படையில் தயாரித்து வைத்துள்ளன. அச்செலவில் உழவர் எவ்வளவு தாங்கிக்கொள்ள முடியுமோ அது தவிர ஏனைய செலவுக்கான தொகையை இச் சங்கங்கள் கடனாகத் தருகின்றன. விதை வித்துகள், உரங்கள் போன்றவற்றை வாங்குவதற்குப் பணமாகத் தராமல் கூடுமானவரையில் அப்பொருள்களையே கடனாக அளித்து வருகின்றன.

கடன் சங்கங்களைப் பெரிய அளவில் உடனடியாக அமைப்பது கடினம். எனவே, படிப்படியாக இவற்றை உருவாக்குவதற்கான திட்டமும் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் 10,372 பெரிய சங்கங்கள் அமைக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. இச் சங்கங்களை ஊக்குவிப்பதற்கென்று அரசாங்கம் இவற்றின் பங்கு மூலதனத்தைப் பெறுவதற்காக ரூ. 11 கோடிஒதுக்கியது. உறுப்பினர்களின் பண்ணைகளுக்குத் தேவையான பண்டங்களைக் கொள்முதல் செய்து வைப்பதற்கென்றும் விளைபொருள்களைப் பத்திரப்படுத்தி வைப்பதற்கென்றும் இச் சங்கங்கள் பண்டகங்களைக் கட்டுவதற்கும் வழி செய்யப்பட்டது. அதற்கென்று அரசாங்கம் இச் சங்கங்களுக்கு ரூ. 3·6 கோடியை விநியோகம் செய்தது. இவ் வுதவியைப் பெற்ற சங்கங்கள் அனைத்தும் சுமார் 4,000 பண்டகங்களைக் கட்டி முடித்தன. இச் சங்கங்கள் தம் நிர்வாகத்திற்கென்று பயிற்சி பெற்ற நிர்வாகியை அமர்த்தும் பொருட்டு ஆரம்பத்தில் அரசாங்கம் இவற்றிற்குப் பலவகை நிர்வாக உதவிகளையும் செய்து கொடுத்தது.

இச் சங்கங்கள் பணிபுரிய வேண்டிய பகுதியின் பரப்பு எவ்வளவு இருக்கவேண்டும்?

கூட்டுறவுக் கிராமக் கடன் சங்கங்கள் எவ்வளவு தூரத்திற்கொன்று அமைய வேண்டும், எத்தனை உறுப்பினர்களைக் கொண்டு இயங்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகள் தோன்றின.

எனவே, திரு. எம். எல். டார்லிங் அவர்கள் இப் பிரச்சினையை ஆராய்ந்து நல்ல முடிவு காண முற்பட்டார். பெரிய அளவில் சங்கங்களை அமைக்கும் முயற்சியில் சில நிர்வாகிகள் தீவிரமாக ஈடுபட்டு 20, 30 கிராமங்களைக் கொண்ட மிகப் பெரிய சங்கங்களை உருவாக்கியிருந்ததைக் கண்டு வியந்தார். பெரிய சங்கங்கள் என்றால் நிர்வகிக்க முடியாத அளவுக்கும் எல்லாக் கிராமக் குடியானவர்களும் அவற்றால் பயன்பெறமுடியாத அளவுக்கும் மிகப் பெரியனவாக அமைக்க வேண்டுமென்று பொருளல்ல என்று கண்டித்தார். அப்படிப் பல மைல்களுக்கு; ஒரு சங்கம் அமைக்கப் பட்டால் குடியானவர்கள் அவ்வளவு தூரம் கடும் வெயிலில் நடந்து சங்கங்களை அணுகி உதவிபெறுவது கடினம்; மாறாக, தம் கிராமத்திலுள்ள வட்டிக் கடைக்காரர்களிடமே கடன் பெற்று விடுவர் என வாதாடினர். மேலும், பல கிராமங்களுக்கு ஒரு சங்கம் என்று இருந்தால் எல்லாக் கிராம வாசிகளும் அதில் உறுப்பினர்களாகச் சேருவது கடினம்; அப்படியே சேர்ந்தாலும் பொதுக்குழுவின் கூட்டத்திற்கு அவர்கள் வர இயலாது போய் விடுமென்றும் கூறினர். சிறிய சங்கங்களில் கூட்டுறவு மனப் பான்மையை உறுப்பினர்களிடையே வளர்க்க முடியவில்லை யென்றால், பெரிய சங்கங்களில் அதுவும் மிகப் பெரிய சங்கங்களில் அம்மனப்பான்மையை எப்படி வளர்க்கக் கூடுமென்றும் வாதாடினர். சர் டார்லிங் அவர்கள் கூறிய ஆலோசனை வருமாறு:

(1) பெரிய கடன் சங்கங்கள் இரண்டு மைல் சுற்றளவிற் கொன்றாகத்தான் அமைக்கப்பட வேண்டும்.

(2) அச் சங்கங்களில் அதிகபட்சம் 500 உறுப்பினர்களுக்கு மேல் இருக்கக்கூடாது.

(3) சிறிய சங்கங்களைப் பெரிய சங்கங்களாக இணைக்கும் போது பெரும்பாலான உறுப்பினர்கள் அதற்கு ஆதரவு தர வேண்டும். அப்போதுதான் சங்கத்தின் தத்துவமும் கொள்கையும் பேணிக் காக்கப்படும்.

இவ்வாறு, மிகப் பெரிய சங்கங்களுக்கு எதிராகத் திரு. டார்லிங் அவர்கள் தொடங்கிய வாதத்திற்குப் பெரும் ஆதரவு கிட்டியது. இச் சங்கங்கள் தொடங்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குள், அதாவது 1958-ல் பெரிய சங்கங்கள் எதையும் இனிமேல் தொடங் கக்கூடாதென்று தேசிய வளர்ச்சிக் கழகம் ஆணையிட்டது. ஏற்கெனவே தொடங்கப்பட்டிருந்த பெரிய சங்கங்களில் சுமார் 700 சங்கங்கள் விரிவடையத் திட்டம் போட்டிருந்தன. அத் திட்டம்

தகர்த்தெறியப்பட்டது. ஆனால், கிராமக் கடன் பரிசீலனைக் குழு கடன் சங்கங்கள் பெரிய அளவில்தான் இருக்க வேண்டுமென வாதாடியுள்ளது. சிறிய சங்கங்களைவிடப் பெரிய சங்கங்கள்தாம் எல்லா வகையிலும் மேலானதென எண்பித்துள்ளது. சிறிய சங்கங்களைவிடப் பெரிய சங்கங்கள்தாம் அதிக அளவு வைப்புத் தொகையைப் பெற்றிருக்கின்றன; உறுப்பினர்களும் அதிகப் பங்கு மூலதனத்தைச் செலுத்தியுள்ளனர்; இச் சங்கங்கள்தாம் அதிக அளவுக் கடன் தொகையையும் உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ளனவென்று இக் குழு தன் அறிக்கையில் கூறியுள்ளது. அதோடு, இப்பெரிய சங்கங்களின் பணிகள்தாம் அளவில் மட்டுமன்றித் தரத்திலும் உயர்ந்ததாக இருக்கின்றனவென்று இக்குழு முடிவெடுத்துள்ளது. சிறிய சங்கங்களின் நிலையையும் பெரிய சங்கங்களின் வளர்ச்சியையும் ஒப்பிட்டு அறிவதற்கு இவ்விரு வகைச் சங்கங்களுமே 1962-ல் எந்த நிலையிலிருந்தன என்பதைக் கீழ்க்காணும் பட்டியல் எடுத்துக்காட்டுகிறது.

விவரம்	பெரிய அளவுச் சங்கங்கள்	சிறிய அளவுச் சங்கங்கள்
சங்கத்தின் சராசரி உறுப்பினர்கள்	502	75
சங்கத்தின் சராசரி நடப்பு மூலதனம் (ரூபாய்)	1,18,628	11,220
உறுப்பினரின் சராசரி நடப்பு மூலதனம் (ரூபாய்)	55	30
வைப்புத் தொகை		
சங்கத்தின் சராசரி (ரூபாய்)	7,042	585
உறுப்பினரின் ,, ,,	14	8
உறுப்பினருக்குக் கொடுத்த சராசரிக் கடன் (ரூபாய்)	256	220

சிறிய சங்கங்களைக் காட்டிலும் பெரிய சங்கங்கள்தாம் எல்லா வகையிலும் சிறந்தவையென்பதை இப்பட்டியல் எடுத்துக்காட்டுகிறது. ஆனால், பெரிய சங்கங்கள் வளரமுடியாதபடிக்கு அவற்றிற்குத் தடை விதித்திருப்பது வருந்தத்தக்கது. இத்தடை விதிக்கப்படாமலிருந்திருந்தால் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் சுமார்,

20,000 அல்லது 25,000 சங்கங்கள் பெரிய அளவில் அமைக்கப்பட்டு, இலாபகரமானதாகவும் பயனுள்ளதாகவும் இயங்கி வந்திருக்கக் கூடுமென்று இக் குழு குறிப்பிட்டுள்ளது. மேலும், இத் தடையினால் தொடக்க நிலைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வளர்ச்சியே பாதிக்கப்பட்டுவிட்டதென்றும் இக் குழு குறிப்பிட்டுள்ளது. பெரிய சங்கங்களுக்குப் பதிலாகக் கூட்டுறவுச் சேவைச் சங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்று தேசிய வளர்ச்சிக் கழகமும் மேத்தா குழுவும் சிபாரிசு செய்துள்ளன. இக் கூட்டுறவுச் சேவைச் சங்கங்களைப் பற்றி விரிவாக அடுத்த அதிகாரத்தில் காண்போம்.

கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கிராம மக்களிடையே சிக்கன வாழ்வை ஊக்குவிக்கவும், அவர்களது சேமிப்பை வைப்புகளாகப் பெறவும் உருவாக்கப்பட்டன. ஆனால், கிராம மக்களின் சேமிப்பை இச் சங்கங்கள் இன்றும் கவரவில்லை. 1972-73-ன் கணக்கெடுப்பின்படி கடன் சங்க உறுப்பினர்களின் சராசரி வைப்புத் தொகை ரூ. 21தான் என அறிய வருகிறோம். மேலும், விவசாயக் கடன் சங்கங்களின் நிலையைக் கீழ்க்காணும் பட்டியல் விளக்கிக் கூறுகிறது.

விவரம்	1950-51	1960-61	1972-73
சங்கங்களின் எண்ணிக்கை (ஆயிரக்கணக்கில்)	105	212	158
உறுப்பினர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்)	44	170	344
கடனளித்த தொகை (கோடி ரூபாயில்)	23	202	686
வராக் கடன் தொகை (கோடி ரூபாயில்)	6	44	364

18. கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள்

விவசாயக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பல ஆண்டுகளாகவே இயங்கி வந்த போதிலும், குடியானவர்களுக்குத் தேவைப்பட்ட எல்லாப் பணிகளையும் செய்யாமல், வெறும் கடனை மட்டுமே கொடுத்து வந்தன. எனவே, பரோடா மாநிலத்தில் பலநோக்குச் சங்கங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து எல்லா மாநிலங்களிலும் அவ்வகைச் சங்கங்களை ஏற்படுத்தும்படி ரிசர்வ் பாங்கு பரிந்துரை செய்தது. அதைத் தொடர்ந்து கிராமக் கடன் ஆய்வுக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவும் வெறும் கடனைமட்டும் தராமல் வேறுபல பணிகளையும். கிராமச் சங்கங்கள் புரியவேண்டுமெனச் சிபாரிசு செய்தது. இக் குழுவின் அறிக்கைப்படி அரசாங்க ஆதரவுடன் பல நோக்குச் சங்கங்கள் பெரிய அளவில் அமைக்கப் படலாயின. ஆனால், பலநோக்குச் சங்கங்களைப் பெரிய அளவில் அமைப்பதற்குப் பதிலாகக் கூட்டுறவுச் சேவைச் சங்கங்களை அமைப்பதுதான் சிறந்ததெனத் தேசிய வளர்ச்சிக் கழகம் முடிவு செய்துவிட்டது. அதன்படி நாடெங்கணும் கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறாக, நமது கூட்டுறவு இயக்கம் புதிய பாணியில் விரைவாக மாற்றப்பட்டு வருவது, நமது தேவை அதிகரித்துள்ளது என்பதை மட்டுமன்றி, அவற்றைக் கூட்டுறவு இயக்கத்தின் வழியாக நிறைவு பண்ணுவதே சிறந்தது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. அதோடு, பொருளாதார வளர்ச்சியை விரைவில் அடைவதற்காக வகுக்கப்படும் திட்டத்தில் எதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்ற சிந்தனையும் மாறி மாறி வந்துள்ளது.

கூட்டுறவு இயக்கத்தை நாம் உருவாக்கியதன் காரணம் பேராசை கொண்ட வட்டிக் கடைக்காரர்களின் பிடியிலிருந்து ஏழைக் குடியானவர்களைக் காப்பாற்றத்தான். ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றி, ஓரளவிற்கு வெற்றியும்

கிடைத்துள்ளது; அந்த அளவிற்கு வட்டிக் கடைக்காரர்களின் தொழிலும் செல்வாக்கும் குறைந்து வருகிறது. கூட்டுறவுக் கடன் இயக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து நாடெங்கிலும் வட்டி வீதம் குறைய முற்பட்டுள்ளது. குறிப்பாக, பஞ்சாப், மகாராஷ்டிரம், தமிழ் நாடு ஆகிய மாநிலங்களிலெல்லாம் வட்டிக்காரர்களின் தொழிலே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது, உணவுப் பற்றுக்குறை என்னும் புதிய பிரச்சினை யொன்றும் நாட்டில் தோன்றியுள்ளது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகப் பல வழிகளை நாம் மேற்கொண்டுள்ளோம். சாகுபடி செய்யப்படாதிருந்த நிலத்தையெல்லாம் சாகுபடிக்குக் கொண்டு வந்துகொண்டிருக்கிறோம்; விவசாயம் செய்யும் முறையையே மாற்றி, புதிய பல முறைகளைப் புகுத்தியிருக்கிறோம்; தரமான விதைகளைக் கண்டுபிடித்து அவற்றின் வாயிலாக அமோக விளைச்சலை அடையப் பாடுபடுகிறோம்; எத்தனையோ வகையான உரங்களை நாமே உற்பத்தி செய்து அவற்றை ஏராளமாகப் பயன் படுத்தி வருகிறோம். இவைமட்டுமன்றி, கூட்டுறவு இயக்கத்தின் வாயிலாக நாட்டுக் குடியானவர்களுக்கு வேண்டிய உதவிகளை யெல்லாம் செய்து இப் பிரச்சினைக்கு முடிவு கட்ட முயன்று கொண்டிருக்கிறோம். இவ்வாறாக, குடியானவர்களின் கடன் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத் தொடங்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் இன்று நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்குவதற்காகவும் முனைந்துள்ளது. இதனால்தான் கூட்டுறவுச் சங்கத்தின் அமைப்பையும் பணியையும் அடிக்கடி மாற்றவேண்டிய அவசியம் தோன்றி வருகிறது. தற்போது கூட்டு றவுச் சேவைச் சங்கம் என்ற பெயரில் இவ் வியக்கத்திற்கே ஒரு திருப்பம் கொடுக்க நாடு முன் வந்துள்ளது.

சேவைச் சங்கம் என்றாலென்ன ?

கிராம மக்கள் ஒன்றுசேர்ந்து தமக்குத் தேவையான எல்லா வற்றையும் கூட்டுறவு முறையில் அடையவும் விளைச்சலைப் பெருக் கவும் தமக்குள் அமைத்துக்கொள்ளும் அமைப்பே சேவைச் சங்கம் எனப்படும். கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளுக்கு வழங்கும் குறுங்காலக் கடனைக் கொண்டு சாகுபடித் திட்டமிட்டு விளைச்சலைப் பெருக்கும் நோக்கத்தோடுதான் இச்சேவைச் சங்கம் அமைக்கப் பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்து விளைச்சலைப் பெருக்குவதற்காகப் பாடுபடும் சங்கம்தான் சேவைச் சங்கமென வழங்கப்படுகிறது. சேவைச்சங்கம் நேரடியாக உற்பத்

துறையில் ஈடுபடாமல் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்து வருவதால், இது உற்பத்திச் சங்கமாகாது. பல ஐரோப்பிய நாடுகளிலும் சேவைச் சங்கங்கள் இயங்கி வருகின்றன; எனினும் அங்கெல்லாம் இவை குறிப்பிட்ட தொரு பணியை மட்டுமே செய்து வருகின்றன. கனடாவில் தொலைபேசிப் பணியை மட்டும் செய்து வரும் சேவைச் சங்கம் உள்ளது. அமெரிக்காவில் பெட்ரோல் விநியோகத்திற்கென்று சேவைச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. ஜெர்மனியில் மின் வழங்கும் சேவைச் சங்கம் இயங்கி வருகிறது. ஆனால், நமது நாட்டில் தொடங்கப்பட்டுள்ள சேவைச் சங்கங்கள் அப்படியல்ல. குடியா னவர்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் மலிவாக விநியோகம் செய்வதற்காகத்தான் சேவைச் சங்கங்கள் நம் நாட்டில் தோன்றியுள்ளன.

பணிகள்

விவசாய விளைச்சலைப் பெருக்குவதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் குடியானவர்களுக்குச் செய்து தருவதற்காக அமைக் கப்பட்டுள்ள இச் சங்கங்களின் பணிகள் வருமாறு:

1. பண்ணைகளுக்குத் தேவைப்படும் உயர்ந்த ரக விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்கின்றன. மேலும், விவசாயிகளுக்குத் தேவையான சின்னஞ்சிறு சாதனங்களையெல்லாம் தரமானவைகளாகப் பார்த்துக் கொள்முதல் செய்து இருப்பில் வைக்கவேண்டும். இச் சாதனங்களை யெல்லாம் கூட்டுறவுத் தொழில்களிடமிருந்து கொள்முதல் செய்தால் அவற்றோடு நெருங்கிய தொடர்பு ஏற்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.

2. குடியானவர்கள் சாகுபடிக்குத் தேவையான சாதனங்களை வாங்குவதற்சென்று குறுங்காலக் கடனை அளிக்கின்றன; அதோடு, அடைமானத்திலுள்ள நிலத்தை மீட்கவும், கிணறுகள் வெட்டவும், பழைய கிணறுகளைப் பழுது பார்க்கவும், வண்டி, மாடுகள் வாங்கவும் தேவைப்படும் நீண்ட காலக் கடனையும் இச் சங்கங்கள் வழங்குகின்றன.

3. விவசாயிகளுக்குத் தேவைப்படும் டிராக்டர் போன்ற இயந்திரங்களைக் கொள்முதல் செய்து அவற்றை வாடகைக்கு விடுகின்றன. எந்தெந்தக் கருவிகளையும் இயந்திரங்களையும் கொள் முதல் செய்து வாடகைக்கு விடவேண்டுமென்பது அந்தந்தச் சங்கங்கள் அமைந்துள்ள இடத்தின் தேவையையும் சூழ்நிலையையும் பொறுத்தது. சான்றாக, பூச்சி மருந்தடிக்கும் கருவிகள், கரும்புச்

சாறு பிழியும் இயந்திரங்கள், தானியங்களைத் தூற்றும் இயந்திரங்கள், நிலத்தைச் சமப்படுத்தும் கருவிகள் போன்றவை எல்லா இடங்களுக்கும் தேவைப்படா.

4. கிராம மக்களுக்கு இன்றியமையாத நுகர்வுப் பண்டங்களையும் இச் சங்கங்கள் கொள்முதல் செய்து விநியோகிக்கின்றன. இதற்காக மளிகைக் கடைகளை இவை தொடங்கவேண்டியதில்லை. எந்தெந்த அவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு உள்ளதோ அவற்றை மட்டும் கொள்முதல் செய்து விநியோகித்தால் போதும். சான்றாக, சர்க்கரை, மண்ணெண்ணெய், உணவுத் தானியம் போன்ற பொருள்களை மட்டுமே இவை விநியோகித்து வருகின்றன.

5. மேற்கூறிய பொருள்களையெல்லாம் கொள்முதல் செய்வதற்குத் தேவையான நிதி வசதியைக் கூடுமானவரை உறுப்பினர்களின் சேமிப்பைக்கொண்டே பெறுகின்றன. உறுப்பினர்கள் சிக்கனமாக வாழவும் சேமிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளவும் இச் சங்கங்கள் தூண்ட வேண்டும். இதுதான் இவற்றின் தலையாய பணியாகும். இப்பணியை நல்ல முறையில் செய்தால்தான் உறுப்பினர்கள் கூடுமானவரை சுய நிறைவு பெற்றவர்களாய் வாழ முடியும்.

மேற்கூறிய பணிகளை நல்ல முறையில் இச் சேவைச் சங்கங்கள் செய்யுமானால் விவசாய விளைச்சல் பன்மடங்கு அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை. விளைச்சலைப் பெருக்கும் நோக்கத்திற்காகத் தான் இச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. சேவைச் சங்கங்கள் செய்ய வேண்டிய பணிகளில் சிலவற்றை ஏற்கெனவேயுள்ள கடன் சங்கங்கள் செய்து வந்திருக்கின்றன. இக் கடன் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டிய குறுங்காலக் கடனை மட்டுமன்றி இடைக் காலக் கடனையும் தந்து வந்திருக்கின்றன. ஒருசில சங்கங்கள் பண்ணைப் பொருள்களையும் வீட்டுச் சாமான்களையும்கூட விநியோகித்திருக்கின்றன. உறுப்பினர்களிடமிருந்து வைப்புத் தொகையைப் பெற்றதன் வாயிலாகச் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தும் வந்தன. எனவே, கடன் சங்கங்களுக்கும் சேவைச் சங்கங்களுக்கும் அடிப்படை வித்தியாசம் ஏதுமில்லை. கடன் சங்கங்களின் பணி எளிமையானதாயிருந்தது. பெரும்பாலும் அவை கடன் கொடுப்பதில்தான் அக்கறை செலுத்தி வந்தன. வேறு பணி எதையும் கணிசமான அளவு செய்ததில்லை. சேவைச் சங்கங்களோ பண்ணை உற்பத்தியைப் பெருக்குவதற்குத்தான் முக்கியத்துவம் அளிக்கின்றன.

அக் குறிக்கோளை அடையவேண்டுமானால் சேவைச் சங்கங்கள் பண்ணைகளுக்குத் தேவைப்படும் எல்லாவற்றையும் மதிப்பிட்டு அவற்றை வழங்குவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். கூடுமானவரை தரமான விதைகளையும், உரங்களையும் நவீனக் கருவிகளையும் விவசாயிகள் பயன்படுத்தும்படி ஊக்குவிக்க வேண்டும். அவற்றைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகளை விவசாயிகள் உணரும்படி செய்யவேண்டும். அதோடு, விவசாயிகளுக்கு நவீன சாகுபடியைப்பற்றிய ஆலோசனை தந்து, அவர்களை வழி நடத்த வேண்டும்.

சங்க அமைப்பு முறை

தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் எந்த அளவினதாயிருக்க வேண்டும், சிறிய பகுதியில் பணிபுரிய வேண்டுமா பெரிய பகுதியில் பணிபுரிய வேண்டுமா என்பதுபற்றிக் கடந்த பல ஆண்டுகளாகவே கருத்து வேறுபாடுகள் இருந்து வந்திருக்கின்றன. தேசிய வளர்ச்சிக் கழகத்தின் கருத்துப்படி கிராமக் கடன் சங்கம் ஒவ்வொன்றும் ஒரு கிராமத்திற்கு மட்டுமே பணிபுரிய வேண்டும். சிறிய கிராமமாக இருந்தால் 2 அல்லது 3 கிராமங்களுக்கு ஒரு சங்கம் என்று அமைய வேண்டும். அப்படி அமையும் எந்தச் சங்கமும் 1,000 மக்களுக்கு மேல் சேவை செய்யக்கூடாது. மேத்தா குழுவும் ஏறக்குறைய இதே கருத்தைத்தான் வெளியிட்டுள்ளது. இக் குழுவின் கருத்துப்படி, சேவைச் சங்கங்கள் கடன் சங்கங்களைப்போல் கிராமத்திற்கு ஒன்றாகத்தான் இருக்கவேண்டும். 3,000 மக்களுக்குமேல் எந்தச் சங்கத்திடமிருந்தும் பலன் பெறக்கூடாது. அவ்வாறாயின், மிகச் சிறிய கிராமங்கள் சிலவற்றைச் சேர்த்து 3 அல்லது 4 மைல் சுற்றளவுக்கு ஒரு சங்கமாக அமைக்க வேண்டும்.

1964-ல் ஹைதராபாத் நகரில் கூடிய மாநிலக் கூட்டுறவு அமைச்சர்களின் கூட்டத்திலும் கூட்டுறவுச் சங்கம் எந்த அளவில் இருக்க வேண்டுமென ஆராயப்பட்டது. ஒரு சங்கம் திறமையுள்ளதாகவும் நட்டமின்றி இயங்கக்கூடியதாயுமிருக்க வேண்டுமானால் அது எந்த அளவில் அமையவேண்டுமோ அந்த அளவில் அமைப்பதே நல்லதென இக்கூட்டம் முடிவு செய்தது. அதாவது போதுமான அளவு உறுப்பினர்களைப்பெற்று, கூட்டுறவுப் பணிகளையும் போதுமான அளவு செய்து, வேண்டிய அளவு இலாபத்தைப் பெறக்கூடியதாக அமையவேண்டும். அவ்வாறு அமைவதற்குக் கீழ்க்காணும் நிபந்தனைகளையும் அக்கூட்டம் கொடுத்துள்ளது.

1. கூட்டுறவுச் சங்கம் நிரந்தரமான அலுவலகத்தைப் பெறக் கூடியதாக இருக்கவேண்டும்.

2. அவ்வலுவலகத்தில் முழு நேரம் பணியாற்றக்கூடிய பணியாளர் ஒருவரை நியமித்து அவருக்கு ஊதியம் தரக்கூடிய தாயும் அமைய வேண்டும்.

3. ஒவ்வொரு சங்கமும் காப்பு நிதியை உருவாக்கி, அதில் வேண்டிய அளவு நிதியைச் சேர்க்கக்கூடியதாயிருக்க வேண்டும்.

4. சங்கத்தில் முதலீடு செய்தவர்களுக்கு ஓரளவிற்காகிலும் நல்ல இலாப ஈவு கிடைக்கும்படியும் அமையவேண்டும்.

இந்நான்கு நிபந்தனைகளையும் அடிப்படையாகக்கொண்டு கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இலாபகரமாக இயங்கமுடியாத சின்னஞ்சிறு சங்கங்களெல்லாம் அருகிலிருந்த ஏனைய சங்கங்களோடு ஒருங்கிணைக்கப்பட்டன. இதன் விளைவாக, கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது. சான்றாக 1961-ல் 2·2 இலட்சமாக இருந்த சங்கங்கள் 1971-ல் 1·2 இலட்சமாகக் குறைந்துவிட்டன. கூட்டுறவுச் சங்கங்கள் இலாபகரமான முறையில் இயங்க வேண்டுமென்பதற்காக நிர்வாகச் செலவுக்கான மானியத் தொகையை அரசாங்கம் அளிக்க முன் வந்துள்ளது. இம் மானியத்தைப் பெறும் சங்கங்கள் 2, 3 ஆண்டுகளுக்குள் இலாபகரமாக இயங்க முற்படவேண்டுமென்பது நிபந்தனை. அரசாங்கம் சங்கங்களின் நிர்வாகச் செலவுக்கென்று மானியத் தொகை வழங்கும் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது செயல்படுத்தப்பட்டது. இதற்கென அரசாங்கம் ரூ. 9·6 கோடியைக் கூட்டுறவுச் சேவைச் சங்க நிர்வாகத்திற்காகச் செலவிட்டது.

இந்த நிர்வாக மானியத் தொகையால் கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வளவுதூரம் பயனடைந்து முன்னேறியுள்ளன என்பதை ஆராய்வதற்காகத் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கார்ப்பரேசன் ஒரு குழுவை நியமித்தது. இக் குழு தன் அறிக்கையை 1965-66-ல் அளித்தது. அவ் வறிக்கையின்படி நிர்வாக மானியத் தொகை பெற்ற சங்கங்கள் அனைத்தும் அதிக உறுப்பினர்களையும் பங்கு மூலதனத்தையும் பெற்று நல்ல முறையில் வளர்ந்து வருவதாக அறிய வருகிறோம். மேலும், நிர்வாக மானியத் தொகை போதிய அளவு இல்லாததால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது அத்தொகையை அதிகரிக்கவேண்டுமென இக் குழு சிபாரிசு செய் துள்ளது. எனவே, நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு

சங்கத்திற்கும் அதிகபட்சம் 1,800 ரூபாய் நிர்வாக மானியமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத் தொகை 3 அல்லது நான்கு ஆண்டுகளுக்குத்தான் வழங்கப்படும்; அதற்குள் இம் மானியம் பெறும் சங்கங்கள் வளர்ச்சிபெற்று இலாபகரமாக இயங்க வேண்டும்.

பங்கு மூலதனம்

கூட்டுறவுச் சங்கத்தின் வலிமை அது கொண்டுள்ள பங்கு மூலதனத்தைப் பொறுத்தது. ஒரு சங்கத்தின் நிதி நிலையை உயர்த்துவதும் கடன் வாங்க அடிப்படையாக இருப்பதும் இப் பங்கு மூலதனம்தான். எனவேதான், கூட்டுறவுச் சங்கங்கள் அதிக உறுப்பினர்களைக் கவர்ந்து தம் பங்கு மூலதனத்தை அதிகரிக்க வேண்டுமென்று மேத்தா குழுவினர் வலியுறுத்தினர். மேலும், உறுப்பினர்கள் செலுத்திய பங்கு மூலதனத்தைப்போல் 8 அல்லது 10 மடங்குத் தொகையைத்தான் சங்கங்கள் அவர்களுக்குக் கடனளிக்க வேண்டுமென்றும், அப்போதுதான் உறுப்பினர்கள் அதிகப் பங்கை வாங்க முன்வருவர் என்றும் இக்குழுவினர் சிபாரிசு செய்தனர். ரூ. 200-க்குமேல் கடன் தேவைப்படாத உறுப்பினர்களிடமிருந்து அவர்களின் பங்கு மூலதனத்தைத் தவணை முறையில் வாங்கும் உபாயத்தையும் இக்குழுவினர் சிபாரிசு செய்தனர்.

மேலும், சேவைச் சங்கங்களில் எந்த அளவுக்கு அரசாங்கம் பங்குகொள்ளவேண்டும் என்பதையும் மேத்தா குழு ஆராய்ந்தது. அரசாங்கம் பெரிய சங்கங்களின் பங்கைத்தான் அதுவரை வாங்கி வந்தது. எனவே, கூட்டுறவுச் சேவைச் சங்கங்களிலும் அரசாங்கம் பங்குகொள்ள வேண்டுமென்று இக் குழு வலியுறுத்தியது. அதன் படி கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பங்குகளை மாநில அரசாங்கங்கள் வாங்க முன் வந்தன. பெரிய கிராமங்களில் இயங்கிவந்த சங்கங்களிலெல்லாம் அரசாங்கம் ரூ. 5,000 அளவுக்குத்தான் பங்கு வாங்கின. முன்னேற்றமடையாத இடங்களில் இயங்கிவந்த சங்கங்களில் மட்டும் ரூ. 10,000 வரை பங்குபெற்றன. மேலும், அரசாங்கத்தின் கடன் பொறுப்பு அது பெற்றுள்ள பங்கு மூலதன அளவிற்கே வரையறுக்கப்பட்டது.

பின்னர் 1970-ல் அகில இந்தியக் கிராமக் கடன் ஆய்வுக் குழுவின் சிபாரிசின் பேரில் அரசாங்கத்தின் பங்கு ரூ. 10,000 வரை இருக்கலாமென ரிசர்வ் பாங்கு முடிவு செய்தது. இம் முடிவு பல நிபந்தனைகளின் பேரில் எடுக்கப்பட்டது. அதாவது, அரசாங்கம் 10,000 ரூபாய் பங்கு மூலதனம் செலுத்த வேண்டுமானால் அச்சங்கத்திற்கு வராக் கடன் 30 சதவீதத்திற்கு மேல் இருக்கக் கூடாது; மொத்தக் கடனில்

குடும்பச் செலவுக்காக 5 சதவீதம் வரைதான் வழங்கியிருக்க வேண்டும்.

வைப்புத் தொகை

கூட்டுறவுச் சங்கத்தின் வலிமை அதன் உறுப்பினர்கள் கொண்டுள்ள வைப்புத் தொகையையும் பொறுத்ததாகும். ஆனால், பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்களிடம் கணிசமான அளவு வைப்புத் தொகை கிடையாது. எனவே, கூட்டுறவு இயக்கமே ரிசர்வ் பாங்கு தரும் கடனை நம்பியே இயங்கி வருகிறது. இது கூட்டுறவு இயக்கத்திற்கு நல்லதன்று. கூட்டுறவு இயக்கம் எவ்வளவுக்கெவ்வளவு பிற நிறுவனங்களைச் சார்ந்திராமல் தன்னையே நம்பி, தனக்கு வேண்டிய நிதி வசதிகளையெல்லாம் தானே தேடிக் கொள்கிறதோ அவ்வளவிற்கு அதன் நிலைமை வலிமை பெறுகிறது. மேத்தா குழுவும் இதைத்தான் வலியுறுத்தியுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்க நிதியையோ, உதவியையோ எதிர்பாராமல் உறுப்பினர்களின் வைப்புத் தொகையை அதிகரிக்கும் வகையில் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமெனச் சிபாரிசு செய்துள்ளது. அவ்வாறு பெருமளவில் வைப்புத் தொகை பெற வேண்டுமானால் தம் சேமிப்பைச் சங்கங்களிடம் வைப்புத் தொகையாக வைக்க விரும்புவோருக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும்; இந்த நம்பிக்கையை ஏற்படுத்துவது சங்கங்களின் கையில்தான் இருக்கிறது. மேலும், அவ்வாறு வைத்திருப்போர் தமக்கு வேண்டியபோது அத் தொகையைத் திரும்பப் பெற வசதி செய்து தர வேண்டும். இந்நிலையைச் சங்கங்கள் அடைய வேண்டுமானால் அவற்றின் நிர்வாகிகள் திறமையும் நேர்மையும் உள்ளவர்களாய் இருப்பது அவசியம்; அப்போதுதான் மக்களின் சேமிப்புத் தொகையைக் கவர முடியும். 1971-ல் விவசாயக் கடன் சங்கங்களின் வைப்புத் தொகை ரூ. 69 கோடிக்கு உயர்ந்துள்ளது.

விளைச்சல் கடன்

கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் விவசாயிகளுக்குச் சாகுபடிக்கு வேண்டிய கடனுதவியைச் செய்ய வேண்டுமென ரிசர்வ் பாங்கு வலியுறுத்தியது. எனவே, எல்லா மாநிலங்களிலும் இக் கடனுதவியைச் செய்து வருகின்றன. சாகுபடி செய்து விவசாயப் பொருள்களை விளைவிப்பதற்காக வழங்கப்படும் இக் கடன் விளைச்சல் கடன் என வழங்கப்படுகிறது. பல்வேறு பயிர்களைச் சாகுபடி செய்வதற்குச் சராசரி ஏற்படும் செலவு எவ்வளவோ அதன் அடிப்படையில் இக் கடன் வழங்கப்படுகிறது. எனவே, இக் கடன் கீழ்க்கண்ட முறையில் அளிக்கப்படுகிறது.

1. விவசாயச் சாகுபடிக்கான கடன்தொகை நான்கு இனமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது,

(அ) முதல் இனம் : பரம்பரை வழக்கப்படி அதிக உரமின்றிச் சாகுபடி செய்வதற்குத் தேவையான கடன். இவ்வினத்தின்படி உறுப்பினர்கள் சாகுபடி செய்யும் விளை பொருளின் மதிப்பில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே கடனாகத் தரப்படுகிறது. வேலையாள்களுக்கான கூலியையும் செலவு கணக்கில் காண்பிக்கலாம்.

(ஆ) இரண்டாம் இனம் : சாகுபடிக்குத் தேவையான விதை வித்துகள், உரம், பூச்சி மருந்துகள் ஆகியவற்றிற்கு மட்டும் இவ்வினத்தில் கடன் வழங்கப்படுகிறது; இக் கடன் பணமாகத் தரப்படாமல் பொருள் வடிவிலேயே தரப்படுகிறது.

(இ) மூன்றும் இனம் : இரண்டாம் இனத்தின்படி வாங்கக் கூடிய கடனில் 50 சதவீதம் வரை ரொக்கமாக இவ்வினத்தில் கடன் தரப்படுகிறது. இது பூச்சி மருந்து தெளித்தல், உரம் வைத்தல் போன்ற செலவுக்காகக் கொடுக்கப்படுகிறது.

(ஈ) நான்காம் இனம் : முந்திய ஆண்டில் உறுப்பினர்கள் தம் விளைச்சலைக் கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கத்தின் வாயிலாக விற்றிருந்தால், அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இவ்வினத்தில் கடன் ரொக்கமாக வழங்கப்படுகிறது. இக் கடன் எல்லாச் சங்கங்களாலும் கொடுக்கப்படுவதில்லை.

2. சராசரி ஒவ்வோர் ஏக்கர் நிலத்திலும் வெவ்வேறு பயிர்களைச் சாகுபடி செய்யும்போது என்ன செலவு ஏற்படும் என்பதை மாவட்ட விவசாய அதிகாரி கணக்கிட்டு, அவ்விவரங்களடங்கிய பட்டியலை மாவட்ட மத்திய வங்கியிடம் கொடுத்துவிடுகிறார்.

3. மேற்கூறிய செலவுப் பட்டியல் மாவட்டச் சாகுபடி அபிவிருத்தி அதிகாரிகளின் கூட்டத்தில் ஆண்டுதோறும் பரிசீலனை செய்யப்படுகிறது. இக் கூட்டத்தில் கூட்டுறவு மத்திய வங்கி நிர்வாகிகள், மாவட்ட விவசாய அதிகாரி, யூனியன் தலைவர், கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர், வட்டார அபிவிருத்தி அதிகாரி, குறிப்பிட்ட சில விவசாயிகள், சேவைச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கு கொள்கின்றனர்.

4. அதன் பின்னர்க் கூட்டுறவுச் சேவைச் சங்கம் ஒவ்வோர் உறுப்பினருக்கும் அதிகபட்சம் ஒவ்வோர் இனத்திலும் எவ்வளவு

விளைச்சல் கடனைத் தரலாமென நிர்ணயிக்கிறது. அவ்வாறு நிர்ண யம் செய்யும்போது 'உறுப்பினர்கள் ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவு மகசூலைப் பெறுகின்றனர், மாவட்டச் சாகுபடி அபிவிருத்தி மாநாட்டில் எடுத்த முடிவின்படி அவ் விளைபொருள் சாகுபடிக்கு எவ்வளவு செலவாகும், கூட்டுறவுப் பதிவாளர்கள் நிர்ணயித்துள்ள உச்சவரம்பு என்ன என்பதையெல்லாம் சங்கங்கள் கணக்கெடுக் கின்றன.

5. கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொன்றுக்கும் அதிகபட்சம் எவ்வளவு கடன் தரலாம் என்பதைக் கூட்டுறவு மைய வங்கி தீர் மானிக்கிறது. அவ்வாறு தீர்மானிக்கும்போது சங்கத்திற்குச் சொந்தமான நிதி எவ்வளவு, அச்சங்கம் எவ்வளவு கடனைத் தாங்கிக் கொள்ள முடியும் என்று ஆராயப்படுகிறது.

6. உறுப்பினர்கள் கடன் பெறுவதற்கு முன் அவர்களிடம் கடன் பாக்கி உள்ளதா, வேண்டிய அளவுக்குப் பங்கு மூலதனம் செலுத்தியுள்ளனரா என்பதைச் சங்கம் பரிசீலனை செய்கிறது. அதோடு, உறுப்பினர்கள் சங்கத்திடம் ஒப்பந்தப் பத்திரம் எழுதித் தர வேண்டும்.

பொதுவாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் தாம் பெறும் கடனுக்கு மொத்தமாக புரோநோட்டு எழுதிக் கூட்டுறவு மைய வங்கியிடம் கொடுத்துவிடுகின்றன. இப் புரோநோட்டின் பேரில் ஓராண்டிற்கு இவை கடன் பெறலாம்.

மத்திய காலக் கடன்

கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு அதிக அளவு மத்திய காலக் கடன் தர வேண்டுமென மேத்தா குழு சிபாரிசு செய்துள் ளது. நில அடைமானமின்றி ரூ. 500 வரை இக் கடன் கொடுக்க லாம்; அதற்கு இருவர் உத்தரவாதக் கையெழுத்துப் போட்டால் போதும். ரூ 1,000க்கு அதிகமாகக் கடன் கொடுக்க வேண்டுமாயின் சொத்து அடைமானம் பெறவேண்டும். மேத்தா குழுவினர் செய்த இம் முடிவை அமலாக்குவதற்கென்று ரிசர்வ் பாங்கு எல்லா மாநில அரசுகளுக்கும் சுற்றறிக்கையொன்றை விடுத்தது. ஆனால், உத்தரவாதத்தின் பேரில் ரூ. 10,00 வரையிலும், ரூ. 1,500-க்குமேல் ஈட்டின் பேரிலும் கடன் தரலாமென அச் சுற்றறிக்கை குறிப்பிட் டது. மேலும், கிணறுவெட்டுவதற்கும் பம்புசெட் வாங்குவதற் கும் உறுப்பினர்களின் நாணயத்தின் பேரில் ரூ. 3,500 வரை கடன் தரலாமென்று ரிசர்வ் பாங்கு சிபாரிசு செய்திருக்கிறது. மேலும்,

விவசாயக் கருவிகளை வாங்க விரும்பும் விவசாயிகளுக்கு ரூ. 3,500 வரை கடன் தரலாமென்றும் சிபாரிசு செய்துள்ளது. அவ்வாறு விவசாயக் கருவிகளை அல்லது இயந்திரங்களை வாங்கக் கடன் பெறும் உறுப்பினர்கள் அதன் மொத்த விலையில் 15 சதவீதத்தை யாகிலும் தாமே செலுத்த வேண்டும்; அதோடு அதன் மதிப்பில் 10 சதவீதத் தொகையை சங்கத்தின் பங்கு மூலதனமாகப் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு விவசாயக் கருவிகளை வாங்கும்போது அக் கடன் தொகை விவசாயிகளுக்கு அளிக்கப்படாமல் அவற்றை விநியோகிக்கும் விற்பனையாளர்களுக்கே செலுத்தப்படுகிறது. அக் கடன் தொகையை விவசாயிகள் திரும்பச் செலுத்தும் வரை அக் கருவிகள் சங்கத்தின் பெயரிலேயே இருக்கும். அவற்றைக் காப்பீடு செய்யும் பொறுப்பைச் சங்கமே மேற்கொள்கிறது. மேலும் சிறு குடியானவர்கள் பால் பண்ணை, கோழிப் பண்ணைகளை அமைக்க விரும்பினால் உத்தரவாதத்தின் பேரில் அவர்களுக்கு ரூ. 2,000 வரை கடன் தரலாமென்று ரிசர்வ் பாங்கு உத்தரவிட்டுள்ளது.

வட்டி வீதம்

வட்டிக் கடைக்காரர்கள் வசூலிக்கும் வட்டி அளவுக்குமிஞ்சி அதிகமானது. எனவே, கூட்டுறவுச் சங்கம் நியாயமான வட்டிக்குத் தான் கடன் கொடுக்கவேண்டும். கூட்டுறவுச் சங்கம் அதிக வட்டிக்குக் கடன் கொடுத்தாலும் நல்லதுதான் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், அதிக வட்டி வசூலித்தால் சங்கத்திற்கு அதிக இலாபம் கிடைக்கும். இந்த இலாபம் மறுபடியும் உறுப்பினர்களுக்கு இலாப ஈவாக வந்து விடுகிறது; அல்லது காப்பு நிதியிலும் பிற நிதிகளிலும் சேர்க்கப்படுகிறது. அவ்வாறு சங்கத்தின் காப்பு நிதி அதிகரித்துவிட்டால் அச்சங்கம் நிதி வசதியுடையதாகி, குறைந்த வட்டிக்கே கடன் கொடுக்க முடியும். மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் மலிவான வட்டிக்குக் கடன் கொடுப்பது நல்லதல்ல. அப்படிக் கொடுத்தால் உறுப்பினர்கள் கண்டபடி கடன் வாங்கக்கூடும்; அல்லது சங்கத்திடமிருந்து கடன் வாங்கி, அதை மற்றவர்களுக்கு அதிக வட்டிக்குக் கொடுக்க நேரிடலாம். மலிவான வட்டிக்குக் கடன் கொடுத்தால் உறுப்பினர்களின் வைப்புத் தொகைக்கும் மலிவான வட்டிதான் கிடைக்கும். அப்போது சேமிக்கவேண்டும் என்ற பழக்கம் உறுப்பினர்களிடையே குறைந்துவிடலாம்.

எனவே, சங்கங்கள் வசூலிக்கும் வட்டி வீதம் நியாயமானதாயும் அறிவுக்குகந்ததாயும் இருக்கவேண்டும். அப்படி வட்டி வீதத்தை நிர்ணயிக்கும்போது கீழ்க்காணும் நிலைமைகளையும் பரிசீலித்துப் பார்க்க வேண்டும்.

1. எந்த வட்டி கொடுத்தால் உறுப்பினர்களின் வைப்புத் தொகையைக் கணிசமான அளவு பெற முடியும்;

2. சங்கத்தின் நிர்வாகச் செலவு எவ்வளவு? அச் செலவை எவ்வளவிற்குக் குறைப்பது? அப்படிக் குறைத்தால் சங்கத்தின் நிர்வாகம் பாதிக்கப்படுமா? பயிற்சிபெற்ற பணியாளர்களை நிர்வாக வேலைக்கமர்த்த வேண்டுமா?

3. சங்கத்திற்குச் சொந்தமாக இருக்கும் நிதி எவ்வளவு? நிதி அதிகமாயிருந்தால்தானே கடன் தொகைக்கு மலிவான வட்டியை நிர்ணயிக்க முடியும்?

4. கூட்டுறவு மைய வங்கி வசூலிக்கும் வட்டி என்ன? அவ் வங்கியிடமிருந்து சங்கம் எவ்வளவு கடன் பெறுகிறது?

கடனைத் திருப்பிப் பெறுதல்

கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து கடன்பெற்ற உறுப்பினர்கள் குறித்த தவணைக்குள் அதைத் திருப்பிக் கொடுத்தால்தான் சங்கம் வளரும். அப்படித் திருப்பிக் கொடுக்கும் நல்ல பழக்கம் உறுப்பின ரிடையே வளர்ந்தால் கடன்பெற விரும்பும் உறுப்பினர்களுக்குக் கடன் கொடுத்து உதவ முடியும். அப்போதுதான் சங்கத்திற்கு வரவேண்டிய கடன் வந்துகொண்டேயிருக்கும்; சங்கமும் ஏனைய உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கிக்கொண்டே இருக்க முடியும். இதற்காகத்தான் உறுப்பினர்கள் கடன் வாங்கும்போது, எந்தக் காரணத்திற்காக, எவ்வளவு நாள்களுக்கு அக்கடன் தேவைப்படு கிறது என்பதையெல்லாம் விவரமாகச் சங்கம் பரிசீலனை செய் கிறது. அக்காலம் முடிவடைவதற்குள் உறுப்பினர்கள் தாம்பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துவதுதான் நியாயம்.

ஆனால், கடந்த பல ஆண்டுகளாக உறுப்பினர்கள் தவணைக் காலத்திற்குள் கடனைத் திருப்பித் தராமல் இருந்து வந்திருக்கின் றனர். இதனால்தான் தவணைகடந்த கடனின் சதவீதமும் அதிகரித் துக்கொண்டே சென்றுள்ளது. பெற்ற கடனை உறுப்பினர்கள் தவணை காலத்திற்குள் சங்கத்திடம் திருப்பிக் கொடுத்தால்தான் சங்கமும் கூட்டுறவு மைய வங்கிக்குச் செலுத்தவேண்டிய கடன் தொகையை உரிய காலத்தில் செலுத்த முடியும். கடந்த சில ஆண்டுகளில் தவணை முடிந்த கடன் எவ்வளவு தூரம் அதிகரித்து வந்துள்ளது என்பதைக் கீழ்க்காணும் பட்டியலிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

மொத்தக் கடனில் தவணைகடந்த கடனின் சத வீதம்		
ஆண்டு	விவசாயக் கடன் சங்கங்களுக்கு உறுப்பினர்கள் செலுத்த வேண்டியது	மைய வங்கிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் செலுத்தவேண்டியது
1950–51	22	9
1955–56	25	22
1961–62	24·5	15·7
1964–65	26	16·4
1965–66	29	20·2
1966–67	33	24·9
1967–68	32	25
1968–69	35	26
1969–70	36	29

இவ்வாறு, தவணை கடந்தும் கடன் திருப்பித் தரப்படாமலிருப்பதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அகில இந்திய கிராமக் கடன் ஆய்வுக்குழு தரும் காரணங்கள் வருமாறு: சரியான மேற்பார்வை இல்லாதது; கடன் கொடுக்கும் கொள்கையைச் ரியாகக் கடைப்பிடிக்காதது; திறமையற்ற நிர்வாகம்; மற்ற வட்டி வீதத்தைக் காட்டிலும் குறைந்த வட்டி வீதம்; வராக் கடனைச் சமாளிக்கக்கூடிய அளவுக்குச் சங்கங்களிடம் போதிய நிதி வசதி இல்லாதது; விளைச்சல் மோசமாகி விடுவது; அரசியல் வாதிகளின் தலையீடு; கடன்பெறும் விவசாயிகள் தம் விளைபொருள்களைக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் வாயிலாக விற்காதது போன்றன ஆகும்.

வராக் கடன் தொகை அதிகரித்துக்கொண்டே போவது கூட்டுறவு இயக்கத்திற்கு நல்லதன்று. எனவே, இதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பது நன்று. எந்த விதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது வருமாறு:

1. உறுப்பினர்களுக்குக் கடன் கொடுக்கும்போது அவர்கள் ஆக்கப் பணிக்காகத்தான் கேட்கிறார்களா ஆடம்பரச் செலவுக்காகக் கேட்கிறார்களா என்பதைக் கூட்டுறவுச் சங்கங்கள் பரிசீலனை செய்யவேண்டும்; எந்த நோக்கத்திற்காகக் கடன் கொடுக்கப்

பட்டதோ அதற்காக அப்பணம் செலவிடப்படுகிறதா என்பதையும் கண்காணிக்க வேண்டும். பல விவசாயிகள் விவசாயத்திற்கென்று கடனைப்பெற்று, வீட்டுச் செலவிற்காகப் பயன்படுத்துகின்றனர் இதைத் தடுப்பதற்கு ஒருசில மாநிலங்களில் விளைச்சல் கடன்கூட வியாபாரத்திற்காக விளைவிக்கப்படும் பொருள்களுக்குத்தான் கொடுக்கப்படுகின்றன. அந்த மாநிலங்களிலெல்லாம் வராக்கடன் கணிசமாகக் குறைந்து வருகிறது. எனவே, ஏனைய மாநிலங்களும் இவ்வழியைப் பின்பற்றினால் நல்லது.

2. கொடுக்கப்பட்ட கடன் உரிய காரணத்திற்காகச் செல வழிக்கப்படுகிறதா என்பதைக் கூட்டுறவுச் சங்கம் கண்காணிக்க வேண்டுமெனக் குறிப்பிட்டோம். இதைச் சங்க நிர்வாகத்தினர் தாம் செய்யவேண்டும். ஒருசில சங்கங்கள் இதை மேற்பார்வை யிடுவதற்கென்று மேற்பார்வைக் குழுக்களை அமைத்துள்ளன. மேலும், விவசாயிகள் கடனைத் தாறுமாறாகச் செலவழிப்பதைத் தடுக்க அவர்களுக்குவேண்டிய கடனை ரொக்கமாகத் தராமல் பொருள்களாகவே கொடுப்பது நல்லது.

3. கடன்பெறும் விவசாயிகள் தம் விளைச்சலைக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் வாயிலாக விற்கும்படி செய்ய வேண்டும். அப்போதுதான் விற்ற தொகையிலிருந்து கடன் தொகையைத் திரும்பப் பெறுவது எளிதாக இருக்கும்.

4. உறுப்பினர்களுக்கு எவ்வளவு கடன் கொடுக்கலா மென்பதை நிர்ணயிக்கும்போது அவர்கள் இதுவரை எவ்வளவு கடன் வாங்கியிருக்கின்றனர்; அதைத் தவணைக் காலத்திற்குள் திருப்பித் தந்திருக்கின்றனரா என்பதையும் அடிப்படையாகக் கொள்ளவேண்டும். பல மாநிலங்களில் பழைய கடனையெல்லாம் உறுப்பினர்கள் திருப்பிக் கொடுத்த பின்னர்த்தான் புதிய கடனைப் பற்றிச் சங்கங்கள் பரிசீலனை செய்கின்றன. மேலும், கடனைச் சரியாகத் திருப்பித்தராத உறுப்பினர்களுக்கு அவர்கள் சங்கத்திட மிருந்து பெறக்கூடிய அதிகபட்சக் கடன் தொகை குறைக்கப்பட்டு விடுகிறது.

5. தவணைப்படி கடனைத் திருப்பித் தரும் உறுப்பினர்களுக்கு மட்டும் வட்டி வீதம் குறைவு என்ற முறையைப் புகுத்தினால் மற்ற வர்களும் உரிய காலத்திற்குள் தம் கடனைத் திருப்பித் தரலாம்.

6 கொடுத்த கடனை உரிய முறையில் திரும்பப் பெறவேண்டு மானால் சங்க நிர்வாகிகளும் ஏனைய பணியாளர்களும் திறமை மிக்க வர்களாயிருக்க வேண்டும்.

ஏழைக் குடியானவர்களுக்குக் கடனுதவி

சிறு நிலக் குடியானவர்களுக்கும் ஏழைக் குடியானவர்களுக்கும் அதிக அளவு கடன்தர வேண்டுமென்று மேத்தா குழு சிபாரிசு செய்துள்ளது. அப்படி அவர்களுக்குக் கடன் கொடுத்தால் அக் கடனை அவர்கள் திருப்பித்தர இயலாத நிலை ஏற்படலாம். எனவே, அதைச் சரிக்கட்டுவதற்கென்று 'வராக் கடன் நிதி' (Bad debt fund) யொன்றை ஒவ்வொரு சங்கம் மட்டுமன்றி, மாவட்ட மைய வங்கியும் மாநில வங்கியும்கூட உருவாக்க வேண்டுமென்றும் இக் குழு ஆலோசனை கூறியுள்ளது. இவ்வகை நிதியை உருவாக்க முன்வரும் சங்கங்களுக்கு சிறப்பு மானியத் தொகையை வழங்குவதென்று மாநில அரசுகள் முடிவெடுத்துள்ளன. முந்திய ஆண்டில் ஒவ்வொரு கடன் சங்கமும் எவ்வளவு கூடுதலாகக் கடன் கொடுத்ததோ அதில் 3 சதவீதத் தொகை சிறப்பு மானியமாகக் கொடுக்க மாநில அரசுகள் முன்வந்துள்ளன. மாநில அரசுகள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தந்துள்ள மானியத் தொகையில் 50 சதவீதத்தை அந்தந்த அரசுகளுக்குத் திருப்பிக் கொடுத்துவிடுவதென்று தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் முடிவு செய்துள்ளது. அதன்படி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் ரூ. 2 கோடித் தொகையை மாநில அரசுகளுக்குக் கொடுத்துவிட்டது.

நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தில் இந்திய அரசாங்கம் தொடர்ந்து மானியம் வழங்க முடிவு செய்துள்ளது. இம் மானியம் பல நிபந்தனைகளின்பேரில் வழங்கப்படும். அந் நிபந்தனைகள் வருமாறு:

1. ஏழை, எளிய குடியானவர்களுக்குக் கடன் தரும் சங்கங்களுக்கே இம் மானியம் வழங்கப்படும்.

2. ஏழை, எளிய விவசாயிகள் இம் மானியத் தொகையினால் பலன்பெற வேண்டுமானால், அவர்கள் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாயிருந்தாலும் சரி, நிலமில்லாத குத்தகையாளர்களாயிருந்தாலும் சரி, அவர்களுக்குத் தேவைப்படும் கடன் 200 ரூபாய்க்கு மேல் இருக்கக்கூடாது.

(3) ஏழை விவசாயிகளுக்கு முந்திய ஆண்டு கொடுத்த கடனைக் காட்டிலும் எவ்வளவு அதிகத் தொகை நடப்பாண்டில் கொடுக்கப்பட்டுள்ளதோ அத்தொகையின் அடிப்படையில்தான் அரசாங்கம் மானியம் கொடுக்கும்.

(4) அவ்வாறு வழங்கப்பட்ட கூடுதலான தொகையில் மைய வங்கிக்கு 12 சதவீதமும் தொடக்கச் சங்கங்களுக்கு 4 சதவீதமும் மானியமாகத் தரப்படும்.

(5) ஏழை விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் சங்கங்கள் அக்கடனை எவ்வழியிலும் திருப்பிப்பெறமுடியாமல் நட்டப்பட்டால் அந்நட்டத்தை ஈடு செய்யக் காப்பு நிதியைப் பயன்படுத்தலாம். ஆனால், மைய வங்கிகளுக்கு ஏற்படும் நட்டத்தை ஈடு செய்ய அக்கடனால் ஏற்பட்ட நட்டம் எவ்வளவோ அதில் 2/3 பாகம் அளவுக்குத்தான் காப்பு நிதியிலிருந்து எடுக்கலாம். எஞ்சிய நட்டத்தை வங்கியே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

விவசாயச் சாதனங்களை வழங்கல்

கூட்டுறவுச் சேவைச் சங்கங்களின் முக்கியப் பணி சாகுபடிக்குத் தேவையான எல்லாச் சாதனங்களையும் வழங்குவதாகும். ஆந்திரா, பீஹார், குஜராத், ஜம்மு-காஷ்மீர், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், மைசூர், ஒரிஸ்ஸா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களி லெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே உர விநியோகம் செய்துவருகின்றன. தனிப்பட்ட வியாபாரிகள் எவரும் உரத்தைக் கொள்முதல் செய்து விற்க முடியாது. மேற்கு வங்காளம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் ஒருசில மாவட்டங்களில் மட்டும்தான் கூட்டுறவுச் சங்கங்களே உர விநியோகம் செய் கின்றன. உத்தரப் பிரதேசத்தில் கூட்டுறவுச் சங்கங்களும் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள விவசாய விநியோக நிறு வனமும் சேர்ந்து இப்பணியைச் செய்கின்றன.

மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், மைசூர், பஞ்சாப் போன்ற மாநிலங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் தரமான விதை களையும் விநியோகம் செய்கின்றன. 1970-71-ல் மட்டும் கூட்டு றவுச் சங்கங்கள் விவசாயத்திற்கு ரூ. 24 கோடி மதிப்புள்ள விதை களை விநியோகித்துள்ளன. 1970-71-ல் மட்டும் சுமார் 6·4 கோடி ரூபாய் மதிப்புள்ள விவசாயக் கருவிகளை விற்றிருக்கின்றன. கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள் சாகுபடிக்குத் தேவையான சாத னங்களை விநியோகிப்பதில் எவ்வளவு தூரம் முன்னேற்றமடைந் திருக்கின்றன என்பதைக் கீழ்க்காணும் பட்டியலிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

(கோடி ரூபாய்)

ஆண்டு	இரசாயன உரங்கள்	விதைகள்	விவசாயக் கருவிகள்	இதரச் சாத னங்கள்	மொத்தம்
1960-61	28·22	3·03	0·61	3·83	35·69
1961-62	32·27	6·84	0·91	0·45	40·47
1962-63	39·52	7.03	2·10	6·02	54·67
1963-64	57·31	10·40	3·78	8.73	80·22
1964-65	72·84	12·43	5·84	12·57	103·68
1965-66	80·11	19·72	4·63	16·62	121·08
1966 67	114·37	24·68	5·44	17·69	162 19
1967-68	183·19	24·39	6·82	19·24	233·64
1968-69	200·24	23·92	6·42	22·32	252·89
1970-71	250·00	23·52	6·41	17·72	297·65

வீட்டுச் சாமான்கள் விநியோகம்

கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள் வீட்டிற்குத் தேவைப்படும் சர்க்கரை, மண்ணெண்ணெய், உணவுத்தானியம் போன்ற பொருள்களையும் உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்து வருகின்றன. இப் பணியின் விவரத்தை நுகர்வோர் கூட்டுறவுப் பண்டக சாலை என்னும் அதிகாரத்தில் கிராமப்புற மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் என்னும் தலைப்பில் காணலாம்.

பண்டகங்கள்

கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள் தம் அலுவலகங்களோடு பண்டகங்களையும் கிராமங்களில் கொண்டுள்ளன. இச் சங்கங்கள் கிராம மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வது அவசியம். எனவே, சங்கத்தின் செயலாளர் வேலை நேரத்திலாவது அலுவலகத்தில் இருக்க வேண்டும். மேலும், உறுப்பினர்களுக்குத் தேவையான பண்ணைப் பொருள்களையும் வீட்டுச் சாமான்களையும் கொள்முதல் செய்து வைப்பதற்குப் பண்டகங்களும் தேவைப்படுகின்றன. இப் பண்டகங்களைக் கட்டுவதற்கு அரசாங்கம் உதவி செய்து வருகிறது. ஒவ்வொரு பண்டகத்திற்கும் அரசாங்கம் ரூ. 12,500 வரை கொடுக்கிறது. 1969 வரை சுமார் 14,267 பண்டகங்கள் இவ்வுதவியைப் பெற்றிருக்கின்றன. அரசாங்கம் தரும் தொகையில் 75 சதவீதம் கடனாகவும் எஞ்சிய தொகை மானியமாகவும் தரப்படுகிறது.

திறமையான நிர்வாகம்

கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள் நம் நாட்டு விவசாயத் துறையில் முக்கியப் பங்குகொள்கின்றன. நமது அரசாங்கத்தின் குறிக்கோளின்படி ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சேவைச் சங்கம் இயங்க வேண்டும். எல்லாக் குடும்பங்களும் அவற்றில் பங்கு கொள்ள வேண்டும். பண்ணைக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் வீட்டிற்குத் தேவையான அவசியப் பொருள்களையும் இச் சங்கங்கள் விநியோகிக்க வேண்டும். அதோடு, விவசாயிகள் விளைவிக்கும் பொருள்களை நல்ல விலைக்கு விற்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்வளவு பணிகளையும் இச் சங்கங்கள் நல்ல முறையில் செய்ய வேண்டுமென்றால், அவற்றைச் சிறப்பாக நிர்வகிக்கக்கூடிய திறமை அவசியம். ஊதியமின்றி வெறும் கௌரவத்திற்காகச் சங்கங்களை நிர்வகிக்கும் முறை இவற்றிற்கு ஒவ்வாது. அந்தக் காலம் கடந்து விட்டது. தற்போது எல்லாத் துறைகளிலும் போட்டி நிலவுகிறது. ஒரு புறம் தனியார் துறையும் மறு புறம் பொதுத் துறையும் போட்டியிட்டு முன்னேறி வரும்போது, கூட்டுறவுத்துறை மட்டும் பழைய பாணியிலேயே இயங்க முடியாது. அதன் நிர்வாகமும் திறமை மிக்கதாயிருக்க வேண்டும்.

எனவே, கூட்டுறவுச் சங்கங்களின் முதல் தேவை சிறப்பான நிர்வாகம்தான். நிர்வாகக் குழுவினர் உறுப்பினரின் ஆதரவு பெற்றவர்களாய் மட்டும் இருந்தால் போதாது; சங்கங்களை நல்ல முறையில் நடத்தி, முன்னேற்றத்திற்குக் கொண்டுவரும் திறமை பெற்றவர்களாயும் இருக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் வெற்றியும் தோல்வியும் பெரும்பாலும் நிர்வாகக் குழுவினர் கையில்தான் உள்ளது. எனவே, கூட்டுறவின் அடிப்படைத் தத்துவங்களையும் செயல்படவேண்டிய முறையையும் அவர்கள் நன்கறிந்திருக்க வேண்டும். இதற்குத் தொடர்ச்சியான பயிற்சியும் அனுபவமும் அவர்களுக்குத் தேவை.

அதோடு, அச்சங்கங்களுக்குப் பயிற்சியும் திறமையும் மிக்க நிர்வாகிகளும் பணியாளர்களும் தேவை. எனவே, சேவைச் சங்கத்தில் பணியாற்றும் நிர்வாகி அல்லது செயலாளர் முழு நேரமும் சங்கத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபடக் கூடியவராய் இருக்க வேண்டும். அதோடு, சங்கத்தின் நிர்வாகி கூட்டுறவு நிர்வாகத்தைப் பற்றி நன்கறிந்தவராய் இருப்பது அவசியம். கூட்டுறவின் குறிக்கோள்களை உணர்ந்தவராய் அக் குறிக்கோள்களை அடைய விடா முயற்சியுள்ளவராயிருத்தல் நன்று. கூட்டுறவுத் தொழில் வெறும் ஏட்டளவில் இருந்தால் போதாது. சங்கத்தின் கொள்முதலும் விற்பனையும்

பெருகிக் கொண்டே செல்ல வேண்டும். எனவே, சங்க நிர்வாகியும் உதவியாளர்களும் இப்பணியை மேற்கொள்ளத் தகுதியுடையவர்களாயும் திறமையுள்ளவர்களாயும் இருப்பதோடு ஆர்வமுள்ளவர்களாயும் இருக்க வேண்டும்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் வளர்ச்சி

1969 ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்ட நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்திற்குக் கணிசமான அளவு கடன் கொடுக்கும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கப் போவதில்லை. மாறாக, நட்டத்தில் இயங்கும் சங்கங்களையெல்லாம் பெரிய சங்கங்களோடு இணைக்கப் போவதால் சங்கங்களின் எண்ணிக்கை குறைந்துவிடும். ஆனால், உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டு விவசாய மக்களில் 60 சதவீதம் பேராகிலும் சங்கங்களில் பங்கு கொள்ளுமாறு வகை செய்யப்படும்.

1969-74-ல் விவசாயிகளுக்கு 2,000 கோடி ரூபாய் குறுங்காலக் கடனும் 500 கோடி ரூபாய் மத்திய காலக் கடனும் தேவைப்படலாமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கெனவே கொடுத்து வந்துள்ள கடன் தொகையை அடிப்படையாகக் கொண்டு, 1973-74-க்குள் அவர்களுக்குக் குறுங்காலக் கடனாகவும் மத்தியக் கடனாகவும் 750 கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வளவு கடன்தொகையைக் கொடுக்க வேண்டுமானால் உறுப்பினர்களின் வைப்புத் தொகையையும் அதிகரிக்க வேண்டும். எனவே, 1966-67-ல் மாநில வங்கிகளிடமிருந்த 150 கோடி ரூபாய் வைப்புத் தொகையை 1973-74-ல் 270 கோடி ரூபாயாக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதே போல் மாவட்ட வங்கிகளின் வைப்புத் தொகையை 260 கோடியிலிருந்து 600 கோடி ரூபாய்க்கும் சங்கங்களின் வைப்புத் தொகையை 46 கோடியிலிருந்து 70 கோடி ரூபாய்க்கும் அதிகரிக்க இத் திட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு இயக்கத்தில் ஒவ்வொரு மாநிலமும் 1973-74-ல் சாதிக்க வேண்டிய சாதனைகளின் இலக்குகளைப் பின்வரும் பட்டியலிலிருந்து அறிந்து கொள்ளலாம் :

1973-74-ன் இலக்குகள்

மாநிலம்	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர்கள் (மில்லியன்)	வைப்புத் தொகை (கோடி ரூபாய்)	குறுங்காலக் கடன் (கோடி ரூபாய்)	இடைக்காலக் கடன் (கோடி ரூபாய்)
ஆந்திரா	9000	2·8	40·6	48·9	3·4
அசாம்	2700	0·8	19·5	6·6	0·4
பீஹார்	15000	5·0	20·2	16·0	1·5
குஜராத்	6500	2·0	121·3	65·3	4·7
பஞ்சாப், ஹரியானு	11500	2·5	72·7	54·9	7·5
ஜம்மு-காஷ்மீர்	700	0·4	2·6	4·2	0·3
கேரளா	1600	2·0	32·4	28·2	3·2
மத்திய பிரதேசம்	9700	3·0	52·4	49·0	9 0
தமிழ் நாடு	6300	3·9	62·0	50·4	6·6
மைசூர்	6000	2·2	52·4	47·5	3·4
மகராஷ்டிரம்	11000	4·0	311·1	140·0	10·0
ஒரிஸ்ஸா	4100	2·0	18·2	16·3	1·7
ராஜஸ்தான்	7200	2·0	14·7	17·2	1·2
உத்தரப் பிரதேசம்	2000	7·0	92·5	84·9	6·2
மேற்கு வங்காளம்	7100	1·9	18·3	17·5	1·2
மத்திய அரசு பகுதிகள்	1500	0·8	12·0	7·2	1·0
மொத்தம்	119900	40·3	942·6	654·1	61·3

கூட்டுறவுச் சங்கங்கள் சிறு விவசாயிகளுக்குக் கடனுதவி செய்யும் முயற்சிகள் இத் திட்டத்தின்போது மேற்கொள்ளப்படும். சிறு விவசாயிகளுக்கு வேண்டிய உதவி அனைத்தையும் செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படுமாகையால் பெரிய விவசாயிகளுக்கு வேண்டிய கடனுதவி முழு அளவில் கிடைக்காது. இக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும்போது வராக் கடன் தொகை அதிகரிக்கலாம்; அதோடு சிறு விவசாயிகள் கடன் தொகையை உரிய காரணத்திற்காகப் பயன்படுத்தாமலும் இருக்கலாம். இதைச் சரிக்கட்டுவதற்கென்று வராக்கடன் நிதியை உருவாக்க அரசாங்கம் தொடர்ந்து உதவிசெய்யும். குறுங்காலக் கடனை இடைக்காலக் கடனாக மாற்றுவதற்கும் வழிவகை செய்யப்படும். இதற்காக ரிசர்வ் பாங்கு தன்னிடமுள்ள தேசிய விவசாய உறுதிப்பாட்டு நிதியைப் பயன்படுத்தும். பெற்ற கடனை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு ஜப்பானிலுள்ளதைப்போல் அவர்கள் செலவழிக்கும் முறையை மேற் பார்வையிடவும் அவர்களுக்கு வழிகாட்டவும் முயற்சிகள் எடுக்கப்படும். இதற்காக மாநில அரசுகளுக்கு மானியத் தொகை வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

நலிந்துள்ள சங்கங்களை வலிமையுடையதாக்கி அவற்றைத் திறமையாக நிர்வகிப்பதற்கென்று 7·5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தொகை சுமார் 50,000 சங்கங்களுக்கு மானியமாக வழங்கப்படும். வராக் கடன் நிதிக்கு உதவிசெய்வதற்காக மேலும் 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சங்கத்திலும் அரசாங்கத்தின் பங்கு 10,000 ரூபாயாக இருக்கும்; இதற்காக உறுப்பினர்களின் பங்கு மூலதனமும் ரூ. 10,000 ஆக இருக்க வேண்டியதில்லை.

19. கூட்டுறவு மத்திய வங்கிகள்

(Co-operative Central Banks)

கூட்டுறவுக் கடன் இயக்கத்தில் தொடக்கநிலைக் கடன் சங்கங்கள்தாம் முக்கியமானவை; எனினும், உறுப்பினர்களுக்கு வேண்டிய கடனுதவி அனைத்தையும் இச் சங்கங்களால் செய்ய முடியாது. எனவே, இச் சங்கங்களுக்கு மேல் மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு வங்கிகள்தாம் வேண்டிய உதவி செய்யவேண்டும். இதை உணர்ந்துதான் 1912-ல் இந்தியக் கூட்டுறவுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டப்படி, தொடக்கநிலைச் சங்கங்களுக்கு மேல் மட்டத்திலும் கூட்டுறவு நிறுவனங்களும் வங்கிகளும் அமைக்க வழிசெய்யப்பட்டது. அவற்றுள் மிக முக்கியமானவை கூட்டுறவு மத்திய வங்கிகளாகும்.

குறிப்பிட்ட பகுதிக்குள் இயங்கும் எல்லா வகைக் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பு நிறுவனங்களாக இக் கூட்டுறவு மத்திய வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் கூட்டுறவு மத்திய வங்கிகளை அமைக்க முறையான திட்டம் ஏதும் இல்லாதிருந்தது; எனவே, இவ்வங்கிகள் கண்டபடி தோன்றிவிட்டன. அவற்றில் சில யூனியன் வங்கிகள் என்ற பெயரில் இயங்கி வந்தன. அவ்வாறு தோன்றிய யூனியன் வங்கிகள் மட்டும் 1951-52-ல் 509 ஆக இருந்தன. இவ்வாறு கூட்டுறவு மத்திய வங்கிகள் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் நிறுவப்பட்டு விட்டதால் இந்த மத்திய வங்கி ஒவ்வொன்றும் எந்தெந்தப் பகுதியில் செயல்பட வேண்டும் என்ற ஒழுங்குமுறை இல்லாமல் போய்விட்டது. எனவேதான் கிராமக் கடன் ஆய்வுக் குழுவினர் இவற்றை ஒழுங்குபடுத்த முடிவு செய்தனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மத்திய வங்கிதான் இருக்க வேண்டுமென சிபாரிசு செய்தனர். இருப்பினும், சில மாவட்டங்களில் ஏற்கெனவே பல மத்திய வங்கிகள் தோன்றி, நல்ல முறையில் இயங்கி வந்தால் அவை தொடர்ந்து நீடிக்கலாமென்றும் கருதினர்.

இதனால் மத்திய வங்கிகளின் எண்ணிக்கை 1970-71-ல் 341 ஆகக் குறைந்துவிட்டது. கேரளா, ராஜஸ்தான், மைசூர், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மாவட்டத்திற்கு ஒரு மத்திய வங்கி தான் உள்ளது. அசாமிலும் காஷ்மீரிலும் சில மத்திய வங்கிகள் மாவட்ட எல்லைக்குமேல் பணியாற்றி வருகின்றன. ஏனைய மாநிலங்களிலுள்ள பல மாவட்டங்களில் ஒன்றுக்குமதிகமான மத்திய வங்கிகள் உள்ளன.

குறிக்கோள்கள்

கூட்டுறவு மத்திய வங்கிகள் கீழ்க்காணும் குறிக்கோள்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன: —

1. தம்முடன் இணைக்கப்பட்டுள்ள தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குவேண்டிய கடனுதவியைச் செய்வதோடு அவற்றிடமுள்ள உபரிப் பணத்தைப்பெற்று உரிய முறையில் பாதுகாப்பது.

2. தத்தம் மாவட்டங்களில் பொது மக்களிடமிருந்தும் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் வைப்புத் தொகையைப்பெற்று, தம் நிதி நிலைமையை உயர்த்துவது.

3. தொடக்கநிலைச் சங்கங்கள் முதலீடு செய்ய விரும்பினால் அவற்றிற்குப் பாதுகாப்பளிப்பது.

4. கிராமப்புறங்களில் மக்களிடையே வங்கிப் பழக்க வழக்கங்களைப் பரப்புவது.

5. தத்தம் மாவட்டங்களில் கூட்டுறவு இயக்கத்தை வளர்க்கப் பாடுபடுவது.

6. தத்தம் உறுப்பினர் சங்கங்களின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதோடு, அவற்றிற்குத் துணையாகவும், வழிகாட்டியாகவும் கண்காணிப்புடன் இருப்பது.

தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் கிராமவாசிகளைக் கொண்டது. அவர்களுக்குப் பண அங்காடி நிலவரங்கள் தெரியாது. மாநில உச்சி வங்கிகளோ மாநிலத் தலைநகரில் இயங்கி வருகின்றன. அவற்றிற்குத் தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களோடு நெருங்கிய தொடர்புகொள்ள வாய்ப்பில்லை. எனவே, அத் தொடர்பை உண்டுபண்ணி இரண்டினையும் இணைக்கின்ற பாலம்போல் இம்மத்திய கூட்டுறவு வங்கிகள் செயல்படுகின்றன.

அமைப்பு முறை

நம் நாட்டில் இயங்கிவரும் கூட்டுறவு மத்திய வங்கிகள் மூன்று விதங்களில் அமைக்கப்பட்டுள்ளன. (1) தனிப்பட்டவர்களை மட்டும் பங்குதாரர்களாகக்கொண்டு நடைபெறும் வங்கிகள். இவ்வகையில் அமைக்கப்பட்டுள்ள வங்கிகள் தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பங்குதாரர்களாக ஏற்றுக்கொள்வதில்லை. அப்படியே ஏற்றுக்கொண்டாலும் அவற்றிற்கென்று தனிச் சலுகை ஏதும் அளிப்பதில்லை. ஏனைய வணிக வங்கிகளைப்போலவேதான் இவையும் செயல்படுகின்றன. இவ்வகை மத்திய வங்கிகளால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எவ்விதப் பயனுமில்லை என்பதை உணர்ந்து, இவற்றைத் திருத்தியமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனவே, இவ்வங்கிகள் நகர வங்கிகளாகவோ தொடக்கநிலைச் சங்கங்களை உறுப்பினர்களாகக்கொண்ட கூட்டுறவு மத்திய வங்கிகளாகவோ திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, தனிப்பட்டவர்களை மட்டும் பங்குதாரர்களாகக்கொண்ட மத்திய வங்கிகள் அரிதாகிவிட்டன. (2) இரண்டாவது வகை வங்கிகளில் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே பங்குதாரர்களாக உள்ளன. இவையனைத்தும் யூனியன் வங்கிகளாகப் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. பங்குதாரர்களாக இருக்கும் தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே இவ்வங்கிகள் கடன் வசதி செய்து தருகின்றன. இதனால் பங்குதாரர்களாகவும் கடன் பெறுவோராகவும் இருக்கும் தொடக்கநிலைச் சங்கங்கள் நல்ல பயனடைந்து வருகின்றன. (3) மூன்றாவது வகை வங்கிகளில் தனிப்பட்ட நபர்களும் தொடக்கநிலைச் சங்கங்களும் பங்குதாரர்களாக இருந்து வருகின்றனர். நிர்வாகக் குழுவில் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளும் இடம் பெற்றுள்ளனர். இவ்வகை வங்கிகள்தாம் நாடெங்கும் பிரபலமாயுள்ளன. எனினும், கிராமக் கடன் ஆய்வுக்குழுவினரின் சிபாரிசின்பேரில் தனிப்பட்ட நபர்கள் நீக்கப்பட்டு வருகின்றனர்; இதனால் இவ்வங்கிகளும் கூட்டுறவுச் சங்கங்களை மட்டும் உறுப்பினர்களாகக்கொண்டு இயங்கி வரக்கூடும்.

வங்கிகளின் செயல் பகுதி

கூட்டுறவு மத்திய வங்கிகள் நல்ல முறையில் திறமையாகவும் இலாபத்துடனும் இயங்கவேண்டுமாயின், அவை பெரிய அளவிலும் இருக்க வேண்டும்; அதே சமயம் பரந்த பகுதியிலும் செயல்பட வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு மத்திய வங்கிதான் இருக்கவேண்டும் என்பது ரிசர்வ் வங்கியின் விவசாயக் கடன் துறையைச்சேர்ந்த ஆலோசனைக் குழுவின் சிபாரிசு. ஏற்கெனவே ஒரு மாவட்டத்தில் இரண்டு அல்லது அதற்கு

மேற்பட்ட வங்கிகள் தொடங்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வந்தால் அவை தொடர்ந்து செயலாற்றலாம் என்றும் அக்குழுக் கருதியது. மத்திய வங்கிகள் இலாபகரமானதாயும் நல்ல முறையிலும் இயங்குவதைக் கண்டுபிடிக்க ஓர் உபாயத்தையும் கையாண்டது. அதாவது, அவற்றின் பங்கு மூலதனமும் காப்பு நிதியும் சேர்ந்து ரூ. 3 இலட்சமாவது இருக்கவேண்டும்; அதோடு அவற்றின் நடப்பு மூலதனமும் குறைந்தபட்சம் ரூ. 20 இலட்சமாவது இருக்கவேண்டும். ஆனால், ஒருசில ஆண்டுகளுக்குமுன், ரிசர்வ் வங்கியின் கிராமக் கூட்டுறவுக் கடன் பற்றிய நிரந்தர ஆலோசனைக் குழு மத்திய வங்கியொன்று திறமையுள்ளதாகக் கருதப்பட வேண்டுமானால் குறைந்தபட்சம் அது ரூ. 1 கோடியையாவது கடன் கொடுத்து வாங்கி வந்திருக்க வேண்டுமெனக் கூறியுள்ளது. எனவே, கடந்த சில ஆண்டுகளாக மத்திய வங்கிகள் அனைத்தும் நல்ல முறையில் முன்னேறி வருகின்றன. 1967-68-ல் மொத்தம் 339 மத்திய வங்கிகள் இருந்தன. அவற்றில் 178 வங்கிகள் ரூ. 1 கோடிக்கு மேல் கடன் கொடுத்து இயங்கி வந்ததாகத் தெரிகிறது. இவற்றில் மகராஷ்டிரம், கேரளா ஆகிய மாநிலங்களிலிருந்த மத்திய வங்கிகள் அனைத்தும் ரூ. 1 கோடிக்கு மேல் கொடுக்கல் வாங்கல் செய்து வந்திருக்கின்றன. தமிழ்நாட்டிலிருந்த 16 வங்கிகளில் 15, குஜராத்தில் 18-ல் 17, பஞ்சாபில் 17-ல் 15 வங்கிகள் ரூ. 1 கோடிக்கு மேல் கடன் கொடுத்து வாங்கி வந்ததாகவும் அறிய வருகிறோம்.

மத்திய வங்கிகளின் நிதி

மத்திய வங்கிகள் திறமையுடன் பணிபுரிய வேண்டுமாயின் அவற்றிற்கு ஸ்திரமான நிதி தேவை. இந் நிதியை அவை பங்காகவும், வைப்புகளாகவும், கடனாகவும், ஒதுக்கு நிதியாகவும், அரசாங்க மானியமாகவும் பெறுகின்றன. எனவே, இவற்றைப் பற்றிச் சற்று விரிவாக ஆராய்ந்தால் இவ்வங்கிகளின் நிலையை ஓரளவு அறிந்து கொள்ளலாம்.

பங்கு மூலதனம்: கூட்டுறவு மத்திய வங்கிகள் தம் பங்கினைத் தனிப்பட்ட நபர்களுக்கும் தொடக்கநிலைச் சங்கங்களுக்கும் விநியோகம் செய்கின்றன. பெரும்பாலான பங்குகளைக் கூட்டுறவுச் சங்கங்கள்தாம் வாங்குகின்றன. பொதுவாக, இப் பங்கின் மதிப்பு ரூ. 50 அல்லது ரூ. 100 ஆகத்தானிருக்கும். கிராமக் கடன் ஆய்வுக் குழுவின் சிபாரிசின்படி அரசாங்கமும் இப்பங்கினைப் பெறுகின்றது. கணிசமான பங்கினை அரசாங்கமே தற்போது வாங்குவது குறிப்பிடத்தக்கது. கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வளவு பங்கினை வாங்குகின்றனவோ அதைப் பொறுத்துத்தான் அவற்றிற்குக் கடன் வழங்கப்படுகிறது. எனவே, இவ்வங்கிகளின் பங்கு

மூலதனம் கணிசமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக, ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இவற்றின் பங்கு மூலதனம் பல மடங்கு பெருகியுள்ளது. 1950-51-ல் ரூ. 4 கோடியாக இருந்த செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 1960-61-ல் ரூ. 38 கோடியாகவும், 1968-69-ல் ரூ. 114 கோடியாகவும் 1970-71-ல் ரூ. 138 கோடியாகவும் உயர்ந்துள்ளது. மாநில அரசாங்கங்களின் பங்கும் 1960-61-ல் ரூ. 10 கோடியாக இருந்து 1970-71-ல் ரூ. 37 கோடியாக அதிகரித்துள்ளது. மேற்குறிப்பிட்ட புள்ளிவிவரங்களிலிருந்து ஒரு சில உண்மைகள் புலனாகின்றன. அதாவது மாவட்ட மத்திய வங்கிகளின் நிதி பெரும்பாலும் பங்கு மூலதனத்தின் வழியாகவே உருவாக்கப்படுகிறது. எனவே, தாம் தரும் கடனுதவிகளை அதிகரிப்பதற்கென்று இவையனைத்தும் தம் பங்கு மூலதனத்தைப் பெருக்கி வருகின்றன. மாநில அரசாங்கமும் இவ்வங்கிகளின் பங்கு மூலதனத்தைப் பெற்று வருகின்றன. இப்பங்கு மூலதனத்தைப் பெறுவதற்காக ரிசர்வ் வங்கி தன் தேசிய விவசாயக் கடன் நிதியிலிருந்து மாநில அரசாங்கங்களுக்குக் குறிப்பிட்ட தொகையை வழங்கி வருகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் மத்திய வங்கியிடம் கொண்டுள்ள பங்கைப் போல் பத்து மடங்கு கடன் வாங்கலாம் என்ற கொள்கை தற்போது இருப்பதால் கூட்டுறவுச் சங்கங்கள் கூடுமான வரை அதிகமான பங்கைப் பெறுகின்றன.

வைப்புத் தொகை : கூட்டுறவு இயக்கம் தொடங்கிய நாளிலிருந்து இவ்வங்கிகள் தத்தம் வைப்புத் தொகையைப் பெருக்க வேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றன. வேண்டிய அளவு வைப்புத் தொகை இல்லாத எந்த மத்திய வங்கியும் வெற்றிபெற முடியாது என்பது அனுபவம் பெற்ற கூட்டுறவாளர்களின் நம்பிக்கை. எனவே, மத்திய வங்கிகள் தத்தம் வைப்புத் தொகையைப் பெருக்க முயற்சி செய்து வருகின்றன. இம்முயற்சியில் நல்ல பலனும் கிடைத்துள்ளது. 1951-52-ல் ரூ. 21 கோடியாக இருந்த வைப்புத் தொகை 1960-61-ல் ரூ. 72 கோடியாகவும், 1969-70-ல் ரூ. 351 கோடியாகவும், 1970-71-ல் ரூ. 439 கோடியாகவும் அதிகரித்துள்ளது. நான்காம் ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் இவற்றின் வைப்புத் தொகை மட்டும் ரூ. 600 கோடியாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டுறவு வங்கிகள் மக்களின் சேமிப்பை ஒன்று திரட்ட வேண்டும். அப்படித் திரட்டி, அவர்களின் கணக்கில் வைப்புத் தொகையாக வரவு வைப்பதற்குப் பல உகந்த சூழ்நிலைகள் உருவாகியுள்ளன. பசுமைப் புரட்சி நாடெங்கிலும் பரவி வருகிறது. இதனால் விவசாயிகளின் விளைச்சலும் வருமானமும் உயர்ந்து

கொண்டு வருகின்றன. விவசாயிகளோடு பல ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டுள்ள கூட்டுறவு வங்கிகள் அவர்களின் சேமிப்பைத் தூண்டி வங்கியில் வைப்புத் தொகையாகப் போடும்படி ஊக்கமளிப்பதற்கு இதுவே உகந்த நேரம். அப்படி கூட்டுறவு வங்கிகளின் வைப்புத் தொகை பெருகினால் அவற்றின் நிதி நிலை உயரும்; மேல் மட்டத்திலுள்ள வங்கிகளிடம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கவும் மேலும் கடன் வசதிகளை அதிக மாகப் பெறவும் கூடும். பெருகி வரும் கூட்டுறவுப் பணிகளை நல்ல முறையில் புரியவும் வசதி ஏற்படும்.

1970 ஏப்ரல் மாதம் மாநில வங்கிகளின் நிர்வாகிகளுக்கும் மத்திய வங்கிகளின் நிர்வாகிகளுக்கும் சண்டிகாரில் கருத்தரங்கு நடந்தது. அக் கருத்தரங்கில் கூட்டுறவு வங்கிகள் தம் வைப்புத்தொகையைப் பெருக்குவதற்கான வழிமுறைகளும் ஆராயப்பட்டன. முடிவில், வைப்புத்தொகையைப் பெருக்குவதற்குப் பின்வரும் உபாயங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

1. கூட்டுறவு மத்திய வங்கிகள் உரிய இடங்களிலெல்லாம் தம் கிளை வங்கிகளைத் தொடங்க வேண்டும். இதற்காக அவசரப்பட்டுக் கண்ட இடங்களில் தொடங்காமல் நிதானமாகச் சிந்தித்து, திட்டமிட்டுத் தொடங்க வேண்டும். 1968-ல், கூட்டுறவு வங்கிகள் 2,825 கிளை வங்கிகளைக் கொண்டிருந்தன. மேலும், கிளைகளைத் தொடங்கினால் மக்களின் சேமிப்பைக் கவர்ந்து, வைப்புத் தொகையைப் பெருக்க முடியும்.

2. வைப்புத்தொகையில் பெருகும் வைப்புத்தொகை (Cumulative diposit), வாடிக்கையாளரின் இல்லங்களுக்குச் சென்று வசூலிக்கும் வைப்புத்தொகை, தானாகப் பெருகும் வைப்புத் தொகை,சமூகப் பாதுகாப்பு வைப்புத்தொகை, குழந்தைகள் நலப் பாதுகாப்புச் சான்றிதழ், குழுவினர் சேமிப்பு, என்று எத்தனையோ வகைக் கணக்குகள் உள்ளன. இப் புதிய கணக்குகளிலெல்லாம் வைப்புத்தொகையைப் பெருக்க முன்வர வேண்டும்.

3. வாடிக்கையாளர்களுக்கு வங்கிகள் நல்ல முறையில் பணியாற்ற வேண்டும். வாடிக்கையாளர்களுக்கு எரிச்சல் ஏற்படும் வகையில் வங்கிகள் நடந்து கொள்ளக்கூடாது. அவர்களை அதிக நேரம் காக்க வைக்கக் கூடாது; அப்படியே காக்க வைக்க நேரிட்டாலும், அவர்கள் காத்திருப்பதற்கு வசதியான அறைகளை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

4. சேமிப்புக் கணக்குத் தொடங்குவதற்கு அச்சடிக்கப்படும் விண்ணப்பம் எளிமையானதாக இருக்க வேண்டும்.

5. கூடுமானவரை வாடிக்கையாளர்களுக்கு இலவசப் பணி செய்ய வேண்டும். உள்ளூர்ச் செக்குகள், தம் வங்கியுள்ள வெளியூர் செக்குகள், முதலியவற்றை இலவசமாக மாற்றித் தரவேண்டும். அதோடு வாடிக்கையாளர்களுக்கு வரவேண்டிய இலாப ஈவு, ஊதியம், ஓய்வுச் சம்பளம் போன்றவற்றையும் இலவசமாகப் பெற்றுத் தர வேண்டும்.

6. வங்கிகளின் பணியாளர்களுக்கு அவற்றில் செயல் முறைகளைப் பற்றிய நல்ல பயிற்சி அளிக்க வேண்டும். அதோடு, பொது மக்களோடு நல்ல தொடர்பு கொள்வதும் அவசியம்.

மேலும், கூட்டுறவு மத்திய வங்கிகள் தம்மிடமுள்ள வைப்புத் தொகையை அதிகரிப்பதற்கென்று கிராமக் கடன் ஆய்வுக் குழுவும் மஹாஜன் குழுவும் ஒருசில பரிந்துரைகள் செய்துள்ளன. அதாவது, ஏனைய வணிக வங்கிகளைப்போல் இம் மத்திய வங்கிகளும் தம்மிடம் வைக்கப்படும் வைப்புத்தொகைக்கு நல்ல வட்டி வழங்க வேண்டும். மேலும், பஞ்சாயத்துகள், நகராட்சிகள், கல்வி நிறுவனங்கள் போன்றவை தம்மிடமுள்ள உபரித் தொகையை இவ்வங்கிகளிடம் வைப்புத் தொகையாக வைக்க ஊக்குவிக்கப்பட வேண்டும். அதோடு, ஒவ்வொரு மத்திய வங்கியும் தத்தம் பகுதியிலுள்ள பணக்காரர்களையும் தொழிலதிபர்களையும் அணுகி அவர்களைத் தம்மிடம் கணக்கு வைக்கும்படி தூண்ட வேண்டும்.

மத்திய வங்கிகள் பெறும் கடன் : கூட்டுறவு மத்திய வங்கிகள் எவ்வளவு கடன் பெறலாம் என்பது கூட்டுறவுச் சட்டங்களால் மட்டுமன்றிக் கூட்டுறவுப் பதிவாளர்களாலும் நிர்ணயிக்கப்படுகிறது. பொதுவாக, இவ்வங்கிகள் தம்மிடமுள்ள காப்பு நிதி, செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ஆகியவற்றைப்போல் 12 அல்லது 15 மடங்கு வரை கடன் வாங்கலாம். மகாராஷ்டிர மாநிலத்தில் எந்த மத்திய வங்கியும் 12 மடங்கிற்கு மேல் கடன் பெறக்கூடாது; அப்படிப் பெற வேண்டுமாயின், கூட்டுறவுப் பதிவாளரின் அனுமதி பெறவேண்டும். மேற்கு வங்காளம், அசாம் ஆகிய மாநிலங்களிலுள்ள மத்திய வங்கிகள் 10 மடங்கிற்கு மேல் கடன் பெற இயலாது. தமிழ் நாட்டிலும் ஆந்திராவிலுமுள்ள மத்திய வங்கிகள் எத்தனை மடங்கு கடன் வாங்கலாம் என்பதற்கு மாநில அரசாங்கம் ஆணை பிறப்பிக்கின்றது. இந்த ஆணைப்படி, கூட்டுறவுப் பதிவாளர் தாம் கடன் தொகையை நிர்ணயிக்கின்றார். தமிழ் நாட்டைப்

பொறுத்தவரை மத்திய வங்கிகள் மேற்குறிப்பிட்ட காப்பு நிதி செலுத்தப்பட்ட மூலதனத்தைப்போல் 20 மடங்கு வரை கடன் பெறலாமென்று உள்ளது.

கூட்டுறவு மத்திய வங்கிகள் கூட்டுறவு மாநில வங்கிகளிடமிருந்தும், மாநில அரசாங்கம், ரிசர்வ் வங்கி, அரசு வங்கி, இதர மத்திய வங்கிகள் ஆகியவற்றிடமிருந்தும் கடன் வாங்குகின்றன. முதலாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் இவ் வங்கிகள் வாங்கிய கடன் அவ்வளவாக அதிகரிக்கவில்லை. ஆனால், இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலங்களிலோ இவற்றின் கடன்கள் பெருகி விட்டன. 1955-56-ல் ரூ. 22 கோடியாக இருந்த கடன் 1960-61-ல் ரூ. 141 கோடியாகவும், 1967-68-ல் ரூ. 270 கோடியாகவும் உயர்ந்து விட்டது.

பெரும்பாலும் இவ் வங்கிகள் மாநில மத்திய வங்கி, அல்லது உச்சி வங்கியிடமிருந்துதான் அதிகமாகக் கடன் பெறுகின்றன. இக் கடன் குறுகிய காலக் கடனாகவோ இடைக்காலக் கடனாகவோ பெறப்படுகின்றன. கடன் பெறும் காலந்திற்கேற்றாற்போல் வட்டி மாறுகின்றது; அதேபோல் கடனுக்குரிய பிணையங்களும் மாறுகின்றன.

மத்திய வங்கிகள் அரசாங்கத்திடமிருந்து பெறும் கடன் குறைவுதான். அவ்வாறு வாங்கும் கடன் தனிப்பட்ட தன்மையானது. 1967-68-ல் இவ் வங்கிகள் அரசாங்கத்திடமிருந்து பெற்ற கடன் தொகை ரூ. 12 கோடிதான். சில அரசு வங்கிகளும் இவற்றிற்குக் கடன் அளிக்கின்றன; ஆனால், இக் கடன் இந்த மத்திய வங்கிகளின் உபயோகத்திற்காக அன்று. மாறாக, இக் கடன் தொகை கூட்டுறவுத் தொழில்களுக்கென்றுதான் மத்திய வங்கிகள் வாயிலாக அளிக்கப்படுகிறது. பொதுவாக, கூட்டுறவு மத்திய வங்கிகள் அரசு வங்கியிடமிருந்து கடன்பெற வேண்டுமாயின், அதற்கென்று சில நிபந்தனைகள் உள்ளன. அரசாங்க ஆவணங்கள், கடன் பத்திரங்களின் பேரில்தான் கடன் பெறலாம்.

ரிசர்வ் வங்கியும் இம் மத்திய வங்கிகளுக்குத் தற்போது கடனளிக்கின்றது. ஒருசில மாநிலங்களில் மாநில உச்சி வங்கிகள் சமீபத்தில்தான் தொடங்கப்பட்டுள்ளன. அதோடு, அரசு வங்கியும் மத்திய வங்கிகளுக்கு வேண்டிய கடன் வசதிகளையெல்லாம் செய்துதர இயலவில்லை. இந் நிலையில் அம் மாநிலங்களிலுள்ள மத்திய வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கியே கடன் தரும் வகையில் ரிசர்வ் வங்கிச் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இச் சட்டப்படி ரிசர்வ் வங்கி

அந்தந்த மாநிலத்திலுள்ள மத்திய வங்கிகளுக்கு உச்சி வங்கியின் வாயிலாகக் கடனளித்து வருகிறது. மேலும், மத்திய வங்கிகள் தற்போது A, B, C, D என்ற நான்கு இனங்களாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றில் A, B, C ஆகிய மூன்று இனங்களில் இடம்பெறும் மத்திய வங்கிகள் மட்டும்தான் ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் பெற முடியும். அதுவும் C இனத்தில் வரும் வங்கிகள் கடன் பெற விரும்பினால் கூட்டுறவுப் பதிவாளரின் சிபாரிசு தேவை. மத்திய வங்கிகள் ரிசர்வ் வங்கியிடமிருந்து குறுகிய காலக் கடன் பெற்றால் அக் கடனுக்கு பாங்கு வீதத்திலிருந்து 2 சதவீதம் குறைவான வட்டி செலுத்த வேண்டும். இடைக்காலக் கடனாக இருந்தால் பாங்கு வட்டியிலிருந்து 1½ சதவீதம் குறைத்துக் கட்டினால் போதும்.

மத்திய வங்கிகள் தொடங்கப்பட்ட புதிதில் அவை ஒன்றிடமிருந்து பிறிதொன்று கடன் வாங்கி வந்தது. ஆனால், மாநில உச்சி வங்கி நிறுவப்பட்ட பின்னர், இவ்வகைக் கடன் வாங்கும் பழக்கம் நிறுத்தப்பட்டு விட்டது.

காப்பு நிதியும் இதர நிதிகளும்

கூட்டுறவு மத்திய வங்கிகள் காப்பு நிதி, வராக்கடன் நிதி போன்ற பல்வேறு நிதிகளை உருவாக்கி செயல்படுகின்றன. தத்தம் உறுப்பினர் சங்கங்களுக்குத் தாராளமாகக் கடனுதவி செய்து வருவதால் இவ்வகைத் தற்காப்பு நிதிகள் அண்மையில் வளர்ந்து வந்துள்ளன. 1950-51-ல் ரூ. 2·42 கோடியாக மட்டும் இருந்த காப்பு நிதி 1967-68-ல் ரூ. 14·98 கோடிக்கு அதிகரித்துள்ளது. ஆந்திரா, குஜராத், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம் ஆகிய ஒவ்வொரு மாநிலத்திலும் இந் நிதி ரூ. 1 கோடிக்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளது. உறுப்பினர் சங்கங்களுக்குக் கொடுக்கப்படும் கடன் வராமல் போய்விட்டால் அதைச் சரிக்கட்டுவதற்கென்று வராக் கடன் நிதி உருவாக்கப்படுகிறது. இந்த நிதியும் 1950-51-ல் ரூ. 96 இலட்சத்திலிருந்து 1967-68-ல் ரூ. 8·62 கோடிக்கு அதிகரித்துள்ளது. அப்படியிருந்தும் வராக் கடனை இவ்வங்கிகளால் சரிக்கட்ட முடியவில்லை. காரணம், வராக் கடனின் அளவு அதைக் காட்டிலும் அதிகமாகி வருகிறது. 1967-68-ல் மட்டும் வராக் கடன் ரூ. 10·17 கோடியாக இருந்ததாகத் தெரிகிறது.

மேற்கூறிய நிதிகளை மட்டுமன்றி, மத்திய வங்கிகள் இலாப ஈவுச் சமப்படுத்தும் நிதி, முதலீட்டுத் தேய்மான நிதி, கட்டட நிதி போன்ற வேறு பல நிதிகளையும் தம் இலாபத்திலிருந்து ஒதுக்கி வருகின்றன. இக்கட்டான நிலைகளில் இந்த நிதியிலிருந்தும் செலவீடு செய்து வருகின்றன. 1967-68-ல் 7·78 கோடி ரூபாய் இவ்வகை நிதிகளில் ஒதுக்கப்பட்டிருந்ததாக அறிய வருகிறோம்.

உறுப்பினர் சங்கங்களுக்குக் கடன் தரும் விதமும் நிலையும்

கூட்டுறவு மத்திய வங்கிகள் ஏனைய வணிக வங்கிகளைப்போல் தம் விருப்பப்படி எவருக்கும் கடன் கொடுக்க முடியாது. தம் உறுப்பினர் சங்கங்களுக்கு மட்டுமே பெரும்பாலும் கடனளிக்கின்றன. அதிலும், பெரும்பாலான கடன் விவசாயக் கடன்தான். நம் நாட்டு விவசாயம் பல்வேறு சிக்கல்களையும் ஆபத்தையும் எதிர் பார்த்து நடைபெறுகிறது. எனவே, விவசாயிகளுக்குக் கொடுக்கப் படும் கடன் திரும்பி வரவில்லையென்றால் மத்திய வங்கிகளின் நிலைமை மோசமானதாகி விடும். அப்போது இவ்வங்கிகளில் தம் பணத்தை வைப்பாக வைப்பதற்குப் பலர் தயங்கலாம். இந்நிலையைத் தவிர்ப்பதற்காக ரிசர்வ் வங்கியின் சட்டம் திருத்தியமைக்கப் பட்டுள்ளது. இச் சட்டப்படி கூட்டுறவு வங்கிகளும் ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டிற்குள் செயல்பட்டு வருகின்றன. தம்மிடம் வைக்கப்பட்டுள்ள மொத்த வைப்புகளில் 20 சதவீதத்தை ரொக்கமாகவோ தங்கமாகவோ ஒதுக்கு நிதியாகவோ இவ்வங்கிகள் வைத்திருக்க வேண்டும். அவ்வாறாயின், இவ் வங்கிகளில் கணக்கு வைத்திருப்போர் பயம் கொள்ளத் தேவையில்லை. மேலும், இவ்வங்கிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் தரும்போது அச் சங்கங்களின் நிலையை நன்கு பரிசீலனை செய்கின்றன. ஒருசில சங்கங்களுக்கு மட்டும் பெரும்பாலான கடனைத் தருவதில்லை. அதேபோல் குறிப்பிட்ட ஆவணங்களின் மீதும் அளவுக்கு மிஞ்சி கடன் அளிப்பது கிடையாது. பெரும்பாலான கடன் குறுகிய காலத்திற்கு மட்டுமே அளிக்கப்படுகிறது.

தம் உறுப்பினர் சங்கம் கடன் கேட்கும்போது இவ் வங்கி அச் சங்கத்தின் நாணயத்தையும், அதன் நிதி நிலையையும் மட்டுமன்றி, அதன் உறுப்பினர்களின் நாணயத்தையும் நன்கு பரிசீலனை செய்து, திருப்திப் பட்டால்தான் கடன் வழங்குகிறது. எந்த நிபந்தனைகளின் பேரில் கடன் அளிக்கிறது என்பது மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடுகிறது. பொதுவாக, சாகுபடிச் செலவு, விதை, உரம் வாங்குதல் போன்ற காரியங்களுக்குத்தான் குறுகிய காலக் கடன் அளிக்கப்படுகிறது. கிணறு வெட்டுதல், பழுது பார்த்தல், பம்பு செட் அமைத்தல் போன்ற காரியங்களுக்கு இடைக்காலக் கடன் (பொதுவாக 5 ஆண்டுகளுக்கு மேற்படாமல்) கொடுக்கிறது.

மத்திய வங்கிகள் தம் உறுப்பினர் சங்கங்களுக்குக் கொடுத்த மொத்தக் கடன் தொகை 1950-51-ல் ரூ. 81·83 கோடியாக இருந்து 1960-61-ல் ரூ. 350·91 கோடியாகவும், 1970-71-ல் 1,250 கோடியாகவும் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய வங்கிகளின் குறைகளும் நிவாரணமும்

மத்திய வங்கிகளின் செயல் முறைகளை ஆராய்ந்த கிராமக் கடன் ஆய்வுக் குழுவினர் கீழ்க் காணும் குறைகளைச் சுட்டிக் காட்டி, அதற்குரிய வழிமுறைகளையும் கூறியுள்ளனர்.

1. ஏராளமான மத்திய வங்கிகள் நாட்டில் தொடங்கப்பட்டு விட்டதால், ஒவ்வொரு வங்கியிலும் சில கூட்டுறவுச் சங்கங்கள் தாம் உறுப்பினர்களாக இருந்தன. எனவே, மத்திய வங்கிகளில் பல இலாபகரமாக இயங்க முடியவில்லை. இக்குறையை நீக்க, சிறிய வங்கிகளெல்லாம் அருகிலுள்ள பெரிய வங்கிகளோடு இணைக் கப்பட வேண்டும் என்று இக்குழுக் கருதியது. இதன் பயனாக மத்திய வங்கிகளின் எண்ணிக்கை 1950-51-ல் 509ஆக இருந்தது. 1967-68-ல் 349ஆகக் குறைந்தது.

2. ஒரு சில மத்திய வங்கிகள் போதுமான அளவு மூலதன மின்றி இயங்கி வந்தன. சில மாநிலங்களிலுள்ள மத்திய வங்கி களிடம் ரூ. 25 இலட்சம்கூட இல்லாமலிருந்தது. எனவே, இவ் வங்கிகளைப் பலப்படுத்த மாநில அரசாங்கமே இவற்றின் பங்குதார ராவதற்குச் சிபாரிசு செய்யப்பட்டது. அதோடு, உறுப்பினர் சங்கங்கள் கொண்டுள்ள பங்கின் அடிப்படையில் அவற்றிற்குக் கடன் கொடுக்கும் கொள்கை கையாளப்பட்டது. எனினும், ஒரு சில மத்திய வங்கிகள் தம் பங்கு மூலதனத்தை அதிகரிப்பதற்குத் தாறுமாறான நடவடிக்கைகளை மேற்கொண்டன. தம் வங்கியில் சேமிப்புக் கணக்கு வைத்திருந்தோரின் தொகையைப் பங்கு மூலதன மாகக் காட்டும் உபாயம் மேற்கொள்ளப்பட்டது. அதோடு, உறுப்பினர் சங்கங்களுக்குக் கடன் கொடுக்கும்போது, அக்கடன் தொகையில் ஒரு பகுதி அதன் பங்கு மூலதனமாகக் கணக்கில் ஏற்றப்பட்டது; இவ்வகை உபாயங்களெல்லாம் கூட்டுறவு இயக் கத்திற்கு உகந்ததல்ல.

3. பெரும்பாலான மத்திய வங்கிகளிடம் போதுமான காப்பு நிதி இல்லாமலிருந்தது; அதோடு, அக்காப்பு நிதியும் தாறுமாறான விதத்தில் முதலீடு செய்யப்பட்டு வந்தது.

4. வராக் கடனைச் சரிக்கட்ட போதுமான நிதிவசதிகள் இல்லாமல் சில வங்கிகள் கஷ்டப்பட்டன. எனவே, எல்லா மத்திய வங்கிகளும் தம் இலாபத்தில் ஒரு பகுதியை வராக் கடனைச் சரிக் கட்டுவதற்கென்று ஒதுக்க வேண்டும். அதோடு, தம் முதலீட்டுத் தேய்மானத்தை ஈடுகட்டுவதற்கென்றும் தனி நிதியை உருவாக்க வேண்டும்.

5. மேலும், பல்வேறு மத்திய வங்கிகளிடம் போதுமான அளவு வைப்புத் தொகை இல்லாமலிருந்தது. பொதுமக்களிடமிருந்து இந்த வைப்புத் தொகையைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை ஏற்கெனவே கண்டோம்.

6. ஒரு சில மத்திய வங்கிகள் வணிக வங்கிகளிடம் நடப்புக் கணக்கில் பெரும் தொகை வைத்திருந்தன; அதோடு, கேட்டவுடன் தரக்கூடிய வைப்புத் தொகையாகவும் பெருமளவு பணம் வைத்திருந்தன. கூட்டுறவு வளர்ச்சிக்கே பாதகமாயிருக்கும் இப் பழக்கத்தை உடனடியாகக் கைவிட வேண்டும்.

7. கூட்டுறவு மத்திய வங்கிகள் தனிப்பட்ட நபர்களுக்குக் கடன் கொடுக்கும் பழக்கம் கைவிடப்பட்ட போதிலும், ஒரு சில வங்கிகள் தம் உறுப்பினர் சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதில் சில தாறுமாறான வழிகளைக் கடைப்பிடிக்கின்றன. மேலும், கடன் பெற்றுள்ள சங்கங்களின் நடவடிக்கைகளை ஒரு சில வங்கிகள் கண்காணிக்காமல் விட்டுவிடுகின்றன. அதோடு, சில வங்கிகள் ஏட்டளவில்தான் கணக்கு வழக்குகளை முறையாகக் காட்டி வருகின்றன. கொடுத்த கடன் உரிய நேரத்தில் திரும்ப வரவில்லையென்றால் அதற்குக் கடின நடவடிக்கை எடுப்பது சிறந்தது.

இறுதியாக, ஒரு சில வங்கிகள் தமக்கு வேண்டியவர்கள் என்பதற்காக பயிற்சியோ அனுபவமோ இல்லாதோரைப் பணிக்கு அமர்த்தி வருகின்றன. தவறான முறையில் கணக்கு வழக்குகளை ரிசர்வ் வங்கிக்கும் கூட்டுறவுப் பதிவாளருக்கும் அனுப்பி வருகின்றன. இந்த மாதிரியான பழக்க வழக்கங்கள் நீக்கப்படுமாயின் மத்திய வங்கிகள் மேலும் முன்னேற வாய்ப்பு உண்டு.

20. கூட்டுறவு மாநில மத்திய வங்கிகள் அல்லது உச்சி வங்கிகள்

(State Co-operative Central Banks or Apex Banks)

ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள கூட்டுறவு மத்திய வங்கிகளும் சேர்ந்து கூட்டாக அமைத்த வங்கிகள்தாம் மாநில மத்திய வங்கிகள். கூட்டுறவு இயக்கத்தில் இவ்வங்கிகள்தாம் உச்சநிலையிலிருந்து பணியாற்றுகின்றன. எனவே, இவற்றை உச்சி வங்கிகள் என்றும் வழங்குவர். விவசாயிகளுக்குத் தேவைப்படும் குறுகிய கால, இடைக்காலக் கடனை அளிப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருவது இவ் உச்சி வங்கிகள்தாம். கூட்டுறவு இயக்கத்தின் இதயமாக விளங்குபவை இவ்வங்கிகள்தாம். ஒரு மாநிலத்தில் கூட்டுறவு இயக்கம் எவ்வளவு தூரம் வளர்ச்சி பெறுகின்றன என்பது இவ்வுச்சி வங்கிகளையே பொறுத்தது. 1971ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 25 உச்சி வங்கிகள் நம் நாட்டில் செயல்பட்டு வந்துள்ளன. இவற்றின் உறுப்பினர்களாக 12,711 வங்கிகளும் கூட்டுறவுச் சங்கங்களும் இருந்திருக்கின்றன. அதோடு தனிப்பட்ட நபர்களும் 8,558 பேர் இவற்றின் பங்குதாரர்களாக இருந்திருக்கின்றனர். இவற்றிடம் இருந்த வைப்புத் தொகை ரூ. 279 கோடியாகவும், செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 75·46 கோடியாகவும் இருந்ததாகவும், அறிய வருகிறோம். ஏறக்குறைய ரூ. 566 கோடி நடப்பு மூலதனத்தைக் கொண்டு இவை இயங்கி வந்திருக்கின்றன. அதோடு, இவை கடனாக வாங்கிய தொகை மட்டும் ரூ. 275·44 கோடி யென்றும், இதில் ரூ. 224·90 கோடி ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்பட்டதென்றும் தெரிகிறது.

அமைப்பு :

மாநில உச்சி வங்கிகள் பல ஆண்டுகளாக மாவட்ட மத்திய வங்கிகளை மட்டுமின்றி, தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களையும்

தனிப்பட்டவர்களையும் கூட உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வந்தன. ஆனால், தற்போது மாவட்ட மத்திய வங்கிகள் மட்டும் இவற்றின் உறுப்பினர்களாக இருப்பதற்கு உகந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுவாக. ஒவ்வொரு மாநில உச்சி வங்கிக்கும் பல பிரதிநிதிகளைக் கொண்ட நிர்வாகக் குழுதான் நிர்வாகப் பொறுப்பை மேற்கொண்டுள்ளது. இக்குழுவில் மத்திய வங்கிகளின் பிரதிநிதிகள், பொதுச்சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், உறுப்பினர்களாக உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு நகர வங்கிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கியின் பிரதிநிதி, மாநில அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

பணிகள் :

இம் மாநில உச்சி வங்கிகள் மாவட்ட மத்திய வங்கிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கே அமைக்கப்பட்டுள்ளன. மத்திய வங்கிகள் கடைப்பிடிக்க வேண்டிய கடன் கொள்கைகளை வகுப்பதோடு, அவற்றின் செயல் முறைகளையும் ஒழுங்குபடுத்துவதும் இம் மாநில உச்சி வங்கிகள்தாம். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் உச்சி வங்கிதான் இருக்க வேண்டுமென்பது குறிக்கோள். ஆனால் 1969-ல் 25 வங்கிகள் நம் நாட்டில் இருந்ததாக ஏற்கெனவே கண்டோம். தத்தம் மாநிலத்திலுள்ள மத்திய வங்கிகளுக்கு வேண்டிய கடனுதவியை இவ்வங்கிகள்தாம் செய்து வருகின்றன. எனினும், அசாமிலுள்ள உச்சி வங்கி மட்டும் தனிப்பட்டவர்களுக்கும் தேயிலைத் தோட்டக்காரர்களுக்கும் கடன் கொடுத்து வருகிறது. பொதுவாக எல்லா மாநில உச்சி வங்கிகளுமே மாவட்ட மத்திய வங்கிகளுக்குத்தான் குறுகிய காலக் கடனும் நெடுங்காலக் கடனும் கொடுக்கின்றன. இக்கடன், தொகை மத்திய வங்கிகளின் வாயிலாகத் தொடக்க நிலைச் சங்கங்களுக்கு அளிக்கப்படுகிறது.

தனிப்பட்டவர்களின் சேமிப்பை வைப்புத் தொகையாக இவ்வங்கிகள் பெறுகின்றன. அதோடு மத்திய வங்கிகளுக்குக் கடன் கொடுப்பதற்கென்று ரிசர்வ் வங்கியிடமிருந்தும் கடன்

பெறுகின்றன. மேலும், உபரியாக உள்ள மத்திய வங்கிகளிடமிருந்து பணத்தைப் பெற்று, பணம் தேவைப்படும் இதர மத்திய வங்கிகளுக்கு அளித்து வருகின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சி பெறுவதற்கும் பொருளாதார நிலை மேம்படுவதற்கும் மாநில அரசாங்கம் போடும் திட்டங்களுக்கு இவ்வங்கிகள் ஒத்தாசை செய்கின்றன. கூட்டுறவுப் பதிவாளரின் அனுமதியின் பேரில் சாதாரண வணிக வங்கிகளைப் போல் உண்டியல்களைக் கழிவு செய்வது, மறுகழிவு செய்வது போன்ற பணிகளையும் இவை மேற்கொண்டு வருகின்றன.

நடப்பு மூலதனம்

இம்மாநில உச்சி வங்கிகள் தம் பங்கின் வழியாகவும், காப்பு நிதி வைப்புத் தொகை ஆகியவற்றின் மூலமாகவும், ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறும் கடனைக் கொண்டும் நடைபெற்றுவருகின்றன. தொடக்கத்தில் இவ்வங்கிகளின் பங்கினை மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மட்டுமன்றி, தொடக்கநிலைச் சங்கங்களும், தனிப்பட்டவர்களும்கூட வாங்கி வந்தனர். ஆனால், தற்போது அப்பழக்கம் குறைந்து பெரும்பாலும் மத்திய வங்கிகளே இவற்றின் பங்கை வாங்கி உறுப்பினர்களாக உள்ளன; கிராமக் கடன் ஆய்வுக் குழுவினரின் சிபாரிசுப்படி, தற்சமயம் மாநில அரசுகளும் இவற்றின் பங்கினை கணிசமான அளவு பெற்று வருகின்றன. இதன் பயனாக இவற்றின் பங்கு மூலதனம் பெருகியுள்ளது. 1960-61-ல் ரூ. 18·24 கோடியாக இருந்த பங்கு மூலதனம் 1970-71-ல் ரூ. 43 கோடியாக அதிகரித்துள்ளது.

காப்பு நிதி: மாநில உச்சி வங்கிகள் பல்வேறு பெயர்களில் தத்தம் காப்பு நிதிகளை உருவாக்கியுள்ளன. 1960-61-ல் ரூ. 6 கோடியாக இருந்த காப்பு நிதிகள் 1970-71-ல் ரூ. 50 கோடியாக அதிகரித்துள்ளது. இதில் வராக் கடன் நிதியாக ரூ. 3·06 கோடியும், சட்டப்படியான ஒதுக்கு நிதியாக ரூ. 7.45 கோடியும் அடங்கும். நிலைபெருக்க நிதி அவ்வளவாகச் சேர்க்கப்படவில்லை. பீகார், ராஜஸ்தான், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் நிலைபெருக்க நிதியே உருவாக்கப்படவில்லை. எனவே, கிராமக் கடன் ஆய்வுக் குழுவின் பரிந்துரையின் பேரில் இவ் வங்கிகள் தாம் பெறும் இலாபத்தில் 15 சதவீதத்தை நிலைபெருக்க நிதிக்கு ஒதுக்கும்படி வழி செய்யப்பட்டுள்ளது. இந்நிதியைப் பலப்படுத்துவதற்கென்று 1968-69-ல் மட்டும் ரூ. 5 கோடி வழங்கப்பட்டுள்ளது.

வைப்புகள் : மாநில உச்சி வங்கிகளின் நடப்பு மூலதனத்தில் பெரும் பங்கு கொள்வது வைப்புகள்தாம். அதாவது 1968-ல் இவற்றின் மொத்த நடப்பு மூலதனத்தில் 32·6 சதவீதம் வைப்புகளாகும். உறுப்பினர் சங்கங்களிடமிருந்து மட்டுமன்றி, தனிப்பட்டவர்களிடமிருந்தும் கம்பெனிகளிடமிருந்தும் கூடப் பல்வேறு கணக்குகளில் இவ் வங்கிகள் வைப்புகளைப் பெறுகின்றன. தத்தம் உறுப்பினர்களாகவுள்ள மத்திய வங்கிகளின் காப்பு நிதியும் இவற்றிடம் வைப்புகளாக அளிக்கப்படுகின்றது. ஏனைய வணிக வங்கிகளைக் காட்டிலும் குறைந்த வட்டிக்குத்தான் இவ்வுச்சி வங்கிகள் வைப்புகளைப் பெறுகின்றன. அப்படியிருந்தும் இவற்றின் வைப்புகள் 1950-51ல் ரூ. 22 கோடியாக இருந்து 1970-71ல் ரூ. 279 கோடியாகவும் 1972-73-ல் ரூ. 406 கோடியாகவும் அதிகரித்துள்ளது. இதிலிருந்து இவ் வங்கிகளின் மேல் தனிப்பட்டவர்களும், நிறுவனங்களும் எவ்வளவு நம்பிக்கை கொண்டுள்ளன என்பது புலனாகிறது. இருந்தும் இவை ரிசர்வ் வங்கியிடமிருந்து இன்றும் அதிகமாகக் கடன் பெற்று வருகின்றன. எனவே தம் தேவைக்குப் போதுமான அளவு தொகையை வைப்புகளாகப் பெறுவதற்கு இவை முயன்று வருகின்றன. மேலும், இவற்றின் மொத்த வைப்புகளில் 71 சதவீதம் கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. ஏனெனில், கூட்டுறவு நிறுவனங்கள் எந்த நேரத்திலும் தம் பணத்தைப் பெற்றுக் கொண்டு விடலாம். அப்போது இவ் வங்கிகளின் நிதி நிலைமை வலுக் குறைந்து விடக் கூடும்.

பெறும் கடன்கள் : மாநில உச்சி வங்கிகள் பெரும்பாலும் அரசாங்கத்திடமிருந்தும் ரிசர்வ் வங்கியிடமிருந்தும் கடன் பெறுகின்றன. இவற்றின் நடப்பு மூலதனத்தில் பெரும் பங்கு இவ்வாறு வாங்கும் கடன் தொகைதான் என்றால் மிகையாகாது. 1968ஆம் ஆண்டுக் கணக்கின்படி மாநில வங்கிகளின் நடப்பு மூலதனத்தில் 45 சத வீதம் இவ்வாறு வாங்கிய கடன் தொகைத்தான். குஜராத், ஒரிசா, பஞ்சாப், மைசூர், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் 50 சத வீதத்திற்குமேல் கடன் வாங்கித்தான் இவ் வங்கிகள் செயல் பட்டு'வந்திருக்கின்றன. எந்த அளவிற்கு இவை கடன் வாங்கலாமென்பது அந்தந்த மாநில அரசுகளின்

சட்டத்தைப் பொறுத்தது. பொதுவாக, இவ் வங்கிகள் தமது சொந்த நிதியைப் போல் 12 மடங்கு முதல் 20 மடங்கு வரை கடன் பெறலாம். பெரும்பாலான கடன் ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்படுகிறது. அரசு வங்கியிடமிருந்து இவை கடன் பெற்று வருகின்றன. குறிப்பாக, கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், பக்குவப்படுத்தும் சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள் ஆகியவற்றிற்கு உதவி செய்வதற்கென்று அரசு வங்கியிடமிருந்துதான் கடன் பெறுகின்றன. மாநில உச்சி வங்கிகள் ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் பெறுவதற்கும் சலுகைகள் அடைவதற்கும் தம் வைப்புகளில் ஒரு பகுதியை ரிசர்வ் வங்கியிடம் வைக்க வேண்டுமென்ற கொள்கை கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது.

தரும் கடன்: மாநில உச்சி வங்கிகள் தம் பகுதியிலுள்ள மத்திய வங்கிகளுக்கும் மேல் நிலையிலுள்ள இதர கூட்டுறவுக் கூட்டமைப்புகளுக்கும் தாம் கடன் கொடுத்து வருகின்றன. எனினும், கூட்டுறவுப் பதிவாளரின் அனுமதியின் பேரில் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இவை கடன் தரலாம். மத்திய வங்கிகளுக்குத் தரப்படும் கடன் அவ் வங்கி கொண்டுள்ள பங்கின் அளவைப் பொறுத்ததாகும். தாம் கொண்டுள்ள பங்குத் தொகையைப் போல் எந்த மத்திய வங்கியும் 20 மடங்கு கடன் பெறலாம்: எனினும், ஒவ்வொரு மத்திய வங்கியும் ஆண்டொன்றுக்கு எவ்வளவு கடன் வாங்கலாம் என்பது அவ்வப்போது நிர்ணயிக்கப்படுகிறது. அதோடு, எந்தெந்த நிபந்தனைகளின் பேரில் கடன் வாங்கலாம் என்பதை ரிசர்வ் வங்கி மட்டுமன்றி, கூட்டுறவுப் பதிவாளரும் நிர்ணயம் செய்கின்றனர். இதுவரை மாவட்ட மத்திய வங்கிகள் விவசாய அபிவிருத்திக்கென்று குறுகிய காலக் கடனை மட்டுமன்றி இடைக்காலக் கடனையும் பெற்று வந்தன. ஆனால், தற்போது குறுகிய காலக் கடனுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்படுகிறது. மாநில உச்சி வங்கிகள் எந்தெந்தக் காரணங்களுக்காக கடன் அளிக்கின்றன என்பதையும், அக்கடன் தொகை எப்படி மாறியுள்ளது என்பதையும் கீழ்க் காணும் புள்ளி விவரங்களிருந்து தெரிந்து கொள்ளலாம்.

(கோடி ரூபாயில்)

கடனின் நோக்கம்	1962-63	1966-67	1967-68
குறுகியகாலக் கடன் ...	280·87	402.56	522.27
1. விவசாயச் சாகுபடிக்காக ...	183.88	281.75	332.54
2. விளைபொருள் விற்பனை செய்ய ...	9.35	12.92	31.61
3. தொழில் வளர்ச்சிக்காக ...	26.03	15.35	13.20
4. இதரக் காரணங்களுக்காக ...	61.61	92.54	144.92
இடைக்காலக் கடன் ...	13.96	30.37	21.65
1. கிணறு வெட்டவும் பழுது பார்க்கவும் ...	1.11	5.86	5.82
2. விவசாயக் கருவிகள் வாங்க ...	4.90	2.37	1.43
3. கால்நடைகள் வாங்க ...	2.95	5.69	1.56
4. நிலச் சீர்திருத்தத்திற்காக ...	0.83	0.47	3.39
5. இதரக் காரணங்களுக்காக ...	4.17	15.98	9.45

மாநில உச்சி வங்கிகள் கொடுத்து வரும் மொத்தக் கடன் தொகை ஆண்டு தோறும் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. 1950-51-ல் கொடுத்த கடன் ரூ. 42 கோடி மட்டுமே. ஆனால் 1960-61-ல் இத் தொகை ரூ. 258 கோடியாகவும், 1970-71-ல் ரூ. 748 கோடியாகவும், 1972-73-ல் ரூ. 1,088 கோடியாகவும் பெருகியுள்ளது.

கண்காணிப்பும் தணிக்கையும்

நம் நாட்டு விவசாய முன்னேற்றத்திற்காகக் கடன் கொடுக்கும் முறையான நிறுவனங்கள் அனைத்தையும் கடந்த பத்து ஆண்டுகளாக ரிசர்வ் வங்கியே கண்காணித்து வருகிறது. இவ்வகையில் மாநில உச்சி வங்கிகளும் ரிசர்வ் வங்கியின் கண்காணிப்பிற்கு உள்ளாகியுள்ளன. இவ் வகை வங்கிகளையெல்லாம் கண்காணிப்பதற்கென்று முக்கியமான மாநிலங்களிலெல்லாம் ரிசர்வ் வங்கி தன் விவசாயக் கடன் துறையின் கிளைகளைத் தொடங்கியுள்ளது. இக் கிளைகளின் முக்கிய நோக்கம் வருமாறு: கூட்டுறவு இயக்கத்தோடு நெருங்கிய தொடர்புகொண்டு, அவற்றை அவ்வப்போது கண்காணிப்பது; கூட்டுறவு வங்கிகள் மேலும் செம்மையாக வளர்ந்து பணிபுரிவதற்கான ஆலோசனைகளைக் கூறுவது. எனவே, கூட்டுறவு வங்கிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைத் தணிக்கை செய்வதற்குச் சம்மந்தப்பட்ட அதிகாரிகளை ரிசர்வ் வங்கி ஆண்டு தோறும் அனுப்பி வருகிறது மேலும், புதிய வங்கிச் சட்டம் அமலாக்கப்பட்டதிலிருந்து. கூட்டுறவு வங்கிகளைக் கண்காணிக்கும் பொறுப்பை ரிசர்வ் வங்கியே மேற்கொண்டுள்ளது.

கூட்டுறவு முறையில் இயங்கும் எல்லா நிறுவனங்களின் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்யும் பொறுப்புக் கூட்டுறவுப் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனால் மாநில உச்சி வங்கிகளின் கணக்கு வழக்குகளையும் கூட்டுறவுத் தணிக்கையாளர்களைக் கொண்டே தணிக்கை செய்கிறார். சில சமயங்களில் அனுபவம் வாய்ந்த தனிப்பட்ட தணிக்கையாளர்களைக் கொண்டும் தம் கணக்கு வழக்குகளை இவ்வங்கிகள் சரிபார்க்கலாம். ஆனால், அவ்வாறு செய்வதற்கு கூட்டுறவுப் பதிவாளரின் ஒப்புதல் அவசியம்.

காப்பு நிதி முதலீடு:

மாநில உச்சி வங்கிகள் தம்மிடமுள்ள காப்பு நிதியைப் பெரும்பாலும் அரசாங்க ஆவணங்களில்தான் முதலீடு செய்து வருகின்றன. கூட்டுறவு வங்கிகள் பெரும்பாலும் விவசாயிகளுக்கே கடன் வழங்குகின்றன; இக் கடனை உரிய நேரத்தில் பல விவசாயிகளால் திரும்பச் செலுத்த முடிவதில்லை. விவசாய தொழில் இயற்கை சார்ந்த பல இக்கட்டுகளுக்கு ஆளாவதுதான் இதற்குக் காரணம். எனவே, கூட்டுறவு வங்கிகளுக்கு வரவேண்டிய கடன் தொகையை எப்படிச் சரிக் கட்டுவது என்பதற்குக் கிராமக் கடன் ஆய்வுக் குழுவினர் பின்வரும் சிபாரிசுகளைச் செய்துள்ளனர்.

தேசிய விவசாயக் கடன் (நிலை பேருக்க) நிதி ஒன்றை ரிசர்வ் வங்கி உருவாக்க•வேண்டும்; இந்நிதியை மாநில உச்சி வங்கிகள், மாவட்ட மத்திய வங்கிகள் ஆகியவற்றிலும் உருவாக்க வேண்டும். இதற்கென்று 1955-ல் ரிசர்வ் வங்கிச் சட்டம் திருத்தி அமைக்கப் பட்டது. இச் சட்டப்படி, ஆண்டுதோறும் ரூ. 1 கோடியை ரிசர்வ் வங்கி இந்நிதிக்கு ஒதுக்குகிறது. கூட்டுறவு வங்கிகள் இந் நிதியை உருவாக்குவதற்கென்று அக் குழு பின் வரும் உபாயங் களைக் கூறியுள்ளது. அதாவது, கூட்டுறவு வங்கிகளில் மாநில அரசாங்கம் கொண்டுள்ள பங்கு மூலதனத்திற்கு இலாப ஈவு கொடுக்கும்போது, ஒரு குறிப்பிட்ட சதவீத இலாபத்தை மட்டும் கொடுத்து விட்டு, எஞ்சிய தொகையை இந்த நிதியின் கணக்கில் சேர்க்க வேண்டும். மேலும், ஏனைய பங்கு தாரர்களுக்குச் செலுத்தும் இலாப ஈவிலும் ஒரு பகுதியை இந்த நிதியில் சேர்க்க வேண்டும். இவ்வாறு இந்த நிதி உருவாக்கப்பட்டால் தான் கூட்டுறவு வங்கிகளில் சேமிக்க விரும்புவோருக்கு நம்பிக்கை ஏற்படும் என்று அக் குழு கருதியது.

மாநில உச்சி வங்கிகள் தம்மிடம் உபரியாக இருக்கும் பணத்தைக் கொண்டு இதரக் கூட்டுறவு நிறுவனங்களின் பங்குகளை வாங்குவதற்கும் வழி செய்யப்பட்டுள்ளது. அதோடு, மத்திய நிலவள வங்கி வெளியிடும் கடன் பத்திரங்களிலும் இவை முதலீடு செய்கின்றன.

ரிசர்வு வங்கி இம் மாநில உச்சி வங்கிகளோடு எவ்வாறு தொடர்பு கொண்டு உதவி செய்கிறது என்பதைத் தனி அதிகாரம் ஒன்றில் காண்போம்

இன்றைய நிலை

மேற் கூறிய விவரங்களிலிருந்து ஒரு சில உண்மைகள் புலனுகின்றன. அதாவது, மாநில உச்சி வங்கிகள் மாவட்ட மத்திய வங்கிகளுக்கு உதவி செய்வதில் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளன. அதோடு, இவ் வங்கிகளின் நடப்பு மூதலனமும் திருப்திகரமாக அதிகரித்துள்ளது. சொந்தமான நிதி கூட அவ்வளவு மோசமான நிலையில் இல்லை. இவ் வங்கிகளில் ஓரிரண்டைத் தவிர மற்றவை அனைத்துமே இலாபகரமாகத்தான் இயங்கி வருகின்றன. எனினும் இம் மாநில உச்சி வங்கிகள் செயல்படும் முறையில் ஒரு சில காரியங்கள் அவ்வளவு உகந்த தாகத் தோன்ற வில்லை. எனவே அக்காரியங்களைப் பற்றிச் சுருக்கமாகவாவது குறிப்பிடல் அவசியம்.

1. ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் வாங்கி அக் கடனை மாவட்ட மத்திய வங்கிகளுக்கு இவ்வுச்சி வங்கிகள் அளித்து வருகின்றன. ஆனால், மாவட்ட மத்திய வங்கிகளில் சில தாம் பெற்ற கடனைத் திருப்பித் தராத நிலையில் கூட இவ்வுச்சி வங்கிகள் கடனைத் திருப்பிப் பெற்று விட்டதாகக் கணக்கில் காட்டி ரிசர்வ் வங்கிக்குத் தம் கடனைச் செலுத்தி வருகின்றன. இதே போன்ற காரியங்களை மத்திய வங்கிகளில் சிலவும் செய்து வருகின்றன. எனவே, மத்திய வங்கிகளைச் சரியான முறையில் கண்காணிப்பது அவசியம். அவ்வாறு கண்காணிக்க வேண்டுமாயின்; உச்சி வங்கிகளுக்கு திறமையான, அனுபவம் வாய்ந்த பணியாளர்கள் மேலும் தேவை. மேலும், மாவட்ட மத்திய வங்கிகள் செயல்படும் முறையில் ஒரு சில ஒழுங்கீனமான தவறுகள் கண்டுபிடிக்கப் படுவதில்லை. அப்படியே, கண்டுபிடித்தாலும் அவற்றை நீக்குவதற் கான நடவடிக்கைகளைச் சில மாநில உச்சி வங்கிகள் மேற் கொள்வதில்லை. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் ஆள் பற்றாக் குறையாக இருக்கலாம். எப்படியிருப்பினும், மத்திய வங்கிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதும் கட்டுப்படுத்து வதும் மாநில உச்சி வங்கிகளின் கடமை என்பதை மறந்துவிடக் கூடாது.

2. ஒரு சில மாநிலங்களிலுள்ள உச்சி வங்கிகள் தம் நிதியை முதலீடு செய்யும்போது கவனமின்றியும் தாறுமாறாகவும் முதலீடு செய்து விடுவதாகவும் தெரிகிறது. ரிசர்வ் வங்கி எவ்வளவுதான் ஆலோசனை கூறிய போதிலும்கூட ஒருசில வங்கிகள் தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கினை வாங்குகின்றன. அதோடு மட்டுமன்றி, கூட்டுறவுச் சினிமா சங்கங்கள் போன்ற தொடக்க நிலை சங்கங்களுக்கும் ஏராளமான கடன் அளிக்கின்றன. இவ்வகை யில் தம் நிதியை முதலீடு செய்யும் பழக்கம் நீங்க வேண்டும். அப் போதுதான் மாநில உச்கி வங்கிகளின் நிர்வாகம் செம்மையான தாகும்.

3. ரிசர்வ் வங்கி எவ்வளவோ எதிர்ப்புத் தெரிவித்தும் கூட அசாம், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலத்திலுள்ள சில வங்கிகள் தனிப்பட்டவர்களுக்கும் கூடத் தாராளமாகக் கடனுதவி செய்து வருகின்றன. இவ் வகைக் கடன் உத்தரப் பிரதேசத்தில் ரூ 4 64 கோடியாகவும், அசாமில் ரூ 41 இலட்சமாகவும் இருந்ததாக அறிய வருகிறோம்.

4. மாநில உச்சி வங்கிகளுக்கு மாவட்ட மத்திய வங்கிகள் திருப்பித்தர வேண்டிய கடன் நிலுவைகள் அதிகமாகி வருகின்றன

எனவே, இக் கடன் நிலுவைகளைப் பெற துரிதமான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டியுள்ளது. மேலும், பொது மக்கள் தம் சேமிப்பை இம் மாநில உச்சி வங்கிகளில் வைப்பாக வைக்கும் பழக்கம் இன்னும் வளரவில்லை. இவ் வங்கிகளிடமுள்ள வைப்புகளில் 20 சதவீதம் தான் பொது மக்களிடமிருந்து பெறப் பட்டிருக்கின்றன. எனவே, பொது மக்களிடம் நம்பிக்கையூட்டி அவர்களின் சேமிப்பைக் கவருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற் கொள்ளல் அவசியம்.

5. மாநில உச்சி வங்கிகளுக்குத் தேவையான இடைக்காலக் கடன் தொகையை ரிசர்வ் வங்கி வழங்கி வருகிறது. அவ்வாறு வழங்கப்படும் தொகை முழுவதுமாகப் பயன் படுத்தப்படுவதில்லை. காரணம், கூட்டுறவு மத்திய வங்கிகளின் இடைக் காலக் கடன் தேவையைச் சரிவரக் கணக்கிடுவதில்லை; அதோடு மாநில உச்சி வங்கிகள் இடைக்காலக் கடனளிக்கத் தயக்கம் காட்டி வருகின்றன

6. சில மாநில உச்சி வங்கிகள் மாவட்ட மத்திய வங்கிகளுக்கு எவ்வளவு கடன் வழங்கலாம் என்பதைச் சரிவரக் கணக்கிடாமல் தாராளமாகக் கொடுத்து விடுகின்றன. இவ்வாறு பெற்ற கடன் தொகையை மாவட்ட மத்திய வங்கிகள் வணிக வங்கிகளிடம் வைப்புக்களாக வைக்கும் பழக்கத்தை மேற் கொண்டு வருகின்றன. எனவே, மத்திய வங்கிகளுக்குக் கடன் கொடுக்கும் போது, அவற்றின் தேவை எவ்வளவு, கடந்த காலத்தில் கடன் தொகையை என்ன செய்து வந்துள்ளது, குறிப்பிட்ட தவணையில் திருப்பிக் கொடுத்திருக்கிறதா என்பதையெல்லாம் நன்கு ஆராய வேண்டும்.

சில ஆலோசனைகள்

ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டுறவு இயக்கத்தை வழி நடத்தும் நிறுவனங்களாகத் தான் இம் மாநில உச்சி வங்கிகள் கருதப்படுகின்றன. எனவே, தமக்குக் கீழ் பணி புரிகின்ற மத்திய வங்கிகளின் நடவடிக்கைகளை நன்கு பரிசீலனை செய்து, அவற்றிற்கு வழி காட்ட வேண்டிய பொறுப்பு இவ்வங்கிகளைச் சார்ந்ததாகும். ரிசர்வ் வங்கியின் ஆலோசனைப் படி கூட்டுறவுக் கொள்கைகளைச் செயல் படுத்தும் விதத்தில் இவ்வங்கிகள்பணி புரிந்தால் தான் ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டுறவு இயக்கம் வளரமுடியும். எனவே, மாநில உச்சி வங்கிகள் தம் கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து திறம்படச் செயல் புரியும் வகையில் கிராமக் கடன் ஆய்வுக் குழுவினர் கீழ்க்காணும் ஆலோசனைகளைக் கூறியுள்ளனர். மாநில அரசாங்கம் உச்சி வங்கிகளுக்குப் பேருதவி செய்து

வருகின்றது. அவ்வாறுயின் அவ்வங்கிகளின் நிர்வாகத்தில் மாநில அரசாங்கத்திற்கு உகந்த பிரதி நிதித்துவம் கொடுக்கப் பட வேண்டும். ரிசர்வ் வங்கியின் பிரதிநிதிகள் ஒவ்வோர் உச்சி வங்கிக்கும் சென்று, நிர்வாகக் குழுவினரின் கூட்டங்களில் பங்கு கொள்வதோடு, கூட்டுறவுக் கடன் அமைப்பை மேம்படுத்த ஆலோசனைகள் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். நலிந்துள்ள உச்சி வங்கிகளை ஊக்குவித்து வளர்க்கும் விதத்தில் சம்பந்தப்பட்ட மாநில அரசு அவற்றின் பங்கு மூலதனத்தை ஏராளமாகப் பெற்று, அவற்றிற்கு ஒத்தாசை புரிய முன்வர வேண்டும். உச்சி வங்கிகளுக்குத் தேவைப்படும் பணியாள்கள் அதிகம் வேண்டும்; அதோடு நல்ல முறையில் பயிற்சி பெற்று, திறமையும் ஊக்கமும் நிறைந்தவர்களாய் அவர்கள் இருக்க வேண்டும். மேலும், எந்தெந்தப் பகுதியில் எவ்வளவு இடைக் காலக் கடன் விவசாயிகளுக்குத் தேவைப்படுகிறது என்ற புள்ளி விவரங்களை அந்தந்தப் பகுதியிலுள்ள மத்திய வங்கிகள் சேகரித்து, அதன் அடிப்படையில் இடைக் காலக் கடனை உச்சி வங்கியிடமிருந்து பெற்றுக் கொடுத்தால் கூட்டுறவுக் கடன் இயக்கமும் வளரும்; பயிர்த் தொழிலும் முன்னேற்றமடையும்.

தேசியக் கூட்டமைப்பு நிறுவனம்

1964ஆம் ஆண்டு ஜூலை மாதம் நம் நாட்டிலுள்ள மாநிலக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் சேர்ந்து தமக்கென்று தேசியக் கூட்டமைப்பு நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளன. மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படக் கூடிய சிக்கல்களை ஆராய்ந்து, அவற்றைத் தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பது தான் இந் நிறுவனத்தின் முக்கியக் குறிக் கோளாகும். மேலும், கூட்டுறவு வங்கிகளின் நலனைப் பேணுவதற்கென்று இந் நிறுவனம் மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்கள் ஆகியவற்றுடனும், ரிசர்வ் வங்கி, அரசு வங்கி, தொழில் நிதிக் கார்ப்பரேஷன், விவசாய மறு நிதிக் கார்ப்பரேஷன் ஆகியவற்றுடனும் அவ்வப்போது தொடர்பு கொண்டு வருகிறது.

21. நீண்டகாலக் கடன்—நில வள வங்கிகள்

நம் நாட்டு விவசாயிகள், குறிப்பாகச் சிறு விவசாயிகள் கடன் வாங்க வேண்டிய நிலையில்தாம் வாழ்கிறார்கள் என்ற உண்மையைச் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பே சர் நிக்கல்சன் அவர்கள் கூறி விட்டார்கள். ஆம், விவசாய மக்களுக்குப் பெரிய அளவில் கடன் தேவைப்படுகிறது; அவர்களுக்கு வேண்டிய கடன் பல வகைப்படும். பயிர்ச் சாகுபடிக்கு மட்டுமன்றி, கிணறு வெட்டவும், ஆழப் படுத்தவும், பழுது பார்க்கவும், பம்புசெட் வாங்கவும், விவசாயக் கருவிகள் வாங்கவும் இன்னும் எத்தனையோ காரணங்களுக்காக அவர்களுக்குக் கடன் ஏற்படுகிறது. குறிப்பாக நிலத்தை மட்டுமன்றி விவசாயத்தையே முன்னேற்ற வேண்டிய நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளதால் அவர்களின் கடன் தேவை பெருகியுள்ளது.

விவசாயிகளுக்குத் தேவைப்பட்ட குறுங்காலக் கடனை மட்டும்தான் கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் கொடுத்து வந்தன. எனவே, நெடுங்காலக் கடன் தேவைப்பட்ட விவசாயிகள் தம் நிலங்களை வட்டிக்கடைக் காரர்களிடம் அடைமானம் வைத்தே பெற்று வந்தனர். குறுங்காலக் கடனை அளிப்பதற்கென்று கூட்டுறவுச் சங்கம் இருப்பதுபோல் விவசாயிகளின் நீண்டகாலக் கடன் தேவையையும் பூர்த்தி செய்வதற்கு ஏதாகிலும் நல்ல வழிதேவை என்று வெகுநாட்களாகவே உணரப்பட்டு வந்தது. ஜப்பான் போன்ற நாடுகளில் விவசாயிகளுக்குத் தேவைப்படும் குறுங்காலக் கடனை மட்டுமன்றி, நெடுங்காலக் கடனையும் கூட்டுறவுக் கடன் சங்கங்களே அளித்து வருகின்றன. ஆனால், நம் நாட்டிலுள்ள கடன் சங்கங்களால் நெடுங்காலக் கடனைக் கொடுக்க இயலாது. எனவே, நெடுங்காலக் கடனை வழங்குவதற்கென்று தனி நிறுவனங்கள் அமைக்கப்பட்டு வந்தன. இந் நிறுவனங்கள் இதுவரை 'நில அடைமான வங்கிகள்' என அழைக்கப்பட்டு வந்தன. ஆனால், அடைமானத்திலுள்ள நிலங்களைத் திருப்புவதற்கு

மட்டுமன்றி நிலஅபிவிருத்திக்கும் இவ் வங்கிகள் தற்போது கடன் கொடுத்து வருவதால் இவற்றை 'நில வள வங்கிகள்' என்று அழைக்கின்றோம்.

நீண்டகாலக் கடன் தருவதற்கென்று முதன்முதலில் முயற்சியெடுத்த மாநிலம் பஞ்சாப்தான். பஞ்சாப்பில்தான் 1920-ல் முதல் கூட்டுறவு நில அடைமான வங்கி ஏற்படுத்தப் பட்டது. அதையடுத்து, 1925-ல் சென்னை மாநிலத்தில் இரண்டு வங்கிகள் நிறுவப்பட்டன. நில வள வங்கி அமைப்பில் தமிழ்நாடு தான் இன்று முன்னிலையில் இருந்து வருகிறது. 1926-ல் நடைபெற்ற கூட்டுறவுப் பதிவாளர் மாநாட்டில் நாடெங்கும் நில அடைமான வங்கிகளை அமைப்பதற்கான பேச்சு வார்த்தைகள் ஏற்பட்டன. அதையடுத்து அமைக்கப்பட்ட விவசாயக் குழுவும் மைய வங்கி ஆய்வுக் குழுவும் நில அடைமான வங்கிகளை ஏற்படுத் தும்படி ஆலோசனை கூறின. அதற்கான சரத்தைக் கூட்டுறவுச் சங்க சட்டத்தில் சேர்க்கும்படியும் இக் குழுக்கள் வலியுறுத்தின. அடைமானத்திலிருந்து நிலத்தை மீட்பதற்கும், நில அபிவிருத்தி செய்வதற்கும், முந்திய கடனைத் தீர்க்கவும் விவசாயிகளுக்கு நீண்டக்காலக் கடனை அளிக்கத்தக்க வகையில் நில அடைமான வங்கிகள் நாடெங்கிலும் அமைக்கப்பட வேண்டு மென்று வலியுறுத்தின. இக் கடன் நிலத்தின் மதிப்பில் பாதி அளவிற்குமேல் இருக்கக்கூடாதென்றும் கடனை வழங்கும்போது விவசாயிகள் திரும்ப அக்கடனைச் செலுத்தக்கூடிய தகுதி பெற்றவர்களா என்பதை ஆலோசித்து வழங்க வேண்டுமென்றும் ஆலோசனை கூறின. இக் கடன் 20 ஆண்டுகள் வரைதான் கொடுக்கப்பட வேண்டுமென்றும், அதற்குள் இக் கடனைத் திரும்பப் பெறவேண்டுமென்றும் வலியுறுத்தின. அதனோடு, ஒவ்வொரு மாநிலத்திலும் மாநில நில அடைமான வங்கிகளை ஏற்படுத்தி, கடன் பத்திரங்களை வெளியிடுவதன் வாயிலாக நில அடைமான வங்கிகளுக்குத் தேவையான நிதியைப் பெறலாமென்றும் கருத்துத் தெரிவித்தன.

எனினும், நில அடைமான வங்கிகள் சுதந்திரத்திற்குப் பின்னர்த்தான் நாட்டில் நல்ல வளர்ச்சியடையத் தொடங்கின. சான்றாக, முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பமானபோது நம் நாட்டில் ஐந்து மாநிலங்களில் மட்டும்தான் மத்திய நில அடைமான வங்கிகள் இருந்தன. ஆனால், இன்றோ எல்லா மாநிலங்களிலுமே அவை இயங்கி வருகின்றன. அதேபோல் தொடக்க நில அடைமான வங்கிகளும் மத்திய நில அடைமான வங்கிகளின் கிளைகளும் சேர்ந்து, 1950-51-ல் 290 தாம் இருந்தன;

ஆனல், 1972-73-ல் தொடக்க நில வங்கிகளின் எண்ணிக்கை மட்டும் 855 ஆக அதிகரித்துள்ளது. நீண்ட காலக் கடனை வழங்குவதில் நாடு எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்பதைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து எளிதாக அறிந்து கொள்ளலாம்.

(கோடி ரூபாய்)

ஆண்டு	அவ்வாண்டில் அளித்த கடன்	வரவேண்டிய கடன் தொகை
1950-51	1·38	6·59
1955-56	2·86	13·47
1960-61	11·62	37·74
1965-66	58·24	166·36
1967-68	78·00	257·88
1968-69	148·00	402·15

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் 250 தொடக்கக் கூட்டுறவு நில அடைமான வங்கிகள் தொடங்கப்படும். அதனேடு இத் திட்ட காலத்திற்குள் மேலும் 700 கோடி ரூபாய் கடனுக வழங்கப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது.

அமைப்பு முறை

நில வள வங்கிகள் தனி நிறுவனங்களாக அமைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு மாநிலத்திலும் அம் மாநிலப்பகுதி முழுவதற்கும் பணியாற்றும் வகையில் மாநிலக் கூட்டுறவு மத்திய நில வள வங்கி உள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் பல தொடக்க நிலை வங்கிகளும் அமைக்கப்பட்டுள்ளன. ஆனல், தொடக்க நிலை நில வள வங்கிகள் மாநிலத்திற்கு மாநிலம் வெவ்வேறு விதத்தில் நிறுவப்பட்டுள்ளன. பெரும்பாலும் ஒவ்வொரு மாநிலத்திலும் தாலுகாத் தலை நகரங்களில் தாம் தொடக்க நிலை நில வள வங்கிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவையனைத்தும் மாநில நில வள வங்கியோடு இணைக்கப்பட்டுள்ளன.

நிதி உருவாக்கும் முறை

நீண்ட காலக் கடனை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள இவ்வங்கிகளுக்குப் பெருமளவில் நிதி தேவைப்படுவது இயல்பு இந்நிதியைப் பின்வரும் வழிகளில் இவை அடைகின்றன.

1. தொடக்க நிலவள வங்கிகள் :

(1) பங்கு மூலதனம்
(2) நுழைவுக் கட்டணமும் பிற கட்டணங்களும்
(3) மைய நிலவள வங்கியிடமிருந்து பெறும் கடன்
(4) மானியமும் உதவித் தொகையும்
(5) உருவாக்கியுள்ள நிதி வகைகள்

2. மைய நிலவள வங்கிகள் :

(1) பங்கு மூலதனம்
(2) நுழைவுக் கட்டணமும் பிற கட்டணங்களும்
(3) மாநில அரசின் உத்தரவாதத்தின் பேரில் ரிசர்வ் பாங்கிடமிருந்து தாற்காலிகமாகப் பெறும் கடன்.
(4) கடன் பத்திரங்களை வெளியிடல்
(5) மானியமும் உதவித் தொகையும்
(6) உருவாக்கியுள்ள நிதி வகைகள்

இவ்வங்கிகளுக்குத் தேவைப்படும் நிதி பெரும்பாலும் மத்திய நில வள வங்கிகளால் தாம் உருவாக்கப்படுகிறது.

கடன் பத்திரங்கள்

கடன் பத்திரம் என்பது ஒரு நிறுவனம் தான் கடன் பட்டிருக்கும் நிலையை எடுத்துக்காட்டும் எழுத்துப் பத்திரமாகும். இப் பத்திரத்தில் தான் கடன் பட்டிருக்கும் தொகையையும் வட்டியையும் செலுத்தும் முறை பற்றி அந்த நிறுவனம் குறிப்பிட்டிருக்கும். நில வள வங்கிகள் கடன் பத்திரங்களை வெளியிடும் முறை குறிப்பிடத்தக்கது. மத்திய நில வள வங்கியானது தன் சொத்துக்களின் அடிப்படையிலும் அடைமானம் வைக்கப்படும் சொத்து மதிப்பின் அடிப்படையிலும் தொடக்க நில வங்கிகளுக்குச் சேரும் வகையில் கடன் பத்திரங்களை வெளியிடுகிறது. இச் சொத்துகளின் மதிப்பிற்குமேல் எந்த நில வள வங்கியும் கடன் பத்திரங்களை வெளியிடுவதில்லை. எனவே, கடன் பத்திரங்களை வெளியிடும் வங்கிக்குப் போதுமான அளவு சொத்து இருக்க வேண்டும். இவ்வகைச் சொத்துக்களைப் பெறுவதற்காக ஒவ்வொரு மாநில மைய நில வள வங்கியும் ஸ்டேட் பாங்கிடமிருந்து முன்பணம் பெறுகிறது. இந்த முன்பணத்திற்கு மாநில அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கிறது. இந்த உத்தரவாதம் கீழ்க் காணும் நிபந்தனைகளின் பேரில் அளிக்கப்படுகிறது.

(1) கடன் பத்திரங்கள் வெளியிடப்பட்டு வாங்கப்பட்டவுடன் இந்த முன் பணத்தைச் சம்மந்தப்பட்ட நில வள வங்கி திருப்பிச் செலுத்தி விடவேண்டும்.

(2) முன் பணத்தொகையும் புழக்கத்திலுள்ள கடன் பத்திரங்களின் மொத்த மதிப்பும் சேர்ந்து அரசாங்கம் அளித்துள்ள உத்தரவாதத் தொகைக்கு உட்பட்டதாயிருக்க வேண்டும்.

(3) இந்த முன் பணத்திலிருந்து பெறப்பட்ட அடைமானச் சொத்துகளுக்கு ஸ்டேட் பாங்குக்குத் தான் முதல் உரிமையுண்டு.

ஒரு சில மாநிலங்களிலுள்ள மத்திய நிலவள வங்கிகள் ஸ்டேட் பாங்கிடம் மட்டுமன்றி, மாநிலக் கூட்டுறவு வங்கியிடமிருந்தும் முன் பணம் பெறுகின்றன.

இக் கடன் பத்திரங்களைப் பெறுவோரின் நலனைப் பாதுகாப்பதற்கென்று அரசாங்கம் பொறுப்பாண்மையரை நியமிக்கிறது கடன் பத்திரங்களை வெளியிடுவதற்குமுன் சம்மந்தப்பட்ட அரசாங்கத்தின் உத்தரவாதத்தை இவ்வங்கிகள் பெற வேண்டும். பெரும்பாலான மாநிலங்களில் கூட்டுறவுப் பதிவாளர்களே பொறுப்பாண்மையர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர். கடன் பத்திரதாரர்களுக்கு இவர்கள் பொறுப்புள்ளவர்கள். எனவே, நில வள வங்கி பெறும் அடைமானச் சொத்துகளுக்கும் இதரச் சொத்துகளுக்கும் பொறுப்பாண்மையர்களே முதல் உரிமை பெற்றவர்கள். இதற்கான ஒப்பந்தங்களைப் பாதுகாவலர்களும் வங்கிகளும் சேர்ந்து செய்து கொள்கின்றன. அதன் பின்னர், பாதுகாவலர்களின் ஒப்புதலின் பேரிலும் ரிசர்வ் பாங்கின் ஒப்புதலின் பேரிலும் இவ் வங்கிகள் தம் கடன் பத்திரங்களை வெளியிடுகின்றன. இப் பத்திரங்களுக்குரிய வட்டி வீதத்தை ரிசர்வ் பாங்கு தான் நிர்ணயம் செய்கிறது.

இக் கடன் பத்திரத்தைப் பெறுவோர் யாருக்கு வேண்டுமானாலும் அதை மாற்றிக் கொடுக்கலாம். அப்படி மாற்றும்போது கடன் பத்திரச் சான்றையும் மாற்றம் செய்யும் பத்திரத்தையும் மைய நில வள வங்கிக்கு அனுப்பவேண்டும். அவ்வங்கி அதைப் பெறுவோரின் பெயரில் அக் கடன் பத்திரத்தைப் பதிவு செய்து கொள்கிறது. இக் கடன் பத்திரத்திற்குரிய வட்டியைச் செலுத்துவதற்கு முன் ஒரு வார காலத்திற்கு அதை மற்றவர் பெயருக்கு எவரும் மாற்றமுடியாது.

இக் கடன் பத்திரம் எவ்வளவு நாளுக்குரியது என்பது குறிப்பிடப்பட்டிருக்கும். எனினும், அந்நாள் வருவதற்கு முன்பே நில வள வங்கிகள் அப்பத்திரங்களுக்குரிய தொகையைச் செலுத்தி, உரியவர்களிடமிருந்து அவற்றை மீட்டு வந்தன. உதாரணமாக 1937ஆம் ஆண்டிற்குமுன், சென்னை மத்திய நில வள வங்கி இவ்வாறுதான் மீட்டு வந்தது. குறிப்பிடப்பட்ட நாளுக்கு முன்பே மூன்றுமாத அறிக்கை விட்டு உரியவர்களிடமிருந்து அக்கடன் பத்திரங்களைப் பெற்று வந்தது. கடன்பத்திர வட்டியை விடக் குறைந்த வட்டிக்குப் பணம் கிடைத்தபோதெல்லாம் கடன் பத்திரங்களை முன்னதாகவே மீட்டு வந்தது. இதனால் கடன் பத்திரங்களை எவரும் வாங்க முன் வரவில்லை. எனவே, நில வள வங்கிக்கு அடைமானம் வைத்திருப்போர் தம் தவணைத் தொகையைச் செலுத்தும்போது அதில் ஒரு பகுதியை 'கடன்தீர் நிதி' (Sinking Fund)யாக உருவாக்கி, அதைக்கொண்டு உரிய நாளில் கடன் பத்திரங்களை மீட்கும்படி ரிசர்வ் பாங்கு ஆலோசனை கூறியுள்ளது. இந்த ஆலோசனையை எல்லா மத்திய நிலவள வங்கிகளும் ஏற்றுக்கொண்டுள்ளன.

கடன் பத்திரங்கள் பெறுவோர்

நில வள வங்கிகள் விடுக்கும் கடன் பத்திரங்களை ரிசர்வ் பாங்கு, ஆயுள் காப்பீட்டுக் கழகம், ஸ்டேட் பாங்கு, அரசாங்கம், வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஆகியவை வாங்குகின்றன.

மைய நில வள வங்கிகளின் கடன் பத்திரங்களில் 1948-ல் ரிசர்வ் பாங்கு 10 சதவீதம் ஏற்றுக் கொண்டது. 1953-ல் கொண்டுவரப்பட்ட புதிய திட்டப்படி ரிசர்வ் பாங்கும் மத்திய அரசாங்கமும் சேர்ந்து 40 சதவீதம் ஏற்றுக்கொண்டன. 1965-ல் பழையபடி ரிசர்வ் பாங்கு மட்டும் 10 சதவீதம் மட்டுமே ஏற்றுக் கொண்டது. ஆனால், ரிசர்வ் பாங்கின் பங்கு 1964-65-ல் 10 சதவீதத்திலிருந்து 1967-68-ல் 6·9 சதவீதத்திற்குக் குறைத்து, மறுபடியும் 1970-71-ல் 4 சதவீதத்திற்குக் குறைத்துவிட்டது.

ஆயுள் காப்பீட்டுக் கழகம் 1963-ல் ஆண்டுதோறும் ரூ. 6 கோடிக்கு மேல் படாமல் 30 சதவீதக் கடன் பத்திரங்களை ஏற்றுக் கொள்ள முன்வந்தது. எனினும், 1965-66-ல் அதன் பங்கு ரூ. 10·87 கோடியாக உயர்ந்தது. ஸ்டேட் பாங்கு வாங்கிய கடன் பத்திரங்களோ 1960-61-ல் 77 இலட்சம் ரூபாயிலிருந்து, 1970-71-ல் ரூ. 6 கோடிக்கு அதிகரித்துவிட்டது.

மத்திய அரசாங்கமும் இக் கடன் பத்திரங்களை வாங்குவதற்கு 1966-67-ல் முன்வந்தது. கடன் பத்திரங்களை வாங்க மாநில

அரசுகள் எவ்வளவு கடன் வழங்குகின்றனவோ அந்த அளவுக்கு மத்திய அரசாங்கமும் வாங்க முன்வந்துள்ளது. 1970-71-ல் மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் ரூ. 36·68 கோடி அளவுக்குக் கடன் பத்திரங்களை வாங்கியிருக்கின்றன.

வணிக வங்கிகள் 1967-68-ல் தான் முதன் முதலாக இப்பத்திரங்களை வாங்க முன்வந்தன. அவ்வாண்டில் மட்டும் ரூ. 18 கோடிக்கு வாங்கின. தற்போது வணிக வங்கிகள் தேசியமயமாக்கப் பட்டுள்ளதால் அவற்றின் பங்கு அதிகரித்து வருகிறது. 1970-71-ல் இவற்றின் பங்கு ரூ. 30 கோடியாக உயர்ந்துள்ளது.

ஒரு மாநிலத்திலுள்ள நிலவள வங்கிகள் தம் மூழ்கு நிதியில் 60 சதவீதம் வரை ஏனைய மாநில நிலவள வங்கிகளின் கடன் பத்திரங்களை வாங்கலாமென ரிசர்வ் பாங்கு அனுமதித்துள்ளது. அதோடு, கூட்டுறவு மத்திய வங்கிகளும் மாநில வங்கிகளும் இக் கடன் பத்திரங்களை வாங்கலாம்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ்க்காணும் அளவிற்கு இக்கடன் பத்திரங்களை மேற்கூறிய நிறுவனங்கள் வாங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

	நிறுவனம்	கோடி ரூபாய்
1.	ரிசர்வ் பாங்கு	45
2.	ஆயுள் காப்பீட்டுக் கழகம்	60
3	ஸ்டேட் பாங்கு	45
4.	மாநில அரசாங்கங்கள்	100
5.	இந்திய அரசாங்கம்	100
6.	வணிக வங்கிகள்	150
7.	கூட்டுறவு வங்கிகள்	30

கிராமக் கடன் பத்திரங்கள்

கிராமக் கடன் ஆய்வுக் குழுவின் ஆலோசனையின்படி கிராம மக்களின் நிதியை ஒன்றுதிரட்டுவதற்காகக் கிராமக் கடன் பத்திரங்களை நில வள வங்கிகள் வெளியிட்டு வருகின்றன. இப் பத்திரங்கள் 7 வருடங்களுக்குரிய குறுங்காலப் பத்திரங்கள் என்றும் 15 வருடங்களுக்குரிய நீண்டகாலப் பத்திரங்கள் என்றும் இருவகைப்படும். இவற்றை முறையே 7 : 8 என்ற விகிதத்தில் ரிசர்வ் பாங்கு வாங்க ஒத்துள்ளது. அதோடு, 1 சதவீதம் குறைந்த வட்டியைப் பெறுவதற்கும் தயாராயுள்ளது. எனினும், இக்கிராமக் கடன் பத்திரங்கள் மக்களிடையே அவ்வளவு செல்வாக்கை

இன்னும் அடையவில்லை. கடந்த 11 ஆண்டுகளாக 9·63 கோடி ரூபாய்க்குத்தான் இப்பத்திரங்கள் விற்கப்பட்டுள்ளன. எனவே, சென்னை நில வள வங்கி 'சிக்கன நிதி' (Thrift Fund) என்ற முறையைப் புகுத்தியுள்ளது. இதன்படி, நிலவள வங்கியிலிருந்து கடன் வாங்குவோர் ஆண்டுதோறும் தாம் செலுத்த வேண்டிய தவணைத் தொகையில் 10 சதவீதத்தை இந்த நிதிக்குச் செலுத்த வேண்டும். அவ்வாறு சேரும் நிதியில் அவரவர் கொடுத்துள்ள தொகைக்கேற்ப இக் கடன் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. 1962-ல் டில்லியில் கூடிய கூட்டுறவு மந்திரிகள் மாநாடு இம் முறையை ஏனைய மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென்று ஆலோசனை கூறியுள்ளது.

நில வள வங்கிகளுக்கு அரசாங்க உதவி

நில வள வங்கிகள் முறையாகச் செயல்படுவதற்கென்று அரசாங்கம் பல சலுகைகளைத் தந்துள்ளது. பெரும்பாலும் எல்லா மாநிலங்களும் தமிழ்நாடு அரசு தரும் சலுகைகளையே பின்பற்றி வருகின்றன. எனவே, தமிழ்நாடு அரசின் சலுகைகளை மட்டும் குறிப்பிட்டால் போதும். அவை வருமாறு :

(அ) சென்னை நில வள வங்கிச் சட்டப்படி கொடுக்கும் உதவி:

(1) குறித்த தவணைக்குள் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தாமல் விட்டுவிடும் கடன்காரர்களின் சொத்தையோ அடைமானம் வைத்துள்ள சொத்தையோ நிலவள வங்கி ஏலம் விட்டுத் தன் கடன் தொகையை எடுத்துக்கொள்ளலாம். இதற்காக நீதி மன்றத்திற்குப் போகத் தேவையில்லை.

(2) அடைமானம் வைப்போர் தம் அடைமானச் சொத்தை 5 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து குத்தகைக்கோ வாடகைக்கோ விட முடியாது. இதனால் பல சிக்கல்கள் தவிர்க்கப் படுகின்றன.

(3) வேறொருவரிடம் அடைமானம் வைக்கப்பட்டுள்ள நிலத்தை மீட்பதற்காகக் கடன் கொடுக்கும்போது, அக் கடன் தொகையை நில வள வங்கி அடைமானம் பெற்றிருப்போருக்கு நேரடியாகவே கொடுக்கிறது. குறிப்பிட்ட தேதிக்குள் வங்கியிட மிருந்து தொகையைப் பெற்று அடைமானப் பத்திரத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுமாறு மூன்றுமாதத் தவணை அறிவிப்புக் கொடுக்கிறது. தவறினால் அவருக்குச் சேரவேண்டிய வட்டிப் பணத்தை இழக்க நேரிடும் என்று எச்சரிக்கை விடுக்கிறது.

(4) பத்திரங்களை எழுதிப் பதிவு செய்வதற்கென்று வங்கியின் நிர்வாகியோ பிரதிநிதியோ பதிவாளர் அலுவலகத் திற்குச் செல்ல வேண்டியதில்லை.

(5) தனிப்பட்டவர் எவரும் தம் நிலத்தைத் தொடக்க நிலவள வங்கியிடம் அடைமானம் வைக்கும்போது அவ்வங்கியின் பெயரில் தான் அந்த நிலம் பதிவு செய்யப்படும். அந்த நில மதிப்பின் அடிப்படையில் கடன் பத்திரங்களை வெளியிடும் உரிமை மைய நில வள வங்கியைச் சார்ந்ததாகையால் தொடக்க நிலை நில வள வங்கி மத்திய நில வள வங்கிக்கு மறுபடியும் அதை அடைமானம் வைக்கவேண்டும். ஆனால், அப்படி மறுபடியும் அடைமானம் வைப்பதற்குப் பத்திரம் எழுதவோ பதியவோ வேண்டியதில்லை. தொடக்க நிலவள வங்கியில் ஒருமுறை அடைமானம் வைத்து விட்டால் அது மத்திய வங்கியிடம் வைக்கப்பட்டுவிட்டதாகப் பொருள் என்று சட்டம் கூறுகிறது.

(6) குறித்த தவணைக்குள் கடன்தொகையைச் செலுத்தி நிலத்தை மீட்க முடியாவிட்டால், சம்பந்தப்பட்ட நபரின் மீது நடவடிக்கை எடுக்குமாறு மத்திய நிலவள வங்கி தொடக்க நிலவள வங்கிக்கு ஆணையிடுகிறது. தொடக்க நில வள வங்கியால் முடியவில்லையென்றால் மத்திய நிலவள வங்கியே உரியநடவடிக்கை எடுக்கிறது.

(7) தொடக்க நில வள வங்கிகளை மேற்பார்வையிட்டுக் கண் காணிக்கும் உரிமை மத்திய நில வள வங்கிக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாபில் நில வள வங்கிகளுக்குச் சாதகமாக நில வள வங்கிச் சட்டத்தில் தனியொரு பிரிவே சேர்க்கப்பட்டுள்ளது. இப்பிரிவின் படி எவராகிலும் நில வள வங்கியிடமிருந்து கடனைப் பெற்றபின் அரசாங்கத்திடமிருந்தும் கடன் வாங்கி, எந்தக்கடனையும் திருப்பித் தரவில்லையென்றால், அவரது சொத்தின் மீது நில வள வங்கிக்குத் தான் முதல் உரிமையுண்டு. ஆந்திராவின் சட்டப்படி, பொது மக்களின் விசாரணை அலுவலகரின் பரிந்துரையின் பேரில்தான் நில வள வங்கிகள் கடன் கொடுக்கமுடியும். அதனோடு, நில வள வங்கி கொடுத்துள்ள கடனை மாவட்ட நிதி அதிகாரியே வசூலிக் கலாம். கூட்டுறவுப் பதிவாளர் தரும் சான்றிதழின் பேரில் அக் கடனை மாவட்ட அதிகாரி நிலத்தீர்வை வசூலிப்பதைப்போல் வசூல் செய்வதற்கேற்றபடி சட்டம் வழி செய்துள்ளது.

(ஆ) அரசாங்கம் தரும் சலுகைகள் :

(1) மத்திய நிலவள வங்கி வெளியிடும் கடன் பத்திரங் களின் முதலுக்கு மட்டுமன்றி, வட்டிக்கும் அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கின்றது.

(2) கடன் பத்திரங்களை வெளியிடுவதற்கு முன் மத்திய நில வள வங்கி பெறும் முன் தொகைக்கும் அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கின்றது.

(3) நில வள வங்கியின் உதவிப்பதிவாளர், மற்றும் கடைநிலை ஊழியர்களின் ஊதியத்தில் பாதி ஊதியம் அரசாங்கத்தாலேயே கொடுக்கப்படுகிறது.

(4) அரசாங்க வருவாய்த்துறையினர் நில்வள வங்கிக்குத் தேவையான கிராம அமைப்புப் படங்களை இலவசமாக அளிக்கின்றனர். அதனோடு, நிலங்கள் யார் யார் பெயரில் உள்ளன என்பதை எப்போது வேண்டுமானாலும் நில வள வங்கிகள் பத்திரப் பதிவகத்திலுள்ள பதிவு ஏட்டிலிருந்து தெரிந்துகொள்ளவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

நில வள வங்கிகள் தரும் கடன்

தொடக்கத்தில் நில அடைமான வங்கிகள் அனைத்தும் பெரும் பாலும் அடைமானத்திலிருந்த நிலத்தை மீட்பதற்கும் பழைய கடன்களை அடைப்பதற்கும்தாம் கடன் கொடுத்து வந்தன. நிலத்தை விருத்தி செய்வதற்கும் கடன் தரலாமென்பது சட்டம்; ஆனால், நிலத்தை விருத்தி செய்வதற்காக இவ்வங்கிகள் அவ்வள வாகக் கடன் கொடுக்கவில்லை. சான்றாக, சென்னை நில அடைமான வங்கிகள் கொடுத்த கடனில் 1 சதவீதம்தான் நில விருத்திக்காகக் கொடுக்கப்பட்டது. மற்ற மாநிலங்களில் கூட அப்படித்தான்.

தற்போது இவ்வங்கிகள் தரும் கடன்களும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் பெரிதும் மாறிவிட்டன. விவசாய விளைச்சலைப் பெருக்குவதற்கென்று நீர்ப்பாசன வசதிகளையும் இதர வசதிகளையும் செய்வதற்குத்தாம் அதிகமாகக் கடன் கொடுக்கின்றன. சான்றாக, 1967-68-ல் மட்டும் சுமார் 49 கோடி ரூபாய் கிணறு வெட்டுவதற் காகவும் பம்புசெட்டுகள் வாங்குவதற்காகவும் கொடுக்கப்பட் டிருக்கிறது. அவ்வாண்டில் கொடுக்கப்பட்ட மொத்தக்கடன் ரூ. 78 கோடியில் 2 கோடிதான் ஆக்கமில்லாத காரியங்களுக்காகக் கொடுக்கப்பட்டது. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நில வள வங்கிகள் அனைத்தும் ஆக்க வேலைகளுக்காகத்தான் அதிக அளவுக் கடனைக் கொடுக்க வேண்டுமென முடிவு செய்துள்ளன.

1. கிணறுகள் வெட்டுதல் 2. பம்பு செட்டுகள் அமைத்தல் 3. கால்வாய் வெட்டுதல் 4. விவசாயத்திற்கு வேண்டிய டிராக்டர், மருந்துதெளிக்கும் கருவிகள் போன்ற இயந்திரங்களை வாங்குதல் போன்ற காரியங்களுக்குத்தாம் அதிகக் கடனை வழங்கும்.

நில வள வங்கிகள் எந்த நோக்கத்திற்காகக் கடன் கொடுக்கின்றன என்பது மிக முக்கியமானது. சட்டப்படி அவசியமான காரியங்களுக்கும், விவசாய முன்னேற்றத்துக்கும், விவசாயக் குடும்பங்களின் நன்மைச்காகவும்தாம் கடன் கொடுக்கவேண்டும். எந்த நோக்கத்திற்காகக் கடன் வழங்கப்படுகிறதோ அதற்காகச் செலவிடப்படுகிறதா என்பதையும் இவ்வங்கிகள் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். அதற்காக விசாரணை நடத்துவது நன்று.

அண்மைக்காலம் வரை நிலவள வங்கிகள் தனிப்பட்ட விவசாயிகளுக்குத்தாம் கடன் கொடுத்து வந்தன. இக்கடனைக் கொண்டு தத்தம் நிலத்தை அபிவிருத்தி செய்து விளைச்சலை அவர்கள் பெருக்கி வந்தனர். எனவே, இக்கடனால் பலன் பெற்றவர்கள் ஆங்காங்கே இருந்த விவசாயிகள்தாம். எந்தப் பகுதியும் முழுமையாகப் பயன் அடைந்ததெனக் கூற முடியாது. எனவே, தற்போது ஒவ்வொரு பகுதியாகத் தேர்ந்தெடுத்து அங்கேயுள்ள இயற்கை வளங்களையெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்துவதற்கான புதிய திட்டமொன்றை நில வள வங்கிகள் மேற்கொண்டுள்ளன. சான்றாக, பூமிக்கடியில் நீர் ஊற்று உள்ள பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அப்பகுதிகளில் குழாய்க் கிணறுகளை வெட்டக் கடன் கொடுக்கின்றன. எந்தெந்தப் பகுதியில் என்னென்ன வளம் இருக்கின்றது என்பதை இவ்வங்கிகளே ஆராயவேண்டியதில்லை. அதற்காக எத்தனையோ அமைப்புகள் நம் நாட்டில் இயங்கி வருகின்றன.

இவ்வாறு பகுதி பகுதியாகப் பிரித்து அதற்குத் தேவையான கடனை நிலவள வங்கிகள் கொடுக்கும். இப் புதிய திட்டத்தினால் எவ்வளவோ நன்மைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. சான்றாக, மண் அரிப்பு ஏற்படும் பகுதிக்கு அதைத்தடுத்து நிறுத்தப் பல கரைகளைப் போடுவதற்கு இவ்வங்கிகள் கடன் தரலாம். இக் கடனை அப்பகுதியில் வாழும் விவசாயிகள் பெற்றுக் கூட்டாக இப் பணியை மேற்கொள்ளும்போது எல்லா விவசாயிகளுமே பயனடைவர். தனித்தனியாகச் செய்வதைவிட எல்லோரும் சேர்ந்து செய்தால் வேலை எளிதாகவும் சிக்கனமாகவும் முடியும்.

இந் நில வள வங்கிகள் விவசாயிகளின் நிலத்தை அடைமானமாகப் பெற்றுக் கடன் வழங்குகின்றன. ஒரு சில இடங்களில் நிலம் நல்ல சொத்தாக இல்லாததால் வீட்டு அடைமானத்தின் பேரில் கடன் வழங்கப்படுகிறது. தற்போது. விவசாயக் கருவிகளின் அடைமானத்தின் பேரிலும கடன்தரத் தொடங்கியுள்ளன. அவ்வாறு கடன் தரும்போது உகந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிலம், வீடு போன்ற சொத்துக்களின் பேரில் எந்த அளவுக்குக் கடன் தரலாம் என்ற சிக்கலையும் ஆராய்தல் வேண்டும். தமிழ்நாடு, கேரளம், ஆந்திரா, மைசூர் போன்ற மாநிலங்களில் அடைமானம் வைக்கப்படும் நிலத்தின் மதிப்பில் 50 சதவீதம் வரை கடன் வழங்கப்படுகிறது. வீட்டு அடைமானத்தின் பேரில் கொடுக்கப் படும் கடன் இடத்திற்கு இடம் மாறியுள்ளது. நகராட்சி எல்லைக்குள் இருக்கும் வீட்டின் பேரில் 50 சதவீதமும், பெரிய பஞ்சாயத்து எல்லையிலுள்ள வீடாக இருந்தால் 40 சதவீதமும், கிராமத்திலுள்ள வீட்டின் பேரில் 30 சதவீதமும் கடனாக வழங்கப் படுகிறது.

அடைமானச் சொத்தின் மதிப்பு நிர்ணயம்

அடைமானம் வைக்கப்படும் சொத்தின் மதிப்பை அடிப்படை யாகக் கொண்டுதான் நிலவள வங்கிகள் கடன் வழங்குகின்றன என்று குறிப்பிட்டோம். அவ்வாறாயின் அச் சொத்தின் மதிப்பை நிர்ணயிப்பது எப்படி என்றும் அறிந்துகொள்ள வேண்டும். சொத்து மதிப்பை நிர்ணயிப்பதில் ஒவ்வொரு மாநிலமும் வெவ் வேறு முறையைக் கையாள்கிறது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை எந்தக் காரணத்திற்காக உறுப்பினர்கள் கடன் கோருகின்றனரோ அதற்கேற்ப அடை மானச் சொத்தின் மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது. கிணறு வெட்டவோ, பம்புசெட் வைக்கவோ கடன் தேவைப்பட்டால், அது செய்யப்பட்ட பின் நிலத்தின் நிகர வருமானம் எவ்வளவு என்பதைக் கணக்கிட்டு, அதைப்போல் 8 மடங்கு மதிப்பை நிர்ணயம் செய்கின்றனர். நிலத்திற்குச் சாலை அமைத்தல், பண்ணை வீடுகட்டல், வேலை அமைத்தல் போன்ற காரியங்களுக்கு, நிலத்தின் வருட வருமானத்தைப் போல் 8 மடங்கு நிர்ணயிக்கின்றனர். டிராக்டர் போன்ற கருவிகளை வாங்கும் கடனுக்கு, அந்தந்தப் பகுதியிலுள்ள பத்திரப்பதிவாளர் அலுவலகங்களிலுள்ள நிலத்தின் கிரயப்பட்டியலின்படி நிர்ணயம் செய்கின்றனர். இவ்வாறு அடைமானச் சொத்தின் மதிப்பை நிர்ணயம் செய்யும் முறை மாற்றப்பட்டிருப்பதால் சாதாரணக் குடிமக்களும் கூட நீண்ட காலக் கடன் பெற முடிகிறது.

ஆந்திராவில் நிலத்தை அடைமானம் வைப்பதற்கு முந்திய ஏழு ஆண்டுகளில் சராசரி ஓர் ஏக்கர் நிலம் என்ன விலைக்கு விற்கப் பட்டது என்பதைக் கணித்து, அதில் 50 சதவீதம் அடைமானக் கடனாக நிர்ணயிக்கப்படுகிறது. தெலுங்கானாப் பகுதியில் வேறு முறையைக் கையாளுகின்றனர். அதாவது, புஞ்சை நிலமாக

இருந்தால் அதன் நிலத் தீர்வையைப்போல் 100 மடங்குத் தொகையைக் கணிக்கின்றனர்; நஞ்சை நிலமாயிருந்தால் 60 மடங்கைக் கணிக்கின்றனர். அவ்வாறு கணிக்கப்பட்ட தொகையில் 50 சதவீதம் கடனாக வழங்கப்படலாமென்று நிர்ணயித்துள்ளனர்.

மகாராஷ்டிரத்தில் மற்றொரு முறையைகையாளப்படுகிறது. கிணறு வெட்டுவதற்கும் பம்புசெட் வாங்குவதற்கும் கடன் கேட்கப்பட்டால் ஓர் ஏக்கர் நிலத்திற்கு ரூ. 500-க்குக் குறையாமல் கொடுக்கிறார்கள். அல்லது நிலத் தீர்வையைப்போல் 500 மடங்குத் தொகையை அந் நிலத்தின் மதிப்பாக நிர்ணயம் செய்கிறார்கள். அவ்வாறு நிர்ணயிக்கும்போது, கிணறு வெட்டுவதால் அல்லது பம்புசெட் போடுவதால் விளைச்சல் எவ்வளவு அதிகரிக்கும் என்பதையும் கணக்கில் சேர்த்துக் கொள்கின்றனர். பழைய கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கோ நிலம் வாங்குவதற்கோ கடன் கேட்கப்பட்டால் அதற்கு வேறொரு முறையை பின்பற்றுகின்றனர். அதாவது, 1928-29 முதல் 1935-36 வரை, 1941-42-ல் ஓர் ஏக்கர் நிலம் சராசரி எவ்வளவுக்கு விற்கப்பட்டிருக்கிறது என்பதைக் கணக்கெடுத்துக் கொள்கின்றனர்; அடுத்து 1934 முதல் 1945 வரை சராசரி விலையைக் கணிக்கின்றனர்; அதனோடு, நிலத் தீர்வையில் 120 மடங்கு எவ்வளவு என்பதையும் கணக்கெடுத்து, இவற்றில் எது மிகக் குறைந்த தொகையோ அதை நிலத்தின் மதிப்பாக எடுத்துக் கொள்கின்றனர்.

பஞ்சாப்பில் அடைமானம் வைக்கப்படும் நிலம் எந்த இடத்திலுள்ளதோ அந்த இடத்தில் கடந்த 12 ஆண்டுகளாக 1 ஏக்கர் நிலம் சராசரி எவ்வளவுக்கு விற்கப்பட்டிருக்கிறது என்பதைக் கணக்கிட்டு நிர்ணயம் செய்கின்றனர். இக் கணக்கெடுப்புச் சாத்தியமில்லையென்றால் நிலத் தீர்வையைப்போல் இத்தனை மடங்கு என்று நிர்ணயம் செய்து விடுகின்றனர்.

கடன் பெறுவோர் திருப்பிச் செலுத்த முடியுமா?

நில வள வங்கிகள் கடன் கொடுக்கும்போது அக் கடன் பாதுகாப்பிற்காகத்தான் சொத்தை அடைமானமாகப் பெறுகின்றன. அதனோடு, அடைமானம் வைப்போர் கடனைத் திருப்பித் தரக்கூடிய வசதி பெற்றவர்களா என்பதையும் வங்கிகள் நன்கு பரிசீலனை செய்கின்றன. கடன் பெறுவோருக்கு ஆண்டுதோறும் கிடைக்கும் வருமானம் என்ன, அவர்களின் சாகுபடிச் செலவு, குடும்பச் செலவு போக எவ்வளவு வருமானம் மிச்சப்படும் என்பதையெல்லாம் நன்கு விசாரித்துத் தெரிந்து கொள்கின்றன. அவர்

களுக்கு ஆண்டொன்றுக்கு எவ்வளவு மிச்சமாகும் என்பதைக் கணக்கெடுத்தபின், அதில் 75 சதவீதம் வரை கடன் கொடுக்கின்றன.

வட்டி வீதம்

நில வள வங்கிகள் தரும் நீண்டகாலக் கடனுக்குக் கூடுமான வரை வட்டிவீதம் குறைவாக இருப்பதுதான் நல்லது. எனினும், வட்டி வீதத்தை நிர்ணயிக்கும்போது வங்கிகள் பல்வேறு சணக்குகளை அடிப்படையாகக் கொள்ள வேண்டியிருக்கிறது. முதலாவதாக, இவ் வங்கிசள் திரட்டும் நிதிக்கு எவ்வளவு செலவு ஏற்படுகிறதென்பதைக் கணக்கிட வேண்டிள்ளது; அடுத்து, நிர்வாகச் செலவு எவ்வளவு, எவ்வளவு கடன் தொகை திரும்பி வராமலிருக்கலாம், அதனால் ஏற்படும் நட்டம் எவ்வளவு என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது. பொதுவாக, மாநில மைய வங்கிகள் தத்தம் கடன் பத்திரங்களுக்கு எத்தனை சதவீத வட்டி கொடுக்க வேண்டியுள்ளதோ அதைவிட 1 சதவீதம் அதிகமாகத்தான் கடன் தொகைக்கு வட்டி வசூலிக்கின்றன. தொடக்க நிலவள வங்கிகளோ இதைக் காட்டிலும் மேலும் 1 சதவீதம் வசூலிக்கின்றன.

கடன் வழங்குவதற்குப் பின்பற்றும் வழி முறைகள்

நில வள வங்கிகள் கடன் கொடுப்பதற்கு முன் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியாகக் கிடையாது. தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் கடன்பெற விரும்புவோர் வோர் தொடக்க நிலவள வங்கிச் செயலாளருக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். அவ் விண்ணப்பத்தில் பெயர், முகவரி, உறுப்பினரின் வரிசை எண், வயது, ஊர், வாழும் இடம், தேவைப்படும் கடன் தொகை எவ்வளவு, எதற்காக, அடைமானம் வைக்கப் போகும் நிலத்தின் விவரம், விண்ணப்பத்தாரருக்கு நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம், இதர வருமானம் எவ்வளவு, இதுவரை வேறெங்காகிலும் கடன் வாங்கியதுண்டா, வாங்கியிருந்தால் எவ்வளவு என்ற விவரங்களையெல்லாம் குறிப்பிட வேண்டும் அதனோடு, விண்ணப்பத்தோடு கீழ்க்காணும் பத்திரங்களையும் அனுப்பவேண்டும் :

(1) பட்டா நம்பர், சர்வே நம்பர் அடங்கிய நகல்.

(2) விளைச்சல் சரியானதுதான் என்பதற்குரிய அத்தாட்சி நகல்.

(3) நிலத்தின் வரை படம்.

(4) நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் யார் யார் என்பதற்குரிய சான்றிதழ்.

(5) நிலத்திற்குரிய உரிமையில் சிக்கல் ஏதுமில்லை என்பதற்குச் சான்றிதழ்.

(6) யார் யார் இதற்கு முன் அந் நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் என்ற விவரப் பட்டியல்.

(7) நில அபிவிருத்திக்கு எவ்வளவு செலவாகும் என்ற விவரம், அதனால் வருமானம் எவ்வளவு அதிகரிக்கும் என்ற விவரம் :

ஏனைய மாநிலங்களில் வேறு வழிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

அதிகப் பட்சக் கடன்

தமிழ்நாட்டில் ஒவ்வோர் உறுப்பினரும் அதிகப்பட்சம் மூன்று வகைக் கடனைப் பெறலாம். அதற்குமேல் எவருக்கும் கடன் வழங்கப்படுவதில்லை. எவ்வளவு தொகை வரை கடன் பெறலாம் என்பதற்கு உச்ச வரம்பு கிடையாது. உறுப்பினர்களின் தகுதியைப் பொறுத்துக் கடனளிக்கப்படுகிறது. எனினும், எவருக்கும் மூன்று கடனுக்குமேல் கொடுப்பதில்லை. பஞ்சாப் மாநிலத்தில் உறுப்பினர் செலுத்தியுள்ள பங்கு மூலதனத்தைப் போல [illegible] மடங்கு கடனாக அளிக்கப்படுகிறது. எனினும், தனி நபராயிருந்தால் ரூ. 10,000 என்றும், சங்கமாக இருந்தால் ரூ. 2[illegible] என்றும் உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விவசாய மறுநிதிக் கார்ப்பரேஷன்

1963 ஜூலை முதல் தேதியில் அமைக்கப்பட்டுள்ள விவசாய மறுநிதிக் கார்ப்பரேஷன் (Agricultural Refinance Corporation) நிலவள வங்கிகளோடு நெருங்கிய தொடர்புடையனவாகும். எனவே, அதைப் பற்றியும் இங்குக் குறிப்பிடுவது நன்று. இக் கார்ப்பரேஷன் 9 நிர்வாகிகளால் நடத்தப்படுகிறது. ரிசர்வ் பாங்கின் துணை ஆளுநர்தாம் இதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனுடைய அதிகாரப் பூர்வமான மூலதனம் (Authorized capital) ரூ. 25 கோடி. ஆனால், தற்போது ரூ. 5 கோடி அளவுக்கு மட்டுமே இதன் மூலதனம் வெளியிடப்பட்டுள்ளது. இதில் 50 சதவீதப் பங்கை ரிசர்வ் பாங்கே வாங்கியுள்ளது. கூட்டுறவு நில அடைமான வங்கிகளும் கூட்டுறவுத் தலைமை வங்கிகளும் சேர்ந்து 27 சதவீதப்

பங்கினைப் பெற்றுள்ளன. எஞ்சிய பங்கை ரிசர்வ் பாங்கின் பட்டியலிலுள்ள வங்கிகளும் காப்பீட்டு நிறுவனங்களும் வாங்கியுள்ளன. இக் கார்ப்பரேஷனின் பங்கு மூலதனத்திற்கு மத்திய அரசாங்கம் முழு உத்தரவாதம் அளித்திருப்பதோடு, குறைந்த பட்சம் 4¼ சதவீத இலாப ஈவுக்கும் உத்தரவாதம் கொடுத்துள்ளது. இந்திய அரசாங்கம் இக் கார்ப்பரேஷனுக்கு வட்டியின்றி ரூ. 10 கோடி கடனை வழங்கியுள்ளது. மேலும், நீண்டகால வைப்புத் தொகையைப் பெறுவதற்கும் சடன் பத்திரங்களை வெளியிடுவதற்கும் இதற்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

விவசாய அபிவிருத்திக்காகப் பல பெரிய திட்டங்களைத் தீட்டி அவற்றை நிறைவேற்ற வேண்டியுள்ளது. அதற்குத் தேவையான நிதி வசதியை நில வள வங்கிகளோ இதர வணிக வங்கிகளோ கொடுக்க இயலாது. அப்பேர்ப்பட்ட திட்டங்களுக்கு நிதி உதவி செய்வதற்குத்தான் இக் கார்ப்பரேஷன் அமைக்கப் பட்டுள்ளது. இவ்வுதவியைப் பெரும்பாலும் கூட்டுறவு நில வள வங்கிகளின் வழியாகத் தாம் இக் கார்ப்பரேஷன் செய்துவருகிறது. சில சமயங்களில் வணிக வங்கிகளின் மூலமாகவும் செய்கிறது.

இக் கார்ப்பரேஷன் நல்ல, இலாபகரமான திட்டங்களுக்கு மட்டுமே நிதி உதவி செய்கிறது. அதாவது, குறிப்பிட்ட பகுதிகளில் நேரடியாகவே மேற்பார்வையிடக் கூடிய திட்டங்களுக்கே உதவி செய்கிறது. இத் திட்டம் சிறு விவசாயிகளுக்கான திட்டமாயிருந்தால் அதற்குத்தான் முதலிடம் தருகிறது. இந்தக் கார்ப்பரேஷன் அளிக்கும் நிதி உதவி கீழ்க்காணும் திட்டங்களுக்குத்தான் முக்கியமாகச் செய்யப்படுகிறது:

(அ) நிலப் புனரமைப்புத் திட்டம்

(ஆ) சிறிய நீர்ப்பாசனத் திட்டம்

(இ) காய்கறி, பழவகை, தேயிலை, காப்பி, ரப்பர் தோட்டத் திட்டம்

(ஈ) மண் அரிப்புத் தடுத்தல், மீன் பிடித்தல், கோழிப் பண்ணை அமைத்தல் போன்ற திட்டம்.

எந்தத்திட்டமாக இருந்தாலும் அதற்கு நிதி உதவி செய்யுமுன், அத் திட்டம் இலாபகரமானதா, அதைச் செய்வது எளிதா என்பதையெல்லாம் இக் கார்ப்பரேஷன் நன்றாக ஆராய்ந்து அறிந்து கொள்கிறது. அதனோடு, அத்திட்டத்திற்கு விவசாயிகள் ஆதரவு தருவார்களா, அதை நிறைவேற்றுவதற்குப் போதுமான சக்தி இருக்கிறதா, அதை மேற்பார்வை இடுவதற்குத் திறமைமிக்க

வல்லுநர்கள் இருக்கின்றனர்களா என்பதையும் பரிசீலனை செய்கிறது. விவசாயத் துறையில் பல்வேறு பணிகளில் திறமைபெற்ற சுமார் 100 வல்லுநர்களை இக் கார்ப்பரேஷன் கொண்டுள்ளது.

1972 ஆம் ஆண்டுவரை சுமார் 405 கோடி ரூபாய் செலவில் திட்டப்பட்டுள்ள பல திட்டங்களுக்கு இக் கார்ப்பரேஷன் மட்டும் 156 கோடி ரூபாய் வழங்க அனுமதித்துள்ளது. அனுமதிக்கப்பட்ட தொகையில் 64 சதவீதம் வரை கடனுகக் கொடுக்கப்பட்டும் உள்ளது. இக் கடன் தொகையில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த மாநில நில வள வங்கிதான் அதிகமாகப் (ரூ. 14 கோடி) பெற்றுள்ளது. பஞ்சாப் மாநில நில வள வங்கி ரூ. 13 கோடியும் மைசூர், மகாராஷ்டிரம், ஹரியாணு, அசாம், தமிழ்நாட்டு மாநில நில வள வங்கிகள் முறையே ரூ. 4.25 கோடி, ரூ. 5.38 கோடி, ரூ. 5.8 கோடி, ரூ. 75 இலட்சம், ரூ. 4.88 கோடி பெற்றுள்ளன.

இக் கார்ப்பரேஷனின் நிதி உதவியால் பல திட்டங்கள் சாதிக்கப்பட்டுள்ளன. 1971 ஜூன் மாதம் வரை 57,421 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன; 67,800 புதிய கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. மேலும் 635 பழைய கிணறுகள் பழுது பார்க்கப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய 9 இலட்சம் ஏக்கர் நிலம் சமப்படுத்தப்பட்டு விவசாயத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சைத் தோட்டங்களில் சுமார் 7,174 ஏக்கர் வரை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன; 3,915 ஏக்கர் தென்னந்தோப்புகளும் 3,757 ஏக்கர் காப்பி, தேயிலை, ரப்பர், ஏலக்காய்த் தோட்டங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றன. 130 இயந்திரக் கலப்பைகள் வழங்கப்பட்டுள்ளன. பஞ்சாப்பிலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் தலைமைச் சங்கத்திற்கு வேண்டிய கிடங்குகளை அமைப்பதற்காக 1.87 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத் துறைக்கு சுமார் 1,500 கோடி ரூபாய் நீண்டகாலக் கடனுகத் தேவைப்படலாமென்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இதில் 725 கோடி ரூபாய் சிறிய நீர்ப்பாசன வசதிக்கும் 300 கோடி ரூபாய் விலையுயர்ந்த விவசாயக் கருவிகளை வாங்கவும் தேவைப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் தேவையில் இக் கார்ப்பரேஷன் மட்டும் 200 கோடி ரூபாய் வழங்கக் கூடுமென நம்பப்படுகிறது.

22. நகரக் கூட்டுறவு வங்கிகளும் கடன் சங்கங்களும்

நகர்ப்புறங்களில் வாழும் நடுதரக் குடும்பத்தினருக்குக் கடனுதவி செய்வதற்கென்று ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில் நகரக் கூட்டுறவுக் கடன் இயக்கம் தொடங்கி வலிமையுடன் திகழ்கிறது. இந்தியாவிலும் இவ் வியக்கம் தொடங்கப்பட்டுள்ளது. நகரங்களில் வாழும் சாதாரண வியாபாரிகள், ஆலைத் தொழிலாளர், கைவினைஞர்கள், மாத ஊதியம் பெறுவோர் போன்ற நடுத்தர வகுப்பினருக்காக இவ் வியக்கம் நடைபெற்று வருகிறது. அவர்களுக்குக் கடனுதவியைச் செய்வதோடு மட்டுமன்றி, சிக்கனமாக வாழவும் சேமிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிக்கவும் தூண்டுதலாயிருக்கும் வகையிலும் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் வங்கிகளும் தோன்றியுள்ளன.

முதன் முதலில் பரோடாவில்தான் 1889ஆம் ஆண்டு நகரக் கடன் சங்கம் தோன்றியது; அதன் பின்னர்த்தான் கூட்டுறவுக் கடன் சங்கச் சட்டம் 1904-ல் அமுலாக்கப்பட்டது. எனினும், 1915 வரை நகர்ப்புறங்களில் கூட்டுறவுக் கடன் இயக்கம் பிரபலமாகவில்லை. 1915-ல் மக்ளகன் குழுவினர்தாம் (Maclagan Committee) இவ் வியக்கத்திற்கு வித்திட்டனர். அதன் பினன்ர்த்தான் நகரப்புறக் கூட்டுறவு இயக்கம் தோன்றிப் படிப்படியாக இந் நாட்டில் வளர ஆரமபித்தது. 1930-க்குப் பின் உலகையே ஆட்டிப் படைத்த பொருளாதார மந்தத்தினுல் கூட இவ் வியக்கம் தளர்ச்சியடையவில்லை. 1931-ல் மத்திய வங்கி பற்றிய விசாரணைக் குழுவும் நகரக் கூட்டுறவு வங்கிகளை ஊக்குவிக்கும் வகையில் தன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. நடுத்தர வகுப்பினருக்கென்று நகர்ப்புறங்களில் கூட்டுறவு வங்கிகளை ஏற்படுவது அவசியமென இக் குழு கருதியது. பெரிய வியாபாரிகளுக்கும் தொழிலதிபர்களுக்கும் கடன் தர வணிக வங்கிகள் செயலாற்றுவதைப்போல் நடுத்தர வகுப்பினருக்

அவர்களுக்குத் தூண்டுகோல் அளிப்பதோடு கூட்டுறவு இயக்கம் வளருவதற்கும் பரவுவதற்கும் வேண்டிய வழி வகைகளைச் செய்கின்றன. அதனோடு, உறுப்பினர்கள் தம்மிடமுள்ள விலையுயர்ந்த பொருள்களைப் பத்திரமாக இவ் வங்கிகளில் வைத்துப் பாதுகாப்பதற்கும் இவை உதவி செய்கின்றன. மேலும் உறுப்பினர்களுக்கு ஏனைய வங்கி வழியாக வரும் பணத்தைச் சேகரித்துக் கொடுப்பதோடு, அவர்களின் சார்பாக அவர்கள் பிறருக்குச் செலுத்த வேண்டிய பணத்தையும் செலுத்தி வருகின்றன. ரயில் வழியாக உறுப்பினர்களுக்கு வரும் பொருள்களை எடுத்து வருவதற்கும் அனுப்புவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளையும் இவ் வங்கிகள் மேற்கொள்கின்றன. எல்லாவற்றையும்விட முக்கியமான பணி, உறுப்பினர்கள் சேமித்து இவ் வங்கிகளில் தம் தொகையை வைப்புகளாக வைப்பதற்கு இவை ஏற்பாடு செய்து தருகின்றன. உறுப்பினரல்லாதோரும் இவ் வங்கிகளில் கணக்குத் தொடங்கித் தம் சேமிப்பைச் சேர்த்து வைக்கலாம். அடுத்து ஏதாவது பயனுள்ள காரியங்களுக்காக உறுப்பினர்களுக்குப் பணம் தேவைப்படும்போது இவை கடனுதவி செய்கின்றன. உறுப்பினரல்லாதோரும் கடன் பெறலாம்; ஆனால், அவர்கள் இவ் வங்கியின் வாடிக்கையாளராயிருக்கவேண்டும்; மேலும், அவர்கள் கணக்கிலுள்ள வைப்புத் தொகையின் அடிப்படையில்தான் கடனளிக்கப்படுகிறது.

பணி செய்யும் பகுதி : ஒவ்வோர் கூட்டுறவு நகர வங்கியும் தத்தம் கூட்டுறவுச் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பகுதியில்தான் பணி புரிகின்றது. நகர்ப்புறக் கடன் சங்கங்களை ஆய்வு செய்வதற்காக அமர்த்தப்பட்ட குழுவினரின் கருத்துப்படி எந்தக் கூட்டுறவு நகர வங்கியும் தனது நகராட்சி எல்லைக்குள்தான் பணியாற்றவேண்டும்; தாலுகா நகரமெனின், அந்த நகர எல்லைக்குள் தான் தன் அலுவல்களைச் செய்யவேண்டும். இருந்தபோதிலும், விவசாயக் கடன் சங்க உறுப்பினர்கள் சிலர் தம் சங்கத்திலிருந்து கடன் பெறமுடியாத நிலையில் இந் நகர வங்கிகளின் உறுப்பினர்களாக ஆகிக் கடன் பெற விரும்பினுல் அவர்களுக்கும் இவ் வங்கிகள் கடன் தரலாம்; ஆனுல், இதற்கு கூட்டுறவுப் பதிவாளரின் அனுமதி அவசியம்.

உறுப்பினர் நிலை

பொதுவாகக் கூற வேண்டுமாயின் ஒரு கூட்டுறவு நகர வங்கியின் உறுப்பினராகச் சேர விரும்பும் எவரும் அந்தந்த நகர எல்லைக்குள் வாழ்பவராக இருக்கவேண்டும். நகர எல்லைக்குள் வாழும் எவரும் இவ் வங்கியோடு தொடர்புகொண்டு உறுப்பினராக

லாம். கூட்டுறவு நகர வங்கி ஒன்றில் எத்தனை உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்பதை வரையறை செய்வது கடினம். தமிழ் நாட்டிலுள்ள நகர வங்கிகளில் சராசரி 7,000 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்; அந்த சமயம் ராஜஸ்தானில் சராசரி 700 பேர் தாம் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சாகும் என்பது முதியோர் பழமொழி. அதற்கேற்ப, அளவுக்கு மீறி அங்கத்தினர்கள் இருந்தாலும் இவ்வங்கிக்குக் கஷ்டம்; அதே சமயம் மிகக் குறைவான உறுப்பினர்கள் இருந்தாலும் கடினம். பல்லாயிரக்கணக்கான உறுப்பினர்கள் இருந்தால் ஒருவரை யொருவர் அறிந்துகொள்ள இயலாது; அதனோடு இவ் வங்கி ஏதோ முதலாளித்துவ ஸ்தாபனம்போல் மிகப்பெரியதாகிவிடும். அதே சமயம், சொற்ப உறுப்பினர்களிருந்தாலும் இவ் வங்கி நலிவுற்றுவிடும். எது எவ்வாறிருப்பினும், கூட்டுறவு நகர வங்கிகள் மிகப் பெரியதாகிவிட்டால் அது கூட்டுறவின் இயல்பையே இழந்து விடுகிறது. ஆனால், பெரிய நகர வங்கிகள்தாம் இலாபகரமாக இயங்கி வருகின்றன என்பதும் அனுபவத்தின் வாயிலாகக் கண்ட உண்மை. எனவே தான் மத்திய வங்கி பற்றிய விசாரணைக் குழு பெரிய அளவில்தான் இந் நகர வங்கிகள் இருக்கவேண்டுமென வலியுறுத்தியுள்ளது. எனினும், கூட்டுறவு நகர வங்கிகளை ஆய்வு செய்வதற்காக (1957-58) நியமிக்கப்பட்ட குழுவினர் இவ் வங்கியில் சராசரி 1,500 உறுப்பினர்கள்தாம் இருக்கவேண்டுமெனக் கூறி யுள்ளனர். இதற்கு நேர்மாறாக, நகரக் கடன் ஆய்வுக் கழகத் தினரோ இவ் வங்கியின் உறுப்பினர் எண்ணிக்கைக்கு வரம்பே இருக்கக் கூடாதென்று கருத்துத் தெரிவித்துள்ளனர். நிறையப் பேர் உறுப்பினர்களாக இருந்தால்தான் இவ்வங்கிக்குப் போதுமான நிதி கிடைக்கும்; பணம் போடுவோருக்கும் நம்பிக்கை இருக்கும் என்பது இக் குழுவினரின் கருத்து. அதனோடு மட்டுமன்றி, இவ் வங்கி நிர்வாகிகள் மேலும் அதிகமான உறுப்பினர்களைச் சேர்க்க முயலவேண்டுமென்றும் கூறியுள்ளனர். எனவே, ஒரு நகர வங்கியில் எத்தனை உறுப்பினர்கள் இருக்கவேண்டுமென்பது சர்ச்சைக்குரிய பிரச்சினை ஆகிவிட்டது. இடத்திற்கும் சூழ்நிலைக்குமேற்ப, எத்தனை உறுப்பினர்கள் இருந்தால் நகரக் கூட்டுறவு வங்கி திறமையுடன் செயல்பட முடியுமென்பதை அந்தந்த நகர வங்கி நிர்வாகிகளே முடிவு செய்வது நன்று.

நிர்வாகம்

ஏனைய கூட்டுறவுச் சங்கங்களைப் போலவே தாம் இக் கூட்டுறவு நகர வங்கியும் நிர்வகிக்கப்படுகிறது. உறுப்பினர்களால் தேர்ந்

தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுதான் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறது. நிர்வாகக் குழுவினரைத் தேர்ந்தெடுப்பதற்கென்று நகரத்தைப் பல்வேறு தொகுதிகளாகப் பிரிக்கின்றனர். அன்றாட அலுவல்களைக் கவனிப்பதற்குத் தகுதியும் பயிற்சியும் பெற்ற அலுவலர்கள் தேவை. ஆனுல், வணிக வங்கிகள் தம் ஊழியர் களுக்குத் தரும் உயர்ந்த ஊதியத்தை இவ் வங்கிகள் தரமுடிவ தில்லை. இது ஒரு பெரும் குறையாகவும் பிரச்சினையாகவும் உள்ளது.

நகர வங்கி அமைப்பு முறை

நகர வங்கிகள் அனைத்தும் அந்தந்த மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு மத்திய வங்கிகளோடு இணைக்கப்படும் என்ற காரணத் திற்காக அவைகளுக்கென்று தனியாக மாவட்ட நகர வங்கியோ தலைமை வங்கியோ நிறுவப்படவில்லை. உண்மையில், நகர வங்கி களில் பல போதுமான நிதிவசதிகளுடன் பணியாற்றி வருவதால் கூட்டுறவு மத்திய வங்கிகளிடமிருந்து கடன் வாங்காமலேயே செயல்படுகின்றன. ஒருசில நலிவுற்ற வங்கிகள் மட்டும்தாம் கூட்டுறவு மத்திய வங்கிகளிடமிருந்து உதவி பெறுகின்றன. இந் நகர வங்கிகளுக்கென்று தனியாக மாவட்ட அடிப்படையிலோ மாநில அடிப்படையிலோ மேல் நிலை வங்கிகள் இல்லை; எனினும், மகாராஷ்டிர மாநிலத்தில் மட்டும் அகமத் நகரில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு நகர வங்கி ஒன்று இயங்கி வருகிறது. வேறு எந்த மாநிலத்திலும் இவ் வகை வங்கி கிடையாது. அக்மத் நகரில் இயங்கி வரும் மாவட்ட மத்திய நகர வங்கி தன் உறுப்பினர் வங்கிகளுக்கும் தனிநபர்களுக்கும் கடனுதவி செய்து வருகிறது. மேலும், இவ் வங்கி சிறப்பாகவும் இலாபகரமாகவும் செயலாற்றி வருகிறது. இந்தியா விலுள்ள நகர வங்கி அமைப்புகளில் இது ஒன்றுதான் கூட்டமைப்பு முறையில் நிருவகிக்கப்படுகிறது. ஏனைய நகர வங்கிகளனைத்தும் அந்தந்த மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகளுடனும் மாநில உச்சி வங்கிகளுடனும் தாம் இணைக்கப்பட்டுள்ளது. இவைகளுக் கென்று தனி மத்திய வங்கிகள் ஏற்படுத்தப்பட்டால் அவை கூட்டுறவு மாவட்ட மத்திய வங்கிகளுடன் போட்டியிடக்கூடும் என்பதே இதற்குக் காரணம். ஆனுல், கூட்டுறவு மாவட்ட மத்திய வங்கிகள் விவசாய அபிவிருத்திக்காக ஏற்படுத்தப்பட்டவை; நகர வங்கிகள் அமைக்கும் மாவட்ட மத்திய வங்கியோ நகரங்களில் வாழும் நடுத்தர வகுப்பினருக்காக ஏற்படுத்தப்படுபவை. எனவே, இவ் விருவகை மத்திய வங்கிகளும் ஒன்றோடொன்று போட்டியிட வாய்ப்பில்லை என்பதற்கு அகமத் நகரில் இயங்கி வரும் மாவட்ட மத்திய நகர வங்கி எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

நிதி நிலை

தம்மிடம் கணக்கும் வைப்புத் தொகையும் வைத்திருப்போருக்குப் பாதுகாப்பும் நம்பிக்கையும் நீடித்திருக்கவேண்டுமாயின் இந் நகர வங்கிகள் பங்கு மூலதனத்தின் வழியாக நிறைய நிதி கொண்டிருக்கவேண்டும். எனவே, இவ் வங்கிகள் அதிகப்படியான உறுப்பினர்களைக் கொண்டிருப்பது நல்லது; அதனோடு ஒவ்வொரு பங்கின் மதிப்பும் அதிகமாக இருப்பதும் சிறந்தது. இவ் வகையில் நகர வங்கிகள் வைப்பு வங்கிகள்போல் ஆகிவிடுகின்றன.

வைப்புகள்

சாதாரண வணிக வங்கியைப் போலவே இக் கூட்டுறவு நகர வங்கிகளும் பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்றுத் தம் நடப்பு மூலதனத்தை அதிகரித்து வருகின்றன. சமுதாயத்திலுள்ள ஏழை எளியவர்கள் முதல் பெரும் பணக்காரர்கள் வரை இவ்வங்கிகளில் கணக்குத் தொடங்கித் தம் சேமிப்பை வைக்கின்றனர். இதற்கென்று பலவிதமான வைப்புக் கணக்கு முறைகளை இவ் வங்கிகள் புகுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. பலவிதமான கணக்குகளின் பேரில் சமுதாயத்திலுள்ள அனைவருக்கும் சேவை செய்து வருவது இவ் வங்கிகளின் தனிச் சிறப்பாகும். ஏனைய வணிக வங்கிகளைப்போல் நடப்புக் கணக்கு, சேமிப்புக் கணக்கு, காலவரம்பிற் குற்பட்ட கணக்கு என்று மூவகைக் கணக்குகளில் பொதுமக்களின் சேமிப்பை வைப்புகளாகப் பெறுகின்றன. இவ் வகைச் சாதாரணக் கணக்குகள் தவிர இவை கொண்டிருக்கும் சிறப்புக் கணக்குகள் வருமாறு:

தவணை முறை வைப்புகள் (Recurring deposits): மாதா மாதம் குறிப்பிட்டதொரு தொகையைச் சேமிக்கவிரும்புகின்றவர்கள் இந்தத் தவணை முறைக் கணக்கைத் தொடங்குகின்றனர். எத்தனை ஆண்டுகளுக்கு இவ்வாறு செய்வது என்பதும் திர்ணயிக்கப்படுகிறது. அந்த ஆண்டு முடிவடைந்ததும் சேமிப்புத் தொகையும் வட்டியும் வாடிக்கையாளருக்குத் தரப்படுகிறது. சான்றாக, மாதா மாதம் ரூ. 10 என்று 5 வருடங்களுக்கு இக் கணக்கை ஒருவர் தொடங்கினால் அவரது கணக்கில் போடப்படும் தொகைக்கு அவ்வப்போது வட்டியும் சேர்க்கப்படும். 5 ஆண்டுகள் முடிவடைந்த பின்னர்த் தான் இக் கணக்கை முடித்து வட்டியும் முதலுமாகப் பெறமுடியும். இவ் வங்கிகள் இவ் வகைக் கணக்கு வைத்திருப்பது மாதச் சம்பளம் பெறும் சாதாரண ஊழியர்களும் சேமிக்க உதவி செய்கிறது.

வீட்டுப் பாதுகாப்புச் சேமிப்பு (Home Safe deposits)

வீட்டுப் பெண்மணிகள், பள்ளி மாணவர்கள், குழந்தைகள், மற்றும் பிறர் சிக்கனமாக வாழ்ந்து, தங்களுக்கு அவ்வப்போது கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமிப்பதற்கென்று இவ் வகைச் சேமிப்புக் கணக்கை இந் நகர வங்கிகள் தொடங்கியுள்ளன. வீட்டிலேயே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்சென்று இவ் வங்கிகள் உண்டியல்களையோ உண்டியல் பெட்டிகளையோ வாடிக்கையாளருக்கு அளிக்கின்றன. அவ்வப்போது தாம் சேமிக்கக் கூடிய தொகையை வாடிக்கையாளர் இவ் வுண்டியல்களில் போடு கின்றனர். போட்ட பணத்தை மறுபடியும் வாடிக்கையாளர் எடுத்துச் செலவு செய்யக் கூடாதென்பதற்காக உண்டியல்களுக்குச் சீல் வைத்துக் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதக் கடைசியிலும் இவ் வங்கிகள் இந்த உண்டியல்களைச் சேகரித்து, அவற்றில் எவ்வளவு பணம் சேர்ந்துள்ளதோ அதை அவரவர் கணக்கில் வரவு வைக்கின்றன. குறிப்பிட்ட காலத்திற்குப் பின் இவ்வாறு கணக்கில் சேர்க்கப்பட்டுள்ள தொகைக்கு வட்டியும் சேர்த்து இந் நகர வங்கிகள் வாடிக்கையாளருக்குக் கொடுத்து வருகின்றன. குறிப்பிட்ட காலம் முடிவடைவதற்கு முன் எவரும் இப்பணத்தைப் பெற முடியாது.

சீட்டு நிதி வைப்புகள் : (Chit Fund deposits) சீட்டு நிதிக் கணக்குமுறை தமிழ் நாட்டில்தான் மிகப் பிரபலமாக இயங்கி வருகிறது. 500 ரூபாய் சீட்டு, 1,000 ரூபாய் சீட்டு என்று 2,400 ரூபாய் சீட்டு வரை எத்தனையோ வகைச் சீட்டுகள் உள்ளன. குறிப்பிட்ட தொரு சீட்டுக்கு 10 அல்லது அதற்குமேல் உறுப்பினர்கள் சேர்ந்து விட்டால் அந்தச் சீட்டுக் குலுக்கல்முறையை இவ் வங்கி நிர்வாகிகள் தொடங்குகின்றனர். எந்தச் சீட்டுக்குமே 24 உறுப்பினர்களுக்கு மேல் அனுமதிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு சீட்டுக் குலுக்கலுக்கும் 10 மாதத் தவணை முதல் 24 மாதத் தவணைவரை உண்டு. எந்த உறுப்பினரும் ஏதாவதொரு சீட்டில் சேரலாம். ஆனால் எவருக்கும் மூன்று சீட்டுக்குமேல் தரப்படுவதில்லை. ஒவ்வொரு மாதமும் உறுப்பினர்கள் தம் குறிப்பிட்ட சீட்டுக்குரிய தொகையைச் செலுத்தவேண்டும். மாதா மாதம் குறிப்பிட்ட நாளில் இச் சீட்டுகள் ஏலம் விடப்படுகின்றன. உறுப்பினர்கள் போட்டி போட்டு ஏலம் கோருகின்றனர். ஆனால், கடும் போட்டி ஏற்பட்டு உறுப்பினர்கள் நட்டமடையக் கூடாதென்பதற்காகச் சீட்டுத் தொகையில் அதிகப் பட்சம் 8 சதவீதக் கழிவு வரைதான் ஏலம் விடப்படுகிறது. அதே போல் குறைந்த பட்சக் கழிவும் 4½ சதவீதமாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அதிகப் பட்சக் கழிவில் பல உறுப்பினர்கள் ஏலம் கோரினால் அவர்களது பெயர்கள் தனித்தனித் தாளில் எழுதப்பட்டு

அவற்றைக் குலுக்கி ஏதாவதொரு தாளை மட்டும் எடுத்து யாருக்குச் சீட்டு என்பதை நிர்ணயம் செய்கின்றனர். அவ்வாறு சீட்டுக் கிடைத்த உறுப்பினரிடமிருந்து இவ் வங்கி நிர்வாகிகள் தாம் விரும்பும் ஆவணத்தைப் பெற்று, சீட்டுத் தொகையை அளிக்கின்றனர். இவ் வகையில் சேமிப்பு நடப்பதால் எல்லா வகுப்பினருமே இத் திட்டத்தில் ஆர்வத்துடன் சேருகின்றனர்.

வருங்காலச் சேமிப்பு நிதிக் கணக்கு : (Provident Fund account) : கூட்டுறவு நகர வங்கிகளில் வேலைசெய்யும் முழுநேர ஊழியர்களுக்கென்று இத் திட்டம் கொண்டு வரப்பட்டுச் செயல் படுகிறது. இது நகர வங்கிகளின் தனிப்பட்ட திட்டமாகும். இத் திட்டத்தின்படி முழுநேர ஊழியர்களாய் இவ் வங்கிகளில் பணிபுரிவோர் தம் மாத ஊதியத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை இக் கணக்கில் போட்டு வைக்கின்றனர். இக் கணக்கில் சேர்க்கப் படும் தொகைக்கு நல்ல வட்டியும் தருகின்றனர். பெரும்பாலும், நகர வங்கி ஊழியர் அனைவருக்குமே இக் கணக்கு உள்ளது. இக் கணக்கிலிருந்து தகுந்த காரணங்களுக்காக ஊழியர்கள் கடன் பெறுவதற்கும் வழி செய்யப்பட்டுள்ளது. ஊழியர்கள் ஓய்வு பெறும் போது, அவர்கள் கணக்கில் எவ்வளவு தொகை வட்டியுடன் சேர்ந்துள்ளதோ அத் தொகை முழுவதும் அளிக்கப்படுகிறது.

வருங்காலச் சேமிப்புக் கணக்கு : (Provident deposites) வங்கி ஊழியர்களுக்கு மட்டுமன்றி, பொது மக்களுக்கெனவும் வருங்காலச் சேமிப்புத் திட்டம் இவ் வங்கிகளால் தொடங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ்க் குறைந்த வருமான முடையோரும் நல்ல பயனடைகின்றனர். வருங்காலத்தில் நோய்வாய்ப்பட்டு உழைக்க முடியவில்லையென்றால், அல்லது உடல் ஊனமுற்றுச் சம்பாதிக்க இயலவில்லையென்றால் ஏதாவது பாதுகாப்புத் தேவை என விரும்பும் மக்கள் இத் திட்டத்தில் சேருகின்றனர். ஓய்வு பெற்ற பின்னர் உதவ வேண்டுமென்றும் இத் திட்டத்தில் பலர் சேர்ந்து சேமிக்கின்றனர். இத் திட்டத்தில் சேர்ந்துள்ளோர் பொதுவாக 7 ஆண்டு முதல் 30 ஆண்டுகள் வரை குறிப்பிட்டதொரு தொகையை மாதா மாதம் தம் கணக்கில் சேர்க்க வேண்டும். அக் காலத் தவணை முடிந்த பின்னர்த்தம் கணக்கிலுள்ள தொகையை வட்டியுடன் பெறுவர்.

அன்றாட வைப்புக் கணக்கு : அன்றாடம் உழைத்து ஊதியம் பெறுவோரும் இவ் வங்கிகளில் கணக்குத் தொடங்கி நன்மையடைகின்றனர். தம் அன்றாடக் கூலியில் ஒரு பகுதியை இவ் வங்கியில் அன்றாட வைப்புக்கணக்கில் சேர்த்துச் சேமித்து வைக்கின்

றனர். இக் கணக்கை அவர்கள் தொடங்குவதற்குச் சிறிய தொகை யொன்று வசூலிக்கப்படுகிறது. இக்கணக்கைத் தொடங்கியவர்கள் தினசரி தம் கூலியிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்தத் தவறினல் சிறு அபராதத்துடன் செலுத்தவேண்டும். குறிப்பிட்ட காலம் முடிவடைந்த பின்னர் இத் தொகை வட்டியுடன் அவர்களுக்குத் திருப்பித் தரப்படுகிறது.

இவ்வாறு பலவகைக் கணக்குகளை இவ் வங்கிகள் தொடங்கி யிருப்பதால் நகரில் வாழும் மக்கள் எந்தக் கணக்குத் தமக்கு ஏதுவா யிருக்குமோ அதைத் தொடங்குவதற்கும் அதன் வாயிலாகச் சேமிப்பதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

இந் நகர வங்கிகள் செயல்புரியும்போது நிதி தேவைப்பட்டால் அந் நிதியை பெறுவதற்குக் கடன் வாங்குகின்றன. உறுப்பினர்களிட மிருந்தும் இவை கடன் பெறலாம்; மற்றவர்களிடமிருந்தும் அல்லது ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடன் வாங்கலாம். அப்படி வாங்கும் கடனுக்கு ஒரு வரம்பு உள்ளது. அதாவது, தம்மிடமுள்ள காப்புநிதி, செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் எவ்வளவோ அதைப் போல் இத்தனை மடங்குதான் கடன் பெறலாம் என்று வரம்பு உள்ளது. நடைமுறையில் நகர வங்கிகளில் பெரும்பாலானவை மிகச் சொற்பக் கடன்தான் வாங்குகின்றன. இவற்றிடம் போது மான நிதி வசதி இருப்பதால் அடிக்கடியோ பெருமளவிலோ கடன் வாங்க அவசியமில்லை. நம் நாட்டிலுள்ள கூட்டுறவு வங்கிகளுக் கெல்லாம் ரிசர்வ் வங்கி குறைந்த வட்டிக்குக் கடன் தருகிறது. ஆனல், நகர வங்கிகள் மட்டும் இச் சலுகையை ரிசர்வ் வங்கியிட மிருந்து பெறுவதில்லை.

நகர வங்கிகள் முதலீடு செய்யும் விதம்

ஒரு வங்கி எப்படி முதலீடு செய்வது என்பது அவ்வங்கியிட முள்ள நிதியைப் பொறுத்தது; அதனேடு, தம்மிடமுள்ள நிதி எப்படி வந்தது, எத்தனை ஆண்டுகள் தம்மிடமிருக்கும் என்பதையும் பொறுத்தது. எனவே, நகர வங்கிகளின் முதலீடும் அவற்றிட முள்ள வைப்புத் தொகையின் இயல்பைச் சார்ந்தது. பெரும் பாலும் இவ்வங்கிகளிடமுள்ள வைப்புத்தொகை குறுகிய கால, இடைக்கால வைப்புத் தொகை தாம். எனவே, இவை கடன் கொடுப்பதும் குறுகிய காலத்திற்கும் இடைக் காலத்திற்கும் தாம். இவ் வங்கிகள் எப்படிக் கடன் கொடுக்கின்றன என்பது அதனதன் சட்டங்களால் நிர்ணயிக்கப்படுகிறது. தம்மிடமுள்ள நிதி அனைத்தையும் இவ் வங்கிகள் கடனக அளிப்பதில்லை. அதில்

குறிப்பிட்டதொரு சதவீதத்தை நீர்மைச் சொத்துகளாக வைத்துள்ளன. அதாவது வேண்டிய நேரத்தில் உடனடியாகப் பணமாக்கக் கூடிய சொத்துகளைத்தான் நீர்மைச் சொத்துகள் என்கிறோம். கூட்டுறவு நிதி நிறுவனங்களெல்லாம் எப்படி ரிசர்வ் வங்கியின் கணக்கில் தம் நீர்மைச் சொத்துகளில் ஒரு குறிப்பிட்ட பகுதியை வைத்துள்ளனவோ, அதேபோல்தான் இவ்வங்கிகளும் தம்மிடமுள்ள நிதியில் 3 சதவீதத்தை ரொக்கமாக ரிசர்வ் வங்கியின் கணக்கில் வைத்துள்ளன. அதனோடு, தம்மிடமுள்ள காலத் தவணை வைப்புகள், தேவை வைப்புகள் ஆகியவற்றின் மொத்தத் தொகையில் 20 சதவீதத்தை நீர்மைச் சொத்துகளின் வடிவில் வைத்திருக்கவேண்டுமென்பது சட்டம்.

கடனளித்தல்

பெரும்பாலும் நகர வங்கிகள் அனைத்தும் முதன்முதலில் உறுப்பினர்களுக்குத் தாம் கடனளிக்கின்றன. அதன் பின்னர்த்தான் தம்மிடம் கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளருக்குக் கடன் தருகின்றன. அப்படித் தரும்போது அவரவர்களின் கணக்கில் எவ்வளவு தொகை இருக்கிறது, எந்தக் கணக்கில் அவர்கள் தம் சேமிப்பை வைத்திருக்கின்றனர் என்பது நன்கு பரிசீலனை செய்யப்படுகிறது. வாடிக்கையாளருக்குத் தகுந்த, பயனுள்ள காரணங்களுக்காகத்தான் கடன் அளிக்கின்றன. நகர வங்கிகள் பெரும்பாலும் கீழ்க்காணும் காரணங்களுக்குத்தாம் உறுப்பினர்களுக்கும் வாடிக்கையாளருக்கும் கடனுதவி செய்கின்றன:- (1) கைவினைஞர்கள் தமக்கு வேண்டிய கச்சாப் பொருள்களையும் சாதனங்களையும் வாங்குவதற்கு; (2) வியாபாரத்திற்கு கொள்முதல் செய்வதற்கு; (3) முந்திய கடனைத் திரும்பச் செலுத்துவதற்கு; (4) உணவுப் பொருள்களையும் இதர வீட்டுச் சாமான்களையும் பெறுவதற்கு; (5) வீட்டில் நடக்கும் சமூகச் சடங்குகளுக்கு; (6) கல்விக்காக; (7) வைத்தியச் செலவுக்காக; (8) வாடகை, வரி செலுத்துவதற்காக; (9) காப்பு நிறுவனங்களுக்குத் தவணைத் தொகை செலுத்துவதற்காக; (10) மனைகள் கட்டுவதற்கும் செப்பனிடுவதற்கு; (11) நிலம் வாங்குவதற்கும் நிலத்தை மேம்படுத்துவதற்கு; (12) விவசாயத்திற்கு வேண்டிய விதை வித்துகள், உரம், கருவிகள் வாங்குவதற்கு நகர வங்கிகள் பொதுவாக 3 ஆண்டுகளுக்கென்று தான் கடனளிக்கின்றன. மேலும், கடன் கொடுக்கும்போது பின்வரும் ஆவணங்கள் அல்லது ஈட்டின் பேரில்தான் கொடுக்கின்றன:- (1) 90 சதவீதம் வரை வைப்புத் தொகையின் பேரில்; (2) வசதியான உறுப்பினரின் உத்தரவாதத்தின் பேரில்; (3) வில்லங்கம் இல்லாத நிரந்தரச்

சொத்துகளின் பேரில்—அதாவது அச் சொத்து மதிப்பில் 40 முதல் 50 சதவீதம் வரை; (4) உற்பத்தி செய்துள்ள பொருள்களின் பேரில்—அதாவது அவற்றின் அங்காடி விலையில் 60 முதல் 70 சதவீதம் வரை. மேலும், உறுப்பினர்கள் எவ்வளவு பங்கு வாங்கியிருக்கின்றனரோ அதன் அடிப்படையிலும் அவர்களுக்குக் கடன் தரப்படுகிறது. அடைமானக் கடனுக்குக் கூட வரம்பு உள்ளது; இவ் வகைக் கடன் உதவியை இந் நகர வங்கிகள் செய்யும்போது எவ்வளவு காலத்திற்கு என்பதைப் பெரும்பாலும் அந்தந்த வங்கி நிர்வாகத் தலைவரும் நிர்வாகக் குழுவினரும் தீர்மானிக்கின்றனர். கடன் பெறுவோர் தவணை முறையில் எளிதாகத் திருப்பித் தருவதற்கும் இவ் வங்கிகள் வழிவகைகள் செய்துள்ளன.

நகர வங்கிகளின் ஏனைய முதலீடுகளும் பணிகளும்.

நகர வங்கிகள் தம் உறுப்பினர், ஏனைய வங்கிகள் விடுக்கும் உண்டியல்களைக் கழிவு செய்யும் பணியையும் செய்து வருகின்றன. யார் யாருக்கு இப்பணியைச் செய்வது என்பதற்காக அவரவர் பெயர்களும் வங்கிகளின் பெயர்களும் கொண்ட பட்டியலை நிர்வாகக் குழு அவ்வப்போது தயார் செய்து கொள்கிறது. ஒவ்வோர் உறுப்பினருக்கும் அதிகபட்சம் எவ்வளவு தொகைக்கு அவரது செக்குகளைக் கழிவு செய்வது என்பதும் நிர்ணயிக்கப்படுகிறது. செக்குகளையும் உண்டியல்களையும் கழிவு செய்யும் பணியை விரும்பும் உறுப்பினர் அதற்கென்று உத்தரவாதக் கடிதம் தரவேண்டும்.

நகர வங்கிகள் யார் யாருக்கு எந்த நோக்கத்திற்காகக் கடன் கொடுக்கின்றன என்பதைச் சற்று முன்னர்க் கண்டோம். அவ்வாறு கடன் கொடுத்த பின்னும் தம்மிடம் நிதி இருக்குமாயின், அதை மேல் நிலையிலுள்ள கூட்டுறவு வங்கிகளிடம் வைப்புகளாக வைத்து வட்டி பெறுகின்றன. இந்த உபரித் தொகையை வணிக வங்கிகளிடம் வைப்பாக வைக்கவேண்டுமாயின், அதற்குக் கூட்டுறவுப் பதிவாளரின் அனுமதி தேவை.

மேலும், தம்மிடமுள்ள நடப்பு மூலதனத்தில் சிறிதளவைக் கொண்டு ஏனைய கூட்டுறவு நிறுவனங்களின் பங்கினையும் இந் நகர வங்கிகள் வாங்குகின்றன. இவ் வங்கிகள் தத்தம் மாவட்டத்திலுள்ள கூட்டுறவு மத்திய வங்கிகளின் பங்கு மூலதனத்தை அதிக அளவு வாங்குவதற்கென்று தம் நிதியைச் செலவிட்டால் பயனுள்ளதாக இருக்கும். இதற்கென்று ஓர் உபாயத்தையும் மேற்கொள்ளலாம். அதாவது, இவ் வங்கிகள் கொண்டுள்ள பங்கின் அடிப்படையில் மத்திய வங்கிகள் கடன் கொடுக்கும் கொள்கையை

அமுலாக்குவது நன்று. அதனோடு, இந் நகர வங்கிகள் தமக்கு வேண்டிய கடனுதவியை மத்திய வங்கிகளிடமிருந்து பெற முடியாத நிலை ஏற்படின், மாநில உச்சி வங்கிகளிடமிருந்து பெறுவதற்கேற்ற வகையில் அதன் பங்கு மூலதனத்தை வாங்கத் தூண்டப்படலாம்.

ஏனைய கூட்டுறவு வங்கிகளைப்போலவே இந் நகர வங்கிகளும் தம் நிகர இலாபத்தில் ஒரு பகுதியைக் காப்பு நிதியில் சேர்க்கின்றன. எதிர் பாராத நட்டம் ஏற்படும் போது இக் காப்பு நிதியிலுள்ள தொகை பயன்படுத்தப்படுகிறது. எனவே, இக் காப்பு நிதியை உருவாக்குவதற்கென்று தனி விதிகளே உள்ளன. இவ் விதிகளும் ஒழுங்கு முறைகளும் கூட்டுறவுப் பதிவாளரால் ஏற்றுக்கொள்ளப் படுவதாயும் இருக்க வேண்டும்.

இலாபப் பங்கீடு:

கூட்டுறவு நகர வங்கிகளுக்குப் பல்வேறு வகையில் இலாபம் கிடைக்கிறது. அதாவது: (1) கொடுத்த கடனுக்குக் கிடைக்கும் வட்டி; (2) அரசாங்கப் பத்தரங்களிலிருந்து கிட்டும் வட்டி; (3) ஏனைய கூட்டுறவு நிறுவனங்களில் வைத்திருக்கும் பங்கு மூலதனத்திலிருந்து கிடைக்கும் இலாப ஈவு; (4) உண்டியல்களைச் சேகரித்து, அவற்றை மாற்றிக் கொடுப்பது போன்ற பணிகளுக்குத் தரப்படும் கமிஷன் தொகை; (5) நுழைவுக் கட்டண வருமானம் 6) ஏனைய வங்கிகளில் வைத்திருக்கும் வைப்புகளுக்குத் தரப்படும் வட்டி; (7) வியாபார நடவடிக்கைகளிலிருந்து கிடைக்கும் இலாபம்.

மேற்கூறிய விதங்களில் கிடைக்கும் வருமானத்தில் செலவு போக எஞ்சியிருக்கும் நிகர இலாபம் கீழ்க்காணும் முறையில் பங்கிடப்படுகிறது:- குறிப்பிட்டதொரு சதவீத இலாபம் சட்டபூர்வமான காப்பு நிதியில் சேர்க்கப்படுகிறது. அதனோடு, குறிப்பிட்ட சதவீத இலாபம் இலாப ஈவுச் சமன்பாட்டு நிதியில் சேர்க்கப்படுகிறது. பங்குதாரர்களுக்குச் சமமான இலாப ஈவு கொடுப்பதற்கென்று உருவாக்கப்பட்டது தான் இந் நிதி. மேலும், பொது நல நிதிக்கென்றும் குறிப்பிட்ட இலாபத் தொகை ஒதுக்கப்படுகிறது. கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், தர்ம ஸ்தாபனங்கள் போன்ற பொதுப்பணி நிறுவனங்களுக்கு இவ் வங்கிகள் தர்மம் செய்வதற்கென்று இந் நிதி ஏற்படுத்தப் பட்டுள்ளது. மேலும், ஒரு பகுதி நகர வங்கி ஊழியர்களுக்குப் போனஸ் கொடுப்பதற்காகப் பயன் படுத்தப்படுகிறது. அதனோடு, நகர வங்கிக் கட்டட நிதிக்காகவும் இலாபத்தில் ஒரு பகுதி ஒதுக்கப்படுகிறது.

கண்காணிப்பும் தணிக்கையும்

கூட்டுறவு நகர வங்கிகள் செயல்படும் விதத்தைக் கண்காணிக்கும் பொறுப்புக் கூட்டுறவுத் துறையைச் சார்ந்தது. இவ் வங்கிகளின் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்யும் பொறுப்புக் கூட்டுறவு பதிவாளரைச் சேர்ந்தது. எனவே, கூட்டுறவுத் துறைத் 'தணிக்கையாளர்கள்தாம் நகர வங்கிகளின் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்கின்றனர். பெரிய நகர வங்கிகளில் சில சொந்தமாகவே தணிக்கையாளர்களையும் கொண்டுள்ளது. இதனால், ஆண்டு தோறும் விரைவாகத் தணிக்கைச் செய்ய முடிகிறது. வங்கிகளை ஒழுங்கு படுத்தும் புதிய சட்டம் அமுலாக்கப் பட்டதிலிருந்து நகர வங்கிகளும் ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டிற்கும் அதிகாரத்திற்கும் கொண்டு வரப்பட்டு விட்டன.

இன்றைய நிலை:

1968ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி நமது நாட்டில் மொத்தம் 1,127 கூட்டுறவு நகர வங்கிகள் இருந்தன. இவற்றில் மொத்தம் 27.14 இலட்சம் பேர் உறுப்பினர்களாக இருந்தனர். இவற்றின் நடப்பு மூலதனம் ரூ. 143.99 கோடியாகவும் செலுத்தப் பட்ட பங்கு மூலதனம் ரூ. 16.45 கோடியாகவும் இருந்தது. இவை வழங்கிய கடன் மட்டும் ரூ. 76.78 கோடியாகும். இவற்றின் வைப்புத் தொகை ரூ. 110.04 கோடியென்றும் அறிய வருகிறோம். கூட்டுறவு நகர வங்கிகளில் 914 வங்கிகள் நல்ல முறையில் இலாபகரமாக இயங்கி வந்தன. இவ் வங்கிகள் ஆந்திராவில் 142, குஜராத்தில் 122, மகாராஷ்டிரத்தில் 219, மைசூரில் 216, தமிழ் நாட்டில் 145 என்று பல மாநிலங்களில் இயங்கி வந்திருக்கின்றன. அசாம், பீஹார், மத்தியப் பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் கூட்டுறவு நகர வங்கிகள் இன்னமும் பிரபலமாக வில்லை.

நகர வங்கிகளின் பிரச்சினைகளும் கஷ்டங்களும்

சமுதாயத்தில் நடுந்தர நிலையிலுள்ள மக்களுக்கும் கட்டப் படுகிற மக்களுக்கும் நிதி உதவி செய்வதற்காகத்தாம் நகர வங்கிகள் தோன்றிப் பணியாற்றி வருகின்றன. தொடக்கத்திலிருந்தே இவ் வங்கிகள் அவர்களுக்கு உதவி செய்து வந்திருக்கின்றன. தேவைப் படும்போதெல்லாம் அவர்களுக்கு நிதி உதவி செய்வதோடு, வெள்ளம், புயல், நில நடுக்கம் போன்றனவற்றால் சேதம் ஏற்படும்போதும் அவர்களுக்குப் பேருதவியாய் இருந்து வருகின்றன. இவ் வகை உதவிகளையெல்லாம் செய்துவரும் நகர

வங்கிகளுக்கு மத்திய அரசாங்கமோ மாநில அரசாங்கமோ ஊக்கம் காட்டுவதாகத் தெரியவில்லை. அப்படியிருந்தும் வணிக வங்கிகளோடு போட்டியிட்டுப் பொது மக்களிடமிருந்து சேமிப்புகளைப் பெற்று அவரவர் கணக்கில் வைப்புகளாக வைத்து வருகின்றன.

எவ்வளவுதான் இந் நகர வங்கிகள் திருப்திகரமாகப் பணியாற்றி வந்த போதிலும் இவை அமைக்கப்பட்டிருக்கும் முறையிலும் பணியாற்றும் விதத்திலும் ஒரு சில பிரச்சினைகள் தோன்றுகின்றன. அவற்றில் முக்கியமான பிரச்சினைகளும் கட்டங்களும் வருமாறு:-

1. கூட்டுறவுத் துறையினர் இந் நகர வங்கிகளைத் தொடக்க நிலைச் சங்கங்கள் போலவே தாம் பாவிக்கின்றனர். மாநில உச்சி வங்கிகளின் உறுப்பினர்களாக இவை அனுமதிக் கப்படுவதில்லை. எனவே, அவ் உச்சி வங்கிகளிடமிருந்து நேரடியாக இவற்றால் கடன்பெற முடிவதில்லை. கூட்டுறவு நிறுவனங்கள் எவ்வாறு பணியாற்றுகின்றன என்பதை ஆய்வு செய்த குழுவினர் கூட இதை உணர்ந்தனர். கூட்டுறவு முறையில் இயங்கும் எல்லா வங்கிகளுமே ரிசர்வ் வங்கியின் கட்டுபாட்டில்தான் இயங்கவேண்டு மென்று பரிந்துரையும் செய்துள்ளனர்.

2. கூட்டுறவு நகர வங்கிகள் எல்லா மாநிலங்களிலும் நன்கு வளர்ச்சியடையவில்லை. நலிந்துவரும் வங்கிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. வணிக வங்கிகளோடு இந் நகர வங்கிகள் போட்டியிட முடியாமலிருப்பது இதற்குக் காரண மாக இருக்கலாம். கூட்டுறவு மத்திய வங்கிகளும் இந் நகர வங்கி களுக்கு அதிக ஒத்தாசை செய்வதில்லை. நகரக் கூட்டுறவுக் கடன் சங்க ஆய்வுக் குழுவினர் இதை நன்கு உணர்ந்து, பின்வரும் சிபாரிசைச் செய்துள்ளனர். கூட்டுறவு நகர வங்கிகள் ஒவ்வொன் றுக்கும் குறைந்த பட்சம் ரூ. 50,000 பங்கு மூலதனமாகிலும் இருக்க வேண்டும். இப் பங்கு மூலதனத்தில் சரிபாதியை மாநில அரசாங்கம் வாங்கவேண்டும். அதனோடு, ஏனைய கூட்டுறவு நிறுவனங்களுக் கென்று கூட்டமைப்பு இருப்பதுபோல் நகரவங்கிகளும் தமக்கென்று கூட்டமைப்புகளை அமைத்துக் கொள்வது அவசியம்.

3. இந் நகர வங்கிகள் சிலவற்றிற்கு நிர்வாகப் பிரச்சினைகளும் உள்ளன. ஆயிரக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்ட பெரிய வங்கிகள் பொதுக்குழுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்வது கஷ்டமா யுள்ளது. கஷ்டப்பட்டு ஏற்பாடு செய்தாலும் பெரும்பாலான

உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வருவதில்லை. இந் நிலையில் ஒரு சில உறுப்பினர்களின் செல்வாக்கு அதிகரித்து விடுகிறது. நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுப்பதிலும் சிக்கல்கள் தோன்றுகின்றன.

4. இந் நகர வங்கிகளில் சில வீணான காரியங்களுக்காகவும் கடன் வழங்கியுள்ளன என்று தெரிய வருகிறது. இவை வசூலிக்கும் வட்டியும் கூடச் சற்று அதிகம்தான். வேறு சில வங்கிகளிடமோ நிதி உபரியாகவே உள்ளது. எனவே, அதை எப்படியாவது பயன் படுத்த வேண்டுமென்பதற்காக முறையற்ற வழிகளில் முதலீடு செய்கின்றன. மேலும், இந் நகர வங்கிகள் சிறு தொழில் வளர்ச்சிக் கென்று கடன் கொடுக்கத் தயக்கம் காட்டி வருவதாயும் தெரிகிறது.

5. இறுதியாக, நம் பொருளாதார நிலையை உயர்த்துவதற் காக அரசு திட்ட நடவடிக்கைகளையெல்லாம் மேற்கொள்ளும் போது, எல்லாவிதக் கூட்டுறவு அமைப்புகளுக்கும் முக்கியத்துவம் தருகிறது; ஆனால், கூட்டுறவு நகர வங்கிகளைப் பற்றியோ கடன் சங்கங்களைப் பற்றியோ அவ்வளவாக அக்கறை கொள்வதில்லை. பொருளாதார முன்னேற்றத்தில் நகர வங்கிகளும் உரியவிதத்தில் பங்கு கொள்ளமுடியும் என்பதை எவரும் மறுக்க இயலாது; நடுத்தர வகுப்பினரையும் தொழிலாளர் வர்க்கத்தினரையும் இவ் வங்கிகள் ஒன்றுபடுத்தி, அவர்களுக்குத் தேவையான கடனுதவி களைச் செய்து அவர்கள் முன்னேற வழிவகுக்கின்றன. அவர்கள் சுயமாகவே தொழில் தொடங்குவதற்கு ஊக்கமளிக்கின்றன. நகரங்களில் காணப்படும் நலிவுற்ற மக்களுக்கு சேவை செய்தும் வருகின்றன.

எனவே, கூட்டுறவு நகர வங்கிகள் வளர்ச்சி பெற்றுத் தொண் டாற்றுவதற்கென்று நகரக் கூட்டுறவுக் கடன் ஆய்வுக் குழுவினர் பின் வரும் பரிந்துரைகளைச் செய்துள்ளனர்:—

1. ஓர் இலட்சம் மக்களுக்கு மேல் வாழும் நகரங்கள் அனைத் திலும் கூட்டுறவு நகர வங்கிகள் தொடங்கப்படவேண்டும். இலட்சக்கணக்கான மக்கள் வாழும் பெரிய நகரங்களில் பல நகர வங்கிகளை அமைக்க ஏற்பாடு செய்வது நல்லது.

2. ஒவ்வொரு நகர வங்கியும் தத்தம் நகர எல்லைக்குள் மட்டும் தான் பணிபுரியவேண்டும்.

3. குறைந்த பட்சம் 1,500 உறுப்பினர்களாவது ஒரு நகர வங்கி யில் இருக்கவேண்டும்.

4. நகர வங்கியின் பொதுக் குழுக் கூட்டம் ஆண்டுதோறும் நடைபெற வேண்டும்; இக் கூட்டத்தில் எல்லா உறுப்பினர்களும் கலந்துகொள்வதற்குரிய உற்சாக வழி முறைகள் கையாளப்பட வேண்டும்.

5. நகர வங்கியின் பங்கு மூலதனத்தைச் சாதாரண மக்களும் வாங்கக்கூடிய விதத்தில் பங்கின் மதிப்பு நிர்ணயிக்கப்படுவது நல்லது.

6. நகர வங்கியின் பங்கு மூலதனத்தை மாநில அரசாங்கமும் வாங்கி துணைசெய்யவேண்டும். அரசாங்கத்தின் பங்கு தனிப்பட்டவர்களின் பங்கு மூலதனத்திற்குச் சமமாக இருந்தால் நல்லது.

7. வாடிக்கையாளர்கள் உண்டியல்களை விடுத்து, தம் கணக்கிலிருந்து பணம் பெறுவதற்குரிய ஏற்பாட்டை நகர வங்கிகள் கையாள்வது நன்று.

8. உறுப்பினர்கள் தம் சேமிப்பை இவ்வங்கிகளிலேயே போடுவதற்கு உற்சாகமளிக்கப்படவேண்டும்.

9. நகர வங்கிகளுக்கென்று, மேல் மட்டத்தில் கூட்டமைப்பு வங்கிகள் அமைக்கப்படுவது நன்று.

மேற்கூறிய பரிந்துரைகளை நகர வங்கிகளும், அரசாங்கமும் பரிசீலனை செய்து ஏற்றுக்கொண்டால் நகர வங்கிகள் நாடெங்கும் பரவிச் சிறப்பாகப் பணியாற்ற முடியும்.

ஊதியம் பெறுவோர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

(Employees' Co-operative Credit Societies)

நகர்ப்புறங்களில் வாழும் ஊதியம் பெறுவோருக்கென்று கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அவசியம் என்பதை யாவரும் அறிவர். குறிப்பாக, குறைந்த வருமானம் பெறும் ஊழியர்கள் ஆங்காங்கேயுள்ள வட்டிக் கடைக்காரர்களிடம் கடன்பெற்று, அவர்கள் பிடியிலிருந்து தப்பிக்க வழியின்றி அவதிப்படும் நிலை இன்றும் உள்ளது. எனவேதான் 1957-59 ஆம் ஆண்டிற்கான ஊதியக் குழு இவ் வகைக் கடன் சங்கங்கள் அமைக்கப்படவேண்டுமென வலியுறுத்தியது. ஊதியம் பெறுவோர் நிம்மதியாக மன அமைதியுடன் வாழவேண்டு

மாயின் மலிவான கடனுதவியை முறையாக வழங்கக்கூடிய கூட்டுறவு அமைப்பு அவசியம்.

ஊதியம் பெறும் ஊழியர்கள் நூற்றுக்கணக்கான துறைகளில் பணி செய்கின்றனர். ஒரே துறையில் வெவ்வேறு பிரிவுகளில் பணியாற்றும் ஊழியர்களும் உள்ளனர். எனவே, அத் துறைக்கும் பிரிவுக்கு மேற்பத் தனித்தனி கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இவ் ஊழியர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளன. சான்றாக, இரயில்வே ஊழியர்கள், தபால் - தந்தி ஊழியர்கள், அரசாங்கச் செயலக ஊழியர்கள் என்று பல தரப்பட்ட பணியாளர்கள் தத்தமக்கென்று தனிக் கடன் சங்கங்களை அமைத்துள்ளனர். பெரிய ஆலைகளில் பணி புரியும் தொழிலாளர்கள் கூடத் தமக்கெனத் தனிக் கடன் சங்கங்களை அமைத்துள்ளனர்.

குறிக்கோள்களும் பணிகளும்

ஊதியம் பெறுவோர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தம் நிலைக்கும் சூழ்நிலைக்குமேற்பப் பல்வேறு குறிக்கோள்களுடன் இயங்கி வருகின்றன; எனினும், இவற்றின் பொதுவான குறிக்கோள்கள் வருமாறு :—

1. உறுப்பினர்களிடையே கூட்டுறவு மனப்பான்மையைப் பேணி, சிக்கன வாழ்வை ஊக்குவிப்பது;

2. உறுப்பினர்களிடமிருந்து மட்டுமன்றி, மற்றவர்களிடமிருந்தும் சேமிப்புத் தொகையைப் பெற்று, அவரவர் கணக்கில் வைப்புகளாக வரவு வைப்பது;

3. கடன் தேவைப்படும் உறுப்பினர்களுக்கு உசிதமான வட்டிக்குக் கடன் வழங்குவது;

4. தம்மிடமுள்ள உபரித் தொகையை உரிய வழியில் முதலீடு செய்வது;

5. உறுப்பினர்களுக்கு வேண்டிய நுகர்வுப் பொருள்களை மலிவாக விற்பனை செய்வது போன்ற பணிகளைச் செய்வது.

ஊதியம் பெறுவோர் சங்கங்கள் நம் நாட்டில் தோன்றிச் சில வருடங்களே ஆகின்றன; எனினும், அவை எவ்வளவு விரைவாக வளர்ச்சி பெற்றுள்ளன என்பதைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம் :—

(1968 ஆம் ஆண்டின் நிலை)

1.	சங்கங்களின் எண்ணிக்கை	9,299
	அரசு பங்குபெற்றுள்ள சங்கங்களின் எண்ணிக்கை	11
2.	உறுப்பினர்கள் எண்ணிக்கை (இலட்சத்தில்)	43·40
3.	செலுத்தப்பட்ட மூலதனம் (கோடி ரூபாயில்)	52·91
4.	வைப்புகள் (கோடி ரூபாயில்)	98·06
5.	நடப்பு மூலதனம் (கோடி ரூபாயில்)	176.54
6.	கொடுத்த கடன் (கோடி ரூபாயில்)	143.17
7.	இலாபகரமாக இயங்கும் சங்கங்களின் எண்ணிக்கை	6,499
8.	நட்டத்தில் நடக்கும் சங்கங்களின் எண்ணிக்கை	1,187
9.	இலாபமோ நட்டமோ இன்றிநடைபெறும் சங்கங்கள்	1,712

உறுப்பினர்கள்

ஊதியம் பெறுவோர் அமைத்துள்ள கடன் சங்கங்கள் பெரிய அளவிலும் உள்ளன; அதே சமயம் சிறியனவாயும் இருக்கின்றன. சான்றாக, அரியானா மாநிலத்திலுள்ள சங்கங்களில் சராசரி 1,000 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர்; பஞ்சாப்பிலோ சராசரி 100 உறுப்பினர்கள்தாம் உள்ளனர். இவ்வாறு சங்கத்தின் அளவு மாறுபட்டிருப்பதற்குக் காரணம் உண்டு. மிகப் பெரிய ஸ்தாபனங்களில் பணிபுரிவோர் சேர்ந்து சங்கம் அமைத்தால் அது பெரிதாகி விடுகிறது; மாறாக, சிறிய ஸ்தாபனங்களைச் சேர்ந்த பணியாளர்களின் சங்கம் சிறியதாகத் தானிருக்க முடியும். ஒரு சில சங்கங்களில் நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்கள் மட்டுமே உறுப்பினர்களாக முடியும்.

நிர்வாகம்

இக் கடன் சங்கங்களைக் கட்டுப்படுத்தும் முழு அதிகாரம் உறுப்பினர்களைக் கொண்ட பொதுக் குழுவிற்கே உரியது. எனினும், அன்றாட அலுவல்களை நிர்வகிக்கும் பொறுப்பை நிர்வாகக் குழுவினரிடம் ஒப்படைக்கின்றனர். சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கையைப் பொறுத்து நிர்வாகக் குழுவிற்கு 5 பேர் முதல் 10 பேர் வரை தேர்ந்தெடுக்கின்றனர். ஒரு சில பெரிய ஸ்தாபனங்களில் அவற்றின் தலைவரே நிர்வாகக் குழுவிற்கும் தலைவராகப் பணி செய்கிறார். அவ்வாறு இருப்பது சங்கத்திற்கே நல்லதாகக் கருதப்படுகிறது; உறுப்பினர்கள் அனுவசியமாகக் கடன் பெறத்

தயங்குவர். மேலும், அனுபவமும் பொறுப்பு மிக்க ஸ்தாபனத் தலைவர்களே நிர்வாகத் தலைவர்களாக இருக்கும்போது, இச் சங்கங்கள் நல்ல வழியில் செம்மையாக வெற்றி நடைபோட முடிகிறது. அதேசமயம், பொதுக் குழுக் கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ள முயல்வர்; ஆனால், கூட்டத்தில் தம் கருத்துக்களை வெளியிடத் தயக்கம் காட்டலாம். அப்போது, கூட்டுறவுக் கடன் சங்கம் கூட்டுறவின் அடிப்படைத் தத்துவத்தையே இழக்க நேரிடுகிறது. எனவே, சாதாரண ஊழியர்களே நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதுதான் சிறந்ததாகத் தெரிகிறது.

ஒரு சில மாநிலங்களில் இச் சங்கங்களின் வேண்டுகோளுக் கேற்பக் கூட்டுறவுப் பதிவாளரே நிர்வாகிகளை நியமனம் செய்கின்றனர். அப்படிச் செய்யும் போது, பெரும்பாலும் நிர்வாகிகள் தமக்கு நேரமோ அவகாசமோ இல்லாமல் சங்கத்தின் நடவடிக்கைகளைக் கவனிக்க முடிவதில்லை. எனவேதான், ஊதியம் பெறுவோர் கடன் சங்க ஆய்வுக் குழுவினர் இவற்றின் நிர்வாகிகளை அரசாங்கமோ கூட்டுறவுப் பதிவாளரோ நியமனம் செய்யக் கூடாதென்று வலியுறுத்தியுள்ளனர்.

நிதி வசதிகள்

கூட்டுறவு நகர வங்கிகளைப் போலவே தான் இச் சங்கங்களும் தம் சொந்த நிதியைக் கொண்டே நடைபெறுகின்றன. அவ்வப்போது கடன் பெறுவதும் உண்டு. அவ்வாறு கடன் வாங்க வேண்டுமாயின் சொந்த நிதி அதிகமாயிருந்து, சங்கம் வலிமை பெற்றதாயிருந்தால்தான் கடன் கொடுப்போரும் தயங்க மாட்டர். பொதுவாக, இச் சங்கங்களின் உறுப்பினர்கள் ரூ. 10 வீதம் பங்கைப் பெறுகின்றனர். இவற்றிடமுள்ள வைப்புத் தொகைதான் நடப்பு மூலதனமாகப் பயன் படுகிறது. 1968-ல் இவற்றின் நடப்பு மூலதனத்தில் 50 சதவீதத்திற்குமேல் வைப்புத் தொகையாகத்தான் இருந்தது. பல சங்கங்களில் கட்டாயச் சேமிப்புத் திட்டம் உள்ளது. இத் திட்டத்தின்படி ஊழியர்களின் ஊதியத்தில் குறிப்பிட்ட தொகை பிடிக்கப்பட்டு அவரவர் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இவ்வாறு சேரும் நிதியிலிருந்து உறுப்பினர்கள் திரும்பப் பணம் பெற முடியாது. ஓய்வு பெறும்போது தான் அது திரும்பத் தரப்படும். ஒருசில சங்கங்களில் உறுப்பினர்கள் தம்மிட்டப்படி எவ்வளவு பணம் வேண்டுமானாலும் இத் திட்டத்தின் நிதியில் சேர்க்க வழி செய்யப் பட்டுள்ளது.

கடன் வழங்கும் முறை

ஊதியம் பெறுவோர் கடன் சங்கங்களின் முக்கியக் குறிக்கோள், உறுப்பினர்களிடையே சிக்கன வாழ்வை ஊக்கு விப்பதுதான்; எனினும், உறுப்பினர்களுக்கு அவசியம் ஏற்படும் போது குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்தும் உதவுகின்றன. இச் சங்கங்களிடம் போதுமான அளவு நிதி இருப்பதால் கடன் கொடுப்பது கடினமன்று. மேலும், கொடுத்த கடனைத் தவணை முறையில் அந்தந்த உறுப்பினர்களின் ஊதியத்திலிருந்து கழித்துப் பெற்று விடுகின்றன. எனவே, வராக் கடன் என்ற பிரச்சினைக்கு இடம் கிடையாது.

உறுப்பினர் எவ்வளவு தொகை கடன் பெறலாம் என்பது அந்தந்த மாநிலத்திற்கேற்ப மாறுபடுகிறது. ஒரே மாநிலத்தில் கூடச் சங்கங்களின் நிலைமைக்கேற்ப நிர்ணயிக்கப்படுகிறது. பொதுவாகக் கூறுமிடத்து, உறுப்பினர்களின் அடிப்படைச் சம்பளத்தைப் போல் இத்தனை மடங்கு வரைதான் கடன் பெறலாம் என நிர்ணயிக்கப்படுகிறது. எத்தனை தவணைகளில் கடனைத் திருப்பிப் பெறுவது என்பதும் அந்தந்தச் சங்கத்தின் விதியைப் பொறுத்து மாறுபட்டுள்ளது. கொடுத்த கடனுக்கு 5 சதவீத வட்டி வசூலிக்கும் சங்கங்களும் உள்ளன; 12 சதவீதம் வசூலிக்கும் சங்கங்களும் இருக்கின்றன. எனினும், சாதாரணமாக இவை வசூலிக்கும் வட்டி 9 அல்லது 10 சதவீதம்தான். உறுப்பினர் களின் நாணயத்தின் பேரில் தாம் கடன் அளிக்கப்படுகிறது.

உறுப்பினர்கள் சிக்கனமாக வாழ்ந்து, சேமிக்கப் பழக வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட இச் சங்கங்களில் சில அவர்களுக்குக் கண்டபடி கடன் கொடுத்தும் வருகின்றன. இதனால் ஊதாரித்தனமாகச் செலவு செய்யும் பழக்கம் ஒருசில உறுப்பினர்களிடையே காணப்படுகிறது; தம் சக்திக்கு மீறிக் கடன் வாங்கவும் முற்படுகின்றனர். பணவீக்கம் ஏற்பட்டுள்ள இக் காலத்தில் விலைவாசிகள் விஷம்போல் ஏறி வருவதால், தம் ஊதியம் போதாமல் கடன் வாங்கும் உறுப்பினர்களும் உளர். அன்றாட வீட்டுச் செலவுக்கென்று கூடச் சிலர் கடன் பெறு கின்றனர். இப் பழக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம்; இல்லையெனில் இச் சங்கங்கள் முன்னேற இயலாது. தவிர்க்க முடியாத இக்கட்டு ஏற்பட்டால் மாத்திரம்தான் சங்கங்களிட மிருந்து கடன் பெற வேண்டுமென்ற உறுதி மனப்பான்மையை உறுப்பினர்கள் பெறவேண்டும்.

இதரப் பணிகள்

இச் சங்கங்களில் சில உறுப்பினர்களுக்குக் கடனளிப்பதோடு மட்டுமன்றி, அவர்களுக்கு வேண்டிய அவசியப் பொருள்களைக் கொள்முதல் செய்து விநியோகித்தும் வருகின்றன. அவசியப் பொருள்களை அரசாங்கம் கட்டுப்படுத்தி, பங்கீடு செய்யும் முறையைப் புகுத்தும் காலங்களில்தாம் இச் சங்கங்கள் இப் பணியையும் மேற்கொள்ளத் தொடங்குகின்றன. இதற்கென்று சில சங்கங்கள் பண்டகசாலைகளையே தொடங்கியுள்ளன.

மேலும், உறுப்பினர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் வேண்டிய பல நன்மைகளையும் இச் சங்கங்கள் செய்து வருவதாக அறிய வருகிறோம்.

சங்கங்களுக்குத் தேவைப்படும் உதவி

ஊதியம் பெறுவோர் கடன் சங்கங்கள் பொதுவாக நன்கு நிர்வகிக்கப்படுகின்றன. எனினும், சங்கம் தொடங்கப்பட்ட ஓரிரு ஆண்டுகளுக்குப் பல கட்டங்கள் இருக்கலாம். எனவே, தம் ஊழியர்களின் நன்மைக்காக ஆரம்பிக்கப்படும் இச் சங்கங்களுக்கு உதவி புரிய முதலாளிகள் முன் வர வேண்டும். முதலாவது, அச் சங்கங்களுக்கு முதலாளிகள் ஒப்புதல் தரவேண்டும். அவை நல்ல முறையில் இயங்க உதவியும் ஒத்தாசையும் நல்க வேண்டும் சான்றாக, இச் சங்கங்களுக்கென்று வசதியான கட்டடம் ஒன்றை முதலாளிகள் தரலாம். அவற்றின் நடப்பு மூலதனத்திற்கென்று கடனுக நிதியும் தரலாம். உறுப்பினர்கள் வாங்கும் கடனை ஊதியத்திலிருந்து மாதா மாதம் கழித்துக் கொள்ள உதவி செய்யலாம். சங்கங்களின் முக்கியமான கூட்டங்களின் போதும் சங்க அலுவலுக்கென்று வெளியூர் செல்லும்போது நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு ஊதியத்தோடு கூடிய விடுப்புத் தரலாம். மேலும், தமக்குச் சொந்தமான வாகனங்களைக் குறைந்த வாடகைக்கு இச் சங்கங்களுக்கு விடலாம்.

வெற்றி நடை

கிராமக் கடன் சங்கங்களோடு ஒப்பிடும்போது, நகரங்களிலுள்ள ஊதியம் பெறுவோர் கடன் சங்கங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட்டு வெற்றி நடைபோட்டு வருகின்றன என்பது தெளிவாகும். இவ் வெற்றிக்குப் பல காரணங்களைச் சுட்டிக் காட்டலாம். இச் சங்கங்களின் உறுப்பினர்கள் பெரும்பாலும் கற்றவர்கள்; நிர்வாகமும் திறமையாகவும் செவ்வையாகவும் நடைபெறுகிறது. உறுப்பி

னர்களிடமிருந்து கடனைத் திருப்பிப் பெறுவது எளிதாயிருப்பதால், வராக்கடன் அதிகமாக இருப்பதில்லை. மேலும், இச் சங்கங்கள் உறுப்பினர்களின் நன்மையைக் கருதி வேறு பல நற்பணிகளையும் செய்து வருகின்றன.

இந்த முறையில் வெற்றி வாய்ப்பு இருக்கக்கூடிய இவ் வகைச் சங்கங்கள் எல்லா மாநிலங்களிலும் சீராக அமைக்கப்படாதிருப்பது வருந்தத்தக்கது. அதனோடு, இவையனைத்தும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளோடு தாம் இணைக்கப்பட்டிருக்கின்றன; இவற்றிற்கென்று தனிக் கூட்டமைப்பு ஏதும் கிடையாது. எனவே, இக் குறைகளைப் போக்கும் வழியில் நகரக் கூட்டுறவுக் கடன் ஆய்வுக் குழுவினர் கூறியுள்ள பரிந்துரைகள் இங்குக் குறிப்பிடத்தக்கவை. அவை:

1. 50 பணியாள்களுக்கு மேல் வேலை செய்யும் ஸ்தாபனங்கள், ஆலைகள் ஆகியவை அனைத்திலும் ஊதியம் பெறுவோர் கடன் சங்கங்கள் விரைவில் அமைக்கப்படவேண்டும்.

2. ஊதியம் பெறுவோரிடையே அந்தஸ்துப் பாகுபாடோ ஊதியப் பாகுபாடோ இல்லாமல், ஒரு ஸ்தாபனத்தில் பணிபுரியும் எல்லாப் பணியாள்களும் சங்கத்தில் சேர்க்கப்படவேண்டும்.

3. மூன்றாண்டுகளுக் கொருமுறை நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

4. கட்டாயச் சேமிப்புத் திட்டத்தை இச் சங்கங்கள் அனைத்தும் அமுல் செய்யவேண்டும்.

5. கூட்டுறவு மத்திய வங்கிகள் இச் சங்கங்களுக்கு வேண்டிய நிதி உதவியைச் செய்யவேண்டும்.

23. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள்

நுகர்வோருக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் பெரும் பாலும் வியாபாரிகளே வியாபாரம் செய்து வருகின்றனர். இலாபம் பெற வேண்டுமென்ற ஒரே நோக்கம்தான் அவர்களுக்குண்டு எனவே, இலாபம் பெறுவதற்கென்று பல தவறான வழிகளையெல் லாம் மேற்கொள்கின்றனர். தரக்குறைவான பொருள்களை மலி வாகப்பெற்று விற்பனை செய்கின்றனர்; விற்கும்போது எடையையும் அளவையும் சரியாகப் பயன்படுத்துவதில்லை. விலையும் ஒரு சீராக இருப்பதில்லை. கிராக்கியான பண்டங்களையெல்லாம் பதுக்கி வைத் துக் கொள்ளை விலைக்கு விற்கின்றனர்; அதையும் எல்லோருக்கும் விற்பதில்லை. எனவே, நுகர்வோர்தாம் இதனால் பெரிதும் பாதிக்கப் படுகின்றனர்.

இக் குறைபாடுகளையெல்லாம் பொருள்கட்டுப்பாட்டு (Control) முறையினால் ஓரளவு நிறைவு செய்யலாம்; ஆனால், கட்டுப்பாட்டின் வாயிலாக இப் பிரச்சினைகளையெல்லாம் தீர்த்துவிட முடியாது. இதற்கு ஒரே வழி நுகர்வோரே ஒன்றுசேர்ந்து கூட்டுறவு முறையில் இவ் வியாபாரத்தை நடத்துவதுதான். இவ்வாறு அமைக்கப்பட்டது தான் கூட்டுறவுப் பண்டகசாலைகள். இப் பண்டகசாலைகள் உற்பத்தி நிலையங்களிலிருந்து நுகர்வுப் பொருள்களை மொத்தமாகவும் மலிவா கவும் கொள்முதல் செய்து உறுப்பினர்களுக்கு விநியோகம் செய் கின்றன. இவ் வகைக் கூட்டுறவுப் பண்டகசாலைகளினால் நுகர் வோருக்குப் பல நன்மைகள் விளைகின்றன. அவற்றில் குறிப்பிடத் தக்கவை வருமாறு :

(1) கூட்டுறவுப் பண்டகசாலைகள் உற்பத்தி நிலையங்களி லிருந்தே பொருள்களை மொத்தமாகக் கொள்முதல் செய்வதால் உறுப்பினர்களுக்கும் அவற்றை நியாயமான விலைக்கு விற்பனை செய் கின்றன. சொல்லப் போனால் கூட்டுறவுப் பண்டகசாலைகள் இலாபம் பெறுவதற்காக நடத்தப்படுவதில்லை. எனினும், இப்

பண்டகசாலைகளுக்கு இலாபம் கிடைக்கிறது; அப்படிக் கிடைக்கும் இலாபத்தை எதிர்பாராது விளையக்கூடிய நட்டத்தை ஈடு செய்வதற்காகப் பயன்படுத்துகின்றன. மேலும், ஓரளவுக்குமேல் கிடைக்கும் இலாபத்தை உறுப்பினருக்கே இலாப ஈவாகப் பகிர்ந்தளிக்கின்றன; அல்லது அவர்கள் வாங்கிய பொருள்களின் அடிப்படையில் தள்ளுபடி செய்வதற்காகப் பயன்படுத்துகின்றன.

2. கூட்டுறவுப் பண்டகசாலைகள் பெரும்பாலும் உறுப்பினர்களுக்கு மட்டுமே விற்பனை செய்கின்றன. எனவே, நியாயமான விலையில் தரமான பொருள்களைச் சரியான முறையில் அளவிட்டு அல்லது எடைபோட்டு விற்பனை செய்கின்றன. உறுப்பினர்களை ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணம் துளியும் கிடையாது. மேலும், ஒரு சில ஆண்டுகள் கழித்து உறுப்பினர்களுக்கு வேண்டிய பொருள்களைக் கூடுமானவரை தாமே உற்பத்தி செய்யவேண்டும் என்று உற்பத்தி செய்யும் பணியையும் மேற்கொள்கின்றன. அப்போது தரமான பொருள்களைக் குறைந்த செலவில் உற்பத்தி செய்து உறுப்பினர்களுக்கு மலிவாக விற்பனை செய்யமுடிகிறது.

3. கூட்டுறவுப் பண்டகசாலையின் முழுப் பொறுப்பும் அதிகாரமும் உறுப்பினர்களடங்கிய பொதுக் குழுவிடம் தாம் உள்ளன. எனவே, என்னென்ன பொருள்களுக்கு எந்தெந்த விலையை நிர்ணயிப்பது, அவற்றை விற்பனை செய்வதெப்படி என்ற பிரச்சினைகளையெல்லாம் அவர்களே ஒன்றுகூடித் தீர்த்துக்கொள்ளலாம்.

4. கூட்டுறவுப் பண்டகசாலைகள் மருத்துவப் பணி, கல்விப் பணி போன்ற சமூக சேவைகளைச் செய்வதற்கும் உதவலாம்; அதனோடு, சமுதாயம் ஒன்றுபட்டு வாழவும் குடியாட்சியின் அடிப்படையில் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் பயன்படுகின்றன.

நுகர்வோர் சங்கத் தோற்றம்

1844-ல் இங்கிலாந்தில் தொடங்கப்பட்ட நுகர்வோர் சங்கத்தின் வாயிலாகத்தான் கூட்டுறவு இயக்க வரலாறே உலகில் தொடங்கியது. அன்றையிலிருந்து மேற்கத்திய நாடுகளிலெல்லாம் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் வியக்கத்தக்க வகையில் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. அந் நாடுகளின் பொருளாதார நிலையில் இச் சங்கங்கள் முக்கிய இடம் கொண்டுள்ளன. ஆனால், இந்தியாவிலோ நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் பல மேடு பள்ளங்களைத் தாண்டி மெதுவாக முன்னேறவேண்டியிருந்தது. நமது நாட்டில்

சென்னை நகரில்தான் முதன்முதலில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டது. 1904-ல் கூட்டுறவுச் சங்கச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்குச் சற்று முன்னர் இச் சங்கம் தொடங்கப் பட்டது. திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் (Triplicane Urban Co-operative Society) என்ற பெயரில் அன்று தொடங்கிய இச் சங்கம் இன்றும் சென்னை மக்களுக்குச் சிறப்பாகப் பணிபுரிந்து வருகிறது. இச்சங்கத்தைப் போன்ற ஒரு சில சங்கங்கள்தாம் நல்ல முறையில் நடைபெற்று வந்தன. கூட்டுறவுப் பண்டக சாலைகளில் வெகு நாட்களாகவே மக்களுக்குப் பற்றில்லாமல் இருந்து வந்தது. இரண்டாவது உலகப் போரின் போதுதான் மக்கள் விழிப்புணர்ச்சி பெற்றுப் பல கூட்டுறவுப் பண்டகசாலைகளைத் தொடங்கினர். போரின்போது அன்றாடத் தேவைப் பொருள்களின் விலைவாசிகள் கூட விஷம்போல் ஏறிவிட்டன. விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவும் அன்றாடத் தேவைப் பொருள்களை அனைவருக்கும் பகிர்ந்தளிக்கவும் விரும்பிய அரசாங்கம் கட்டுப்பாட்டு முறையைப் புகுத்தி, இப் பொருள்களை விநியோகிக்கும் பணியைக் கூட்டுறவுப் பண்டகசாலை களிடம் ஒப்படைத்தது. அன்றையிலிருந்துதான் நமது நாட்டில் கூட்டுறவுப் பண்டகசாலைகள் துரிதமாக வளரத் தொடங்கின. இவ் வளர்ச்சியைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து எளிதாகப் புரிந்துகொள்ளலாம்.

விவரம்	1938-39	1949-50	1951-52	1955-56
1. தொடக்கச் சங்கங்களின் எண்ணிக்கை	396	8,949	9,757	7,359
2. உறுப்பினர் எண்ணிக்கை (இலட்சத்தில்)	0·43	21·55	18·46	14·14
3. சொந்த நிதி (இலட்ச ரூபாயில்)	2·47	449·46	552·70	490·00
4. விற்பனை (இலட்ச ரூபாயில்)	57·15	7045·41	8215·69	1448.00
5. இலாபம் (,,)	—	101·00	80·87	29·00
6. நட்டம் (,,)	—	20·70	37·64	40·00

இப் புள்ளி விவரங்களிலிருந்து ஓர் உண்மை வெளியாகிறது. அதாவது, அரசாங்கம் கட்டுப்பாட்டு முறையைக் கொண்டு வந்து அதைக் கடைப்பிடித்த காலம்வரை கூட்டுறவுப் பண்டகசாலைகள் வளர்ச்சிபெற்று நல்ல முறையில் இயங்கி வந்தன; கட்டுப்பாட்டை நீக்கிய பின்னர், இவற்றின் வளர்ச்சி குன்றி விற்பனையும் குறைந்து விட்டது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்ததேயொழிய, எந்த அளவுக்கு அவை வளரவேண்டுமென்றோ, எவ்வளவு நிதி உதவி அவற்றிற்குச் செய்யப்படுமென்றோ இலக்குகள் ஏதும் நிர்ணயிக்கப் படவில்லை. மூன்றாவது திட்டத்தில்தான் 400 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும் 100 கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்களுக்கும் உதவி செய்வதற்கென்று 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1960 நவம்பரில் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளை அமைப்பது பற்றியும் அவற்றை ஊக்குவிப்பது பற்றியும் ஆராய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டது. இதற் கிடையில் 1962 அக்டோபரில் சீனு நம் நாட்டைத் தாக்கியதால் நாடெங்கிலும் அவசரச் சட்டம் அமுலாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து விலைவாசிகளெல்லாம் ஏற முற்பட்டன. எனவே, விலைவாசி உயர்வை மட்டப்படுத்துவதற்கென்று நுகர்வோரே கூட்டுறவுப் பண்டகசாலைகளை ஏற்படுத்துவதில் மிகுந்த அக்கறை காட்டினர். இவ்வாறு வளரத் தொடங்கிய கூட்டுறவுப் பண்டக சாலைகளை ஊக்குவிப்பதற்கென்று மத்திய அரசாங்கம் பல திட்டங் களைக் கொண்டு வந்தது. அத்திட்டங்களின்படி (1) பெரிய நகரங் களில் வாழும் பொது மக்களுக்கென்றும் (2) தனியார் துறையிலும் பொதுத் துறையிலும் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கென்றும், (3) அரசாங்கப் பணியாளர்களுக்கென்றும், (4) கிராமப்புற மக்களுக் கென்றும் வெவ்வேறு கூட்டுறவுப் பண்டகசாலைகள் தொடங்கப் பட்டு ஊக்குவிக்கப்படலாயின.

1. நகரங்களில் வாழும் பொது மக்களுக்கான திட்டம்

இத் திட்டப்படி 50,000 பேருக்கு மேலுள்ள 200 நகரங்களில் மொத்த விற்பனைச் சங்கங்களைத் தொடங்க அரசாங்கமே நடவடிக்கை எடுத்தது. இந்த மொத்த விற்பனைச் சங்கங்கள் மட்டு மன்றி, ஒவ்வொரு நகரிலும் சராசரி 20 கூட்டுறவுச் சில்லறை விற்பனைக் கடைகளும் தொடங்கத் திட்டமிட்டது. இச் சில்லறை விற்பனைக் கடைகள் மொத்த விற்பனைச் சங்கங்களுடன் இணைக்கப் படவேண்டும்; இல்லையேல் மொத்த விற்பனைச் சங்கங்களே தத்தம் நகரில் 10 முதல் 20 கிளை விற்பனை நிலையங்களைத் தொடங்கலா மென்றும் இத் திட்டம் கூறியது. ஒவ்வொரு சில்லறை விற்பனைச் சங்கத்திலும் குறைந்த பட்சம் 100 பேராகிலும் உறுப்பினர்களாக இருக்கவேண்டும். நாளடைவில் உறுப்பினரின் எண்ணிக்கை 500 ஆக உயரவேண்டும். ஏற்கெனவே நடைபெற்றுவந்த சில்லறை விற்பனைச் சங்கங்களும் கூடுமானவரை இத் திட்டத்தின் கீழ்க்

கொண்டு வரப்பட்டன. இவ்வாறு தொடங்கப்படும் மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கும் சில்லறை விற்பனைப் பண்டகசாலைகளுக்கும் இத்திட்டத்தின்படி அரசாங்க நிதி உதவி வழங்கப்படலாயிற்று. இந்த நிதி உதவியின் விவரத்தைக் கீழே காணலாம்.

I. மொத்த விற்பனைச் சங்கங்கள்

	உயர்ந்த பட்சம்
1. அரசாங்கத்தின் பங்கு மூலதனம்	உறுப்பினர்களின் பங்கு மூலதன அளவிற்கும் ரூ 1 இலட்சத்திற்கு மேற்படாமலும்.
2. நேரடிக் கடன்	மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் வாயிலாக ரூ. 2 இலட்சம் வரை
3. பண்டகங்களை அமைக்கவும், வாகனங்களை வாங்கவும், இன்னும் பிற சாதனங்களைப் பெறவும்வழங்கப்படும் கடனும் மானியமும்	ரூ. 1 இலட்சம் வரை (இதில் 25 சதவீதம் மானியமாகவும் 75 சதவீதம் கடனாகவும் வழங்கப்படுகிறது.)
4. நிர்வாகச் செலவுக்கென்றும் வாடகைச் செலவுக்கென்றும் வழங்கப்படும் மானியத் தொகை	3 முதல் 5 ஆண்டுகள் வரை தவணை தவணையாக ரூ. 10,000 வரை.

II. சில்லறை விற்பனைச் சங்கங்கள்

1. பங்கு மூலதனம்	உறுப்பினரின் பங்கு அளவுக்கு; அதிகப் பட்சம் ரூ 2,500 வரை
2. நிர்வாகச் செலவுக்கும் வாடகைக்கும் வழங்கப்படும் மானியத் தொகை	3 முதல் 5 ஆண்டுகள் வரை தவணை தவணையாக ரூ. 2,000 வரை.

இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கென்று மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு நிதி வழங்கியது. மாநில அரசாங்கங்கள் மேற்குறிப்பிட்ட வீதத்தில் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு அந் நிதியை வழங்கி வருகின்றன. மேலும்,

கூட்டுறவுப் பண்டக சாலைகளுக்கென்று தனியாக ஒரு இணைப்பதிவாளரையும் அவருக்குக் கீழ்ப் பலபணியாளர்களையும் மாநில அரசாங்கங்கள் நியமித்துள்ளன. இதற்கான செலவையும் மத்திய அரசாங்கமே ஏற்றுக் கொண்டுள்ளது. இவர்கள் அனைவரும் கூட்டுறவுப் பண்டகசாலைகளைக் கண்காணித்து வருகின்றனர். 1966-67ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு மாநில அரசும் மேலும் 2 துணைப்பதிவாளர்களையும், நான்கு மொத்த விற்பனைச் சங்கங்களுக்கென்று 1 உதவிப் பதிவாளர், 2 தணிக்கையாளர்கள் வீதம் மேலும் பல பணியாளர்களையும் அமர்த்தியுள்ளன. இதற்காகும் செலவையும் மத்திய அரசாங்கமே ஏற்றுள்ளது.

இத் திட்டத்தின் விளைவாக நுகர்வோர் கூட்டுறவுப் பண்டக சாலைகள் அதிகரிக்கலாயின. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் மொத்தப் பண்டக சாலைகளும், அவற்றின் கிளைகள், சில்லறைப் பண்டகசாலைகள் ஆகியவையும் முறையே 246 ஆகவும் 7,649 ஆகவும் உயர்ந்தன. இவையனைத்திலும் சேர்ந்திருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 இலட்சமாக அதிகரித்தது. மொத்த விற்பனைச் சங்கங்களின் பங்கு மூலதனம் ரூ. 4 கோடியாகவும், நடப்பு மூலதனம் ரூ. 16·42 கோடியாகவும் பெருகியது. 1965-66-ல் மொத்த விற்பனைச் சங்கங்களின் விற்பனை ரூ. 114 கோடியாகவும் சில்லறை விற்பனைச் சங்கங்களின் விற்பனை ரூ. 130 கோடியாகவும் அதிகரித்தது.

துரித வளர்ச்சித் திட்டம்: 1966 ஜூன் மாதத்தில் நமது ரூபாயின் மதிப்பைக் குறைத்ததன் விளைவாக விலைவாசிகள் மேலும் ஏறத் தொடங்கின. எனவே, மத்திய அரசாங்கம் நாடெங்கிலும் தொடர்ச்சியாகக் கூட்டுறவுப் பண்டகசாலைகளை ஏற்படுத்தி அவற்றைத் துரிதமாக முன்னேற்றத் திட்டமிட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது 168 மாவட்டங்களில் தாம் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இப்போது, துரித முன்னேற்றத் திட்டப்படி மேலும் 100 மாவட்டங்களில் மொத்த விற்பனைச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. அதனோடு, அந்த 100 புதிய மொத்த விற்பனைச் சங்கங்களுடன் 2,000 சில்லறை விற்பனைச் சங்கங்கள் இணைக்கப்பட்டன. மேலும், 2 இலட்சம் மக்களுக்கும் அதிகமாயுள்ள நகரங்களில் மொத்தம் 43 கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகளை (Department Stores) மொத்த விற்பனைச் சங்கங்களே தொடங்கின.

இவற்றிற்கெல்லாம் கீழ்க்காணும் விதத்தில் அரசாங்கம் உதவி செய்து வருகிறது.

I. மொத்த விற்பனைச் சங்கம்

	(இலட்ச ரூபாயில்)
1. உறுப்பினர்களின் பங்கு மூலதனத்திற்குச் சமமாக அரசாங்கப் பங்கு மூலதனம் 1 இலட்சம் ரூபாய் வரை அரசாங்கம் செலுத்திய மூலதனம் ரூ. 25,000	1.00
2. வாகனங்களுக்கும் பண்டகங்களுக்கும் (75 சதவீதம் கடனாகவும் 25 சதவீதம் மானியமாகவும்)	1.00
3. 3 முதல் 5 ஆண்டுகள் வரை நிர்வாகத்திற்கென்று மானியத் தொகை	0.25

II. சில்லறை விற்பனைச் சங்கம்

1. உறுப்பினர்களின்பங்கு மூலத்தனத்திற்கு இணையாக அரசாங்கப் பங்கு மூலதனம்	ரூ. 4,000
2. நிர்வாக மானியத் தொகை (3 முதல் 5 ஆண்டுகள் வரை)	ரூ 2,000

III. சிறப்பு அங்காடி

(அ) மிகப் பெரிய நகரங்களில் :

	(இலட்ச ரூபாயில்)
1. பங்கு மூலதனம்	10.00
2. அங்காடி அமைப்பதற்கு வேண்டிய சாதனங்களுக்கு (75 சதவீதம் கடன், 25 சதவீத மானியம்)	7.00
3. நிர்வாக மானியத் தொகை	0.25
(ஆ) 5 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் வரை மக்கள் தொகையுள்ள நகரங்களில் :	
1. பங்கு மூலதனம்	5.00
2. சாதன வகைகளுக்கும் கடை அமைக்கவும்	3.00
3. நிர்வாக மானியத் தொகை	0.25
(இ) 2 இலட்சம் முதல் 5 இலட்சம் மக்கள் தொகையுள்ள நகரங்களில்:	
1. பங்கு மூலதனம்	3.00
2. சாதன வகைகளுக்கும் கடை அமைக்கவும்	2.00
3. நிர்வாக மானியத் தொகை	0.25

உறுப்பினர்கள் எவ்வளவு பங்கு மூலதனம் செலுத்தியுள்ளனர். என்பதைப்பற்றி அக்கறைப்படாமலே அரசாங்கம் தனக்குரிய பங்கு மூலதனத்தை இப் பண்டகசாலைகளுக்குச் செலுத்திவிட்டது அவ்வாறு செலுத்தும்போது ஒவ்வொரு பண்டகசாலையும் ஐந்தாண்டுக் காலத்திற்குள் அரசாங்கம் செலுத்தும் தொகையில் 50 சதவீதமாகிலும் உறுப்பினர்களிடமிருந்து பங்குத் தொகை பெற்று அதை அரசாங்கத்திற்குச் செலுத்திவிடவேண்டுமென்று நிபந்தனை விதித்துள்ளது.

இவ்வாறு, மத்திய அரசாங்கத் திட்டத்தின் கீழ் உருவாகியுள்ள கூட்டுறவுப் பண்டகசாலைகள் துரிதமாக வளர்ச்சிபெற்றுள்ளன. 1971 வரை இத் திட்டத்தின் கீழ் 395 மொத்த விற்பனைச் சங்கங்களும் 13,156 சில்லறை விற்பனைச் சங்கங்களும் இயங்கலாயின. மொத்த விற்பனைச் சங்கங்களின் பங்கு மூலதனம் 1965-66-ல் ரூ. 4 கோடியிலிருந்து 1971-ல் ரூ. 11·64 கோடியாகப் பெருகியுள்ளது. உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 44 இலட்சத்திற்கு அதிகரித்துள்ளது. நகர மக்களில் 15 சதவீதம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். சிறப்பு அங்காடிகளின் எண்ணிக்கையும் உயர்ந்து 1970-ல் 101 ஆக ஆகிவிட்டது. அவற்றின் விற்பனையும் 30 கோடி ரூபாயைத் தாண்டிவிட்டது. சில்லறை விற்பனைச் சங்கங்களின் விற்பனையும் ஆண்டுதோறும் பெருகி வந்துள்ளது என்பதைப் பின்வரும் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

ஆண்டு	சில்லறை விற்பனை
1962-63	ரூ. 40 கோடி
1964-65	ரூ. 140 ,,
1965-66	ரூ. 200 ,,
1966-67	ரூ. 245 ,,
1968-69	ரூ. 280 ,,
1970-71	ரூ. 207 ,,

கூட்டிணைப்புகள்: ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள மொத்த விற்பனைச் சங்கங்கள் மாநில அளவில் கூட்டிணைப்புச் சங்கத்தை உருவாக்கியுள்ளன. இதுவரை 14 மாநிலங்களில் இக்கூட்டிணைப்புச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாநில மட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த இந்த 14 கூட்டிணைப்புச் சங்கங்களும் தேசிய அளவில் தேசிய நுகர்வோர் கூட்டுறவுக் கூட்டிணைப்பை (National Co-operative Comsumer Federation) உருவாக்கியுள்ளன.

இதன் தலைமை அலுவலகம் புது டில்லியில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் பங்கு மூலதனம் 1971-ல் ரூ. 5·7 இலட்சமாக இருந்தது; அரசாங்கமும் இதன் பங்கு மூலதனத்திற்குத் தன் பங்காக ரூ. 15 இலட்சம் செலுத்தியுள்ளது. மொத்தக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு வேண்டிய துணிமணிகளை இது ஆலைகளிலிருந்து நேரடியாகவே பெற்று விநியோகம் செய்கிறது. இதற்கென்று சென்னையிலும் கல்கத்தாவிலும் கிளைச் செயலகத்தை அமைத்துள்ளது. 1971-72-ல் இதன் மொத்த விற்பனை ரூ. 6·05 கோடியாக அதிகரித்துள்ளது. உலர்ந்த பழங்கள், ஓவியந்தீட்டப் பயன்படும் வண்ணங்கள் போன்ற நுகர்வுப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து விநியோகிக்கின்றது. மேலும், பிறநாடுகளிலிருந்து கடத்தப்படும் பொருள்கள் பிடிபட்டால் அப் பொருள்கள் நுகர்வோர் சங்கங்களுக்கு இதன் வாயிலாகவே விநியோகிக்கப் படுகின்றன. நுகர்வோர் சங்கங்களை ஊக்குவிப்பதற்கென்று பல பணிகளை மேற்கொண்டுள்ளது; அதற்கென்று சிறு சிறு நூல்களையும் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிடுகிறது; நுகர்வோர் சங்கங்களுக்கு ஆலோசனையும் வழங்கி வருகிறது.

2. ஆலைத் தொழிலாளர்களுக்கான திட்டம்

இந்தியத் தொழிலாளர் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தையொட்டி டில்லியிலுள்ள தொழில், வேலை இலாகா 1962-ல் இத் திட்டத்தைத் தொடங்கியது. இத் திட்டத்தின்படி பொதுத் துறையிலும் தனியார் துறையிலுமுள்ள நிறுவனங்களில் 300 பேருக்கு மேல் தொழிலாளர்கள் இருந்தால் அத் தொழிலாளர்களுக்கென்று கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைக்கப்படுகின்றன. ஆலை அதிபர்களும் இச் சங்கங்களுக்கு நிதி உதவி செய்து வருகின்றனர்.

1969-ல் இவ் வகைச்சங்கங்கள் மொத்தம் 2,760 இருந்ததாகவும், 300 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்யும் நிறுவனங்களில் 68 சதவீத நிறுவனங்களில் தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் இயங்கி வந்ததாகவும் அறிய வருகிறோம். இப் பண்டகசாலைகள் உறுப்பினரல்லாத பொது மக்களுக்கும் விற்பனை செய்து வருகின்றன; எனவே, இவற்றால் 11 இலட்சம் பேர் பயனடைந்து வந்திருக்கின்றனர். இச் சங்கங்களுக்குச் செலுத்தப்பட்டுள்ள மூலதனம் 1968-69ன் கணக்குப்படி ரூ. 1.30 கோடியாகும். அவ்வாண்டில் இவற்றின் விற்பனை ரூ. 47 கோடியென அறிய வருகிறோம். நிலக்கரி, மைக்கா சுரங்கத் தொழிலாளர்கள் 13 மத்தியக் கூட்டுறவுப் பண்டகசாலைகளை உருவாக்கியுள்ளனர். இச் சங்கங்களுக்கு நிலக்கரிச் சுரங்க நல நிதியிலிருந்தும் பண உதவி கிடைத்துள்ளது. சுரங்க முதலாளிகளும் இச் சங்கங்களுக்குப் பல உதவி

களைச் செய்து வருகின்றனர். இவற்றின் கணக்கு வழக்குகளைக் கவனிக்கவும் எழுத்து வேலை செய்யவும் சொந்தமாகவே ஆள்களை அமர்த்தியுள்ளனர். அதனோடு, இவற்றை நிர்வகிப்பதற்குத் திறமையும் அனுபவமும் வாய்ந்த தம் ஆள்களையே இலவசமாக அமர்த்தியுள்ளனர். இச் சங்கங்கள் தொழிலாளர் உறுப்பினர் களுக்கு அவர்களின் பற்றுக்கணக்கில் பொருள்களை விற்பனை செய்கின்றன. உறுப்பினர்களின் ஊதியத்திலிருந்து இது கழிக்கப்படுகிறது. இக் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் உறுப்பினர்களாவதற்கு அரசாங்கம் அவரவர்களின் சிக்கனத் திட்டநிதியிலிருந்து (Provident Fund) கடன் வழங்க அனுமதித்துள்ளது. மாநில அரசாங்கங்களும் கூட்டுறவுப் பண்டகசாலைகளை நியாயவிலைக் கடைகள் போல் பாவித்து நடத்துகின்றன.

3. அரசாங்கப் பணியாளர்களுக்கான திட்டம்

மத்திய அரசாங்க உள்நாட்டு விவகாரத் துறையினர் இத் திட்டத்தின் கீழ் டில்லியில் அரசாங்கப் பணியாளர்களுக்கென்று மொத்த விற்பனைச் சங்கமொன்றைத் தொடங்கியுள்ளது. இம் மொத்த விற்பனைப் பண்டகசாலை டில்லியில் அரசாங்கப் பணியாளர்கள் வாழும் முக்கியமான குடியிருப்புகளில் 31 கிளை விற்பனைச் சங்கங்களைத் தொடங்கியுள்ளது. 1967-ல் இதன் பங்கு மூலதனம் ரூ. 9.3 இலட்சமாக அதிகரித்துள்ளது. இதில் மொத்தம் 4,200 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். 1966-67-ல் மட்டும் இதன் விற்பனை ரூ. 1·22 கோடியாகும்.

4. கிராம மக்களுக்கான திட்டம்

நுகர்வோர் கூட்டுறவு ஆய்வுக் குழு கிராமங்களிலும் கூட்டுறவுப் பண்டகசாலைகளை ஏற்படுத்தவேண்டுமென்று சிபாரிசு செய்தது. ஆனால், கிராமங்களில் தனியாகக் கூட்டுறவுப் பண்டகசாலைகளை ஏற்படுத்துவது கடினம். அதற்கென்று தனியாகப் பணியாளர்களை அமர்த்தி, இடம் பார்த்து, அதற்குவேண்டிய பண்டகங்களைக் கட்டுவது வீண் செலவாகும். மேலும், நுகர்வோருக்கான பணிகளையும் சேர்த்து, கிராமங்களிலுள்ள சேவைச் சங்கங்களே செய்து வருகின்றன. 1962-ல் சுமார் 15,000 கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்களே அன்றாடத் தேவைப் பொருள்களையும் விநியோகித்து வந்தன. 1968-69-ல் இவற்றின் எண்ணிக்கை 40,000 ஆக உயர்ந்துவிட்டது. இச் சங்கங்கள் தமக்கு வேண்டிய நுகர்வுப் பொருள்களை அருகிலுள்ள விற்பனைச் சங்கங்களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றன. விற்பனைச் சங்கங்கள் தாம் இச் சங்கங்களுக்கு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளாகும். இந்த விற்பனைச் சங்கங்

களில் பலவற்றிற்குக் கூடுதலான பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். இதற்காக மத்திய அரசாங்கம் ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ. 10,000 வீதம் 3 ஆண்டுகளுக்கு உதவித் தொகை அளிக்கிறது. 1962-63-ல் இச் சங்கங்கள் ரூ. 28 கோடிக்கு நுகர்வுப் பண்டங்களை விற்றன; இந்த விற்பனை 1964-65-ல் ரூ. 104 கோடியாகவும், 1968-69-ல் ரூ. 234 கோடியாகவும் பெருகியுள்ளது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டமும் கூட்டுறவுப் பண்டகசாலைகளும்

1969 மார்ச் மாதத்திற்குள் 50,000 மக்கள் தொகைக்கு மேலுள்ள நகரங்கள் அனைத்திலும் கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைக்கப்பட்டு விட்டன. எனவே, புதிய பண்டகசாலைகளை அமைப்பதற்கு அவசியமில்லாமல் போய்விட்டது. இதனால் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இப் பண்டகசாலைகளை வலிமைப்படுத்தவும் சீர்படுத்தவும் தான் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. மிகச் சிறிய பண்டகசாலைகளெல்லாம் நல்ல முறையில் இயங்க முடியாமல் நட்டத்தில் நடைபெறுகின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் சீர்படுத்த வேண்டியுள்ளது. நான்காம் திட்டத்தில் அதற்கான வழிகளும் மேற்கொள்ளப்படும். அவற்றில் முக்கியமானவை வருமாறு: (1) மொத்த விற்பனைப் பண்டகசாலைகளை இன்னும் பெரிய அளவில் மாற்றி அமைத்துப் பல்வேறு பொருள்களை விற்பனை செய்யக் கூடியவைகளாக அவை மாற்றியமைக்கப்படும்; (2) மாநில அடிப்படையிலும் தேசிய அடிப்படையிலும் அமைக்கப்பட்டுள்ள நுகர்வோர் கூட்டுறவுக் கூட்டமைப்புக்கள் மேலும் வலுமையுறச் செய்யப்படும்; (3) சில்லறை விற்பனைச் சங்கங்களில் இலாபம் பெறக் கூடியவை நட்டத்தில் நடைபெற்று வந்தால், அவற்றிற்கு அரசாங்கம் உதவி செய்து கூடிய விரைவில் அவற்றை இலாபம் பெறச் செய்யும்; (4) கட்டுப்பாடில்லாத நுகர்வுப் பண்டங்களின் விற்பனை மேலும் அதிகரிக்கப்படும்; (5) நல்ல தொழில் முறையில் இச் சங்கங்களை இயங்கச்செய்து, கூடுமான வரை அவற்றின் திறமையை உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதாவது, கூட்டுறவுப் பண்டகசாலைகளை நல்ல முறையில் கட்டிச் சரக்குகள் வாங்கப் படுவதையும் விற்கப் படுவதையும் கண்காணித்து, வருடத்திற்கொரு முறையாகிலும் கொள்முதல் செய்த சரக்குகள் எவ்வளவு, விற்பனை எவ்வளவு, இருப்பு எவ்வளவு என்பதைக் கணக்கிட்டு இப் பண்டகசாலைகளின் தரத்தை உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறாக, நான்காம் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள நுகர்வோர் கூட்டுறவுத் திட்டம் பின் வருமாறு:

(1) நலிவுற்றுள்ள 3,000 தொடக்கப் பண்டகசாலைகள் வலிமையடைந்து உருப்படியாகச் செயல்படுத்தப்படும். ஒரு பண்டகசாலை உருப்படியாகச் செயல்பட வேண்டுமாயின், அதற்குக் குறைந்தது 1,000 உறுப்பினர்களும் ரூ. 10,000 பங்கு மூலதனமும் தேவை. அதனோடு, 400 சதுர மைல் பரப்பளவுக்கு அது சேவை செய்து ஆண்டொன்றுக்கு 3 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்ய வேண்டும். எனவே, மேற்கூறிய 3,000 பண்டகசாலைகளும் இந்த அளவுக்கு விரிவாக்கப்படும். அப் பண்டகசாலை ஒவ்வொன்றுக்கும் ரூ. 15,000 வீதம் அரசாங்கம் உதவி செய்யும்.

(2) புதிதாக 25 கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகள் அமைக்கப்படும். ஒவ்வோர் அங்காடியும் குறைந்தது 5,000 சதுர அடி பரப்பளவு கொண்டதாயிருக்கும். இச் சிறப்பு அங்காடிகளில் நுகர்வோருக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் விற்பனை செய்யப்படும். எனவே, இவற்றின் விற்பனை பெருமளவில் இருக்கும்.

(3) மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் ஒவ்வொன்றும் 12,000 சில்லறைப் பண்டகசாலைகளை ஏற்படுத்த உதவி செய்யப்படும். இச் சில்லறைப் பண்டகசாலை ஒவ்வொன்றும் நல்ல வியாபாரம் நடைபெறக் கூடிய இடத்தில் பெரிய சாலைகளாக அமைக்கப்படும். ஒவ்வொரு பண்டகசாலையும் நாளொன்றுக்கு ரூ. 2,000 அளவுக்கு விற்பனை செய்யக்கூடும். எனவே, இப் பண்டகசாலைகள் பெரியனவாயிருக்கும் பொருட்டு அரசாங்கம் ஒவ்வொரு சதுர அடிப் பரப்பளவுக்கும் ரூ. 30 வீதம் உதவி செய்யும்.

(4) மாநிலக் கூட்டமைப்புச் சங்கங்கள் சைக்கிளுக்கு வேண்டிய சக்கர ரப்பர் குழாய், பறிமுதல் செய்யப்பட்ட கடத்தல் பொருள்கள் போன்ற தட்டுப்பாடுள்ள பொருள்களை விநியோகிக்க அவற்றிற்கு வேண்டிய உதவிகள் செய்யப்படும். மேலும், வாகனங்கள் வாங்கவும் பண்டக் கிடங்குகள் அமைக்கவும் இவற்றிற்குக் கொடுக்கப்படும் கடனும் அரசாங்கப் பங்கு மூலதனமும் அதிகரிக்கப்படும்.

(5) தேசியக் கூட்டமைப்பு நிறுவனம் ஒரு சில நுகர்வுப் பொருள்களைத் தானே உற்பத்தி செய்வதற்கென்று தொழிற்சாலைகளை அமைக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது.

இத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்கென்று நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 18 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நடைமுறைத் தத்துவங்கள்

அமைப்பு முறை: நமது நாட்டில் இரண்டு வகையான முறையில் கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு மொத்தப் பண்டகசாலைகளே பல்வேறு இடங்களில் சில்லறை விற்பனைப் பண்டகசாலைகளை ஏற்படுத்துவது ஒரு முறை. இச் சில்லறை விற்பனைச் சங்கங்கள் மொத்த விற்பனைச் சங்கத்தால் நடத்தப்படுகின்றன. இம் முறை பஞ்சாப், ஆந்தரா, அரியான ஆகிய மாநிலங்களில் கடைப் பிடிக்கப்படுகிறது. ஏனைய மாநிலங்களிலெல்லாம் வேறு முறையில் இப் பண்டகசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதாவது, தொடக்க நிலைப் பண்டகசாலைகள் ஆங்காங்கு அமைக்கப்பட்டுச் சுதந்திரமாக இயங்கி வருகின்றன. இப் பண்டகசாலைகள் ஒன்றுசேர்ந்து மேல் மட்டத்தில் கூட்டமைப்புச் சங்கங்களை உருவாக்கியுள்ளன. ஒருசில மாநிலங்களில் இவ்விரு வகையிலுமே கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விரு முறைகளில் இரண்டாவது முறையில் அமைக்கப்பட்டுள்ள பண்டகசாலைகள் பெரும்பாலும் சிறியவை; எனவே, அவற்றின் விற்பனையும் குறைவு. மேலும், தகுதியும் திறமையும் வாய்ந்த பணியாளர்களை அமர்த்தி ஊதியம் கொடுக்க முடியாத நிலையில் அவை உள்ளன. முதல் முறையில் அமைக்கப்பட்டுள்ள பண்டகசாலைகள்தாம் இலாபகரமாக இயங்கி வருகின்றன. எனவே, இரண்டாம் வகையில் அமைக்கப்பட்டுள்ள பண்டகசாலைகளையும் முதல் வகையில் அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

பண்டகசாலைகளின் அளவு: கூட்டுறவுப் பண்டகசாலைகள் சிறியனவாக இருந்தால் அவை நல்ல முறையில் இயங்கி இலாபம் பெற முடிவதில்லை என்பதை அனுபவத்தின் வாயிலாக அறிய வருகிறோம், மாறாக, பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ள பண்டகசாலைகளோ பல்வகையான நுகர்வுப் பொருள்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்யமுடியும். இதனால் நுகர்வோருக்கும் பயன் விளைகிறது; பண்டகசாலைகளுக்கும் இலாபம் கிடைக்கிறது. எனவே, நல்ல ஊதியம் தந்து திறமையான பணியாளர்களை அமர்த்தவும் முடிகிறது. மேலும், பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ள பண்டகசாலைகளின் மொத்தச் செலவும் குறைகிறது. எனவே, கூட்டுறவுப் பண்டகசாலைகள் கூடுமானவரை பெரிய அளவில் இருக்கவேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையாக அமைந்து விட்டது.

உறுப்பினர்களின் ஆதரவு: கூட்டுறவுப் பண்டகசாலை வெற்றிகரமாக நடைபெறுவதற்கு உறுப்பினர்களின் ஆதரவுதான்

மிக முக்கியமானது. கூட்டுறவுக் கல்வியைப் பரப்புவதன் வாயிலாக மட்டும் மக்களின் ஆதரவைப் பெற முடியாது. இப் பண்டகசாலைகளால் தமக்கும் நன்மையுண்டு என்பதை அவர்கள் உணரவேண்டும். எனவே, அவர்களுக்கும் இதனுல் இலாபம் இருக்கும்படி செய்ய வேண்டும். இதை எவ்வாறு செய்வது என்பதற்குப் பல வழிகள் உள்ளன. அவற்றில் குறிப்பிடத் தக்கவை வருமாறு.

(1) கூட்டுறவுப் பண்டகசாலைகளிலிருந்து உறுப்பினர்கள் பொருள்களை வாங்கும்போது விலையில் ஓரளவாகிலும் தள்ளுபடி செய்யவேண்டும். இங்கிலாந்தில் உறுப்பினரல்லாதோருக்கும் தள்ளுபடி செய்யப்படுகிறது. உறுப்பினருக்குக் கொடுக்கப்படும் தள்ளுபடிச் சலுகையில் பாதி அளவு மற்றவர்களுக்கும் தரப்படு கிறது. இதனுல், இப் பண்டகசாலைகளில் உறுப்பினர்களாவதற்கு ஒரு தூண்டுகோல் ஏற்படுகிறது. மேலும், அவ்வாறு தள்ளுபடி கொடுக்கும்போது உறுப்பினர்கள் வாங்கும் அளவுக்கேற்ப, பண்டக சாலையின் இலாபம் அவர்களுக்கே திரும்பிச் செல்ல ஏதுவாயிருக் கிறது.

(2) கூட்டுறவுப் பண்டகசாலைகள் விற்கும் பொருள்கள் தரமானவையாயிருக்க வேண்டும். கூடுமானவரை பழைய பொருள்களை விற்கக் கூடாது. விவசாயப் பண்டகசாலைகள் விற்கும் விவசாயக் கருவிகளும் நல்ல தரமானவையாய் இருக்க வேண்டும். மேலும், வாடிக்கையாளர்களின் தேவைக்கும் விருப் பத்திற்கு மேற்ப பொருள்கள் விற்கப்படவேண்டும். வாடிக் கையாளர்கள் மனநிறைவைப் பெறும்படி கூட்டுறவுப் பண்டக சாலைகள் நடந்து கொள்ளவேண்டும்.

(3) இப் பண்டகசாலைகள் பயன்படுத்தும் தராசு, எடைக் கற்கள் முதலியவற்றைப் பொதுக் குழுவில் காட்டி உறுப்பினர்கள் அவற்றை ஏற்றுக் கொள்ளும்படி செய்யவேண்டும்.

சில்லறை விற்பனைத் திறன்: நகரங்களில் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தைப் பெருக்குவதற்கு எத்தனையோ நல்ல உபாயங்களைக் கடைப்பிடிக்கின்றனர். கூட்டுறவுப் பண்டகசாலைகளும் இவ்வுபாயங்களையெல்லாம் மேற்கொள்ளவேண்டும். பண்டகசாலையை நல்ல, காற்றேட்ட வசதியுள்ள வியாபாரத்திற்கும் ஏற்ற இடமாக பார்த்து அமைக்க வேண்டும். வாடிக்கையாளர்களை நல்ல முறையில் உபசரித்து அவர்களுக்கு வேண்டிய பொருள்களை நுட்பமாகக் கேட்டறிந்து

விற்பனை செய்ய வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் அவர்கள் மனம் குளிர நடந்து கொள்ளவேண்டும். பொருள்களை முன்னதாகவே எடை போட்டு, கவர்ச்சிகரமான பைகளில் அடைத்து வைக்கவேண்டும்; அவற்றில் எடையையும் விலையையும் குறிப்பிடுதல் நன்று. மேலும், கூட்டுறவுப் பண்டகசாலைகளின் முகப்பில் கவர்ச்சிகரமான கண்ணாடி அறைகளை உருவாக்கி அவற்றில் கண்ணுக்கு ரம்மியமாகப் பொருள்களை அலங்கரித்து வைக்க வேண்டும். அதனோடு, அந்தந்த இடத்தில் என்னென்ன பொருள்கள் அதிகம் தேவைப்படுகின்றனவென்பதைக் கண்டறிந்து தேவைக்கேற்பப் பொருள்களைக் கொள்முதல் செய்து விற்க வேண்டும். வரவு செலவுக் கணக்கை நல்ல முறையில் பேணி, நிர்வாகத்தைத் திறமையுடன் செய்தால் கூட்டுறவுப் பண்டகசாலைகள் வெற்றி பெறுவது உறுதி.

ரொக்கத்திற்கு மட்டுமே விற்பனை: கூட்டுறவுப் பண்டகசாலைகள் ரொக்கத்திற்கு மட்டும்தாம் விற்பனை செய்ய வேண்டுமென்பது விதி. இவ் விதியை எக்காரணத்தைக் கொண்டும் தளர்த்தக் கூடாது. பண்டகசாலை உறுப்பினர்கள் பற்றுக் கணக்கில் பொருள்களை வாங்க வலியுறுத்தலாம். ஆனால், எவருக்குமே பற்றுக் கணக்கில் விற்கக் கூடாது. அப்படி விற்றால் அப் பணத்தை வசூல் செய்வது கடினம்; அதற்காகத் தனியாக ஆள் போட வேண்டும். இதனால் தொந்தரவுகளும் மனக்கசப்பும் தாம் ஏற்படும். மேலும், பற்றுக் கணக்கில் விற்கும்போது பண்டகசாலையின் மூலதனமே ஓரளவிற்கு முடங்கி விடக்கூடும்.

போதுமான அளவு சொந்த நிதி: கூட்டுறவுப் பண்டகசாலைகள் கூடுமான வரை சொந்த நிதியைக் கொண்டே பண்டகசாலைகளை நடத்துவதுதான் நல்லது. ஏனெனில், கடன் வாங்கி வியாபாரம் செய்யும்போது இலாபத்தில் பெரும் பகுதி வட்டிகட்டுவதற்கே சரியாகிவிடும். ஒரு வேளை வட்டிகூட கட்ட முடியாத அளவுக்கு வியாபாரம் நொடிக்கக் கூடும். இவ்வாறு நொடிந்து விட்ட காரணத்தால் பல கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. எனவே, கூடுமானவரை கடன் வாங்காமலேயே வியாபாரம் செய்தல் நல்லது; அப்படியே வாங்க நேரிட்டாலும் அதிகமாக வாங்கக் கூடாது.

பலவகைப் பொருள்களை விற்பனை செய்தல்: கூட்டுறவுப் பண்டகசாலைகளில் பல அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்ட பொருள்களை மட்டுமே கொள்முதல் செய்து விற்று வருகின்றன. 1966-67-ல் கூட்டுறவுப் பண்டகசாலைகளில்

65 சதவீதம் இவ்வகைப் பொருள்களில் மட்டுமே வியாபாரத்தை செய்து வந்ததாக அறிய வருகிறோம்; இவ் வகைப் பொருள்களில் மட்டும் வியாபாரம் செய்வது நல்லதன்று. ஏனெனில், இதனால், அதிகமாக இலாபம் கிடைக்காது. மேலும், அரசாங்கம் தன் கட்டுப்பாட்டுக் கொள்கையைத் தளர்த்தி விட்டால் இப் பண்டிக சாலைகள் கஷ்டத்திற்குள்ளாகும். எனவே, கூடுமானவரை, உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் எல்லா வகையான நுகர்வுப் பொருள்களையும் கொள்முதல் செய்து விற்பதுதான் நல்லது. அதற்காக, தேவையில்லாத பொருள்களையும் கொள்முதல் செய்யக் கூடாது.

கொள்முதல் கொள்கை : கூட்டுறவுப் பண்டகசாலைகள் உறுப்பினர்களுக்கு வேண்டிய நுகர்வுப் பொருள்களையெல்லாம் கவனமாய் அறிந்து அவற்றை மொத்தக் கூட்டுறவுப் பண்டகசாலைகளிடமிருந்து கொள்முதல் செய்யவேண்டும். அப்போதுதான் எந்தெந்தப் பண்டகசாலைக்கு என்னென்ன பொருள் தேவை, இவற்றில் எது உடனடியாகத் தேவைப்படும் என்பதையெல்லாம் மொத்தப் பண்டகசாலை அறிந்து அதற்கேற்ப மொத்தமாகக் கொள்முதல் செய்ய ஏதுவாயிருக்கும். மொத்தப் பண்டகசாலைகள் உற்பத்தி நிலையங்களிலிருந்து அப் பொருள்களை மொத்தமாகக் கொள்முதல் செய்யவேண்டும். அதற்கான உரிமையையும் அவை பெறுதல் நல்லது. மேலும், கூடுமானவரை அப் பொருள்களைத் தாமே உற்பத்தி செய்து விநியோகிக்க முயலவேண்டும். இந்தியாவிலுள்ள எல்லாத் தொழில் நிறுவனங்களுமே கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குத் தம் பொருள்களை வழங்க ஒத்துக்கொண்டுள்ளன. நெசவாலைகள் தம் உற்பத்தியில் 10 சதவீதத்தைக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கென்று ஒதுக்கியுள்ளன. அதே போல் கம்பளித் துணிகளிலும் பின்னல் துணிகளிலும் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கென்று ஓரளவு ஒதுக்கப்பட்டுள்ளன. காப்பிக்குழுவும், பிரபலமான தேயிலைத் தொழிலதிபர்களும் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு விற்கும்போது மலிவாக விற்க ஒத்துக்கொண்டிருக்கின்றனர். மத்திய அரசாங்க நிதிக் குழுவும் தாம் பறிமுதல் செய்யும் கடத்தல் பொருள்களையெல்லாம் இப் பண்டகசாலைகளுக்கே வழங்குவதென முடிவு செய்துள்ளது. மேலும், மொத்தக் கூட்டுறவுப் பண்டக சாலைகளுக்கு இறக்குமதி அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. எனவே, கூட்டுறவுப் பண்டகசாலைகள் செழிப்புடன் வளர்ந்து சமுதாயத்திற்கு நற்பணிகளைப்புரிய நிறைய வாய்ப்புண்டு.

மேலும், கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குத் தேவைப்படும் பொருள்களையெல்லாம் கொள்முதல் செய்து விநியோகிப்பதற்

சென்று மத்திய அரசாங்கக் கூட்டுறவுத்துறை மத்தியக் கொள் முதல், விநியோக நிறுவனம் ஒன்றை (Central Purchase and Supply Organisation) அண்மையில் அமைத்துள்ளது. மாநில மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ள கூட்ட மைப்புச் சங்கங்கள் தங்களுக்கு வேண்டிய பொருள்களை இந் நிறுவ னத்திடமிருந்து கொள்முதல் செய்து கொள்கின்றன.

விலைக் கொள்கை : கூட்டுறவுப் பண்டகசாலைகள் மலிவான விலைக்குத்தான் பொருள்களை விற்க வேண்டுமெனப் பலர் நினைக்கின் றனர். அப்படி மலிவாக விற்றால்தான் கூட்டுறவுப் பண்டகசாலை களால் பொதுமக்களுக்கு நன்மை ஏற்படும் என்பது அவர்கள் கருத்து. ஆனால், மலிவாக விற்கும்போது பண்டகசாலைகளின் செலவுகளைக்கூட நிவர்த்தி செய்ய முடியாது. அடக்கச் செலவில் பொருள்களை விற்றால் கூட்டுறவுப் பண்டகசாலைகள் வளர முடியாது. அதனோடு, இலாபமில்லாமல் பண்டகசாலைகள் நடை பெறுமானால், அப் பண்டகசாலைகள் அபிவிருத்தி அடையமுடியாது. அபிவிருத்தி அடைய வேண்டுமானால் இலாபம் ஓரளவிற்காகிலும் கிடைக்கவேண்டும்; அப்போதுதான் அவற்றின் மூலதனம் பெருகிப் பண்டகசாலைகளை விருத்தி செய்யமுடியும். இல்லையென்றால், பண்டகசாலைகளெல்லாம் தொடங்கப்பட்ட நிலையில்தான் என்றுமே இருந்துவரும்.

மாறாக, கூட்டுறவுப் பண்டகசாலைகள் அங்காடியில் நிலவும் நடப்பு விலையில்தான் பொருள்களை விற்கவேண்டுமென்று கருது வோரும் உண்டு. அப்படி விற்றால்தான் தனிப்பட்ட வியாபாரி களுக்கும் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும் மோதல் ஏற்படாது என்பது இவர்களின் கருத்து. அங்காடி விலைக்கே விற்பதனால் உறுப்பினர்களுக்கும் ஒன்றும் நட்டமில்லை; ஏனெனில், கூட்டுறவுப் பண்டகசாலை பெறும் இலாபம் மறுபடியும் இலாப ஈவின் வழியாக வும் தள்ளுபடி முறையாலும் உறுப்பினர்களுக்கே வந்து சேரு கிறது என்பது இவர்களின் வாதம். இப் பண்டகசாலைகள் அங்காடி விலைக்கே விற்பனை செய்தால் விலைவாசிகள் இறங்குவதற்கு வழியில் லாமல் போய்விடும்.

எனவே, கூட்டுறவுப் பண்டகசாலைகள் இவ்விரு முரண்பாடான கொள்கைகளையும் தவிர்த்து, அடக்கச் செலவோடு ஓரளவு இலா பத்தையும் சேர்த்து விலை நிர்ணயம் செய்வதுதான் சிறந்த கொள்கை யாகும். அப்படிச் செய்தால் பண்டகசாலைகளின் விலை அங்காடி விலைக்கும் குறைவாகத்தான் இருக்கும். ஒரு போதும் நடப்பு விலைக்கும் அதிகமாக இருக்கக்கூடாது. கூடுமானவரை நடப்பு

விலையைக் காட்டிலும் கொஞ்சம் மலிவான விலையில்தான் விற்க முயலவேண்டும். அப்போதுதான் கூட்டுறவுப் பண்டகசாலைகள் விலைவாசியை மட்டுப்படுத்த முடியும். அதேசமயம் பண்டகசாலைக்குத் தேவையான அளவு இலாபமும் கிடைக்கும். இலாபத்தில் காப்பு நிதிக்கும் ஏனைய நிதிகளுக்கும் ஒதுக்கிய தொகைபோக மீதித் தொகையை உறுப்பினர்கள் வாங்கியுள்ள பொருள்களுக்கேற்பப் பகிர்ந்தளிக்கவேண்டும்.

உற்பத்தி நிலையங்கள்

சுவீடன், டென்மார்க், ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களே தமக்குவேண்டிய பொருள்களை உற்பத்திசெய்தும் வருகின்றன. அவ்வாறு உற்பத்தி செய்தால்தான் பொருளின் தரத்தை உயர்த்தவும் அங்காடி விலையைக் கட்டுப்படுத்தவும் முடியும். ஆனால், இந்தியாவில் ஒருசில சங்கங்கள்தாம் எண்ணெய் ஆலைகள், வாசனைப் பொருள் அரைக்கும் ஆலைகள், மாவு ஆலைகள்போன்ற உற்பத்தி நிலையங்களை நடத்தி வருகின்றன. இது போன்ற ஆலைகளை மொத்தக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவவேண்டுமென்பது அரசாங்கத்தின் குறிக்கோள். அதற்காக அரசாங்கம் தாராள நிதி உதவி செய்யத் திட்டமிட்டுள்ளது. அத் திட்டப்படி உற்பத்தி நிலையங்களைத் தொடங்கும் பண்டகசாலைகள் அந் நிலையங்களை ஏற்படுத்த ரூ. 1 இலட்சம் வரை செலவிட்டால், அத் தொகை முழுவதையும் மத்திய அரசாங்கமே ஏற்றுக் கொள்கிறது. நிறுவனத்தின் செலவு 1 இலட்சம் ரூபாய்க்குமேல் இருந்தால் அதில் 40 சதவீதம் வரை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. இது தவிர, மூன்றாண்டுகள் வரை நிர்வாக மானியத் தொகையையும் அரசாங்கம் வழங்கிவருகிறது. எனவே, கூட்டுறவுப் பண்டகசாலைகள் தமக்குவேண்டிய பொருள்களைக் கூடுமானவரை தாமே உற்பத்தி செய்ய முன் வரவேண்டும். அப்போதுதான் நுகர்வோருக்குத் தரமான பொருள்களை நியாயமான விலைக்கு விநியோகிக்கமுடியும். தனிப்பட்ட தொழிலதிபர்களின் தயவில் இயங்கவேண்டிய அவசியமும் இராது; அப்படி இருந்தாலும், தொழிலதிபர்கள் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு மலிவாக விற்பனை செய்ய முன்வருவர்.

24. கூட்டுறவுப் பண்ணை

நாகபுரியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்குப் பின்னர்க் கூட்டுறவுப் பண்ணை முறை அதிகமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. நம் நாட்டின் விவசாயம் வளர்ச்சி பெற்றுச் சிறப்புறக் கூட்டுறவுப் பண்ணை முறைதான் சிறந்ததெனப் பலர் கருதுகின்றனர். எவ்விதமான வலுவந்தமோ கட்டாயமோ இன்றிக் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்யப்பட்டால்தான் கிராமப் பொருளாதார நிலை உயர முடியுமென நினைக்கின்றனர்.

கூட்டுறவுப் பண்ணையின் அவசியம்

தனிப்பட்ட முறையில் விவசாயிகள் சாகுபடி செய்யும் முறையைக் காட்டிலும் கூட்டுறவுச் சாகுபடி முறைதான் சிறந்தது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வர். ஆனால், அம்முறை நம் நாட்டிற்குச் சாத்தியமானதுதானா என்பது வேறு கேள்வி. இருப்பினும், கூட்டுறவுப் பண்ணை முறையினால் எவ்வளவோ பலனடையலாம். அவற்றைப் பற்றி இங்குச் சுருக்கமாகக் காண்போம்.

(1) நமது நாட்டில் சாகுபடி செய்யப்படும் நிலம் தலைக்கு 1 ஏக்கர்கூடக் கிடையாது. இன்னும் சில ஆண்டுகளுக்குப் பின் இந்த 1 ஏக்கர்கூட இருக்காது; மக்கள் தொகை அவ்வளவு விரைவாகப் பெருகி வருகிறது. விவசாயிக்கு இருக்கின்ற கொஞ்சநஞ்ச நிலமும் வாரிசுரிமைச் சட்டப்படி பகிர்ந்து துண்டாக்கப்படுவது மற்றொரு தலைவேதனை. இதனால் பெரும்பாலான நிலங்கள் சாகுபடி செய்வதற்குக் கூடத் தகுதியற்றுச் சின்னஞ்சிறியவையாகி விடுகின்றன. எனவே, இந் நிலங்களையெல்லாம் சாகுபடிக்குத் தகுதியுடையவையாய் மாற்றி இலாபகரமான விவசாயத்தை மேற்கொள்ள வேண்டுமாயின் கூட்டுறவுப் பண்ணை இன்றியமையாதது. அதோடு விவசாயிகளும் கால்நடைகளும் பெரும்பாலான நாள்களில் வேலையின்றி இருக்கும் நிலை மாறவும் கூட்டுறவுப் பண்ணை அவசியமாகிறது.

2. விவசாயிகள் ஒன்றுபட்டுக் கூட்டுறவு முறையில் சாகுபடியை மேற்கொள்ளும்போது அவர்களின் விவசாயச் சாதனங்களெல்லாம் நன்கு பயன்படும். மேலும், தனிப்பட்ட முறையில் எல்லா விவசாயிகளும் விதை விதைத்தல், மருந்து தெளித்தல், அறுவடை செய்தல், தானியத்தைத் தூற்றி எடுத்தல் போன்ற வேலைகளுக்கு நவீனக் கருவிகளை வாங்க முடியாது. உழுவதற்குவேண்டிய டிராக்டரும் ஒரு சில பெரு நிலக்கிழார்களால் மட்டுமே வாங்க முடியும். ஆனால், கூட்டுறவுப் பண்ணையை அமைத்துக் கொண்டால் நவீனக் கருவிகள் அனைத்தையும் பெற்று விவசாய முறையையே நவீனமயமாக்க முடியும்.

3. தனிப்பட்ட விவசாயிகளில் பலர் தங்கள் விவசாயத்திற்கு வேண்டிய கடனைப் பெறமுடியாமல் தவிக்கின்றனர். ஆனால், இவர்களெல்லாம் சேர்ந்து கூட்டுறவுப் பண்ணையை அமைத்துக்கொண்டால் வேண்டிய அளவுக் கடனை மிக எளிதாகப் பெற்றுவிடலாம்.

4. விவசாயிகளில் ஒரு சிலருக்குத்தாம் விஞ்ஞான முறையில் சாகுபடி செய்யத் தெரியும். மற்றவர்களெல்லாம் பரம்பரைப் பழக்கப்படிதான் சாகுபடி செய்து வருகின்றனர். விஞ்ஞான முறை தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் கூட்டுறவுப் பண்ணையில் சேரும்போது அறியாதவர்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுவர். விவசாயம் முழுவதும் விஞ்ஞான முறைப்படி நடைபெற முடியும். அரசாங்கத்தில் பணிபுரியும் விவசாய நிபுணர்கள் ஒவ்வொரு விவசாயிடமும் சென்று நவீன முறையைப் போதிக்க இயலாது. கூட்டுறவுப் பண்ணையை ஏற்படுத்திவிட்டால் அப்பண்ணைகளுக்கு வேண்டிய ஆலோசனைகளை மட்டுமன்றி, நவீனச் சாகுபடி முறைகளையும் புகுத்துவது மிக எளிதாகிவிடும். பண்ணைகள் சிறப்புற்று, செழிப்படைந்து அமோக விளைச்சலைப் பெற வழி ஏற்படும்.

5. விவசாயிகள் தனிப்பட்டமுறையில் சாகுபடி செய்வதை விடக் கூட்டாகச் சேர்ந்து சாகுபடி செய்தால்தான் பண்ணைகளுக்கு வேண்டிய கருவிகளையெல்லாம் எளிதாக விநியோகிக்கமுடியும்.

6. திட்டமிட்டுச் சாகுபடி செய்யும் முறை கூட்டுறவுப் பண்ணையில் சாத்தியமானதாகும்.

7. கூட்டுறவுப் பண்ணை முறையில் படித்த இளைஞர்களுக்கும் அவர்களுக்குரிய வேலை வாய்ப்பு ஏற்படும்.

8. கிராமங்களில் கூட்டுறவுப் பண்ணைகள் மட்டுமன்றி, கிராமத் தொழில்களையும் விவசாயப் பொருள்களைப் பக்குவப்

படுத்தும் தொழில்களையும் கூட்டுறவு முறையில் அமைக்கும்போது கிராமப் பொருளாதாரமே மாறுபட்டுவிடும். விவசாயத்தை மட்டுமே மக்கள் நம்பி வாழவேண்டிய அவசியம் ஏற்படாது.

9. கூட்டுறவுப் பண்ணைகள் தம் விளை பொருள்களைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் வாயிலாகவே விற்க முற்படும் போது விவசாயிகள் தரகர்களால் ஏமாற்றப்படமுடியாது.

10. கூட்டுறவுப் பண்ணை முறை கிராம மக்களின் வாழ்க்கைத் தளத்தையே மாற்றி அமைத்துவிடும். அதனோடு, கிராம மக்களிடையே நல்ல தலைவர்கள் தோன்றவும் வாய்ப்பு ஏற்படும்.

கூட்டுறவுப் பண்ணையின் முக்கிய அம்சங்கள்

இந்தியாவின் சூழ்நிலைக்குக் கூட்டுறவுப் பண்ணை முறை பொருத்தமானதுதானா என்பதில் பல கருத்து வேறுபாடுகள் உள்ளன. எனவே கூட்டுறவுப் பண்ணை முறையின் அம்சங்களை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டால் கருத்து முரண்பாடுகளும் குறைந்துவிடலாம்.

(1) கூட்டுறவுப் பண்ணை என்பது கட்டாயமான முறையன்று. விரும்பியவர்கள் மட்டுமே மனமுவந்து சேரும் முறையாகும். கூட்டுறவுப் பண்ணையில் எவருமே வலுவந்தத்தினாலோ கட்டாயத்தினாலோ சேரக்கூடாது என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறவேண்டும். கூட்டுறவில் உறுப்பினர்களின் நல்லெண்ணமும் நம்பிக்கையும்தான் முக்கியம். விருப்பமில்லாதவர்களைக் கட்டாயப் படுத்தி அதில் சேர்ப்பதால் பயனேதும் இருக்காது. ஒரு வேளை கூட்டுறவு இயக்கத்திற்கே அது ஆபத்தாகவும் இருக்கலாம்.

(2) கூட்டுறவுப் பண்ணை முறையில் குடியானவர்களின் நிலம் அவர்களுக்குத்தாம் சொந்தம்; நில உரிமையை எவரும் இழப்பதில்லை. நிலத்தையெல்லாம் ஒன்றுபடுத்துவது நவீன முறையில் சாகுபடி செய்வதற்குத்தானே யொழிய, நில உரிமையைப் பறிமுதல் செய்வதற்கன்று. அவரவர்களின் நிலத்திற்கேற்ப இலாப ஈவு பகிர்ந்தளிக்கப்படுவதே இதற்குச் சான்று.

(3) கூட்டுறவுப் பண்ணையென்றால் இப்படித்தான் அமைக்கப் படவேண்டுமென்ற நிபந்தனை ஒன்றும் கிடையாது. குடியானவர்களின் விருப்பத்திற்கும் ஊரின் நிலைமைக்கு மேற்ப எப்படி வேண்டுமானாலும் அமைக்கலாம். எனவே, கூட்டுறவுப் பண்ணைகள் பல வகைப்படும். அவற்றில் முக்கியமானவற்றைப் பற்றி மட்டும் இங்கு விரிவாகக் காண்போம்,

கூட்டுறவுப் பண்ணை வகைகள்

பல வகையான கூட்டுறவுப் பண்ணைகளில் மிகவும் பிரபலமாயுள்ளது வருமாறு :

கூட்டுறவு இணைப்புப் பண்ணைச் சங்கங்கள்

கூட்டுறவு இணைப்புப் பண்ணைச் சங்கங்கள் சாகுபடி சம்பந்தப்பட்ட எல்லாப் பணிகளையும் மேற்கொள்வதால் தான் அதிகமாகப் பிரபலமடைந்துள்ளன. ஒரே இடத்தில் சிறு சிறு துண்டு நில விவசாயிகள் ஒன்றுசேர்ந்து இச் சங்கத்தை அமைக்கின்றனர். தத்தம் சொந்த நிலங்களில் தனித் தனியாகச் சாகுபடி செய்வதால் பலனில்லை என்று தம் நிலங்களையெல்லாம் சேர்த்து ஒன்றாகச் சாகுபடி செய்தால் விளைச்சலும் பெருகும் வருமானமும் அதிகரிக்குமென்று இச் சங்கத்தை அமைக்கின்றனர். இச் சங்கங்கள் எவ்வாறு அமைக்கப்பட்டு இயங்குகின்றன என்பதை இப்போது காணலாம்.

இச் சங்கங்களில் சொந்த நிலம் வைத்திருக்கும் விவாசாயிகள் மட்டுமன்றி, நிலமில்லாத விவசாயத் தொழிலாளிகளும் உறுப்பினர்களாகச் சேரலாம். இக் கூட்டுறவுப் பண்ணைகளில் வேலையில்லாது கஷ்டப்படும் தொழிலாளர்களும் சேர அனுமதிக்சப்பட வேண்டும். இவ் வகைச் சங்கங்களில் குத்தகைக்கு நிலத்தையெல்லாம் விட்டு விட்டு வீட்டில் உட்கார்ந்திருக்கும் பெரு நிலக்கிழார்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படக் கூடாதென்பது அரசாங்கத்தின் ஆணை ஆனுல், அரசாங்கத்தில் பணிபுரிகின்ற காரணத்தாலோ, முதிய வயது, பிணி ஊனம் போன்ற காரணத்தாலோ தம் நிலத்தைச் சொந்தமாகச் சாகுபடி செய்ய முடியாமல் குத்தகைக்கு விட்டிருப்போர் இச் சங்க உறுப்பினர்களாகலாம். எனினும், சொந்த நிலத்தைச் சாகுபடி செய்யாமல் குத்தகைக்கு விட்டிருக்கும் பெரு நிலக்கிழார்கள் இச் சங்கத்தில் சேர்க்கப்படும் போது அவர்களின் எண்ணிக்கை மொத்த உறுப்பினர்களில் $\frac{1}{3}$ பகுதிக்கு மேல் இருக்கக் கூடாதென இந்திய அரசாங்கம் ஆலோசனை கூறியுள்ளது.

கூட்டுறவுப் பண்ணைகள் பதிவு செய்யப்படுவதற்கு அவை எந்த அளவில் அமைக்கப்படவேண்டுமென்ற விதிமுறைகள் கிடையா. எனினும், நவீன முறையில் இயந்திரங்களைப் பயன்படுத்தி இலாபகரமான முறையில் சாகுபடி செய்யக் கூடிய அளவுக்குப் பண்ணை பெரிதாக இருக்க வேண்டும். அதனோடு, அரசாங்க உதவியைப் பெறவேண்டுமானுல் அப் பண்ணை எந்த

அளவில் எத்தனை உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டு மென்பதை அந்தந்த இடத்தில் சூழ்நிலைக்கேற்ப மாநில அரசாங்கம் நிர்ணயிக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் ஆலோசனை கூறியுள்ளது. அரசாங்கம் நிர்ணயித்துள்ள அளவுக்கும் சிறிதாக இக் கூட்டுறவுப் பண்ணைகள் அமைந்தால் அவற்றிற்கு மாநில அரசாங்கம் உதவி செய்யக் கூடாதென்றும், ஆனால் அவற்றைப் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் சிபாரிசு செய்துள்ளது.

கூட்டுறவுப் பண்ணை விவசாயிகளின் விருப்பத்திற்கேற்ப அமைக்கப்படுவதால் அப் பண்ணையிலிருந்து உறுப்பினர்கள் எப்போது வேண்டுமானாலும் விலகிக் கொள்ளலாம். இருந்த போதிலும், விவசாயம் பாதிக்கப்பட்டு விடக்கூடாதென்பதற்காகவும் வேறு சில சௌகரியங்களுக்காகவும் ஒன்று சேர்க்கப்படும் நிலங்கள் குறைந்த பட்சம் ஐந்தாண்டுகளுக்காவது நீடிக்கப்பட வேண்டு மென்று கூட்டுறவுப் பண்ணை ஆய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளது. எனவே, கிராமத்தைவிட்டே வெளியேறும் நிலை ஏற்பட்டால்தான் உறுப்பினர்கள் விலகிக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டு மென்றும் இக் குழு ஆலோசனை கூறியுள்ளது. மேலும், கூட்டுறவுப் பண்ணைகள் எந்தெந்த நிபந்தனைகளில் இயங்க வேண்டும், அவற்றி லிருந்து உறுப்பினர்கள் வெளியேறுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்பதையெல்லாம் அந்தந்தக் கூட்டுறவுப் பண்ணையே சங்கத்தின் சட்டதிட்டங்களின் மூலம் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். அத் தீர்மானத்தின்படி கூட்டுறவுப் பண்ணை ஒவ்வோர் உறுப்பின ருடனும் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். ஒப்பந்த நாள் முடிந்த பின்னர்த்தான் கூட்டுறவுப் பண்ணையிலிருந்து விலகிக் கொள்ள விரும்பும் உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்குவது நல்லது. அவ்வாறு உறுப்பினர் ஒருவர் விலகிக் கொள்வதால் கூட்டுறவுப் பண்ணையே பாதிக்கப்படுமானால் அவருடைய சொந்த நிலத்தையே அவருக்குத் திருப்பிக் கொடுக்காமல் அதே அளவு விளைச்சலைத் தரக்கூடிய வேறு நிலத்தைக் கூட்டுறவுப் பண்ணை வழங்கலாம்.

கூட்டுறவுப் பண்ணையில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள நில உரிமையாளர்களுக்குப் பண்ணையின் வருமானத்திலிருந்து அவரவர்களின் நிலத்திற்கேற்ப ஈவு தர வேண்டுமென்று கூட்டுறவுப் பண்ணை ஆய்வுக் குழு சிபாரிசு செய்துள்ளது. இந்த ஈவைப் பண்ணையின் மொத்த வருமானத்திலிருந்து தருவதா நிகரஇலாபத் திலிருந்து தருவதா என்பதை அந்தந்தக் கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். மொத்த வருமானத் திலிருந்து கொடுக்கப்படும் ஈவு அந்தந்த மாநில அரசாங்

கம் நிர்ணயித்துள்ள குத்தகை அளவைவிட அதிகமாயிருக்கக் கூடாது. நிலத்திற்கென்று ஈவு கொடுத்தால்தான் நில உரிமையாளர்களும் இச் சங்கத்தில் சேர முன்வருவர். இல்லையென்றால் அவர்களுக்கு எவ்விதப் பலனும் சங்கத்தில் சேருவதால் கிடைக்காது; சேராமல் குத்தகைக்கு விட்டே சம்பாதித்துக் கொள்ளலாம் என்று எண்ணத்தோன்றும். மேலும், இக் கூட்டுறவுப் பண்ணை விவசாயத்தில் ஒவ்வோர் உறுப்பினரின் வேலைக்கும் சேவைக்குமேற்ப வருமானம் பகிர்ந்தளிக்கப்படும். எந்த அடிப்படையில் பகிரப்படுவதென்பதை அந்தந்தச் சங்கங்களே முடிவு செய்து கொள்ள வேண்டும்.

இக் கூட்டுறவு இணைப்புப் பண்ணையை அமைக்குமுன், அப் பண்ணையில் உறுப்பினராகச் சேர விரும்புவோரிடமுள்ள விவசாயக் கருவிகள், சாதனங்கள், கால்நடைகள் ஆகியவற்றைக் கணக்கெடுத்து, அவற்றின் மதிப்பையும் கவனமாக அளவிட்டுப் பெற வேண்டும். இவற்றின் பெறுமானத் தொகையில் ஓரளவு வரை அந்தந்த உறுப்பினர்களின் பங்கு மூலதனமாகவும், எஞ்சியதை அவரவர்களின் வைப்புத் தொகையாகவும் சங்கம் வரவு வைத்து, அவற்றை எந்த அளவுக்குப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்தவேண்டும். வேண்டிய அளவுக்கு மேல் இவற்றைச் சங்கம் வாங்கக்கூடாது. அவற்றையெல்லாம் விற்று விடுவதற்கு சங்கம் உறுப்பினர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

கூட்டுறவு இணைப்புப் பண்ணைச் சங்கங்களின் பணிகள்

இச் சங்க உறுப்பினர்கள் தத்தம் நிலபுலன்களையும் பிற சாதனங்களையும் ஒன்றுசேர்த்து, இலாபகரமான நவீன முறையில் சாகுபடி செய்ய ஒத்துக்கொண்ட பின் அவர்களுடன் சங்கம் ஒப்பந்தம் செய்து கொள்கிறது. அந்த ஒப்பந்தத்தின்படி. நிலத்தின்மேல் சங்கம் கடன் வாங்கிப் பணிபுரியத் தொடங்குகிறது. முதலில், விளைச்சலை அதிகரிப்பதற்கென்று சங்கம் திட்டம் வகுத்து அத் திட்டப்படி சாகுபடி வேலையை மேற்சொள்ள வேண்டும். சங்கம் தீட்டும் விவசாயத்திட்டத்திற்கு மாநில அரசாங்கமும் உதவி செய்ய வேண்டுமென்பது மத்திய அரசாங்கக் கூட்டுறவுத் துறையின் விருப்பம். அப்போதுதான், மண்வளத்திற்கேற்பப் பயிர்ச் சாகுபடி செய்யமுடியும்; ஒரே பயிருக்குப் பதிலாகப் பல பயிர்ச் சாகுபடியையும் மேற்கொள்ளலாம். இருக்கின்ற சாதனங்களைக் கொண்டு எந்த அளவுக்கு விளைச்சலைப் பெருக்கமுடியுமோ அந்த அளவுக்குத் திட்டமிடுதல் அவசியம். அவ்வாறு சாகுபடித் திட்டத்தைத் தீட்டும்போது ஓய்வு நாள்களிலும் ஓய்வு நேரங்

களிலும் உறுப்பினர்கள் செய்யக்கூடிய குடிசைத் தொழில்களை ஏற்படுத்துவதற்கும் வழி செய்யப்பட்டால் அவர்களின் வருமானம் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். அதனோடு பண்ணையை விருத்தி செய்வதற்குரிய திட்டத்தையும் தீட்டி, அந்தந்த வேலையை அவ்வப் போது செய்ய முயலவேண்டும். ஒரு சில ஆண்டுகளுக்குப்பின் எந்தெந்த இடத்தில் கிணறுகள், குழாய்க் கிணறுகள் அமைக்க வேண்டும், எப்படி நிலத்திற்கு வேலியிட வேண்டும், கரை போட வேண்டுமென்பதையும் முடிவுசெய்து கொள்ளவேண்டும்.

சங்கத்தின் நிர்வாகக் குழுவினர் தீட்டியுள்ள சாகுபடித் திட்டத்தின்படி சாகுபடி செய்யும் பணியை உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டும். அவர்களுக்கு ஆலோசனை கூறவும் அவர்கள் செய்யும் வேலையை மேற்பார்வையிடவும் வேண்டியது சங்கத் தலைவரின் கடமையாகும். ஒவ்வோர் உறுப்பினருக்கும் அவரவருக்குத் தகுந்த வேலை வழங்கப்படுகிறது. இப் பண்ணைச் சங்கம் பெரியதாக இருந்தால் உறுப்பினர்களைப் பலபிரிவு களாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவின் வேலையைக் கவனிக்க ஒரு தலைவரை நியமிக்கலாம். உறுப்பினர்களின் வேலைக்கு அந்தந்த இடத்தில் நிலவும் ஊதியத்தையே வழங்குவது நல்லது. பொதுவாக, ஊதியத்தில் 70 சதவீதம் வரை உறுப்பினர்களின் குடும்பச் செலவுக் கென்று முன் பணமாகக் கொடுக்கப்படுகிறது. ஆண்டு முடிவில் சங்கத்தின் இலாபத்தைப் பகிரும்போது இந்த முன் தொகை கழிக்கப்படுகிறது.

கூட்டாக உற்பத்தி செய்யப்பட்ட விளைபொருள்கள் கூட்டா கவே விற்பனை செய்யப்படுகின்றன. விற்பனைத் தொகையிலிருந்து பண்ணைக்கு ஏற்பட்ட செலவு கழிக்கப்பட்டு எஞ்சிய தொகை உறுப்பினர்களின் நிலத்தின் அளவுக்கும் வேலைக்கும் தகுந்தாற் போல் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. சில சங்கங்களில் மொத்த உற்பத்தியில் $\frac{1}{3}$ பங்கு நிலம் தந்துள்ள உறுப்பினர்களுக்குப் பகிர்ந் தளிக்கப்படுகிறது. வேறு சில சங்கங்களில் நிலப்பங்குதாரர்களுக்கு அவர்கள் நிலத்தின் கிரயத்தொகையில் 6 சதவீதம் வட்டி அளிக்கப் படுகிறது. எது எப்படியிருப்பினும், விளைச்சலை எவ்வாறு பகிர்ந் தளிப்பது என்பதை உறுப்பினர்களே முடிவெடுத்துக் கொள்கின் றனர். இச் சங்கங்களுக்குத் தம் நிலத்தைக் கொடுத்து, அப்பண்ணை யில் உழைக்கும் உறுப்பினர்களுக்கு நில ஈவும் உழைப்பு ஊதியமும் வழங்கப்படுகிறது.

கூட்டுறவு இணைப்புப் பண்ணைகள் சிறப்பான விதை வித்துகள், நல்ல உரங்கள், நவீனக் கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி,

சாகுபடி முறையை நவீனமயமாக்கவேண்டும். இதை எவ்வளவு தூரம் இச் சங்கங்கள் செய்து வருகின்றன என்பதை மதிப்பிட்டு, அச்சங்கங்களுக்கு வேண்டிய ஆலோசனையை வழங்கும் பொறுப்பை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். இதற்காக விவசாயத்துறை வல்லுநர்களையும் சமுதாய நல வளர்ச்சித் திட்ட அதிகாரிகளையும் அரசாங்கம் பயன்படுத்துவது நல்லது.

கூட்டுப் பண்ணைச் சங்கங்கள்

கூட்டுப் பண்ணைச் சங்கங்களில் பெரும்பாலும் விவசாயத் தொழிலாளர்கள்தாம் உறுப்பினர்களாயிருப்பர். இச் சங்கங்கள் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து கூட்டுறவு முறையில் சாகுபடியை மேற்கொள்கின்றன. சில சமயங்களில் நிலத்தை விலைக்கு வாங்கியும் சாகுபடி செய்வதுண்டு. செலவுபோக எஞ்சிய வருமானத்தில் ஒரு பகுதியைக் காப்பு நிதிக்கும் வேறு பல நிதிகளுக்கும் ஒதுக்கிவிட்டு, மீதியை உறுப்பினர்கள் பகிர்ந்துகொள்கின்றனர். இச் சங்கங்கள் பங்கு மூலதனம், வைப்புத்தொகை, கடன், மானியம் ஆகியவற்றின் வழியாகத் தமக்குத் தேவையான நிதியைப் பெறுகின்றன. கூட்டுப் பண்ணையில் உறுப்பினர்கள் உழைக்கும்போது அவர்களுக்கு ஊதியமும் வழங்கப்படுகிறது.

இக் கூட்டுப் பண்ணைகள் முன்பு கூறிய கூட்டுறவு இணைப்புப் பண்ணைகளிலிருந்து ஓரளவு வேறுபட்டவை. இப் பண்ணைகளில் நிலச் சொந்தக்காரர்களுக்கென்று ஈவு தரப்படுவதில்லை. நிலச் சொந்தக்காரர்கள் உறுப்பினர்களாக இருப்பதுமில்லை. நிலம் வழங்குவோருக்குக் குத்தகை மட்டுமே கொடுக்கப்படுகிறது. மேலும், இணைப்புப் பண்ணை உறுப்பினர்கள் அனைவரும் பண்ணையில் வேலை செய்யவேண்டிய அவசியமில்லை. ஆனால், கூட்டுப் பண்ணை உறுப்பினர்கள் அனைவரும் பண்ணையில் வேலை செய்யவேண்டும்.

மாதிரிக் கூட்டுறவுப் பண்ணைகள்

கூட்டுறவுப் பண்ணையின் மேம்பாட்டையும் பலன்களையும் மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காக 1961-62-ல் 64 மாவட்டங்களில் மாதிரிக் கூட்டுறவுப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. இத் திட்டத்தின்படி ஒவ்வொரு பகுதியிலும் 10 கூட்டுறவுப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு பகுதியிலும் அமைக்கப்பட்ட கூட்டுறவுப் பண்ணைகளின் வேலைகளைக் கண்காணிப்பதற்கும் அவற்றிற்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கும் தனிக் கூட்டுறவுப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டனர். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் இம்

மாதிரிக் கூட்டுறவுப் பண்ணைத் திட்டம் அமுலாக்கப்பட்டது. மூன்றாவது திட்டத்தின்படி 3,180 கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்கள் அமைக்கப்பட விருந்தன. ஆனால், 2,749 சங்கங்கள்தாம் அமைக்கப் பட்டன. இச் சங்கங்களில் 57,364 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்து சுமார் 2,77,482 ஏக்கர் நிலத்தைச் சங்கங்களுக்குக் கொடுத்தனர்.

பயிற்சித் திட்டம்

கூட்டுறவுப் பண்ணைகள் வெற்றிகரமாக நடைபெற வேண்டு மென்பதற்காக இச் சங்கங்களின் செயலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது. 13 பயிற்சி நிலை யங்களை ஏற்படுத்தி இச் சங்கச் செயலாளர்களுக்குக் கூட்டுறவுப் பண்ணைகளை நிர்வகிக்கும் முறை விளக்கப்படுகிறது. இப் பயிற்சித் திட்டப்படி சங்கச் செயலாளர்களுக்கு 6 மாதப் பயிற்சி அளிக்கப் படுகிறது. அதனோடு, அபிவிருத்திப் பணியாளர்களுக்கும் 3 வாரம் பயிற்சி அளிக்கப்படுகிறது. கூட்டுறவுப் பண்ணைகள்' அமைக்கப் பட்டுள்ள கிராமங்களுக்கும் சென்று சங்க உறுப்பினர்களுக்கும் பதவியாளர்களுக்கும் கூட்டுறவுப் பண்ணை எவ்வாறு இயங்க வேண்டுமென்பதைப் பயிற்சியாளர்கள் சொல்லித் தருகின்றனர்.

கூட்டுறவுப் பண்ணையின் மதிப்பீடு

கூட்டுறவு மாதிரிப் பண்ணைகள் எவ்வளவு தூரம் முன்னேறி யுள்ளன என்பதைக் கண்டறியவும், கூட்டுறவுப் பண்ணைகளை எப்படி அமைப்பது அவற்றை எப்படி நடத்துவது என்று ஆலோசனை கூறவும் மத்திய அரசாங்கத்தின் கூட்டுறவுத் துறைப் பேராசிரியர் காட்கில் என்பவரின் தலைமையில் குழு ஒன்றை அமைத்தது. இக் குழு கூட்டுறவுப் பண்ணைகள் இயங்கிய முறையை நேரடியாகவே பார்த்து, 1965-ல் அறிக்கையைச் சமர்ப்பித்தது. இவ் வறிக்கையின் சாரம் வருமாறு: நம் நாட்டில் கூட்டுறவுப் பண்ணைகள் இன்னும் வேரூன்றவில்லை. எனினும், மாதிரிக்காக அமைக்கப்பட்ட கூட்டுறவுப் பண்ணைகள் விளைச்சலை அதிகரித்து, விவசாய நிலையை உயர்த்த முடியும் என்பதை எடுத்துக் காட்டி யுள்ளன. பொதுவாக, அரசியல் கட்சியினர், சமூகச் சேவையாளர் மதச் சேவையாளர், கூட்டுறவுவாதிகள், படித்தவர்கள், ஆகியோர் கள்தாம் இக் கூட்டுறவுப் பண்ணைகளில் அக்கறை காட்டி அவற்றை ஊக்குவித்து வருகின்றனர். இவர்களின் முயற்சியால் தான் பல சங்கங்கள் இன்றும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. ஏனைய சங்கங்களெல்லாம் திருப்திகரமாக இயங்குவதாகத் தெரியவில்லை. வறுமையின் காரணத்தினால் தான் சிறு குடியானவர்கள் இச் சங்கங்களின் உறுப்பினர்களாகச் சேருகின்றனர். மேலும், சாதி,

மத அடிப்படையிலும் ஒருசில சங்கங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. அவ்வாறு ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் நடத்தும் கூட்டுறவுப் பண்ணைகள் எவ்விதப் பூசலுமின்றிச் சுமுகமாக நடைபெற்று வருகின்றன. நடுத்தரக் குடியானவர்களும் பெரு நிலக்கிழார்களும் சேர்ந்து அமைத்துள்ள சங்கங்களில் அவர்கள் பண்ணையில் வேலை செய்யாமல் ஆள்களை அமர்த்தியே வேளாண்மை செய்கின்றனர். அதனோடு, இவ் வகைப் பெரிய பண்ணைகளை ஒரு சில குடும்பங்கள்தாம் நடத்தி வருகின்றன.

மேலும், இக் குழுவின் ஆய்வின்படி கூட்டுறவுப் பண்ணைகள் விளைச்சலைப் பெருக்குவதற்கென்று பாடுபட்டு வருகின்றன. இக் குழு பரிசீலனை செய்த 87 சங்கங்களில் 85 சங்கங்கள் நீர்ப்பாசன வசதியை அதிகரிப்பதற்கென்று குழாய்க் கிணறுகளை மட்டுமன்றிப் பம்பு செட்களையும் அமைத்துள்ளதாகத் தெரிய வருகிறது. சாகுபடி முறையைக் கூட இவை ஓரளவு முன்னேற்றியுள்ளன. தனிப்பட்ட முறையில் தங்கள் நிலத்தைச் சீர்படுத்த முடியாத விவசாயிகள் இக் கூட்டுறவுப் பண்ணைகளில் சேர்ந்து அதைச் சாதித்திருக்கின்றனர். அதனோடு, இக் கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்கள் அதிக அளவில் உரத்தைப் பயன்படுத்தி வருகின்றன. சாகுபடி முறையில் மாற்றம் செய்துள்ள இச் சங்கங்கள் அதற்கென்று நவீனக் கருவிகளையும் ஓரளவு பயன்படுத்தி வருகின்றன.

இவ் வகைச் சிறப்பியல்புகளையெல்லாம் கூட்டுறவு மாதிரிப் பண்ணைகளில் கண்ட இக் குழுவினர் அவற்றிடம் காணப்பட்ட குறைபாடுகளையும் தம் அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளனர். அவர்கள் கண்ட குறைபாடுகளில் முக்கியமானவை வருமாறு: இக் கூட்டுறவு மாதிரிப் பண்ணைகளுக்கு வேண்டிய நிதி உதவியையோ பண்ணையின் செயல் நுட்ப உதவியையோ சம்பந்தப்பட்ட அரசாங்கத் துறையினர் எதிர்பார்த்த அளவிற்குச் செய்யவில்லை. இப் பண்ணைகளை நடத்தக்கூடிய திறம்பெற்ற தலைவர்கள் அந்தந்த ஊர்களில் கிடையாது; எனவே, பெரு நிலக்கிழார்களின் இஷ்டப்படிதான் இவை இயங்கி வருகின்றன. ஒரு சில சங்கங்களுக்கு இப் பண்ணைகளை நடத்தும் வழி முறையே தெரியவில்லை. மேலும், சில கூட்டுறவுப் பண்ணைகள் மிகச் சிறியவையாயிருப்பதால் அவற்றை நவீன முறையில் சாகுபடி செய்ய முடியாமல் போய் விடுகிறது. ஒரு சில சங்க உறுப்பினர்கள் தம் நில மனைத்தையும் சங்கத்திடம் ஒப்படைக்காமல் ஏதோ ஒரு பகுதியை மட்டுமே ஒப்படைத்திருக்கின்றனர். எனவே, இக் கூட்டுறவு மாதிரிப் பண்ணைகள் வளர்ச்சி பெற்று நல்ல முறையில் இயங்க வேண்டுமானால் பின்வரும் ஆலோசனைகளை ஏற்று அவை செயலாற்ற வேண்டுமென்று இக் குழு குறிப்பிட்டுள்ளது.

(1) சிறு குடியானவர்கள் சேர்ந்து கூட்டுறவுப் பண்ணைகளை அமைக்குமாறு உற்சாகம் கொடுக்க வேண்டும். மிகச் சிறிய அளவில் நிலம் வைத்திருப்போர் நடத்தும் கூட்டுறவுப் பண்ணைகளுக்கு என்னென்ன உதவியும் சலுகையும் தேவையோ அவற்றையெல்லாம் தாராளமாக வழங்க வேண்டும்.

(2) கூட்டுறவுப் பண்ணையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பல பேர் உறுப்பினர்களாவதற்குத் தடை ஏதும் இருக்கக் கூடாது. அதற்காக வயது வராத சிறுவர்களைக்கூட எண்ணிக்கைக்காகச் சேர்க்கக் கூடாது. ஒரு கூட்டுறவுப் பண்ணைச் சங்கம் அமைக்க எத்தனை உறுப்பினர்கள் தேவையோ அத்தனை பேரும் தனிப்பட்ட குடியானவர்களாயும் நிலமுடையோராயும இருக்க வேண்டும். அந் நிலத்தில் ஏற்கெனவே பாடுபட்டு வந்த நிலமில்லாப் பண்ணையாள்களும் உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட வேண்டும்.

(3) 250 கூட்டுறவுப் பண்ணைகளுக்கு மேல் அமைக்கப்பட்டுள்ள மாநிலங்களிலெல்லாம் அக் கூட்டுறவுப் பண்ணைகளின் கூட்டமைப்பு மாநில மட்டத்தில் அமைக்கப்பட வேண்டும். மாவட்ட அல்லது பிராந்திய அடிப்படையிலும் இவ் வகைக் கூட்டமைப்புகளை ஏற்படுத்துவது நல்லது.

(4) கூட்டுறவுப் பண்ணையில் சேரும் உறுப்பினர்கள் தம் நிலம் முழுவதையும் அச் சங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும். நில வளத்தை அதிகரிக்கவும், கிணறு வெட்டுதல், வேலி அமைத்தல் போன்ற பணிகளைச் செய்வதிலும் சங்கம் அக்கறை காட்ட வேண்டும். அதனோடு, பால் பண்ணைகள், ஆடு மாடு வளர்த்தல் போன்ற தொழில்களையும் கூட்டுறவுப் பண்ணைகள் மேற்கொள்ள வேண்டும்.

(5) ஒவ்வொரு மாநில அரசாங்கமும் நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் எந்த அளவு குத்தகை நிர்ணயித்துள்ளதோ அந்த அளவுக்குமேல் நிலச் சொந்தக்கார உறுப்பினர்களுக்கு நில ஈவு கொடுக்கக் கூடாது. நன்கு பாடுபடும் உறுப்பினர்களுக்கு அவர்களின் உழைப்பிற்கேற்ற ஊக்கத் தொகை வழங்கும் முறையைப் புகுத்த வேண்டும்.

அரசாங்க உதவி

கூட்டுறவுப் பண்ணை செயலாற்றும் முறையை ஆய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட குழுவின் ஆலோசனைப்படி இணைப்புக் கூட்டுறவுப் பண்ணைகளுக்கு அரசாங்கம் பல உதவிகளைச் செய்து

வருகிறது. ஒவ்வொரு பண்ணைக்கும் ரூ. 2,000 வரை தன் பங்கு மூலதனமாகச் செலுத்துகிறது; நிர்வாகச் செலவுக்கென்றும் 3 அல்லது 5 ஆண்டுகள் வரை ரூ. 1,200 மானியமாக வழங்குகிறது. இப் பண்ணைகள் தங்களுக்கு வேண்டிய மாட்டுத் தொழுவங்களையும் விவசாயக் கிடங்குகளையும் கட்டுவதற்கென்று ஒவ்வொரு பண்ணைக் கும் ரூ. 5,000 வரை நிதி உதவி அளிக்கிறது. இந்த 5,000 ரூபாயில் 75 சதவீதம் கடனாகவும் 25 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங்கப்படுகிறது. அதனோடு, ரூ. 4,000 வரை நீண்ட காலக் கடனாகவும் நிதி உதவி செய்து வருகிறது.

ஆனால், காட்கில் குழுவினரின் பரிந்துரையின்படி இவ்வுதவி களெல்லாம் மாற்றப்பட்டு விட்டன. இணைப்புக் கூட்டுறவுப் பண்ணை ஒவ்வொன்றுக்கும் அதிகப் பட்சம் ரூ. 28,200 வரை வழங்கப்படுகிறது; அதேபோல் கூட்டுப் பண்ணைக்கு ரூ. 39,000 வரை உதவி செய்யப்படுகிறது. இணைப்புப் பண்ணைக்கு அளிக்கப் படும் உதவியில் ரூ. 2,000 அரசாங்கப் பங்கு மூலதனமாகவும், விவசாயக் கிடங்கையும் மாட்டுத் தொழுவத்தையும் அமைக்கக் கடனாகவும் உதவித் தொகையாகவும் ரூ. 5,000 வரை கொடுக்கப்படு கிறது. அதனோடு, நில அபிவிருத்திக்கென்று ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் அதிகப் பட்சம் ரூ. 20,000 வரை அளிக்கப்படுகிறது ; நிர்வாக உதவியாகவும் ரூ. 1,200 வரை வழங்கப்படுகிறது. கூட்டுப் பண்ணை களுக்கும் பெரும்பாலும் இதே மாதிரி உதவி செய்யப்படுகிறது. எனினும், நில அபிவிருத்திக்கென்று கூட்டுப் பண்ணைக்கு அளிக்கப் படும் நிதி உதவி அதிகம். அதாவது ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 150 வீதம் ரூ. 30,000 வரை அளிக்கப்படுகிறது. அதே போல் நிர்வாக உதவி யும் ரூ. 2,100 வரை வழங்கப்படுகிறது.

ஏன் மக்களின் ஆதரவு இல்லை?

கூட்டுறவுப் பண்ணை முறையில் எவ்வளவோ நன்மைகள் இருந்தும் பெரும்பாலான மக்கள் இதில் சேர முன் வருவதில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. கூட்டுறவுப் பண்ணையில் சேரு வதால் தம் சுதந்திரத்தை மக்கள் இழக்க வேண்டியுள்ளது. இப் பண்ணையில் சேரும் ஒருவர் தம் இச்சைப்படி எதையும் செய்ய முடியாது; சங்கத்தின் தீர்மானத்தின்படிதான் நடக்கவேண்டும். தனியாகச் சாகுபடி செய்தால் கிடைக்கும் விளைச்சலை அந்தந்த விவசாயி மட்டுமே அனுபவிக்கமுடியும். ஆனால், கூட்டுறவுப் பண்ணையில் தம் உழைப்பிற்கும் நிலத்திற்குமேற்பச் சங்கம் எவ்வளவு பலன் தருகிறதோ அதைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். கூட்டுறவுச் சங்கத்திற்குத் தம் நிலத்தை ஒப்படைத்து விட்டால் அதைத் தம் இச்சைப்படி விற்கவோ குத்தகைக்கு

விடவோ முடியாது. மேலும், சொந்தச் சாகுபடி நிலமாயிருந்தால் உற்சாகமாகப் பாடுபட்டு விளைச்சலைப் பெருக்க ஆர்வம் ஏற்படுகிறது; ஆனால், கூட்டுறவுப் பண்ணையில் அந்த ஆர்வமும் உற்சாகமும் அவ்வளவாகத் தோன்றுவதில்லை. இறுதியாக, சொந்தமாகத் தனியாகவே சாகுபடி செய்யும்போது தம் இச்சைப்படி உழவும், குறிப்பிட்ட பயிரைச் சாகுபடி செய்யவும் முடியும்; எந்த வேலையாக இருந்தாலும் தம் விருப்பப்படி செய்யலாம்; ஆனால், கூட்டுறவுப் பண்ணையில் அவ்வாறு செய்ய முடியாது.

எனவே, இவ்வளவு சிக்கல்களையும் தாண்டிக் கூட்டுறவுப் பண்ணை முறை வெற்றிகரமாக முன்னேற வேண்டுமாயின், இப் பண்ணை முறையால் நமக்குத்தான் நன்மை என்பதைக் குடியானவர்கள் நன்கு புரிந்து கொள்ளும்படி செய்யவேண்டும். கூட்டுறவுப் பண்ணைகளுக்குவேண்டிய எல்லாச் சாதனங்களையும் எளிதாகப் பெறமுடியும் என்ற உண்மையை விவசாயிகள் உணரவேண்டும். மேலும், கூட்டுறவுப் பண்ணைகளால் மட்டும்தான் பண்ணையின் அளவைப் பெருக்க முடியும். நவீனச் சாகுபடி முறையை ஏற்க முடியும் என்பதையும் விவசாயிகள் அறியவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, இக் கூட்டுறவுப் பண்ணைகள் வளர்ச்சி பெறக்கூடிய சமூகச் சூழ்நிலையை உருவாக்குவதுதான் மிக முக்கியமானது.

நான்காம் திட்டத்தில் கூட்டுறவுப் பண்ணை

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் நம் நாட்டில் மொத்தம் 8,600 கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்கள் இருந்தன. இவற்றில் மொத்தம் 2.2 இலட்சம்பேர் உறுப்பினர்களாக இருந்தனர். சுமார் 9.7 இலட்சம் ஏக்கர் நிலத்தை இச் சங்கங்கள் அந்தந்தப் பகுதியில் ஒன்று சேர்த்துச் சாகுபடி செய்து வந்தன. இச் சங்கங்களில் 4,200 மட்டும் நல்ல முறையில் இயங்கி வந்தன. மேலும், 4,000 சங்கங்களை நல்ல முறையில் இயங்க வைப்பதற்கான உதவியை அரசாங்கம் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ. 8,000 வீதம் கொடுத்து அவற்றைப் புத்துயிர் பெறச் செய்வதற்கென்று மொத்தம் 3.2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், 2,000 புதிய கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப் புதிய பண்ணைகள் கூட்டுறவுப் பண்ணைகளை வழி நடத்திச் செல்லக்கூடிய திறமையானவர்களுள்ள இடங்களில்தாம் தொடங்கப்படும்; அதேனுடு, சிறு குடியானவர்களுக்காகத்தாம் அமைக்கப்படும். புதிய சங்கம் ஒன்றைத் தொடங்கி நடத்த ரூ. 18,000 வீதம் ரூ. 3.6 கோடி இவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுப் பண்ணைகள் பால் பண்ணை, கால்நடை வளர்த்தல், பயிர்த் தொழிலோடு சம்பந்தப்பட்ட ஏனைய தொழில்கள் ஆகிய வற்றையும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக ஒவ்வொரு பண்ணைக்கும் ரூ. 5,000 ஒதுக்கப்பட்டுள்ளது. அதனோடு, பண்ணை சம்பந்தப்பட்ட ஒவ்வொரு அரசாங்கத்துறையும் இதற்கான உதவியைச் செய்யும். இத் திட்டப்படி 1973-74-ல் மொத்தம் 11,000 கூட்டுறவுப் பண்ணைகள் நாட்டில் இயங்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றின் உறுப்பினர்கள் 3 இலட்சத்திற்கும், சாகுபடி நிலம் 12 இலட்சம் ஏக்கருக்கும் அதிகரிக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆய்வுரை

நம் நாட்டில் கூட்டுறவு இயக்கம் வெற்றி காணாத துறை ஏதேனும் உண்டெனின், அது கூட்டுறவுப் பண்ணைத் துறைதான். கடந்த பல ஆண்டுகளாக கூட்டுறவுப் பண்ணை முறையைப் பரப்ப எவ்வளவோ முயற்சித்தும் முடியாமல் போய்விட்டது. மத்திய அரசின் கூட்டுறவுத் துறையினர்கூட இதை ஒப்புக்கொண்டு வருத்தம் தெரிவித்துள்ளனர். தமிழ் நாட்டைப் பொருத்தவரை கூட்டுறவு இணைப்புப் பண்ணைகளை ஏற்படுத்தும் முயற்சியினால் பயனேதும் இல்லாமல் போய்விட்டது; எனவே, இனிமேல் இம் முயற்சியை மேற்கொள்ள வேண்டாமென்று தமிழ் நாடு அரசு முடிவு கட்டிவிட்டது.

கூட்டுறவுப் பண்ணை முறையினால் ஏற்படக்கூடிய நன்மைகளை இந்திய விவசாயிகள் சந்தேகப்படுவதே இத் தோல்விக்குக் காரணமாகும். நடப்பிலுள்ள கூட்டுறவுப் பண்ணைகளும் அவர்களது சந்தேகத்தைப் போக்குவதற்குப் பதிலாக அதை ஊர்ஜிதப்படுத்தும் வகையில்தான் இயங்கி வருகின்றன.

25. கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள்

சந்தையிடுகை என்ற சொல் விரிந்த பொருளுடையதாகும். மண்டியிலோ சந்தையிலோ விற்பனையாவதை மட்டும் குறிப்பிடாமல், பொருள் உற்பத்தி செய்யப்படும் இடத்திலிருந்து நுகர்வோரை அடையும்வரை செய்யப்படும் பல்வேறு பணிகளையும் இச்சொல் குறிப்பிடுகிறது. சான்றாக, உற்பத்தியாகும் இடத்திலிருந்து பொருள்கள் ஏற்றிச் செல்லப்பட்டு, தரவாரியாகப் பிரிக்கப்பட்டுப் பத்திரமாக வைக்கப்படுகின்றன; அதோடு, அவற்றை நுகர்ச்சிக்கு ஏற்றவாறு பக்குவப்படுத்தி, அவற்றை மூட்டை கட்டி விற்க வேண்டியுள்ளது. இவற்றையெல்லாம் முறையாகச் செய்வதற்குப் பணம் அவசியம். இவ்வாறாக, மேற்கூறிய படி உள்ள நிலைகளெல்லாம் சேர்ந்ததுதான் சந்தையிடுகை எனப்படுகிறது.

கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கத்தின் அவசியம்

விவசாயிகள் தம் விளைச்சலை வியாபாரிகளின் வாயிலாகவே விற்பனை செய்யும்போது பல தவறுகள் ஏற்படுவதுண்டு. வியாபாரிகள் சரியில்லாத எடைகளையும் எடைக் கற்களையும் பயன்படுத்தி, விவசாயிகளை ஏமாற்றுவதுண்டு. விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டிய தொகையில் கோயிலுக்காக, தர்மத்திற்காக வென்று சொல்லி தள்ளுபடி செய்யலாம்; அல்லது மொத்தமாக வாங்கும்போது மாதிரிக்காக என்று சொல்லி கணிசமான அளவு பொருளை எடுத்துச் சென்றுவிடலாம். தரகர்களை அமர்த்தி விவசாயிகளுக்குப் புரியாத முறையில் பேரம்பேசி அவர்களை ஏமாற்றிவிடலாம். சில சமயங்களில் வியாபாரிகள் நேரடியாகவே கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளிடம் திறமையாகப் பொய் பேசி மலிவாகப் பொருள்களை வாங்கிவிடுவதுமுண்டு. வாங்கிய பொருள்களைப் பதுக்கி வைத்து, கிராக்கியை ஏற்படுத்திக் கொள்ளை இலாபத்திற்கு விற்பதுமுண்டு. வியாபாரிகளின் இத் தீய நடவடிக்கைகளால் விவசாயிகள் மட்டுமன்றி, சாதாரண நுகர்வோரும் கூடப் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இவ் விதத் தவறு ஏதும்

ஏற்படாமலிருக்கத்தான் ஒழுங்குமுறை அங்காடி (Regulated market) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இருந்தாலும், தவறுகள் அனைத்தும் மறைந்துவிடவில்லை. அங்காடிக்கு வெளியே வேறுவிதமாக விவசாயிகள் ஏமாற்றப்படுகின்றனர். இதையுணர்ந்துதான் கிராமக் கடன் மறு ஆய்வுக் குழுவினரும் அகில இந்திய கிராமக் கடன் பரிசீலனைக் குழுவினரும் கூட்டுறவு விற்பனையை வலியுறுத்தினர். கூட்டுறவு சந்தையிடுகைச் சங்கங்கள் இருந்தால்தான் அரசாங்கம் தரும் விலை உத்தரவாதக் கொள்கை வெற்றிபெற முடியும்.

குறிக்கோள்களும் பணிகளும்

கூட்டுறவு சந்தையிடுகைச் சங்கங்களின் குறிக்கோள்களையும் பணிகளையும் சுருக்கமாகக் காண்போம் :

1. உறுப்பினர்களின் விளைச்சலை நல்ல விலைக்கு விற்பது;
2. அவர்களது விளைச்சலின் அடிப்படையில் அவர்களுக்கு வேண்டிய கடனை அளிப்பது;
3. அவர்களின் விளைச்சலைப் பத்திரப் படுத்தி வைப்பது;
4. பொருள்களைத் தரவாரியாகப் பிரித்து, அதற்கேற்ற விலைக்கு விற்பது;
5. விவசாயிகளின் விளைச்சலையெல்லாம் ஒன்றுதிரட்டி நல்ல விலைக்கு விற்பது;
6. பிறநாடுகட்குத் தேவைப்படும் பொருள்களை நேரடியாகவே ஏற்றுமதி செய்வது;
7. அரசாங்கம் கொள்முதல் செய்யும் பொருள்களை அதன் சார்பாகப் பெற்று விநியோகிப்பது;
8. விளைச்சலை அதிகரிப்பதற்கும் விளைச்சலின் தரத்தை உயர்த்துவதற்கும் தேவைப்படுகின்ற விவசாயக் கருவிகளை விநியோகம் செய்வது;
9. போக்குவரத்துக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருவது.

உறுப்பினர்கள்

சந்தையிடுகைச் சங்கங்களில் நடுத்தர விவசாயிகள், சிறு விவசாயிகள் அனைவரும் கூடுமானவரை உறுப்பினர்களாயிருப்பது நல்லது. தனிப்பட்ட விவசாயிகள் மட்டுமன்றி, கூட்டுறவுப்

பண்ணைகளும், கூட்டுறவுச் சேவைச் சங்கங்களும் இவற்றில் உறுப்பினர்களாக இருந்தால் மிக நன்றாயிருக்கும். அப்போதுதான் கடன் கொடுக்கும் பணியைக் கூட்டுறவு விற்பனைப் பணியோடு இணைக்க முடியும். எக்காரணத்தைக் கொண்டும் விற்பனைச் சங்கங்களில் வியாபாரிகளை உறுப்பினர்களாக ஆக்கக் கூடாது. வேண்டுமானால் இச்சங்கங்கள் தொடர்பு கொண்டுள்ள வியாபாரிகளை மட்டும் பெயரளவில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளலாம். வியாபாரிகள் இச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருந்தால் என்னென்ன ஆபத்து உண்டாகும் என்பதை முன்னரே விளக்கியுள்ளோம்.

தேவையான நிதி

ஏனைய சங்கங்களைப் போலவே கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களுக்கும் பங்கு மூலதனம்தான் அடிப்படை நிதியாக அமைந்துள்ளது. 1966-ல் நியமிக்கப்பட்ட கூட்டுறவு விற்பனை ஆய்வுக் குழுவின் கருத்துப்படி, கூட்டுறவு விற்பனைச் சங்கம் நல்ல முறையில் இயங்கவேண்டுமானால், ஒவ்வொரு சங்கத்திற்கும் 2 இலட்சம் ரூபாய் மூலதனமாவது இருக்கவேண்டுமாம். எனவே, ஒவ்வொரு சங்கத்திற்கும் அரசாங்கம் 1 இலட்சம் ரூபாயாவது தனது பங்குத் தொகையாகச் செலுத்தவேண்டுமென இக் குழு ஆலோசனை கூறியுள்ளது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தம் மூலதனத்தைப் பெருக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளது. விவசாய விற்பனை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் விற்பனைச் சங்கங்களும் தம் மூலதனத்தைப் பெருக்கவேண்டுமெனக் கூறியுள்ளது. அவ்வாறு பெருக்குவதற்கு உறுப்பினர்கள் அதிக அளவு பங்கு மூலதனத்தைப் பெறும் வகையில் ஊக்குவிக்கப்படவேண்டும்; தங்களது இலாப ஈவை அப்படியே மறுபடியும் பங்கு மூலதனமாகச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென சிபாரிசு செய்துள்ளது. விற்பனைச் சங்கம் நன்கு வளர்ந்து திடமான பின்னர், உறுப்பினர்கள் பெறும் விற்பனைத் தொகையிலிருந்து ஒரு பகுதியைக் கட்டாயமாகப் பெற்று தன் நிதி நிலையை உயர்த்த வேண்டும் என்றும் கூறியுள்ளது. மேலும், தொடக்கக் கடன் சங்கங்கள் தத்தம் சொந்த நிதியில் 5 சதவீதத்தையாகிலும் விற்பனைச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்ய வேண்டுமென்றும் அறிவுரை வழங்கியுள்ளது. மேலும், உறுப்பினர்களின் பங்கு அளவுக்கு அரசாங்கமும் முதலீடு செய்து வருகிறது; ஆனால், மைசூர், கேரளா, ராஜஸ்தானம் போன்ற மாநிலங்களில் உறுப்பினர்களின் பங்கைப் போல் 2 மடங்கும், பின் தங்கியுள்ள வேறு சில மாநிலங்களில் 3 மடங்கும் அரசாங்க மூலதனம் இருக்க வேண்டுமென இக் கழகம் பரிந்துரை செய்துள்ளது.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வெறும் பங்கு மூலதனத்தை மட்டும் கொண்டு பணியாற்ற இயலாது. பங்கு மூலதனம் எந்த வகையிலும் போதாது. வேண்டுமானால், பங்கு மூலதனத்தை ஆதாரமாகக் கொண்டு கடன் வாங்கலாம். எனவே, கூட்டுறவு மத்திய வங்கிகளும் ஸ்டேட் 'பாங்கும்தாம் இச் சங்கங்களுக்கு வேண்டிய நிதியைக் கடனாகக் கொடுத்து உதவுகின்றன. கூட்டுறவு மைய வங்கிகள் கொடுக்கும் கடனை ரிசர்வ் பாங்கிடமிருந்து பாங்கு வட்டியைக் காட்டிலும் 2 சதவீதம் குறைந்த வட்டிக்குத் திரும்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் தம் விற்பனைப் பொருள்களை அடைமானம் வைத்து ஸ்டேட் பாங்கிடமிருந்து 75 சதவீதம் வரை கடன் பெறுகின்றன. இக் கடன் அடைமானக் கடன் எனப்படும். இது தவிர, சாதாரணக் கடனையும் ஸ்டேட் பாங்கு வழங்குகிறது. இச் சாதாரணக் கடன் சந்தையிடுகைச் சங்கங்களின் சொந்த நிதியைப் போல் இருமடங்குவரை வழங்கப்படுகிறது. இக் கடன் சந்தையிடுகைச் சங்க இயக்குநரின் உத்தரவாதத்தின் பேரில் அல்லது கூட்டுறவு மாநில மத்திய வங்கிகளோ கூட்டுறவுச் சந்தையிடுகைத் தலைமைச் சங்கமோ தரும் உத்தரவாதத்தின் பேரில் அளிக்கப்படுகிறது. இதற்கு பாங்கு வட்டியைவிட $\frac{1}{2}$ சதவீதம் அதிகமாக வட்டி வசூலிக்கப்படுகிறது.

கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் மாநில அரசாங்கத்திடமிருந்தும் மானியத்தொகை பெறுகின்றன. இத் தொகை மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் நிர்வாகச் செலவுக்காகக் கொடுக்கப்படுகிறது. மொத்த நிர்வாகச் செலவின் முழுத்தொகையும் முதல் வருட மானியமாக வழங்கப்படுகிறது; இரண்டாவது ஆண்டில் நிர்வாகச் செலவில் 66 சதவீதமும், மூன்றாவது ஆண்டில் 33 சதவீதமும் மானியமாக வழங்கப்படுகிறது. விற்பனைப் பொருள்களைத் தரவாரியாகப் பிரிப்பதற்கு வேண்டிய சாதனங்களை வாங்கவும் விற்பனைச் சங்கங்கள் மாநில அரசாங்கத்திடமிருந்து மானியம் பெறுகின்றன. அதோடு, ஒருசில குறிப்பிட்ட சங்கங்களுக்குப் போக்குவரத்துச் சாதனங்களை வாங்குவதற்கென்றும் மாநில அரசாங்கம் கடன் அளிக்கின்றது. இக் கடனை ஏழு ஆண்டுகளுக்குள் தவணை முறையில் திருப்பிச் செலுத்தவேண்டும். மாநில அரசாங்கம் தரும் நிதி உதவியில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும் பங்கு ஏற்றுக் கொள்கிறது. நிர்வாக மானியத் தொகையில் 50 சதவீதமும், தரம் பிரிக்கும் சாதனத்திற்கென அளிக்கப்படும் மானியத் தொகையில் 50 சதவீதமும், போக்குவரத்து வாகனங்களுக்காக அளிக்கப்படும் தொகையில் 75 சதவீதமும் இக் கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

விற்பனை நடவடிக்கைகள்

1. **கமிஷன் முறை :** சந்தையிடுகைச் சங்க உறுப்பினர்கள் தம் விளை பொருள்களைச் சங்கத்திற்குக் கொண்டு வந்து உடனடியாகச் சங்கத்தின் வாயிலாகவே விற்கும் முறைதான் பெரும்பாலும் கடைப்பிடிக்கப்படுகிறது. இம்முறைப்படி உறுப்பினர்களின் விளை பொருள்களைச் சங்கம் ஏலம் விடுகிறது. அதிகத் தொகைக்கு ஏலம் கேட்போருக்கு விற்கப்படுகிறது. விற்பனைத் தொகையை உரிய உறுப்பினருக்குச் சங்கம் கொடுத்துவிட்டு, இரண்டு மூன்று நாள்களில் ஏலம் எடுத்தவரிடமிருந்து பெற்றுக்கொள்கிறது. இம்முறையில் உறுப்பினர்களின் பதிலாள்போல் சங்கம் செயல்படுவது குறிப்பிடத்தக்கது. இதற்குரிய கமிஷன் கட்டணத்தைச் சங்கம் எடுத்துக் கொள்கிறது.

2. **நேரடியாக வாங்கும் திட்டம் :** கமிஷன் அடிப்படையில் விற்கப்படும் முறையில் எவ்வித நட்டமும் ஏற்பட வழியில்லை. எனினும், இம் முறையால் விவசாயிகளுக்கு அவ்வளவு பலன் கிடைக்குமென்று சொல்லமுடியாது. ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட சந்தையில்தான் பொருள்கள் ஏலம் விடப்படுகின்றன; இருந்தபோதிலும், ஏலம் கேட்க வியாபாரிகள் யாரும் முன் வராமலிருக்கலாம்; அல்லது வியாபாரிகள் கூட்டுச் சேர்ந்து குறைந்த விலைக்கே ஏலம் கோரலாம். அப்போது சங்கத்தின் விற்பனைப் பணியும் நோக்கமும் பாதிக்கப்பட்டு விடுகிறது. எனவே, சங்கமே அப்பொருள்களை வாங்க வேண்டுமென மேத்தா குழுவினர் ஆலோசனை கூறியுள்ளனர். அப்படிச் சங்கமே வாங்கினால், ஒரு வேளை சங்கத்திற்கு நட்டம் ஏற்படலாம். எனவே, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் 1964-65-ல் செய்துள்ள பரிந்துரையின்படி திறமை பெற்ற நிர்வாகியைக் கொண்ட விற்பனைச் சங்கங்கள் தாம் பொருள்களை நேரடியாகக் கொள்முதல் செய்யவேண்டும். மேலும், அவ்வாறு செய்யும் சங்கத்தில் நல்லமுறையில் இயங்கி வரும் கடன் சங்கங்களும் உறுப்பினர்களாக இருக்கவேண்டும். அதோடு, விவசாயப் பண்டங்களைப் பக்குவப்படுத்தும், ஆலைகளையும் அச் சங்கங்கள் பெற்றிருக்கவேண்டும். இவ்வளவு தகுதி பெற்ற சந்தையிடுகைச் சங்கங்கள்கூட விவசாயப் பொருள்களை வாங்கும் போது முன் எச்சரிக்கையுடனும் நட்டம் ஏற்படாவண்ணமும் வாங்க வேண்டுமென இக் கழகம் கருத்துத் தெரிவித்துள்ளது. இக் கருத்துப்படி சந்தையிடுகைச் சங்கங்கள் நேரடியாகவே கொள்முதல் செய்யும்போது பின்வரும் நிபந்தனைகளைக் கடைபிடித்தல் நன்று :

(அ) கூட்டுறவு சந்தையிடுகைச் சங்கம் தானாகவே கொள்முதல் செய்யாமல் தனக்கு மேல் நிலையிலுள்ள சந்தையிடுகைச்

சங்கத்தின் சார்பில் அல்லது அச்சங்கத்தோடு கூட்டாகச் சேர்ந்து கொள்முதல் செய்வது நன்று. அப்போது குறிப்பிட்ட விலைக்குள் வாங்க வேண்டுமென்ற நிபந்தனையும் இருக்கவேண்டும்.

(ஆ) சங்கம் தன் சொந்த நிதியைப் போல் இரண்டு மடங்கு அளவுக்குத்தான் கொள்முதல் செய்யவேண்டும். எந்த உறுப்பினரிடமிருந்தும் ரூ. 750-க்கு மேல் பொருள்களை வாங்கக் கூடாது. இந்த வரம்பை மாநில அரசாங்கம் ரூ. 1,500 ஆக உயர்த்திக்கொள்ளலாம்.

(இ) ஊக வணிக நோக்கத்தோடு எந்தச் சங்கமும் வாங்கக் கூடாது. அதாவது, வாங்கிய பொருள்களை வெகு நாள்களுக்குத் தேக்கி வைக்கக்கூடாது.

(ஈ) வாங்கிய பொருள்களைப் பத்திரமாக வைத்து, அடிக்கடி பார்த்துக் கொள்ள வேண்டும். வாங்கிய பொருள்களுக்கு அதிக விலை கொடுத்துவிட்டோமா மலிவாக வாங்கி விட்டோமா என்பதை நன்கு பரிசீலனை செய்யவேண்டும். அப்போதுதான் மறுபடியும் அத் தவறு ஏற்படாமல் எச்சரிக்கையாக இருக்க முடியும்.

எவ்வளவுதான் முன் எச்சரிக்கையுடன் கொள்முதல் செய்தாலும் விலைவாசிகள் ஏறி இறங்குவதால் ஏற்படக்கூடிய நட்டத்தைத் தவிர்க்க முடியாது. எனவே, அவற்றிற்கு நிதி உதவி செய்யும் திட்டமொன்றை மத்திய அரசாங்கம் உருவாக்கியுள்ளது. இத் திட்டப்படி, விவசாயிகளிடமிருந்து நேரடியாகவே கொள்முதல் செய்யும் சந்தையிடுகைச் சங்கங்கள் 'விலை ஏற்றத்தாழ்வு நிதி' யொன்றை (Price Fluctuation Fund) உருவாக்கி, தமக்குக் கிடைக்கும் நிகர இலாபத்தில் 10 சதவீதத்தை அந் நிதியில் சேர்க்கின்றன. அரசாங்கமும் 'விலை ஏற்றத் தாழ்வுத் தனி நிதி' ஒன்றுக்கு கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் முந்திய ஆண்டில் கொள்முதல் செய்த விவசாயப் பொருள்களில் 2 சதவீத மதிப்பிற்குப் பணம் போடுகிறது. இவ்வாறு அரசாங்கம் இந் நிதிக்குச் செலுத்தும் தொகைக்கு உச்சவரம்பு உள்ளது. அதாவது, தொடக்க விற்பனைச் சங்கமாயிருந்தால் அதிக பட்சம் ரூ. 20,000 என்றும், பிராந்தியச் சந்தையிடுகைச் சங்கத்திற்கு ரூ. 1 இலட்சம் என்றும், தேசிய அளவில் அமைக்கப்பட்டுள்ள சங்கத்திற்கு ரூ. $2\frac{1}{2}$ இலட்சம் என்றும் நிர்ணயித்துள்ளது. கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் தாம் கொள்முதல் செய்த பண்டங்களைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தாலோ அப் பண்டங்களைச் சொந்தமாகவே பக்குவப்படுத்தி விற்பனை செய்தாலோ அவற்றின் மதிப்பில் 5 சதவீதம் வரை மாநில அரசாங்கமும் உதவி செய்கிறது. கூட்டுறவுத் தலைமைச் சந்தையிடு

கைச் சங்கம் விவசாயப் பொருள்களை நேரடியாக வாங்கும்போதும் அரசாங்கம் இவ்வுதவியைச் செய்கிறது. அரசாங்கம் செலுத்தும் இத் தொகை கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கத்திற்கே சொந்த மாகிவிடுகிறது; எனினும் அதைத் தன் தொழிலுக்காக எந்தச் சங்கமும் பயன்படுத்தக் கூடாது. குறிப்பிட்ட அந் நிதியிலேயே அது இருக்கவேண்டும். சங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டால் அதில் 50 சதவீதம் 'விலை ஏற்றத் தாழ்வு நிதி'யிலிருந்தும், 50 சதவீதம் 'விலை ஏற்றத் தாழ்வுத் தனி நிதி'யிலிருந்தும் ஈடு செய்யப்பட வேண்டும். இந் நிதிகளுக்கு 1969 வரை அரசாங்கம் ரூ. 49 இலட்சம் கொடுத்துள்ளது. இத் திட்டம் உருவாக்கப்பட்ட 1964-65ஆம் ஆண்டில் 138 சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. 1965-66-ல் மேலும் 218 சங்கங்களும், 1966-67-ல் 219 சங்கங்களும், 1967-68-ல் 197 சங்கங்களும், 1968-69-ல் 198 சங்கங்களும் இத் திட்டத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டன.

௫. **இருப்புக்கு முன் பணம் கொடுக்கும் முறை:** பெரும் பாலும் விவசாயிகளுக்கு உடனடியாகப் பணம் தேவைப்படுவதால் அறுவடை முடிந்தவுடனேயே தம் விளை பொருள்களை விற்கத் தொடங்குகின்றனர். இவ்வாறு ஒரே சமயத்தில் எல்லா விவசாயி களும் விற்க முற்படும்போது விலைவாசிகள் இறங்கிவிடுகின்றன. இச் சூழ்நிலையைச் சாதகமாகக் கொண்டு வியாபாரிகள் அவற்றை மலி வாக வாங்கி இருப்பில் வைத்து, விலை ஏறும்போது விற்பனைசெய்து இலாபம் பெறுகின்றனர். இதனால் வியாபாரிகளுக்குக் கொள்ளை இலாபமும் விவசாயிகளுக்குப் பெருநட்டமும் ஏற்படுகிறது. எனவே, கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் அறுவடையான விவசாயப் பண்டங்களை இருப்பாக வைத்து நல்ல விலைக்கு விற்று விவசாயி களுக்கு உதவுவதற்காக விவசாயக் கிடங்குகளைக் கட்டி, அவற்றில் அப் பொருள்களை விவசாயிகள் இருப்பாக வைக்க ஏற்பாடு செய் துள்ளன. விவசாயிகளுக்கு உடனடியாகப் பணம் தேவைப்படுவ தால் அவர்கள் வைத்துள்ள இருப்பின் மதிப்பில் 60 முதல் 75 சதவீதத் தொகையை இச் சங்கங்கள் முன் பணமாகக் கொடுக் கின்றன. விலை ஏறியபின் அவற்றை விற்று, முன் பணமாகக் கொடுத்த தொகையைக் கழித்துவிட்டுப் பாக்கித் தொகையை அவ் விவசாயிகளுக்குக் கொடுக்கின்றன. இம் முறையில் சந்தையிடுகைச் சங்கங்களுக்கு நட்டம் ஏற்பட வழியில்லை. அதோடு, விவசாயி களும் தம் பொருள்களை இருப்பில் வைத்து நல்ல விலைக்கு விற்றுப் பயனடைகின்றனர். மேலும், இருப்பிலுள்ள பொருள்கள் கொஞ்சம் கொஞ்சமாக விற்கப்படுவதால், அறுவடையின்போது விலை அதிக மாகச் சரியாமலும் ஒருசில மாதங்களுக்குப்பின் அதிகமாக ஏறாமலும் ஒரே சீராக இருக்க முடியும்.

4. **தரம் பிரித்தல்:** விவசாயப் பொருள்களை அவற்றின் தரத்திற்கேற்ப பாகுபகுத்தி விற்ருல் நல்ல விலைக்கு விற்க முடியும்; எனவே, கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் தரவாரியாகப் பொருள்களைப் பாகுபடுத்தி விற்கின்றன. தரமானபொருள்களுக்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் நல்ல தரமான பொருள்களை உற்பத்தி செய்ய முற்படுகின்றனர்.

5. **ஒன்று திரட்டும் முறை:** பல்வேறு விவசாய உறுப்பினர்கள் விளைவித்துள்ள பொருளையெல்லாம் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் ஒன்று திரட்டி, அவற்றைத் தனித்தனியாக விற்காமல் மொத்தமாக விற்பனை செய்யும் முறையும் உள்ளது. இம் முறையில் பொருளை ஒன்றுதிரட்டுவதிலிருந்து விற்பனை செய்யும் வரை ஏற்படும் எல்லாச் செலவையும் உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். எந்தெந்த விலைக்கு விற்ருலும், கடைசியில் மொத்தமாக எவ்வளவு 'விற்பனையாகியிருக்கின்றது என்பதைக் கணக்கிட்டு, உறுப்பினர்களின் பொருள் அளவுக்கேற்ப அத் தொகை பகிர்ந்தளிக்கப்படுகிறது. முன்பணமும் உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுகிறது. இம் முறை மகாராஷ்டிரத்திலும் குஜராத்திலும் கையாளப் படுகிறது. பருத்தி விற்பனைச் சங்கங்கள் இம் முறையை நல்லவிதமாகப் பின்பற்றி வருகின்றன.

6. **ஏற்றுமதி:** இந்தியாவிலிருந்து பருத்தி, வேர்க்கடலை, புகையிலை, வாழைப்பழம், மாம்பழம் போன்ற பொருள்கள் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த ஏற்றுமதியால் பிற நாட்டு நாயணங்களை நாம் பெறமுடிகிறது; அது மட்டுமன்றி, இவற்றை விளைவிக்கும் விவசாயிகளுக்கு நல்ல விலையும் கிட்டுகிறது. எனவே, கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் இப் பொருள்களை ஏற்றுமதி செய்வதால் உறுப்பினர்களுக்கு நல்ல இலாபம் கிடைக்கிறது. தற்போது இவ் வகை ஏற்றுமதிப் பணியை தேசிய விவசாயக் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கக் கூட்டமைப்பு நிறுவனமும் மாநிலக் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கக் கூட்டமைப்பும் மேற் கொள்கின்றன. இக் கூட்டமைப்புகள் இந்த ஏற்றுமதிப் பொருள்களைத் தொடக்கச் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்கின்றன. 1963-ல் சிலோன், இங்கிலாந்து, மாரிஸ் தீவு முதலிய நாடுகளுக்குப் பருப்பு வகைகளை ஏற்றுமதி செய்யும் முழுப் பொறுப்பையும் தேசியக் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பே ஏற்றுக் கொண்டது. 1966-67-ல் மட்டும் மொத்தம் 138 கோடி ரூபாய் அளவுக்கு இப்பருப்பு வகைகளைக் கூட்டுறவுக் கூட்டமைப்புகள் ஏற்றுமதி செய்திருக்கின்றன. மகாராஷ்டிரத்திலுள்ள கூட்டமைப்பு

நிறுவனம் இத்தாலி, ரஷ்யா போன்ற நாடுகளுக்கு வாழைப் பழங்களை ஏற்றுமதி செய்து வருகிறது. 1964-65-ல் மட்டும் சுமார் 25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வாழைப் பழங்களை ஏற்றுமதி செய்திருக்கிறது. கேரளாவில் ஆலப்புழையிலுள்ள கொப்பரைத் தேங்காய் உற்பத்தியாளர் சங்கம் மேற்கு ஜெர்மனிக்கும் டென்மார்க்குக்கும் தேங்காய்ப் பிண்ணாக்கை ஏற்றுமதி செய்துவருகிறது. 1964-65-ல் சுமார் 88 இலட்சம் ரூபாக்கு இப் பிண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

7. உள் நாட்டு வியாபாரம்: வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதோடு, உள் நாட்டிலேயே ஒரு மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்கும் விவசாயப் பொருள்கள் விற்பனை செய்யப் படுகின்றன. இப் பணியையும் விற்பனைக் கூட்டமைப்பு நிறுவனங்கள் நல்ல முறையில் செய்து வருகின்றன. இக் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் 1962-63-ல் மட்டும் சுமார் 1 கோடி ரூபாய் மதிப்புள்ள விவசாயப் பொருள்களைப் பிற மாநிலங்களுக்கு விற்பனை செய்திருக்கின்றன. இந்த விற்பனை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. 1965-66-ல் 8 கோடி ரூபாயாக இருந்தது 1968-69-ல் 59 கோடி ரூபாய்க்கு அதிகரித்துள்ளது. மாநிலங்களுக்கிடையே வியாபாரம் செய்யப்படும் விவசாயப் பொருள்களில் பஞ்சாப் மாநிலம்தான் பெரும் பங்கு கொள்கிறது. அம் மாநிலக் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் உணவு தானியம், பழ வகைகள், சணல், பருத்தி, எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள் ஆகிய பண்டங்களைப் பிற மாநிலங்களுக்கு விற்பனை செய்து வருகின்றன.

8. அரசாங்கக் கொள்முதல்: தற்போது முக்கியமான உணவு தானியங்களை அரசாங்கமே கொள்முதல் செய்து மலிவாக விற்பனை செய்து வருகிறது. குறிப்பிட்ட விலையில் அரசாங்கத்தின் சார்பில் உணவுக் கார்ப்பரேஷனும் கூட்டுறவு விற்பனை நிலையங்களும் இப்பொருள்களைக் கொள்முதல் செய்கின்றன. பஞ்சாபில் உணவுக் கார்ப்பரேசனும் பஞ்சாப் மாநிலக் கூட்டுறவு விற்பனை நிலையமும் சேர்ந்து கொள்முதல் செய்கின்றன. 1969-70-ல் இவை கொள்முதல் செய்த கோதுமை மட்டும் 7.5 இலட்சம் டன்களாகும். ஏனைய மாநிலங்களிலும் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் இக் கொள்முதல் பணியில் பங்கு கொண்டுள்ளன.

விவசாயச் சாதன விநியோகம்: விவசாயத்திற்கு வேண்டிய சாதனங்களையும் வீட்டுக்கு வேண்டிய முக்கியப்பொருள்களையும் சேவைச் சங்கங்கள் விநியோகம் செய்வதாக முன்னரே

குறிப்பிட்டோம். சேவைச் சங்கங்கள் இவையனைத்தையும் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களின் வாயிலாகவே பெறுகின்றன. பெரும்பாலான மாநிலங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகத்தான் விவசாயிகளுக்கு வேண்டிய உரங்களெல்லாம் விநியோகிக்கப்படுகின்றன. ஒருசில ஆண்டுகளுக்கு முன்வரை நாட்டில் உற்பத்தியான உரங்களும் இறக்குமதி செய்யப்பட்ட உரங்களும் ஒன்று திரட்டப்பட்டு, மாநிலக் கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன; இந் நிலையங்கள் அவற்றைக் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் மூலமாகவும் சேவைச் சங்கங்கள் மூலமாகவும் விவசாயிகளுக்கு விநியோகித்து வந்தன.

ஆனால், தற்போது பொதுத் துறையிலும் தனியார் துறையிலுமுள்ள உரத்தொழிற்சாலைகள் யாருக்கு வேண்டுமானாலும் உரங்களை விற்க அனுமதிக்கப்பட்டுள்ளன. இந் நிலையில் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்க கூட்டமைப்புகள் உரத்தொழிற்சாலைகளுடன் ஒப்பந்தம் செய்து தமக்கு வேண்டிய அளவு உரத்தைப் பெற வேண்டியுள்ளது. அதன்படி, பல மாநிலக் கூட்டுறவு விற்பனை நிறுவனங்கள் ஒப்பந்தம் செய்து வருகின்றன. 1968-69-ல் மட்டும் சுமார் 33.34 கோடி ரூபாய்க்கு உரங்களைப் பெற்று விநியோகித்துள்ளன.

உரக் கடன்: விவசாயிகளுக்கு வேண்டிய உரங்களுக்காக மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்குக் கடன் கொடுத்து வந்தது. மாநில அரசாங்கங்கள் இக் கடன்தொகையை உரம் வாங்குவதற்கென்று கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடன் சங்கங்களுக்கும் 16 மாத காலத்திற்கென்று பகிர்ந்தளித்து வந்தன. ஆனால் 1966ஆம் ஆண்டு முதல் இக் கடன் 6 மாத காலத்திற்கு மட்டும் கொடுக்கப்படுகிறது; அதோடு, எல்லா உரத்திற்கும் இக் கடன் கொடுக்கப்படாமல் 50 சதவீதத்திற்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் இக் கடனைப் பெற்று 6 மாத காலத்திற்குள் உரங்களை விநியோகம் செய்ய முடியாது. இக் கட்டத்தை நீக்குவதற்காக ரிசர்வ் பாங்கு புதிய திட்டமொன்றை புகுத்தியுள்ளது. இத் திட்டத்தின்படி, மாநிலக் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் சேர்த்து வைத்துள்ள உரங்களுக்கு 90 சதவீதம் வரை ரிசர்வ் பாங்கு கடன் வழங்குகிறது. இக் கடன் அந்தந்த மாநில அரசாங்க உத்தரவாதத்தின்பேரில் மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் வழியாக வழங்கப்படுகிறது. 1967-68-ல் ரூ. 27.86 கோடி இவ்வகைக்காக வழங்கப்பட்டது. ரிசர்வ் பாங்கு மட்டுமன்றி வணிக வங்கிகளும், குறிப்பாக ஸ்டேட் பாங்கும் பஞ்சாப்

நேஷனல் பாங்கும் இந்த உரக்கடனை வழங்கி வருகின்றன. 1968-69-ல் மட்டும் சுமார் 21 கோடி ரூபாய் கடன் வழங்கியிருக்கின்றன. இருப்பிலுள்ள உரத்தில் 90 சதவீதம் வரை தான் ரிசர்வ் பாங்கு கடன் கொடுக்கிறது. எஞ்சிய 10 சதவீதத்திற்கு விற்பனைக் கூட்டமைப்புகளே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். இதற்காகத்தான் மாநில அரசுகள் அதிக அளவு பங்கு மூலதனத்தைப் பெறுகின்றன.

கூட்டுறவு நிறுவனங்கள் விவசாயத்திற்கு வேண்டிய சாதனங்களைச் சொந்தமாகவே உற்பத்தி செய்யவும் தொடங்கியுள்ளன. சான்றாக, 1967-ல் பதிவு செய்யப்பட்ட 'இந்திய விவசாயக் கூட்டுறவு உர நிறுவனம்' இரண்டு உரத்தொழிற்சாலைகளை 90 கோடி ரூபாய்ச் செலவில் கட்ட முனைந்துள்ளது. அதேபோல் மகராஷ்டிரத்திலுள்ள கூட்டுறவு உர, இரசாயனத் தொழில் நிறுவனம் ஜப்பான் நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து அமோனியம் குளோரைடை உற்பத்தி செய்யும் ஆலையொன்றை நிறுவியுள்ளது.

மேலும், அமோக விளைச்சலைத் தரக்கூடிய தரமான விதைகளையும் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் விநியோகம் செய்யத் தொடங்கியுள்ளன. 1968-69-ல் மட்டும் 24 கோடி ரூபாய் மதிப்புள்ள தரமான விதைகளை விற்பனை செய்திருக்கின்றன. அதோடு, விவசாய இயந்திரங்களையும் கருவிகளையும் கூடப் பெருமளவில் விற்பனை செய்துவருகின்றன. 1968-69-ல் 22 கோடி ரூபாய்க்கு விவசாய இயந்திரங்களையும் கருவிகளையும் விநியோகம் செய்திருக்கின்றன.

கூட்டுறவுக் கடனை விற்பனையோடு இணைத்தல்

அகில இந்திய விவசாயக் கடன் ஆய்வுக் குழுவினரின் அறிக்கைப்படி, வட்டிக்கடைக் காரர்களின் பிடியிலிருந்து விவசாயிகளை விடுவிக்க வேண்டுமானால் அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் கொடுத்தால் மட்டும் போதாது; அவர்களுக்கு வேண்டிய சாதனங்களை வழங்கி, அவர்களது விளை பொருள்களை விற்பனை செய்யவும் முன்வர வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து, கூட்டுறவுச் சங்க வாயிலாகத் தம் விளைபொருள்களை விற்கச் செய்து, அதிலிருந்து கடனைத் திருப்பிப் பெறும் முறை இருந்தால்தான் கூட்டுறவுச் சங்கங்கள் நன்கு வளரமுடியுமென்றும் அவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது. எனவே, விளைச்சல் கடன் கொடுக்கப்படும் இடங்களிலெல்லாம் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களும் இருக்க வேண்டியது அவசியம்.

கூட்டுறவு முறையில் கடன் வழங்கப்படுவதற்கும் கூட்டுறவு அடிப்படையில் விளைபொருள்கள் விற்கப்படுவதற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டுமென இவ்வறிக்கை வலியுறுத்தியுள்ளது. அவ்வாறு தொடர்பு இருந்தால்தான் கடன் சங்கங்கள் தாம் கொடுத்த கடனை எளிதாக வசூலிக்க முடியும்; சந்தையிடுகைச் சங்கங்களுக்கும் அதிக அளவு விற்பனை நடைபெறும். இக் குறிக்கோளை அடைவதற்காக 1962-லேயே மத்திய அமைச்சரவை கீழ்க் காணும் ஆலோசனைகளைத் தந்துள்ளது:

(1) கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உறுப்பினர்களுக்குக் கடன் தரும்போது, அவர்கள் தம் விளைபொருள்களை கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கத்தின் வாயிலாக விற்பதற்கும் அவ்வாறு விற்கும் போது கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கும் ஏற்ற வகையில் அவர்களுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும்.

(2) அறுவடை தொடங்கு முன் கடன் சங்கங்கள் தம்மிடமிருந்து கடன்வாங்கிய உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய தொகைக்கு அறிவிப்பு அனுப்ப வேண்டும்.

(3) கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கத்தின் வாயிலாக விளைபொருள்களை விற்பனையாகும்போது கடன் வாங்கிய தொகையை விற்பனையிலிருந்து கழித்து, அத் தொகையை சம்பந்தப்பட்ட கடன் சங்கங்களுக்கு அனுப்பிவிட வேண்டும்.

(4) விளைச்சலுக்காகக் கடனைத் தரும்போது, அக்கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய தேதி குறிப்பிடப்படுகிறது. கூடுமான வரை அறுவடை செய்யும் நாளாக இத் தேதி குறிப்பிடப்பட்டால் நன்று. கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கத்தின் வாயிலாக விளை பொருள்களை விற்கச் செய்யும் வகையில் உறுப்பினர்களுக்கு ஊக்கமளிக்கும் முறைகள் கையாளப்பட்டால் நல்லது.

கூட்டுறவுக் கடனைக் கூட்டுறவு விற்பனை வாயிலாகத் திரும்பிப் பெறுவதுபற்றித் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கூறியுள்ள ஆலோசனைகள் வருமாறு: சிறுவிவசாயிகள் தம் சொந்த உபயோகத்திற்காக மட்டும் சாகுபடி செய்யும்போது, அவர்கள் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கத்தில்தான் தம் விளைபொருள்களை விற்க வேண்டுமென்றோ, அவ்வாறு விற்றவுடன் கடனைத் திரும்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றோ வற்புறுத்தக் கூடாது. ஏதோ கொஞ்ச அளவு மட்டும் விற்பனை செய்யும் உறுப்பினர்கள் எவ்வளவு கடனை உடனடியாகத் திருப்பித்தர வேண்டுமென்பதைச் சம்பந்தப்

பட்ட பணியாளர்கள் கூட்டத்தில் முடிவு செய்துகொள்ள வேண்டும்.

மேலும், கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் வாயிலாக விளைபொருள்களை விற்கும்போது உறுப்பினர்கள் வாங்கியுள்ள கடனை முழுவதுமாகக் கழித்துவிட்டால் எவருமே இச் சங்கத்தின் வாயிலாக விற்க முன்வரமாட்டார்கள். எனவே, விற்பனைத் தொகையில் பாதியைமட்டும் கடனுக்காக எடுத்துக்கொண்டு மீதியை உறுப்பினர்களுக்கே கொடுத்துவிட வேண்டும். அவர்களாகவே முன்வந்து கடனையெல்லாம் கழித்துவிடச் சொன்னால் தான் அவ்வாறு செய்ய வேண்டும்.

கூட்டுறவுக் கடன் சங்கங்களைச் சந்தையிடுகைச் சங்கங்களோடு இணைக்கும் திட்டம் 1955-56-ல் தான் தொடங்கியது. இதுவரை இத் திட்டம் பேரளவிற்கு வெற்றியடைந்துள்ளது. சான்றாக, 1955-56-ல் 3.5 சதவீதக் கடன் சங்கங்கள் தாம் சந்தையிடுகைச் சங்கங்களோடு இணைக்கப்பட்டிருந்தன; ஆனால் 1966-67-ல் இது 72 சதவீதமாக அதிகரித்துள்ளது. மேலும், விற்பனைத் தொகையிலிருந்து கடன் பெற்ற தொகை பெருமளவில் திரும்பப் பெறப்பட்டு வருகிறது. 1961-62-ல் ரூ 228 கோடி கடனில் ரூ. 10.88 கோடிதான் விற்பனையின்போது வசூலிக்கப்பட்டது. ஆனால் 1967-68-ல் ரூ. 429 கோடி கடனில் ரூ. 62 கோடி வசூலிக்கப்பட்டிருக்கிறது. இத் திட்டம் குஜராத்திலும் மகராஷ்டிரத்திலும்தான் பெருமளவில் வெற்றி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பண்டக வசதிகள்

கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களுக்கு போதுமான அளவு பண்டக வசதி இருந்தால்தான் உறுப்பினர்களின் விளைபொருள்களையும், அவர்களுக்கு வேண்டிய விவசாயச் சாதனங்களையும் சேர்த்து வைக்க முடியும். பண்டக வசதியில்லாமல் எந்தச் சந்தையிடுகைச் சங்கமும் நல்ல முறையில் பணியாற்ற முடியாது. எனவே, இப் பண்டகக் கிடங்குகளைக் கட்டுவதற்குச் சந்தையிடுகைச் சங்கங்களுக்கு உதவியும் செய்யப்படுகிறது. சந்தை அளவில் இக் கிடங்குகள் அமைக்கப்பட வேண்டுமாயின் ஒவ்வொரு கிடங்கும் 250 டன் கொள்திறன் கொண்டவையாயிருக்க வேண்டுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த அளவுக் கிடங்கொன்றை அமைக்க ரூ. 35,000 செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு விற்பனைச் சங்கமும் இவ் வகைக் கிடங்கை அமைக்க வேண்டுமென்பதற்காக மொத்தச் செலவில் 62·5 சதவீதம் தேசியக் கூட்டுறவு

வளர்ச்சிக் கழகத்தால் கடனுகத் தரப்படுகிறது. இக் கடன் 15 வருடக் கடனுகும். எஞ்சிய செலவுத் தொகைக்கென்று மாநில அரசாங்கமும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும் மானியத் தொகை வழங்குகின்றன. இப் பண்டகக் கிடங்குகள் மட்டுமன்றிச் சேவைச் சங்கங்கள் கிராமங்களில் கட்டிவரும் பண்டகக் கிடங்குகளும் பயன்படுத்தப்படுகின்றன. 1969 வரை மொத்தம் 11,033 கிராமப் பண்டகங்களும் 2,696 சந்தை அளவில் அமைந்துள்ள கிடங்குகளும் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இப் பண்டகங்களையும் கிடங்குகளையும் கட்டுவதற்கு விவசாய மறுநிதிக் கார்ப்பரேஷன் மட்டுமன்றி, வணிக வங்கிகள்கூட உதவி செய்ய முன்வந்துள்ளன.

விற்பனைக் கூட்டமைப்புகள்

கூட்டுறவுக் கடன் சங்கங்களைப்போல் சந்தையிடுகைச் சங்கங்களுக்கென்றும் கூட்டமைப்புகள் தேவை. கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்க ஆய்வுக்குழுவின் கருத்துப்படி ஒவ்வொரு மாநிலத்திலும் கிராம மட்டத்தில் தொடக்கச் சந்தையிடுகைச் சங்கங்களும், மாநில மட்டத்தில் கூட்டமைப்பு நிறுவனமும் இருக்க வேண்டும். இக் கூட்டமைப்பு நிறுவனம் ஒவ்வொரு மாவட்டத்திலும் தன் கிளை நிறுவனங்களை அமைக்க வேண்டும். மாநிலக் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கம் தன் உறுப்பினர் சங்கங்களின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதோடு, அவற்றிற்கு வேண்டிய உதவிகளையும் செய்ய வேண்டும். அதோடு, பிற நாடுகளோடும் இதர மாநிலங்களோடும் விளைபொருள் வியாபாரத்தையும் மேற்கொண்டு, விவசாயிகளுக்கு வேண்டிய சாதனங்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து விநியோகிக்க வேண்டும். அதோடு, உணவுப்பொருள் கொள்முதலில் அரசாங்கத்திற்கு உதவி செய்வதும் இச்சங்கங்களின் கடமை. இப்பணிகளையெல்லாம் மாநிலக் கூட்டுறவுத் தலைமைச் சங்கங்கள் முறையாகச் செய்து வருகின்றன. தொடக்கச் சங்கங்களுக்கு ஆலோசனை கூறுவதற்கென்றும் தொழில்நுட்ப உதவி புரிவதற்கென்றும் இவை பல்வேறு நிபுணர்களை அமர்த்தியுள்ளன. அவர்களுக்குரிய ஊதியம் ஐந்தாண்டுகள் வரை தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் கொடுக்கப்படுகிறது. இவ்வுதவி ஆண்டுக்காண்டு குறைக்கப்பட்டு ஐந்தாவது ஆண்டோடு நிறுத்தப்பட்டு விடுகிறது.

தேசிய விவசாயக் கூட்டுறவு விற்பனை நிறுவனம்

1958 அக்டோபர் மாதம் மாநிலக் கூட்டுறவு விற்பனை நிறுவனங்களனைத்தும் ஒன்றுசேர்ந்து தமக்கென்று இத் தேசிய விற்பனை

நிறுவனத்தை அமைத்துக் கொண்டன. இதில் 17 மாநிலக் கூட்டுறவு விற்பனை நிறுவனங்களும், மத்திய அரசின் ஆட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள 5 விற்பனைக் கூட்டமைப்பு நிறுவனங்களும், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும் உறுப்பினர்களாக இருக்கின்றன. 1959-ல் ரூ. 16,500 ஆக இருந்த இதன் பங்கு மூலதனம் 1970-ல் ரூ. 20 இலட்சமாகப் பெருகியுள்ளது. அதேபோல் இதன் காப்பு நிதியும் ஏனைய நிதிகளும் 1961-ல் ரூ. 2 இலட்சத்திலிருந்து 1970-ல் ரூ. 24 இலட்சமாக அதிகரித்துள்ளது. 1959-ல் இதற்குக் கிடைத்த இலாபம் ரூ. 2 இலட்சம்தான்; ஆனால் 1971-72-ல் இதன் இலாபம் ரூ. 25·7 இலட்சமாக உயர்ந்துள்ளது. இப் புள்ளிவிவரங்களிலிருந்து இத் தேசிய விற்பனை நிறுவனம் எவ்வளவு விரைவாக முன்னேறி வந்துள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம்.

கூட்டமைப்பின் அடிப்படையில் உருவாகியுள்ள இந் நிறுவனம் அதே தத்துவத்தில் ஊறிச் செயல்படுவது பாராட்டத்தக்கது. மாநிலக் கூட்டுறவு நிறுவனங்களின் வாயிலாகத்தான் அந்தந்த மாநிலங்களில் செயல்படுகிறது. ஏற்றுமதி செய்ய வேண்டிய விவசாயப் பண்டங்களை அந்தந்த மாநில நிறுவனங்களின் வாயிலாகவே கொள்முதல் செய்கிறது. அந்தந்த மாநிலங்களில் விற்க வேண்டிய அல்லது விநியோகிக்க வேண்டிய பொருள்களையெல்லாம் மாநில நிறுவனங்களின் வழியாகவே செய்து கொள்கிறது. இத் தேசிய நிறுவனத்தின் தலைமைச் செயலகம் டில்லியில் உள்ளது; தன் பணியைத் திறமையாகச் செய்வதற்கென்று பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய நகரங்களில் கிளைகளை அமைத்துள்ளது. உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தானம் ஆகிய மாநிலங்களில் பிராந்தியச் செயலகங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இத் தேசிய விற்பனை நிறுவனத்தின் பணிகள் வருமாறு: (1) மாநிலங்களுக்கிடையே வியாபாரம் செய்தல், (2) விவசாயப் பண்டங்களைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல், (3) விவசாயத்திற்குத் தேவையான சாதனங்களை இறக்குமதி செய்தல், (4) விவசாய விற்பனையைப் பெருக்க வழி செய்தல்.

இந் நிறுவனம் ஏற்றுமதி செய்யும் பொருள்களில் பருப்பு வகைகள்தாம் மிக முக்கியமானது; ஏற்றுமதிக்கான இப் பொருள்களை இந் நிறுவனமே கொள்முதல் செய்கிறது; ஆனால் அவற்றை ஏற்றுமதி செய்யும் பொறுப்பு அரசாங்க வர்த்தகக் கழகத்தையே சார்ந்தது. 1963-64-ல் ஏற்றுமதி செய்யப்பட்ட பருப்பு வகைகளின் மதிப்பு ரூ. 12·4 இலட்சம் மட்டுமே. ஆனால் 1968-69-ல் ஏற்றுமதி ரூ. 3 கோடிக்கு அதிகரித்துள்ளது. பருப்பு வகைகளை மட்டுமன்றி, வெங்காயம், மிளகாய், வெள்ளைப்பூண்டு ஆகியவற்றின் ஏற்று

மதியையும் படிப்படியாக அதிகரித்து வருகிறது. இந் நிறுவனம் இறக்குமதி செய்யும் பொருள்கள் மிகக் குறைவு. ஓரளவு உர வகைகளையும் உலர்ந்த பழங்களையும் மட்டும்தான் இறக்குமதி செய்கிறது.

மாநிலத்திற்கு மாநிலம் வியாபாரம் நடைபெறுகிறது. இதில் விவசாயப் பொருள்களின் வியாபாரத்தை இத் தேசிய விற்பனை நிறுவனமே கவனித்துக் கொள்கிறது. பருப்பு வகைகள், தானிய வகைகள், சணல் ஆகிய பொருள்கள்தாம் முக்கியமாக வியாபாரம் செய்யப்படுகின்றன. இந்த வியாபாரத்தின் அளவு 1965-66-ல் 1 கோடி ரூபாயிலிருந்து 1971-72-ல் 2·42 கோடி ரூபாயாகப் பெருகி யுள்ளது.

இத் தேசிய நிறுவனம் சந்தை நிலவரம் பற்றிய ஆராய்ச்சியை நடத்தி, முக்கியமான புள்ளி விவரங்களையெல்லாம் சேகரிப்பதற் கென்று தேர்ச்சி பெற்ற பல நிபுணர்களைக் கொண்டுள்ளது. சேகரித்த புள்ளி விவரங்களையெல்லாம் உறுப்பினர்களுக்கு அனுப்பி உதவி செய்கிறது. அதோடு, தேசிய விதை விநியோக நிறுவனம், உர நிறுவனம் போன்ற பெரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உறுப்பினர்களுக்கு வேண்டிய விதை, உரம் போன்ற பொருள்களை மலிவாகக் கொள்முதல் செய்து விநியோகித்து வருகிறது.

கூட்டுறவு விற்பனையின் வளர்ச்சி

சுதந்திரத்திற்கு முன்பு விவசாயக் கூட்டுறவு விற்பனையைப் பற்றி எவரும் அதிகமாகக் கவலைப்படவில்லை. கிராமக் கடன் ஆய்வுக் குழுவின் அறிக்கையைப் படித்தால் இவ்வுண்மை புலனாகும். கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் ஏட்டளவில் மட்டுமே இயங்கிவந்தன. இக் குழுவினர் தேர்ந்தெடுத்த 75 மாவட் டங்களில் 5 மாவட்டங்களில் மட்டும்தான் கூட்டுறவுச் சந்தை யிடுகைச் சங்கங்கள் ஓரளவிற்குப் பணிபுரிந்து வந்தன. மொத்த விவசாயப் பொருள் விற்பனையில் கூட்டுறவுச் சங்கங்கள் செய்த விற்பனை 1 சதவீதம்கூட இல்லாமலிருந்தது. எனவே, இக் குழு வினரின் சிபாரிசின் பேரில் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களை முன்னேற்ற அவற்றின்பங்கு மூலதனத்தில் அரசாங்கமும் பங்கேற் றது; கூட்டுறவுக் கிடங்குகளை அமைக்க இச்சங்கங்களுக்குக் கடனும் மானியமும் வழங்கப்பட்டன; ஆரம்பத்தில் இவற்றின் நிர்வாகச் செலவுக்கென்றுகூட மானியத் தொகை வழங்கப்பட்டது. இவ் வாறாக, கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களின் முன்னேற்றத்

திற்கென இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர்த்தான் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் வளர்ந்து, பலப்படலாயின. 1970-71-ல் மொத்தம் 3,261 தொடக்கச் சந்தையிடுகைச் சங்கங்கள் இயங்கின. இவற்றில் ஏதாவதொரு பண்டத்தை மட்டும் குறிப்பாக விற்பனை செய்த சங்கங்கள் 500 ஆகும். மாநில மட்டத்தில் 20 தலைமைச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மாவட்ட அடிப்படையில் 161 சந்தையிடுகைச் சங்கங்கள் இயங்கியுள்ளன.

விவசாயக் கூட்டுறவு விற்பனைத் துறையில் நம் நாடு எவ்வளவு முன்னேற்றமடைந்துள்ளது என்பதைப் பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம் :

(கோடி ரூபாயில்)

பண்டம்	1964-65	1965-66	1966-67	1967-68	1970-71
உணவுதானியம்	99·14	146·75	137·55	176	269
கரும்பு	116·18	147·12	95·18	214	222
ஏனையவை	83·34	76·54	95·37	140	159
மொத்தம்	298·66	370·41	328·10	530	650

உணவு தானியப் பொருள்களில் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் அரசாங்கத்தின் சார்பில் கொள்முதல் செய்ததால் அவற்றின் மதிப்பு கணிசமாக உயர்ந்து வந்துள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும். கரும்பு விற்பனையைப் பொறுத்தவரை, உத்தரப் பிரதேசத்திலும் பீஹாரிலுமுள்ள கரும்பு விற்பனைச் சங்கங்களும் ஏனைய மாநிலங்களிலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் நல்ல அக்கறை காட்டி வருகின்றன.

வருங்காலத்தில் பசுமைப் புரட்சியின் விளைவாக விளைச்சல் பெருகலாம்; அரசாங்கக் கொள்முதல் திட்டமும் தீவிரமாக்கப்படலாம்; எனவே, கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் விரைவாக முன்னேறி வலுப்பெறுவதற்கு நிறைய வாய்ப்புண்டு.

கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் எல்லா மாநிலங்களிலும் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளன என்று சொல்ல முடியாது. பஞ்சாப், ஆந்திரா, உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் ஏறக்குறைய 75 சதவீதத் தானியப் பொருள்கள் கூட்டுறவுச் சங்கங்களால் விற்பனையாகின்றன. 76 சதவீதக் கரும்பு மகாராஷ்டிரத்திலும் உத்தரப் பிரதேசத்திலுமுள்ள சங்கங்களால் விற்பனை

யாகின்றன. பருத்தியில் 85 சதவீதம் மகாராஷ்டிரத்திலும் குஜராத்திலுமுள்ள சங்கங்களால் விற்பனை செய்யப்படுகின்றன.

தமிழ் நாட்டில் விவசாயக் கூட்டுறவு விற்பனை

1966ஆம் ஆண்டின் கணக்குப்படி தமிழ்நாட்டில் மட்டும் 130 தொடக்கச் சந்தையிடுகைச் சங்கங்கள் இருக்கின்றன. இவற்றில் 3·56 இலட்சம் பேரும் 11,512 சங்கங்களும் உறுப்பினர்களாக உள்ளனர். இவற்றின் பங்கு மூலதனத்தில் செலுத்தப்பட்ட தொகை மட்டும் ரூ. 99·16 இலட்சமாகும். கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் கொள்முதல் செய்து சொந்தமாக விற்ற விற்பனையின் மதிப்பு ரூ. 370·61 இலட்சமாகும். விவசாய உறுப்பினர்களின் சார்பாக விற்றது ரூ. 237·78 இலட்சம்.

நான்காம் திட்டத்தில் சந்தையிடுகைச் சங்க வளர்ச்சி

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயக் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களை நிலைப்படுத்தவும், அவற்றின் விற்பனையை அதிகரிக்கவும், அவற்றை நிர்வகிப்பதற்கேற்ற திறமையும் பயிற்சியுமிக்க பணியாளர்களை உருவாக்கவும் வழி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டக் காலக் கடைசி ஆண்டில் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள் விற்பனை செய்யும் கரும்பு 8 மில்லியன் டன்னுகவும், நிலக்கடலை 5·6 இலட்சம் டன்னுகவும், பழங்களும் காய்கறிகளும் 10,000 டன்னுகவும், பருத்தி 17·8 இலட்சம் டன்னுகவும் அதிகரிப்பதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. நடப்பு விலையில் இவற்றின் மதிப்பு ரூ. 900 கோடியாக உயரலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலங்களுக்கிடையே நடைபெறும் விவசாயப் பண்ட வியாபாரம் ரூ. 25 கோடிக்கும், ஏற்றுமதி வியாபாரம் ரூ. 10 கோடிக்கும் அதிகரிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

விவசாய அபிவிருத்தியைச் சிறப்பான முறையில் செய்வதற்கென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் இயங்கிவரும் 800 தொடக்கச் சந்தையிடுகைச் சங்கங்களை அரசாங்கம் ஊக்குவிக்க முனைந்துள்ளது. இச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் மேலும் ரூ. 7,500 பங்கு மூலதனமாகக் கொடுக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. மேலும் 1,000 சங்கங்களுக்கு வாகனங்கள் வாங்குவதற்கென்று தலா ரூ. 40,000 கொடுக்கத் திட்டமிட்டுள்ளது. விலை ஏற்றத்தாழ்வு நிதிக்கு அரசாங்கம் தொடர்ந்து நிதி உதவி செய்யுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

26. கூட்டுறவுப் பக்குவப்படுத்தும் ஆலைகள்

ஒருசில உற்பத்திப் பொருள்களை அப்படியே நுகர முடியாது; அவற்றைப் பக்குவப்படுத்தினால்தான் நுகர முடியும். சான்றாக, நெல்லை அரிசியாகவோ மாவாகவோ பக்குவப்படுத்த வேண்டியுள்ளது. கோதுமையை மாவாகப் பக்குவப்படுத்த வேண்டியிருக்கிறது. வேர்க்கடலை, எள் போன்ற வித்துகளை எண்ணெயாகப் பக்குவப்படுத்த வேண்டியுள்ளது. கரும்பைப் பிழிந்துதான் சர்க்கரை செய்ய முடியும். பஞ்சை நூற்று, நெய்த பின்னர்த்தான் ஆடையாகப் பயன்படுத்தலாம்.

இவ்வாறாக, நுகர்ச்சிக்குப் பயன்படும் வகையில் பல பொருள்களைப் பக்குவப்படுத்த வேண்டியுள்ளது. இத் தொழிலை வியாபாரிகளும் ஆலை அதிபர்களும் செய்து வருகின்றனர். ஆனால், அவர்கள் இத் தொழிலைச் செய்யும்போது அதற்கென அநியாயக் கட்டணத்தை வசூலிப்பதுண்டு. அதோடு, பல முறைகேடான வழிகளைப் பின்பற்றிக் கொள்ளை இலாபம் பெறுவதும் உண்டு. இதனால் உற்பத்தியாளர்கள் மட்டுமன்றி, நுகர்வோரும் கூடப் பாதிக்கப் படலாம். எனவே, உற்பத்தியாளரே இத் தொழில்களை நடத்தினால் இலாபகரமானதாயிருக்கும்; பல்வேறு தவறுகளைத் தடுக்கவும் முடியும். ஆனால், இத் தொழில்களைச் செய்வதற்கு அனுபவமும் பயிற்சியுமட்டுமன்றி, நிறையப் பணமும் தேவை. எனவே, விவசாயிகளே தனிப்பட்ட முறையில் இத் தொழில்களை ஏற்று நடத்த இயலாது. ஆனால், பலபேர் சேர்ந்து கூட்டுறவு முறையில் இத் தொழில்களை நடத்தலாம்.

கூட்டுறவுத் துறையில் விவசாயப் பொருள்களைப் பக்குவப் படுத்தும் தொழில்களும் முக்கியத்துவம் அடைந்துள்ளன. இதனால் தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத் தொழில்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. 35 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளையும், 43 பஞ்சாலைகளையும், 130 ஏனைய ஆலைகளையும் அமைப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டது. மூன்றும் திட்டத்

திலும் இவ்வகைக் கூட்டுறவு ஆலைகள் முக்கியத்துவம் பெற்றன. 24 சர்க்கரை ஆலைகள், 50 பஞ்சாலைகள், 50 அரிசி ஆலைகள், 300 அரிசி உலர்த்தும் ஆலைகள், 20 எண்ணெய் ஆலைகள், 30 பழப் பக்குவப் படுத்தும் ஆலைகள், 50 மாவு ஆலைகள் இத் திட்டத்தில் இடம் பெற்றன.

1967ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தம் 1,607 பக்குவப் படுத்தும் ஆலைகள் கூட்டுறவு முறையில் இயங்கி வந்திருக்கின்றன. இவற்றில் 77 சர்க்கரை ஆலைகள், 806 அரிசி ஆலைகள், 33 எண்ணெய் ஆலைகள், 237 பஞ்சாலைகள், 26 நூற்பாலைகள் ஆகியவை குறிப் பிடத்தக்கவை. இன்னும் எத்தனையோ வகை ஆலைகள் கூட்டுறவு முறையில் இயங்கி வருகின்றன. அவற்றையெல்லாம் இங்கு விவர மாகக் குறிப்பிட இயலாது. கூட்டுறவு ஆலைகளில் தற்போது மிக முக்கியமானதாகக் கருதப்படும் சர்க்கரை ஆலைகளைப் பற்றிச் சற்று விரிவாக ஆராய்தல் நன்று.

I. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்

நமது நாட்டில் ஏராளமான நிலப்பரப்பில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. பல குடியானவர்கள் சின்னஞ்சிறு கருவிகளைக் கொண்டு சாறு பிழிந்து வெல்லம் தயார் செய்கிறார்கள். இத் தொழில் அவ்வளவு இலாபகரமானதென்று சொல்ல முடியாது. எனவே, 1932ஆம் ஆண்டில் நம் நாட்டிற்கு இறக்குமதி செய்யப் பட்டு வந்த சர்க்கரையைக் கட்டுப்படுத்துவதற்கும் உள்நாட்டி லேயே சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்தி, அவற்றை ஊக்குவிப்ப தற்கும் அரசாங்கம் முன்வந்தது. அந்த ஆண்டிலிருந்து இன்றுவரை சர்க்கரை ஆலைகள் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. எனினும், தனியார் நடத்தும் சர்க்கரை ஆலைகளால் கரும்பு சாகுபடி செய் வோர் பலனடையவில்லை. உரிய நேரத்தில் கரும்பை வெட்டி ஆலை களுக்கு அனுப்ப முடியவில்லை. அப்படியே அனுப்பினாலும் சர்க்கரை ஆலைகள் அக் கரும்பை உடனடியாக வாங்குவதில்லை. அப்படி வாங்கினாலும் எடையைக் குறைத்து மலிவாக அவற்றை வாங்கி வந்தன. இதனால் கரும்பு சாகுபடி செய்யும் ஏராளமான விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர். எனவே, கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்தினால் நல்லதென்பதை உணர்ந்து, அதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். அரசாங்கமும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு ஊக்கமளிக்க முன்வந்தது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் நம் நாட்டில் மொத்தம் 139 சர்க்கரை ஆலைகள் இருந்தன. இருந்தும்

சர்க்கரைக்கு அதிகக் கிராக்கி இருந்துவந்தது. 19 இலட்சம் டன் சர்க்கரை ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்பட்டும் போதவில்லை. எனவே, 1960-61-க்குள் சர்க்கரை உற்பத்தியை 25 இலட்சம் டன்னுகப் பெருக்க வேண்டுமென்று திட்டக்குழு எண்ணியது. புதிய பல சர்க்கரை ஆலைகள் தோன்றுவதற்குத் திட்டம் வகுத்தது. இத் திட்டப்படி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்குத் தாம் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அரசாங்கமும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கே முதலில் அனுமதி வழங்குவது என்ற கொள்கையைக் கடைப்பிடித்தது. இதனுல் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் துரிதமாக வளர்ச்சி பெற்றன.

1955-56-ல் நம் நாட்டில் மொத்தம் 3 ஆலைகள்தாம் கூட்டுறவு முறையில் இயங்கிவந்தன. மொத்தச் சர்க்கரை உற்பத்தில் இக் கூட்டுறவு ஆலைகள் 1·4 சதவீதம் மட்டுமே உற்பத்தி செய்துவந்தன. ஆனுல் 1972-க்குள் 126 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது ; இவற்றில் 79 ஆலைகள் அமைக்கப்பட்டு உற்பத்தியில் ஈடுபட்டுவிட்டன. இந்த 79 ஆலைகளில் 48 மகாராஷ்டிரத்திலும், 14 ஆலைகள் ஆந்திராவிலும், 11 ஆலைகள் மைசூரிலும், தமிழ்நாட்டில் 10 ஆலைகளும் இயங்கி வந்தன.

1972-ல் இக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் மொத்தம் 53 இலட்சம் பேர் உறுப்பினர்களாக இருந்தனர். இவர்களில் கரும்பு சாகுபடி செய்தோர் மட்டும் தம் பங்கு மூலதனமாக 24·42 கோடி ரூபாய் செலுத்தியிருந்தனர். மாநில அரசாங்கங்கள் தம் பங்கு மூலதனமாக 26 கோடி ரூபாய் செலுத்தியிருந்தது. 1971-72-ல் இயங்கி வந்த 79 கூட்டுறவு ஆலைகளும் மொத்தம் 12·9 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்தன. அதாவது நாட்டில் உற்பத்தியான சர்க்கரையில் 41·5 சதவீதம் கூட்டுறவு ஆலைகளால் உற்பத்தியானது.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் வெல்லப்பாகிலிருந்து மதுவகைகளைத் தயாரிக்கும் தொழிலையும் தொடங்கியுள்ளன. இதற்கென்று மூன்று நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை மூன்றும் ஆண்டொன்றுக்குச் சுமார் 13 இலட்சம் காலன் சாராயத்தை உற்பத்தி செய்கின்றன. மேலும், 5 நிறுவனங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், கரும்பாலையில் கழிவுப்பொருளாக இருந்து வந்த கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் முக்கியமான அம்சங்கள் வருமாறு :

இட அமைப்பு : சர்க்கரை ஆலைகளை எந்தெந்த இடத்தில் அமைப்பது என்பதைத் தீர்மானிக்கும்போது பின்வரும் விவரங்கள் பரிசீலிக்கப்படுகின்றன :

(1) எந்தப் பகுதியில் அதிகமாகக் கரும்பு சாகுபடி செய்யப் படுகிறதோ அந்தப் பகுதியில்தான் சர்க்கரை ஆலைகளை அமைப்பது இலாபகரமானது. ஒரு நாளைக்கு 1,200 டன் கரும்பைப் பிழிந்து சாறு எடுக்கக்கூடிய திறமையுள்ள ஆலைக்கு அறுவடை காலத்தில் குறைந்த பட்சம் 1,65,000 டன் கரும்பாவது தேவைப்படும். அப்படிக் கிடைத்தால்தான் ஆண்டிற்கு 150 நாள்களாவது அத் தொழிற்சாலை இயங்க முடியும். நமது நாட்டில் சராசரி 1 ஏக்கர் நிலத்தில் 30 டன் கரும்புதான் விளைகிறது. எனவே மேற்கூறியபடி கரும்பாலை ஒன்று இயங்க வேண்டுமானால் அதற்கு 6,250 ஏக்கர் நிலத்தில் கரும்பு சாகுபடி இருக்கவேண்டும். மகாராஷ்டிரத்தில் 1 ஏக்கருக்கு சராசரி 45 முதல் 50 டன் வரை கரும்பு விளைகிறது. எனவே, அங்குள்ள கரும்பாலைக்கு அவ்வளவு சாகுபடி நிலம் தேவையில்லை.

(2) சர்க்கரை ஆலைக்கு வேண்டிய கரும்பு 4 அல்லது 5 மைல் சுற்றளவிற்குள் கிடைத்தால்தான் நல்லது. இல்லாவிட்டால் கரும்பை ஏற்றி அதிக தூரம் செல்லுவதற்குள் அக் கரும்பு காய்ந்து விடும் ; சாறு குறைந்துவிடும்.

(3) கரும்பில் 8 முதல் 13 சதவீதம் வரை சாறு உள்ளது. ஒரு சர்க்கரை ஆலைக்குக் கிடைக்கும் இலாபமோ நட்டமோ பெரும் பாலும் கரும்பின் தரத்தை பொறுத்தது. ஓரளவிற்காகிலும் ஆலை இலாபத்தில் நடக்க வேண்டுமானால் 9 சதவீதமாகிலும் சாறு உள்ள கரும்பு தேவை. எனவே, இதை நன்கு பரிசீலனை செய்யவேண்டும்.

(4) கரும்புச் சாகுபடிக்கு நீர்பாசன வசதியும் ரயில் அல்லது சாலைப் போக்குவரத்து வசதியும் அவசியம்.

(5) கரும்பாலைக்கு வேண்டிய தொழிலாளர்களும் இருக்க வேண்டும்.

நிதி வசதி : சர்க்கரை ஆலை இலாபகரமாக இயங்க வேண்டு மாயின் அது ஓரளவிற்காகிலும் பெரிதாக இருக்க வேண்டும் நாள் ஒன்றுக்கு 1,250 டன் கரும்பைக் கையாண்டு சாறுபிழியக் கூடிய திறன் இருக்க வேண்டும். இத் திறமை கொண்ட ஆலையை அமைப்பதற்கு ரூ. 2 கோடி மூலதனம் தேவை. எனவே கூட்டுறவு சர்க்கரை ஆலை நிதி வசதி பெற்றதாயிருக்க வேண்டும். பெரும் பாலும், உறுப்பினர்கள் தரும் பங்கு மூலதனம்தான் கூட்டுறவு

ஆலைக்கு அடிப்படை மூலதனமாக அமைகிறது. விவசாயிகள் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் பங்கு மூலதனத்தைப் பெறுவதற்காக ரிசர்வ் பாங்கு அந்தந்த மாநிலக் கூட்டுறவுத் தலைமை வங்கிகளுக்கு இடைக்காலக் கடன் அளிக்கிறது. மாநில அரசாங்கங்களும் இவ் வாலைகளின் பங்கு மூலதனத்தைப் பெறுகின்றன. அவை பெறும் பங்கு தற்போது 40 இலட்சம் ரூபாயிலிருந்து 80 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதாவது, ஒவ்வொரு கூட்டுறவு சர்க்கரை ஆலையிலும் மாநில அரசாங்கம் 80 இலட்சம் ரூபாய்வரை பங்கு வாங்கலாம். பங்கு மூலதனத்தில் 75 சதவீதம் கரும்பு சாகுபடி செய்வோரே செலுத்த வேண்டும். மாநில அரசாங்கம் பங்கு கொள்ள உதவும் வகையில் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கடனுதவி செய்கிறது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் உறுப்பினர்கள் எவ்வளவு பங்கு வாங்கி இருக்கின்றனரோ அவ்வளவு பங்குதான் மாநில அரசாங்கம் வாங்கலாம்; ஆனால் பிற்பட்ட பகுதியிலுள்ள ஆலைகளில் மட்டும் உறுப்பினர்களின் பங்கைபோல் 2 மடங்கு வாங்க மாநில அரசாங்கம் அனுமதிக்கப்பட்டுள்ளது. கரும்பு சாகுபடி செய்யும் உறுப்பினர்கள் தம் ஆலைக்குக் கரும்பை விற்கும்போது, குறிப்பிட்ட தொகை விற்பனையிலிருந்து கழிக்கப்பட்டு அவர்கள் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. பின்னர் இத் தொகை அவர்களது பங்கு மூலதனமாக மாற்றப்படுகிறது.

ஒவ்வொரு கூட்டுறவு ஆலைக்கும் தொழில் நிதிக் கார்ப்பரேஷன் (Industrial Finance Corporation) மத்திய மாநில அரசாங்க உத்தரவாதத்தின் பேரில் 2·25 கோடி ரூபாய் கடன் வழங்குகிறது. இக் கடன் தொகையை ஆலை அமைப்பதற்காகச் செலவிடலாம். இக் கடனை 12 ஆண்டுகளுக்கொருமுறை தவணை முறையில் திருப்பிச் செலுத்தவேண்டும். 1971 ஆம் ஆண்டு வரை இக் கார்ப்பரேஷன் 74 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு 65 கோடி ரூபாய் கடன்வழங்கச் சம்மதித்துள்ளது. இத்தொகையில் 56 கோடி ரூபாய் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டது. மேலும், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் சொத்தின் பேரில் ஆயுள் காப்பீட்டுக் கழகமும் கடன் தருகிறது. இக் கழகம் ஆலை ஒன்றுக்கு 40 இலட்சம் ரூபாய் வீதம் நீண்டகாலக் கடன் வழங்குகிறது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அதிகமாயுள்ள மகாராஷ்டிரத்தில் அவ்வாலைகளுக்கு வேண்டிய மூலதனத்தை மொத்தமாகக் கடனாக வழங்குவதற்கென்று ரிசர்வ் பாங்கு அம் மாநிலக் கூட்டுறவுத் தலைமை வங்கிக்கு அனுமதி வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்கு மட்டுமன்றி, அவற்றை நடத்துவதற்கும் நிதி தேவை. எனவே, அவ்வாலைகள் உற்பத்தி

செய்யும் பொருளின் அடைமானத்தின் பேரில் கூட்டுறவு வங்கிகளும் ஸ்டேட் பாங்கும் இந்த நிதியை கடனாக வழங்கி வருகின்றன. இக் கடனுக்கு மாநில அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கின்றது.

நிர்வாகம்: கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நிர்வாகக் குழுவினரால் நடத்தப்படுகிறது. கரும்பு சாகுபடி செய்யும் சிறு விவசாயிகளும் இக் குழுவில் பங்கு கொள்கின்றனர். கூட்டுறவு ஆலைகளில் அரசாங்கம்தான் பெரும் பங்கு கொள்கிறது; எனவே, அரசாங்கமும் ஒரு சில பிரதிநிதிகளை இந்த நிர்வாகக் குழுவில் அமர்த்துகிறது. மேலும், தொழில் நிதிக் கார்ப்பரேஷனும் 2 நிர்வாகக்குழு உறுப்பினர்களை அமர்த்தலாம்.

ஆலையின் அன்றாட நிர்வாகத்தைப் பொது நிர்வாகியும் அவருக்குத்துணையாக அமர்த்தப்படும் பல்வேறு நிபுணர்களும் சேர்ந்து நடத்துகின்றனர். ஆலையின் நிர்வாகத் திறமையும் இலாபமும் இப்பொது நிர்வாகியைச் சார்ந்தது; அதோடு, அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தையும் பொறுத்தது. எனினும் கூட்டுறவு ஆலை அதிகாரம் அனைத்தும் ஒருசிலர் கையில் மட்டுமன்றி, பரவலாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. பொது நிர்வாகிக்குப் போதுமான அதிகாரம் அளிக்கப்படினும், அவர் அவ்வப்போது நிர்வாகக் குழுவினரை கலந்தாலோசிக்க வேண்டும். இவர்கள் எடுக்கும் தீர்மானங்களும் நடவடிக்கைகளும் பொதுக் குழுவிற்கும் அறிவிக்கப்படவேண்டும். பொது நிர்வாகி ஆலை உறுப்பினர்களுடன் தொடர்புகொண்டு அவர்களைப் பக்குவப்படுத்துவது நல்லது. நல்ல நிர்வாகியாக மட்டும் இல்லாமல் பொதுத்தொடர்பிலும் சிறந்தவராகப் பொதுநிர்வாகி விளங்கவேண்டும்.

தொழிலாளர் உறவு: கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தம் தொழிலாளருடனும் நல்லுறவு கொள்ளவேண்டும். இந் நல்லுறவு ஏற்படுவதற்குப் பின்வரும் நடவடிக்கைகளைப் பின்பற்றுதல் நன்று:

(1) எல்லாத் தொழிலாளர்களும் ஆலை உறுப்பினர்களாக இருக்கும்படி வழி செய்ய வேண்டும்.

(2) தொழில் நுட்பமான வேலைக்குத் தகுதியுடைய உறுப்பினர்கள் கிடைக்காவிட்டால் வெளியாள்களை அமர்த்தி, அவர்களையும் உறுப்பினர்களாக்க முயற்சி செய்யவேண்டும்.

(3) தொழிலாளர்களின் பிரதிநிதிகளையும் நிர்வாகக்குழுவில் சேர்த்தால், பொதுப் பிரச்சினைகளைப் பற்றி விவாதித்து சுமூகமான முடிவெடுக்க ஏதுவாயிருக்கும்.

(4) தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து கொடுத்து அவர்களின் நலனிலும் அக்கறை காட்ட வேண்டும்.

கரும்பு உற்பத்தி செய்யும் உறுப்பினர்களுடன் நல்லுறவு: தாங்கள் உற்பத்தி செய்யும் கரும்பிற்கு நல்லவிலை கிடைக்க வேண்டுமென்றுதான் விவசாயிகள் ஒன்றுசேர்ந்து இக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை அமைக்கின்றனர். எனவே, உறுப்பினர்களிடமிருந்துதாம் முதலில் கரும்பைக் கொள்முதல் செய்ய வேண்டும்; அதுபோதவில்லையென்றால்தான் மற்றவர்களிடமிருந்து கரும்பு வாங்கவேண்டும்.

கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வது மிக முக்கியமான காரியம். குறைந்தபட்ச விலையை அரசாங்கமே நிர்ணயித்து விடுகிறது. எனவே, உறுப்பினர் வழங்கும் கரும்பிற்குக் கூடுமானவரை அதிக விலை நிர்ணயிப்பது நல்லது; அதற்காக மிக உயர்ந்த விலையிலும் வாங்கக் கூடாது. அரசாங்கம் நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச விலையை அனுசரித்து, ஓரளவு அதிகவிலை கொடுப்பது நன்று. மகராஷ்டிரத்திலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அறுவடைக்கு முன்பே உறுப்பினர்களின் கரும்பைக் கொள்முதல் செய்கின்றன. இதனால் ஆலைகளுக்கு மட்டுமன்றி, கரும்பு சாகுபடி செய்வோருக்கும் நன்மை ஏற்படுகிறது. பக்குவம் பார்த்து கரும்பை வெட்டி ஆலைகளே எடுத்துச் செல்வதால் கரும்புக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதில்லை. விவசாயிகளுக்கும் அவற்றை வெட்டி ஆலைகளுக்கு அனுப்பவேண்டிய தொல்லை இல்லாமல் போய்விடுகிறது.

தரமான கரும்பு அதிகமாக விளைவதற்கான ஏற்பாடுகளையும் இக் கூட்டுறவு ஆலைகள் செய்யவேண்டும். விவசாயிகளுக்குத் தரமான விதைகளையும் உரங்களையும் உரிய காலத்தில் கொடுத்துதவ வேண்டியது இவ் வாலைகளின் கடமையாகும். அதனோடு, கரும்புப் பயிரை நல்ல முறையில் பாதுகாப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். கூடுமானவரை நவீன முறையில் சாகுபடி செய்வதற்கும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ஊக்கம்தர வேண்டும்.

கூட்டமைப்புகள்

ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தமக்கென்று கூட்டமைப்பை நிறுவிக் கொள்வது நல்லது. தற்போது ஆந்திரா, குஜராத், தமிழ்நாடு, மகாராஷ்டிரம், மைசூர், பஞ்சாப், ஹரியானா ஆகிய மாநிலங்களிலெல்லாம்இக் கூட்டமைப்பு

ஏற்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தேசிய மட்டத்திலும் கூட்டமைப்பு நிறுவனம் ஒன்றை 1960-61-ல் அமைத்துள்ளன. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும் அரசாங்கம் இன்னும் பிற நிறுவனங்களுக்குமிடையே பாலம்போன்று இக் கூட்டமைப்புகள் செயலாற்றி வருகின்றன. ஆலைகளுக்கு வேண்டிய முக்கியமான சான்றிதழ்கள், இறக்குமதி அனுமதி, இரும்பு, நிலக்கரி போன்ற சாதனங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு இக் கூட்டமைப்புகள் ஏற்பாடு செய்து வருகின்றன. அதனோடு, ஆலைகளுக்கு வேண்டிய தொழில்நுட்பப் பணிகளையும் செய்து வருகின்றன. இதற்காக ஒவ்வொரு கூட்டமைப்பிலும் சர்க்கரை ஆலைப் பொறியாளரும், சர்க்கரைத் தொழில் வல்லுநரும் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் உறுப்பினராயுள்ள ஒவ்வோர் ஆலைக்கும் சென்று அவற்றிற்கு ஆலோசனை கூறுகின்றனர். அதனோடு, ஆலைகள் இயங்கி வரும் முறையை ஆராய்ந்து, அவற்றின் நடவடிக்கைகளைப்பற்றிய விரிவான குறிப்புகளை எழுதி, அவை மேற்கொள்ள வேண்டிய காரியங்களைப் பற்றி ஆலோசனை வழங்குகின்றனர்.

II கூட்டுறவுப் பஞ்சாலைகள்

இந்தியாவில் விவசாயிகள் விற்பனைக்காகச் சாகுபடி செய்யும் பயிர்களில் பருத்திதான் முதலிடம் வகிக்கிறது. 1950-51-ல் மொத்தம் 2.9 மில்லியன் மூட்டைப் பஞ்சு உற்பத்தி செய்யப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 5.1 மில்லியன் மூட்டை உற்பத்தி செய்யப்பட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்து ஆண்டுதோறும் 6·3 மில்லியன் மூட்டைப் பஞ்சு உற்பத்தியாகி வந்திருக்கிறது.

பருத்தியின் உற்பத்தியைப் பெருக்க ஐந்தாண்டுத் திட்டங்களில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பருத்தி மிகவும் பயனுள்ள பொருள். சாகுபடி செய்வோருக்கு இதனால் நிறைய வருமானம் கிடைக்கிறது. அதனோடு, இலட்சக்கணக்கான தொழிலாளர் பணி புரிந்துவரும் நூற்பாலைகளுக்கும் நெசவாலைகளுக்கும் இதுதான் மூலப்பொருள். பருத்தித் தொழிலை நம்பியே பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் நம் நாட்டில் வாழ்ந்து வருகின்றன. பருத்தி நெசவுத் தொழிலில் நம் நாடு துரிதமாக முன்னேறி வருகிறது. ஏனைய நாடுகளோடு போட்டியிடக்கூடிய அளவுக்கு இத் தொழில் வளர்ச்சிபெற்று வருகிறது. 1955-56-ல் மாதந்தோறும் ரூ. 5 கோடி மதிப்புள்ள துணிகள் நம் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமுடிவில் இதன் உற்பத்தி 17 கோடி ரூபாய் மதிப்பிற்கு

அதிகரித்துள்ளது. மூன்றுவது திட்டம் முடியும்போது இதன் உற்பத்தி மேலும் 18 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுப் பஞ்சாலையின் அவசியம்

பருத்தியை விதை பிரித்து, அடித்து செட்டியாக்கினால்தான் அதை நூற்பாலைகளும் நெசவாலைகளும் பயன்படுத்தமுடியும். எனவே, இப் பஞ்சாலைத் தொழில் நெசவுத் தொழிலோடு இணைந்த தாகும். அதனோடு மட்டுமன்றி, பருத்தி அங்காடியிலும் இதற்கு நெருங்கிய தொடர்புண்டு. நாட்டில் உற்பத்தியாகும் பருத்தி நேரடியாகப் பஞ்சாலைகளுக்கு விற்கப்படுவதுண்டு; தரகர்கள் வாயி லாகவும் விற்பனையாகிறது. இப் பஞ்சாலைகள் அவற்றைச் சுத்தப் படுத்தி, கெட்டியாக்கி மூட்டை மூட்டைகளாக நெசவாலைகளுக்கு அனுப்புகின்றன.

பருத்தியைக் கிராமமக்களிடமிருந்து வாங்கும்போது வியாபாரி களும் தரகர்களும் விவசாயிகளை ஏமாற்றுவதற்காகப் பல வழிகளை மேற்கொள்கின்றனர். சரியாக எடைபோடாமல் தவறான எடை களைப் பயன்படுத்தி அதிக அளவுப் பருத்தியைக் கொள்ளையடிக் கின்றனர்; அவர்களை ஏமாற்றி மலிவாக வாங்குகின்றனர்; வாங்கிய பருத்திக்கு முழுத் தொகையை வழங்காமல் கண்ட காரணங்களுக் கெல்லாம் தள்ளுபடி செய்கின்றனர். பருத்தி அங்காடியில் விவசா யிகள் ஏமாற்றப்படுவது சகஜமாகிவிட்டது. இதை நீக்கும் வழிதான் கூட்டுறவுப் பஞ்சாலை. பருத்தி சாகுபடி செய்வோர் கூட்டாகச் சேர்ந்து கூட்டுறவுப் பஞ்சாலைகளை ஏற்படுத்தித் தங்கள் பருத்திக்கு நல்ல விலைபெற்று வருகின்றனர். இதனால் கூட்டுறவுப் பஞ்சாலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

952-ல் மொத்தம் 14 கூட்டுறவுப் பஞ்சாலைகள் தாம் இருந்தன. இவற்றில் 8,453 பேர் உறுப்பினர்களாக இருந்தனர். இவை யனைத்தின் நடப்பு மூலதனம் 53 இலட்சம் ரூபாய்தான். 1956-ல் இவ் வகை ஆலைகளின் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்தது. இவை பக்குவப்படுத்திய பஞ்சின் அளவு 13 இலட்சம் மணங்காகும். இவை பெற்ற இலாபம் ரூ 16,793 இக் கூட்டுறவுப் பஞ்சாலைகள் நல்ல முறையில் இயங்கி வந்ததால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத் தில் 48 ஆலைகளை அமைக்கத் திட்டக்குழு முடிவுசெய்தது. இவற்றில் பம்பாயில் 18 ஆலைகளும், ஆந்திராவில் 8 ஆலைகளும் எஞ்சியவை இதர மாநிலங்களிலும் அமைக்கப்பட்டன. 1962ஆம் ஆண்டில் மொத்தம் 131 பஞ்சாலைகள் கூட்டுறவு முறையில் இயங்கி வந்தன. இவற்றில் 4,700 சங்கங்களும் 67,351 குடியானவர்களும் உறுப்பினர் களாயிருந்தனர். இவையனைத்தும் பெற்ற பங்கு மூலதனம் மட்டும்

166.6 இலட்சம் ரூபாயாகும். இவற்றின் நடைமுறை மூலதனம் 4.32 கோடி ரூபாயாக இருந்தது. அவ்வாண்டில் இவ் வாலைகள் பக்குவப்படுத்திய பஞ்சின் அளவு 4·5 லட்சம் மூட்டைகளாகும்.

1971ஆம் ஆண்டில் இவ் வகை ஆலைகளின் எண்ணிக்கை 274 ஆக உயர்ந்துவிட்டது. சுமார் ஆண்டொன்றுக்கு 26 இலட்சம் குவிண்டால் பஞ்சைப் பக்குவப்படுத்தி வந்தன. இதில் 75 சதவீதம் குஜராத் மாநிலத்திலேயே பக்குவப்படுத்தப்பட்டது. நாட்டில் பக்குவப்படுத்தப்பட்ட மொத்த பஞ்சில் 13 சதவீதம் கூட்டுறவு ஆலைகளால் செய்யப்பட்டது. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில், மேலும் 200 கூட்டுறவுப் பஞ்சாலைகளை ஏற்படுத்தத் திட்டம் தீட்டப் பட்டுள்ளது. கூட்டுறவு ஆலைகளால் பதனிடப்படும் பஞ்சின் அளவு 22.5 இலட்சம் மூட்டையாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப் படுகிறது. அவ்வாறுயின், கூட்டுறவுப் பஞ்சாலைகள் மட்டும் சுமார் 27 சதவீதப் பஞ்சைப் பக்குவப்படுத்தும் எனக் கணக்கிடப் பட்டுள்ளது.

பஞ்சாலையின் இட அமைப்பு : பஞ்சாலையை அமைப்பது அவ்வளவு எளிதல்ல; இதற்கு நிறைய மூலதனம் தேவை. எனவே கூட்டுறவுப் பஞ்சாலைகளை அமைக்கும்போது அவற்றிற்குரிய இடத்தில் அமைக்கவேண்டும். பருத்தி அதிகமாகச் சாகுபடி செய் யப்படும் இடமாக இருப்பது மிக முக்கியம். இவ் வாலை அறுவடை காலத்தில் மட்டும் இயங்கக்கூடியது. எனவே, அறுவடை காலத்தின் போது குறைந்த பட்சம் ஓர் இலட்சம் மணங்கு பருத்தியாவது இருந்தால்தான் கூட்டுறவுப் பஞ்சாலையை ஓரளவிற்காவது இலாப கரமாக இயக்க முடியும். இவ் வாலைகளுக்கு வேண்டிய இயந்திரங்கள் கிடைப்பது கஷ்டம்; அப்படியே கிடைத்தாலும் அவற்றிற்கு அதிக விலை கொடுக்கவேண்டும்.

ஏனைய வசதிகள் : கூட்டுறவுப் பஞ்சாலைக்குரிய இடம் தேர்ந்தெடுக்கப்பட்டபின் ஏனைய வசதிகளைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். அவ் வாலையை அமைக்கப் போதுமான அளவு பங்கு மூலதனம் வேண்டும்; ஆலைக்கு வேண்டிய அனுமதி பெறவேண்டும். அக் கூட்டுறவு ஆலைக்குரிய சட்டதிட்டங்களை வகுக்கவேண்டும். பங்குக்குரியவர்களில் பெரும்பான்மையோர் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளாக இருக்கவேண்டும். ஒரு கூட்டுறவுப் பஞ்சாலையை அமைக்க ரூ $1\frac{1}{2}$ இலட்சப் பங்கு மூலதனம் இருந்தால் போதும். மாநில அரசாங்கமும் ஒவ்வோர் ஆலைக்கும் தன் பங்கு மூலதனமாக 25,000 ரூபாய் வழங்கும். ஆலைக்கு வேண்டிய மொத்த மூலதனத்தில் 25 சதவீதம் உறுப்பினர்களும் அரசாங்கமும் செலுத்த

லாம். அதனோடு, 55 சதவீதம் அரசாங்கத்திடமிருந்து நீண்ட காலக் கடனாகக் கிடைக்கிறது. மூன்றாண்டுகளுக்கு நிர்வாகச் செலவுக்கென்று அரசாங்கம் நிதி உதவி அளிக்கிறது.

III ஏனைய வகை ஆலைகள்

விவசாயப் பொருள்களை நுகர்ச்சிக்கேற்றவாறு பக்குவப் படுத்தும் ஆலைகளைக் கூட்டுறவு முறையில் அமைக்கத் தீவிரமான முயற்சிகள் கடந்த சில ஆண்டுகளாகத்தான் எடுக்கப்பட்டு வருகின்றன. கரும்பாலைகளையும் பஞ்சாலைகளையுமட்டுமன்றி, அரிசி ஆலைகள், எண்ணெய் ஆலைகள், பழங்களைப் பக்குவப்படுத்தும் ஆலைகள், தேயிலை, காப்பி பதனிடும் ஆலைகள் ஆகியவற்றையும் கூட்டுறவு முறையில் அமைத்து வருகின்றன. இவ்வாலைகளைப் பற்றி விவரமாக ஆராய்வதற்கு இது உகந்த இடமன்று எனவே இவற்றைப் பற்றிச் சுருக்கமாகக் கண்டால் போதுமானது.

தற்போதுள்ள உணவு நெருக்கடியையும் உணவுப் பொருள் களைப் பகிர்ந்தளிக்கும் பிரச்சினையையும் தவிர்ப்பதற்காகக் கூட்டுறவு முறையில் அரிசி ஆலைகளை அமைக்கும் திட்டத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கூட்டுறவு அரிசி ஆலைகளுக்குத் தாராளமாக நிதி உதவி செய்து வருகிறது. 1970 வரை சுமார் 792 அரிசி ஆலைகளுக்கு மாநில அரசாங்கங்களின் வாயிலாக நிதி உதவி செய் துள்ளது. கோதாவரி, தஞ்சாவூர், ராஜ்பூர் போன்ற மாவட்டங் களில் நவீன அரிசி ஆலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ் வாலை களுக்கு வேண்டிய இயந்திரங்களை ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளது. இந்த நவீன ஆலைகள் ஏறக்குறைய 25 இலட்சம் டன் அரிசியைப் பக்குவமாக அரைக்கக் கூடியவை.

எண்ணெய் ஆலைகளும் கூட்டுறவு முறையில் வளர்ந்து வருகின்றன. 1969 வரை 188 எண்ணெய் ஆலைகள் கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல் பழங்கள் காய்கறி களைப் பக்குவப்படுத்தும் ஆலைகளும் கூட்டுறவு முறையில் அமைக் கப்பட்டு வருகின்றன. தேசிய விவசாயக் கூட்டுறவு விற்பனை நிறுவனம் காய்கறிகளையும் பழங்களையும் பக்குவப்படுத்தி, டப்பாக் களில் வைத்தடைத்து விற்பனை செய்வதற்காக அண்மையில் டில்லி யில் ஒரு மாபெரும் ஆலையை அமைத்துள்ளது. மகாராஷ்டிரத்தில் வாழைப்பழத்திலிருந்து பொடி தயாரிக்கும் கூட்டுறவு ஆலை யொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தேயிலைத்தோட்ட உரிமையாளர்களும் கூட்டுறவு முறையில் தேயிலையைப் பக்குவப்

படுத்தும் ஆலைகளை அமைக்து வருகின்றனர். தற்போது இவ் வகை கூட்டுறவுத் தேயிலை ஆலைகள் மொத்தம் 13 உள்ளன. இவற்றில் 8 ஆலைகள் தமிழ்நாட்டில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இத்தொழில்களுக்குத் தேவையான திட்டம்

1961-ல் அமைக்கப்பட்ட கூட்டுறவுப் பக்குவப்படுத்தும் ஆலைகள் பற்றிய ஆய்வுக்குழு இத் தொழில்கள் நல்ல முறையில் திட்டமிடப்பட்டுத் தொடங்கப்படவேண்டும் என்றும், இல்லையேல் இத் தொழில்கள் குன்றிவிட நேரிடும் என்றும் எச்சரிக்கை செய்துள்ளது. இக் கூட்டுறவு ஆலைகளை அமைப்பதற்கு முன் அவை எவ்வளவு தூரம் இலாபகரமாக இயங்க முடியும் என்பதை ஆலோசிக்க வேண்டும்; அவசரப்பட்டு இவ் வகை ஆலைகளைக் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் தொடங்கினுல் அவற்றிற்கு நட்டம் ஏற்படுவது உறுதி என்று கூறியுள்ளது. அதற்குச் சான்ருக, பல கூட்டுறவு ஆலைகளைச் சுட்டிக்காட்டியுள்ளது. பருத்தி விளைச்சல் குறைந்து கொண்டே வருகிற பகுதியில் கூட்டுறவுப் பஞ்சாலை ஒன்று தொடங்கப்பட்டு, அவ் வாலைக்கு வேண்டிய பருத்தி கிடைக்காததால் அது மூடப்பட வேண்டிய நிலையை அடைந்துவிட்டது. அதேபோல் கோதுமை விளையாத இடத்தில் அமைக்கப்பட்ட கோதுமை மாவு ஆலையும் மூடப்பட்டுவிட்டது. எனவே, கூட்டுறவு ஆலையைத் தொடங்கு முன் அதற்குரிய மூலப்பொருள் வேண்டிய அளவில் கிடைக்குமா என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று இக்குழு எச்சரித்துள்ளது.

கூட்டுறவு விவசாயப் பொருள் பக்குவப்படுத்தும் ஆலைகள் எவ்வளவு தூரம் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட குழு 1966-ல் அளித்த அறிக்கையின் சாரத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். பல கூட்டுறவு ஆலைகள் முன் திட்டம் ஏதுமின்றி அமைக்கப்பட்டுள்ளன. எனவே அவையனைத்தும் சரிவர இயங்க முடியாமல் தத்தளிக்கின்றன. இவ் வகைக் கூட்டுறவு ஆலைகளை அமைப்பதற்கு முன் அவற்றிற்குரிய திட்டங்களைச் சம்பந்தப்பட்ட அரசாங்கத்துறையினர் முறையாகப் பரிசீலனை செய்ய வேண்டும்.

இவ் வகை ஆலைகள் இப்போது எந்த நிலையிலுள்ளன, அவற்றைத் திட்டமிட்டு முன்னேற்றுவதெப்படி என்பதை ஆராய்ந்து ஆலோசனை கூறுவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள் வருமாறு:

கூட்டுறவுத் துறையில் இவ் வகை ஆலைகளைஅமைப்பதற்குமுன் கீழ்க்காணும் காரியங்களைப்பற்றி நன்கு பரிசீலனை செய்யவேண்டும்.

(1) எந்தக் கூட்டுறவுப் பக்குவப்படுத்தும் ஆலையை அமைப்பதற்கு முன் அதற்கு வேண்டிய விவசாயப் பொருள் பெருமளவில் அப் பகுதியில் விளைகிறதா என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்; (2) இவ்வகை ஆலைகளை அமைக்கவேண்டியது அவசியமா? அவசிய மென்றால் அதற்கு எவ்வளவு தூரம் விவசாயிகளின் ஆதரவு கிடைக்கும்? (3) அவ்வாலைகளை அமைத்தால், அவற்றை நடத்து வதற்கு என்ன செலவாகும், எவ்வளவு வருமானம் கிடைக்கும்? (4) அவ்வாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்களை ஏற்றி வரவும் முடிவுப் பொருள்களை விற்பனைக்கு அனுப்பவும் வேண்டிய போக்கு வரத்து வசதிகள் உள்ளனவா என்பதையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இவற்றின் வளர்ச்சி

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தினால் அமைக்கப்பட்ட வல்லுநர்களின் குழு பரிந்துரைத்தபடி நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 975 புதிய பக்குவப்படுத்தும் ஆலைகள் கூட்டுறவு முறையில் அமைக்கப்படும். இவற்றில் 300 அரிசி ஆலைகளும் 30 சர்க்கரை ஆலைகளும் 150 பஞ்சாலைகளும் 200 எண்ணெய் ஆலைகளும் குறிப்பிடத்தக்கவை. ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ள அரிசி ஆலைகளில் 200 நவீன மயமாக்கப்படும். இப்புதிய ஆலைகளை அமைக்க மொத்தம் 205 கோடி ரூபாய் செலவாகும். இதில் 70 கோடி ரூபாய் பங்கு மூலதனமாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படு கிறது. தொழில் நிதிக் கார்ப்பரேஷனைப் போன்ற நிறுவனங்கள் 100 கோடி ரூபாய் கடன் வழங்குமென்றும், எஞ்சிய தொகையை மாநில அரசாங்கங்களும் கூட்டுறவு வங்கிகளும் வழங்குமென்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

27. பண்டகங்கள் அல்லது கிடங்குகள்

உற்பத்தியாகும் பண்டங்களை உடனடியாக விற்காமல் அவற்றைக் கிடங்குகளில் பத்திரமாகச் சேகரித்து வைத்து நல்ல விலைக்கு விற்கும் பழக்கம் பெருகிவருகிறது. எனவே, விவசாயிகளும் தங்கள் விளை பொருள்களை உடனடியாக விற்காமல் அவற்றைச் சேகரித்துப் பத்திரமாக வைத்திருந்து விலை ஏறுங்கால் விற்றுப் பயனடைய முடியும். அறுவடை சமயத்தில் விற்றால் நல்ல விலைக்கு விற்க இயலாது. எனவே, விளைபொருள்களைச் சிறிது காலத்திற்காகிலும் பாதுகாப்பாக வைக்கவேண்டும். அவ்வாறு வைப்பதற்குப் பெரும்பாலான விவசாயிகளுக்கு வசதிகள் கிடையா. அவ் வசதிகள் இல்லாத காரணத்தால் அறுவடை முடிந்தவுடன் தம் விளைபொருள்களை விற்றுவிடவேண்டிய நிலையில் பல விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர். இக் கட்டத்திலிருந்து விவசாய மக்களைக் கூட்டுறவுத் துறை பாதுகாக்க முடியும். அவர்களுக்கு வேண்டிய விவசாயக் கிடங்குகளைக் கட்டிக் கொடுத்து, அவர்கள் கொண்டு வந்து வைக்கும் விளைபொருள்களின் அடிப்படையில் கடன் கொடுத்து உதவக் கூட்டுறவுச் சங்கங்கள் முன்வரவேண்டும். இவ்வுதவியைக் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டும் செய்தால் போதாது; வேறு பல அமைப்புகளும் நிறுவனங்களும் கூட இதைச்செய்ய முன்வர வேண்டும்.

கிடங்குச் சட்டங்கள்

கிடங்குகளைக் கட்டி அவற்றை நல்லமுறையில் நடத்துவதற்கென்று பல மாநிலங்களில் கிடங்குச் சட்டங்கள் அமலாக்கப்பட்டிருக்கின்றன. இச் சட்டங்களெல்லாம் ஏறக்குறைய ஒரே மாதிரியாகவே அமைந்துள்ளன. எனவே, இவற்றின் பொது அம்சங்களை மட்டும் இங்கு ஆராய்ந்தால் போதும்.

கிடங்கினை அல்லது பண்டகத்தைக் கட்டி அந்தத் தொழிலைச் செய்ய விரும்பும் எவரும், அல்லது எந்தக் கழகமும் சம்பந்தப்

பட்ட மாநில அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெறவேண்டும். அவ்வாறு அனுமதி பெறுவதற்கு விண்ணப்பம் செய்யும்போது எந்த இடத்தில் எவ்வகையான பொருள்களுக்காகக் கிடங்குக் கட்டத் திட்டமிட்டிருப்பதைக் குறிப்பிடவேண்டும்; அதோடு கிடங்கின் அளவையும் அதற்குரிய செலவு மதிப்பீட்டையும் குறிப்பிடல் வேண்டும். இவையனைத்தையும் உரியமுறையில் அரசாங்கம் பரிசீலனை செய்த பின்னர்த்தான் அனுமதி வழங்கப்படும். மேலும், கிடங்கு அமைக்க முன் வருவோர் பணவசதியுடையவரா, அனுமதி பெறுவதற்குறிய கட்டணத்தைச் செலுத்திவிட்டனரா என்பதையும் அரசாங்கம் விசாரித்து பின்னர் தான் அனுமதி வழங்கும்.

கிடங்கு வைத்து நடத்த வழங்கப்படும் அனுமதியைப் புதுப்பிக்க வேண்டிய கட்டமும் உண்டு. அவ்வாறு புதுப்பிப்பதற்கும் கட்டணம் செலுத்தவேண்டும். கிடங்கில் பத்திரப்படுத்தி வைக்கவேண்டிய பொருள்களுக்கு அளவுக்கு மிஞ்சி கட்டணம் வசூலித்தாலோ அதை வைத்து நடத்துவோர் நொடித்துவிட்டாலோ, கிடங்கு வைத்து நடத்துவதில் முறைகேடான செயல்களைச் செய்தாலோ அனுமதி ரத்து செய்யப்படும். அவ்வாறு அனுமதியை ரத்து செய்யுமுன் அவருக்கு நோட்டீஸ் அனுப்பப்படும். அதற்குரிய விளக்கத்தைச் சரியானமுறையில் கொடுக்காவிட்டால்தான் அனுமதி ரத்து செய்யப்படும். அனுமதி பெற்றுக் கிடங்குகளை வைத்து நடத்துவோர் அவ்வப்போது பாதுகாப்பிற்காக வைக்கப்படும் பொருள்களைப் பற்றிய முழு விவரத்தையும் அப்பொருளுக்குரியவரின் விவரத்தையும் அதற்கென அச்சிடப்பட்டுள்ள விவரத்தாளில் பூர்த்திசெய்து அந்த ரசீதை உரியவரிடம் கொடுக்க வேண்டும். அந்த ரசீதைப்பெற்றுள்ள உரிமையாளர் விரும்பினுல் அதை வேறெவருடைய பெயருக்கும் மாற்றலாம். எனவே, ரசீது வைத்திருப்பவருக்குத்தான் அப் பொருள் உரியதாகும்.

இப்பண்டகக் கிடங்குகள் புரியவேண்டிய பணிகள் வருமாறு:

(1) தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொருள்களைக் கவனத்துடன் பாதுகாக்கவேண்டும். அப் பொருள்களுக்கு எவ்விதச் சேதாரமும் ஏற்படாதபடி கண்ணும் கருத்துமாய்ப் பேணவேண்டும்.

(2) ஒவ்வொருவருடைய பொருள்களுக்கும் ஏதாவது அடையாளக்குறியிட்டு, அவற்றைத் தனித்தனியாக வைத்திருக்க வேண்டும். எனினும் ஒரே ரகமாயுள்ள பொருள்களாயிருந்தால் எல்லாவற்றையும் சேர்த்து வைக்கலாம்.

(3) பாதுகாப்பிற்காக வைக்கப்படும் இப் பொருள்கள் தீ, மழை, வெள்ளம் போன்றவற்றால் நாசமாகிவிடக்கூடும்; அல்லது அவை திருட்டுப் போய் விடலாம். எனவே அவற்றைக் காப்பீடு (Insurance) செய்தல் அவசியம்.

(4) இப் பண்டகங்கள் கூட்டுறவுச் சங்கம் வைக்கும் பொருள்களுக்குத்தான் முதலிடம் கொடுக்கவேண்டும். மற்றப்படி, அனைவரையும் சமமாகப் பாவித்துப் பணிபுரிய வேண்டும்.

இக் கிடங்குகளில் வைக்கப்படும் பொருள்களின் எடையோ அளவோ தானாகக் குறையக்கூடும்; அல்லது அவை ஓரளவு கெட்டுப் போகலாம். இதற்குக் கிடங்கு உரிமையாளர் பொறுப்பல்லர். அவ்வாறு கெட்டுப்போகும் நிலையில் உள்ள பொருள்களை உடனடியாக எடுத்துச் செல்லும்படி சம்பந்தப்பட்ட உரிமையாளருக்கு நோட்டீஸ் அனுப்பினால் போதும். அவ்வாறு அவற்றை அவர்கள் எடுத்துச் செல்லத் தவறினால் கிடங்கு உரிமையாளரே அவற்றை ஏலத்திற்குக் கொண்டு வந்து விற்றுவிடலாம். கிடங்குகளில் பொருள்களை வைப்போர் அதற்குரிய கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

கிடங்குகள் தரும் ரசீது

இக் கிடங்குகளில் பொருள்களை வைப்போருக்குக் கொடுக்கப் படும் ரசீது மிக முக்கியமானது. கிடங்குச் சட்டத்தின் சரத்துப்படி இது வழங்கப்படுகிறது. இந்த ரசீதில் பொருளுக்குரியவரின் பெயர், முகவரி, பண்டகத்தின் இடம், வைக்கப்பட்டுள்ள பொருளின் தரம், எடை, அளவு, அதற்குரிய கட்டணம் ஆகிய எல்லா விவரங்களும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

இந்த ரசீது ஒப்பந்த அடிப்படையில் இருக்கலாம்; அல்லது சாதாரணமானதாயும் இருக்கலாம். இதில் நிபந்தனை ஏதும் குறிப்பிடப்படாமலிருந்தால் அப்போது ஒப்பந்த ரசீது என்று பொருள். எனவே, இதை எவர் பெயருக்கு வேண்டுமானாலும் மாற்றலாம். எவர் பெயருக்கு மாற்றினாலும் அவர்தாம் அப் பொருளுக்குரியவர் என்று பொருள். எனவே, முறைப்படி மாற்றப் பட்டுள்ள இந்த ரசீதைக் காட்டி, உரிய பொருளைப் பண்டகத்திலிருந்து பெறலாம். ஒப்பந்த ரசீதைச் சாதாரண ரசீதாக மாற்ற முடியாது. ரசீதுக்குரிய பொருளை அப்படியே எடுத்துச் செல்லலாம், அல்லது கொஞ்சம் கொஞ்சமாகவும் எடுத்துச் செல்லலாம். சிறிது சிறிதாக எடுத்துச் செல்லும் போது அந்த அளவை ரசீதில் குறித்துக் கொள்வார்கள். இந்த ரசீதைக் கொண்டு உரியவர்

கடன் வாங்கலாம், அதை வங்கியிடம் கொடுத்துக் கழிவும் செய்யலாம். இன்றுள்ள வணிக வங்கிகள் இந்த ரசீதின் அடிப்படையில் தாராளமாகக் கடன் வழங்கிவருகின்றன.

அரசாங்கக் கிடங்குகள்

தனி நபர்களும் தனியார் நிறுவனங்களும் இக் கிடங்குகளை அமைக்க அவ்வளவாக முன் வரவில்லை. காரணம் இக் கிடங்குகளை அமைக்கப் பெருந்தொகை செலவிடப்படவேண்டும்; அப்படியே செலவழித்துக் கட்டினாலும் வருமானம் அவ்வளவாகக் கிடைக்காது. எனவே, தனியார் துறையிலேயே இத் தொழிலை விட்டுவிட்டால் இத் தொழில் துரிதமாக முன்னேற முடியாது. ஆகையால்தான் கிடங்கு அமைப்பு வேலையை மத்திய அரசாங்கமே ஏற்றுள்ளது.

1959ஆம் ஆண்டில் விவசாய உற்பத்தி (வளர்ச்சி, பண்டகக்) கழகச் சட்டம் அமலாக்கப்பட்டது. அச் சட்டத்தின்படி (1) தேசியக் கூட்டுறவு வளர்ச்சி, பண்டக வாரியம், (2) மத்தியக் கிடங்குக் கழகம் (3) மாநிலக் கிடங்குக் கழகம் ஆகிய மூன்று அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

1. **தேசியக் கூட்டுறவு வளர்ச்சி, பண்டக வாரியம்:** மத்தியஅரசாங்க விவசாய, உணவு அமைச்சரின் தலைமையில் இவ் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 22 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவ் வாரியத்தின் குறிக்கோளும் பணிகளும் வருமாறு:

விவசாயக் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்கள், பக்குவப் படுத்தும் தொழில் சங்கங்கள், கூட்டுறவு விவசாயக் கிடங்குகள் ஆகியவற்றின் பங்கு மூலதனத்தை வாங்கவும், அவற்றிற்கு நிதி உதவி செய்வதற்கும் வேண்டிய கடனையும் மானியத் தொகையையும் மாநில அரசாங்கங்களுக்கு வழங்குதல்;

பண்டகக் கழகங்களுக்கும் மாநில அரசாங்கங்களுக்கும் நிதி கொடுத்து, மத்திய அரசாங்கத்தின் சார்பில் விவசாயப் பொருள்களை வாங்கச் செய்தல்.

விவசாய வளர்ச்சிக்கு வேண்டிய விதை வித்துகள், உரம், எரு, கருவிகள் போன்றனவற்றைக் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக விநியோகம் செய்வதோடு, விவசாயத் திட்டத்தை வகுத்து, பயிர்த் தொழிலை மேம்படுத்தல்;

மத்தியப் பண்டகக் கழகத்தின் பங்கு மூலதனத்தைப் பெறுவதோடு, அதற்கும் மாநிலப் பண்டகக் கழகங்களுக்கும் வேண்டிய கடனை வழங்குதல்;

மேற்கூறிய காரியங்களைச் செய்வதற்காகத் தேசியப் பண்டக வளர்ச்சி நிதியை உருவாக்கி அந் நிதி நிறுவனத்தை நடத்துதல்.

1963 மார்ச் மாதம் இந்த வாரியம் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகமாக மாற்றப்பட்டது. அன்றையிலிருந்து கூட்டுறவு வளர்ச்சியில் மட்டும்தான் இக் கழகம் அக்கறை காட்டி வருகிறது. எனவே, பண்டகங்களை ஏற்படுத்தும் பணியை மத்திய அரசாங்கமே ஏற்றுக்கொண்டுள்ளது.

2. **மத்தியக் கிடங்குக் கழகம்** : இக் கழகம் ரூ. 20 கோடி அனுமானிக்கப்பட்ட மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இம் மூலதனம் 1,000 ரூபாய் மதிப்புள்ள 2 இலட்சம் பங்குகளைக் கொண்டது. இப் பங்கு மூலதனத்திற்கும் இலாப ஈவுக்கும் மத்திய அரசாங்கமே உத்தரவாதம் அளித்துள்ளது. இம் மத்தியக் கிடங்குக் கழகத்தின் பணிகளில் குறிப்பிடத்தக்கவை வருமாறு :

(1) தகுந்த இடங்களில் பண்டகங்களை அல்லது கிடங்குகளைக் கட்டுதல் அல்லது வாங்குதல்.

(2) விவசாயக் கிடங்குகளை அமைத்து நடத்துவதோடு, அக் கிடங்கிற்கு வரும் பொருள்களை ஏற்றி வரவும் அக் கிடங்கிலிருந்து எடுத்துச் செல்லவும் வேண்டிய போக்குவரத்து வசதியை ஏற்படுத்தல்.

(3) மாநிலக் கிடங்குக் கழகங்களின் பங்கு மூலதனத்தைப் பெற்று அவற்றில் பங்கு கொள்ளுதல்.

(4) அரசாங்கத்தின் சார்பில் விவசாயப் பொருள்களை வாங்குதல், விற்றல், விநியோகம் செய்தல், அவற்றைக் கிடங்குகளில் பத்திரப்படுத்தி வைத்தல்.

3. **மாநிலக் கிடங்குக் கழகம்** : ஒவ்வொரு மாநிலமும் 2 கோடி ரூபாய் வரை அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் மாநிலக் கிடங்குக் கழகத்தை உருவாக்கியுள்ளது. இக் கழகப் பங்கில் மத்தியக் கிடங்குக் கழகம் மட்டும் 50 சதவீதம் பெற்றுள்ளது. இம் மாநிலக் கிடங்குக் கழகம் கடன்பத்திரங்களை வெளியிட்டு நிதியைத் திரட்டலாம்; அதனோடு தமக்கு வேண்டிய நிதியை அரசாங்கத்திடமிருந்து மட்டுமன்றி, ரிசர்வ் பாங்கிடமிருந்தும் ஸ்டேட் பாங்கிடமிருந்தும் கடனாகப் பெறலாம்.

ஐந்தாண்டுத் திட்டங்களும் பண்டகங்களின் வளர்ச்சியும்

பண்டகங்களுக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தான் சிறப்பிடம் கொடுக்கப்பட்டது. மாநிலப் பண்டகக் கழகங்

களின் பங்கு மூலதனத்திற்கென்று 4.87 கோடி ரூபாயை மத்திய அரசாங்கம் ஒதுக்கியது. அதனோடு, தேசியப் பண்டக வளர்ச்சி நிதிக்கென்றும் கணிசமான அளவு நிதி ஒதுக்கப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத்திட்ட இறுதிக்குள் மத்தியப் பண்டகக் கழகம் சுமார் 75,000 டன் கொள்ளக்கூடிய பண்டகங்களைக் கட்டிவிட்டது. 1972-73-க்குள் இக் கழகம் கட்டிய பண்டகங்களின் எண்ணிக்கை 143 ஆக அதிகரித்தது. இவற்றின் கொள்திறன் மட்டும் 15·58 இலட்சம் டன்களாகும். இவற்றில் 8·36 இலட்சம் டன் கொள்திறன் கொண்ட 102 பண்டகங்கள் பொதுவானவையாகும். இவை தவிர தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் 21 பண்டகங்கள் அமைக்கப்பட்டன. இக் கழகம் குளிர்சாதன வசதியுள்ள கிடங்கொன்றையும் அமைத்துள்ளது. இதற்காகப் பொருள் வைப்போரிடமிருந்து தனிக்கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இக் கிடங்கு கல்கத்தாவிலுள்ள துறைமுகத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அவலரக்குகள் பெரும்பாலும் இக் கிடங்கில்தான் பத்தரப்படுத்தி வைக்கப்படுகின்றன. மத்தியப் பண்டகங்கள் பெரும்பாலும் அரசாங்கத்தாலேயே பயன்படுத்தப் படுகின்றன. பொதுத் துறையிலுள்ள உணவுக் கார்ப்பரேஷனும் தேசிய விதைக் கார்ப்பரேஷனும்தாம் இவற்றை அதிகமாகப் பயன்படுத்துகின்றன. தனிப்பட்ட வியாபாரிகள், உற்பத்தியாளர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவையும் இவற்றை ஓரளவிற்குப் பயன்படுத்துகின்றன. உற்பத்தியாளர்கள் இப் பண்டகங்களை அதிகமாகப் பயன்படுத்துவதில்லை; காரணம் இப்பண்டக ரசீதைக் காட்டி அவர்கள் வணிக வங்கிகளிடமிருந்து கடன் வாங்க முடிவதில்லை. விவசாயிகளும் தாம் வைத்துள்ள பொருள்களுக்கான ரசீதைக் காட்டிக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடன் பெறமுடியாது; இது ரிசர்வ் பாங்கின்கட்டளை. கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மட்டும் இந்த ரசீதின் பேரில் கடன் சங்கங்களிடமிருந்தும் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கங்களிடமிருந்தும் கடன் பெறலாம். அவ்வாறு பெற்ற கடனைப் பொருள்களை விற்கும்போது திருப்பிச் செலுத்திவிடவேண்டும். இவ்வாறாக, பண்டக ரசீதின் பேரில் கடன் வாங்குவது கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், உற்பத்தியாளர்கள் அதிகமாக இப் பண்டகங்களைப் பயன்படுத்துவதில்லை.

பண்டகங்களில் உணவு தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள், வாசனைப் பொருள்கள், பிண்ணாக்கு, உரம், சர்க்கரை போன்றவைதாம் அதிகமாக வைக்கப்படுகின்றன.

மாநிலப் பண்டகக் கழகங்கள் அந்தந்த மாநிலத்திலுள்ள முக்கியமான நகரங்களில் மட்டுமே கிடங்குகளை அமைத்துள்ளன.

அரசாங்கத்திற்கு முக்கியமான இடங்களில்தாம் இவை அமைக்கப்பட்டுள்ளன. 1973ஆம் ஆண்டின் இறுதியில் மாநிலப் பண்டகக் கழகங்கள் அமைத்த பண்டகங்களின் எண்ணிக்கை 751 ஆக உயர்ந்துவிட்டது. இவற்றின் கொள்திறன் 17 இலட்சம் டன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றையும் அந்தந்த மாநில அரசுகள்தாம் அதிகமாகப் பயன்படுத்தி வருகின்றன. அரசாங்கத்திற்கடுத்தபடியாக வணிகர்களும், உற்பத்தியாளரும், கூட்டுறவுச் சங்கங்களும் இவற்றைப் பயன்படுத்துகின்றன.

28. கூட்டுறவு மனைச் சங்கங்கள்

மனித வாழ்வின் இன்றியமையாத் தேவைகளில் வீடும் ஒன்று. ஆனால், நமது நாட்டில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் வீட்டுப் பிரச்சினை அதிகரித்துக் கொண்டே வருகிறது. மக்கள்தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருவதுதான் இதற்கு முக்கியக் காரணம். மக்களின் வாழ்க்கைத் தரமும் கடந்த சில ஆண்டுகளாக உயர்ந்து வருகிறது; இதனால் வசதியான வீடுகளுக்குக் கிராக்கியும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. மேலும், கிராம மக்களில் பலர் வாழ்க்கை நடத்துவதற்கென்று நகரங்களில் வந்து குடியேறுகின்றனர். எனவே, நகரங்களில்தாம் வீட்டுப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உள்ளது. அப்படியானால் கிராமங்களில் இப் பிரச்சினையே கிடையாது என்று சொல்ல முடியாது. அங்கும் வீட்டுப் பிரச்சினை இருந்துகொண்டுதான் இருக்கிறது. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில் கணக்கெடுக்கப்பட்ட விவரத்தின்படி நம் நாட்டிற்கு இன்னும் 60 மில்லியன் வீடுகள் தேவைப்படுகின்றன. ஆண்டுதோறும் மக்கள்தொகை 10 மில்லியனாகப் பெருகி வருகிறது. எனவே, ஆண்டுதோறும் 2 மில்லியன் வீடுகளாவது புதிதாகக் கட்டப் பட்டால்தான் வீட்டுப் பிரச்சினைக்கு ஓரளவாகிலும் முடிவு ஏற்படும். இதனால்தான் மூன்றுவது திட்டத்தில் ஆண்டுதோறும் 2 மில்லியன் புது வீடுகளைக் கட்டத் திட்டமிடப்பட்டது, ஆனால், அந்த ஐந்தாண்டுக் காலத்தில் 4 மில்லியன் வீடுகள்தாம் கட்ட முடிந்தது. இதனால் வீட்டுப் பிரச்சினை இன்னும் ஓய்ந்த பாடில்லை. 1966ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அரசாங்கம் எடுத்த கணக்கின்படி நகரங்களில் 11.4 மில்லியன் வீடுகளும், கிராமப் புறங்களில் 62.7 மில்லியன் வீடுகளும் புதிதாகக் கட்டப்பட்டால் தாம் வீட்டுப் பிரச்சினைக்கு முடிவு ஏற்படும்.

வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் எத்தனையோ விதமான திட்டங்களை

உருவாக்கியுள்ளன. இத் திட்டங்களைப் பற்றிச் சுருக்கமாக இங்குக் குறிப்பிடலாம்.

1. குறைந்த வருமானம் பெறுவோரின் வீட்டுத் திட்டம்

1954ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத் திட்டத்தின்படி மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு 30 வருடகாலம் வரை கடன் தருகிறது. இக் கடனைப் பெறும் மாநில அரசுகள் தனிப்பட்டவர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இன்னும் நகர மன்றம் போன்ற அமைப்புகளுக்கும் கடன் கொடுத்து வீடு கட்ட உதவுகின்றன. இத் திட்டப்படி ஆண்டொன்றுக்கு ரூ. 6,000 வரை வருமானம் பெறுவோருக்கு ரூ. 8,000 வரை கடன் தரப்படுகிறது. வீடு கட்ட ஏற்படும் செலவில் 80 சதவீதம் வரையும் கடன் வழங்கப்படுகிறது; எனினும், இவ் விரு தொகையில் எது குறைந்த தொகையோ அதுதான் கடனாக வழங்கப்படும். இக் கடன்தொகை மொத்தமாக வழங்கப் படுவதில்லை. வீட்டு வேலை நடைபெறும்போது தவணை தவணை யாகத் தரப்படுகிறது. இத் திட்டத்தின்படி 1967ஆம் ஆண்டுவரை மொத்தம் 84 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

2. நடுத்தர வருமானமுள்ளோருக்கு வீட்டு வசதித் திட்டம்

இத் திட்டம் 1959-ல் தொடங்கப்பட்டது. ரூ. 6,000 முதல் ரூ. 15,000 வரை வருமானமுள்ளோர் வீடுகட்டுவதற்கென்று இத் திட்டத்தின் மூலம் கடன் பெறுகின்றனர். இக் கடனை நேரடி யாகவோ கூட்டுறவுச் சங்கத்தின் வழியாகவோ பெறலாம். இத் திட்டப்படி ரூ. 12,000 முதல் ரூ. 20,000 வரை கடன் வழங்கப் படுகிறது. இக் கடன்தொகையும் வீடு கட்டும்போது படிப்படி யாகத் தவணைமுறையில் வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் 1967 வரை 33 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது.

3. அரசாங்க உதவித் தொகை பெறும் வீட்டுத் திட்டம்

ஆலைத் தொழிலாளர்கள் வீடுகட்டிக் கொள்வதற்காக இத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத் திட்டப்படி, ஆலை முதலாளி களும் அரசாங்கத்திடமிருந்து உதவித் தொகை பெற்று, தம் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கலாம். 1967ஆம் ஆண்டு வரை இத் திட்டத்தின்கீழ் 60 கோடி ரூபாய் வழங்கப் பட்டுள்ளது.

4. குடிசை மாற்று வாரியத் திட்டம்

1956ஆம் ஆண்டிலிருந்து அமலாகி வரும் இத் திட்டத்தின் கீழ்க் குடிசைவாழ் மக்களும், வீடு வாசலின்றி வீதிகளில் வாழ்ந்து

வரும் மக்களும் பயனடைந்து வருகின்றனர். ஒவ்வொரு மாநில அரசும் குடிசைவாழ் மக்களுக்கு அடுக்குமாடிகள் கட்டித்தந்து குடிசைகளை ஒழித்து வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள குடிசைமாற்று வாரியம் குறிப்பாகச் சென்னை நகரில் இத்திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டைப் பின் பற்றி வேறு சில மாநில அரசுகளும் இத் திட்டத்தை மேற்கொண்டிருப்பது தமிழ்நாட்டு அரசுக்குப் பெருமை அளிக்கக் கூடியதாகும். இத் திட்டத்திற்கென நாடெங்கிலும் 1967 வரை 36 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது.

5. கிராம வீட்டு வசதித் திட்டம்

கிராமப்புற மக்களும் வீடுகட்ட உதவும் இத் திட்டம் 1957-ல் தொடங்கப்பட்டது. கிராமப்புறங்களில் குறைந்த செலவிலேயே வீடு கட்டிக்கொள்ள முடியும். எனவே, இத் திட்டப்படி வீடுகட்ட விரும்பும் எவரும் கட்டடச் செலவில் 80 சதவீதமோ 3,000 ரூபாய் வரையிலோ எது குறைந்த தொகையோ அதை அரசிடமிருந்து கடனாகப் பெறலாம். இத் திட்டம் சுமார் 5,000 கிராமங்களில் செயல் படலாயிற்று. 1967ஆம் ஆண்டு வரை இத் திட்டத்தின்படி 18 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டது.

6. அரசாங்க ஊழியர் வீட்டு வசதித் திட்டம்

இத் திட்டம் மத்திய அரசாங்க ஊழியர்களுக்கென்று 1956ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மத்திய அரசாங்க ஊழியர்கள் இத் திட்டத்தின்கீழ்ச் சொந்தமாக வீடுகட்டி வருகின்றனர். 1967 வரை வீடுகட்டிக்கொள்வதற்காக அவர்களுக்கு 6 கோடி ரூபாய் வரை கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

ஆயுள் காப்பீட்டுக் கழகமும் ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத் திட்டத்தின்படி மாநில அரசாங்க ஊழியர்களுக்கு அந்தந்த மாநில அரசாங்கம் வீடு கட்டி வாடகைக்கு விடுகிறது. இதற்கான செலவை ஆயுள் காப்பீட்டுக் கழகம் மாநில அரசுகளுக்குக் கடனாக வழங்குகிறது. 1967 வரை 18 கோடி ரூபாய் கடனாக வழங்கியிருக்கிறது.

7. ஆயுள் காப்பீட்டுக் கழகத் திட்டம்

'சொந்த வீடு கட்டிக் கொள்ளுங்கள்' என்ற புதிய திட்டமொன்றை ஆயுள் காப்பீட்டுக் கழகம் இப்போது தொடங்கியுள்ளது. இத் திட்டம் சுமார் 400 முக்கியமான இடங்களில் செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் வீடு கட்டிக் கொள்வதற்காக

இக் கழகம் மிகப் பெரிய தொகையை வழங்கி வந்திருக்கிறது. வீடு கட்டுவதற்காக நடைமுறையில் இருந்து வரும் திட்டங்களில் இது தான் மிகப் பெரிய திட்டமாகும். இத் திட்டம் நடைபெறும் இடங்களில் இக் கழகம் தன் கிளை அலுவலகத்தைக் கொண்டுள்ளது. இத் திட்டத்தின்படி ஆயுள் காப்பீடு செய்துள்ளோர் எவரும் சொந்தமாக வீடு கட்டிக் கொள்ளலாம். அவ்வாறு வீடு கட்டுவதற்கு ஏற்படும் செலவில் 66·6 முதல் 85 சதவீதம் வரை இக் கழகம் கடன் கொடுத்து உதவுகிறது. ஆனால், எவருக்குமே 1,00,000 ரூபாய்க்கு மேல் கடன் கொடுப்பதில்லை. இக் கடனைப் பெற்று வீடு கட்டுவோர் அக் கடன்தொகையைத் திருப்பித் தரும் வரை வீட்டை இக் கழகத்திற்கே அடைமானமாக வைத்திருக்கவேண்டும். அதனோடு, கடன் பெறும் அளவுக்கு ஆயுள் காப்பீடு செய்திருக்கவேண்டும். எவ்வளவு தொகைக்கு ஆயுள் காப்பீடு செய்துள்ளனரோ அதில் 9/10 பாகம் வரைதான் கடன் வழங்கப்படும்.

கூட்டுறவு மனைச் சங்கங்கள்

சொந்தமாக வீடு கட்ட விரும்புவோர் கூட்டுறவு மனைச் சங்கங்களை அமைத்துக்கொண்டு, அதன் வழியாக எல்லா உதவிகளையும் பெற்று வருகின்றனர். கூட்டுறவு மனைச் சங்கங்களுக்கு அரசாங்கம் கடன் கொடுத்து உதவுவதோடு, கட்டட நுட்ப உதவியையும் செய்து தருகிறது. மேலும், இக் கூட்டுறவு மனைச் சங்கங்கள், வீடு கட்டுவதற்குத் தேவைப்படும் எல்லாச் சாதனங்களையும் மொத்தமாகவும் மலிவாகவும் கொள்முதல் செய்துகொள்ளலாம். இச் சங்கங்கள் வீடு கட்டுவதற்குத் தேவையான நிலத்தையும் மொத்தமாக வாங்கி, உறுப்பினர்களுக்குச் சிறு சிறு மனையடிகளாகப் பிரித்து மலிவாக வழங்குகிறது.

கூட்டுறவு மனைச் சங்க வகைகள்

கூட்டுறவு மனைச் சங்கங்கள் பல வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இம் மனைச் சங்கங்கள் இயங்கும் விதத்தைப் பற்றி ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட குழு இச் சங்கங்களை மூன்று இனங்களாகப் பாகுபடுத்தியுள்ளது.

(1) கூட்டுறவு மனைகளைக் கட்டி அவற்றையெல்லாம் தம் சொந்தச் சொத்துகளாகக் கொண்டு இயங்கி வருகின்றன ஒரு சில சங்கங்கள். இச் சங்கங்கள் தமக்குச் சொந்தமான இம் மனைகளையெல்லாம் உறுப்பினர்களுக்கு மலிவாக வாடகைக்கு விட்டு வருகின்றன.

(2) இரண்டாவது வகை மனைச் சங்கங்கள் சொந்தமாக நிலத்தை வாங்கி, அதைச் சமப்படுத்தி, திட்டமிட்டு வீடுகள் கட்டி அவ்வீடுகளை உறுப்பினர்களுக்குத் தவணை முறையில் விற்கின்றன. ஒரு சில சங்கங்கள் நிலத்தை வாங்கி, அதைப் பக்குவப்படுத்தி, சிறு சிறு மனையடிகளாகப் பிரித்து உறுப்பினர்களுக்கு விற்று விடுகின்றன. உறுப்பினர்களே சொந்தமாக இதில் வீடு கட்டிக் கொள்கின்றனர்.

(3) மூன்றாவது வகை மனைச் சங்கங்கள் பம்பாயில் மட்டுமே உள்ளன. தனிப்பட்ட நபர்கள் மனையடிகளை வாங்கி அவற்றில் அடுக்கு மாடி வீடுகளைக் கட்டி விற்கின்றனர். இந்த வீடுகளை வாங்குவோர் கூட்டுறவு மனைச் சங்கத்தை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நிப்ந்தனை உள்ளது. எனவே, அவ்வாறு வீடு வாங்கும் அனைவரும் தத்தமக்கென்று கூட்டுறவு மனைச் சங்கத்தை அமைத்துக்கொண்டு, தமக்கு வேண்டிய வீட்டு வசதிகளனைத்தையும் இச் சங்கங்களிடமிருந்தே பெறுகின்றனர். அதனோடு, வீடுகளைப் பராமரிக்கும் பொறுப்பையும் சங்கத்திற்கே விட்டுவிடுகின்றனர்.

இம் மூன்று வகைச் சங்கங்களில் இரண்டாவது வகைச் சங்கங்கள்தாம் அதிகமாக உள்ளன. தமிழ்நாட்டிலும் இவ்வகைச் சங்கங்கள்தாம் நகரங்கள்தோறும் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன.

கூட்டுறவு மனைச் சங்கங்களின் வளர்ச்சி

நமது நாட்டில் முதன்முதலில் தோன்றிய கூட்டுறவு மனைச் சங்கம் பம்பாய் மாநிலத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது. 1905 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இச் சங்கம் வெற்றிநடை போட்டதைக் கண்ட இம் மாநில மக்கள் மேலும் பல கூட்டுறவு மனைச் சங்கங்களைத் தொடங்கினர். இவ்வகைச் சங்கங்களைப் பற்றி 1914ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டுறவு மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. அதன் பின்னர்த்தான் ஏனைய மாநிலங்களிலும் இவ்வகைச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை முதல் கூட்டுறவு மனைச் சங்கம் 1913-லேயே கோவை நகரில் தொடங்கப்பட்டுவிட்டது. இருந்தபோதிலும், இக் கூட்டுறவு மனைச் சங்கங்களுக்கு அரசாங்க ஆதரவு இல்லாமலிருந்ததால் அவை துரிதமாக வளர்ச்சியடைய முடியவில்லை. ஆனால், சுதந்திரத்திற்குப் பின்னர், தேசிய அரசாங்கம் பல்வேறு திட்டங்களின் வழியாக இவற்றிற்கு ஊக்கம் தந்து வருகிறது. எனவே, இச் சங்கங்களும் துரிதமாக வளர்ச்சிபெற்று வருகின்றன. எவ்வளவு

விரைவாக இவை முன்னேற்றம் அடைந்துள்ளன என்பதைக் கீழ்க் காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் இச் சங்கங்களின் நிலைமை :

மாநிலம்	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர் எண்ணிக்கை	உறுப்பினர் தரவேண்டிய கடன் தொகை (இலட்ச ரூபாயில்)	நடப்பு மூலதனம் (இலட்ச ரூபாயில்)	அரசாங்கத்திடமிருந்து பெற்ற கடன் (இலட்ச ரூபாயில்)
சென்னை	200	27022	253	484	262
ஆந்திரா	115	13425	160	205	131.6
பம்பாய்	1207	58884	152·4	1442	201
உத்தரப் பிரதேசம்	330	13454	23	47·7	15
பஞ்சாப்	203	8012	—	93·54	—

1971ஆம் ஆண்டிற்குள், அதாவது 15 வருடங்களில் இச் சங்கங்கள் எவ்வளவு துரிதமாக வளர்ச்சி பெற்றுவிட்டன என்பதைக் கீழ்க்காணும் அட்டவணையிலிருந்து அறிந்துகொள்ளலாம். 1971 ஜூன் மாதம் இருந்த நிலை :

மாநிலம்	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர் எண்ணிக்கை (இலட்சத்தில்)	உறுப்பினர் தரவேண்டிய கடன் தொகை (கோடி ரூபாயில்)	நடப்பு மூலதனம் (கோடி ரூபாயில்)	1970-71-ல் கட்டிய மனைகளின் எண்ணிக்கை
தமிழ்நாடு	1036	1·69	16·80	27·86	1248
ஆந்திரா	747	1·02	5·57	13·69	780
உத்தரப்பிரதேசம்	715	0·27	0·30	1·68	25
பஞ்சாப்	232	0·11	0·63	1·31	80
மகராஷ்டிரம்	7475	2·90	5·02	131·10	5438
குஜராத்	4724	1·48	23·20	136·40	10800

1957-58 முதல் 1970-71 வரை கூட்டுறவு மனைச் சங்கங்கள் அடைந்துள்ள பொதுவான முன்னேற்றத்தைக் கீழ்க்காணும் பட்டியல் விளக்குகிறது :

ஆண்டு	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர்கள் (இலட்சத்தில்)	நடைப்பு மூலதனம் (கோடி ரூபாயில்)	கட்டிய மனைகள்	ஆம் மனைகளின் செலவு (கோடி ரூபாயில்)
1957-58	4,177	2.49	35	44,345	34·27
1959-60	5,564	3·22	55	45,675	38·4
1961-62	7,877	4·54	64·3	26,037	22·6
1963-64	9,886	6·2	96	43,058	48·6
1965-66	11,765	7·5	113	32,305	36·2
1967-68	13,817	8·94	155	28,102	32·4
1970-71	18,050	11·82	373	33,300	54·6

கூட்டுறவு மனைச் சங்க ஆய்வுக் குழுவின் பரிந்துரைகள்

கூட்டுறவு மனைச் சங்கங்கள் வளர்ச்சி பெறக் கூடிய வாய்ப்பை ஆராயவும், அச் சங்கங்களை அமைக்கும் முறைபற்றி ஆலோசனை கூறவும், மூன்றாவது, நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்களில் அவற்றின் வளர்ச்சிக்கான இலக்குகளை நிர்ணயிக்கவும் 1963ஆம் ஆண்டில் கூட்டுறவு மனைச் சங்க ஆய்வுக்குழு நியமிக்கப்பட்டது. இக் குழு, தன் அறிக்கையை 1964 ஜனவரியில் சமர்ப்பித்தது. அவ்வறிக்கையில் இக் குழுவினர் செய்துள்ள பரிந்துரைகளில் முக்கியமானவற்றை இங்குக் குறிப்பிடுவது நல்லது.

(1) வீடு கட்டும் திட்டத்திற்கென்று ஒவ்வொரு மாநிலத்துக்கும் நிதி வழங்கப்படுகிறது. இந் நிதியில் 25 சதவீதமாவது கூட்டுறவு மனைச் சங்கங்களுக்கென்று ஒதுக்கப்படவேண்டும்.

(2) குறைந்த வருமானம் பெறுவோரின் வீட்டு வசதித் திட்டப்படி ஒவ்வொருவருக்கும் ரூ. 8,000 வரைதான் கடன் வழங்கப் படுகிறது; இதை 10,000 ரூபாயாக உயர்த்தவேண்டும்.

(3) வீடு கட்ட முதல் தவணையாக வழங்கப்படும் கடன் தொகையைக் கடன் பெற்ற 12 மாதங்களுக்குள் திருப்பிச் செலுத்த

வேண்டும் என்பது விதி; 24 மாதங்களுக்குள் செலுத்துவதற்கான முறையில் இவ் விதியை மாற்றவேண்டும்.

(4) மாநில அரசாங்கம் வீடு கட்டுவதற்கான நிலத்தை வழங்கும்போது கூட்டுறவு மனைச் சங்கங்களுக்குத்தாம் முதலில் வழங்கவேண்டும். அதனோடு, அச் சங்கங்களுக்குத் தேவைப்படும் சிமென்ட், இன்னும் பிற சாதனங்களை வேண்டிய அளவுக்கு விநியோகம் செய்ய அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(5) மனைச் சங்கங்களின் நிர்வாகத்திற்கென்று அரசாங்கம் மானியத் தொகை எதுவும் வழங்குவதில்லை; புதிதாய்த் தோன்றும் சங்கங்களுக்கு முதல் மூன்று அல்லது ஐந்தாண்டுகள் வரையாவது இம் மானியத் தொகையை வழங்கவேண்டும்.

(6) எந்தெந்த மாநிலத்தில் 100-க்குமேல் கூட்டுறவு மனைச் சங்கங்கள் இருக்கின்றனவோ அந்தந்த மாநிலத்தில் எல்லாம் கூட்டுறவு மனைத் தலைமை நிறுவனத்தைத் தொடங்கவேண்டும்.

(7) நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் முடியுமுன்னர் மனைச் சங்கங்களுக்கென்று தேசியக் கூட்டமைப்பை உருவாக்கவேண்டும்.

(8) கூட்டுறவு மனைச் சங்கங்களுக்கு ஆயுள் காப்பீட்டுக்கழகம், கூட்டுறவு நகர்ப்புற வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவை மேலும் அதிகமான அளவு கடன் வழங்க முன்வர வேண்டும்.

(9) மேலும், கூட்டுறவு மனைச் சங்கங்களுக்கு வேண்டிய முன் பணத்தைக் கொடுப்பதற்கென்று கூட்டுறவு மனை அடைமான வங்கிகளை ஏற்படுத்தவேண்டும்.

(10) கூட்டுறவு மனைச் சங்கங்கள் கட்டியுள்ள வீடுகளுக்கு விதிக்கப்படும் வீட்டுவரியை 30 சதவீதம் தள்ளுபடி செய்ய வேண்டும்.

(11) கூட்டுறவு மனைச் சங்கங்களுக்கு கட்டட வேலை பற்றிய ஆலோசனையை வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

(12) நடுத்தர வகுப்பினருக்கான வீட்டுத் திட்டத்தின்படி வீடு கட்டச் செலவாகும் தொகையில் 80 சதவீதம் வரை அரசாங்கம் கடன் தருகிறது; இதை 70 சதவீதமாகக் குறைக்கவேண்டும். அதே சமயம், ஆலைத் தொழிலாளர்களின் வீட்டுக்கென அரசாங்கம் தரும் உதவித் தொகையை அதிகரிக்கவேண்டும்.

மேற்கூறிய பரிந்துரைகளையெல்லாம் கொடுத்துள்ள இக் குழுவினர் 3, 4 ஆம் ஐந்தாண்டுத் திட்டங்களில் கூட்டுறவு மனைச் சங்கங்களை எந்த அளவுக்கு ஊக்குவிக்கவேண்டும் என்ற இலக்குகளைத் தரவில்லை; இதற்கு வேண்டிய நிதி எந்த அளவுக்குக் கிடைக்குமென்ற புள்ளி விவரங்கள் இல்லாத காரணத்தால் இக் குழு அந்த இலக்குகளை நிர்ணயம் செய்ய முடியாமல் போய்விட்டது.

கூட்டுறவு மனை அடைமான வங்கிகள்
(Co-operative House Mortgage Banks)

நம் நாட்டுக் கூட்டுறவு வங்கிகளில் மனை அடைமான வங்கிகளும் இடம் பெறுகின்றன. இந்தியாவில் தமிழ்நாட்டில் மட்டும்தான் இவ் வகை வங்கிகள் நிறுவப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. இவ் வங்கிகளின் முக்கியக் குறிக்கோள் தம் உறுப்பினர்களுக்கு மனை அடைமானத்தின்மீது நீண்டகாலக் கடன் தருவதுதான். அதனோடு, சிக்கனம், கூட்டுறவு மனப்பான்மையையும் உறுப்பினர்களிடையே இவ் வங்கிகள் வளர்த்து வருகின்றன. ஏனைய கூட்டுறவு அமைப்புகளில் உள்ளதைப் போன்றே கூட்டுறவு மனை அடைமான வங்கிகளும் அமைக்கப்பட்டுள்ளன. தொடக்க நிலையிலுள்ள இவ் வங்கிகள் நகர மனை அடைமான வங்கிகள் என அழைக்கப்படுகின்றன. இவ் வங்கி உறுப்பினர்கள் நிர்வாகக் குழுவினரைத் தேர்ந்தெடுத்து அவர்களிடமே நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்கின்றனர். தொடக்கநிலை மனை அடைமான வங்கிகளுக்கென்று மேல்மட்டத்தில் ஒரு கூட்டமைப்பு வங்கியும் உள்ளது. மேல்மட்டத்திலுள்ள இவ் வங்கி மத்திய மனை அடைமான வங்கி என்ற பெயரில் இயங்கி வருகின்றது.

தொடக்க நிலையிலுள்ள மனை அடைமான வங்கிகள் உறுப்பினர்கள் தரும் பங்கு மூலதனத் தொகை, நுழைவுக் கட்டணம், வேறு சில கட்டணங்கள், வைப்புகள் ஆகியவற்றின் வாயிலாகக் கிடைக்கும் மூலதனத்தைக் கொண்டு நடைபெற்று வருகின்றன. அதனோடு, மத்திய மனை அடைமான வங்கியிடமிருந்து பெறும் கடனைக்கொண்டும் செயலாற்றுகின்றன. இவ் வங்கிகளிடம் வைப்புகளை வைப்போர் குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கென்று வைக்க வேண்டும். மத்திய மனை அடைமான வங்கி தரும் அதே வட்டியைத்தான் தொடக்கநிலை வங்கிகளும் தருகின்றன. தம்மிடம் அடைமானம் வைக்கப்படும் சொத்துகளையும் பிற ஆவணங்களையும் காட்டி இவ் வங்கிகள் மத்திய மனை அடைமான வங்கியிடமிருந்து கடன் பெறுகின்றன. அப்படிக் கடன் வாங்கும்போது,

தம்மிடமுள்ள செலுத்தப்பட்ட மூலதனமும் காப்பு நிதியும் எவ்வளவோ அதைப் போல் பத்து மடங்குவரைதான் வாங்கமுடியும்.

தம் உறுப்பினர்களுக்குக் கடன் தரும்போது, பெரும்பாலும் பின்வரும் காரணங்களுக்குத்தான் கடனளிக்கின்றன : (1) உறுப்பினர் ஏற்கெனவே அடைமானம் வைத்துள்ள வீட்டை மீட்பதற்கு; (2) இருக்கின்ற வீட்டை மாற்றி அமைப்பதற்கும், விரிவுபடுத்துவதற்கும்; (3) பழைய கடனை அடைப்பதற்கு; (4) புதிதாக வீடுகள் கட்டுவதற்கு அல்லது வாங்குவதற்கு. உறுப்பினருக்குக் கடன்தரும் போது, அவர்கள் அடைமானம் வைக்கும் சொத்து மதிப்பு எவ்வளவு என்பதைக் கணக்கிட்டு, அதில் 50 சதவீதம் வரைதான் இவ் வங்கிகள் கடனளிக்கின்றன. இவ்வகைக் கடன் 15 ஆண்டுகளுக்கென்றுதான் பொதுவாகக் கொடுக்கப்படுகிறது. எனினும், மத்திய மனை அடைமான வங்கி தொடக்கநிலை வங்கிகளுக்குக் கடன் தரும்போது எத்தனை ஆண்டுகளுக்கென்று தருகிறதோ அதே ஆண்டுத் தவணைக்குத்தான் இவ்வங்கிகளும் கடன் கொடுக்கின்றன. பொதுவாக உறுப்பினர்கள் வீட்டு அடைமானத்தின்மீது தான் கடன் பெறமுடியும். இருப்பினும், வீட்டுக் கிரயம் போதுமானதாக இல்லாவிட்டால், நிலையான வேறு சொத்துகளையும் அடைமானம் வைத்துக் கடன் பெறலாம். கடன் பெறுவதற்காக மனுச் செய்யும்போது, சொத்துக்குரிய பட்டா, சொத்தின் விவரம், மதிப்பு ஆகியவற்றைத் தகுதிபெற்ற வல்லுநர்களால் விவரமாக ஆராய்ந்து, ஒவ்வொன்றுக்கும் தனித்தனி பத்திரங்களையும் அனுப்பவேண்டும். ஏற்கெனவே அடைமானம் வைக்கப்பட்டுள்ள வீட்டைத் திருப்புவதற்குக் கடன் வேண்டுமாயின், அடைமானப் பத்திரத்தையும் சேர்த்து அனுப்பவேண்டும். மனுவைப் பெற்ற பின்னர் இவ் வங்கி நிர்வாகிகள் சென்று மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தையோ வீட்டையோ பார்வையிடுவர். இதற்குரிய செலவிற்கென்று மனுதாரர்களிடமிருந்து சிறிய தொகை வசூலிக்கப்படுகிறது. அதனோடு வில்லங்கச் சான்றிதழ் பெறுவதற்கும் உறுப்பினர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்படுகிறது. வில்லங்கமுள்ள சொத்தா இல்லையா என்பதை இவ் வங்கிகள் சம்பந்தப்பட்ட சட்ட நிபுணர்களைக் கலந்து ஆலோசித்து முடிவுகட்டுகின்றன. வில்லங்கமுள்ள சொத்தாக இருந்தால் அச் சொத்து ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. பரிசீலனைகள் முடிந்த பின்னர், மத்திய மனை அடைமான வங்கி கடன் தர அனுமதி வழங்குகிறது. அதன் பின்னர்த்தான் உறுப்பினர்களுக்கு இவ் வங்கிகளின் கடன் கிடைக்கும்.

தமிழ்நாட்டிலுள்ள நகர மனை அடைமான வங்கிகளுக்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள உச்சி வங்கி சென்னையில் மட்டுமே உள்ளது.

இதற்கு மத்திய மனை அடைமான வங்கி என்று பெயர் கொடுக்கப் பட்டுள்ளது. 1959ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 15 ஆம் நாள் இம் மத்திய மனை அடைமான வங்கி செயல்புரியத் தொடங்கியது. அதற்கு முன்னர், தொடக்கநிலை மனை அடைமான வங்கிகளுக்குத் தென்னிந்தியக் கூட்டுறவுக் காப்பீட்டுச் சங்கம்தான் இவ் வங்கி களுக்கு நிதி உதவி செய்து வந்தது. காப்பீட்டு நிறுவனங்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டவுடன் கூட்டுறவு மனை அடைமான வங்கிகள் கடன் பெற வழியின்றித் தவித்தன. இத் தவிப்பை நீக்குவதற்குத்தான் 1959 முதல் மத்திய மனை அடைமான வங்கி சென்னை நகரில் நிறுவப்பட்டுச் செயலாற்றி வருகிறது. இவ் வங்கியின் நிர்வாகப் பொறுப்பை நிர்வாகக் குழு ஏற்றுள்ளது. இக் குழுவில் தொடக்கநிலை வங்கிப் பிரதிநிதிகள் 5 பேர், இவ் வங்கியின் பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர், தமிழ்நாட்டு அரசாங்கம் நியமித்துள்ள மூவர் இடம் பெற்றுள்ளனர். நிர்வாகக் குழுவிற்கு உதவி செய்வதற் கென்று செயற்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இச் செயற் குழுவில் நிர்வாகக் குழுத் தலைவர், துணைத் தலைவர், பொக்கிஷ தாரர் ஆகியோரும் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு சில பிரதிநிதிகளும் உள்ளனர். இத் தலைமை வங்கி தொடக்க நிலையிலுள்ள நகர மனை அடைமான வங்கிகளுக்குக் கடன் தரும்போது அந்தந்த வங்கி உறுப்பினர்கள் காட்டும் அடைமானச் சொத்தை நன்கு பரிசீலனை செய்கிறது. எந்த வங்கிக்கும் அதன் செலுத்தப்பட்ட மூலதனம், காப்பு நிதி ஆகிய வற்றைக் கணக்கிட்டு அதைப் போல் 10 மடங்கு வரைதான் கடன ளிக்கின்றது. இவ் வங்கி சென்னையில் மட்டுமே இருப்பது தமிழ் நாட்டிற்கே பெருமை அளிக்கக்கூடியதாகும்.

29. கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள்

நம் நாட்டில் விவசாயத் தொழிலையடுத்துக் கைத்தறித் தொழில் தான் மிக முக்கியமானது. இத் தொழிலை நம்பி 2 மில்லியன் நெசவாளர்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆண்டுதோறும் நம் நாட்டில் உற்பத்தியாகும் துணியின் அளவு 870 கோடி கெஜம்; இதில் 370 கோடி கெஜம் துணி கைத்தறி நெசவாளர்களால் நெய்யப்படுகிறது. இலட்சக்கணக்கான குடும்பங்கள் நம்பி வாழும் இத் தொழில் நலிந்துவிட்டால் அவ்வளவு பேரும் திக்கற்ற நிலைக்குள்ளாவர். வேறெந்தத் தொழிலும் தெரியாது கைத்தறி ஒன்றையே நம்பி 20 இலட்சம் பேர் வாழ்கின்ற காரணத்தால்தான் நமது அரசாங்கம் இத் தொழிலைப் பேணவும் ஊக்குவிக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கைத்தறித் தொழிலிலுள்ள பிரச்சினைகள்

இன்றைய நிலையில் கைத்தறி நெசவாளர்களுக்கு எத்தனையோ பிரச்சினைகள் அவர்தம் தொழிலில் உள்ளன. அப்பிரச்சினைகளில் குறிப்பிடத்தக்கவை வருமாறு :

1. மூலப்பொருள் : கைத்தறி நெசவாளர்களுக்குப் பருத்தி நூல்தான் மூலப்பொருள். பருத்தி நூலைப் பெரும்பாலும் ஆலைகளே உற்பத்தி செய்து வருகின்றன. ஆலைகளில் உற்பத்தியாகும் நூல் நேரடியாகக் கைத்தறி நெசவாளர்களுக்குக் கிடைப்பதில்லை. மொத்த நூல் வியாபாரிகள்தாம் ஆலையிலிருந்து நூலை வாங்கி, சில்லறை வியாபாரிகளுக்கு விற்கின்றனர்; இச் சில்லறை வியாபாரிகளிடமிருந்துதான் நெசவாளர்கள் தமக்கு வேண்டிய நூலைப் பெறவேண்டும். ஆலையிலிருந்து வெளியாகும் நூல் நெசவாளருக்குக் கிடைக்குமுன் பல கைகள் மாற வேண்டியிருப்பதால் அதன் விலை ஏறிவிடுகிறது. இதனால் கைத்தறித் துணியின் அடக்கச் செலவும் அதிகரித்துவிடுகிறது.

2. **பணமின்மை :** நெசவாளர்களில் பெரும்பாலோர் ஏழைகள். எனவே, நெசவுக்கு வேண்டிய சாதனங்களை அவர்களால் விலைகொடுத்து வாங்க இயலாது; நூலைக்கூட வாங்கப் பணமில்லாதோர் பலர் இருக்கின்றனர். எனவே, அவர்களுக்கு வேண்டிய சாதனங்களையும் நூலையும் வழங்கி அவர்களைக் கூலிக்காக அமர்த்தும் முறை நாடெங்கும் பரவிவிட்டது. கூலி கொடுக்கும் தரகர்கள் கையில்தாம் பெரும்பாலான நெசவாளர்கள் சிக்கியுள்ளனர். இதனால், கைத்தறித் தொழிலில் கிடைக்கும் இலாபத்தையும் அத் தரகர்களே எடுத்துக் கொள்கின்றனர்.

3. **விற்பனை :** கைத்தறி நெசவாளர்கள் வலிமையற்றவர்களாயிருக்கின்ற காரணத்தால் துணியை நெய்து முடித்தவுடன் அதை வந்த விலைக்கு நடுவர்களுக்கே விற்றுவிடுகின்றனர். மேலும், கைத்தறித் துணிகள் ஒரே தரமானவையாயிருக்க முடியாது; அதனோடு, வேலைப்பாடு கொண்டவையாயுமிருப்பதில்லை. எனவே, வந்த விலைக்கு விற்பதைத் தவிர வேறு வழியில்லாமல் போய் விடுகிறது.

4. **ஆலைகளுடன் போட்டி :** கைத்தறி நெசவாளர்கள் நெய்யும் துணிமணியெல்லாம் பழங்கால முறையில் உற்பத்தி செய்யப்படுபவை. நவீன சாதனங்களைப் பயன்படுத்த அவர்களால் இயலாது. ஆனால், ஆலைகளிலோ இயந்திரங்களின் உதவியினால் பேரளவு துணிமணிகளை ஒரே தரமாக உற்பத்தி செய்ய முடிகிறது. எனவே, கைத்தறி நெசவாளர்கள் ஆலைகளுடன் போட்டியிட முடியாது.

கூட்டுறவு நெசவுச் சங்கத்தின் அவசியம்

கைத்தறி நெசவாளர்கள் தமக்கு வேண்டிய நிதி வசதியையும் தொழில் நுட்ப வழியையும் பெற்று, தம் துணிமணிகளையெல்லாம் நல்ல விலைக்கு விற்கவேண்டுமாயின், தங்களுக்கென்று கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துக் கொள்வதைத் தவிர, வேறு வழியில்லை. எனவேதான் அரசாங்கமே முயன்று கைத்தறி நெசவாளர்களையெல்லாம் கூட்டுறவுச் சங்கத்தில் சேரும்படி கோரிவருகிறது. அரசாங்க முயற்சியின் விளைவாக நாடெங்கிலும் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. எல்லா மாநிலங்களிலும் இச் சங்கங்கள் ஒரே மாதிரியாக நடைபெறுவதில்லை. பெரும்பாலான மாநிலங்களில் இச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டிய மூலப்பொருளை விநியோகம் செய்யும் பணியை மட்டுமே மேற்கொண்டுள்ளன. தமிழ்நாட்டிலும் வேறு சில மாநிலங்களிலும்தாம் தொடக்க நிலையிலிருந்து மாநிலமட்டம்

வரை கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டு முறையாகச் செயல்பட்டு வருகின்றன. இம்மாநிலங்களிலுள்ள சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டிய எல்லாப் பணிகளையும் செய்து வருகின்றன. உறுப்பினர்களுக்கு வேண்டிய கடன் வசதிகளைமட்டுமன்றி, அவர்களுக்குத் தொழில் பயிற்சியும் கொடுத்து வருகின்றன. அதனோடு உறுப்பினர்கள் நெய்யும் துணிமணிகளுக்கு விற்பனை ஏற்பாடுகளையும் செய்து தருகின்றன.

நோக்கங்களும் பணிகளும்

கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் நோக்கங்களும் பணிகளும் வருமாறு:

(1) உறுப்பினர்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களையும் சாதனங்களையும் மொத்தமாகவும் மலிவாகவும் கொள்முதல் செய்து விநியோகிக்கின்றன.

(2) கைத்தறி நெசவுத் தொழில் செய்வதற்கு உறுப்பினர்களுக்கு வேண்டிய கடனைத் தருகின்றன. இதற்காகப் பல்வேறு வழிகளில் நிதி திரட்டுகின்றன.

(3) புதுப்புது ரகங்களில் துணிநெய்வதற்கென்று உறுப்பினர்களுக்குத் தொழில் நுட்ப உதவியையும் செய்கின்றன. அதனோடு, துணிக்குச் சாயமிடுதல், அச்சடித்தல், வெளுப்பாக்குதல் போன்ற பணிகளையும் உறுப்பினர்களுக்குச் செய்து தருகின்றன.

(4) உறுப்பினர்கள் நெய்யும் துணிகளுக்கு விற்பனை ஏற்பாட்டையும் செய்து வருகின்றன.

(5) கைத்தறி நெசவுத் தொழிலில் கிடைக்கும் இலாபமனைத்தும் உறுப்பினர்களுக்கே செல்லும் விதத்தில் எல்லாப் பணிகளையும் இச் சங்கங்களே மேற்கொண்டுள்ளன.

கூட்டுறவு நெசவுச் சங்கங்களின் வகைகள்

கூட்டுறவு நெசவுச் சங்கங்கள் இரு வகைப்படும். 1. உறுப்பினர்கள் தனித்தனியாகத் தொழிலை நடத்துவதற்கு உதவி செய்யும் சங்கங்கள்; 2. உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தொழில் நடத்த உதவும் சங்கங்கள். இவற்றில் முதல் வகைச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டிய மூலப் பொருளை மொத்தமாகக் கொள்முதல் செய்து விநியோகம் செய்கின்றன. பின்னர், அவர்கள் நெய்துள்ள துணிமணிகளையெல்லாம் ஒன்று சேர்த்து விற்பனை ஏற்பாட்டையும் செய்து தருகின்றன. மேலும், உறுப்பினர்களே நூலை வாங்குவதற்கும் நெசவுக் கருவிகளை வாங்குவதற்கும் விரும்பினால் அவர்களுக்குக் கடனுதவியும் செய்கின்றன.

இரண்டாவது வகைச் சங்கங்கள் நெசவு நிலையங்களை ஏற்படுத்தி, நெசவுக்கு வேண்டிய மூலப் பொருள்களையும் சாதனங்களையும் பெற்றுத் தயாராக வைக்கின்றன. உறுப்பினர்கள் அந்நிலையங்களுக்குச் சென்று நெசவு செய்கின்றனர் அவர்களின் வேலைக்கேற்ற ஊதியத்தைச் சங்கங்களே கொடுத்து விடுகின்றன. இதனால் உறுப்பினர்களுக்கு வேலையில்லாப் பிரச்சினையே ஏற்படுவதில்லை. இந் நெசவு நிலையங்களில் தயாரிக்கப்படும் துணிமணிகளையெல்லாம் இச் சங்கங்களே விற்று விடுகின்றன. விற்பனையில் ஏற்படும் இலாபத்தை உறுப்பினர்கள் பெற்றுள்ள ஊதியத்தின் அடிப்படையில் பிரித்துக் கொடுக்கின்றன. இவ்வகைச் சங்கங்களில் ஒரே தரமான துணிகளை நெய்வது எளிதாகிறது. அதனோடு, உறுப்பினர்களுக்குத் தொழில் நுட்பத்தைச் சொல்லிக் கொடுப்பதும் எளிது.

பொதுவாக, இவ்விருவகைப் பணியையும் மேற்கொள்ளும் சங்கங்கள்தாம் அதிகமாக உள்ளன. ஓரிரண்டு நெசவு நிலையங்களையும் வைத்து, உறுப்பினர்கள் தனித்தனியாகத் தொழிலையும் நடத்த உதவி செய்யும் சங்கங்கள்தாம் பிரபலமடைந்துள்ளன. பொது நெசவு நிலையங்களின் வாயிலாக உறுப்பினர்களுக்கு நெசவு சம்பந்தப்பட்ட நுட்பங்களைச் சொல்லிக் கொடுக்கின்றன; அதன்படி உற்பத்தி செய்வதற்கு உறுப்பினர்களுக்கு வேண்டிய நூலையும் விநியோகம் செய்கின்றன. நெய்யப்பட்ட துணிமணிகளைச் சங்கங்களே விற்கின்றன.

மேல் மட்டச் சங்கங்கள்

கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் கீழ்மட்டத்திலும் உயர் மட்டத்திலும் அமைக்கப்படுகின்றன. கீழ் மட்டத்திலுள்ள தொடக்கச் சங்கங்களில் தனிப்பட்ட நெசவாளர்கள்தாம் உறுப்பினர்களாக உள்ளனர். ஆனால் தொடக்கநிலை சங்கங்களுக்கு உறுப்பினர்களின் பிரச்சினைகளையெல்லாம் தீர்க்கக் கூடிய பணவசதியோ ஏனைய வசதிகளோ கிடையாது. எனவே, நூற்பாலைகளிலிருந்து நேரடியாக நூலைக் கொள்முதல் செய்யவும் தொடக்க நிலைச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் துணிமணிகளை விற்கவும் மேல்மட்டத்திலும் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டியுள்ளது சான்றாக, தமிழ் நாட்டைப் பொறுத்த வரை கோவை மாவட்டத்திலுள்ள நெசவாளர் சங்கங்கள் மாவட்ட அடிப்படையிலும் கூட்டமைப்புச் சங்கத்தை உருவாக்கியுள்ளன. இதே போல் ஏனைய மாவட்டங்களிலும் மாவட்ட அடிப்படையிலோ பிராந்திய அடிப்படையிலோ கூட்டமைப்புச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு மேல் மட்டத்தில் மாநில அடிப்படையில் தமிழ்நாடு மாநில

கூட்டுறவு நெசவாளர் சங்கமும் அமைக்கப்பட்டுள்ளது. மேல் மட்டத்திலுள்ள இச் சங்கங்களில் தொடக்க நிலைச் சங்கங்கள்தாம் உறுப்பினர்களாக இருக்கமுடியும்: தனிப்பட்ட நெசவாளர்கள் உறுப்பினர்களாக முடியாது. அதேபோல் மாநில அடிப்படையில் அமைந்துள்ள சங்கத்தில் மாவட்டச் சங்கங்களும் பிராந்தியச் சங்கங்களுமே உறுப்பினர்களாக உள்ளன. மேல் மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சங்கங்கள் தத்தம் உறுப்பினர் சங்கங்களுக்கு வேண்டிய நூலையும் இதர நெசவுச் சாதனங்களையும் மொத்தமாகக் கொள்முதல் செய்து விநியோகிக்கின்றன. அதனோடு, உறுப்பினர் சங்கங்கள் நெய்துள்ள துணிமணிகளை விற்பனை செய்யும் ஏற்பாட்டையும் கவனித்துக் கொள்கின்றன.

நிதி:

கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் தமக்கு வேண்டிய நிதியை உறுப்பினர்கள் செலுத்தும் பங்கு மூலதனம், காப்பு நிதி, ஏனைய நிதிகள் ஆகியவற்றின் வாயிலாகப் பெற்ற போதிலும், இவ்வழியாகப் போதிய நிதி வசதியைப் பெற முடியாத காரணத்தால் அரசாங்கத்திடமிருந்தும் மையக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்தும் தான் பெரும்பாலும் நிதி உதவியைப் பெற்றுவருகின்றன. இச் சங்கங்கள் தம் பங்கு மூலதனத்தைப் போல் 8 மடங்குவரை கடன் பெறுகின்றன. இவை பெறும் கடனில் பெருமளவு அரசாங்கத்தாலும் கூட்டுறவு மைய வங்கிகளாலும் தான் அளிக்கப்படுகின்றன. ரிசர்வ் பாங்கும் மாநிலத் தலைமைச் சங்கங்களுக்குக் கடனுதவி செய்கிறது. கூட்டுறவு மைய வங்கிகள் கடன் கொடுக்க அனுமதிக்கப்பட்டுள்ள தொழில்களில் கூட்டுறவுக் கைத்தறித் தொழிலும் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே தான் நெசவாளர் சங்கங்கள் மைய வங்கிகளிடமிருந்து ஏராளமான கடனைப் பெற முடிகிறது. 1965ஆம் ஆண்டுவரை இச் சங்கங்கள் மைய வங்கிகளிடமிருந்து 4 கோடி ரூபாய்வரை கடன் பெற்றிருக்கின்றன. 1970-71-ல் இச்சங்கங்களுக்கென்று ரிசர்வ் வங்கி ரூ. 12.4 கோடி கடன் தந்துள்ளது.

அரசாங்க உதவி

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் செய்யும் உதவியெல்லாம் பெரும்பாலும் அகில இந்தியக் கைத்தறிக் குழுவின் வழியாகத்தான் செய்யப்படுகிறது. கைத்தறித் தொழிலைக் கூட்டுறவு முறையில் அமைத்து முன்னேற்றுவதற்காக இக் குழு 1952 அக்டோபரில் ஏற்படுத்தப்பட்டது. கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் வளர்ச்சிக்கென இக் குழு பல உதவித் திட்டங்களை வகுத்துள்ளது. சங்கங்களின் பங்கு மூலதனத்திற்

கென்றும், நடைமுறை மூலதனத்திற்கென்றும், கைத்தறித் துணி மணிகளை உற்பத்தி செய்வதற்கென்றும், அவற்றை விற்பனை செய்வதற்கென்றும் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. அதனோடு, கைத்தறித் துணிகளை மேம்படுத்தவும் தொழில் சம்பந்தப்பட்ட நுட்பங்களை நெசவாளர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவும் உதவி செய்கிறது.

சங்க உறுப்பினர்களுக்கு இக் குழு வட்டியில்லாக் கடன் தந்து உதவுகிறது. அதாவது, பருத்தித் துணி நெசவாளர் சங்க உறுப்பினர்களுக்கு அவர்கள் கொண்டுள்ள பங்கு மூலதனத்தில் 75 சதவீதம் என்று கணக்கிட்டு ரூ. 75 வரை இக் கடன் அளிக்கப்படுகிறது. பட்டு நெசவு உறுப்பினர்களுக்கு அதிகப்பட்சம் ரூ. 150 வரை இக் கடன் தரப்படுகிறது. மாநிலக் கூட்டுறவு நெசவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் 51 சதவீதம் வரை அந்தந்த மாநில அரசுகள் பங்கு கொள்கின்றன.

கைத்தறித் துணி விற்பனையை ஊக்குவிப்பதற்கென்று அகில இந்தியக் கைத்தறிக் குழுவும் மத்திய அரசாங்கமும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. ஒருசில குறிப்பிட்ட ரகத் துணிகளைக் கைத்தறி நெசவாளர்கள் மட்டுமதான் உற்பத்தி செய்யலாம் என்றும் நெசவாலைகள் அவற்றை உற்பத்தி செய்யக் கூடாதென்றும் மத்திய அரசாங்கம் சட்டம் இயற்றியுள்ளது. சான்றாக, வண்ணப் புடவைகளைக் கைத்தறி நெசவாளர்கள் மட்டுமே உற்பத்தி செய்யலாம். அகில இந்தியக் கைத்தறிக் குழு செய்து வரும் உதவிகளில் குறிப்பிடத்தக்கவை வருமாறு: மாநில அடிப்படையிலும் மாநிலங்களுக்கிடையேயும் கைத்தறி விற்பனை நிலையங்களைத் தொடங்க உதவித் தொகை வழங்குகிறது. கைத்தறிச் சங்கங்களின் விற்பனைக்கென்று 1955-ல் அகில இந்தியக் கைத்தறித் துணி விற்பனைச் சங்கம் என்ற பெயரில் ஒரு தேசியக் கூட்டமைப்பு விற்பனை நிறுவனத்தைத் தொடங்கியுள்ளது. இச் சங்கம் பம்பாய், சென்னை, கல்கத்தா, பெங்களூர் புது டில்லி, அகமதாபாத் ஆகிய நகரங்களில கைத்தறிக் கடைகளைப் பெரிய அளவில நிறுவியுள்ளது. நாடெங்கிலும உற்பத்தி செய்யப்படும் தரமான கைத்தறித் துணிமணிகள் இக் கடைகளில் விற்பனையாகின்றன. மேலும், கைத்தறித் துணிகளை விற்கும்போது விலை தள்ளுபடி செய்யும் வழக்கத்தையும் இக் குழு நிறைவேற்றி வருகிறது. தள்ளுபடிக்கான நிதி உதவியை இக் குழுவே செய்து வருகிறது.

மேலும், அகில இந்தியக் கைத்தறிக் குழு கைத்தறித் துணி மணிகளின் விற்பனையை அதிகரிப்பதற்காக விளம்பரமும் செய்

கிறது. இவ் விளம்பரம் கைத்தறிப் பொருட்காட்சியினை அமைப்பதன் வழியாகவும், 'கைத்தறி வாரம்' கொண்டாடப்படுவதன் வாயிலாகவும் செய்யப்படுகிறது. அதனோடு, பத்திரிகையின் வாயிலாகவும் துண்டுப் பிரசுரங்களின் வாயிலாகவும் விளம்பரம் செய்து வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் அமைக்கப்பட்டுள்ள மாநிலக் கைத்தறிக் குழுவின் வாயிலாகவும் இப் பணிகளை அந்தந்த மாநிலத்தில் செய்து வருகிறது. மேலும். கூட்டுறவுக் கைத்தறி விற்பனை நிலையங்களுக்கு வேண்டிய வாகனங்களுக்கும், நடமாடும் விற்பனைக்கும், தெருவில் கூவி விற்கும் விற்பனைக்கும் வேண்டிய நிதி உதவியையும் செய்து வருகிறது.

கைத்தறித் துணிகளுக்குச் சாயமிடும் நிலையங்களை அமைக்கவும். அவற்றை அச்சிட்டுப் பதப்படுத்தி மெருகேற்றும் நிறுவனங்களை ஏற்படுத்துவதற்கும் வேண்டிய நிதி உதவியையும் தொழில் நுட்ப உதவியையும் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்குச் செய்து வருகிறது. புதுரகத் துணிகளை நெய்யவும் புதுவகையான எண்ணத்தில் கைத்தறித் துணிமணிகளைத் தயார் செய்வதற்கும் வேண்டிய உதவியையும் முக்கியமான நகரங்களிலுள்ள நெசவாளர் சேவை நிலையங்களின் வழியாகச் செய்து வருகிறது.

அண்மையில், தமிழ் நாட்டு அரசாங்கம் கைத்தறித் துணிமணிகளின் விற்பனையை அதிகரிப்பதற்கென்று புதியதொரு திட்டத்தை அமுலாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. அரசாங்கப் பணியாளர்கள் தீபாவளி பொங்கல் போன்ற பண்டிகை நாள்களுக்கு வேண்டிய துணிமணிகளைக் கைத்தறித் துணிக் கடையிலிருந்து கடனாக வாங்கலாம். இதற்காக அவர்கள் பணிபுரியும் அலுவலகத் தலைவரிடமிருந்து அரசாங்கப் பணியாளர் என்பதற்குரிய சான்றிதழைப் பெற வேண்டும். துணிமணிகளை வாங்கிய பின்னர், மொத்தத் தொகைக்குரிய சீட்டை அந்தந்த அலுவலகத்திற்கே அனுப்பி விடுகின்றனர். அதற்குரிய தொகை மாதத் தவணையில் ஊழியர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டுக் கைத்தறிக் கடைகளுக்கு அனுப்பப்படுகிறது.

விசைத்தறி வாங்க உதவி

நெசவாளர்கள் கைத்தறிகளுக்குப் பதிலாக விசைத்தறிகளைப் பயன்படுத்தினால் அதிக அளவுத் துணிகளை தரமானவைகளாக உற்பத்தி செய்ய முடியும் அதனோடு, விரைவாகவும் எளிதாகவும் நெய்து விடலாம். எனவே, கைத்தறிகளுக்குப் பதிலாக விசைத்தறிகளையே நெசவாளர்கள் பயன்படுத்துவதற்கென்று இந்திய

அரசாங்கம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பாடுகள் செய்தது. இத் திட்ட காலத்திற்குள் 35,000 கைத்தறிகளை நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக விசைத்தறிகளைப் பயன் படுத்தத் திட்டம் வகுக்கப்பட்டது. இத் திட்டப்படி, கூட்டுறவு நெசவுச் சங்கங்கள் விசைத்தறிகளை வாங்க ஊக்கமளிக்கப்பட்டது. ஒவ்வொரு விசைத்தறிக்கும் ரூ. 3,000 வீதம் அரசாங்கம் உதவித் தொகை கொடுக்க முன் வந்தது. ஆனால், இரண்டாவது ஐந் தாண்டுத் திட்ட காலத்தில் 12,000 விசைத்தறிகளே அமைக்கப் பட்டன. இத் திட்டம் எதிர் பார்த்த அளவுக்கு வெற்றி பெற வில்லை. எனவே, 1961-ல் இந்த விசைத்தறித் திட்டம் கைவிடப் பட்டு விட்டது.

பின்னர், திரு. அசோக் மேத்தா அவர்களின் தலைமையில் இந்திய அரசாங்கம் விசைத்தறி ஆய்வுக் குழு ஒன்றை நியமித்தது. இக் குழுவின் பரிந்துரைப்படி தற்போது விசைத்தறித் திட்டம் மறுபடியும் அமுலாக்கப்பட்டுள்ளது. நான்காம் திட்டத்தில் பருத்தி நெசவுத் தொழிலில் மொத்தம் 60,000 விசைத்தறிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. செயற்கை நூலின் நெசவில் 40,000 விசைத்தறிகளை அமைக்க வழி செய்யப் பட்டுள்ளது. விசைத்தறிகளை அமைக்க விரும்பும் கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கே முதலில் உதவி செய்வதென்றும் முடி வெடுக்கப்பட்டுள்ளது. மாநில அரசாங்கமும் இத் திட்டத்திற்கு உதவி செய்து வருகிறது. கூட்டுறவுத் துறையில் அமைக்கப்படும் ஒவ்வொரு விசைத்தறிக்கும் மாநில அரசாங்கம் ரூ. 6,000 வீதம் உதவி செய்ய முன் வந்துள்ளது. அதனோடு, விசைத்தறிகளை அமைக்கும் கூட்டுறவுச் சங்கத்திற்கு வேண்டிய அளவு நூலை வாங்கவும், நெய்த துணிகளை விற்கவும் வேண்டிய நடப்பு மூலதனத் திற்கும் ரூ. 27,000 வீதம் உதவி செய்ய முன் வந்துள்ளது. மேலும், எல்லாக் கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கும் வேண்டிய பொதுத் தேவைகளையும் பணிகளையும் செய்து தர மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அசோக் மேத்தா குழுவினரின் பொரிசுப்படி அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்தும் கூட விசைத்தறித் திட்டம் அவ்வளவாக முன்னேறவில்லை. 1966 முதல் 1968 வரை மொத்தம் 11,000 விசைத்தறிகள் தாம் அமைக்கப் பட்டுள்ளன. இந்த இரண்டு ஆண்டுகளில் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் விசைத்தறிகள் ஏதும் அமைக்கவில்லை என்பது வருந்தத் தக்கது.

கூட்டுறவு நெசவாளர் சங்க வளர்ச்சி

1971ஆம் ஆண்டின் கணக்குப்படி நம் நாட்டில் மொத்தம் 12,027 தொடக்கக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் இருந்தன.

இவற்றில் 8.06 இலட்சம் நெசவாளர்கள் உறுப்பினர்களாக இருந்திருக்கின்றனர். இச் சங்கங்களின் நடப்பு மூலதனம் ரூ 56.9 கோடியாகவும், செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ 9.05 கோடியாகவும் இருந்தன. இவை உற்பத்தி செய்த துணிமணிகள் மட்டும் ரூ 45.9 கோடி மதிப்புள்ளவை. இச் சங்கங்களுக்கு அரசாங்கம் தாராளமாக உதவி செய்து வந்துள்ளது. 1967-68-ல் மட்டும் அரசாங்கம் கொடுத்த கடன் 1·08 கோடி ரூபாயாகும். இதையன்றி, 14.7 இலட்ச ரூபாய் உதவித் தொகையும் தந்துள்ளது. கைத்தறித் துணி விலையில் தள்ளுபடி செய்ததற்கு மட்டும் ரூ 2.15 கோடி உதவி செய்துள்ளது. நாட்டிலுள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் கொண்டிருந்த கைத்தறிகள் 11.5 இலட்ச மென்றும், இவற்றில் 4.76 இலட்சம் கைத்தறிகள் பயன்படுத்தப்பட்டன வென்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுக் கைத்தறித் தொழிலில் ஆந்திரா மாநிலம்தான் முன்னணியில் நிற்கிறது. அம் மாநிலத்தில் மட்டும் 2.73 இலட்சம் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக உள்ளனர். அதையடுத்து, தமிழ் நாடுதான் சிறப்பிடம் வகிக்கிறது. தமிழ் நாட்டில் 2·25 இலட்சம் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக இருக்கின்றனர். இவ் விரு மாநிலங்களிலும்தான் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் சிறப்புடன் இயங்கி வருகின்றன. இவ் விரு மாநிலங்களிலும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நடப்பு மூலதனம் மட்டும் 19 கோடி ரூபாயாகும். நாட்டிலுள்ள நெசவாளர் சங்கங்களின் மொத்த நடப்பு மூலதனத்தில் இவ் விரு மாநிலங்கள் மட்டும் 42 சதவீதம் கொண்டுள்ளன. 1967-68-ல் நமது நாட்டில் உற்பத்தி செய்யப் பட்ட மொத்தக் கைத்தறித் துணியில் இவை மட்டும் 38 சதவீதத் துணிகளை உற்பத்தி செய்திருக்கின்றன; அதாவது 17 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளை உற்பத்தியாக்கியிருக்கின்றன. எனவே தான் இவ் விரு மாநில அரசுகளும் கைத்தறித் தொழிலில், முக்கியமாகக் கூட்டுறவுக் கைத்தறித் தொழிலில் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றன.

30. ஏனைய வகைக் கூட்டுறவுச் சங்கங்கள்

கூட்டுறவுத் துறையில் நாம் இதுவரை குறிப்பிடாத எத்தனையோ வகைச் சங்கங்கள் நம் நாட்டில் இயங்கி வருகின்றன. மண்வளப் பாதுகாப்புச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுப் பால் பண்ணைகள், கூட்டுறவுக் காப்பீட்டுச் சங்கங்கள், காப்பீட்டுச் சங்கங்களிலேயே கால்நடைக் காப்பீட்டுச் சங்கங்கள், வேளாண்மைக் காப்பீட்டுச் சங்கங்கள், மற்றும் கூட்டுறவு மீன் பண்ணைகள், மோட்டார்ப் போக்குவரத்துச் சங்கங்கள், கூட்டுறவுத் தொழிலசங்கள், கூட்டுறவு மாதர் சங்கங்கள், ரிக்ஷாக்காரர் சங்கங்கள், சலவையாளர் சங்கங்கள், முடிதிருத்துவோர் சங்கங்கள், காலணி தயாரிப்போர் சங்கங்கள் என்று எத்தனையோ வகையான சங்கங்கள் நம் நாட்டில் இயங்கி வருகின்றன. மாணவர்களுக்கும் கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக நமது நாட்டில் எத்தனை வகையான சங்கங்கள் இருக்கின்றன என்பதைக் கணக்கிடுதல் கடினம் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படாத துறையே நமது நாட்டில் இல்லை எனலாம். எனவே, எல்லா வகைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றியும் இங்குச் சுருக்கமாகக் கூட குறிப்பிட இயலாது. எனினும் அவற்றில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் சங்கங்களைப் பற்றி மட்டும் ஓரளவு காண்போம்.

1. மண்வளப் பாதுகாப்புச் சங்கங்கள்

மலையடிவாரங்களிலுள்ள நிலப் பகுதிகள் மலையிலிருந்து வரும் வெள்ளத்தால் பாதிக்கப் படுவதுண்டு. மலையிலிருந்து வரும் மழைப்பெருக்கு ஓடை ஓடையாய் வந்து அடிவாரத்திலுள்ள வளமான நிலத்தையெல்லாம் பாழ்படுத்தி விடுகிறது. வளமான மண்ணையெல்லாம் அரித்துவிட்டு அந்நிலப் பகுதியை மணல் செறிந்ததாக்கி விடுகிறது. இதனால், அப் பகுதியில் நிலம் வைத்திருக்கும் குடியானவர்கள் அனைவருமே பாதிக்கப்படு கின்றனர். இதைத் தடுக்கத் தனிப்பட்ட எந்த விவசாயியாலும்

முடியாது. பாதிக்கப்படும் விவசாயிகள் அனைவரும் ஒன்று சேர்ந்துதான் மண் அரிப்பைத் தடுக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

மண்வளப் பாதுகாப்புச் சங்கப் பணிகள்

மழை நீர் ஓடையாக வந்து நிலவளத்தை அழிக்கும்போது அவ்வோடைப் பகுதியில் நிலம் வைத்துள்ள குடியானவர்களால் இச் சங்கம் அமைக்கப்படுகிறது. இதில் நிலச் சொந்தக்காரர்களும் குத்தகைதாரர்களும் உறுப்பினர்களாகச் சேருகின்றனர். உறுப்பினர் ஒவ்வொருவரும் சங்கத்தின் நடவடிக்கைகளுக்குக் கட்டுப் படுவதாக ஒப்பந்தம் எழுதித் தருகின்றனர் சங்கத்தின் தீர்மானத்திற்கோ நடவடிக்கைக்கோ மாறாக நடக்கும் உறுப் பினருக்கு அபராதம் விதிக்கப் படுகிறது. இச் சங்கம் அமைக்கப் பட்டுப் பதிவு பெற்றபின்னர், உறுப்பினர்களைக் கொண்டோ கூலி யாள்களைக் கொண்டோ மண் அரிப்பைத் தடுக்கும் வேலையைச் சங்கம் செய்கிறது. நீரோடையை வேறு பக்கமாகத் திருப்பியோ குறுகிய நீரோடை அமைத்து அதன் இரு கரையோரங்களிலும் உயரமான கரை போட்டோ நில அரிப்பு ஏற்படாமல் பாதுகாக் கிறது; அல்லது அப் பகுதிகளில் மரங்களை நட்டு வெள்ள நீரின் ஓட்டத்தைத் தடுத்தும் திசையை மாற்றியும் நிலத்தைப் பாதுகாக் கிறது. பல ஆண்டுகளுக்குப் பின்னர்ப் பெரிய மரங்களையெல்லாம் ஏலம் விட்டு அந்த வருவாயைச் சங்கமே எடுத்துக் கொள்கிறது. இவ் வகைச் சங்கங்கள் நமது நாட்டில் ஒரு சில மட்டுமே உள்ளன எனினும், அவை ஆற்றி வரும் பணிகள் மகத்தானவையாகும்.

2. தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கியதிலிருந்து நமது நாடு பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி பெற்று வருகிறது. போக்குவரத்து, பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவ விடுதிகள், ஆலைகள், வீடுகள் ஆகியவை கட்டும் பணிகள், நீர்ப்பாசன வசதிகள் ஆகியவை அனைத்தும் பெருகிய வண்ணம் இருக்கின்றன. இவை பெருகி வளர்ச்சியுறுவதற்கு நம் நாட்டு உழைப்பாளிகளும் பங்கு கொள்கின்றனர். பொருளாதார வளர்ச்சியோடு வேலை வாய்ப்பும் வளர்கிறது; தொழிலாளரின் எண்ணிக்கையும் பெருகு கிறது. உழைப்பாளிகளின் பிரச்சினைகளும் அதிகரிக்கின்றன. ஒப் பந்தக் காரர்களின் வாயிலாக வேலை பெறும் தொழிலாளிகள் அவர்கள் வழங்கும் ஊதியத்தை மட்டும் நம்பி வாழ வேண்டி யுள்ளது. ஒப்பந்தக்காரர்களோ ஏராளமாகச் சம்பாதித்து விடுகின்றனர்.

இதுபோன்ற பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள விரும்பும் தொழிலாளர்களுக்குக் கூட்டுறவுதான் நல்ல வழியாகும். கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துக்கொண்டால், நிதி திரட்டுவதும் உறுப்பினர்களுக்கு வேலை தேடித்தருவதும், அதிக ஊதியத்தைப் பெறுவதும் எளிதாகிவிடும். தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தால் ஏற்படும் நன்மைகள் வருமாறு :

(1) தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வேலை ஒப்பந்தக்காரர்கள், தரகர்கள் ஆகியோரின் பிடியிலிருந்து தொழிலாளர்களை விடுவித்து, அவர்களுக்கு உயர்ந்த ஊதியத்தைப் பெற்றுத் தரமுடியும்.

(2) ஒப்பந்தக்காரர்களைக் காட்டிலும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொள்ளும் வேலை மலிவானது என்பது அனுபவம் காட்டும் உண்மை. மலிவாக வேலைசெய்து தருவதால் செலவு மிச்சமாகிறது; வேறு வேலைகளையும் தொடங்கமுடிகிறது; இதனால் தொழிலாளருக்கும் அதிக வேலை கிடைக்கிறது.

(3) தமது உழைப்பினால் கிடைக்கும் ஊதியம் தங்களுக்குத் தாம் என்ற எண்ணம் ஏற்படுகிறது; இதனால், உழைப்பாளிகள் கடுமையாகவும் திறமையாகவும் நாணயத்துடனும் உழைக்க முற்படுவர்.

(4) இச் சங்கங்களுக்குக் கிடைக்கும் இலாபம் தொழிலாளர் உறுப்பினர்களின் நலனுக்காகவே செலவிடப்படுகிறது.

நோக்கம் : சாதாரண உழைப்பாளிகள், திறமைபெற்ற உழைப்பாளிகள் ஆகிய அனைவரின் பொருளாதார நலனைப் பேணுவதும் உயர்த்துவதும்தான் இச் சங்கங்களின் முக்கிய நோக்கமாகும். அவர்கள் எவராலும் ஏமாற்றப்பட்டுவிடாமலும் சுரண்டப்படாமலும் பாதுகாக்கும் இச் சங்கங்கள் அதற்கென மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வருமாறு :

(1) பொதுப் பணி வேலைகளையும் தனியார் வேலைகளையும் ஒப்பந்த மூலம் பெற்று, அவற்றின் வாயிலாக உறுப்பினர்களுக்கேற்ற வேலையைப் பெற்றுத் தருகின்றன.

(2) அன்றாட வேலையையும் பெற்றுத் தொழிலாளர் உறுப்பினர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை இருக்கும்படி ஒழுங்கு செய்கின்றன.

(3) மேற்கூறிய வேலைகளுக்குத் தேவைப்படும் இயந்திரங்கள், சாதனங்கள் ஆகியவற்றையும் வேண்டிய அளவிற்கு வாங்கியோ வாடகைக்கு எடுத்தோ உறுப்பினர்களுக்கு உதவுகின்றன.

(4) கட்டட வேலை, தச்சு வேலை, பட்டறை வேலை போன்ற எல்லா வேலைகளுக்கும் தொழிலாள உறுப்பினர்களுக்கு அவ்வப் போது பயிற்சி அளிக்கின்றன.

(5) உறுப்பினர்களுக்கு வேண்டிய வீட்டுச் சாமான்களை யெல்லாம் மொத்தமாக வாங்கி விநியோகம் செய்கின்றன.

(6) உறுப்பினர்கள் சிக்கனமாக வாழவும் சுய நம்பிக்கை யுணர்வு பெறவும் ஊக்கமளித்து வருகின்றன.

உறுப்பினர்கள் : உடல் உழைப்பாளிகளும் (Unskilled workers) திறன்பெற்ற உழைப்பாளிகளும் (Skilled workers) இவ் வகை வேலை ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களை அந்தந்தப் பகுதிகளில் அமைத்துக் கொள்கின்றனர். 1962 செப்டம்பர் மாதம் நாகபுரியில் தொழிலாளர் ஒப்பந்தச் சங்கங்கள், கட்டட ஒப்பந்தச் சங்கங்கள் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. அக் கருத்தரங்கின் ஆலோசனைப்படி தொழிலாளர்கள் அமைக்கும் தொடக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் 50 முதல் 200 தொழிலாளர்கள் உறுப்பினர்களாயிருக்க வேண்டும்; பல கிராமங்களுக்கு ஒரு சங்கம் என்று இருக்கவேண்டும்; தொழிலாளரல்லாதோர் இச் சங்கங்களின்பால் அக்கறை கொண்டிருந்தால் அவர்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளலாம்; ஆனால், மொத்த உறுப்பினர்களில் இவர்கள் 1/10 விகிதத்தில்தாம் ஒவ்வொரு சங்கத்திலும் இருக்கலாம்; அதுவும், இவர்களைத் தாற்காலிக உறுப்பினர்களாகத்தாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நாளடைவில் இவ் வகை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்க ஒவ்வொரு சங்கமும் முயலவேண்டும். தினசரிக் கூலியாளர்களைக் கூட்டு உறுப்பினர்களாக (Associate members) ஏற்றுக்கொள்வதுதான் நல்லது.

மூலதனம் : தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் பணியாற்ற வேண்டுமானால் அவைகளுக்கு மூலதனம் தேவை. இம் மூலதனத்திற்கு அடிப்படையாக அமைவது உறுப்பினர்கள் செலுத்தும் பங்கு மூலதனம்தான். எனினும், ஒரு பங்கின் மதிப்பு கூடுமானவரை குறைந்த தொகையாக இருப்பதே நல்லது. இக் குறைந்த பங்கு மூலதனத்தையும் உறுப்பினர்கள் தவணை முறையில் செலுத்த வசதி இருக்கவேண்டும். நாளடைவில் வேண்டுமானால் அதிகப் பங்கு மூலதனத்தைச் செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் தூண்டப்படலாம். கூடுமானவரை உறுப்பினர்களின் ஊதியத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக இப் பங்கு மூலதனத்தைப் பெறுவது நன்று. அப்போதுதான் பங்கு மூலதனம் கணிசமான அளவில் பெருகும். இச் சங்கங்களுக்கு அதிக

நிதி உதவி செய்யும் நிறுவனங்கள் கூட்டுறவு மத்திய வங்கிகள்தாம். இவ் வங்கிகள் தரும் கடனை மாநில அரசாங்கத்தின் உத்தரவாதத்தின் பேரில் ஸ்டேட் பாங்கே அவற்றிற்குத் திருப்பிச் செலுத்தத் தற்போது சம்மதம் தெரிவித்துள்ளது.

நிர்வாகம் : ஏனைய கூட்டுறவுச் சங்கங்களைப் போலவே தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் உறுப்பினர்கள் அனைவரையும் கொண்ட பொதுக்குழுவை அமைத்துள்ளது. இப் பொதுக் குழு ஆண்டுக்கொரு முறையாகிலும் கூடிச் சங்க நடவடிக்கைகளைப் பற்றி விவாதிக்கின்றது. அன்றாட நிர்வாக வேலையை நிர்வாகக் குழு ஏற்று நடத்துகிறது ஒரு சில சங்கங்கள் நல்ல அனுபவம் வாய்ந்த ஒருவரைச் சங்கச் செயலாளராக அமர்த்தி அவருக்கு ஊதியம் தருகின்றன.

சங்கத்திற்குக் கிடைக்கும் இலாபத்தில் ஓரளவு இலாப ஈவு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது அதாவது அவரவர்களின் பங்கு மூலதனத்தில் 6¼ முதல் 10 சதவீதம் வரை இலாப ஈவு கொடுக்கப்படுகிறது. எஞ்சிய இலாபம் உறுப்பினர்களின் வேலை அளவுக்கேற்பப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. அதனோடு, 'தொழிலாளர் நல நிதி' (Labour Benefit Fund) என்ற நிதிக்கும் குறிப்பிட்ட அளவு இலாபம் சேர்க்கப்படுகிறது. உடல் நலம் குன்றிய உறுப்பினர்களுக்கு இந்நிதியிலிருந்துதான் உதவி அளிக்கப்படுகிறது.

அரசாங்கமளிக்கும் சலுகைகள்

தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒவ்வொரு மாநில அரசாங்கமும் வெவ்வேறு விதமான சலுகைகள் அளித்து வருகின்றன. சான்றாக, தமிழ் நாட்டில் ரூ. 5,000 வரை மதிப்புள்ள சாதாரண வேலைகளையெல்லாம் அரசாங்கம் இச்சங்கங்களிடமே ஒப்படைக்கிறது. ஆந்திராவில் ரூ. 10,000 வரை மதிப்புள்ள வேலைகள் இச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. இவ்வேலைகளுக்கெல்லாம் அரசாங்கம் டெண்டர் கேட்பதில்லை. மத்திய அரசாங்கப் பொதுப் பணி, வீட்டு வசதித் துறை ரூ. 10,000 வரை செலவாகக் கூடிய சாதாரண வேலைகளையெல்லாம் டெண்டர் கேட்காமல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கே ஒப்படைக்கும்படி பொதுப் பணித்துறை அதிகாரிகளுக்கு அறிக்கை விடுத்துள்ளது. நீர்ப்பாசன, மின்சாரத் துறையினரும் குறிப்பிட்ட மதிப்புடைய நீர்ப்பாசனத் திட்ட வேலைகளையெல்லாம் இச்சங்கங்களுக்கே ஒப்படைக்கும்படி அறிக்கை விடுத்துள்ளது. இரயில்வேக்களும் இத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி செய்து வருகின்றன. குறிப்பிட்ட சில இரயில் நிலையங்களில் இரயில்

பெட்டியிலிருந்து இறக்கவேண்டிய அல்லது அப்பெட்டிகளில் ஏற்ற வேண்டிய பணிகளையெல்லாம் இவ்வகைச் சங்கங்களிடமே ஒப்படைத்துள்ளன. மண் வெட்டு வேலை போன்ற சாதாரண வேலைகளும் இவ்வகைச் சங்கங்களிடமே ஒப்படைக்கப்படுகின்றன. மேலும், இரயில் நிலையங்களில் சாப்பாடு, சிற்றுண்டி விற்பனையையும் சில்லறைச் சாமான்கள் விற்பனையையும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கே விட்டிருக்கின்றன.

முன்னேற்றம்

1961-ல் மொத்தம் 2,291 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன; இவற்றில் 1,35,615 பேர் உறுப்பினர்களாக இருந்தனர். இச் சங்கங்களின் பங்கு மூலதனம் ரூ. 40 இலட்சமாகவும் நடப்பு மூலதனம் ரூ. 24 இலட்சமாகவும் இருந்தது. 1960-61-ல் இச்சங்கங்கள் ரூ. 327 இலட்சம் மதிப்புள்ள வேலைகளைச் செய்து முடித்தன. 1962-63-க்குள் மேலும் 320 சங்கங்கள் அமைக்கப்பட்டு விட்டன. 1962-ல் இவற்றின் எண்ணிக்கை 4,335 ஆக அதிகரித்தது; உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 2.35 இலட்சத்திற்கு உயர்ந்தது. 1964-65-ல் இச் சங்கங்கள் அனைத்தும் செய்த வேலைகள் ரூ. 7.8 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது. தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியில் பஞ்சாப் மாநிலம்தான் முன்னணியில் உள்ளது. 1971-ல் இச்சங்கங்களின் எண்ணிக்கை 5,432 ஆகவும், உறுப்பினர்களின் எண்ணிக்கை 2.7 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. 1970-71-ல் இவை செய்த வேலையின் மதிப்பு ரூ. 13.15 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது.

கூட்டமைப்புச் சங்கங்கள்: ஒரு சில மாநிலங்களில் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட அடிப்படையில் கூட்டமைப்புச் சங்கங்களை அமைத்துள்ளன. சான்றாக, பஞ்சாப் மாநிலத்தில் மாவட்ட அளவில் 11 கூட்டமைப்புச் சங்கங்கள் உள்ளன. தொடக்க நிலைச் சங்கங்கள் தாம் பெறும் வேலையின் மதிப்பில் 1 சதவீதத்தை இம் மாவட்டக் கூட்டமைப்புச் சங்கங்களுக்குத் தருகின்றன. இத் தொகையைக் கொண்டு மாவட்டச் சங்கங்கள் தொழில் நுட்ப வல்லுநர்களை அமர்த்தி, தொடக்க நிலைச் சங்கங்களுக்கு மேலை, தொழில் நுட்பங்களைச் சொல்லித் தருகின்றன. சில சமயங்களில் ஒப்பந்தத்தின் வாயிலாகப் பெறும் வேலைகளை உறுப்பினர் சங்கங்களின் சக்திக்கும் திறமைக்கு மேற்பப் பகிர்ந்தளிக்கின்றன. மேலும், பஞ்சாப், ஆந்திரா, டில்லி போன்ற மாநிலங்களில் மாநிலத் தலைமைச் சங்கமும் அமைக்கப்பட்டுள்ளது. அந்தந்த மாநிலத்திலுள்ள தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களைக்

கண்காணித்து, அவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவதுதான் இவற்றின் நோக்கமாகும்.

அரசாங்க உதவி

முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கென்று எவ்விதத் திட்டமும் இடம் பெறவில்லை. மூன்றாவது திட்டத்தில்தான் இவற்றிற்கு ஓரளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இத் திட்டத்தில் 200 சங்கங்களை அமைக்க வழி செய்யப்பட்டது. இச் சங்கங்களை ஊக்குவிப்பதற்கென்று நிதி உதவி செய்யும் திட்டமும் போடப்பட்டது. ஒவ்வொரு சங்கத்திற்கும் நிர்வாகச் செலவுக்கென்று 3 அல்லது 5 ஆண்டுகள் வரை மொத்தம் ரூ. ,200 வழங்க முடிவு செய்யப்பட்டது. உறுப்பினர்களின் பங்கு மூலதனத்திற்கு இணையாக ரூ. 2,000 வரை அரசாங்கப் பங்கு மூலதனம் வழங்கவும் வழி செய்யப்பட்டது. மேலும், 10 சங்கங்களுக்கு ஒரு தொழில் நுட்ப வல்லுநரை அமர்த்துவதற்கென்று 3 ஆண்டுகளுக்கு ரூ. 7,200 வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. மாவட்டக் கூட்டமைப்புச் சங்கங்களுக்கும் தலா ரூ. 3,000 வரை மூன்றாண்டுகளுக்கு நிர்வாக மானியத் தொகை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இச்சங்கங்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சங்கத்திற்கும் அரசாங்கம் தன் பங்கு மூலதனமாக 5,000 ரூபாயும் நிர்வாக மானியமாக 5 ஆண்டுகள் வரை மொத்தம் 3,000 ரூபாயும் கொடுக்கத் திட்டம் வகை செய்துள்ளது. அதனோடு, இச்சங்களுக்குத் தேவைப்படும் கருவிகளையும் சாதனங்களையும் வாங்குதற்கு ஒவ்வொன்றும் ரூ. 2,000 கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த 2,000 ரூபாயில் 50 சதவீதம் கடனாகவும் எஞ்சியது மானியமாகவும் வழங்கப்படும். மாவட்டத் தொழிலாளர் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் அரசாங்க மூலதனமாக 0,0 0 ரூபாயும், அலுவலகப் பணியாளர்களுக்கென்று 5 ஆண்டுகள் வரை மானியமாக 5,000 ரூபாயும் வழங்கப்படவிருக்கிறது. மேலும், நடப்பு மூலதனத்திற்கென்று கடனாக 20,000 ரூபாயும் தொழில் நுட்ப நிபுணர்களை அமர்த்துவதற்கென்று மானியமாக 20,000 ரூபாயும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாநில மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கூட்டிணைப்புச் சங்கத்திற்கும் பங்கு மூலதனமாக 50,000 ரூபாயும், அலுவலகப் பணியாளர்களுக்கென்று 5 வருடங்கள் வரை மானியமாக 9,000 ரூபாயும் தொழில் நுட்ப நிபுணர்களை அமர்த்துவதற்கென்று மானியமாக 52,000 ரூபாயும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சங்கங்களின் இடர்ப்பாடுகள்

தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பல தொல்லைகள் உள்ளன. பெரும்பாலானவை மிகச் சிறிய அளவில் தாம் அமைக்கப்பட்டுள்ளன; எனவே, இச் சங்கங்கள் வேலை பெறுவதும், பெற்ற வேலையை நிறைவு செய்யவும் கட்டமாக உள்ளது. மாவட்டச் சங்கங்கள் தொடக்கச் சங்கங்களுக்கு வெறும் ஆலோசனை மட்டுமே கூறி வருகின்றன; மற்றபடி அவற்றிற்கு வேலை வாங்கித் தருவது கிடையாது. எனவே, தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உருப்படியாக இயங்கவேண்டுமானால் அவை பெரிய அளவில் அமைக்கப்பட வேண்டும். தொழிலாளர் ஒப்பந்தச் சங்கங்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப் பட்டுள்ள தேசியக் குழு 1960ஆம் ஆண்டில் கூடிய கூட்டத்தில் செய்துள்ள சிபாரிசின்படி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொன்றும் 100 உறுப்பினர்களையாவது கொண்டிருக்க வேண்டும்; ஆண்டொன்றுக்கு சராசரி ரூ 2 இலட்சம் மதிப்புள்ள வேலையையாவது செய்யவேண்டும். இச் சங்கங்களுக்குள்ள மற்றொரு கஷ்டம் யாதெனில், இவற்றிற்கு வருடம் முழுவதும் வேலை கிடைப்பதில்லை. மேலும், இவற்றிற்கு வேலைதரும் நிறுவனங்கள் உரிய நேரத்தில், அதாவது வேலை முடிந்தவுடன் இவற்றிற்குரிய தொகையை வழங்குவதில்லை. எனவே, கூட்டுறவு மைய வங்கிகளும் இவற்றிற்குப் போதுமான அளவு கடன்தர முடியாமல் போய்விடுகிறது.

3. கூட்டுறவுப் பால் பண்ணைகள்

மனிதனுக்கு வேண்டிய சத்துள்ள உணவுப்பொருள்களில் பால் மிக முக்கியமானதாகும். இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவின் கணக்குப்படி ஒருவனுக்கு அன்றாடம் 10 அவுன்ஸ் பால் தேவை. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பாலைக் கணக்கிட்டுப் பார்த்தால் இதில் பாதி அளவுகூட இராது. எனவே, பாலின் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமாயின் நல்ல தரமான பசுக்கள் தேவை; மேலும், அவற்றிற்குச் சத்துள்ள தீனியும் அவசியம். இவ்விரு வகையிலும் பாலின் உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தற்போது கிராமத்திலுள்ள குடியானவர்கள்தாம் வீட்டிற்கு ஓரிரண்டு பால் மாடுகள் வைத்திருக்கின்றனர். ஆனால், அவற்றைச் சரியானபடி வளர்க்கவோ பராமரிக்கவோ அவர்களுக்குத் தெரியாது; பாலைப் பக்குவப் படுத்திப் பல்வேறு பால் பண்டங்களைத் தயாரித்து விற்பனை செய்வதற்கு அவர்களிடம் வசதி கிடையாது. இப் பிரச்சினைகளை யெல்லாம் தீர்த்துக்கொள்வதற்கு ஒரே வழி கூட்டுறவுப் பால்

பண்ணைகளை அமைப்பதுதான். கூட்டுறவுப் பால் பண்ணைகளை அமைத்துக்கொண்டால் அவர்களுக்கு வேண்டிய அளவு கடன் கிடைக்கும்; தாமான கறவை மாடுகளை வாங்க முடியும்; அவற்றை நல்லமுறையில் கண்காணிப்பதற்கு ஆலோசனையும் உதவியும் கிடைக்கும். பாலை விற்பனை செய்யவும் வசதி ஏற்படும்.

கூட்டுறவுப் பால் பண்ணையை முதன்முதலில் தொடங்கி வெற்றி கண்ட மாநிலம் குஜராத் ஆகும். இச் சங்கம் கெய்ரா என்னும் மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. இதன் வெற்றியைத் தொடர்ந்து பல சங்கங்கள் அங்கு உருவாயின; ஏனைய மாநிலங்களிலும் இது போன்ற பால் பண்ணைச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இருப்பினும், கெய்ரா மாவட்டத்தில் மட்டும் சுமார் 400 கிராமங்களில் பால் பண்ணைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 70,000 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இச் சங்கங்கள் அனைத்தும் மாவட்ட அடிப்படையில் 'கெய்ரா பால் பண்ணை யூனியன்' என்ற பெயரில் கூட்டமைப்புச் சங்கத்தையும் தொடங்கியுள்ளன. கிராமங்களிலுள்ள பால் பண்ணைகள் அன்றாடம் காலையிலும் மாலையிலும் பால் கறந்து மத்தியப் பால் பண்ணைச் சங்கத்திற்கு வழங்குகின்றன. இம் மத்தியப் பால் பண்ணைச் சங்கம் அதைப் பககுவப்படுத்தி பம்பாய் நகரத்திற்கு விநியோகம் செய்கிறது. மீதியுள்ள பாலிலிருந்து வெண்ணெய், பால்பவுடர், குழந்தைப் பாலுணவு முதலிய பொருள்களைத் தயாரிக்கின்றது இன்று நாடெங்கும் பிரபலமடைந்துள்ள அமுல் வெண்ணெயும் பாலுணவும் இந்த மத்தியச் சங்கம் வைத்துள்ள ஆலையிலிருந்து தயாரிக்கப்படுவதாகும்.

தமிழ் நாட்டிலும் கோவை, மதுரை, திருச்சி போன்ற நகரங்களில் பால் பண்ணைகள் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. இந் நகர மக்கள் பெரும்பாலும் கூட்டுறவுப் பால் பண்ணைகளிடமிருந்தே பாலை வாங்குகின்றனர். இப்பாலைச் சைக்கிள்காரர்கள் மூலம் பால் பண்ணைகள் விநியோகம் செய்கின்றன. கூட்டுறவுப் பால் பண்ணைகள் மட்டுமன்றி, அரசாங்கப் பால் பண்ணைகளும் தமிழ் நாட்டில் உள்ளன. சென்னையிலுள்ள மாதவரம் அரசாங்கப் பால் பண்ணை மக்களின் பேராதரவு பெற்று வெற்றிகரமாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இந்த அரசாங்கப் பால் பண்ணை சென்னை நகரில் பல்வேறு இடங்களில் பால் விநியோக நிலையங்களை ஏற்படுத்தி மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறது.

நம் நாட்டில் கூட்டுறவுப் பால் பண்ணைகள் வேண்டிய அளவுக்கு இன்னும் வளர்ச்சியடையவில்லை. எனினும், கூட்டுறவுப்

பால் பண்ணைகள் துரிதமாக வளர்ந்து வருகின்றன என்பதை பின்வரும் புள்ளிவிவரங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

(அ) தொடக்கப் பால் பண்ணைகள்

		1957-58	1960-61	1970-71
1.	எண்ணிக்கை	1914	3200	11,909
2.	உறுப்பினர்கள் ...	168,342	238,[illegible]7	10,23,330
		(இலட்சம் ரூபாயில்)		
3.	பங்கு மூலதனம் ...	28.6	49.05	316
4.	நடப்பு மூலதனம் ...	103·2	158·43	1981
5.	விற்பனை செய்த பாலின் மதிப்பு	350·4	543·90	5440

(ஆ) பால் பண்ணை யூனியன்கள்

1.	எண்ணிக்கை ...	73	94	150
2.	உறுப்பினர்கள் ...			
	சங்கங்கள் ...	1384	2314	9,700
	தனி நபர்கள் ...	7859	13,214	22,050
		(இலட்சம் ரூபாயில்)		
3.	நடப்பு மூலதனம்	135	232	2856
4.	விற்பனை செய்த பாலின் மதிப்பு ...	315	472	6200

பால் பண்ணைகள், கால் நடை அபிவிருத்தி பற்றி ஆராய்வதற்காக மத்திய அரசாங்க விவசாய, உணவுத்துறை ஓர் ஆய்வுக் குழுவை நியமித்துள்ளது. அக்குழுவின் பரிந்துரைப்படி, இனிமேல் புதிதாக அமைக்கப்படும் பால் பண்ணைத் திட்டங்கள் அனைத்தும் கூட்டுறவுத் துறையில்தான் அமைக்கப்படவேண்டும்; தற்போது இயங்கிவரும் அரசாங்கப் பால் பண்ணைகள்கூடப் படிப்படியாகக் கூட்டுறவுப் பால் பண்ணைகளாக மாற்றப்படவேண்டும். எனினும், டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய பெரிய நகரங்களில் மட்டும் அரசாங்கப் பால் பண்ணைகள் தொடர்ந்து நடைபெறலாம். ஆனால், அரசாங்கப் பால் பண்ணைகளுக்கும் கூட்டுறவுப் பால் பண்ணைகளுக்குமிடையே நெருங்கிய நல்லுறவு நிலவவேண்டும்.

நான்காம் ஐந்தாண்டுத்திட்ட காலத்திற்குள் நாட்டிலுள்ள பால் பண்டத் தொழிற்சாலைகளில் 50 சதவீதமாகிலும் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்படுவதற்குத் திட்டம் போடப்பட்டுள்ளது. மேலும், அரசாங்கப் பால் பண்ணைகள் கூட்டுறவுப் பால் பண்ணை

களிடமிருந்தும் பாலைக் கொள்முதல் செய்வதற்கான திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளன.

பால் பண்ணைகள் அடையும் சிக்கல்கள்

பால் பண்ணைகள் அதிக அளவுப் பாலையும் பால் பண்டங்களையும் விநியோகம் செய்வதற்குப் போதுமான உயர்தரமான பசுக்களோ எருமைகளோ அவற்றிடம் கிடையாது. இக்குறையைப் போக்கத் தாமான பசுக்களும் எருமைகளும் தேவை; அதனோடு, நல்ல தீவனமும் அவசியம். அடுத்து பால் பண்ணைகளை அமைப்பதற்குமுன், அதற்குரிய வசதிகள் இருக்கின்றனவா என்பதையும் சிந்திக்க வேண்டும். முக்கியமாய் வேண்டிய அளவு பால் கிடைக்கக்கூடிய இடமாய் இருக்கவேண்டும். பல பால் பண்ணைகள் இவ்விதச் சௌகரியங்களின்றிக் கஷ்டப்படுகின்றன. இதனால், பால் பண்ணைகள் மட்டுமன்றி, நுகர்வோரும் அவதிப்படுகின்றனர். நிற்க, பால் பண்ணைகள் நல்ல திறமையுடன் செயல்படமுடிவதில்லை. பால் பண்டங்களைச் செய்வதற்குரிய வசதிகளின்றிச் சில பண்ணைகள் முன்னேற்றமடையாமலிருக்கின்றன. இறுதியாக, விவசாயச் சாகுபடிக்கென்று ரிசர்வ் வங்கி கடன் கொடுத்து வருகிறது. இக் கடன் வசதி, விவசாயப் பண்ணைகளில்லாத பால் பண்ணைகளுக்கு அளிக்கப்படுவதில்லை.

தீர்வு : கூட்டுறவுப் பால் பண்ணை வளர்ச்சியடையக் கூட்டுறவுத் திட்டக்குழு எத்தனையோ சிபாரிசுகளைச் செய்துள்ளது. அவற்றில் முக்கியமானவை வருமாறு:

1. 30,000 பேருக்கு மேல் வாழும் நகரங்களுக்கருகில் சுமார் 30 மைல் சுற்றளவிற்குள் பால் பண்ணைகள் அமைக்கப்படவேண்டும். பால் பண்ணை உறுப்பினர்களில் பெரும்பாலோர் விரும்பினால் அப்பண்ணையே பாலைக் கொள்முதல் செய்து விநியோகிக்கும் பணியையும் மேற்கொள்ளலாம்.

2. பால் பண்ணைகள் அமைக்கப்படும்போது குறைந்த பட்சம் 300 பவுண்டு பாலாவது கிடைக்கக்கூடிய இடத்தில் அமைக்க வேண்டும். ஒவ்வொரு பால் பண்ணையும் தனக்கு மேல் மட்டத்திலுள்ள பால் பண்ணைக் கூட்டமைப்பிடம் மாதா மாதம் தம் தொழில் விவரம் பற்றித் தெரிவிக்கவேண்டும்; அதனோடு, கூட்டமைப்பு மானியம் தருமாயின் அதை உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்க வேண்டும்.

3. பால் பண்ணைக்குப் பொதுவானதொரு மாட்டுக் கொட்டகை இருக்கவேண்டும். இல்லையெனில், மாநில அரசு

அதை அமைக்க உதவி செய்யவேண்டும். சங்கத்தின் செயலாளர் முன்னிலையில் உறுப்பினர்கள் பால் கறக்கும் பழக்கம் நல்லது.

4. கூட்டமைப்புப் பால் பண்ணைகள் தம் உறுப்பினர்களாக வுள்ள பண்ணைகளிடமிருந்து பாலைக் கொள்முதல் செய்து நகரங் களுக்கு விநியோகிக்கும்போது, தரமான பாலுக்கு நல்ல விலை கொடுக்கவேண்டும். நகரங்களுக்குத் துரிதமாகப் பாலை அனுப்பு வதற்குப் போக்குவரத்து வசதிகள் இருக்கவேண்டும். தேவைப் பட்டால் அக்கூட்டமைப்புகளுக்கு வேண்டிய வாகனங்களை அந்தந்த மாநில அரசுகளே வாங்கித் தரவேண்டும்.

5. மிகப் பெரிய நகரங்களுக்கருகிலுள்ள பால் பண்ணைகள் தமக்கென்று பால் விநியோகக் கழகமொன்றை அந்தந்த நகரில் ஏற்படுத்திக் கொள்வது நன்று.

4. கூட்டுறவு மீன் பண்ணைகள் (Co-operative Fisheries)

கடந்த சில ஆண்டுகளாகப் பெருகிவரும் மக்கள்தொகைக் கேற்ப உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலும் அரசாங்கம் அக்கறைகொண்டு வருகிறது. மேற்கத்திய நாடுகளில் மீனும் முக்கிய உணவுப் பொருளாக உள்ளது. ஆனால், நமது நாட்டிலோ கடற்கரையோரப் பகுதிகளில்தான் இதை உணவாகப் பயன் படுத்துகின்றனர். மத ஆச்சாரத்தினால் பெரும்பாலோர் இதை உண்பதில்லை; உண்பவர்களும் விலை அதிகமாயிருக்கின்ற காரணத் தால் இதை அதிகம் விரும்புவதில்லை. எனவே, இதன் உற்பத்தி பெருக வேண்டுமானால் விலை மலிவாகவேண்டும்; விலை மலிவாக வேண்டுமானால் உற்பத்தி பெருகவேண்டும். உற்பத்தியைப் பெருக்கு வதற்கு நிறைய வாய்ப்புகள் உள. நமது நாட்டைச் சூழ்ந்துள்ள கடல்களில் ஏராளமான மீன்கள் உள்ளன. ஆனால் அவற்றைப் பிடிப் பதற்கு நவீன முறைகளைக் கையாள வேண்டும். நவீன வலைகளையும் விசைப் படகுகளையும் கையாளவேண்டும். ஆனால், நமது மீனவர் களோ ஏழைகள்; படிப்பற்றவர்கள்; பழைமைப் பற்றுடையவர்கள். எனவே, தனிப்பட்ட முறையில் எவராலும் நவீன முறையைச் கையாள முடியாது. இதற்கு வேறு வழி மீனவர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கத்தை அமைப்பதுதான்.

நமது நாட்டில் கூட்டுறவு மீன் பண்ணைகள் அமைக்கப்பட்டு ஓரளவு வளர்ச்சி பெற்றும் வருகின்றன. மகராஷ்டிரத்தில் 1966-ன் கணக்குப்படி 291 மீனவர் சங்கங்கள் இயங்கி வந்திருக்கின்றன. இச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டிய கடன் வசதிகளையும் சாதன வசதிகளையும் அளித்து வருகின்றன. அதனோடு, விசைப் படகுகளையும் நவீன வலைகளையும் கொடுத்து உதவுகின்றன. பிடித்த மீன்களை விற்பதற்கும் பல்வேறு இடங்களுக்கு அனுப்புவதற்கும் வசதிகள் செய்திருக்கின்றன. அவற்றை உப்பிட்டு உலர வைத்துப் பக்குவப்படுத்தும் பணியையும், குளிர் சாதனங்களில் வைத்துப் பாதுகாக்கும் பொறுப்பையும் செய்து வருகின்றன. பம்பாயிலும் இச் சங்கங்கள் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் 1966-லேயே 423 மீனவர் சங்கங்கள் இயங்கி வந்திருக்கின்றன. இச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டிய கடன், விசைப் படகுகளை அளிப்பதோடு மட்டுமன்றி அவர்கள் பிடித்துவரும் மீன்களுக்கு விற்பனை ஏற்பாட்டையும் செய்கின்றன. மீன்துறை இயக்குநர் அவைகளுக்கு வேண்டிய ஆலோசனைகளைத் தந்து வருகிறார். இச்சங்கங்களை அமைப்பதற்கும் கண்காணிப்ப தற்கும் தமிழ் நாட்டு அரசாங்கம் தற்போது பல பணியாளர்களை நியமித்து வருகிறது. அதனோடு, குளம் குட்டைகளில் மீன் பிடிக்கும் பணியைக் குத்தகைக்கு விட்டும் இத்தொழிலுக்கு பேராதரவு தந்து வருகிறது.

கூட்டுறவு மீன் பண்ணைகள் நமது நாட்டில் ஓரளவு வெற்றி கரமாக இயங்கி வருகின்றன; எனினும், இன்னும் வேகமாக வளர்ச்சியுற வாய்ப்புகள் இருக்கின்றன. பெரிய கப்பல்களைப் பயன்படுத்தி ஆழ்ந்த கடலில் மீன் பிடிக்கும் பணிகளையும் மேற் கொள்ளவேண்டும். இத்துறையில் பம்பாய் முயற்சித்து வருவது பாராட்டிற்குரியது. தமிழ் நாடு, மகாராஷ்டிரம் போன்ற மாநிலங் களும் இம் முயற்சியில் ஈடுபடவேண்டும். நம் நாட்டு மீன்களுக்கு வெளிநாடுகளிலும் கிராக்கி உள்ளது. எனவே, ஏராளமான மீன் களைப் பிடித்து, பக்குவப்படுத்தி ஏற்றுமதி செய்யக்கூடியவாய்ப்பை கூட்டுறவு மீன் பண்ணைகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

5. கூட்டுறவு மோட்டார்ப் போக்குவரத்துச் சங்கங்கள்

நம் நாட்டில் இயங்கி வரும் மோட்டார் வாகனப் போக்கு வரத்துச் சங்கங்கள் இன்னும் வளர்ச்சி பெறவில்லை என்பதைக் கீழ்க்காணும் பட்டியலிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

(இலட்சம் ரூபாயில)

ஆண்டு	சங்க எண்ணிக்கை	உறுப்பினர் எண்ணிக்கை	பங்கு மூலதனம்	நடப்பு மூலதனம்	அடைந்த வருமானம்
1960-61	839	38,8 4	120.08	448·80	337·08
1961-62	930	43,867	138·42	505·16	403.39
1962-63	959	46,294	148·75	533·41	417·99
1963-64	1013	45,670	160.75	576·92	344·22
1964-65	1050	50,182	181·53	76[illegible]·77	458·31
1965-66	1089	52,435	191.45	833-48	464·37

போக்குவரத்துச் சங்கங்கள் நம் நாட்டில் வளர்ச்சி பெறுமல் தேங்கி நிற்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானவைகளை மட்டும் இங்குக் குறிப்பிடல் நன்று.

(1) பஸ் போக்குவரத்தை அரசாங்கம் படிப்படியாகத் தேசிய மயமாக்கி வருவது முக்கியமான காரணமாகும். அதனோடு, போக்கு வரத்து அதிகமில்லாத கச்சாரோட்டு மார்க்கங்கள் தாம் கூட்டுறவுத் துறையில் உள்ளன. எனவே, பொதுத்துறையில் இயங்கிவரும் போக்குவரத்துக்கு உற்ற துணையாக இருக்கும் வகையில் கூட்டுறவுப் போக்குவரத்தை அரசாங்கம் ஊக்குவித்தால் இக் கஷ்டங்கள் தீர்க்கப்படலாம்.

(2) பஸ் போக்குவரத்துச் சட்டப்படி தனிப்பட்டவர்களும் கூட்டுறவுச் சங்கங்களும் குறிப்பிட்டதொரு மார்க்கத்திற்கு அனுமதி கோரும்போது கூட்டுறவுச் சங்கத்திற்குத்தான் முதலில் அனுமதி வழங்கப்படவேண்டும். இச் சட்டத்தை நல்ல முறையில் அமுலாக்கினுல் கூட்டுறவுப் போக்குவரத்து முன்னேற வாய்ப்பு ஏற்படும்.

(3) கூட்டுறவுப் போக்குவரத்து சங்கங்களுக்கு மலிவான வட்டிக்குப் போதிய அளவு கடன் கிடைப்பதில்லை. பஞ்சாப்பி லுள்ள மையக் கூட்டுறவு வங்கிகள் மட்டும் இச்சங்கங்களுக்குக் கடன் கொடுத்து வருகின்றன; மற்றபடி எல்லாச் சங்கங்களும் நிதி பற்ருக் குறையால் நலிந்துள்ளன. எனவே, இக்கூட்டுறவுச் சங்கங்

களுக்குக் கடன் கொடுப்பதற்கென்று மாநில நிதிக் கழகச் சட்டம் (State Financial Corporation Act) 1962-ல் திருத்தப்பட்டுள்ளது. இத்திருத்தப்படி இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில நிதிக்கழகம் 20 இலட்சம் ரூபாய்வரை கடன் தரலாம்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டப்படி 1,000 பஸ் போக்குவரத்துச் சங்கங்கள், 70 வாடகைக்கார் போக்குவரத்துச் சங்கங்கள், உள் நாட்டிற்குள் இயங்கும் 100 நீர்ப் போக்குவரத்துச் சங்கங்கள் கூட்டுறவு முறையில் அமைக்கப்படுமெனத் தெரிகிறது.

6. கூட்டுறவுத் தொழிலகங்கள் (Co-operative work shops)

கூட்டுறவு முறையில் பல்வேறு தொழில் கூடங்களும் நமது நாட்டில் இயங்கி வருகின்றன. பீஹார், குஜராத், கேரளா, மத்திய பிரதேசம், தமிழ்நாடு, மகராஷ்டிரம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் இவ்வகைச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன; எனினும், தமிழ் நாட்டில் மட்டும்தான் இவை நல்ல முறையில் நடைபெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. குஜராத்திலும் மகராஷ்டிரத்திலும் இவை ஓரளவிற்குத்தான் நன்கு செயல்பட்டு வருகின்றன. ஏனைய மாநிலங்களில் இவை பெயரளவில் மட்டுமே இயங்கி வருகின்றன. 1965 66-ல் பல்வேறு மாநிலங்களில் இச் சங்கங்கள் இருந்த நிலைமையைக் கீழ்காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

(இலட்சம் ரூபாயில்)

மாநிலம்	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர் எண்ணிக்கை	பங்கு மூலதனம்	நடப்பு மூலதனம்	இயந்திரத் தளவாடங்களின் மதிப்பு	செய்த வேலையின் மதிப்பு	இலாபம்பெறும் சங்கங்கள்: எண்ணிக்கை	இலாபம்பெறும் சங்கங்கள்: இலாபத் தொகை
பீஹார்	4	70	0·02	0·18	0·12	0.35	3	0·01
குஜராத்	10	1,112	0·87	3·83	0 55	1·21	5	0·20
கேரளா	2	153	0·10	0·14	0 10	0·27	1	0·04
மத்திய பிரதேசம்	1	15	0.03	0·07	0 06	—	—	—
தமிழ் நாடு	126	8,791	7.50	55.59	11.18	56.16	51	3.49
மகராஷ்டிரம்	22	2,157	12.74	21.73	0·64	8 85	7	0,32
மேற்கு வங்காளம்	1	22	0.02	0.08	0.07	0.03	1	—

7. மாதர் கூட்டுறவுச் சங்கங்கள்

மேற்கத்திய நாடுகளிலெல்லாம் ஏராளமான பெண்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர். ஆனால், நமது நாட்டிலோ ஏழைக் குடும்பத்தையும் விவசாயக் குடும்பத்தையும் சார்ந்த பெண்களைத் தவிர பெரும்பாலான பெண்கள் வீண் பொழுது போக்குகின்றனர். நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களில் சிலர்தாம் பல்வேறு நிறுவனங்களுக்குச் சென்று வேலை செய்கின்றனர். கூட்டுறவு இயக்கம் வெற்றி பெறுவதில் பெண்களுக்கும் பங்கு உண்டு என்பதை இங்கிலாந்து எடுத்துக் காட்டுகிறது. அங்குள்ள கூட்டுறவுப் பண்டகசாலைகளின் வெற்றிக்குப் பெண்கள்தாம் முக்கியக் காரணம். நமது நாட்டிலோ அறியாமை, சமூகப் பழக்க வழக்கங்கள், சம்பிரதாயம், பழமைப்பற்று ஆகிய பல்வேறு காரணங்களினால் பெரும்பாலான பெண்கள் வேலைக்குச் செல்வதில்லை. குடிசைத் தொழில்களில் பெண்களுக்கு நிறைய வாய்ப்புண்டு.

ஒரு சில மாநிலங்களில் பெண்களுக்கென்றே கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிக்கனப் பழக்கத்தை உறுப்பினர்களிடையே உண்டாக்கும் நோக்கத்தோடு இயங்கும் இச் சங்கங்கள் அவர்களுக்கு வேலையும் தந்து உதவுகின்றன. பின்னல், துணிகளுக்கு அச்சிடல், விளையாட்டுப் பொருள்கள் செய்தல், தையல் போன்ற குடிசைத் தொழில்களை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்துச் சம்பாதிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்றன. எனினும், நமது நாட்டில் பல்வேறு மாதர் சங்கங்கள் இருந்த போதிலும் கூட்டுறவுச் சங்கங்கள் அவ்வளவாக இல்லை. பஞ்சாப் மாநிலத்தில் தான் பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஏராளமாக உள்ளன. 1965-66-ல் அங்கு மொத்தம் 1,991 பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்ததாகவும் 62,908 பேர் அவற்றில் உறுப்பினர்களாக இருந்ததாகவும் அறிய வருகிறோம். அவற்றில் 626 சங்கங்கள் சிக்கனம், சேமிப்புச் சங்கங்களாகக் கிராமப்புறங்களில் இயங்கி வந்ததாகவும் தெரிகிறது. தமிழ் நாட்டில் பெண்களுக்கென்று தொழிலகச் சங்கங்களும் பால் சங்கங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆந்திராவிலும் தையல் வேலைபோன்ற வேலைக்கென்று பெண்கள் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கு வங்காளத்தில் அகதிகளுக்கு உதவுவதற்காகப் பெண்கள் சங்கங்கள் உள்ளன. கடந்த சில ஆண்டுகளாக நமது நாட்டில் இயங்கி வந்துள்ள மாதர் கூட்டுறவுச் சங்கங்களின் நிலைமையைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

விவரம்	1960-61	1964-65	1965-66
		(இலட்ச ரூபாயில்)	
சங்க எண்ணிக்கை	1,910	3,110	3,393
உறுப்பினர் எண்ணிக்கை	74,441	12,0735	155021
பங்கு மூலதனம்	15.79	31.88	36.03
வைப்புத் தொகை	8.92	6.55	5.08
நடப்பு மூலதனம்	62.30	84.64	92.92
உற்பத்தி செய்த பொருள்களின் மதிப்பு	20.29	61.54	75.21
இலாபகரமாக நடைபெறும் சங்கங்களின் எண்ணிக்கை	---	1,951	2164

8. சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ் நாட்டில் சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. இச் சங்கங்களின் வெற்றியைக் கண்ட ஏனைய மாநிலங்களும் இது போன்ற சங்கங்களைத் தொடங்கி வருகின்றன. இச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டிய சலவைச் சோடாமாவு, அரிசிமாவு, அடுப்புக்கரி போன்ற சாதனங்களை விநியோகித்து வருகின்றன. அதனோடு, சலவை செய்ய வேண்டிய துணிமணிகளை மொத்தமாகச் சேகரித்து உறுப்பினர்களுக்குப் பங்கிட்டுத் தருகின்றன; அல்லது நகரத்தில் ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒவ்வொரு பகுதியாகப் பிரித்துக் கொடுத்துச் சலவைத் தொழிலைச் செய்ய வைக்கின்றன. மேலும், இச் சங்கங்கள் சலவைத் துணிமணிகளுக்குக் கட்டணங்களையும் நிர்ணயித்துள்ளன. சென்னையில் இயங்கிவரும் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டிய பொதுச் சலவைச் சாலைகளையும், துணிமணிகளைப் பாதுகாப்பாக வைக்கத் தனி அறைகளையும் இன்னும் பிற வசதிகளையும் செய்து கொடுத்துள்ளன. சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமன்றி படைப் பயிற்சிக் கூடங்களிலும், மருத்துவக் கல்லூரி, கலைக்கல்லூரி, கல்லூரி விடுதிகள், மருத்துவ மனைகள் ஆகியவற்றிலும் நல்ல முறையில் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துப் பணிபுரிய முடியும் என்பதைத் தமிழ்நாடு எண்பித்துள்ளது. இவ் வகைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமிழ்நாடு தான் பிற மாநிலங்களுக்கு வழி காட்டியாக விளங்குகிறது.

31. ரிசர்வ் வங்கியும் கூட்டுறவும்

சுதந்திரத்திற்கு முன்னர்க் கூட்டுறவுத் துறையோடு அவ்வளவு தொடர்பின்றி இயங்கு வந்தது ரிசர்வ் வங்கி. எனவே, 30.6.1947-ன் கணக்குப்படி ரிசர்வ் வங்கி கூட்டுறவுத்துறைக்குக் கொடுத்திருந்த கடன் 1.5 இலட்சம் ரூபாய்தான். ஆனால், நாடு சுதந்திரமடைந்த பின்னர், 1951-ல் ரிசர்வ் வங்கிச் சட்டம் திருத்தப்பட்டது; அதை யடுத்து, 1953-ல் கூட்டுறவுத் துறைக்குத் தாராளமாகக் கடன் கொடுக்க வழி செய்யப்பட்டது. ஏனைய வணிக வங்கிகளைப் போல் கூட்டுறவு வங்கிகளும் மாற்று உண்டியல்களைப் (Bills of Exchange) பெறவும், மாற்றவும், கழிவுசெய்யவும் (Discount) உரிமை பெற்றன. குறுங்காலக் கடனின் காலவரம்பு 9 மாதத்திலிருந்து 15 மாதமாக உயர்த்தப்பட்டது. குடிசைத் தொழில்களுக்கும் கூட்டுறவு வங்கிகள் கடன்கொடுக்க வழி செய்யப்பட்டது. இந்நடவடிக்கைகளால் ரிசர்வ் வங்கி இவ்வங்கிகளுடன் அதிகத் தொடர்புகொண்டு தாராளமாகக் கடன் உதவி செய்ய வழி ஏற்பட்டது. 1961-க்குள் ரூ 88.5 கோடி அளவுக்குக் கடன் கொடுத்திருந்தது.

1961-ல் நியமிக்கப்பட்ட கூட்டுறவுக் கடன் ஆய்வுக் குழு கூட்டுறவு வங்கிகளுக்கும் ரிசர்வ் வங்கி தாராளமாகக் கடனுதவி செய்ய வேண்டுமென்று பரிந்துரை செய்தது. அதன்படி, கூட்டுறவு மைய வங்கிகள் தத்தம் தலைமை வங்கியின் வாயிலாகக் கடனுதவி பெற்று வருகின்றன. இதனால் 1964-65-க்குப் பின்னர் கூட்டுறவு வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி கொடுத்த கடன் அதிகரித்துக்கொண்டே வந்துள்ளது. சான்றாக, 1964-65-ல் ரூ. 163.85 கோடியாக இருந்த கடன் தொகை 1966-67-ல் ரூ. 179.37 கோடியாகவும் 1967-68-ல் ரூ. 207.01 கோடியாகவும் 1970-71-ல் ரூ. 288 72 கோடியாகவும் அதிகரித்துள்ளது.

1969-ல் நியமிக்கப்பட்ட அகில இந்தியக் கிராமக் கடன் மறு ஆய்வுக்குழு அதுவரை இருந்து வந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி பின்வரும் பரிந்துரைகளைச் செய்தது.

1. ரிசர்வ் வங்கியின் நிரந்தர ஆலோசனைக் குழுவிற்கு விவசாயக் கடன் கழகத்தின் அந்தஸ்தை அளிக்க வேண்டும்.

2. ஒவ்வோர் ஆண்டின் தொடக்கத்திலும் கூட்டுறவு வங்கிகள் ஒவ்வொன்றும் அந்த ஆண்டில் எவ்வளவு வைப்புத் தொகையைச் சேர்க்க வேண்டுமென்று ரிசர்வ் வங்கி நிர்ணயிக்க வேண்டும். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தொகையைச் சேர்க்கும் வங்கிக்கு ½ சதவீதம் வட்டிச் சலுகை அளிக்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட தொகையில் பாதி அளவு கூடச் சேர்க்காத வங்கிகளிடம் ½ சதவீதம் அதிக வட்டியை வசூலிக்க வேண்டும்.

3. கூட்டுறவு வங்கிகளுக்கு பாங்குவட்டி வீதத்தைவிட 2சத வீதம் குறைந்த வட்டிக்கே ரிசர்வ் வங்கி கடன் கொடுக்கிறது. இதை 1½ சதவீதமாகக் குறைக்கவேண்டும்.

4. சாகுபடி காலத்திற்கென்றும் விளைச்சலை விற்பதற்சென்றும் தனியாகக் கடனுதவியைச் செய்ய ரிசர்வ் வங்கி அனுமதி வழங்க வேண்டும்.

மத்திய காலக் கடன்: 1953-ல்தான் முதல் தடவையாக மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு அதிகபட்சம் ரூ. 5 கோடிவரை மத்திய காலக் கடனை ரிசர்வ் வங்கி கொடுக்கலாமென வழி செய்யப்பட்டது. 1955-ல் ரூ 5 கோடி என்று இருந்த உச்சவரம்பு ரத்து செய்யப்பட்டது. அதனோடு தேசிய விவசாயக் கடன் நிதியிலிருந்தும் ரிசர்வ் வங்கி மத்திய காலக்கடனைத் தரலாமென்று அனுமதிக்கப்பட்டது. ரிசர்வ் வங்கி தரும் மத்திய காலக் கடன் அரசாங்க உத்தரவாதத்துடன்தான் அளிக்கப்படுகிறது. எனினும், எந்த நேரத்திலும் இம்முறையை மாற்றி அமைக்கவும் கூடும்.

ரிசர்வ் வங்கி அளித்து வரும் மத்திய காலக் கடன் எவ்வளவு தூரம் அதிகரித்துள்ளது என்பதைக் கீழ்க்காணும் பட்டியலிருந்து அறிந்து கொள்ளலாம்.

(கோடி ரூபாயில்)

ஆண்டு	விவசாய நோக்கத்திற்காகக் கூட்டுறவு வங்கிகள் அளித்த இடைக்காலக் கடன்	அதில் சொந்த நிதியிலிருந்து வழங்கப்பட்ட தொகை	ரிசர்வ்பாங் கிடமிருந்து கடன்வாங்கி அளித்தது
1960–61	19·93	14·24	5 69
1961–62	22·91	15·42	7·49
1962–63	25·20	20·93	4·27
1963–64	29·14	21·69	7·91
1964–65	29 11	21·20	7·91
1965–66	36·52	29·60	6·92

இங்கு ஓர் உண்மையைக் குறிப்பிடல் நன்று. 1968-69-ல் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்க அனுமதித்த மத்தியக் காலக் கடன் ரூ. 19 கோடியாகும்; ஆனால், மாநிலக் கூட்டுறவு வங்கிகளோ ரூ. 9 கோடியைத்தான் இதில் பெற்றன. அதேபோல், 1970-71-ல் ரிசர்வ் வங்கி அனுமதித்த கடன் தொகை ரூ. 17.54 கோடியில் மாநில மத்திய வங்கிகள் பயன்படுத்தியதோ ரூ. 10·19 கோடிதான். மாநில வங்கிகள் ரிசர்வ் வங்கி அனுமதித்த அவ்வளவு கடன் தொகையையும் பயன்படுத்த முடியாததற்குக் கூறப்படும் காரணங்கள் வருமாறு: மாநிலக் கூட்டுறவு வங்கிகள் உரியக் காலத்தில் மனுக்களை அனுப்புவது கிடையாது. மனுக்களைக் காலதாமதமாக அனுப்புகின்றன. அதனோடு, மாநில அரசுகள் உத்தரவாதம் அளிப்பதிலும் காலதாமதம் ஏற்பட்டு விடுகிறது. ரிசர்வ் வங்கி வழங்கும் இந்த மத்திய காலக் கடனில் 4[illegible] சதவீதமாகிலும் பம்பு செட்டுகளை வாங்குவதற்கும், விவசாயக் கருவிகளை வாங்குவதற்கும், சிறு நீர்ப்பாசன வசதிகளைச் செய்வதற்கும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று ரிசர்வ் வங்கி நிபந்தனை விதித்துள்ளது.

கூட்டுறவுப் பால்பண்ணைச் சங்கங்களில் உறுப்பினர்களாயிருப்போர் பால்தரும் பசுக்களையும் எருமைகளையும் வாங்குவதற்கும் ரிசர்வ் பாங்கு கடன் கொடுக்கத் திட்டமிட்டுள்ளது. ஆனால், அப்பால் பண்ணைகள் நல்ல முறையில் இலாபகரமானதாக இருக்க வேண்டும். அதனோடு, அந்தப் பால் பண்ணை 2 அல்லது 3 கிராமங்களுக்கு மட்டும் அமைக்கப்பட்டதாயிருக்க வேண்டும். அதேபோல் கூட்டுறவுக் கோழிப் பண்ணைகளுக்கென்றும் ரிசர்வ் வங்கி கடன் வழங்க முடிவு செய்துள்ளது.

பாங்கு வட்டி வீதம்: பாங்கு வட்டி என்பது ரிசர்வ் வங்கியின் பட்டியலிலுள்ள வங்கிகளுக்குக் கொடுக்கும் கடனுக்கு அல்லது அவற்றின் ஆவணங்களை மறுகழிவு செய்வதற்கு (Rediscounting) வசூலிக்கும் வட்டி வீதத்தைக் குறிப்பிடுகிறது. நாட்டில் புழங்கும் பணத்தை ஒழுங்குபடுத்தவும், வங்கிகள் தரும் கடனைக் கட்டுப்படுத்தவும், பிறநாட்டு வணிகத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வை ஒழுங்குபடுத்தவும் இப்பாங்கு வட்டிவீதம் மாற்றப்படுகிறது. நாடு சுதந்திரம் அடைந்தபின்னர் இப்பாங்கு வட்டி பலமுறை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. 1951 நவம்பரில் 3½ சதவீதத்திற்கும், 1957 மே மாதம் 4 சதவீதத்திற்கும், 1963 ஜனவரியில் 4½ சதவீதத்திற்கும், 1964 செப்டம்பரில் 5 சதவீதத்திற்கும், 1965 பிப்ரவரியில் 6 சதவீதத்திற்கும் உயர்த்தப்பட்டது. பின்னர், 1968 மார்ச்சில் அது 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டு, மறுபடியும் அது 6½ சதவீதத்திற்கு

உயர்த்தப்பட்டு, 1973 ஜீன் மாதத்திலிருந்து 7 சதவீதமாக ஆக்கப் பட்டுள்ளது. எனினும், கூட்டுறவு வங்கிகளுக்குக் குறுங்காலக் கடன் கொடுக்கும்போது 2 சதவீதம் குறைத்து வழங்கி வருகிறது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் பங்கு வாங்குவதற்காக வழங்கும் கடனுக்கு 1 சதவீதம்தான் தள்ளுபடி செய்யப்படுகிறது. மத்திய காலக்கடன்களுக்கு $1\frac{1}{2}$ சதவீதம் குறைத்து விடுகிறது.

கடனைத் திருப்பச் செலுத்துவதற்கான வசதிகள்:

கூட்டுறவு வங்கிகள் ரிசர்வ் வங்கிக்குப் பணம் செலுத்தும்போது அதற்கான வழிமுறைகளை ரிசர்வ் வங்கி எளிமையாக்கியிருப்பதுடன் மலிவாகவும் செய்துள்ளது. மாநிலக் கூட்டுறவு வங்கிகள் பாங்கு டிராஃப்ட், துரிதத்தபால் தந்திமூலமாக இலவசமாகப் பணம் செலுத்தலாம். எல்லா மாநிலக் கூட்டுறவு மத்திய வங்கிகளும் ரிசர்வ் வங்கியிடம் கணக்கு வைத்துள்ளன. எனவே, ஒரு மாநில வங்கி மற்றொரு மாநில வங்கிக்கு ரூ. 20,000-க்கு மேல் செலுத்த வேண்டியிருந்தால் ரிசர்வ் வங்கி வைத்துள்ள கணக்கில் பற்று, வரவு மூலமாகச் செலுத்த முடிகிறது. இதற்சென்று ரிசர்வ் வங்கி எவ்விதக் கட்டணமும் வசூலிப்பதில்லை. அதேபோல் ரிசர்வ் வங்கியின் பிரதிநிதியாகப் பணியாற்றும் எந்த வங்கியிடமும் கணக்கு வைத்துள்ள மாநிலக் கூட்டுறவு வங்கி அவ்வங்கியின் வாயிலாகப் பிற இடங்களிலுள்ள கூட்டுறவுக் கிளை வங்கிகளுக்கு இலவசமாகப் பணம் செலுத்த முடியும்.

மேலும், ஒரு கூட்டுறவு வங்கியோ சங்கமோ யாருக்காவது அல்லது எந்த நிறுவனத்திற்காவது பணம் செலுத்த வேண்டியிருந்தால் ரிசர்வ் வங்கியிடமிருந்து அல்லது அவ்வங்கியின் பிரதிநிதியாகப் பணியாற்றும் வங்கியிட மிருந்து ரிசர்வ் வங்கி 'டிராஃப்டை' வாங்கிச் செலுத்தலாம். அவ்வாறு செலுத்துவதற்குக் குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது. மேலும், மாநில அரசுகளுக்குத் தேசியக் கூட்டுறவு வளார்ச்சிக் கார்ப்பரேஷன் அளிக்கும் தொகையையும் ரிசர்வ் பாங்கு இலவசமாகப் பெற்றுத்தருகிறது. அதனோடு, மாநில அரசுகள் பயன்படுத்த முடியாத தொகையை கார்ப்பரேஷனுக்குத் திரும்பச் செலுத்துவதற்கும் ரிசர்வ் வங்கி இலவச உதவி செய்கிறது.

நிலைபேருக்க நிதி (Stabilisation Fund)

நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருப்பது போல் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து அல்லது சங்கங்களிடமிருந்து பெற்ற குறுங்காலக் கடனை வசூலிச்சல் மோசமாகிவிட்ட காரணத்தினால் விவசாயிகள்

திரும்பித் தர முடியவில்லையென்றால் அக் கடனை மத்திய காலக் கடனாக மாற்றுவதற்கென்று தேசிய விவசாயக் கடன் நிலைபேறுக்க நிதியொன்றை ரிசர்வ் வங்கி உருவாக்கியுள்ளது. 1972 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் இந் நிதிக்கென்று ரூ. 37 கோடி கொடுத்துள்ளது. அதே போல் மாநிலக் கூட்டுறவு வங்கிகளும் மாவட்ட மைய வங்கிகளும் தம் இலாபத்திலிருந்து 15 சதவீதத் தொகையைக் கொண்டு விவசாயக் கடன் நிலைபேறுக்க நிதியை உருவாக்க வேண்டுமென ரிசர்வ் வங்கியின் நிரந்தரக் கடன் ஆலோசனைக் குழு சிபாரிசு செய்தது. இச் சிபாரிசை மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. மாநில அரசுகள் இவ் வங்கிகளிடம் கொண்டுள்ள பங்கிற்கென்று இலாப ஈவைப் பெறும்போது, 3 சதவீதத்திற்கும் அதிகமாகப் பெறும் இலாபத் தொகையை அந்தந்த வங்கிகளின் நிலைபேறுக்க நிதிக்கே கொடுத்து விடுகின்றன. இவ்வாறாக மாநிலக் கூட்டுறவு வங்கிகள் உருவாக்கியுள்ள நிலைபேறுக்கு நிதிகளில் 1971 ஜூன் மாதம் முடிய சுமார் ரூ. 25 கோடி ரூபாய் சேர்ந்துள்ளது. இதில் அரசின் பங்கு ரூ. 21 கோடியாகும்.

விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறுங்காலக் கடனை மத்திய காலக் கடனாக மாற்றுவதற்கு இந் நிதிகள் பயன்படுத்தப் படுகின்றன. எனினும், எல்லாக் கடனையும் அவ்வாறு மாற்றுவதற்கு இந் நிதி பயன்படுத்தப் படுவதில்லை. குறிப்பாக, இந் நிதியைக் கொண்டு மாற்ற முடியாத கடன்கள் வருமாறு :

1. விவசாயத்திற்காகக் கொடுக்கப்பட்ட மத்திய காலக் கடன்.

2. விளைபொருள்களை விற்பனை செய்வதற்காக விற்பனைச் சங்கங்களுக்கும் பக்குவப் படுத்தும் சங்கங்களுக்கும் கொடுக்கப்பட்ட கடன் தொகை.

3. இரண்டாவது போக விளைச்சலுக்காகக் கொடுக்கப்பட்ட குறுங்காலக் கடன்.

4. விளைச்சல் பாதிக்கப்படாத பகுதிகளில் கொடுக்கப்பட்ட விவசாயக் கடன்.

5. தக்காவி நிதியிலிருந்து அரசாங்கம் நேரடியாகவோ கூட்டுறவு மைய வங்கியின் வழியாகவோ கொடுத்த குறுங்காலக் கடன்.

விளைச்சல் எதிர்பார்த்த அளவைக் காட்டிலும் பாதிக்குமேல் குறைந்து விட்டால்தான் குறுங்காலக் கடனை மத்திய காலக் கடனாக மாற்ற முடியும். பாதிக்கு மேல் விளைச்சல் குறைந்து விட்டது என்பதற்கு மாவட்ட நிதி அதிகாரி சான்றிதழ் கொடுக்க வேண்டும்.

கூட்டுறவு மைய வங்கி குறுங்காலக்கடனை மத்திய காலக் கடனாக மாற்றவேண்டிய அவசியம் ஏற்படும்போது, மாற்ற வேண்டிய மொத்தக் கடன் தொகையில் 15 சதவீத அளவிற்கு மாற்றிக் கொள்ளலாம். எஞ்சிய 85 சதவீதத் தொகைக்கு மாநிலக் கூட்டுறவு வங்கியிடமிருந்து அனுமதியையும் அதற்கான வசதியையும் எதிர்பார்க்கிறது. மாநில வங்கியோ ரிசர்வ் வங்கியின் உறுதிப்பாட்டு நிதியிலிருந்து வேண்டிய தொகையைப் பெற்று மைய வங்கிக்கு அளிக்கிறது. ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறும் தொகைக்கு மாநில அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கவேண்டும். 1965-66-ல் தான் முதல் தடவையாகக் குறுங்காலக்கடன் மத்திய காலக் கடனாக மாற்றப்படலாயிற்று. அவ்வாண்டில் மட்டும் 3.5 கோடி ரூபாய் அளவுக்கு மாற்றப்பட்டது. 1966-67-ல் மாற்றப் பட்ட கடன்தொகை 11.5 கோடி ரூபாயாகும். 1967-68-ல் நல்ல விளைச்சல் கிடைத்தபடியால் ரூ. 2 கோடி அளவுக்கே இது மாற்றப் பட்டது. 1968-69-ல் ரிசர்வ் வங்கி 5 மாநிலக் கூட்டுறவு வங்கி களுக்கு இந்நிதியிலிருந்து 6.32 கோடி ரூபாய் கடன் வழங்க உத்தரவிட்டது; ஆனால், அந்த வங்கிகள் பெற்ற தொகையோ ரூ. 2.48 கோடி மட்டுமே. 1965 முதல் 1971 முடிய சுமார் ரூ 40 கோடி குறுகிய காலக் கடன் இடைக் காலக் கடனாக மாற்றப் பட்டது.

நலிவுற்ற வங்கிகளை வலுப்படுத்தல்

ஒரு சில மாநிலங்களில் இயங்கிவரும் கூட்டுறவு மத்திய வங்கி களில் பல நட்டமடையக்கூடிய அளவுக்கு நலிவுற்று இயங்கி வருகின்றன. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவ்வங்கிகள் இயங்கி வரும் பகுதிகள் பிற்போக்கானவை களாயிருப்பதும், கொடுத்த கடன் தவணைக்குள் திருப்பித்தரப் படாமலிருப்பதும், திறமையற்ற நிர்வாகமும், கடன் கொடுக்கும்போது முறை யான கொள்கையைக் கடைப்பிடிக்காமலிருப்பதும் முக்கியக் காரணங்களாகக் கூறப்படுகின்றன. இவ்வங்கிகளையெல்லாம் வலுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் படி மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கங்களைக் கேட்டுள்ளது. அதற்காகப் பின்வரும் நடவடிக்கைகளையும் சிபாரிசு செய் துள்ளது.

1. வரவேண்டிய பாக்கிக் கடன் தொகையும் திரும்பி வருமா என்று சந்தேகப் படக்கூடிய கடன் தொகையும் எவ்வளவு என்பதைக் கணக்கிடுவதற்கென்று தனி அலுவலர்களை நியமிக்க வேண்டும்.

2. நிர்வாகக் குழுவினர் இவ்வங்கிகளைப் பலப்படுத்துவதற்கென்று தனிக் குழுக்களையும் உடனடியாக நியமிக்க வேண்டும்; இக் குழுக்களில் அரசாங்க அதிகாரிகளும் இடம்பெற வேண்டும்.

3. இவ் வங்கிகளுக்கென்று திறமையும் பயிற்சியும் பெற்ற நிர்வாகிகளையும் மேற்பார்வையாளர்களையும் அமர்த்த வேண்டும்.

நலிவுற்றுள்ள வங்கிகளுக்கு உதவி செய்வதற்கென்று நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 4.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 3.37 சடனாகவும் ரூ. 1.13 மானியமாகவும் வழக்கப்படும். மேலும், உறுப்பினர்களின் பங்கு மூலதனத்தை விட அதிக அளவுப் பங்கு மூலதனத்தை அரசாங்கம் வாங்கி அவ் வாங்கிகளின் நிதி நிலையை உயர்த்தும். அதனோடு, இவ் வங்கிகள் தம் வராக் கடன் தொகையைச் சமாளிப்பதற்கென்று நீண்டகாலக் கடனும் அவற்றிற்கு வழங்கப்படும். எந்தெந்த வங்கிகளுக்கு வராக் கடன், மொத்த நட்டம், தவணை கடந்த கடன் ஆகியவை அவற்றின் சொந்த நிதியில் பாதிக்குமேல் உள்ளதோ அந்த வங்கிகளுக்கு மட்டுமே இவ்வுதவிகள் செய்யப்படும்.

வங்கிகளை ஒழுங்குபடுத்தும் சட்டம்

1965-ல் அமுலாக்கப்பட்டு, 1966-ல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள வங்கிகள் (கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொருந்தக் கூடிய) சட்டம் கூட்டுறவு வங்கித் துறைக்கே ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இப் புதிய சட்டப்படி 1949-ல் அமுலாக்கப்பட்ட வங்கி ஒழுங்காற்றுச் சட்டத்தின் சரத்துகள் பல கூட்டுறவு வங்கிகளுக்கும் பொருந்துவதாயின. குறிப்பாக. வங்கிகளுக்கான அனுமதி, ரொக்கமாக இருப்பில் இருக்க வேண்டிய தொகை, நீர்மைச் சொத்துக்கள் (liquid assets), கடன் கொடுக்கும் போது கடைப் பிடிக்க வேண்டிய விதி முறைகள் ஆகியவைபற்றிய சரத்துக்கள் அனைத்தையும் கூட்டுறவு வங்கிகளும் கடைப்பிடிக்க வேண்டும். மேலும், இச் சட்டப்படி கூட்டுறவு வங்கிகளையும் அவ்வப்போது சோதனையிட்டுக் கண்காணிக்கும் அதிகாரம் ரிசர்வ்

வங்கிற்கு வழங்கப்பட்டுள்ளது. இச் சட்டத்தின் முக்கியமான சரத்துகள் வருமாறு:

1. மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவையும் இச் சட்டப்படி இயங்க வேண்டும். செலுத்தப்பட்ட பங்கு மூலதனமும் காப்பு நிதியும் சேர்ந்து ரூ. 1 இலட்சத்திற்கும் குறைவாயுள்ள நிலவள வங்கிகள், தொடக்க விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள், ஏனைய சங்கங்கள் மட்டும் இச் சட்டத்தினால் கட்டுப் படுத்தப்படாது. 1 இலட்சம் ரூபாய்க்குமேல் சொந்த நிதி கொண்டு ஊதியம் பெறுவோரால் நடத்தப்பட்டு வரும் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் இச் சட்டத்திற்குட்பட்டு இயங்க வேண்டும், எனினும் இச் சங்கங்கள் உறுப்பினரல்லா தாரிடமிருந்து வைப்புத் தொகையை பெறுவதில்லையென்று உறுதிபூண்டு, ஏற்கெனவே அவ்வாறு பெற்றுள்ள வைப்புத் தொகையை அவரவர்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டால் அவை இச் சட்டத்திலிருந்து விலககப்படுமென ரிசர்வ் வங்கி கூறியுள்ளது. 1971 ஜூன் மாதத்தில் சுமார் 1,315 கூட்டுறவு வங்கிகள் இச் சட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. இவற்றில் 20 மாநிலக் கூட்டுறவு வங்கிகள், 365 கூட்டுறவு மத்திய வங்கிகள், 920 தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் அடங்கும்.

2. இச் சட்டத்திற்குட்பட்ட எல்லாக் கூட்டுறவு வங்கிகளும் ரிசர்வ் வங்கியிடமிருந்து அனுமதி பெறவேண்டும். அனுமதி பெறுவதற்கு மனுச் செய்துள்ள வங்கிகள் அனுமதி கிடைக்கும் வரை தொடர்ந்து வழக்கம்போல் நடைபெறலாம.

3. மாநிலக் கூட்டுறவு வங்கிகளைத் தவிர ஏனைய கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் தம்மிடம் நடப்புக் கணக்கிலும் காலவரம்புக் கணக்கிலும் போடப்பட்டுள்ள வைப்புத் தொகையில் 3 சதவீதத் தொகையை ஒதுக்கி ரொக்கமாக வைத்திருக்க வேண்டும். இத் தொகையைத் தமக்கு மேலுள்ள வங்கிகளிடமும் கொடுத்து வைக்கலாம்.

4. ஒவ்வொரு கூட்டுறவு வங்கியும் தன்னிடம் நடப்புக் கணக்கிலும் காலவரம்புக் கணக்கிலுமுள்ள வைப்புத் தொகையில் 3 சதவீத ரொக்க இருப்பையும் சேர்த்து மொத்தம் 25 சதவீதத்தை நீர்மைச் சொத்தாகக் கொண்டிருக்க வேண்டும். நீர்மைச் சொத்து

என்பது ரொக்கமாகவும், தங்கமாகவும், விலங்கமற்ற அனுமதித்துள்ள பிணையங்களாகவும் இருக்கலாம்.

(5) கூட்டுறவு மத்திய வங்கிகளைத் தவிர, ஏனைய கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் தம் கிளை வங்கிகளைத் தொடங்குவதற்கும் ரிசர்வ் வங்கியின் அனுமதி பெற வேண்டும். மாநிலக் கூட்டுறவு உச்சி வங்கிகள் அந்தந்த மாநிலத் தலைநகரங்களில் மட்டுமே தம் கிளைகளைத் தொடங்கலாம். மத்திய அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழுள்ள பகுதிகளுக்கு இந்தக் கட்டுப்பாடு கிடையாது. மாவட்ட மத்திய வங்கிகளும் நகர்ப்புற வங்கிகளும் தத்தம் பகுதிகளில் எந்த இடத்தில் வேண்டுமானாலும் கிளைகளைத் தொடங்க அனுமதி வழங்கப்படும்.

(6) எந்தக் கூட்டுறவு வங்கியும் வங்கித் தொழிலோடு வாணிகத் தொழிலையும் சேர்த்துச் செய்யக்கூடாது. வங்கி சம்பந்தமற்ற சொத்துகளை வைத்திருக்கக்கூடாது. தாம் செயலாற்றும் பகுதிக்கப்பாலுள்ள கூட்டுறவு நிறுவனங்களில் பங்கு பெறுவதற்கும் ரிசர்வ் வங்கியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

(7) கூட்டுறவு வங்கி எதுவும் தன் நிர்வாகிகளுக்குப் பாதுகாப்பற்ற முறையில் கடன் வழங்கக் கூடாது என்பது வழக்கம். ஆனால், தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மட்டும் அவ்வகைக் கடனைத் தம் நிர்வாகிகளுக்கு மட்டுமன்றி, எவருக்குமே வழங்கலாம். அவ்வாறு வழங்கச் செய்ய ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வங்கியை மூடிவிடுவதற்கும் ஒன்றை மற்றொன்றோடு இணைப்பதற்கும், திருத்தி அமைப்பதற்கும் ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், ரிசர்வ் வங்கி கூட்டுறவு வங்கியின் மீது இவ் வதிகாரத்தை இதுவரை பயன்படுத்தவில்லை.

முதலீட்டுக் கொள்கை

சில கூட்டுறவு மத்திய வங்கிகளும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளும் தத்தம் உறுப்பினர்களாக இருக்கும் உற்பத்திச் சங்கங்கள், விற்பனை, மற்றும் போக்குவரத்து முதலிய சங்கங்களின் பங்கு மூலதனத்தைப் பெருமளவில் வாங்கி முதலீடு செய்துவருகின்றன. இவ் வகையான முதலீட்டில்தான் தம் நிதியைப் பெருமளவில் செலவிடுகின்றன. எனவே, இவ் வகையான முதலீட்டினைக் கட்டுப்

படுத்தும் வகையில் ரிசர்வ் பாங்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. அவற்றின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

1. எந்தக் கூட்டுறவு வங்கியும் தன் சொந்த நிதியில் 2 சதவீத அளவுக்குமேல் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களின் பங்குகளை வாங்கக் கூடாது.

2. ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் பங்கை வாங்கும்போது, அச் சங்கத்தின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 5 சதவீத அளவுக்குத் தான் எல்லாக் கூட்டுறவு மைய வங்கிகளும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளும் பங்கை வாங்கலாம்.

3. 1964 ஜூலை முதல் தேதிக்குப் பின்னர், மேற்கூறிய வரம் பிற்குமேல் எந்தக் கூட்டுறவு வங்கியாவது ஏனைய கூட்டுறவுச் சங்கத்தின் பங்கை வாங்கியிருந்தால், எந்த அளவுக்குப் பங்கை வாங்கியிருக்கிறதோ அந்த அளவுத்தொகையை அதன் சொந்த நிதியிலிருந்து கழித்துவிட்டு, எஞ்சியிருக்கும் நிதியின் அடிப்படை யில்தான் ரிசர்வ் வங்கி கடன்கொடுக்கும் வரம்பை நிர்ணயிக்கும்.

32. கூட்டுறவு இயக்கத்திற்கு உதவி புரியும் நிறுவனங்கள்

நம் நாட்டில் இயங்கி வரும் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியும் வலுவும் பெறப் பல்வேறு நிறுவனங்கள் உதவி செய்து வருகின்றன. அவற்றில் முக்கியமானவற்றைப் பற்றி இவ்வதிகாரத்தில் சற்று விரிவாகக் காண்போம்.

1. அரசு வங்கி

(State Bank)

கிராமக் கடன் ஆய்வுக் குழுவினரின் ஆலோசனைப்படி இந்தியாவில் இயங்கி வந்த இம்பீரியல் வங்கி நாட்டுடைமையாக்கப்பட்டு, 1935-ல் உருவானது தான் அரசு வங்கி. நாடெங்கிலும் கிளை வங்கிகளை ஏற்படுத்தி, கூட்டுறவு வங்கிகளுக்கும் ஏனைய வணிக வங்கிகளுக்கும் வேண்டிய வசதிகளை இந்த அரசு வங்கி செய்து வருகிறது. கூட்டுறவு இயக்கத்திற்கு ரிசர்வ் வங்கிதான் அதிக உதவி செய்து வருகிறது; எனினும், அவ்வப்போது அரசு வங்கியும் கூடுமானவரை உதவி செய்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. கூட்டுறவு வங்கிகளின் அனுமதியின் பேரில் அரசு வங்கி கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கடனுதவி செய்து வருகிறது.

கூட்டுறவு வங்கிகள் தம்மிடமுள்ள உபரிப்பணத்தை ரிசர்வ் வங்கிக்கோ வேறொரு இடத்திலுள்ள அரசு வங்கிக்கோ தம் தலைமை வங்கியின் கணக்கில் வரவு வைக்குமாறு அனுப்ப அரசு வங்கி உதவுகிறது. ரிசர்வ் வங்கியின் திட்டப்படியும், சொந்தத் திட்டத்தின்படியும் இவ் வுதவியை அரசு வங்கி செய்கிறது. ரிசர்வ் வங்கியின் திட்டப்படி மாநிலக் கூட்டுறவு உச்சி வங்கிகளும் மாவட்டக் கூட்டுறவு மைய வங்கிகளும் தம்மிடமுள்ள பணத்தை வேறு இடத்திலுள்ள ரிசர்வ் வங்கிற்கு அல்லது அரசு வங்கிக்கு

தம் தலைமை வங்கியின் கணக்கில் வரவு வைக்கும்படி அனுப்பலாம். அவ்வாறு அனுப்பும்போது வாரத்திற்கு நான்கு நாள்கள் வரை தரகு கட்டணம் செலுத்த வேண்டியதில்லை; அதனோடு, அவ்வாறு அனுப்பப்படும் தொகை குறைந்த பட்சம் ரூ. 10,000 ஆக இருக்க வேண்டும். மேலும், ரூ. 10,000, 15,000, 20,000 என்றுதான் அனுப்பலாமே தவிர ரூ. 12,000 13,000, 18,000 என்று அனுப்ப இயலாது. இரண்டாவதாக, அரசு வங்கியின் சொந்தத் திட்டப்படி, எந்த இடத்திலுள்ள கூட்டுறவு வங்கியும் தனது தலைமை வங்கிக்கோ மாவட்ட வங்கிக்கோ தம்மிடமுள்ள பணத்தை அனுப்பலாம்; அதேபோல் தலைமை வங்கியும், மாவட்ட மத்திய வங்கிகளும் தத்தம் உறுப்பினர் வங்கிகளுக்குப் பணம் அனுப்பலாம். வாரத்திற்கொருமுறை ஸ்டேட் பாங்கின் வழியாக அனுப்பும்போது அதற்கெனக் கட்டணம் ஏதும் வசூலிப் பதில்லை. ஆனால், அவ்வாறு அனுப்பப்படும் தொகை குறைந்த பட்சம் ரூ. 1,000 ஆக இருக்க வேண்டும். ஆயிரத்திற்குமேல் எத்தனை நூறு ரூபாய் வேண்டுமானாலும் அனுப்பலாம்; நூறுக்குக் குறைவாய் அனுப்ப இயலாது.

அடுத்து, மாநிலக் கூட்டுறவுத் தலைமை வங்கிகளுக்கும், மாவட்ட மத்திய வங்கிகளுக்கும் அரசாங்கப் பிணையங்கள்மீது அரசு வங்கி கடனுதவி செய்கிறது. மேலும், கூட்டுறவு மத்திய வங்கிகள் தம்மிடம் அடைமானம் வைக்கப்பட்டுள்ள பொருள்களை மறுபடியும் அரசு வங்கியில் அடைமானம் வைத்துக் கடன்பெற வசதி செய்யப்பட்டுள்ளது. அதனோடு, விவசாயிகளுக்கு உரங் களையோ சாதனங்களையோ விநியோகிப்பதற்கும், விவசாய விளை பொருள்களை விற்பதற்கும், பக்குவப்படுத்துவதற்கும் கூட்டுறவு வங்கிகளுக்குக் கடன் தேவைப்படும்போது மாநில அரசாங்க உத்தரவாதத்தின் பேரில் ஸ்டேட் பாங்கு கடனுதவி செய்கிறது. இவ்வாறாக, கூட்டுறவு வங்கிகளிடமிருந்து அரசு வங்கிக்கு வர வேண்டிய தொகை 1969-ல் 39 கோடி ரூபாயாகும்.

கூட்டுறவு நிலவள வங்கிகளுக்கும் மாநில அரசாங்கத்தின் உத்தரவாதத்தின் பேரில் அவ்வப்போது கடனுதவி செய்கிறது. 1969-ன் கணக்குப்படி இவ்வாறு கொடுத்த கடன்மட்டும் 12 கோடி ரூபாயெனத் தெரிகிறது. அதனோடு, நிலவள வங்கிகளின் கடன் பத்திரங்களிலும் முதலீடு செய்கிறது. அவ்வாறு முதலீடு செய் துள்ள தொகை 1969வரை 24.83 கோடி ரூபாயாகும்.

கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கங்களுக்கும் விவசாயப் பொருள்களைப் பக்குவப்படுத்தும் சங்கங்களுக்கும் நிதி உதவி செய்வதுதான் ஸ்டேட் பாங்கின் பெரிய உதவியாகும். இச்

சங்கங்கள் தம்மிடமுள்ள விவசாயப் பொருள்களை அடைமானம் வைத்து 70 முதல் 75 சதவீதம் வரை கடன் பெற்று வருகின்றன. அடைமானம் இல்லாமலும் இச் சங்கங்கள் அரசு வங்கியிடமிருந்து கடன் பெறுகின்றன; இதற்குத் தலைமைக் கூட்டுறவு விற்பனைச் சங்கமோ, மாவட்ட மத்திய வங்கியோ மாநிலத் தலைமை வங்கியோ உத்தரவாதம் கொடுக்க வேண்டும். 1969ஆம் ஆண்டு ஸ்டேட் பாங்கிற்கு இவ் வகையில் வரவேண்டிய தொகை மட்டும் 52.4 கோடி ரூபாயாகும்.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும் அரசு வங்கி கடன் தருகிறது. சர்க்கரை ஆலைகள் தம்மிடமுள்ள சர்க்கரையை அடைமானம் வைத்துக் கடன் பெறுகின்றன; அதனோடு, அடைமானம் இல்லாமலேயே ஆலையை நடத்துவதற்கு வேண்டிய கடனையும் மாநில அரசாங்க உத்தரவாதத்தின் பேரில் வாங்கு கின்றன. மேலும், தொழில் நிதிக் கழகம் இவ்வாலைகளுக்குக் கடன் தரக் காலதாமதம் ஏற்படும்போதும் மாநில அரசாங்கத்தின் உத்தரவாதத்தின் பேரில் அவ்வப்போது அரசு வங்கி கடன் தருகிறது. கரும்புச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு முன்பணம் தருவதற்கென்றும் சர்க்கரை ஆலைகளுக்கு அரசு வங்கி கடன் அளிக் கிறது. 1969 வரை இவ் வகையில் ஸ்டேட் பாங்கிற்கு 10·4 கோடி ரூபாய்வரை வரவேண்டியிருந்தது.

கூட்டுறவுத் தொழில்களுக்கும் ஸ்டேட் பாங்கு கடனுதவி செய் கிறது. இத் தொழில்கள் தம்மிடமுள்ள மூலப்பொருள்கள் அல்லது முடிவுப் பொருள்களின்மீது கடன் பெறுகின்றன. அதனோடு, அரசாங்க உத்தரவாதத்தின் பேரிலும், மாநிலத் தலைமை வங்கி அல்லது கூட்டுறவு மைய வங்கியின் உத்தரவாதத் தின் பேரிலும் எவ்வித ஆவணமுமின்றிக் கடன் வழங்குகிறது. மேலும், இயந்திரங்களையும் மற்றும் பல உற்பத்தித் தளவாடங் களையும் வாங்குவதற்கும் ஸ்டேட் பாங்கு இவற்றிற்கு மத்தியக் காலக் கடனுதவி செய்கிறது. இவ்வகைக் கணக்கில் 1969 வரை அரசு வங்கிக்கு வரவேண்டிய தொகை 72 இலட்சம் ரூபாயாகும்.

நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும் அவற்றின் பொருள்களின் அடைமானத்தின்மீது அரசு வங்கி கடன் தருகிறது. அடைமானமேதுமின்றி, மாநில அரசாங்கம், கூட்டுறவுத் தலைமை வங்கி அல்லது மையவங்கியின் உத்தரவாதத்தின் பேரிலும் கடன் வழங்குகிறது. இவ்வகையில் 1969 வரை வரவேண்டிய கடன் 3 கோடி ரூபாயாகும்.

2. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம்

(National Co-operative Development Corporation)

கூட்டுறவு வளர்ச்சிக்கான திட்டங்களையெல்லாம் அமுல் படுத்துவதற்கென்று 1954-ல் விவசாய உற்பத்தி (வளர்ச்சி, கிடங்கு நிறுவச்) சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்தின் படி 1956-ல் தேசியக் கூட்டுறவு வளர்ச்சி, கிடங்குக் கழகம் அமைக்கப்பட்டது. இக் கழகத்தின் நோக்கங்களும் பணிகளும் வருமாறு :

(1) விவசாயப் பொருள் விற்பனை, விவசாயக் கிடங்குகள் ஆகியவற்றிற்காகவும் விவசாயப் பொருள்களைப் பக்குவப்படுத்து வதற்காகவும் அமைக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூல தனத்தை மாநில அரசாங்கங்கள் வாங்குவதற்கென்றும், அச் சங் கங்களுக்கு வேண்டிய நிதி உதவியைச் செய்வதற்கென்றும் மாநில அரசுகளுக்கு இக் கழகம் கடனுதவியும் மானிய உதவியும் செய்து வருகிறது.

(2) மத்திய அரசாங்கத்தின் சார்பாக விவசாயப் பண்டங் களை வாங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில அரசாங்கம் நிதி அளிப்பதற்கென்று அம் மாநில அரசாங்கத்திற்கு வேண்டிய நிதியை அளித்துவருகிறது; அதேபோல் கூட்டுறவுக் கிடங்குக் கழகங் களுக்கும் நிதி கொடுக்கிறது.

(3) விவசாய முன்னேற்றத்திற்குத் தேவைப்படும் விதை வித்துகள், உரங்கள், கருவிகள் ஆகியவற்றையும், இன்னும் பிற பொருள்களையும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக அதற் கான திட்டத்தைப் போட்டு, அதை நிறைவேற்றி வருகிறது.

(4) கூட்டுறவு மையக் கிடங்குக் கழகத்தின் பங்கு மூலதனத் தைப் பெறுவதோடு, அக் கழத்திற்கும் மாநிலக் கூட்டுறவுக் கிடங்குக் கழகங்களுக்கும் கடனுதவியும் மானிய உதவியும் அளித்து வருகிறது.

1962-ல் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகச் சட்டம் நிறை வேற்றப்பட்டது. இச் சட்டப்படி, கூட்டுறவுக் கிடங்கு சம்பந்தப் பட்ட பணிகளெல்லாம் பழைய கழகத்திலிருந்து நீக்கப்பட்டன. அதனோடு, கூட்டுறவு வளர்ச்சிக்கென்று 'தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம்' என்ற நிறுவனம் 1963 மார்ச் மாதம் அமைக்கப் பட்டது. இக் கழகத்தில் மொத்தம் 20 உறுப்பினர்கள் உள்ளனர்

மத்திய அரசாங்கம், ரிசர்வ் பாங்கு, ஸ்டேட் பாங்கு ஆகியவற்றின் பிரதிநிதிகளும், தனிப்பட்ட கூட்டுறவாளர்களும் இதில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இக் கழகத்தின் தலைவர் பொறுப்பை மத்திய அரசாங்கக் கூட்டுறவு அமைச்சரே ஏற்றுக்கொண்டிருக்கிறார். கூட்டுறவு வளர்ச்சிக்கான பல்வேறு பணிகளைத் திறமையுடன் செய்வதற்கென்று 7 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கூட்டுறவு விவசாயக் கடன், கூட்டுறவு விற்பனை, கூட்டுறவுப் பண்டகம், கூட்டுறவு விநியோகம் என்று பல்வேறு காரியங்களைக் கவனித்துக் கொள்வதற்காகத் தனித் தனிப் பணிக் குழுக்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

விவசாயக் கூட்டுறவுக் கடன் : விவசாயச் சங்கங்களின் வழியாக விளைச்சலைப் பெருக்குவதற்கென்று திட்டமிட்டு அத் திட்டத்தைச் செயல் படுத்தும் பணியை இக் கழகம் மேற்கொண்டுள்ளது. எனவே, ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள கூட்டுறவுக் கடன் நிறுவனங்களும் விவசாயிகளுக்கு நிதி உதவி செய்து வருகின்றன. இக் கடன் சங்கங்களின் நிர்வாகச் செலவிற்கென்று அந்தந்த மாநில அரசாங்கம் உதவித் தொகை வழங்கி வருகிறது. இவ்வுதவித் தொகையை இந்தக் கழகமே மாநில அரசுகளுக்கு வழங்கி வருகிறது. இவ்வாறாக, நிர்வாக மானியத் தொகையாக 1968 மார்ச் வரை இக் கழகம் வழங்கியுள்ள தொகை 1.5 கோடி ரூபாயாகும்.

இது தவிர, சிறு விவசாயிகளுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், கூட்டுறவு மைய வங்கிகளும் கடன் தருகின்றன; இக் கடனைத் தாராளமாக அவை வழங்க வேண்டுமென்பதற்காக அவற்றின் வராக் கடன் நிதிக்கு இக் கழகம் உதவித் தொகை அளித்து வருகிறது. இது தவிர ஒவ்வோர் ஆண்டும் இக் கடன் சங்கங்கள் முந்திய ஆண்டைக் காட்டிலும் எவ்வளவு அதிகமாகக் கடன் கொடுக்கின்றனவோ அதில் 3 சதவீதத் தொகையை இக் கழகம் இலவசமாகக் கொடுத்து வருகிறது. அதேபோல் மத்திய வங்கிகள் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குக் கூடுதலாகக் கொடுக்கும் கடன் தொகையில் 1 சதவீதத் தொகையை இக் கழகம் அவ்வங்கிகளுக்குத் தருகிறது. இந்த உதவித் தொகை வழங்கும் முறையில் தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது இதை நாம் முன்னரே குறிப்பிட்டிருக்கிறோம். இவ் வகையில் 1968 மார்ச் வரை இக் கழகம் ரூ. 3 கோடி கொடுத்து உதவியுள்ளது.

கூட்டுறவு விவசாய விற்பனை: இக் கழகம் செய்யும் பணிகளில் மற்றொரு முக்கியமான பணி உண்டு. அதாவது,

சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக, விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கும், விளை பொருள்களைப் பாதுகாத்து விற்பனை செய்வதற்கும், ஏற்றுமதிசெய்ய வேண்டிய விவசாயப் பொருள்கள் இறக்குமதி செய்ய வேண்டிய பொருள்கள் ஆகியவற்றிற்கும் திட்டமிட்டு அதன்படி நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. மேலும், விவசாயிகளுக்கு வேண்டிய உரம், எரு, கருவிகள் போன்றனவற்றைக் கூட்டுறவுச் சங்கங்களின் வழியாக விநியோகம் செய்ய வேண்டிய பொறுப்பும் இக்கழகத்தைச் சார்ந்ததாகும். இக் கழகம் மாநில அரசாங்கங்களுக்குக் கொடுத்துள்ள பல வகையான நிதி உதவிகளைக் கீழ்க் காணும் புள்ளி விவரங்களிலிருந்துஅறிந்துகொள்ளலாம்.

[இலட்சம் ருபாயில்]

	விவரம்	1968-69 ஆம் ஆண்டில்	1968-69 ஆம் ஆண்டு வரை
1.	பங்கு மூலதனமாகக் கொடுத்தது	60·3	758.4
2.	நிர்வாக மானியத் தொகை	1.6	57·1
3.	பண்டங்களைத் தரம்பிரிக்கும்பணியாளர்களுக்கென்றும் சாதனங்களை வாங்குவதற்கென்றும் மானியமாகக் கொடுத்தது	0.3	6·1
4.	போக்குவரத்து வாகனங்களை வாங்குவதற்கென்று	8·2	59·4
5.	விலை ஏற்றுத் தாழ்வு நிதிக்காகக் கொடுத்தது	11·3	33·3
	ஆக மொத்தம்	81·7	914·3

இதுதவிர, கிழக்குப் பகுதியிலுள்ள மாநிலங்களிலும் ராஜஸ்தானிலுமுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும் நிதி உதவி செய்து வருகிறது. 1969 மார்ச் வரை ரூ. 142 இலட்சம் இவ்வகை நிதி உதவி செய்துள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கியுள்ள விலை ஏற்றத்தாழ்வு நிதிக்கும் இக் கழகம் தன்பங்காகக் குறிப்பிட்ட அளவுத்தொகையை வழங்கி வருகிறது. இத்திட்டத்தைப்பற்றி முன்னரே குறிப்பிட்டுள்ளோம். இந் நிதிக்கு அந்தந்த மாநில அரசாங்கங்களும் இக் கழகமும் சரிபாதித் தொகையை வழங்கி வருகின்றன. தொடக்க நிலை விவசாய விற்பனைச் சங்கம் ஒவ்வொன்றுக்கும் அந்தந்த மாநில அரசாங்கம் தம் பங்கு மூலதனமாக ரூ. 25,000 வழங்குகின்றது; இதையன்றி, விவசாயிகளிடமிருந்து விளைச்சலைக் கொள்முதல் செய்யும் சங்கங்கள் சிலவற்றிற்கு மாநில அரசாங்கம் மேலும் ரூ. 75,000 பங்கு மூலதனம் தருகிறது. இவ்வாறு அதிகமாக வழங்கப்படும் பங்கு மூலதனத்தொகைக்கும் இக் கழகம் தான் உதவி செய்கிறது. மேலும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைத்துள்ள கூட்டமைப்பு நிறுவனங்களுக்கும் இக் கழகம் நிதி உதவி செய்து வருகிறது. இந் நிறுவனங்கள் தம்முடன் இணைக்கப்பட்டுள்ள விற்பனைச் சங்கங்களுக்கு நிதி உதவி செய்வதற்கும், விவசாயப் பொருள்களை நுகர்வுப் பொருள்களாகப் பக்குவப்படுத்தும் ஆலைகளை அமைப்பதற்கும், இன்னும் பிற விற்பனை நடவடிக்கைகளுக்கும் உதவி செய்வதற்காக இக் கழகத்தின் உதவியை நாடுகின்றன.

பக்குவப்படுத்தும் ஆலைகள்: விவசாயப் பொருள்களை நுகர்வுக்கேற்பப் பக்குவப் படுத்துவதற்கென்றும் கூட்டுறவு ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ் வாலைகளின் பங்கு மூலதனத்திற்கு இக் கழகமும் குறிப்பிட்ட தொகையைத் தன் மூலதனப் பங்காக அளிக்கிறது. அதனோடு, இவ் வாலைகளுக்கும் வேண்டிய பண்டகங்களை அமைப்பதற்கும் இக் கழகம் கடனாகவும் மானியத் தொகையாகவும் நிதி உதவி செய்கிறது. மேலும், இவ் வாலைகளுக்கென்று நிர்வாக மானிய உதவியும் அளிக்கிறது. ஆனால், சர்க்கரை ஆலை போன்ற பெரிய கூட்டுறவு ஆலைகளுக்கு பங்கு மூலதனமாக மட்டுமே உதவி செய்யப்படுகிறது. அவ்வாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்குப் பங்கு மூலதனமாக கொடுப்பதற்கென்று 1968-69 வரை இக் கழகம் மாநில அரசுகளுக்கு 90 கோடி ரூபாய் வரை வழங்கியுள்ளது. இதுமட்டுமன்றி, அரிசி ஆலை, எண்ணெய் ஆலை போன்ற இதரக் கூட்டுறவு ஆலைகளுக்கும் 50 கோடி ரூபாய்வரை பங்கு மூலதனமாகக் கொடுத்து உதவி

யுள்ளது. அதனோடு, நிர்வாக மானியத் தொகையாக 15 இலட்சம் ரூபாய் கொடுத்துள்ளது.

கூட்டுறவுக் கிடங்குகள் குளிர்சாதனப் பண்டகங்கள் :

விவசாயக் கடன் சங்கங்களும் விற்பனைச் சங்கங்களும் தமக்கு வேண்டிய பண்டக் கிடங்குகளை அமைத்துக் கொள்வதற்கென்று அந்தந்த மாநில அரசுக்கு இக் கழகம் நிதி உதவி அளித்து வருகிறது. பண்டக் கிடங்குகளை அமைக்கச் செலவிடப்படும் தொகையில் ($62\frac{1}{2}$. சதவீதம் கடனாகவும் $12\frac{1}{2}$ சதவீதம் மானியமாகவும்) 75 சதவீதத் தொகையை இக் கழகம் கொடுத்து உதவுகிறது. இவ்வாறாகக் கொடுத்த கடன்தொகை 1969வரை 14.4 கோடி ரூபாயாகும். கூட்டுறவு நிறுவனங்கள் விரைவில் கெட்டுப்போகும் பொருள்களைக் குளிர் சாதனக்கிடங்குகளில் வைத்துப் பாதுகாக்கின்றன. இதற்கும் இக் கழகம் நிதிஉதவி செய்துவருகிறது. கடந்த சில ஆண்டுகளாக இவ்வகைக் கூட்டுறவு நிறுவனத்திற்குத் தலா 4 இலட்சம் ரூபாய் வரை உதவி செய்துவந்தது. ஆனால், இப்போது வரம்பேதுமின்றி எந்தஅளவுக்கு வேண்டுமானாலும் உதவி செய்து வருகிறது. இவ்வாறு உதவிசெய்யப்படும் கடன் தொகையைச் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கம் ஆண்டுத் தவணை முறையில் 17 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தவேண்டும். கடன்வாங்கிய நான்காவது ஆண்டில் முதல்தவணையாகக் கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்க வேண்டும்.

கூட்டுறவு நிர்வாகம்: தம் கூட்டுறவுத் துறையை விரிவுபடுத்தி, வேண்டிய அளவுப் பணியாளர்களை அமர்த்தி, கூட்டுறவை வளர்ப்பதற்கென்று ஒவ்வொரு மாநில அரசுக்கும் இக் கழகம் நிதி உதவி அளித்து வருகிறது. இவ்வாறு மாநில அரசுகளுக்கு மானியமாக அளிக்கப்பட்ட தொகை மட்டும் 1968 ஜூன் வரை 4.2 கோடி ரூபாயெனத் தெரிகிறது.

௫. வணிக வங்கிகள்

கிராமப் புறங்களில் கூட்டுறவுச் சங்கங்கள்தாம் அதிகமாகக் கடன் தந்து விவசாயிகளுக்கு உதவி வருகின்றன; எனினும், வணிக வங்கிகளும் ஏதோ ஓரளவுக்குக் கடன் தந்து வந்துள்ளன. சான்றாக, 1951-ல் வணிக வங்கிகள் கொடுத்த மொத்தக் கடன்தொகை 585 கோடி ரூபாய்; இதில் விவசாய உற்பத்திக்காகக் கொடுத்தது 12கோடி ரூபாய்தான். இவ்வாறு விவசாயத்திற்கென்று வழங்கிய கடனும் சிறிதுசிறிதாகக் குறைந்து 1966-ல் 5 கோடியாகச் சுருங்கிவிட்டது. ஆனால், அந்த ஆண்டில் வணிக வங்கிகள் கொடுத்த

மொத்தக் கடன் தொகையோ 2347 கோடி ரூபாயாகும். இவ்வளவு கடன் தொகையில் விவசாய உற்பத்திக்காகக் கொடுக்கப்பட்டது 5 கோடி தான் என்றால் இது வருந்தத்தக்கது. இந்த 5 கோடியும் பெரிய விவசாயிகள், தேயிலை, காப்பி, ஏலக்காய்த் தோட்ட முதலாளிகள் போன்ற பெரும்புள்ளிகளுக்குத்தாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நடுத்தர விவசாயிகளுக்கோ ஏழைக் குடியானவர்களுக்கோ வணிக வங்கிகள் கடன் தந்ததே கிடையாது. ஆனால், கூட்டுறவு நிறுவனங்களுக்கு வணிக வங்கிகள் ஓரளவு கடன் கொடுத்து உதவியுள்ளன. எந்த அளவுக்கு உதவியுள்ளன என்பதைக் கீழ்க்காணும் பட்டியலிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

(கோடி ரூபாயில்)

ஆண்டு		நேரடிக் கடன்	கூட்டுறவு நிறுவனங்களுக்கு	மொத்தம்	வணிக வங்கிகள் கொடுத்த மொத்தக் கடனில் சதவீதம்
ஏப்ரல்	1960	19·36	7.37	26·73	2 4
ஏப்ரல்	1961	5·48	8·77	14·25	1·1
மார்ச்	1963	4·09	10·17	14·26	0·9
மார்ச்	1964	8·69	14·37	23·06	1·2
மார்ச்	1965	7·95	30·62	38·57	1·8

வணிக வங்கிகள் ஏன் விவசாயிகளுக்கு அதிகமாகக் கடன் கொடுப்பதில்லை என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அக் காரணங்களை அகில இந்தியக் கிராமக் கடன் ஆய்வுக் குழுவும் (1969) ஒப்புக்கொண்டுள்ளன. முதலாவதாக விவசாயத்தில் விளைச்சல் நிச்சயமற்றது; அடுத்து, வணிக வங்கிகள் ஒப்புக்கொள்ளக் கூடிய பிணையங்கள் சாதாரணக் குடியானவரிடம் கிடையாது; மேலும், நிலத்திற்குச் சொந்தக்காரர் யார், குத்தகைதாரர் யார் என்பதற்கு அதிகார பூர்வமான சான்றுகள் கிடைப்பது கடினம்; இறுதியாக, குடியானவர்களுக்குக் கடன் கொடுத்து, அக் கடன் உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்தப்படாமல் இருந்தால் அதற்குறிய வழி என்ன என்று எந்த வணிக வங்கியும் காண முடியாது. இதனால்தான் வணிக வங்கிகள் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கத் தயங்குகின்றன. எனவே, வணிக வங்கிகள் செயல்படும் முறையின் அடிப்படையில் அவை விவசாயிகளுக்குத் தாராளமாகக் கடன்தர வேண்டுமென்று எவரும் கூற இயலாது.

இருந்தபோதிலும், வணிக வங்கிகள் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி, அதிகமாக விவசாயித் துறைக்கு உதவ வேண்டுமென அரசாங்கம் விரும்பியது. எனவே, 1967 டிசம்பரில் நம் பொருளாதார அமைப்பில் எந்தெந்தத் துறைக்கு எவ்வளவு கடன் வங்கிகளிடமிருந்து தேவைப்படுகிறது என்பதைக் கணக்கிடவும், விவசாயத்துறை, சிறுதொழில்கள், ஏற்றுமதித் தொழில்கள் ஆகிய மூன்றுக்கும் முக்கியமாக உதவி செய்யும் வழிவகையென்ன என்பதைக் கண்டறியவும் தேசியக் கடன் ஆய்வுக் குழு (National Credit Council) ஒன்று நியமிக்கப் பட்டது. மேலும், வணிக வங்கிகள் சமூகக் கட்டுப்பாட்டு முறைக்கு (Social Control) உட்பட்டிருந்த காரணத்தினால் சிண்டிகேட் பாங்கு போன்ற ஒரு சில வங்கிகள் விவசாயத் திற்குக் கடன் கொடுப்பதற்கென்று தனிப்பிரிவைத் தொடங்கின. இதைத் தொடர்ந்து, விவசாயிகளுக்குக் கடன் தருவதால் விளைச்சல் எவ்வளவு தூரம் அதிகரிக்கும் என்பதைக் கண்டறிய ஒரு சில சோதனைகள் நடத்தின. அதன்படி விவசாயிகளுக்கு வேண்டிய கடனையும் வழங்கலாயின. இயந்திரக்கலப்பை, பம்பு செட் போன்றனவற்றை வாங்கவும், ஏற்றுமதிக்கான வாழைப் பழச் சாகுபடி செய்யவும், அமோக விளைச்சலைத் தரக்கூடிய விதை வித்துகளைப் பயன்படுத்தவும் கடன் வழங்கப்பட்டது. மேலும், விவசாயிகள் தமக்கு வேண்டிய விதை வித்துகளையும் உரங்களையும் வாங்கிக் கொள்வதற்கென்று சிண்டிகேட் பாங்கு விவசாயச் சீட்டு களைக் குடியானவர்களுக்கு விநியோகித்தது. இச் சீட்டுகளை குறிப்பிட்ட வியாபாரிகளிடம் கொடுத்து உரங்களையும் விதை வித்து களையும் கடனாகப் பெற்று வந்தனர். மேலும், கோழிப் பண்ணை, பால் பண்ணை, மீன் பண்ணைத்திட்டங்களுக்கும் சிண்டிகேட் பாங்கு நிதி உதவி செய்து வந்தது.

நாளடைவில் 1969 ஜூலை மாதம் 14 வணிக வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டன. அவ்வாறு தேசியமயமாக்கியதால் இவ் வங்கிகள் விவசாயிகளுக்கு வேண்டிய கடனைத் தாராளமாகக் கொடுக்கமுடியும் என எதிர்பார்க்கப்பட்டது. எதிர்பார்த்த படியே ஓரளவு பலனும் கிட்டியுள்ளது. 1969 ஜூன் மாதம் வரை இவ் வங்கிகள் விவசாயிகளுக்குக் கொடுத்த கடன் 40 கோடி ரூபாய்தான்; ஆனால், 1970 மார்ச் மாதக் கணக்குப் படி இது 130 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும்போது விவசாயிகளுக்கு வேண்டிய குறுங்காலக் கடனும் மத்தியக் காலக் கடனும் சேர்ந்து ரூ. 2,500 கோடி தேவைப் படலாம் என மதிப் பிடப்பட்டுள்ளது. இதில் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து எதிர்

பார்க்கும் தொகை ரூ. 750 கோடிதான். எனவே, வணிக வங்கிகள் தாம் விவசாயிகளுக்கு வேண்டிய கடனைக் கொடுத்துதவ வேண்டுமென அரசாங்கம் கூறியுள்ளது; குறிப்பாக, கூட்டுறவு இயக்கம் நலிந்துள்ள மாவட்டங்களிலும் பகுதிகளிலும் இயங்கி வரும் வணிக வங்கிகள் விவசாயிகளுக்குத் தாராளமாகக் கடன் தரும்படி கேட்கப்பட்டுள்ளன. ஆனால், தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு விவசாயிக்கும் கடன் தருவது கடினம். எனவே, சேவைச் சங்கங்களின் மூலமாக வணிக வங்கிகள் கடன் தருவதற்கான திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் ஆந்திரா, ஹரியானா, மத்தியப் பிரதேசம், மைசூர், உத்தர பிரதேசம் ஆகிய 5 மாநிலங்களில் 81 மாவட்டங்களில் மட்டும் முதலில் செயல்படும். இத் திட்டம் செயல்படும் விதமும் நிபந்தனையும் வருமாறு :

(1) கூட்டுறவுச் சேவைச் சங்கங்களின் வாயிலாக விவசாயிகளுக்கு வணிக வங்கிகள் கடன்தரும் முறை தாற்காலிகமானது தான். நாளடைவில் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து தான் மறுபடியும் இச் சங்கங்கள் கடன் பெறவேண்டும்.

(2) வணிக வங்கிகளோடு தற்போது இணைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சேவைச் சங்கங்களைச் சேர்ந்த விவசாயிகள் நேரடியாக அவ் வங்களிடமிருந்து கடன் பெற முடியாது.

(3) வணிக வங்கிகள் சேவைச் சங்கங்களுக்குக் கொடுக்கும் கடனுக்கு $7\frac{1}{2}$ சதவீதம் வட்டி வசூலிக்கப்படும்.

(4) வணிக வங்கிகளிடம் இணைக்கப்பட்டுள்ள சேவைச் சங்கங்களின் கடன்பொறுப்பை அந்தந்த வணிக வங்கியே ஏற்றுக் கொள்ளும்; ஆனால், வராக்கடன் பொறுப்பை மட்டும் படிப்படியாகத்தான் ஒப்புக்கொள்ளும்.

(5) கூட்டுறவுச் சங்கங்கள் அளிப்பதுபோல் வணிக வங்கிகளும் விவசாயிகளுக்கு 'விளைச்சல் கடனை' அளிக்கும்; ஆனால், அதிகப்பட்சம் இவ்வளவுதான் என்று வரம்பு கிடையாது.

(6) வணிக வங்கிகள் எந்தெந்தச் சேவைச் சங்கங்களுக்குக் கடன் தர வேண்டுமென்று ஆலோசனை கூறுவதற்காக மாநில மட்டத்தில் நிரந்தரமான குழு ஒன்று நியமிக்கப்படும். இத் திட்டம் எவ்வளவு தூரம் விவசாயிகளுக்குப் பயனளிக்கிறது என்பதையும் இக் குழு பரிசீலனை செய்யும்.

4. கிராம மின்னமைப்புக் கழகம்

(Rural Electrification Corporation)

கிராமங்களுக்கு மின்சார வசதி கொடுக்க வேண்டுமென்று அகில இந்தியக் கிராமக் கடன் ஆய்வுக் குழு பரிந்துரை செய்தது. அதன்படி கிராம மின் இணைப்புக்கு வேண்டிய நிதி வசதியை அளிப்பதற்கென்று 1969ஆம் ஆண்டில் இக் கிராம மின்னமைப்புக் கழகம் தொடங்கப்பட்டது. கிராம மின்னமைப்புப் பத்திரங்களை மாநில அரசாங்க மின்துறையினர் வெளியிடுவதற்கு இக் கழகம் நிதி உதவி செய்து வருகிறது; அதனோடு, கிராம மின்னமைப்புச் சங்கங்களுக்கும் நிதி அளித்து வருகிறது. அமெரிக்காவின் பொதுச் சட்டம் 480 நிதியிலிருந்து கிடைக்கும் மானியத் தொகைக்கு இணையாக இந்திய அரசாங்கமும் நிதிபோட்டுத் தேசிய மட்டத்தில் ஒரு நிதி உருவாக்கப்பட்டுள்ளது; இந் நிதி இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கிராம மின்னமைப்பின் முன்னோடித் திட்டமாக இக் குழு, கூட்டுறவுத் துறையின் கீழ் 5 சங்கங்களை உருவாக்கியுள்ளது. இவை ஐந்தும் முறையே குஜராத், மைசூர், ஆந்திரா, மகராஷ்டிரம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் ஐந்தும் ஆங்காங்கேயுள்ள மின்சார வாரியத்தின் சொத்துகளையெல்லாம் வாங்கிக்கொண்டு அதற்குரிய ஈட்டுத்தொகையை வழங்க முடிவு செய்துள்ளன. மின்சார வாரியம் செய்யும் பணிகளையெல்லாம் இச் சங்கங்களே செய்யத் திட்டமிட்டுள்ளன. மாநில மின்சாரவாரியத்திடமிருந்து மின்சார சக்தியைப் பெற்று அந்தந்த இடங்களுக்கு விநியோகிப்பதே இச் சங்கங்களின் முக்கியப் பணியாகும். இதற்காக, கிராம மின்னமைப்புக் கழகம் இச்சங்கங்களுக்கு வேண்டிய நீண்டகாலக் கடன் தொகையை வட்டியின்றி வழங்க முன்வந்துள்ளது. இந்த ஐந்து சங்கங்களும் ஏற்கெனவே 12.80 கோடி ரூபாய்ச் செலவில் தத்தம் திட்டங்களை இக் கழகத்திடம் சமர்ப்பித்து விட்டன. இத் திட்டங்களை இக் கழகம் ஏற்றுக்கொண்டு அதற்குரிய செலவுத் தொகையையும் வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. மைசூர் மாநிலத்தில் ஹுகெரியில் உள்ள சங்கம் 1970 அக்டோபரிலேயே தன் பணியைத் தொடங்கிவிட்டது.

கிராம நீர்ப்பாசன வசதித் திட்டங்களுக்கும் கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டங்களுக்கும் மின்னமைப்புத் திட்டம்தான் அடிப் படையானது. மேற்குறிப்பிட்ட ஐந்து கூட்டுறவுச் சங்கங்களும் 29,361 பம்பு செட்டுகளை அமைக்கவும் 1,536 சிறு தொழிற்சாலை

களைத் தொடங்கவும் வேண்டிய அளவுக்கு மின்சாரம் வழங்கத் திட்டமிட்டுள்ளன.

5. சிறு குடியானவர் முன்னேற்ற அமைப்பு

நாட்டின் விவசாய முன்னேற்றத்திற்காகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுப் பயிர்த் தொழில் நன்கு வளர்ச்சி பெற்று வருகிறது. ஆனால், இம் முன்னேற்றத்தினால் பெரும் பலனடைவோர் பெரு நிலக்கிழார்களும் நடுத்தர விவசாய மக்களும் தாம். நாட்டிலுள்ள பெரும்பான்மையான சிறு குடியானவர்களுக்கு இதனால் பயனேதும் கிட்டவில்லை. நவீன முறையில் சாகுபடித் திட்டத்தை அவர்களால் கையாள முடியவில்லை. காரணம், அவர்களிடம் போதிய நிதிவசதி கிடையாது. அவர்களுக்குக் கடன் கிடைப்பதும் கடினம். எனவே, விவசாய வளர்ச்சித் திட்டத்தினால் சிறு குடியானவர்களும் பயனடைய வேண்டுமாயின், அவர்களுக்கும் தாராளமான கடனுதவி வழங்கப்பட வேண்டுமென்று அகில இந்தியக் கிராமக் கடன் ஆய்வுக்குழு (1969) ஆலோசனை கூறியுள்ளது. இக்குழுவின் ஆலோசனைப்படி, பரிசோதனைத் திட்டமாகச் சிறு குறியானவர் முன்னேற்ற வட்டார அமைப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

சுமார் 50,000 குடியானவர்களுக்கு ஒரு வட்டார அமைப்பென்று இவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வமைப்புகள் சங்கப் பதிவுச் சட்டப்படி சங்கங்களாகவே பதிவு செய்யப்பட்டுள்ளன. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இவை படிப்படியாகத் தம் திட்டங்களை நிறைவேற்றும். இச் சங்கங்களில் அந்தந்த மாவட்ட முதல்வர்கள் தலைவர்களாயுள்ளனர். ஒவ்வொரு சங்கத்திலும் மத்திய உணவுத் துறை, விவசாயத் துறை, சமுதாய நல அபிவிருத்தி, கூட்டுறவுத் துறை, திட்டக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளும், மாநில அரசாங்கத்தின் விவசாயத்துறை, கால்நடைக் கூட்டுறவுத் துறை ஆகியவற்றின் பிரதிநிதிகளோடு மாநில நிலவள வங்கியின் பிரதிநிதி, மாவட்ட மத்திய வங்கியின் தலைவர் ஆகியோரும் உறுப்பினர்களாக உள்ளனர். ஒவ்வொரு வட்டார அமைப்பிற்கும் திட்டப்பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வட்டார அமைப்பிற்கும் மத்திய அரசாங்கம் 1.6 கோடி ரூபாய் வழங்க முன்வந்துள்ளது.

இவ் வட்டார அமைப்புகள் செய்யவிருக்கும் பணிகள் வருமாறு: முதலில் தீவிர விவசாயச் சாகுபடி முறைப்படி நீர்ப்பாசன வசதியும் கருவிகளும் தேவைப்படும் இடங்கள் எவை என்பதைக் கண்டு பிடித்து, அவ்விடங்களிலுள்ள சிறு குடியானவர்

களுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து கொடுக்கும். இக் குடியானவர்கள் அமோக விளைச்சலை உற்பத்தி செய்யக் கூடிய விதத்தில் அவர்களுக்கு உதவி செய்யும். இதற்கென்று சிறு குடியானவர்கள் ஒவ்வொருவருக்குமுள்ள பிரச்சினைகளை அறிந்து அதற்கேற்பத் திட்டங்களை வகுக்கும். அவர்களுக்கு வேண்டிய நிதி உதவியை இவ் வட்டார அமைப்பே செய்யாது; மாறாக, யார் யாரை இது தேர்ந்தெடுக்கிறதோ அவர்களுக்கு வேண்டிய உதவியையெல்லாம் கூட்டுறவுச் சங்கங்களே செய்வதற்கு ஆவன செய்யும். இதற்காக அக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இவ் வட்டார அமைப்பே உதவித் தொகை வழங்கும். இத் தொகை பின் வரும் வீதத்தில் வழங்கப்படும். தொடக்க நிலைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் சிறு குடியானவர்களுக்கு எவ்வளவு கூடுதலாகக் கடன் கொடுக்கின்றனவோ அதில் 6 சதவீதத் தொகை வழங்கப்படும். அதுபோல் மத்தியக் கூட்டுறவு வங்கிக்கும் நில வள வங்கிக்கும் 3 சதவீதம் வழங்கப்படும். இப் பணியைச் செய்வதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கூட்டுறவு வங்கிகளுக்கும் மேலும் சில பணியாளர்கள் அவசியம்; எனவே அவர்களை அமர்த்து வதற்கென்றும் இவ் வட்டார அமைப்பு மானியத் தொகை வழங்கும்.

சிறு குடியானவர்கள் தம் நிலத்தில் தீவிரச் சாகுபடி முறையை மேற்கொள்வதற்குக் கிணறுகள் வெட்டவும், விவசாயக் கருவிகள், உரம், எருப் போன்ற சாதனங்களை வாங்கவும் கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களுக்கு கடன் வழங்கும். அவ் விவசாயிகளுக்கு டிராக்டர்கள், கிணறு தோண்டும் இயந்திரங்கள், நிலத்தைச் சமப்படுத்தும் கருவிகள் போன்றவை தேவைப்பட்டால் அவற்றை அவர்கள் வாடகைக்குப்பெற இவ் வட்டார அமைப்பு உதவி செய்யும். மேலும், அவர்களின் விவசாயப் பொருளைப் பாது காக்கவும், பக்குவப் படுத்தவும், விற்பனைக்கு அனுப்பவும், விற்க வும் வேண்டிய உதவிகளைக் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக வும் மற்ற வழியாகவும் இவ் வட்டார அமைப்புச் செய்து தரும். மேலும், சிறு குடியானவர்கள் கால் நடைகளை வாங்கிப் பால் பண்ணை தொடங்கியோ கோழிகள் வளர்த்தோ, விவசாயம் சார்ந்த சிறு தொழில்களை அமைத்தோ தம் வருவாயை அதிகரிக்க விரும்பினால் அதற்கும் இவ்வமைப்பு உதவி செய்யும்.

33. கூட்டுறவுத் தணிக்கையும் கண்காணிப்பும்

கூட்டுறவு நிர்வாகத்தில் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்யும்பழக்கம் தொன்று தொட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூட்டுறவுத் தணிக்கை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததென்பதை யாவரும் அறிவர். கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் சீராக வளர வேண்டுமாயின், அதன் கணக்கு வழக்குகளை முறையாகத் தணிக்கை செய்வது இன்றியமையாதது. நமது நாட்டுக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களில் பெரும்பாலானோர் கல்வி அறிவு பெறாதவர்கள்; அதோடு அறியாமையிலும் அவர்கள் இருந்து வருகின்றனர். இந்நிலையில் அவர்கள் செய்துவரும் பணி சிக்கல்கள் நிறைந்தது. பொதுப் பணத்தைக் கையாளும்போது பல சோதனைகள் எழலாம். எனவே, சிக்கல்களையும் சோதனைகளையும் தவிர்ப்பதற்கும் திருத்துவதற்கும் எச்சரிக்கை அவசியம். கூட்டுறவு நிர்வாகம செம்மையாகவும் திறமையாகவும் நடைபெற வேண்டுமாயின், கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்வதும் பொது நிர்வாகத்தைச் சரிபார்ப்பதும்தான் முதல் கடமை என்பதைக் கூட்டுறவாளர்கள் ஒப்புக் கொள்வர்.

ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் நிலையை அறிந்து கொள்ளும் நோக்கத்தோடு, அதன் கணக்கு வழக்குகளைச் சரிபார்த்து, விவரம் தெரிவிப்பதுதான் தணிக்கையின் பொருளாகும். கூட்டுறவு நிறுவனத்தின் வரவு-செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்யும்போது திறமையாகவும் சாதுரியமாகவும் செய்யவேண்டியுள்ளது. ஏனெனில், எந்தக் கூட்டுறவுச் சங்கமும் இலாபத்திற்சாக இயங்குவதில்லை. உறுப்பினர்களின் நன்மைதான் கூட்டுறவின் குறிக்கோள். எனவே, சாதாரணதொரு நிறுவனத்தின் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்வதுபோல் கூட்டுறவு கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்ய முடியாது. கூட்டுறவுத் தத்துவம் எந்த

அளவுக்குக் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதையும் தணிக்கை யாளர் மனத்தில் கொள்ளவேண்டும்.

கூட்டுறவுத் தணிக்கையின் நோக்கங்கள்

ஒரு கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவு விதி முறைகளின்படி செம்மையாக நடைபெறுகிறதா என்பதைப் பரிசீலனை செய்வதுதான் தணிக்கையின் அடிப்படையான நோக்கமாகும். வரவு-செலவு ஒத்திருக்கிறதா என்பதைமட்டும் சரிபார்ப்பதற்காகத் தணிக்கை செய்யப்படுவதில்லை. மேலும், தணிக்கை செய்வதன் வாயிலாகக் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்தவும், உறுப்பினர்களின் நலன்களை பேணவும் முடிகிறது. அதோடு, கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேராமல் அவற்றோடு தொடர்பு கொண்டுள்ள பொதுமக்களின் நலன்களைப் பேணுவதற்கும் தணிக்கை உதவுகிறது. இறுதியாக, கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகளில் ஊழல்களும் தவறுகளும் ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்வதோடு, அப்படி ஏற்பட்டால் வருங்காலத்தில் அவ்விதத் தவறுகள் தோன்ற வண்ணம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் போதிக்கிறது. இவ்வளவு முக்கியத்தும் வாய்ந்த தணிக்கையை மேற்கொள்ள வேண்டுமாயின், தணிக்கை யாளர்கள் கூட்டுறவு இயக்கத்தின் தன்மைகளை அறிந்தவர்களாய் இருத்தல் நன்று.

தணிக்கையாளரின் பணி

மேற்கூறிய விதத்தில் தணிக்கை நடக்கவேண்டுமாயின், கூட்டுறவுத் தணிக்கையாளர் சங்கத்தின் வழிகாட்டியாயும் நண்பராயும் திகழவேண்டும். கூட்டுறவுச் சங்கத்தின் நடவடிக்கைளை விழிப்புடன் பார்வையிடவேண்டும். கூட்டுறவுத் தணிக்கையாளர், சங்கத்தின் நண்பரேயன்றி எதிரியல்லர் என்பதை அனைவரும் உணர வேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறது. தம் தணிக்கைக்குட்பட்ட சங்கங்களைக் கண்ணும் கருத்துமாய் கவனித்து அவை மென்மேலும் வளர்ச்சியடைய உறுதுணையாய் நிற்பதே தணிக்கை யாளரின் கடமையாகும். சங்கங்களின் நடவடிக்கைகளில் எங்கெங்கே சின்னஞ்சிறு தவறுகளைக் கண்டுபிடிக்கலாம் என்ற குறிக்கோளைவிட்டுவிட்டு, சங்க வளர்ச்சிக்கு உதவும் வண்ணம் செயலாற்றவேண்டும். ஜெர்மனியிலுள்ளதைப்போல் கூட்டுறவுத் தணிக்கையாளர், சங்கத்தின் ஆலோசகராகவும் நண்பராகவும் இருத்தல் நன்று.

திரு மிர்தா அவர்களின் தலைமையின் கீழ் 1965ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கூட்டுறவு ஆய்வுக் குழுவினரின் கருத்துப்படி,

சங்கத்தின் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்யும்போது அச் சங்கம் கூட்டுறவுத் தத்துவத்தில் இயங்காமல் தன்னிச்சைபோல் செயலாற்றி வந்தால் அதைத் தம் தணிக்கை அறிக்கையில் குறிப்பிடுவது தணிக்கையாளரின் கடமை. அதோடு, சங்கத்தினால் ஏழை எளிய உறுப்பினர்கள் எவ்வளவு தூரம் பயனடைந்துள்ளனர் என்பதையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். மேலும், உறுப்பினர்களுக்குக் கூடுமான வரை அச் சங்கம் கூட்டுறவுக் கல்வியை போதிக்க நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும் சிந்திக்கவேண்டும்.

தணிக்கை வகைகள்

பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் வெளியிட்டுள்ள தகவலின்படி தணிக்கை இருவகைப்படும். (1) நிதி நிலவரத் தணிக்கை, (2) முறைவழித் தணிக்கை. இவ் விரு வகையில் கூட்டுறவு இயக்கம் மேற்கொள்வது பெரும்பாலும் நிதி நிலவரத் தணிக்கைதான். கூட்டுறவுச் சங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எந்த அளவுக்கு நியாயமானவை, நேர்மையானவை என்பதை இத் தணிக்கை சீர்தூக்கிப் பார்க்கிறது. அதோடு, சங்கத்தின் வரவு - செலவுக் கணக்குகளையும் சரிபார்க்கிறது. இவ் வகை நிதி நிலவரத் தணிக்கை மட்டுமன்றி, முறைவழித் தணிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது. ஒரு சங்கம் முறைப்படி செயல்படுகிறதா என்பதையும், செம்மையாக நிருவகிக்கப்படுகிறதா என்பதையும் பரிசீலனை செய்வதற்காகத்தான் முறைவழித் தணிக்கை செய்யப்படுகிறது. சங்கம் எந்த அளவு பரிவர்த்தனை செய்துள்ளது, அதில் பணியாற்றுவோர் முறைப்படி நடந்துகொள்கின்றனரா என்பதையும் இவ் வகைத் தணிக்கையாளர் சீர்தூக்கிப் பார்ப்பர். உற்பத்தித் துறையிலும் பொருள் விநியோகத் துறையிலும் ஈடுபட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு இவ் வகைத் தணிக்கை அவசியம். ஏனெனில், மிகப் பெரிய அளவில் இச் சங்கங்கள் அமைக்கப் பட்டிருப்பதாலும் பல வகைப் பொருள்களை உற்பத்தி செய்து அல்லது விநியோகம் செய்யும் போது அதற்கேற்ற பணியாள்கள் முறைப்படியும் சிக்கனமாகவும் செயல்பட்டால்தான் செலவு குறையும். அப்போது பலன்களும் அதிகரிக்கும்.

கூட்டுறவு நிர்வாகம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை ஆய்வு செய்வதற்காக 1963-ல் நியமிக்கப்பட்ட குழுவினர் தணிக்கை முறையை நான்கு வகைகளாகப் பாகுபடுத்தியுள்ளனர்.

(1) தொடர்ச்சியான தணிக்கை:- கூட்டுறவு சங்கத்தின் நடவடிக்கைகளையும் கணக்கு வழக்குகளையும் மாதம் ஒரு முறை, அல்லது மூன்று மாதங்களுக்கொரு முறை தொடர்ந்து தணிக்கை செய்வதுதான் தொடர்ச்சியான தணிக்கை எனப்படுகிறது. மாநில வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கி, பெரிய பக்குவப்படுத்தும் சங்கம், சந்தை, நகர வங்கி, சிறப்பு அங்காடி போன்ற மிகப் பெரிய கூட்டுறவு நிறுவனங்களில் இவ் வகைத் தணிக்கை முறை கையாளப்படுகிறது. இவ் வகை நிறுவனங்கள் பெரிய அளவில் செயல்படும் போது அவற்றின் கணக்கு வழக்குகள் அதிகமாகி விடுவதால் ஆண்டிற்கொருமுறை மட்டும் தணிக்கை செய்வது கடினம்; எனவேதான், தொடர்ச்சியாகத் தணிக்கை செய்யப் படுகிறது.

(2) இடைக்காலத் தணிக்கை:- கூட்டுறவுச் சங்கத்தின் கணக்கு வழக்குகளைக் கடைசியாகத் தணிக்கை செய்வதற்கு முன்பு செய்யப்படும் தணிக்கைதான் இடைக்காலத் தணிக்கையாகும். கடைசியாகச் செய்யப்படும் தணிக்கையை எளிதாக்கவும் விரைவாக்கவும் இவ்விடைக்காலத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகளில் முறை கேடான அல்லது தவருன போக்குக் காணப்படுமாயின், அதைத் திருத்திக் கொள்ள இத் தணிக்கை உதவி செய்கிறது.

(3) இறுதித் தணிக்கை:- ஆண்டின் இறுதியில் சட்டப்படி மேற்கொள்ளப்படும் தணிக்கையைத்தான் இறுதித் தணிக்கை என்பர். ஒரு வருடம் முடிவடையும்போது அவ்வாண்டிற்கான கணக்கு வழக்குகள் என்ன, வரவு - செலவு என்ன, இலாப நட்டம் எவ்வளவு என்பதையெல்லாம் அறிந்து கொள்ள இத் தணிக்கை செய்யப்படுகிறது.

(4) பரிசோதனைத் தணிக்கை:-ஆண்டுதோறும் செய்யப்படும் இறுதித் தணிக்கை சரியானதுதாளு, முறையாகச் செய்யப் பட்டுள்ளதா என்பதைப் பரிசோதிப்பதற்காக மேற் கொள்ளப் படும் தணிக்கைதான் பரிசோதனைத் தணிக்கையாகும். இறுதித் தணிக்கையை இளைய தணிக்கையாளரோ தனிப்பட்ட தணிக்கையாளர்களோ மேற்கொள்ளலாம். ஆனல், அதைச் சரிபார்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் இப்பரிசோதனைத் தணிக்கையை முதிய தணிக்கையாளர்தாம் மேற்கொள்வர்.

கூட்டுறவுப் பதிவாளரின் பொறுப்பு

ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் கணக்கு வழக்குகளையெல்லாம் ஆண்டிற்கொரு முறை தணிக்கை

செய்யும் பொறுப்பைக் கூட்டுறவுப் பதிவாளரிடமே மாநில அரசுகள் ஒப்படைத்துள்ளன. தணிக்கை செய்வதற்கென்று கூட்டுறவுத் துறையில் தணிக்கையாளர்களும் அமர்த்தப்படு கின்றனர். ஒரு சில மாநிலங்களில் பெரிய கூட்டுறவு நிறுவனங் களின் கணக்கு வழக்குகளைத் தகுதி வாய்ந்த தனிப்பட்ட தணிக்கை யாளரே மேற் கொள்கின்றனர். தனிப்பட்ட தணிக்கையாளர் தணிக்கை செய்யவேண்டுமாயின் கூட்டுறவுப்பதிவாளரின் அனுமதி அவசியம். ஆந்திராவில் கணக்கு வழக்குப் பட்டதாரிகள், ஓய்வு பெற்ற அலுவலர்கள் ஆகியவர்களில் முக்கியமானவர்களைத் தேர்ந்தெடுத்து ஒரு பட்டியலைத் தயாரிக்கின்றனர்; இப்பட்டியலி லுள்ள எவரும் கூட்டுறவுச் சங்கத்தின் கணக்கு வழக்குகளை இறுதி தணிக்கை செய்யலாம். கூட்டுறவுத் தலைமைத் தணிக்கையாளர் பட்டியலிலுள்ள எவரிடமும் தணிக்கை செய்யும் பொறுப்பை ஒப்படைக்கலாம். குஜராத் மாநிலத்தில் ரூ. 50,000-க்கும் அதிகமாக நடப்பு மூலதனம் கொண்டுள்ள நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், வங்கிகள், மாநில அரசாங்கத்திடம் கடன் வாங்காத மனைச் சங்கங்கள் ஆகியவற்றின் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்வதற்கென்று தனிப்பட்ட தணிக்கையாளரைக் கொண்ட பட்டியலே தயாரிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்யும் பொறுப்பைக் கூட்டுறவுப் பதிவாளர்தாம் மேற்கொள்ள வேண்டுமா, அதற்கென்று தனியாக ஏதாவதொரு ஏற்பாடு செய்வது நல்லதா என்ற பிரச்சினை பல ஆண்டுகளாக உள்ளது. தணிக்கை செய்யும் பொறுப்புக் கூட்டுறவுப் பதிவாளரிடம் தான் இருக்க வேண்டும்; அப்போதுதான் கூட்டுறவு இயக்கத்தைக் கட்டுபடுத்தவும் கண்காணிக்கவும் முடியும் என்பதைப்பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர். கூட்டுறவுத் திட்டக் குழுவினரும் இதை வலியுறுத்தியுள்ளனர். அதோடு, கூட்டுறவுப் பதிவாளர் தனிப் பட்ட தணிக்கையாளரைக் கொண்டும் தணிக்கை செய்யலாம் என்றும் சிபாரிசு செய்தனர். மேலும், 1957-ல் நியமிக்கப்பட்ட கூட்டுறவுச் சட்ட ஆய்வுக் குழுவினரும் கூட்டுறவுத் தணிக்கைப் பொறுப்பை பதிவாளரே தொடர்ந்து மேற்கொள்வது தான் சிறந்ததென வலியுறுத்தியுள்ளனர்; அப்போது தான் கூட்டுறவுச் சங்கங்களோடு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு, அவற்றைக் கட்டுப் படுத்தவும் வழிநடத்தவும் பதிவாளருக்கு எளிதாக இருக்குமென்று கூறியுள்ளனர். 1960-ல் அமைக்கப்பட்ட கூட்டுறவுக் கடன் ஆய்வுக் குழுவினரும் இக் கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

எனினும், 1965-ல் மத்திய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கூட்டுறவு இயக்க ஆய்வுக் குழுவினர் தணிக்கை செய்யும்

பொறுப்பைக் கூட்டுறவுப் பதிவாளரிடமிருந்து நீக்கி, அதைத் தனிப்பட்டதொரு துறையினரிடம் கொடுக்க வேண்டுமெனச் சிபாரிசு செய்தனர். கூட்டுறவுப் பதிவாளரிடமே இப் பொறுப்பு இருக்குமாயின், கூட்டுறவு இயக்கத்தைக் கண்காணிக்கவும் வளர்க்கவும் போதிய நேரமும் அவகாசமும் அவரிடம் இராது; அதோடு, தணிக்கை செய்வதற்கென்று தனியாக ஓர் ஏற்பாடு செய்தால் பாரபட்சமின்றித் தணிக்கை செய்ய ஏதுவாயிருக்கும் என்று இக் குழுவினர் கருதினர். இக் குழுவின் சிபாரிசுகளை 1963-ல் பம்பாயில் நடைபெற்ற கூட்டுறவுப் பதிவாளர்கள் மாநாடு பரிசீலனை செய்தது. கூட்டுறவு இயக்கம் தனிப்பட்டதொரு மக்களின் இயக்கமாக வளர்ந்தால்தான் இக் குழுவின் சிபாரிசுகள் பொருந்த முடையதாயிருக்கும்; ஆனால், அதற்குரிய சூழ்நிலை நம் நாட்டில் இன்னும் ஏற்படவில்லையாதலின், தணிக்கை செய்யும் பொறுப்பை மாற்றுவதற்கில்லை என இம் மாநாட்டில் முடிவு செய்தனர். அதே ஆண்டில் கூட்டப்பட்ட மாநிலக் கூட்டுறவு அமைச்சர்கள் மாநாடும் இம் முடிவை ஆமோதித்தது: கூட்டுறவு இயக்க வளர்ச்சியில் அரசாங்கமும் பங்கு கொண்டு, ஏராளமான உதவிகளைச் செய்து வருவதால் அரசாங்கம்தான் கூட்டுறவுப் பதிவாளரின் வாயிலாகத் தணிக்கை செய்யும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டுமென இம் மாநாடும் வலியுறுத்தியுள்ளது.

தணிக்கையை நிர்வாகத்திலிருந்து பிரிக்க வேண்டுமா?

கூட்டுறவுத் துறையிலேயே தணிக்கைப் பிரிவு என்று தனிப் பிரிவை ஏற்படுத்தினால், கூட்டுறவுத் தணிக்கை பாரபட்சமின்றி நடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறாயின், நிர்வாகப் பிரிவோடு எவ்விதத் தொடர்புமின்றித் தணிக்கை ஒன்றைமட்டுமே கவனிக்க ஏதுவாயிருக்கும். இத்தணிக்கைப் பிரிவு தலைமைத் தணிக்கையாளரின்கீழ் இயங்கவும், தலைமைத் தணிக்கையாளர் கூட்டுறவுப் பதிவாளரின்கீழ்ப் பணிசெய்யவும் வழி செய்யப் பட்டால் நன்று. இவ்வாறு தனித்து இயங்கும் தணிக்கைப் பிரிவு பல மாநிலங்களில் ஏற்கெனவே அமைக்கப்பட்டு விட்டது.

இதனால் ஒரு சிறு சச்சரவும் தோன்றியுள்ளது. அதாவது, தணிக்கைப் பிரிவில் பணியாற்றுவோரை நிர்வாகப் பிரிவுக்கும் நிர்வாகப் பிரிவிலுள்ளோரைத் தணிக்கைப் பிரிவுக்கும் மாற்றுவது குறித்து அப் பிரச்சினை தோன்றியுள்ளது. பல மாநிலங்களில் இம் மாற்றல் நடைபெற்று வருகிறது. எனினும் தணிக்கைப் பிரிவினர் தனித்து அப்பிரிவிலேயே பணியாற்ற விரும்புகின்றனர். அதுதான் சிறந்ததாகவும் தோன்றுகின்றது.

தணிக்கையில் காணப்படும் சிக்கல்கள்

தற்சமயம் நடைமுறையிலுள்ள தணிக்கை முறை தெளிவின்றி இருப்பது ஒரு முக்கிய முட்டுக்கட்டையாகும். கூட்டுறவுச் சங்கங்களுக்கு எத்தனை சதவீதம் வரை வராக்கடனை அனுமதிப்பது, அவை எத்தனை சதவீதம் வைப்புகளை அதிகரிக்க வேண்டும், எந்த அளவிற்கு அவற்றின் தொழில்கள் நடை பெறவேண்டும் என்பது போன்ற காரியங்களில் திட்டவட்டமான முடிவுகிடையாது; அவற்றை நிர்ணயம் செய்வதும் கடினம். இதனால் தணிக்கை செய்யும்போது சம்பந்தப்பட்ட தணிக்கையாளர்கள் தம் அறிக்கையில் முழுவிவரம் குறிப்பிட முடியாமல் போய் விடுகிறது. அதோடு, பாரபட்சமின்றிக் குறிப்பு எழுதவும் கடினமாகி விடுகிறது. எனவே, தணிக்கையாளர்கள் தமது உசிதப்படி தணிக்கை செய்ய நேரிடுகிறது. மேலும், ஒரு சில மாநிலங்களில் ஓராண்டு முடிவடையு முன்னரே தணிக்கை முடிந்து விடுகிறது; வேறு சில மாநிலங்களிலோ ஒன்றரை அல்லது இரண்டாண்டுகளுக்கொரு முறைதான் தணிக்கை செய்யப்படுகிறது. இதனால், கூட்டுறவுச் சங்கங்களைப் பாகுபடுத்துவது கடினமாகி விடுகிறது; அதோடு, அவற்றின் உண்மையான நிலைமை என்ன? எந்த அளவுக்கு அவை முன்னேற்றமடைந்துள்ளன? என்பதை அறிந்துகொள்வதும் சிரமமாகி விடுகிறது.

நிற்க, ஒரு சில மாநிலங்களில் கூட்டுறவுத் தணிக்கையாளர்களுக்கு வேறுபல பணிகளும் அளிக்கப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல், பார்வையிடுதல், கண்காணித்தல் போன்ற பணிகளும் அவர்கள் மீது சுமத்தப் படுகின்றன இப்பணிகளைச் செய்ய வேண்டிய உதவிப் பதிவாளர்கள் இவற்றை தணிக்கையாளரிடம் ஒப்படைப்பதால், தணிக்கையாளர் தம் சொந்த, உண்மையான கருத்துகளை மறைத்து மூடவேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது.

போதிய தணிக்கையாளரின்மை

மேலும், கூட்டுறவுச் சங்கங்களைத் தணிக்கை செய்வதற்குப் போதுமான தணிக்கையாளர்கள் அமர்த்தப் படுவதில்லையென்றும், இதனால் தணிக்கையாளர்களின் வேலைப் பளு அதிகமாகிக் கொண்டே வருகிறதென்றும் கூட்டுறவு நிர்வாக ஆய்வுக் குழுவினர் உணர்ந்து கூறியுள்ளனர். ஆயிரக் கணக்கான கூட்டுறவுச் சங்கங்களின் கணக்கு வழக்குகள் ஆண்டுக்கணக்கில் தணிக்கை செய்யப்படாமல் விடப்பட்டு விடுகின்றன. கூட்டுறவுத் தணிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டுள்ள தெனினும்,

போதுமானதாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1966-67-ல் அசாமில் மட்டும் 1,808 கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 1,239 சங்கங்கள் தணிக்கை செய்யப்படவில்லையென்றும், கேரளாவில் 2,440 சங்கங்களில் 2,059 சங்கங்களில் தணிக்கை நடைபெறவில்லை யென்றும் அறிய வருகிறோம். கடன் சங்கங்களின் தணிக்கையே இவ்வளவு அவல நிலையிலிருக்கும்போது, ஏனைய சங்கங்களைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

தணிக்கை அறிக்கைக்கேற்ப நடவடிக்கையின்மை

கூட்டுறவுச் சங்கங்களைத் தணிக்கை செய்யும் தணிக்கையாளர் அவை என்னென்ன தவறுகள் செய்து வருகின்றன என்பதைத் தம் அறிக்கையில் குறிப்பிடுகிறார். அத்தவறுகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாகவும் திடமாகவும் மேற்கொள்தல் அவசியம். நடவடிக்கை ஏதுமில்லையென்றால் தணிக்கை செய்வதில் பயனேதுமில்லை. நடைமுறையில் நாம் காண்பது, தணிக்கையாளர் குறிப்பிடும் எதிர்ப்புகளுக்குப் பெரும்பாலும் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை, எதிர்ப்பு எதிர்ப்பாகவே ஏட்டளவில் இருக்க, கூட்டுறவுச் சங்கங்களும் பழைய பாணியிலேயே இயங்கிவர நேரிடுகிறது. எனவே, தணிக்கையாளர் குறிப்பிடும் தவறுகள் திருத்தப்பட வேண்டியது அவசியம். ஆனால், 1960ஆம் ஆண்டில் தெரிவிக்கப்பட்ட தணிக்கை எதிர்ப்புகளில் 8 சதவீதம்தான் சரிசெய்யப்பட்டதாகத் தெரிகிறது. 1961-ல் இது 5 சதவீதமாகக் குறைந்து, இன்று படிப்படியாக மேலும் குறைவதாகத் தெரிகிறது. எனவே, தணிக்கையாளர் குறிப்பிடும் தவறுகள் திருத்தப்பட்டு, அவர்கள் கூறும் வழிமுறைகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொண்டால்தான் தணிக்கை செய்வதால் பயனேற்படும்.

நிவாரணம்

கூட்டுறவு இயக்கத்திற்கு அரசாங்கம் ஏராளமான உதவி செய்து வரும் இக் காலத்தில் குறித்த சமயத்தில் நல்லபடியாகத் தணிக்கை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களில் பதவி வகிப்போர் தம் சுயநலத்திற்காகச் செயல்படுவார்களாயின், அக்குறையைத் தாராளமாகச் சுட்டிக்காட்ட வேண்டியது தணிக்கையாளர்களின் கடமை. இக் கடமையைச் செய்யும்போது, எவருக்குமே பயப்படாமல், பாரபட்சமின்றி, கூட்டுறவின் வளர்ச்சியை எண்ணி அவர்கள் செயலாற்றுவது நன்று. கூட்டுறவு இயக்கத்தின் அச்சாணியாகத் திகழ்வது தணிக்கை முறைதான். எனவே, தணிக்கை செய்வது சுதந்திரமாக அமைக்கப்படின், சாலச் சிறந்தது.

கூட்டுறவுத் தணிக்கையைச் சிறந்த தாக்க விவசாயக் சடன் பற்றிய ஆலோசனைக் குழு பல்வேறு பரிந்துரைகளைச் செய்துள்ளது. அவற்றுள் முக்கியமான சிலவற்றை மட்டும் இங்குக் குறிப்பிடல் நன்று.

1. கூட்டுறவுத் தணிக்கை பதிவாளரின் பொறுப்பில்தான் இருக்க வேண்டும். அவருக்கு உதவியாகத் தலைமைத் தணிக்கையாளர் பணி புரிதல் நன்று. தணிக்கையாளர்கள் தனித்து, தலைமைத் தணிக்கையாளரின்கீழ்ப் பணி புரிய வேண்டும். தணிக்கை செய்யும் பணியை மாநில அரசின் நிதித் துறை அல்லது தல நிதித் துறை போன்ற எந்தத் துறைக்கும் மாற்றக் கூடாது.

2. ஜுலை முதல் தேதி முதல் ஜுன் 30 வரைக்கான ஆண்டுக் கணக்கு வழக்குகளை வருடாவருடம் தணிக்கை செய்து முடிக்க வேண்டும்.

3. தணிக்கை செய்யும் முறை துல்லியமாகவும் தெளிவாகவும் இருக்கும் வகையில் அவ்வப்போது பரிசோதனைத் தணிக்கையும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் எப்படிப் பணி புரிகிறது, எந்த அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது என்பதைக் கணக்கிட, அதன் மூலதன நிலை என்ன? நிதியும் கடனும் நிலையானதாக உள்ளதா? நிர்வாகம் செம்மையாக நடைபெறுகிறதா? பொதுவாக அது எவ்வாறு செயல் படுகிறது? என்ற விவரங்களை ஆய்ந்து பார்க்க வேண்டும்.

5. தணிக்கை செய்த அறிக்கையின் அடிப்படையில் தான் தணிக்கை பாகுபாடு செய்யப்பட வேண்டுமேயன்றி, நிர்வாகப் பணியாளரின் அறிக்கை அடிப்படையிலல்ல.

மேற்கூறிய பரிந்துரைகள் மட்டுமன்றி, விவசாயக் கடன் ஆய்வுக் குழுவினரும் ஒரு சில சிபாரிசுகளைச் செய்துள்ளனர். அவை பின் வருமாறு :

1. பல மாநிலங்களில் தணிக்கைப் பணியாளர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை; அவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, தணிக்கையை வலுப்படுத்த வேண்டும்.

2. கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்ட பின்னர், முதல் நான்கு ஆண்டுகளுக்கு அவற்றிடமிருந்து தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்படக்கூடாது.

3. மாநில உச்சி வங்கி, மாவட்ட மத்திய வங்கி போன்ற பெரிய கூட்டுறவு நிறுவனங்களின் கணக்கு வழக்குகளை அடிக்கடி தணிக்கை செய்ய வேண்டும்.

4. தொடக்க நிலைச் சங்கங்களின் கணக்கு வழக்குகளையும் ஆறுமாதங்களுக்கொரு முறை இடைக்காலத் தணிக்கை செய்ய வேண்டும்.

5. தணிக்கையாளர்கள் தம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தவறுகளையெல்லாம் திருத்துவதற்கு உகந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளனவா என்பதை அவ்வப்போது அறிந்து. கொள்ள வேண்டும்.

6. கூட்டுறவுத் தணிக்கை விவரங்கள் கொண்ட ஆண்டு நூலை ஒவ்வொரு மாநிலக் கூட்டுறவுத்துறையும் வெளியிடல் நன்று

இப்பரிந்துரைகளை ஏற்றுக் கூட்டுறவுத் துறை செயல் படுமாயின், தணிக்கை முறை செம்மையாகும் என்பது உறுதி.

கூட்டுறவுக் கண்காணிப்பு

ஐரோப்பிய நாடுகளில் கூட்டுறவு இயக்கம் நன்கு வளர்ச்சி பெற்றுத் தன்னிறைவு பெற்றுள்ளது. கூட்டுறவுச் சங்க உறுப் பினர்கள் கூட்டுறவுத் தத்துவங்களை நன்கு உணர்ந்து அவற்றின்படி நடக்கின்றனர். எனவே, தத்தம் சங்கங்களைத் தாமே கண் காணித்து வருகின்றனர். கண்காணிப்பதற்கென்று தனி அமைப்போ அலுவலர்களோ அவசியமில்லை. ஆனால், நமது நாட்டில் கூட்டுறவு இயக்கம் இன்னமும் பக்குவமடைந்து முதிர்ச்சிபடையவில்லை. இந் நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் திறமையுடன் வெற்றி நடைபோட வேண்டுமாயின், அவற்றைக் கண்ணும் கருத்துமாய் மேற்பார்வையிடல் அவசியம். இதனை வலியுறுத்தும் வகையில் பல்வேறு குழுக்கள் தம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை நினைவு படுத்தல் நன்று.

1915ஆம் ஆண்டில் மக்ளகன் குழுவினர் கூறியிருப்பது: "கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களில் பெரும்பாலானோர் கல்வி கல்லாதோர்; எனவே, சங்கங்களுக்குப் பல்வேறு சிக்கல்கள் எழுவது

இயல்பு; சங்கத்தின் பணத்தைப் புழங்குவோருக்குப் பல சோதனைகள் தோன்றலாம். இதையெல்லாம் நாம் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். எனவே, கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகளில் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்; அதோடு, சலிப்புத் தன்மையுடன் கடினமாக உழைக்கவும் வேண்டும்.'' அவ்வாறாயின், கூட்டுறவுச் சங்கங்களின் கணக்கு வழக்குகளை மட்டுமன்றி, அவற்றின் போக்கினையும் நன்கு மேற்பார்வையிட்டு, திறமையான நிர்வாகம் ஏற்படுத்த ஏதாவதொரு ஏற்பாடு அவசியம் என்பதை இக் குழு வலியுறுத்தியுள்ளது.

கிராமக் கடன் ஆய்வுக் குழுவினரும் கூட்டுறவு இயக்கத்திற்குக் கண்காணிப்பு அவசியமெனக் கூறியுள்ளனர். கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைக் காட்டிலும், அவற்றை எப்படி முன்னேற்றுவது என்பதுதான் கண்காணிப்பின் குறிக்கோளாக இருக்க வேண்டுமென்று இக் குழுவினர் கூறியுள்ளனர். அதோடு, தணிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைகளை நீக்கி, கூட்டுறவு அடிப்படையில் சங்கங்கள் செயல் புரிவதற்கும் கண்காணிப்புத் தேவைப்படுகிறது. மேலும், கூட்டுறவு இயக்கம் நடைபெறும் முறையைப் பரிசீலனை செய்த ரிசர்வ் வங்கி கூறுவதாவது: ''கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் அமைய வேண்டுமாயின், நல்ல திறமை மிக்க கண்காணிப்பு அவசியம்''.

பணிகள் : கண்காணிப்புப் பணியில் தணிக்கைப் பணிகளில் சிலவும் அடங்கும்; அதோடு, கூட்டுறவுத் தத்துவங்களை உறுப்பினர்களுக்கு விளக்குவதும், புதிய சங்கங்களை அமைக்க ஏற்பாடு செய்து கூட்டுறவு இயக்கத்தை விரிவு படுத்துவதும் கண்காணிப்புப் பணிகளாகும். மேலும், கூட்டுறவுச் சங்கம் எப்படி நடைபெறுகிறது என்பதை மேற்பார்வையிட்டு, அச் சங்கம் திறமையாகச் செயல்படுவதற்குரிய உதவியும் செய்து, தணிக்கையாளர் குறிப்பிட்டுள்ள குறைகளைக் களைந்து நல்ல முறையில் பணியாற்ற உதவுவதுதான் கண்காணிப்பின் முக்கிய கடமையாகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் சட்டதிட்டப்படியும் விதிமுறைகளின் படியும் செயல்புரிகிறதா என்பதையும் சரிபார்க்கும் வேலையும் கண்காணிப்புப் பணியில் அடங்கும். அவ்வாறாயின், சங்கங்களின் அன்றாட வேலை நல்ல முறையில் நடக்க உதவி செய்வதும், அவைகளுக்குத் தேவைப்படும் நிதி உதவியை எவ்வாறு பெறுவது என்று ஆலோசனை கூறுவதும், கூட்டுறவுக் கண்ணோட்டத்தில் சங்கத்தின் அபிவிருத்திக்கு உதவுவதும் கண்காணிப்பாளரின் கடமையாகி

விடுகிறது. அதாவது, சங்கத்தின் கணக்கு வழக்குகள் முறையாக வைக்கப்பட்டுள்ளனவா, கடன் வாங்குவதற்கான மனுக்கள் முறைப்படி தயாரிக்கப்படுகின்றனவா, தணிக்கையாளர் குறிப்பிட்டுள்ள குறைகள் நிவர்த்திக்கப்பட்டுள்ளனவா, உறுப்பினர்களின் பொதுக்குழு கூட்டப்படுகிறதா, கொடுத்த கடனை உரிய காலத்தில் திரும்பிப் பெறுகின்றனவா என்பது போன்ற பல காரியங்களை மேற்பார்வையிடும் பொறுப்பு, கண்காணிப்பாளர் மேற்கொள்வதாகும்.

கூட்டுறவுச் சங்கம் எப்படிச் செயல்புரிய வேண்டுமோ அப்படிச் செயல் புரிகிறதா என்பதை நிச்சயிப்பதுதான் கண்காணிப்பாகும் என்று கூட்டுறவு நிர்வாகம் பற்றிய குழுவினர் கூறியுள்ளனர். அவர்களின் கருத்துப்படி கண்காணிப்பாளரின் கடமைகள் வருமாறு :

(1) சங்கத்தின் ரொக்கம், சொத்துகளனைத்தும் உரியமுறையில் பராமரிக்கப்படுகின்றனவா, நட்டம் ஏற்படக்கூடிய வாய்ப்புத் தவிர்க்கப்பட்டுள்ளதா என்பதையும் சங்கத்தின் சொத்துகளும் ரொக்கமும் தகாத வழியில் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும் மேற்பார்வையிடுதல்;

(2) கணக்கு வழக்குகளெல்லாம் சரியாக எழுதப்பட்டுப் பராமரிக்கப்பட்டுள்ளனவா என்பதைச் சரிபார்த்தல்;

(3) கூட்டுறவின் தத்துவங்களுக்கேற்பச் சங்கம் அமைக்கப்பட்டுச் செயல் புரிகிறதா என்பதைக் கண்காணித்தல்;

(4) சங்கத்தின் நடைமுறைகளில் ஏதாவது தவறு இருக்கிறதா என்பதை அலசிப் பார்த்தல்.

இவற்றையெல்லாம் அறிந்து கொள்வதற்குத் தணிக்கையாளரின் குறிப்புகள் உறுதுணையாக இருக்கின்றன. மேற்கூறிய நான்கு காரியங்களில் ஏதாவது தவறு காணப்படின், சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்து பேசி, அத்தவற்றைத் திருத்துவதற்கு உடனடியாகச் செய்யவேண்டியதென்ன என்பதைக் கண்காணிப்பாளர் எடுத்துரைக்கவேண்டும். வேண்டுமென்றே தவறு செய்யப்பட்டிருப்பின், அதை மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டும். அதோடு மட்டுமன்றி, கூட்டுறவு பற்றி விளம்பரம் செய்து, மக்களிடையே கூட்டுறவு மனப்பான்மையை வளர்த்து, புதிய கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்குவேண்டிய வழிவகைகளைச் செய்வதும் கண்காணிப்பாளரின் பணிகளாகும்.

கண்காணிப்புச் செய்வதற்கான அமைப்பு :

கூட்டுறவுச் சங்கங்களைக் கண்காணித்து வளர்க்கும் பொறுப்பை யார் மேற்கொள்ளவேண்டும் என்பதில் பல முரண்பாடான கருத்துகள் இருந்து வருகின்றன. ஐரோப்பிய நாடுகளில் தொடக்க நிலைச் சங்கங்களால் உருவாக்கப்பட்டுள்ள கூட்டமைப்புச் சங்கம்தான் இப் பணியை மேற்கொண்டுள்ளது. இந்தியாவிலும் அவ்வாறே நடைபெறுவதுதான் பயனுள்ளதாக இருக்குமென்று விவசாய ராயல் குழு உறுப்பினர்கள் கூறி வந்தனர். கூட்டுறவுத் தொடக்கச் சங்கங்கள் தத்தமக்கென்று மாவட்டக் கூட்டமைப்புகளை ஏற்படுத்தி, அவற்றிடமே கண்காணிப்புப் பணியை ஒப்படைத்துவிடல் நன்று என்பதை மத்திய வங்கி பற்றிய விசாரணைக் குழு கூறியிருக்கின்றது. எனவே, கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வையிட்டுக் கண்காணிக்கும் பொறுப்பு அந்தந்தக் கூட்டமைப்புகளிடமே ஒப்படைக்கப்பட்டுவிடுவது நல்லதென ஒரு சிலர் கூறுவர். அடுத்து, கூட்டுறவுக் கண்காணிப்பு வேலையை அந்தந்தப் பகுதியிலுள்ள ஊராட்சி ஒன்றிப்புகளிடம் ஒப்படைக்கலாம் என்ற கருத்தும் நிலவி வந்தது. ஆனால், கூட்டுறவுச் சங்கங்களும் ஊராட்சி ஒன்றிப்புகளும் மக்களாட்சி அடிப்படையில் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. எனவே, இவ் விரு அமைப்புகளில் ஒன்றை மற்றொன்றின் கண்காணிப்பின் கீழ்க் கொண்டுவருவது உகந்ததாகாது என்பதைப் பலர் ஒப்புக் கொண்டுள்ளனர். மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் சுய நிறைவுடையதாக வளர வேண்டுமாயின், அவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைப்பது நல்லதன்று.

நிற்க, கூட்டுறவுச் சங்கங்கள் தத்தம் கூட்டமைப்புகளால் கண்காணிக்கப்படும் முறை மகராட்டிர மாநிலத்தில் புகுத்தப் பட்டது. ஆனால் அம்முறை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. எனவே, கண்காணிக்கும் பொறுப்பைக் கூட்டுறவுச் சங்கஙளுக்குக் கடனளிக்கும் கூட்டுறவு நிறுவனங்களிடம் ஒப்படைப்பதுதான் சிறந்ததாகக் கருதப்படுகிறது. தொடக்க நிலைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைக் கண்காணிக்கும் பொறுப்பை அந்தந்த மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஏற்பதுதான் பொருத்தமுடையதாக இருக்கும் என்று கூட்டுறவுக் கடன் ஆய்வுக் குழுவினர் கூறியுள்ளனர். கூட்டுறவு நிர்வாக ஆய்வுக் குழுவினரும் இக் கருத்தை வலியுறுத்தியுள்ளனர். ஏனைய கூட்டுறவுச் சங்கங்களைக் கண்காணிக்கும் பொறுப்பை அவற்றின் கூட்டமைப்புகளிடமே ஒப்படைத்து விடுவது நல்லது என்று கூட்டுறவு நிர்வாக ஆய்வுக் குழு கூறி

யுள்ளது. அதோடு, கண்காணிக்கும் பொறுப்பை மேற்கொள்வதற்கென்று முறையானதோர் ஏற்பாடு அவசியம்; அதுவரை இப்பொறுப்பை கூட்டுறவுத் துறையினரிடமே ஒப்படைப்பது நன்று என்றும் இக் குழு சிபாரிசு செய்துள்ளது.

நடைமுறையிலுள்ள கண்காணிப்பு முறை

கூட்டுறவுத் தணிக்கையும் கண்காணிப்பும் அந்தந்த மாநிலக் கூட்டுறவுத் துறையினரால்தான் பெரும்பாலும் நடைபெற்று வருகிறது. ஒரு சில மாநிலங்களில் மட்டும் சடன்தரும் மாவட்ட அல்லது உச்சி வங்கிகளே தம் பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களைக் கண்காணித்து வருகின்றன. வேறு சில மாநிலங்களில் தனிப்பட்ட அலுவலர்களே மேற்பார்வை செய்து வருகின்றனர். அவ்வாறு தனிப்பட்ட அலுவலகர்கள் அல்லது அமைப்புகளை கொண்டு மேற்பார்வையிடும் முறை முதன்முதலில் பம்பாயில் தான் புகுத்தப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களைக் கண்காணிப்பதற்கென்று உத்தரவாதச் கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டன. இவை தம்முடன் இணைக்கப்பட்டிருந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு உத்தரவாதம் அளித்து, சடன் பெற்றுத் தந்தன. ஆனல், இம் முறை தோல்வியடைந்ததால் உத்தரவாதக் கூட்டமைப்புகள் கலைக்கப்பட்டுவிட்டன. அதற்குப் பதிலாக ஒவ்வொரு வட்டாரத்திலும் கூட்டுறவுச் சங்கங்களைக் கண்காணிப்பதற்சென்று கண்காணிப்புச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவை கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றிற்கு மேல்மட்டத்தில் மாவட்ட அடிப்படையில் மாவட்டக் கண்காணிப்புச் சங்கங்களும் உள்ளன. கூட்டுறவுக் கடன் சங்கங்கள், பல நோக்குச் சங்கங்கள் அனைத்தும் கண்காணிப்புச் சங்கங்களோடு இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கண்காணிப்புச் சங்கத்திற்கும் ஒரு கண்காணிப்பாளர் உள்ளார். இவருக்கு அரசாங்கமே ஊதியமளிக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்துவதும் விரிவாக்குதலுமே இவரது பணிகளாகும். ஏனைய வேலைகளையெல்லாம் கூட்டுறவுத் துறைப் பணியாளர்கள்தாம் செய்து வருகின்றனர். மேலும், விவசாயக் சடன் சங்கங்கள், பல நோக்குச் சங்கங்கள், சேவைச் சங்கங்கள் போன்ற ஏதாவதொரு வகைச் சங்கங்களை மட்டும்தான் கண்காணிப்புச் சங்கம் மேற்பார்வையிட்டு வருகிறது. ஏனைய விவசாயச் சங்கங்கள், விவசாய சம்பந்தமில்லாத மற்றச் சங்கங்கள் அனைத்தையும் கூட்டுறவுத் துறையினரே கண்காணித்து வருகின்றனர்.

ஆந்திரா, தமிழ்நாடு, மத்தியப் பிரதேசம், ஒரிஸா ஆகிய மாநிலங்களில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்தரும்

நிறுவனங்கள் கடன் சங்கங்களை மட்டும் மேற்பார்வையிட்டுக் கண் காணித்து வருகின்றன. ஏனைய வகைக் கூட்டுறவுச் சங்கங்களைக் கூட்டுறவுத் துறையினர்தாம் கண்காணிக்கின்றனர். பீஹாரிலும் கூட்டுறவுக் கடன் சங்கங்களைக் கண்காணிக்கும் பொறுப்பு மத்தியக் கூட்டுறவு வங்கிகளிடம் கொடுக்கப்பட்டுவிட்டது. கூட்டுறவு மத்திய வங்கிகளுக்குத் தேவைப்படும் கண்காணிப்பு அலுவலர்களை அரசாங்கமே கொடுத்து வருகிறது. அச் செலவையும் அரசாங்கமே மேற்கொள்கிறது. மேற்கு வங்காளத்திலும் கூட்டுறவுத் தலைமை வங்கிகள்தாம் கடன் சங்கங்களைக் கண்காணிக்கின்றன. பஞ்சாப்பிலும் ஹரியாணாவிலும் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கூட்டுறவுத் துறையினராலும் கூட்டுறவு மத்திய வங்கிகளாலும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. ராஜஸ்தானிலும் கண்காணிப்பு வேலை முழுவதையும் கூட்டுறவுத் துறையினரே ஏற்றுக்கொண்டுள் ளனர்.

கண்காணிப்புச் செலவு

இதுவரை கூட்டுறவுச் சங்கங்களை மாநிலக் கூட்டுறவுத் துறை யினரே கண்காணித்து வந்தனர். எனவே, அதற்குரிய செலவுத் தொகையை அந்தந்த மாநில அரசாங்கமே கொடுத்து வருகிறது. ஒரு சில மாநிலங்களில் மட்டும் தணிக்கைக் கட்டணமென்றும் கண் காணிப்புக் கட்டணம் என்றும் சிறு தொகையைக் கூட்டுறவுச் சங்கங்களே அரசாங்கத்திற்கு அளித்து வருகின்றன. ஆனால், தற்போது கூட்டுறவுச் சங்கங்களில் பலவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பு மாவட்ட மத்திய வங்கிகளுக்கும் கூட்டுறவுக் கூட்டமைப்புச் சங்கங்களுக்கும் மாற்றப்பட்டு வருகிறது. ஆனால், கண்காணிப்புச் செலவை இவற்றால் தாங்கமுடியாது. இதற்கு நிவாரணமாகக் கூட்டுறவு நிர்வாகக் குழுவினர் பின்வரும் சிபாரிசைச் செய்துள்ளனர்:—விவசாயக் கடன் சங்கங்களைக் கண் காணிக்கும் பொறுப்புக் கூட்டுறவு மத்திய வங்கிகளுக்கு மாற்றப் பட்டிருக்கும் இடங்களிலெல்லாம் கண்காணிப்பாளர் அதிகமாகத் தேவைப்படுவர்; எனவே, அதற்குரிய செலவைத் தற்போது அரசாங்கம் கொடுத்து வருவதைப்போல் தொடர்ந்து கொடுக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களை இதுவரை கூட்டுறவுத் துறை யினரே கண்காணித்து வந்து இனிமேல் அப்பொறுப்பை மத்திய வங்கிகளுக்கு மாற்றுவதாயிருந்தால், கண்காணிப்புச் செலவு முழு வதையும் ஓராண்டிற்கு அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டும்; இரண்டாவது ஆண்டில் அச் செலவில் 75 சதவீதத்தையும், மூன்றாவது ஆண்டில் 50 சதவீதத்தையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதற்குப்பின் 5 ஆண்டுகள்வரை மொத்தச்

கண்காணிப்புச் செலவில் 50 சதவீதத்தை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

கண்காணிப்பு முறையிலுள்ள ஒருசில குறைகள்

கூட்டுறவுச் சங்கங்கள் எந்த அளவுக்குக் கண்காணிக்கப்பட்டுப் பேணப்படுகின்றனவோ அதைப் பொறுத்துத்தான் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியடையவும் வலுப்பெறவும் முடியும். ஆனால், தற்போது நடைமுறையிலுள்ள கண்காணிப்பு முறை குறையுடைய தாயும் அதிருப்தி அளிப்பதாயும் உள்ளது. கண்காணிப்பாளருக்கு அளிக்கப்படும் வேலைப் பளு தாங்கமுடியாததாயுள்ளது. எந்த அளவு வேலை தருவது என்ற முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை. அதோடு, கண்காணிப்பு வேலை செய்யும் அலுவலர்கள் மிகக் குறைவு. இதனால் தமக்குரிய வேலையை முழுமையாயும் செம்மை யாயும் அவர்களால் செய்ய முடியாமல் போய் விடுகிறது. ஒரு சில இடங்களில் கண்காணிப்பாளர்கள் கூட்டுறவு அபிவிருத்தி வேலையும் கொடுக்கப்படுகின்றனர். இதனால் அவர்களது கண் காணிப்பு வேலை பாதிக்கப்படுகிறது. அதே சமயத்தில் கண் காணிப்பு அலுவலர்களில் சிலர் சங்கங்களின் கடன் மனுக்களைத் தயார் செய்தல், கடனுகக் கிடைத்த தொகையைப் பிரித்துக் கொடுத்தல், கொடுத்த கடனைத் திரும்பப் பெறுதல் ஆகிய வேலை களிலேயே அதிக அக்கறை கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. மேலும், பல பகுதிகளில் போதிய அனுபவமும் பயிற்சியும் இல்லா மல் பல பணியாளர்கள் கண்காணிப்புப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று அகில 'இந்தியக் கிராமக் கடன் ஆய்வுக் குழுவினர் (1969) சுட்டிக் காட்டியுள்ளனர். அதோடு, மத்திய வங்கியினால் நியமிக்கப்படும் கண்காணிப்பாளர்களில் பலர் நகர்ப் புற அனுபவம் வாய்ந்தவர்களேயன்றி, கிராமப்புறங்களில் குறிப் பாக விவசாயத் துறையில் எவ்வித அனுபவமும் இல்லாதவர்களா யிருக்கின்றனர் என்றும் இக் குழுவினர் எடுத்துக் கூறியுள்ளனர். இக்குறைகளைப் போக்குவதற்கு இந்தக் குழுவினர் தரும் உபாயம் வருமாறு: சிறந்த வேளாண்மை முறை பற்றியும், சாகுபடி சம்பந்தப்பட்ட சகல காரியங்களைப் பற்றியும் கண்காணிப்பாளர் அறிந்துகொள்ளும் விதத்தில் அவர்களுக்கு அவ்வப்போது பயிற்சி யளிக்கவேண்டும்.

34. கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும்

கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றி பெறவேண்டுமானல் உறுப்பினர்கள் கூட்டுறவைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும்; அதோடு, கூட்டுறவுச் சங்கங்களில் நம்பிக்கை கொண்டு ஆதரவு தரவேண்டும். இரண்டாவதாக, அச் சங்கங்கள் செய்யும் பணிகளும வேலைகளும் நிறைய இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அச் சங்கங்களை நிர்வகிப்பவர்கள் பயிற்சியும் திறமையும் பெற்றவர்களாக விளங்க வேண்டும். உறுப்பினர்கள் விஷயம் தெரிந்தவர்களாயும் நம்பிக்கை யுள்ளவர்களாயும் இல்லாமல், ஏதோ நடக்கிறபடி நடக்கட்டும் என்று அலட்சியமாயிருப்பார்களாயின், கூட்டுறவுச் சங்கங்கள் தம் அம்சங்களையெல்லாம் இழந்து ஒரு சில சுயநலக்காரர்களின் தொழிலகமாக மாறிவிடும். அப்போது அச் சங்கங்களை மூட வேண்டியதைத் தவிர வேறு வழி இராது. அதேபோல் சங்கங்கள் திறமையாகச் செயல் படவில்லையென்றாலும் உறுப்பினர்கள் நம்பிக்கை இழந்துவிடுவர். எனவே, உறுப்பினர்கள் விஷயம் தெரிந்தவர்களாயும், நிர்வாகிகள் திறமை பெற்றவர்களாயும் இருந்தால்தான் கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ச்சி பெற்று முன்னேற முடியும். இதை உணர்ந்துதான் 1928-ல் நியமிக்கப்பட்ட விவசாயக் குழு, கூட்டுறவுச் சங்கங்களின் வெற்றியும் தோல்வியும் ஊதியமின்றி அவற்றை நிர்வகிப்போரின் உற்சாகத்தையும் திறமையையும் பொறுத்ததென்று கூறியுள்ளது; அதோடு. கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள அரசாங்கப் பணியாளர்களின் பயிற்சியையும் திறமையையும் பொறுத்ததென்றும் திட்டவட்டமாகக் கூறியுள்ளது. அதைத் தொடர்ந்து, 1935ஆம் ஆண்டிலேயே திருமால்கம் டார்லிங் அவர்கள் அரசாங்கத்திற்கு அளித்த அறிக்கையில் கூட்டுறவு இயக்கம் வெற்றி பெறவேண்டுமானால், அதன் பணியாளர்களுக்கு நல்ல பயிற்சி வேண்டுமென வலியுறுத்தியிருக்கிறார். அதோடு, அரசாங்கப் பணியாளர்களுக்கு மட்டுமன்றி, இதர அலுவலர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் பயிற்சி அளிக்கும்

திட்டமொன்றையும் அவர் அரசாங்கத்திற்கு அளித்திருக்கிறார். 1946-ல் கூட்டுறவுத் திட்டக் குழுவும் கூட்டுறவுத் துறையில் கல்வி வசதியும் பயிற்சி வாய்ப்பும் போதாதென்று கூறியுள்ளது.

பணியாளர் பயிற்சி

மேற்கூறியவதைப் போன்று பல்வேறு குழுக்களின் பரிந்துரைபபடி ஒரு சில மாநிலங்கள் கூட்டுறவுப் பயிற்சி அளிககும் திட்டத்தில் ஈடுபட்டு அதற்கான முயற்சிகளையும் செய்யலாயின. எனினும், நாடு சுதந்திரமடையும் வரை கூட்டுறவுக் கல்வியும் பயிர்சியும் வேண்டிய அளவு நம் நாட்டில் இல்லாமலிருந்தன. சுதந்திரத்திற்குப் பின்னர்த்தான் கூட்டுறவுப் பயிடசியைப் பற்றி நாடு அக்கறை கொண்டது. 1947-ல் பம்பாய் மாநிலக் கூட்டுறவு நிறுவனம் பூனாவில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி ஒன்றைத் தொடங்கியது. 1952-ல் கூட்டுறவுக் கடன் பற்றிய ஆய்வுக் குழுவின் ஆலோசனைப்படி ரிசர்வ் பாங்கு ஒரு பயிற்சித் திட்டத்தைத் தொடங்கியது. இத் திட்டப்படி, பூனாவிலிருக்கும் கூட்டுறவுப் பயிறசிக் கல்லூரியில் உயர்மட்டக் கூட்டுறவு அதிகாரிகளுக்கென்று குறுகிய காலப் பயிற்சி அளிக்கப் படலாயிற்று.

அதைத் தொடர்ந்து 1953ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கமும் ரிசர்வ் பாங்கும் சேர்ந்து கூட்டுறவுக் கல்வியைப் பரப்பவும் உயர் மட்ட அதிகாரிகளுககு நல்ல பயிற்சி அளிக்கவும் வேண்டுமென் பதற்காக ஒரு மையக் குழுவை ஏற்படுத்தின. இக் குழு, கூட்டுறவுப் பயிற்சி பெறவேண்டிய அதிகாரிகளை உயர்நிலை அதிகாரிகள், இடைநிலை அலுவலர்கள், இளநிலை அதிகாரிகளென்று அவர்கள் வகிக்கும் பதவிக் கேற்பப் பாகுபடுத்தியது. மாவட்ட நிலையிலும் அதற்கு மேற்பட்ட நிலையிலும் பணியாற்றும் உயர்நிலை அதிகாரி களுக்கும், கூட்டுறவு இயக்கத்தின் சட்ட நிபுணர்களுக்கும் கூட்டுறவு இயக்கத்தை வழி நடத்தித் தம் கட்டுப்பாட்டிற்குள் செயல் படுத்துகின்ற பெரிய அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிப்பதற் கென்று பூனாவிலுள்ள பயிற்சிக் கல்லூரி விரிவாக்கப்பட்டது. இடைநிலையிலுள்ள பணியாளர்களுககுப் பயிற்சி அளிப்பதற் கென்று சென்னை, பூனா, ராஞ்சி, மீரத், இந்தூர் ஆகிய ஐந்து இடங்களிலும் பிராந்தியப் பயிற்சி நிலையங்கள் தொடங்கப் பட்டன. இவைமட்டுமன்றி வட்டார மட்டத்தில் பணிபுரியும் அதிகாரிகளுக்கென்றும் 8 பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் சராசரி 100 பேருக்கு 11 மாதப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப் பயிற்சி நிலையங்கள் சிலவற்றில் கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்க அதிகாரிகளுக்கும் நிலவள வங்கி

அதிகாரிகளுக்கும் ஒரு சில மாதத் தனிப் பயிற்சியும் அளிக்கப் படுகிறது. கடைநிலைத் தனிக்கையாளர்கள், கண்காணிப் பாளர்கள், விற்பனையாளர்கள் போன்ற கீழ்நிலை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கென்று மாநில அரசாங்கங்கள் மையக் குழுவுடன் கலந்தாலோசித்து முக்கியமான சில இடங்களில் பயிற்சி நிலையங்களைத் தொடங்கியுள்ளன.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட பயிற்சி நிலையங்கள் அனைத்தும் எவ்வாறு இயங்குகின்றன, கூட்டுறவுத் துறையின் வருங்கால வளர்ச்சிக்கு இக் கல்வி நிலையங்களும் பயிற்சி நிலையங்களும் போது மானதாயிருக்குமா, இல்லையெனின் அவற்றை மேலும் விரிவாக்கு வதெப்படி என்பதையெல்லாம் ஆராய்ந்து ஆலோசனை கூறு வதற்காக 1960ஆம் ஆண்டில் மத்திய அரசாங்கம் ஓர் ஆய்வுக் குழுவை நியமித்தது. இக் குழுவின் பரிந்துரைப்படி, கூட்டுறவுக் கல்வியையும் பயிற்சியையும் அளிக்கும் கல்லூரிகளையும் நிலையங் களையும் அரசாங்கமே ஏற்று நடத்தாமல், அவற்றைப் பரவலாக்கி, கூட்டுறவுக் கல்விப் பொறுப்பை இந்திய தேசியக் கூட்டுறவு யூனியனிடமே அரசாங்கம் ஒப்படைத்து விட்டது. இந்த யூனியன் கூட்டுறவுப் பயிற்சிக்கான வேலைகளையெல்லாம் செய்வதற்கென்று ஒரு கழகத்தை ஏற்படுத்தியுள்ளது. அக் கழகம் செய்து வரும் பணிகள் வருமாறு:

(1) நம் நாட்டிலுள்ள கூட்டுறவுத் துறைகள், நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிவோருக்கு வேண்டிய பயிற்சித் திட்டத்தை உருவாக்கி, அதைச் செயல்படுத்தி வருகின்றது.

(2) கூட்டுறவுக் கல்வி, பயிற்சித் திட்டங்களனைத்தும் ஒழுங் காக நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணித்து எல்லா நிலையங்களிலும் ஒரேவிதமான கல்வியும் பயிற்சியும் இருக்குமாறு கவனித்துக் கொள்கிறது. குறிப்பாக, கூட்டுறவுப் பயிற்சிக்கும் கல்விக்கும் வேண்டிய பாடத்திட்டத்தை உருவாக்கி, எந்த முறையில் பயிற்சியாளர்கள் தேர்வு எழுத வேண்டும் எத்தனை மதிப் பெண்கள் பெற்றால் தேர்ச்சிச் சான்றிதழ் கொடுக்க வேண்டும் என்பனபோன்ற தேர்வு முறையையும் தயாரித்து வெளியிடுகிறது. இதன் வழியாகக் கூட்டுறவுக் கல்வி பயிற்சி ஆகியவற்றின் தரம் குறைந்து விடாமல் கண்காணிக்கிறது.

(3) நாடு முழுவதிலும் கூட்டுறவுத் துறையிலும் நிறுவனங் களிலும் பணியாற்றும் உயர்நிலை அதிகாரிகளுக்கு ஒரே பயிற்சியை அளிப்பதற்கென்றும், கூட்டுறவு பற்றிய மேற்படிப்பை

மட்டுமன்றி, ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்வதற்கென்றும் ஒரு மத்தியக் கல்வி நிறுவனத்தைத் தொடங்கி நடத்திவருகிறது.

(4) கூட்டுறவு பற்றிய பல்வேறு பாடத் துறைகளில் இடைநிலையிலுள்ள அதிகாரிகளுக்கு சிறப்புப் பயிற்சி அளித்து வருகிறது.

(5) மத்தியக் கல்வி நிறுவனத்தில் ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்ள வசதிசெய்து தருவதோடு, ஆராய்ச்சிப் படிப்பை ஒரே தரமானதாகவும் பாதுகாத்து வருகிறது.

(6) இடைநிலைப் பதவியாளர்களுக்குப் பயிற்சியளிக்கிறது

(7) கூட்டுறவுப் பயிற்சிகளெல்லாம் எவ்வளவு தூரம் பயனளித்து வருகின்றன என்பதைக் கணக்கிட்டு, அப் பயிற்சிகளை விருத்தி செய்வதற்கான வழி முறைகளையும் எடுத்துக் கூறுகிறது.

(8) கூட்டுறவுப் பயிற்சியையும் ஆராய்ச்சியையும் மேம் படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை தருகிறது.

கூட்டுறவுப் பயிற்சி அளிக்கும் குழு பூனாவிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியை விரிவுபடுத்தி, கூட்டுறவுக் கல்வியையும் ஆராய்ச்சி வசதிகளையும் தரும் ஒரு தேசியக் கூட்டுறவுக் கல்லூரி யாக ஆக்கியுள்ளது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கென்று 1964-ல் இந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட நுகர்வோர் தொழில் பற்றிய மத்திய நிர்வாக நிலையமும் இக் கூட்டுறவுப் பயிற்சிக் குழுவிடமே ஒப்படைக்கப்பட்டது. இவ் விரு கல்வி நிறுவனங்களையும் கூட்டுறவுப் பயிற்சிக் குழு இணைத்து, வைகுந்த மேத்தா தேசியக் கூட்டுறவு நிர்வாக நிலையம் என்ற புதுப் பெயரைத் தந்துள்ளது. இப் புதிய நிலையம் 10 மாத காலப் பயிற்சியைக் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு அளித்து வருகிறது. அதோடு, உயர்நிலை அதிகாரிகளுக்கென்றும், நுகர்வோர் சங்கப் பணியாளர்களுக்கென்றும் தனித்தனிப் பயிற்சி அளித்து வருகிறது. மேலும் பல குறுகிய காலப் பயிற்சி முகாம்களையும் கூட்டுறவுப் பிரச்சினைகளைப் பற்றிய ஆராய்ச்சியையும் நடத்தி வருகிறது.

இடைநிலைப் பணியாளர்களுக்கு லக்னோ, கல்யாணி, பூனா, சென்னை, பாட்னா, இந்தூர், ஹைதராபாத், நாகபுரி, பெங்களூர்,

கோட்டா, டெராடூன் ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இக் கல்லூரிகளில் அடிப்படையான பொதுக் கூட்டுறவுத் தத்துவங்கள் போதிக்கப்படுகின்றன. இதில் சேரும் பணியாளர்கள் 36 வாரப் பயிற்சி பெறுகின்றனர். 24 வாரம் அந்தந்தக் கல்லூரிகளிலேயே அவர்களுக்குப் பாடம் சொல்லித் தரப்படுகிறது; எஞ்சிய 12 வாரங்கள் அவர்கள் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் சங்கங்களுக்கும் சென்று நேரடியாகவே கூட்டுறவுச் செயல்முறைகளைத் தெரிந்து கொள்கின்றனர்.

கூட்டுறவு பற்றிய பல்வேறு பாடங்களில் குறுகிய காலப் பயிற்சி முறையையும் இக்குழுத் தொடங்கியுள்ளது. சான்றாக, கூட்டுறவு விற்பனை பற்றிய பயிற்சி பல கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகளில் அளிக்கப்படுகிறது. அதேபோல் நிலவள வங்கி முறையைப் பற்றியும், கூட்டுறவுத் தணிக்கைபற்றியும், கூட்டுறவுத் தொழில் பாடமும் தனியாகச் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

இது தவிர, தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், வேலை ஒப்பந்தக் கூட்டுறவு, பால் பண்ணை, கூட்டுறவுக் கணக்குத் தணிக்கை போன்றனவை பற்றிய சிறப்புப் பயிற்சித் திட்டங்களையும் இக்குழுத் தொடங்கியுள்ளது.

இளநிலை அலுவலர்களுக்கும் பல்வேறு மாநிலங்களிலுள்ள 67 கூட்டுறவுப் பள்ளிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப் பள்ளி ஒவ்வொன்றிலும் 40 முதல் 80 பணியாளர்கள் வரை பயிற்சி பெறுகின்றனர். இப் பயிற்சி எவ்வளவு காலத்திற்கு என்பது அந்தந்தப் பள்ளியின் நிலையைப் பொறுத்தது. பொதுவாக 6 மாதம் முதல் 12 மாதம் வரை இப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ரிசர்வ் பாங்கு அளிக்கும் பயிற்சி

தொடக்கத்தில் இந்திய அரசாங்கத்துடன் சேர்ந்து கூட்டுறவுப் பயிற்சிக்கென மையக் குழு ஒன்றை அமைத்தது ரிசர்வ் பாங்கு. எனினும், கூட்டுறவுப் பயிற்சியில் அது தொடர்ந்து அக்கறை காட்டி வருகிறது. வங்கியாளர்களுக்கென்று பம்பாயில் அமைக்கப்பட்டுள்ள பயிற்சிக் கல்லூரியில் 1965-66-ல் கூட்டுறவு வங்கிகளின் நிர்வாகிகளுக்கும் பயிற்சி அளித்தது. இக்கல்லூரி தற்போது பூனாவிற்கு மாற்றப்பட்டுள்ளது. கூட்டுறவு வங்கி நிர்வாகிகளுக்கு வங்கிகள் செயல்படும் நவீன முறைகளைப் பற்றி இக்கல்லூரியில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், இக்கல்லூரியில் மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பெரும்பாலும், தணிக்கை செய்யும் முறை, தவறு ஏதுமிருந்தால்

மேற்கொண்டு செய்யவேண்டிய நடவடிக்கைகள் ஆகியவை பற்றித் தான் இவ்வதிகாரிகள் பயிற்சி பெறுகின்றனர். மாநிலக் கூட்டுறவு வங்கியின் அதிகாரியுடன் ரிசர்வ் பாங்கு எந்தக் கூட்டுறவு வங்கியை யும் தணிக்கை செய்யமுடியும். இதற்கான அதிகாரம் ரிசர்வ் பாங்குக்கு வழங்கப்பட்டுள்ளது.

உறுப்பினருக்குப் பயிற்சி

உறுப்பினர்களுக்கும் கூட்டுறவுக் கல்வி போதிக்கும் திட்டம் 1956-ல் தொடங்கப்பட்டது. அவ்வாண்டில் அகில இந்தியக் கூட்டுறவு யூனியன் உறுப்பினர்களுக்குக் கூட்டுறவுக் கல்வியைப் போதிப்பதற்ென்று மூன்று மாநிலங்களில் 6 இடங்களைத் தேர்ந் தெடுத்தது. இவ்விடங்கள் இத்திட்டத்திற்கு முன்னோடிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இத்திட்டப்படி கூட்டுறவுச் சங்கப் பதவி யாளர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள், முக்கியமான சங்க உறுப்பினர்கள் ஆகியோருக்கு அவரவர்களின் பணிகள், கடமைகள், பொறுப்புக்கள் என்னென்ன என்பது பற்றி எடுத்துரைக்கப் பட்டன. நான்கு வார காலம் அவர்களுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டன. முக்கியமான கூட்டுறவு ஆசிரியர்களும் செயலாளர்களும் அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத் தனர். பல சங்கங்களுக்கு முக்கியமானதொரு இடத்தில் இவ் வகுப்புகள் நடத்தப்பட்டன. இவ்வகுப்புகளில் ஏராளமான பேர் படித்துப் பயனடைந்திருக்கின்றனர். 1963ஆம் ஆண்டு வரை 63,750 சங்கச் செயலாளர்களுக்கும், 2·6 இலட்சம் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும், 19·4 இலட்சம் உறுப்பினர்களுக்கும், இத் திட்டப்படி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், உறுப்பினர்களுக்கும் சங்கப் பதவியாளர்களுக்கும் அளிக்கப்பட்ட பயிற்சித் திட்டத்தை 1964-ல் தேசியக் கூட்டுறவு யூனியன் மாற்றி அமைத்துள்ளது. இப் புதிய திட்டப்படி, ஓரளவு ஊதியமோ ஊதியமே பெறாமலோ பணியாற்றி வரும் கூட்டுறவுச் சங்கப் பதவியாளர்களுக்கு அந்தந்தக் கூட்டுறவு யூனியனைச் சேர்ந்த அதிகாரிகளே பாடம் சொல்லித் தருகின்றனர். இதற்காக நடத்தப்படும் வகுப்புகள் அந்தந்த வட்டாரத் தலைநகரில் வட்டார வளர்ச்சித் திட்டப் பணியாளர்களின் உதவியால் நடத்தப்படு கின்றன. கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளுக்கும் செயலாளர்களுக்கும் மட்டுமன்றி, ஆர்வமுள்ள உறுப்பினர்களுக்கும் இவ்வகுப்புகள் நடத் தப்படுகின்றன. இவ்வகுப்புகளுக்கு வந்து பயிற்சி பெறும் ஒவ்வொரு வருக்கும் நாளொன்றுக்கு 1½ ரூபாய் வீதம் உதவித் தொகை அளிக் கப்படுகிறது. ஒவ்வொரு வகுப்பிலும் சராசரி 40 பேர் பயிற்சி பெறுகின்றனர். மேலும், நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கும் இதரப்

பதவியாளர்களுக்கும் 3 நாள்களுக்குப் பதிலாக 5அல்லது 7 நாள்கள் வரை பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்புதிய திட்டப்படி சாதாரண உறுப்பினர்களுக்குப் பயிற்சி கிடையாது. அவர்களுக்கு அந்தந்தக் கிராமங்களிலேயே கிராம அபிவிருத்திப் பணியாளர்கள் பயிற்சி கொடுக்கின்றனர். இதற்குக் கிராமக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளும் செயலாளர்களும் உதவி செய்கின்றனர். அரசாங்கப் பணியாளர்களல்லாத கூட்டுறவு அதிகாரிகள் எவரும் இப்பயிற்சியை அளிக்க அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

மாநிலக் கூட்டுறவு யூனியன்கள் நடத்தும் கூட்றடுவுக் கல்வி, பயிற்சி ஆகிய திட்டங்களனைத்தும் தேசியக் கூட்டுறவு யூனியனின் மேற்பார்வையில்தான் நடைபெறுகின்றன. எனவே, எல்லா இடங் களிலும் ஒரே மாதிரியான பயிற்சி அளிக்கப்படுவதற்குரிய நடவடிக் கைகளை இந்த யூனியன் அவ்வப்போது மேற்கொள்கிறது. இத் திட்டத்திற்கு வேண்டிய நிதியனைத்தையும் மத்திய அரசாங்கமே தந்து உதவுகிறது. ஏறக்குறைய எல்லா மாநிலங்களிலுமே புதிய திட்டப்படிதான் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1967 டிசம்பர் வரை அரசாங்கப் பணியாளர்களல்லாத 39.59 இலட்சம் பேர் பயிற்சி பெற்றுள்ளனர். நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஊதியம் பெறுமல் பணியாற்றும் சங்கச் செயலாளர்கள், நிர்வாகிகள், இன்னும் பிற பணியாளர்கள் ஆக மொத்தம் 20 இலட்சம் பேருக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

35. கூட்டுறவு இயக்கத்தைச் சீர்படுத்தவேண்டிய அவசியம்

நம் நாட்டில் நடைபோட்டு வரும் கூட்டுறவு இயக்கம் ஓரளவு வளர்ச்சி பெற்று வலிமையும் பொலிவும் அடைந்துள்ளது என்பதை எவரும் மறுக்க இயலாது. எனினும், இவ் வியக்கம் செயல்படும் விதத்தில் பல குறைகள் உள்ளன என்பதையும் அனைவரும் ஒப்புக் சொள்வர். இக்குறைபாடுகளையெல்லாம் நீக்கும் விதத்தில் கூட்டுறவு இயக்கத்தைச் சீர்படுத்திவிட்டால அது வேகமாக வளர்ந்து ஏனைய நாடுகளோடு ஒப்பிடக்கூடிய அளவிற்கு முன்னேறும் என்பது திண்ணம். எனவே, அக்குறைகள் யாவை என்பதையும் அவற்றை நீக்குவதற்குரிய வழிமுறைகள் எவை என்பதையும் இவ்வதிகாரத்தில் சுருக்கமாகக் காண்போம்.

போதிய கல்வி அறிவின்மை: நம் நாட்டில் கூட்டுறவு இயக்கம் ஆமை வேகத்தில் நடைபெறுவதற்கு முக்கியக் காரணம், நம் மக்களில் பெரும்பாலானோர் கல்வி அறிவு இல்லாதவர்களா யிருப்பதுதான். மக்களின் கல்வி அறிவு வளர்வதற்கு முன்பே கூட்டுறவு இயக்கத்தை அரசாங்கமே உருவாக்கி விட்டது என்று ஒரு சிலர் கூறலாம். அதுவும் ஓரளவு உண்மைதான். ஏனெனில், கல்வி அறிவு குறைந்துள்ள எந்த நாட்டிலும், 'தன் கையே தனக் குதவி,' 'ஒருவருக்கொருவர் சமரச உதவி' என்ற கூட்டுறவு வேதாந் தத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு மனப்பக்குவம் இராது பெரும்பாலானோர் கல்வி அறிவற்றவர்களாயிருக்கின்ற காரணத்தால், கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் நுட்பம் இல்லாமல் போய்விடு கிறது சங்கத்தின் தலைவர், செயலாளர் பதவிக்குப் படித்தவர்கள் கிடைப்பது அரிதாயுள்ளது. இதனால் சங்க உறுப்பினர்களுக்குக் கூட்டுறவுத் தத்துவங்களைப் புகுத்துவதும் கடினமாகிவிடுகிறது. மேலும், கல்வி அறிவில்லாத உறுப்பினர்களாக இருப்பதால் சங்க நடவடிக்கைகளைச் சரியான முறையில் செய்ய முடிவதில்லை;

இதனால் செல்வாக்கு மிக்க ஒரு சிலர் சங்கத்தைத் தம் சுயநலத்திற்காகப் பயன்படுத்த முற்படுகின்றனர். அப்போது, கூட்டுறவுச் சங்கம் தன் சிறப்பியல்புகளையே இழந்துவிடவேண்டியதாயுள்ளது.

போதுமான அக்கறையின்மை : சங்கங்களில் உறுப்பினர்களாயிருப்பார் அவற்றில் நம்பிக்கையும் அக்கறையும் கொண்டிருப்பது மிக அவசியம். ஆனால் நம் நாட்டின் சங்க உறுப்பினர்களோ ஏதோ நடப்பது நடக்கட்டுமென்று அக்கறையும் நம்பிக்கையுமில்லாது இருந்து வருகின்றனர். கூட்டுறவு மனப்பான்மையும் கூட்டுறவு பற்றிய அறிவும் இல்லாததுதான் இதற்குக் காரணம். இக்குறைபாடுகளையெல்லாம் உறுப்பினருக்குக் கூட்டுறவுக் கல்வியையும் மனப்பான்மையையும் புகுத்துவதன் வாயிலாகத்தான் நீக்க முடியும். நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கூடப் பொறுப்பின்றி அசட்டைத்தனமாக இருந்து வருவதாகவும், ஒரு சிலர் வேண்டுமென்றே தவறுகள் செய்வதாகவும் கூடப் புகார் செய்யப்படுகிறது.

கூட்டுறவுக் கடனுக்குத்தான் முக்கியத்துவம் :

நமது கூட்டுறவு இயக்கத்தின் குறைபாடுகளில் குறிப்பிடத்தக்க பிறிதொன்று, பெரும்பாலும் கடன் சங்கங்களுக்குத்தான் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது; அதுவும் கிராமக் கடன் சங்கங்கள்தாம் அதிகமாகத் தொடங்கப்பட்டுள்ளன. வெறும் கடன் உதவி செய்வதனால் மட்டும் விவசாயிகளின் நிலையை உயர்த்தி விடமுடியாது. கடன் பெறும் விவசாயிகளும் உரிய காலத்தில் தம் கடனைத் திருப்பிக் கொடுக்க முடிவதில்லை; காரணம், விளைச்சல் பெருகி வருமானம் அதிகரித்தால் தானே அவர்களால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியும்! இதனால்தான் காட்கில் குழுவினர் தம் அறிக்கையின் முன்னுரையில் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளனர்; ' விவசாயிகளின் பிரச்சினைகள் எல்லாவற்றையும் களைந்துவிட முற்படாமல் அவர்களுக்கு வேண்டிய கடனுதவியை மட்டும் செய்வதால் பலனேதும் இல்லை; அதனால் மட்டும் அவர்களது நிலையைச் சீர்படுத்தி விடமுடியாது.''

விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் சங்கங்கள்கூட உரிய காலத்தில் கடனளிப்பதில்லை, கடன் அளிப்பதில் வீண் கால தாமதம் ஏற்படுவதாகவும், இதனால் உரிய நோக்கத்திற்காக அக் கடனைப் பயன்படுத்த முடியாமல் போய் விடுகிறதென்றும் பல விவசாயிகள் குறைபட்டுக் கொள்கின்றனர். இதனால் கூட்டுறவுக் கடன் சங்கங்களிடமிருந்து கடன் பெற விரும்பாமல், மற்றவர்களிடமிருந்து, குறிப்பாக வட்டிக் கடைக்காரர்களிடமிருந்து கடன் வாங்க வேண்டியுள்ளது.

மக்கள் முயற்சியின்மை: கூட்டுறவு இயக்கத்தில் மக்கள் தாமாகவே முயற்சி செய்து, தம் பொருளாதார நிலையை உயர்த்துவதற்குக் கூட்டுறவு ஒன்றுதான் வழி என்பதை உணர்ந்து ஈடுபடவேண்டும். ஆனால், நமது நாட்டிலோ அரசாங்கம்தான் முயற்சி செய்து கூட்டுறவு இயக்கத்தைத் தொடங்கியது; அரசாங்கம்தான் இவ் வியக்கத்தை வலுப்படுத்தப் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எனவே, இவ் வியக்கம் மக்கள் இயக்கமாக இல்லாமல் அரசாங்கம் தோற்றுவித்துப்பேணி வரும் இயக்கமாகத்தான் இருந்து வருகிறது இது சம்பந்தமாக, பேரறிஞர் ஹென்றி உல்ஃபஸ் (Henry W. Wolffs) அவர்கள் கூறியுள்ளதை இங்கு குறிப்பிடல் நன்று. "எனக்குத் தெரிந்தவரை கூட்டுறவு இயக்கம் அரசாங்கத்தால் தொடங்கப்பட்டு அரசாங்கத்தின் கண்காணிப்பிலேயே நடைபெறுவது நல்லதன்று; அரசாங்கத்தால் ஏற்படுத்தப்படும் கூட்டுறவு இயக்கத்தால் எவ்விதப் பலனும் இல்லை; கூட்டுறவு இயக்கம் பயனுள்ளதாயிருக்க வேண்டுமானால் மக்களாகவே உணர்ந்து அதை அமைக்கவேண்டும்" என அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். எனவே, கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாக மாறவேண்டுமானால் மக்களை வழி நடத்திச் செல்லக் கூடிய ஆற்றல் மிக்க தலைவர்கள் நமது சமுதாயத்தில் தோன்ற வேண்டும்.

கௌரவப் பணியாளர்கள்: பெரும்பாலும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களிலும் ஏனைய சங்கங்களிலும் தலைவராகவும் செயலாளராகவும் பணிபுரிவோர் ஊதியமேதுமின்றி, கௌரவத்திற்காகவே பணியாற்றுகின்றனர் கௌரவத்திற்காகப் பணியாற்றுவது எவ்வளவோ சிறந்த தொண்டுதான். ஆனால், இக் கௌரவப் பணியாளர்களில் பெரும்பாலானோர் தத்தம் கூட்டுறவுக் கடமைகளைக் கூடச் சரிவரச் செய்வதில்லை கூட்டுறவுச் சட்டப்படி செய்யவேண்டிய வேலைகளைக்கூட அலட்சியப்படுத்தி விடுகின்றனர். இதனால் கூட்டுறவுச் சங்கங்களின் திறமையும் வளர்ச்சியும் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன. எனவே, கடமை உணர்வும் தியாக மனம்பான்மையும் கொண்ட பணியாளர்கள்தாம் கூட்டுறவு இயக்கத்தில் கௌரவப் பணிகளைச் செய்ய முன் வரவேண்டும். அதோடு கூட்டுறவுத் தத்துவங்களையும் செயல் முறைகளையும் நன்கறிந்தவர்களாயும் இருக்க வேண்டும். அப்பேர்ப்பட்டவர்களைத்தாம் கூட்டுறவு இயக்கம் கவரவேண்டும். கௌரவப் பணியாளர்கள் பணி செய்வதால் மற்றொரு கஷ்டமும் உண்டு. அதாவது, அவர்கள் கௌரவத்திற்காகப் பணிபுரியும்போது சிலர் அவர்களைச் சந்தேகப்படலாம். ஏதோ ஒரு சுயநலத்திற்காகத்தான் இவர்கள் ஊதியமின்றிப் பணியாற்றுகின்றனர் என்ற

வதந்தியையும் பரப்பலாம். அப்போது அப் பணியாளர்களின் உற்சாகம் பாதிக்கப்படக்கூடும்; அல்லது ஒரு வேளை வதந்தி கிளம்பிவிட்ட காரணத்தால் சுயநலவாதிகளாகவே அவர்கள் மாறக்கூடும். எப்படியிருந்தாலும், இதனால் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு விடுகிறது. எனவே, ஊதியமின்றிப் பணியாற்றக் கூடிய வகையில் திறமையும் சேவை மனப்பான்மையும் கொண்ட தலைவர்களோ செயலாளர்களோ கிடைக்கவில்லையென்றால், தகுதிவாய்ந்தவர்களை ஊதியத்திற்காக அமர்த்திக் கொள்வதே நல்லது. ஆனால், கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் சிறியனவையாயிருப்பதால் தம் பணியாளர்களுக்கு ஊதியம் கொடுக்க இயலாது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. எனவேதான், அகில இந்தியக் கிராமக் கடனாய்வுக் குழுவினர் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரிய அளவில் அமைக்கப்படவேண்டுமென்றும், ஊதியம் பெறும் பணியாளர்களால்தான் அவை நிர்வகிக்கப்பட வேண்டுமென்றும் பரிந்துரை செய்துள்ளனர்.

கிராமப் புறங்களில் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவித்தாம் தலைவராகவோ செயலாளராகவோ இருக்க வேண்டுமென்றுதான் பலர் நினைக்கின்றனரே தவிர, அச் சங்கங்கள் நல்ல முறையில் நடைபெறப் பணியாற்ற வேண்டும் மென்றுநினைப்பவர்கள் வெகு சிலர்தாம். பதவிக்காகத்தான் பெரும்பாலானோர் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க விரும்புகின்றனர்.

அரசாங்கத்துறையினரின் அக்கறையின்மை

சில மாநிலங்களில் அரசாங்கத் துறையினர் கூட்டுறவுத் துறையினரோடு ஒத்துழைத்து அவ் வியக்கம் வளர்ச்சி பெறப் பல வகைகளில் உதவி செய்கின்றனர். வேறு சில மாநிலங்களிலோ மற்றத் துறையைச் சார்ந்தவர்கள் கூட்டுறவுத் துறைமீது அக்கறை கொள்வதில்லை. இவ்வுண்மையைக் கூட்டுறவு பற்றிப் பரிசீலனை செய்வதற்காக அமைக்கப்பட்ட சென்னைக் குழுவினரும் சுட்டிக் காட்டியிருக்கின்றனர். கூட்டுறவுத் துறைக்கும் நமக்கும் என்ன சம்பந்தம் என்று வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் நினைக்கக்கூடும்; அல்லது கூட்டுறவுத் துறை முன்னேறுவதைப் பார்த்துப் பொறாமைப் படவும்கூடும். இதையும் சென்னை கூட்டுறவு ஆய்வுக் குழு தன் அறிக்கையில் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியுள்ளது. ஆனால் தற்போது மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் கூட்டுறவு இயக்கத்திற்கு நிதி உதவியை மட்டுமன்றி வேறு பல உதவிகளையும் தாராள மனப்பான்மையுடன் செய்து வருகின்றன.

பொதுமக்களின் பற்றின்மை: கூட்டுறவு இயக்கம் வெற்றி பெற வேண்டுமாயின், பொது மக்களின் ஆதரவு அவசியம். ஆனால், நமது நாட்டிலோ பொது மக்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவ்வளவாக ஆதரவு தருவதில்லை. சங்கங்களின் நோக்கம், இயல்பு, பணிகள் ஆகியவற்றைப் பற்றி அக்கறை கொள்வது மில்லை. எனவே, பொதுமக்களின் ஆதரவைப் பெற வேண்டு மானால் கூட்டுறவு அமைப்புகள் அவர்களின் மனத்தைக் கவரும் வண்ணம் பணிபுரிய வேண்டும். அதோடு, கூட்டுறவு விளம்பரங் களின் வழியாகவும் பிரச்சாரங்களின் மூலமாகவும் அவர்களின் மனத்தை மாற்ற முயல வேண்டும். ஏனெனில், கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் பொது மக்களின் ஆதரவுதான் ஆணிவேர் போன்றது.

குறைகளை நீக்க உதவும் வழி வகைகள்

கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் நடைபெற்று, துரிதமான வளர்ச்சியைப் பெற்று நாட்டின் பொருளாதார நிலையையும் மக்களின் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்த வேண்டுமானால், இவ் வியக்கத்தின் குறைபாடுகளெல்லாம் நீக்கப்படவேண்டும். அதற் குரிய வழி வகைகள் வருமாறு :

1. கூட்டுறவுக் கல்வி முறையை மாற்றி அமைத்தல் : கூட்டுறவு இயக்கத்தின் தத்துவங்களை அனைவரும் புரிந்துகொண் டால்தான் அது வளர்ச்சியடைய முடியும் நம் நாட்டில் இவ் வியக்கம் நல்ல முறையில் வளர்ச்சியடையாததற்கு முக்கியக் காரணம் மக்களின் அறியாமைதான் என்பதை முன்னரே சுட்டிக் காட்டினோம். எனவே, அறியாமையில் மூழ்கியுள்ள மக்கள் குறிப் பாக விவசாயப் பெருங்குடி மக்கள் கூட்டுறவு இயக்கத்தின் தத்து வங்களை உணரும் அளவுக்காவது அவர்களுக்குக் கல்வி அவசியம் கூட்டுறவு இயக்கம் தங்களுடைய நன்மைக்காகத்தான் என்ப தையும், அது தங்களுடைய இயக்கம், தாம் தாம் அதன் வளர்ச்சிக் கெனப் பாடுபடவேண்டுமென்பதையும் உணரும்படி செய்ய வேண்டும். அப்போதுதான் பொதுப் பிரச்சினைகள் எழும்போதெல் லாம் கூட்டுறவின் வாயிலாகவே அவர்கள் தீர்வு காண முற்படுவர். எனவே, அவர்களுக்குப் பொதுக் கல்வியைப் போதிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென எத்தனையோ குழுக்கள் ஆலோசனை தந்துள்ளன. பொதுக் காரியங் களைப்பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு, கிராம மக்களுக்குப் பிடித்த மான வழியிலும் அவர்களுக்குக் கூட்டுறவுத் தத்துவங்களை உணர்த்த லாம். அதாவது, நாடகங்கள், திரைப்படங்களை உரிய முறையில்

தயாரித்து அவற்றின் வாயிலாக அம் மக்களைக் கூட்டுறவின்பால் ஈர்க்கமுடியும்.

மாணவர்களுக்கு அவரவர் தாய்மொழியிலேயே கூட்டுறவுப் பாடத்தைப் போதிக்கலாம். கூட்டுறவு பற்றிய பாடத்தையும் பாடத்திட்டத்தில் சேர்க்கலாம். தற்போது, தமிழ்நாடும் பஞ்சாப் மாநிலமும் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. மாணவர்களுக்கென்று கூட்டுறவுப் பண்டகசாலைகளையும் கூட்டுறவுச் சிற்றுண்டிச் சாலைகளையும் அமைப்பதற்கு இவ் விரு மாநிலங்களும் ஊக்கமளித்து வருகின்றன. இவ்வாறு, மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலை, சிற்றுண்டிச் சாலைகளை அமைப்பதால் இளம் பருவத்திலேயே அம் மாணவர்கள் கூட்டுறவின் தத்துவங்களையும் செயல் முறைகளையும் பயன்களையும் அறிந்துகொள்ளமுடிகிறது. இது போல் ஏனைய மாநிலங்களிலும் மாணவர்களுக்கென்று கூட்டுறவுப் பண்டகசாலைகள், சிற்றுண்டிச் சாலைகளைப் பள்ளிகளில் மட்டுமன்றி, கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் தொடங்குவது நன்று. மேலும், மாணவர்கள் எந்தக் காரியத்தைச் செய்தாலும் கூட்டாகச் செய்யும் பழக்கத்தைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் புகுத்தலாம். அப்போதுதான் 'மற்றவர்களுக்காக நாம், நமக்காக மற்றவர்கள்' என்ற கூட்டுறவுத் தத்துவம் அவர்கள் மனத்தில் பதியும். மாணவர்களைப் பல குழுக்களாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வேலையை அளிக்கும் முறையையும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் புகுத்துவது பயனுள்ளதாயிருக்கும்.

இந்தியாவிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் கூட்டுறவுப் பாடம் தனிப்பாடமாகக் கற்பிக்கப்படவேண்டுமென்று கூட்டுறவுத் திட்டக் குழு ஆலோசனை கூறியுள்ளது. வாணிகம், விவசாயம், பொருளாதாரம் அரசியல் போன்ற பாடங்களைப் படிக்கும் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு மட்டுமன்றி, மேற்பட்டப் படிப்பு மாணவர்களுக்கும் கூட்டுறவுப் பாடம் இருக்கவேண்டுமென இக் குழுக் கூறியுள்ளது.

2. **கூட்டுறவுப் பயிற்சி:** கூட்டுறவு இயக்கத்தில் பணி புரியும் அனைவருக்கும் பயிற்சி இன்றியமையாதது. குறிப்பாக, கிராமக் கூட்டுறவுச் சங்கச் செயலாளர்கள், நிர்வாகக்குழு உறுப்பினர்கள், கூட்டுறவு நிறுவனப் பணியாளர்கள், கூட்டுறவுத் துறையில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியவர்களுக்குக் கூட்டுறவுப் பயிற்சி அவசியம் என்று வலியுறுத்தப்படுகிறது. கிராமக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு அந்தந்த மாநிலங்களிலுள்ள பயிற்சி நிலையங்களிலோ கூட்டுறவு யூனியன் அலுவலகங்களிலோ பயிற்சி

அளிக்கப்படலாம். அதோடு, நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு மாதம் இருமுறையாகிலும் அந்தந்தத் தாலூகாவின் தலைநகரங்களில் பயிற்சி அளிக்கப்படலாம். செயலாளர்களுக்கு அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் ஆறுவார காலத்திற்காகிலும் பயிற்சி கொடுப்பது நன்று.

கூட்டுறவு நிறுவனங்களிலும் கூட்டுறவுத் துறைகளிலும் பணி புரியும் அலுவலர்களுக்கு அந்தந்த மாநிலத்திலேயே கல்லூரியை நிறுவிப் பயிற்சி அளிப்பது நன்று. இந்தக் கல்லூரிகள் ஆங்காங்கே யுள்ள பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படுவதும் பயனுள்ளது. மேலும், கூட்டுறவுக் தத்துவங்களைப் பற்றியும், அவை எந்த அளவுக்கு நம் நாட்டுச் சூழ்நிலைக்கேற்றவை என்பது பற்றியும் ஆராய்ச்சிப் படிப்பும் அவசியம் கூட்டுறவுத் திட்டக் குழுவும் கூட்டுறவு பற்றிய மேற்படிப்புக்கும் ஆராய்ச்சிப் படிப்புக்கும் தனியாக ஒரு கல்வி நிறுவனத்தை மத்திய அரசாங்கம் அமைக்க வேண்டுமென்று அலோசனை கூறியுள்ளது. அவ்வாறு அமைக்கப் படும் கல்வி நிலையத்தில், (1) கூட்டுறவின் தத்துவங்கள், (2) விவசாயக் கூட்டுறவு, (3) தொழில் கூட்டுறவு, (4) நுகர்வோர் கூட்டுறவு, (5) கூட்டுறவு நிதி, (6) கூட்டுறவு அங்காடி, (7) புள்ளி யியல் ஆகிய ஏழு பாடங்களும் கற்பிக்கப்பட வேண்டுமென்றும் இக் குழு சிபாரிசு செய்துள்ளது. கிராமக் கடன் ஆய்வுக் குழுவும் தன் அறிக்கையில் 'தகுதி வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக் குரிய பயிற்சியை அளிக்க வேண்டு'மென வலியுறுத்தியுள்ளது.

பூனாவில் அமைக்கப்பட்டுள்ள அகில இந்தியக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியை ரிசர்வ் பாங்கு விரிவுபடுத்தி மேலும் பல்வேறு உயர்நிலைக் கூட்டுறவு அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்து வருகிறது. வைதிக வங்கிகளில் பணிபுரிவோருக்கு வங்கி பற்றிய பயிற்சியையும் அளித்து வருகிறது. பூனாவிலுள்ள பயிற்சிக் கல்லூரியின் பயிற்சித் திட்டம் பற்றி முன்னரே நாம் குறிப்பிட்டுள்ளோம். எனவே, அதை மறுபடியும் இங்குக் குறிப்பிடத் தேவையில்லை.

௫. கூட்டுறவு இயக்கத்தை வழி நடத்துவோர்: கிராமக் கூட்டுறவுச் சங்கம் முதல் மாநிலக் கூட்டுறவு இயக்கத்தையே வழி நடத்திச் செல்வோர் பலர் உளர் அவ்வாறு வழி நடத்துவோர் உற்சாகம், நேர்மை, விவேகம், திறமை மிக்கவர்களாய் மட்டு மன்றித் தியாக மனப்பான்மையுள்ளவர்களாயும் கூர்மையான அறிவு பெற்றோராயும் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட வர்கள்தாம் நம் நாட்டிற்கு அதிகமாகத் தேவைப்படுகின்றனர்.

இப்பேர்ப்பட்ட தகுதி வாய்ந்த கூட்டுறவாளர்கள் இருந்தால்தான் இவ் வியக்கம் செம்மையாகவும் விரைவாகவும் முன்னேற முடியும். கூட்டுறவின் தலைவர்களாக மட்டுமன்றி, அதன் தூதுவர்களாகவும் இவர்கள் பணியாற்றவேண்டியிருப்பதால், பேச்சுத் திறமையும் இவர்களுக்கு அவசியம். ஆனால், இப்பேர்ப்பட்ட கூட்டுறவாளர்கள் நம் நாட்டில் அதிகமில்லாததால்தான் இவ் வியக்கம் இன்னும் வளர்ச்சி பெறவில்லை. கிராமப் புறங்களிலுள்ள கடன் சங்கங்களையெல்லாம் பல்நோக்குச் சங்கங்களாக மாற்றவேண்டுமாயின், கிராமப்புறங்களிலுள்ள சூழ்நிலையும் பழக்க வழக்கங்களும், கிராம மக்களின் மனநிலையும் தேவையும் நன்கு அறிந்தவர்களாக இவர்கள் இருக்கவேண்டும். அவ்வாறு பல நோக்குச் சங்கங்களை அமைக்கும்போது ஒவ்வொரு நோக்கத்திற்கும் தனித்தனி குழுக்கள் இருப்பது நல்லது. செயற்குழுவில் இப் பல்வேறு குழுக்களின் பிரதிநிதிகளும் இடம்பெறவேண்டும். அப்போது தான் ஒவ்வொரு காரியமும் உருப்படியாக நடைபெறமுடியும்.

மேலும், நமது தேசியப் பொருளாதாரத் திட்டப்படி, சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் ஆங்காங்கே தேவைப்படுகின்றனர். அவர்களை உருவாக்கித் தரவேண்டிய பொறுப்பும் சமுதாயத்தையே சார்ந்தது. சமுதாயத்திலிருந்தே தலைவர்கள் தோன்றி, சமுதாய அபிவிருத்திக்காகப் பாடுபட்டால்தான் அத் திட்டம் சமுதாயத் திட்டமாக இருக்கும்; மற்றப்படி அரசாங்கப் பணியாளர்களின் முயற்சியை மட்டும் நம்பி நிறைவேற்ற முற்படும்போது, அத் திட்டம் சமுதாயத் திட்டமாக இராது; அதை உருப்படியாக நிறைவேற்றவும் முடியாது. இவ் வகையில் பார்க்கும்போது, சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்திற்கும் கூட்டுறவு இயக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இரண்டிற்குமே தகுதியும் திறமையும் வாய்ந்த சமூகத் தலைவர்கள் தேவைப்படுகின்றனர்.

4. **பலவகைப் பணிச் சங்கங்கள்:** கூட்டுறவு இயக்கம் முறையான வழியில் வெற்றிகரமாக நடைபெற வேண்டுமாயின், கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் தேவையனைத்தும் நிறைவு பண்ணக்கூடியவைகளாகச் சங்கங்கள் மாறவேண்டும். ஏதோ உறுப்பினர்களுக்கு அவ்வப்போது வேண்டிய கடனுதவியை மட்டும் செய்துவந்தால் போதாது. அவர்களின் தொழில்களுக்கு உதவி செய்யவேண்டும்; அவர்களை ஆலோசனை வழங்கி வழி நடத்த வேண்டும். இவ்வாறு எல்லா வழிகளிலும் அவர்களுக்கு உறுதுணை

யாக இருந்தால்தான் கூட்டுறவுச் சங்கங்களின்மீது அவர்களுக்கு நம்பிக்கை தோன்றும்; எனவே, அச் சங்கங்களுக்கு ஆதரவு தர முன் வருவர்.

5. **அரசாங்கத்தின் பங்கு:** ஏனைய நாடுகளைப் போலன்றி நமது நாட்டில் அரசாங்கம்தான் கூட்டுறவு இயக்கம் என்னும் விதையைத் தானே விதைத்து, நீர்பாய்ச்சி உரம் இட்டு, அப் பயிரைப் பாதுகாத்து வளர்க்க முயற்சித்து வந்துள்ளது. ஆனால் எந்தப் பயிருக்கும் ஓரளவாவது மண்வளம் தேவை. கூட்டுறவு என்னும் பயிருக்கு மண்வளம் போலிருப்பது மக்கள்தாம். எனவே, கூட்டுறவிற்கு மக்கள் ஆதரவு இல்லையெனில் அப் பயிர் நல்ல பலனைத் தர இயலாது. ஏனைய நாடுகளிலெல்லாம் மக்களின் முயற்சியினாலும் ஆதரவினாலும்தான் கூட்டுறவு இயக்கம் தோன்றி வளர்ச்சி பெற்று முதிர்ச்சி அடைந்துள்ளது. நமது நாட்டிலே கூட்டுறவு இயக்கம் ஏதோ அரசாங்கத்தின் துறையைச் சார்ந்ததாகவே இன்னும் இருந்து வருகிறது. எனவே, அரசாங்கமே முயற்சியெடுத்து அமைத்துக் காத்து வரும் கூட்டுறவுச் சங்கங்களை மக்களே ஏற்றுக்கொண்டு நடத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்க அரசாங்கம் முயலவேண்டும். அச் சங்கங்களுக்கு அரசாங்கத்தின் ஆதரவும் இன்றியமையாதது. கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கூட்டுறவுத் துறை மட்டுமன்றி, ஏனைய துறைகளும் உதவி புரிய முன்வரவேண்டும். எல்லா அரசாங்கத் துறைகளும் ஒன்றுசேர்ந்து உதவி செய்தால் தான் கூட்டுறவு இயக்கம் துரிதமாக வளரமுடியும்.

6. **கூட்டுறவுத் தத்துவங்களை முறையாகப் பின்பற்றல்:** கூட்டுறவுத் தத்துவங்களெல்லாம் பேச்சளவிலோ ஏட்டளவிலோ இருந்தால் போதாது; அவற்றை நடைமுறையிலும் கடைப்பிடிக்க வேண்டும். தத்துவங்களை நாம் அசட்டை செய்துவிட்டால் கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படையே பலவீனமடைந்துவிடும். 'தன் கையே தனக்குதவி, ஒருவருக்கொருவர் சமரச உதவி' என்னும் தத்துவங்களை உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டுமானால், சிக்கனமாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். கூட்டுறவு மனப்பான்மை உறுப்பினர்களிடையே வளர வேண்டுமாயின், மக்களாட்சி அடிப்படையில்தான் கூட்டுறவுச் சங்கங்கள் செயலாற்ற வேண்டும். மக்கள் தாமாகவே முன்வந்து ஒற்றுமையுடன் சங்கங்களை அமைக்கும்போதுதான் அவை வலிமையுடனும் பொலிவுடனும் திகழ முடியும். எனவே, நேரடியாகவோ மறைமுகமாகவோ செய்யப்படும் வலுவந்தம் கூடுமானவரை நீக்கப்பட வேண்டும்.

7. கண்காணிப்பு : கூட்டுறவுச் சங்கங்களின் கணக்கு வழக்குகளையும் நடவடிக்கைகளையும் தணிக்கை செய்வதும் கண்காணிப்பதும் அவசியம். அப்போதுதான் சங்கங்களின் குறைபாடுகளையெல்லாம் அறிந்து அவற்றை அவ்வப்போதே நீக்க முடியும். அவ்வாறு தணிக்கை செய்வதற்கும் மேற்பார்வையிடுவதற்கும் நியமிக்கப்படும் பணியாளர்களுக்கு அந்தந்தப் பணியில் நல்ல பயிற்சி அளிக்க வேண்டும். மேலும், கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் வளர்ச்சி பெற்றுள்ள தமிழ்நாடு, பம்பாய் போன்ற மாநிலங்களில் அது எவ்வாறு செயல்படுகிறதென்பதை அவர்கள் நேரில் சென்று அறிந்து கொள்வதும் பயனுள்ளதாயிருக்கும். கூட்டுறவு இயக்கத்தில் அரசாங்கப் பணியாளர்களல்லாதோருக்கு அவரவர்களின் பணிக்கேற்ப நல்ல பயிற்சி தேவை. இதைக் கூட்டுறவு மையக் குழுவும் அகில இந்தியக் கூட்டுறவு யூனியனும் சேர்ந்து செய்தல் அவசியம். மேலும், ஸ்டேட் பாங்கின் உயர் அதிகாரிகளாக அமர்த்தப்படுவோர் கூட்டுறவு வங்கி முறையைப் பற்றி நன்கு அறிந்திருப்பது அவசியம். எனவே, பூனாவிலுள்ள வங்கியாளர் பயிற்சிக் கல்லூரியில் அவர்கள் பயிற்சி பெறுவது இன்றியமையாததாகும்.

மேற்கூறிய முறையில் கூட்டுறவு இயக்கத்தின் குறைபாடுகளெல்லாம் அகற்றப்படுமாயின், இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவுத் துறையும் நல்ல முறையில் பாடுபட முடியும்.

மேற்கோள் நூற்பட்டியல்

(Bibliography)

Books

1. Banerjee, J., Co-operative Movement in India
2. Bedi, R. D., Theory, History and Practice of Co-operation
3. Calvert, H., Law and Principles of Co-operation.
4. Cole, G. D. H., A Century of Co-operation.
5. Dubhashi, P. R., Principles and Philosophy of Co-operation.
6. Fay, C. R., Co-operation at Home and Abroad, vol. I & II
7. Infield, H. F., Co-operative Communities at work.
8. International Co-operative Alliance, New Delhi, State and Co-operative Development.
9. International Labour Office, Geneva., Co-operation.
10. Karve, D. G, Co-operation : Principles and Substance.
11. Kulkarni, K. R., Theory and Practice of Co-operation in India and Abroad vol. I, II, III & IV
12. Mathur, B. S, Co operation in India.
13. Mathur, M. P., Co-operative Movement in India and Abroad.

Reports and Journals

1. Indian Co-operative Review
2. Govt. India, Planning Commission Report on Certain Aspects of Co-operative Movement in India.
3. Journal of All India Co-operative Union.
4. R.B.I., Report of the Committee on Co-operation (Maclagan Committee).
5. Govt. of Tamilnadu, Madras Co-operative Manual. vol. I, II & III.

கலைச்சொற்கள்

A

Administration — நிர்வாகம்

Advance — முன்பணம்

Agency — முகமை

Agricultural Co-operation — விவசாயக் கூட்டுறவு

Agricultural Co-op. Association — விவசாயக் கூட்டுறவுக் கழகம்

Agricultural Credit — விவசாயக் கடன்

Agricultural Credit Society — விவசாயக் கடன் சங்கம்

Agricultural Credit Survey — விவசாயக் கடன் ஆய்வு

Agricultural Economic Research Institute — விவசாயப் பொருளாதார ஆராய்ச்சி நிலையம்

Agricultural Finance — விவசாய நிதி

Agricultural Finance Federation — விவசாய நிதிக் கூட்டமைப்பு

Agricultural Refinance Corporation — விவசாய மறுநிதிக் கார்ப்பரேஷன்

Agricultural Marketing Society — விவசாயச் சந்தையிடுகைச் சங்கம்

Agricultural Warehouse — விவசாயக் கிடங்கு

Agricultural Organisation Society — விவசாய அமைப்புச் சங்கம்

All India Handloom Board — அகில இந்தியக் கைத்தறி வாரியம்

Area of operation — செயல் எல்லை

Amalgamation — இணைப்பு

Apex Bank — உச்சி வங்கி, தலைமை வங்கி

Asset — சொத்து

Associate Member — கூட்டு உறுப்பினர்

Audit — தணிக்கை

Authorized Capital — அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்

B

Bad Debt	—	வராக் கடன்
Bad Debt Fund	—	வராக் கடன் நிதி
Bank Rate	—	பாங்கு வட்டி வீதம்
Basic Fund	—	அடிப்படை நிதி
Bill of Exchange	—	மாற்றுச் சீட்டு
Board of Directors	—	இயக்குநர் அவை
Bonds	—	கடன்பத்திரங்கள்
Bonus	—	பேலூதியம்
Borrowed Capital	—	கடன் மூலதனம்

C

Cash sale	—	ரொக்க விற்பனை
Capital Investment	—	மூலதன முதலீடு
Capital Investment Fund	—	மூலதன முதலீட்டு நிதி
Cattle Insurance	—	கால்நடைக் காப்பீடு
Central Co-op. Bank	—	மத்தியக் கூட்டுறவு வங்கி
Central Purchase and Supply Organisation	—	மத்தியக் கொள்முதல் வினியோக நிலையம்
Central Marketing Society	—	மத்திய சந்தையிடுகைச் சங்கம்
Central Warehouse Corporation	—	மத்தியக் கிடங்குக் கார்ட்பரேஷன்
Chief Executive Officer	—	தலைமைச் செயற்குழு அலுவலர்
Chief Registrar	—	தலைமைப் பதிவாளர்
Christian Socialists	—	கிறித்துவ சமதர்ம வாதிகள்
Collective Farms	—	கூட்டுப் பண்ணைகள்
Collective Farm Society	—	கூட்டுப் பண்ணைச் சங்கம்
Commercial Banks	—	வணிக வங்கிகள்
Commission	—	தரகு
Compensation	—	நட்ட ஈடு
Computer	—	கணக்கிடும் கருவி
Consolidation of Holdings	—	நில ஒருங்கிணைப்பு
Consumers' Co-operation	—	நுகர்வோர் கூட்டுறவு
Consumers' Movement	—	நுகர்வோர் இயககம்
Control	—	கட்டுப்பாடு
Consumers' Stores	—	நுகர்வோர் பண்டகசாலைகள்
Confiscation	—	பறிமுதல்
Contract	—	ஒப்பந்தம்
Co-operative Central Bank	—	கூட்டுறவு மத்திய வங்கி

Co-operative Credit — கூட்டுறவுக் கடன்
Co-operative Credit Society — கூட்டுறவுக் கடன் சங்கம்
Co-operative Dairies — கூட்டுறவுப் பால் பண்ணைகள்
Co-operative Development Foundation Fund — கூட்டுறவு வளர்ச்சி ஆதார நிதி
Co-operative Farming — கூட்டுறவுப் பண்ணை
Co-operative Housing Society — கூட்டுறவு மனைச்சங்கம்
Co-operative Laws — கூட்டுறவுச் சட்டங்கள்
Co-operative Marketing Society — கூட்டுறவுச் சந்தையிடுகைச் சங்கம்
Co-operative Retail Development Society — கூட்டுறவுச் சில்லறை விற்பனை அபிவிருத்திச் சங்கம்
Co-operative Union — கூட்டுறவு ஒன்றியம்
Co-operative Wholesale Society — கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம்
Corn Laws — தானியச் சட்டங்கள்
Cost price — அடக்க விலை
Credit Committee — கடன் குழு
Credit Movement — கடன் இயக்கம்
Credit Union League — கடன் சங்கக் கழகம்
Credit worthiness — நாணயத் தகுதி
Crop Insurance — பயிர்க் காப்பீடு
Crop Loan — பயிர்க் கடன்

D

Dairies — பால் பண்ணைகள்
Department — துறை, பிரிவு
Debenture — கடன்பத்திரம்
Departmental Store — பல பிரிவுப் பண்டகசாலை
Deposit — வைப்புத் தொகை
Deposit Account — வைப்புக் கணக்கு
Demand Liability — கேட்புப் பொறுப்பு
Discounting — கழிவுசெய்தல், தள்ளுபடி செய்தல்
District Committee — மாவட்டக் குழு
District Consumers' Co-operative Union — மாவட்ட நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம்
District Organisation — மாவட்ட அமைப்பு
Dividend — இலாப ஈவு
Division of Labour — வேலைப் பகுப்பு

E

Exploitation	— சுரண்டல்
Export	— ஏற்றுமதி
Export Council	— ஏற்றுமதிக் குழு
Export concessions	— ஏற்றுமதிச் சலுகைகள்
Export promotion	— ஏற்றுமதி அபிவிருத்தி

F

Fair Price Shop	— நியாயவிலைக் கடை
Family Savings Account	— குடும்பச் சேமிப்புக் கணக்கு
Fascists	— வல்லாண்மைக் கட்சியினர்
Fascist Society	— வல்லாண்மைக் கட்சிச் சங்கம்
Federation	— கூட்டமைப்பு; இணையம்
Federal Consumer Society	— நுகர்வோர் கூட்டமைப்புச் சங்கம்
Fertiliser Loan	— உரக்கடன்
Fixed Asset	— நிலையான சொத்து
Food Corporation	— உணவுக் கார்ப்பரேஷன்
Foreign Exchange	— அந்நியச் செலாவணி
Forestry Joint Facility Association	— வனக் கூட்டுவசதிச் சங்கம்
Forest Owners' Association	— வன உரிமையாளர் சங்கம்
Forestry Production Association	— வன உற்பத்திச் சங்கம்
Friendly Societies Act	— நட்பினர் சங்கச் சட்டம்

G

General Body	— பொதுக் குழு
General Association of Workers	— தொழிலாளர் பொதுச் சங்கம்
General Manager	— பொது நிர்வாகி
General Purchase Society	— பொதுக் கொள்முதல் சங்கம்
General Purpose Society	— பொதுநோக்குச் சங்கம்
General Union	— பொது யூனியன்
Godown	— பண்டகம், கிடங்கு
Govt. Assistance	— அரசாங்க உதவி
Govt. Concessions	— அரசாங்கச் சலுகைகள்
Govt. Grants	— அரசாங்க மானியம்
Govt. Procurement	— அரசாங்கக் கொள்முதல்
Govt. Warehouse	— அரசாங்கக் கிடங்கு
Grading	— தரம் பிரித்தல்

Grain Growers' Association	— தானிய உற்பத்தியாளர் சங்கம்
Guarantee	— உத்தரவாதம்

H

Handloom Society	— நெசவாளர் சங்கம்
Handloom House	— கைத்தறிக் கடை
Heavy Industries	— கனரகத் தொழில்கள்
Housing Society	— மனைச் சங்கம்

I

Imperial Govt.	— ஏகாதிபத்திய அரசாங்கம்
Index Number	— குறியீட்டெண்
Individual Farming	— தனியார் சாகுபடி
Industrial Co-operatives	— தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்
Industrial Finance Corporation	— தொழில் நிதிக் கார்ப்பரேஷன்
Inequality of Income	— வருமான ஏற்றத்தாழ்வு
Inflation	— பணவீக்கம்
Insurance	— காப்பீடு
Insurance Societies	— காப்பீட்டுச் சங்கங்கள்
International Co-operative Alliance	— அனைத்து நாட்டுக் கூட்டுறவுச் சங்கம்
Integration	— இணைப்பு
Insolvency	— நொடிப்பு
International Co-operative Congress	— அனைத்துநாட்டுக் கூட்டுறவுப் பேரவை
Investment	— முதலீடு
Investment Policy	— முதலீட்டுக் கொள்கை
Invoice	— சரக்குப் பட்டியல்

J

Joint Farming	— இணைப்புப்பண்ணை முறை
Joint Purchase	— கூட்டுக் கொள்முதல்
Joint-Stock Company	— கூட்டுப் பங்குக் கம்பெனி

L

Labour Artels	— தொழிலாளர் அமைப்புகள்
Labour Benefit Fund	— தொழிலாளர் நல நிதி
Labour Colonies	— தொழிலாளர் குடியிருப்புகள்
Labour Contract Society	— வேலை ஒப்பந்தச் சங்கம்
Labour Co-operatives	— தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

Labour Credit Co-operative Bank — தொழிலாளர் கூட்டுறவுக் கடன் வங்கி
Labour Notes — உழைப்புப் பத்திரம்
Laissez Faire Policy — தலையிடாக் கொள்கை
Land Development Bank — நிலவள வங்கி
Land Mortgage Bank — நில அடைமான வங்கி
Large Scale Industry — பேரளவுத் தொழில்
Land Tenure System — நில உரிமை முறை
Liability of Members — உறுப்பினரின் கடன் பொறுப்பு
Licence — அனுமதி
Limited Liability — வரையறுக்கப்பட்ட பொறுப்பு
Liquid Assets — நீர்மச் சொத்துகள்
Loan and Saving Society — கடன், சேமிப்புச் சங்கம்
Local Societies — உள்ளூர்ச் சங்கங்கள்
Local Savings Bank — உள்ளூர்ச் சேமிப்பு வங்கி
Long term Loan — நீண்டகாலக் கடன்

M

Machine Tractor Station — உழும் இயந்திர நிலையம்
Management — நிர்வாகம்
Managing Secretary — நிர்வாகச் செயலாளர்
Market Department — விற்பனைப் பிரிவு
Marketing Federation — விற்பனைக் கூட்டமைப்பு
Medium-term Loan — இடைக்காலக் கடன்
Miners' Society — சுரங்கத் தொழிலாளர் சங்கம்
Middleman — தரகர்
Mixed Economy — கலப்புப் பொருளாதாரம்
Modern Rice Mill — நவீன அரிசி ஆலை
Money-Lender — வட்டிக்கடைக்காரர்
Monopoly — முற்றுரிமை
Monopoly Commission — முற்றுரிமைக் குழு
Mortgage Bank — அடைமான வங்கி
Motor Transport Society — மோட்டார் வாகனக் கூட்டுறவுச் சங்கம்
Multi-purpose Society — பலநோக்குச் சங்கம்

N

National Congress — தேசியப் பேரவை
National Co-op. Development Corporation — தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம்
National Credit Council — தேசியக் கடன்பரிசீலனைக் குழு

National Equitable Labour Exchange — தேசியச் சம உழைப்புப் பரிவர்த்தனை நிலையம்
National Federation — தேசியக் கூட்டமைப்பு
National Income — தேசிய வருமானம்
National Marketing Association — தேசியச் சந்தையிடுகைச் சங்கம்
National League of Co-operation — தேசியக் கூட்டுறவுக் கழகம்
National Purchase Federation — தேசியக் கொள்முதல் கூட்டமைப்பு
National Seminar — தேசியக் கருத்தரங்கு
National Survey — தேசிய அளவீடு
Net Profit — நிகர இலாபம்

O

Objectives — குறிக்கோள்கள்
Open Membership — எவரும் உறுப்பினராகும் நிலை
Outstanding Debt — செலுத்தவேண்டிய கடன் தொகை

P

Panel — பெயர்ப் பட்டியல்
Paid-up Capital — செலுத்திய மூலதனம்
Partner — பங்காளி
Part-time Secretary — குறைந்த நேரச் செயலாளர்
Pass Book — செல்லும் புத்தகம்
People's Bank — மக்கள் வங்கி
People's Communes — மக்கள் மன்றங்கள்
Personal Security — ஆட்பிணையம்
Pools — தொழில் திரட்டுகள்
Pooling System — ஒன்று திரட்டும் முறை
Power loom — விசைத் தறி
Power tiller — இயந்திரக் கலப்பை
Price Fluctuation — விலை ஏற்றத் தாழ்வு
Price Fluctuation Fund — விலை ஏற்றத்தாழ்வு நிதி
Premium — கட்டணத்தொகை
Primary Co-operative Society — தொடக்கக் கூட்டுறவுச் சங்கம்
Price Policy — விலை நிர்ணயக் கொள்கை
Principles of Co-operation — கூட்டுறவுத் தத்துவங்கள்
Privileges — சலுகைகள்
Processing Factories — பக்குவப்படுத்தும் ஆலை

Producers' Co-operatives	—	உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
Provident Fund	—	சேமநல நிதி
Purchasing Association	—	கொள்முதல் சங்கம்
Purchasing Department	—	கொள்முதல் பிரிவு

R

Rate of Interest	—	வட்டி வீதம்
Raw material	—	மூலப்பொருள்
Rediscounting	—	மறுகழிவு செய்தல்
Regional Central Bank	—	பிராந்திய மத்திய வங்கி
Regional Marketing Association	—	பிராந்தியச் சந்தையிடுகைச் சங்கம்
Regional Seminar	—	பிராந்தியக் கருத்தரங்கு
Regional Warehouse	—	பிராந்தியக் கிடங்கு
Registrar	—	பதிவாளர்
Reorganisation	—	சீர்திருத்தம்
Reserves	—	காப்பிருப்புகள்
Requirement Societies	—	தேவைச் சங்கங்கள்
Reserve Fund	—	காப்பு நிதி
Resources	—	சாதனங்கள்
Retail Societies	—	சில்லறை விற்பனைச் சங்கங்கள்
Rochdale Pioneers	—	ராக்டேல் முன்னோடிகள்
Rural Credit Society	—	கிராமக் கடன் சங்கம்
Rural Credit Survey	—	கிராமக்கடன் மதிப்பீடு
Rural Electrification Corporation	—	கிராம மின்னமைப்புக் கழகம்
Rural Multi-purpose Society	—	கிராமப் பலநோக்குச் சங்கம்
Rural Societies	—	கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள்

S

Scarcity	—	கிடைப்பருமை
Scottish Agricultural Organisation Society	—	ஸ்காட்லாந்து விவசாய அமைப்புச் சங்கம்
Scottish Co-op. Wholesale Society	—	ஸ்காட்லாந்து மொத்த விற்பனைச் சங்கம்
Secured Loan	—	ஈடுடைக் கடன்
Security	—	பிணையம்
Secondary Societies	—	உயர்மட்டக் கூட்டுறவுச் சங்கங்கள்
Self help	—	தன்கையே தனக்குதவி

Service Co-operatives — கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள்
Share — பங்கு
Share Capital — பங்கு மூலதனம்
Short-term Loan — குறுகியகாலக் கடன்
Skilled Labour — பயிற்சிபெற்ற தொழிலாளி
Slum Clearance Board — குடிசைப் பகுதி மாற்றுவாரியம்
Social Control — சமூகக் கட்டுப்பாடு
Social Justice — சமூக நீதி
Socialists — சமதர்ம வாதிகள்
Socialist Farms — சமதர்மப் பண்ணைகள்
Soil Conservation — மண்வளப் பாதுகாப்பு
Specialisation — தனித்துறைத் தேர்ச்சி
Special Fund — சிறப்பு நிதி
Stabilization Fund — கடன் உறுதிப்பாட்டு நிதி
State Partnership — அரசாங்கக் கூட்டு
State Trading Corporation — அரசாங்க வர்த்தகக் கழகம்
Stock — இருப்பு
Supply of credit — கடன் விநியோகம்
Subscription, — பங்குக் கட்டணம்
Super Market — சிறப்பு அங்காடி
Supply Society — விநியோகச் சங்கம்
Subscribed Shares — ஒப்பிய பங்குகள்

T

Tariff — சுங்கவரி
Taccavi Loan — தக்காவிக் கடன்
Tender — அளிப்பு முனைவு
Test Laborataries — சோதனைக் கூடம்
Town Banks — நகர வங்கிகள்
Trading Activities — வணிக நடவடிக்கைகள்
Trade cycle — வணிகச் சுழல்
Trade Mark — வணிகக் குறி
Trade Union தொழிற்சங்கம்

U

Urban Societies — நகர்ப்புறக் கூட்டுறவுச் சங்கங்கள்
Unlimited Liability — வரையறையற்ற கடன் பொறுப்பு
Unskilled Labour — பயிற்சியற்ற தொழிலாளி

V

Village Industries — கிராமக் கைத்தொழில்கள்
Vote — வாக்கு

W

Washerman Co-operatives — சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
Warehouse — பண்டகம், கிடங்கு
Warehouse Act — பண்டகச் சட்டம்
Warehouse Receipt — பண்டக ரசீது
Welfare Fund — நலநிதி
Wheat Pool — கோதுமைத் தொழில் திரட்டு
Wholesale Price — மொத்த விற்பனை விலை
Wholesale Society — மொத்த விற்பனைச் சங்கம்
Women Co-operative Society — மாதர் கூட்டுறவுச் சங்கம்
Workers' Settlement — தொழிலாளர் குடியிருப்பு
Working Capital — நடப்பு மூலதனம்

Z

Zones — வட்டாரங்கள்